[Issued 9-8-1961]

# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

# OFFICIAL REPORT

## SATURDAY, 18TH MARCH 1961

### VOLUME XLII—No. 1

CONTENTS


| | PAGES |
|---|---|
| I Questions and Answers .. .. .. .. .. .. | 1-15, 89-91 |
| II Budget for the year 1961-62—Voting on Demands for Grants for the year 1961-62— | |
| 1 Demand I—Land Revenue Department .. .. .. | 15-88 |
| 2 Demand II—Stamps Administration .. .. .. | |
| 3 Demand XI—District Administration and Miscellaneous. | |
| 4 Demand XXXVI—Compensation to Zamindars .. .. | |
| 5 Demand IV—Registration Department .. .. .. | |
| III Papers laid on the table of the House .. .. .. .. | 88 |



©

GOVERNMENT OF MADRAS

1961

*Legislative Assembly Department*

*Madras*

PRICE, 50 *naye Paise*]

61384

VRP.31 N31
M62-4232

# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

## TENTH SESSION OF THE SECOND LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

18*th*, 20*th to* 24*th March* 1961.

**Volume XLII (Nos. 1 to 6).**

TABLE OF CONTENTS.


PAGES

*Saturday*, 18*th March* 1961.

I Questions and Answers .. .. .. .. .. .. 1–15, 89–91

II Budget for the year 1961-62—Voting on Demands for Grants for the year 1961-62—
(1) Demand I—Land Revenue Department ..
(2) Demand II—Stamps Administration ..
(3) Demand XI—District Administration and Miscellaneous.
(4) Demand XXXVI—Compensation to Zamindars ..
(5) Demand IV—Registration Department .. } 15–88

III Papers laid on the table of the House .. .. .. .. 88

*Monday*, 20*th March* 1961.

I Point of Information regarding preventing a Member from entering the Precincts of the House .. .. .. .. 93–94

II Questions and Answers .. .. .. .. .. .. 94–117, 181–182

III Presentation of Petition .. .. .. .. .. .. 117–118

IV Voting on Demands for Grants for the year 1961-62—*cont.*
Demand XVI—Medical ..
Demand XVII—Public Health ..
Demand XXXIX—Capital Outlay on Public Health .. } 118–180

V Papers laid on the table of the House .. .. .. .. 180, 183–185

*Tuesday*, 21*st March* 1961.

I Questions and Answers .. .. .. .. .. .. 187–209, 272–276

II Correction to Answer to a Supplementary Question .. .. 210

PAGES

### *Tuesday, 21st March* 1961—*cont.*

III Statement of Demands for Grants for Excess Expenditure in 1957–58 .. .. .. .. .. .. .. .. 210

IV Final Supplementary Estimates for 1960-61 .. .. .. 210-212

V Voting on Demands for Grants for the year 1961-62—*cont.*
Demand V—Motor Vehicles Acts Administration .. .. 212-240
240-271

VI Statement by the Hon. the Minister for Revenue *re* inauguration of the scheme to eradicate smallpox in the City and Chingleput district .. .. .. .. .. .. .. .. 240

VII Papers laid on the table of the House .. .. .. .. 271

### *Wednesday, 22nd March* 1961.

I Questions and Answers .. .. .. .. .. .. 277-301
369-370

II Calling attention to the failure and destruction of crops due to vagaries of monsoon in Udayarpalayam taluk in Tiruchirappalli district .. .. .. .. .. .. .. .. 302

III Announcements—
(1) Election of Members to the House Committee .. .. 302-303
(2) Governor's recommendation for introduction of certain Bills .. .. .. .. .. .. .. .. 303

IV Government Motion *re* Association of Council Members with the Committee on Subordinate Legislation .. .. .. .. 303

V Government Bills—
(1) The Madras General Sales Tax (Second Amendment) Bill, 1961 .. .. .. .. .. .. .. .. 303-304
(2) The Madras (Added Territory) Extension of Laws Bill, 1961 .. .. .. .. .. .. .. .. 304
(3) The Madras Irrigation Cess (Amendment) Bill, 1961 .. 304

VI Voting on Demands for Grants for the year 1961-62—Demand XV—Education .. .. .. .. .. .. .. 304-367

VII Papers laid on the table of the House .. .. .. .. 368

### *Thursday, 23rd March* 1961.

I Questions and Answers .. .. .. .. .. .. 371-393
458

II Adjournment Motion *re* failure of Government to arrest rise in prices of foodgrains .. .. .. .. .. .. 393

III Voting on Demands for Grants for the year 1961-62—*cont.*—
Demand XXVII—Civil Works—Works .. .. .. } 393-446
Demand XXVIII—Civil Works—Establishment and Tools and Plant .. .. .. .. .. .. .. .. }
Demand XLII—Capital Outlay on Civil Works .. .. .. }
Demand XXXII—Stationery and Printing .. .. .. 446-457

IV Papers laid on the table of the House .. .. .. .. 457



PAGES

### *Friday, 24th March* 1961.

Answers .. .. .. .. .. .. 459-486
542-544

c Clocks in the Chamber .. .. .. .. 486

mands for Grants for the year 1961-62—*cont.*
XVI—Community Development Projects, etc. .. } 486-541
XXIV—Other Miscellaneous Contributions and }
its .. .. .. .. .. .. .. }

*re* Business of the House .. .. .. .. 541

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

**Saturday, 18th March 1961.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

MR. SPEAKER : Today, I am afraid, seven questions have to be postponed. Two Hon. Ministers are not in town and one hon. Member has asked for postponement of his question. I want the Hon. Ministers' to give at least one week's notice. What has happened today is seven questions have to be removed from the list. They have to be postponed tomorrow for being answered. That means 31 questions have to be answered tomorrow. That gives me more trouble. The disease seems to have spread to some hon. Members also. It means more work to me and my work becomes extremely difficult. I can understand Hon. Ministers asking for postponement because they go on work of the State.

THE HON. SRI C. SUBRAMANIAM : Even then we can give one week's notice.

MR. SPEAKER : I am sure Hon. Ministers will give me at least some notice. Anyhow I have given permission. I find that it leads to a lot of inconvenience. Hon. Members should know that they need not always be present in the House. They can authorise others to put the questions on their behalf. Any how Sri. N. K. Palanisami has started the show. It has spread to Sri T. S. Ramaswami. I hope it may not spread hereafter.

*Drugs (Manufacture)*

* 891 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதில் அளிப்பாரா—

(அ) மருந்துகள் செய்வதைக் கட்டுப்படுத்த மத்திய சர்க்கார் சட்டம் கொண்டு வருவதைக் குறித்து இம்மாநில சர்க்காரின் ஆலோசனையைக் கேட்டார்களா ?

(இ) அப்படியாயின், இம்மாநில சர்க்கார் அனுப்பிய பதிலின் விவரமென்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (அ) The hon. Member presumably refers to the proposal of the Government of India to extend the scope of the Drugs Act to the Ayurvedic and Unani Medicines. If so, the answer is in the affirmative.

(இ) The Government of India have been informed that this Government have no objection to amend the definition of the term 'Drug' in the Drugs Act, 1940, so as to do away with the exemption from its provisions granted to Ayurvedic and Unani Drugs.

[18th March 1961

*Sub-Registrar's Office (Aiyampalayam)*

*892 *Q.*—SRI M. A. B. ARUMUGHASAMY: கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ம் ஸ்ரீ அக்டோபர் 10-ம் தேதி சென்னை மாகாண ரிஜிஸ்டிரார் ஜெனரல் அவர்களிடம் திண்டுக்கல் தாலூகா, ஆத்தூர் தொகுதியைச் சேர்ந்த அய்யம்பாளையத்தில் ஒரு சப்-ரிஜிஸ்டிரார் ஆபீஸ் திறக்கும்படி எழுத்து மூலமாகக் கேட்டுக்கொள்ளப்பட்டதா ?

(இ) அதன் மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) Yes, Sir.

(*b*) The request is being examined by the Inspector-General of Registration.

SRI M. A. B. ARUMUGHASAMY: ஒரு ஊரிலே ஸப்-ரிஜிஸ்டிரார் ஆபீஸ் வைப்பதற்கு அவசியமான காரணங்கள் எவை என்று சர்க்கார் கருதுகிறார்கள் ? அந்த ஊரிலே ஸப்-ரிஜிஸ்டிரார் ஆபீஸ் வைப்பதற்குத் தகுந்த காரணங்கள் இருக்கின்றனவா என்பதை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சர்க்காருக்கு சிபார்சு செய்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI V. RAMAIAH: அந்த ஊரிலே ஸப்-ரிஜிஸ்டிரார் ஆபீஸ் புதியதாக அமைப்பது சம்பந்தமாகக் கனம் அங்கத்தினர் அவர்களே ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள். அது இப்பொழுது பரிசீலனையில் இருக்கிறது என்றுதான் பதில் சொல்லியிருக்கிறேன்.

*Grant of lands for cultivation*

*893 *Q.*—SRI T. T. DANIEL: Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to give cultivable poramboke lands to all high schools for cultivation of paddy by the students for the use of mid-day meals in high schools?

THE HON. SRI C. SUBRAMANIAM: No, Sir.

SRI T. T. DANIEL: In view of the fact that there are a large number of students in almost all the high school classes who do not get mid-day meals, will the Government at least think of assigning some cultivable poromboke lands wherever available so that the students can have their school garden to grow vegetables; that will be an income for extending to the vast majority of pupils the mid-day meal programme in the schools?

THE HON. SRI C. SUBRAMANIAM: I do not think it will be practicable to assign lands and then cultivate them and get paddy particularly for the purpose. If it is a question of kitchen garden that could be considered wherever land is available.

SRI S. M. ANNAMALAI: சில பள்ளிக்கூடங்களில் சர்க்காரே பணம் கொடுத்து அதற்கென்று ஸ்பெஷல் கோர்ஸ் ஆரம்பித்திருக்கிறார்கள். இரண்டு ஏகர், மூன்று ஏகர் நிலம் அந்தப் பள்ளியின் மூலமாக வாங்கி அங்கேயே தானிய உற்பத்தி செய்வதற்காக வேண்டி ஏற்பாடு செய்து அந்தப் பள்ளிக்கூடத்திலுள்ள பிள்ளைகளுக்கும் training கொடுக்கவும் செய்கிறார்கள். அது போல அந்தத் திட்டத்தை எல்லாப் பள்ளிக்கூடங்களுக்கும் விஸ்தரிக்கும் உத்தேசம் சர்க்காருக்கு இருக்கிறதா ?



18th March 1961]

THE HON. SRI C. SUBRAMANIAM: கனம் அங்கத்தினர் சொல்லுவது, "டைவர்ஸிபைடு கோர்ஸில்" விவசாயப் பகுதி ஆரம்பிப்பதற்கு நிலம் கொடுப்பதைச் சொல்லுகிறார்கள். எங்கு விவசாயப் பகுதி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறதோ அங்கெல்லாம் நிலம் கொடுக்கப்படுகிறது.

*Harijan Colonies (street lights)*

* 895 *Q.*—SRI P. G. MANICKAM: கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) 1959-60-ல் ஹரிஜன காலனிகளில் உள்ள தெருக்களுக்கு மின்சார விளக்குகள் போடப்படுவதற்காக ஹரிஜன நல இலாகா மூலமாக ஒதுக்கப்பட்ட தொகையிலிருந்து எத்தனை விளக்குகள் போடப்பட்டன ?

(இ) இதற்காக ஒதுக்கப்பட்ட தொகையிலே செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) & (*b*) The attention of the hon. Member is invited to the answer [a] placed on the table of the House.

SRI P. G. MANICKAM: வருஷந்தோறும் சுமார் 1,000-க்கு மேற்பட்ட கிராமங்களுக்கு சர்க்காரே மின்சார வசதி செய்து கொடுக்கிறது. ஹரிஜன வெல்பேர் பண்டுக்கு சுமார் ஒரு லட்ச ரூபாய் கொடுப்பதன் மூலம் மேற்கண்ட 1,000 கிராமங்களிலுள்ள ஹரிஜன தெருக்களுக்கு விளக்குப் போடுவதற்கு அந்தத் தொகை போதாது. சர்க்காரால் எந்தெந்தக் கிராமங்களுக்கு மின்சாரம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறதோ அந்த கிராமங்களிலுள்ள ஹரிஜன தெருக்களுக்கும் மின்சார விளக்குப் போட வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். ஆனால் ஒதுக்கப்பட்ட தொகை போதாமல் இருக்கிறது. சர்க்கார் இதை கவனித்து ஹரிஜன நல பண்டுக்கு மேலும் அதிகமான தொகை ஒதுக்கும்படி உத்தரவிடுவார்களா ?

MR. SPEAKER: இப்படி நீளமாய் கேள்வி கேட்டால் என்ன செய்வது? இதைப் பற்றி எல்லாம் ஹரிஜன மானியக் கோரிக்கையின் பேரில் விவாதம் நடந்தபோது பேசியிருக்கலாம். ஆனால் கனம் மந்திரி அவர்கள் பதில் சொல்லுவதாயிருந்தால் சொல்லட்டும்.

THE HON. SRI V. RAMAIAH: ஹரிஜன காலனிகளுக்கு மின்சார விஸ்தரிப்பு செய்வது சம்பந்தமாக நான் ஏற்கனவே விவரமாக பதில் சொல்லியிருக்கிறேன். என்னுடைய பதிலிலும் விவரம் கூறப்பட்டிருக்கிறது. எங்கெங்கே மின்சார விஸ்தரிப்பு நடக்கிறதோ, அந்த ஊர்களிலெல்லாம் ஹரிஜன காலனி பக்கத்தில் இருந்தால், அதையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். அங்குள்ள ஹரிஜன காலனிக்கும் மின்சார விஸ்தரிப்புக்கு இடம் இருந்தால் நான் அந்தக் கிராமத்திற்கு மின்சாரம் போகும். இல்லாவிட்டால் அந்தக் கிராமத்தில் மின்சார விஸ்தரிப்பு வேலை நடைபெறாது. 1,000, 1,500 கிராமங்களுக்கு நாம் மின்சார விஸ்தரிப்பு செய்தால், அந்த கிராமங்களிலுள்ள ஹரிஜன காலனிகளுக்கும் மின்சாரம் விஸ்தரிக்கப்படுவதற்கு அந்தத் திட்டத்தில் இடம் இருக்க வேண்டும். இது மாதிரி நாம் எடுத்துக்கொண்ட முடிவுக்கு முன்பு எந்தெந்த ஊர்களில் மின்சார விஸ்தரிப்பு நடந்ததோ, அங்கே ஹரிஜன காலனிகள் மின்சார விஸ்தரிப்பு செய்யப்படாமல் விடப்பட்டிருந்தால், அந்த ஹரிஜன காலனிகளுக்கு மின்சார விஸ்தரிப்பு செய்வதற்கு ரூ. 10 லட்சம், 12 லட்சம் வேண்டும் என்று அதிகாரிகள் சொன்னார்கள். அதற்காகத்தான் ஹரிஜன நல இலாகா விசேஷ மானியம் கோருகிறது. அதற்காகத்தான் இப்பொழுது 'பேஸ்டு' பரோகிராம் போட்டு, வருஷம் ஒன்றுக்கு ஹரிஜன நல இலாகாவிற்கு ரூ. 1 லட்சம், 2 லட்சம் என்று ஒதுக்கிக் கொடுக்கிறோம்.

SRI P. G. MANICKAM: தற்பொழுது ஒதுக்கப்பட்டு இருக்கும் ஒரு லட்ச ரூபாய் கிராமங்களுக்கு மின்சார விளக்குப் போடப்படும்பொழுது, அங்குள்ள ஹரிஜன தெருக்களுக்கு விளக்குகள் போடுவ

[a] Printed as Appendix I on page 89 infra.

[18th March 1961

தற்குத்தான் சரியாக இருக்கும். ஆனால், இதுவரைக்கும் மின்சார விஸ்தரிப்பு செய்யப்பட்ட மற்ற கிராமங்களில் ஹரிஜன தெருக்களுக்கு மின்சாரம் போடப்படாமல் இருக்கிறது. இதை சர்க்கார் கவனித்து இந்தத் தொகையை அதிகரிப்பதற்கு சிபார்சு செய்யுமா ?

THE HON. SRI V. RAMAIAH : நான் சொன்ன பதிலை கனம் அங்கத்தினர் அவர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்தால் நான் வேறு பதில் சொல்ல முடியாது, நான் என்ன பதில் சொன்னேன் என்றால், புதியதாக கிராமங்களுக்கு மின்சாரம் விஸ்தரிக்கப்படும்பொழுது அந்தத் திட்டத்தில் அங்கேயுள்ள ஹரிஜன காலனிகள் கண்டிப்பாக சேர்க்கப்பட வேண்டும் என்பது. அதற்கு ஹரிஜன நல இலாகாவிலிருந்து எந்தவிதமான விசேஷ மானியமும் எதிர்பார்க்கவில்லை. மூன்று வருஷங்களுக்கு முன்னால் மின்சார விளக்குகள் போடப்பட்ட கிராமங்களில் ஹரிஜன காலனிகளுக்கு மின்சாரம் போடுவதற்கு விடப்பட்டிருந்தால், அதற்குத்தான் இந்த ஹரிஜன நல இலாகாவுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் விசேஷ மானியம் பயன்படுத்தப்படுகிறது.

SRI M. K. SOMASUNDARAM : ஹரிஜன காலனிகளுக்கு லைட் போடுவதற்காக ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. அந்த ஒரு லட்ச ரூபாய் மாகாண ரீதியாக பொதுவிலே வைக்கப்பட்டிருப்பதால், ஜில்லாவாரியாக பிரித்துக் கொடுக்காத காரணத்தினால் கிராமங்களுக்கு மின்சார விளக்குகள் போடுவதில் தாமதம் ஏற்படுகிறது என்று பிளாக் டெவலப்மெண்டு மீடிங்கில் சொல்லப்படுகிறது. அப்படியானால் இந்த ரூபாயை ஜில்லாவாரியாகப் பிரித்துக்கொடுத்து, இந்த வேலைகளைச் சீக்கிரம் நடைபெறச் செய்வதற்கு அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI V. RAMAIAH : கனம் அங்கத்தினர் அவர்கள் தயவு செய்து மேஜையின் மீது வைத்திருக்கக் கூடிய பதிலை படித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். வருஷ வாரியாக ஒதுக்கப்பட்ட தொகை பூராவும் செலவழிக்கப்பட்டிருக்கிறது. ஜில்லாவாரியாக, மாகாணவாரியாக பிரிப்பது என்பது கிடையாது.

SRI S. M. ANNAMALAI : சில பஞ்சாயத்து போர்டுகளிலே ஹரிஜன காலனிக்கு ஸ்கீம் போட்டு ரெம்யூனரேடிவ் ஸ்கீமாக இருந்த போதிலும் கூட, பஞ்சாயத்து போர்டுகள் அதனுடைய மெயின்டினன்ஸை ஏற்க முடியாது என்று சொல்லுகிறார்கள். ஜாதி ஹிந்துக்களுக்கு மின்சார விளக்கு இருந்தும், ஹரிஜன காலனிகளில் மின்சார விளக்குகளை மெயின்டைன் செய்ய முடியாது, என்று ஜாதி வித்தியாசத்தை வைத்துக்கொண்டு சொல்லுகிறார்கள். அதைப் பற்றி சர்க்கார் கொள்கை என்ன ? பஞ்சாயத்து போர்டுகள் ஹரிஜன காலனிகளிலுள்ள விளக்குகளையும் மெயின்டைன் செய்ய வேண்டும் என்று சர்க்கார் வற்புறுத்த முடியுமா ?

THE HON. SRI V. RAMAIAH : இது போன்ற புகார்கள் என்னுடைய கவனத்திற்கு வரவில்லை. பஞ்சாயத்து போர்டு எல்லையில் இருக்க கூடிய ஹரிஜன காலனிகளுக்கும் மின்சார விஸ்தரிப்பு அளிக்கப்படவேண்டும். அவர்களுக்கு அதைப் போட முடியாவிட்டால்கூட, நாங்கள் இப்பொழுது உதவி கொடுக்கிறோம். புதிதாக எங்கு விஸ்தரிப்பு நடக்கிறதோ, அந்த ஊரிலுள்ள ஹரிஜன காலனிகளும் அந்த விஸ்தரிப்பிலே ஆரம்பத்திலேயே சேர்த்துக்கொள்ளப்படும். அதனால் ஒரு கஷ்டமும் ஏற்படாது.

*Department of the Archæology for the State*

* 899 Q.—SRI R. RANGANATHA MUDALIAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the Government have any proposal to implement the policy of the Central Government that every State should have its own Department of Archæology; and



18th March 1961]

(b) if so, the details thereof and when it will be put into effect?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Yes, Sir.

(b) The matter is under consideration.

*Medicinal herbs (Survey)*

* 900 Q.—SRI S. M. ANNAMALAI (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether there is any survey of medicinal herbs in our State; and

(b) if so, the details thereof ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) & (b) A statement [a] is placed on the table of the House.

SRI S. M. ANNAMALAI : ஸ்பெஷல் ஆபீஸர் செய்த சிபார்சுகளை டி.எம்.எஸ். அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொல்லப்படுகிறதே, அதற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU: இந்த ஏற்பாட்டிலே மருந்துக்கு வேண்டிய மூலிகைகளை ட்ரை பண்ணுவதற்கு இது போதும் என்று கருதப்பட்டது. ஏதாவது சிபார்சுகள் செய்தால் அவை எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதில்லை. எது பிராக்டிகலாக இருக்கிறதோ அதை ஏற்றுக்கொள்ளுகிறோம்.

SRI S. M. ANNAMALAI : நான்கு சிபார்சுகள் செய்யப்பட்டிருக்கின்றன. நான்கு சிபார்சுகளில் ஒன்றைக் கூட டி.எம்.எஸ். ஏற்றுக்கொண்டதாக இந்த ஸ்டேட்மெண்டில் சொல்லப்படவில்லை. சில சாக்குப்போக்குகள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஸ்பெஷல் ஆபீஸர் நியமித்து சிபார்சுகள் ஒன்றைக்கூட ஏற்றுக்கொள்ளாமல் டி.எம்.எஸ். விட்டுவிட்டார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறதே, அதற்குக் காரணம் என்ன என்று கேட்டேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : சொல்லப்பட்ட நான்கு வகைகளிலே இல்லை. வேறு வகைகளிலே இதற்கு ஏற்பாடாகி இருக்கிறது.

*Express Bus Service (extension)*

* 901Q.—SRI N. R. THIAGARAJAN : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ல் எங்கெங்கு எக்ஸ்பிரஸ் பஸ் விட நடவடிக்கை எடுக்கப்படுகிறது ?

(ஆ) மதுரை—லோயர் கேம்ப்,
மதுரை—கம்பம்,
மதுரை—தேனி,
மதுரை—போடி
ஆகிய இடங்களுக்கு எக்ஸ்பிரஸ் பஸ் விடாத காரணம் என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (a) & (b) A statement [b] containing the particulars is placed on the table of the House.

---

[a] Printed as Appendix II on pages 89 90 infra.
[b] Printed as Appendix III on pages 90-91 infra.

[18th March 1961

**Sri N. R. Thiagarajan** : தேனி மக்களுடைய நெடுநாள் குறையைப் போக்கும் வகையில், இந்த ரூட்டில் பஸ் விடுவதை எக்ஸ்சாமின் செய்து கொண்டிருக்கிறோம் என்று சொல்லப்படிருக்கிறது. ஆனால் பஸ்கள் விட்டிருப்பதற்கு தேனி மக்களுடைய சார்பிலே எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கம்பத்திற்கும் பஸ் விடப்பட்டு ஸ்டே செய்யப்பட்டிருக்கிறது. அதையும் சீக்கிரமாக விடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். போட்டிக்கு எக்ஸ்பிரஸ் பஸ் விடமுடியுமா ?

**Mr. Speaker** : It is not a question requiring an answer, but only a suggestion for action.

*Kundah Project (Canadian aid)*

*902 *Q.*—**Sri A. Vedarathanam** : கனம் மின்சார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா -

(அ) குந்தா திட்டத்தின் 3-வது கட்டத்தைப் பரிசீலித்து உதவ கனடாவிலிருந்து வந்த மூவர் கமிட்டி செய்த முடிவு இச்சபைக்கு அறிவிக்கப்படுமா?

(இ) இந்த 3-வது கட்டத்திற்கு கனடாவிலிருந்து நம் சர்க்கார் எதிர்பார்க்கும் உதவி என்ன ?

**The Hon. Sri V. Ramaiah** : (*a*) No decision as such were taken by the team of Canadian Engineers in regard to the question of Canadian assistance for the Third stage Extension of the Kundah Hydro-Electric Scheme. They held only a series of discussions with the officers of the Madras State Electricity Board and the Government of India in regard to the design and specifications for the various equipment required and visited the various sites of the Kundah III Stage. At the discussions, the draft of an agreement to be entered into between the Government of Canada and India, in the event of the Government of Canada agreeing to participate in the Third Stage Extensions, was also considered. While inaugurating the III Stage Extensions on 18th January 1961 the Canadian Minister for Veterans Affairs announced that the Government of Canada had agreed to participate in this extension also.

(*b*) Assistance in terms of essential equipment and services representing foreign exchange costs is expected.

**Sri A. Vedarathnam**; இந்தக் கமிட்டி இந்த விஷயங்களை ஆலோசிப்பதற்காகக் கூடியபொழுது, அது ஒரு முடிவுக்கும் வராமல் விஷயங்களை மாத்திரம் பேசி நிறுத்திவிட்டதின் காரணமாக, மூன்றாவது கட்டத்தில் அவர்கள் நமக்கு அளிக்க வேண்டிய உதவியைப் பற்றி ஒரு முடிவுக்கு வந்திருக்க வேண்டுமே. அதைப் பற்றி விவரம் தெரிவிக்க முடியுமா ?

**The Hon. Sri V. Ramaiah**: இந்த நிபுணர்கள் கமிட்டிக் கூடிப் பேசிய பிறகு, அதைப் பரிசீலனை செய்து, அவர்களுடைய சிபார்சை நல்ல மனதோடு கனடா அரசாங்கம் ஏற்றுக்கொண்டு, மூன்றாவது கட்டதிற்கு உதவி செய்வதாக ஒரு முடிவை கனடா அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கிறது என்று என்னுடைய பதிலிலேயே சொன்னேன், கனடாவிலிருந்து இந்த விழாவில் கலந்துகொள்வதற்காக இங்கே வந்திருந்த அவர்களுடைய நாட்டு மந்திரி, இந்தத் திட்டத்தில் நாங்கள் கலந்துகொள்ளப் போகிறோம் என்ற முடிவைத் தெரிவித்தார்கள். ஆகையால் எல்லாம் நல்ல விதமாக முடிந்திருக்கிறது.

**Sri A. Vedarathnam** : மூன்றாவது கட்டத்திற்கு அவர்களிடமிருந்து என்னென்ன உதவி கிடைக்கும் ? என்னென்ன உதவிகள் அளிக்கப்போவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள் ?

**The Hon. Sri V. Ramaiah** : அதற்கு வேண்டிய மெஷினரி, மற்றும் நிபுணர்களுடைய உதவி எல்லாம் கொடுப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.



18th March 1961]

*Land-slides (Kanyakumari)*

* 904 *Q.*—**Sri T. T. Daniel**: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government are aware of the land-slides recently at the places called Thavuttai, Assarivithu, Korathimalai, Thondu in the hills of Kothanellore Panchayat in the Kanyakumari district;

(*b*) the reason therefor;

(*c*) the number of arecanuts trees affected thereby;

(*d*) the relief given to the affected persons; and

(*e*) the total extent of paddy crops completely destroyed in the Pandarathu Konam?

**The Hon. Sri M. A. Manickavelu** : (*a*) Yes, Sir.

(*b*) The land-slides were due to the heavy rains.

(*c*) Nearly 108 arecanut trees were destroyed.

(*d*) The local authorities have taken action for the relief of the persons affected. The nature of relief granted has not been reported.

(*e*) Four acres.

**Sri T. T. Daniel** : Though this land-slide had taken place six or seven months before, may I know the reason why no relief was afforded for the past six months or so? May I also know whether remission of tax would be given to all those who are affected by the land-slide, immediately?

**The Hon. Sri M. A. Manickavelu** : Sir, I cannot subscribe to the statement made by the hon. Member that no relief was given. I have only stated that the nature of relief granted has not been reported. I think some relief must have been given if the parties were really affected and if they deserved relief.

*Drainage schemes*

* 905 *Q.*—**Sri V. K. Kothandaraman** : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

குடியாத்தம் நகரசபை ஏரியாவில் சாக்கடைக் கால்வாய்த் திட்டம் நிறைவேற்றும் வேலை எந்த நிலையில் உள்ளது ?

**The Hon. Sri M. A. Manickavelu** : No Scheme is under the consideration of the Government.

**Sri V. K. Kothandaraman**: அங்கு சுகாதாரம் மிகவும் மோசமான நிலையிலே இருக்கிற காரணத்தினால், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே இந்த வடிகால் திட்டத்தை எடுத்துக்கொள்ள உத்தேசம் உண்டா ?

**The Hon. Sri M. A. Manickavelu** : Now, greater attention is paid to the water-supply schemes, and drainage schemes are given the next chance only. Now, there are many places where this has to be done. Gudivatham, not having a higher priority than some other municipalities.

[18th March 1961

* 906 *Q.*—SRI S. M. ANNAMALAI) (on behalf of SRI M. P. SARATHI: கனம் ரெவின்யூ அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வேலூர் நகராட்சியில் வடிகால் திட்டத்தை (Drainage Scheme) ஏற்படுத்த என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

(இ) அது எப்போது துவக்கப்படும் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (அ) Investigation of the Drainage Schemes, Vellore, has not been taken up.

( ) Does not arise.

*Hospital collections (receipts)*

* 907 *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியிலும், ஜில்லா தலைநகர் ஆஸ்பத்திரிகளிலும் பொது மக்களிடமிருந்து வசூல் செய்யும் பணத்திற்கு உடனுக்குடன் ரசீது கொடுக்கப்படுகிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir.

SRI N. R. THIAGARAJAN: 1958-ம் ஆண்டு சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியிலே எக்ஸ்ரேக்குப் பணம் கொடுத்து, எக்ஸ்ரே எடுத்துக் கொண்டேன். ரசீதுக்காக நான்கு நாட்கள் நடந்தும், ரசீது கொடுக்கப்படவில்லை. போட்டோவும் கொடுக்கப்படவில்லை. அதே மாதிரி சென்ற ஆண்டு அக்டோபர் மாதத்திலே மதுரையில் உள்ள எர்ஸ்கின் ஆஸ்பத்திரியில் எக்ஸ்ரே எடுத்தேன். அதற்காகப் பணம் கட்டினேன். ரசீது கொடுக்கப்படவில்லை. சுமார் 500 நோயாளிகள் ரசீது கொடுக்கும் வழக்கம் கிடையாது என்று சொல்லுகிறார்கள். அங்கே மோசம் நடக்கிறது. என்று தெரியவருகிறது. இதை அமைச்சர் அவர்கள் தக்கபடி விசாரிப்பார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினர் ரசீது கொடுக்கப்படவில்லை என்று சொல்லுகிறார். எனக்குக் கிடைத்த தகவலில், அன்றாடம் ரசீது கொடுக்கப்படுகிறது என்று தெரியவருகிறது. கனம் அங்கத்தினருக்கும் அன்றையதினமே ரசீது கொடுக்கப்பட்டதாகத் தகவல் இருக்கிறது.

Even on these two occassions, there was no delay in the issue of receipts to the Member and they were issued to him on the same day on which X-ray charges were collected from him.

SRI N. R. THIAGARAJAN. ரசீதுகள் கொடுக்கப்படவில்லை என்பதைத் தக்க சாட்சியத்துடன் நான் ருசுப்படுத்தத் தயாராயிருக்கிறேன். சர்க்கார் விசாரணை செய்யத் தயாராயிருக்கிறார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: சாட்சிகள் வைத்து இதை ஒரு கேஸ் மாதிரி நடத்த வேண்டியதில்லை. குறிப்பாக எந்த தினத்தில் பணம் கொடுத்தார்கள் என்று தெரிவித்தால் நான் விசாரிக்கிறேன்.

SRI N. R. THIAGARAJAN : நான் இதைக் குறித்து கனம் அமைச்சருக்கும், டி.எம்.எஸ்ஸுக்கும் எழுதினேன். கடிதம் போட்டும் பதில் கிடையாது. கனம் அங்கத்தினர்களுக்குச் சரியான முறையில் கவுரவம் கொடுக்கப்படுமா ?

MR. SPEAKER : தபாலிலே எழுதுவதற்குப் பதிலாக கையிலேயே கொடுத்திருக்கலாமே.

*Health Education Council*

* 908 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சுகாதாரக் கல்விக் கவுன்சில் ஒன்றை அமைக்க நம் மாநில சர்க்கார் உத்தேசித்திருக்கிறதா ?

(இ) அப்படியானால் அதன் விவரமென்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (அ) Yes, Sir,



18th March 1961]

(ஆ) The function of the Council is to co-ordinate and support the activities of the Health Education Bureau in the State. The Council will consist of 15 members, (6 non-officials and . . fficials) with Minister for Revenue as chairman. It will meet once in a quarter.

SRI A. VEDARATHNAM : இந்தக் கவுன்சில் பாரம் ஆகிவிட்டதா ? இதில் உள்ள உறுப்பினர்கள் பெயர் என்ன ? இது ஆரம்பித்த பிறகு ஏதாவது மீட்டிங் போடப்பட்டதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கவுன்சில் பாரம் ஆகிவிட்டது, இன்னும் ஒரு மீட்டிங்கூட நடக்கவில்லை. காரணம் 5 பேர்களில் 4 பேர்களின் சம்மதம்தான் வந்திருக்கிறது. இன்னொருவரின் சம்மதம் வந்தால்தான் மீட்டிங் போடுவதற்கு வாய்ப்பு ஏறபடும்.

*Non-officials.*—Two Members of the Legislature interested in Health Education to be nominated by the Chairman, two representatives from voluntary health and social welfare agencies interested in Health Education, a representative of the University.

*Officials.*—Additional Development Commissioner, Director of Medical Services, Director of Public Health, Director of Public Instruction, Director of Agriculture, Director of Information and Publicity, Health Education Consultant, Administrative Officer, Research-*cum*-Action Project, Poonamallee, Health Officer, Corporation of Madras, and Assistant Director of Public Health in charge of Health Education.

*Fee-concession*

* 909 *Q.*—SRI T. T. DANIEL: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the limit on the income of parents fixed for getting fee-concession for students studying in the Kanyakumari district;

(*b*) whether this limit is the same as in other districts; and

(*c*) if not, the reasons therefor?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) Sir, the position is as follows :

*Secondary schools.*—(1) No income limit is prescribed for the grant of fee-concessions to the pupils of Scheduled Castes and Scheduled Tribes studying in Kanyakumari district.

(2) An income limit of Rs. 900 per annum is prescribed in the case of pupils belonging to (i) the other backward classes and (ii) converts to Christianity from the Scheduled Castes and Scheduled Tribes and from the backward classes studying in Secondary Schools.

*Colleges.*—No income limit is prescribed for the grant of fee-concessions to eligible students in colleges.

(*b*) No, Sir.

[18th March 1961

**SRI V. K. KOTHANDARAMAN** : ரொம்பவும் மோசமான வியாதி இந்த டி.பி.யும், குஷ்டரோகமும். அறுவை சிகிச்சை பெறுவதற்கு அவர்களின் சம்மதம் பெற முடியாத காரணத்தினால் இதற்காக சட்டம் கொண்டுவந்து இது நடைபெறுவதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

**THE HON. SRI M. A. MANICKAVELU** : பல காரணங்களால் இந்த வியாதிகள் பரவுகின்றன. நெருங்கிப் பழகுவதால் அதிகமாகப் பரவுகிறது என்று சொல்லுகிறார்கள். ஆதலால் அரசாங்கம் அவர்களைக் கட்டாயப்படுத்தி, சம்மதிக்கச் செய்வதாக இல்லை.

**SRI V. K. KOTHANDARAMAN** : கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது நெருங்கிப் பழகுவதனால்தான் வியாதி அதிகமாகப் பரவுகிறது என்று சொல்லுகிறார். ஒரு குடும்பத்தில் உள்ளவர்கள் குழந்தைகளுடனும் மற்றவர்களுடனும் எப்படி நெருங்கிப் பழகாமல் இருப்பது ? அப்படியிருக்கும்போது புதிய அறுவை சிகிச்சை கொண்டுவருவதற்கு முயற்சிக்குமா ?

**THE HON. SRI M. A. MANICKAVELU** : ஹெரிடிட்டரி சந்ததிகளுக்கு இந் நோய்கள் பரவுவதில்லை என்று தற்கால ஆராய்ச்சியாளர்கள் சொல்லுகிறார்கள் ; ஆகையால் கட்டாயப்படுத்தி அவர்களை அறுவை சிகிச்சைக்கு உள்ளாக்க வேண்டிய அவசியம் இல்லை.

**SRI K. R. NALLASIVAM** : இந்த நோய் உள்ளவர்களுக்கு பால் உணர்ச்சி அதாவது செக்ஷுவல் டெண்டன்ஸி இருக்குமென்று சொல்கிறார்களே அந்தக் காரணத்திற்காக இதைத் தடுப்பதற்கு மருந்து போடுவதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

**THE HON. SRI M. A. MANICKAVELU** : எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. இது அவர்களின் பண்டமெண்டல் ரைட்ஸை பாதிக்குமே என்ற கவலைதான்.

**SRI V. K. KOTHANDARAMAN** : 30 ரூபாயைக் காட்டி அதற்காக ஆசைப்பட்டு இந்த அறுவை சிகிச்சையில் ஈடுபடக்கூடிய நிலைமையைப் போக்குவதற்கு இதில் செலவழிக்கக்கூடிய பணத்தை வேறு அபிவிருத்தி காரியங்களுக்குச் செலவழிக்கப்படுமா ?

**THE HON. SRI C. SUBRAMANIAM** : கனம் அங்கத்தினர்கள் ஒரு கேள்வி போடும்போது இரண்டு மூன்று கிளாஸ்களை போடுகிறார்கள். ஆகையால் என்ன கேள்வி போட்டார்கள் என்பது மறந்துவிடுகிறது. இப்படி அங்கத்தினர்கள் சொல்வதானது கேள்வி நேரத்திலே விவாதிக்க வேண்டிய விஷயமல்ல.

**MR. SPEAKER** : கனம் அங்கத்தினர் ஒரே ஒரு கேள்வியைப் போட்டால் கனம் அமைச்சர் பதில் அளிப்பார்கள்.

**SRI V. K. KOTHANDARAMAN** : 30 ரூபாயைக் காட்டி அதற்காக ஆசைப்பட்டு இந்த அறுவை சிகிச்சையில் ஈடுபடக்கூடிய நிலைமையை போக்குவதற்கு இதில் செலவழிக்கக்கூடிய பணத்தை மற்ற அபிவிருத்தி வேலைகளுக்கு உபயோகப்படுத்துவார்களா—

**THE HON. SRI M. A. MANICKAVELU** : அரசாங்கம் ஒன்றும் 30 ரூபாயைக் காட்டி அப்படிச் செய்யவில்லை. சிகிச்சை பெற்ற பிறகுதான் முப்பது ரூபாய் கொடுக்கிறார்கள். ஏனென்றால் அந்த சிகிச்சை பெறும்போது ஒரு வாரத்திற்கு வேலைக்கு போக முடியாமல் இருப்பதனால் ஜீவனத்திற்கு கஷ்டப்படாமல் இருக்கவேண்டுமென்று அந்தப் பணமும் கொடுக்கப்படுகிறது.



18th March 1961]

*Conciliation and Rent Courts (Cases)*

*916 *Q.*—**SRI P. ARASAN** : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா ? 9-10 a.m.

(அ) 1960–61-ல் சிதம்பரம் தாலூகாவில் வாரம்தாரர்கள், குத்தகை தாரர்கள், நிலச் சுவான்தாரர்கள் இவர்களிடையே ஏற்பட்ட வாரம், குத்தகை சம்பந்தமாக எத்தனை தகராறுகள் சமரச கோர்ட்டுக்கும், ரெண்ட் (Rent) கோர்ட்டுக்கும் வந்துள்ளன ?

(இ) அவைகளில் எத்தனை கேஸ்கள் முடிவடைந்தன ?

**THE HON. SRI M. A. MANICKAVELU** : (அ) & (இ) During the period from 1st January 1960 to 21st February 1961, 132 cases were filed under the Tanjore Pannaiyal Protection Act, 1952 and the Madras Cultivating Tenants (Payment of Fair Rent) Act, 1956, of which 39 were disposed of by 21st February 1961.

*Survey Computor Draftsmen (pay)*

* 917 *Q.*—**SRI V. K. KOTHANDARAMAN** : | **SRI A. GOVINDASAMY** : | Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government have received a Memorandum, dated 5th August 1960 from the Tamilnad Survey Computor Draftsmen Union (Central), Madurai, regarding the pay scales of temporary subordinates; and

(*b*) if so, the action taken thereon?

**THE HON. SRI M. A. MANICKAVELU** : (*a*) Yes, Sir.

(*b*) The matter is under consideration.

*X-Ray units*

* 918 *Q.*—**SRI V. K. KOTHANDARAMAN** : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) 1960-ல் சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் எத்தனை எக்ஸ்ரே கருவிகள் உள்ளன ஜில்லாவாரியாக ?

(இ) அவைகளை பழுதுபார்க்க எத்தனை நிபுணர்கள் இருக்கிறார்கள் ?

**THE HON. SRI M. A. MANICKAVELU** : (*a*) A statement * is placed on the table of the House.

(*b*) Five, Sir.

**SRI V. K. KOTHANDARAMAN**: நம் ராஜ்யத்திலே 114 எக்ஸ்ரே கருவிகள் இருக்கின்றன. அவற்றைப் பழுது பார்க்க ஐந்து பேர்கள் இருந்தால் உண்மையிலேயே மாதக் கணக்கில் பழுது பார்க்க முடியாமற் போகும் நிலைதான் ஏற்படுகிறது ; அதனால் நோயாளிகள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே பழுது பார்க்கும் அதிகாரிகளை அதிகப்படுத்த முயற்சிகள் எடுக்கப்படுமா ?

**THE HON. SRI M. A. MANICKAVELU** : ஐந்து பேர்கள் ரீஜனல் பேஸிஸில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் எந்தெந்த இடத்தில் தேவையோ அங்கு சென்று பழுது பார்ப்பார்கள். இம்மாதிரி அதிகாரிகள் போதாமல் வேலை செய்யவில்லை என்ற தகவல் என்னிடம் இல்லை.

* Printed as Appendix IV on page 91 infra.

[18th March 1961

**Sri V. K. KOTHANDARAMAN** : வேலூர் ஆஸ்பத்திரியில் நவம்பர் மாதத்தில் பழுது அடைந்த எக்ஸ்ரே கருவி பழுது பார்க்கப்படாமல், தாமதமானதால், நோயாளிகள் எக்ஸ்ரே எடுத்துக்கொள்ள முடியாமல் பாதிக்கப்பட்டார்கள் என்பது கனம் அமைச்சருக்குத் தெரியுமா? அம்மாதிரி நிலைமை ஏற்படாமல் இருப்பதற்கு நிபுணர்களை அதிகப்படுத்த முடியுமா?

**The Hon. Sri M. A. MANICKAVELU** : அந்தக் கருவி ரொம்ப நாள் வேலை செய்து விட்டால், பழுது பார்க்க முடியாது. இது எந்த நிலையில் கெட்டுப் போச்சு என்று தெரியாது. பழுது பார்க்க முடியாது என்ற அளவுக்கு அது ரொம்ப நாள் வேலை செய்திருந்தால், வேறுதான் வாங்க வேண்டும்.

*Official Language*

* 920 *Q.*—**Sri A. VEDARATHNAM** : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) ஆட்சி மொழியைத் துரிதமாக அமுலாக்க நியமனம் செய்திருக்கும் கமிட்டி என்ன திட்டத்தின் பேரில் நியமனம் செய்யப்பட்டிருக்கிறது?

(இ) எந்தெந்த இலாக்காக்களில் எத்தனை ஆண்டுகளில் முற்றிலும் ஆட்சி மொழியை அமுலுக்குக் கொண்டுவரப்படும்?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) The hon. Member is presumably referring to the recent reconstitution of the Official Language Committee. An important stage has now been reached in the implementation of the Madras Official Language Act, 1956, and effective action to be taken in the next two years will be decisive for ensuring the success of the change-over from English to Tamil in all branches of State Administration. In this view the Committee has been re-constituted by the Government with a full time Chairman with the status of a Member of the Board of Revenue.

(*b*) So far, Tamil has been introduced for official correspondence in Government Offices in this State up to the district level, numbering 2,473 in all. The scheme is expected to be introduced in the remaining 1,003 (one thousand and three) offices up to the district level in the course of 1961. The Chairman, Official Language Committee, is in correspondence with the concerned Heads of Departments in regard to this and will recommend to the Government, as soon as possible the dates from which Tamil can be introduced for Official correspondence in those various offices. After 1961 there will thus remain only

(1) the Courts; and

(2) the Offices of the Heads of Departments numbering 45 in all.

The latter offices will be covered as early as possible, but it is not practicable to prescribe the time table for them now. The question of introducing Tamil for proceedings even in Courts subordinate to the High Court cannot be considered until the Standard Glossary which is now under preparation giving Tamil equivalents for all legal terms has been finalised, and all Acts have been translated into Tamil in accordance with that Glossary.



18th March 1961]

**Sri A. VEDARATHNAM** : இந்த மாற்றி அமைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்கள் யார், யார்? அவர்கள் இதுவரை கூடி என்ன முடிவு செய்திருக்கிறார்கள்? முடிவுகளின் பேரில் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : அந்தக் குழு இப்பொழுது தான் மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது. அதன் அங்கத்தினர்கள் :

ஜஸ்டிஸ் எம் அனந்தநாராயணன் ;

ஸ்ரீ என். டி. சுந்தரவடிவேலு, டைரக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன்

ஸ்ரீ குழந்தைவேலு, டைரக்டர் ஆப் இன்பர்மேஷன் அண்டு பப்ளிசிடி;

ஸ்ரீசங்கரவடிவேலு அண்ட் ஸ்ரீ பெரியசாமி தூரன்.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR : Even after the implementation of the suggestion, may I know from the Hon. Minister whether English will continue side by side?

The Hon. Sri C. SUBRAMANIAM : Not at the district level. But we have made interim arrangements with reference to officers who are not conversant with Tamil language. For them we have passed orders that during the interim period they could correspond in English.

**Sri A. VEDARATHNAM** : கோர்ட் தவிர மற்ற இலாகாக்களில் தமிழிலேயே நடவடிக்கைகள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது ; இந்த அசெம்பிளியில் முற்றிலும் தமிழிலேயே நடவடிக்கைகள் நடத்த முயற்சிகள் ஏதாவது உண்டா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : அதற்கான முயற்சிகளும் செய்யப்படுகின்றன ; அதைப்பற்றி பட்ஜெட் விவாதத்தின் போதும் சொன்னேன். முக்கியமான கேள்விகளுக்கு முதலிலேயே கொடுக்கும் பதிலையும் தமிழிலேயே கொடுக்க எவ்வளவு சீக்கிரத்தில் முடியுமோ அப்படிக் கொண்டுவர முயற்சிக்கப்படும்.

Mr. SPEAKER : Questions are over.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

## II.—BUDGET FOR THE YEAR 1961-62.

### VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1961-62.

(1) DEMAND I—LAND REVENUE DEPARTMENT.

The Hon. Sri M. A. MANICKAVELU : On the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,01,50,200, under Demand I—Land Revenue Department."

Mr. SPEAKER : Motion moved—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,01,50,200 under Demand I—Land Revenue Department."

கனம் அண்ணாமலையின் 253-வது வெட்டுப் பிரேரணையை பிரேரிப்பார் என்று அறிகிறேன். அதைப் பிரேரேபிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்,.

Sri S. M. ANNAMALAI : Sir. I move the following cut motion :—

"That the allotment of Rs. 1,01,50,200 under Demand I—Land Revenue Department be reduced by Rs. 100."

[18th March 1961

MR. SPEAKER : Cut-motion moved :

"That the allotment of Rs. 1,01,50,200 under Demand I—Land Revenue Department be reduced by Rs. 100."

(2) DEMAND II — STAMPS ADMINISTRATION.

THE HON. SRI M. A. MANICKAVELU : On the recommendation of the Governor, I move —

"That the Government be granted a sum not exceeding Rs. 27,38,300 under Demand II—Stamps Administration."

MR. SPEAKER : Motion moved—

"That the Government be granted a sum not exceeding Rs. 27,38,300 under Demand II—Stamps Administration."

கனம் கோதண்டராமன் அவர்களின் 271-வது வெட்டுப் பிரேரணையை அவர் பிரேரிப்பார் என்று அறிகிறேன்—அவர்களை அதைப் பிரேரேபிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

SRI V. K. KOTHANDARAMAN : Sir, I move the following cut-motion :—

"That the allotment of Rs. 27,38,300 under Demand II—Stamps Administration be reduced by Rs. 100."

MR. SPEAKER : Cut-motion moved—

"That the allotment of Rs. 27,38,300 under Demand II—Stamps Administration be reduced by Rs. 100."

(3) DEMAND XI—DISTRICT ADMINISTRATION AND MISCELLANEOUS.

THE HON. SRI M. A. MANICKAVELU : On the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 4,82,62,200 under Demand XI—District Administration and Miscellaneous."

MR. SPEAKER : Motion moved—

"That the Government be granted a sum not exceeding Rs. 4,82,62,200 under Demand XI—District Administration and Miscellaneous."

கனம் சுப்பையா அவர்களின் 281-வது வெட்டுப் பிரேரணையை அவர் பிரேரேபிப்பார் என்று அறிகிறேன். அவர்களை அதைப் பிரேரேபிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

SRI V. SUBBIAH : Sir, I move the following Cut-motion—

"That the allotment of Rs. 4,82,62,200 under Demand XI—District Administration and Miscelloneous be reduced by Rs. 100."

MR. SPEAKER : Cut-motion moved—

"That the allotment of Rs. 4,82,62,200 under Demand XI—District Administration and Miscelloneous be reduced by Rs 100."



18th March 1961]

(4) DEMAND XXXVI—COMPENSATION TO ZAMINDARS.

THE HON. SRI M. A. MANICKAVELU : On the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 84,00,000 under Demand XXXVI—Compensation to Zamindars."

MR. SPEAKER : Motion moved—

"That the Government be granted a sum not exceeding Rs. 84,00,000 under Demand XXXVI—Compensation to Zamindars."

கனம் அங்கத்தினர் ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள் இங்கே சபையில் இல்லையாதலால் அவருடைய கட் மோஷன் இல்லை.

So, there is no Cut-motion for this Demand.

(5) DEMAND IV—REGISTRATION DEPARTMENT.

THE HON. SRI V. RAMAIAH : On the recommendation of the Governor I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 45,69,800 under Demand IV—Registration Department."

MR. SPEAKER : Motion moved—

"That the Government be granted a sum not exceeding Rs. 45,69,800 under Demand IV—Registration Department."

I understand that the hon. Member Sri V. K. Kothandaraman is moving his Cut-motion No. 289 under this Demand.

The hon. Member Sri V. K. Kothandaraman may now move his Cut-motion.

SRI V. K. KOTHANDARAMAN : Sir, I move the following Cut-motion—

"That the allotment of Rs. 45,69,800 under Demand IV—Registration Department be reduced by Rs. 100."

MR. SPEAKER : Cut-motion moved—

"That the allotment of Rs. 45,69,800 under Demand IV—Registration Department be reduced by Rs. 100."

Now Sri S. M. Annamalai will initiate the discussion.

SRI S. M. ANNAMALAI : சட்டமன்றத் தலைவர் அவர்களே, நான் கொடுத்திருக்கக் கூடிய வெட்டுப் பிரேரணையை ஆதரித்தும், மற்ற சட்டமன்ற அங்கத்தினர்கள் கொடுத்திருக்கக்கூடிய வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்தும் இந்த மான்யத்தின் மீது எனது கருத்துக்களை சொல்ல முற்படுகிறேன். என்னுடைய முக்கியமான வெட்டுப் பிரேரணை, நிலச்சீர்திருத்தச்

சட்டம் இந்த மாநிலத்தில் சரிவர அமுல்படுத்தப்படவில்லை என்பது தான் என் குற்றச்சாட்டு. நியாய வாரச் சட்டம், பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் இவை போன்ற பல சட்டங்கள் இயற்றியிருந்தும்கூட அவை, மக்களுக்கு இன்னும் சரிவரப் புரியாமல் இருக்கிறது.

**MR. SPEAKER:** இந்த லிஸ்டில் ரெவின்யு டிமாண்டிற்கு 3½ மணி நேரமும், எலெக்ட்ரிசிடிக்கு ½ மணி நேரமும் என்று போடப்பட்டிருக்கிறது. மொத்தமாக எடுத்துக்கொண்டு எல்லாவற்றிற்கும் சேர்ந்து, நாலு மணி நேரம் கொடுத்தால் போதாதா, கம்பைண்டாக எடுத்துக்கொள்ளலாம் என்று கேட்கிறார்கள். ஆட்சேபணை ஒன்றுமில்லையே, ஆக சேர்த்து எடுத்து கொள்ளலாம்.

**SRI S. M. ANNAMALAI:** இந்த சட்டங்கள் சரிவர நம் மாநிலத்தில் அமுல் நடத்தப்படவில்லை என்று நான் சர்க்காரை குற்றஞ்சாட்ட விரும்புகிறேன். மக்களுக்கு மட்டும் புரியவில்லை என்பதல்ல. அதிகாரிகளுக்குக் கூட இப்படிப்பட்ட சட்டங்கள் இருக்கிறதா இல்லையா என்பது கூட தெரியவில்லை. அதிகாரிகள், தாசில்தார், ஆர்.டி.ஓ. இவர்கள் இந்தச் சட்டங்களை நன்றாக படித்திருக்க வேண்டும். அவர்களுக்குக் கூட இப்படிப்பட்ட சட்டங்கள் அமுலில் இருக்கிறதா இல்லையா என்று தெரியாத ஒரு நிலையில் தான் இன்று இருக்கிறது. என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்த வரையில் நான் இரண்டு மூன்று வழக்குகள் நடத்தினேன். அப்படி நடத்துகிறபோது தாசில்தாருக்கு அந்தச் சட்டத்தைப் பற்றியே தெரியவில்லை. பிறகு என்னிடமுள்ள புத்தகத்தைக் கொடுத்து நீங்கள் படியுங்கள் என்று சொல்லி அதற்கு மேல் நியாயவாரச் சட்டப்படி வழக்கைத் தொடர்ந்தேன். பின், அவர்கள் படித்துப் பார்த்து, அதன் விதிகளைக் கூட நானே கொடுத்தேன். அதையும் படித்துப் பார்த்துவிட்டு இரு வழக்கை நடத்தினார்கள். வேண்டுமானால் அமைச்சர் அவர்கள் என்னைத் தனியாகக் கூப்பிட்டுக் கேட்டால் யார் என்று சொல்கிறேன். ஆக, அதிகாரிகளுக்குக்கூட இத்தகை சட்டங்கள் அமுலில் இருக்கிறதா இல்லையா என்பது தெரியவில்லை. அதே போல், வார சாகுபடியாளர் பாதுகாப்புச் சட்டத்தை இன்னும் போலீசாரால் புரிந்து கொள்ளமுடியவில்லை. ஒரு நிலச் சொந்தக்காரரிடத்தில் ஒருவர் வாரத்திற்கு பயிரிட்டுக்கொண்டிருந்தால், அவர் நியாயவாரச் சட்டப்படி 60—40 கேட்டால் நிலச் சொந்தக்காரர் அதைமறுத்து விட்டு, உடனே 447 செக்ஷன்படி போலீஸாரிடம் விண்ணப்பம் தந்து அதன் பேரில் போலீஸார் அந்த சாகுபடியாளர் மீது தக்க நடவடிக்கை எடுத்து 447 செக்ஷன் கீழ் வழக்குத் தொடரப்படுகிறது. ஆக, போலீஸ் அதிகாரிகளுக்கும் கூட இந்தச் சட்டம் அமுலில் இருக்கிறதா இல்லையா என்பது தெரியவில்லை. இதைத்தான் நான் இரண்டு மூன்று ஆண்டுகளாக கூறி வருகிறேன். வாரத்திற்கு பயிரிடுகிறவர்கள், யார் யார் எந்தெந்த நிலங்களைப் பயிரிட்டுக் கொண்டு இருக்கிறார்கள் என்ற விவரத்தை வாக்காளர் பட்டியல் தயாரிப்பது போன்று தயாரித்து அதன் மூலம் இன்னின்ன நிலங்களை இன்னின்ன ஆட்கள் பயிரிடுகிறார்கள் என்று தெரியும்படி தயாரித்தால் நன்றாகவும், உதவியாகவும் இருக்குமென்று நான் மூன்று ஆண்டுகளாக வற்புறுத்திக்கொண்டு வந்திருக்கிறேன். நியாயவாரச் சட்டப்படி வழக்கு தொடரப்படுமானால், வாரத்திற்கு பயிரிடுகிறவர்கள், அந்த நிலத்தில் பயிரிட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்று நிரூபிக்க போதிய சான்றுகள் கிடையாது. சட்டத்தில் இருக்கிறது. வாரத்திற்கு அல்லது குத்தகைக்கு பயிரிடக்கூடியவர்கள் மூன்று ஒப்பந்தங்கள் தயார் செய்து ஒன்று தாசில்தாரிடத்திலும், ஒன்று நிலச்சொந்தக்காரரிடத்திலும், மற்றொன்று வாரம் பயிரிடுகிறவரிடத்திலும் இருக்கவேண்டுமென்று சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன்படி இந்த மாநிலத்தில் அது அமுல் நடத்தப்படுகிறதா என்றால் கிடையவே கிடையாது. அந்த அளவு, நியாய வாரச் சட்டம், பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம், வாரப்பயிரிடுவோர் பாதுகாப்புச்



சட்டம் இவைகள் அமுலில் இருக்கிறதா இல்லையா என்பதும் மக்கள் புரிந்து கொள்ளாத நிலையில் தான் இன்றைய நிலை இருக்கிறது. அதே போல் இந்த சட்டத்தை துஷ்பிரயோகம் செய்கிறார்கள். 60—40 தேவையென்று அறப்போராட்டம் நடத்தி, நியாயமான முறையில் வாரம் கேட்டாலும் போலீஸாரை மிராசுதார்களின் பாதுகாப்பிற்கு அனுப்பி எந்தளவிற்கு அடக்கி ஒடுக்கமுடியுமோ அந்தளவிற்கு வாரம் பயிரிடுகிறவர்களை அடக்கி ஒடுக்கி விடுகிறார்கள். சட்டம் என்பது மிராசுதார்களையும், சாகுபடியாளர்களையும் இரண்டு பேர்களுக்கும் நியாயமான முறையில் பாதுகாப்பு இருக்க வேண்டும் தவிர மிராசுதார்கள் பக்கம் சேர்ந்து கொண்டு நியாயமான கோரிக்கைகளை சாகுபடி செய்பவர்கள் கேட்கும்போது அவர்களை அடக்கி ஒடுக்குவது என்றால் அது சரியல்ல. தஞ்சை மாவட்டத்தில் வேண்டுமானால் இத்தகைய சட்டம் இருக்கிறது என்று அங்குள்ள மக்களுக்கு தெரிந்திருக்கலாமே தவிர பலயிடங்களிலும் இந்தச் சட்டம் இருக்கிறதா இல்லையா என்பது மக்களுக்கு தெரியாத நிலைதான் இருக்கிறது. ஆகவே, இதற்கு ஒரு விளம்பரம் தரவேண்டும். அதுமட்டுமல்ல, எல்லா அதிகாரிகளும் அவைகளைப் படித்து உணர்ந்துகொள்ளவேண்டும். அதுமட்டுமல்ல, இந்தச் சட்டம் உண்மையில் அமுலில் இருக்கிறது. ஆகவே வாரத் தகராறு ஏற்படுமானால் அந்த சமயத்தில் 447 செக்ஷன் கீழ் வழக்குகள் தொடரக்கூடாது என்று போலீஸ் அதிகாரிகளுக்கும் சர்க்கார் உத்தரவு இடவேண்டும். அடுத்தபடியாக, இரண்டு மூன்று ஆண்டுகளாக சொல்லி வருகிறேன், கையேர்வாரந்தார் மாட்டு வாரந்தார் சட்டத்தை எல்லா மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கவேண்டுமென்று. கையேர்வாரந்தார் மற்ற மாவட்டங்களில் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லலாம். நான் சொல்வேன், மின்சாரம் எங்கு பார்த்தாலும் பரவி வருகிறது, அப்படி பரவி வருகிற காலத்தில் சொந்த சாகுபடி வைத்துக் கொண்டிருக்கக் கூடியவர்கள் சாகுபடி செய்யும்போது பல ஆட்களை நியமித்து, கையேர்வாரந்தார்களை நியமித்து 1/8 பாகம், 1/10 பாகம் என்று எப்படி திருச்சி மாவட்டத்தில் கொடுத்துக் கொண்டு வந்தார்களோ அதேபோன்று பலயிடங்களிலும் கொடுத்து வருகிறார்கள். அவர்களை எப்பொழுது வேண்டுமானாலும் நிலச் சொந்தக்காரர் நிலத்திலிருந்து வெளியேற்றலாம். ஆகவே, அதைத் தவிர்ப்பதற்கு, இந்த கையேர்வாரம்தார், மாட்டு வாரந்தார் சட்டத்தை எல்லா மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கவேண்டுமென்று நான் மூன்று ஆண்டுகளாக சொல்லி வருகிறேன். இந்த கையேர்வாரந்தார் முறை திருச்சி மாவட்டத்தில் மட்டும்தான் இருப்பதாக சொல்லப்பட்டு வருகிறது. ஒரு தனி குழு நியமித்து அதன் மூலம் திருச்சி மாவட்டத்திலுள்ள கையேர் வாரந்தார் போன்று பல பேர்களுடன் பல மாவட்டங்களிலும் இருந்து கொண்டிருக்கிறார்களா என்று விசாரித்தால் அப்படி இருக்கிறார்கள் என்ற உண்மை தெரிய வரும். மின்சாரம் விஸ்தரித்துக் கொண்டு வரும் இந்தக் காலத்தில் பல மாவட்டங்களில் பல பண்ணையார்கள் கையேர்வாரந்தார்களை அல்லது வேறு பெயரில் வைத்துக் கொண்டிருப்பதால் அப்படியிருப்பவர்களுக்கு ஒருவித பாதுகாப்பும் இல்லாதிருப்பதால் அவர்களை எப்பொழுது வேண்டுமானாலும் உடனே வெளியேற்றி விடுகிறார்கள். ஆகவே மற்ற மாவட்டங்களில் கையேர்வாரந்தார் இல்லை என்று சொல்ல முடியாது. வேண்டுமானால் நான் நிரூபிக்கிறேன். ஆகவே சர்க்கார் ஒரு தனி குழு நியமித்து இப்படிப்பட்ட கையேர்வாரந்தார்கள் மற்ற மாவட்டங்களில் இருக்கிறார்களா இல்லையா என்று விசாரித்து அறிய வேண்டும். அதேபோல், புறம்போக்கு நிலங்களை ஜாரி செய்து கொடுப்பது, பட்டா வழங்குவது போன்ற விஷயங்களில் சர்க்கார் மிக தாமததாக நடந்து கொண்டு வருகிறது. அமைச்சர் அவர்கள் போளூர் தொகுதிக்கு வருகிறார்கள், அவர்கள் தொகுதிக்கும் அடிக்கடி வருகிறார்கள். அப்போது, இதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் ஸ்பெஷல் தாசில்தார்கள் என்ன செய்கிறார்கள், இந்த புறம்போக்கு நிலங்களை ஏழை மக்களுக்கு ஜாரி செய்து கொடுத்திருக்கிறார்களா என்பதை அலசிப் பார்க்க வேண்டும்.

ஒரேஒரு முறை கேள்விப்பட்டேன், சேத்துப்பட்டிற்கு செல்லும்போது நாலைந்து பேர்களை கூப்பிட்டு 'பட்டா வழங்கினுல் என்ன' என்று அமைச்சர் அவர்கள் சொன்னதாக கேள்விப்பட்டேன். ஆக, இந்த ஸ்பெஷல் டெப்டி தாசில்தார் சரிவர வேலை செய்கிறார்கள்ா என்று அடிக்கடி பரிசீலனை செய்யவேண்டும். போளூர் தொகுதிக்கு அல்லது மற்ற தொகுதிகளுக்கு செல்லும்போதும் அமைச்சர் அவர்கள் இதை கண்காணிக்கவேண்டும். பிற மாநிலங்களில் அமைச்சர்கள் நேரடியாகச் சென்று பட்டா வழங்கி, அதற்காக தனி விழா நடத்தி அப்பொழுது பட்டா வழங்குவது என்றிருப்பது பல மாநிலங்களில் அமைச்சர்களின் சுற்றுப்பிரயாணத்தில் பார்த்தேன். ஆனால் அமைச்சர் அவர்கள் வருகின்றபோது எவ்வளவு புறம்போக்கு நிலங்களுககுப் பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுபோல் எவ்வளவு தரிசு நிலங்களுக்குப் பட்டா செய்து கொடுத்திருக்கிறார்கள் என்பதைக் கவனிப்பது மிகமிக முக்கியமானது. என் மூலமாகவே எத்தனையோ விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. ஏதாவது சில காரணங்களைக் காட்டி அந்த நிலங்கள் ஜாரி செய்து கொடுக்க முடியாதது என்று உத்தரவு பிறப்பித்துவிடுகிறார்கள். விண்ணப்பம் நூறு பேர்கள் போட்டிருந்தார்கள் என்றால் 99 பேர்களுடைய விண்ணப்பங்களைத் தள்ளிவிடுகிறார்கள். யாருக்குச் சற்றுச் செல்வாக்கு இருக்கிறதோ அவர்களுக்கு மட்டும் ஐந்து ஏக்கரா, பத்து ஏக்கரா என்று ஜாரி செய்துவிடுகிறார்களே தவிர நிலம் இல்லாதவர்களுக்கு உண்மையிலேயே நிலம் கொடுக்கிறது கிடையாது.

சர்க்கார் உத்தரவில் வேண்டுமானால் ஐந்து ஏக்கராவுக்குமேல் சொந்த நிலம் உடையவர்களுக்கு ஜாரி செய்யக் கூடாது என்று இருக்கலாம். ஆனால் இருபது ஏக்கராவுக்கு மேல் நிலம் உள்ளவர்கள் கூட மனைவியின் மீது விண்ணப்பம் போட்டு, தங்கள் செல்வாக்கினாலே ஐந்து ஏக்கரா நிலம், பத்து ஏக்கரா நிலம் என்று ஜாரி செய்து வாங்கிக்கொள்கிறார்கள். இதையும் கவனிக்கவேண்டும். உண்மையில் நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் வழங்கவேண்டுமென்றால் அதிகாரிகள் உஷாராக, துரிதமாகச் செயல்படவேண்டும். ஆகவே இன்னும் அதிகாரிகளைப் போட்டு இவ் விஷயத்தை துரிதப்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே உள்துறை அமைச்சர் அவர்கள் நிலச்சீர்திருத்தச் சட்டம் ஆகஸ்டு மாதத்தில் சட்டமாகிவிடும் என்று சொன்னார். அது ஆகஸ்டு மாதத்தில் சட்டமாகிவிடலாம். ஆனால் அமுலுக்கு வருமா ? அது சட்டமாகி, ஜனாதிபதியின் அங்கீகாரத்தையும் பெற்று 1962-க்குள் அமுலுக்கு வரும் என்று அமைச்சர் அவர்களால் சொல்ல முடியுமா ? சொல்லமுடியாது. வேண்டுமென்றால் இதைச் சட்டமாக்கி வைத்துவிட்டு ஏழைப் பாமர மக்களிடத்திலே சென்று, " உங்களுக்காக இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறோம். பாக்கி உள்ள நிலங்களையும் நிலம் இல்லாதவர்களுக்குக் கொடுக்கப்போகிறோம். ஆகவே எங்களுக்கு வோட்டுப் போடுங்கள் " என்று கேட்கலாம். அதைப் போலவே நிலச்சுவாந்தார்களிடத்திலே சென்று, " உங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக் கூடிய வகையில் பல ஷரத்துக்களை ஏற்படுத்தியிருக்கிறோம். உங்களுக்கு எந்தவிதமான பாதகமும் ஏற்படாது, இந்தச் சட்டத்தினால். ஆகவே எங்களுக்கு வோட்டுப் போடுங்கள் " என்று கேட்பதற்கும் இடம் உள்ள வகையில் சட்டத்தைக்கொண்டுவந்தோம். ஆனால் அது உடனடியாக அமுலுக்கு வராது என்கிற நிலைமையைத்தான் உண்டு பண்ணப்போகிறார்கள். உண்மையிலேயே பாமர மக்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்பது சர்க்காரின் நோக்கமாக இருந்தால் உடனடியாக ஆகஸ்டு மாதத்தில் நிலச்சீர்திருத்தச் சட்டத்தைக்கொண்டுவருவதோடு கூட அதற்கு ஜனாதிபதியின் அங்கீகாரம் இவ்வாண்டுக்குள்ளேயே வரும்படியாகச் செய்யவேண்டும். மீதி நிலங்களைப் பிரித்துத் தரவேண்டும். அதைவிட்டு நாங்கள்



ஆகஸ்டு மாதத்தில் கொண்டு வந்துவிடுவோம் என்று சொல்வதானது தேர்தலுக்கு இரண்டு கட்சி வோட்டுக்களையும் பெறுவதற்குச் சாதகமாகக் கொண்டுவரப்போகிறார்களே தவிர உண்மையில் சட்டம் அமுலுக்கு வராது.

அதைப்போலவே கிராம உத்தியோகஸ்தர்களுடைய பரம்பரை பாத்யதைப் பிரச்சினை. பலநாட்களாக இந்தச் சட்டமன்றத்தின் முன்பாகச் சொல்லப்பட்டு வந்திருக்கிறது. அதை உடனடியாகப் பரிசீலனை செய்து சர்க்கார் ஒரு முடிவுக்கு வந்தாகவேண்டும். அவர்களை லோயர் டிவிஷன் க்ளார்க்கு மாதிரியாகச் செய்து சம்பளத்தைக் கொடுத்து பரம்பரை பாத்யதையை ரத்து செய்யவேண்டும். இல்லாவிட்டால் பரம்பரை பாத்யதை இருக்கவேண்டுமென்று சொன்னால் அவர்களுடைய சம்பளத்தை உடனடியாக யாக உயர்த்தித் தரவேண்டுமென்று சொல்லிக்கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

**Mr. SPEAKER** : கனம் அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பதற்கு எத்தனை நிமிஷங்கள் வேண்டும் ?

**The Hon. Sri M. A. MANICKAVELU** : எனக்கு 45-நிமிஷங்கள் வேண்டும்.

**The Hon. Sri V. RAMAIAH** : எனக்குப் பத்து நிமுஷங்கள் போதும்.

**Mr. SPEAKER** : அப்போது எதிர்க்கட்சித் தலைவர்களுக்குப் பத்து பத்து நிமிஷம் கொடுக்கிறேன். அநேகம் அங்கத்தினர்களும் பேச வேண்டுமென்று பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் பத்து நிமிஷங்கள் பேசவேண்டும். மணி அடித்தவுடன் முடித்துக்கொள்ளும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**Sri P. G. MANICKAM** : தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட மானியங்களை ஆதரித்துச் சில சங்கதிகளைச் சொல்ல விரும்புகிறேன். நமது நாடு சுதந்திரம் அடைந்த பிறகு ஜில்லா நிர்வாகம் எவ்வளவோ முன்னேற்றத்தில் போய்க்கொண்டிருக்கிறது. இப்போது இருக்கிற ஜில்லா அதிகாரிகள் மக்களோடு நெருங்கிப் பழகி, அவர்களுடைய குறைகளை நேரில் கண்டறிந்து வருகிறார்கள். ஆயினும் சில விஷயங்களைத் தெரிவிக்க வேண்டியவனாக இருக்கிறேன். மக்கள் ஆட்சி என்று வந்த பிற்பாடு மக்கள் ஆங்காங்கே தங்களுடைய குறைகளைத் தெரிவிக்க அதிக விருப்பம் கொண்டுள்ளார்கள். அதிகாரிகளுக்கும், எம்.எல் ஏ..க்களுக்கும், அமைச்சர்களுக்கும் அவ்வப்போது விண்ணப்பங்கள் கொடுத்துக்கொண்டே இருக்கிறார்கள். அமைச்சர்களிடத்தில் கொடுக்கப்படுகிற விண்ணப்பங்கள் சர்க்கார் மூலமாக ஜில்லா நிர்வாகிகளுக்கு அனுப்பப்படுகிறது. எம். எல். ஏ.-க்களிடத்தில் கொடுக்கப்படுகிற விண்ணப்பங்களையும் இவர்கள் ஜில்லா அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கிறார்கள். மக்கள் ஜில்லா அதிகாரிகளுக்கும் நேரிடையாக விண்ணப்பங்கள் அனுப்புகிறார்கள். ஆனால் இவ்விண்ணப்பங்களின் பேரில் நடவடிக்கை எடுக்க வேண்டியவர்கள் ஜில்லா அதிகாரிகள். மக்கள் நேரிடையாக அனுப்பிய விண்ணப்பங்கள் பேரிலாயினும் சரி, சர்க்கார் மூலமாக அனுப்பப்பட்ட விண்ணப்பங்கள் பேரிலாயினும் சரி, எம்.எல்.ஏ.-க்கள் மூலமாக அனுப்பி வைக்கப்பட்ட விண்ணப்பங்கள் பேரிலாயினும் சரி அவர்கள் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ? முடிவு என்ன என்பது அவ்வப்போது அறிவிக்கப்படுமானால் உடனடியாக மக்களிடத்தில் அதைப்பற்றி உண்டு, இல்லை என்று சொல்லிவிட முடியும். ஆனால் இன்றையதினம் அவ்வாறு செய்யப்படுவதில்லை. அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்வதிலே காலதாமதம் ஆகிறது. இதனால் மக்களிடையே அதிருப்தி வளருகிறது.

அப்படிக்கின்றி சர்க்கார் உடனடியாக இதைக் கவனித்து நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று ஜில்லா நிர்வாகிகளுக்கு இன்ஸ்ட்ரெக்ஷன் கொடுத்தால் நல்லது. உடனடியாகத் தீவிர நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று உத்திரவிடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(Sri S. Ranganatha Mudaliar in the Chair.)

இன்னொன்று. நிர்வாக அதிகாரிகளுக்குச் சில நன்மைகளைச் செய்து கொடுக்கவேண்டும். ஜில்லா நிர்வாகக் காரியாலயங்களுக்கு மின்சார விளக்குகள் போடுவது பற்றி ஏதோ தொகை ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அது மிகவும் அத்தியாவசியமானதாகும். சில சமயங்களில் இரவுக் காலங்களில் கூட அவர்கள் வேலை செய்யவேண்டியதாக இருக்கிறது. ஆகவே ஜில்லா நிர்வாக அலுவலகங்களுக்கு உடனடியாக மின்சார விளக்குகள் போட்டுத்தரவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். வசதி செய்து கொடுத்தால் தான் அவர்களால் சரிவர வேலை செய்ய முடியும். எவ்வளவு தொகை தேவை என்பதைக் கணக்கு எடுத்து, பூராவையும் ஒதுக்குவதில் அதிக கவனம் எடுத்துக்கொள்ளும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஹரிஜனங்களுக்கு விவசாய நிலங்களை ஒதுக்கும் விஷயத்தில் நிர்வாக அதிகாரிகள் அதிக அக்கரை காட்டவேண்டும். குறிப்பாக என் தொகுதியில் பவானியிலே—கோபிச்செட்டிபாளையத்திலே இந்த இரண்டு தாலுக்காக்களிலுமே அறுநூறு எழுநூறு எக்கரா நிலங்கள் இருக்கின்றன. இன்னும் அந்த நிலங்களுக்குப் பட்டா வழங்கப்படவில்லை. சில பட்டாக்கள் வழங்குவதற்காக ஒரு கூட்டம் நடத்தி வைத்தோம். இன்று அந்தக் காரியம் தாமதமாகப் போய்க்கொண்டிருக்கிறது. உடனடியாக இந்த நாநூறு, ஐந்நூறு எக்கர் நிலங்களையாவது நிலமில்லாத ஹரிஜனங்களுக்கு உடனடியாகப் பிரித்துக் கொடுக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டால் நலமாக இருக்கும். பிரித்துக் கொடுக்கப்படாத நிலங்களை உடனடியாகப் பிரித்துக்கொடுக்க தீவிர நடவடிக்கை எடுத்துக்கொள்வதோடு, பிரித்துக்கொடுக்கப்பட்ட நிலங்களுக்கும் பட்டா உடனடியாக வழங்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆகவே, அதை உடனடியாக அவர்கள் எல்லோருக்கும் பட்டா வழங்கும்படியாக கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, கிராம வெட்டியான்களை எடுத்துக்கொண்டால் இவர்களுடைய வேலைமுறையையும், சம்பளத்தையும் திருத்தி அமைக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் என்ன சம்பளம் பெறுகிறார்கள் என்பதையும் நாம் யோசித்துப்பார்க்கவேண்டும். அவர்கள் மிகவும் குறைந்த சம்பளம் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய சம்பளத்தை உயர்த்திக்கொடுக்கவேண்டும் என்று சொல்லும் போது அவர்களுடைய எண்ணிக்கை மிக அதிகமாக இருக்கின்றது என்று சர்க்கார் சொல்லுகிறது. அதோடு அவர்கள் பார்ட் டைம் வொர்க்கர் என்ற முறையில் இருப்பதாலும் அவர்களுடைய பிரச்னையை கவனிப்பது மிகவும் சிரமமாக இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இருந்தாலும் அவர்களுடைய வாழ்க்கையைப்பற்றி நாம் யோசிக்கவேண்டும். பார்ட்-டைம் வேலை என்று சொன்னாலும் கூட அவர்கள் காலை முதல் இரவு வரை வேலை செய்கிறார்கள். அவர்கள் வேலை செய்கின்ற இடத்தில் அதிகாரிகள் எந்த நேரத்தில் போனாலும் அவர்கள் அதிகாரிகளுக்கு வேண்டிய எல்லாக் காரியங்களையும் செய்து கொடுக்கிறார்கள். ஆகவே அவர்களை பார்ட்-டைம் வொர்க்கர் என்று மட்டும் நாம் சொல்லிவிட முடியாது. இப்போதுள்ள குறைந்த சம்பளத்தில் அவர்களுடைய குடும்பங்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே சர்க்கார்



இவர்களுடைய சம்பளத்தை உயர்த்துவதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். முக்கியமாக வெட்டியான், சிப்பந்திகள் வேலை பார்க்கின்றவர்கள் எல்லாம் 100-க்கு 90 பேர்கள் அரிஜனங்களாக இருந்து வருகிறார்கள். ஆகவே சர்க்கார் அவர்களுடைய சம்பளத்தை உயர்த்துவதில் மிகவும் சிரத்தை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று பஞ்சாயத்து டெவலப்மெண்ட் அலவன்ஸ் என்ற முறையில் தற்போது கிராம கர்ணங்களுக்கும், மணியக்காரர்களுக்கும், சிப்பந்திகளுக்கும் சிறிது தொகை ஒதுக்க சர்க்கார் ஆலோசித்துக்கொண்டிருக்கிறார்கள். அதோடு சில இடங்களில் இந்தத் தொகை கொடுத்தும் வருகிறார்கள். இப்போது கொடுத்துக்கொண்டிருப்பதைப் பார்க்கும்போது, கர்ணங்களுக்கு 12 ரூபாய் முதல் 15 ரூபாய் வரை என்றும், மணியக்காரர்களுக்கு 5 ரூபாய் முதல் 7 ரூபாய் வரை என்றும், மற்றும் வெட்டியான் போன்ற சிப்பந்திகளுக்கு ரூபாய் 2 முதல் 3 வரை கொடுக்கிறார்கள். இந்த விதத்தில் அவர்களுக்குள்ள தராதரம் பிரிக்கப்படுகிறது. இதை பஞ்சாயத்து மான்யமாக கொடுத்து வருகிறார்கள் என்று தெரிகிறது. இதை சிறிதளவு மாற்றி இப்போது 2, 3 என்றிருப்பதை மாற்றி குறைந்தது 5 ரூபாய் அளவிலாவது உயர்த்திக் கொடுக்க சர்க்கார் யோசனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அடுத்தபடியாக, நீர்க் கசிவு ஏற்படுவதினால் பாதிக்கப்படும் அரிஜன வீடுகளின் ஜாபிதாக்கள்—கோயம்புத்தூர் ஜில்லாவில், லோயர் பவானி, மேட்டு வாய்க்கால் திட்டத்தைப் பொறுத்த அளவில்—சர்க்காரிடத்தில் இருக்கின்றன. அதன்படி பாதிக்கப்படும் அரிஜனங்களுக்கு நில ஆர்ஜிதம் கொடுப்பதில் துரிதமான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **Sri J. MATHA GOWDER** : கனம் சபைத் தலைவர் அவர்களே, கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்த மான்யத்தின் மீது வெட்டுப் பிரேரணை கொண்டு வந்து பேசிய எதிர்க்கட்சி நண்பர் அவர்கள் பேசும் போது நிலச் சீர்திருத்தச் சட்டம் தேர்தலுக்கு முன்பு வருமா, வராதா என்று கேள்வியைப் போட்டுவிட்டு பின்னால் வராது என்றே நினைக்கிறேன் என்று அவர்களே பதிலும் சொல்லிவிட்டார். ஏன் அவர்களுக்கு இந்த சந்தேகம் ஏற்படுகிறது என்று தெரியவில்லை. தேர்தலுக்கு முன்பு கொண்டு வரமாட்டார்கள் என்று சொல்லுவதின் காரணம் இந்த விதமாக மக்களிடத்தில் ஆசையை காண்பித்து, காங்கிரஸ்காரர்கள் எங்கே தேர்தலில் வெற்றி பெற்று வந்து இங்கே உட்கார்ந்து விடப்போகிறார்களோ என்ற பயத்தினால் தான் இவ்விதம் எல்லாம் மக்களிடத்தில் சொல்லுவது போல் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். நான் ஒரு விஷயத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். இந்த காங்கிரஸ் கட்சி வந்த பின்னால் தான் ராஜாக்களை ஒழித்து இருக்கிறோம். அப்போது யாரைக் கேட்டுவிட்டு ஒழித்தோம். மன்னர்களை ஒழித்திருக்கிறோம். இவர்களை ஒழித்திருக்கும் காங்கிரஸுக்கு சாதாரண நிலச்சுவான்தார்களை ஒழித்துக் கட்டுவதற்கா பயம் ஏற்படப் போகிறது ? இதைப் புரிந்து கொள்ளாமல் காங்கிரஸ் கட்சி பயப்படுகிறது என்று சொல்லிக்கொண்டிருப்பதைப் பார்த்தால், ஆச்சரியமாக இருக்கிறது. எதிர்க்கட்சியினர் ஒன்றை திட்டவட்டமாக நினைத்துக் கொள்ளவேண்டும். ஜமீன்தார்களை ஒழித்து அவர்களுக்கு நஷ்டஈடு கொடுப்பதற்காகத் தான் 80 லட்சம் ரூபாய் மான்யம் இதிலேயே கேட்கப்பட்டிருக்கிறது. இவ்விதம் மன்னர்கள், ராஜாக்கள், நிலச்சுவான்தார்கள் இவர்களை எல்லாம் போக்குவதற்கு படிப்படியாக நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கும்போது இவர்களை எல்லாம் ஒழிப்பதற்கு காங்கிரஸ் பயப்படுகிறது என்று சொல்லுகிறார்கள். உண்மையில் அது எங்களைப் பொறுத்தவரையில் எந்தவிதமான பயமும் இல்லை, உங்கள் மனதில் இருக்கின்ற குழப்பத்தை

தான் இது காட்டுகிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் மட்டும் நிலச்சுவான்தார்களை ஆதரிப்பதில்லை என்று சொல்லிவிட முடியுமா என்பதையும் எதிர்க்கட்சியிலுள்ளவர்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். நிலச் சீர்திருத்தத்திற்கு எதிராக எதையெல்லாமோ சொல்லி உண்மைக்குப் புறம்பாக எதையெல்லாமோ எடுத்துக்கூறி நிலச்சுவான்தார்களை தேடிக்கொண்டு போகிறீர்கள் என்பதை எங்களால் எடுத்துக் காட்ட முடியும். இன்றைக்கு தனிமனிதனின் உரிமையைக் காப்பாற்ற வேண்டும் என்ற முறையில் நிலச்சுவான்தார்களைக் காப்பாற்ற வேண்டும் என்று சொல்லுகின்ற சுதந்திரா கட்சியுடன் தான் சேர்ந்துகொண்டு தேர்தலுக்கு வரப்போகிறோம் என்று நீங்கள் பேசுவதிலிருந்து நீங்கள் நிலச்சுவான்தார்களின் கையாட்கள் என்ற முறையில் இருந்து வருகிறீர்கள் என்பதை எல்லோரும் அறிவார்கள். மக்கள் அதற்குத் தகுந்த பதிலையும் தரப்போகிறார்கள். வரப்போகிற தேர்தலில் நீங்கள் என்னவெல்லாம் சூழ்ச்சிச் செய்யப்போகிறீர்கள் என்பதை மக்கள் நன்றாகப் புரிந்துகொண்டிருக்கிறார்கள். நிலச் சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு காங்கிரஸ் தயங்கிக்கொண்டிருக்கிறது, செப்டெம்பர் மாதத்தில் கூட வருமா என்று தெரியவில்லை என்றெல்லாம் சொல்லுகிறார்கள். அவர்களுக்கு ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். காங்கிரஸ் கட்சி நடத்துகின்ற அரசாங்கத்தால் தான் இந்தச் சட்டம் இதே சட்டமன்றத்தில் கொண்டு வரப்பட்டது. இங்கு வந்த பின்னால்தான் அதை செலக்ட் கமிட்டியில் கொண்டு போய் நன்றாக பரிசீலனை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு செலக்ட் கமிட்டிக்கு அனுப்பினோம். இப்போது அக் கமிட்டியார் பல ஜில்லாக்களுக்கும் போய் இதைப் பற்றி பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள். அந்தக் கமிட்டியில் திராவிட முன்னேற்றக் கழக சட்டசபை அங்கத்தினர்களும் இருக்கிறார்கள். வேண்டுமென்றால் செலக்ட் கமிட்டியில் இதை சீக்கிரமாகக் கொண்டு வரவேண்டும் என்று துரிதப் படுத்தியிருக்கலாமே. செலக்ட் கமிட்டியின ரிப்போர்ட் இந்தச் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னால் நடவடிக்கை எடுக்கவில்லையென்றால் அப்போது வேண்டுமென்றால் இந்த அரசாங்கம் பயப்படுகிறது என்று சொல்லலாம். அப்போது வேண்டுமென்றால் உங்கள் வாதம் நியாயமாக இருக்கும். உங்களுக்கு சர்க்காரை நடத்துவதே எப்படியென்று தெரியாத காரணத்தினால்தான் இப்படியெல்லாம் எதையெல்லாமோ மேடையில் பேசுவது போன்று இங்கும் பேசிக்கொண்டிருக்கிறார்கள், திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்கள். இது சரியல்ல என்பதை அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிராம அதிகாரிகளைப் பற்றி திட்டவட்டமான ஒரு முடிவுக்கு அமைச்சர் அவர்கள் வருவது நல்லது என்று கருதுகின்றேன். அவர்கள் அதிக சம்பளம் வேண்டும் என்று கேட்கின்றார்கள். ஓரளவுக்கு இப்போது நாம் சம்பள உயர்வு கொடுத்திருக்கிறோம். அதற்காக நான் சந்தோஷப்படுகிறேன். இருந்தாலும் அவர்களையும் முழு நேர ஊழியர்களாக நாம் எடுத்துக்கொள்ள யோசிக்கிறோம். முழு நேர ஊழியர்களாக எடுத்துக்கொண்டு அவர்களையும் கிராமத்திற்கு கிராமம் இடமாற்றுவதாக இருந்தால், அவர்களே இந்த வேலையை விட்டு ராஜினாமா செய்து விட்டு போய்விடுவார்கள். அவர்கள் பகுதி நேர ஊழியர்கள் என்று எடுத்துக் கொண்டாலும் அவர்கள் முழு நேரமும் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் பார்ட்டைம் ஊழியர்கள் என்று மட்டும் கருதாமல் முழு நேர ஊழியர்கள் என்று நினைக்க வேண்டும். பஞ்சாயத் யூனியன் அல்லது பஞ்சாயத் போர்ட் இவற்றோடு சேர்த்து விட்டால் மிகவும் சுலபமாக இருக்கும். பஞ்சாயத் போர்டுகளில் இப்போது லாண்ட் டாக்ஸ், ஹௌஸ் டாக்ஸ் இவைகள் எல்லாம் வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். மைனர் பஞ்சாயத்துக்கள் எல்லாம் 10 ஆயிரம் ரூபாய், 20 ஆயிரம் ரூபாய் என்று வீட்டு வரிகள் எல்லாம் வசூலித்து வருகிறார்கள். ஆகவே





இந்தக் கிராம அதிகாரிகள் வசூல் செய்யும் தொகையை இவர்கள் வசூல் செய்ய முடியாது என்று சொல்லிவிட முடியாது. பில் கலெக்டர் என்று பல ஆட்களைப் போட்டு விட்டால், இந்த கிராம அதிகாரிகளையே எடுத்து விடலாம். இவர்களுடைய தொல்லையே இனிமேல் இருக்காது. ஆகவே இவர்களுடைய பிரச்னை இந்த விதமாக தீர்ந்து விடுவது தான் நல்லது என்பது என் அபிப்பிராயம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே நேரத்திலே நீலகிரி ஜில்லாவிலே நியமிக்கப்பட்டுள்ள தண்டல்காரர்கள், தலையாரிகள், கிராம போலீஸ்காரர்களைப்பற்றி நான் முன்னாலேயே கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்களிடத்தில் சொல்லியிருக்கிறேன். அந்த ஜில்லாவிலே உள்ளவர்களுக்கு ஒரு உல்லன் டிரஸ், அதாவது கம்பளித் துணிகள் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறேன். அவர்களும் சரியென்று சொல்லி ஒரு வருஷம் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் 2, 3, வருஷங்களாக நிறுத்தப்பட்டிருக்கிறது. காரணம் என்னவென்பது தெரியவில்லை. அந்த வேலையிலுள்ளவர்களுக்கு இந்த உடைகள் மிக அவசியம். ஆகவே அவர்களாகவே தங்களுக்கு வேண்டிய கம்பள ஆடைகளை தைத்துக் கொள்வதென்றால், அவர்கள் சம்பாதிக்கக்கூடிய 3 அல்லது 4 மாதத்து சம்பளத்தைப் போட்டால்தான் தைக்க முடியும். இது அவர்களால் முடியாத காரியம். ஒரு வருஷம் கொடுத்து, மற்ற வருஷங்களுக்கு கொடுக்காத காரணத்தை என்னால் அறியமுடியவில்லை. இதை கனம் அமைச்சர் அவர்கள் தயவு செய்து பரிசீலனை செய்து அவர்களுக்குத் தொடர்ந்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, நீலகிரி ஜில்லாவிலே இப்போது எப்படி வரி விதிக்கப்படுகின்றது என்பதைப் பார்த்தால், இந்த ஆண்டுக்கு என்று வரி வசூலித்து அதுபோல் 3, 4 வருஷங்களுக்கு வரி கொடுக்க வேண்டுமென்று மாற்றி இருக்கிறார்கள். முன்பு வேஸ்ட் லாண்ட் முறையிலே ஒரு ஏக்கருக்கு ஒரு ரூபாய் என்று போட்டிருந்தால், இப்போது இந்த வருஷத்திற்கு 3, 4 ரூபாய் என்று தேயிலை, காப்பி தோட்டத்திற்கு போடுவதுபோல் கணக்கிட்டுக்கொண்டு அதை மாற்றி வருகிறார்கள். அப்படி மாற்றி இருப்பதோடு, அதை எந்த பசலிக்கு வசூலிக்க வேண்டுமோ அந்த பசலிக்கு மட்டும் வசூலித்தாலும் பரவாயில்லை. இந்த பசலிக்கு என்ன கொடுக்க வேண்டுமோ, அதேபோல் முன்புள்ள பசலிகளுக்கும் ஒரே வருஷத்தில் கொடுக்க வேண்டுமென்று இப்போது நோட்டீஸும் கொடுக்கப்பட்டுள்ளது. சர்க்கார் தாமதம் செய்துவிட்டு, இப்படி ஒரே வருஷத்தில் 4, 5, வருஷத் தீர்வையைக் கொடுக்க வேண்டுமென்று சொன்னால், அதுவும் அதிகரிக்கப்பட்டுள்ளத் தீர்வையைக் கொடுக்கவேண்டுமென்று சொன்னால், அது விவசாயிகளுக்கு எவ்வளவு கஷ்டமாக இருக்குமென்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே அப்படி வசூலிக்கப்படும் தொகையையாவது, 2, 3 வருஷத் தவணைகளாகக் கொடுத்து, அப்படி வரியை வசூலிப்பது நல்லதென்று கனம் அமைச்சர் அவர்களுக்கு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சாதாரணமாக நாம் இப்போது கலெக்டர்களுக்கு அதிகமான வேலையை கொடுத்திருக்கிறோம். அதோடு நாம் இப்போது பல அபிவிருத்தித் திட்டங்களை எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே அவர்கள் அதிகமான வேலையைச் செய்ய வேண்டியிருக்கிறது. அதை உணர்ந்து அமைச்சர்கள் ஒவ்வொரு ஜில்லாவுக்கும் பல P.A.-க்களைப் போட்டிருக்கிறார்கள். இதைக் கண்டு நான் சந்தோஷப்படுகிறேன். அப்படிப் போடப்பட்டுள்ள பி.ஏ.க்களுக்கு, கலெக்டர்களுக்கு உள்ள அதிகாரங்களில் சிலவற்றைப் பிரித்துக் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுத்தால்தான் வேலைகள் மிகவும் வேகமாக நடக்க முடியும். அந்த வகையிலே P.A.-க்கள் வேலை செய்து விட்டபிறகு, அவர்கள் சரியான முடிவு செய்யவில்லை யென்றால்,

கலெக்டருக்கு அப்பீல் கொடுக்கலாம் என்று இருந்தால் மிகவும் நல்லதாக இருக்குமென்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இரண்டாவவதாக கலெக்டர்கள் இப்போது எல்லா இடங்களுக்கும், திறப்பு விழாக்களுக்கும் போக வேண்டியிருக்கிறது.

**THE HON. SRI M. A. MANICKAVELU** : டீ.ஆர்.ஓ. நீலகிரிக்கு மட்டும் இல்லை. அது சின்ன ஜில்லா என்று போடவில்லை. மற்ற ஜில்லாக்களுக்கு டீ.ஆர்.ஓ-க்கள் கலெக்டர் ஸ்டேட்டஸிலே ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது.

**SRI J. MATHA GOWDER** : நீலகிரியைப் பொறுத்த வரையில் பி. ஏ.க்கள் தான் போடப்பட்டிருக்கிறார்கள். அதைத் தவிர ஆர்.டி.ஓக்கள் வேறு இருக்கிறார்கள். இதர மாவட்டத்தில் எப்படி ஆர்.டி.ஓக்கள் இருக்கிறார்களோ, அதைப்போல் இங்கு P.A.-க்களுக்கு அதிகாரம் கொடுத்துவிட்டால், நிர்வாகம் துரிதமாக நடக்கும் என்பதை நான் கனம் அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதைத் தவிர, கலெக்டர்கள் தான் எல்லா இடங்களுக்கும் வந்து எல்லா திறப்பு விழாக்களிலும் கலந்து கொள்ள வேண்டுமென்று இப்போது இருக்கிற நிலைமையை மாற்றியமைக்க வேண்டும். அப்படி அவர்கள் போய் விடுவதால், ஹெட் குவாட்டர்சில் வேலை ஒழுங்காக நடைபெற முடிவதில்லை. இதை அவர்கள் டூர் புரோகிராமைப் பார்த்தாலே தெரிகிறது. மாதத்தில் 20, 25 நாட்களுக்கு டூர் போகக் கூடிய நிலைமை ஏற்படுவதால் அதுவும் பெரிய சிக்கலாகத்தான் இருக்கிறது. அதற்காக டூரே போக வேண்டாமென்று சொல்லவில்லை. அப்படிப் போகும்போது கலெக்டர் இல்லை என்று, P.A.-க்களால் வேலைகள் முடிக்கப்பட்டும் தாமதம் ஏற்படுகிறது. ஆகவே, இந்த வேலைகளில் சில பகுதியை P.A.-க்களுக்குப் பிரித்துக் கொடுத்து, அவர்களுக்கு அதற்கு அதிகாரம் கொடுக்கவேண்டும். திறப்பு விழாக்களிலேயும் கலந்து கொள்ள வேண்டாமென்று சொல்லவில்லை. எல்லா விழாக்களுக்கும் அவர்தான் வரவேண்டுமென்றுஇருக்க வேண்டியதில்லை. காரணம், அட்மினிட்ஸ்ரேஷன் செக்ஷனை பொறுத்த வரையில் கலெக்டர் பார்க்க வேண்டியிருப்பதால், இம்மாதிரி எல்லா ஊர்களுக்கும் போகவேண்டியதில்லை என்று கலெக்டர்களுக்கு ஒரு சுற்றறிக்கை அனுப்ப வேண்டும். அதற்காக எந்த திறப்பு விழாக்களுக்கும் போகவேண்டாமென்று சொல்லவில்லை. நேரடியாகக் கேம்ப் போகும்போது சில திறப்பு விழாக்களில் கலந்து கொள்வதில் எவ்வித ஆட்சேபணையும் இல்லை. நேரடியாக ஹெட்குவார்ட்டர்ஸில் இருந்து அடிக்கடி போய்க்கொண்டு வருவதால், எதைக் கேட்டாலும் கலெக்டர் இல்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே, P.A.-க்களுக்கு சில குறிப்பிட்ட அதிகாரங்களைக் கொடுக்க வேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொண்டு, இந்த மான்யத்தை ஆதரித்து, என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

***SRI V. SUBBIAH** : கனம் தற்காலிகச் சபா நாயகர் அவர்களே, இந்த ரெவின்யூ அண்ட் ஜில்லா நிர்வாகம், ஸ்டாம்பு அட்மினிஸ்ட்ரேஷன் பற்றிய மான்யம் பொதுவாக இன்றைய நிர்வாகத்திலே நல்ல வருவாயை தரக்கூடிய மிக முக்கியமான ஒரு இனம். எந்தக் காலத்திலும் இது அரசாங்கத்திற்கு முக்கியமாக இருந்து வந்திருக்கிறது. இப்போது எடுத்துக் கொண்டாலும் கூட, இத்துறை முக்கியமாக இருந்து வருகிறது. எப்போதும் நில வருவாயை வைத்துக்கொண்டுதான் அரசாங்கம் இயங்கிக்கொண்டே வந்திருக்கிறது. அதன் பேரில், அதன் அடிப்படையில் வரக்கூடிய மான்யத்தை நாம் மிகவும் முக்கியமாக கவனிக்க வேண்டும். இதிலே பல விஷயங்களை குறிப்பாகச் சொல்லலாம்.



ஜில்லா நிர்வாகத்தை எடுத்துக்கொண்டால், அங்கே கலெக்டர்கள் என்ன செய்கிறார்கள்? தாலூக்காகளிலே என்னென்ன செய்து கொண்டு வருகிறார்கள் என்பதையெல்லாம் நாம் கொஞ்சம் நன்கு சிந்தித்துப் பார்க்கவேண்டும். இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையிலே கிராமராந்திரங்களிலிருந்து அரசாங்கத்திற்கோ அல்லது தாலுகா ஆபீசுக்கோ நிர்வாக விஷயத்திலே என்ன தொடர்பு இருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். அவர்களால் அனுப்பப்படக்கூடிய மனுக்கள் எப்படி கவனிக்கப்படுகிறது என்பதை யெல்லாம் நாம் சிந்தனை செய்து பார்க்க வேண்டும். அப்படிப் பார்த்தால் இன்றைக்கு வேலை ஜாஸ்தியாகி இருக்கிறது. அதனால் அவர்களுக்கு கிராமத்திலே இருந்து போகக்கூடிய மனுக்களுக்கு பதில் கிடைக்காத ஒரு நிலைமைதான் இன்று இருக்கிறது. ஆனால் முன்பு ஒரு கலெக்டர் இருந்த இடத்தில், இன்று கலெக்டரைத் தவிர, அவருக்கு உதவியாக பல P.A.-க்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். எல்லா இலாக்காக்களுக்கும், தனித்தனி செக்ஷனுக்கு P.A.க்கள் இப்போது நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இதைத் தவிர, இவர்களுக்குகீழ் 7, 8 ஆர்.டீ.ஓக்கள் என்று இருந்து கொண்டிருக்கிறார்கள் அதேவிதமாக தாலூக்காக்களிலே எடுத்துக்கொண்டால், தாசில்தார்கள் 9 பேர் இருக்கிறார்கள். அவர்களைத்தவிர, கிராமத்திற்கு அடிப்படையாக இருக்கக்கூடிய ஆர்.ஐ.-க்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்று பார்த்தால், அது டஜன் கணக்கில் இருக்கும்போல் தெரிகிறது. லாண்ட் ரெவின்யூவுக்கு ஒரு ஆர். ஐ. லோனுக்கு ஒரு ஆர்.ஐ. என்று ஒவ்வொரு துறைக்கும் ஒரு ஆர்.ஐ. நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் யார் யார் என்று புரிந்து கொள்ளக்கூடமுடியாமல் இருக்கிறது. ஆனால் எவ்வளவு வேலை நடக்கின்றது என்று பார்த்தால், கிராமங்களிலுள்ள விவசாயிகளுக்கு தேவையானவற்றைக் குறித்தோ அல்லது கிராமத்திலுள்ள குறைகளைப் பற்றியோ எழுதி உதவ வேண்டுமென்று கேட்டிருந்தால், அதற்கு பதில் கொடுப்பதற்கு எத்தனை, நாள், ஏன், வருஷக்கணக்கில்கூட ஆகிறது என்று சொன்னால் கூட ஆச்சரியப்படுவதற்கு இல்லை. இந்த பயங்கரமான நிலைதான் இன்றைக்கு ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே இந்தமாதிரிய் நிர்வாகம் போய்க் கொண்டிருந்தால், அது எங்கு கொண்டுபோய் விடுமென்பதை கனம் அமைச்சர் அவர்கள் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

அடுத்து, இந்த நிலத் தீர்வையை வசூலிப்பது பற்றி பார்க்கவேண்டும். அந்த முறையிலே ஜமீன் பகுதிகளிலும், இனாம்தார்களுடைய பகுதிகளிலும் எப்படி வரி வசூலிக்கப்படுகிறது என்று பார்த்தால், அங்கு நடக்கக் கூடிய கெடுபிடி இருக்கிறதே அதைச் சகிக்கவே முடியாது. அங்கெல்லாம் பழைய பாக்கியை கொடுக்க வேண்டுமென்று இப்போது வற்புறுத்தப்படுகிறது. ஜமீன் பகுதிகளிலும், இனாம் பகுதிகளிலும் முன்பு சிறிது வசூலிக்கப்பட்டு, பின்னால் நின்று விட்டது. அப்படி விட்டுப்போன பழைய பாக்கிகளை கட்டிவிட்டும்கூட, இப்போது அதற்கு வட்டி பாக்கியை கட்டவேண்டுமென்று கேட்கப்படுகிறது. வசூலித்து விட்டும், இப்போது அதற்குவட்டிப் பாக்கியை கொடுக்க வேண்டுமென்று கேட்கப்படுகிறது. அப்படி வசூலிப்பதற்கென்று டிமாண்ட் நோட்டீஸ் கொடுக்கப்பட்டு, அப்படி கொடுக்காவிட்டால் போலீசைக்கொண்டு வைத்து, வசூலிக்கப்படுகிறது. இவ்வாறு பல இடங்களில் வசூலிக்கப்பட்டு வருகிறது. இதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அப்படி வசூலிக்கக்கூடியதையாவது விவசாயிகளுக்கு வருமானம் வரக்கூடிய காலத்தில் சென்று வசூலித்தால் நல்லது. அப்படி வசூலிக்காமல், அவர்கள் தங்களிடமுள்ள நகைகளையெல்லாம் அடகு வைத்துவிட்டு அந்த அடகு வைத்த பணத்தை வைத்துக்கொண்டு பயிர் தொழிலிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிற சமயத்திலே, வெள்ளாமையிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிற காலத்திலே, தீவிரத் தீர்வை என்று கூறி

பழைய பாக்கியென்றும், அந்தப்பழைய பாக்கிக்கு இவ்வளவு வட்டி என்றும், அப்படிக் கேட்கக் கூடியதையும் போலீசை வைத்துக் கொண்டு மிரட்டுவதும். அப்படிக் கொடுக்கத் தவறினால், அவர்களுடைய மாடுகளைப் பிடித்துக் கொண்டு போவதுமான நிலையையும் இருந்தால், அவர்கள் எப்படி நல்ல முறையிலே விவசாயம் செய்ய முடியும்? விவசாயத்திற்கு மாடுகள் அவர்களுக்கு மிகவும் முக்கியம். இந்த மாதிரி பல நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

லோன்களை வசூலிப்பதிலும் பல கஷ்டங்கள் ஏற்படுத்தப்படுகிறது. மாடு வாங்குவதற்கு என்று 500 ரூபாய் லோன் கொடுக்கப்படுகிறது. அப்படிக் கொடுக்கப்பட்ட லோன் வசூலிக்கப்பட்டு, இன்னும் பாக்கி 1 ரூபாய் 75 ந.பை. தர வேண்டும் என்பதற்காக போலீசை வைத்து அந்தப்பணம் வசூலிக்கப்படுகிறது. இப்படிக் கடன் கொடுத்து விட்டு இந்தச் சிறிய தொகையை வசூலிப்பதில் இவ்வளவு கஷ்டப்படுத்த வேண்டுமா என்று நான் கேட்க விரும்புகிறேன். இந்த சிறிய தொகையை கொடுக்க முடியாத நிலைமையிலா அவன் இருப்பான். இந்தமாதிரி இன்னும் பல சிக்கல்கள் இருக்கின்றன.

பட்டாக்கள் செட்டில்மெண்டான பிறகு அதில் பல சிக்கல்கள் ஏற்படுத்தப்படுகிறது. ஜமீன்தாரி பிரதேசங்களிலும், இனும் பிரதேசங்களிலும் நிலத்தை ரிசெட்டில்மெண்ட் செய்வதிலே, கோர்ட்டுக்கு போகக்கூடிய நிலைமைதான் இன்று ஏற்பட்டிருக்கிறது. எங்கு பார்த்தாலும், 50 செண்ட் நிலத்தைப் புறம்போக்கிலே தள்ளிவிட்டார்கள், இந்த நிலத்தை இங்கே குறைத்து விட்டார்கள். அந்த நிலத்தை அங்கே கூட்டி விட்டார்கள் என்ற ஒரு நிலைமைதான் இன்றிருக்கிறது. இதனால் இன்று கோர்ட்டுக்கு போவதை பார்க்கின்றோம்.

(ஸ்ரீ ரெங்கநாத முதலியார் தலைமை வகித்தார்.)

1947-வது ஆண்டு ஜமீன்தாரி ஆக்ட்டுக்கு முன்னால் இருந்து உழுது கொண்டு பரம்பரையாக 70, 80 வருஷங்களாக பட்டா போட்டு வைத்துக் கொண்டிருந்தாலும் கூட, அவர்கள் பேரில் கிரயங்கள் இருந்தாலும்கூட, ஜமீன் அபாலிஷன் ஆக்டுக்கு பிறகு, அந்த சட்டத்திற்கு மாறுபட்டது என்று சொல்லி நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். விவசாயத்தைவிட்டுவிட்டு கோர்ட்டுகளுக்கு ஓட வேண்டிய நிலையில் விவசாயிகள் இருக்கிறார்கள். ஜமீன்தார் நிலமாக இருந்த பொழுது "அன்சர் வேய்டு" லாண்டாக இருந்தது. சர்வே இல்லாமல் நிலம் வைத்துக் கொண்டிருந்த பல சிறிய ஜமீன்தார்கள் இருந்தார்கள். ஒரு எக்கரில் 100 செண்டுக்கு 90 செண்டுதான் அவர்கள் அனுபோகத்தில் இருக்கும். அதே மாதிரி இன்னொரு இடத்தில் 100 செண்டுக்கு 110 செண்டு அனுபோகத்தில் இருக்கும். இந்தத் துறையிலே 10 செண்டு கூடுதலாக வைத்திருந்தால் அது புறம் போக்கு நிலம் என்று சொல்லி அதை விட்டுவிடவேண்டும் என்று சொல்லுகிறார்கள். அந்தப் பகுதியிலே 100 செண்டுக்கு 90 செண்டுதான் இருக்கிறது என்று விவசாயிகள் கேட்கும் பொழுது, அதற்கு நாங்கள் ஒன்றும் செய்ய முடியாது என்று சொல்லி விடுகிறார்கள். 10 செண்டு நிலத்தை விட்டுத்தான் ஆக வேண்டும் என்ற ஒரு நிலை எல்லா இடங்களிலும் இருந்து கொண்டிருக்குகிறது. இதற்காக எல்லாம் கோர்ட்டுகளுக்கு போக வேண்டியிருக்கிறது. அவர்களே அனுபவித்துக் கொண்டிருந்த நிலமாக இருந்தாலும்கூட செட்டில் மெண்டு சர்வேயர்கள் பல தகராறுகளை உண்டாக்கி அதனால் லஞ்சப் பழக்கம்கூட ஜாஸ்தியாகி இருக்கிறது. கிராமத்திலுள்ள விவசாயிகள் கோர்ட்டுகளுக்கு நடக்கக்கூடிய அளவிலே எல்லா செட்டில் மெண்டுகளும் இருந்துகொண்டிருக்கிறது. பாட்டம் மிக கடுமையாக இருக்கிறது. செட்டில்மெண்டு நடந்து கொண்டிருக்கும் ஜமின் பிரதேசத்தில் போய்பார்த்தால் அந்தக் கஷ்டம்



தெரியவரும். ஜமீன்தார் காலத்தில் ஒரு ரூபாயாக இருந்த தீர்வை இப்பொழுது அந்த நிலங்களை ரயத்வாரி நிலமாக செய்தபிறகு இன்றைக்கு ரூபாய் 2 ஆக இருக்கிறது. எட்டையபுரம் போன்ற இடங்களில் விவசாயிகள் ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள். விவசாயிகள் ஜமீன்தார்கள் இருக்கும் பொழுது எவ்வளவு தீர்வை கொடுத்தார்கள், அரசாங்கம் எடுத்துக் கொண்ட பிற்பாடு எவ்வளவு கொடுக்கிறார்கள் என்பதை விசாரித்துப் பார்க்க வேண்டும். அவர்கள் இப்பொழுது எவ்வளவு கூடுதலாகக் கொடுக்கிறார்கள், எவ்வளவு கஷ்ட நஷ்டத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள் என்பது தெரியவரும். இந்த கஷ்டங்களை ரெவின்யூ இலாகா உடனடியாக நிவர்த்திக்க வேண்டும்.

அடுத்தபடியாக, ஸ்டாம்பு ஆக்டை எடுத்துக் கொள்வோமானால், இன்றைக்கு ஸ்டாம்புக் கட்டணம் ரூ, 100-க்கு ரூ. 7 ஆக இருக்கிறது. ஆனால் நிலத்தையோ, வீட்டையோ கிரயத்திற்கு வாங்கக் கூடியவர்கள், மதிப்பைக் குறைத்து, ரூ. 5,000 மதிப்பு இருந்தால் அதை ரூ. 3,000 ஆகப் போட்டு பத்திரம் எழுதுகிறார்கள். இதனால் ஸ்டாம்பு ரூ. 7 என்று இருப்பது ரூ. 5 ஆக குறைத்து விட்டால் நமக்கு லாபகரமாக இருக்காதா என்பதை யோசிக்க வேண்டும். ரிஜிஸ்டிரேஷன் பீஸை குறைத்தால் அரசாங்கத்திற்கு வருமானம் குறைந்துவிடும் என்று சொல்ல முடியாது. இன்றைக்கு எல்லா இடங்களிலும் வெகு சகஜமாக அம்மாதிரி மதிப்பைக் குறைத்து பத்திரம் எழுதிக் கொள்கிறார்கள். ஆகவே, நாம் உண்மையிலேயே ரூ. 7 என்று இருப்பதை ரூ. 5 ஆக குறைத்தால் நமக்கு வருமானம் ஜாஸ்தியாகுமே தவிர குறையாது. மக்களிடையே உள்ள ஏமாற்றும் எண்ணத்தை போக்கி விடக்கூடிய நிலைமையும் ஏற்படும்.

நிர்வாகத்திலுள்ள வில்லேஜ் முன்சீப்புகளும், கர்ணம் ஆகியோர்களும் நிரந்தரமாக முழு நேர ஊழியர்களாக ஆக்கப்படவேண்டும். இது விஷயமாக பரம்பரை பாத்தியதையை எடுத்துவிட வேண்டும். இதனால் கிராமங்களில் அநேக சச்சரவுகள் ஏற்படுகின்றன. பஞ்சாயத்து கவுன்சில் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் மைனர் பஞ்சாயத்துக்கள் ஆகிய இடங்களில் அவர்கள் செகரடரியாக இயங்கக்கூடிய நிலை இருக்கிறது. ஒரு தப்பு அபிப்பிராயம் நிலவும் காரணமாக இதைப்பற்றி எங்கும் கூச்சலாக இருக்கிறது. புதியதாக ஒன்றும் சிருஷ்டி பண்ணவேண்டியதில்லை. இயங்கிக் கொண்டு இருக்கிற இடத்தைப்பார்த்து, நல்ல முறையில் இயங்குவதற்கு வழிவகைகளையெல்லாம் நாம் செய்யவேண்டும்.

* **Sri R. SRINIVASA IYER** : கனம் தற்காலிக சபாநாயகர் அவர்களே இப்பொழுது சபை முன்பு இருக்கும் மான்யக் கோரிக்கைகளை ஆதரிக்கும்பொழுது சில விஷயங்களை குறிப்பிட விரும்புகிறேன். ஜில்லா அட்மினிஸ்ட்ரேஷன் சம்பந்தப்பட்டவரையில் ஜில்லா கலெக்டர்களுக்கு உதவியாக இருக்கும் பொருட்டு, ஜில்லா ரெவின்யூ ஆதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அது வரவேற்கத்தக்கது. அதனால் ஜில்லா கலெக்டர்களுக்கு வேலை குறைய வில்லை. சுற்றுப் பிரயாணம் குறையவில்லை. "பைல்களைப்" பார்த்து உடனடியாக சீக்கிரம் உத்தரவு போடவும் முடியவில்லை. முக்கியமான இடங்களை அடிக்கடி பார்க்கவும் முடியவில்லை. தஞ்சை ஜில்லாவை எடுத்துக்கொண்டால், ஜில்லாக் கலெக்டருக்கு ஏற்கனவே இருந்த வேலைக்கு இப்பொழுது ஒன்றும் குறைவாக இருப்பதாகத் தெரியவில்லை. ஜில்லா ரெவின்யூ அதிகாரிகளுக்கு சில அதிகாரங்களை பிரித்துக் கொடுத்திருக்கிறார்களே தவிர, அவர்கள் "பைலை" பார்ப்பது, முக்கியமான சில உத்திரவுகளைப் போடுவது, போன்ற ஆபீஸில் வேலை செய்யக்கூடிய நிலையில்தான் இருக்கிறார்கள். ஜில்லா கலெக்டர்களுக்கு பஞ்சாயத்து நிர்வாகம், கம்யூனிடி டெவலப்மெண்டு நிர்வாகம், பிளாக் நிர்வாகம், பஞ்சாயத்து யூனியனின் கவுன்சில் நிர்வாகம், இது தவிர முக்கியமாக தண்ணீர், நீர்பாசனம், தீர்வை

கொடுக்காவிட்டால், பூராத் தீர்வையும் வசூலிப்பது அவ்வளவு நியாயம் அல்ல. இந்தப் பிரச்னையையும் கவனிக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தப்படியாக, ஸ்டாம்பு விநியோகத்தைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். முக்கால் ரூபாய், ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் கோர்ட் பீ ஸ்டாம்புகள், ஜெனரல் ஸ்டாம்புகள் கிடைக்கவில்லை. இன்று ஹிந்து பத்திரிகையிலேகூட கும்பகோணம் வக்கீல் சங்கத் தலைவர் ஸ்ரீ ராகவாச்சாரியார் எழுதியிருக்கிறார். முன் ஒரு தரம் 6 மாதங்களாகக் கிடைக்க வில்லை. தந்திகள் கொடுத்து, மனுக்கள் கொடுத்து, அதன் பிறகு கொஞ்சம் நிலைமை சரியாயிற்று. மறுபடியும் இப்பொழுது குறைச்சலான தொகைகளுக்கு ஸ்டாம்புகள் கிடைப்பதில்லை. ஏதாவது சாசனம், ஒப்பந்தம் எழுதவேண்டுமானால், பிளாக் மார்க்கெட்டிலே ஸ்டாம்புகள் வாங்கவேண்டிய நிலைமை இருக்கிறது. சர்க்காருக்கு வருமானம் கிடைக்கிற விஷயத்திலே, அதிகமான அக்கரை எடுத்துக்கொண்டு, தேவையான காலத்திலே இந்த ஸ்டாம்புகள் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

1936-ம் வருஷ இனாம்களைப் பற்றிய பிரச்னை ரொம்ப நாட்களாகவே இருந்து வருகிறது. அதற்காக ஆக்ட் 261948 சட்டத்தைத் திருத்துவதில் பிரயோஜனம் இல்லை. அதிலே உள்ள விஷயம் வேறு, இந்த விஷயம் வேறு. குடியானவர்களுக்குப் பாத்தியம் கொடுப்பது எப்படி, காம்பென்சேஷன் கொடுப்பது எப்படி, பட்டாக்கள் வழங்குவது எப்படி என்பதை எல்லாம் தனியாகப் பரிசீலனை செய்து, 1936-ம் வருஷ இனாம்களுக்கு ஒரு முடிவு காணவேண்டும். இதை நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன் இதனால் அநேக இடங்களில் மிராசுதாரர் குடியானவர்கள் பிரச்னை தீராமல் இருக்கிறது. வரியும் வசூலிக்கப்படாமல் இருக்கிறது.

கனம் அண்ணாமலை அவர்கள் கூறிய குறையைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். நியாயவாரச் சட்டம் பாதுகாப்புச் சட்டம், இவற்றின்கீழ் எத்தனை மனுக்கள் பெண்டிங்காக இருக்கின்றன! புள்ளி விவரங்கள் கொடுத்தால் சொல்ல முடியும். எல்லா ஜில்லாக்களுக்கும் லாண்டு ஸீலிங்க்ஸ் கமிட்டியிலே புள்ளி விவரம் கொடுக்கப்பட்டது. தென் ஆற்காடு ஜில்லாவிலே ஒரு வருஷத்தில் 12 மனுக்கள் போடப்பட்டு, 9 மனுக்கள் முடிவு அடைந்திருக்கின்றன. 3 மனுக்கள்தான் பெண்டிங்காக இருக்கின்றன. மிராசுதாரர்களுக்கும், குடியானவர்களுக்கும் இடையே கிளர்ச்சியை உண்டுபண்ணுவது தவறு. என்னுடைய ஜில்லாவைப் பொறுத்தவரையில், பேர் ரெண்ட் ஆக்ட். டெனெட்ன்ஸ் ப்ரொடெக்ஷன்ஸ் ஆக்ட் எல்லாம் நல்ல வகையிலே அமல் நடத்தப்பட்டு வருகின்றன. சட்டம் சரியாக நடந்துவருகிறது என்பதை எங்களுடைய ஜில்லாவை பொறுத்த வரையில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தப்படியாக ஜில்லாவிலுள்ள கெஜட் ( Gazetted ) ஆபீசர்களுக்காவது சர்க்கார் வீடுகள் கட்டிக்கொடுத்தால், வீட்டுப் பிரச்னை ஓரளவுக்கு குறையும். சர்க்கார் அதிகாரிகள் அநேகம் பேர்கள் ஜாஸ்தி வாடகை கொடுப்பதால், என். ஜி. ஓக்களுக்கும், மற்றவர்களுக்கும் வீடுகள் கிடைக்காமல் வாடகையும் ஏறிக்கொண்டு போகிறது. ஒவ்வொரு ஜில்லா தலைநகரிலும் கெஜட் ஆபீசர்களுக்கும், அதற்கு அடுத்துள்ள ஆபீசர்களுக்கும் சர்க்காரிலேயே வீடுகள் கட்டிக்கொடுத்து, அவர்களிடமிருந்து வாடகையை வசூலித்தால் அவர்களுக்கும் சௌகரியம், சர்க்கார் வேலையும் நன்றாக நடக்கும். மற்றவர்களுக்கும் வீடுகள் கிடைக்கும், இதையும் சர்க்கார் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

(இந்தக் சமயத்தில் தலைவர் மணியை அடித்து, அடுத்துப் பேசும்படி ஸ்ரீ எஸ். சாமிக்கண்ணு படையாச்சியை கூப்பிட்டார்).





*SRI S. SWAMIKKANNU PADAYACHI : கனம் சபைத் தலைவர் அவர்களே, கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த மான்யத்தை மனப்பூர்வமாக ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ஒவ்வொரு ஜில்லாவிலுள்ள கலெக்டருக்கும் வேலை கொஞ்சம் குறையவேண்டும் என்பதற்காக டி. ஆர். ஓ. ஆபீசரைப் போட்டிருக்கிறார்கள். அப்படியிருந்தும் கலெக்டர்களுக்கு அதிகவேலை இருப்பதாகத் தெரிகிறது. இன்னும் சில வேலைகளையும் அவர்களிடம் ஒப்படைத்தால் கலெக்டர்களுக்கு வேலை குறையும். அதோடு கலெக்டர்களும் ஏற்கனவே இருந்ததுபோல் இல்லை. கலெக்டரை வரவழைத்தால் சில அனுகூலங்கள் இருக்குமென்று நினைத்து சின்னச் சின்ன விஷயங்களுக்கு எல்லாம் கலெக்டரை வரவழைக்கிறார்கள். எங்கள் ஜில்லாவில் உள்ள 8 தாலூகாகளில் தினம் தினம் எங்காவது ஒரு கூட்டம் இருந்துகொண்டுதான் இருக்கிறது. எதையாவது திறப்பதோ, அல்லது எதற்காவது கல் நடுவதோ போன்ற விழாக்கள் நடந்து கொண்டே இருக்கின்றன. கூடுமான வரையில் கலெக்டர்கள் இந்த மாதிரிக் கூட்டங்களுக்குப் போகக்கூடாது என்று அரசாங்கம் உத்தரவு பிறப்பித்தால் நலமாயிருக்குமென்று நினைக்கிறேன். அமைச்சர் அவர்களை இதைப் பரிசீலனை செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக மைனர் இரிகேஷனைப் பொறுத்தவரையில், 200 ஏக்கருக்கு உட்பட்ட பாசனங்கள் எல்லாம் கலெக்டரிடம் இருக்கிறது. வாய்க்கால் மராமத்து, ஏரி மராமத்து இவைகள் எஞ்சினியரிங் ஆபீசர்களால் செய்யப்பட்டு தாசில்தார் செக் மெஷர்மெண்டுக்கு வரும்பொழுது காலதாமதம் ஆகிறது. தண்ணீர் வந்த பிறகுதான் மெஷர்மெண்டு எடுப்பார்கள். செய்த வேலை அவர்களுக்கு மறந்துவிடும் போல் இருக்கிறது. இந்த வேலையையும் பொது மராமத்து இலாகாவிற்கோ அல்லது டி. ஆர். ஓ.-க்கு கொடுக்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

முன்பு ஒரு தாலூகாவுக்கு ஒரு தாசில்தார் இருந்தபொழுது ஒவ்வொரு பிர்காவுக்கும் போய் ஒவ்வொரு கிராமத்திலும் 4 அல்லது 5 நாட்கள் தங்குவார்கள். வேலையைக் கவனிப்பார்கள். இப்பொழுது அதே தாலூகாவில் 5 அல்லது 6 தாசில்தார்கள் இருக்கிறார்கள். ஆனால் ஒரு நாள் இரவுகூட ஒரு கிராமத்திலேயாவது அவர்கள் தங்குவதில்லை. ஜீப்பிலே வந்துவிட்டு உடனே போய்விடுகிறார்கள். இதனால் பெட்ரோல் செலவைத் தவிர வேறு பிரயோசனமும் இல்லை. லோன் டெபுடி தாசில்தார் என்று போட்டிருக்கிறார்கள். இந்த வேலையையும் தாசில்தாரே பார்க்கலாம். அல்லது பி. டி. ஓ. விடம் ஒப்படைக்கலாம். அப்படிச் செய்தால் அந்த பிளாக்கிலுள்ள லோன்களை வசூலிப்பதற்கு சௌகரியமாய் இருக்கும்.

ஹரிஜன மக்களுக்கு குடியிருப்பு மனை வழங்கும் விஷயத்தில் ரொம்பவும் காலதாமதம் ஏற்படுகிறது. ஒரு ஊரிலே 5 வருஷங்களுக்கு முன்னால் நடவடிக்கை எடுத்தும் இன்னும் முடிவு செய்யப்படவில்லை. 3 மாதத்திலே முடிக்கவேண்டிய விஷயத்திற்கு வருஷக் கணக்கில் ஆகிறது. அந்த ஊருக்குப் போகிறார்கள், ஆள் இருக்க மாட்டார். உடனே திரும்பி விடுகிறார்கள். இதையும் பி. டி. ஓ.விடம் ஒப்படைக்கலாம் என்று கேட்டுக்கொள்கிறேன். சீக்கிரத்திலே இடத்தை ஆர்ஜிதம் செய்து நேரடியாக ஹரிஜன வெல்பேர் ஆபீசருக்கு அனுப்பலாம்.

கிராமங்களிலே, கர்ணம், மணியம் இல்லாமல் எந்த வேலையையும் நடைபெறுது, கிராமத்திலே ரெவின்யூ அதிகாரிகளான ஒரு கலெக்டரோ அல்லது தாசில்தாரரோ நேரிடையாக ஒன்றும் செய்துவிட முடியாது. இவர்களுக்குப் பழக்கத்தால் காரியங்கள் வெகு சுலுவாக நடந்து விடுகிறது. ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டரையோ, தாசில்தாரயோ, அனுப்பினால் முடியுமா என்றால் முடியாது. ஆகவே இவ்வளவு முக்கியமான கிராம அதிகாரிகளுக்குப் போதுமான சம்பளம் கொடுக்கவேண்டும். இப்பொழுது கொஞ்சம் அதிகமாகக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அதுபோதாது. இன்னும் கொஞ்சம் அவர்களுக்குத் திருப்திகரமாக உயர்த்திக் கொடுத்து, அவர்களைப் பஞ்சாயத்தோடு இணைத்து, வேலை செய்தால், அவர்களுக்கும் சாதகமாக இருக்கும், கிராம மக்களுக்கும் நலமாக இருக்கும். அவர்களும் அவனிடத்திலும், இவனிடத்திலும் பணம் காசு கேட்காமல் இருப்பார்கள். சர்க்காருக்கும் அதனால் லாபம்தான். வேலை நன்றாக நல்ல முறையில் நடைபெறும். அப்படி அவர்களுக்கு உதவி செய்து வேலை வாங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஒவ்வொரு ப்ளாக்கிலும் குறைந்தது 40 ஆபீசர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன வேலை என்றே தெரியவில்லை. எட்டு தாலூகா ஆபீசர்களும் அங்கு சேர்ந்து குவிந்திருக்கிறார்கள். அவர்களுக்கு ஒன்றும் வேலை கிடையாது. 10, 15 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு மராமத்து என்றால் அதற்கு ஒரு ஒவர்சியர். அது வெகு சீக்கிரத்தில், மக்கள் முன்னேற்றத்திற்கு என்று சொல்லுகிறார்கள். அப்படி அரசாங்கம் எண்ணுகிறது. அது ஒன்றும் சரியில்லை. ஆகவே ப்ளாக்குகளில் ஆள்களைப் குறைக்கலாம் என்பது என் அபிப்பிராயம்.

அடுத்தபடியாக ரெவின்யூ புறம்போக்கு எத்தனையோ இருக்கின்றன. கிராம நத்தத்திலே வாழும் ஏழை மக்கள் திடீர் திடீரென்று வெளியேற்றப்படுகிறார்கள். அவர்களுக்கு வேறு நிலம் இருக்கிறதா? உண்ண உணவும் உடுக்க உடையும் கொடுக்க வேண்டாமா? ஆகவே அவர்களுக்கு நிலம் இல்லாதவர்களுக்கு குடியிருப்பு வசதி செய்து கொடுப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். 50 வருஷமாக ஒரு கிராம நத்தத்திலே இருந்தவனை திடீரென்று வெளியேற்றினால், அவன் என்ன செய்வான்? ஆகவே, அம்மாதிரி சமயங்களில் அவர்களுக்கு வேறு சொந்த நிலம் இல்லாதவர்களுக்கு, அவர்கள் இருக்கும் இடத்தையே ஜாரி செய்து கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக கனம் ஸ்ரீனிவாச அய்யர் சொன்னது போல, ஏரிகளில் மேடான இடங்களில் சாகுபடி செய்து விடுகிறார்கள். தண்ணீர் அதிகம் வரும் போது பயிர்கள் அழிந்து போகாமல் இருக்க அவர்களே தண்ணியைத் துறந்து விட்டு விடுகிறார்கள். ஆகவே ஏரி உள்ளே விவசாயம் செய்யவே கூடாது என்று ஒரு உத்தரவை சர்க்கார் போட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

எங்கள் பகுதியில் ஏழை மக்களை 30 வருஷகாலமாக இருந்த இடத்தை விட்டு வெளியேற்றுகிறார்கள். அவர்கள் நெசவாளர்கள். கலெக்டருக்கும் மற்ற சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் உத்தரவு போட்டு அந்த நெசவாளர்களுக்கு தொல்லை இல்லாமல் செய்து, அவர்களுக்கு நிலத்தை அட்மாணம் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**SRI K. R. NALLASIVAM:** சபைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் இந்த ரெவின்யூ மான்யத்தின் மீது கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு சர்க்கார் பகுதியிலும், மற்ற அரசியல் பகுதியிலும் பொதுவாக குத்தகையாளர் சட்டம், நியாயவாரச் சட்டம், நில உச்ச வரம்புச் சட்டம் இவைகளைச் செய்வதால் மட்டும் விவசாயிகளுக்கு பல நல்ல



காரியங்களைச் செய்து விட்டதாக ஒரு திருப்தியிருக்கிறது, அது தவறு. இந்த சட்டங்களினால் அதிகப் பலன் அடைந்தவர்கள் 40 சதவிகிதமே யாவர். மற்றுள்ள 60 சதவிகித விவசாயிகள் இன்றைக்கு உள்ள சட்டதிட்டங்களினால், அதை அமுல் நடத்தும் ரெவின்யூ அதிகாரிகள் செய்யும் குறைகளால், பலவிதமான அவதிகளுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். அவர்களுக்கு நிச்சயமாக நிவாரணம் கொடுக்க வேண்டும். அது பற்றி சர்க்காரிடத்தில் கவனம் இல்லை. ஒரு சிறிய உதாரணத்தைக் கொடுக்க ஆசைப்படுகிறேன். இன்றைக்கு ரெவின்யூ இலாகாவில் கீழ் மட்டத்தில் அதிகாரிகள் தொடர்ந்து தவறுகள் செய்கிறார்கள். அமைச்சரவர்களுக்கோ அல்லது அதிகாரிகளுக்கோ தகவல் கொடுத்தாலும்கூட எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதில்லை. ஒரு நிகழ்ச்சியைச் சொல்லுகிறேன். எங்கள் பகுதியில் அஞ்சியூர் என்ற ரெவின்யூ கிராமம் இருக்கிறது. அங்குள்ள உதவி கர்ணம் சர்க்கார் கடன் தொகைகளை வசூலிப்பதில் ஊழல்கள் செய்ததாக அவர் மீது மக்கள் விண்ணப்பங்கள் அதிகாரிகளுக்கும் எனக்கும் கொடுத்தார்கள். என்னைப் பொறுத்தவரை, இதுவரை சுமார் 6 கடிதங்கள் கலெக்டருக்கு எழுதி விட்டேன். 4,5 கடிதங்கள் ஆர். டி. ஒ.-க்கு எழுதி விட்டேன். இரண்டொரு கடிதங்களுக்கு மட்டும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பதில் வந்ததே ஒழிய, இன்றுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இரண்டு வருஷங்களுக்கு மேல் ஆகிறது. அதில் ஒரு முக்கியமான கதை என்னவென்றால், அந்த உதவி கர்ணத்தை மாற்றுவது குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாததால், மக்கள் கருதினார்கள் தாங்கள் என்னைச் சேர்ந்தவர்கள் என்பதால் ஒருக்கால் நடவடிக்கை எடுக்க வில்லையோ என்று. நான் சொன்னேன் " தாராளமாக நீங்கள் காங்கிரஸில் சேருங்கள்; அப்படியாவது நடவடிக்கை எடுத்தால், மக்களுக்கு நலன் விளைந்தால் சரி " என்று. அவர்களும் காங்கிரஸில் சேர்ந்தார்கள். சமீபத்தில் நொய்யல் அணைக்கட்டு மாநாடு நடந்தபோது நிதியமைச்சர் வந்தார்கள். அவர்களிடம் கதர் சட்டை போட்டுக்கொண்டு விண்ணப்பங்கள் கொடுத்தார்கள். ஆனால், கதர் சட்டை போட்டுக் கொண்டாலும், செஞ்சட்டை போட்டுக் கொண்டாலும் அந்த உதவி கர்ணத்தை மாற்ற எந்த தந்திரமும் பலிக்க வில்லை. ஆகவே இந்த மணியம், கர்ணம் இவர்கள் சம்பந்தமாக சீக்கிரமாகவே ஒரு முடிவு செய்தால் பெரிய நலமாக இருக்கும். இந்த சர்க்காருக்குக் கெட்ட பெயர் உண்டாக்குகிறவர்களில் இந்த கிராம அதிகாரிகளுக்கு ஒரு பெரிய பொறுப்பு இருக்கிறது என்பதை அரசாங்கம் உணரவேண்டும். (குறுக்கீடு) இருக்கலாம்; அது மக்களுக்கு தொல்லையாக இருக்கிறது. இன்றைக்கு இருக்கும் முறை பல சிக்கலுக்குக் காரணமாக இருக்கிறது. ஒரு பட்டாவின் கீழ் 10, 15 விவசாயிகள் இருக்கிறார்கள். தனித் தீர்வை கட்டி தனி ரசீது கொடுப்பதில்லை. பட்டா நமூனாவில் பல்வேறு காலங்கள் இருக்கின்றன. அது மக்களுக்கு என்னவென்றே புரிவதில்லை. இதற்கு பெரிய நடவடிக்கை ஒன்றும் அவசியமில்லை. சாதாரண நடவடிக்கை மூலம் இவற்றைத் திருத்தியமைக்க முடியும். ஆகவேதான் சொல்லுகிறேன், இந்த நியாயவாரச் சட்டம், குத்தகையாளர் சட்டம், நில உச்சவரம்பு சட்டம் இவைகளால் மட்டும் விவசாயிகளுக்கு பெரிய அளவில் நன்மை ஏற்பட்டுவிடவில்லை என்று.

இதற்கு அடுத்தபடியாக இன்று தரிசு நிலங்களைவிட மனை விஷயமாகப் பட்டா செய்து கொடுப்பதற்கு சர்க்கார் திட்டவட்டமான ஒரு கொள்கையை வகுத்துக்கொண்டாகவேண்டும். மனை விஷயமாகவும் சரி, சாகுபடிக்கு லாயக்கான தரிசு நிலங்களாக இருந்தாலும் சரி—ஹரிஜனங்கள் விண்ணப்பம் போட்டு எட்டு ஒன்பது வருடங்கள் ஆகியும்கூட யார் ஹரிஜனங்கள் தானே என்று இப்படி நான் சொல்லக்கூடாது இருந்தாலும், அதிகாரிகள் அலட்சியமாக இருப்பதாகத் தெரிகிறது. அப்படித்தான் நினைக்க வேண்டியதாக இருக்கிறது—அதிகாரிகள் எந்தவிதமான நடவடிக்கையும்

[Sri K. R. Nallasivam] [18th March 1961

எடுத்துக்கொள்வதில்லை. வீட்டு மனை விஷயத்தில் கீழ் பவானி பிரதேசத்தில் நீர்க்கசிவு காரணமாக ஒரு தீவிர நடவடிக்கை எடுத்துக்கொண்டது போல மற்ற இடங்களிலும் எடுத்துக் கொண்டாகவேண்டும். உண்மையிலேயே அப்பிரச்சினையில் ஒரு சங்கடம் இருக்கிறது. வீட்டு மனைக்காக மிகப் பள்ளமாக நிலங்களைக் கொடுத்திருக்கிறார்கள். சாகுபடிக்கு மேட்டுப்பாங்கான நிலங்களைக் கொடுத்திருக்கிறார்கள். மேட்டுப் பாங்கான நிலங்களில் உள்ளவர்கள் வீட்டு மனைக்காக இதைக் கொடுத்துவிட்டு சாகுபடிக்குப் பள்ளத்தாக்கான நிலங்களை எடுத்துக்கொள்ளத் தயாராக இருந்தாலும் இந்த நிலங்களுக்கு இன்னும் பட்டா வழங்கப்படாத காரணத்தினால் அது முடியாமல் இருக்கிறது. இந்தச் சிக்கலையும் அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும்.

அதற்கு அடுத்தபடியாக ரோடுப் புறம்போக்குகளில் மனை கட்டிக் கொண்டு விடுகிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். ஜனப்பெருக்கம் அதிகமாகிக்கொண்டே போவதனால் இட நெருக்கடி ஏற்படுகிறது. போக்குவரத்துக்கு இடைஞ்சல் இல்லாதவாறு இப்படி மனை கட்டிக்கொண்டு விட்ட இடங்களில் பணக்காரர்களாக இருந்தால் அதற்குரிய தொகையை வசூல் செய்துவிடலாம். இல்லாவிட்டால் அதை அவர்களுக்கே கொடுத்து விடலாம். எப்படியோ அவற்றைப் பட்டா செய்து ஒழுங்கு படுத்திவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது இல்லாமல் குடியிருக்காதே என்று சொல்லிப் பயன் இல்லை.

இன்னும் எங்களுடைய பகுதியைப்பற்றி கோபி வாய்க்கால் நில ஆர்ஜிதச் சட்டம் செய்தும் அதில் சில சிக்கல் இருக்கிறது. தண்ணீர் வடிவதற்கு வசதி இல்லாத காரணத்தினால் 15 ஆயிரம் ஏக்கரா களராகி விட்டது. உடனடியாக வடிகால் வசதி செய்து தர நில ஆர்ஜிதம் செய்ய முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டும். இதுவரை எடுத்துக் கொள்ளவில்லை.

அதோடு பத்து வருஷங்களுக்கு ஒரு முறை இப்போது சென்ஸஸ் கணக்கு எடுக்கப்பட்டு வருகிறது. இப்போதுகூட எடுத்தார்கள். இது பற்றி ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். நாம் இப்போது ஜனன மரணக் கணக்கு பதிவு செய்ய ஏற்பாடு செய்திருக்கிறோம். அங்கங்கே பண்ணப்பட்டு வருகிறது. இதையே ஒழுங்கான முறையில் செய்தால், சென்ஸஸ் என்று தனியாகச் செலவிடவேண்டியிருக்காது. விழா போன்ற நடவடிக்கை தேவைப்படாது. இந்த ஜனன மரண ரிஜிஸ்ட்ரேஷன் இலாகாவையே ஒழுங்காக வைத்துக்கொண்டு விடுவது நல்லது என்ற யோசனையைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக திரு. மாதா கவுடர் அவர்கள் ஆரம்ப விழாவைப் பற்றிப் பேசினார்கள். பொதுவாக ஆரம்ப விழா நடத்துவதாலும் அமைச்சர்கள் வருவது அவசியம் என நினைக்கலாம். அப்பணிகளுக்கு அரசாங்க உதவியும் அவசியமாக இருக்கிறது. ஆனால் அதையே மீண்டும் திறப்பதற்கு விழா அவசியமா? இதில் இன்னொன்று. சட்டசபை அங்கத்தினர்கள், அமைச்சர்கள் வந்தால் தேவலை என்று நினைக்கிறார்கள். ஆங்காங்குள்ள ஸ்தல நிர்வாகிகள் தங்களுடைய மேல் அதிகாரிகள் வந்தால் தேவலை என்று நினைக்கிறார்கள். இப்படி இடையில் ஒரு மோதல் ஏற்படுகிறது. ஆகவே ஆரம்ப விழா, திறப்பு விழா, முடிவு விழா என்று எந்த விழாவாக இருந்தாலும் யார் யார் எப்படிக் கலந்து கொள்வது, என்பதற்கு ஒரு கட்டுப்பாடு இருக்க வேண்டும், அதைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று சொல்லிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.



18th March 1961]

* SRI T. T. DANIEL: Mr. Chairman, Sir, while speaking on the Demand-Land Revenue Department may I place some facts for the kind consideration of Government. At present many of the districts are very extensive and massive enough, so, that it is not possible to have an intensive administration at the district level. The District has to be divided into small units and if it is not possible there should be bifurcation of the districts which are having territorial extent of more than 7,000 square miles. At present the villager finds it rather difficult to have close association with the district administration because the district headquarters offices are situated at a far-away distance from his village. Secondly I would say that the present administrative machinery both at the district level as well as at the top level requires complete modification and changes. Even though officers both at the district level as well as at the top level work in earnest, considerable delay is being caused in disposing of matters that are brought to the notice of Government. The mistake is not on the officers but it is intrinsic with the defective administrative machinery that has been handed over to us from the Britishers. It might have served to deliver the goods while the Englishmen were here. But it has proved failure to deliver the goods to the freedom-loving people of this country. At present there are conflicts between one department and another, whenever they have to decide a particular issue. There is no co-ordination between department but far from it, divergent actions are being taken rather than cogent action, by the various departments concerned in the matter of disposal of a particular petition that is brought before them. There is red-tapism both at the district as well at the top level, even though our Secretaries and officers earnestly work throughout the working hours and late in the night also. I would suggest that, gained by their experience of foreign tour, the Ministers should introduce rapid modifications in the district level administration as well as in the top level administration. In the first place they should constitute a committee consisting of legislators, secretaries, Ministers and experienced public men so that no matter, either small or big should be pending before Government for more than six months. If that is achieved, then the common man will have confidence in the administration.

At present there is want of stationery at the district level. In many villages, even forms for issuing tax receipts forms are not available and the paper used for tax receipts is also of bad quality and the pencils that are supplied to village officers are of very bad quality so that the taxpayer is unable to find out very clearly his name and also the amount that is written on those papers. As has been suggested by an hon. Member, stamps are not available at certain periods. Parties have to purchase stamp in the black market for a high price. I do not know why this inconvenience

[Sri T. T. Daniel] [18th March 1961

is called to the public. I think this has been brought repeatedly every year to the notice of Government. Government have got an account of the amount of expenditure they incur on stamp papers. They should have taken precaution to supply these stamps to the various stamp vendors in the districts at the beginning of the year itself.

Regarding land acquisition proceedings it should be the policy of Government to pay compensation which they fix to the landowner, before the landowner is dispossessed of his land. At present instances are there where the landowner is dispossessed of his land and he is not able to get compensation during his lifetime. This is rather cruel. Government have no right to take away anyone's property unless and until compensation which Government considers fit, is paid to the concerned landowner.

The District jails have to be constructed for all districts. At present in Kanyakumari, there is no district jail and almost all the prisoners are sent to the Madurai district jail. Madurai district jail is already overcrowded and the prisoners suffer on account of that. District jails be constructed for each district. Also, houses for the Collector, Superintendent of Jails, District Judges and other district officers should be constructed in each district.

Regarding the recovery of the agricultural income-tax and sales tax, I would like to bring to the notice of the Government that instances have been brought to our notice that sometimes, the officers instead of collecting the agricultural income-tax or sales tax, create unnecessary scare in the towns and villages by making surprise visits to the shops and by preparing *mahazars*. It is also brought to our notice that the conduct of some of the officers—I should say with regret—has created an impression in the minds of the standers—by that some sort of tyranny was being inflicted upon the shop-owners and businessmen by the agricultural income-tax and sales tax officers. That is the impression created in the minds of the people as a result of the conduct of these officers by their words and unwanted visits to the shops especially during the busy hours of the day when the shops had rush of business.

Sir, in this connection, I would also like to say few words about the integration of services of the former Travancore Cochin State personnel in the transferred territory. Their pension amounts, their gratuity amounts have been unncessarily delayed and that has created a lot of discontentment in their minds. On deeply analysing this question, we now find that the Kerala State Government are not sending proper replies to our Government whenever our Government wrote letters to them regarding the service conditions of the transferred personnel, and regarding the fixation of their pension amounts. I would suggest that our Government



18th March 1961] [Sri T. T. Daniel]

should move the Central Government in the matter and request them to appoint an Officer to look into this matter so that we may get proper replies from the Kerala Government in future, for the purpose of fixing the scales of pay and other service conditions of the transferred personnel.

As for the recovery of Maniyakaram and Tiruppuvaram taxes in the transferred territory, we hear that repeated letters have been sent to the Kerala Government to send particulars, but no reply has been sent for a very long time. So, this vital issue remains undecided even though nearly 4½ years have passed.

In the matter of eviction proceedings, that the officers concerned take eviction proceedings against poor persons and in no time, the poor people are evicted from their holdings, from their small houses which they have constructed and where they have been living for a very long time in the past. Side by side with these houses and properties from where the poor people are dispossessed, there are massive encroachments of Government lands and which are at present in the possession of rich people. But no eviction proceedings are taking against them. This is more or less the common occurrence and the poor man feels thereby that he has no safety in the hands of the Government and the rich people who can sucessfully fight the eviction proceedings, are allowed to continue to squat any enjoy the extensive lands which are Government properties. A proper survey has to be conducted to find out such encorachments and eviction proceedings against all the encroaching people, whoever they may be, should be taken and the excess lands thus secured, should be distributed among the landless poor cultivators of the district.

Sir, we have been praying that the rule regarding the assignment of lands for the Harijans that is now prevalent in the other parts of the State should also be extended to the transferred territories. At present, the lands where the Harijans have built their houses in which they are living, are granted to them on the basis of a Kuthagai Patta(m) lease and they are not assigned to them. In the other places, such lands are assigned and pattas are issued. This rule should be extended to them also so that pattas for these lands may be issued to the Harijans and they may be made absolute owners of such properties which are not neccessary for any public purpose.

* **Sri T. K. SUBBIAH** : கனம் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மானியக்கோரிக்கையை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக ரெவின்யூ இலாக்காவிலே வேலைகள் நல்லதொரு முறையிலே நடைபெற்று வந்தாலும், விவசாயிகளுக்கு அதிகமாக வேலைகள் இருப்பதன் காரணமாக ரெவின்யூ ஆபீசர்களை தேடிச்செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதன் காரணமாக பெரிய தாலுக்காக்களில் சில பகுதிகளை பிரித்து தனி 10-30 a.m.

தாலுக்காவாக அமைத்தால் நன்றாகவும் விவசாயிகளுக்கு சௌகரியமாகவும் இருக்கும். குறிப்பாக உடையார்பாளையம் தாலுக்காவை எடுத்துக்கொண்டால் ஒரு தாசில்தார் இருக்கிறார். ஜயங்கொண்ட சோழபுரத்தை எடுத்துக்கொண்டால் ஒரு டெபுடி தாசில்தார் இருக்கிறார். அரியலூரை எடுத்துக்கொண்டால் ஒரு டெபுடி தாசில்தார், ஒரு மானேஜர், தாசில்தார் இருக்கின்றார்கள். இப்படியாக ரெவின்யூ நிர்வாகத்திற்கு பல தாசில்தார்கள் இருக்கின்றார்கள். குறிப்பாக ஜமீன் கிராமங்களிலும், ஷ்ரோத்திரியம் கிராமங்களிலும் சர்வே வேலைகள் நடைபெற்று வருகின்றன. இம்மாதிரி பல டெபுடி தாசில்தார்கள் இருப்பதை மாற்றி குறிப்பாக அரியலூரில் ஒரு தாசில்தார் ஆபீசும், ஜெயங்கொண்ட சோழபுரத்தில் ஒரு தாசில்தார் ஆபீசும் ஏற்படுத்த வேண்டும்.

அடுத்தபடியாக இப்பொழுது செட்டில்மென்ட் நடந்துகொண்டிருக்கிறது. அப்படி நடக்கும்போது ஒரு பிர்க்காவிலே இருக்கும் கிராமங்களைப் பிரித்து இன்னொரு பிர்க்காவிலே சேர்க்கப்படுகிறது. என்னுடைய தொகுதியிலும் இம்மாதிரி செய்யப்பட்டு இன்னொரு பிர்க்காவில் சேர்க்கப்பட்டிருக்கிறது. இதனால் மிகவும் கஷ்டமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. உதாரணமாக தாமரவல்லி கிராமத்தை இன்னொரு பிர்க்காவில் இருக்கும் கிராமத்தோடு இணைத்திருக்கிறார்கள். அப்படி செய்வதனால் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. குறிப்பாக இம்மாதிரி மாறுதல் ஏற்படுவதனால்தான் கிராமத்தார்கள் ஒரு துறை சம்பந்தப்பட்ட விஷயத்தை அந்த அதிகாரியிடம் போய் அறிந்துக்கொள்வது கஷ்டமாக இருக்கிறது. இப்போது சட்டசபைத் தொகுதியை எடுத்துக்கொண்டால் இதிலேகூட பல கிராமங்கள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. கிராம வட்டார வளர்ச்சியை எடுத்துக்கொண்டால் பிர்க்காக்களின் நிலைமையில் மாறுதல் ஏற்பட்டிருக்கின்றன. ஆகையால் இந்த முறையை மாற்றி ஓரளவுக்கு வரையறை செய்து சட்ட சபை தொகுதியைச் சேர்ந்தாலும்சரி கிராம பகுதி வட்டார வளர்ச்சி தொகுதியைச் சேர்ந்தாலும் சரி நல்ல முறையிலே அமைக்க முடியும் என்று சொல்ல விரும்புகிறேன், ஒரு தலைநகரத்திலே எல்லா துறைகளையும் சேர்த்து நடத்த முடியாத காரியம். தாலுக்காவாரியாக துறைகளைப் பிரித்தால்தான் மக்கள் சௌகரியமாக காரியங்களை நிறைவேற்ற முடியும். குறிப்பாக உடையார்பாளையம் தாலுக்காவில் இம்மாதிரி மாறுதல்கள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஜமீன், ஷ்ரோத்திரியம் கிராமங்களில் நத்தம் என்று 10, 15, 20 ஏக்கர் கொண்ட நிலங்கள் இருக்கின்றன. இந்த நத்தங்களுக்குப் பக்கத்திலே சாகுபடி செய்யக்கூடிய நிலங்களும் இருக்கின்றன, அதைத்தவிர வீடுகள் கட்டுவதற்கான 10, 15 ஏக்கர் நிலங்களும் இருக்கின்றன. சர்வே செய்யும்போது சாகுபடி செய்யப்படும் நிலங்களைத்தான் கணக்கிடுகிறார்களே தவிர வீடுகள் கட்டக்கூடிய நிலங்களை சர்வே செய்வதில்லை. ஆகையால் சாகுபடி செய்யக்கூடிய நிலங்களுக்குத்தான் பட்டா வழங்குகிறார்கள்.

இதை எதற்காக சொல்கிறேன் என்றால், நத்தத்திற்கு வாய்தா, கிஸ்தி கொடுக்க வேண்டியதில்லை, சாகுபடி நிலமானால் கிஸ்தி கட்ட வேண்டிய நிலையிலிருக்கிறார்கள். அங்கு வீடு கட்டிக்கொண்டிருக்கக்கூடியவர்கள், ஒரு வீட்டிற்கு கிஸ்தி கொடுக்க வேண்டியிருக்கிறது, மற்றொன்றுக்கு கிஸ்தி கொடுக்க வேண்டியதில்லை என்ற நிலையிருக்கிறதே என்று கருதுகிறார்கள். ஆகவே, சர்வே செய்யும்போது எந்தெந்த இடங்கள் குடியிருப்பிற்காக கட்டப்பட்டிருக்கிறதோ அவைகளை எல்லாம் நத்தத்தில் இணைத்துவிட வேண்டும். அடுத்தபடியாக, எங்கள் பகுதியில் நிறைய புறம்போக்கு நிலங்கள் ஏழை மக்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்று பல ஏரிகள் நீர்ப்பாசனத்திற்கு லாயக்கற்றதாக மாறிவிட்டிருக்கிறது. ஏனெனில், புள்ளம்பாடி ஸ்கீம் வந்த பிறகு நீர்வளம் பெருகி விட்டது. 400





பேர்களுக்கு ஆண்டுதோறும் தாற்காலிகமாக ஒரு ஏக்கர் வீதம் அடமானம் செய்யப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு நிரந்தரமாக அடமானம் செய்து கொடுக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இல்லையெனில், பஞ்சாயத்து ஆட்சி முறையில் பஞ்சாயத்தின் கையில் கிராம புறம்போக்கு நிலங்களை ஒப்படைத்திருப்பதாக அறிவித்திருக்கிறார்கள் ஆகவே, அவர்கள் அனுபவித்து வந்திருக்கும் நிலங்களின் பேரில், அவர்களுக்கு வீண் தொந்தரவு கொடுக்கும்படியானதொரு நிலை ஏற்படுமே தவிர ஏழைகளுக்கு சாகுபடிக்கு கிடைக்கக்கூடிய நிலம் குறைவாகிவிடும். ஆகவே, இப்பொழுது தாற்காலிகமாக அடமானம் செய்து கொடுக்கப்பட்டிருக்கும் நிலங்களை அவர்களுக்கு நிரந்தரமாக அடமானம் செய்து கொடுக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்கள் பகுதியில், காமரஸவல்லி என்ற பகுதி மிகவும் பின்தங்கிய பகுதி. அங்குள்ளவர்கள் சப் ரெஜிஸ்ட்ரார் ஆபீஸிற்கு செல்லவேண்டுமென்றால் 25, 40 மைல்கள் போக வேண்டியிருக்கிறது. இப்பொழுது ஏறத்தாழ நிறைய ஏழைகள் நிலங்கள் வாங்கக்கூடிய தன்மையில், வளர்ச்சி அடைந்திருக்கிறார்கள். பணக்காரர்களுக்கும், நிலத்தை விட்டுவிட வேண்டுமென்ற மனப்பான்மை வந்துவிட்டது. இத்தகைய நிலை ஏற்பட்டிருப்பதால், அங்குள்ள மக்கள் ரிஜிஸ்தர் செயய, பல மைல் தூரம் செல்லவேண்டியிருக்கிறது, சப் ரெஜிஸ்ட்ரார் ஆபீஸ்க்கு. ஆகவே, காமரஸவல்லியில் ஒரு சப் ரெஜிஸ்ட்ரார் ஆபீஸ் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பின், தலை நகரிலிலேயே எல்லா ஆபீஸ்களும் இருப்பதன் காரணமாக கஷ்டமானதொரு நிலை ஏற்படுகிறது. நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள், தொழில் துறை வளர்ச்சி அடைந்திருப்பதால் சென்னை நகரில் வந்து குவிகிறார்கள். என்று. கப்பல் போக்குவரத்து வசதி, ரெயில் வசதி, இவைகளினால் பெரிய தொழிற்சாலைகள் அமைந்திருப்பது இவைகள் எல்லாம் சென்னை நகரில் இருந்தபோதிலும், ரிஜிஸ்ரேஷன் ஐ.ஜி. ஆபீஸ் போன்றவைகளை திருச்சி போன்ற மத்திய இடங்களில் அவைகளின் தலைமைக் காரியாலயங்களை அமைத்துக் கொடுத்தால் நன்றாகயிருக்கும் என்று கூறிக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**Sri P. S. SANTHANAM:** தலைவர் அவர்களே, இன்று நடைபெறுகிற வெட்டுப் பிரேரணையை ஒட்டி அதை ஆதரித்துக்கொண்டு நான் என் கருத்துக்களைச் சொல்ல பிரியப்படுகிறேன். எனக்கு முன் பேசிய அங்கத்தினர்கள் ஜில்லா நிர்வாகத்தைப்பற்றி, ரெவின்யூ நிர்வாகத்தைப் பற்றிச் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த அண்ணாமலை அவர்கள் பேசுகிறபோது நிலச் சீர்திருத்தச் சட்டம், சாகுபடியாளர் சட்டம், கையேர்வாரந்தார் சட்டம் போன்றவைகள் பற்றி பேசியதன் மீது, ஆளும் கட்சியைச் சார்ந்த அங்கத்தினர் ஒருவர் நிலச் சீர்திருத்தத்தின் தன்மையை உணராத முறையில் அவர்கள் அக் கமிட்டியில் அங்கத்தினராகயிருந்தும்கூட இந்தச் சட்டத்தை எதிர்த்து வாதாடக்கூடிய சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச் சேரப் போகிறார்கள் என்பதை உணரவில்லையா என்றார்கள். தேர்தல், 62 மார்ச்சில் வரயிருக்கிறது. ஆனால் இன்று ஜில்லா நிர்வாகம் எப்படி நடைபெறுகிறது, தாலுகா நிர்வாகம் எப்படி நடைபெறுகிறது, மக்கள் சுபிட்சம் அடையக் கூடிய முறையில் நிலைமை இருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும் என்று சொல்லுவதுதான் அங்கத்தினர்களின் கடமை. 30,000, 40,000, 50,000 வாக்குகளைப் பெற்று சட்டமன்றத்தில் வந்து அமர்ந்திருக்கும்போது ஆங்காங்கு ஏற்படும் குறைகளைப்பற்றி, சர்க்கார் நிர்வாகத்தில் உள்ளவர்கள் எப்படி மக்களுக்கு என்ன நன்மை செய்கிறார்கள், எப்படி எப்படி சட்டத்தை வளைத்து ஒடிக்கிறார்கள் என்ற நிலையை எடுத்துக் காட்ட வேண்டும். உதாரணமாக சொல்லப் போனால், வட ஆற்காடு மாவட்டத்தை உதாரணமாக சொல்வேன். ஏனெனில், அந்தப் பகுதியைச் சார்ந்தவன்

நான். அங்கு நிலைமை எப்படியிருக்கிறது என்று பார்த்தால் அங்கு நிர்வாகம் சரியான முறையில் ஏழைகளுக்காக நடைபெற்று வரவில்லை என்ற பெரிய குற்றச்சாட்டை நான் சொல்கிறேன். செங்கம், திருவண்ணாமலை தாலுகாவில் உள்ள 1½ லட்சம் மக்களின் பிரதிநிதிகளாக வந்திருக்கிறோம். எங்கள் பகுதியில், ரெவின்யூ நிர்வாகத்தில் உள்ளவர்கள் ஒருதலைப் பட்சமாக நடந்து வருகிறார்கள். செங்கம் தாலுகாவில், போக்குவரத்திற்கு லாயக்கற்றதாகயிருக்கிறது. அவை, காட்டுப் பிரதேசங்கள், அப் பிர்க்காக்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. 1958–59-ல் பஞ்ச நிவாரண வேலைகள் செய்யப்பட்டபோது இந்த மூன்று பிர்க்காக்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. ஏன் என்று ஆராய்ந்து பார்க்கிறபோது, ஏன் இப்படி புறக்கணிக்கிறீர்கள் என்று திருவண்ணாமலை ரெவன்யூ அதிகாரிகளைக் கேட்டேன். ஏன் இங்கு நிவாரண வேலைகள் தொடங்கப்படவில்லை என்று கேட்டேன். அதற்கு சர்க்கார் பணம் ஒதுக்கவில்லையா அல்லது இங்கிருந்து திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் வெற்றி பெற்று வந்து விட்டார்கள் என்பதினால் செய்யவில்லையா என்று கேட்டேன். அப்பொழுது, கிராமப் பிரமுகர்கள், சில கிராம செல்வந்தர்கள் சொன்னார்கள், ரெவின்யூ அமைச்சர் மாணிக்கவேலு அவர்களின் தொகுதியில் நிறைய செலவிடப்பட்டிருக்கிறது. 1½ லட்சத்திற்கு மேல் ஒரு வருடத்தில் வேலை செய்திருக்கிறார்கள். ஆனால் ஆயிரம் ரூபாய்கூட மற்றப் பகுதியில் செலவிடவில்லையே என்று அங்குள்ளவர்கள் சொன்னார்கள். அப்படி திராவிட முன்னேற்றக் கழகத்தினர் வெற்றி பெற்று வந்திருக்கும் இடங்களில் செலவு செய்யவில்லையென்றால், வரும் தேர்தலில் மக்கள், அங்குள்ள மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரிக்க மாட்டார்கள் திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினருக்கு வோட்டு போட்டால் அதனால் சர்க்காரிலிருந்து கிடைக்கக்கூடிய பலன் பெற முடியாது என்ற எண்ணம் புகுத்தப்பட்டிருக்கிறது. அந்த நிலை போக வேண்டும். அவர்களும் மக்கள், நாங்களும் மக்கள், நிவாரண வேலைகளுக்காக ஒதுக்கப்படுகிற பணம், இந்த பகுதிக்கு, இந்த பிர்க்காவிற்கு இவ்வளவு என்று ஒதுக்க வேண்டும். ஆக, ரெவின்யூ இலாகா அதிகாரிகள் ஒருதலைப் பட்சமாக நடந்துகொண்டு வருவதைப் பார்த்து அதனால் நான் உண்மையில், வருத்தப்படுகிறேன் என்று இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்தபடியாக, நிலங்களை எடுத்து ஆராயும்போது, தீர்வையில்லாத புறம்போக்கு இருக்கிறது, குளத்து புறம்போக்கு இருக்கிறது, பாட்டை புறம்போக்கு இருக்கிறது, கோவில் புறம்போக்கு இருக்கிறது, இப்படி பலவித புறம்போக்குகள் இருக்கின்றன. தீர்வையில்லா நிலங்கள் யாரைச்சார்ந்தது, கோவில் புறம்போக்கு யாரைச் சார்ந்தது, பாட்டை புறம்போக்கு யாரைச் சார்ந்தது, என்றால் அத்தனையையும் சர்க்கார் நிர்வாகத்தில் இருக்கின்றன. பஞ்சமர்தரிசு என்றிருக்கிறது, அது வேதனைபடவேண்டியது. திருவண்ணாமலை தொகுதியை எடுத்துக்கொண்டால், அங்கு ஆயிரம் ஏக்கருக்கு மேல் பஞ்சமாதரிசு நிலங்கள் இருக்கிறது. அங்கு மனிதர்கூட நடக்க முடியாத நிலையில்தான் அவையிருக்கின்றன. அதற்கு நான் கவலைப்படவில்லை, வேதனையடையவில்லை. ஆனால் தீர்வையில்லாத தரிசு நிலங்களை கருணை வாய்ந்த சர்க்கார் ஏழைகளுக்கு கொடுக்க வேண்டும்.

எனக்கு முன் பேசிய கனம் அங்கத்தினர் ஒருவர் சொன்னார்; பட்டா கொடுத்துக்கொண்டு வருகிறோம், அதற்காக விழாக்கள் எல்லாம் கொண்டாடுகிறோம் என்றும் சொன்னார்கள். மேளதாளத்துடன் அமைச்சர் அவர்களை அழைத்து வந்து இந்த விழா கொண்டாடப்படுகிறது, இவ்விதம் பெருமைப்பட்டுக்கொள்வதில் அதில் என்ன இருக்கிறது என்பது தான் புரியவில்லை. 10 ஆண்டு காலம், 12 ஆண்டு காலம் ஒரே நிலத்தில் பயிரிட்டவன் பைன் கட்டியிருக்கிறான். பீ. மெம்மோ அபராதம் கட்டியிருக்கிறான், இவ்வளவு எல்லாம் இருக்கின்றன, அந்த விவசாயிக்கு



நிலத்தை பட்டா செய்து கொடுங்கள் என்று கேட்டால் அதற்காக இந்த சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது, ஒன்றுமேயில்லை, இப்போது பஞ்சாயத் யூனியன் கையில் கொடுத்திருக்கிறார்கள். இந்த நிலை ஏற்பட்ட பிறகு இன்றைக்கு பயிரிட்டவர்கள் எல்லாம் அப்புறப்படுத்தப்படுகிறார்கள். ஆண்டு தோறும் ஜமாபந்தி நடக்கிறது, அதில் இந்த ஏழைகளினுடைய குறைகள் ஏதாவது கவனிக்கபடுகிறதா, 10 ஆண்டு காலம் பயிரிட்டேன், அல்லது 12 ஆண்டு காலம் பயிரிட்டேன் ஆகவே எனக்கு பட்டா செய்து கொடுங்கள் என்று கேட்க முடியுமா, அதுவும் முடியாது. இந்த நிலையில் பஞ்சாயத்து யூனியனில் கொடுக்கப் போகிறோம் என்று சொல்லுகிறார்கள். இதன் மூலம் எப்படி பட்டா செய்து கொடுக்கப் போகிறார்கள் என்றே புரியவில்லை. இந்த நிலையைப் போக்க வேண்டும். நிலம் இல்லாத விவசாயிகளுக்கு நிலம் கொடுக்க வேண்டும் என்று நாம் மட்டும் சொல்லவில்லை, நமக்கு முன்னால் உள்ளவர்களே சொல்லியிருக்கிறார்கள். காணி நிலம் வேண்டும் என்று பாரதியார் சொல்லியிருக்கிறார், உழுபவனுக்கு நிலம் சொந்தமாயிருக்க வேண்டும் என்று காந்தியார் சொல்லியிருக்கிறார், ஆனால் அதற்கெல்லாம் நாம் ஏதாவது வழிவகை செய்திருக்கிறோமா என்று பார்த்தால் உருப்படியாக ஒன்றும் செய்திருப்பதாக நம்மால் கண்டுகொள்ள முடியவில்லை. தோட்டி மான்யம் தலையாரி மான்யம் போன்ற பல வகை மான்யங்களை கொடுக்கப் போவதாக சொல்லப்பட்டிருக்கிறதே, ஆனால் அதற்கு எந்தவிதமான வழிவகையும் செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. அதுமட்டுமல்ல, 1958-ம் ஆண்டு பட்ஜெட் விவாதத்தில்கூட, தோட்டி தலையாரிகளுக்கு ஆடை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். அவர்கள் கிராம போலீஸ் என்று நாம் எல்லோரும் சொல்லுகிறோம். ஆனால் அவர்களுக்கு எந்தவித வசதியை நாம் செய்துகொடுத்திருக்கிறோம் என்பதையும் நாம் பார்க்க வேண்டும். ஊர்களுக்கு அமைச்சர்கள் வருகிறார்கள், கவர்னர் வருகிறார் என்று சொன்னால், வழியில் கிளர்ச்சிக்காரர்கள் தண்டவாளத்தை பெயர்த்து எடுத்துவிடுவார்கள் என்ற காரணத்திற்காக தண்டவாளத்தை பாதுகாக்க வேண்டும் என்றால் இந்த கிராம தலையாரிகள்தான் போய் இரவு முழுவதும் தீவட்டி பிடித்துக்கொண்டு காவல் காக்க வேண்டும். அப்பேர்ப்பட்டவர்களுக்கு என்ன வசதியிருக்கிறது? தினப்படி கிடையாது, ரயில் சார்ஜ் வசதி கிடையாது, எந்தவிதமான வசதியும் அவர்களுக்கு கிடையாது. ஆனால் வில்லேஜ் போலீஸ், கிராம காவலாளி என்று பெருமையாக சொல்லிக்கொள்கிறோம். அவர்களுக்கு மற்றவர்களைப் போன்று நல்ல ஆடை தர வேண்டும் என்று இந்த மன்றத்தில் மூன்று ஆண்டு காலமாக சொல்லிகொண்டிருக்கிறோம். கிணற்றில் விழுந்து யாராவது செத்துவிட்டார்கள் என்றால், கிணற்றிலிருந்து பிரேதத்தை மாற்றுவது வரையிலும் இவர்கள்தான் காவல் காக்க வேண்டும். இப்பேர்ப்பட்டவர்களுக்கு இந்தச் சர்க்கார் என்ன வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள்? மற்ற போலீஸ்காரர்களை எடுத்துக்கொண்டால் அவர்களுக்கு ஜீப் வசதிகள் எல்லாம் இருக்கின்றன. எனக்கு முன் பேசிய அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள், பஞ்சாயத்து யூனியனில் அதிகமான அளவில் உத்யோகஸ்தர்கள் இருக்கிறார்கள், இது அமைச்சர்கள் எல்லோருக்கும் தெரியும். அமைச்சர்கள் ஏதாவது ஒரு நிகழ்ச்சிக்கு வருகிறார்கள் என்றால் அந்த இடத்திலுள்ள கிராம சேவக்குகள், கிராம சேவிகைகள் உட்பட எல்லோரும் வருகிறார்கள், அவர்கள் எல்லாம் நல்ல உடை அணிந்து வருகிறார்கள், ஆனால் அந்தக் கிராமத்தின் உண்மை நிலை என்ன என்பதை எந்த அமைச்சர்களாவது பார்த்திருக்கிறார்களா என்பதை நாம் பார்க்க வேண்டும். அரிஜனங்களுடைய நிலங்கள் என்று கொடுப்பதில், ரெவின்யூ டிப்பார்ட்மெண்டில் எவ்வளவோ கஷ்டங்கள் ஏற்படுகின்றன. உதாரணமாக செங்கம் தாலுகாவில் சொர்ப்பனம் என்ற

கிராமத்தில் நிலங்களை எடுப்பதற்காக மூன்று வருடங்களாக அதிகாரிகள் வந்து பார்வையிட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஒரு தடவை வந்து பார்த்த போது அது ஏதோ ஒரு நம்பரில் வருகிறது என்று சொன்னதின் பேரில் ஏதோ தருகிறேன் என்று சொன்னதின் பேரில், அடுத்ததாக வேறு ஒரு நம்பரை குறிப்பிட்டிருப்பதாகத் தெரிகிறது. இதே போன்றுதான் திருவண்ணாமலையில் பாப்பம்பட்டி என்ற இடத்திலும் நடந்திருக்கிறது. இதைப்பற்றி அமைச்சர் அவர்களுக்கு பெட்டிஷன்கள் வந்திருக்கும் என்று நம்புகிறேன். ஆகவே அரிஜனங்களுக்கு ஏராளமான நிலங்களை கொடுத்திருக்கிறோம் என்று ஏட்டளவில் மட்டும் சொல்லிவிட்டால் எந்த விதமான பலனும் இல்லை. ஆகவே சர்க்கார் இதைப்பற்றி நன்றாக யோசித்து துரிதமான நடவடிக்கை எடுப்பதற்கு முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

* **SRIMATHI T. N. ANANTHANAYAKI** : கனம் தலைவர் அவர்களே, மாவட்ட நிர்வாகத்திற்காக அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த மான்யத்தின் பேரில் ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். லான்ட் ரெவன்யூ நமது மாகாணத்தில் அதிகமாக வரவேண்டும் என்று நாம் எல்லாம் விருப்பப்படுகிறோம். 1953-54-ல் வந்த வருமானம் தான், 3 லட்சம் ஏக்கர் அதிகமாக விவசாயத்திற்கு வந்தும், ஏறத்தாழ அதே வருமானம் சுமார் 6 கோடி ரூபாய்தான் இப்போது வந்து கொண்டிருக்கிறது. இதில் எங்கோ தவறு இருக்கிறது, இதை கண்டு பிடித்து நீக்குவதற்கு வழிவகை செய்ய வேண்டும். மாவட்ட நிர்வாகத்தை எடுத்துக்கொள்ளும் போது அங்கு பலவிதமான தகராறுகள் ஏற்படுவதை நாம் பார்க்கிறோம். சட்டங்கள் எல்லாம் எப்படியிருக்கின்றன என்பதை அறியாத, படிக்காத பாமர மக்கள் ஒன்றும் தெரியாமல் சென்னைக்கு வந்து நேரடியாக அமைச்சர் அவர்களிடத்தில் வந்து முறையிட்டால்தான் தங்கள் குறை தீரும் என்ற அளவில் இங்கே கிளம்பி வந்துவிடுகிறார்கள். இதற்கு முக்கிய காரணம் கிராமங்களில் இருக்கின்ற கர்ணங்கள், கிராம முனிசீப் இவர்கள் தங்களுக்கு பிடிக்காதவர்கள் மீது என்னவெல்லாம் தொல்லைகளை கொடுக்கமுடியுமோ, அதற்காக முயற்சித்து வருகிறார்கள். சாதாரண கிராம மக்களுக்கு தங்களுக்கு அப்பீல் கொடுப்பதற்கு வேண்டிய காலம் இருக்கிறது என்பது எல்லாம் தெரியாமல் இங்கே புறப்பட்டு வந்து என் போன்ற வக்கீல்களை கண்டு அவர்கள் மூலமாகத்தான் தங்கள் குறைகளை தீர்த்துக்கொள்கிறார்கள். குறிப்பாக நிலம் ஜாரி செய்வதை எடுத்துக்கொண்டால் சிறிய கிராமங்களில், அரை சென்ட் அல்லது ஒரு சென்ட் இடத்தில் டீ கடை வைத்து நடத்துபவர்கள் சர்க்கார் நிலத்தை ஆக்கிரமித்து விட்டார்கள் (என்கிரோச்மென்ட்) என்றோ அல்லது சொந்தக் காரர்கள் நிலத்தில் பிரவேசித்து விட்டார்கள் என்றோ சொல்லி அவர்களை அப்புறப்படுத்த முயன்று வருகிறார்கள். அதே நேரத்தில் பெரிய கடை வைத்திருப்பவர்களை எல்லாம் அவர்கள் என்ன செய்திருந்தால் அவர்கள் பேரில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுப்பதில்லை. இப்போதுள்ள நிலையில் பஞ்சாயத் பிரசிடன்ட் அவருக்கு தேர்தல் வேலை செய்யவில்லை என்றுள்ள காரணத்தைக்கொண்டோ அல்லது வேறு ஏதாவது காரணத்தை எடுத்துக் கொண்டு அதற்காக தனக்கு பிடிக்காதவர்கள் பேரில் நடவடிக்கை எடுக்கத் தூண்டி அவர்களை எவிக்ஷன் செய்வதற்கு நோட்டீஸ் கொடுக்கிறார்கள்.

**(Mr. Speaker in the Chair.)**

சாதாரணமாக பாதையை தடுக்கிறார்கள் என்றோ, அல்லது பொது இடங்களை தடுக்கிறார்கள் என்றோ ஏதாவது காரணத்திற்காக தாசில்தார் நடவடிக்கை எடுத்து, அதன் பின்னால் டி.ஆர்.ஓ. உத்தரவு போட்டாலும் கூட, அதன் மீது அப்பீல் போடுவதற்கு 30 நாட்கள் காலம் இருக்கிறது, இதையெல்லாம் தெரியாமல் கிராம அதிகாரிகள் உடனேயே நடவடிக்கை



எடுத்துவிடுகிறார்கள். குறிப்பாக வடலூர் என்ற கிராமத்தில் இவ்விதம் உத்தரவு போட்டு, அதன் மீது அப்பீல் கொடுப்பதற்கு 30 நாட்கள் நேரமிருந்தும், உடனே அங்குள்ள கிராம அதிகாரிகள் டீ கடையைப் பிரித்து போட்டு விட்டார்கள். அங்குள்ள பஞ்சாயத் பிரசிடன்ட்டுக்கு பிடிக்க வில்லை என்ற காரணத்தின் பேரில், கிராம அதிகாரிகளை கையில் போட்டுக் கொண்டு, ஏதாவது நடவடிக்கை எடுத்து, அது சரியா அல்லது தவறா என்றுகூட பார்க்காமல் உடனேயே பிரித்து போட்டுவிடுகிறார்கள். இவ்விதமான அராஜக முறை கிராமங்களில் நடக்கும்போது, அந்த பழி காங்கிரஸ்காரர்கள் தலையில் வந்து விழுகிறது, அதன் பின்னால் அமைச்சரவையின் தலையில் வந்து விழுகிறது. இம்மாதிரியான காரியங்களை நமது ரெவன்யூ அமைச்சர் அவர்களிடத்தில் சொல்லும்போது அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்கிறார்கள், அதற்கு வேண்டிய உதவியும் செய்கிறார்கள், ஏழைகள் காரியம் என்று தெரிந்தவுடன் அதை ஆதரிப்பதிலும் அவர்கள் தயங்குவதில்லை, அதற்காக நான் அவர்களுக்கு நன்றி செலுத்துகிறேன். கிராமத்தில் எந்த காரியத்தையும் தீர விசாரித்து அறியாமல், ஏதாவது டீ கடையை பிரித்துப் போட்டுவிட்டால், சென்னைக்கு ஓடிவந்து வக்கீலை பிடித்து அதன் பின்னால் அமைச்சர் அவர்களிடத்தில் போய்த்தான் காரியங்களை தீர்த்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. அப்படியானால் மாவட்டத்தில் இருக்கின்ற அதிகாரிகள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்றுதான் நாம் கேட்க கடமைப்பட்டிருக்கிறோம். அங்கு ஏதாவது நடவடிக்கை எடுத்தாலும், அதன் பின்னால் அப்பீல் கொடுத்து, அதன் மீது ரெவன்யூ போர்டுக்கு ரிப்போர்ட் வந்து சட்ட பூர்வமாக அப்பீல் கொடுப்பதற்கு 30 நாட்கள் அவகாசம் இருக்கிறது, ரிவிஷன் கொடுப்பதற்கு 60 நாட்கள் அவகாசம் இருக்கின்றது. இதன் பின்னால்தான் நடவடிக்கை ஏதாவது எடுக்க முடியும். அதல்லாமல், ஏதோ ஒரு பெரிய வீடு வாசலில் அரை சென்ட், அல்லது கால் சென்ட் அதிகமாக இருக்கிறது என்று 30 அல்லது 40 வருடங்களுக்குப் பின்னால் கண்டுபிடிக்கிறார்கள். இதில் அடிப்படையாக ஒரு காரணம் இருக்கும். 11-40
கண்டுபிடித்தவர்கள் அதற்கு மேல் அப்பீல் டைம் இருக்கிறது என்பதை a.m.
விட்டு விட்டு, ரிவிஷன் டைம் இருக்கிறது என்பதை விட்டு விட்டு, இன்றைக்கு உத்திரவு போடுவது, நாளைக்கே கடப்பாரையோடு நிற்பது என்ற முறையில் நடந்து கொள்கிறார்கள். இப்படி இவர் கடப்பாறைகளோடு நிற்பது கிராம மக்களின் மத்தியில் கொந்தளிப்பையும் குழப்பத்தையும் உண்டாக்குகிறது. நேற்றுத்தான் உத்திரவு போட்டார்கள், இன்றைக்கே கடப்பாரையோடு நிற்கிறாரே இடித்து விட்டால் என்ன செய்வது ? போர்டோ அல்லது அரசாங்கமோ பார்த்து என்க்ரோச்மென்ட் இல்லை என்று சொல்லி விட்டால் கட்டிக் கொடுப்பாரா என்று கேட்கிறார்கள். இப்படி அப்பீல் டைம் இருந்தால், அல்லது ரிவிஷன் டைம் இருந்தால் அத்தகைய கேஸ்களில் கிராம அதிகாரிகளும், அதே போன்று மாவட்ட அதிகாரிகளும் உள்ள காலம் வரையில் பொறுத்துத்தான் மற்றவைகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதே போன்று ஹரிஜனங்களுக்கென்று வீடுகள் கட்ட நிலங்களை எடுக்கிறோம். சீக்கிரமாக அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கவேண்டுமென்று விரும்புகிறோம். சில ஊர்களில் அரசியல் காரணத்திற்காக கர்ணமோ அல்லது அங்கு இருக்கக் கூடிய அரசியல்வாதியோ தனக்குப் பிடிக்காத ஒருவருடைய நிலத்தைப் பார்த்து அதை எடுத்துக்கொள் என்று சொல்லுகிறார்கள். உதாரணமாக தஞ்சை ஜில்லாவில், திருவாரூர் தாலுகாவில் ஒருவருக்கு $1\frac{1}{2}$ ஏக்கர்தான் இருக்கிறது. மிகச் சிறந்த விளைநில பூமி. கனம் கக்கன் அவர்களை அழைத்துக்கொண்டு போய்க் கூடக் காட்டினோம். கர்ணத்திற்கும் அவருக்கும் கொஞ்சம் ஆகாது. ஆகையால் வீடு கட்ட அந்த நிலத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னார். அவருடைய சொந்தக்காரர் ஒருவர்—அவருடைய மாமன்—

பெரும் பணக்காரர். அவர் சொன்னார், அவனுக்கு இருக்கக் கூடியது இந்த 1½ ஏக்கர்தான், அதை எடுத்துக்கொள்ள வேண்டாம், நான் வேண்டுமானால் காசில்லாமல் எனது புஞ்சை நிலத்தைக் கொடுக்கிறேன், அங்கே கட்டிக்கொள்ளுங்கள் என்று சொன்னார். ஆனால் அந்த அரசியல் சக்தி விளை நிலத்தைத் தவிர வேறு நிலத்தை ஒத்துக்கொள்ளாது. அங்கு இருக்கக்கூடிய மக்களை உந்தி விட்டு பின்னால் இருந்து வேலை செய்தால் அவர்களுக்கும் சங்கடம், அரசாங்கத்திற்கும் சங்கடம், விளை நில பூமியும் போகிறது. அந்த இடம் மதராஸ் ஸிட்டி போன்று 10 மைல் விஸ்தீரணம் ஒன்றும் கிடையாது. வீடு கட்டக் கூடிய இடத்திற்கும் வேலை செய்யும் இடத்திற்கும் ஒன்றும் ரொம்ப தூரம் கிடையாது. உணவுப் பொருள் விளையக் கூடிய நல்ல வளமுள்ள பூமி நஞ்சை நிலம் வேண்டாம், நல்ல மேட்டுப் பாங்கான புஞ்சை நிலம் கொடுக்கிறோம், அதுவும், காசில்லாமல் கொடுக்கிறோம் என்று சொன்னால் அங்கே இருக்கிற தொல்லை கொடுக்கும் கிராமஅதிகாரி கூடாது கூடாது அவன் நிலத்தைத்தான் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று சொல்லுகிறார். லாண்ட் அக்விஸிஷன் ஆக்ட் படி கோர்ட்டுக்குப் போகும் அதிகாரம் குறைவு. மால ஃபைடி அக்விஸிஷனா அல்லது போன ஃபைடி அக்விஸிஷனா என்ற முறையில் தான் போகலாமே தவிர மற்றப்படி கோர்ட் தலையிடுவது மிக மிகக் குறைவு—கூடவும் கூடாது. அந்த அதிகாரம் அவ்வளவும் அரசாங்கத்தின் கையில்தான் இருக்கிறது. பொஸெஷனை எடுத்து விட்டால், பிற்பாடு அந்த வித அக்விஸிஷன் வேண்டாமென்று பின்வாங்குவது கஷ்டம். வேண்டுமானால் எமெர்ஜென்ஸி நோட்டிபிகேஷன் போட்டு, 4, 5, 6 செக்ஷன்களையெல்லாம் ஒரே தாண்டாகத் தாண்டி—வேண்டும் காலத்தில் இந்த மாதிரி தாண்டமாட்டார்கள்—வேண்டாதவர்களுடைய நிலத்தை எடுத்துகொள்வதற்காக, குறும்புத்தனம் பண்ணவேண்டு மென்பதற்காகத் தாண்டி, பேப்பரில் பொஸெஷன் எடுத்து விட்டால் பிற்பாடு அமைச்சரே நேரில் போய்ப் பார்த்து, இது அநியாயம் என்ற முடிவுக்கு வந்தால்கூட பின் வாங்க முடியாத நிலை ஏற்படுகிறது. இதையெல்லாம் பார்க்கும்போது கிராம அதிகாரிகளுக்கு இன்னும் நல்ல பயிற்சி தர நாம் கடமைபட்டிருக்கிறோம். இப்படியெல்லாம் செய்தால், சட்டம் தெரியாமல் செய்தால் அதனால் சங்கடங்கள் அதிகரிக்கிறது என்பதை அவர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். இதனால் வீடு கட்டும் வேலையும் தாமதப்படுகிறது. இதே மாதிரித்தான் கனம் அங்கத்தினர் கோதண்டராமன் அவர்கள் சொன்ன சம்பவமும். இப்படிப்பட்ட தொல்லையெல்லாம் தம் நிர்வாகத்திலிருந்து நீங்கினால்தான் மக்களுடைய நன்மை பெருக முடியும். மாவட்ட நிர்வாகத்தில் இந்த மாதிரி நிலை இருந்தால் மக்களிடையே கொந்தளிப்பு ஏற்படுகிறது. அதே போன்று சேலம் மாவட்டத்திலே 4—5 பேர்கள் சேர்ந்து ஒரு இடத்தை உழுதுகொண்டு வந்தார்கள். 10 ஆண்டு காலமாக உழுதுகொண்டு வந்திருந்தும் 'பி.' மெமோ கொடுத்தார்கள். கடைசியாக ஜாரி செய்யலாம் என்று தாசில்தார் வந்தார். வந்த தாசில்தார் குப்பன் உழுதுகொண்டு இருந்த இடத்தை சுப்பனுக்கு அஸைன்மெண்ட் செய்தார், சுப்பன் உழுதுகொண்டு இருந்த இடத்தை இன்னொரு அப்பனுக்கு அஸைன்மெண்ட் செய்தார். மக்களுக்கு நல்ல முறையில் ஜாரி செய்ய இருக்கிறார்களே தவிர தொல்லை கொடுப்பதற்காக இல்லை. கிராமத்திலுள்ள மக்கள் அப்பாவி மக்கள். அவர்களுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை, யாரை என்ன கேட்பது என்று தெரியவில்லை. நிலம் இல்லாதவர்கள் உழுதுகொண்டு வருகிறார்கள். அவனவன் உழுவதை அவனவனுக்கு ஜாரி செய்தால் ஒரு தொல்லையும் இல்லை. அவன் உழுததை இவனுக்குக் கொடுத்து, இவன் உழுததை இன்னொருவனுக்குக் கொடுத்து, இந்த மாதிரி செய்வதைத் தவிர்க்க வேண்டும். அப்படியில்லாமல் மாவட்ட அதிகாரிகள் தாங்கள் நினைத்ததைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.





இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். செங்கற்பட்டில் ஒரு தகராறு. ஒருவர் கிஸ்தி கட்டிவிட்டார். ரசீதைக் கூட காட்டுகிறார்கள். அப்படிச் செய்தும் கிஸ்தி கட்டவில்லை என்று பிரிந்துவிட்ட குடும்ப சொத்துக்கு கிஸ்தி கட்டவில்லையென்று மாடுகளைப் பிடித்திக்கொண்டு போகிறேன் என்று பிடித்துக்கொண்டு போய்விட்டார்கள். அவருக்கு இருக்கும் சொத்தை 8 பேர்களுக்கும் கொடுக்கலாம். அவர் 4 மாதங்களாக மாவட்ட அலுவலகத்திற்கும் செக்ரெட்டேரியட்டுக்கும் அலைகிறார். இன்னும் மாடு வரவில்லை. எல்லாவற்றையும் தலைமை நிர்வாகத்தில் சொல்லிக்கொண்டிருக்க முடியுமா என்பதைப் பார்க்க வேண்டும். முடிந்த வரையில் மாவட்ட நிர்வாகங்களில் என்னவாவது தவறு ஏற்பட்டு அப்படிப்பட்ட கேஸ்கள் அமைச்சருக்கு அல்லது செக்ரெட்டேரியட் அதிகாரிகளுக்கு வந்தால் அவர்களுக்கு தக்க தண்டனை கொடுத்தீர்களானால் மறுபடியும் அத்தகைய தொல்லைகளைக் கொடுக்க மாட்டார்கள்—தவறுகளைச் செய்ய மாட்டார்கள். இப்படிப்பட்ட தொல்லைகளையெல்லாம் நீக்கி அமைச்சர் அவர்கள் மாவட்ட நிர்வாகம் திறமையோடு நடக்க வழி செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக ரிஜிஸ்ட்ரேஷன் டிபார்ட்மெண்டில் சம்பளம் ரொம்பக் குறைவாக இருக்கிறது. ஆகையால்தான் ரிஜிஸ்டர் செய்வதில் லஞ்ச ஊழல்களெல்லாம் வருகின்றன. வேறு இலாகா மாதிரி வேறு வழிகளில் வாங்க முடியாது. ஆகையால் அவர்களுக்கு நல்ல சம்பளம் கொடுத்தால் கொஞ்ச நஞ்ச ஊழலும் போய் விடும். அவர்களுடைய சம்பளத்தை உயர்த்துவதில் அக்கறை காட்டவேண்டுமென்று கூறி முடித்து கொள்கிறேன்.

**Sri M. K. SOMASUNDARAM**: தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மானியத்தை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இப்போது நம் மாநிலத்தில் விவசாயம் நன்றாக நடக்க வேண்டும், அதற்காக அரசாங்கம் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று பல சட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறோம். அத்தகைய சட்டங்கள் சரிவர நடைபெறுகின்றனவா என்று ஆராய வேண்டும். நியாய வாரச் சட்டம், கையேர் மாட்டு வாரச் சட்டம் போன்ற சட்டங்கள் கொண்டுவரப்பட்டு விவசாயிகளுக்கு நன்மை செய்யவேண்டுமென்று இருக்கும்போது கிராமத்திலுள்ள விவசாயிகள் பல தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள். கிராமங்களிலே உள்ள கர்ணமும் மற்ற கிராமத் தலைவர்களும் கொடுக்கும் தொல்லை அதிகமாக இருக்கிறது. சர்க்காரிலே இவைகளெல்லாம் சரிவர நடைபெறுகிறதா என்று சிந்தித்துப் பார்த்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக கிராமங்களில் கர்ணங்கள் செய்கிற வேலைகளைக் குறித்து அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுப்பதில்லை என்று நான் கருதுகிறேன். ஒரு புறம்போக்கு இடத்தில் பல காலமாக இருந்து விவசாயம் செய்து கொண்டிருக்கிற ஒரு விவசாயியை அப்புறப்படுத்தவேண்டுமென்று அவர்களுடைய நோக்கமாக இருக்கிறதே தவிர, நிலம் இல்லாதவருக்கு நிலத்தைக் கொடுத்து, நன்றாக விவசாயம் செய்து, உணவு உற்பத்தியை அதிகரிக்கச் செய்யவேண்டுமென்ற நோக்கம் இல்லை என்பதைத் தாழ்மையாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக 12—13 ஆண்டுகளாக ஒரு விவசாயி புறம்போக்கு நிலத்தை உபயோகித்துக் கொண்டிருக்கும்போது இவ்வளவு காலம் ஆகிய பிறகு நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். விவசாயிகளுக்கு நாம் ஊக்கம் அளித்து விவசாயத்தை அபிவிருத்தி செய்ய முயற்சி செய்ய வேண்டுமேயல்லாமல், காலி செய்யவேண்டுமென்று சொன்னால் விவசாயி எப்படி ஊக்கத்துடன் வேலை செய்ய முடியும்? எப்படி நாம் விவசாயத்தை அபிவிருத்தி செய்ய முடியும் என்று சிந்திக்க வேண்டும்.

இன்றைய தினம் ஒவ்வொரு ஆண்டும் 'பி' மெமோ கொடுத்து தண்டத் தீர்வை கட்டவேண்டிய நிலை இருக்கிறது. அதே சமயத்தில் அவர்கள் இரண்டுவித தண்ணீரை உபயோகப்படுத்த வேண்டியிருக்கிறது திருநெல்வேலி ஜில்லாவிலே. ஒன்று மணிமுத்தாறு தண்ணீர், மற்றொன்று தாம்பிரபரணி தண்ணீர். அவர்கள் இரண்டுக்கும் இரண்டு தீர்வை செலுத்த வேண்டியிருக்கிறது. அதைப்பற்றி அமைச்சருக்கு பல மனுக்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. இரண்டு தண்ணீரை உபயோகப்படுத்தினாலும் ஒரு தீர்வை போடவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து கவனிக்க வேண்டும். இரண்டு தீர்வை கொடுக்க வேண்டுமென்று சொல்லுவதில் ஹரிஜன மக்கள் பாதிக்கப்படுகிறார்கள்—விவசாய மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். 10—15 ஆண்டு காலமாக உழுது விவசாயம் செய்துகொண்டிருக்கிற புறம்போக்கு நிலத்தை ஜாரி செய்து கொடுக்கவில்லையென்றால் அவர்கள் என்ன செய்ய முடியும். அவர்கள் எம்.எல்.ஏ.-யிடம் சொல்லி எல்.எல்.ஏ.-க்கள் அதிகாரிகளை அணுகினால் அவர்கள், நாங்கள் சர்க்கார் நிலத்தை சும்மா எப்படி கொடுப்பது என்று சொல்லுகிறார்கள். விவசாயம் செய்துகொண்டிருக்கின்ற நிலத்தைத்தானே கொடுக்கச் சொல்லுகிறோம், அவர்களுக்கு வேறு நிலம் கிடையாது, சொத்து கிடையாது, அந்த நிலத்தை ஜாரி செய்து கொடுக்கவேண்டுமென்று சொன்னால், நிர்வாகத்திலே தலையிடுகிறீர்களே என்று கேட்கும் நிலை இருக்கிறது.

நமது நண்பர் ஒருவர் சொன்னார், ஏதோ ஆளும் கட்சிக்கு எல்லாம் உடனடியாக நடக்கிறது என்று. ஆனால் நான் நினைக்கிறேன். எதிர்க் கட்சியினர் சொன்னால்தான் எல்லாம் உடனடியாக நடக்கிறது. என்று நான் அந்த அளவுக்கு இல்லாமல், யார் சொன்னாலும் அதிகாரிகள் நன்றாக மனுக்களை பரிசீலனை செய்து ஒழுங்காக தங்கள் கடமையைச் செய்ய வேண்டும். அது எம். எல். ஏ. வாக இருந்தாலும் சரி, அல்லது எந்தக் கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும் சரி, நிர்வாகப் பொறுப்பில் இருக்கக் கூடியவர்கள், அந்த மனுக்களை நல்ல முறையிலே பரிசீலனை செய்து, யார் யாருக்கு என்னென்ன வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டுமோ, அவைகளைச் செய்ய வேண்டுமென்று நான் இந்த சமயத்தில் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

பொதுவாக, நிர்வாக அதிகாரிகள் சரியான முறையிலே சில காரணங்களால் வேலையை ஒழுங்காகச் செய்ய முடிவதில்லை. அவர்கள் நிர்வாகத்திலே இருக்கிற ஊழல்கள் ஒருபக்கம் இருந்தாலுங்கூட, அவர்களுக்கு குடியிருப்புக்காக வீட்டு வசதி கிடையாது என்ற ஒரு குறை இருந்து கொண்டிருக்கிறது. அதனால் நிர்வாகத்தில் அடிக்கடி லீவ் எடுக்கின்றார்கள். அப்படி லீவ் அடிக்கடி எடுப்பதால், மனுக்கள் சரியாக பரிசீலனை செய்யப்படாமல், பெண்டிங்காக இருக்கிறது. ஆகவே, இந்த நிலைமையைப் போக்க நிர்வாக அதிகாரிகளுக்கு ஆங்காங்கே வீடுகள் கட்டிக் கொடுக்க முன் வர வேண்டும். அப்போதுதான் நிர்வாகம் ஒழுங்காக நடக்க முடியுமென்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு நாம் லட்சக்கணக்கான ரூபாய்களை ஒவ்வொரு பிளாக்கிற்கும் செலவழிக்கின்றோம். அப்படி ஒதுக்கப்படுகின்ற பணத்தை, அங்குள்ள நிர்வாக அதிகாரிகள் நல்ல முறையிலே செலவழிக்கின்றார்களா என்று பார்த்தால், பொறுப்பின்றிதான் செலவழிக்கிறார்கள் என்று நான் சொல்வேன். ஆகவே, பிளாக்குகளில் விவசாயம் நல்ல முறையிலே செய்வதற்கு ஊக்கம் அளிக்க வேண்டும். ஊக்கம் அளிப்பதன் மூலமாகத்தான் நாம் விவசாய அபிவிருத்தி செய்ய முடியுமென்று நான் எடுத்துக்கூற விரும்புகிறேன். சாதாரணமாக, விவசாயிகளுக்கு கடன் கொடுக்கிற முறையிலே, பல வகைகளிலே கடன் கொடுக்கிறார்கள். ஒருவருக்கு 2, 3 வீதங்களிலே, கடன் கொடுத்து, 3 வருஷங்கள் கழித்த பிறகு



எல்லாக் கடன்களையும் ஒருமுகமாகத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று சொல்லி, வசூலிக்க முற்படுகின்றபோது விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதிகாரிகளாக இருக்கக்கூடியவர்கள் இதையெல்லாம் கவனித்து, அந்தந்தக் கடன்களுக்கு அவ்வப்போது, அந்தந்த வருஷங்களிலேயே வசூல் செய்ய வேண்டும். அப்படி வசூல் செய்வதையும் அறுவடை நேரத்திலே அந்தந்த வருஷத்திலே வந்து வசூல் செய்ய வேண்டும். இப்படி வசூலிக்காமல் அதிகாரிகள் சும்மா இருந்துவிட்டு, குறிப்பிட்ட நேரத்திலே அரசாங்கத்திலிருந்து கேட்கின்ற நேரத்தில் மொத்தமாக எல்லாக் கடன்களையும் வசூலிப்பதற்கு நோட்டீஸ் கொடுத்தால், விவசாயிகள் எந்த நிலைமையில் இருப்பார்கள் என்பதை நாம் சிந்திக்க வேண்டும். இதற்கெல்லாம் கனம் மந்திரி அவர்கள் உடனடியாக ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். இனம் நிலங்களை பயிரிடுகின்ற நேரத்தில், நிலத்திற்கு செட்டில்மெண்ட் ஆகியிருக்கக்கூடியவர்கள், செட்டில்மெண்ட் ஆகிக்கொண்டிருக்கக்கூடியவர்கள் டெம்பரவரி பட்டா வாங்க வேண்டியிருக்கிறது. இந்த பட்டாவை வாங்குவதற்கு ராமநாதபுரம் போக வேண்டியிருக்கிறது. திருநெல்வேலி ஜில்லாவிலுள்ளவர் தன் நிலத்திற்கு இந்த டெம்பரவரி பட்டா வாங்குவதற்கு ராமநாதபுரத்திற்கு போய் வர வேண்டுமென்றால், என்ன செலவாகும் என்று நான் கேட்க விரும்புகிறேன். ஆகவே, இனம் ஒழிப்பு செட்டில்மெண்ட் ஆகும்போது, இந்த ஆபீசுகள் ஒவ்வொரு ஜில்லாவிலும் இருக்க வேண்டும். அந்த முறையிலே அந்தந்த ஜில்லாக்களிலே டெம்பரவரி பட்டா வாங்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் வற்புறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஏனெனில் விவசாயிகள் எவ்வளவு கஷ்டமான நிலையில் இருக்கிறார்கள் என்பதை நாம் சிந்திக்கவேண்டும். அவர்கள் ஒரு ஜில்லாவை விட்டு அல்லது 3 ஜில்லாக்களுக்குப் பிறகு போய் பட்டா பெற்றுக் கொள்வதற்கேற்ற வசதி அவர்களுக்குக் கிடையாது. ஆகவே அவர்கள் நல்ல முறையிலே விவசாயம் செய்வதற்குத் தகுந்தாற்போல், இதை வசதியான முறையிலே மாற்றியமைக்கவேண்டும். இதையெல்லாம் கனம் அமைச்சர் அவர்கள் உடனடியாக கவனித்து, விவசாயிகளுக்கு நன்மை செய்யக்கூடிய அளவிலே ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தவிர, ஹரிஜனங்களுக்கு நல்ல முறையிலே புறம்போக்கு நிலங்களை ஜாரி செய்து கொடுக்க வேண்டும். அதற்கு அந்த நிலங்கள் ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒவ்வொரு தாலூகாவிலும் எவ்வளவு புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன என்பதை கணக்கெடுத்து, யார் யாருக்குக் கொடுக்க வேண்டுமென்பதை கணக்கெடுத்து நல்ல முறையிலே ஜாரி செய்தால் ஏழைகளுக்கு நிலம் கிடைத்து, விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்கு வசதியாக இருக்கும். அப்படி கொடுக்கும்போது அந்த நிலங்களில் உள்ளவர்கள் நல்ல முறையிலே விவசாயம் செய்யாமல், தரிசாகவே அப்படியே வைத்திருந்தால், அப்படிப்பட்டவர்களிடமிருந்து வேண்டுமென்றால் நிலங்களை எடுத்துக்கொள்ளலாம். இந்த முறையிலே ஒரு திட்டத்தை வகுத்து, ஏழைகளுக்கு, ஹரிஜனங்களுக்கு வசதி செய்ய வேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்களுக்கு வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். அப்படி செய்தால், ஏழைகளுக்கும் அவர்களுடைய தொல்லை தீரும். நாட்டிலேயும் விவசாய அபிவிருத்தி நல்ல முறையில் ஏற்படும்.

இந்த நேரத்திலே நான் ஒன்றை மட்டும் குறிப்பாகக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். மணிமுத்தாறு, தாமிரபரணி ஆகிய பாய்ச்சலுக்கு இரட்டைத் தீர்வை போடப்படுகிறது. இதை ஒரே தீர்வையாக போடவேண்டுமென்று இந்தச் சமயத்தில் கேட்டுக்கொண்டு, இந்த சந்தர்ப்பத்தைக் கொடுத்த தலைவர் அவர்களுக்கு நன்றி செலுத்திக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*SRI S. RAMASWAMI THEVAR : கனம் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையைப் பற்றிப் பேசும்போது கோடானு கோடி குறைகளைச் சொல்ல முடியும். இதிலே பல குறைகள் இருக்கிறது என்றாலும், விவாதத்திற்கு குறைவான நேரம் கொடுத்துள்ளபடியால், ஒன்றிரண்டு குறைகளைக் கூறுகிறேன். இதுபற்றி ஏற்கனவே கவர்னர் பெருமானுடைய உரையின்மீது நடந்த விவாதத்தில் சொல்லியிருக்கிறேன். இன்னும் சில குறைகளை இப்போது சொல்ல விரும்புகிறேன்.

ஜமீன் நிலங்கள், இனாம் நிலங்கள் மாற்றப்பட்ட பகுதிகளிலே இருந்து, அதாவது 1361-வது பசலியிலிருந்து, நாளது வரைக்கும் வசூல் நல்ல முறையில் இல்லை. வசூல் பெரும் கடுமையாக நேர்மையற்ற முறையில் இருக்கிறது. கணக்கு வழக்கே இல்லையென்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இதுபற்றி இன்னும் பலது சொல்லலாம். நேரம் குறைவாக இருப்பதால், ஒன்றிரண்டு விஷயங்களைப் பற்றி மட்டும் சொல்கிறேன்.

இன்று ஆளும் கட்சி அங்கத்தினர்கள் கூட ஆங்காங்கு நடக்கக்கூடிய குறைகளை மிகவும் நல்ல முறையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன். முக்கியமாக ஒருவன் ஒரு நிலத்தை கிரயம் வாங்கும்போது, நான் இந்த நிலத்தை கிரயத்துக்கு இன்னாரிடமிருந்து வாங்கினேன் என்று கையெழுத்து போட்டு, எனக்கு அந்த நிலத்திற்கு பட்டா கொடுக்க வேண்டுமென்று கேட்டு, பத்திரம் பதிவு செய்யப்படுகின்றது. சில இடங்களிலே பட்டாவிற்காக ஸ்டாம்புகூட கட்ட வேண்டியிருக்கிறது. பேராவூரணி சப்-ரிஜிஸ்தரார் ஆபீசிலே ஒரு ரூபாய் ஸ்டாம்பு ஒட்ட வேண்டுமென்று சொல்லி ஒட்டப்பட்டு வருகிறது. அப்படிச் செய்தாலும் உடனடியாக பட்டா கொடுப்பதற்கு முற்படுவதில்லை. அந்த பட்டா பாரம் எஸ்டேட் மானேஜ்மெண்ட் தாசில்தாருக்கு அனுப்பப்பட்டு, பின்பு கிராம கணக்குப் பிள்ளைகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. இவர்கள் உடனடியாக பட்டாவை மாற்றுவது கிடையாது. அப்படி மாற்ற வேண்டுமென்றால், பல முறை நேரில் சென்று கொஞ்சம் கொடுத்து கெஞ்ச வேண்டியிருக்கிறது. அப்படி கெஞ்சிய பிறகே மாற்ற வேண்டியிருக்கிறது. அப்படி கெஞ்சி பட்டா வாங்கிய பிறகுகூட, ஏற்கனவே நிலத்திற்கு வரி கட்டவில்லையென்று நம்மிடம் வரி கொடுக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. இதைச் சர்க்கார் கவனித்து, இந்தக் குறைகளையெல்லாம் நீக்கவேண்டும்.

அடுத்ததாக, ஒரு நிலம் பலருக்குச் சொந்தமாக இருக்கிறது. அந்த நிலமானது பலர் பெயரிலே கூட்டுப்பட்டாவாக செட்டில்மெண்ட் ஆகியிருக்கிறது. அதற்கான வரியை அந்த நிலத்திற்குச் சொந்தமான பலரிடம் அவர் அவர் வீதத்தை வசூல் செய்ய வேண்டும். ஆனால் இதிலே பல கெடுபிடி செய்யப்படுகிறது. ஒவ்வொருவருக்கும் இவ்வளவு சென்ட் நிலங்கள் என்று குறிப்பிட்ட கணக்கிருந்தாலும், ஒவ்வொருவரிடமும் அந்த நிலத்திற்குரிய முழு வரியைக் கட்டவேண்டுமென்று பொறுப்பில்லாமல் நடந்துகொள்ளுகிறார்கள். யார் யார் பேரில் நிலம் செட்டில்மெண்ட் ஆகியிருக்கிறதோ, அவர்கள் எல்லோரும் வரி கொடுக்க வேண்டுமென்று சொல்லக்கூடிய அளவிலே கெடுபிடி வசூல் செய்யப்படுகிறது. அம்மாதிரியாக வசூலிக்கவும்படுகிறது. இந்த நிலைமையையும் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கூட்டுப் பட்டா நிலங்களுக்கு விகிதப்படியே வசூல் செய்யவேண்டும்.

ஒரு விஷயத்தை நான் அடிக்கடி சொல்லிக்கொண்டு வருகிறேன். இந்த மன்றத்திற்கு வந்த நாள் முதல் கொண்டு, வரி வசூலிக்கப்படுவதற்கு சரியான முறையிலே கணக்கு கொடுப்பதில்லையென்பதை நான் சொல்லிக்கொண்டு வருகிறேன். ஒருவனுக்கு பாக்கி இருக்கிறது. டிமாண்ட் நோட்டீஸ் அனுப்பப்படுகிறது. ஆனால் அவன் அந்த பாக்கியைக் கட்டுவதற்கு விவரம் கேட்டால் கொடுப்பதில்லை. 65-ம் நெம்பர் பட்டா, இவ்



வளவு பாக்கி, இவ்வளவு பணத்தை உடனடியாக இத்தனை நாட்களுக்குள் கட்ட வேண்டும், தவறினால் ஜப்தி என்ற அளவுக்குத்தான் நோட்டீஸ் அனுப்பப்படுகிறதே ஒழிய, அந்த டிமாண்டு நோட்டீசிலே அவன் சாகுபடி செய்யக்கூடிய நிலம் இவ்வளவு, அதிலே சாகுபடி செய்திருக்கக்கூடிய நிலம் விஸ்தீர்ணம் இவ்வளவு, அதற்கு இவ்வளவு பணம் என்ற விவரத்தைக் கொடுத்தால் என்ன ? கோர்டுக்குப் போனாலும் கூட, பிரதிவாதி செலுத்த வேண்டிய தொகைக்கு விவரம் கொடுக்கிறார்கள். இங்கு விவரம் கேட்டாலும் கொடுப்பதில்லை. இந்தமாதிரி பல தகராறுகள் என்னுடைய தொகுதியிலேயும், பட்டுக்கோட்டை பகுதிகளிலேயும் நடந்துகொண்டு வருகிறது. நிலம் விஸ்தீரண விவரத்தோடு கணக்குகள் கொடுக்கும்படி உத்தரவு போடவேண்டும்.

சமீப காலத்திலே, பேராவூரணி பக்கத்து கழனிவாசல் கிராமத்தில் நல்ல அந்தஸ்தில் உள்ளவருடைய மாடுகளை 15-2-61-ல் ஜப்தி செய்தார்கள். அவர் உடனே ஆர்.டி.ஓ.-விடம் சென்று, நான் இப்போது பணத்தைக் கட்டுகிறேன். ஆனால் எனக்கு கணக்குதான் வேண்டும், நான் இவ்வளவு செலுத்த வேண்டுமென்பதற்கு கணக்குக் கொடுங்கள் என்று கேட்டார். உடனே ஆர்.டீ.ஓ. அவர்கள் டிப்டி தாசில்தாரையும், கணக்குப் பிள்ளையையும் கணக்கு பார்த்து கொடுக்கும்படி கூறினார்கள். ஆனால் இன்னும் கணக்கு கொடுக்கவில்லை. எத்தனை நாட்களுக்கு மாடுகளை பவுண்டில் விட்டுவைப்பது. பணத்தைக் கட்டிவிட்டு மாடுகளை ஓட்டிக்கொண்டு வரக்கூடிய நிலைமைதான் இன்றிருக்கிறது. ஆனால் அவர் மாடுகளை ஓட்டிக்கொண்டு வந்த பின் மறுபடியும் கணக்கு கொடுக்க வேண்டுமென்று நகல் மனு போட்டார்கள். ஒரு மாதமாகியும் நகல் கிடைக்கவில்லை. இம்மாதிரியான கஷ்ட நிலைமைதான் இன்றிருக்கிறது. கேட்கும்போதே கணக்குகள் கொடுக்க வேண்டுமென்ற விதி ஏற்படவேண்டும். பட்டுக்கோட்டை அறந்தாங்கி பகுதிகளிலே அம்மாதிரி இருக்கிறது. இந்த இலாகா பணம் வசூல் செய்வதில் மட்டும் கண்ணும் கருத்துமாக இருக்கக்கூடாது. பணம் வசூல் செய்யப்படும்பொழுது நியாயமான முறையில், நேர்மையான வழியில் வசூல் செய்யப்படவேண்டும். ரெவின்யூ போர்டார் ஒரு வாரத்திற்கு, ஒரு மாதத்திற்குள் அதிகாரிகள் இவ்வளவு வசூல் செய்யவேண்டும் என்று டார்ஜெட் நிர்ணயம் செய்து அந்த டார்ஜெட்படி வசூல் செய்யாவிட்டால் அதிகாரிகள் வேலையிலிருந்து நீக்கப்படுவார்கள் என்றுகூட சொல்லப்படுகிறது. ஆபீசர்களைக் கேட்டால் " நாங்கள் என்ன செய்வது, மேல் அதிகாரிகள் உத்திரவுப்படி நடக்க வேண்டும் " என்று சொல்லுகிறார்கள்.

எங்கள் பகுதியிலே எங்கு பார்த்தாலும் பணம் கையாடல், சொல்லுவதற்கே வெட்கமாக இருக்கிறது. ஒரு வட்டத்தில் இல்லை. 20, 30 வட்டங்களில் ஆயிரக்கணக்கான ரூபாய் கையாடல் செய்யப்பட்டிருக்கிறது. மக்கள் ரசீது வைத்திருக்கிறார்கள். ரசீதைக் காண்பிக்கிறார்கள். இதைப் பார்க்கவே அவர்களுக்கு வெட்கமாக இருக்கிறது. திருநானூரில் ஒருவர் லோனைத் திருப்பிக் கட்டினதற்கு ரசீது காண்பித்தார்கள். " ரசீதை வைத்துவிட்டு போங்கள், பரிசீலனை செய்கிறோம் " என்று சொன்னார் ரெவின்யூ இன்ஸ்பெக்டர். வவுசர் கொடுங்கள் என்று கேட்டால், கொடுக்க முடியாது என்று சொல்லுகிறார். ரசீது இருந்தும் இவர் மாடுகள் ஜப்தி செய்யப்பட்டிருக்கிறது. ஆயங்குடி வட்டம் மணியக்காரர் கொஞ்சம் செல்வாக்கு பெற்றவர். அவருக்கு அனுசரணையாக ரசீதைக் காண்பித்தால் ரசீதை வாங்கி கிழித்துக் போடுகிறார் ரெவின்யு இன்ஸ்பெக்டர். செலுத்திய தொகைக்கு என்ன செய்வது. இம்மாதிரி பல தொல்லைகள் எங்கள் பகுதியில் இருக்கின்றன என்பதை வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதற்கெல்லாம் பரிகாரம் அவசியம் தேடவேண்டும். எங்கள் பகுதியிலிருந்து பல மனுக்கள் தாசில்தார் எஸ்டேட் மானேஜர் வசூல் பற்றி வந்துகொண்டிருந்தன. இம்மாதிரி மனுக்கள் திரும்பத்

திரும்ப வந்துகொண்டிருக்கிறதே, பல ரசீதுகள் அனுப்பப்பட்டிருக்கிறதே, பலர் குறைகள் சொல்லுகிறார்களே என்று விளக்கம் கேட்டிருந்தேன். தயவு செய்து 10, 20 நாட்களுக்குள் பதில் கொடுக்குமாறு கேட்டேன். பதிலும் கிடையாது. இம்மாதிரி பதில் கொடுப்பதே இல்லை. உத்தியோகஸ்தர்கள் அரசாங்கத்திற்கு கீழ்ப்படிகிறோம் என்ற இறுமாப்பு இருக்கிறது. அந்த இறுமாப்பு போகவேண்டும். மக்களுக்காகத்தான் ஊழியர்கள், மக்களுக்காக வாழ்கிறோம், மக்களுக்காக நியமிக்கப்பட்டிருக்கிறோம் என்ற எண்ணம் அதிகாரிகளுக்கு உதயமாகவேண்டும். அது இந்த நாட்டில் கிடையாது.

அடுத்தபடியாக வசூல் எந்தக் காலத்திலும் நடக்கிறது. சாகுபடி காலத்திலும் வசூல் நடக்கிறது. கார்த்திகை, ஐப்பசி மாதத்திலும் வசூல் நடக்கிறது. அந்த மாதிரி இருக்கக்கூடாது. எப்பொழுதும் வசூல் தொந்தரவு இருந்தால், எப்படி குடியானவர் சுதந்திர புருஷராக வாழ முடியும். அறுவடைக் காலத்தில் 3 மாதத்தில் தான் பணம் வசூல் செய்யவேண்டும். மற்ற காலங்களில் வசூல் செய்வது நன்றாக இல்லை என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இன்னும் பல குறைகள் இருக்கின்றன. கழனிவாசல் கிராமத்தில் ஒருவர் மீதுள்ள வஞ்சத்திற்காக, கதிர் அறுக்கக்கூடாது என்று ஜப்தி நோட்டீஸ் வைத்தார்கள். நோட்டீசை வயலில் போட்டுவிட்டுப் போய்விட்டார்கள். எந்த நிலத்தை ஜப்தி செய்ய வேண்டுமோ அந்த நிலம் அல்ல அது. அவருக்கு உள்ள நிலம் அல்ல. அவர்கள் அதைப்பற்றி கவனிக்காமல் கதிர் அறுக்கக்கூடாது என்று தடை செய்தார்கள். மீறி அறுவடையானது; தாசில்தாருக்கு அறிவிக்கப்பட்டு போலிஸ் ஏவப்பட்டது. பார்த்தால் சர்வே நெம்பர் வேறு. இப்படி சர்வே நெம்பர் கூட சரியாக தெரியாமல் இருக்கிற கணக்குப் பிள்ளைகள் இருக்கிறார்கள். இதைக் கவனிக்க வேண்டும். முக்கியமாக பட்டுக்கோட்டை தாலூகாவில் கழனிவாசல் மணியக்காரர், கணக்குப் பிள்ளை மிகவும் மோசமாக நடந்துகொள்கிறார்கள். ரூ. 12,000 வரை கிராம முன்சீப் லோன் பணத்தை சாப்பிட்டிருப்பதாகத் தெரிகிறது. தாசில்தார் சென்று அவருக்கு திரும்ப வேலை தருகிறேன் என்று சொல்லி அந்தப் பணத்தை வசூல் செய்திருக்கிறார்கள். இது போல கையாடல் நடக்கிறது என்று திரும்பத் திரும்ப இந்த மன்றத்தில் அநேகம் தடவைகள் சொல்லிக் கொண்டிருப்பது நல்லதில்லை. அது எல்லோரையும் பாதிக்கிறது. ரெவின்யூ போர்டார் இதில் பெரிதும் கவனம் செலுத்த வேண்டும். எங்கள் பகுதியிலே மக்கள் குமுறிக் கொண்டிருக்கிறார்கள். எத்தனை மனுக்கள் எழுதிக் கொண்டிருக்கிறார்கள்? கணக்கு கொடுத்தால் பணம் கொடுக்கத் தயார் என்று சொல்லுகிறார்கள். அவர்களிடையே இன்றைக்கு ஒரு புரட்சிகரமான உள்ளத்தை சர்க்கார் தூண்டிக்கொண்டிருக்கிறது. அவர்கள் ஒரு புரட்சியே செய்து விடுவார்கள். அந்த அளவுக்கு சர்க்கார் போகக்கூடாது. அவர்களுக்கு இருக்கிற குறைகளை உடனடியாக நீக்கவேண்டும், அவைகளை நல்ல முறையில் கவனிக்க வேண்டும். வசூல், கையாடல், ரசீதிருந்தும் கணக்கில்லாது கொடுமைக்குள்ளாக்கப்படும் காரியங்கள் யாவையும் கவனிக்க அப்பகுதிகளுக்கு ஒரு விசாரணைக் குழுவை ஏற்படுத்த வேண்டுமென கேட்டுக்கொள்ளுகிறேன். நிர்வாகத்தில் நல்ல கண்காணிப்பு வேண்டும். கிழக்கு ராமநாதபுரத்தில் பேய் மழை பெய்ததின் காரணமாக சாகுபடி மிகவும் கெட்டுவிட்டது. வசூல் ரொம்பவும் கடுமையாக இருக்கிறது. அதிகாரிகள் வசூல் செய்யாவிட்டால் வேலையிலிருந்து நீக்கப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதில் சர்க்கார் அதிக கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**Sri N. R. THIAGARAJAN** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஒலி பெருக்கி என்னோடு ஒத்துழையாமை செய்கிறது. ஏனென்றால் நான் உயரமாக இருக்கிறேன். அது தாழ்வாக இருக்கிறது. செகரடரி அவர்கள் சொல்லியிருக்கிறாராம், எல்லோருக்கும் ஒரேமாதிரி ' ஸவுண்டு வால்யூம் '





போட வேண்டுமென்று. நான் உயரமாக இருப்பதால் எனக்கு கொஞ்சம் கூடுதலாக ' ஸவுண்டு வால்யூம் ' போட்டால் தான் பொறுத்தமாக இருக்கும். ஆகவே, எனக்கும், என்னைப்போன்று உயரமாக இருக்கிறவர்களுக்கும் கொஞ்சம் ' வால்யூமை ' உயர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**Mr. SPEAKER** : நீங்கள் கொஞ்சம் குனிந்து நின்று பேச வேண்டும்.

**Sri N. R. THIAGARAJAN** : நான் ' வணங்காமுடி '. நான் எப்பொழுதும் நிமிர்ந்து நிற்பதுதான் வழக்கம். குனிவது வழக்கமில்லை. நான் நிமிர்ந்து நின்றுதான் பேசுகிறேன். ஆகையால் ஒலிபெருக்கியை சற்று உயர்த்திக் கொடுக்கவேண்டும்.

இப்பொழுது கொண்டு வரப்பட்டுள்ள 3, 4 டிமாண்டுகளிலே ரிஜிஸ்டிரேஷன் டிபார்ட்மெண்டைப் பொறுத்த அளவில் எனக்குக் குறையே கிடையாது. எங்கள் ஊரிலிருந்து தினசரி சுமார் 50 பேர்கள் வேறு ஊருக்கு ரிஜிஸ்டிரேஷன் ஆபீஸுக்கு போக வேண்டியிருப்பதால், எங்கள் ஊரில் ஒரு ரிஜிஸ்டிரேஷன் ஆபீஸ் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டிருந்தோம். அதை அமைச்சர் அவர்கள் 6 மாதங்கள் ஆராய்ச்சி செய்து, அவசியம் என்று கருதி, இப்பொழுது எங்கள் ஊரில் ரிஜிஸ்டிரேஷன் ஆபீஸ் வைத்துவிட்டார்கள். குறை சொல்லுவதற்கு ஒன்றுமே இடம் இல்லை. ஆறு மாதங்களுக்குள் காரியம் நடைபெற்றுவிட்டது. அதுபற்றி சந்தோஷம்.

ரெவின்யூ டிபார்ட்மெண்டைப்பற்றி எனக்கு ரொம்ப அதிகமாகத் தெரியாது. தெரியாத இடத்தில் காலைக் கையை வைத்து அவஸ்தைப்பட நான் விரும்பவில்லை. ஆனால், டிஸ்டிரிக்ட் அட்மினிஸ்டிரேஷனைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். ஜில்லா நிர்வாகம் எப்படி நடக்கிறது என்பது பற்றி இங்கே எடுத்துக்கூற ஆசைப்படுகிறேன். 1958-ம் வருஷத்தில் ஒருவர் ஜில்லா கலெக்டராக இருந்தபோது அந்த ஆண்டில் 1,000 பேபர்கள் அனுப்பினேன். எண்ணூற்று இருபத்தெட்டு பேபர்களுக்கு கையெழுத்து வாங்கி வைத்திருக்கிறேன். அந்த 828 பேபர்களில் ஒன்று கூட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. குடி தண்ணீர், ரோடு, குளம், மராமத்து இதுபோன்ற பல விஷயங்கள் சம்பந்தமாக எழுதியிருக்கிறேன். ஒன்றுக்குக்கூட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மின்சார இலாகா அமைச்சர் அவர்கள் அங்கு வந்திருந்தபொழுது, கலெக்டரை நேரில் வைத்துக் கொண்டு ' இவர் உதவாக்கரை, ஒன்றும் கவனிக்கமாட்டேன் என்கிறார். நீங்கள் இவருக்குக் கொஞ்சம் புத்திமதி கூறிவிட்டுச் செல்லுங்கள் ' என்று சொன்னேன். தமிழகத்தில் மதுரை ஒரு முக்கியமான ஜில்லா. வெள்ளைக்காரர்கள் காலத்தில் அதை மிகவும் நன்றாக நிர்வாகம் செய்து வந்தார்கள். அதற்குப் பிற்பாடும் போற்றிப் புகழக்கூடிய வகையிலே திரு வி. ஏ. ராமகிருஷ்ணன் அவர்கள் நிர்வாகத்தை நடத்தினார்கள். அதற்குப் பிறகு திரு என். எஸ். அருணாசலம் அவர்கள் மிகச் சிறந்த முறையில் நிர்வாகத்தை நடத்தினார்கள். அத்தகைய ஜில்லாவில் ஒரு சிறுவரை ஜில்லா கலெக்டராக போட்டார்கள். அவர் ஒரு காரியம் கூட செய்யவில்லை.

**Mr. SPEAKER** : பெயரைச் சொல்லக் கூடாது.

**Sri N. R. THIAGARAJAN** : ஒரு சிறுவர் என்றுதான் சொன்னேன்.

**Mr. SPEAKER** : அப்படிச் சொன்னாலும் கண்டுபிடித்துவிடுவார்கள்.

**Sri N. R. THIAGARAJAN** : எண்ணூற்று இருபத்தெட்டு பேபர்களிலே ஒன்றைக்கூட கவனிக்கவில்லை. அரசாங்கத்திற்கும் பல முறை எழுதியிருக்கிறேன். அசெம்பளியில் கேள்வி ரூபமாகக் கேட்டிருக்கிறேன். பல கேள்விகள் அட்மிஷன் ஆகாமல் தொலைந்து போய் விட்டன. ஒரே நாளில் 1,000 கேள்விகள் கொடுத்திருக்கிறேன். இந்த சட்டசபை சரித்திரத்திலேயே அம்மாதிரி ஒருவரும் கொடுத்ததில்லை. உலக சட்டசபை சரித்திரத்திலேயே இதுவரை யாரும் அம்மாதிரி ஒரே நாளில் 1,000 கேள்விகள் கொடுத்தது கிடையாது. அத்தனை கேள்விகளும் எங்கள் ஜில்லா நிர்வாகத்தைப் பற்றியவை.

**Sri A. GOVINDASAMY**: ஆன் எ பாய்ண்டு ஆப் ஆர்டர், ஸார். நான் ஒழுங்கு பிரச்னை கிளப்புகிறபொழுது கனம் அங்கத்தினர் அவர்கள் ' இவர் என்ன ஒழுங்குப் பிரச்னை கிளப்புவது?' என்று கேட்கிறார்கள். சட்டசபை விதிப்பிரகாரம் ஒழுங்குப் பிரச்னை கிளப்புவதற்கு எனக்கு உரிமை இருக்கிறது. நண்பர் என். ஆர். தியாகராஜன் அவர்கள் தவறாகக் கருத வேண்டாம். சட்டசபையில் கேள்விகள் அனுமதிக்கப்படவில்லை என்று குற்றம் சாட்டுவது சபாநாயகரைப்பற்றி குறிப்பிடுவதாக இருக்கிறது. அம்மாதிரி குறிப்பிடலாமா என்று கேட்கிறேன்.

**Mr. SPEAKER** : என்னைப்பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை.

(எதிர்த் தரப்பிலிருந்து குரல்கள் ' குறிப்பிட்டார் ' 'குறிப்பிட்டார்'.)

**Mr. SPEAKER** : கனம் ஸ்ரீ என். ஆர். தியாகராஜனுக்குத் தனி உரிமை இருக்கிறது.

**Sri N. R. THIAGARAJAN** : கனம் சபாநாயகர் எனக்கு தனி உரிமை இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அதற்காக நான் அவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்த 1,000 கேள்விகளில் 500 கேள்விகள் என் தொகுதியில் உள்ள குறைகளைப் பற்றியது. இதுபற்றி பல முறை அரசாங்கத்திற்கும், கலெக்டருக்கும், பல உத்தியோகஸ்தர்களுக்கும் எழுதி, எழுதி அலுத்துப் போய் தோள்பட்டையெல்லாம் வலி கண்டு விட்டது. அதற்கு மேல்தான் இந்த 500 கேள்விகள் போட்டிருக்கிறேன். பதின்மூன்று வயதிலே நான் கொடி தூக்கியவன். அதிலிருந்து தூக்கிய கொடியை தாழ்த்தியதில்லை. ஆயிரத்து இருநூறு சதுர மைல் விஸ்தீரணம் உள்ள பெரிய குளம் தாலூகாவைப்பற்றி 300 கேள்விகள். மதுரை ஜில்லாவைப் பற்றியது 200 கேள்விகள்........

**Mr. SPEAKER** : அதிலே முக்கால்வாசி கேள்விகள் 'அவுட் ஆப் ஆர்டர்'

**Sri N. R. THIAGARAJAN** : கேள்விகளெல்லாம் மக்கள் நலனைப் பற்றியது. அங்குள்ள அதிகாரிகள் இவைகளையெல்லாம் சரியாக கவனிப்பதாகத் தெரியவில்லை. நான் கொடுத்திருக்கிற கேள்விகளையெல்லாம் பரிசீலனை செய்து பார்த்து, எவை நியாயமாகச் செய்ய வேண்டுமோ அவற்றையெல்லாம் செய்ய வேண்டும் என்று நான் கனம் சபாநாயகர் அவர்கள் மூலமாக கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். அமைச்சர் அவர்கள் எத்தனையோ சமயங்களிலே பதில் சொல்லும்பொழுது சிரித்து விடுகிறார், அல்லது சிரிக்கும்படியான பதிலை சொல்லிவிட்டுப் போகிறார்.

10-30 a.m.

இது நியாயமல்ல. நாங்கள் இங்கே விஷயங்களை எடுத்துச் சொல்லும்பொழுது, அவைகள் சரிதானா என்று பார்க்க வேண்டும். அங்கத்தினர்கள் கூறுவதை எழுதி வைத்துக் கொள்ள வேண்டும். டிஸ்டிரிக்ட் அட்மினிஸ்டிரேஷன் சம்பந்தப்பட்ட வரையில் அவற்றை கலெக்டருக்குத் தெரிவிக்க வேண்டும். என்னைக் காட்டிலும் அவர் அனுபவசாலியாக இருக்கலாம். ஜஸ்டிஸ் பார்டியிலே பார்லிமெண்டரி செகரடரியாக இருந்திருக்



கிறார். இந்த மந்திரி சபையிலே அதிக அனுபவம் பெற்றவர் அவர்தான் என்று சிலர் சொல்லுகிறார்கள். நான் அதற்கு நேர்மாறான அபிப்பிராயத்தை வைத்திருக்கிறேன். என்னுடைய ஜில்லா நிர்வாகத்தை சரியாகக் கவனிக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய அனுபவத்திலிருந்து சொல்லுகிறேன். ஜில்லா போர்டு நிர்வாகத்தை நான் கவனித்திருக்கிறேன். ஒரு ரெஜிஸ்டர் போட்டு ஒவ்வொரு அங்கத்தினருக்கும் ஒரு பக்கம் போட்டிருந்தேன். ஏதாவது ஒரு இண்டர்வியூ நடந்தால் அங்கத்தினர் என்ன கூறினாரோ, அதை அவர் பெயர் போட்ட பக்கத்தில் குறித்து வைத்துக் கொள்வேன். பின்னர், நான் குறித்துக்கொண்டதை செய்திருக்கிறேனா என்று பார்ப்பேன். சட்ட பூர்வமாகச் செய்யக்கூடியதாய் இருந்தால் அதைச் செய்து விடுவேன் என்று கூறிவிடுவேன். செய்ய முடியாத காரியமாக இருந்தால், இதை என் சொல்லுகிறீர்கள், விட்டு விடுங்கள் என்று கூறுவேன். அந்தமாதிரி ஒரு முறை இங்கே நடைமுறையில் இல்லை. அங்கத்தினர்கள் இன்று ஒன்று கூறினால் அதை அமைச்சர்கள் நாளையே மறந்து விடுகிறார்கள். நாம் ஏதாவது எழுதினால் அது குவியலோடு குவியலாகப் போய்விடுகிறது. ஒரு ரெஜிஸ்டர் போட்டு அங்கத்தினர்கள் சொல்லுவதை அதிலே எழுதிவைத்துக் கொண்டு ஆராய்ந்து பார்க்க வேண்டும். வரவு செலவுத் திட்டத்திலே 90 கோடி ரூபாய் செலவு செய்கிறோம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே ஆண்டுக்கு 90 கோடி ரூபாய் செலவு செய்யப் போகிறோம். மொத்தம் 180 கோடி ஆகிறது. இப்படி 180 கோடி ரூபாய் செலவு செய்யும்பொழுது ஒரு தொகுதிக்கு 10 லட்சம் அல்லது குறைந்தபட்சம் ஒரு லட்சம் என்றாவது ஒதுக்கி வைத்து, அந்தத் தொகுதியிலுள்ள பெரும்பாலான மக்கள் என்ன குறை கூறுகிறார்கள் என்று பார்த்தால் என்ன ? அதைக்கூடச் செய்வது இல்லை.

அடுத்தபடியாக, ஜமீன்தாரிப் பகுதிகளை எடுத்துக் கொண்டால் கண்டமநாயக்கனூர் ஜமீனில் 64 கிராமங்கள் இருக்கின்றன. என்னுடைய தொகுதியிலே மூன்று ஜமீன்கள் இருக்கின்றன. மொத்த ஜனத் தொகையில் 75 அல்லது 80 சதவிகிதம் ஜமீன் பகுதிகளிலே வாழ்கிறார்கள். உலகம் தோன்றிய நாள் முதல் இன்று வரையில் எந்தவிதமான முன்னேற்றத்துக்கும் வழியில்லாமல், ரோடு வசதி, பள்ளிக்கூட வசதி, குடி தண்ணீர் வசதி இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். படுமோசமான நிலையிலே அவர்கள் வாழ்கிறார்கள். பட்ஜெட்டிலே எக்ஸ் ஜமீந்தாரி ஏரியாவுக்கு ஏதேனும் செய்யப் போகிறோம் என்று சர்க்கார் சொல்லியிருந்தால், அதை வாழ்த்தியிருக்கலாம். ஆனால் அப்படி ஒன்றும் சொல்லப்படவில்லை. ஜமீந்தாரிப் பகுதிகளை அதிகமாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சுயநலம் என்று வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளுங்கள். என் சொந்தக் குறையைக் கூறுகிறேன் என்று சொன்னாலும் கூட ஆட்சேபணை இல்லை. நான் உள்ளதை உள்ளபடிக் கூறுகிறேன். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் என் பாட்டனார் ஒரு கண்மாயை வாங்கினார். அறுபத்தைந்து ஏக்கர் நிலம். ஒரு லட்சம் ரூபாய்க்கு மரம் இருக்கிறது. அந்த நிலத்தில் சர்க்கார் பிரவேசித்து, தன்னுடையது என்று கூறிவிட்டது. அமைச்சர் அவர்களிடம் பத்திரங்களைக் காண்பித்துச் சொன்னேன். அதற்கு, அமைச்சர் அவர்கள் " கோர்ட்டுக்குப் போங்கள் " என்று பதில் எழுதியிருக்கிறார்கள். வாஸ்தவமாக அமைச்சருடைய ஊர் என்னுடைய ஊருக்குப் பக்கத்திலே இருக்குமானால், அவருடைய நிலத்தை ஆக்கிரமித்துக்கொண்டு, " நீங்கள் கோர்ட்டுக்குப் போங்கள் " என்று சொல்லி இருப்பேன். இப்படி எழுதுவதில் ஏதாவது அர்த்தம் இருக்கிறதா ?

**Mr. SPEAKER** : உங்கள் சொந்த விஷயத்தைப் பற்றி சட்டசபையிலே சொல்வது நல்லதல்ல. உங்களுடைய சொந்த நிலத்தைப்பற்றிப் பேசுகிறீர்கள். இன்னொருவருடைய நிலத்தைப்பற்றிப் பேசலாம்.

**SRI N. R. THIAGARAJAN** : என்னிடம் ஏமாத்துகிற வேலை கிடையாது. நான் ஊருக்காக உழைக்கிறவன். என்னுடைய சொந்த விஷயத்தை எடுத்துச் சொன்னால் தானே புரியும். சாத்தூர் தொகுதியிலே உள்ள எனக்குச் சொந்தமான கண்மாயை எடுத்துக்கொண்டு விட்டார்கள். எம்.எல்.ஏ. என்பதற்காக ஒரு லட்சம் ரூபாய் சொத்தையா எடுத்துக்கொள்ள வேண்டும் ? தேனியிலே பல கண்மாய்களைப் பலர் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். ரெவின்யூ டிபார்ட்மெண்ட் அதிகாரிகள் அதையெல்லாம் விட்டுவிட்டார்கள். எங்கள் குடும்பத்திற்குச் சொந்தமான கண்மாய். பதினான்கு பேருக்குப் பாத்தியப்பட்டது. ஒரு எம்.எல்.ஏ.யின் கண்மாயையா சர்க்கார் எடுத்துக்கொள்ள வேண்டும் ? எடுத்ததெற்கெல்லாம் கோர்ட்டுக்குப் போய்ச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் இங்கு 206 பேர்கள் வர வேண்டிய அவசியமே இல்லை.

**THE HON. SRI M. A. MANICKAVELU** : இந்த ஜமீன் எஸ்டேட்டுகளுக்கு எல்லாம் விதிகள் இருக்கின்றன. விதிகளுக்கு உட்பட்டால் அந்த அளவுக்கு உட்பட்டு அரசாங்கம் செய்ய முடியும். அதற்கு மேற்பட்டால் கோர்ட் துவாராகப் போக வேண்டும். அதற்கு ஆத்திரப்பட்டால் என்ன செய்ய முடியும்?

**MR. SPEAKER** : என்னுடைய சொந்த அனுபவத்திலிருந்து சொல்லுகிறேன். நல்ல சுமுகமான முறையில் போனால் வேலை நடக்கிறது. யாரையாவது திட்டினால் வேலை நடக்காது. (சிரிப்பு).

**SRI N. R. THIAGARAJAN** : காக்காய் பிடிக்கிற வேலை எனக்குத் தெரியாது. அது என்னுடைய வாழ்க்கையிலே என்றுமே கிடையாது. காக்காய் பிடித்து காரியம் சாதிக்கவேண்டுமென்ற எண்ணம் எனக்குக் கிடையாது. உள்ளதை உள்ளபடி சொல்லுவேன். என்னுடைய கண்மாயை எடுத்துக்கொண்டார்களே, ராஜ்யத்திலுள்ள எல்லாக் கண்மாய்களையும் எடுத்துக் கொள்வதுதானே ? தேனித் தொகுதியிலே ஒரு கண்மாயை ஒருவர் சொந்தமாக வைத்துக் கொண்டிருக்கிறார். அவருடைய கண்மாயை என் எடுத்துக் கொள்ளவில்லை ? ஏன் பாரபட்சம் காட்டுகிறார்கள் ? எல்லோரிடமும் சமமாக நடந்துகொள்வது தானே ? இதைப் போன்று பொது மக்களுக்கு இடைஞ்சல்கள் செய்யக் கூடிய நிர்வாகத்தை நல்ல முறையிலே நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன்.

**SRI K. R. VISWANATHAN** : அவைத் தலைவர் அவர்களே, இந்த நில வருவாய் மான்யக் கோரிக்கையையும், மற்ற கோரிக்கைகளையும் ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த மான்யக் கோரிக்கையைக் கொண்டு வந்திருக்கும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சென்ற 10 ஆண்டுகளாக இந்த வருவாய்த் துறையை ஏற்றுக் கொண்டு, மிகச் சிறந்த முறையிலே, இந்த இலாகாவை நடத்தி வருவதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. நில உடைமைக் கொள்கையிலே மிகப் புரட்சிகரமான மாறுதல்களைக் கொண்ட பல சட்டங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள். பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம், நில வாரச் சட்டம், உச்ச வரம்புச் சட்டம் போன்ற ஏழை மக்களுக்கு நன்மை அளிக்கக் கூடிய பல சட்டங்களைக் கொண்டுவந்து, இந்த சட்ட சபையிலே நிறைவேற்றி, நிலச் சீர்திருத்தம் செய்திருப்பதற்கு அவர்களை நாமெல்லோரும் பாராட்டவேண்டி யிருக்கிறது. சில விஷயங்களிலே குறைகள் இருக்கலாம். ஆனால் பெரும்பாலான ஏழை மக்களுக்கு அவர்கள் அளித்துள்ள நன்மையை தமிழ்நாடு என்றும் மறக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



பத்திரப் பதிவு இலாகாவைப் பற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தாலூக்காவிலே செந்துறை என்ற இடத்திலே ஒரு பத்திரப் பதிவு அலுவலகம் வைக்க வேண்டுமென்று 1953-லேயே ஒரு வேண்டுகோள் செய்யப்பட்டது. மகசர்கள் கொடுக்கப்பட்டன. அரசாங்கத்தால் பரிசீலனை செய்யப்பட்டது. இலாகா தலைவரால் பரிசீலனை செய்யப்பட்டு அரசாங்கத்திற்கு சிபார்சு செய்யப்பட்டது. அப்பொழுது எங்கே பார்த்தாலும் திட்ட வேலைகள் அவசரமாகச் செய்ய வேண்டியிருந்ததன் காரணமாக, அந்த ஆவணப் பதிவகத்திற்கு அவசரம் இல்லை என்று ஒத்தி வைக்கப்பட்டது. இதை 10 வருஷமாகவே ஒத்திப் போட்டுக் கொண்டு போகிறார்கள் என்பதை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இப்பொழுது மற்ற இடங்களிலுள்ள அலுவலகங்களுக்கு 20 மைல் இரயில் அல்லது 'பஸ்' இல்லாத பாதையில் செல்லவேண்டியிருக்கிறது. உடனடியாக செந்துறையில் ஒரு ஆவணப் பதிவகம் ஏற்படுத்த வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் வருவாய்த் துறையிலே கிராமாதிகாரிகள் அடித்தளத்திலே இருக்கிறார்கள். அவர்களுடைய நிலைமை பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். இன்னும் முடிவு எடுத்தபாடு இல்லை. முழு நேர ஊழியர்களா அல்லது பகுதி நேர ஊழியர்களா என்ற முடிவு விரைவில் எடுக்க வேண்டும். பகுதி நேர வேலை என்று சொன்னால் அவர்களுக்கு எந்த விதத்திலே சலுகைகள் இருக்கின்றன என்று கேட்கிறேன். பகுதி நேர வேலை என்று ஏற்றுக்கொண்டாலும், அவர்கள் தேர்தலில் நிற்க முடியாது, வேறு அலுவல்களை ஏற்றுக் கொள்ள முடியாது. இப்படி பல கட்டுப்பாடுகள் இருக்கின்றன. அவர்களுக்குப் போதிய ஊதியம் கிடையாது. இத்தகைய கஷ்டங்களை அவர்கள் எத்தனை நாட்களுக்கு அனுபவிக்க முடியும் ?

அந்தக் காலத்தில் இருந்திருக்கலாம், கிராமத்திலுள்ள பெரிய பணக்காரர்கள் கிராம அதிகாரிகளாக வந்தவர்கள் என்ற நிலை. ஆனால் இன்றைக்கு சமுதாயத்தில் ஏற்பட்டுவரும் மாறுதல்கள் காரணமாக, கிராம முன்சீப், கர்ணம் பதவிகளுக்கு கிராமத்தில் உயர்ந்த நிலையில் இருப்பவர்கள் வருவதில்லை. ஆகவே அரசாங்கம் வெகு சீக்கிரத்திலேயே இந்த கிராம உத்தியோகஸ்தர் வேலையை அது பகுதி நேரமா அல்லது முழுநேரமா என்று வரையறுக்கப்பட வேண்டும். மாவட்டத்தில் இன்றைக்கு எல்லா வேலைகளையும் கலெக்டரிடம் கொடுத்திருக்கிறார்கள். ஜில்லாவில் எந்த வேலையானாலும், கலெக்டர்தான் பொறுப்பாளி. அதே போல கிராம மட்டத்திலே எல்லா வேலைகளுக்கும் இந்த கிராம அதிகாரிகளே பொறுப்பாக்கப்படுகிறார்கள். அவர்கள் வேலை இன்னது என்று வரையறுக்கப்படவில்லை. எந்த இலாகா வேலையானாலும் இவர்களே செய்ய வேண்டியிருக்கிறது. கிராம அதிகாரிகளின் வேலை வரையறுக்கப்படவேண்டும் ; அவர்களுடைய ஊதியம் வரையறுக்கப்படவேண்டும் ; அவர்களுடைய வேலை நேரமும் வரையறுக்கப்படவேண்டும். அப்படிச் செய்யாதலால் எத்தனையோ ஊழல்கள் நடக்கின்றன. இவற்றை வரையறுத்தால்தான் கிராமத்தையே சீர்திருத்த முடியும்.

இந்த அரசாங்க அதிகாரிகளுக்கு சமீப காலத்தில் ஊதிய உயர்வு அளிக்கப்பட்டது. அது சிறிதளவுக்கு அவர்களுக்கும் திருப்தி அளித்திருக்கிறது. மன நிறைவு ஏற்பட்டிருக்கிறது. அதோடு இந்த சமயத்தில் அரசாங்கம் செய்ய வேண்டிய கடமையும் ஒன்று இருக்கிறது. நாம் அறிவோம், 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை மக்கள் எண்ணிக்கையை, census எடுக்கிறோம். நான் ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். அதே மாதிரி 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை வேறொன்றும் செய்ய வேண்டும். மக்கள் எண்ணிக்கை பெருகப் பெருக அரசாங்க அலுவல்களும் அதிகரிக்கிறது. ஆனால் அம்மாதிரி அலுவல்களுக்குத் தக்கவாறு அதிகாரிகளின் எண்

ணிக்கை உயர்கிறதில்லை. பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறை எடுக்கப்படும் கணக்கிலிருந்து எப்பொழுது அதிக அலுவல்கள் அதிக மடங்கு பெருகி யிருக்கிறது என்று தெரிகிறதோ அப்பொழுது அதிகாரிகளின் எண்ணிக் கையையும் அதிகரிக்க வேண்டும். இன்றைக்கு உயர் மட்டத்திலே, கொஞ்சம் அதிகமாக இருக்கிறார்கள் என்பது உண்மையே. மாவட்ட கலெக்டர் களுக்கு, உதவியாக, துணை அதிகாரிகள், பி.ஏ. என்றும் D.R.O. என்றும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால், கீழ் மட்டத்தில் வேலை அதிகரித் திருப்பதற்குத்தக்க அதிகாரிகள் அதிகம் இல்லை. அந்த அடிப்படையிலும் அதிகமாக அதிகாரிகளை நியமிக்கவேண்டும். . . . . . . . .

**Sri M. A. B. ARUMUGASWAMI** : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மானியங்களை ஆதரித்து பேச இந்தச் சந்தர்ப்பம் கொடுத்ததற்கு நன்றி தெரிவித்துக் கொண்டு இந்தச் சந்தர்ப்பத்திலே, என்னுடைய தொகுதியிலுள்ள குறைகளையும் செய்ய வேண்டிய வேலைகளையும் பற்றி குறிப்பிட விரும்பு கிறேன். இன்றைக்கு நம் சர்க்கார் இனாம்களையும், ஜமீந்தார்களையும், ஒழித்துக் கட்டினார்கள். ஆனால், ஜமீன்களை ஒழித்துக் கட்டிவிட்டு ஜமீன் பிரதேசங்களில் செய்ய வேண்டிய காரியங்களை மேற்கொள்ளவில்லை. ஜமீன் பிரதேசங்கள் ஜமீன் நிர்வாகத்தில் இருந்த காலத்தில் மிகவும் பின் தங்கிய பிரதேசங்களாக இருந்தன. எந்த வேலையும் நடக்காமல் இருந் தது. ஆனால் என்னுடைய தொகுதியான கன்னிவாடி ஜமீன், ஜமீன் நிர்வாகத்தில் இருந்த காலத்திலேயே, அங்கு மலையில் உற்பத்தியாகும் ஆறுகளில் ஓடும் தண்ணீரை அணைக்கட்டித் தேக்கி பாசன வசதி கொடுக்க, அந்த மலைக் கிராமங்களுக்கு உதவ இரண்டொரு திட்டங்களை ஜமீன் காலத் திலேயே உத்தேசித்திருந்தார்கள். இன்றைக்கு ஜமீன்களை ஒழித்திருக்கும் இந்த மாநில சர்க்கார் அந்த திட்டங்களை மேற்கொள்ள வேண்டும் என்று பல சந்தர்ப்பங்களிலே எடுத்துச் சொல்லி வந்திருக்கிறோம். என்னுடைய தொகுதியில் 4, 5 மலை கிராமங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. மலை கிராமங்களில் வாழ்பவர்கள் பெரும்பாலும் ஆதி வாசிகள். நிலச் சொந் தக்காரர்களும் அங்கே வசிக்காமல் நாட்டுப் புறத்தில் தான் வசிக்கிறார்கள். இந்த ஆதி வாசிகளுக்கு உதவி செய்யும் திட்டமாகவாவது நினைத்துக் கொண்டு அங்கே ரோடு வசதி செய்வது மிகவும் அவசியம். சுமார் 10 ஆண்டு களுக்கு முன்னால், இந்தப் பகுதி ஜில்லா போர்ட் நிர்வாகத்தில் இருந்த போது, என் தொகுதியில் (பாய்ச்சலூர்) பன்னப்பட்டி—பாய்ச்சலூர் ரோட்டை அமைக்க ஜில்லா போர்டில் தீர்மானித்திருந்தார்கள். ஆனால் அந்த ரோட் டைப் பற்றி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அங்குள்ள ஆதி வாசிகளும், பொது மக்களும் சர்க்காரால் ஒரு விதமான நன்மையும் அடையவில்லை என்று பெரும் குறைபடுகிறார்கள். அவர்களுடைய குறை களை நிவர்த்திக்க, மலை கிராமங்கள், அதிலும் ஜமீன் நிர்வாகத்தில் இருந்த கிராமங்கள் என்று ஒரு சலுகை காட்டி, அந்த கிராமங்களுக்கு நான் குறிப்பிட்ட சாலையை அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

என் தொகுதியிலுள்ள காட்டுக்குத் தகுதியில்லாதவைகளை மலையடிவாரங் களில் வசிப்பவர்கள் மிகவும் பின் தங்கிய வகுப்பினர்கள் அங்குள்ள நிலங்களில் கூலிகள் கிடைக்காத காலத்தில் தங்கள் குடும்பத்தாரை வைத்துக் கொண்டே தாங்களோகவே இரண்டு, மூன்று ஏக்கர்கள் வெட்டிப் பயிர் செய்து தீர்வை மட்டும் செலுத்தி வந்திருக்கிறார்கள். ஆனால், அந்தக் காலத்தில் அவர்களுக்கு நிலங்களை பட்டா செய்து கொள்ள வேண்டும் என்று முயற்சி எடுக்கத் தெரியவில்லை. ஜமீன் ஒழிப்பிற்குப் பிறகு, காட்டிலாகா அதிகாரிகள், ரெவின்யூ அதிகாரிகள் அவர்களை அப்புறப்படுத்த நிர்ப்பந்திக் கிறார்கள். அதைப் பற்றி அமைச்சரவர்களிடம் அடிக்கடி எடுத்துச் சொல்லி



வந்திருக்கிறேன். செட்டில்மெண்ட் ஆகும் வரையிலாவது நிர்ப்பந்தம் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளு கிறேன். அந்த நிலங்கள் காடு வளர்ப்பதற்கோ மற்றதற்கோ தேவை இல்லாதவை. ஆகவே, அவற்றை மிகவும் பிற்போக்குள்ள சமூகத்திலுள்ள அம்மக்களுக்கு பட்டா செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பத்திரப் பதிவு மானியம் சம்பந்தப்பட்ட வரை, நான் ஏற்கனவே சொன்னது போல் என் தொகுதி மலைக் கிராமங்கள் நிறைந்தவை. நிலச் சொந்தக்காரர்களும் ஐயம்பாளையம், பட்டிவீரன்பட்டி போன்ற கிராமங்களில்தான் வசிக்கிறார்கள். அவர்கள் தங்கள் நிலங்களை விற்க வோ, ஈடு செய்யவோ, ஒத்தி வைக்கவோ வேண்டு மென்றால், ஐயம் பாளையம் பட்டிவீரன்பட்டியிலிருந்து 50, 60, மைலுக்கு மேல் சென்று பத்திரப் பதிவு செய்ய வேண்டியிருக்கிறது. அதே கிராமங்களில் உள்ளவர்களுக்கு பஸ் போக்குவரத்து வசதிகளும் கிடையாது. 16, 17 மைல் வரை நடந்தே சென்று பத்திரப்பதிவு செய்ய வேண்டியிருக்கிறது. சத்திரப்பட்டி, வத்தலகுண்டு, ஆத்தூர் பத்திரப் பதிவு ஆபீசுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. வருஷம் ஒன்றுக்கு 1,400, 1,500 பத்திரங்கள் வரை பதிவாகக் கூடிய கணக்கு இருக்கிறது. சுமார் 1,000 பதிவு செய்யும் வாய்ப்பு இருந்தாலும் ஒரு தனி சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ் ஏற்படுத்தலாம் என்று அறிகிறேன். இங்கே 1,500 பத்திரங்கள் வரை பதிவாகின்றன. அப்படியிருந்தும் அங்கே ஒரு தனி ஆபீஸ் இல்லை. இந்த வருஷத்திலாவது என்னுடைய சொந்த ஊரான மதுரை ஜில்லா ஐயம்பாளையத்தில் ஒரு பத்திரப் பதிவு ஆபீஸ் ஏற்படுத்த முயற்சிகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதன் மூலமாக பொது மக்களுக்கு மட்டுமல்ல. விவசாயிகளுக்கும் இது பெரிதும் உதவியாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக ஜில்லா நிர்வாகம் என்ற தலைப்பில் நான் சில வார்த்தைகள் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். என்னுடைய மதுரை ஜில்லாவில் உள்ள சமுதாய நலத் திட்டப் பகுதிகளைப் பற்றியது. ஏற்கனவே எங்கள் தொகுதியான ஆத்தூர் பிர்க்கா சமுதாய நலதிட்டப்பகுதி ஒன்று இருந்தது. அப்புறம் அதை ஆத்தூர்–1, ஆத்தூர்–2, என்று பிரிக்கப் பட்டது. அப்படிப் பிரிக்கப்பட்ட நேரத்தில் ஆத்தூர்-2-க்கு தலைமைக் காரியாலயம் எங்கு ஏற்படுத்துவது என்பது பற்றிய வாதம் ஜில்லா அபி விருத்திக் கவுன்ஸிலிலேயே வந்தது. கலெக்டர் சொன்ன ஊரை ஒத்துக் கொள்ளவில்லை என்பதற்காக தலைமைக் காரியாலயம் எங்கே ஏற்படவேண் டும் என்பது தீர்மானித்து, அந்த இடத்திலே கட்டிடம் கட்டுவதற்கு ஊரின் அருகாமையில் நிலம் இனாமாகத் தருவதாக வாக்கு அளித்திருந்த போதிலும் கூட அந்த இடத்திற்கு ஒரு மைல் அப்பால், ஒரு தனிப்பட்ட வருக்குச் சலுகை காட்ட வேண்டும் என்கிற நோக்கத்துடனேயே அங்கே கட்டிடம் கட்டுவதற்கு உத்திரவிட்டிருப்பதாகத் தெரிகிறது. இப்படிச் செய் வதால் அந்தத் தொகுதியில் உள்ள மக்களுக்கு, குறிப்பாக அந்த வட்டாரத்தில் உள்ள மக்களுக்கு—ஒரு தனிப்பட்டவருக்கு சலுகை காட்ட வேண்டும் என்பதற்காக என் பொதுமக்களுக்கு கஷ்டத்தை விளைவிக்கும் காரியத்தைச் செய்கிறார்கள் என்று அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. இதைப் பற்றி நன்றாக விசாரித்து இப்படிப்பட்ட காரியங்கள் நடைபெறாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

**Sri V. K. KOTHANDARAMAN.** : கனம் அமைச்சர் அவர்கள் கோரியிருக்கும்படியான மானியத்திற்கு பிரேரிக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்துப் பேச விரும்புகிறேன். நமக்கு முன்னால் இருக்கக் கூடிய ரெவின்யூ இலாகா சம்பந்தப்பட்ட பிரச்சனைகளைப் பற்றி

பலர் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் உள்பட, எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் அவ்வளவு பேர்களுமே அதில் இருக்கக் கூடிய குறைபாடுகளை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ரெவின்யூ இலாகாவின் நிர்வாகத்திற்கு என்று ஸ்டாண்டிங் ஆர்டர் ஆப் ரெவின்யூ போர்டு என்று வெள்ளைக்காரன் காலத்திலேயே சில சட்டதிட்டங்கள் வகுக்கப்பட்டன. அதில் கொஞ்சம் கூட மாறுதல் செய்யப்படாமல் இப்போதும் இருக்கிறது என்று நினைக்கிறேன். அது எப்படி இருக்கிறதென்றால் அர்த்தநாரீஸ்வரர் என்று சொல்வார்களே ஒரு பக்கம் பார்த்தால் ஆண் மாதிரியும், ஒரு பக்கம் பார்த்தால் பெண் மாதிரியும் சேர்த்துப் பார்க்கிறபோது இரண்டு உருவமும் தெரிகிறது போல இன்றைக்கு இந்த ஸ்டாண்டிங் ஆர்டர் வேண்டிய போது வேண்டியபடி அமுல் செய்துகொள்வதற்கு உதவியாக இருக்கிறது. அதிகாரிகள் எப்படியெல்லாம் நினைக்கிறார்களோ அப்படியெல்லாம் வியாக்யானம் செய்துகொள்ளத்தான் பயன்படுகிறது. குறிப்பாக திட்டவட்டமான மாறுதல்கள் அந்த ஸ்டாண்டிங் ஆர்டரில் செய்யப்படாவிட்டால் ஏழை மக்களுக்கோ, ஹரிஜனங்களுக்கோ ஒன்றுமே நலம் செய்ய முடியாது. இன்றைக்கு உள்ள சிக்கல்களினால் அதிகாரிகள் தவறே செய்யவில்லை என்று சொல்ல முடியாது. அப்படித் தவறு செய்கிறவர்கள் பேரிலே கூட கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியாத வகையில் சர்க்காருடைய கொள்கைகள் இருப்பதனால் இதுபோன்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறதென்று எடுத்துக் காட்ட ஆசைப்படுகிறேன். இப்போது ஹரிஜன மக்களுக்கு வீடு மனை கொடுக்கிற விஷயத்தில் கிராமத்திலே இருக்கக்கூடிய பஞ்சாயத்து அதிகாரிகள் மாத்திரம் அல்ல—ஹெல்த் இன்ஸ்பெக்டர்கள் குறுக்கே நிற்கக் கூடிய நிலைமை இருக்கிறது. இந்த ரெவின்யூ இலாகாவுக்கும், போலீஸ் இலாகாவுக்கும் கூட ஒரு சில இடங்களில் தொடர்பு இருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. காரணம் குறிப்பாக பல ஆண்டுகளாக சர்க்கார் புறம்போக்கு நிலத்தைப் பயன்படுத்தி, விவசாயம் செய்து கொண்டுவந்த நிலமில்லாத ஏழை ஹரிஜனங்களுக்கு—அவர்களுடைய கோரிக்கையின் பேரில் அவர்களுக்கே அந்த நிலங்களைப் பட்டா செய்து கொடுக்கவேண்டியது இருக்க, அவர்களை நிலத்தில் இருந்து வெளியேறுமாறு நோட்டீஸ் கொடுத்து, அதை மீறுகிறவர்கள் பேரில் சண்டியன், திருடியன் எனக் கேஸ் போட்டு பலாத்காரமாக அவர்களை நிலத்தில் இருந்து வெளியேற்றி— பிறகு உடனே அந்த நிலங்களை ரெவின்யூ இலாகாவில் உள்ளவர்களின் உறவினர்களுக்கு, அல்லது போலீஸ் இலாகாவில் உள்ளவர்களின் உறவினர்களுக்கு—இவர்களுக்குக்கொடுக்கக்கூடாது என்று நான் சொல்லவில்லை—ஏற்கனவே அந்த நிலத்தில் இருந்தவர்களை வெளியேற்றிவிட்டுக் கொடுத்திருக்கிறார்கள். உதாரணத்திற்கு வேண்டுமானால் சொல்வேன். பவானி தாலூக்கா, சத்யமங்கலம் பிர்க்காவில் நடந்திருக்கிறது. இது சம்பந்தமாக அதிகாரிகளுக்கும் பல மனுக்கள் எழுதப்பட்டிருக்கின்றன. இதுவரையில் அவ்விஷயத்தைக் கவனிக்க முடியாத அளவுக்கு நிலைமை இருக்கிறது.

இன்றைக்கு பஞ்சாயத்து நிலம் வேண்டுமென்று கேட்ட போதிலும் பல ஆண்டு காலமாக நிலம் ஜாரி செய்து கொடுக்கப்படாமல் இருக்கிறது. திருநெல்வேலி ஜில்லாவில் வெள்ளூர் பஞ்சாயத்து போர்டு, பஸ் ஸ்டாண்டு கட்டுவதற்காக நிலம் ஆர்ஜிதம் செய்து தரவேண்டுமென்று பல வருஷங்களுக்கு முன்பாகவே கோரியிருக்கிறது. ஆனால் இன்னும் ஜாரி செய்து கொடுக்கப்படவில்லை. குடியாத்தம் தாலுக்காவில் மாட்டம்பட்டி கிராமத்தில் ரோடு போடுவதற்காக நிலம் ஆர்ஜிதம் செய்து தரவேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். ஆனால் இதுவரையில் இப்படி பொதுக்காரியங்களுக்காக கோரப்படுகிறபோது ரெவின்யூ இலாகா தனிப்பட்டவர்களுடைய நிலத்தை ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை எடுக்க முடியாத அளவுக்கு நிலைமை இருக்கிறது.





ஹரிஜனங்களுக்காக வென்றே ஒதுக்கப்பட்ட டி.ஸி. புறம்போக்கு நிலம் இருக்கிறது. அந்த நிலங்களைக்கூட உயர்ந்த சாதிக்காரர்களுக்குக் கொடுத்து அவர்கள் விவசாயம் செய்துகொண்டிருக்கிறார்கள். ஹரிஜனங்கள் கேட்டபோதிலும் கூட அவர்களுக்கு அந்த நிலங்கள் கொடுக்கப்படவில்லை. இது விஷயமாகக் கூட பல மனுக்கள் சர்க்காருக்கு எழுதப்பட்டிருக்கின்றன. இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று குறிப்பிட ஆசைப்படுகிறேன். இதையெல்லாம் நல்ல முறையில் மாற்றித் திருத்தக்கூடிய அளவுக்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். அதேபோன்று பட்டா செய்வதற்கு நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கான மனுக்கள் வரக் கூடிய நேரத்தில் ஒரு கிளார்க்கைப் போட்டுவிட்டால் அவர் என்ன செய்வார்? ஒரு நாள் பூரா வேலை செய்தாலும் கூட இரண்டு பட்டாதான் எழுத முடிகிறது. அதுவும் பக்கம் பக்கமாக எழுதவேண்டியிருக்கிறது என்று காரணம் காட்டக்கூடிய நிலைமை தான் இருக்கிறது. ஆகவே இங்கெல்லாம் வேலையைத் துரிதமாகச் செய்வதற்கு அதிக சிப்பந்திகளைப் போடவேண்டுமென்றால் கூடப் போடுவதற்கு சர்க்கார் முன்வர வேண்டும். அதேமாதிரி ரெவின்யூ போர்டு ஸ்டாண்டிங் ஆர்டரை உடனடியாகத் திருத்தி மாற்றி அமைப்பதற்கும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும்.

இந்தச் சட்டம் வருவதற்கு முன்னால் யார் யார் விவசாயம் செய்து 12 noon.
கொண்டிருந்தார்களோ அவர்கள் பேரில் அந்த நிலத்தை பட்டா செய்து கொடுக்கவேண்டியது அவசியம் என்றளவில் உத்தரவு இடவேண்டும். குடியாத்தம் தாலூகாவில் தர்மர்தோப்பு என்பது பழைய காலத் தோப்பு. அங்கு 50 ஏக்கர் நிலத்தை ஒரு மோட்டார் மன்னர் 14,000-க்கு வாங்கியிருக்கிறார்கள். அது சம்பந்தப்பட்ட பேப்பர் என்னவாயிற்று என்று தெரியவில்லை. அதை சரியாக்கிவிட்டார்கள் என்று சொல்கிறார்கள். இது விஷயமாகவும் கவனிக்கவேண்டும். பின்னர், ஸ்டாம்ப்ஸ் அட்மினிஸ்ட்ரேஷன். ஏழை மக்கள் மனு செய்யவேண்டுமென்றால், எட்டணா, ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் ஸ்டாம்ப் ஒட்டவேண்டுமென்றால் அவர்களுக்கு கஷ்டமாக இருக்கிறது, ஆகவே குறைந்தபட்சம் 100 ரூபாய்க்குள் வருமானம் இருக்கக் கூடியவர்களையாவது, அவர்களுக்கு இதிலிருந்து விதிவிலக்கு அளிக்கவேண்டும். பின், பஞ்சாயத்து கணக்குகளை ஆடிட் செய்ய பஞ்சாயத்து அதிகாரிகள் கையில் ஒப்படைக்கப்பட்டிருப்பது கூடாது. தனியாக ஆடிட்டர்களை நியமிக்க வேண்டும். சம்பளக் கமிஷன் சிபார்சுபடி சம்பளம் பஞ்சாயத்து அதிகாரிகளுக்கு கொடுக்கப்படவில்லை. ஆகவே, இதையும் உடனடியாக கவனித்து கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டும். பின்னர், காம்பன்சேஷன் டு ஜெமீந்தார்ஸ். சர்க்காரை, ஆளும் கட்சியைக் கவிழ்க்கக் கூடிய முறையில் சர்க்காருக்கு நேர் விரோதமாக பணம், காம்பன்ஸேஷன் வாங்கிக்கொண்டு சர்க்காரை எதிர்த்து போராடக்கூடிய அளவிற்கு இன்று நிலைமை இருக்கிறது என்பதை மறந்து விடக்கூடாது. அப்படித்தான் இருக்கிறது, ஜமீன்தாரர்களின், மஹாராஜாக்களின் போக்கு. அதற்காகவேண்டித்தான் காம்பன்சேஷன் கொடுக்கப்படுகிறதா? அதை ஏழை மக்களுக்காக வேண்டி உபயோகப்படுத்தலாம். அவர்களுக்கு காம்பன்சேஷன் கொடுக்காவிட்டால் அவர்கள் கஷ்டப்பட மாட்டார்கள். அதை. 20 ஆண்டுகள் கழித்தும் கொடுக்கலாம். ஆகவே அதை நிறுத்துவது மிகவும் நல்லதாகயிருக்க முடியும் என்று தெரிவித்துக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*SRIMATHI C. KOLANDAI AMMAL : கனம் சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இன்று கொண்டு வந்திருக்கும் மானயக் கோரிக்கையை ஆதரித்து எங்கள் ஜில்லாவைப் பொறுத்த மட்டில் ஒரு சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். கோவை ஜில்லாவைப் பொறுத்த மட்டில், கலெக்டர் ஆபீஸ், மற்ற ஆபீஸ்களில் நல்ல முறையில் நிர்வாகம் நடந்து வருகிறது என்பதை பெரும்பாலான அங்கத்தினர்கள் இந்தச் சபையிலேயே கூறியிருக்கிறார்கள். அதோடு கூட,

தாலூகா ஆபீஸ் போன்ற யிடங்களில் மின்சார விளக்கு, மின்சார விசிறி போன்ற வசதிகள் ஆன்றி, ரெவின்யூ டிப்பார்ட்மெண்டில் வேலை செய்கிறவர்கள் காலவரையறையின்றி வேலை செய்யும்போது, முற்போக்கான இந்த நேரத்தில் கூட அந்த ஆபீஸ்களில் மின்சார விளக்குகள் இல்லாமல் கிராமங்களில் இருக்கக்கூடிய ரெவின்யூ இலாகாவில் வேலை செய்கிறவர்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். அதைச் சீக்கரம் கவனித்து அவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும். கலெக்டர்களுக்கு அதிக வேலையிருக்கிறது என்ற நிமித்தத்தினால் ரெவின்யூ அதிகாரிகளை நியமித்திருக்கிறோம். அப்படி அதிகமாக ஆபீஸர்களை நியமித்தும் கூட கலெக்டர்களுக்கு ஒப்பாக அவர்களை வேலையை ஏற்றுக்கொள்கிறார்களா என்று எண்ணிப்பார்த்தால் அதில் சில தயக்கங்கள் இருக்கின்றன. ஆகவே ரெவின்யூ ஆபீஸர்களுக்கு குறிப்பாக வேலைகளை பங்கிட்டுக் கொடுப்பதோடு கூட அந்த வேலைகளை அவர்கள் தாங்களாகவே செய்து முடிக்கும் சூழ்நிலையை அதிகாரத்தில் கொடுத்தால் தான் முடியும். அதிலும் கலெக்டரை, மாதம் 30 நாட்களில் 25 நாட்களுக்கு எங்களால் பார்க்கவே முடியாது. தங்கள் வேலைகளை கவனிப்பதோடு அவர்கள் வெளி ஊர்களுக்கும் செல்லவேண்டியிருக்கிறது. ஞாயிற்றுக்கிழமை லீவ் என்றாலும் வாரத்தில் இன்னின்ன நாளாவது அவர்கள் ஜில்லா தலைநகரில் இருப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்க வேண்டும். அவர்கள்மாதத்தில் ஒரு சில நாட்கள் இருக்கும்போது நாங்கள் வெளியே வந்து விடுகிறோம். பின்னர், கலெக்டர் ஆபீஸில் போன் இருக்கிறது. ஹரிஜன இலாகா எகப்டட் வேலைகளை செய்து வருகிறார்கள். ஹரிஜன நல இலாகா அதிகாரியோடு பேச வேண்டுமென்றால் கலெக்டர் ஆபீஸிலிருந்து கனெக்ஷன் கொடுக்கிறார்கள். அவர் இருக்கிறார்களா என்று பார்த்து வருகிறோம் என்று சொல்லிப் போய், அதற்குள் கலெக்டர் பேச வேண்டுமென்றால் அந்தக் கனெக்ஷனை டிஸ்கனெக்ட செய்து விடுகிறார்கள். ஆகவே, அவர்களோடு பேச முடிவதில்லை. அவர்கள் இருக்கிறார்களா இல்லையா என்று பார்த்து வரப் போகிறவர்கள் ஒரு மணி நேரம், இரண்டு மணி நேரம் எடுக்கிறார்கள். ஆகவே, ஹரிஜன இலாகா அதிகாரி, கோவாப்பரேடிவ் டிபார்ட்மெண்ட் அதிகாரி இவர்களுக்கு தனி போன் கனெக்ஷன் கொடுக்கவேண்டும். கோவை ஜில்லாவில் உடனடியாக கொடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக, என்.ஜி.ஒ.-க்களுக்கு கொடுக்கப்படுகிற வீட்டு வாடகை அலவன்ஸ் 12 ரூபாய். கோயம்புத்தூரில் 12 ரூபாய்க்கு ஒரு வீடு கிடைக்குமா என்று எண்ணிப் பார்க்கவேண்டும். 50 ரூபாய் கொடுத்தாலும் ஒரு என்.ஜி.ஓ.-க்கு வீடு கிடைப்பதில்லை. டெப்டி கலெக்டர் கிரேடில் உள்ளவர்களுக்கு கூட வீடு கிடைப்பதில்லை. அவர்கள் வந்து ஹோட்டல்களில்தான் தங்குகிறார்கள். அவர்கள் அங்கு தங்கி சாப்பிட்டு, வேலை பார்த்துக்கொண்டு உயிரோடு இருக்கமுடியுமா என்று எண்ணிப்பார்க்க வேண்டும். வேலை செய்தே செத்துப் போய் விடுவார்கள், அதோடு ஹோட்டலில் சாப்பிட்டு ரெவின்யூ இலாகாவிலும் வேலை செய்து கொண்டு அவர்கள் எவ்வளவு நாட்கள் உயிரோடு இருக்கமுடியும். 24 மணி நேரமும் வேலை செய்பவர்களுக்கு வீட்டுக் கஷ்டம் இருக்கக்கூடாது. ஆகவே கோவை ஜில்லாவைப் பொறுத்தவரையில் என்.ஜி.ஓ.-க்களுக்கு வீடுகள் கட்ட பலயிடங்களிலும் நிலம் வாங்கிப் போட்டிருக்கிறார்கள். (Deputy Speaker in the chair) மூன்று வருடங்களுக்கு மேலாகிவிட்டது. ஆனால் வீடுகள் வெற்றிகரமாகக் கட்டிக்கொடுக்கக்கூடிய முறையில் ஏற்பாடுகள் ஆகவில்லை. ஆகவே, சீக்கிரத்தில் அவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். பின்னர், வைத்திய வசதி கொடுக்கப்படுகிறது. அது வரவேற்கத்தக்கது. ஜில்லா ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரிக்குச் சென்று வைத்தியம் செய்து கொள்ள வேண்டுமென்றிருக்கிறது. அங்கு, டாக்டர் குறிப்பிட்டுக் கொடுக்கும் மருந்து ஆஸ்பத்திரியில் இல்லையென்று சொன்னால் மேல் அதிகாரிக்கு எழுதி





பெர்மிஷன் வருகிறபோது மருந்து வாங்கிக்கொள்ளமுடியாது. மருந்து அவசரத்திற்கு வேண்டியதாகும். ஆகவே உண்மையில் டாக்டர் எழுதிக் கொடுத்திருப்பார்களானால் அதற்குரிய பணத்தை உடனே கொடுக்கவேண்டும். அது இங்கு இல்லாவிடில் அதாவது டாக்டர் சர்டிபிக்கேட் கொடுத்தால் அதை உடனே வாங்கி பின் மேல் அதிகாரி உத்தரவு வரும்போது அதைத் திரும்பப் பெற்றுக்கொள்ளக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டும். பின்னர், புறம்போக்கு நிலங்கள், 10, 15 ஆண்டுகளாக ஹரிஜன மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் அங்கு விவசாயம் செய்து கொண்டுவருகிறார்கள். அவர்களுக்கு, அவர்கள் விவசாயம் செய்துகொண்டு வரும் நிலத்தை பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று பல முறை இங்கு வற்புறுத்தியும் கூட அங்கு வீடுகள் கட்டப் போகிறார்கள் என்றெல்லாம் கூறி, அது செய்யப்படவில்லை. தொடர்ந்து பத்து, இருபது வருடங்கள் அவர்கள் அந்நிலத்தில் விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் அந்நிலத்தை அவர்களுக்கே எழுதிக்கொடுக்க யோசனை செய்தாகவேண்டும். அதுபற்றி கேட்டால் போர்டுக்கு எழுதியிருக்கிறோம் என்று சாக்குப் போக்கு சொல்கிறார்கள். இந்த நிலையை சீர்ப்படுத்த வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டும். மிகவும் அவசியமாகயிருக்கிற புறம்போக்கு நிலங்களைத் தவிர மற்றவைகளை நிலமில்லாத ஏழை ஹரிஜன மக்களுக்கு கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பின், என் தொகுதியில் ஹரிஜனங்களுக்கு நிலம் வாங்கிக் கொடுக்கும் திட்டம்பற்றிய பேப்பர் இப்பொழுது போர்ட்டில் இருக்கிறது. கணபதி என்ற கிராமத்தில் 97,000-க்கு வீடுகள் வாங்க அந்தப் பேப்பர் எங்கெங்கு போய் வந்தது என்று சொல்லமுடியாது, அதன் பின்னாலே போயும் கூட இன்னும் பட்டா செய்து கொடுக்க முடியவில்லை. தாமதத்திற்குக் காரணம், நிலம் விற்கிற விலையை விட அதிகமான தொகை, விலை கோர்ட் தீர்ப்புப்படி இருக்கிறது. சூலூர் பிர்க்காவில் தொழில் பண்ணைகள் ஏராளமாக இருப்பதால் அங்கு ஒரு செண்ட் 500 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. அந்தயிடங்களை வாங்கிக் கொடுக்க இன்னும் முடியவில்லை. நான் இந்த சமயத்தில் தெரிவிக்க விரும்புவது அங்குள்ள மக்களின் பிரதிநிதிகளாக வந்திருக்கும் நாங்கள் சொல்வதை நம்ப வேண்டும். செண்ட் 300 முதல் 1,000 வரை விற்கும்போது கோர்ட் கொடுத்திருக்கிற தீர்ப்பை வைத்துக் கொண்டு கவனித்தால் எவ்வளவு பேர்கள் வந்தாலும், என்ன செய்தாலும் முடியாது. ஹரிஜன மக்களுக்கு மனைக்கட்டுகள் வழங்குவதற்கு நிலத்தை சீக்கிரத்தில் ஆர்ஜிதம் செய்து கொடுக்க வேண்டும்.

DEPUTY SPEAKER ; The hon. Member's time is up.

SRIMATHI A. S. PONNAMMAL : கனம் உதவி சபா நாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் மான்யத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். முன்னால் பேசிய பல அங்கத்தினர்கள் நிலச்சீர்த்திருத்தச் சட்டம் கொண்டு வருவதற்கு காலதாமதம் ஏற்படுகிறது, 1962-வது வருடத்திலாவது வருமா என்றும் கேட்டார்கள். இது எப்படியிருக்கிறது என்றால், பணக்காரர்கள் இந்த நாட்டில் இருந்துதான் ஆகவேண்டும், அவர்களுடைய கை ஓங்க வேண்டும், அவர்களுக்கு எந்த விதமான பாதகமும் ஏற்பட்டு விடக் கூடாது என்று சொல்லக்கூடிய சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு இங்கு வந்து ஏழைகளைப்பற்றி பேசுவதைப்பார்த்தால், தொட்டிலில் குழந்தையைப் போட்டுவிட்டு ஒரு கையால் ஆட்டிக்கொண்டு, இன்னொரு கையால் குழந்தையைக் கிள்ளி விடக்கூடிய நிலைமை தான் இருந்து கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பலவித குறைகளைப்பற்றி பல அங்கத்தினர்கள் கூறி விட்டார்கள். வீட்டு வசதி செய்து கொடுக்கும் விஷயத்தில் போலீஸ்காரர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கிறோம். இன்னும் அது போன்று

[Srimathi A. S. Ponnammal] [18th March 1961

பல உத்தியோகஸ்தர்களுக்கும் வீடு கட்டிக்கொடுக்கிறோம். ஆனால் ரெவின்யூ டிப்பார்ட்மெண்ட் அதிகாரிகள் வீட்டு வசதியில்லாமல் பல இடங்களிலும் அவஸ்தைப்படுகிறார்கள். குறிப்பாக மதுரை ஜில்லாவில் அவர்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். இந்தக் குறையை இந்த 1961–62-வருடத்திலாவது நிவர்த்தி செய்து வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக மின்சார வசதி இல்லாத காரணத்தினால் பல இடங்களிலும் பங்கா இழுக்கக்கூடிய நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. அதிலும் இந்த வேலையில் வயதானவர்கள் அதிகமாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சிலவேளைகளில் அசந்து தூங்கிவிடுகிறார்கள். இதைப்பார்த்து விட்டால் அதிகாரி உடனே அவரை டிஸ்மிஸ் செய்துவிடுகிறார்கள். எவ்வளவோ வசதிகள் பெருகிக்கொண்டிருக்கின்ற இந்த காலத்தில் ஒரு மனிதர் உட்கார்ந்து கொண்டு, இன்னொரு மனிதர் பங்கா இழுக்கக்கூடிய இந்த அவல நிலையை நாம் மாற்றியாக வேண்டும். ஆகவே இம்மாதிரிப்பட்ட கேவலமான நிலை இருக்கின்ற இடங்களில் எல்லாம் உடனடியாக மின்சார வசதி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நிலம் ஜாரி செய்து கொடுக்கிற விஷயத்தில், பல கோளாறுகள் ஏற்படுகின்றன. ஒவ்வொரு நாளும் இதற்கென்று நியமித்திருக்கும் ஜில்லா ஆபீஸரிடத்திலும், அக்விஸிஷன் ஆபீஸரிடத்திலும் போக வேண்டியிருக்கிறது. இதற்காக அடிக்கடி அலைந்து கொண்டிருக்கின்ற பரிதாப நிலைமையை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். எங்கள் பக்கத்தில் கண்ணுப்பட்டி என்ற இடத்தில் 32 ஆண்டு காலமாக பயிரிட்டுவந்த செட்டியார் ஒருவருடைய இடத்தை—அவர் தண்டத் தீர்வை செலுத்திய ரசீது, பி. மெமோ ரசீது, இன்னும் என்னவெல்லாமோ ரசீதுகள் வைத்திருந்தும் கூட—காந்தி ஸ்மாரக் சமாஜில் இருக்கக்கூடிய—300 ரூபாய் சம்பளம் வாங்கக் கூடிய ஒரு நபருக்கு அதை பட்டாப்போட்டு கொடுத்துவிட்டார்கள். இதைப்பற்றி அமைச்சர் அவர்களிடத்திலும் சொல்லியிருக்கிறேன் என்று நினைக்கிறேன். இன்னொரு இடத்தில் ஓர் ஏழை ஹரிஜன் 13 ஆண்டு காலமாக அனுபவித்து வந்த இடத்தை ஒரு சினிமா கொட்டகை முதலாளிக்கு பட்டா போட்டுக் கொடுத்துவிட்டார்கள். நல்ல காலமாக அவர் ஒரு காங்கிரஸ்காரராய் இருந்தார். அவரிடத்தில் போய் இந்த இடத்தை 13 ஆண்டு காலமாக வேறு ஒருவர் அனுபவித்து வருகிறார் என்று சொன்னதின் பின்னால் அவரும் திரும்பி அந்த ஏழைக்கே கொடுப்பதற்கு சம்மதித்துவிட்டார். இதை ஏன் சொல்லுகிறேன் என்றால் இம்மாதிரி பல இடங்களில் தினசரி நடந்து கொண்டிருக்கிறது. பல கம்மாப் புறம்போக்கு நிலங்களில் பல ஏழைகள் உழுது பயிரிடுகிறார்கள். பின்னால் அதை பெரிய பணக்காரர்கள் தங்களுக்கு சொந்தமாக்கிவிடுகிறார்கள். அதோடு இம்மாதிரிப்பட்ட இடங்களில் இரண்டு பக்கமும் பெரிய பணக்காரர்கள் உழுதிருப்பார்கள், நடுவில் ஏழை உழுதிருப்பான். இவ்விதம் நடுவில் ஏழை உழும்போது அதில் மட்டும் நீர்கசிவு ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லக் கூடிய அவல நிலை இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே இம்மாதிரிப்பட்ட புறம்போக்கு நிலங்களை எல்லாம் கணக்கெடுத்து அதை நிலமில்லாத ஏழைகளுக்கு ஜாரி செய்து கொடுக்க வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய அமைச்சர் அவர்கள் எந்த சிறு காரியத்தை சொன்னாலும் உடனே அதன் பேரில் நடவடிக்கை எடுக்கிறார்கள். எங்கள் தொகுதியைப் பொறுத்தவரையில் எந்த சிறிய விஷயமாய் இருந்தாலும் அது நியாயமாக இருந்தால் அதை உடனே செய்து கொடுக்கிறார்கள், நியாயம் இல்லை என்றால் இது நியாயமில்லை, ஆகவே அதை செய்ய முடியாது என்று சொல்லிவிடுகிறார்கள். அந்த முறையில் எங்கள் தொகுதி மக்கள் சார்பில்



18th March 1961] [Srimathi A. S. Ponnammal]

அவர்களுக்கு எங்கள் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். சிலர் தொந்தரவு கொடுக்கிறார்கள் என்ற காரணத்திற்காக அவர்களிடத்தில் போய் சில நியாயமில்லாத விஷயத்தைப் போய் சொன்னால் அதை அவர்கள் ஒப்புக்கொள்வதில்லை. ஆகவே இந்த விஷயத்தில் அவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு குறை என்னவென்றால், பள்ளிக்கூட ஆரம்ப காலத்தில், தாசில்தார் அவர்களிடத்திலிருந்து சர்டிபிசேட் வாங்குவதற்காக ஏராளமான பேர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். மகாராஜாக்களைக்கூட சீக்கிரமாக பார்த்துவிடலாம். அதைவிட கஷ்டமாக இருக்கிறது, இவர்களைப் பார்ப்பதற்கு. கால்கடுக்க, மணிக்கணக்காக காத்து நின்றால் தான் சர்டிபிகேட் கொடுக்கிறார்கள். கழிந்த ஆண்டில் என்னிடத்தில் இந்தக் குறை வந்தது. நான் அங்கே போய் பார்த்த போது நூற்றுக்கணக்கான பேர்கள் கையெழுத்துக்காக காத்துக்கொண்டிருந்தார்கள். பின்னால் நான் போய் அவர்களிடத்தில் கேட்டுக்கொண்டேன். அதன் பிறகு சீக்கிரமாக எல்லோருக்கும் கையெழுத்துப் போட்டுக்கொடுத்தார் என்று நினைக்கிறேன். ஒவ்வொரு ஊரிலும் ஒன்றிரண்டு பேர்கள் பணக்காரர்களாக இருப்பார்கள். மற்றவர்களுக்கு இந்த "பாவர்டி சர்டிபிசேட்" வாங்க வேண்டிய நிலைமை ஏற்படும். அவர்கள் ஹரிஜனங்களாக இருந்தாலும் சரி, அல்லது பிற்பட்ட ஏழைக் குழந்தைகளாக இருந்தாலும் சரி அவர்களுக்கு எல்லாம் இம்மாதிரியான நிலைமை ஏற்படாமல் இருப்பதற்கு ஆவன செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், ஸ்டாம்புகளை விற்பதற்காக நாம் வெண்டர் என்பவரிடம் கொடுக்கிறோம். அவர் சர்க்காரிடத்தில் டிபாசிட் கட்டி ஸ்டாம்புகளைவாங்கி விற்பனை செய்து வருகிறார்கள். முக்கியமான சில நேரங்களில் ஸ்டாம்பு வேண்டும் என்று கேட்கும் போது உடனடியாக இல்லை என்று சொல்லிவிடுகிறார்கள். பின்னால் லஞ்சம் கொடுத்த பிறகு, ஒரு ரூபாய் அல்ல இரண்டு ரூபாய் அதிகமாக கொடுத்த பிறகு ஸ்டாம்பு கொடுக்கிறார்கள். இந்த நிலைமை மாற வேண்டுமென்றால் ஒவ்வொரு சப்-ரெஜிஸ்ட்ரார் ஆபீஸிலும் ஸ்டாம்புகளை சர்க்காரே விற்க வேண்டும். இன்னொரு விஷயம் என்னவென்றால், ஐந்து ரூபாய் அல்லது ஏழு ரூபாய் ஸ்டாம்பு வேண்டுமென்று கேட்டால் 10 ரூபாய் ஸ்டாம்பு தான் இருக்கிறது என்று சொல்லிவிடுகிறார்கள். இதையும் தவிர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, என்னுடைய ஜில்லாவைப் பொறுத்த அளவில், பல காரியங்கள் அதிகாரிகள் சொல்லுகிறபடி நடைபெறுவதில்லை. இங்கு சபையில் அமைச்சர்களால் சொல்லப்படுகிற பதில்களின்படி காரியங்கள் நடைபெறுகின்றனவா என்பதை பார்ப்பதற்கு நாம் இங்கு ஒரு கமிட்டியை நியமித்திருக்கிறோம். மதுரை ஜில்லாவைப் பொறுத்த வரை நாங்கள் டெவலப்மெண்ட் கௌன்சில் கமிட்டிகளில் பல தீர்மானங்களை போட்டிருக்கிறோம். நாலைந்து ஆண்டுகளாக போடப்படுகிற தீர்மானங்களின்படி எந்த காரியமும் நடப்பதில்லை. ஆகவே அங்கு தீர்மானிக்கிற காரியங்கள் நடைபெறுகின்றனவா என்பதைப் பார்ப்பதற்கு, அதற்காக ஒரு சிலரை ஒரு சில மெம்பர்களை போட்டு ஒரு கமிட்டி நியமித்து இதை பார்த்து வருவதற்கு வழிவகை செய்வோமானால் ஜில்லா லெவலில் காலதாமதம் ஏற்படுவதை தவிர்க்க முடியும். ஆகவே இதை அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, பொதுவாக கிராம தான கிராமங்களுக்கு லோன் கொடுக்கப்படுகிறது. இதற்காக மனுக்கள் வந்து கொண்டிருக்கின்றன. அதற்கும் கீழேயிருந்து எழுதி மேலே போக வேண்டியிருக்கிறது. எவ்வளவு தான் ஸ்பெஷல் என்று எழுதினாலும் காலதாமதம் ஏற்படுகிறது. பம்பு செட் ஏற்படுத்த வேண்டும், கிணறுகள் வெட்ட வேண்டும், மொத்தமாக கொடுப்பதாக இருந்தாலும் தனித்தனியாக 10, 12 மனுக்கள் வருவதால் அதை

அரசாங்கம் பரிசீலனை செய்து நான் முடிவு எடுக்கவேண்டியிருக்கிறது. ஆகவே இம்மாதிரி காரியங்களில் அதாவது, பம்ப் செட் கொடுப்பதிலும், கிணறுகள் வெட்டுவதிலும் இது போன்ற காரியங்களில் எல்லாம் ஸ்பெஷலாக கன்ஸிடரேஷன் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது) இன்னும் ஒரே ஒரு விஷயத்தை மட்டும் குறிப்பிட்டுவிட்டு முடித்துக்கொள்கிறேன்.

எங்கள் தொகுதிக்கு சப்-ரெஜிஸ்டிரார் ஆபீஸ் வேண்டும் என்று பல முறை எழுதி எத்தனையோ தடவை நேரிலும் சொல்லியாய்விட்டது. ஐ.ஜி. ஆப் ரெஜிஸ்டிரேஷன் அவர்களிடத்திலும், ஃபைனான்ஸ் டிப்பார்ட்மெண்டிலும் கேட்டதில் அவர்கள் நல்லபடியாக சிபாரிசு செய்திருப்பதாகத்தான் சொல்லுகிறார்கள். ஆனால் இப்போது வருந்திருக்கும் வரவு செலவு திட்ட புத்தகங்களைப் பார்த்தால் எட்டு ஆபீஸ்களுக்கு சிபாரிசு செய்யப்பட்டதாகவும், அதில் ஆறு எடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது. நான் குறிப்பிடும் வாடிப்பட்டி என்கிற இடம் ஏழாவதாகவோ இருக்கிறது. ஆகவே மின்சார அமைச்சர் அவர்கள் தயவு செய்து நாங்கள் கேட்டிருக்கும் கோரிக்கையை நிறைவேற்றித்தரவேண்டும் என்று எங்கள் தொகுதி மக்கள் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

• SRI SOWDI S. SUNDARA BHARATHI : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சுமார் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு கீழ் ராமநாதபுரம் பகுதியில் பெய்த பெரு மழையும் அடித்த பெரும் புயலும், அதன் காரணமாக ஏற்பட்ட பொருள் சேதமும், சில இடங்களில் ஏற்பட்ட உயிர் சேதமும் நம் எல்லோருக்கும், இந்த நாட்டு மக்களுக்கும் தெரியும். அதற்கு அரசாங்கம் பல உதவிகளைச் செய்வதில் சில இடங்களில் கடனைக் கொடுத்து சில உதவிகள் வழங்கியது. பிற்பாடு ஐந்து ஆண்டுகளில் அந்தப் பகுதியிலுள்ள குடியான மக்கள் இருக்கிறார்களே அவர்களுக்கு நிலத்திலிருந்து சரியான வருவாய் கிடைக்கவில்லை. கடந்த மகசூல் காலத்தில் இதற்கு முன்னால் கொடுத்த தொகைகள் கிஸ்தி எல்லாவற்றையும் வசூலிக்க அரசாங்கம் கையாண்ட முறை இருக்கிறதே அது வருந்தத் தக்க ஒரு முறை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்தப் பகுதி மக்கள், எந்த விதமான நன்மையையும் பெறாத மக்கள்; விவசாயத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் இருக்கிறார்களே அவர்கள் பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் அல்லது மற்ற விதமான திட்டங்களினால் எந்த விதமான பயனையும் அடையவில்லை. அந்தப் பகுதி மக்களுக்கு கடந்த ஆண்டுகளிலே கொடுத்த பாக்கிகள் எல்லாவற்றையும் திடீரென்று ஒரே ஆண்டில் வசூலிக்க முற்பட்டது குறித்து நான் வருந்துகிறேன். ஒரு வேளை இந்த அரசாங்கத்திற்குத் தெரியாமல், ஏதோ சம்பந்தப்பட்ட ஆபீஸர்கள் மட்டுமே இந்தத் தவறை செய்து விட்டார்களோ என்று நினைக்கிறேன். இந்த அரசாங்கத்திற்கு இது தெரியாமலிருந்தால், இதற்கு சம்பந்தப்பட்டவர்கள் யார், ஏன் இந்த மாதிரி ஒரு தவறான முறையை கையாண்டார்கள் என்று சற்று பரிசீலிப்பது அவசியமாக எனக்குத் தோன்றுகிறது. கடந்த மகசூல் காலத்தில் அந்தப் பகுதி மக்கள் தங்களுடைய பாக்கித் தொகையைக் கொடுக்க பட்ட கஷ்டங்களை நினைத்துப் பார்க்கும்போது மிகவும் வருந்தத் தக்கதாக இருக்கிறது. அந்தப் பகுதி பெருமை வாய்ந்த குடியான மக்கள் வாழக்கூடிய பகுதி. அவர்கள் இந்தத் தொகைகளைக் கொடுக்க வேண்டாமென்று நினைத்தது கிடையாது. அவர்கள் கொடுக்க முடியவில்லையே என்று மிகவும் வருந்தி கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பெரும்தன விவசாய மக்கள் தங்கள் மாடுகளை அரசாங்கம் ஜப்தி செய்ய முன்வரும்போது அதற்காக விடக்கூடிய கண்ணீர் எல்லோருடைய உள்ளத்தையும் தொடக் கூடியதாக இருக்கிறது. அவர்கள் மாடுகளை உயிரினும் மேலாக, தெய்வத்தைப் போலக் கருதி வணங்கி வருகிறார்கள்—மதிப்பு கொடுத்திருக்கிறார்கள். என்னிடம் கூட ஒருவர் சொன்னார். தங்களுக்கு இருக்கக்கூடிய பொருள்கள் எல்லாவற்றையும்



நிலத்தில் போட்டு விட்டு வருவாயை எதிர்பார்க்கும் காலத்தில் நீங்கள் இந்தத் தொகை பூராவையும் கட்ட வேண்டுமென்று சொல்லி எந்த விதப் பொருளும் இல்லாமல் மாடுகளைப் பிடித்துக்கொண்டு போகும்போது அவர்கள் விடக் கூடிய கண்ணீர் இருக்கிறதே அதை நினைக்கும்போதே நடுங்கக் கூடிய அளவில் இருக்கிறது. அவர்கள் அவ்வளவு தூரம் ஆத்திரப்படுகிறார்கள்—ஒரு குடியானவனுக்குத்தான் தெரியும் அந்த உணர்ச்சி. ஜப்தியாகப் போகிறது என்று நினைக்கும்போது பதறுகிறான். நான் இந்த மாதிரி ஒரு இடத்தில்தான் இருக்கும் என்று நினைத்தேன். ஆனால் இந்த மாதிரி பல இடங்களில் நடந்ததாக இங்கே பல அங்கத்தினர்கள் பேசியதிலிருந்து தெரிகிறது. மண்டலமாணிக்கம் என்ற கிராமத்தில் எல்லா நிலங்களையும் ஜப்தி செய்திருக்கிறார்கள். ஒரு சில விவசாயிகள் மட்டும் பாக்கியைக் கொடுக்க முடியாமல் இருந்தால் அது அவர்கள் குறை என்று கருதலாம். இருக்கக்கூடிய கிராம மக்கள் எல்லோரும் தங்களுடைய பாக்கியைக் கொடுக்க முடியாத நிலையில் இருந்தால் அது மக்களுடைய குறை அல்ல என்று சற்று தெரிந்துகொள்ள வேண்டும். கொடுக்க முடியாத நிலை ஏற்படும் இடத்தில் சிறிது சலுகை காட்ட வேண்டும். அந்தச் சலுகைகளைக் கொடுக்கத் தவறியது மிகவும் வருந்தத் தக்கது. அரசாங்கமே ஒரு மாதத்திற்கு ஒரு லட்சம் ரூபாய் வசூல் செய்ய வேண்டுமென்று அதிகாரிகளை விரட்டுவதும், அதிகாரிகள் அதற்காக அவர்களுக்குக் கீழ் இருக்கும் சிப்பந்திகளை விரட்டுவதும், அராஜகமான நிலைமையில் அத்தகைய முறைகள் கையாளப்பட்டது என்பது கண்டிக்கத் தக்க விஷயம். இதை கலெக்ஷன் டிரைவ் என்று சொல்லுகிறார்கள். இது கலெக்ஷன் டிரைவ் அல்ல—ராபெரி டிரைவ் என்று சொல்லக்கூடிய அளவில்தான் அங்கு கையாளப்படுகிற முறை இருந்து வருகிறது (கனம் ஸ்ரீ. வி. ராமையா: வசூலே செய்ய வேண்டாமென்று சொல்லுகிறீர்களா ?) நான் அப்படிச் சொல்லவில்லை. அந்தப் பகுதி மக்கள் எந்தத் தொகையையும் கொடுக்க மாட்டோம் என்று சொல்லவில்லை. எப்படியாவது அவர்கள் கொடுக்க வேண்டுமென்று நினைக்கிறார்கள். கடந்த ஐந்து ஆண்டு காலமாக கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டு விட்டது. அவர்களுக்கு நல்ல பலன் கிடைக்கவில்லை. நீர்ப்பாசனத் திட்டங்கள் இருந்தால் அதன் மூலமாக நன்மை கிடைத்தால் வருவாய் கிடைக்கலாம். ஆனால் அந்த மாதிரி இல்லை.

கடைசியாக, இந்த மாதிரி மற்ற பகுதிகளிலும் இருப்பதாக கனம் அங்கத்தினர்கள் பேசியதிலிருந்து தெரிகிறது. இந்த மாதிரி இனிமேல் நடக்காது இருக்க வேண்டும் என்று மீண்டும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். சில மக்கள் அந்தப் பகுதியில் அன்னிய அரசாங்கம் இருந்த போது கூட இந்த மாதிரி வரி வசூல் செய்தது இல்லை என்று சொல்லி வருத்தப்பட்டார்கள். அந்த மாதிரி நடந்திருக்கிறது. அந்தப் பகுதியில் வரி வசூல் செய்ய எடுத்துக்கொள்ளப்பட்ட முறை சரியானதா என்று பரிசீலித்து, அந்த மாதிரி இனிமேல் நடக்க வேண்டாமென்று கூறிக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* SRI A. GOVINDASAMY : கனம் சட்ட மன்ற உதவித் தலைவர் அவர்களே, இன்றைய தினம் பிரச்னைக்கு உரிய மான்யங்கள் மீது கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து நான் பேச விரும்புகிறேன். கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் இந்த இலாகாவை ஏற்றுக்கொண்ட நாளிலிருந்து நிலச் சீர்திருத்தம் சம்பந்தமாக தஞ்சை பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம், நியாய வாரச் சட்டம் முதலிய சட்டங்களை நிறைவேற்றி இறுதியாக நில உச்ச வரம்புச் சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றுகிறேன் என்று சொல்லி, அது இப்போது காற்றில் பறக்க விடப்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டைச் சொல்ல விரும்புகிறேன். நிலச் சீர்திருத்தச் சட்டம் வருகிறது, வருகிறது என்று 1953-லிருந்து சொல்லி வந்த காரணத்தினால் நில சொந்தக்காரர்கள் ஜாக்கிரதையாக நிலவுடைமையைப் பிரித்து விட்டார்கள் என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்—

அதைப்பற்றி நான் பல முறை சுட்டிக்காட்டியிருக்கிறேன். 1960-ம் ஆண்டிலே ஏப்ரல் மாதத்தில் நில உச்சவரம்பு சட்டத்தை இங்கே கொண்டு வந்து பிரேரேபித்திருக்கிறார்கள். இப்போது 1961, ஏப்ரல் நெருங்குகிறது. செலெக்ட் கமிட்டியிலேயே இருக்கிறது. அதை துரிதப்படுத்த வேண்டுமென்று இந்தக் குற்றச்சாட்டைச் சொன்னேன். இதை எதிர்பார்த்திருக்கிற விவசாயிகளுக்கு நன்மை செய்யும் அளவில் இல்லாமல் பெரிய நிலச்சுவாந்தார்களுக்குச் சாதகமாகி சர்க்காருடைய கொள்கை தோற்று விட்டது என்று சொன்னால் இதிலே சர்க்காருக்குப் பொறுப்பு இல்லை என்று சொல்வதற்கில்லை. திராவிட முன்னேற்றக் கழகமோ, சுதந்திரா கட்சியோ இதற்கு பொறுப்பு என்று சொல்ல முடியாது. காங்கிரஸ் கட்சியிலேயே சுதந்திரா கட்சி கொள்கை உள்ளவர்கள் அதிகமாக இருப்பதால்தான் இந்த காலதாமதம் ஆகிறது என்ற குற்றச்சாட்டை நான் சொல்ல விரும்புகிறேன். அதிலும் ஸ்டாம்ப் பேப்பர் விற்றிருக்கிறதைப் பார்க்கும்போது ரூ. 321·51 லட்சமாக 1958–59-ல் இருந்தது, ரூ. 414·22 லட்சமாக 1959–60-ல் உயர்ந்தது. 1960–61-ம் ஆண்டுக்கு ரூ. 413·00 லட்சம் என்று பட்ஜெட் எஸ்டிமேட் போட்டு அது இப்போது ரூ. 441·00 லட்சமாக உயர்ந்திருக்கிறது. திடீரென 1959–60-ம் ஆண்டில் உயர்ந்ததற்குக் காரணம் என்ன? சட்டம் வருகிறது என்றவுடனே அவசரம் அவசரமாக எழுதியிருக்கிறார்கள் என்று எடுத்துக் காட்டுகிறது. 'They anticipated larger receipts from the sale of stamps' என்று இதிலே குறிப்பிடுகிறார்கள். அவர்களும் அதை எதிர்பார்க்கிறார்கள். விற்க வேண்டும்—விற்கட்டும்—என்று அவர்களே சொல்லுகிறார்கள். அதே போன்று பதிவுக் கட்டணத்தைப் பார்க்கும்போது 1958–59-ல் 60·55 லட்சமாக இருந்தது, 1959–60-ல் 74·56 லட்சமாக உயர்ந்து, 1960–61ல் 62 லட்சம் எஸ்டிமேட் போட்டு, அதுவே 75 லட்சமாகக் கிடைத்திருக்கிறது. அதைப் பார்க்கும்போது 'The increase is mainly due to increase in the registration of documents' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த இரண்டு தொகையையும் வைத்துப் பார்க்கும்போது, ஸ்டாம்ப் பேப்பர் வாங்கி பதிவு செய்து விட்டார்கள். இந்தச் சட்டம் வெற்றி பெறாத அளவுக்கு நடைமுறை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது என்று இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக கடன் வசூலிக்கும் விஷயத்தில் அதிக கெடுபிடி இருக்கிறது. கடலூர் ஓ.டி.-யில் மணியக்காரர் ஒருவரை அவர் வாங்கிய சொந்தக் கடனுக்காக சிதம்பரம் ஆர்.டி.ஓ. பார்வையிட்டிருக்கிறார். பார்வையிட்டு கடன் தொகையை திருப்பிக் கேட்ட நேரத்தில் அந்த மணியக்காரர் பணம் இல்லை என்று சொல்லிய நேரத்தில், அவர் அப்போது நிலவரி வசூல் செய்து 10 ரூபாய் வைத்திருந்தார். அந்த 10 ரூபாயை எடுத்துக்கொண்டு அதை சொந்தக் கணக்கில் வைத்துக் கொண்டு ஈடு செய்து அந்த மணியக்காரருடைய பேனாவை ஜப்தி செய்து எடுத்துக்கொண்டு போயிருக்கிறார். மணியக்காரரை வேலையிலிருந்தும் சஸ்பெண்ட் செய்துவிட்டார். நடு வீதியிலே டாம் டாம் போட்டார்கள். அந்த அவமானம் தாங்காமல் தற்கொலை செய்து கொண்டாரென்று சொன்ன சோக கதையைக் கேட்டு நான் உண்மையிலேயே வருத்தப்படுகிறேன். இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து, நியாயம் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராம உத்தியோகஸ்தர்களுக்கு சம்பள உயர்வு கொடுக்க வேண்டு
12-30 p.m மென்று கேட்ட நேரத்திலே, அவர்கள் எல்லாம் கௌரவ உத்தியோகஸ்தர்கள் என்ற முறையிலே வேலை செய்யக்கூடியவர்கள், அவர்களுடைய சம்பளத்தைப்பற்றி நீங்கள் கவலை எடுத்துக்கொள்ளக் கூடாது என்று சொன்னார்கள். இப்போது கிராம பஞ்சாயத்து யூனியன் வந்த பிறகு, கிராமக் கணக்குகளையெல்லாம் பார்ப்பதோடு, பஞ்சாயத்து காரியதரிசியாகவும் வேலை செய்ய வேண்டுமென்று சொல்லப்படுகிறது. ஜனநாயகத்திலே



பற்றுள்ளதாகக் கூறுகின்ற இந்த சர்க்கார், இந்த நேரத்திலே பஞ்சாயத்தில் சர்க்கார் பிரதிநிதியாகப் போட்டு தலையிடக் காரணமென்ன? பஞ்சாயத்தை ஜனங்களின் பிரதிநிதிகளே நடத்த வேண்டுமென்று சொல்கிறார்கள். தவிர, ஏற்கெனவே வேலைகள் அதிகமிருக்கிறது என்று சொல்லும்போது, பஞ்சாயத்து வேலைகளையும் கவனிக்கச் சொல்லி, அந்தக் கணக்குகளையும் பார்க்க வேண்டுமென்று சொன்னால், எந்த வேலைகளும் ஒழுங்காக நடைபெறாது. அப்படி இரண்டு வேலைகளையும் செய்யக்கூடிய கிராம உத்தியோகஸ்தர்களுக்கு போதுமான சம்பளமும், அலவன்சும் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். இதையெல்லாம் கனம் அமைச்சர் அவர்கள் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தீப்பிடித்துக் கொண்டாலும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டாலும் வெள்ளைக்காரனுடைய காலத்திலே குடிசை ஒன்றுக்கு 30 ரூபாய்தான் அதிகபட்சமகாக கொடுக்கப்பட்டது. அப்போது விலைவாசிகள் எல்லாம் மலிவாக இருந்தகாலம். ஆனால் இப்போதும் அதே நிலையில்தான் கொடுக்கப்பட்டு வருகிறது.

**The Hon. Sri M. A. MANICKAVELU**: அப்போது 30 ரூபாய் கொடுக்கப்படவில்லை. இப்போதுதான் கொடுக்கப்படுகிறது.

**Sri A. GOVINDASAMY**: இப்போதுதான் 30 ரூபாய் கொடுப்பதாக இருந்தாலும், அது போதுமா? சிந்தித்துப் பார்க்க வேண்டும். முப்பது ரூபாய் என்று சொல்லப்படுகிறதே தவிர, எல்லாருக்கும் அந்த 30 ரூபாய் கொடுக்கப்படுவது இல்லை. சில இடங்களில் 20, 10 என்று கூட கொடுக்கப்படுகிறது. சில இடங்களில் அதிகாரிகள் வந்து பார்த்து குறித்துக் கொண்டு போய், பணமே வழங்கவில்லை. அண்மையிலே தென் ஆற்காடு மாவட்டத்தில் சிதம்பரம், கடலூர், விழுப்புரம் ஆகிய தாலுகாவிலே பல கிராமங்கள், சேரிகள் பாதிக்கப்பட்டன. சேரிகளுக்கு நஷ்ட ஈடு எதிர்பார்த்த அளவு கொடுக்கவில்லை. அதேபோல் விவசாயிகளுக்கு நஷ்ட ஈடும் கொடுக்கப்படவில்லை. ஏதோ ஒரு சில இடங்களில் சலுகை காட்டப்பட்டிருக்கிறது. பரவலாக செய்யவில்லை யென்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நெய்வேலியில் போதுமான நஷ்ட ஈடு விவசாயிகளுக்குக் கொடுக்கவில்லை. 1953-லே நில ஆர்ஜிதச் சட்டம் கொண்டு வந்த நேரத்திலேகூட, அங்குள்ள மக்களுக்குச் சரியான முறையில் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டு வந்தது. ஆனால் அப்படி சரியான முறையிலே கொடுக்காததால், ஹைகோர்டுக்குப் போய் அவர்கள் வெற்றி கண்டார்கள். ஆனால் அதற்கும் மேல் சர்க்கார் மேல் கோர்ட்டுக்குப் போகிறார்களே தவிர, ஹைகோர்ட் நீதி வழங்கியபடி விவசாயிகளுக்குப் போதுமான நஷ்ட ஈடு கொடுக்க மறுக்கப்படுகிறது. அவர்களுக்குப் போதுமான நஷ்ட ஈட்டை கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியிலுள்ள ஒரு கிராமத்தில் புட் புரொடக்ஷன் அதாவது விவசாய அபிவிருத்தி என்று சொல்லி, அந்த இடத்திலே நீர்ப்பாசன வசதியை அதிகரிப்பதாகக் கூறி கலிங்கலை உயர்த்தினார்கள். விழுப்புரம் தாலுகா சின்னத் தச்சூர் கிராமத்தில் தான் மேற்படி கலிங்கல் உயர்த்தப்பட்டது. இதனால் டி. புதுப்பாளையம் பாதிக்கப்பட்டது. புதுப்பாளையம் கிராம விவசாயிகள் ஆட்சேபணை தெரிவித்ததின் பேரில், ரெவின்யூ இலாகாவும் உணவு உற்பத்தி இலாகாவும் கலிங்கலை உயர்த்தியது தவறு என்று உணர்ந்து, கலிங்கலைத் தாழ்த்த வேண்டும் என்று உத்திரவு போட்டுங்கூட சின்னத்தச்சூர் மக்கள் எதிர்ப்பதால், கலிங்கலை இன்னும் தாழ்த்தாமலே விட்டு வைத்திருக்கிறார்கள். உடனடியாகத் தாழ்த்த வேண்டும்.

விவசாய வருமான வரி போட்ட காலத்திலே, அதிலே அரசாங்கம் எதிர்பார்த்த அளவு நல்ல பலன் கிடைக்கவில்லை என்று காலையில் கொடுத்த புள்ளி விவரங்களிலிருந்துகூடத் தெரிகிறது. தென் ஆற்காடு ஜில்லாவிலே ரூ. 3,460-90 ந. பை. வருமென்று எதிர்பார்த்தார்கள். ஆனால் கிடைத்ததோ ரூ. 8-95 ந.பை. அதேபோல் தஞ்சை மாவட்டத்தில் வரையறை செய்யப்பட்ட தொகை ரூ. 65,859—72 ந.பை. ஆனால் கிடைத்திருக்கிறது ரூ. 13,628 தான். நேரமில்லாமையால் இந்தப் புள்ளி விவரத்தை மட்டும் உதாரணத்திற்காகச் சொல்கிறேன். இதிலிருந்து என்ன தெரிகிறது ? அரசாங்கம் எதிர்பார்க்கிறபடி வருமானம் கிடைக்கவில்லை என்பது நன்கு தெரிகிறது. இதற்குக் காரணம் விவசாயிகள் ஜாக்கிரதையாக முன் கூட்டியே நிலத்தைப் பிரித்து விட்டார்கள் என்பதை எடுத்துக் காட்டுகிறது என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

கடைசியாக, ஆதித்திராவிட மக்களுக்கும், பின்தங்கிய மக்களுக்கும் நிலத்தை ஜாரி செய்து கொடுக்க வேண்டும். அதோடு அவர்கள் குடும்பங்களுக்குக் குடியிருப்பு வீடுகள் கட்டிக் கொள்ள வசதி செய்து கொடுக்க வேண்டும். அதோடு அவர்கள் நல்ல முறையிலே பயிரிடுவதற்கும் வழிவகை செய்து கொடுக்க வேண்டும். என்னுடைய உரையை முடித்துக் கொள்வதற்கு முன் இன்னும் ஒரே ஒரு விஷயத்தைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். தென் ஆற்காடு மாவட்டத்தைக் கடலூர், விழுப்புரம் என்ற இரு பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். விழுப்புரம் மத்திய இடமாக இருந்தும், ஆர்.டீ.ஓ.-வை, திருக்கோயிலூரிலே போட்டிருக்கிறார்கள். திருக்கோயிலூர், திண்டிவனம், செஞ்சி ஆகிய இடங்களுக்கு விழுப்புரம் தான் மத்திய இடமாக இருப்பதால், இங்கு ஆர்.டீ.ஓ.-வை மாற்றினால் வசதியாக இருக்கும். அதோடு இப்போது பீ.டீ.ஓ.-க்களுக்கு ஜீப் கொடுத்திருக்கும்போது, அதேபோல் தாசில்தார்களுக்கும் ஜீப் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

SRI S. R. MUNUSAMY : கனம் சட்ட மன்ற உதவித் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த மானியத்தின் மீது இந்தியக் குடியரசுக் கட்சியின் சார்பாக என்னுடைய அபிப்பிராயங்களைச் சொல்கிறேன். இப்போது ரெவின்யூ இலாகாவிலே ஒதுக்கப்பட்டிருக்கும் நிலங்கள் எத்தனை, அதிலே விவசாயத்திற்கு உகந்த நிலங்களாக மாற்றப்பட்டவை எவ்வளவு, புறம்போக்குகளாக உள்ளவை எவ்வளவு என்று கணக்குகள் எடுத்துப் பார்ப்பார்களேயானால் ஆங்காங்கு வாழக்கூடிய எண்ணிக்கைகளுக்குத் தகுந்தவாறு எப்போதுமே நிலங்கள் ஒதுககப்படவில்லை யென்பது தெரியும். இதை நான் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

உண்மையிலேயே, குறிப்பாக நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அரக்கோணம் தாலுகாவிலே சூறை கிராமத்திலே டி.சி. புறம்போக்கு 500 ஏக்கர் இருக்கிறது. அங்கு வாழக் கூடிய ஒதுக்கப்பட்ட மக்கள் 20 குடும்பங்கள் இருக்கிறார்கள். அதை விவசாயம் செய்வதற்கு ஏழை விவசாயிகள் கோரினால், அங்கே அன்னிய கிராமத்தார் விவசாயம் செய்வதற்கு நிலம் கொடுக்கக்கூடாது என்று சட்டம் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது.

அதேபோல் நிலமில்லாத விவசாயிகள், அநேகமாகத் தாழ்த்தப்பட்ட வகுப்பிலே உள்ளவர்கள், ஆங்காங்கே இருக்கக்கூடிய ஆட்சேபணைக்குரிய புறம்போக்கு நிலங்களிலே விவசாயம் செய்து, அதற்கு தண்டத் தீர்வை கட்டிக் கொண்டு வாழ்ந்து வருகிறார்கள். அதற்காக என்னுடைய விவசாயச் சங்க சார்பிலே, சென்ற ஆண்டு மே மாதம் சர்க்காருக்கு ஒரு மகாநாட்டுத் தீர்மானத்தை அனுப்பினோம். அதே போல் சென்ற ஆண்டு நவம்பர் மாதம் விவசாய சங்கத்திற்கு வந்த தகவல்களை வைத்துக்கொண்டு சுமார் 2,000 மனுக்களை நான் சேகரித்து, இந்தச் சர்க்காருக்கு



அனுப்பினேன். அதிலே குறிப்பிட்டிருப்பது அத்தனையும் தண்டத் தீர்வை கட்டக் கூடிய விவசாயிகள். உண்மையிலேயே வட ஆற்காடு ஜில்லாவிலே இன்றைக்கு நில வருமானத்தைவிட, தண்டத் தீர்வை கட்டக் கூடிய மக்கள்தான் அதிகமாகிக் கொண்டு வருகிறார்கள். ஆனால் வட்டார வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பார்ப்போமேயானால் எங்களுடைய வட்டாரத்திலே ஒரு நபருக்கு மூன்று ஏக்கர் நிலம் இருக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. ஆனால் என்னுடைய மாவட்டத்திலே நிலம் மிகக் குறைவு. ஒவ்வொரு வட்டாரத்திற்கும் 22,000 ஏக்கர் நிலங்கள்கூடத் தருவது கிடையாது. அப்படி இருக்கக்கூடிய நாங்கள் அதிகமாகப் புறம்போக்குகளைத் தான் ஏராளமாக ஆக்கிரமித்து தண்டத் தீர்வை கட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம். அதற்காகத்தான் இதைப்பல முறைகள் சர்க்காருக்கு மனுக்கள் அனுப்பியதோடு, நானும் எங்கள் தலைவர் ஸ்ரீ சிவராஜ் அவர்களும் 1955-லிருந்து, இது வரையிலும் வலியுறுத்திக் கொண்டு வருகிறோம். அப்படிச் சொல்லியும், சர்க்கார் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கியிருக்கிறார்களா என்றால் இல்லை. பி.சி. புறம்போக்கு நிலங்களை 1925-ல் நாம் அடிமைகளாக இருந்த காலத்தில், வெள்ளையன் காலத்தில் ஒதுக்கப்பட்டதே தவிர, இன்றைக்கு நாம் ஜனநாயகம் அடைந்த பிறகுகூட, இது வரையில் ஒன்றும் செய்யாமல் இருக்கிறோம். ஆகவே, அவர்களுக்கு நல்ல காரியம் செய்யக்கூடிய முறையிலே இதை ஒரு கைங்கரியமாகக் கருதி, புறம்போக்காக உள்ள நிலங்களைக் கொடுக்க வேண்டுமென்று நாங்கள் வற்புறுத்தி வந்திருக்கிறோம். ஆனால் சர்க்கார் அந்த நல்லெண்ணத்தோடு கூட இல்லாமல், இன்றைக்கு டி.சி. புறம்போக்குகளைக் கைப்பற்றக்கூடிய நிலையில்தான் இருக்கிறது.

சூறை கிராமத்தில் இருக்கக்கூடிய 500 ஏக்கர் பூமியிலே, அங்குள்ள சுமார் 60 தாழ்த்தப்பட்ட மக்களை அங்கு குடியேற்றுவதற்கு நாங்கள் சர்க்காருக்கு மனு அனுப்பினால், உடனே அந்தப் புறம் போக்கு நிலத்தை காட்டுக்கு ஒதுக்கி இருப்பதாக அங்குள்ள பீ.டி.ஓ. ரேஞ்சருக்குச் சிபாரசு செய்திருக்கிறார். அதை ஆட்சேபித்து சென்ற வாரத்தில் சர்க்காருக்கு ஒரு மனு அனுப்பியிருக்கிறேன். வெள்ளையர் காலத்திலே ஒதுக்கப்பட்ட 'டி.வி' புறம்போக்குகளைக் கைப்பற்றக் கூடாது என்பதை அறிமுகப்படுத்தி இருக்கிறேன்.

அடுத்தபடியாக, வேலூர் தாலுகாவில் பாலமதியில் ' டி.வி.' புறம்போக்கு நிலம் 144 ஏக்கர் இருக்கிறது. அதிலே தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒன்றுமே கிடையாது. புறம்பாக்கு யாருக்குப் பயன்படுகிறது என்று பார்ப்போமானால், அங்குள்ள கணக்குப்பிள்ளை, மணியக்காரருக்குக் குத்தகைக்கு விடுவதற்குப் பயன்படுகிறது. பிற்பட்ட மக்களுக்கு யாருக்காகிலும் பட்டா செய்திருக்கிறார்களா என்றால், இல்லவே இல்லை. ஆம்பூர் பெரியாங்குப்பம் கிராமத்திலே 15 ஆண்டுகளாக ஏழை விவசாயிகள் கிணறு வெட்டிப் பிழைக்கிறார்கள். புறம்போக்கு நிலத்தை அவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்க வேண்டும் என்று பலமுறை கேட்கப்பட்டிருக்கிறது. 1955-ம் வருஷத்திலிருந்து விவசாயச் சங்கம் கேட்டுக் கொண்டிருக்கிறது. அவர்கள் ஏமாற்றப்படுகிறார்கள், தோப்பு வைப்பதாகச் சொல்லி, விவசாயிகளின் மீது பொறாமையின் காரணமாகக் கொடுக்க மறுக்கிறார்கள். ரெவின்யூ அதிகாரிகள் கூட அந்த பிரசிடெண்டை வற்புறுத்துகிறார்கள், 'கொடுத்து விடுங்கள், இதெல்லாம் ஏன்' என்று. அப்பேர்ப்பட்ட தகராறு உள்ள இடத்தை ஒரு காங்கிரஸ் முக்கியஸ்தராக இருக்கக்கூடியவருடைய மைத்துனருக்குக் கொடுக்கிறோம் என்றால், அது கட்சிப் பாகுபாடு இல்லாமல் இருக்கிறதா என்று சர்க்காருக்கு அறிமுகப்படுத்துகிறேன் (டெபுடி ஸ்பீகர்': டைம் ஆகிவிட்டது) விவசாயிகளுக்குக் கடன்கொடுப்பதிலே கண்டிஷன் பட்டாவாக இருக்கிறது,அதனால் கடன் கொடுக்கக்கூடாது என்று சொல்லுகிறார்கள். இதனால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேறு வழியே இல்லை. ஒதுக்கப்பட்ட

'டி.ஸி.' புறம்போக்கு நிலங்களைத் தாழ்த்தப்பட்டவர்களுக்கு பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்றும், விவசாயம் செய்வதற்கு லாயக்கற்ற பூமியைத் திருத்தி அமைப்பதற்குக் கடன் கொடுத்து உதவ வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

SRI M. KALYANASUNDARAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மாவட்ட நிர்வாகம் இன்னும் அடுத்து ஒரு வருஷத்திற்கு நடப்பதற்கு வேண்டிய தொகையை நம்முடைய அமைச்சர் அவர்கள் கேட்கிறார்கள். இந்த வருஷம் நிர்வாகம் எப்படி நடந்திருக்கிறது என்பதைப் பார்த்து, அடுத்த வருஷத்திற்கு இவ்வளவு தொகை கொடுக்கலாமா என்பதைப்பற்றிச் சிந்திக்க வேண்டும். செலவு அதிகமாகப் போய்க் கொண்டிருக்கிறது. வருஷா வருஷம் புத்தகம் பெரியதாக ஆகிக் கொண்டிருக்கிறது. டெவலப்மெண்டு எகானமியில் அப்படித் தான் இருக்கும் என்று மந்திரி அவர்கள் சொல்லலாம். வளர்ந்து வரக்கூடிய பொருளாதாரத்தில் செலவு அதிகமாக ஆகிறது, அதற்குத் தான் இது அடையாளம் என்று சொல்லலாம். அதற்குத் தகுந்தாற்போல் வருமானமும் இருக்கிறது. நிர்வாகத்திற்கு ஆகக்கூடிய செலவை ஓரளவுக்கு அந்தந்த இலாகாவிலேயே வசூலிக்கக் கூடிய கொள்கை தான் இப்பொழுது இருக்கிறது. கனம் நிதி அமைச்சர் அவர்கள் 'நாங்கள் புதிய வரி ஒன்றுமே போடாமல் பட்ஜெட் தயாரித்து விட்டோம்' என்று சொன்னார்கள். சபையில் கையும் தட்டப்பட்டது. ஏற்கனவே போடப்பட்ட வரி ஒரு பக்கம் இருக்கட்டும். மத்திய அரசாங்கம் போட்ட புதிய வரி ஜனங்களைப் பாதிக்கக் கூடியது, இன்னொரு பக்கத்தில் இருக்கட்டும். பட்ஜெட்டில் புதிய வரி ஒன்றும் போடா விட்டாலும் ஜனங்களுக்குப் புரியாதப்வகையில், மறைமுகமாக தந்திரமாக ஜனங்களின் இரத்தத்தை உறிஞ்சக்கூடிய வகையில் வரி போடுவதில் நம்முடைய மந்திரி சபைதான் முதன்மை ஸ்தானம் வகிக்கிறது. ஸ்டாம்பு கட்டண வருமானத்தைப் பற்றி நண்பர் திரு. கோவிந்தசுவாமி அவர்கள் சொன்னார்கள். அந்த வருமானம் உயர்ந்திருப்பதற்கு அவர் ஒரு காரணம் கூறினார். அதுவும் ஒரு காரணம் தான். திடீரென்று வருமானம் உயர்ந்திருப்பதற்கு அவர் கூறியதும் ஒரு காரணம்தான். அதற்கு மேலே அந்த வருஷத்தில் வருமானம் ரூ. 4,83,00,000-ல் நிலைத்து நிற்கிறது. நிலங்கள் பிரிக்கப்பட்டு பரிவர்த்தனை செய்யப்பட்டதால் திடீரென்று வருமானம் உயர்ந்ததற்கு ஒரு காரணம் என்று சொன்னார். அதுவும் ஒரு காரணம் தான். ஆனால், எந்த டிபார்ட்மெண்டை எடுத்துக் கொண்டாலும் சரி, ஒரு காகிதம் உள்ளே போக வேண்டுமென்றால், அதற்கு ஸ்டாம்பு ஒட்ட வேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டு விட்டது. 1954–55-ல் ஸ்டாம்பு மூலம் வருமானம் ரூ. 2,52,00,000-ஆக இருந்தது, பிறகு ரூ. 4,83,00,000-ஆக அந்த அளவுக்கு உயர்ந்து அதில் நிலைத்து விட்டது என்பதைப் பார்க்கிறோம். எந்த டிபார்ட்மெண்டை எடுத்துக் கொண்டாலும், சாதாரணமாக ஹரிஜன மக்கள் தங்களுக்குக் குடிக்கும் தண்ணீர் கிடைக்கவில்லை, கிணறு வெட்ட வேண்டுமென்று கோரி 10, 20 கையெழுத்து வாங்கி ஒரு மனு கொடுத்தால் கூட, அதற்கும் ஸ்டாம்பு ஒட்ட வேண்டும் என்று சொல்லுகிறார்கள். விதி விலக்கு கொடுக்கலாம் என்று இருக்கிறது. ஆனால், அவர்களே பயந்து கொண்டு ஸ்டாம்பு ஒட்டிக் கொடுக்கிறார்கள். ஏனென்றால், இல்லாவிட்டால் காகிதங்கள் திருப்பி அனுப்பப்பட்டு விடுகின்றன. எம்.எல்.ஏ. ஸ்டாம்பு இல்லாமல் 'பெடிஷன் பிரசெண்டு' செய்யலாம் என்று இருக்கிறது. இருந்தாலும் நான் அனுப்பிய ஒரு மனுவை ஒரு டி.ஆர்.ஓ. ஸ்டாம்பு இல்லை என்று திருப்பி அனுப்பிவிட்டார். இம் மாதிரி பெடிஷனுக்கு ஸ்டாம்பு ஒட்ட வேண்டுமென்று சொல்லுவதற்கு இந்த சபையின் அனுமதி கிடையாது. சர்க்காருக்கு இருக்கிற நிர்வாக அதிகாரத்தை உபயோகப்படுத்தி சர்க்காருக்கு வரக்கூடிய ஒவ்வொரு காகிதமும் ஸ்டாம்பு ஒட்டி அனுப்பப்பட வேண்டும் என்று நீங்களே நிர்ப்பந்தப் படுத்துகிறீர்கள். ஜனங்கள் வேறு வழி இல்லை, பதில் கிடைக்க வேண்டுமே என்று ஸ்டாம்பு ஒட்டி அனுப்புகிறார்கள். ஜனநாயகத்தில் அரசாங்கத்திற்கு



ஸ்டாம்பு இல்லாமல் ஒரு கடிதம் எழுதி பதில் பெறுவதற்குக்கூட மக்களுக்கு உரிமை இல்லை. இம்மாதிரி ஸ்டாம்பு வரி போட்டுவிட்டு, புதியதாக ஒன்றும் வரி போடவில்லை என்று சொல்லுவது சரியல்ல. வேறு ரூபத்தில் வரி போடப்படுகிறது என்றுதான் சொல்லவேண்டும்.

அப்படிப் போட்ட வரியாவது ஜனங்களுக்கு நல்ல முறையில் உபயோகப்படுகிறதா என்று பார்த்தால் அதுவும் இல்லை. தாலூகா ஆபீஸ்கள் 20 வருஷங்களுக்கு முன்னால் எப்படி இருந்ததோ அதே நிலைமையில்தான் இப்பொழுதும் இருந்து கொண்டிருக்கிறது. தாலூகா ஆபீசுகளில் ஜனங்கள் வந்து உட்காருவதற்கோ அல்லது அதிகாரிகளைப் பார்ப்பதற்கோ பேசுவதற்கோ வேண்டிய வசதி கொஞ்சம்கூட கிடையாது. இரண்டு, மூன்று பேர்கள் சேர்ந்தாற்போல் தாசில்தாரைப் பார்க்க வந்துவிட்டால், நாற்காலி போடுவதற்குத் திண்டாடுகிறார்கள். 'சிப்பந்திகள்' உட்காருவதற்குக்கூட வசதி இல்லை. ஸ்டூல், பெஞ்சு ஆகியவைகளைப் போட்டுக் கொண்டு வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். தாலூகா ஆபீஸ், ஆர்.டி.ஓ. ஆபீஸ்களில் வேலை செய்யக் கூடியவர்கள் மேஜை, நாற்காலி இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். 'ஸ்டாப்' அதிகமாக்கப்பட்டாலும், அதற்குத் தகுந்தபடி மேஜை, நாற்காலி வாங்குவதில்லை. அதையெல்லாம் கொஞ்சம் கவனிக்க வேண்டும். என்.ஜி.ஓ.-வினர் என்று ஒரு ஜாதி, 'கெஜெடட் ஆபீஸர்' என்று ஒரு ஜாதி என்பது கூடாது. லைட் இருந்தால்கூட, என்.ஜி.ஓ.-வினருக்குச் சில காலங்களில் 'பான்' போடக் கூடாது என்று ஒரு விதி இருக்கிறது. அம்மாதிரி விதி இனி இருக்கக் கூடாது. அந்த ஏற்றத்தாழ்வு வேண்டியதில்லை. 'பான்' போடுவதென்பது அந்தஸ்துக்காக இல்லை. மின்சார விசிறி போட்டு வசதி செய்து கொடுப்பது ஒரு அந்தஸ்துக்கு அடையாளம் அல்ல என்று கருதுபவன் நான். பெரிய அதிகாரிகள் வேண்டுமானால் அவ்வாறு கருதலாம். சாதாரணமாக எல்லா ஊழியர்களுக்கும் அலுப்பு ஏற்படாமல் சுறுசுறுப்பாக வேலை செய்யும் பொருட்டு, வேலைத் திறமையை அபிவிருத்தி செய்வதற்கு செய்து கொடுக்கக்கூடிய வசதி என்று கருதி, எல்லா ஊழியர்களுக்கும் மின்சார விசிறி போட்டு வசதி செய்து கொடுக்க வேண்டும். அதில் அனுகூலம் இருக்கிறது. மின்சார விளக்கு, 'பான்' மேஜை, நாற்காலி, காகிதம், பென்சில் போன்ற வசதிகள் எல்லாவற்றையும் இந்த உத்தியோகஸ்தர்களுக்குச் செய்து கொடுக்க வேண்டும். காகிதம், பென்சில் போன்றவைகளை அவர்கள் சொந்தச் செலவில் வாங்க வேண்டிய நிலைமை சில சமயங்களில் ஏற்படுகிறது. ஸ்டாம்பு மூலம் வசூல் செய்யும் தொகையை நிர்வாகத்தில் வேலை செய்யக் கூடிய ஊழியர்களுடைய வசதியை பெருக்குவதற்காகச் செலவு செய்தால் பரவாயில்லை. ஏதோ சர்க்கார் கஜானாவுக்கு எந்த முறையில் பணம் வந்து சேர்ந்தாலும் சேரட்டும் என்று இப்படி வசூலித்துக் கொண்டு போகக் கூடாது என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

கலெக்டர்களுக்கு இப்பொழுது வேலை ரொம்ப ஜாஸ்தியாகப் போய் விட்டது. அவர்கள் காரியாலத்திலே இருப்பதே இல்லை, அநேகமாக எல்லா கலெக்டர்களும், கலெக்டரை அவசரமாகப் பார்க்க வேண்டுமென்றால், அவரைக் காரியாலயத்தில் நிச்சயமாக ப்பார்க்க முடியும் என்பதே கிடையாது. அநேகமாக 27, 28 நாட்கள் வெளியிலே தான் இருக்கிறார்கள். டூர் ப்ரொகிராம் பார்த்தால் தெரியும். அவர்கள் வெளியில் போய் என்ன வேலை செய்திருக்கிறார்கள், எதைக் கண்டு பிடித்திருக்கிறார்கள் ? மந்திரிகளோடு பழகிய சகவாச தோஷம் அவர்களை விடவில்லை. மந்திரிகளுடைய அரசியல் அவர்களையும் பிடித்திருக்கிறது. அவர்கள் அரசியல் பிரசங்கம் செய்கிறார்கள். இப்பொழுது டெவலப்மெண்டு வேலையையும் அவர்கள் கவனிக்கிறார்கள். அவர்களுக்கு ஜில்லா டெவலப்மெண்டு கமிஷனர் என்று வேறு பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. முன்போல் கலெக்டர் என்ற நிலை மாத்திரம் இல்லை. சர்க்காருடைய ஊழியர்கள் என்று அவர்கள் கருத வேண்டும். அதை விட்டு விட்டு அமைச்சர்கள் கொள்கைப்

படி, அவர்கள் சொல்லுகிறபடி வேலை செய்வது என்பது ரொம்ப ஆபத்து. அமைச்சர்கள் சொல்லக்கூடிய விதத்தில், அவர்கள் போகிற போக்கிலேயே காரியங்கள் செய்து கொண்டு போகும் நிலைமை மாறி, கலெக்டர்கள் சுயேச்சையாக மனச்சாட்சிப்படி நடப்பதற்கு உள்ள நிலைமை இருக்க வேண்டும். எதிர்க்கட்சியினருக்கு அனுகூலம் காட்ட வேண்டுமென்று சொல்லவில்லை. அமைச்சர்களாக இருந்தாலும் சரி, எம்.எல்.எ.-வாக இருந்தாலும் சரி, எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி, அரசியல் வாதியாக இருந்தாலும் சரி, யாருக்கும் பயப்படாத வகையில் சுயேச்சையாகப் பணி புரிய வேண்டும். அமைச்சர் கலெக்டருக்குத் தந்தி கொடுத்து இந்த காங்கிரஸ் தலைவரைப் பார்த்து ப்ரொகிராம் போட்டு அனுப்ப வேண்டுமென்று சொன்னால், உடனே கலெக்டர் எழுந்திருந்து அவர் வீட்டுக்கு ஓடுகிறார். அந்த நிலை இருக்கக்கூடாது, அப்படியிருந்தால் அவர்கள், எப்படி அவர்களுடைய மனச்சாட்சிப்படி வேலை செய்ய முடியும்? அந்த நிலை ஏற்படாமல் அமைச்சர் இதைக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். கலெக்டர்கள் சுற்றுப் பிரயாணத்தைக் குறைத்துக் கொண்டு, நிர்வாக வேலைகளில் இன்னும் அதிகமாகக் கவனம் செலுத்த வேண்டும். ரெவின்யூ பகுதி வேலையைக் கவனிக்க ஜில்லா ரெவின்யூ ஆபீசர்கள் நியமிக்கப்பட்டு அந்த வேலை அவர்களால் கவனிக்கப்படுகிறது. மற்ற டெவலப்மெண்டு வொர்க்ஸ் கூட, அதாவது அபிவிருத்தித் திட்டங்கள் சம்பந்தமான வேலைகளை எடுத்துக்கொண்டால்கூட, கலெக்டர்கள் பேப்பர்களை துரிதமாகப் பார்த்து நடவடிக்கை எடுத்து வேலை செய்யக்கூடிய நிலைமை ஏற்படவில்லை. சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டு அவர்களும் அரை மந்திரிகளாக ஆகிவிட்டார்கள். கல்நாட்டு விழா, திறப்பு விழா, பிரசங்கங்கள், இவைகளிலே அதிகக் கவனம் செலுத்துகிறார்கள். அதிகார முறையிலே அதிகார வரம்புக்கு உட்பட்டுச் செய்யலாம். அதை நான் ஆட்சேபிக்கவில்லை.

இந்த மாண்யத்திலே ரூ. 6,50,000 "பப்ளிசிடி அண்டு பிராபகாண்டா" என்ற தலைப்பில் அமைச்சர் அவர்கள் கேட்கிறார்கள். நமது ராஜ்ய சர்க்காரிலே பப்ளிசிடி டிபார்ட்மெண்ட் ஒன்று இருக்கிறது. அதிலே சில காங்கிரஸ்காரர்களை வைத்திருக்கிறார்கள். அவர்கள் காங்கிரஸ் பிரசாரம் செய்கிறார்கள். காங்கிரஸ் கட்சி நலனுக்காகவே அந்த இலாகா உபயோகப்படுத்தப்படுகிறது. எது அரசாங்கத் திட்டம், எது கட்சித் திட்டம் என்று பிரிக்க முடியாத நிலையிலே கஷ்டப்படுகிறோம் என்று கனம் நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் கஷ்டம் ஒரு புறம் இருக்கட்டும். இந்த 6 லட்சத்தை என்ன பண்ணப்போகிறார்கள் என்று கேட்கிறேன். ஜில்லாக்களிலே ஊழியர்களைத் தயார் பண்ணி எதிர்க்கட்சிகளுக்கு விரோதமாகப் பிரசாரம் பண்ணுவதற்காக இந்தப் பணத்தை வைத்துக்கொண்டு சப்சிடி கொடுக்கப்போகிறார்களா ? பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன, டெவலப்மெண்ட் கவுன்சில்கள் இருக்கின்றன. எம்.எல்.எக்கள் இருக்கிறார்கள், அதிகாரிகள் இருக்கிறார்கள். இவர்கள் செய்யும் விளம்பரம் போதாதா ? இந்த 6 லட்சம் ரூபாயை கிணறுகள் வெட்டுவதற்கோ, சாலைகள் போடுவதற்கோ, வேறு நல்ல காரியங்களுக்கோ உபயோகிக்கலாமே. ஆகவே இந்த 6 லட்சம் ரூபாயை இதிலிருந்து விலக்கி விடவேண்டும். இந்த மாதிரி புது ஸ்கீம்களைப் போட்டு ஜில்லாக்களிலே குழப்பத்தை உண்டாக்க வேண்டாம். இப்பொழுது நடைபெறுகிற பிரசாரத்தில் ஏற்பட்டுள்ள குழப்பம் போதும். இன்னும் குழப்பத்தை அதிகப்படுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜில்லா அதிகாரிகளுடைய வேலை நன்றாக நடக்க வேண்டுமென்று சொன்னால், சர்க்கார் போடுகிற விதிகளைப் பற்றிய தெளிவு அவர்களுக்கு இருக்கவேண்டும். இப்பொழுது யாருக்குமே தெளிவு இருப்பதில்லை. என்னென்ன சட்டங்கள் இயற்றப்படுகின்றன என்று படிப்பதற்குக்கூட



நேரம் இல்லை. ஜில்லா அதிகாரிகளுக்குப் பல பிரிவுகளிலிருந்து உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன. ஒவ்வொரு இலாகாவிலிருந்து உத்தரவு போகிறது. டெவலப்மெண்ட் கமிஷனரிடமிருந்து உத்தரவு போகிறது. எது லேட்டஸ்ட் உத்தரவு என்று அதிகாரிகளுக்குத் தெரியவில்லை. எந்த இலாகாவிலிருந்து உத்தரவு வந்திருக்கிறது, வரக்கூடிய தபால்கள் என்ன, போகக்கூடிய தபால்கள் என்ன என்று பார்ப்பதற்கும் கூட நேரம் இல்லை. பல சட்டங்களின் கீழ் பிறப்பிக்கக்கூடிய விதிகளை சர்க்கார் சீக்கிரத்தில் தொகுத்து அனுப்புவதில்லை. பஞ்சாயத்துச் சட்டம் சம்பந்தமாக விதிகளைத் தொகுத்து அனுப்புவதற்கு இன்னும் ஏற்பாடு செய்யப்படவில்லை. பிரிவு பிரிவாக அனுப்பப்பட்டு வருகிறது. இதனால் அதிகாரிகளுக்கும் சங்கடம் ஏற்படுகிறது. ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒவ்வொரு தினுசாக நடந்து கொண்டிருக்கிறது. போர்டு ஸ்டாண்டிங் ஆர்டர்களை இப்பொழுது இருக்கிற நிலைமைக்குத் தகுந்தவாறு எப்படி மாற்றி அமைக்கலாம் என்று பரிசீலனை செய்ய ஒரு விசேஷ குழுவை அமைக்க வேண்டுமென்ற யோசனையை நான் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஜில்லா நிர்வாகம் எவ்வளவு திறமையாக நடக்கிறதோ அதைப் பொறுத்து தான், அபிவிருத்திக்காக ஒதுக்கப்படுகிற பணத்தை நியாயமாகச் செலவு செய்வதற்கும், அதனால் மக்கள் முழுப் பலனை அடைவதற்கும் முடியும். ஜில்லா நிர்வாகம் அவ்வளவு திறமையாக நடப்பது இல்லை. அதிகமான லஞ்ச ஊழல்கள் இருக்கின்றன என்று சொன்னபோது, கனம் நிதி அமைச்சர் அவர்களுக்குக் கோபம் வந்தது. குறிப்பிட்டுச் சொல்ல முடியுமா என்று கேட்டார். எதை என்று குறிப்பிடுவது ?. அபூர்வமாக இங்கே ஒன்று, அங்கே ஒன்று இருந்தால் சொல்ல முடியும் ? இந்த ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் லஞ்சம் வாங்குவதைப் பற்றி நான் சொல்லவில்லை. பெர்மிட்டுகள், லைசென்சுகள் வழங்குவதிலே ஏற்படுகிற லஞ்சத்தைப் பற்றித்தான் சொல்லுகிறேன். இவற்றையெல்லாம் பார்த்துச் செய்யவேண்டும். ஸ்பெஷல் பிராஞ்சு போலீசை அனுப்பித்து எங்கெங்கே என்ன நடக்கிறது என்று கண்டு பிடிக்க வேண்டும்.

பஞ்சாயத்து யூனியன்களுக்கு பர்னிச்சருக்காக 10 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 396 பஞ்சாயத்து யூனியன்கள் இருக்கின்றன. ஒவ்வொன்றுக்கும் 2,500 ரூபாய் தான் கிடைக்கும். அதை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எல்லாப் பஞ்சாயத்துக்களுக்கும், புதிதாக ஏற்படுத்தப்பட்ட பஞ்சாயத்துக்களுக்கும், உடனடியாக தேவைக்கு வேண்டிய பணத்தை ஒதுக்கவேண்டும். பஞ்சாயத்துக்களுக்கு வருமானம் வரக்கூடியது எண்டெர்டெயின்மெண்ட் டாக்ஸ். சினிமாக் கொட்டகைகளிலே வசூலுக்காக இரண்டு கணக்குகள் வைக்கப்பட்டிருக்கின்றன. டிக்கட்டுகள் விற்பதற்கு ஒரு கணக்கு. அதே டிக்கட்டுகளை உள்ளே போகும் இடத்தில் கொடுக்காமல் மறுபடியும் கொண்டு வந்து விற்கிறார்கள். இரண்டு விதமான டிக்கட்டுகள் விற்கப்படுகின்றன. பஞ்சாயத்து வருமானம் குறைகிறது. இப்பொழுது சினிமாக் கொட்டகைகள் அதிகரித்துக் கொண்டு வருகின்றன. ஜனங்களுடைய பணம் தான். கொட்டகைக்காரர்களுக்குப் பாதியும் அதிகாரிகளுக்குக் கொஞ்சமும் என்கின்ற முறையிலே இந்த வரிப் பணம் பங்கு போட்டுக் கொள்ளப்படுகிறது. இதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். பஞ்சாயத்துக்கள் திறமையாக வேலை செய்ய வேண்டுமானால், கலெக்டருக்கு அதிகாரத்தை மாற்றிக் கொடுத்து விட்டால் மட்டும் போதாது. இந்தச் சபையிலேயே பல தடவை சொல்லியிருக்கிறேன். பஞ்சாயத்துகளுக்குக் கொடுக்க வேண்டிய புத்தகங்கள், பாரம்கள் இன்னும் போய்ச் சேரவில்லை என்ற புகார் வருகிறது. இந்த பஞ்சாயத்துக்கள் திறமையாக இயங்குவதற்கு இந்த விதிகளை எல்லாம் தொகுத்து, அவைகளுக்குத் தேவையான புத்தகங்களையும், மற்ற வெளியீடுகளையும் அனுப்பிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு விஷயத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். ரெவின்யு இலாகா அதிகாரிகள் எம்.எல்.ஏக்கள் அனுப்புகிற கடிதத்திற்காவது பதிலளிக்க வேண்டும். கலெக்டர்களுக்கும், மற்ற அதிகாரிகளுக்கும் எழுதின கடிதங்களுக்குப் பதிலே வருவது கிடையாது. என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்று தெரியவில்லை. கால தாமதம் ஆனாலும் ஒருவாறு புரிந்து கொள்ள முடியும். செக்ரடேரியட்டுக்குக் கடிதம் எழுதினாலாவது, 6 மாதங்களுக்குப் பிறகு இல்லை என்ற பதில் வருகிறது. முதலிலே அக்நாலெட்ஜ்மெண்ட் வருகிறது. ஆனால் கலெக்டரிடமிருந்து அக்நாலெட்ஜ்மெண்டு கூட கிடையாது. மேலே எடுத்த நடவடிக்கைகளைப் பற்றித் தெரிந்து கொள்ள சந்தர்ப்பம் கிடையாது. சாதாரண ஜனங்கள் கொடுக்கக்கூடிய மனுக்கள் எல்லாம் வேஸ்ட் பேப்பர் பாஸ்கெட்டிலே போகக் கூடிய நிலையில் இருக்கின்றன. அப்படியே நடவடிக்கைகள் எடுத்தாலும் எல்.டி. போட்டு அனுப்பி விடுகிறார்கள். பைல் தீர்ந்தது என்கிற நிலையிலே வேலை நடந்து கொண்டிருக்கிறது. எம்.எல்.ஏக்கள் டெவலப்மெண்ட் கவுன்சில் மெம்பர்கள், பஞ்சாயத்து சேர்மன் ஆகியவர்கள் எழுதுகிற கடிதங்களுக்கு உடனடியாகப் பதில் அளிக்க வேண்டும். நடவடிக்கையும் எடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக நிலம் மாற்றிக் கொடுப்பதிலே தாமதம் ஏற்படுகிறது. சர்க்கார் கடனுக்கு வட்டி கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பார்க், மார்க்கெட் இவைகளுக்கு நிலம் கொடுக்கும்போது, ரெவின்யு டிபார்ட்மெண்டிலே காலதாமதம் ஏற்படுகிறது. நிலத்திற்குள் பிரவேசிக்க முடிவதில்லை. துரிதகமாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**Sri V. K. RAMASWAMY MUDALIYAR :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மானியத்தின் மீது கொண்டுவரப்பட்ட வெட்டுப் பிரேரணையே நான் ஆதரிக்கிறேன். இந்த மானியத்தின் மீது அநேக அங்கத்தினர்கள் பேசினார்கள். முக்கியமாக, ஆளும் கட்சியிலுள்ள அங்கத்தினர்கள் இந்த இலாகாவிலே மாமூலாக இருந்து வரும் கஷ்டங்களை எல்லாம் சொன்னார்கள். குறிப்பாக, டிலேயைப் பற்றிச் அடிக்கடி சொல்லியிருக்கிறோம். கனம் அமைச்சர் அவர்கள் சுற்றுப் பிரயாணம் செய்யும்பொழுது, கலெக்டர், ஆர்.டி.ஓ., தாசில்தார்களுடன் போகிறார்கள். இவர்களை வைத்துக் கொண்டு ஒவ்வொரு முகாமிலும், எவ்வளவு பேப்பர்கள் வந்தன, எவ்வளவு பைசல் செய்தார்கள், எவ்வளவு தாமதம் ஏற்படுகிறது என்பதை யெல்லாம் பரிசீலனை செய்ய வேண்டும். இதை அடிக்கடி சொல்லுவதில் பிரயோசனம் இல்லை. உடனடியாக தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். ரெவின்யு போர்டு மெம்பர்களும் சுற்றுப்பிரயாணம் செய்கிறார்கள். அவர்களும் பேப்பர்கள் என் டிலே ஆகிறது, தாமதத்திற்குக் காரணம் என்ன என்று கீழேயுள்ள அதிகாரிகளை
1 p.m. எச்சரிக்கை செய்ய வேண்டும். உதாரணமாக சினிமா லைசென்ஸ், ரைஸ் மில் லைசென்ஸ் இவைகளை எடுத்துக் கொண்டால், இரண்டு வருஷ காலமாக பேப்பர்கள் குவிந்து கிடக்கின்றன. மக்கள் கஷ்டப்படுகிறார்கள். அதைத் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். எங்கும் ரிஜிஸ்டர்கள் சரிவர வைத்துக் கொள்வதில்லை ; ரசீதுகள் சரிவரக் கொடுக்கப்படுவதில்லை அப்ரோப்ரியேஷன் அக்கௌண்டிலே 1958–59-ம் வருஷத்திலே 83-ம் பக்கத்தில் 1,65,000, 1,31,000 ரூபாய்களுக்கு ரசீதும் கொடுக்கப் படவில்லை, தக்க நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்று இருக்கிறது. இம்மாதிரி ஊழல்களைத் தவிர்க்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். லஞ்ச ஊழல்கள் என்று சொல்லும்போது, சரிவர இன்னின்ன என்று சொன்னால் தானே என்று கனம் நிதி அமைச்சர் கூடச் சொன்னார்கள். சாதாரணமாக இருந்தது வெள்ளையர் இருந்த காலத்தில். இன்றைக்கு சுதந்திரம் அடைந்த பிறகு அது அதிகமாகிக் கொண்டே போகிறது





இப்படி எல்லா அதிகாரிகளும் வாங்குகிறார்கள் என்று சொல்லவில்லை. சில அதிகாரிகள் வாங்குகிறார்கள். அவர்களை ஸி.ஐ.டி.—யை வைத்து கண்டு பிடித்து தக்க நடவடிக்கை எடுத்து இம்மாதிரி ஊழல்களைத் தவிர்க்க வேண்டும். இதைப் பற்றி அமைச்சர் எங்களைத் திட்டவட்டமாகச் சொன்னால் தான் என்று சொல்வது பிரயோஜனம் இல்லை என்று சொல்ல விரும்புகிறேன்.

இந்த ரெவின்யூ டிபார்ட்மெண்டில் பழைய மாதிரியே தான் எல்லாம் நடத்துகிறார்கள். அங்கிருந்து வரும் கடிதங்கள் பெரிய கட்டளையாக வருகிறது. அநேகம் பேர்கள் வரி செலுத்திய பிறகு கூட நோட்டீஸ் வருகிறது. அதில், "**Show cause why you should not be prosecuted?**", "**So and so is directed to appear before me**" **like this,** என்று இம்மாதிரி பழைய ரீதியிலே தான் வருகிறது. இருக்கலாம், நோட்டீஸ் கொடுக்க வேண்டியது அவசியம், ஆனால் அதை கொஞ்சம் சாந்தமாக போடக் கூடாதா ? நாகரீகம் முற்றி வரும் இந்தக் காலத்தில் பணிவாக இருந்தால் நலமாக இருக்கும். ஆகவே, இந்தப் பாரங்களை மாற்றி அமைக்க முடியுமா என்று பார்க்க வேண்டும். இம்மாதிரி வந்ததாக அமைச்சர் கூட சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பழைய முறை மாறவேண்டும்.

ரெவின்யூ டிபார்ட்மெண்டிலே, மற்ற டிபார்ட்மெண்டிலே கூட, அந்த ஆபீசர்கள் ஒரே இடத்தில் இருக்கும்படி செய்ய வேண்டும். ஜில்லா ஆபீசர்கள், சப்-டிவிஷனல் ஆபீசர்கள் இவர்கள் கூட, தங்கள், தங்கள் இடத்திலேயே வசிக்கக் கூடிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்.

ரெஜிஸ்ட்ரேஷன் டிபார்ட்மெண்டை எடுத்துக் கொண்டால், அந்த அதிகாரிகள் ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு பிரமோஷனே கிடையாது. அவர்களை வேறு டிபார்ட்மெண்டுகளில் எடுத்துக்கொள்வதும் கிடையாது. அந்த இலாகாவில் இருந்து விட்டால், வேறு டிபார்ட்மெண்டார் எந்த இலாகாவிற்கும் லாயக்கில்லை என்று கருதுகிறார்களா என்று தெரியவில்லை. இந்த ரெஜிஸ்ட்ரேஷன் செய்வதை ஒரு "மொபைல் ரெஜிஸ்ட்ரேஷனாக" வைத்து வாரத்திற்கு ஒரு முறை இன்னின்ன இடம் என்று பிரித்துச் செய்தால் உள்புறங்களில் இருக்கும் போக்குவரத்து வசதியே இல்லாத இடங்களுக்கும் சௌகர்யமாக இருக்கும். அதை பிர்க்காவாரியாகக் கூடச் செய்யலாம். அப்படிச் செய்தால் மக்களுக்கும் திருப்தியாக இருக்கும். முன்னே ஒரு நடுத்தர உத்தியோகஸ்தர் இருந்தார், இன்ஸ்பெக்டர் ஆப் ரெஜிஸ்ட்ரேஷனுக்கு உதவியாக. அது இப்பொழுது இல்லை. அந்த போஸ்டை மறுபடியும் போட்டால் சுற்றுப் பிராயணம் செய்து சமாசாரங்களை அறியவும், அட்மினிஸ்ட்ரேஷனை டோன் அப் செய்ய அது உதவியாக இருக்கும். அந்த டிபார்ட்மெண்டிலே பீஸ் வாங்குவது ஒரு கம்பர்ஸம் ப்ரொஸிஜராக **(Cumbursam procedure)** இருக்கிறது. இந்த விதியைத் திருத்தி "ரூ. 100 அண்ட் ப்ராக்ஷன் தேராப்," என்று போட்டால் தொந்தரவுகள் தொல்லைகள் இருக்காது. ரெஜிஸ்ட்ரேஷன் ஆபீசுக்கெல்லாம் இடவசதி சரியாக இல்லை. அங்கெல்லாம் லெட்டுகள் கூடக் கிடையாது. அங்கே போகும் பொது மக்களுக்கும் உட்காரக் கூட இடம் கிடையாது. இரவில் 6 அல்லது 7 மணி வரை அவர்களும் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. நான் கேள்விப் பட்டேன். வட ஆற்காடு ஒரு பிர்க்காவில் அநேகம் பேர் தங்கள் சொந்த லாந்தர்களைப் கொண்டுவந்து கொடுத்தார்களாம். அப்படி இருந்தால் அது வெட்கப்பட வேண்டிய விஷயம். (மணியடிக்கப்பட்டது) ஒவ்வொரு பிராந்தியங்களில் போதுமான வசதிகள் இல்லை. அதையும் கவனித்து, முக்கியமாக நாங்கள் சொல்லும் குறைகளைக் கவனித்து, யோசனைகளை எடுத்துக் கொண்டு நல்லவிதமாகப் பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன்.

**The Hon. Sri V. RAMAIAH** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நான்கு வருஷங்களுக்குப் பிறகு இந்த ஆண்டில் இந்த ரெஜிஸ்ட்ரேஷன் இலாகா மான்யத்தை விவாதிக்க செய்ய அரை மணி நேரம் ஒதுக்கிக் கொடுத்தார்கள். அந்த அரை மணி நேரம் கூடக் கிடைக்காமல் போய் விட்டது. இருந்தாலும் இதிலே மூன்று, நான்கு அங்கத்தினர்கள் கலந்து கொண்டு இருக்கிறார்கள். குறிப்பாக, கனம் எதிர்க் கட்சித் தலைவர், தலைவர் என்றே சொல்லுகிறேன். கனம் ராமசாமி முதலியார் அவர்கள் கொஞ்சம் விரிவாகவே இந்த இலாகாவைக் குறித்துப் பேசினார்கள். இந்த இலாகாவைப் பொறுத்த வரையில் அங்கத்தினர்கள் மத்தியில், பொது மக்கள் மத்தியில் இருக்கக்கூடிய நினைப்பு என்னவென்றால், சாதாரண கிராம வாசிகளுக்கு அதிகம் தொண்டு செய்யும் இலாகா, தங்களுடைய தேவைகளை இன்னும் கிராமவாசிகளுக்கு நல்ல முறையிலே செய்து கொடுக்க வேண்டும். இந்த இலாகாவிற்குக் கிளை ஸ்தாபனங்கள் அதிகமாக வேண்டும் என்ற கருத்து இருக்கிறது. அதே நேரத்திலே இந்த இலாகாவை நன்றாகப் புரிந்து கொண்ட ஸ்ரீ கே. ஆர். விஸ்வநாதன், அவர்களே சப்-ரிஜிஸ்ட்ராராக இருந்தவர்கள், குறிப்பிட்டார்கள், சமீப காலம் வரை அரசாங்கம் அதிகமாக அபிவிருத்தி வேலைகளுக்கு அக்கறை காட்டிய காரணத்தினால், இந்த இலாகாவினுடைய விஸ்தரிப்பைப் பற்றி அதிகம் கவனம் செலுத்தவில்லை என்று நிலையைச் சொன்னார்கள். ஆனால், கடந்த இரண்டு, மூன்று வருஷ காலமாக இந்த இலாகாவின் அமைப்பையும், இந்த இலாகா மீது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையையும் நன்றாக நான் புரிந்து கொண்ட காரணத்தினால், சமீபத்தில் மற்ற இலாகா அதிகாரிகளை அழைத்து மக்கள் தேவைகளை, விருப்பங்களை வலியுறுத்திச் சொன்னதினால், இந்த வருஷத்திலிருந்து, இந்த இலாகாவும் அபிவிருத்தி வேலைகளில் சம்பந்தப்பட்ட இலாக்காக்களில் ஒன்று என்று ஒப்புக் கொண்டிருக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது ; வருகிற நிதி ஆண்டிலிருந்து இது எப்படி வேலை செய்யும். வரும் வருஷத்தில் அது புதிய சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ்கள் ஆரம்பம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், அந்தப் பட்டியலில் பார்க்கும்போது, கனம் விஸ்வநாதம் சொன்ன ஊர் அதில் இல்லை. ஆனால் இந்தப் பொதுக் கருத்தை ஏற்றுக்கொண்டு, இதற்குப் பிறகு துரிதமாக வரும் வருஷங்களிலே, மக்கள் விருப்பத்திற்கு இணங்க சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ்கள் துவங்கப்படும். இன்றைக்கு ஆறு ஆபீஸ்கள் புதிதாக அமைக்கப்படும் ; அவை, (1) மோகனூர், சேலம் ஜில்லா, (2) தாம்பரம், செங்கல்பட்டு ஜில்லா, (3) காரியாப்பட்டி, ராமநாதபுரம் ஜில்லா, (4) பால்கோல், கன்யாகுமரி ஜில்லா, (5) முதுக்கூர், தஞ்சாவூர் ஜில்லா, (6) காயல்பாடி, ராமநாதபுரம் ஜில்லா, ஆக, ராமநாதபுரத்திற்கு இரண்டு ஆபீஸ்கள். இந்த ஆறு இடங்களில் புது சப்-ரெஜிஸ்ட்ரார்கள் ஆபீஸ்கள் திறக்கப் போகிறார்கள். இன்னும் இந்த இலாகாவில் திரு. விஸ்வநாதனுக்குத் தெரியும், கனம் எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராமசாமி முதலியார் அவர்களும் சொன்னார்கள். இந்த இலாகாவில் யாரேனும் புகுந்து கொண்டால், ஒரு நல்ல காலமே வராதோ என்று சந்தேகம் எல்லோருக்கும். அப்படி இரண்டு, மூன்று வருஷங்களாக சப்-ரெஜிஸ்ட்ரார்களும் திரும்பத் திரும்பச் சொல்லி, அவர்கள் கஷ்டங்களைப் பரிசீலனை செய்யும் போது, அரசாங்கம் ஒரு பே கமிஷனை நியமித்தார்கள். ஆகவே இந்த இலாகா சம்பந்தப்பட்ட பிரச்னையும் அவர்களிடம் விடப்பட்டது ; நான் தனிப்பட்ட முறையில் எதுவும் செய்ய வேண்டிய அவசியம் இருக்கவில்லை. பே கமிஷன் முடிவுக்குக் காத்திருந்தோம். அந்த பே கமிஷனும் நல்ல முடிவுக்கு வந்திருக்கிறார்கள். இம்மாதிரி 1951-ம் வருஷத்திலேயே கொடுத்திருந்தால், கனம் விஸ்வநாதம் அரசியலிலேயே வந்திருக்கமாட்டார்கள். அவர்களைப் பொறுத்த வரையில் இந்த இலாகாவில் புகுந்து கொண்டால் நல்ல காலம் கிட்டாது என்று சப்-ரெஜிஸ்ட்ரார் பதவியை விட்டிருக்கலாம். ஆனால், தனிப்பட்ட முறையில் நமக்கு அது ஒரு பெரிய லாபம் என்றே நான் கருதுகிறேன். சட்ட சபை அங்கத்தினர்



களுள் மிகவும் பின் தங்கிய பகுதியினருக்கு, பின் தங்கிய மக்களின் பிரச்னைகளைத் தைரியமாக எடுத்துக் கூறும் ஒரு அங்கத்தினரைப் பார்க்க வேண்டுமானால், அது திரு. விஸ்வநாதன் அவர்கள். ஆகவே, அன்று சம்பளம் குறைந்து இருந்ததே, விஸ்வநாதனைப் பொருத்து வரை நல்லதாகப் போய்விட்டது என்று கருதுகிறேன். அவர்கள் பட்ட கஷ்டத்தால், பே கமிஷன் உயர்வுகளும் போதாது என்று சொல்லுகிறார்கள். இப்பொழுது இருக்கக்கூடிய சப்-ரிஜிஸ்ட்ரார்கள் நிலையில் உயர்வு காண மூன்றில் ஒரு பங்கு சப் ரெஜிஸ்ட்ரார்கள் "பர்ஸ்ட் கிரேட்" ஆக ஆக்க வேண்டும் என்ற் ஒரு முடிவை சொல்லுகிறார்கள்.

அந்த முடிவையும் அரசாங்கத்தார் ஒப்புக் கொண்டு வரக்கூடிய நிதி வருஷத்தில் இருந்து 34 செகண்டு க்ரேட் சப் ரிஜிஸ்ட்ரார் பதவிகளை பர்ஸ்ட் க்ரேட் சப்-ரிஜிஸ்ட்ரார் பதவிக்கு உயர்த்தியிருக்கிறது. அதனால் அந்த அதிகாரிகள் வருஷா வருஷம் ஒன்று கூடி கோரிக்கை விடுவது போல இந்த வருஷம் விடுவதற்கில்லை. நிச்சயமாக கனம் அங்கத்தினர்களுக்குச் சொல்லிக்கொள்வேன். இது ஒரு புறக்கணிக்கப்பட்ட இலாகா என்று இது வரையில் சொல்லப்பட்டு வந்தது போல இனி இருக்காது.

இது வரையில் இரண்டு கஷ்டங்களை நிவர்த்தி செய்திருக்கிறோம். பே கமிஷன் ரிப்போர்ட் வந்த பிறகு ஓரளவு அந்த இலாகாவிலும் நான்கு லோயர் டிவிஷன் க்ளார்க்குக்கு ஒரு அப்பர் டிவிஷன் கிளார்க் கொடுப்பது என்று தீர்மானித்து கிட்டத்தட்ட 137 லோயர் டிவிஷன் க்ளார்க் பதவிகள் அப்பர் டிவிஷன் க்ளார்க் பதவிகளாக மாற்றப்பட்டிருக்கிறது. கனம் வி. கே. ஆர். குறிப்பிட்டது போல இனிமேல் அந்த இலாகா புறக்கணிக்கப்பட்ட இலாகாவாக இருக்காது.

அதோடு அநேக அபிவிருத்தி வேலைகள் நடந்து கொண்டிருக்கும்போது அதற்கேற்ற முறையில் இந்த இலாகாவும் நல்ல முறையில் செயல்பட்டாக வேண்டும். அதுவும் புல் பினான்ஷியல் ஸ்கீம் அமுலுக்கு வந்துள்ள இடங்களில் ரிஜிஸ்ட்ரேஷன் ஆபீஸ் ஒழுங்காக செயல்பட்டால் தான் விவசாயிகளுக்கும், மற்றவர்களுக்கும் சௌகர்யமாக இருக்கும் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

திரு. சுப்பையா கூட ஒரு பெரிய கருத்தைச் சொன்னார்கள். தலை நகரங்களில் இருக்கும் காரியாலயங்களில் சிலவற்றைக் கட்டிடங்கள் அதிகமாக இருக்கிற வேறு ஊர்களுக்கு மாற்றலாமே என்றார். குறிப்பாக ரிஜிஸ்ட்ரேஷன் இலாகாவை இங்கிருந்து வேறு ஊருக்கு மாற்றலாம் என்றார். இந்தக் கருத்து நீண்ட காலமாக இருக்கக்கூடியதுதான். இங்கே கட்டிடக் கஷ்டம் இருப்பதனால் எங்கே வசதியாகக் கிடைக்கிறதோ அங்கே மாற்றலாம். இதைக்கூட அதிகாரிகள் நன்றாகப் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (ஒரு அங்கத்தினர் புதுக்கோட்டைக்கா ?) புதுக்கோட்டைக்கோ, கானாடுகாத்தானுக்கோ போகவேண்டுமென்று நான் அபிப்பிராயப்படவில்லை. எனக்காக என்று ஓரிடத்திற்குப் போக வேண்டாம். செட்டி நாட்டை எடுத்துக் கொண்டால் உண்மையிலேயே பெரிய பெரிய கட்டிடங்கள் எல்லாம் காலியாகக் கிடக்கின்றன. அவற்றை இடிக்கிறார்கள். இது பெரிய தேசிய நஷ்டம். இந்த மாதிரியான கட்டிடங்கள் வசதியாக உள்ள இடங்களுக்கு மாற்றலாம்.

இப்படி அந்த இலாகாவை ஒழுங்குபடுத்துவதற்கு, எல்லா விதமான நடவடிக்கைகளும் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த இலாகா சம்பந்தமான விஷயங்களைப்பற்றி விவாதிப்பதற்குக் கொஞ்சமாவது நேரம் கிடைத்தது பற்றி எனக்குச் சந்தோஷம். இனி அடுத்த ஆண்டில் இருந்து 2 மணியாவது இதற்கென்றே ஒதுக்கி விவாதிப்பதற்கு வழி செய்தால்

மிகவும் நன்றாக இருக்கும். இதனால் அவ்விலாகாவில் உள்ளவர்களுக்குக் கூட ஊக்கம் எற்படும். ஆகவே இவ் விலாகாவுக்காகக் கோரப்பட்டிருக்கிற மானியத்திற்கு வெட்டுப் பிரேரணை வேண்டும். திரு. கோதண்டராமன் அவர்கள் நம்முடைய வெட்டுப் பிரேரணையைக் கூட வற்புறுத்தக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

**The Hon. Sri M. A. MANICKAVELU :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நான் பதில் அளிக்க 45 நிமிஷம் வேண்டுமென்று கேட்டேன். அப்புறம் அரை மணி சொன்னார்கள். இப்போது அதுவும் குறைந்து இருபது நிமிஷமாகிவிட்டது. குறிப்பிட்ட நேரத்திற்குள் எல்லாவற்றையும் சொல்ல முடியாது. இருந்தாலும் சொல்லிக்கொண்டே போகிறேன். எங்கே நிறுத்தச் சொன்னாலும் நிறுத்துவதற்குத் தயார்.

**DEPUTY SPEAKER : If necessary we can sit for some more time.**

**Th Hon. Sri M. A. MANICKAVELU :** இந்த மானியத்தின் மீது பல விஷயங்கள் பேசப்பட்டன. எல்லா விஷயங்களுக்கும் பதில் சொல்ல இந்தக் காலத்திற்குள் முடியாது. பொதுவான விஷயங்களை விஸ்தாரமாகச் சொல்லிவிட்டு அப்புறம் ஒவ்வொரு அங்கத்தினரும் என்ன என்ன சொன்னார்கள் என்று சொல்லுகிறேன்.

முதலில் நிலம் ஜாரி செய்கிற விஷயமாக அநேகம் பேர் பேசினார்கள். அதைப்பற்றி கொஞ்சம் விளக்கமாகச் சொல்ல வேண்டியது அவசியமாக இருக்கிறது. நிலம் கொடுக்கிறது, 1952-க்கு முன்னே ஒரு விதி இருந்தது. முதலில் தியாகிகளுக்கு நிலம் கொடுக்க வேண்டுமென்று இருந்தது. அதை அப்புறம் மாற்றி நிலம் இல்லாத ஏழைகளுக்குக் கொடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. நிலம் இல்லாத ஏழைகள் என்கிறபோது தியாகிகள், ஹரிஜனங்கள், எக்ஸ் ஸர்விஸ்மென் எல்லோரும் வந்து விடுகிறார்கள் என்ற அடிப்படையில் அவர்களுக்குக் கொடுக்கிறது. புறம்போக்கு என்றால் அதிலே மேய்ச்சல் புறம்போக்கு, டாங்க் பெட், எரி பெட், கிராம நத்தம் எல்லாம் வருகிறது. அதை வால்யுபில் நான் வால்யுபில் என்று இரண்டாகப் பிரித்து நான் வால்யுபில் எல்லோருக்கும் கொடுக்கப்படுகிறது. வால்யுபில் என்கிறபோது கொஞ்சம் பணம் கொடுக்கிறவர்களுக்கு அல்லது ஏலத்தில் விடப்படுகிறது. வால்யுபில் என்பது நீர்ப்பாசன வசதி உள்ள நிலம். நான் வால்யுபில் என்பது பாசன வசதி அற்றது. இந்த நிலம்கூட ஒருத்தருக்கு 5 எக்கரா வீதம் கொடுக்கப்படுகிறது.

என்கிட்டே இருக்கக்கூடிய புள்ளிவிவரப்படி 1949-ம் வருஷம் ஜூன் மாதம் 11-ம் தேதியிலே ஆறு லட்சத்து முப்பத்தேழாயிரத்து நூறு எக்கரா புறம்போக்கு இருந்ததாக இருக்கிறது. இதில் இரண்டு லட்சத்து பன்னிரண்டாயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்தாறு எக்கரா 1958-ம் வருஷம் டிசம்பர் மாதம் 31-தேதி வரையில் வழங்கப்பட்டது.

1959-ம் வருஷத்தில் மொத்தம் கொடுக்கப்பட்ட நிலம் 34,000. அதில் ஹரிஜனங்களுக்குக் கொடுக்கப்பட்டது 9,255 எக்கர். ஆகவே, ஹரிஜனங்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்று கூறுவதற்கு எந்தவித ஆதாரமும் இல்லை. 1960-ம் வருஷத்தில் 41,062 கொடுக்கப்பட்டது. ஹரிஜனங்களுக்கு 10,130 எக்கர் கொடுக்கப்பட்டது. மிச்சம் மற்றவர்களுக்குக் கொடுக்கப்பட்டது என்று அர்த்தம். இரண்டு லட்சத்து எண்பத்தெட்டாயிரத்து எழுபத்தெட்டு எக்கர் 1960-ம் வருஷம் டிசம்பர் மாதம் 31-ம் தேதி வரையில் வழங்கப்பட்டது. பிற்பாடு 3,790 எக்கர் ஜனவரி 1961-க்கு உள்ளாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மொத்தம், 291,872 எக்கராகிறது. பின், ஏன் இவ்வளவு காலதாமதமாகிறது என்று கேட்கலாம். மனு போடுகிறார்கள், அதற்கு எதிர்மனு போடுகிறார்கள், ஆக எல்லாவற்றையும் பரிசீலிக்க





வேண்டியிருக்கிறது. தித்திப்பை அதிகமாகச் சாப்பிடக் கூடாது என்று சொன்னாலும் குழந்தைகள் அதைத்தான் அதிகமாக வேண்டும் என்பது போல் எரி புறம்போக்கு, டாங்க் பெட்ஸ் இவைகளைத்தான் எல்லோரும் கேட்கிறார்கள். டாங்க் பெட்ஸ் நிலம், மேய்க்கால் நிலம் இவைகளைக் கொடுக்க முடியாது என்றால், அதன் மேல் அப்பீல், அப்பீல். அது, இங்கு வந்து முடிகிறது. அதற்குப் பின்பும் ரெவ்யூ, ரெவ்யூ, ரெவ்யூ என்று மூன்று நான்கு ரெவ்யூ ஆகிறது. ஆகவே, இப்படி அடிக்கடி மனு போடுவதால், இனி இப்படி மனுப் போட்டால் கவனிக்கப் படமாட்டாது என்று கூட உத்தரவு போட வேண்டியிருக்கிறது. ஆகவே, தாமதம், தாமதம் என்று சொன்னால் இதனால் தான் தாமதம் ஏற்படுகிறது. பின்னர், சிவாஜிமா செய்து வந்தவர்களுக்கு ஏன் கொடுக்கவில்லை என்று கேட்கப்பட்டது. ஒரு அம்மையார் சொன்னார்கள், இந்த நிலத்தை அங்கு தூக்குகிறார்கள், அந்த நிலத்தை இங்கு தூக்குகிறார்கள் என்று, நிலத்தை யாரும் தூக்க முடியாது. சிவாஜிமா செய்கிற ஆசாமியிடம் ஐந்து எக்கர்களுக்கு மேல் இருக்கிற தென்றால் அவருக்குக் கொடுக்க முடியாது. சிவாஜிமா செய்து கொண்டிருப்பார்கள், அவர்களுக்குக் கொடுக்க வேண்டியது நியாயம் தான். ஆனால் அவர்கள் ஐந்து எக்கர்களுக்கு மேல் என்கிரோச் செய்திருப்பார்கள், ஆக ஐந்து எக்கர்களுக்கு மேல் பத்து எக்கர்களுக்கு மேல் இருந்தால் எப்படிக் கொடுக்க முடியும், கொடுக்க முடியாது. எல்லாவற்றையும் உடனே கொடுப்பதுதானே, ஏன் இவ்வளவு காலதாமதம் என்றார்கள். அநேக ஜில்லாக்களில் இதற்கு தனி ஸ்டாப் போட்டிருக்கிறோம். நார்த் ஆற்காடு, ஸவுத் ஆற்காடு, கோயம்புத்தூர் ஜில்லாக்களில். இப்பொழுதுதான் டெம்போ வந்திருக்கிறது. 1959–60 ஃபிகரைப் பார்த்தால் வேலை ஜரூராகத்தான் நடக்கிறது. அப்போதைக்கப்போது தாக்கீதுகள் அனுப்பிக் கொண்டிருக்கிறோம். இப்பொழுது புதிதாக ஒரு உத்தரவு இடப்பட்டிருக்கிறது. அதாவது, 15 நாட்களுக்கு ஒரு முறை ரிப்போர்ட் அனுப்ப வேண்டுமென்று, இதற்குள் எவ்வளவு ஜாரி செய்தீர்கள் என்று. அடிக்கடி இப்படிக் கேட்கிறார்களே என்று துரிதமாக வேலை செய்கிறார்கள். ஆக, பல காரியங்களைக் கவனிக்க வேண்டியிருக்கிறது. அதுவும் தனி ஆள் ஒன்று செய்தால் அது வேறு விஷயம். ஆனால் அரசாங்கம் ஒரு காரியத்தைச் செய்யும்போது, சட்டத்திற்கு, ரூல்ஸ்-ஐ ஒட்டி செய்ய வேண்டியிருக்கிறது. திரு. அண்ணாமலை அவர்கள் சொன்னார்கள், ஜமீந்தார், ஜாகீர்தார் காலங்களில் நடந்தது பற்றி சொன்னார்கள். அதற்கு திரு. ஸ்ரீனிவாஸ அய்யர் அவர்களும், திரு. சுவாமிக்கண்ணு படையாச்சி அவர்களும் பதில் சொல்லி விட்டார்கள். எதுவாயிலும், டாங்க் பெட்லிலும் விவசாயம் செய்வதால், ஏற்கனவேயுள்ள ஆயக்கட்டுதாரர்களை அது பாதிக்கிறதென்று. எதுவாயில் விவசாயம் செய்வதினால் மண் ஊஸாகி விடுகிறது. அதனால் எரி தூர்ந்து விடுகிறது. எரி எதிர்வாய்களில் பயிர் செய்கிறவர்கள், எரியில் கூடுதல் தண்ணீர் சாகுபடி செய்ய முடியாதே என்று அதில் அதிகப்படி தண்ணீர் வர முடியாதபடி, அதைத் திருப்பி விடுகிறார்கள், அல்லது வெட்டி விடுகிறார்கள். ஆகவே, எரி எதிர்வாய்களில் சாகுபடி செய்ய அனுமதிப்பது சரியல்ல. ஏழைகள் நீண்ட நாட்களாக விவசாயம் செய்து வருகிறார்கள். அவர்களை வெளியேறச் சொல்வது சரியா, அது அநியாயம் அல்லவா அது இது என்றெல்லாம் சொல்கிறார்கள். மூன்று வாரத்திற்கு மேல் நீர் பிடிப்பு இருந்தால் அதிகமில்லை, அதற்குள் இருந்தால் கொடுக்கலாம் என்றெல்லாம் பல விதத்தில் விதிகள் தளர்த்தப்பட்டு கூடுமான வரையில் மக்களுக்கு என்னென்ன சௌகரியங்கள் செய்து கொடுக்க முடியுமோ அவை எல்லாம் செய்து கொடுக்கப்பட்டு வருகிறது. ஜமீந்தார் காலத்தில், ஜாகீர்தார் காலத்தில் என்னென்னவோ எப்படி எப்படியோ எல்லாம் காரியங்கள் நடந்தன. அந்தக் காலத்தில் எல்லாம் நடந்ததே, ஜனநாயகத்தில் அப்படி நடக்கவில்லையே என்று சொன்னால் அது சரியான வாதம் அல்ல. ஒரு காரியம் செய்யும்போது, அது மற்றவர்களைப் பாதிக்குமா என்று பார்க்க

வேண்டும். வரி எதிர்வாய்களில் அனுமதி கொடுப்பதில்லை. ஏற்கனவேயுள்ள ஆயக்கட்டுதாரர்களுக்குப் பாதகம் இல்லாத முறையில், அவர்களை பாதிக்காத முறையில் நாம் நிலம் கொடுக்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் இருக்கிறது. பின்னர், இங்கு நிலச் சீர்திருத்தம் பற்றி, சாகுபடியாளர் பாதுகாப்புச் சட்டம் பற்றியெல்லாம் சொல்லப்பட்டது. எல்லாவற்றையும் நன்கு ஆராய்ந்து பார்த்து நல்ல வகையில் செய்ய வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் கொள்கை. டெல்லி, மற்றயிடங்களிலிருந்து வருகிற தபால்களைப் பார்த்தால், நிலச் சீர்திருத்த விஷயத்தில் மற்ற மாநிலங்களை விட சென்னை மாநிலம்தான் சரியான விதத்தில் அமைத்திருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. மற்றவர்கள் சொல்கிறார்கள்: அதை எடுத்துக் கொண்டால் எடுத்துக் கொள்ளலாம், இல்லாவிட்டால் வேண்டாம். மற்றவர்கள் சொல்வதை இங்கு சொல்கிறேன். ஆக, எல்லாவற்றையும் நன்கு ஆராய்ந்து பார்த்துச் செய்கிறோம். இந்த மசோதா சென்ற ஏப்ரலில் சமர்ப்பிக்கப்பட்டது. அதை ஒரு ஜாயண்ட் செலக்ட் கமிட்டிக்கு அனுப்பினோம். 1960-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 28-ம் தேதியில் பொறுக்குக் கமிட்டி கூடிற்று மதருவில்; மே மாதம் ஊட்டியில் கூடிற்று. பின் எவிடன்ஸ் எடுக்க, என்னென்ன கஷ்ட நஷ்டங்கள் இருக்கின்றன என்று பார்க்க எவிடன்ஸ் எடுக்கப்பட்டது. 1960-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 22-ம் தேதியிலிருந்து 1960-ம் வருஷம் டிசம்பர் மாதம் 17-ம் தேதி வரை இந்த விவகாரங்கள் பற்றி கேட்கப்பட்டது. ஆக, 206 பேர்கள் சாட்சியம் சொன்னார்கள். ஏன் இவ்வளவு தாமதமாயிற்று என்று கேட்கும் அங்கத்தினர் அவர்கள்கூட இந்தக் கமிட்டியில் இருந்தார்கள். அவர்களும் வந்திருந்தார்கள். ஏப்ரல் மாதத்தில் இந்தக் கமிட்டி மீண்டும் கூடப் போகிறது. அப்பொழுது சாட்சியங்கள் எல்லாவற்றையும் வைத்துக் கொண்டு ரிப்போர்ட் அனுப்ப வேண்டும். மறுபடியும் சட்டசபை கூடும் போது, ஜுலை, செப்டம்பர் மாதத்திற்குள் வரும். அரசியல் கண்ணோட்டத்துடன் பார்க்கக் கூடாது. டைமிங் செய்கிறார்கள் என்று சொன்னார்கள். அவர் சொன்ன பிற்பாடுதான் எனக்கு அது தெரிய வந்தது. எபபொழுதுமே, ஒன்று ஒரு சாராருக்கு அனுகூலமாயிருந்தால், அது இனனொரு சாராருக்குப் பிரதிகூலமாயிருக்கும்.

1-30 p.m. கனம் கோவிந்தசாமி அவர்கள் சொன்னார்கள், இந்த நிலச்சீர்திருத்தச் சட்டம் வந்ததின் பின்னால் அனேகம் பேர்கள் தங்கள் நிலத்தைப் பிரித்துக் கொண்டார்கள் என்று. இதனால் நம்முடைய கொள்கை ஒன்றும் போய்விடவில்லை. இதில் நம்முடைய முக்கியமான கொள்கை, ஒருவரிடத்திலே நிலம் குவிந்திருக்கக் கூடாது என்பது தான். 'கான்ஸென்ட்ரேஷனாக' ஒருவரிடத்திலே 500 ஏக்கர்கள், 1,000 ஏக்கர்கள் என்றிருக்கக்கூட து என்பதுதான்....

SRI M. KALYANASUNDARAM: 'கான்ஸென்ட்ரேஷன்' அப்படியே இருக்கிறது, பத்திரம் தான் மாறிக் கொண்டிருக்கிறது.

THE HON. SRI M. A. MANICKAVELU: பத்திரம் மாறுவது மட்டுமல்ல, ஆளும் மாறிக் கொண்டிருக்கிறது. ஜனநாயகத்தில் அப்படித்தான் இருக்க முடியும். ஏப்ரல் மாதம் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தோம், அதன் பின்னால் யாராவது துஷ்பிரயோகம் செய்திருந்தால் அது செல்லுபடியாகாது என்று சொல்லியிருக்கிறோம். நமது அடுத்த மாகாணமாகிய ஆந்திராவில் இதே போன்று ஒரு மசோதா கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் இந்த மசோதா கொண்டு வந்து சட்டமாக ஆக்கப்பட்டதின் பின்னால் தான் எல்லா விதிகளும் செல்லுபடியாகும் என்று சொல்லி இருக்கிறார்கள். இந்த மசோதா கொண்டு வந்த தினத்திலிருந்தே செல்லுபடியாகும் என்று சொல்லியிருக்கிறோம். ஓரளவுக்கு நாம் அட்வான்ஸாக இருக்கிறோம் அவர்களைவிட. ஆகவே ஏதோ பிரிவினை நடந்து கொண்டிருக்கிறது என்று சொல்லுவதால் எந்தவிதமான பாதகமும்



ஏற்பட்டு விடாது. நம்முடைய எண்ணம் நிலம் ஒரே நபரிடத்தில் குவிந்து இருக்கக் கூடாது என்பது தான், நிலம் பரவலாக இருக்க வேண்டும் என்பது தான். ஆகவே இப்போது நடந்துக் கொண்டிருப்பதைப்பற்றி யாரும் கவலைப்பட்டுக் கொள்ள வேண்டிய அவசியமில்லை.

கனம் அண்ணாமலை அவர்கள், சாகுபடியாளர் சட்டத்தைப்பற்றி சொன்னார்கள், அதிகாரிகள் ஒருவருக்குமே இந்தச் சட்டத்தைப்பற்றி தெரியவில்லை என்றும், தானே ஒரு அதிகாரிக்குப் புத்தகம் கொண்டு கொடுத்ததாகவும் சொன்னார். அப்படிப் புத்தகம் கொடுத்திருப்பதால் அவர்களுக்கு ஒன்றுமே தெரியாது என்று சொல்லிவிட முடியாது. என்னிடத்தில் புத்தகம் இல்லை என்றால் எதிர்ப் பக்கத்திலுள்ளவர்களிடமிருந்து புத்தகத்தை எடுத்துக் கொள்கிறேன். கோர்ட்டில் கூட ஜட்ஜ் வக்கீல்களிடமிருந்து புத்தகத்தை வாங்கிக் கொள்ளுவார், அதே போல் வக்கீல்களும் ஜட்ஜ்களிடமிருந்து புத்தகத்தை வாங்கிக் கொள்ளுவார். இதனால் பெரிய தவறு ஒன்றுமில்லை. ஏதோ சில விதிகளில் சில அதிகாரிகளுக்குத் தெரியாமல் இருக்கலாம். எல்லா அதிகாரிகளுக்கும் எல்லாம் தெரிந்திருக்கும் என்று எண்ணி விட முடியாது. அதற்காக மொத்தமாக அதிகாரிகளுக்கு ஒன்றுமே தெரியாது, எல்லோரும், 'மட சாம்பிராணிகள்' என்று சொல்லுவார்களே அதுபோல் இருக்கிறார்கள் என்று சொல்லிவிட முடியாது. (சிரிப்பு). நிலச் சீர்திருத்தச் சட்டம் வருவதற்குக் காலதாமதம் ஆகும் என்று எண்ணித்தான் சாகுபடியாளர்களுடைய நன்மையைக் கருதி, தஞ்சாவூர் பண்ணையாள் சட்டம், சாகுபடியாளர் பாதுகாப்புச் சட்டம், நியாய வாரச் சட்டம், கையேர், மாட்டேர் வாரம்தார் சட்டம் இவைகள் எல்லாம் கொண்டு வந்திருக்கிறோம். கையேர், மாட்டேர் வாரம்தார் சட்டம் சம்பந்தமாகச் சிலருக்குத் தப்பபிப்பிராயம் இருந்து வருகிறது. கனம் அண்ணாமலை அவர்கள் தான் கேட்டார்கள் என்று நினைக்கிறேன், மற்ற மாவட்டங்களுக்கும் ஏன் இதை விஸ்தரிக்கக் கூடாது என்று கேட்டார்கள். எல்லா இடத்திலும் இந்த முறை இல்லை. இந்த முறை திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் குளித்தலை, லால்குடி முதலிய இடங்களில் தான் இந்த முறையிருக்கிறது. மற்றபடி ஒன்றிரண்டு இடங்களில் இந்த முறை யிருக்கிறது. ஆகவே இந்தச் சட்டத்தை எல்லா இடத்திற்கும் விஸ்தரிக்க இயலாது. மற்றபடி எல்லா இடங்களிலுள்ளவர்களுக்கும் பாதுகாப்பு வேண்டும் என்பதற்காகத்தான் மூன்று சட்டங்கள் இருக்கின்றன. இதன் மூலம் போதுமான சலுகைகள் எல்லோருக்கும் கிடைத்து வருகிறது. ∴பேர் ரென்டைப் பொறுத்த அளவில், சில இடங்களில் பூமிதார்களுக்கும், சாகுபடியாளர்களுக்கும் முன்னால் இருந்ததைப் போன்றே ஒற்றுமை இருந்து வருகிறது. முன்னால் கொடுத்து வந்தது போலவே, அதாவது 25, 35 சதவிகிதம் விழுக்காடு போக மீதியைக் கொடுத்தால் போதும் என்று அவர்களாகவே வாலன்டியராக முன் வரும்போது இடையிலுள்ளவர்கள் போய் ஏன் தகராறு உண்டு பண்ணவேண்டும் என்றுதான் தெரியவில்லை? அவர்களுக்குள் ஒருமித்த கருத்து இருக்கும்போது மற்றவர்கள் போய் அதில் ஏன் தலையிட வேண்டும்? அவர்களாகவே ஒற்றுமையாய் இருக்கிறார்கள்.

கிராம உத்யோகஸ்தர்களைப் பற்றி இங்கு சொல்லப்பட்டது. இது ஒரு பிரச்னையாகவே இருந்து கொண்டிருக்கிறது. 'ஹார்டி ஆன்வல்' என்ற முறையில் ஒவ்வொரு ஆண்டும் இவர்களுடைய பிரச்னை வருகிறது. இவர்களுக்கு மற்ற முழு நேர ஊழியர்களைப் போன்று சம்பளம் கொடுக்கப்படவில்லை என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். இப்போது ஓரளவுக்குச் சம்பளம் உயர்த்திக் கொடுத்திருக்கிறோம். அதுவே போதும் என்றும் நான் சொல்ல வரவில்லை. அது போதாது என்பதையும் நான் ஒத்துக் கொள்கிறேன். இருந்தாலும் முழு நேர ஊழியர்களாக இல்லாத காரணத்தினால் அவர்கள் 'ஸைட் ஆக்குபேஷன்' வைத்துக் கொள்ளலாம் என்றிருக்கிறது. காண்டிராக்ட் எடுத்துக் கொள்ளலாம், மற்றுமுள்ள தனிப்

[Sri M. A. Manickavelu] [18th March 1961]

பட்ட வேலைகளை எல்லாம் எடுத்துக் கொள்ளலாம் என்றுள்ள சௌகரியம் இருக்கிறது. இருந்தாலும் அவர்களுக்கு இப்போது வேலை அதிகமாக இருக்கிறது. இவர்களுடைய உத்தியோக விவரங்களை நன்றாக விசாரணை செய்து ஒரு கமிட்டியார் இவர்களை முழு நேர ஊழியர்களாக அமர்த்துவது தான் நல்லது என்று ரிப்போர்ட் தந்திருக்கிறார்கள். சமீபத்தில் இவர்கள் சம்பந்தமாக சுப்ரீம் கோர்ட் தீர்ப்புக் கொடுத்திருக்கிறது. இவர்களுக்குப் பரம்பரை பாத்தியதை செல்லாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. கோர்ட் தீர்ப்புப் பிரகாரம் பரம்பரை பாத்தியதையாக இது செல்லுபடியாகாது என்று வருகிறது. ஆகவே இதைப்பற்றி ஒரு முடிவு சீக்கிரமாகவே செய்ய வேண்டும். இதற்கிடையில் பஞ்சாயத் யூனியன் அமைப்பு வந்தது. இதற்கிடையில் நயா பைசாக் குழப்பம் வந்தது, அதன் பின்னால் மெட்ரிக் குழப்பம் வந்தது, இப்படி எல்லாமே ஒரே குழப்பமாக இருந்தது. . . . (ஸ்ரீ எம். கலியாணசுந்தரம் : உங்களுக்கே குழப்பமா) ஆமாம், எங்களுக்கே குழப்பம் தான், இது எல்லோருக்கும் ஏற்படக்கூடிய குழப்பம் தான், 'டிரான்ஸிஷனல் ஸ்டேஜ்' சமயத்தில் இம்மாதிரிக் குழப்பம் ஏற்படத் தான் செய்யும். ஆகவே இப்போது வந்திருக்கின்ற ஜட்ஜ்மெண்ட் அடிப்படையில் கொஞ்சம் தீவிரமாக இதைப்பற்றி அவசரமாகவே கவனித்து முடிவு எடுக்கப்படும்.

பஞ்ச நிவாரண வேலையைப்பற்றி (ஃபாமின் ரிலீப்) சில கருத்துக்கள் சொல்லப்பட்டன. எங்கெங்கு எல்லாம் அவசியம் என்று சர்க்கார் கருதுகிறதோ அந்த இடங்களுக்கு எல்லாம் சர்க்கார் கொடுத்து உதவுகிறது. கனம் அண்ணாமலை அவர்கள் சொன்னார்கள், உங்கள் தொகுதியில் மட்டும் உதவி கிடைத்திருக்கிறது, என் தொகுதியில் ஒன்றும் கிடைக்கவில்லையே என்று. உண்மையாகவே எங்கே பாதிக்கப்பட்டிருக்கிறதோ அந்த இடத்திற்கு உதவி கிடைக்கும். இதில் என் தொகுதி உன் தொகுதி என்று கணக்கெடுப்பதில்லை. திருநெல்வேலிக்கு 10 லட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது, இன்னொரு இடத்திற்கு 2 லட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது, இன்னொரு இடத்திற்கு 3 லட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. திருவண்ணாமலையில் செங்கம் தாலூகா பாதிக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அது அவ்வளவாகப் பாதிக்கப்படவில்லை, எங்கும் சாதாரணமாக ஏற்பட்டிருப்பது போல் தான் அங்கும் ஏற்பட்டிருக்கிறது. என் தொகுதியில் உதவி கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் மந்திரிகளுடைய துரதிருஷ்டமோ என்னவோ எங்கள் பகுதியில் பாதகம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே மந்திரிகளுடைய தொகுதியில் தான் அதிகமாகச் செலவுச் செய்யப்படுகிறது என்று சொல்வது சரியல்ல, நிலைமை எப்படியிருக்கிறதோ அதற்குத் தகுந்தாற்போல் உதவி அளிக்கப்பட்டு வருகிறது. போளூரில் சூழ் நிலை சாதாரணமாகத் தான் இருக்கிறது என்று அதிகாரிகள் ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார்கள். . . . .

DEPUTY SPEAKER: We can sit for some more time. I think we can sit till 1-40 or 1-45 p.m.

THE HON. SRI M. A. MANICKAVELU: . . . "Landless poor people who are likely to engage themselves in direct cultivation."

DEPUTY SPEAKER: I think the Hon. Minister need not discuss about Famine as there is a separate Demand, viz., Demand XXX- Famine which we will be considering separately.

THE HON. SRI M. A. MANICKAVELU: I am not discussing Famine as such. I had to refer to it when the Administration was criticised by the hon. Members in the matter of executing the relief measures. That is all.



18th March 1961] [Sri M. A. Manickavelu]

மேலும், மதுரை அங்கத்தினர் அவர்கள், 'ஒரே நாளில் 1,000 கேள்விகள் வரை கொடுத்திருக்கிறேன், பல மனுக்களைப்பற்றி கேட்டு' என்று சொன்னார்கள். இப்படி யிருந்தால் கொடுத்திருப்பதில் கூடுதலும் 'அவுட் ஆப் ஆர்டர்' ஆகிவிட்டதாகக் கேள்விப்படுகிறேன். ஜில்லாவில்கூட இவ்விதம் 800 மனுக்கள் கொடுத்திருக்கிறேன் என்றெல்லாம் சொன்னார்கள். எவ்வளவுதான் கொடுத்தாலும் அதிகாரிகள் ஒவ்வொன்றையும் பரிசீலனை செய்து பார்த்துத்தான் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். ஏதோ திரு. தியாகராஜன் அவர்களுடைய எஸ்டேட்டில் நடவடிக்கை எடுத்து விட்டார்கள் என்று சொன்னார்கள். யார் யாருடையது என்றெல்லாம் பார்த்து நடவடிக்கை எடுக்க முடியாது. கோர்ட்டில் வரும்போது தான் விவரங்கள் எல்லாம் தெரிகிறது. "நேச்சர் ஆப் ஸிவில் ரைட்ஸ்" என்று சொல்வது போல் ஒவ்வொருவருக்கும் ஓர் உரிமை இருக்கிறது. கனம் தியாகராஜனுடைய விஷயம் இது என்பது பின்னால் பேப்பர் பார்த்த பிறகு தான் தெரிய வந்தது. அது வரை யாருக்குச் சொந்தம் என்றே தெரியாது. ஆகவே இந்த மாதிரியான குற்றச் சாட்டு சொல்ல வேண்டிய அவசியமில்லை. மற்றப்படி மெரிட்ஸிலே ஏதாவது தவறு என்று சொன்னால் அதைப் பரிசீலனை செய்து பார்க்கிறோம்—அதில் ஒன்றும் ஆட்சேபணையில்லை. ஏதாவது பிசகாக இருந்தால் தாராளமாகச் சொல்லலாம். பொதுவாக எழுதிவிட்டு, ஆயிரம் கேள்வி, நாலாயிரம் கேள்வி என்று இல்லாமல் பொறுக்காகக் கவனிக்கக் வேண்டுமென்று சொன்னால் பரிசீலனை செய்யலாம்.

பப்ளிஸிட்டி பற்றிச் சொன்னார்கள். எழு லட்சம் ரூபாய் இருக்கிறதே என்று சொன்னார்கள். அது பொது பப்ளிஸிட்டி. இப்போது நிறைய டெவலப்மெண்ட் ஸ்கீம்ஸ் செய்கிறோம். பஞ்சாயத்து யூனியன் வந்தபோது ப்ரிண்ட் பண்ண வேண்டியிருந்தது. ஜனங்கள் எல்லாவற்றையும் புரிந்து கொள்ள வேண்டும். பேசாமல் இருந்தால் ஜனங்கள் புரிந்து கொள்ளவில்லையே என்று சொல்லுகிறார்கள். புரிந்துகொள்ள வழி செய்தால் ஏன் இவ்வளவு செலவு என்று கேட்கிறார்கள். ஆக அதற்குத்தான் இந்த பப்ளிஸிட்டி தேவையாக இருக்கிறது.

மின்சார விசிறி பற்றி சொன்னார்கள். கொடுக்கக் கூடாதா என்று கேட்டார்கள் ? செலவைக் குறைக்க வேண்டியிருக்கிறது. ஆனால் இப்போது பெரிய அதிகாரியிலிருந்து படிப்படியாகக் போட ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். இப்போது உத்திரவு போட்டிருக்கிறோம். ஒரு ஃபேஸ்ட் ப்ரொக்ராமில் எல்லோருக்கும் கிடைக்கும் அடிப்படையில் வந்து கொண்டிருக்கிறது.

அதிகாரிகள் கிராமத்தில் தங்குவதில்லை என்று கனம் சுவாமிக்கண்ணு படையாச்சி அவர்கள் சொன்னார்கள். அவர்கள் ரொம்ப வயதானவர்கள்—அந்தக் காலத்தில் அதிகாரிகள் கிராமத்திலேயே தங்குவார்கள். இப்போது தங்குவார்களா ? இல்லை, இப்போது தான் ஜீப் எல்லாம் இருக்கிறது. அதனால் அங்கே தங்க வேண்டிய அவசியம் இல்லை. முன்பெல்லாம் கலெக்டர்களெல்லாம் குதிரைமேல்தான் போவது வழக்கம். ஒவ்வொரு டி.பி.-யிலும் குதிரை லாயங்களைக் கட்டி வைத்திருந்தார்கள். இப்போது கத்திரிக்காய் விற்கக்கூடியவர்களும், தயிர் விற்கக் கூடியவர்களும், கூட ½ மைல் முக்கால் மைல் நடப்பதில்லை. பஸ்ஸில் ஏறக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்போது சௌகரியமாக வண்டி வசதி இருப்பதால் வீட்டுக்குத் திரும்பப் பார்ப்பார்களே தவிர கிராமத்தில் உட்கார்ந்து கொண்டு டேரா அடித்துக்கொண்டிருக்க மாட்டார்கள்.

கடலூர் மணியக்காரரைப் பற்றிச் சொன்னார்கள். அந்த மாதிரி இருந்தால் வருந்தத் தக்கதுதான். இதைப்பற்றி வேண்டிய தகவல்களை வாங்கி ஏதாவது பிசகு இருந்தால் கவனிக்கிறேன்.

[Sri M. A. Manickavelu] [18th March 1961

அப்புறம் ராமநாதபுரம் பகுதியில் போலீஸ்காரரை வைத்து வரி வசூல் செய்கிறோம் என்று சொன்னார்கள். அங்கு ஒரு மணியக்காரரே கொல்லப் பட்டார். அங்கே ஒரு ஸ்டாண்ட்-பை-யாகத் தான் வைத்திருக்கிறோம். இப்படி வைத்துக் கொண்டால் தான் முடியுமே தவிர இருக்கக் கூடிய பழக்க வழக்கத்தில் வரி வசூல் சரியாகவே ஆவதில்லை. அதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அடிக்கடி மழை இல்லாது போகிறது என்பது ஒரு காரணம். அதைத் தவிர வசூலாகாமல் இருப்பதற்கு வேறு காரணங்களும் இருக்கின்றன. இரண்டு அல்லது 3 கோடி ரூபாய் வரை பாக்கி நின்றது. போலீஸை பந்தோபஸ்து போட்டு வசூல் செய்தோமே தவிர மிரட்டி வசூல் செய்வதற்காக அல்ல. கடலூரில் அவரே ஸூயிஸைட் செய்து கொண்டார்—இங்கே கொல்லப்பட்டிருக்கிறார்—மற்றவர்கள் சேர்ந்து கொன்று விட்டார்கள். கொடுத்த கடனை வசூல் செய்தால் தான் மற்றவர்களுக்குக் கடன் கொடுக்க முடியும். இல்லாவிட்டால் பணம் லாக்-அப் ஆகி விட்டால் என்ன செய்வது ? ஜப்தி என்றெல்லாம் சொல்லுகிறார்கள். கடைசி பட்சம்தான் ஜப்தி. பழைய காலம் மாதிரி கதவை எடுத்துப் போவது எல்லாம் இடையாது. நோட்டீஸ் கொடுக்கிறார்கள். வரியைக் கொடுக்காமல் போனால் ஏலம் போடுவோம் என்று நோட்டீஸ் கொடுக்கிறார்கள். நோட்டீஸ்கூட கொடுக்கக் கூடாதா ? கட்டாயம் ஏலம் போடுவது என்பது எப்போது வரும் என்றால் ஒன்றுக்கும் கட்டை செய்யாமல் ரிகால்ஸிட்ரண்ட்டாக இருந்தால் தான். இப்போது ஒரு அரியர், ஒரு கரண்ட் என்ற முறையில் வசூல் செய்ய வேண்டுமென்று போட்டிருக்கிறோம். நான்கு அல்லது ஐந்து வருஷத்திற்கும் சேர்த்து வசூல் செய்வது கஷ்டம். அந்த முறையில் சில இடங்களில் ஒன்றிரண்டு பிசகுகள் இருந்தால் இருக்கலாம். பிசகுகள் இருந்தால் எங்களுக்குத் தெரிவித்தால் பரிகாரம் தேடலாம். பொதுவாகப் போலீஸ் வைத்து வசூல் செய்கிறார்கள், தொந்திரவு செய்கிறார்கள் என்று சொல்லுவது சரியல்ல. மனித வாழ்க்கையில் ஆங்காங்கு தப்பு இருக்கிறது. எக்ஸெப்ஷனிலிருந்து ஜெனராலிட்டிக்குப் போகக் கூடாது.

இன்னும் அநேகம் குறித்து வைத்திருக்கிறேன். அதற்கெல்லாம் பதில் சொல்ல வேண்டுமென்ற ஆசை இருக்கிறது. இவ்வளவு கஷ்டப்பட்டு எழுதி வைத்தும் கூட பிரயோசனம் இல்லாமல் போகிறது. எழுதியதைக் வைத்துக் கொண்டு எப்படியெப்படி பரிகாரம் தேடலாமோ அதைக் கவனிக்கலாம். ஸ்டாம்ப் கொடுப்பதைப் பற்றி தாசில்தார், டெபுடி தாசில்தார் இவர்களுக்கு உத்திரவு போட்டிருக்கிறது. அப்படி இருந்தும் கஷ்டம் இருக்கலாம். இதில் என்னாலான பிரயாசைகள் எடுத்துக் கொள்ளுகிறேன்.

இது முக்கியமான மான்யம். எல்லா டிபார்ட்மெண்ட்டும் இந்த டிபார்ட்மெண்டின் மேலே உட்கார்ந்து தான் எல்லா வேலைகளையும் நடத்த வேண்டும். ஆகையால் வெட்டுப் பிரேரணையைக் கொடுத்தவர்கள் அதை வற்புறுத்தாமல், சொல்ல வேண்டியவைகளைச் சொல்லியாகிவிட்டது, நானும் தக்க சமாதானம் சொல்லியிருக்கிறேன், ஆகையால் வெட்டு ஏதுமில்லால் இந்த மான்யத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : Is the hon. Member, Sri S. M. Annamalai, pressing his Cut Motion?

SRI S. M. ANNAMALAI : Yes, Sir, I am pressing my Cut Motion.

DEPUTY SPEAKER : The question is—

" That the allotment of Rs. 1,01,50,200 under Demand I—Land Revenue Department be reduced by Rs. 100."



18th March 1961]

The Cut Motion was put and lost.

DEPUTY SPEAKER : The question is—

" That the Government be granted a sum not exceeding Rs. 1,01,50,200 under Demand I—Land Revenue Department.'

The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER : Is the hon. Member Sri, V. K. Kothandaraman, pressing his Cut Motion to Demand II—Stamps Administration?

SRI V. K. KOTHANDARAMAN : Yes, Sir, I am pressing my Cut Motion.

DEPUTY SPEAKER : The question is—

' That the allotment of Rs. 27,38,300 under Demand II—Stamps Administration—be reduced by Rs. 100.'

The Cut Motion was put and lost.

DEPUTY SPEAKER : The question is—

' That the Government be granted a sum not exceeding Rs. 27,38,300 under Demand —Stamps Administration.'

The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER : Is the hon. Member, Sri V. Subbiah, pressing his Cut Motion?

SRI V. SUBBIAH : Yes, Sir. I am pressing my Cut Motion.

DEPUTY SPEAKER : The question is—

' That the allotment of Rs. 4,82,62,200 under Demand XI—District Administration and Miscellaneous—be reduced by Rs. 100.'

The Cut Motion was put and lost.

DEPUTY SPEAKER : The question is—

' That the Government be granted a sum not exceeding Rs. 4,82,62,200 under Demand XI—District Administration and Miscellaneous.'

The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER : The question is—

' That the Government be granted a sum not exceeding Rs. 84,00,000 under Demand XXXVI—Compensation to Zamindars.'

The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER: I put the Cut-motion fo Sri V. K. Kothandaraman to the vote of the House. The question is—

'That the allotment of Rs. 45,69,800 under Demand IV—Registration Department—be reduced by Rs. 100.'

The Cut Motion was put and lost.

DEPUTY SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 45,69,800 under Demand IV—Registration Department.'

The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER: The House will now adjourn and meet again at 8-30 a.m. on Monday, the 20th March 1961.

The House then adjourned.

## III.—PAPER LAID ON THE TABLE ON THE HOUSE.

*A.—Statutory Rules and Orders.*

*Notification issued with G.O. Ms. No. 45, Home, dated 4th February* 1961, *reducing the payment of tax to the Luxury coach MDU-7463 belonging to Kodaikanal Motor Union (Private), Limited, Madurai. [Laid on the table of the House under section II* (2) *of Madras Motor Vehicles Taxation Act,* 1931 *(Madras Act III of* 1931).]

*B.—Reports, Notifications and other papers.*

Nil.





## APPENDIX I

[Vide answer to starred question No. 895 asked by Sri P. G. Manickkam at the meeting of the Legislative Assembly held on 18th March 1961, page 3 supra.]

*A.*—(*a*) & (*b*) No amount has been specifically set apart for the provision of electric street lights in Harijan colonies. But electrification of Harijan colonies which includes provision of electric street lights therein, has not been hampered on this account.

Provision exists in the Second Plan for the electrification of the villages in the State and it has been ordered that when schemes are evolved for the electrification of panchayat areas, the adjoining Harijan colonies should also be included in such schemes and taken up for electrification. Besides, the Government have decided to make an annual grant of Rs. 1·5 lakhs from the Harijan Welfare Funds for a period of ten years to meet the shortfall in revenue from unremunerative schemes for the electrification of Harijan colonies adjoining panchayats which have already been electrified. Under this scheme a grant of Rs. 1·5 lakhs was made in 1957-58, Rs. 2 lakhs in 1958-59 and Rs. 1·5 lakhs in 1959-60. The entire amounts have been utilized. About 500 electric street lights were connected up in the Harijan colonies in the State during 1959-60.

## APPENDIX II.

[Vide answer to starred question No. 900 asked by Sri S. M. Annamalai (on behalf of Sri K. Sattanatha Karayalar) at the meeting of the Legislative Assembly held on 18th March 1961, page 5 supra.]

(*a*) In 1955 the Superintendent, Medicinal Farm attached to the College of Integrated Medicine, Madras (now Kilpauk Medical College) was appointed as Special Officer for identification of medicinal plants in their natural sites in the forest areas.

(*b*) The Special Officer submitted his report in February 1956. The report contained the following recommendations:—

(1) Opening of five medicinal farms at five different regions of the State, manned by the requisite staff at an estimated cost of Rs. 1,00,000 per annum.

(2) Establishment of medicinal farms by the Forest Department and also collection, grading, storing and sale of drugs to Government institutions and to the public by that department.

(3) Expansion of the existing pharmacy in the Hospital and College of Integrated Medicine (now Kilpauk Medical College and Hospital) to cater to the needs of all hospitals.

(4) Appointment of a Committee consisting of the Assistant Director of Medical Services (Indigenous Medicine) to keep alive the scheme for identification of medicinal plants or herbs in the forests.

[18th March 1961

The Director of Medical Services did not recommend any of the above suggestions made by the Special Officer. It was however suggested by the Director of Medical Services that a selection of medicinal plants of proved value may be made from the list furnished by the Special Officer and the cultivation of such plants may be undertaken in the medicinal farm at Arumbakkam attached to the College of Integrated Medicine. The proposal of the Director of Medical Services was accepted and two lists of medicinal plants of proved value one common to all systems and the other special to Unani —were approved for cultivation in the Medicinal Farm. The total number of plants approved for cultivation in the Farm was 344 and out of these plants 185 are now grown in the Farm. Action is being taken to cultivate the rest of the plants in the Farm.

## APPENDIX III.

[Vide answer to starred question No. 901 asked by Sri N. R. Thiagarajan at the meeting of the Legislative Assembly held on 18th March 1961, page 5 supra.]

*Clause (a)*—

The following are the routes in which express services are proposed to be opened during the year 1960 :—

1 Coimbatore to Palani (via) Kinathukadavu, Pollachi, Gomangalampudur, Udumalpet and Madathukulam.

2 Coimbatore to Erode (via) Vijiamangalam and Perundurai.

3 Madurai to Lower Camp.

4 Vellore to Tiruvannamalai.

5 Madurai to Mandapam.

6 Salem to Tiruvannamalai.

7 Chidambaram to Salem (via) Neyveli, Vridhachalam and Athur.

8 Thanjavur to Madurai.

9 Tiruchirappalli to Thirupathur.

10 Tiruchirappalli to Erode (via) Karur.

11 Tiruchirappalli to Palani (via) Karur.

12 Tirunelveli Junction to Tiruchendur.

13 Tirunelveli Junction to Courtallam.

Proposals for conversion of ordinary into express services :—

1 Tirunelveli Junction to Shencottah.

2 Tirunelveli Junction to Puliyangudi.

3 Tirunelveli Junction to Srivilliputhur.

4 Tirunelveli to Koilpatti.

5 Tuticorin to Koilpatti.

6 Courtallam to Srivilliputhur.



18th March 1961]

*Clause (b)*—

Route—Madurai to Lower Camp.

The Regional Transport Authority, Madurai, decided to introduce two additional buses as express services on the route. On appeal, the proposal has been stayed by the State Transport Authority, Madras. The appeal is yet to be disposed of by the State Transport Appellate Tribunal.

Route Madurai to Theni.

Route Madurai to Cumbum.

Route Madurai to Bodi.

No proposals for express services on these routes are under consideration by the Regional Transport Authority, Madurai. A proposal for express services between Madurai and Theni has been made to the Government and this is being examined.

## APPENDIX IV

[Vide answer to starred question No. 918 asked by Sri V. K. Kothandaraman at the meeting of the Legislative Assembly held on 18th March 1961, page 13 supra.]

| Name of the district. | Number of x-ray apparatus available in Government medical institutions during 1960. |
|---|---|
| (1) | (2) |
| Madras | 44 |
| Chingleput | 3 |
| Thanjavur | 10 |
| Madurai | 11 |
| South Arcot | 4 |
| North Arcot | 5 |
| Coimbatore | 7 |
| Salem | 6 |
| Kanyakumari | 6 |
| Tirunelveli | 5 |
| Tiruchirappalli | 3 |
| Ramanathapuram | 6 |
| The Nilgiris | 4 |
| | 114 |

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

**Monday, the 20th March 1961.**

The House met in the Assembly Chamber, Fort St. George at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—POINT OF INFORMATION REGARDING PREVENTING A MEMBER FROM ENTERING THE PRECINCTS OF THE HOUSE.

* SRI K. VINAYAKAM : Before we take up questions and answers I wish to raise a point of information. This morning while I was trying to enter the precincts of this House, I was prevented by two khaki uniformed personnel. I believe they are military personnel attempting to halt everybody who tried to enter this House as well as the Fort premises. They were demanding passes or permits which would entitle us to enter these premises. I would like to know from you whether that is the order obtaining every day or that is the peculiar feature of to-day, whether we should be prevented from entering the Assembly to discharge our legal duties as legislators of this State.

MR. SPEAKER : I do not know. Have you not got a pass with your photograph in it showing that you are a member of the Madras Legislative Assembly?

SRI K. VINAYAKAM : I do not believe we have one.

MR. SPEAKER : I have got one with my own photograph in it. I bring it every day to the House to show to the people who may stop me. Not that I have been stopped by anyone till now. But I do bring it every day. There is a pass for every hon. Member with a photograph in it showing that he is a Member of the Legislative Assembly. Probably hon. Member has forgotten to bring that pass. I am glad you raised the point. I will have to make enquiries. I will let you know later.

SRI K. VINAYAKAM : Not only myself, but some Members of the Assembly staff were also stopped.

MR. SPEAKER : Even the staff have got passes.

SRI N. K. PALANISAMI : Many of us have lost the passes.

MR. SPEAKER : Then how can you blame the Police? The pass is not meant to be lost but to be carried in pocket.

SRI K. VINAYAKAM : I think we have a right to enter.

MR. SPEAKER : That is a different matter. That is there. But your case would have been strengthened if you had the pass.

SRI N. K. PALANISAMI: Hon. Speaker might make enquiries.

MR. SPEAKER: I said I am going to enquire into the matter. The fact that you lost the pass or did not bring it is no justification.

II.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

MR. SPEAKER: The Hon. Minister for Industries has not yet come. We shall take up Question No. 923.

### *Vellore Hospital (Transformer)*

* 923*Q.*—SRI V.K. KOTHANDARAMAN: கனம் ரெவின்யூ அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வேலூர் சர்க்கார் ஆஸ்பத்திரியில் அடிக்கடி மின் விளக்குகள் அணைந்து போவதால் தனியாக ட்ரான்ஸ்பார்மர் ஒன்று போட உத்தேசமுண்டா?

THE HON. SRI M. A. MANICKAVELU: Yes, Sir.

SRI V. K. KOTHANDARAMAN: ஸார். வேலூர் ஆஸ்பத்திரியிலே வாரத்திலே இரண்டு முறையாவது அங்குள்ள விளக்குகள் அணைந்து விடுகின்றன. அதற்குக் காரணம் அங்கே தனியாக டிரான்ஸ்பார்மர் இல்லையென்பது மாத்திரமல்ல. பி.டபிள்யூ. டி. மூலமாக இருக்கக்கூடிய மின்சார சிப்பந்திகளும் அங்கே கிடையாது. இந்த நிலைமை அங்கே இருப்பதால், மின்சார இலாகாவினரைக் கூப்பிட்டாலும், எங்களுக்கு இதிலே எவ்வித சம்பந்தமுமில்லை என்று சொல்கிற காரணத்தினால் ஒரு இரவு பூராவும் கூட விளக்குகள் இல்லாத நிலைமை இருப்பதினால் தயவு செய்து சீக்கிரமாக ஒரு டிரான்ஸ்பார்மர் போட்டு, தனியாக மின்சார சிப்பந்திகளும் போடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: There is a proposal to have a separate transformer. The Chief Engineer, Vellore Electricity Board has been addressed in the matter. They are preparing drawings for the same.

### *Water-supply (Tiruchirappalli)*

* 924 *Q.*—SRI M. K. SOMASUNDARAM (on behalf of SRI S. LAZAR): Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) details about the new method suggested by the Municipal Engineers at Tiruchirappalli to augment the town water-supply;

(*b*) the extent to which the town water-supply has been augmented by adopting the said method; and

(*c*) the special amenities provided by the Government to carry on the research to improve the water-supply in this town?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) The new method suggested by the Municipal Engineer consists of provision of a number of well points sunk in deep bore holes driven in sandy





strata which syphons the supply to a central collecting well. This method is not a new one, but its adoption to Tiruchirappalli town is new.

(*b*) It is reported that the water-supply in the town by this new method is augmented by about 1.5 m.g. a day.

(*c*) No demand for research has been made by the Municipality and the question of conducting any research will be considered on merits, on receipt of a requisition from the Municipality.

SRI M. K. SOMASUNDARAM: ஸார், இந்தத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு? எவ்வளவு காலத்திலே முடிக்கத் திட்டமிடப்பட்டு இருக்கிறது?

THE HON. SRI M. A. MANICKAVELU: I have said already that we have arranged to have this extra supply by sinking these deep bore holes in the sandy strata. About research and other things, if the municipality approaches, it will be considered.

MR. SPEAKER: சாதாரணமாக விதிப்படி அங்கத்தினர்கள் எப்போதும் நின்றுகொண்டு "இந்தக் கேள்வியைக் கேட்கிறேன்" என்று சொல்ல வேண்டும். ஆனால் நின்றாலே போதும் என்ற சலுகையை நாம் கொடுத்திருக்கிறோம். ஆனால் ஒரு அங்கத்தினர், இன்னொருவர் சார்பிலே ஒரு கேள்வியைப் போடும் போது தயவு செய்து எழுந்து, "அவருக்குப் பதில் நான் இந்தக் கேள்வியைப் போடுகிறேன்" என்று கேட்க வேண்டும். எழுந்திருந்து நின்று விட்டால் மட்டும், நான் எப்படி கேள்வியைப் போடுங்கள் என்று சொல்ல முடியும்? அதனாலே தான் இந்தக் கன்பியூஷன் ஏற்பட்டது.

### *Co-operative Society (Prizes)*

* 921 *Q.*—SRI S. M. ANNAMALAI: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நன்றாக இயங்கும் கூட்டுறவு சங்கங்களுக்குப் பரிசு கொடுக்கும் உத்தேசம் உண்டா?

(இ) அப்படியானால், அதன் விவரமென்ன?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) Yes, Sir.

(*b*) To begin with, individual shields are proposed to be awarded to select village credit societies, Co-operative Central Banks and Marketing Societies every year, in the following manner:—

1. *Village Credit Societies.*—Fifteen societies will be selected at the rate of one from the area of operation of each of the 15 District Central Co-operative Banks and awarded a shield of the value of Rs. 100 each.

2. *District Co-operative Central Banks and Marketing Societies.*—One District Co-operative Central Bank and one primary marketing society will be selected for the entire State and awarded individual shields of Rs. 200 and Rs. 150 respectively.

A set of "norms" has been prescribed for the selection of societies for the award of these shields. According to these norms, enlistment of members, volume of credit supplied in

[20th March 1961

relation to total requirements, mobilisation of local deposits, linking of credit and marketing, recovery of dues, extent of marketing business done and processing activities undertaken by the society, etc., will form the main criteria for the award of these shields.

SRI S. M. ANNAMALAI : ஸார், இந்த ஷீல்டுகள் யாரால் செய்யப்படுகின்றன ? இந்தப் பரிசு கொடுப்பதற்கு மத்திய அரசாங்கத்தின் உதவி ஏதாவது உண்டா ? அப்படியாயின் எவ்வளவு ?

THE HON. SRI R. VENKATARAMAN : நம்முடைய ராஜ்யத்தில் ஸ்டேட் கோ-ஆபரேடிவ் சென்ட்ரல் அட்வைசரி கவுன்சில் இருக்கிறது. அந்தக் கவுன்சில் இதை முடிவு செய்தது. செலவு 1,850 ரூபாய். இது ராஜ்ய சர்க்காராலேயே ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

*Contractors (Highways Department)*

* 922 Q.—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the contractors of the Highways Department are compelled to produce sales-tax clearance certificate for payment of their bills; and

(b) if so, under what authority?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) No, Sir.

(b) Does not arise.

*Keelvani Weavers' Co-operative Society (misappropriation)*

* 925—SRI N. MARUDACHALAM : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோபி தாலுகா கீழ்வாணி நெசவாளர் கூட்டுறவு சொஸைட்டியில் 1958-ம் வருடத்திய ஸ்பெஷல் ரிபேட் தொகையை சொஸைட்டியின் தலைவர் கையாடியதாக சர்க்காருக்குப் புகார் வந்துள்ளதா ?

(இ) அதன் மேல் சர்க்கார் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes, Sir.

(b) An enquiry into the affairs of the society has been ordered under section 38 of the Madras Co-operative Societies Act.

*Homeopathic doctors*

* 926 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether the Government have received copies of the resolutions passed by the First Annual Conference of the Coimbatore District Homeopathic Association on October 31, 1960, requesting the Government to create a faculty or Board of Homeopathic and Bio-Chemical Medicine and for appointing Homeopathic doctors in all rural and local fund dispensaries that remained closed for want of doctors; and



20th March 1961]

(b) if so, the action taken thereon?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) Yes, Sir.

(b) The points raised in the resolutions referred to are premature. They will be considered after legislation to govern the teaching, practice, etc., of homoeopathic system of medicine is enacted .

SRI N. K. PALANISAMI : May I know whether setting up of a Board arises only when there is an Act regarding the recognition of homoeopathic system? If so, why there is delay in bringing forth this legislation?

THE HON. SRI M. A. MANICKAVELU : There is no delay actually. The Bill is sought to be brought in and the Law Department is examining the question. We have to control the practice of this system and we will have to provide for the registration of homoeopathic doctors and how they should be trained and prescribe the necessary qualification, etc. The principle has been recognised that homoeopathy also should be considered as a scientific system. Last year only we recognised it and before that there was no recognition.

*Houses for weavers*

* 927 Q.—SRI M. K. SOMASUNDARAM (on behalf of SRIMATHI RAJATHI KUNJITHAPATHAM) : கனம் கைத் தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) கேள்வி எண் 278-க்கு 1961-ம் ஆண்டு ஜனவரி மீ 30-உ-ல் அளித்த பதிலை யொட்டி அந்த வீடுகளுக்காக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது ?

(இ) தொகை கொடுக்கப்பட்டுவிட்டதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) The Government of India agreed to sanction a sum of Rs. 39,100 for repairing 40 houses of the members of the Melapalayam Weavers' Co-operative Society in Tirunelveli district and Rs. 38,050 for repairing 39 existing houses of the members of the Ammapet Weavers' Co-operative Society in Salem district.

(b) The Melapalayam Weavers' Co-operative Society repaired only sevenh ouses of its members at a cost of Rs. 6,412. This amount has been disbursed to the society. The Ammapet Weavers' Co-operative Society has repaired 31 houses so far and Rs. 17,695.83 nP. has been disbursed to the society for expenditure on these repairs. The society has now taken up repairs of the remaining eight houses and therefore instructions have been issued for the disbursement of another sum of Rs. 1,203.84 nP. to the society for expenditure on the scheme. After the repairs of all the houses are completed the balance of financial assistance will be sanctioned to the society.

[20th March 1961

### *State Transport (Body-building)*

* 928 Q.—SRI K. VINAYAKAM (on behalf of SRI T. S. RAMASWAMY) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the monthly targets of construction in the Body-building section of Madras Transport Department; and

(b) the actual number of bodies built—monthwar during 1959-60 and 1960-61?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) The target fixed by the Government is seven. This will be stepped up to 12 when additional posts sanctioned by the Government are actually filled up.

(b) The actual number of bodies built monthwar during 1959-60 and 1960-61 is as follows :—

| 1959 | | | 1960 | | |
|---|---|---|---|---|---|
| January .. | 5 | (Ordinary type) | January .. | 8 | (Ordinary type) |
| February .. | 6 | Do. | February .. | 9 | Do. |
| March .. | 6 | Do. | March .. | 9 | Do. |
| April .. | 8 | Do. | April .. | 6 | Do. |
| May .. | 7 | Do. | May .. | 4 | (Luxury type) |
| June .. | 8 | Do. | June .. | 4 | Do. |
| July .. | 7 | Do. | July .. | 4 | Do. |
| August .. | 7 | Do. | August .. | 5 | Do. |
| September .. | 7 | Do. | September .. | 5 | Do. |
| October .. | 2 | Do. | October .. | 10 | (Ordinary type) |
| November .. | 5 | Do. | November .. | 10 | Do. |
| December .. | 5 | Do. | | | |

SRI K. VINAYAKAM : Apart from building our coaches in the Chromepet factory, is it a fact that this work has also been entrusted to private companies? If so, may I know the circumstances under which private companies have been given orders for building our coaches?

THE HON. SRI R. VENKATARAMAN : In 1960, 125 bodies were built outside. The capacity of our workshop is only 180. We had built a total of 210 bodies during the last year and so we had to build our bodies outside. I may also add that they were given on a tender basis.

SRI K. SATTANATHA KARAYALAR : வரும் ஆண்டிலும் இது போல வெளியே தனியார் துறைக்குக் கொடுக்கப்படுமா ? இருக்கக் கூடிய "மாக்ஸிமம் அவுட்புட்டில்" லக்ஷரி கோச்சை வெளியே கொடுத்தால் சாதாரண டைப் பஸ்களை நாம் கட்ட முடியுமா ? அதற்குள்ள வசதி உண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இப்பொழுது நாம் மாதம் ஒன்றுக்கு 12 வண்டிகள் கட்டலாம் என்று எதிர்பார்க்கிறோம். அவ்வாறு 12 வண்டிகள் கட்டாமல், சற்றேறக்குறைய 10 வண்டிகள், ஆர்டினரி டைப் வண்டிகள், வெளியே கட்டும்படியாக இருக்கும். ஆனால் லக்ஷரி டைப் வண்டிகள் மாதம் ஒன்றுக்கு 5, 6-க்கு மேல் கட்ட முடியாது. லக்ஷரி டைப் பஸ் கட்டுவதற்கு



20th March 1961]

சாதாரணமாக 1½ ஆர்டினரி பஸ் கட்டுகிற காலம், "மான் ஹவர்ஸ்" ஆகிறதாம். அதனால் நாம் சில பஸ்களை வெளியே கட்டும்படியான நிலைமை இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். லக்ஷரி டைப் பஸ் நாம் கட்டினால்தான் மிகச் சிறந்த முறையில் இருக்கும். ஆகையால், ஆர்டினரி டைப் பஸ்களை வெளியே கொடுக்கலாம் என்று யோசனை.

SRI K. B. S. MANI : நம்முடைய சர்க்கார் தொழிற்சாலையில் கட்டப் படுகிற பஸ் கூண்டுகளுக்கு என்ன செலவு ஆகிறது ? வெளியே தனியார் துறையில் கட்டுவதற்கு என்ன செலவாகிறது ? லக்ஷரி டைப் புக்கும் ஆர்டினரி டைப்புக்கும் என்ன வித்தியாசம் ? தனியார் துறையில் கட்டுவதற்கும் சர்க்கார் துறையில் கட்டுவதற்கும் தொகையில் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : லக்ஷரி டைப் பஸ் தனியார் துறையிலே கட்டவில்லை. அதனால் அதில் ஒப்பிடுவதற்கு ஒன்று மில்லை. ஆர்டினரி டைப் பஸ் தான் வெளியிலே கட்டுகிறோம். நாம் கட்டுவதற்கும் ரூ. 14,000 ஆகிறது. வெளியிலே கட்டுவதற்கும் ரூ. 14,000 ஆகிறது. இரண்டுக்கும் ஒன்றும் அதிகமாக வித்தியாசம் இல்லை. ஆனால் நமது சர்க்கார் தொழிற்சாலையில் கட்டுகிற பஸ்ஸுக்கு ஆகிற ரூ. 14,000 -ல் "ஸெண்டேஜ் சார்ஜ்" இருக்கிறது. அது நம்மையே சேர்ந்தது. அதுதான் லாபம்.

SRI K. VINAYAKAM : From the statement read out by the Hon. Minister we find that during some months the target could not be reached. What was the reason for this kind of slackness in reaching the target? Was there any labour unrest during that period and if so, may I know how it was finally solved?

THE HON. SRI R. VENKATARAMAN : During October-November-December 1959, there was labour unrest and therefore, the production was less. It has been solved and our present production is 10 chassis per month.

### *Kilpauk Medical College, Madras.*

* 929 Q.—SRI S. RAMASWAMI THEVAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether there is any misunderstanding between Dr. A. N. Subbaraman, the Dean of the Government Kilpauk Medical College, Madras, and the students of that College; if so, the reasons therefor?

THE HON. SRI M. A. MANICKAVELU : No, Sir. The latter part of the question does not arise.

### *Industrial Housing Scheme*

* 930 Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the places where it is proposed to construct houses under the Subsidised Industrial Housing Scheme; and

(b) the number of houses and the amount to be spent?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) A statement [a] is placed on the table of the House.

[a] Printed as Appendix I on pages 181-182 infra.

[20th March 1961

SRI K. SATTANATHA KARAYALAR : தொழிலாளர்களுக்கு வீடு கட்டும் இந்தத் திட்டத்தின் கீழ் உத்தேசமாக இது வரையில் செலவழித்த தொகை எவ்வளவு என்று சொல்ல முடியுமா ? "கவர்மெண்டு ப்ராஜக்ட்ஸ்", "கூட்டுறவு ப்ராஜக்ட்ஸ்", "ப்ரைவேட் எம்ப்லாயர்ஸ்" என்ற தலைப்பின் கீழ் "amount to be spent" தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுவரையில் எத்தனை சதமானம் செலவாகியிருக்கும் என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் "amount to be spent" பற்றிக் கேட்டார். ஆகையினால் அது கொடுக்கப்பட்டிருக்கிறது. எவ்வளவு செலவழிந்தது என்று கேட்டால் அதைக் கொடுக்க முடியும். இன்னும் ஓரிரண்டு நாட்களில் "எண்டையர் ஹவுசிங்" பற்றிய ஒரு ஸ்டேட்மெண்டு புத்தகம் தயாரித்து மேஜையின் மீது வைக்கிறேன். அதைக் கனம் அங்கத்தினர் பார்த்துக்கொள்ளலாம்.

## *Sethu Samudram Project*

* 932 Q.—SRI A. VEDARATHNAM : கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேது சமுத்திரத்திட்டத்தை ஆராய்ந்து பிரிட்டிஷ் நிபுணர் காப்டன் டேவிஸ் தன் ஆராயச்சியின் முடிவை அரசாங்கத்திற்கு அறிவித்து விட்டாரா ?

(இ) அப்படியானால் அதன் சாராம்சத்தை சட்டசபை நூல் நிலையத்தில் வைக்கப்படுமா ?

(உ) அவர் முடிவின் பேரில் அரசாங்கம் என்ன நடிவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது?

THE HON. SRI P. KAKKAN : (a) Yes, Sir.

(b) A copy of the entire report of Captain Devies is placed in the Legislative Assembly Library.

(c) Detailed investigations are now in progress. The Hydrographic Department of the Inland Navy have placed the I.N.S. 'Jumna' for the survey and preparation of large scale chart of the Sethu Samudram route. All formalities havo been completed with regard to boring operations which will be started shortly.

SRI A. VEDARATHNAM : இந்த சேது சமுத்திரத் திட்டத்தை ஆராய்ந்த பிரிட்டிஷ் நிபுணர் காப்டன் டேவிஸ் தனிப்பட்ட முறையில் ஆராய்ச்சி நடத்தினரா ? அல்லது ஏதாவது குழுவின் தலைவராக இருந்து ஆராய்ச்சி நடத்தினரா ? அவர்களுக்கு இந்த ஆராய்ச்சி நடத்துவதற்குள்ள தகுதி என்ன என்பதைத் தயவு செய்து அறிவிக்க முடியுமா ?

THE HON. SRI P. KAKKAN : ஏற்கனவே மதிப்பிற்குரிய திரு. ராமசுவாமி முதலியார் கமிட்டியில் அவர்களும் அப்பொழுது ஒரு அங்கத்தினராக இருந்து பணியாற்றியிருக்கிறர். இப்பொழுது நம் அரசாங்கத்தினுடைய அழைப்பை ஏற்று, அவர்கள் வந்து நமது ஸ்டேட் போர்ட் ஆபீசரை வைத்துக் கொண்டுதான் இந்த ஏற்பாடுகளையெல்லாம் செய்திருக்கிறர் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

SRI A. VEDARATHNAM : அது சாத்தியம் என்று கூறுகிறர்களா ? அவர்களுடைய அபிப்பிராயம் என்ன என்பதைத் தெரிவிக்க முடியுமா ? இதற்கு ஏதாவது திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறதா ? அப்படியானல் அந்தத் திட்டத்தின் மொத்த தொகை எவ்வளவு ?

THE HON. SRI P. KAKKAN : அவர்கள் பரிசீலனை செய்ததிலே

South Approach (outer section),
South Approach (inner section),
North Approach,
Bay of Bengal Approach (middle channel Palk Strait),



61384

20th March 1961]

ஆகிய நான்கு இடங்களிலும் "போரிங்" [illegible] பார்க்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறர்கள். ஏற்கனவே மதிப்[illegible] திரு. ராமசுவாமி மு[illegible] யார் அவர்கள் அப்பொழுது ரிபோர்ட்டு [illegible]க்கும்பொழுது ரூ. 9.9 கோடி செலவாகும் என்று சொ[illegible]ர்கள். பிற்பாடு [illegible] சாங்கம் பரிசீலனைசெய்து, கமிட்டி முதலிய[illegible] பரிசீலனை [illegible] பார்த்ததில் ரூ. 26 கோடி ஆரம்பத்தில் செ[illegible] 80 கோடி வரையிலும் போகும் என்று சொல்லுகிறர்கள். [illegible] "போரிங்" போட்டுப் பார்த்து எவ்வளவுக்கு எவ்வளவு செலவைக் குறைக்க முடியும் என்பதைத் தெரிந்துகொள்ள [illegible]களைக் கூப்பிட்டுப் பார்க்க ஏற்பாடு செய்திருக்கிறேம்.

SRI S. M. ANNAMALAI : மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தூத்துக்குடி துறைமுகம் மட்டும் தான் எடுத்துக் கொள்ளப்படும், சேது சமுத்திர திட்டம் எடுத்துக்கொள்ளப்படாது என்பது உண்மையா ? அப்படியானல், மூன்றுவது திட்டத்தில் சேது சமுத்திர திட்டத்தையும் சேர்த்து அமைப்பதற்கு இந்த சர்க்கார் என்ன முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறர்கள் ?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் அவர்கள் ஏற்கனவே தூத்துக்குடி துறைமுகத் திட்டம் எடுத்துக் கொள்ளப்படாது என்று சொன்னர்கள். இப்பொழுது இரண்டு திட்டங்களையும் சேர்த்து இணைத்து எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லுகிறர்கள். முதலில் தூத்துக்குடி திட்டம், பிற்பாடு சேது சமுத்திரத் திட்டம் எடுக்க வேண்டுமென்பது தான் அரசாங்கத்தின் நோக்கம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

SRI A. VEDARATHNAM : இப்படி பெரிய தொகை செலவழிப்பதற்கு நம்முடைய மாநிலத்தில் நிதி வசதி உண்டா ? இதற்கு மத்திய அரசாங்கத்தினுடைய உதவி ஏதாவது கிடைக்குமா ? அப்படியானல், எவ்வளவு கிடைக்கும் என்பதைத் தயவு செய்து அறிவிக்க முடியுமா ?

THE HON. SRI P. KAKKAN : எவ்வளவு உதவி கிடைக்கும் என்பது பற்றி தகவல் என்னிடம் இல்லை. கனம் அங்கத்தினர் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்ல முடியும்.

V 211, 31 N61
N62.43

## *Treasury Office (Panruti).*

* 934Q.—SRI S. THANGAVELU : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கடலூர் தாலுகா பண்ணுருட்டியில் கஜானு அலுவலகம் நிரந்தரமாக அமைத்தல் விஷயமாக அரசாங்கத்தினிடம் ஏதேனும் திட்டம் பரிசீலனையில் இருக்கிறதா ?

(இ) அப்படியானல், எப்போது அமுலுக்கு வரும் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (அ) No, Sir.

(இ) Does not arise.

SRI S. THANGAVELU : கஜானவை நிரந்தரமாக அமைக்க வேண்டுமென்று மாவட்ட கலெக்டர் மூலமாகவும், பொது மக்கள் சார்பிலும், மண்டல காங்கிரஸ் கமிட்டி சார்பிலும் விண்ணப்பங்கள் அரசாங்கத்துக்கு வந்திருக்கின்றன. மீண்டும் அதைப் பரிசீலனை செய்து கஜானு அலுவலகத்தை நிரந்தரமாக்குவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இப்பொழுது அங்கே கலெக்ஷன் டெப்போ மாதிரி ஒன்று இருக்கிறது. அது ரெகுலர் கஜானு அல்ல. ரெகுலர் ஸப் டிரெஷரியாக இருக்க வேண்டுமென்று சொன்னல்,

இண்டிபெண்டண்ட் ஸப் தாலூகாவாக இருக்க வேண்டும். இப்பொழுது அது ஒரு இண்டிபெண்டண்ட் ஸப் தாலுகாவாக இல்லை. ஆனால் இப்பொழுது பணம் கட்டுவதற்கு வசதி இருக்கிறது.

**SRI S. THANGAVELU** : அங்கே விவசாயிகளும், வியாபாரிகளும் அதிகமாக இருப்பதனால், சர்க்கார் கட்டவாத தொகைகளைக் கட்டுவதில் நெருக்கடி ஏற்படுவதனால், நிரந்தரமாக அங்கே கஜானவை அமைப்பது மிகவும் அவசியமாகயிருக்கிறது. இப்பொழுது வாரத்திலே இரண்டொரு நாட்களுக்குத்தான் அது திறந்திருக்கிறது. ஆகவே நிரந்தரமாக இந்தக் கஜானவை அமைப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

**THE HON. SRI M. A. MANICKAVELU** : அப்படி அவசியமாக இருந்தால் அதை ஒரு இண்டிபெண்டண்ட் சப் தாலூகாவாகச் செய்ய வேண்டும். அப்படி இண்டிபெண்டண்ட் ஸப் தாலூகாவாகச் செய்தால் உடனேயே அங்கு ஸப் டிரெஷரி ஏற்படும். எந்த அளவுக்கு அதை ஒரு இண்டிபெண்டண்ட் ஸப் தாலூகாவாகச் செய்ய முடியும் என்று இன்னும் தெரியவில்லை. விண்ணப்பங்கள் கொடுத்திருந்தால், அவை பரிசீலிக்கப்படும்.

### *House Construction (Javadu Hills)*

*935 *Q.*—**SRI S. M. ANNAMALAI** : கனம் பொது மராமத்து அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1960-ல் வட ஆற்காடு மாவட்டம் போளூர் தாலூக்கா ஜவ்வாது மலையில் உள்ளவர்களுக்கு எத்தனை வீடுகள் கட்ட அனுமதிக்கப்பட்டுள்ளது ?

**THE HON. SRI P. KAKKAN** : **Ten houses are programmed for construction in the Javadu hills in Polur taluk during 1960–61.**

**SRI S. M. ANNAMALAI** : சென்ற ஆண்டு, அதற்கு முந்தின ஆண்டுகளில் செங்கம், திருப்பத்தூர் ஜவ்வாது மலை வாசிகளுக்கு வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன. போளூர் தாலூகாவிலே அதிகமான மலை வாசிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு 10 வீடுகள் போதுமா ? எண்ணிக்கையை மேலும் அதிகப்படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

**THE HON. SRI P. KAKKAN** : ஆதிவாசிகள் இந்த மாநிலத்திலே எங்கே இருந்தாலும் அங்கே அவர்களுக்கு இம்மாதிரி வசதிகள் செய்து கொடுக்கவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். கொஞ்சமாக இருக்கிறார்கள் என்ற காரணத்திற்காக அவர்களிடையே பாகுபாடு உண்டாக்கும் நோக்கம் அரசாங்கத்துக்குக் கிடையாது. மத்திய அரசாங்கம் 51 வீடுகள் கட்டிக்கொடுத்தார்கள். திருப்பத்தூர், செங்கம், வேலூர், கனியம்பாடி பிளாக்குகளிலே அவைகளைக் கொடுத்திருக்கிறார்கள். மீண்டும் தேவையானால் அரசாங்கம் உதவி செய்வதற்குத் தயாராயிருக்கிறது.

**SRI S. M. ANNAMALAI** : செங்கம் தாலூகா, திருப்பத்தூர் தாலூகா ஜவ்வாது மலை வாசிகளுக்கு இரண்டு மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து வீடுகள் கட்டிக்கொடுத்து வருகிறார்கள். ஆனால் போளூர் தாலூகாவிலுள்ள ஜவ்வாது மலை வாசிகளுக்கு 10 வீடுகள்தான் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மேலும் 30 வீடுகளாவது கட்டிக் கொடுப்பதற்கு சர்க்கார் முயற்சி எடுப்பார்களா ?

**THE HON. SRI P. KAKKAN** : கனம் அங்கத்தினர் ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். கலெக்டர் பார்த்து மேலும் அதிகமாக வீடுகள் கட்ட வேண்டுமென்று சிபார்சு செய்தால் கவனிக்கப்படும்.



**SRI J. MATHA GOWDER** : இந்த மாகாணத்திலே ஆதிவாசிகளுக்கு வீடுகள் ஒதுக்கப்பட்டிருப்பது மிகவும் குறைவாக இருக்கிறது. ஆகையினால் அரசாங்கம் அவர்களுக்கு அதிகமாக வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கு முயற்சி செய்வார்களா ? எங்கெங்கே ஆதிவாசிகள் அதிகமாக இருக்கிறார்களோ அங்கே அதிகமாக வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

**THE HON. SRI P. KAKKAN** : இந்த மாநிலத்திலே ஆதிவாசிகள் ஜாஸ்தி இருப்பது ஊட்டி மலையில்தான். அதனாலே அதிகமான வீடுகள் அங்கே கட்டப்பட்டிருக்கின்றன. மேலும் தேவைப்பட்டால், இது கவனிக்கப்படும்.

### *Madras Medical Registration Act*, 1914 (*extension to Kanyakumari*)

* 936 *Q.*—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Madras Medical Registration Act, 1914, has been extended to the Kanyakumari district;

(*b*) if so, whether any saving provision has been made in respect of registration of class ' B ' practitioners of Allopathy registered under the Travancore-Cochin State Act and who were practising on the date of integration; and

(*c*) if the Travancore-Cochin State Act was not repealed whether the Madras Medical Council and its Registrar have been appointed to function for the corresponding authorities under the Travancore-Cochin Act?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) No, Sir. The date on which the Act already passed by the Legislature for the extension of the Madras Medical Registration Act, 1914, to the Kanyakumari district, shall come into force has not yet been decided.

(*b*) No, Sir. Class ' B ' practitioners of Allopathy registered under the Travancore-Cochin State Act, can, however, continue to practice even after the Madras Medical Registration Act is extended to the transferred areas, provided they do not pose to be registered medical practitioners and use any medical degree.

(*c*) The Travancore-Cochin Medical Practitioners' Act, 1953, will stand repealed when the Madras (Transferred Territory) Extension of Laws Act, 1960 comes into force. The Madras Medical Council and its Registrar have not been appointed to function under the Travancore-Cochin Act.

SRI T. T. DANIEL : Sir, some of the Class ' B ' practitioners of Allopathy who applied for getting their names registered under the Travancore-Cochin State Act before the merger of the Transferred Territory, have been served with notice by the Kerala Government that they could not register their names as Kanyakumari has become part of the Madras State. May I know whether these practitioners have got a right to be registered under the Travancore-Cochin State Act especially when our Government have not appointed the Madras Medical Council and its Registrar for that purpose?

THE HON. SRI M. A. MANICKAVELU : The Madras Act has been extended to the Transferred Area but it has not taken effect. It has to be notified and then it will take effect from a certain date which has not been done. Meanwhile it is nothing to prevent the registered medical practitioners to practice. As soon as this Act is extended by notification, then registration of medical practitioners will take place according to the provisions of the Act.

SRI T. T. DANIEL : May I know the approximate date when the Government will be issuing this notification?

THE HON. SRI M. A. MANICKAVELU : We shall try to do it as early as possible.

*Atomic Power Plant (location).*

9 a.m. * 937 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether any decision has been reached about the location of an Atomic Power Plant at Madras; and

(b) if so, the details thereof?

THE HON. SRI V. RAMAIAH : (a) No, Sir.

(b) Does not arise.

SRI N. K. PALANISAMI : The Hon. Minister had stated on the floor of the House that the location of an atomic plant was pressed in the Zonal Council meeting. In the Governor's Address also it was stated that the atomic plant would be located in the Madras State but in the Budget speech no mention . . .

MR. SPEAKER : The hon. Member need not refer to them. Let him put a direct question. We are not concerned with what had been stated in the Budget or the Governor's Address.

SRI N. K. PALANISAMI : Why it has been dropped?

THE HON. SRI V. RAMAIAH : I have never stated that it has been dropped. I have just now stated that the place where it has to be located, has not been decided because the proposal is still in the early stage. As regards our statements to which the hon. Member has referred, we have been pressing for the location of an atomic plant within our State and it is still there, and it is gaining strength day by day not because of political pressure but because the demand from industries is such that we will have to find some power as rapidly as possible. The demand is such that the Government of India have recognised our need and they are also doing their best to get a plant for us.

SRI K. VINAYAKAM : Irrespective of the place where it would be located, has it been decided that the Madras State will get a plant to be located anywhere in our State?



THE HON. SRI V. RAMAIAH : Before deciding whether our State will get it, the Government of India will have to decide, how many plants they are going to have during the Third-Plan period because as far as the Atomic Plant is concerned, it is not as if everything is readily available for the Atomic Plant to be located. The Atomic Plant is still in a big research stage not only in this country but even in most advanced countries throughout the world. Luckily for us the need to develop the atomic energy for peaceful purposes has been taken up very seriously by the Government of India. That is why we feel that when the Government decide about the number of atomic plants to be set up, the Madras State will also get one.

SRI S. M. ANNAMALAI : கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் பொழுது மத்திய சர்க்கார் இதைத் தீவிரமாக உணர்ந்திருக்கிறார்கள். ஆகவே அது கிடைக்கும் என்று தெரிவித்தார்கள். பாம்பே மாநிலம் நமக்குப் பின்னர் கேட்டது. பாம்பே மாநிலத்தில் அணுசக்தி நிலையத்தை அமைப்பதற்கு மத்திய அரசாங்கம் அனுமதி கொடுத்துவிட்டது. நமது மாநில அமைச்சர்கள் எத்தனையோ ஆண்டுகள் கேட்டும்கூட தீவிரமாக ஆலோசித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லுவது நியாயமா? இதை வற்புறுத்தி மூன்றாவது திட்டத்தில் சேர்ப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்போகிறார்கள் என்று கேட்கிறேன்.

MR. SPEAKER : I rule this question out of order. We are not concerned with what is happening in the Bombay State.

SRI S. RANGANATHA MUDALIAR : We have decided to start an Atomic Plant. We have stated our need and the Central Government is also considering the possibility of giving us an Atomic Plant. Before making the request to the Central Government, have this Government devised any measures for procuring millions and millions of gallons of fresh water that may be required for cooling purposes?

THE HON. SRI V. RAMAIAH : Water is no problem.

*Salt Factories in Kanyakumari (Tax)*

MR. SPEAKER : As the hon. Member who gave notice of question No. 938 is not in his seat, the question and answer will be printed in the Proceedings.

* 938 Q.—SRI T. S. RAMASWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any tax or rent or kudivila is being collected from the Salt Factories of the Kanyakumari district by the State Government;

(b) if so, the details thereof;

(c) whether any such taxes are being collected from the Salt Factories in other districts; and

(d) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes, Sir.

(b) The proprietors or licensees of Salt Factories situated on Government lands leased out to them are assessed a dual levy. The licensees in that case pay an annual land tax at the rate of

[20th March 1961

six annas per acre except one factory (Pon Allom) which pays land tax at Rs. 190 per acre annually. In addition to this levy, the licensees have to pay a sum of Rs. 30 per acre annually being the commuted money rent, in lieu of the payment of a stipulated quantity of Salt to Government by the parties, as per the Travancore-Cochin Government's orders.

The Proprietors of the Palkulam Salt Factory which is on Government land have to pay 10 per cent of the net profits in addition to the annual payment of Rs. 30 per acre.

The Proprietor of a Salt Factory (C. N. Allom) on private land has to pay 10 per cent of the net profits to Government.

(*c*) & (*d*) No tax is being collected from the Salt factories in this State.

The taram assessment if the land had already been assessed at settlement, or a lease amount fixed with reference to the local conditions or settled by open auction is charged on Government lands assigned or leased out for salt manufacture.

### *Weekly holiday for workers*

* 939 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the categories of workers who are not entitled for a weekly holiday as per G.O. Ms. No. 2565, Public Health, dated 11th August 1959; and

(*b*) the reason therefor?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) and (*b*) A statement [a] is placed on the table of the House.

SRI K. SATTANATHA KARAYALAR : ஸார், இந்த வேலையாட்களுக்கு வாராந்தர விடுமுறை பற்றி ஒரு சில கேட்டிகரிகளுக்கு மாத்திரம் கொடுக்க சௌகரியம் இல்லை, அல்லது அப்படிக் கொடுக்க வேண்டி வந்தால், அதிகமாக ஆட்கள் தேவை இருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவை ஹைலி டெக்னிகல் வேலைகள் இல்லை, ஆட்கள் கிடைப்பது கஷ்டம் இல்லை. அதிக ஆட்களை எடுத்து இவர்களுக்கு விடுமுறை கொடுக்க ஏன் சர்க்கார் ஏற்பாடு செய்யக் கூடாது? அம்மாதிரியே தான் உறுதிமொழிக் கமிட்டிக்கும் சொல்லப்பட்டது. ஏன் ஆட்கள் அதிகம் எடுக்கப்படவில்லை, எப்பொழுது எடுக்கப்படுவார்கள் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : சமீபகாலத்தில் தான் நர்ஸிங் ஸ்டாபுக்கு ஹாலிடேஸ் கொடுத்திருக்கிறோம். இதனால் பல லட்சக் கணக்கான பணம் செலவாகிறது. இப்பொழுது சொல்லுகிற இந்த சிப்பந்திகளுக்கு லீவ் ரிசர்வ் பண்ணவேண்டும் என்றால் அது அவ்வளவு சுலபமாகப் பண்ண முடியாது. கூடுமானவரையில், இவர்களுக்கும் வீக்லி புல் டே அல்லது ஹாப் டே எவ்வப்பொழுது சாத்தியமோ அவ்வப்போது கொடுக்கிறோம்.

---

a Printed as Appendix II on page 182 infra.



20th March 1961]

SRI K. SATTANATHA KARAYALAR : ஸார், இந்த வேலையாட்களைப் பொறுத்த மட்டில், ஏற்கனவே இருக்கும் ஆட்களுக்கு 8 மணி நேரம் வேலைக்கும் பிறகு வாராந்தர விடுமுறை அவசியம் என்று உணர்ந்து, அதிக ஆட்கள் வேண்டுமானாலும், சில லட்ச ரூபாய்கள் செலவானாலும், பே கமிஷன் சிபாரிசுகளால் எவ்வளவோ செலவுசெய்யும் சர்க்கார் இதையும் பொருட்படுத்தாமல், அவர்களுக்கு ஒரு கால வரம்பு வைத்து, படிப்படியாக ஆட்கள் எடுத்து வாராந்தர விடுமுறை கொடுக்க ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : நர்ஸிங் ஸ்டாபுக்கே எல்லோருக்கும் இப்பொழுது கொடுக்கவில்லை. ஸிடியில், மற்றும் டீசிங் ஹாஸ்பிடல் உள்ள மொபசல்களிலும் கொடுக்கப் படுகிறது. பிற்பாடுதான் மற்ற ஹாஸ்பிடல்களில் அம்மாதிரிக் கொடுக்க வேண்டும். அதற்குப் பிறகுதான் இவர்களுக்கு வாராந்தர விடுமுறை பற்றி கவனிக்க வேண்டும்.

SRI S. M. ANNAMALAI : ஸார், இந்த அறிக்கையில் அதிகமான ஆட்கள் வேண்டியிருப்பதால் ஹாலிடேஸ் கொடுக்கவில்லை என்றிருக்கிறது. இந்த 21 கேட்டிகரிகளில் எவ்வளவு ஆட்கள் வேலை செய்கிறார்கள் ? புள்ளி விவரங்கள் கொடுக்க முடியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இப்பொழுது கொடுக்க சாத்தியமில்லை.

### *Cyclone relief (Vedaranyam Block)*

* 941 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் பொதுமராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1955-ம் வருடம் வீசிய புயல் நிவாரணத்திற்காக வேதாரண்யம் பிளாக்கில் எத்தனை வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன ?

(இ) அவைகளில் எத்தனை வீடுகள், எங்கெங்கே சமீபத்தில் பெய்த மழையினால் வீழ்ந்துவிட்டன ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Two hundred and sixty-six houses were constructed in Vedaranyam block under the cyclone relief housing scheme of 1955;

(*b*) Thirty-one houses collapsed due to recent rains in the following places in Vedaranyam block :—

| | |
|---|---|
| Maharajapuram colony ... ... ... ... | 26 |
| Agasthiampalli colony ... ... ... ... | 2 |
| Thethagudi southern colony ... ... ... | 1 |
| Pushpavanam colony ... ... ... ... | 2 |
| Total ... | 31 |

SRI A. VEDARATHNAM : ஸார், இந்தக் கட்டிடங்கள் திறந்து நான்கு மாதங்களுக்குள்ளாகவே சர்க்கார் கொடுத்திருக்கிற புள்ளிவிவரங்கள் படி இத்தனை வீடுகள் விழுந்து இருக்கின்றன. ஆனால் உண்மையிலேயே 80 வீடுகள் கட்டிய காலனியில், 50 வீடுகளுக்கு மேல் விழுந்து இருக்கின்றன. சரியாகக் கணக்கு எடுக்கவில்லை. இப்படி நாலு மாதங்களுக்குள் விழுந்து விடக்கூடிய கட்டிடங்களைக் கட்டியதற்குப் பொறுப்பாளி யார் ? அவர்கள் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ? அவர்களிடம் எக்ஸ்ப்ளநேஷன் வாங்கப்பட்டதா ?

THE HON. SRI P. KAKKAN : சமீபத்தில் ஏற்பட்ட பெருமழை காரணமாக இந்த வீடுகளில் சில விழுந்து இருக்கின்றன. யார் பொறுப்பு, அதிகாரிகளா அல்லது மக்களா என்று கவனிக்க வேண்டியதில் கனம்

அங்கத்தினருக்கும் கூட பொறுப்பு இருக்கிறது என்று எண்ணுகிறேன். கலெக்டருடைய தகவல்களைக் கொண்டு இப்பொழுது விவரங்கள் சொன்னேன்.

**Sri A. VEDARATHNAM :** இதற்கு எவ்வளவு செலவாயிற்று; விழுந்த வீடுகளைப் புதிப்பிக்க என்ன உதவி அளிக்கப்படுகிறது என்று தெரிவிக்க முடியுமா ?

**The Hon. Sri P. KAKKAN :** விழுந்த வீடுகளைப் புதிப்பிக்க ரூ. 3,35,000 கொடுத்திருக்கிறோம் ; லேசாக விழுந்த வீடுகளுக்கு ரூ. 15 வீதமும், பெரும் பகுதி விழுந்து விட்ட வீடுகளுக்கு ரூ. 30 வீதமும் கொடுத்து வருகிறோம்.

### " *Bleeding Madras* "

*942 *Q.*—**Sri S. M. ANNAMALAI :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ல் பிளீடிங் மதராஸ் துணி இதுவரை எவ்வளவு உற்பத்தி செய்யப்பட்டது ?

(இ) எவ்வளவு ஏற்றுமதி செய்யப்பட்டது ?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) 4,25,000 yards (Four lakhs and twenty-five thousand yards) of Bleeding Madras valued at Rs. 7,44,000 (Rupees seven lakhs and fortyfour thousands) were produced from 1st January 1960 to 31st December 1960.

(*b*) 18,06,002 yards (eighteen lakhs, six thousand and two yards) valued at Rs. 41,70,938 (Rupees forty-one lakhs, seventy thousand, nine hundred and thirty-eight) was exported during 1960. This includes the stock of cloth produced during 1959 also.

*943 *Q.*—**Sri V. K. KOTHANDARAMAN :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ல் " பிளீடிங் மதராஸ் " ரகம் கைத்தறித் துணி நமது ராஜ்யத்தில் எவ்வளவு தேங்கிக் கிடக்கிறது ?

(இ) இதனால் ஏற்பட்டுள்ள சிரமத்தைப் போக்க சர்க்கார் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

(உ) மத்திய சர்க்கார் இதற்காக ஏதாவது உதவி செய்கிறார்களா ?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) About 16,00,000 yards (sixteen lakhs yards) are reported to be the stocks left in this State.

(*b*) & (*c*) With a view to assist the marketing, the Government sponsored a delegation consisting of the Director of Handlooms, representatives of the Madras State Handloom Weavers' Co-operative Society and leading private exporters of handloom cloth to the East Asian countries to explore markets for Bleeding Madras and other varieties of handloom fabrics. The State Society has been advised to make ready-made garments from " Bleeding Madras " to facilitate sales. This Government have also requested the Government of India to purchase the entire accumulated stock of Bleeding Madras through the Handloom Export Organisation. Their decision is awaited.





**Sri S. M. ANNAMALAI :** ஸார் ப்ளீடிங் மெட்ராஸ் ஏற்றுமதி தேக்கத்தால் எவ்வளவு கைத்தறி நெசவாளர்கள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள் ? அவர்களுக்கு நிவாரணம் அளிக்க என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன ?

**The Hon. Sri R. VENKATARAMAN :** கேட்ட கேள்விக்குப் பதில் கொடுத்தேன். எத்தனை நெசவாளிகள் கஷ்டப்படுகிறார்கள் என்பதில் இரண்டு அபிப்பிராயங்கள் இருக்கின்றன. ஒன்று வியாபாரிகள் அந்தத் துணிகளை வாங்கி வைத்துக்கொண்டு, அவற்றை சர்க்கார் வாங்க வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள் என்று ஒரு அபிப்பிராயம். இப்பொழுது நெசவாளர்களிடம் துணி தேங்கியிருக்கிறதா அல்லது வியாபாரிகளிடம் தேங்கியிருக்கிறதா என்று சொல்வதற்கில்லை.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR : Are the Government aware of the fact that since the quality has gone down, we are not having enough business? What steps have the Government taken to enforce effectively the quality?

The Hon. Sri R. VENKATARAMAN : So far as cloth produced under co-operatives and under the direction of Handloom Export Organisation are concerned, the quality is of standard mark and there is no loss of the export of this cloth. But so far as private producers are concerned, there has been the entry of people who were not engaged in this trade before. Therefore there has been certain amount of deterioration in the standard of goods produced by them. It is not possible for Government to insist on quality unless the foreign buyers also co-operate with Government. We have advised all foreign buyers that they should accept goods from the Handloom Export Organisation or alternatively they must accept goods only marked by State Government under the Cloth Marking Scheme. But in spite of this, foreign buyers do buy from other people, and they take the risk.

**Sri V. K. KOTHANDARAMAN :** ப்ளிடிங் மெட்ராஸ் துணி என்று சொன்னால் அந்தத் துணியிலிருந்து சாயம் ப்ளிடாகிக்கொண்டிருப்பதற்குப் பெயரா ? வருஷக் கணக்கில் அதை வாங்கி ஏற்றுமதி செய்யவில்லை என்றால் பூச்சி அடித்து மக்கிபோய் ப்ளிட் ஆகக்கூடிய நிலைமை ஏற்பட்டு, அதனால் நஷ்டம் ஏற்படக்கூடிய அளவுக்குப் போய்விடுகின்றது ஆகையால் உடனடியாக அவைகளை வாங்கி ஏற்றுமதி செய்வதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**The Hon. Sri R. VENKATARAMAN :** யார் யார் எந்த எந்தப் பண்டங்களை உற்பத்தி செய்தாலும் அதை வாங்கி சர்க்கார் ஏற்றுமதி செய்யவேண்டுமென்ற கொள்கையை இந்தச் சர்க்கார் ஏற்றுக் கொள்ளவில்லை. சர்க்கார் குறிப்பிட்ட ரகத் துணியை உற்பத்தி செய்தால் அதை வாங்குவதற்குத் தயாராய் இருக்கிறது. மற்றவர்கள் தவறான முறையில் தவறான துணிகளை உற்பத்தி செய்துவிட்டால் அதன் லாப நஷ்டப் பொறுப்பு அவர்களையேதான் சார்ந்தது. சர்க்கார் பொறுப்பேற்க முடியாது.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, if this is allowed, will it not affect the quality . . . . .

(Hon. Member Sri N. K. Palanisami was heard to say something from his seat.)

[20th March 1961]

Mr. SPEAKER: Will the hon. member, Sri Ramaswamy Mudaliyar resume his seat for a while. If hon. member, Sri N. K. Palanisami has got to say something, he will have to rise from his seat on a point of order and say what he wishes to state and it is not in order for him to murmur from his seat.

Sri N. K. PALANISAMI: In spite of my attempts to put supplementary questions, you never allow me to put a supplementary. What is the use? If you persist in this, I will walk out from the House in protest.

Mr. SPEAKER: I have no objection to the hon. Member walking out from the House as a protest. Unless the hon. Member catches my eye, how can I call him to put a supplementary? All over the world, Members have most often been unsuccessful in catching the eye of the Chair to put supplementaries? I may again state that I have no objection to the hon. Member walking out from the House.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR: In view of the fact that it will affect the good quality of the cloth, will the Government advise the Export Organisation to prevail upon the foreign Governments to purchase more?

The Hon. Sri R. VENKATARAMAN: Actually, all the goods sent through the Handloom Export Organization are of good quality and we have not received any complaints about them. But, it is only some speculators both in the United States and in India who thought that there was a phenomenon market for "Bleeding Madras" in America, started to speculate buying all sorts of cloth not answering to the description of "Bleeding Madras". That is why all this trouble has arisen.

Sri S. M. ANNAMALAI: அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது தரக் கட்டுப்பாடு செய்த துணிகளை வெளிநாட்டு வியாபாரிகள் வாங்கினாலும் பரவாயில்லை. தரக்கட்டுப்பாடற்ற துணியை வாங்கினால் அதனால் வரக்கூடிய லாபநஷ்ட பொறுப்பை அவரவர்களே ஏற்றுக் கொள்ளவேண்டும், சர்க்கார் ஏற்காது என்றார்கள். ஏன் இங்கிருந்து ஏற்றுமதி செய்வதற்கு லைசென்சு கொடுக்கிறபோது மற்றவர்களுக்கு கொடுக்காமல் இந்த ஸ்தாபனத்தின் மூலமே ஏற்றுமதிசெய்ய முயற்சிக்ககூடாது ?

The Hon. Sri R. VENKATARAMAN: ஒரு ஸ்தாபனம் ஏற்றுமதி செய்யலாம். மற்றவை செய்யக்கூடாது என்று தடுப்பது சட்டப்படி எவ்வளவு தூரம் செல்லும் என்று எனக்குத் தெரியாது.

Mr. SPEAKER: Now, I want to make the position clear again. It is not possible to allow all hon. Members to put supplementary questions on all questions. The practice that we have been following here is this. Hon. Members who have given notice of the main question are given chance to put two supplementary questions on the main question and the rest is distributed among the other hon. Members. For instance, in this case, hon. Members Sri Annamalai and Sri Kothandaraman have put the question and they were allowed to put supplementaries. The hon. Leader of the Opposition has got a right to be given favourable consideration in this respect. Therefore, an hon. Member who has not given notice of a question may or may not get a chance to put a supplementary question. It all depends upon whether he catches the eye of the Chair and the Chair also considers that he can be given a chance.



[20th March 1961]

Sri K. B. S. MANI: இம்மாதிரி ஏற்றுமதிக்கு லாயக்கில்லாத துணிகளை உற்பத்தி செய்துவிட்டு, அதைச் சர்க்கார் வாங்கிக்கொள்ளவேண்டும் என்று நிர்ப்பந்தப்படுத்துவதும், அதற்காக டெபுடேஷன் வருவதையுமே தொழிலாகக் கொண்டு விட்டதனால் இதைத்தடுக்க தரக்குறைவான துணிகளை உற்பத்திசெய்தால் அதன் நஷ்டத்திற்கு அவர்களே பொறுப்பாளி என்று சர்க்கார் விளம்பரப்படுத்தும் முறையில் ஒரு அறிக்கை கொடுப்பார்களா ?

The Hon. Sri R. VENKATARAMAN: அந்த விதமான அறிக்கை கொடுக்கத் தேவையில்லை. இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு பிரஜைக்கும் சர்க்கார் டிரேட் மொனுபலைஸ் செய்யவில்லை என்பது தெரியும்.

Mr. SPEAKER: Hon. Member Sri N. K. Palanisami.

Sri N. K. PALANISAMI: I am not putting a supplementary, Sir.

Mr. SPEAKER: All right. Hon. Member Sri Vinayakam.

Sri K. VINAYAKAM: May I know the peculiar features of this "Bleeding Madras" which has created a strange taste in foreign countries, especially in America? Will it not be possible to create such a taste in the interior market?

The Hon. Sri R. VENKATARAMAN: Fashion is a matter of taste. If hon. Members make it a point to wear Bleeding Madras bush shirts on one of these days, I am quite sure, they will create a popular demand for it. But, what we find here is that people want others to wear these while they do not want to do it.

Sri V. K. KOTHANDARAMAN: கைத்தறி நெசவுத் தொழிலாளர்களையும், கைத்தறித் துணியையும் பாதுகாக்க வேண்டுமென்பது சர்க்காரின் பிரதான நோக்கம். அது நிறைவேறவேண்டுமானால் நமது கைத்தறித் தொழிலாளர்கள் உற்பத்தி செய்யும்படியான துணிகளை ஸ்டேட் ட்ரேடிங் ஸ்தாபனத்தின் மூலமாகவோ, வேறு முறையிலோ வாங்கி ஏற்றுமதி செய்வதற்கு சர்க்கார் முயற்சி செய்வார்களா ?

The Hon. Sri R. VENKATARAMAN: கனம் அங்கத்தினர் கேட்ட கேள்வியின் முன் பகுதியை ஏற்றுக்கொள்வதற்கில்லை. எந்தவிதமான துணியை யார் உற்பத்தி செய்தாலும் அதை வாங்கி, விற்றுக் கொடுத்தாக வேண்டும் என்று சொல்வது சரியல்ல.

Sri S. RANGANATHA MUDALIAR: Will it be consistent with the decorum of the House if hon. Members come to this House dressed in "Bleeding Madras"?

The Hon. Sri R. VENKATARAMAN: I did not say that they should come to the House with those bush shirts. I only said that they should wear those shirts. They could wear them in the evenings.

### *Housing Schemes (Koothapalli)*

MR. SPEAKER: As the hon. Member who gave notice of question No. 944 is not in his seat, the question and answer will be printed in the proceedings of the Assembly.

* 944 *Q.*—SRI T. S. RAMASWAMY: Will the Hon. the Minister for Local Administration be pleased to state the details of the Village Remodelling Scheme of Koothapalli in Tirunelveli with special reference to—

(i) the number of houses sanctioned;

(ii) the amount sanctioned;

(iii) contribution by the villagers;

(iv) the date of sanction; and

(v) the progress made so far?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: (i) to (v) Koothapalli village lies in the Valliyur Community Development Block area. There are 395 families in the village with a population of 1,925. The extent of the existing village is 20 acres. The Project for the village seeks to re-model it by providing amenities in accordance with the masterplan prepared by the Rural Housing Cell. Loans amounting to Rs. 2.92 lakhs have been sanctioned during the months of June, July, August and December 1960 for the construction/improvement of 349 houses.

The contribution of the villagers towards the Project will be in the form of labour and materials to the extent of 33$\frac{1}{3}$ per cent of the cost in each case. The houses are in various stages of construction.

### *Iron (quota)*

* 945 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Industries be pleased to state the quantity of iron allotted to the Madras State during the last quarter for (1) agricultural purposes, (2) domestic purposes and (3) industrial purposes?

THE HON. SRI R. VENKATARAMAN: Allotment is made for each half year, i.e., from April to September and from October to March, and not for each quarter. The quality of iron and steel allotted during the first half year of 1960-61 in respect of agricultural, domestic and industrial purposes is as follows:—

| | | |
|---|---|---|
| Agricultural purposes | ... ... ... | * 5,447 tons. |
| Domestic purposes | ... ... ... | 11,485 „ |
| Industrial purposes | ... ... ... | 7,850 „ |

* Does not include 1,168 tons of non-standard and T.C.M. materials received.



SRI K. SATTANATHA KARAYALAR: இரும்பு ஒதுக்குவதில் தற்சமயம் பொதுவாக நாட்டில் உற்பத்தியாவதாலும், சர்வீஸ் கார்பொரேஷனுக்கு கூடுதல் கோட்டா கிடைத்திருப்பதாலும், வரும் ஆண்டில் இரும்பு நிலைமை சௌகர்யமாக இருக்குமா? அந்தத் துறையில் எவ்வளவு எதிர்பார்க்கப்படுகிறது?

THE HON. SRI R. VENKATARAMAN: ஷீட், ப்ளேட், ஒயர் இதைத் தவிர மற்றப் பண்டங்களுக்கு எல்லாம் சௌகர்யமாகக் கிடைக்குமென்று எதிர்பார்க்கிறோம். போதுமான அளவு நமக்குக் கிடைக்காமல் போவதற்குக் காரணம் ரெயில் போக்குவரத்து வசதிக் குறைவுதான். வாகன் வேறு கிடைப்பது இல்லை. அடுத்த அரையாண்டில் போதுமான அளவு கிடைக்குமென்று எதிர்பார்க்கிறோம்.

* 946 *Q.*—SRI M. P. SARATHI: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்த ராஜ்யத்துக்கு 1959–60, 1960–61-ம் ஆண்டுகளில் (1) விவசாயத் துறைக்கு, (2) சிறு தொழில்களுக்கு ஒதுக்கப்பட்ட இரும்பு உருக்கு எவ்வளவு?

(இ) 1960-ல் இதுவரை எவ்வளவு விநியோகிக்கப்பட்டுள்ளது?

(உ) இப்பொழுது ஒதுக்கப்பட்ட அளவு இந்த ராஜ்ய தேவைகளுக்குப் போதுமா?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) The quotas allotted during 1959–60 and 1960–61 of iron and steel materials for agricultural purposes and for small scale industries are as follows:—

| Period. | | Agricultral quota (Tons). | Small scale industries quota (Tons). |
|---|---|---|---|
| 1959–60 | .. | 10,748 | 15,134 |
| 1960–61 | .. | 7,150 | 14,243 |

(*b*) The entire allotment made both for Agricultural and Small Scale Industries has been fully distributed during 1960.

(*c*) No, Sir. Arrangements are, however, being made to meet the demands in full.

SRI S. M. ANNAMALAI: நம் மாநிலத்திற்குத் தேவையான இரும்பு எவ்வளவு என்று சொல்ல முடியுமா?

THE HON. SRI R. VENKATARAMAN: சற்றேறக்குறைய 9,224 டன் நமக்கு ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரிக்குத் தேவைப்படுகிறது. இதில் நமக்கு 6,434 டன் கிடைத்திருக்கிறது. அக்ரிகல்சரல் கோட்டா பற்றி என்னிடத்தில் தகவல் இல்லை. ஷீட், ப்ளேட், ஒயர் இவையெல்லாம் நமக்கு 3,926 டன் தேவைப்படும். இதில் 2,428 டன் தான் கிடைத்திருக்கிறது.

SRI V. K. RAMASWAMI MUDALIYAR: While the Government are talking about stepping up food production, the agriculturists are not helped to get their requirements in time. Is there any proposal before the Government to get more quantities of iron and steel sufficiently in advance of the commencement of the agricultural season so that they may be available to them in time?

THE HON. SRI R. VENKATARAMAN: That depends upon the availability of iron and steel. It is only now that there is some sign of easing of the iron and steel position. It will, however, take some more time before we can say that we can meet all our demands.

[20th March 1961

SRI K. VINAYAKAM : Is the Hon. Minister aware of the fact that whenever an application is made to the Director of Industries for the supply of steel for building purposes or for other purposes, it is not fully granted or if granted it is only a small quantity. But if consumers go to market, they can get steel easily at enhanced rate of prices. How does the Hon. Minister account for the fact that merchants are always in possession of this excess quantity of steel which would be easily available at increased rate of prices?

THE HON. SRI R. VENKATARAMAN : There is the imported steel for which there is no control and it is available in the market at a higher price. Secondly, there are people who are allotted quotas and those people who get quotas can sell it at a higher price to these dealers who are able to pass it on to the people who are able to pay a higher price. None of these dealers are manufacturing iron and steel nor are they getting it directly from the Iron and Steel Controller. Naturally if people are getting it at a higher price, it shows that many of the people who have got quotas have been selling to the dealers. The Government have taken very strict measures to control it. Whenever during the time of inspection we found that a person who had got quota was not manufactuing articles, we had cancelled his allotment and the number of people whose allotments have been cancelled are on the increase in the last few months.

SRI K. B. S. MANI : கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு எவ்வளவு இரும்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலமாக எந்தெந்த இடங்களில் பெறுகிறார்கள் ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதில் பலவிதமான தடைகள் இருக்கின்றன. மொத்தம் எவ்வளவு என்னென்ன என்று கேட்டால் அதற்குத் தனியாகக் கேள்வி போடவேண்டும். இப்பொழுது கீழ்க்கண்ட வகைகளுக்கு கண்ட்ரோல் எடுத்திருக்கிறோம் :—

' Bloom and billets, rods, heavy structurals, light structurals, heavy rails, light rails, second class rails, plates, black sheets, and hot rolled strips of 14 guage, spring steel, hoops and strips, sleepers, etc.'

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Is it a fact that Government have issued instructions to the Engineering Department to purchase some of the iron materials from the open market? and if the answer is in the affirmative, is it proper?

THE HON. SRI R. VENKATARAMAN : The answer is in the affirmative and what is done is proper. The question before the Government and the people to-day is whether we want the execution of these projects quickly or whether we want to execute it leisurely at cheaper cost. The Government have preferred the former to execute it quickly for the benefit of the people and they have purchased it in the open market.



20th March 1961]

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, சிறு தொழில் வளர்ச்சிக்காக எவ்வளவு இரும்பு கோட்டா தேவைப்படுகிறது ? எத்தனை தொழிற்சாலைகள் இப்பொழுது இயங்கி வருகின்றன ? எத்தனை லைசென்ஸ்கள் நீக்கப்பட்டுள்ளன ? பொதுவாக இது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்தத் தொழிலை நடத்துபவர்களின் தேவைகளை கண் காணிக்கும்போது அவர்கள் மிகவும் குறைவாக கணக்கெடுக்கிறார்கள். ஆகவே அவர்கள் தேவைகள் பூராவையும் கொடுப்பதற்கு அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஒவ்வொரு தொழிற் சாலைக்கும் எவ்வளவு ரேட்ட் கபாசிடி என்று கவனிக்கவேண்டும். என்சினியரிங் தொழிலைப் பற்றி தெரிந்தவர்கள், மேல் படிப்பு இல்லாதவர் கள்தான் தொழிலை நடத்துகிறார்கள். அவர்கள் கொஞ்சம் அதிகமாகவே கேட் கிறார்கள். அப்படி அதிகமாக கேட்டால் தான் பாதியாவது கிடைக்கும் என்று கேட்கிறார்கள். அதனால் இன்ப்லேடட் டிமான்டாக போகிறது. ராஜ்ய அதிகாரி கள் அவர்களுக்கு மொத்தம் எவ்வளவு தேவை என்று பரிசீலனை செய்து கணிக்கிறார்கள். அப்படி கணிக்கின்ற அளவும் கொடுக்க முடிவதில்லை, காரணம் நம் நாட்டிலே பற்றாக்குறை இருப்பதனால்தான்.

*Corporation vehicles (Tax)*

*947 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் மின்சார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை கார்பொரேஷனுக்கு சொந்தமான மோட்டார் வாகனங் களுக்கு வரி வசூலிக்கப்படுவதை ரத்து செய்யவேண்டுமென்று கார்ப் பொரேஷன் கோரியதா ?

(இ) அப்படியானால், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (அ) Yes, Sir.

(இ) The request was rejected.

SRI S. M. ANNAMALAI : இப்பொழுது கார்பொரேஷனுக்குக் கொடுக்கப்பட்ட பாதி ரூபாய் போதவில்லை. ஆகையால் இதையாவது தள்ளிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்களா ?

THE HON. SRI V. RAMAIAH : தள்ளிக் கொடுப்பதனால் பாதி வசதி ஒன்றும் வந்துவிடாது. இதற்காக தனியாக மான்யங்கள் கொடுக்கப்படுகின்றன. இந்த வேலை வந்தால் மாகாணம் பூராவும் பரிசீலிக்கப்படும். சென்னை நகர சபைக்கு மட்டும் அரசாங்கம் சலுகை காட்ட முடியாது.

SRI K. ANBAZHAGAN : இந்த மோட்டார் டாக்ஸ் ஒரு காலத்தில் கார்பொரேஷனுக்குரியதாக இருந்ததை சென்னை அரசாங்கம் வசூலிக்கிறது. இதனால் 10 ஆண்டு காலமாக ஒரு நன்மையும் ஏற்பட வில்லை. இப்போதாவது கார்பொரேஷன் மோட்டார்களுக்கு மாத்திரம் இந்த வரி விதி விலக்கு அளிக்கப்படுமா ?

THE HON. SRI V. RAMAIAH : இது 1931-வது வருஷத்திலே முடிவு எடுக்கப்பட்டது. இது கார்பொரேஷனுக்கு மட்டுமல்லாமல் சென்னை ராஜ்யத்தில் உள்ள எல்லா ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் எப்படி பங்கு கொடுப்பது என்ற முறையிலே கொடுத்திருக்கிறது. இதனால் பல கஷ்டங் கள் நிர்வாகத்தில் ஏற்பட்டன. அப்போதைக்கப்போது கொஞ்சம் முக்கியத் துவம் கொடுத்து அந்தப் பாதையை முதல் முதலாக எடுத்துக்கொள்ளு கிறோம். அரசாங்கம் கடனாவது கொடுத்து இந்த ரோட்டுகளைப் போட

[20th March 1961

வேண்டுமென்று சொல்லுகிருர்கள். இந்தப் பிரச்னேக்கும் கேள்வியிலே உள்ள பிரச்னேக்கும் சம்பந்தம் ஒன்றும் கிடையாது. உரிமை ஒன்றும் பறிபோக வில்லே. இதன் மூலமாக கொடுக்கப்படுகிற பணம் வருஷத்திற்கு 2 லட்சம் ரூபாய் ஆகிறது. வேண்டாமென்று சொல்லிவிட்டால் அவர்களுக்குத்தேவையான பணம் எப்போது தேவையோ அப்போது கொடுக்கிரும்.

*Agricultural loans (rate of interest)*

*948.*Q.*—Sri A. VEDARATHNAM : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விவசாய கடன்களுக்கு வட்டி விகிதத்தைக் குறைக்கவேண்டுமென்று நில அடமான பாங்கு மகாநாட்டில் வற்புறுத்தப்பட்டதா ?

(இ) அதன்பேரில் அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கும் நடவடிக்கை என்ன ?

The Hon. Sri R. VENKATARAMAN : (அ) Yes, Sir.

(இ) The proposals are under the consideration of Government.

Sri A. VEDARATHNAM : இப்போது அரசாங்கம் விவசாயிகளிடமிருந்து என்ன வட்டி வசூலிக்கிருர்கள். இப்பொழுது கொடுக்கப்படும் மார்சினே கொஞ்சம் குறைத்துக்கொண்டு வசூலிக்க முன் வருவார்களா ?

The Hon. Sri R. VENKATARAMAN : நில அடமான பாங்கு பார்த்தே 6¾ சத விகிதம் மக்களிடத்தில் வசூல் செய்கிறது. ½ சத விகிதம் குறைக்கவேண்டுமென்று மாநாட்டிலே தீர்மானம் போட்டு கேட்டிருக்கிருர்கள். ½ சத விகிதம் குறைப்பதற்கு உத்தியோகஸ்தர்கள் சம்பளத்தை அவர்களே ஏற்றுக்கொள்ளவேண்டுமென்ற கருத்தை தெரிவித்தார்கள். சர்க்கார் சம்பளம் பூராவையும் ஏற்றுக்கொண்டாலும்கூட 9 லட்சம் ரூபாய் இப்போது உதவி வரும். ½ சத விகிதம் குறைத்தால் 24 லட்சம் ரூபாய் மேற்கொண்டு குறைந்துவிடும்.

*Settlement Inspectors (Thanjavur)*

*949 *Q.*—Sri M. P. SARATHI : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ல் தஞ்சை செட்டில்மெண்ட் பிரிவில், செட்டில்மெண்ட் இன்ஸ்பெக்டராகப் பணியாற்ற அரசாங்கச் செலவில் எத்தனே தற்காலிக ஊழியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது ?

(இ) பயிற்சி பெற்ற ஊழியர்கள் வேலேயின்மை காரணமாக நிறுத்த பட்டுள்ளனரா ?

(உ) பயிற்சி பெருத ஊழியர் பணி புரிகின்றனரா ?

(எ) (இ), (உ) இனங்களில் முறையே எத்தனே பேர் ?

The Hon. Sri M. A. MANICKAVELU : (அ) No temporary Settlement Inspector was trained at Government cost in the year 1960 to serve in Settlement Party No. III, Thanjavur.

(இ) No, Sir.

(உ) & (எ) Yes, Sir. There are 70 untrained Settlement Inspectors in Settlement Party No. III, Thanjavur. They are not put on field work.



20th March 1961]

*Vaigai Dam (water level)*

*950 *Q.*—Sri N. R. THIAGARAJAN : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1959-ம் ஆண்டு டிசம்பர்மீ 10-ம் தேதி 104-ம் எண் கேள்விக்கு அளித்த பதிலேயொட்டி, வைகை அணேயில் 916 அடிக்கு தண்ணீர் வந்தால் குன்னூர் ஊருக்குள் தண்ணீர் நுழைவதை சர்க்கார் அறியுமா ?

(இ) தற்போது 915 அடியில் பாதி ஊருக்குள் நுழையும் தண்ணீரை வெளியேற்ற ஏற்றம் போட்டிருப்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

(உ) உடனடியாக சுற்றிலும் நீர் சூழ்ந்த குன்னூரை காலி செய்ய சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : (அ) The average ground level of the village is 918 feet. Therefore, the village will not be submerged if the water level in the Vaigai dam reaches 916 feet.

(இ) Yes, Sir. The baling is done in low pockets in the village which have already been acquired by Government.

(உ) Proposals are under consideration.

Sri N. R. THIAGARAJAN : அந்த ஊர் பொதுமக்கள், ஓட்டைக் கப்பலில் பிரயாணம் செய்வதைப் போன்று தான் வாழ்கிருர்கள், அங்கு சாக்கடைத் தண்ணீர் வெளியே போவதில்லே. அங்கிருந்து பாம்புகள் எல்லாம் ஊருக்குள் நுழைந்து வாசம் செய்கின்றன. அங்குள்ள மக்கள் மரண வாழ்க்கை நடத்துகிருர்கள். ஆகவே, அந்த ஊரை காலி செய்து நஷ்ட ஈடு கொடுத்து அவர்களே வெளியேற்றுவார்களா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : ஓட்டைக் கப்பலில் போனுல் மூழ்கித்தான் போவார்கள் ஆனுல் இங்கு யாரும் மூழ்கவில்லே. தனியாக, நாலு பர்லாங்கில் வேறு இடம் பார்த்து "ரீஹாபிலிடேட்" செய்ய ஏற்பாடு நடக்கிறது. ஆர்.டி.ஓ.-வை வேண்டிய நடவடிக்கைகள். எடுக்கச் சொல்லப்பட்டிருக்கிறது.

Mr. SPEAKER : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## III.—PRESENTATION OF PETITION.

9-30 a.m.

Mr. SPEAKER : I have received a petition from the hon. Member Sri K. Sattanatha Karayalar. The hon. Member Sri K. Sattanatha Karayalar wants to present the petition to the House. I have to invite the attention of the hon. Member to the rule which says as follows :

(1) The petition should be addressed to the Members of the Assembly;

(2) It should be dated and signed by the petitioner or petitioners;

(3) It should be in respectful and temperate language; and

(4) It must not propose expenditure of public moneys or the imposition of any charge on public revenues.

[Mr. Speaker] [20th March 1961

I hope the hon. Member will remember these four things. I give him permission to present the petition. If the hon. Member violates anyone of the four things listed above, then the petition becomes out of order.

Sri K. SATTANATHA KARAYALAR : I have deleted one portion which concerns with the increase in number of hospitals and which proposes expenditure of public money.

Mr. SPEAKER : That does not form part of the petition. All right. I hope the hon. Member knows the rules. I am afraid the hon. Member cannot make a long speech. There is no debate on this petition.

* Sri K. SATTANATHA KARAYALAR: கனம் சபாநாயகர் அவர்களே சென்னை சர்க்கார் மருத்துவ பொதுநலத்துறை தொழிலாளர் சங்கத்தின் சார்பில் 1,481 கையெழுத்துக்கள் கொண்ட இந்த மகஜரை இந்த சபை முன் சமர்ப்பிக்கிறேன். சர்க்கார் மருத்துவ மனைகளில் இன்று வேலை அதிகமாகிக் கொண்டே வருகிறது. நோயாளிகளுக்கும், தொழிலாளிகளுக்கும் இதனால் பல கஷ்டங்கள் நேரிடுகிறது. ஆகவே, இதற்கு ஒரு பர்ஸென்ட்டேஜ் அடிப்படையில், ஒரு ரேஷியோ வைத்து கடைப்பிடிக்கக் கோருகிறோம். கடைநிலை ஊழியர்களுக்கு, பலதரப்பட்ட வேலை செய்து வருகிறவர்களுக்கு அவர்களின் திறமையைக் கருதி அதற்கேற்றபடி உத்தியோக உயர்வு அளிக்கவேண்டுமென்று கோருகிறோம். நிரந்தரம் செய்யப்படாமல் இருக்கக்கூடிய தொழிலாளர்களை, ஆறு மாதத்திற்கு அதிகமாக நிரந்தரம் செய்யப்படாமல் வைக்கக்கூடாது. ஆகவே, ஆறு மாதத்திற்கு மேல் ஆனால் அவர்களை நிரந்தரம் செய்ய வேண்டுமென்று கோருகிறோம். பத்து, பதினைந்து வருடங்கள் நிரந்தரம் செய்யாமல் இருப்பதைக் குறைக்க வேண்டும், அவர்களை உடனடியாக நிரந்தரம் செய்யவேண்டுமென்றும் கோருகிறோம். எட்டு மணி நேர வேலையும், எழு தினங்களுக்கு ஒரு தினம் விடுமுறையும் கொடுக்க வேண்டுமென்றும் கோருகிறோம். பின்னர், தொத்து நோய் விபத்துக்கள் உள்ள மெண்டல் ஆஸ்பத்திரி போன்றவைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு பிரத்தியேகமாக ஒரு அலவன்ஸ் கொடுக்கவேண்டுமென்றும் கோரப்படுகிறது. கால்நடை மருத்துவ மனைகளுக்கும் இந்தக் கோரிக்கைகளை விஸ்தரிக்க கோருகிறோம். பொதுவாக மருத்துவ மனைகள் வளம் பெறச் செய்ய வேண்டிய வாய்ப்புகள், வசதிகள் செய்து கொடுக்க இந்த சங்கம் சர்க்காரோடு நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்ள சர்க்காரை இந்த சபை மூலம் வேண்டிக்கொள்கிறேன். இந்த கோரிக்கைகளை உடனடியாக அங்கீகரிக்க வேண்டுகிறோம்.

(Sri K. Sattanatha Karayalar then presented the petition to the Secretary.)

## IV.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1961-62—*cont.*

### (1) DEMAND XVI—MEDICAL.

The Hon. Sri M. A. MANICKAVELU : On the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 5,51,96,400 under Demand XVI—Medical."



20th March 1961]

Mr. SPEAKER : Motion moved—

"That Government be granted a sum not exceeding Rs. 5,51,96,400 under Demand XVI—Medical."

I understand that the hon. Member, Sri K. Sattanatha Karayalar is moving his Cut Motion No. 300 under this demand. He may now move the cut motion.

Sri K. SATTANATHA KARAYALAR : Sir, I move the following Cut Motion, viz.—

"That the allotment of Rs. 5,51,96,400 under Demand XVI-Medical be reduced by Rs. 100".

Mr. SPEAKER : Cut motion moved—

"That the allotment of Rs. 5,51,96,400 under Demand XVI—Medical be reduced by Rs. 100."

### (2) DEMAND XVII—PUBLIC HEALTH.

The Hon. Sri M. A. MANICKAVELU : On the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 2,35,58,300 under Demand XVII—Public Health."

Mr. SPEAKER : Motion moved—

"That the Government be granted a sum not exceeding Rs. 2,35,58,300 under Demand XVII—Public Health."

I understand that the hon. Member, Sri V. Subbiah is moving his cut motion No. 339 under this Demand. He may now move it.

Sri V. SUBBIAH : பொது சுகாதாரமான்யத்தின் பேரில் உள்ள எனது 339-வது வெட்டு பிரேரேணையை பிரேரேபிக்கிறேன்.

"That the allotment of Rs. 2,35,58,300 under Demand XVII—Public Health be reduced by Rs. 100."

Mr. SPEAKER : Cut motion moved—

"That the allotment of Rs. 2,35,58,300 under Demand XVII—Public Health be reduced by Rs. 100."

### (3) DEMAND XXXIX—CAPITAL OUTLAY ON PUBLIC HEALTH.

The Hon. Sri M. A. MANICKAVELU : On the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 2,75,55,500 under Demand XXXIX—Capital Outlay on Public Health."

Mr. SPEAKER : Motion moved—

"That the Government be granted a sum not exceeding Rs. 2,75,55,500 under Demand XXXIX—Capital Outlay on Public Health."

I understand that the hon. Member, Sri K. Sattanatha Karayalar is moving his motion No. 341 under this Demand. He may now move it.

[20th March 1961

SRI K. SATTANATHA KARAYALAR: Sir, I move the following cut motion—

"That the allotment of Rs. 2,75,55,500 under Demand XXXIX-Capital Outlay on Public Health be reduced by Rs. 100."

MR. SPEAKER: Cut motion moved—

"That the allotment of Rs. 2,75,55,500 under Demand XXXIX—Capital Outlay on Public Health be reduced by Rs. 100."

I allot ten minutes for each hon. Member. I think the Hon. Minister may require half an hour for reply. Sri V. Subbiah may now speak.

*SRI V. SUBBIAH: கனம் சபாநாயகர் அவர்களே மருத்துவ, பொது சுகாதார மான்யங்களின் பேரில் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து பேச விரும்புகிறேன். இன்றையதினம் மருத்துவத் துறை, பொது சுகாதாரத் துறையில் கிராமங்கள் எப்படி புறக்கணிக்கப்படுகின்றன, கிராமங்களுக்காக அரசாங்கம் இன்றையதினம் செய்திருக்கும் பொது வேலைகளை, பொது சுகாதாரத்தைப்பற்றி குறிப்பிட வேண்டுமென்றால், இன்று கிராமங்கள் அசுத்தப்படுத்தப்படுகின்றன, கிராமங்களில் ட்ரெயினேஜ், கக்கூஸ் வசதி இவைகள் இல்லவேயில்லை. இன்றைய தினம், கிராமங்கள் சுகாதாரமற்ற முறையில், மோசமான நிலையில்தான் இருக்கின்றன என்று சொன்னால் அது மிகையாகாது. கிராமப் புறங்களில், இன்று அம்மை, மலேரியா போன்ற வியாதிகள் ஜாஸ்தியாக பரவிக்கொண்டு வருகின்றன. அந்த நிலை நீக்கப்படவேண்டுமென்றால் மூன்று மைல்களுக்குள் உள்ள பகுதிகளில் ஒவ்வொரு ரூரல் டிஸ்பன்ஸரி அவசியம் இருக்க வேண்டும். அப்படி மூன்று மைல் தூரத்திற்குள் இருக்கக்கூடிய கிராமங்களில் ஒவ்வொரு ரூரல் டிஸ்பன்ஸரி இருப்பதோடு மட்டுமல்லாமல், ஆயிரம் ஜனத்தொகை கொண்ட கிராமங்கள் ஒவ்வொன்றிலும் அவசியம் ஓவர் ஹெட் டாங் இருக்க வேண்டும். கிராம மக்களுக்கு குடி தண்ணீர் திட்டங்கள் அவசியம் அமைத்துக் கொடுக்க வேண்டும். அதோடு, பக்கத்தில் நாலைந்து மைல் தூரத்தில் "ஹெல்த் சென்டேர்ஸ்" ஆங்காங்கு அமைக்கப் படவேண்டும். அதோடு கிராமப் புறங்களில், காந்தியடிகள் திட்டப்படி, வார்தா கக்கூஸ் போன்றவைகள் அமைக்கப்பட சுகாதார இலாகா அதற்கு வேண்டிய வேலைகளை தொடங்கவேண்டும். டிரெயினேஜ் இல்லாத கிராமங்கள் அத்தனைக்கும் ட்ரெயினேஜ் அவசியம் கட்டிக்கொடுக்க வேண்டும். இப்படிப்பட்ட அமைப்புகள் இல்லாவிடில், கிராமங்களில் குடி தண்ணீர் வசதி போன்றவைகள் இல்லாத காரணத்தினால் நரம்பு சிலந்தி போன்ற வியாதிகள் ஏற்படுகின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் எங்கள் பகுதியில் விளாத்தி குளத்தில் குடி தண்ணீர் வசதியேயில்லாது குளத்தில் இருந்து தான் தண்ணீர் எடுத்துச் சாப்பிடுகிறார்கள். அதனால் வருடா வருடம் நரம்புச் சிலந்தி வியாதி வந்துகொண்டேயிருக்கிறது. அந் நிலையைப் போக்க அங்கு குடி தண்ணீர் திட்டத்தை அவசியம் செய்து கொடுக்க வேண்டும். மருத்துவத் துறையை எடுத்துக்கொண்டால் திருநெல்வேலி ஜில்லாவில் எங்கள் பகுதி, விஸ்தீரணத்தில் 1/6 பங்கு கொண்ட ஏரியா, கோவில்பட்டி தாலுகா அதன் தலைநகரில் இன்றைய தினம் ஒரு நல்ல ஆஸ்பத்திரியேயில்லை. அங்கு படுக்கை வசதி கிடையாது. அங்கு, மெட்டர்னிட்டி வார்ட்ஸ் கிடையாது. எக்ஸ்ரே வசதி கிடையாது. அங்கு ஒரு பழமையான எல்.எப். ஆஸ்பத்திரிதான் இருக்கிறது. வேண்டிய திட்டங்கள் எல்லாம் இருக்கிறது என்று பொதுவாகச் சொல்லப்படுகிறதே தவிர கடந்த ஐந்து ஆண்டுகளில் எங்கள் பகுதியில் ஏதாவது சீர்திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை என்று குற்றம் சாட்ட முடியும். இந்த அரசாங்கம் பல திட்டங்களை போட்டிருந்தும்கூட, ஜில்லா தலை நகரங்களில், தாலுகா தலை நகரங்களில் எல்லாம் முக்கியத்துவம் செலுத்துவதில்லை. கோவில்பட்டியை பொறுத்த அளவில்



20th March 1961] [Sri V. Subbiah]

தாலுகா தலைநகராக இருக்கிறது. 40 ஆயிரம் மக்களுக்கு மேல் இருக்கிறார்கள். அங்கு ஸ்டேட் இன்ஷூரன்ஸ் போன்ற திட்டம் எல்லாம் இருக்கின்ற அந்த இடத்தில் எந்த விதமான வசதியும் செய்து கொடுக்கப்படவில்லை. ஆகவே இந்த மான்யத்தின் பேரில் வெட்டுப் பிரேரணை கொடுத்ததில் எந்தவிதமான தவறும் இல்லை. முக்கியமாக தாலுகா தலைநகரங்களில் எல்லாம் பலவிதமான வசதிகளை செய்து கொடுத்தாக வேண்டும். எங்கள் பகுதி முக்கியமாக மதுரையை விட்டு, தெற்கே தூத்துக்குடி, திருநெல்வேலி இவைகளை விட்டுவிட்டால் மிகவும் வளர்ச்சி அடைந்து இருக்கக்கூடிய எங்கள் பகுதி தொழில் வளர்ச்சி எவ்வளவோ அடைந்திருக்கிறது. விவசாயத்திலும் வளர்ச்சி அடைந்திருக்கிறது. இம்மாதிரிப்பட்ட இடத்தில் எந்தவிதமான வசதியும் இல்லை. ஆசுபத்திரிகள் போதிய அளவு இல்லை. டாக்டர்கள் இல்லை என்று அரசாங்கத்தால் காரணம் கூறப்படுகிறது. போதிய அளவு நர்ஸ்கள், மருத்துவச்சிகள் கிடையாது. அந்த அளவில்தான் மருத்துவ நிலை இருக்கிறது. எந்த கிராம பகுதியை எடுத்துக் கொண்டாலும் அங்கு போதிய அளவு டாக்டர்கள் கிடையாது ஜில்லா போர்ட் காலத்தில் பல கிராமங்களில் ஆசுபத்திரிகள் இருந்தன. அவைகள் எல்லாம் இப்போது மூடப்பட்டு விட்டன. மூடிவிடுவதற்கு காரணம் என்ன என்று கேட்டால் டாக்டர்கள் இல்லை என்று சொல்லப்படுகிறது. உண்மையில் டாக்டர்கள் இல்லாமல் இருக்கலாம். ரிட்டயர் ஆன டாக்டர்களை கிராமப் பகுதிக்கு அனுப்பி அவர்களைக் கொண்டு சேவை செய்வதற்குரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தால் நல்ல முறையில் கிராமங்களின் நலனை பாதுகாக்க முடியும். இதை அரசாங்கம் அனுசரிக்க வேண்டும். அதுமட்டுமல்ல, மருந்துகளை எடுத்துக்கொண்டால் பழைய முறைப்படி கிராமங்களில் உபயோகிப்பது கிடையாது. கிராமங்களில் இருந்த சித்த வைத்தியம், யுனானி வைத்தியம் இவைகள் எல்லாம் நகரங்களுக்கு வந்துவிட்டன. இதன் காரணமாக எல்லோரும் எம்.பி.பி.எஸ். உதவியையே நாடவேண்டியிருக்கிறது. முக்கியமாக கிராமப் புறங்களில் பிரசவ விடுதிகள் தேவையாக இருக்கின்றன. அதோடு தாலுகா தலை நகரங்களில் இருக்கின்ற டாக்டர்களுக்கு எந்தவிதமான வாகன வசதியும் கிடையாது. நாம் எவ்வளவோ ஜீப்கள் எல்லாம் யார் யாருக்கெல்லாமோ கொடுக்கிறோம். ஆனால் தலை நகரங்களில் இருக்கக்கூடிய சர்ஜன்களுக்கு எந்த விதமான வாகன வசதியும் கிடையாது. 10 மைல் தூரத்தில் இருக்கக்கூடிய ஒரு இடத்திற்கு அவசரமாக போக வேண்டும் என்றால் டாக்ஸியைத்தான் பார்க்கவேண்டியிருக்கிறது. டாக்ஸிகள் எல்லாம் அந்த இடங்களில் ஏராளமாக கிடைக்காத காரணத்தால் சொந்தமாக கார் வைத்திருப்பவர்கள் மைல் ஒன்றுக்கு ஐந்து ரூபாய், பத்து ரூபாய் கட்டணம் கேட்கிறார்கள். ஐந்து மைல் தூரமுள்ள ஒரு இடத்திற்கு போக வேண்டும் என்றால் ஐம்பது ரூபாய் கொடுக்க வேண்டும். இந்த முறைகள் எல்லாம் நீங்கியாக வேண்டும். அவசரமான இடங்களுக்கு போகவேண்டுமானால் அவர்களுக்கு வாகன வசதி கொடுக்க வேண்டும். ஆகவே இம்மாதிரியாக கிராம பகுதிகள் புறக்கணிக்கப்படுகின்றன என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். குறைந்த பட்சம் மூன்று மைல்களுக்குள் ஒரு பிரசவ சென்டர், ஹெல்த் சென்டர் இருக்கவேண்டும். இவ்விதம் ஏற்படுத்தாவிட்டால் கிராம சுகாதாரமே அழிந்துவிடும். இல்லையென்றால் கிராமப்புறங்கள் எல்லாம் புறக்கணிக்கப்படுகின்றன என்று சொல்வது மிகையாகாது. அதுமட்டும் அல்ல, மருந்து செலவழிவதை எடுத்துக்கொண்டால், மெடிக்கல் ஷாப்பில் கிடைக்காத மருந்துகள் எல்லாம் குறிப்பாக வெளியில் குறைந்த விலைக்கு கிடைப்பதாக பலர் ஆசுபத்திரிகளுக்குப் போய் வந்தவர்கள் கூறுகின்றார்கள். ஆசுபத்திரிகளிலே வியாதியஸ்தர்களுக்கு மருந்துகள் குறைந்த விலையில் கிடைப்பதாகச் சொல்லப்படுகிறது. மதுரை போன்ற பெரிய நகரங்களில்கூட இவ்விதம் நடைபெற்றுவருவதாக சொல்லப்படுகிறது. இவை அரசாங்கம் போதிய அளவில் கண்காணிக்கவில்லை என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது இம்மாதிரியாக எல்லா இனங்களிலும் பொதுவாக கிராமங்கள், ஜில்லா, தாலுகா, தலைநகரங்கள் இவைகள் புறக்கணிக்கப்படுகின்றன என்கின்ற குற்றச்சாட்டை தெரிவித்துக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

[20th March 1961

* **SRI A. S. DURAISWAMI REDDIAR** : கனம் சபாநாயகர் அவர்களே, நமது சுகாதார அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மான்யத்தை ஆதரித்து சில வார்த்தைகள் பேச ஆசைப்படுகிறேன். பொதுவாக இந்த இலாகா மக்களுக்கு மிக மிக முக்கியமானது. கல்வி, விவசாயம் இவைகளை எல்லாம்விட மருத்துவ இலாகா மிக முக்கியமானது. விவசாயிகளானாலும் சரி, உத்யோகஸ்தர்களானாலும் சரி, தொழிலாளர்களானாலும் சரி, உடல் நலம் சரியாக இருந்தால்தான் எல்லா காரியங்களிலும் பொருளாதாரத்திலும் முன்னேற முடியும், நாடும் முன்னேற முடியும். நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் நிர்வாகம் நல்ல முறையில் நடந்து கொண்டு வருகிறது. நம்முடைய அமைச்சர் அவர்கள் சுகாதார முறையில் மிக கவனம் செலுத்தி பல முன்னேற்றங்களை செய்து வருகிறார்கள். பெரும்பாலும் இப்போது தொத்து நோய்கள் எல்லாம் வர வர குறைந்து கொண்டிருக்கிறது. இப்போது வைசூரிதான் சில இடங்களில் இருந்து கொண்டிருக்கிறது. காலரா இப்போது இல்லை, பிளேக் இப்போது இல்லை, இம்மாதிரி பல தொத்துவியாதிகள் நின்றுவிட்டன. வைசூரியை அறவே ஒழிப்பதற்கும், இதற்கான நடுப்பு ஊசி எல்லோரும் போட்டுக்கொள்வதற்கு சர்க்கார் ஒரு ஏற்பாடு செய்திருப்பதைப் பார்த்து நாம் மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம். உதாரணமாக, முதன் முதலில் செங்கல்பட்டு ஜில்லாவில் இந்தத் திட்டத்தை அமுலுக்கு கொண்டுவந்து அமைச்சர் அவர்கள் இதை தாம்பரத்தில் ஆரம்பித்து வைத்தார்கள், என் தொகுதியில் இதை ஆரம்பித்து வைத்தார்கள். அது மிகவும் மகிழ்ச்சிக்குரியது. அதோடுகூட சுகாதார விஷயத்தில் முக்கியமாக சென்னைக் கார்ப்பரேஷன் ஏரியாவை அடுத்து இருக்கக்கூடிய (பெல்ட் ஏரியா) இடங்களில் சுகாதார வசதி மிகவும் குறைவாக இருக்கிறது. ஜன பெருக்கம் அதிகமாகிக் கொண்டிருப்பதால் பலவிதமான கஷ்டங்கள் ஏற்படுகின்றன.

(SRI. K. Sattanatha Karayalar in the Chair.)

சாக்கடை வசதி கிடையாது, குடிதண்ணீர் வசதி கிடையாது. இந்த இடங்களில் எல்லாம் 30, ஆயிரம், 40 ஆயிரம் மக்கள் வாழ்கிறார்கள். இதைப்பற்றி அமைச்சர் அவர்களிடத்தில் டெப்யுடேஷனாகப் போய் குறைகளை சொல்லியிருக்கிறார்கள். அதை இன்வெஸ்டிகேஷன் செய்துகொண்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆகவே அந்த இடங்களில் எல்லா வசதிகளையும் செய்து கொடுப்பதற்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மருத்துவ இலாகாவைப் பொறுத்தவரையில் எந்தவிதமான குறையும் இல்லை, ஆனால் போதிய அளவு டாக்டர்கள் இல்லை என்ற குறைதான் இருந்துகொண்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் இதற்காக விஷேச சிரத்தை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். வைத்திய இலாகா அதிகாரிகளும் விசேஷ சிரத்தை காட்டி வருகிறார்கள். அதிகமாக டாக்டர்களை உற்பத்தி செய்வதற்கு என்ன வழி என்பதை நாம் கவனிக்க வேண்டும். இப்போதுள்ள மெடிக்கல் காலேஜ்கள் போதாது. ஆகவே இன்னும் கூடுதலாக, கோயம்புத்தூரிலோ அல்லது வேறு எங்கேயாவது ஒரு மெடிக்கல் காலேஜ்ஜை துரிதமாக ஏற்படுத்தவேண்டும். முன்னால் எம்.பி.பி.எஸ். படிப்புக்கு 420 பேருக்கு பயிற்சி கொடுத்து இருந்ததை இப்போது 550 ஸீட்களாக உயர்த்தியிருக்கிறார்கள். அதோடு ஜி.ஸி.ஐ.எம். கோர்ஸை எடுத்துவிட்டு இப்போது எம்.பி.பி.எஸ். கோர்ஸாக மாற்றிவிட்டார்கள். இந்த டிகிரிக்கு ஏற்றபடி, அதோடு போஸ்ட் கிராஜுயட் கோர்ஸில் அதிகமான டாக்டர்களுக்கு பயிற்சி கொடுக்கவேண்டும். இப்போதுள்ள நிலை எப்படியிருக்கிறது என்றால், எம்.பி.பி.எஸ். கோர்ஸ்-க்கு எம்.பி.பி.எஸ். படித்தவர்களையே டியூட்டர்களாக போடுகிறார்கள். இதன் காரணமாக எம்.பி.பி.எஸ் படிப்பில் தேறியவர்களின் சதமானம் குறைந்துபோகிறது. ஆகவே அதிகமான பேர்களுக்கு போஸ்ட்-கிராஜுயட் கோர்ஸ் கொடுக்க வசதி செய்து கொடுக்க வேண்டும். அதோடு எம்.பி.பி.எஸ். படித்தவர்கள் கிராமங்களில் போய் சேவை செய்ய வேண்டும் என்று சொல்லுகிறோம். அவர்கள் சொந்த பணத்தில் படித்துவிட்டு எப்படி கிராமங்களுக்குப் போவார்கள், ஆகவே அவர்களுக்கு 25 சதமானம் ஸ்டைபண்ட் கொடுத்து, கிராமங்களில் போய் கட்டாயம் வேலை பார்க்க



20th March 1961] [Sri A. S. Duraiswami Reddiar]

வேண்டும் என்று சொல்லவேண்டும். அதோடு அவர்களுக்கு வேண்டிய வீட்டு வசதி, பிள்ளைகளுக்கு படிப்பு வசதி இந்த வசதிகள் எல்லாம் செய்து கொடுக்கவேண்டும்.

முக்கியமாக வைத்திய வசதியில், பிரசவ வசதிதான் முக்கியமானது பிரசவம் என்றால் இப்போது எல்லோரும் ஆசுபத்திரியைத்தான் நாடுகிறார்கள். பணக்காரர்கள் தனிப்பட்ட நர்ஸிங் ஹோம்க்குப் போய்விடுகிறார்கள். நடுத்தர வகுப்பார்கள் மற்றும். ஏழை எளியவர்கள் எல்லா ஆசுபத்திரிக்குத்தான் போகிறார்கள். முன்னால் பிரசவத்தினால் மரணம் அதிகமாய் இருந்துவந்தது. அந்த பயம் இப்போது கிடையாது. ஆயுதப் பிரசவம் இப்போது சாதாரணமாக எல்லா ஆசுபத்திரிகளிலும் திறமையுள்ள டாக்டர்களால் நடந்து வருகிறது. பிரசவம் என்றால், கர்பஸ்திரி பிரசவம் கழிந்து வருவது மறுஜன்மம் எடுத்துவருவது போல் என்று சொல்வதுண்டு, கடவுளாகத்தான் காப்பாற்றவேண்டும் என்று பெரியோர்கள் எல்லாம் சொல்லுவார்கள். ஒரு கதை கூட சொல்லுவார்கள், பிரசவப் பெண் பூரண கர்ப்பஸ்திரியாக வீட்டில் இருக்கும்போது, அவளுடைய தாய் வெளியூருக்குப் போயிருந்தாள், வரவேண்டிய வழியிலிருந்த ஆற்றில் வெள்ளம் வந்துவிட்டதால், திரும்பி வர முடியவில்லை. அன்றைய தினம் இந்த கர்ப்பஸ்திரி அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்ததைப் பார்த்த கடவுளே தாயாகவே உருவம் எடுத்து வந்து பிரசவத்திற்கு உதவியாக இருந்தார் என்றும், அதன் காரணமாகத்தான் கடவுளுக்கு தாயுமானவர் என்ற பெயரும் வந்தது என்றும் பெரியோர்கள் சொல்லுகிறார்கள். ஆகவே பிரசவம் என்பது மிகவும் முக்கியமாக இருக்கிறது. வைத்திய இலாகாவிற்கு இருக்கக்கூடிய டைரக்டர் பெயரும் தாயுமானவராக இருப்பதால் இது மிகவும் கவனிக்க வேண்டிய விஷயம். டைரக்டர் தாயுமானவர் பிரசவ விடுதிகளை நல்ல முறையில் நிர்வாகத்தை நடத்தி வருகிறார்கள். எம்.டி. டிரைனிங் கொடுப்பதில் கைனகாலஜிக்கு இரண்டு பேர்களுக்கும், மிட்வொய்ஃபரிக்கு மூன்று பேர்களுக்கும், மொத்தத்தில் ஐந்து பேர்களுக்கு டிரைனிங் கொடுக்கிறார்கள். இது எப்படி இருக்கிறது என்றால் சமுத்திரத்தில் பெருங்காயத்தைக் கரைத்த மாதிரி இருக்கிறது. பதிமூன்று ஜில்லா கொண்ட ஒரு மாகாணத்திற்காக மிட்வொய்ஃபரி எம்.டி.-க்கு மூன்று பேர்களுக்கும், கைனகாலஜி எம்.எஸ்.-க்கு இரண்டு பேர்களுக்கும் டிரைனிங் கொடுத்தால் போதுமா ? இந்தப் படிப்புப் படித்தவர்கள் பிரசவத்திற்கு எவ்வளவு முக்கியம் ? 30 ரூபாயில் ஒரு ரூம் வாடகை எடுத்துக்கொண்டு அதில் குடியிருப்பவர் அந்த இடத்தில் பிரசவம் நடத்த முடியுமா ? ஆகையால்தான் ஆஸ்பத்திரிகளில் நல்ல சௌகரியம் இருக்கிறது என்று எல்லோரும் ஆஸ்பத்திரியில் சேர்க்கிறார்கள். இத்தகைய நிலையில் இந்த மேல் படிப்பிற்கு ஐந்து பேர்கள்தானா எடுப்பது. இந்த ஐந்து பேர்களுக்கு செண்ட்ரல் கவர்ண்மெண்டில் ஸ்டைபண்ட் கொடுக்கிறார்கள். ஸ்டேட் கவர்ண்மெண்டில் ஏன் கொடுக்கக்கூடாது இன்னும் ஐந்து பேர்களுக்கோ அல்லது பத்து பேர்களுக்கோ ? ஆகையால் இன்னும் அதிக வசதிகளைச் செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். கனம் சட்டநாத கரையாளர் அவர்கள் சொன்னார்கள் இந்த இலாகாவில் இருக்கிறவர்கள் கஷ்டப்படுகிறார்கள் என்று. அது உண்மையிலேயே வைத்திய இலாகாவில் இருக்கக்கூடிய டாக்டர்களுக்கு லீவே கிடையாது. எல்லா இலாகாக்களிலும் பகல் காலத்தில்தான் உத்தியோகம் செய்வார்கள். இவர்களுக்கு லீவே கிடையாது (கனம் ஸ்ரீ ஆர். வெங்கட்ராமன். வியாதி ஞாயிற்றுக்கிழமை என்று பார்க்க மாட்டேன் என்று சொல்லுகிறது). ராத்திரி காலத்தில்கூட வேலை செய்ய வேண்டியிருக்கக்கூடிய இலாகா வேறு கிடையாது—ஆனால் ஒரு இலாகா போலீஸாக இருக்கலாம். டாக்டர்கள் இவ்வளவு முக்கியமாக இருப்பதால் அவர்கள் விஷயத்தில் ரொம்பவும் கவனிக்க வேண்டும்.

படுக்கைகளை அதிகமாக ஆக்க வேண்டும். இப்பொழுது பொதுவான வியாதிகளுக்கு அதிக ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. க்ஷயரோகத்திற்காக தாம்பரத்தில் ஒரு ஸானடோரியம் இருக்கிறது. தாம்பரம் ஸானடோரியத்தின் கட்டிடம் அழகாக இருக்கிறது. க்ஷயரோக வியாதி ஏற்பட்டு குணமானவர்கள் வசிப்பதற்காக ஒரு கட்டிடம் கட்டினார்கள். அந்தக் கட்டிடத்தில் எந்த இடத்தில் கூரை இருக்கிறது என்றுகூட தெரியவில்லை.

[Sri A. S. Duraiswami Reddiar] [20th March 1961

அவ்வளவு நூதன முறையில் கட்டியிருக்கிறது. இதைப் பார்த்து அமைச்சரே ஆச்சரியப்பட்டார். இந்தக் கட்டிடத்தைக் கட்டுவதற்கு பதிலாக அந்தப் பணத்தைக் கொண்டு இன்னும் நான்கு வார்டுகளை கட்டி படுக்கைகளை அதிகப்படுத்தியிருக்கலாம். சுகமாக வாழக்கூடிய முறையில் ராஜாக்கள் வாழக்கூடிய அளவுக்கு அதை கட்டியிருக்கிறார்கள். கட்ட வேண்டியதுதான்—நான் வரவேற்கிறேன். ஆனால் அதற்கு முன்னால் படுக்கைகளை அதிகப்படுத்தவேண்டும். வரும் நோயாளிகளின் பெயர்களை வெய்ட்டிங் லிஸ்ட் போட்டு வைத்திருக்கிறார்கள். க்ஷயரோக வியாதிக்கு வெய்ட்டிங் லிஸ்ட் போட்டால் என்ன செய்வது? படுக்கைக் கிடைப்பதற்குள் ஆளே க்ளோஸ், கட்டாயம் இந்த படுக்கைகளை அதிகப்படுத்தவேண்டும். (மணி அடிக்கப்பட்டது) இப்படி மணி அடித்தால் எப்படி பேசுவது. மருத்துவத்தையும் சுகாதாரத்தையும் பற்றி எவ்வளவோ பேசவேண்டியிருக்கிறது. அதற்கு 10 நிமிஷம் கொடுத்தால் என்ன பேச முடியும். மருத்துவ விஷயத்திலே நம் சர்க்கார் அதிகத் திறமையாக நடத்துகிறார்கள். நமது அமைச்சரும் தன்னுடைய சுகாதாரத்தை ரொம்பவும் கவனிக்க கூடியவர். கண்ட இடத்தில் காப்பி சாப்பிடுவதில்லை. போகும்போது கையிலேயே காப்பியை எடுத்துக்கொண்டு போக கூடியவர். எங்கேயாவது மீட்டிங் போட்டால் சுட. சுகமாக இருக்குமா, நாத்தம் ஏதாவது இருக்குமா என்று கேட்டுக்கொண்டு தெரிந்துகொண்டு வருகிறார். தன்னுடைய சுகாதாரத்தின் விஷயத்தில் இவ்வளவு அக்கரை இருக்கும்போது நாட்டு விஷயத்திலேயும் அக்கரையுடன் இருப்பார் என்பதில் சந்தேகமில்லை. இப்போது நல்ல முறையில் வேலை நடக்கிறது. வைத்தியர் இல்லாததுதான் குறை. டைரக்டரும் இப்போது நல்ல முறையில் வேலை செய்கிறார். . அதற்காகத் தான் ஒரு வருஷம் எக்ஸ்டென்ஷன் கொடுத்திருக்கிறார்கள். டாக்டர்கள் இல்லாததற்கு அவர்களை அதிகப்படுத்த வழிவகைகளை அவர்கள் சொல்ல வேண்டும்.

இன்னும் ஆலந்தூரையும், பல்லாவரத்தையும் முனிஸிபாலிட்டியாகச் செய்ய வேண்டும். அங்கு தண்ணீர் இல்லை. தொழில் பாதிப் போய் விட்டது. இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆலந்தூர், பல்லாவரம், தாம்பரம் முதலிய இடங்களுக்கு தண்ணீர் வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**Sri R. SUBRAMANIAM:** கனம் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற வைத்திய, சுகாதார மான்யத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். சமூகத்தில் மிகவும் கொடுமை செய்யக்கூடிய வியாதிகளுள் க்ஷயரோகம் ஒன்று. இந்த க்ஷயரோகத்தைத் தடுக்க சர்க்காரே சில ஸானடோரியங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். பொது மக்களும் சில ஸானடோரியங்களை ஏற்படுத்தி நடத்தி வருகிறார்கள். சர்க்கார் ஏற்படுத்தியிருக்கக் கூடிய ஸானடோரியங்களின் பூரா செலவையும் சர்க்காரே செய்து வருகிறது. ஆனால் பொதுமக்களாக அவர்களே ஏற்படுத்தி நடத்திவரக்கூடிய. ஸானடோரியங்களுக்கும் வேண்டிய அளவுக்கு நிதி உதவி செய்வதில்லை. குறிப்பாக எடுத்துக்கொண்டால் தஞ்சை ஜில்லாவிலே செங்கிப்பட்டி டி.பி. ஸானடோரயம் இருக்கிறது. 1947-ம் ஆண்டிலே இதற்காக ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு 1951-லே இங்கு டி. பி. ஸானடோரியம் இயங்க ஆரம்பித்து விட்டது. அப்போது படுக்கை ஸ்ட்ரென்த் 150-ஆக இருந்து, 45 நோயாளிகளுக்கு இனமாக சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இப்போது பெட் ஸ்ட்ரென்த் 360-ஆகப் பெருகியுள்ளது. 100 பேர்கள் இனமாக சிகிச்சை பெறுகிறார்கள் இவ்வளவு தூரம் 20 லட்சம் ரூபாய் பொது மக்களிடத்திலிருந்தும், தஞ்சை ஜில்லா போர்டிலிருந்தும் வசூல் செய்து நடத்தி வருகிறார்கள். இவ்வளவு தொகை செலவழித்தும் இதுவரையில் சர்க்கார் அளித்துள்ளது அட்ஹாக் கிராண்டாக 10 ஆயிரம் ரூபாய், 60,000 ரூபாயில் கட்டிடம் கட்ட ஹா.'.ப் கிராண்டாக ஒரு சிறு தொகை, 500 ஏக்கர் தரிசு நிலம் என்று சொல்லமுடியாது, பொட்டல் நிலம், ஆக இவைகளை அளித்ததல்லாமல் வேறு எந்த வித உதவியும் செய்யவில்லை. இப்போது ஏதாவது இடம் வேண்டுமானால் கஷ்டமாக இருக்கிறது. ரிஜிஸ்டர் செய்துகொண்டால் அந்த வியாதி முற்றி சாகக்கூடிய தருவாயில் அட்மிஷன்



20th March 1961] [Sri R. Subramaniam]

செய்துகொள்ள உத்திரவு கிடைக்கிறது. சர்க்கார் இந்த டி. பி. ஸானடோரியத்தின் விஷயத்தில் அக்கரை எடுத்துக்கொள்ளவேண்டும். ஜில்லா போர்டு நிதியிலிருந்து 35,000 ரூபாய் மெயிண்டினன்ஸ் கிராண்டாகக் கொடுக்க சர்க்கார் அனுமதித்தது. ஜில்லா போர்டு இருக்கக் கூடிய நிலையில் ஒரு வருஷத்தில் ஜில்லா போர்டே மறைந்துவிடுமாதலால், கிடைக்கக் கூடிய மெயிண்டினென்ஸ் கிராண்டும் கிடைக்காமல் போகக் கூடிய ஏது இருக்கிறது. ஆக, இந்த ஸானடோரியத்தில் இனமாக சிகிச்சை பெறக் கூடிய பெட் ஸ்ட்ரென்த்தை 150-ஆக உயர்த்தி—அப்படி உயர்த்தினால் தான் ஏழை மக்களுக்கு வசதியாக இருக்கும்—மெயிண்டினென்ஸ் கிராண்டாக வருஷத்திற்கு சர்க்காரிலிருந்து ரூ. 1,50,000 கொடுத்தால்தான் இனிமேல் நல்ல முறையில் இந்த ஸானடோரியம் இயங்க முடியும். அந்த மாதிரி சர்க்கார் உதவி செய்யவேண்டுமென்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்த ஸானடோரியம் இவ்வளவு நல்ல முறையில் இயங்கி வருகிறது என்றால் பொது மக்களிடத்திலிருந்து 480 ஏக்கர் நஞ்சை நிலம் கிடைத்திருப்பது தான். அந்த நிலத்திலிருந்து வரக்கூடிய வருமானத்திலிருந்து தான் அதை நல்ல முறையில் செயலாற்றி வர முடிகிறது. வரக்கூடிய உச்ச வரம்புச் சட்டத்திலிருந்து இந்த ஸ்தாபனத்தை நீக்கவேண்டும். உச்ச வரம்புச் சட்டத்தினால் இந்த ஸானடோரியம் பாதிக்கப்படுமானால், வியாதியஸ்தர்கள் வீட்டுக்குப் போக வேண்டியதுதான். ஸானடோரியத்தையே க்ளோஸ் பண்ண வேண்டியதுதான். ஆகையால் இந்த சட்டத்திலிருந்து இதற்கு விலக்கு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக தஞ்சை மெடிக்கல் காலேஜ். மூன்று வருஷமாக தஞ்சை மெடிக்கல் காலேஜின் பேரால் மாணவர்கள் எடுக்கப்பட்டு மதுரையில் பாடம் போதிக்கப்பட்டு வருகிறது. காரணம் கட்டிடங்கள் கட்டப்படாமல் இருப்பது தான். கட்டிடம் கட்டுவதில் அதிக தாமதம் ஏற்பட்டுக்கொண்டே வருகிறது. ஒரு ஸ்பெஷல் ஆபீஸரைப் போட்டு அவர் ஒரு வருஷம் எந்தவிதமான வேலையும் இல்லாமல் இருந்திருக்கிறார். இப்போது கட்டிடம் கட்டும் வேலை நடந்துகொண்டு வருகிறது. இந்தக் கட்டிடம் கட்டுவதைத் துரிதப்படுத்தி, சீக்கிரமே முடித்து, வருகிற ஆண்டிலாவது இந்த காலேஜை தஞ்சையிலேயே நடத்தும்படி கேட்டுக்கொள்கிறேன். தஞ்சை ராஜா மிராஸ்தார் ஆஸ்பத்திரியில் போதுமான லெட்ரின் வசதி கிடையாது. 10
அப்படிப்போதுமான லெட்ரின் வசதிகள் இல்லாததால், அங்கே மிகவும் a.m.
கஷ்டமாக இருக்கிறது. எனவே அங்கே லெட்ரின் வசதிகள் விஸ்தரிக்கப்பட வேண்டும். தவிர, இந்த ஆனரரி பிசிஷியன்களை நியமிப்பதில் எல்லோருக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும். போட்டவரையே மீண்டும் போட்டுக் கொண்டிருக்கக் கூடாது. சாதாரணமாக நல்ல திறமையுள்ளவர்களையே ஆனரரி பிசிஷியன்களாகப் போடுவது வழக்கமென்று நான் நினைக்கிறேன். ஆனால், இதிலே இன்னொன்றையும் பார்க்க வேண்டும். அந்த உண்மை என்னவென்றால், நாம் போட்டவரையே மீண்டும் போடுவதாலேயே சிலருக்கு நல்ல பேர் வந்துவிடுகிறது. அப்படிப் போடுவதால், பிறர் வரமுடியாமல் போகின்றது. ஆகவே இவர் தான் இண்டிஸ்பென்சபல் டாக்டர், இவரைத்தான் போடவேண்டுமென்று கருதாமல் எல்லா டாக்டர்களுக்கும் இந்த ஆனரரி பிசிஷியன் பதவிகள் கிடைக்க நாம் வசதி செய்து தரவேண்டும். ஆகவே அம்மாதிரியான முறையிலே நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், அம்மை நோயை எடுத்துக்கொண்டால், இந்நோயை ஒழிப்பதற்கு வேண்டிய சிரத்தைகள் எடுத்துக்கொண்டு வருகிறார்கள். இதை நான் மிகவும் பாராட்டுகிறேன். ஆனால், இந்த அம்மை நோய் தஞ்சாவூர் தாலுக்காவின் கீழ் பகுதிகளிலும், என்னுடைய தொகுதியாகிய பாபநாசம் தாலுக்காவிலும் மிகவும் அதிகமாக கொடுமைகள் செய்து வருகிறது. இதை உடனடியாக நிவாரணம் அளித்து, தடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து தடுக்க வேண்டும். அப்படி தவறி வந்துவிட்டாலும், அதைத்தடுக்க வேண்டும். அந்த முறையிலே அவ்வளவு

கவனம் செலுத்தப்படவில்லை. சாதாரணமாக எனக்கு கிடைத்துள்ள தகவலை எடுத்துக்கொண்டால், இந்த நோய் குழந்தைகளிடத்திலே தான் அதிகமாகப் பரவி தொந்திரவு கொடுப்பதாகத் தெரிகிறது. அம்மாபேட்டையில் ஒரு குடும்பத்தில் இருந்த 5 குழந்தைகளுக்கும் அம்மை நோய் வந்து இறந்து விட்டதாக எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. ஆகவே இம்மாதிரியான கொடுமைகள் எல்லாம் இல்லாமல், சீக்கிரமாக தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இம்மாதிரியாக நான் சொல்லும்போது, இந்த தடுப்பு ஊசிப் போடக் கூடியவர்கள் சாதாரணமாக ஹெல்த் இன்ஸ்பெக்டர்கள் தான் போடுகிறார்கள். இல்லாவிட்டால் ஹெல்த் அசிஸ்டெண்ட் போடுகிறார்கள். அவர்கள் பல இடங்களுக்குச் சென்று ஊசி போட்டு வருவதற்கான அலவன்ஸை நாம் உயர்த்தவேண்டும். இப்போது பிக்சட் டி. ஏ. கொடுக்கப்படுகிறது. ஹெல்த் இன்ஸ்பெக்டருக்கு 33 ரூபாய்தான். ஹெல்த் அசிஸ்டெண்டுக்கு 22 ரூபாய்தான். அவர்கள் பல இடங்களுக்கும் சென்று வருவதற்கு இந்தத் தொகை போதவில்லை. இதற்கு மேல் அவர்களுக்கு செலவாகிறது. அவர்களுடன் போகக்கூடிய பியூன்களுக்கு தினமும் டி. ஏ. ரூ. 1-4-0. அதோடு அவர்களுக்கு ஆக்சுவலாக ஆகக்கூடிய செலவையும் சேர்த்துக் கொடுக்கப்படுகிறது. இதைக் கணக்குப் பார்த்தால், ஹெல்த் இன்ஸ்பெக்டரைவிட, அவர்களுடன் போகக்கூடிய பியூன்களுக்கு அதிகமாக கிடைக்கிறது. இதனாலே அவர்களுக்கு இதிலே சிரத்தை குறைகிறது. இம்மாதிரியான நோய்களைத் தடுப்பதற்கு இவர்கள்தான் முக்கியமாக அங்காங்கே சென்று ஊசிபோட்டு தடுக்க வேண்டியிருப்பதால், இவர்களுக்கு டி. ஏ. வை இன்னும் கொஞ்சம் அதிகப்படுத்த வேண்டும். அப்போதுதான் அவர்களுக்கும் ஊக்கம் ஏற்படும். இதையும் முக்கியமாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நமது மாகாணத்தில் சுமார் 100 ரூபாய் மாத வருமானம் வரக்கூடியவர்கள் ஆஸ்பத்திரியில் இன்பேஷண்டாக இருப்பதற்கு ஒரு சிறிய தொகை செலுத்த வேண்டுமென்று சொல்லப்படுகிறது. இந்த 100 ரூபாய் என்பது நீண்டகாலத்திற்கு முன்பு வரையறுக்கப்பட்டது. இப்போது எடுத்துக்கொள்வோமானால், அப்போது 100 ரூபாய் என்று சொன்னால், அது 400 ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்குத்தான் பொருந்தும். அப்படி தற்பொழுது 100 ரூபாய் என்றால், அப்போது இருந்ததற்கு 25 ரூபாய்க்கு சமமாக வேண்டும். எனவே இப்போது பணவீக்கம் பெருகி உள்ளதற்கும் பிறகு இன்னமும் அதே தொகையை வைத்துக்கொண்டு, 100 ரூபாய் வருமானம் வரக்கூடியவர்கள் எல்லாம் ஓரளவு தொகையை கட்டவேண்டுமென்று சொன்னால், குறைந்த வருமானம் உள்ளவர்கள் பலர் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே, அரசாங்கத்தில் இந்த 100 ரூபாய் குறைந்த வருமானம் என்றுள்ளதை 250 ரூபாய் என்றுவது ஆக்கினால் மிகவும் நலமாக இருக்கும். அதனால் மிகவும் குறைந்த வருமானம் வரக்கூடியவர்கள் ஆஸ்பத்திரிகளில் தங்கி தங்களுடைய சிகிச்சைகளை நல்லமுறையில் செய்துகொள்வதற்கு மிகவும் வசதியாக இருக்குமென்று சொல்லிக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **Srimathi SATHIYAVANIMUTHU** : சட்ட மன்றத் தற்காலிகத் தலைவர் அவர்களே, இந்தப் பொதுச் சுகாதாரம், மருத்துவம் என்ற மானியத்தின் மீது எதிர்க்கட்சித் தரப்பினரால் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். பொது சுகாதாரத்தின் அடிப்படையில் நாட்டிலே மலேரியா, யானைக்கால், நரம்புச் சிலந்தி, காலரா, மற்றும் இப்படிப்பட்ட தொத்து நோய்கள் பரவாமல் நீக்குகின்ற வகையில் வசதிகள் அளிப்பதற்காக பல இலட்சக்கணக்கான ரூபாய்கள் செலவழிக்கப்படுவதாக கனம் அமைச்சர் அவர்கள், தமது விளக்க உரையிலே தந்திருக்கிறார்கள். மலேரியா, காலரா, அத்துடன் நரம்புச் சிலந்தி போன்ற வியாதிகள் பெரும்பாலான நீர்த் தேக்கங்கள் இருக்கின்ற இடங்களிலே இருந்து உண்டாகிறது. கொசுக்களை அழிப்





பதற்காகப் பல இலட்சக்கணக்கான ரூபாய்கள் செலவழிக்கப்படுகிறது ; ஆனால் அதே நேரத்தில், நீர்த் தேங்காமல் இருக்கும் வகையிலே, பல குளங்கள், குட்டைகள் ஆகியவைகளை நல்ல முறையிலே தூர்த்து அப்படி நீர்த் தேங்குகின்ற இடங்களிலே கொசுக்கள் வளராமலும் இருப்பதற்கான நடவடிக்கைகள் எடுப்பார்களேயானால் நிச்சயமாகப் பெருமளவு வெற்றி கிடைப்பதற்கு முடியுமென்று நான் நம்புகின்றேன்.

குறிப்பாக, என்னுடைய தொகுதியில் பல சேரிகள் இருக்கின்றன. அங்கிருக்கக்கூடிய ஏழைகளுக்குச் சொந்தத்திற்கு இடமில்லாமல். யாராவது நிலம் தந்தால் அங்கே வீடுகளைக் கட்டிக்கொண்டு பல தோட்டங்களிலே குடியிருந்து வருகிறார்கள். கல்யாண மேஸ்திரித் தோட்டம், மோகன முதலிக் கிராமணி தோட்டம், குருசாமி தோட்டம், ராஜா தோட்டம், சுப்ரமணிய தோட்டம் மற்றும் பல தோட்டங்கள் என்னுடைய தொகுதியிலே இருக்கிறது. ஆனால் அவர்களுக்கு அந்த நிலங்கள் சொந்தம் கிடையாது. நிலச் சொந்தக்காரர்கள் அவர்களுக்குப் பாதை வசதியோ, குடிதண்ணீர் வசதியோ போன்ற இதர சுகாதார வசதிகளோ செய்து கொடுப்பதில்லை. அப்படிச் செய்து கொடுப்பதற்கும் அவர்கள் முன்வருவதில்லை. ஆகவே, அங்கே பல இடங்களில் எப்போதும் நீர் தேங்கிக் கொண்டிருக்கும். அப்படி அங்கே நீர் தங்குவதால், அங்குள்ள மக்களுக்கு எல்லாவிதமான வியாதிகளும் வருகின்றன. ஆனால் நாம் அந்தச் சேரிகளை நல்ல முறையிலே வைப்பதில் தான் கவனம் செலுத்த வேண்டும். அதைவிட்டு, மாடி வீடுகளை எத்தனைதான் இந்த சிங்காரச் சென்னையிலே கட்டினாலும், அந்த நோய் பரவுவதற்கு ஏதுவாகத்தானிருக்கும். எனவே சேரிகள் என்று அவைகளைப் புறக்கணிக்காமல், அவைகளைத் தனியே ஒதுக்கிவிடாமல், அவைகள் மேலும் நல்லமுறையிலே சுகாதாரமான முறையிலே எப்படி மாற்றியமைக்க முடியும் என்பதைச் சிந்திக்க வேண்டும். அதற்கு, அவர்கள் வசிக்கக்கூடிய நிலங்களையெல்லாம் அதன் சொந்தக்காரர்களிடமிருந்து வாங்கி, துரிதமாக அங்குள்ள குளம் குட்டைகளை யெல்லாம் போக்குகின்ற அடிப்படையிலே பணத்தை செலவழித்தால், நாம் இதை நிறைவேற்ற முடியும்.

மேலும், இப்போது வியாதிகள் அதிகமாகிக் கொண்டு வருகின்றன. அதனால் சர்க்கார் மருத்துவ மனைகளிலே படுக்கைகளை அதிகமாக்கிக் கொண்டு வருகிறோம். இந்த ஆண்டு 1,600 படுக்கைகள் அதிகமாக்கி இருக்கிறோம் என்றெல்லாம் சொல்லப்பட்டது. படுக்கைகள் அதிகமாக்கப்பட்டு இருக்கின்றதேயொழிய, நோயாளிகளைக் கவனிப்பதற்கு நல்ல ஊழியர்களையும் அதிக அளவில் நியமிக்கப்படவில்லை. ஊழியர்கள் அதிகமாக இல்லாத காரணத்தினால், நோயாளிகளை அவர்களால் நல்லமுறையில் பராமரிக்க முடியவில்லை. அதனால் ஊழியர்களுக்கும் பல தொல்லைகள் ஏற்படுகின்றன. அதன் அடிப்படையிலேதான் இந்த மன்றத்தில் சர்க்கார் மருத்துவ ஊழியர்கள் சங்கத்தின் சார்பில் ஒரு மகஜர் தரப்பட்டிருக்கிறது. நான் அந்த சங்கத்தின் துணைத் தலைவர் என்கின்ற முறையிலே, மேலும் சில தகவல்களை இந்த சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இங்கே இருக்கக்கூடிய ஒவ்வொரு மருத்துவ மனையிலும், குறிப்பாக கஸ்தூரிபாய் காந்தி மருத்துவ மனையில் 1,000 நோயாளிகள் இருக்கின்ற முறையிலே படுக்கைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அமைக்கப்பட்டுள்ள படுக்கைகள் அவ்வளவு. அதைத் தவிர, மற்றுமுள்ள இடங்களிலே பாய்களின்மீது படுத்துக்கொண்டிருப்பவர்கள் பலர் ; அது ஒரு 500 இருக்கும். இப்படி, மொத்தம் 1,500 படுக்கைகள் இருக்கின்ற இடத்தில், அவ்வளவு நோயாளிகளையும் பராமரிப்பதற்கு போதுமான ஊழியர்களை நியமித்திருக்கிறார்களா என்று பார்த்தால், அப்படி நியமிக்கப்படவில்லை. எஸ். என். ஓ. க்கள் என்று சொல்லக்கூடியவர்கள் 56 பேர்களும், பொதுவாக அங்குள்ள இயற்கைக் கழிவுகளை நீக்குவதற்காக 18 லச்சிகளும் தான் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மொத்தமுள்ள 1,500 படுக்கைகளுக்கு இந்த 56 எஸ். என். ஓ.க்களும், 18 லச்சிகளும் போதுமா ? இதைப்போன்று, சர்க்கார் நடத்துகின்ற விமன் அண்டு சில்ட்ரன் ஆஸ்பத்திரியை (தாய் சேய் மருத்துவமனையை) எடுத்துக்கொண்டால், அங்கு 1,500 படுக்கைகள்,

அதற்கு 46 எஸ். என். ஓ.க்களும், 36 லச்சிகளும் இருக்கிறார்கள். இதிலே இன்னொரு வேடிக்கை என்னவென்றால், இரவுக் காலங்களில் இந்த மருத்துவ மனையில் கூப்பிட்ட குரலுக்குப் பதில் கொடுப்பதற்கு 4 பேர்கள் தான் இருக்கிறார்கள். இந்த 4 பேர்கள், 1,500 பேர்கள் கொடுக்கக்கூடிய குரலுக்கு சரியான முறையிலே போய்க் கவனிக்க முடியுமா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஊழியர்களுக்கு அதிகமாகச் செலவாகிறது என்று, 20, 30, 35 பேர்களுக்கு ஒரு எஸ். என். ஓ. என்று போட்டு, வேலை செய்ய வேண்டுமென்று சொன்னால், அவர்களுக்கு எந்தக் காரியத்தையும் செய்வதற்கு கஷ்டமாகவும் இருக்கிறது. அத்துடன் அவர்களுக்கு எந்தவித சலுகைகளும் கிடைப்பதுமில்லை. மேலும், பல தொல்லைகளுக்கு இவர்கள் ஆளாக்கப்படுகிறார்கள். இதிலே வேலை செய்யக் கூடியவர்களை பல பிரிவுகளாகப் பிரித்து, அந்தந்தப் பிரிவுக்கு எற்ற வகையிலே அங்குள்ள மேலதிகாரிகள் இவர்களை வேலை வாங்குவதிலே பின்வாங்குவதில்லை. தோட்டியாக இருந்தாலும் அவர்கள் லாண்டரியில் போய் வேலை செய்ய வேண்டும். தோட்டக்காரராயிருந்தால் அவர் தோட்டத்தை சுத்தம் செய்ய வேண்டும். யார் எந்த வேலை செய்யவேண்டும் என்று நிர்ணயிக்கப்படாமல் ஒரு தரப்பட்ட மக்களை எல்லா வேலைக்கும் பயன்படுத்துகிறார்கள். அவர்கள் நாங்கள் இந்த வேலைக்குத் தானே வந்திருக்கிறோம், எங்களால் வேறு வேலை செய்ய முடியுமா என்று கேட்டால், ஒரு வேலைக்கு என்று வந்து விட்டால், யாரும் எந்த வேலையையும் செய்ய வேண்டும் என்று சொல்லி நிர்ப்பந்தப்படுத்துகிறார்கள். உதாரணமாக எடுத்துக்கொண்டால், நாகம்மாள் என்ற ஒரு பெண் தோட்டியை-செய்ய-வேண்டுமென்றே லாண்டரியில் வேலை செய்ய வேண்டும் என்று போட்டிருக்கிறார்கள். எந்த வேலைக்கென்று அமர்த்தப்பட்டார்களோ அந்த வேலையை மட்டும் செய்யச் சொல்லுகிறார்களா என்றால், இல்லை. நாம் தொழிலாளிகள் 8 மணி நேரம் பணிபுரியவேண்டுமென்று பெருமையாக பேசிக்கொள்ளுகிறோம். ஆனால் மருத்துவ மனைகளில் உள்ள தொழிலாளர்கள் 12 மணி நேரம் வேலை வாங்கப்படுகிறார்கள். அப்படி 12 மணி நேரம் குறைந்த தொழிலாளர்களை வைத்துக்கொண்டு வேலை வாங்கினால், எப்படி அவர்கள் நோயாளிகளுக்கு உதவி செய்ய முடியும், எப்படி திறமையாக பணிபுரிய முடியும் என்பதை சற்று கவனிக்கவேண்டும். இம்மாதிரி மருத்துவ மனைகளில் பல சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன. நோயாளிகளுடைய குரல்களுக்கு இந்தத் தொழிலாளர்கள் செவிசாய்க்க முடியவில்லை. இவ்வளவு குறைவான தொழிலாளர்களை வைத்துக்கொண்டு மிகவும் கேவலமான முறையில் அவர்கள் வேலை செய்துதான் ஆகவேண்டுமென்று அதிகாரிகள் வற்புறுத்துகிறார்கள். வாரத்திற்கு ஒரு முறையாவது விடுமுறை தரப்படுகிறதா என்றால் அதுவும் இல்லை. இருக்க இடமும் கிடையாது. சம்பள உயர்வும் கிடையாது. பல ஆண்டுகள் வேலை செய்தும், நிரந்தரமாக செய்துகொண்டிருப்பதற்கு வழி இல்லாமல் கூலிக்கு வேலை செய்வது போல, போதுமான ஊதிய உயர்வு எதுவும் இல்லாமல், பல தொழிலாளர்கள் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய குறைகள் நீக்கப்பட்டதா என்று பார்த்தால், இல்லை. மாறாக, அப்பேர்ப்பட்ட தொழிலாளர்கள் போலீசுக்கு செல்லும் முறையில் பயன்படுத்தப்படுகிறார்கள்.

உதாரணமாக பிப்ரவரி மாதம் 28-ம் தேதியன்று எழும்பூர் ஆஸ்பத்திரிக்கு ஒரு தாய் பிரசவத்திற்கு சென்றிருக்கிறார்கள். இங்கு ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒரு பெரியவர் பிரசவ வேதனையைப்பற்றி கூறுகையில் மறு ஜன்மம், புனர்ஜன்மம் எடுப்பது போலாகும், உயிர் போய் வருவது போலாகும், என்றேல்லாம் பேசினார். அப்பேர்பட்ட வேதனையை அடைந்த பெண், உயிர் இருக்குமா என்ற எண்ணத்தில் மறு ஜன்மம் எடுப்பது போல் அவஸ்தைப்படுகிற பெண் பிப்ரவரி மாதம் 28-ம் தேதி மருத்துவ மனைக்குச் சென்றிருக்கிறாள். அந்தச் சமயத்தில் அவளையும் அறியாமல் அவள் கழுத்தில் கட்டப்பட்டிருந்த தாலி களவு போய்விட்டது. கணவனும் மனைவியாக ஒன்றாக இல்லற வாழ்க்கை நடத்துவோம், நாம் இருவரும் தாம்பத்ய வாழ்க்கையில் பங்குகொள்வோம் என்று கணவன் அளித்த சின்னமாகிய தாலி அறுக்கப்பட்டிருக்கிறது. அறுக்கப்பட்டு களவாடப்பட்டிருக்கிறது. வீட்டிலே பிரசவம் செய்தால் உயிர் இருக்காது என்று பயந்துகொண்டு மருத்துவ மனைக்கு சென்றிருக்கிறாள் தாய். மருத்துவ மனையில் தாலி அறுக்கப்பட்டிருக்கிறது. யார் அப்படி அறுத்தார்கள் என்பது இதுவரையில் கண்டுபிடிக்கப்பட்டதா என்றால் கண்டுபிடிக்கப்படவில்லை. மாறாக, குறைந்த வருமானம் பெறுகிறவர்கள், 12 மணி நேரத்திற்கு மேல் ஊழியம் செய்பவர்கள், எடுப்பார் கைப்பிள்ளையாக அதிகாரிகளுக்கு பயந்து வேலை செய்யும் தொழிலாளர்கள், சலுகை ஒன்றுமே இல்லாமல் வேலை செய்யும் பணியாளர்கள் இவர்களைத்தான் போலீசார் விசாரணைக்கு ஆளாக்கினார்கள். விசாரணை செய்யத்தான் வேண்டும். இல்லை என்று சொல்லவில்லை. விசாரணை செய்த பிறகு தொழிலாளர்கள் யாராவது இந்தக் குற்றத்திற்கு ஆளாக்கப்பட்டார்களா என்றால் ஆளாக்கப்படவில்லை. மாறாக, வேறு ஒரு பெண் நோயாளி இந்தக் குற்றத்தை செய்திருக்கிறாள் என்று தெரிய வந்தது.





ஆனாலும், மருத்துவமனையில் வேலை செய்கிறவர்கள் "எங்களை போலீசார் அநாவசியமாக விசாரணை செய்தார்களே? எங்களில் யாரும் அந்தத் திருட்டு நடந்ததற்கு பொறுப்பாளி என்று நிரூபிக்கப்படவில்லையே? எங்கள் மீது வீண் பழி சுமத்தி பிறர் மத்தியில் அவமானப்படுத்தும் முறையில் விசாரணை செய்தார்களே?" என்று மாட்ரனிடம் சென்று குறை சொன்னார்கள். "நீங்கள் எடுக்கவில்லை, அதற்காக என்ன செய்வது? இருந்தாலும் இது போலீசார் வழக்கமாகச் செய்யவேண்டிய விசாரணை செய்திருக்கிறார்கள்" என்று அம்மையார் சொல்லி அவர்களை அனுப்பியிருக்கலாம். மாறாக, போலீசார் தவறான முறையில் விசாரணை செய்தார்கள், ஏன் என்று கேட்கப் போனால், அதற்கு நீங்கள் ஏன் இது பற்றி என்னிடம் வந்து முறையிடுகிறீர்கள், எனவே, உங்களுக்கு தலா 50 காசு அபராதம் போட்டிருக்கிறேன், என்று சொல்லி அந்த ஊழியர்களுக்கு அபராதம் விதித்திருக்கிறார்கள். அவர்கள் குறை இருந்தால், குறையைப் பற்றி முறையிடக்கூடாதா? "பக்கத்தில் இருந்த வேறு ஒரு நோயாளி இந்தக் களவைச் செய்திருக்கிறாள்" என்று சுட்டிக்காட்டி சொல்லியபிறகு கூட, குற்றம் குறைகளையெடுத்து அதிகாரிகளிடம் தெரிவிக்கப் போனால், அதற்காக 8 அணா அபராதம் போடுகிறார்கள்.

தாலி பறிபோவதை சர்க்கார் ஒத்துக்கொள்ளுகிறார்களா? தாலிக்குக் கூட சர்க்கார் மருத்துவ மனையில் உத்தரவாதம் இல்லையென்றால், எப்படி மருத்துவ மனைக்குப் போய் தாய்மார்கள் சிகிச்சை பெறலாம் என்று எதிர் பார்க்க முடியும்? இதன் மூலம் தொழிலாளப் பெருமக்கள் பாதிக்கப்படுகிறார்கள். இம்மாதிரி மருத்துவ மனைகளில் உள்ள குறைகளைப் பற்றி நான் பல நேரங்களில் இந்த மன்றத்தில் பேசியிருக்கிறேன்.

வெட்டினரி மருத்துவ மனையில் 85 தொழிலாளர்கள் நீண்ட ஆண்டு காலமாக வேலை செய்துகொண்டு வந்திருக்கிறார்கள்; அவர்கள் இன்னும் நிரந்தரமாக்கப்படவில்லை. அதைப்பற்றி இந்த மன்றத்தில் கேட்ட பொழுது, யோசித்துக்கொண்டிருக்கிறோம்; விரைவிலே நிரந்தரமாக்குகிறோம் என்று சொன்னார்கள். இதுவரையில் செய்யவில்லை. அதேபோல அங்கு இருக்கிற வேறு ஒரு தொழிலாளியை பைத்தியம் பிடித்த ஒரு மாடு ஒன்று முட்டி மோதிக் காயப்படுத்திவிட்டது. அதற்காக அந்தத் தொழிலாளி விடுமுறை வேண்டும் என்று மனு கொடுத்ததை அதிகாரிகள் நிராகரித்து விட்டார்கள்; அந்தத் தொழிலாளியை வேலையிலிருந்தும் நீக்கி விட்டார்கள். ஒரு மாட்டினால் முட்டப்பட்டு காயப்படுத்தப்பட்டிருந்தாலும், அந்தத் தொழிலாளிக்கு விடுமுறை தராமல், வேலையைவிட்டு நீக்கம் செய்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட முறையில் தொழிலாள மக்கள் பழி வாங்கப்படுகிறார்கள். இதை அரசாங்கம் கவனிக்கவேண்டும்.

அதேபோன்று, மருத்துவ மனையில் பணி செய்கிறவர்களுக்கு ஒதுக்கியிருக்கிற வீடுகள் 95, அந்த 95 வீடுகளில் ஏறத்தாழ 20 வீடுகள் வாழத் தகுதியற்றது என்று சர்க்காரினால், சர்க்கார் அதிகாரிகள் மூலம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இப்பொழுதும்கூட அந்த வீடுகளுக்கு ஒரு ரூபாய் வாடகை வசூல் செய்யப்படுகிறது. ஏனைய வீடுகளுக்கும் ரூ. 3½ வாடகை வசூலிக்கப்படுகிறது; இது கூடாது. தொழிலாள மக்களைச்

[20th March 1961

**SRI M. K. SOMASUNDARAM** : தலைவர் அவர்களே, மந்திரி அவர்கள் கொண்டுவந்திருக்கும் மானியத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர்கள் சரியானபடி வியாதிகள் ஒழிக்கப்படவில்லை, சுகாதாரம் நல்ல முறையில் நடைபெறவேண்டுமென்று பேசினார்கள். டாக்டர்கள் நல்ல முறையில் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள் என்றும் கூறினார்கள். நான் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

கிராமங்களை எடுத்துக்கொண்டால், அங்கே சுகாதாரம் நல்ல முறையில் நடைபெறவில்லை என்று சொல்ல முடியும். இதற்குக் காரணம் இந்த இரண்டு டிபார்ட்டுமெண்டுகளையும் ஒன்றாக இணைத்ததுதான் காரணம். வேறு காரணம் கிடையாது. மெடிகல் டிபார்ட்மெண்ட், பப்ளிக் ஹெல்த் டிபார்ட்மெண்டுகளை எடுத்துக்கொண்டால், பப்ளிக் ஹெல்த் ஸ்டாப் சரியான முறையில் வேலை செய்வதில்லை. கிராமங்களிலே பிரைமரி சுகாதார நிலையங்களிலே, ஹெல்த் இன்ஸ்பெக்டர்களை மெடிகல் ஆபீசர் கையில் கொடுத்திருப்பதினால், மெடிகல் ட்ரீட்மெண்ட் செய்கிறார்களே தவிர, சுகாதார வேலைகளை கவனிக்க இயலாமல் போகிறது. ஒவ்வொரு பிரைமரி ஹெல்த் சென்டரிலும் எல்லா வேலைகளையும் செய்யவேண்டுமென்றிருக்கிறது என்று சொன்னாலும், வெளியிலே போய் சுகாதார வேலையைச் செய்வதற்கு இயலாமல் இருக்கிறார்கள். சுகாதாரத் துறையில் கவனம் செலுத்துவதற்கு இடமில்லாமல் போகிறது. ஆகவே, பப்ளிக் ஹெல்த் டிபார்ட்மெண்ட் தனியாக இயங்கவேண்டும். அதே மாதிரி மெடிகல் டிபார்ட்மெண்ட் தனியாக
10-30 a.m.
இயங்கவேண்டும். அப்படி இருந்தால் தான் இரண்டு பிரிவுகளும் நன்றாக வேலை செய்ய முடியும். அப்படியில்லாவிட்டால், கிராமங்களிலே சுகாதாரத்தை நல்ல முறையில் நிலைநாட்ட முடியாது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஒய்வு பெற்ற டாக்டர்களை அமர்த்திவிடுவதனால், அவர்கள் உற்சாகம் இல்லாமல், வேலைகள் நல்ல முறையில் செய்வதில்லை, சுகாதாரத்தை நன்றாகக் கவனிக்க முடியவில்லை. நல்ல பயிற்சி உள்ள உத்தியோகஸ்தர்களுக்கு பதவி உயர்வு அளித்து சுகாதார விஷயங்களைக் கவனிக்கச் செய்தால், சுகாதாரம் நல்ல முறையில் காப்பாற்றப்படக்கூடிய வாய்ப்பு ஏற்படும். ஒய்வு பெற்றவர்களையும் சயன்ஸ் பட்டதாரிகளையும் தலைமையில் கொண்ட இலாகாவும் பப்ளிக் ஹெல்த் ஸ்டாப்புகளும் நாம் நினைக்கும் அளவில் காரியங்களை நடத்த முடியவில்லை. சயன்ஸ் பட்டதாரிகளுக்கு ரிசர்ச்சுக்கு அவசியம் இருப்பதால், அவர்களை ரிஸர்ச்சுக்கு அனுப்பலாம். இந்த வகையில் செய்து, இருக்கும் அதிகாரிகளுக்கு வேண்டுமானால் இன்னும் கொஞ்சம் பயிற்சி கொடுத்து, சுகாதாரத்தை நல்ல முறையிலே நடத்த அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சுகாதார விஷயத்திலே, இன்றைக்கு செங்கல்பட்டு மாவட்டத்தில் அம்மை தடுப்பு திட்டம் அமுல் நடத்தப்படுகிறது. அங்கே உடனடியாக நல்லதொரு அதிகாரிகளை நியமித்து இருந்தால் நல்லபடியாக நடந்திருக்கும். அப்படிச் செய்யாமல், இப்பொழுது 40 ஹெல்த் இன்ஸ்பெக்டர்களை திரும்பவும் நியமிப்பதாக இருந்த போதிலும், அம்மை நோய் மிகவும் தீவிரமாகப் பரவி வருகிறது. அம்மை தடுப்புத் திட்டத்தை இன்னும் ஒரு மாதகாலம் நீடித்துச் செய்யப் போகிறோம், அது நல்ல முறையிலே வேலை செய்திருக்கிறது என்று சொல்லுகிறார் அமைச்சர். அதை வரவேற்கிறேன். இது சரியாக வேலை செய்யாததற்கு தலைமை இடம் சரியாக இல்லாதது தான் என்று சொல்ல விரும்புகிறேன். கேள்வி நேரத்திலே கூடச் சொன்னேன், இதிலே பப்ளிக் ஹெல்த் ஸ்டாபை வைத்து அமுல் நடத்த வேண்டும். அப்பொழுதுதான் அது நல்ல முறையிலே செயல் படமுடியும் என்று, ஆனால் அமைச்சரவர்கள் அதைக் கவனிக்கவில்லை. இப்பொழுது தாம்பரம், திருவொற்றியூர் பகுதிகளில் அந்த நோய் வெகுவாக பதவி இருக்கிறது. உடனடியாக அதிகாரிகளைப் போட்டு, வேலை செய்ய தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த சுகாதார இலாகா நல்ல முறையிலே நடைபெற, மற்ற நாடுகளுக்கு எடுத்துக் காட்டாக இருக்க, ஒரு குழுவை அமைக்க வேண்டும். அதில் அதிகாரிகளும் மற்றும் பயிற்சி பெற்றவர்களும், இன்னும் யார் யார் அவசியமோ அவர்களையும் சேர்த்து நல்ல முறையிலே செய்யவேண்டும்.



20th March 1961] [Sri M. K. Somasundaram]

அந்தக் குழுவின் ஆலோசனைப் படி, சுகாதாரத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும். ஓய்வு பெற்றவர்களை சுகாதார அதிகாரிகளாக நியமிப்பதால் கீழே உள்ளவர்களுக்கு பதவி உயர்வு இல்லாமல் செய்து விடுகிறோம். ஹெல்த் இன்ஸ்பெக்டர்களுக்கும் நல்ல பயிற்சி கொடுத்து பதவி உயர்வு கொடுக்க வேண்டும் ; அப்படிக்கொடுத்து சுகாதார விஷயங்களை நல்ல முறையிலே கவனிக்க வேண்டும். ப்ளாக் லெவிலிலே ப்ரைமரி ஹெல்த் சென்டர்கள் இருப்பதால் ஹெல்த் இன்ஸ்பெக்டர்களுக்கு அதிகத் தேவை இருக்கிறது. ஆகவே அவர்களுக்கும் இன்னும் நல்ல பயிற்சி கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

சமீபத்திலே நார்த் ஆர்காட்டிலே ஒரு புதுவிதமான வியாதி பரவி வந்தது. 2,000-க்கு மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டு, 300, 400 பேர்கள் இறந்திருக்கிறார்கள். வியாதி கண்ட இடத்திற்குச் சென்று அஸிஸ்டெண்ட் டைரக்டர் ரிப்போர்ட்டுகள் ஏதுவும் கொடுத்திருப்பதாகத் தெரியவில்லை, எப்படி வியாதி வந்தது, அது என்ன வியாதி, அதற்குக் காரணம் என்ன, அதைத் தடுக்க என்ன நடவடிக்கை என்றெல்லாம் ஒரு ரிப்போர்ட்டும் வந்ததாகத் தெரியவில்லை. இம்மாதிரி நிலைமையில், கிராமங்களிலே பழக்கம் உள்ள, மக்களிடம் நெருங்கிப் பழகும் ஹெல்த் இன்ஸ்பெக்டர்களுக்கு ஏன் பதவி உயர்வு கொடுத்து இம்மாதிரி சந்தர்ப்பங்களிலே பயன்படுத்திக்கொள்ளக் கூடாது என்று கேட்க விரும்புகிறேன். இன்றைக்கு 46 முனிசிபாலிடிகளிலும் டாக்டர்கள் இல்லாமல் திண்டாடும் போது, ஹெல்த் இன்ஸ்பெக்டர்களுக்கு பதவி உயர்வு கொடுத்து இன்னும் காலியாகவே இருக்கும் இடங்களுக்கு ஏன் அவர்களை அனுப்புவிக்கக் கூடாது என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ப்ரைமரி ஹெல்த் சென்டர் பஞ்சாயத்து யூனியன் இந்த சுகாதாரங்களைக் கவனிக்க தனிப்பட்ட இன்ஸ்பெக்டர்களை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இன்றைக்கு டைரக்டர் ஆப் பப்ளிக் ஹெல்த் ரேஞ்ஜுகளை சர்க்காருடைய உத்தரவு இல்லாமலேயே ரத்து செய்து விட்டு ப்ரைமரி சென்டரோடு சேர்த்து விட்டதால் 20 ப்யூன்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களை ஆறு மாதம் கழித்து திரும்பவும் வேலையில் அமர்த்தி உத்தரவு இல்லாமல் செய்திருப்பதற்கு நாம் வருந்தக்கூடிய நிலையில் இருக்கிறோம். இனிமேலாவது இம்மாதிரி நடைபெறாமல் பார்த்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். பஞ்சாயத்துக் கௌன்சில்களில் இவர்களை டாக்ஸ் வசூலிக்க உபயோகிக்கிறார்கள். அப்படியானால், இவர்கள் எப்படி சுகாதார விஷயங்களைக் கவனிக்க முடியும் ? இவர்களை அப்படி டாக்ஸ் வசூலிக்க உபயோகிப்பது நல்லதல்ல. அதை உடனடியாக நிறுத்த வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் என் பேச்சை முடிக்கிறேன்.

**SRI V. K. KOTHANDARAMAN** : ஸார், இந்த மானியத்தின் பேரிலே கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். நோய் உற்று வாழும் நிலைதான் நாம் பார்க்கக் கூடியதாக இருக்கிறது இன்றைக்கு. கனம் அமைச்சர் மாணிக்கவேலர் சொல்லலாம், இந்த 10, 12 ஆண்டுகளிலே, காலரா, ப்ளேக் போன்ற தொத்து வியாதிகளை ஒழித்துக்கட்டி விட்டோம் ; மலேரியா தலைக்காட்டாத அளவுக்கு செய்து விட்டோம் என்று. அதே நேரத்தில், புதிது புதிதாக பல வியாதிகள் கிளம்பியிருக்கின்றன என்பதைப் பார்க்க வேண்டும். வருஷாவருஷம் டி. பி. போன்ற தொத்து வியாதிகளும், லெப்ரஸியும், சமீபத்திலே டைபாய்ட் போன்ற வியாதிகளும் புதுவிதமாகத் தோன்றியிருக்கின்றன. அது எப்படி வந்தது என்று கூடக் கண்டுபிடிக்க முடியவில்லை. அது போன்ற வியாதிகளை நல்ல முறையிலே தடுத்து சிகிச்சை செய்ய வேண்டுமானால் சுகாதார இலாகா நல்ல முறையிலே இயங்கவேண்டும். அதற்கு அதிகப்படியான தொகைகளை ஒதுக்கி சுகாதாரத்தைப் பாதுகாக்க வேண்டும். ஒவ்வொரு நகரத்திலும், கிராமத்திலும், சுகாதாரமாக நல்ல முறையிலே குடி தண்ணீர் முதலிய வசதிகளைச் செய்து கொடுத்தால், நலமாக இருக்கும். அந்த முறையிலே சுகாதார இலாகா இயங்குமானால் இந்த மருத்துவ இலாகா

[Sri V. K. Kothandaraman] [20th March 1961]

விற்கே அந்தத் துறையில் வேலையில்லாமல் இருக்கும். இன்றைக்குச் சுகாதார இலாகா நல்ல முறையிலே இயங்கமுடியாது என்ற நிலைதான் இருக்கிறது. அதற்கு வேண்டிய பணம் ஒதுக்கப்படவில்லை. ஆகவேதான் புதிது புதிதாக, அவசர அவசரமாக ஆஸ்பத்திரிகள் வேண்டும் என்ற கோரிக்கைகள் அதிகமாகிக்கொண்டு வருகின்றன ; அப்படித் திறந்தாலும் டாக்டர்கள் இல்லை என்ற நிலைமைதான் ஏற்படுகிறது. ஆகவேதான் நான் சில அபிப்பிராயங்களைச் சொல்ல முற்படுகிறேன்.

உடனடியாகத் தொத்து வியாதிகளைப் போக்கத் தீவிர நடவடிக்கை எடுத்தாக வேண்டும். சுகாதார இலாகாவிற்கு அதிகப்படியான பணத்தை ஒதுக்கித் தரவேண்டும். அந்த இலாகாவில் உள்ள ஸானிடரி இன்ஸ்பெக்டர்கள், ஹெல்த் இன்ஸ்பெக்டர்கள் ஒரே படிப்பும், ஒரே தரமும் உள்ளவர்களாக இருந்தாலும், அந்த டிப்பார்ட்டுமெண்டுக்குள்ளேயே பாகுபாடு செய்யப்படும் நிலை இருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். இன்றைக்கு டாக்டர்கள் கிடைக்கவில்லை என்ற நிலைமை இருக்கும்போது, நீண்டகாலமாக வேலை செய்து அனுபவம் பெற்ற ஸானிடரி ஹெல்த் இன்ஸ்பெக்டர்களை, ஹெல்த் ஆபீஸர்களாகச் செய்து அவர்கள் சுகாதார இலாகாவிலேயே வேலை செய்யும் வாய்ப்பு அளித்தால், அந்த இலாகா திறமையாக இயங்கமுடியும் என்று நம்புகிறேன். அதற்கான முயற்சிகளைச் செய்யக் கூடாதா என்று கேட்க விரும்புகிறேன்.

அதே போன்று மெடிகல் காலேஜுகளில் அதிகப் படியாக ஸ்டூடென்ட்களைக் கொண்டு சுகாதாரத்தைப் பாதுகாக்க, தக்க நடவடிக்கைகள் எடுக்க கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். சர்க்கார் ஆஸ்பத்திரிகளையும், தனியார் ஆஸ்பத்திரிகளையும் இன்றைக்குப் பார்க்கப்போனால்—உதாரணமாக வேலூர் மிஷின் ஆஸ்பத்திரியிலே மூன்று பெட்டுக்கு ஒரு டாக்டர். ஆனால் சர்க்கார் ஆஸ்பத்திரியில் 30 பெட்டுக்கு ஒரு டாக்டர். இதன்காரணமாகவே இன்றைக்கு தனியார் ஆஸ்பத்திரிகளில் உள்ள டாக்டர்கள்தான் நன்றாகக் கவனிக்கிறார்கள், நல்ல வைத்தியம் செய்கிறார்கள் என்கிற காதல் மக்களுக்கு ஏற்படுகிறதே யொழிய சர்க்கார் ஆஸ்பத்திரியில் கவனம் போதாது, டாக்டர் சரியாக கவனிப்பதில்லை என்ற அதிருப்தி, மனோபாவம் ஏற்படுகிறது. ஆகவே இந்தச் சர்க்கார் ஆஸ்பத்திரியே பிரயோசனம் இல்லை என்ற அளவுக்கு மோசமான நினைப்பு ஏற்படுகிறது என்று சொன்னால் அதற்குப் பொறுப்பு டாக்டர்கள் அல்ல. அதிகப்படியான வேலைப் பளுவை திணிப்பதன்மூலம் அவர்களால் திறம்பட வேலை செய்ய முடிவதில்லை. அதோடு ஆஸ்பத்திரிகளில் ஹானரரி டாக்டர்கள் என்று போடுகிறார்கள். இவர்கள் அப்படி ஆஸ்பத்திரிக்கு வந்து ஒரு மணி, இரண்டு மணி இருந்துவிட்டு இங்கே வரக்கூடியவர்களை தங்கள் க்ளினிக்குக்கு வரும்படி சொல்லுவதும், இங்கே மருந்து முதலியவை எடுத்து வைத்தியம் செய்துவிட்டு தனியாகப் பணம் பெற்றுக்கொள்வதும்—இப்படி பணம் பண்ண அவர்கள் பார்க்கிறார்களே தவிர மற்ற வகைகளில் அதிக கவனம் எடுத்துக்கொள்வதில்லை.

THE HON. SRI P. KAKKAN : பொதுவாகப் பேசுவது நல்லது அல்ல. எங்கே எப்படி எந்த ஹானரரி டாக்டர் இதுமாதிரி சர்க்கார் மருந்தை எடுத்து ப்ரைவேட் ட்ரீட்மெண்ட் செய்கிறார் என்று குறிப்பிட்டால் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

SRI V. K. KOTHANDARAMAN : இது என்ன ஊர் அறிந்த விஷயம். இங்கேயே இதைப்பற்றி ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள்கூடச் சொல்லியிருக்கிறார்கள். பணம் கொடுத்தால்தான் சிகிச்சை என்று வளர்ந்துபோகிற ஒரு நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு உடனடியாக தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதேபோன்று எப். என். ஒஸ்., போன்ற சிப்பந்திகள்—சுகாதார இலாகாவின் கீழ் வேலை செய்யக்கூடிய சிப்பந்திகள் இன்றையதினம் இரண்டு ஷிப்டாக 12 மணி நேரம் வேலை செய்ய வேண்டியதாக இருக்கிறது. எட்டு மணி நேரம் என்று சொல்லப்பட்டு இப்படி அவர்கள் வேலை வாங்கப்படுவது நியாயமில்லை. நியாயமாக அவர்களுக்குள்ள விடுமுறைகளை அளிப்பதோடு கூட எட்டு மணிக்கு மேல் யாரும் வேலை செய்யவேண்டுமென்பதாக நிர்பந்திக்கப்படக்கூடாது. மேலும் முன்பு இருபது முப்பது காடராக இருந்தவற்றை பே கமிஷன் ஒரே ஒரு காடராக மாற்றிவிட்டதன் காரணமாக பலபேர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இவைகளும் கவனிக்கப்படவேண்டும்.



20th March 1961] [Sri V. K. Kothandaraman]

அதேபோன்று ஆறு மாதத்திற்கு, ஒரு வருஷத்திற்குமேல் இருந்து வரக்கூடிய சிப்பந்திகளை காயம் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். நீண்டநாள் டெம்ப்ரரியாகவே யாரையும் வைத்திருக்கக்கூடாது. அதே போன்று திடீர் திடீர் என்று ஏற்படுகிற வியாதிகள் எதனால் ஏன் ஏற்படுகின்றன என்று ரிசர்ச் செய்தாக வேண்டும். அதற்காக நம் ராஜ்யத்தில் ரிசர்ச் ஹாஸ்பிடல் இருப்பதாகத் தெரியவில்லை. ஜெனரல் ஆஸ்பத்திரியில் ரிசர்ச் பிராஞ்சு ஏற்படுத்தியாக வேண்டும். அதேபோன்று பழிவாங்கப்பட்ட சிப்பந்திகள் மேலே அப்பீல் செய்துகொண்டால் உடனுக்குடன் அது பற்றி விசாரிக்கக்கூடிய நிலைமை இருக்கவேண்டும். மாதக் கணக்கில் வருஷக்கணக்கில் அதைத் தாமதப்படுத்தக்கூடாது என்பதை ஞாபகப்படுத்துகிறேன். அப்படியே மிட் ஒய்ப் டிரேயினிங் கொடுக்கப்படுகிறது. அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற ஸ்டைபண்டு தொகை 6 மாதத்திற்கு, 7 மாதத்திற்குக் கூடச் சேர்ந்தார்போல கொடுக்கப்படுவதில்லை. மாதா மாதம் அதைக் கொடுப்பதற்கு வகை செய்ய வேண்டும். மற்ற இடங்களில் எப்படியோ, வேலூரில் இதுமாதிரியாகப் பல மாதங்களுக்கு கொடுக்கப்படாமல் இருப்பது எனக்குத் தெரியும். உடனடியாக அவைகளைக் கொடுப்பதோடு மாதாமாதம் கொடுக்க ஏற்பாடு செய்தால்தான் மிகவும் வசதியாக அவர்களுக்கு இருக்கும்.

அதேபோன்று டி. பி. வியாதிக்கு ஆங்காங்கே சானடோரியம் ஏற்படுத்தி வருகிறோம். ஒவ்வொரு இடத்திலும் தொழிலாளர்களுக்குத் தனியாக வார்டு ஏற்படுத்தவேண்டும். வடாற்காடு ஜில்லாவில் சானடோரியம் கட்டுவதற்கு லட்சக்கணக்கில் செலவு செய்யப்பட்டிருந்தாலும் அந்த வேலை ஆமை வேகத்தில் நடைபெறுகிறது. அமைச்சர் இத்தனைக்கும் அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர். அவ்வேலை துரிதமாக நடைபெற வசதி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஜில்லா பிரிக்கப்பட்டு, இரண்டு கலெக்டர் வேண்டும் என்று போடப்படுகிறபோது ஏன் அங்கே இரண்டு டி. எம். ஓ. க்களை போடக்கூடாது என்றும் கேட்கிறேன். அப்போது தான் வேலை நன்றாக நடக்கும். இன்னும் நடமாடும் ஆஸ்பத்திரிகளையும் அதிகப்படுத்த வேண்டும். பிணத்தை மின்சாரத்தைக்கொண்டு எரிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* SRI S. RANGANATHA MUDALIAR : Mr. Chairman, Sir, while supporting both these Demands, I want to focus the attention of the Government on three matters. Firstly, the slum problem and the water-supply problem facing the City, secondly, want of co-ordination between the Health Assistants and the Medical Assistants working in the Primary Health Centres and thirdly the difficulties experienced by the Medical Graduates coming from the recently transferred Tiruttani area in getting admission to medical service in this State.

Sir, with regard to slum problem, it is a very serious problem facing our City. The City population has increased in rapid strides; not only the indigenous population but large influx of people coming from rural side swell the population of this City. This is due to the temptation to earn increased wages on account of the concentration of industrial enterprises both in the City and in the surrounding parts of the City. The tempo of slum expansion is phenomenally alarming and it has a demoralising effect.

[Sri S. Ranganatha Mudaliar] [20th March 1961

The two Five-Year Plans have not successfully tackled this slum problem. These rustic migrants from rural areas after coming to the City have found themselves in an altogether new environment where they have adopted modes of City life with all their implications, viz., higher living, increased wages, etc. After settling themselves, these slum dwellers have become the clientele of various labour organisations. They are taught rights more than obligations, and they are taught many other things which they did not know before. This problem requires the urgent attention of the Government.

As regards the question of water-supply, the problem is very serious. The existing quantity of water-supply to the City was based upon the data furnished as early as 1911 by Mr. Madely, when he was connected with the Corporation. At that time he estimated that after 50 years the population of the City would be 10 lakhs, i.e., at the end of 50 years from that date. Accordingly, Mr. Madely had put up designs for comparatively smaller mains to carry water. But the population of the City now is 20 lakhs and the system founded by him is not able to cope with the demand of double the population. I request that the Government should go into the question fully.

There is no adequate water-supply. There can be no gainsaying that. Nevertheless there is a proposal for zonal distribution of water at a cost of Rs. 75 lakhs which has been approved by Government. It is not known how much of this amount of Rs. 75 lakhs has already been spent. When there is no adequate supply of water, I do not know what use could be made of this zonal system of distribution.

In 1954 or so, the South Madras Trunk Mains were laid for Kilpauk, Mylapore, Tyagarayanagar and Adyar at a cost of Rs. 30 lakhs. We do not know whether the mains are now working and what is the experience of the Corporation and whether the expectations of the Corporation have been realised and whether the residents in those areas get adequate supply of water. Without collecting adequate data regarding South Madras Trunk Mains they have started North Madras Trunk Mains to cover the George Town area. The work seems to be in progress and the cost would come to Rs. 30 or Rs. 40 lakhs. The question is whether this work is justified without getting the experience of the working of the South Madras Trunk Mains. One would like to know also the sort of co-ordination existing between Zonal Distribution Scheme and the Trunk Main Schemes. I think the planning must be defective and this is a matter which requires immediate consideration of the Government.

The Corporation and the Government have been making a lot of experiments and thinking of so many measures to augment the City water-supply. One scheme under contemplation is diversion of the Cauveri water to increase water-supply to the City. But we must realise that the Cauveri has been tapped to its utmost limits. Already there is complaint that the tail-end of the Cauvery delta is



20th March 1961] [Sri S. Ranganatha Mudaliar]

not receiving adequate supply of water for irrigation purposes. When that complaint is there, how is it possible to divert Cauveri water to a distant place like Madras City? Suppose we bring the water to the City. What about the riparian ownership of the people living in intermediate areas? Are we going to deny them that water for irrigation purposes? Are we going to prevent them from using the Cauveri waters for irrigation purposes. Moreover the scheme is a costly one. As it is Tanjore and Trichy are the granaries of Tamilnad. If by diverting Cauveri waters to augment the water-supply in the City we are going to cut down the irrigation facilities of these two districts, then we will be killing the goose laying the golden eggs.

THE HON. SRI M. A. MANICKAVELU: There is misunderstanding. Water is proposed to be taken from the Cauveri without infringing the irrigation rights of the ayacutdars there.

* SRI S. RANGANATHA MUDALIAR: The question is whether water will be sufficient. That is for Government to consider. If Government should think that there is plenty of water which could be supplied and that the people in Trichy and Tanjore are not going to be affected and if there are no complaints from those areas, then we welcome bringing of the Cauveri waters to augment the water supply to the City. (The Hon. Sri M. A. Manickavelu: There are no complaints.) There is no doubt that it is going to be costly scheme. Before we think of diverting the Cauveri waters, why not Government think of exploiting the artesian flow in the Neyveli belt extending from Pondicherry to Rameswaram. If we exploit the artesian flow in the Neyveli belt, we could get plenty of water. That scheme will be less costly than the diversion of the Cauveri waters to Madras City. That is a matter which deserves consideration of the Government.

Before we think of these costly schemes, there are first-aid measures which can be adopted. The Hon. Minister for Health might know that during World War II, Red Hills was used as a sea-plane base and there were naval camps round about that. The lake had got silted up. Since then no attempt has been made to de-silt the lake. Steps might be taken to deepen it so as to create fresh springs to augment the water-supply to the City. During the rains, the Kortallayar river overflows over the Tambarampakkam anicut. A lot of water is wasted. This water may be impounded by raising the level of the anicut or by providing falling shutters or by improving the regulators. This will contribute more supply to the supply channel leading to Cholavaram tank which will be helpful to the City of Madras. Mostly the water from Satyamurthi Sagar is flowing to Red Hills. More than half the water is lost either by evaporation or percolation. Water must be let through reinforced concrete pipes. If immediate measures are taken and these matters are attended to, I think without going in for the costly scheme of diverting the Cauveri waters to the City or exploiting the artesian flow in Neyveli belt, we can have plenty of water to augment the water-supply to the City.

[Sri S. Ranganatha Mudaliar] [20th March 1961

We have been promised with an atomic power plant in our State and when I asked a question today whether we would have enough water for the purpose of cooling in case we have an atomic plant, the Hon. Minister for Electricity replied that there is no water problem in our State. The starting of an atomic plant is in womb of the future. If we are going to have an atomic plant, we must have millions and millions of gallons of fresh water for coooling. There is plenty of sea-water. But the question of converting sea water into fresh water . . .

TEMPORARY CHAIRMAN (SRI K. SATTANATHA KARAYALAR) : The hon. Member has already exceeded the time-limit.

SRI S. RANGANATHA MUDALIAR : Two minutes more, Sir. The difficulty experienced by medical graduates from our area presents a serious problem. They are like Anglo-Indians whom Britain did not own and the Indians did not want. The Andhra Pradesh Government does not want them. Madras State does not own them. One or two candidates who appeared before the Public Service Commission were heckled that their parents were practising in Andhra. They are people who belong to the soil of this State. Their properties, their affiliations and their interests are in this State. Simply because their parents are still serving in Andhra, these candidates should not be put to difficulties. It
11 a.m. is not possible all of a sudden for an Advocate to close his business in Andhra and come and settle here. For that, their sons should not be put to difficulties. It is unfortunate that on one or two occasions when I had been to see 'Thayumanavar' for an interview on behalf of these people, I could not see him because he was on tour. This is a matter which requires the kind and motherly attention of our 'Thayumanavar'.

* SRIMATHI A. SUARES : Mr. Chairman, while supporting the Demand for 5,51,96,400 under the head " Medical ", I wish to make a few observations on the needs of our City hospitals. We are aware that in almost every hospital the actual number of patients exceeds the bed strength by one or more hundreds. In the Kasthurba Gandhi Women and Childrens' Hospital, Tripiicane, the sanctioned bed-strength is 525 but the actual number of patients is more than 700. In the R.S.R.M. Hospital at Rayapuram, the sanctioned bed strength is 275 but the actual number of patients is about 360.

(Mr. Speaker in the Chair.)

The demand for the admission is great and the patients especially the poor are in dire need of hospitalisation. So they cannot be refused admission on the ground that there are no spare beds. They are prepared to lie on the floor not only between two cots but even under the cots. When we consider that the actual strength exceeds the sanctioned strength by a few hundreds, we have to consider the problem whether the sanctioned staff can



20th March 1961] [Srimathi A. Suares]

cope with the additional work without undue strain. Doctoring and nursing cause great strain and if this strain continues as a permanent feature, either the health of the staff will be impaired or the quality of work will deteriorate.

I wish to put forward some details about conditions in the Childrens' Block of Kasturba Gandhi Hospital, Triplicane, to illustrate my point. The children are housed in a fine three-storeyed block. The sanctioned bed strength is 68 but the actual number is 150 which is more than double the sanctioned bed strength. The out-patients of children alone number about 500. There are only 2 paid assistants and one honorary doctor. The senior paid assistant works from 7 a.m. to 3 p.m. Besides the normal work, she has also to attend to the administrative work of the Childrens' section. The second paid assistant has to do additional duty in the labour ward. She is absent from the Childrens' ward either from 7 a.m. to 12 noon or from mid-day to next morning. The third assistant who is honorary is expected to work only for three hours a day. From this distribution of work it will be seen that there may be only one doctor on duty for some hours in the morning and this doctor single-handed has to attend to the out-patients who number 500, make her rounds, attend to bed cases in the wards and do the admniistrative work as well. It is a fact that there are two house surgeons for the Childrens' Block. They are changed every two months, so there is no continuity of work. They have to attend the casualty ward and labour ward work. So they are able to do only little work in the Childrens' Block. This block has only two staff nurses assisted by three probationers. The probationers have to attend classes for one or two hours at a time. The second storey, the topmost floor has most acute cases about 80 or 90 in number. They need the attendance of a qualified nurse all the time. Even this is insufficient as one nurse cannot attend to 90 children. The next floor, the surgical ward has 40 patients. It also requires a qualified full-time nurse. Besides that there is the ground floor. The probationers cannot be put in sole charge of all these cases.

The out-patient work in the Childrens' Section is very heavy. It is reported that this is the largest number of children out-patients in the City, i.e., in Triplicane Hospital. In the General Hospital the children are sent to various special departments. But in this hospital all the children have to be attended to by one doctor or at most by two doctors. So I feel that the Childrens' Block in Kasturiba Gandhi Hospital needs one more doctor and one more staff nurse.

There are facilities in this hospital for the convalescent children. There is a health visitor and a visiting nursery teacher from the Guild of Service. I request that these facilities may be extended and improved by inviting donations of toys from social workers and philanthropists, providing their room with attractive pictures, flowers and curtains so that the atmosphere will be congenial to the convalescing children.

[Srimathi A. Suares] [20th March 1961

It appears that the provision of reserve doctors for the whole State is inadequate to meet the leave vacancies in each hospital. In the Kasturba Gandhi Hospital alone 4 doctors are absent this month. Two doctors are on leave and 2 Anaesthetists have resigned. The existing doctors have to give anaesthesia till a new Antesthetist joins duty after training.

Another hospital in the City, the R.S.R.M. Hospital in Royapuram is in urgent need of a steam laundry. This hospital occupied its new premises five years ago and is growing rapidly. The number of deliveries per year has risen to 11,000 as against 13,000 in the Women and Children Hospital, Egmore. Every big hospital in the City has been provided with a steam laundry. This is a necessity and not a luxury. Without a steam laundry, the hospital has to make use of ordinary dhobis. When there are thousands of pieces to be washed every day, the enormity of the work to be done by old-time methods can well be imagined. During the monsoons, without a drying chamber, it will be impossible to change linen as frequently as it should be done. With a steam laundry, linen can be changed every day or two. There are two small plots adjacent to the R.S.R.M. hospital, which can be requisitioned for the purpose of setting up a steam laundry. One is a slum and the other is a small school. If this great need is borne in mind, the scheme could be included in the second year of the Third Five-Year Plan and the preliminary work like requisitioning of the land, ordering for machinery can be done in the coming official year, in 1961-62 itself.

In this hospital also there is shortage of nurses. Two head nurses' posts are vacant for a long time. Shortage of nurses in maternity wards is a very serious matter. If nurses are short it may happen that just at the time of delivery no nurse would be available thus endangering the life of the mother or the new born babe. The question of adequacy of doctors and nurses may be examined in all hospitals for as I have stated before, the staff sanctioned is for the sanctioned bed strength and not for the actual numbers etc.

In the Third Five-Year Plan there are many new schemes like the opening of a new Mental Hospital at Madurai, construction of new hospitals or new wards in many hospitals, construction of quarters for doctors and nurses, provision of ambulance vans for every district hospital.

I wish to congratulate Government and the Medical Department on their success in carrying out the schemes included in the First and Second Plans. With the implementation of the schemes in Third Plan, there will be much greater relief to the suffering public in the Madras State.

* **SRI S. RAMASAMI THEVAR** : சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த மான்யத்தின் பேரில் கொண்டுவரப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நமது நாட்டில் பொதுவாக, மருத்துவம், பொது சுகாதாரம்



20th March 1961] [Sri S. Ramasami Thevar]

இவைகளில் சிறிது முன்னேற்றம் அடைந்திருந்தாலும்கூட பக்கத்து நாடுகளில் எந்தளவு முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள் என்று பார்க்கும்போது, இங்கு நம் நாட்டில் அந்தளவு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். முக்கியமாக மலேயா, இலங்கை போன்ற நாடுகளுக்கு இங்கிருந்து நாம் போகவேண்டியிருந்தால் போவதற்கு எட்டு நாட்களுக்கு முன்னரே ஊசி, அம்மை போன்றவை வைத்துக் கொண்டு செல்லவேண்டியிருக்கிறது. அப்படிச் செய்யாவிட்டால் நம்மை அங்குபோக அனுமதிப்பதில்லை. ஆனால் அங்கிருந்து வருகிறவர்களுக்கு அப்படிஒன்றும் கிடையாது. அதிலிருந்தே நாம் அவர்களை விட பின் தங்கியிருக்கிறோம் என்பதை எடுத்துக்காட்டுகிறது. இதை, நமது அரசாங்கம் உணர வேண்டும்.

இப்போது அரந்தாங்கி தாலூகாவில் ஒரு ஆசுபத்திரி இருக்கிறது. அது லோக்கல் ஆசுபத்திரியாக அதாவது வெறும் ஒரு டிஸ்பென்ஸரியாகவே இருந்து கொண்டிருக்கிறது. அதை தாலூகா ஹெட் குவார்ட்டர்ஸ் ஆசுபத்திரியாக மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டோம். அதற்கான இடத்தையும் வந்து பார்த்தார்கள். இதுவரை அது ஏற்பட்டதாக தெரியவில்லை. நோயாளிகள் வந்தவண்ணம் இருந்து கொண்டிருக்கிறார்கள். இத்தனைக்கும் ஒரே ஒரு டாக்டர் தான் இருக்கிறார். நோயாளிகளுக்கு குறைவே இல்லை. தினமும் நூற்றுக்கணக்கானவர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். ஒரே ஒரு டாக்டரும் ஒரே ஒரு கம்பவுண்டரும் தான் இருக்கிறார்கள். அவர்களும் மனிதர்கள்தானே, எல்லோருக்கும் ஏற்படும் களைப்பு அவர்களுக்கும் ஏற்படத்தான் செய்யும். இதன் காரணமாக எல்லோருக்கும் நல்ல முறையில் வைத்திய வசதி கிடைப்பதில்லை. அதோடு ஒரு லேடி டாக்டர் வேண்டும் என்று கேட்டிருந்தோம். அது இதுவரையிலும் கவனிக்கப்பட்டிருப்பதாக தெரியவில்லை. அதை சர்க்கார் உடனடியாக கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

அடுத்தபடியாக, பொன்பேத்தி என்ற இடத்தில் ஒரு ஹெல்த் சென்டர் ஏற்படுத்தவேண்டுமென கேட்டிருந்தோம். அங்குள்ள மக்களில் 100-க்கு 70 பேர்கள் சோகை பிடித்தவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்குப் போதிய குடி தண்ணீர் வசதி கிடையாது. அங்குள்ள மக்கள் குளத்துத் தண்ணீரைத்தான் குடிக்க வேண்டியிருக்கிறது. கிணறு தோண்டினாலும் நல்ல தண்ணீர் கிடைக்காது. நீர் உப்பாயிருக்கும். இதன் காரணமாக குளத்துத் தண்ணீரை குடிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அதே குளத்தில் தான் ஆடுமாடுகளையும் எருமை முதலியவைற்றையும் கழுவுகிறார்கள். இதன் காரணமாக அங்குள்ள மக்கள் இந்த அசுத்த தண்ணீரைத்தான் குடிக்கவேண்டியிருக்கிறது. ஆகவே அந்தப் பகுதி மக்களுக்கு குடி தண்ணீர் வசதி செய்து கொடுத்தாலன்றி (புரோட்டக்டட் வாட்டர் சப்ளை) அங்குள்ள மக்கள் வாழ முடியாது. ஆகவே இந்த சர்க்கார் உடனடியாக இதில் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் அந்தப் பகுதியில் தொத்து நோய்கள், அதாவது அம்மை, சீதபேதி போன்ற நோய்கள் ஏற்படும் போது அங்குள்ள அதிகாரிகள் அதை சர்க்காருக்கு உடனடியாகத் தெரிவிப்பதில்லை. அங்குள்ள மக்களும் பயந்து போய் அதை சர்க்காருக்குத் தெரிவிப்பது இல்லை. ஆகவே இம்மாதிரி நோய்கள் ஏற்படும்போது உடனடியாக தடுப்பு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, கனம் சுப்பிரமணியம் அவர்கள் சிங்கிப்பட்டி ஆசுபத்திரியில் வேலை நடந்து வருவதைப்பற்றி குறிப்பிட்டார்கள். அந்த ஆசுபத்திரிக்கு போதிய அளவு கிராண்ட் கொடுக்கவேண்டும். போதிய அளவு கிராண்ட் கொடுக்காவிட்டால் அந்த ஆசுபத்திரியை நடத்த முடியாது. ஆகவே சர்க்கார் தயவுசெய்து அதற்கு ஒரு தொகை ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதோடு மட்டுமல்ல, இன்றைக்கு ஆசுபத்திரிகளில் போய் சிகிச்சை பெற வேண்டும் என்றால், அதற்கும் சிபாரிசு வேண்டியிருக்கிறது. முன்னால் சர்க்கார் ஆசுபத்திரிகளை தர்ம ஆசுபத்திரிகள் என்று சொல்வதுண்டு. இப்போது அந்த நிலை இல்லை. தர்ம ஆசுபத்திரி என்பது இப்போது பண ஆசுபத்திரியாக மாறிவிட்டது. அந்த அளவுக்கு போகாதபடி

நல்ல முறையில் மருத்துவம் நடக்கின்ற அளவில் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று சர்க்காரை கேட்டுக்கொள்ளுகிறேன். இன்றைய நிலையில் ஆசுபத்திரிகளில் இருக்கின்ற மருந்துகள் எல்லாம் போதாது, அதோடு அங்கு கொடுக்கப்படும் மருந்துகளை எல்லாம் விற்றுவிடுவதாகவும் சொல்லப்படுகிறது. இந்த நிலையும் போக வேண்டும். இம்மாதிரியான குறைபாடுகளை எல்லாம் நீக்கி மக்கள் எல்லாம் நல்ல முறையில் வாழக்கூடிய நிலைமையை உண்டுபண்ண வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

* **Sri N. R. THIAGARAJAN** : கனம் தலைவர் அவர்களே, இப்போது விவாதத்தில் இருக்கும் மெடிக்கல் டிபார்ட்மெண்டால் வெளியிடும் அட்மினிஸ்ட்ரேஷன் ரிப்போர்ட் ஏதாவது இருக்குமா என்று இரண்டு மூன்று இடங்களில் போய் பார்த்தேன், லைபரரியிலும் போய்ப் பார்த்தேன். அங்கும் இல்லை, அதே போன்று ஹெல்த் டிப்பார்ட்மெண்ட் அட்மினிஸ்டிரேஷன் ரிப்போர்ட்டையும் காணவில்லை. இம்மாதிரியான ஒரு ரிப்போர்ட் வெளியிடுவதற்கு இந்த டிப்பார்ட்மெண்ட்க்கு ஹெல்த் சரி இல்லையா என்றுதான் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. இது இல்லாததின் காரணமாக என்னிடமுள்ள பல விஷயங்களைப்பற்றி ஒன்றும் அறிந்து கொள்ள முடியாத நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறேன். இன்றைக்கு ஏதோ இந்த இலாகா சம்பந்தப்பட்ட விஷயங்களை டைப் செய்து கொடுத்திருக்கிறார்கள். மற்ற டிப்பார்ட்மெண்ட் விஷயங்கள் எல்லாம் புத்தக ரூபத்தில் நன்றாக அழகாக அச்சிட்டு கொடுத்தார்கள். அதுவும் டைப் செய்து கொடுத்திருக்கும் இந்தப் பேப்பர் இதோ என் கையில் இருக்கும் இந்தப் பேப்பரும் ஒரே மையாக இருக்கிறது. குட்டையை குழப்பிவைப்பது போன்று இருக்கிறது இது. ஹெல்த் டிப்பார்ட்மெண்டுக்கு ஹெல்த் சரியாக இல்லையோ என்னவோ தெரியவில்லை. இந்த இலாகாவின் மீது நான் இரண்டு தடவை பேசி இருக்கிறேன். அந்தச் சமயத்தில் கூறின விஷயங்கள் எல்லாம் கவனிக்கப்பட்டிருக்குமானால், அல்லது அதைப்பற்றி அதிகாரிகளோ அல்லது அமைச்சர் அவர்களோ படித்துப்பார்த்திருப்பார்களேயானால் நான் இப்போது பேச வேண்டிய சந்தர்ப்பமே வந்திருக்காது. ஏனென்றால் நான் கேட்டிருந்த காரியம் ஒன்றுமே நடக்கவில்லை. என்னுடைய தொகுதியில் 3 லட்சம் மக்கள் வாழ்கிறார்கள். அமைச்சர் அவர்கள் சற்று தயவு செய்து கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதற்கு முன்னால் பேசியதை கவனிக்கவில்லை என்று தெரிவதால் இதையாவது சற்று கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நமது ராஜ்யத்தின் ஜனத்தொகையில் 100-ல் ஒரு பங்கு இது. இரட்டை மெம்பர் கொண்ட எனது தொகுதி 1,000 சதுர மைல்கள் கொண்டது. நமது ராஜ்யத்தின் விஸ்தீரணத்தில் 50-ல் ஒரு பங்கு. நாம் இந்த இலாகாவுக்கு என்று நாலைந்து கோடி ரூபாய் ஒதுக்குகிறோம். ஆனால் என்னுடைய பகுதிக்கு இதில் ஒன்றுமே வந்ததாக தெரியவில்லை. இந்தப் பகுதியில் இரண்டு லோக்கல் பண்டு ஆசுபத்திரிகள் இருக்கின்றன. இவைகளில் உருப்படியாக டாக்டர்கள் இல்லை. இதை யாரும் கவனிப்பதும் கிடையாது. அரசாங்கத்தில் கேட்கும்போது இது ஜில்லா போர்ட் சம்பந்தப்பட்ட விவகாரம் என்று சொல்லிவிடுகிறார்கள். அங்கு நல்ல கம்பவுண்டர் கூடக் கிடையாது. எம். என்.ஓ., எப்.என்.ஓ. என்ற இரண்டு பேர்கள் இருந்து கொண்டு கலர் தண்ணீரை கலக்கி மக்கள் வாயில் ஊற்றிக் கொண்டிருக்கிறார்கள். எனது சொந்த இடமான தேனீ என்பது 25 ஆயிரம் மக்கள் கொண்ட ஒரு இடம். இதைச் சுற்றி 10 மைல்களுக்கு எந்த ஆசுபத்திரியும் கிடையாது. இதைப் பற்றி ஆயிரம் முறை வலியுறுத்திக் கூறியிருக்கிறேன். ஆசுபத்திரி என்றால் என்ன என்றே அடையாளம் தெரியாத மக்களாக அங்குள்ள மக்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். அங்கு ஆசுபத்திரி இருக்கிறதா என்பதை விசாரித்தறிந்து ரிப்போர்ட் அனுப்ப கேட்டுக் கொண்டதற்கு அங்குள்ள யாரோ ஒரு மட சாம்பிராணி அங்கு ஆசுபத்திரி இருக்கிறது என்று ரிப்போர்ட் அனுப்பியிருக்கிறார்.. . .

**Mr. SPEAKER** : மடசாம்பிராணி என்று சொல்வது பார்லிமெண்டரி முறையல்ல. ஆகவே அதை உபயோகிக்க வேண்டாம்.





**Sri N. R. THIAGARAJAN** : அமைச்சர் அவர்களே அன்றைக்கு ஒரு நாள் அவ்விதம் உபயோகித்திருக்கிறார்கள். . .

**Mr. SPEAKER** : அமைச்சர் அவர்கள் சொன்னார்களா என்பதை நான் பார்த்துக்கொள்ளுகிறேன், அன்றைக்கு நான் இங்கு இல்லை. இப்போது அவ்விதம் சொல்லக்கூடாது என்று சொல்கிறேன்.

**Sri N. R. THIAGARAJAN** : அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதும் தவறு என்றால் சரி, நான் அவ்விதம் குறிப்பிடவில்லை யாரோ புத்தியில்லாத ஒருவர் அங்கு பெண்கள், குழந்தைகள் இவர்களுக்கு என்று இருக்கும் ஓர் கிறிஸ்தவ பிரைவேட் ஆசுபத்திரியைப் பார்த்து விட்டு அங்கே ஓர் ஆசுபத்திரி இருக்கிறது என்று ரிப்போர்ட் அனுப்பி விட்டார் பெண்கள்—குழந்தைகள் ஆசுபத்திரி என்று கொட்டை எழுத்தில் எழுதி போட்டிருக்கிறது. அங்கே ஆண்கள் யாரும் போக முடியாதது மட்டுமல்ல, பெண்கள் கூட ஐந்து ரூபாய் கையில் இருந்தால் தான் அங்கே நுழைய முடியும். ஆகவே இதை வைத்துக் கொண்டு அங்கு ஆஸ்பத்திரி இருக்கிறது என்று கணக்கில் எடுத்துக்கொள்ளமுடியாது. அது மட்டுமல்ல, ஜில்லா டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டத்தில், நிலக்கோட்டை தாலுகாவிலுள்ள ஆசுபத்திரியை சர்க்கார் ஆசுபத்திரியாக மாற்றப்போவதால் அந்த இடத்திலுள்ள ஆசுபத்திரியை எங்கள் ஊருக்கு கொண்டு வர வேண்டும் என்று தீர்மானம் போட்டு அனுப்பியிருந்தோம். தீர்மானம் போட்டது இன்று, நேற்று, தீர்மானங்கள் போட்டு மூன்று வருடங்களாகிறது. அந்தத் தீர்மானம் டி.எம். எஸ். ஆபீசுக்கு வந்ததா என்று இன்னும் தெரியவில்லை. போடி எம். எல்.ஏ. அவர்கள் இதோ இருக்கிறார்கள், அவர்களும் இருக்கும் பொழுது போன மாதமே தீர்மானம் போட்டு, அதை அனுப்பிவிட்டோமென்று கலெக்டர் அவர்கள் தெரிவித்தார்கள். டி.எம்.எஸ். ஆபீஸில் போய்க்கேட்டால் வரவில்லை என்று சொல்லுகிறார்கள். சரி தொலைந்து போகட்டும், இந்தத் தீர்மானம் வரவில்லை என்று சொன்னாலும் கூட, எங்கள் பகுதியில் பிளாக் இருக்கிறது, ஆண்டிப்பட்டி என்று பிளாக்கின் பெயர். பிளாக் மூலம்தான் பிரைமரி ஹெல்த் சென்டர் அமைக்கப்படும் என்று அமைச்சர்களும் அதிகாரிகளும் கூறுகிறார்கள். இந்த முறையில் ஒரு சென்டர் ஆண்டிப்பட்டி பிளாக் ஏரியாவில் ஏற்படுத்த வேண்டும் என்று தீர்மானம் போட்டு நான்கு ஆண்டுகள் ஆகின்றன. அது என்ன ஆயிற்று என்றே தெரியவில்லை, அதே போல்தான் கண்டமநாயக்கனூர் என்ற இடத்திலும் ஒரு சென்டர் ஏற்படுத்த வேண்டும் என்று தீர்மானம் போட்டோம். அதுவும் என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. கிராமங்களுக்கு டாக்டர்கள் வருவதில்லை என்று சொல்லப்படுகிறது. நகரங்களை போன்று கிராமங்களில் டாக்டர்களுக்கு கொள்ளையடிக்க முடியாது. அதனால் தான் வர பயப்படுகிறார்கள் என்று எண்ண வேண்டியிருக்கிறது. இந்த இலாகாவில் அதிகாரிகள் என்று சொல்லக்கூடிய டாக்டர்கள் பொதுமக்களை கொள்ளை அடிப்பதற்காகவே வாழ்ந்து வேலை செய்து கொண்டு வருகிறார்கள். இந்த முறையில் இந்த இலாகாவே சரியாக நடப்பதில்லை. மிகவும் மோசமாக இருக்கிறது. பல இடங்களிலும் பணம் வாங்குவதற்கு ரசீது கொடுப்பதில்லை, என்னிடமே பணம் வாங்கிக் கொண்டு ரசீது கொடுக்கவில்லை என்றால், பாமர மக்களிடம் இவர்கள் எவ்வாறு நடந்து கொள்வார்கள் என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் நன்றாக ஆராய்ந்து பார்க்கவேண்டும். டாக்டர்கள் இல்லை, அதனால்தான் ஆசுபத்திரிகளை ஏற்படுத்த முடியவில்லை என்று சொல்லலாம். அல்லது பணம் இல்லை என்று கூறமுடியாது, அல்லது மனம் இல்லை என்று சொல்லலாம். கனம் நிதி அமைச்சர் அவர்கள் பணம் இல்லாததற்காக எந்த திட்டத்தையும் விட்டுவிட மாட்டோம் என்று சொன்னார்கள். அப்படியானால் மனம் தான் இல்லையா, அல்லது டாக்டர்கள் இல்லை என்ற குறைதானா ? அப்படியானால் புதிதாக மெடிக்கல் காலேஜ்கள் திறந்தோமே அதன் பலன் என்ன ? அந்த டாக்டர்கள் எல்லாம் எங்கே போகிறார்கள் ? இந்திய பிரதம மந்திரி அவர்கள் சொல்லியிருப்பது போல் இவர்கள் கட்டாயம் கிராமப் புறங்களில் போய் சேவை செய்ய வேண்டும் என்று ஏன் கட்டாயத்தை கொண்டு வரக்கூடாது ? மதுரை

[Sri N. R. Thiagarajan] [20th March 1961]

யிலுள்ள காலேஜில் படிக்கும் மாணவர்களைப்பார்த்து கிராமங்களில் போய்சேவை செய்ய வேண்டும் என்று அமைச்சர் கூறினார். இதன் பிரகாரம் அவர்கள் கிராமங்களுக்குச் சென்ற போது, இந்த வைத்திய இலாகாவிலுள்ள அதிகாரிகள் இவர்களிடம், எம்.எம்.ஸி. அதாவது மதுரை மெடிக்கல் காலேஜ் என்று மட்டும் வைத்துக் கொள்ளாதீர்கள், எம்.எம்.ஸி என்பது "மணி மேக்கர்ஸ் காலேஜ்" என்று எண்ணிக் கொள்ளுங்கள் என்று சொன்னதாக அறிந்தேன். அப்படியானால் மட்ராஸ் மெடிக்கல் காலேஜையும் "மணி மேக்கர்ஸ் காலேஜ்" என்று தான் சொல்ல வேண்டும். இவ்விதம் கிராமங்களில் போகின்றவர்களையும் நிறுத்திவிடுகிறார்கள். இது போன்று நூற்றுக்காணக்கான நிகழ்ச்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன. கட்டிய மனைவியிடம் மறந்து போய் மருந்து கொடுத்துவிட்டு பணம் கேட்ட டாக்டர்கள் இருந்து வருகிறார்கள். பெற்ற மகனுக்கு பிளாஸ்திரி போட்டுவிட்டு பில் கொடுத்த டாக்டர்கள் இருந்து வருகிறார்கள். அப்பாவிடம் போய் அம்மாவுக்கு உடம்பு சரியில்லை, வீட்டுக்கு வரவேண்டுமென்று ஒரு குழந்தை கதறிக்கொண்டு கேட்டபோது கவனிக்காமல், இருக்கிறதா ரூ. 25 என்று ஒரு டாக்டர் கேட்டாராம். உடனே குழந்தை வீட்டுக்குப்போய் சொன்னதும், வீட்டு வேலைக்காரி ஓடி வந்து "அம்மா என்றால் யாரோ அல்ல, உங்கள் பெண்டாட்டி" என்று சொன்னவுடன் "ஐயையோ, என் பெண்டாட்டியா" என்று கதறிக்கொண்டு ஓடிப்போய்ப் பார்த்தால் அவள் இறந்துவிட்டிருந்தாள். இன்னொரு டாக்டர் மகனுக்கு பிளாஸ்திரி போட்டுவிட்டு அவனிடம் பில்லைக் கொடுத்ததும் "அப்பா நான் உங்கள் மகன்" என்று சொல்ல, அதற்கு அவர் "யாராயிருந்தாலும் ரூ. 10" என்று சொன்னாராம். இப்படி டாக்டர்கள் கல்நெஞ்சர்களாக அமைந்திருக்கிறார்கள். டாக்டர்களுக்கு இலவசமாக கல்வி கற்றுக்கொடுங்கள். இலவசமாக கல்வி கற்றுக்கொடுப்பதன் மூலமாக அவர்களுக்கு இளகிய மனம் வரட்டும். இலவசமாக வைத்தியம் கற்றுக் கொடுத்து நீங்கள் சர்க்காரில் உத்தியோகம் செய்ய வேண்டும் என்று உத்திரவு போடுங்கள். அதை விட்டுவிட்டு வைத்தியக் கல்விக்காக செலவழிக்கக் கூடிய தொகை அதிகமாக இருக்கிறது என்று அதை அவர்கள் பின்னால் கொள்ளை அடிப்பதற்கு வழி செய்யும் வகையில் செலவு ஏற்படுகிறது, அதை மாற்ற வேண்டும்.

அதைத் தவிர ஹெல்த் டிப்பார்ட்மெண்டை எடுத்துக் கொள்வோம். அதில் குடி தண்ணீர் இருக்கிறது. குடி தண்ணீர் திட்டத்தை இந்த டிப்பார்ட்மெண்டோடு சேர்த்திருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் 5 ஆண்டுகளாக ஓவர் ஹெட் டாங்க் வேண்டுமென்று சொல்லி வருகிறோம். 1956-ம் வருஷம் மனு வந்து, பரிசீலனையில் இருக்கிறது என்று இங்கே கூறப்படுகிறது. இப்படி 5 ஆண்டுகள் இருக்கலாமா ஒரு மனு. அமைச்சர் அவர்கள் குறைந்த பட்சம் மூன்று ஆண்டுகள் ஆகும் என்று சொன்னார்கள். மக்களுக்கு எவ்வளவு சீக்கிரத்தில் குடி தண்ணீர் வசதி அளிக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் அமைத்துக் கொடுக்க வேண்டும். என்னுடைய ஊரில் நான் தலைவராக இருக்கக்கூடிய கூட்டுறவு நாணய சங்கம் ஓவர் ஹெட் டாங்க் வேண்டுமென்று மனுச் செய்து கொண்டிருக்கிறது. இதைப் பற்றி டிபார்ட்மெண்ட் செக்ரட்டரியைப் பார்த்தேன், எக்ஸிகூடிவ் என்ஜினியரைப் பார்த்தேன்—ஆனால் ஒன்றும் நடந்ததாகத் தெரியவில்லை. ஆகையால் இந்தத் திட்டங்களையெல்லாம் நிறைவேற்றவேண்டும் என்று சபா நாயகர் மூலமாக கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே கூறினார்கள் பெயரைப் பற்றி பெருமையாக. 1937-ம் ஆண்டு ஜனவரி மாதம் மகாத்மா காந்தி அவர்கள் உப்பு சத்தியாக்கிரகத்தை ஆரம்பித்த காலத்தில் நான் இந்த சத்தியாக்கிரகத்தில் பங்குகொள்ள வேண்டுமென்று என் தந்தையிடம் சென்று கேட்டேன். அவர் இதில் சேரக் கூடாது என்று சொன்னார். சுயமரியாதைக்காரர் அவர். உடனே நான் எனது பெயரை என் தியாகராஜன் என்று வைத்தீர்கள், சாப்பாட்டு ராமன் என்று வைத்திருப்பதுதானே என்று கேட்டேன். அதற்கு அவர் "அப்படியா, பெயரின் புகழ்த் தன்மையை காப்பாற்றிக் கொள்ளப் போகிறாயா, அப்படியானால் செல்" என்று சொன்னார். பெயரின் புனிதத்



20th March 1961] [Sri N. R. Thiagarajan]

தன்மையைக் காப்பாற்ற சிறை சென்றேன், செக்கிழுத்தேன், கல்லுடைத்தேன். சிவபெருமான் எப்படி ஒரு ஏழைக்குத் தாயாக இருந்து உதவினாரோ அந்த வகையில் இந்த இலாகா உதவும் நிலையில் இல்லை.

MR. SPEAKER : பெயரைச் சொல்லிச் சொல்லக்கூடாது.

SRI N. R. THIAGARAJAN : பெயரைச் சொல்லவில்லை. சிவபெருமானைப் பற்றித்தான் சொன்னேன்.

MR. SPEAKER : தாயுமானவர் என்று சொல்லி சுற்றி வளைத்து டி.எம்.எஸ்—ஐப் பற்றிச் சொல்லக்கூடாது.

SRI N. R. THIAGARAJAN : சிவபெருமான் எப்படி தாயுமானவராக உதவினாரோ அந்தப் பெயரின் புனிதத் தன்மையைக் காப்பாற்றக் கூடிய அளவில் இல்லாமல் இருந்தால் என்ன ஆகும். அந்த புனிதத் தன்மையைக் காப்பாற்றவில்லை என்று கூறிக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன். ஜெய்ஹிந்த்.

SRI A. GOVINDASAMI : On a point of Order, Sir எக்ஸ் பஞ்ச் பண்ணிவிட்டேன் என்று சொல்லியும் கூட தொடர்ந்து சொல்வது சரியா ?

MR. SPEAKER : சொல்லக்கூடாது என்று சொன்னேன். எக்ஸ்பஞ்ச் பண்ணுகிறேன் என்று சொல்லவில்லை.

* SRI K. R. VISWANATHAN : Sir, while supporting the two Demands Medical and Public Health, I wish to say a few words on the necessity to allot more funds under certain schemes for certain items of work. First of all, I wish to draw the attention of the Government to the control of the disease guineaworm. The incidence of this disease and its harmful effect were brought to the notice of the Government or dinned into the ears of the Government for the last six or seven years. But, only last year, they came to realise and recognise the harmful effects of that disease and they took over the control of the disease from the local bodies to which the work was entrusted till last year. It also recommended to the Government of India to include this disease under the National Water Supply and Sanitation Scheme. What has happened? Nothing has happened. They have devised two methods for the control of this disease. One is a short-term measure and the other is a long-term measure. As a short-term measure, they want to control the disease by destroying the cyclops in the water by means of some drugs. Under the long-term measure, they want to eradicate the disease by the provision of protected water-supply under the National water-supply and Sanitation (Rural) Programme and the Rural Water Supply Comprehensive Scheme. Of course, they have a sincere desire, but in action, they have not implemented what they wanted to implement.

With regard to short-term measures, I find from the budget estimate that only a sum of Rs. 2 lakhs has been allotted during 1960–61 towards the destruction of cyclops in these areas. During 1961-62, they have allotted a sum of Rs. 3 lakhs. It is said that from a survey made by the Government, this disease is prevalent throughout the State except one or two districts. That being the case, I do not know whether this meagre amount that has been

provided for the eradication of this disease will be sufficient and whether with that amount it will be possible to combat that disease successfully.

With regard to the long-term measures, I find from the figures of allotment given under the Rural Water-supply Scheme during 1959–60, 1960–61 and 1961–62 that they are of a decreasing order. In the year 1959–60, the figure under this head was Rs. 51 lakhs or so, in 1960–61, it was Rs. 50 lakhs and in 1961–62, they have provided only Rs. 30 lakhs. Under the National Water-supply and Sanitation scheme, the figure in 1959–60 was Rs. 21.56 lakhs, 1960–61, it was Rs. 28.98 lakhs and in 1961–62, the provision is only Rs. 14 lakhs. It is really to be appreciated that the Government have recognised that this disease should be treated on a par with Cholera and other such dreadful diseases. They have also recognised that it should come under the National Water-supply and Sanitation scheme. But, there is no use in merely recognising the harmful effects of the dreadful disease, if that recognition is not backed up by providing adequate allotments for eradicating this disease. The decreasing order of the allotment for these schemes only shows that they have not taken sufficient care to assess the magnitude of the problem and provided for adequate amounts to combat the dreadful effects of this disease and eradicating it completely. So, I would suggest to the Government to take up an intensive survey of the areas where this disease is prevalent and is causing much havoc to the public. Special allotments should be made by the Government for this purpose. The Government should also see that the allotments made are spent within the time allotted.

Next, I come to the Government hospital at Ariyalur. That hospital was provincialised about two decades ago and the number of out-patients has also increased. In 1956, the daily average was 170. In 1960, it was about 340. Thus it has doubled since 1956. Considering the increase in the number of out-patients, the Government came forward to appoint a Lady Doctor in that Hospital. The Lady Doctor and the Male Doctor are both working there. The work of pharmacist is borne only by one person and that person has to attend to dispensing duties as well as the clerks's duties in the office. It is humanly impossible for a single individual to attend to both these duties. The District Medical Officer as well as the Doctor on the spot in the Hospital have submitted proposals to Government long ago, about two years ago I think, in regard to this matter. But, the Government have not taken any steps so far to appoint an additional pharmacist to cope with the increasing work in the Hospital. The bed-strength of the Hospital is now 32 and the Hospital Advisory Committee as well as the District Medical Officer have requested the Government that the bed-strength of the Hospital should be increased to more than 40 so that the Government need not feel the difficulty in appointing an additional pharmacist according to the spirit of a Government Order which is in force now.



So I would request the Government to appoint an additional 11.30 a.m.
pharmacist as soon as possible to enable the increasing volume of work to be handled in the hospital.

Then the Government Hospital at Jayankondan was provincialised in April 1959. It is more than two years and there has been change only in name and no improvement whatsoever has been done to the hospital after its conversion into a Government hospital. I understand that recently estimates for construction of a building and provision of beds have been submitted to the Government at a cost of Rs. 1 lakh and odd. I would request the Government to sanction the construction of the building for the hospital at Jayankondan and thus make improvements to justify the provincialisation of the hospital. With these words, I conclude my speech.

*SRI S. M. ANNAMALAI: சட்டமன்றத் தலைவர் அவர்களே, சுகாதார இலாகாவைப் பற்றியும், வைத்திய இலாகாவைப் பற்றியும் அட்மினிஸ்ட்ரேஷன் ரிப்போர்ட் இல்லையென்ற குறைபாடு இருக்கிறது. உண்மையிலேயே இதைப் பொருத்தமட்டில், இதற்கு அட்மினிஸ்ட்ரேஷன் ரிப்போர்ட் இல்லாமல், பேபர்ஸ் பிளேஸ்ட் ஆன் தி டேபிள் ஆப் தி அவுஸ் என்று ஆறு மாதத்திற்கு உண்டானதை வைக்கப்படுகின்றதே யொழிய, மற்ற இலாகாக்களைப் போல் நிர்வாக அறிக்கையை கொடுப்பதே இடையாது. ஏதோ சானிடரி எஞ்ஜினியரிங் பற்றித்தான் கொடுக்கப்பட்டிருக்கின்றதே தவிர, சுகாதாரத்தைப் பற்றியோ அல்லது வைத்தியத்தைப் பற்றியோ இந்த நேரத்தில் ஏதாவது ஒரு பெரிய புத்தகமாக வெளியிட்டு கொடுத்தார்களா என்றால், கிடையாது. இப்போது கொடுத்துள்ளதைப் பார்த்தால் 1959–60-ல் நான்காவது குவாட்டரில் target ரூ. 71·047 என்று டார்ஜட் போட்டுள்ளது. ஆனால் எவ்வளவு செலவு செய்யப்பட்டது என்று பார்த்தால், ரூ. 46·54 தான் செலவு செய்யப்பட்டிருக்கிறது. அதே போல் 1960–61-க்கு நான்காவது காலாண்டிற்கு ரூ. 30.8 என்று டார்ஜட் போடப்பட்டு, ரூ. 27·07 தான் செலவு செய்யப்பட்டிருக்கிறது. இதைப் பார்க்கின்ற போது இந்த இலாகாவிலே உள்ளவர்கள் எவ்வளவு நன்றாக வேலை செய்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ளலாம். அதைப் போலவே 152 பிரைமரி ஹெல்த் சென்டர்கள் இருக்கிறது. அவைகளிலே 117 ஆஸ்பத்திரிகளில்தான் டாக்டர்கள் இருக்கிறார்கள். எத்தனை மற்ற ஆஸ்பத்திரிகளுக்கு டாக்டர்கள் இல்லாமல் இருக்கிறார்கள் என்ற விவரத்தை அட்மினிஸ்ட்ரேஷன் ரிப்போர்டிலே கொடுக்கவில்லை. ஆகவே வரக்கூடிய ஆண்டில் இருந்தாவது, கனம் அமைச்சர் அவர்கள் இந்த சட்ட மன்றத்தின் முன்னால் நிர்வாக அறிக்கையை வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போலவே ஜவ்வாது மலைக்கு ஆஸ்பத்திரி வேண்டுமென்று பல தடவை இந்த சட்ட மன்றத்திலே வற்புறுத்தி இருக்கிறேன். அதைப் பற்றி கனம் அமைச்சர் அவர்களிடத்திலும் அடிக்கடி சொல்லி இருக்கிறேன். கிழே மோபைல் யூனிட் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஜவ்வாது மலையிலே உள்ளவர்கள் இப்போது எவ்வளவோ முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள். அங்கு அவர்களுக்கு ஒரு ஆஸ்பத்திரி இருக்க வேண்டியது மிகவும் அவசியம்; ஆகவே இந்த இடத்தில் ஓர் ஆஸ்பத்திரியை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, பிரைமரி ஹெல்த் சென்டருக்கு இரண்டாவதாக ஒரு டாக்டரை நியமிக்க வேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

(Deputy Speaker in the Chair.)

அடுத்தபடியாக, ரூரல் வாட்டர் சப்ளை ஸ்கீம் 1960–61, 1961–62 ஆகிய இரண்டையும் எடுத்துக் கொண்டால், 1960–61-க்கு 50 லட்சம் செலவிட்டார்கள். 1961–62-க்கு 10 லட்சம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதோடு தேசிய குடி தண்ணீர் திட்டத்தைப்பற்றி மத்திய சர்க்கார்

[Sri S. M. Annamalai] [20th March 1961

ஒதுக்கி இருக்கக்கூடிய பணத்தைக்கூட செலவழிக்கவில்லை. இப்படி செலவழிக்கப்படவில்லை என்று கூறுவது மிக மிக வேதனைப்படக் கூடிய விஷயமாகும். மத்திய சர்க்கார் சென்ற ஆண்டு 15 லட்சம் ரூபாய் தந்தார்கள். சாமான்கள் ரூ. 11,09,110-க்கு கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இவர்கள் அப்படி கொடுக்கப்பட்ட தொகை பூராவும் செலவழிக்கப்பட்டு விட்டது, இன்னும் வேண்டுமென்று கேட்டார்களா என்றால், கேட்கவில்லை. ஆனால் ரூ. 7·08 லட்சம்தான் செலவு செய்திருக்கிறார்கள். அதாவது 1958-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 30-ம் தேதியில் ஆறு மாதத்திற்கு டார்ஜட் போட்டது 10·8 லட்சம் செலவு செய்ய வேண்டுமென்று. ஆனால் செலவழித்தது 7·08 லட்சம்தான். இதைப் பார்க்கின்றபோது, சுகாதார இலாகாவிலேகூட சரிவர செலவழிக்கப்படவில்லை என்பதுதான் புலனாகிறது. அதைப் போலவே ரூரல் வாட்டர் ஸ்கீமுக்கு 1958-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 30-ம் தேதி வரை ஆறு மாதத்திற்கு ரூ. 15 லட்சம் டார்ஜட் போட்டார்கள். செலவழித்தது ரூ. 9,61,497-தான். அதே போன்று 850 கிணறுகள் எடுப்பதற்குத் திட்டம் போட்டார்கள். ஆனால் உண்மையில் 726 கிணறுகள்தான் எடுக்கப்பட்டது. Composite Scheme Target 56. ஆனால் ஒன்றுதான் செய்யப்பட்டது. காம்போஸிட் ஸ்கீம் டார்ஜட் இப்படி. ஒவ்வொரு துறையிலும் திட்டம் போடுகின்றார்களே ஒழிய, பணத்தைகூட சரியான முறையிலே செலவழிக்கப்படுவதில்லை. அதிலும் மத்திய சர்க்கார் குடிதண்ணீருக்காக கொடுத்த பணத்தைகூட செலவழிக்காமல் இருக்கிறார்கள். ஆகவே இதையெல்லாம் கனம் அமைச்சர் அவர்கள் சரியான முறையிலே கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, பால் பவுடர் டின் அமெரிக்காவிலிருந்து நம்முடைய நாட்டிற்கு அனுப்பப்படுகிறது. சென்ற ஆண்டு 1960-61-க்கு மொத்தம் 15 லட்சம் பவுண்டு பால் பவுடர் தருவதாகச் சொல்லி இருக்கிறார்கள். அதிலே பாதி வருஷத்திற்கு 7½ லட்சம் பவுண்டு வந்திருக்கிறது. அப்படி வந்துள்ள பால் பவுடர் டின்களை விநியோகிப்பதில் பல குறைபாடுகள் கூறப்படுகிறது. நான்கூட அதுபற்றி இந்த சட்ட மன்றத்தில் கேள்வி போட்டிருக்கிறேன். அதுபற்றி விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. இந்தப் பால் பவுடர் டின்கள் இன்று சாதாரணமாக டீ கடைகளிலேதான் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் இது ஏழைக் குழந்தைகளுக்காக கொடுக்கப்படுகிறது. அப்படி கொடுக்கப்படுகின்ற பால் பவுடர் டின்கள் சரியானமுறையில் விநியோகிக்கப்படாமல், யார்யாருக்கோ கொடுக்கப்படுகிறது என்று பலவாறாகக் குறை சொல்லப்படுகிறது.

அடுத்தபடியாக, உணவுக் கலப்படம் செய்யக்கூடிய சட்டத்தை எல்லா முனிசிபாலிடிகளிலும், பஞ்சாயத்து போர்டுகளிலும் நாம் அமுலாக்கவில்லை. அதனால் பலவிதத் தொல்லைகள் இன்று ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இந்தச் சட்டத்தை எல்லா முனிசிபாலிடிகளிலும், பஞ்சாயத்துக்களிலும் கொண்டு வருவதற்கு சட்டம் கொண்டு வர வேண்டும். உணவுத் தானியங்களின் விலை அதிகரிப்பதின் காரணமாக அமுலில் இருப்பதாலேயே இந்த உணவுக் கலப்படம் இப்போது வளர்ந்து கொண்டு வருகிறது. ஆகவே இதை கட்டாயமாக எல்லா பஞ்சாயத்து போர்டுகளுக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது இவ்வாறு விஸ்தரிக்கப்படாததற்கு ஒரு காரணம் சொல்லப்படுகிறது. அதாவது "No Laboratory facilities" என்று சொல்லப்படுகிறது. இந்த வசதிகளை அதிகப்படுத்தி, எல்லா முனிசிபாலிடிகளுக்கும், எல்லா பஞ்சாயத்துக்களுக்கும் குறிப்பாக, முதல் கிரேடு பஞ்சாயத்துக்களுக்கு இந்தச் சட்டத்தை அமுலுக்கு கொண்டு வர வேண்டும்.

அதைப் போலவே, சுகாதார இலாகாவும் நல்ல முறையிலே வேலை செய்யப்படவில்லை. 1960-61-லே 26 பேருக்கு காலரா கண்டதாகவும், அதிலே 17 பேர்கள் இறந்து விட்டதாகவும் சொல்லப்படுகிறது. இதிலே இது எத்தனை சதவிகிதம் என்பதை நாம் கவனிக்க வேண்டும். இப்படி வேலை செய்தால், அந்த இலாகா என்ன செய்து கொண்டிருக்கிறது என்று தெரியவில்லை. அதைப் போலவே மலேரியாவை ஒழிப்பதற்காக மலேரியா எராடிகேஷன் ஸ்கீம் என்று ஒரு திட்டம் போட்டார்கள்.



20th March 1961] [Sri S. M. Annamalai]

அதன் மூலம் டீ.டீ.டீ. அடித்தார்கள். அப்படி டீ.டீ.டீ. அடித்ததனாலே மூட்டைப்பூச்சிகள் அதிகமாகி விட்டது. இந்த மூட்டைப் பூச்சி உபத்திரவத்தைப்பற்றி சொல்லவே வேண்டியதில்லை. இது இப்படி இருக்கிறதே என்று டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சிலிலே எடுத்துச் சொன்னால், டி.எம்.ஓ. இதன் விளைவாக மூட்டைப் பூச்சி உபத்திரவம் இருந்தாலும், அதைத் தடுப்பதற்கு மருந்து இல்லையென்று சொல்கிறார். "தலைவலி போய் திருகு வலி வந்த" கதையாகத்தான் இருக்கிறது இது. மலேரியாவை ஒழிப்பதற்காக டீ.டீ.டீ. மருந்தை அடித்து, அதனால் மூட்டைப் பூச்சி தொந்திரவைத்தான் அதிகப்படுத்தி இருக்கிறார்கள். ஆனால் இந்த மூட்டைப் பூச்சியை ஒடுக்குவதற்கு மட்டும் எந்த விதமான வழி வகைகளும் செய்யப்படவில்லை. இது இப்படியே உண்மையிலேயே நீடிக்குமானால் மக்கள் இரவிலே சென்று நிம்மதியாகத் தூங்கக்கூட முடியாது. இப்போதே பெரும்பாலோர் நடுத்தெருவிலே தூங்கிக்கொண்டு இருக்கக்கூடிய அளவில்தான் இருந்துகொண்டு வருகிறார்கள். அவர்களுக்கு, இதை ஒழிப்பதற்கு வழிவகை செய்யாமல், மலேரியாவைத் தடுப்பதற்கு நாங்கள் டீ.டீ.டீ. அடிக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு இரண்டாவது தடவையாகப் போனால், மக்கள் அவர்களுக்கு நல்ல பாடத்தைக் கற்பிப்பார்கள். இந்த மூட்டைப்பூச்சிகளை ஒழிக்காவிட்டால், மக்களிடத்திலே அதிருப்திதான் ஏற்படும். இதை டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கமிட்டியிலே எடுத்துக் சொல்லியும், அதுபற்றி ஒன்றும் செய்யாமல் இருப்பதை நினைக்கும்போது மிகவும் வேதனையாகத்தான் இருக்கிறது.

அதில்லாமல், இப்போது வட ஆற்காடு ஜில்லாவிலே ஒரு புது பேதி நோய் ஏற்பட்டுள்ளது. அந்த நோய் வந்து 10 நாட்கள் கழித்து, கை, கால், முகம் வீங்குகிறது. நம்முடைய கனம் சுகாதார அமைச்சர் அவர்கள்கூட தன்னுடைய நண்பர் ஒருவருக்கு இந்த நோய் வந்து, அவரைச் சென்று பார்த்திருக்கிறார்கள். 'நான் இதைப்பற்றி டிஸ்டிரிக்ட் டெவலப்மெண்ட் கமிட்டியிலே சொன்னபோது, அங்குள்ள டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் ஆபீசர் சிரித்துக் கொண்டு, அதுபற்றி ஒன்றும் சொல்லாமல் இருக்கிறார். இதற்குக் காரணம் அவர் ஒரு ரிடையர்ட் டி.எச்.ஓ.-வாக இருப்பதுதான் ஆகும். ஏதோ வந்தவரைக்கும் வரட்டும் என்றிருக்கிறார்களே தவிர, ரைஸ் மில்லுக்கு லைசன்ஸ், சினிமாவுக்கு லைசன்ஸ் என்று சொன்னால் உடனே அதைச் செய்யக்கூடிய அளவிலே இருக்கிறார்களே தவிர, உண்மையாக சேவை செய்யக்கூடியவர்களாக இல்லை. இந்த நோயினால் மக்கள் ஆயிரக்கணக்காக இறந்துகொண்டு இருக்கிறார்களே, அதைத் தவிர்ப்பதற்கு வழி செய்ய வேண்டாமா என்று டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சிலில் கேட்டால், அவர் அனாவசியமாக சிரித்துக் கொண்டு இருக்கிறார். அது போலவே 'அஸிஸ்டெண்டு டைரக்டர் ஆப் பப்ளிக் ஹெல்த்' வட ஆற்காடு மாவட்டத்தில் மூன்று பேர்கள் சுற்றுப் பிரயாணம் செய்தார்கள். ஆனால் அந்த இடத்தில் இப்படிப்பட்ட பேதி வருவதற்கான காரணத்தைக் கண்டு பிடிக்க ரிஸர்ச் செய்ய வேண்டும் என்பதை கவனித்தார்களா என்றால், இல்லை. ஏதோ மக்கள் வரிப் பணத்தை டி.ஏ.-வாக வாங்கிக் கொள்ளுகிறார்கள். 'வீக்லி ரிபோர்ட்' வருகிறது. அந்த 'வீக்லி ரிபோர்ட்டில்' வட ஆற்காடு மாவட்டத்தில் இப்படிப்பட்ட ஒரு நோய் இருக்கிறதே, அதைத் தவிர்ப்பதற்கு ஏதாவது நடவடிக்கை எடுத்தார்களா என்று பார்த்தால், கிடையவே கிடையாது. நான்கு நாட்கள் சுற்றுப் பிரயாணம் செய்கிறார்கள். ஒரே இடத்தில் உட்கார்ந்துவிட்டு 'டி.ஏ.' 'கிளெய்ம்' செய்துவிடுகிறார்கள். ஏறத்தாழ ஆறு மாத காலம் ஆகிறது. இந்த நோய் மேலும் அதிகமாகிக்கொண்டிருக்கிறது. இது வரைக்கும் அதுபற்றி ஏதாவது ரிஸர்ச் நடத்தியிருக்கிறார்களா என்று பார்த்தால் ஒன்றும் இல்லை. 'டி.பி.எச்.' அந்த இடத்தை பார்வையிட்டிருக்கிறார்கள். இப்பொழுதுதான் அங்கே ஒரு ரிஸர்ச் யூனிட் சென்றிருப்பதாக கேள்விப்படுகிறேன். எத்தனை பேர்கள் செத்த பிறகு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? அத்தனை பேர்களையும் சாகடிக்க வேண்டும் என்று சர்க்கார் நினைக்கிறார்களா? அதிகாரிகள் நினைத்துக் கொண்டிருக்கிறார்களா? ஏன் சும்மாக இருக்க வேண்டும் அதிலும் மிகவும் வேதனை தரக்கூடிய விஷயம், அமைச்சர் அவர்கள் வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவர். 'டி.பி.எச்.' வட ஆற்காடு

[Sri S. M. Annamalai] [20th March 1961

மாவட்டத்தைச் சேர்ந்தவர். 'டி.எம்.எஸ்.' வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவர். ஆனால் அவர்கள் வட ஆற்காடு மாவட்டத்தை கவனிப்பதே கிடையாது. இது மிகவும் வேதனைக்குரிய விஷயம். பல பேர்கள் இறந்து கொண்டிருக்கிறார்கள். அந்த மாவட்டத்தில் மட்டுமில்லை. தென் ஆற்காடு மாவட்டத்திலும் இந்த நோய் இருக்கிறது. எப்படி இந்த நோய் உண்டாயிற்று, என்ன காரணம்? பல உயிர்கள் இப்படி போய்க்கொண்டிருக்கிறதே? இதற்காக ஏதாவது ரிஸர்ச் செய்திருக்கிறார்களா என்றால், ஒன்றும் இல்லை. எல்லோரும் செத்த பிறகு ரிஸர்ச் செய்ய போகிறார்களா? இது என்ன அர்த்தம்? ஆறு மாதங்களாக டெவலப்மெண்ட் கவுன்சிலில் சொல்லியிருக்கிறேன். இதுவரையில் அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை. அமைச்சர் அவர்கள் கவனிக்கவில்லை. இப்பொழுதுதான் ரிஸர்ச் செய்கிறார்கள். 'பாமிலி பிளானிங்' மூலம் வட ஆற்காடு மாவட்டத்தில் census குறைய வேண்டுமென்று அமைச்சர் நினைக்கிறார்களா? ஆகையால் மக்கள் இம்மாதிரி இறக்க வேண்டும் என்று அமைச்சர் நினைக்கிறார்களா? ஆனால், மக்கள் இதனால் வேதனை அடைகிறார்கள் மூட்டைப் பூச்சி தொல்லையும் வட ஆற்காடு மாவட்டத்தில் அதிகமாக இருக்கிறது. அதை உடனடியாக கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஹெல்த் இன்ஸ்பெக்டர்கள் டிரஸைப் பற்றி சொல்ல விரும்புகிறேன். முனிசிபாலிடிகளில் ரூ. 75-ம், பஞ்சாயத்து போர்டு ஹெல்த் இன்ஸ்பெக்டர்களுக்கு ரூ. 50-ம் டிரஸ் அலவன்ஸ் கொடுப்பது போதுமா? 'கொடேஷன்' கேட்டால்கூட ரூ. 125 கேட்கிறார்கள். பழைய காலத்தில் டிரஸ், ஒரு டர்பன், ஒரு டை, காகி டிரஸ் ஏதோ பயமுறுத்தலுக்காக வேண்டியிருந்தது. இந்தக் காலத்திலும் கட்டாயம் அந்த டிரஸ் போட வேண்டுமென்று சொல்லுவது அவ்வளவு நியாயம் இல்லை.

ரிடையர் ஆனவர்களை 'டி.எச்.ஓ.' வாக தயவு செய்து போடாதீர்கள். ஹெல்த் இன்ஸ்பெக்டர்கள் 10, 15 வருஷம் சிறந்த முறையில் சர்வீஸ் செய்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களை ப்ரமோஷன் செய்யுங்கள். வேண்டுமானால் அவர்கள் எப்படி வேலை செய்கிறார்கள் என்பதை கவனித்து 'ப்ரமோஷனை' 'கன்பர்ம்' செய்யுங்கள். ஓய்வு பெற்ற அதிகாரியை போட்டால், அவர்கள் சினிமா லைசென்ஸ் கொடுக்கலாமா, 'ஸைட் அப்ரூவ்' செய்யலாமா, 'ரைஸ் மில்லுக்கு' 'ஸைட்' 'அப்ரூவல்' செய்யலாமா என்றுதான் பார்க்கிறார்கள். அவர்களைப் போட்டால் இந்த வேதனை நீடிக்கும். அது போலவே 'ஸ்மால் பாக்ஸ் எராடிகேஷன் ஸ்கீமுக்கு' 'ப்ளேக் ஸ்பெஷலிஸ்டை' போடுகிறார்கள். ஸ்மால் பாக்ஸை தடுக்க சென்னைக்கு அடுத்த செங்கல்பட்டில் ஒரு பெரிய லேப் இருக்கிறது. அப்படியிருந்தும் கூட அங்கு அம்மை நோய் அதிகமாக இருந்துகொண்டுதானிருக்கிறது. அம்மாதிரி புகார்கள் இருந்து கொண்டிருக்கின்றன. இதை சர்க்காரின் கவனத்திற்கும், அதிகாரிகளின் கவனத்திற்கும் கொண்டு வர விரும்புகிறேன். வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள குறைகளை உடனடியாக அமைச்சர் அவர்கள் நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

* SRI R. SRINIVASA IYER: Sir, while supporting this Demand, I would like to make some suggestions to the Government. In the Note on 'Medical Demand' circulated, it is stated—

'Much headway could not be made in the implementation of the schemes during the initial stages of the Plan period, as the building programmes required careful designing and as the technical personnel as well as building materials like iron and steel to implement the works were not easily available. There was also difficulty in securing the services of qualified medical officers . . .'

There are also two other difficulties, viz., combined working of the Public Works Department and the Public Health Engineering Department and the delay in land acquisition proceedings. It is



20th March 1961] [Sri R. Srinivasa Iyer]

stated in the Budget Memorandum that a mental hospital at Madurai could not be started though the site has been selected about three years ago because land acquisition proceedings are pending. Similar is the position with regard to the hospital at Arantangi. So also there is delay in building quarters for the Taluk Headquarters Hospital staff at Pattukkottai. Therefore, the delay in the land acquisition proceedings cannot also be ignored and has to be got over by exercising emergency powers and suitable action.

With regard to Public Health Engineering, I cannot understand why the money allotted for Public Health Engineering should be divided between Public Health Engineering and the Public Works Department and why 15 per cent centage and supervision charges should be allotted from out of the grant made for Public Health Engineering and paid to the Public Works Department. I do not say that the Public Works Department are not capable of taking up Public Health Engineering Works, so far as buildings are concerned. We have got experts to deal with Health Engineering and I request the Government to consider the proposal, that the Public Health Engineering staff should be independent of Public Works Department and should be under the Health Department and Health Ministry separately.

Sir, with reference to urban and rural water-supply schemes, I find from the Budget Memorandum that for urban water-supply, for five years though Rs. 1.78 crores were allotted, Rs. 4.86 crores were spent. As regards rural water-supply, for five years Rs. 3.16 crores were allotted and Rs. 3.24 crores were spent. Eighty per cent of the population of the State live in rural parts. So the rural water-supply scheme must have precedence over the urban water-supply scheme especially when we have got a City Corporation which is getting an income of crores of rupees and Government grants. The Committee on Estimates toured the whole State and submitted a report on the working of rural water-supply scheme in 1960 and I request the Government to implement the suggestions of the Estimates Committee with reference to rural water-supply schemes. Mostly the demand of 25 per cent contribution from the public is a stumbling block and the Government should look into this aspect of the matter.

Another important point is that about Rs. 1 crore has been allotted in the Third Plan for the City Corporation. Whether it is the Madras City or Tiruchirappalli or Srirangam or Thanjavur or Kumbakonam or Mayavaram, the discharge of sullage water and sewage refuse into the rivers must be put an end to at once. In the case of the Madras City, the water in the Buckingham Canal and the Cooum stinks because of the entry of the sullage water and sewage there. The same thing is happening in Tiruchirappalli, Srirangam, Thanjavur, Kumbakonam, Mayavaram and other places. So the sullage water or refuse should not be let down into the rivers because people lower down are drinking this water. There is also the National Water-supply and Sanitation Scheme which is limited to old rivers. We have got the Grand Anicut

[Sri R. Srinivasa Iyer] [20th March 1961]

means to work these Primary Health Centres. With reference to the suggestion that where the students are paid stipends or scholarships, they should be compelled to do service in the rural parts for five years after graduation, the Hon. Minister answered in the Assembly yesterday or day before yesterday that we would be getting large number of doctors hereafter and therefore there was no need to impose the stipulation. This can be easily stipulated; if they study at Government expense, they must be asked to serve for five years at least on temporary basis. I request that this decision may be reconsidered. It should be the case even in cases where a portion of the scholarship or hostel dues or supply of books is made to them. They must be asked to spend some time in rural hospitals.

With regard to Rural Water-Supply in sea coast villages particularly fishermen villages, there are 20 villages in Pattukkottai taluk within a distance of 24 miles. None of these villages have got protected water-supply. They have to go three miles and four miles to get drinking water. The Rural Water-Supply Scheme must be immediately implemented in Adirampatnam–Sembada street, Pudupatnam, Mallipatnam, Sethubavachatram, Sembai and Sendalai. All these are fishermen villages and they consist of Muhammadan fishermen as well as Hindu Fishermen. Lot of amount has to be spent in Rural Water-Supply Schemes if really the rural people have got to live healthy and happy life. They should not be asked to go miles for getting water from unprotected ponds. I request that a special drive should be made for implementing the rural water-supply scheme and some protected water-supply such as a well, or a overhead tank or some such thing in this respect should be provided for these poor villagers. These people should not be expected to give contribution at all. Some villagers should be exempted from the rule of contribution for water-supply schemes.

With regard to quarters for medical staff, there are few instances where quarters are provided for them. But I say that there should be a scheme for every Taluk Headquarters to provide quarters for them. This can be implemented immediately.

With regard to family planning we have got Panchayat Councils under the Act. They have got to take some interest. Some provision is made. I have to mention for instance, one successful operation will be a propaganda for 10,000. But one unsuccessful operation or a man going out saying this is not successful, will completely spoil all the propaganda done by the Government. The males who go there for vasectomy operation should be made to remain there in the hospital for a week as an in-patient at the Government cost. Giving Rs. 30 or Rs. 10 from Panchayat funds is not enough. I know an instance where a man was treated as out-patient and he was asked to go away walking seven miles after operation. Is it worthwhile to ask them to go away as soon as the operation is performed? In respect of these cases the patients must be made to remain as in-patients in the hospitals till they are absolutely



20th March 1961] [Sri R. Srinivasa Iyer]

cured. The other rule is that they should be treated for six weeks after the operation is held. But if you send within a few days he goes to the village and says, I am suffering, I have got swollen part and all that. In that case, remember, all the money that you spend on family planning will be of no use.

With reference to the Medical College in Thanjavur, my hon. friend, Sri Subramaniam has almost dealt with all the necessary points. I want to say that the construction of the building is going on at a very slow pace. Students are admitted in other colleges. When are we going to complete the construction of the building? Can we at least expect the construction to be finished by the next year? I would request the Hon. Minister to tell us in his reply that at least when the construction of the building would be over whether in the next year or when.

In respect of Thanjavur Raja Mirasdar hospital, I say that the bed strength is very low. At least some temporary sheds may be constructed to house the patients. They are now put up in verandahs, uncleaned verandahs. With reference to convenience, the 12 noon. latrine and lavatory, they are in most unhealthy condition not to be thought of in any hospital. They must be immediately improved.

* SRI M. S. SELVARAJAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, வைத்திய சுகாதாரமானியங்களை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்குக் கடந்த இரண்டு ஐந்தாண்டு திட்டக் காலங்களில் எந்த அளவுக்கு நிறைவேற்றியிருக்கிறோம் என்று பார்த்தால், இந்த ராஜ்யத்தைப் பொறுத்த வரையில் நல்ல காரியங்கள் பல நடந்திருக்கின்றன என்று குறிப்பில் பார்க்கிறோம். குறிப்பாக, இரண்டாவது திட்ட காலத்தில், 14 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. அந்தத் திட்டங்களில் நகர்ப் புறங்களில் தண்ணீர்த் திட்டங்களுக்காக எவ்வளவு ஒதுக்கினோமோ அதைவிட 3 கோடி ரூபாய் அதிகமாக செலவழித்து மற்ற இனங்களில் இருந்து எடுத்துக் கொண்டு, மொத்தத்தில் 14 கோடி ரூபாய் திட்டத்திற்குச்செலவழித்திருக்கிறோம் என்று பெருமைப்படக் கூடிய நிலையில் இருக்கிறோம். ஆனாலும், அதே நேரத்தில், மற்ற இனங்களில் இருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட 3 கோடி ரூபாய் சம்பந்தப்பட்ட வரை, குறித்த இனங்களில் அந்த அளவுக்குப் பள்ளம் விழுந்து இருக்கிறது என்பதையும் நாம் மறக்கக் கூடாது. அம்மாதிரிக் குறைவுக்குக் காரணம் என்ன என்று ஆராய்ந்து தக்க வழிமுறைகளை அடுத்த ஆண்டிலாவது செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த ராஜ்யத்தில் கடந்த 10 வருஷ காலத்தில், 14,000 கிராமங்களுக்குக் குடி தண்ணீர் வசதி செய்து கொடுத்திருக்கிறோம். சுதந்திரம் அடைந்து, 12, 13 ஆண்டுகளுக்குப் பிறகு இன்றைக்கு மூன்றாவது ஐந்தாண்டுத்திட்ட காலத்தில் 2,500 கிராமங்கள் குடி தண்ணீர் வசதி இல்லாமல் இருக்கின்றன என்பது நமக்குப் பெருமை தரும் நிலையில் இல்லை. மூன்றாவது திட்ட காலத்தில் ஐந்து வருஷத்திற்குமாகச் சேர்ந்து 2,500 கிணறுகள் வசதி செய்து கொடுக்க ஏற்பாடு செய்திருப்பது வரவேற்கத்தக்கது. ஆனாலும், வருகிற வருஷத்திலேயே ஒவ்வொரு கிராமமும் தண்ணீர் வசதி பெறச் செய்து, மூன்றாவது திட்ட காலத்தின் முதல் ஆண்டிலேயே குடி தண்ணீர் வசதியற்ற கிராமங்களே இல்லை என்ற நிலையை உண்டாக்க வேண்டும்; அப்படி எல்லாக் கிராமத்திற்கும் மிக அத்தியாவசியமான **Elementary need** ஆன குடி தண்ணீர் வசதியைச் செய்து கொடுக்க அரசாங்கம் வழி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

[Sri M. S. Selvarajan] [20th March 1961

அதே நேரத்தில் மத்திய சர்க்காரிலிருந்து ஒதுக்கப்பட்டுள்ள பல்வேறு இனங்களில் ட்ரெயினிகளுக்காக ஒதுக்கப்பட்ட இனத்தை நிறைவேற்ற இயலாமல் இருந்திருக்கிறோம். ப்ளாக் டெவலப்மெண்ட் ஆக்டிவிடிஸ் எல்லாப் பகுதிகளிலும், பாதி பகுதிகளில் நிறைவேறியிருக்கிறது. ஹெல்த் இன்ஸ்பெக்டர்களை ஒவ்வொரு ப்ளாக்கிற்கும் போட்டு வருகிறோம். வருகிற வருஷத்தில் ஹெல்த் விசிட்டர்ஸ் ட்ரெயினிங்குக்காக எவ்வளவு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலும், சென்ற காலத்தில் மத்திய சர்க்காருடைய மானியத்தைப் பெற்று 150 பேர்களுக்கு ட்ரெயினிங் கொடுக்கத் திட்டம் வகுத்திருந்த போதிலும், 57 பேர்களே ட்ரெயினிங் செய்ய முடிந்திருக்கிறது. இத்தகைய பள்ளத்திற்குக் காரணம் என்ன என்று பரிசீலனை செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இதற்கு முன்பு பேசிய கனம் அங்கத்தினர்கள் தெரிவித்ததுபோல் சுகாதார வைத்திய இலாக்காக்கள் 100 ஆண்டு காலமாகத் தனியாக இருந்து வந்திருக்கிறது. பல் வேறு நாகரிகம் மிகுந்த மேல் நாடுகளிலும் இதைப் பரிசீலனை செய்து ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள், இவை தனித்தனியாக இயங்குவதே நல்லது என்று. நம் ராஜ்யத்திலும் இந்தப் பிரச்னை பரிசீலனையில் இருப்பதாகத் தெரிகிறது. இந்த சுகாதார வைத்திய இலாகா இணைப்பைப் பற்றி நாமும் மற்றவர்கள் வழியில் சென்று தனியாக இயங்குவது நல்லதா என்று பார்க்க வேண்டும்.

வைத்திய சுகாதார இலாகாக்களில் பெருமை மிகுந்த, சர்வீஸ் ஓய்வு பெற்ற அதிகாரிகளை மேல் மட்டத்தில் மீண்டும், மீண்டும் நியமிப்பதற்கு அவசியம் இருப்பதாக அமைச்சர்கள் சொல்லுகிறார்கள். அதனால் விளைவு அடி மட்டத்தில் இருக்கும் சாதாரண அதிகாரிகளெல்லாம் சோர்வு பெரும் அளவில், இவர்கள் பதவி நீடித்துக் கொண்டே போகிறது. அப்படிப் பட்டவர்களுடைய, பெரிய அனுபவமிக்கவருடைய தேவை இருக்கிறது என்று கருதும்போது, ஏன் அவர்களைக் கொண்டு ஒரு ஆலோசனைக் குழுவை அமைத்து, பல்வேறு விஷயங்களையும் பரிசீலனை செய்யச்செய்து, அவர்கள் நுணுக்கமாக ஆராய்ச்சி செய்து அந்த வகையில் அவர்கள் சேவையை, இந்த ராஜ்யத்தில் வைத்திய சுகாதாரத் துறையில் ஆலோசனை சொல்பவர்களாக, ஆராய்ச்சியாளர்களாக அவர்களைப் பயன்படுத்தக் கூடாதா என்று பரிசீலனை செய்ய வேண்டும். இத்தகைய இலாகாவில் வேலை செய்யும் எல்லாத் தரப்பிலும் உள்ள ஊழியர்களும் உற்சாகம் பெற்று வேலை செய்ய வழி வகை செய்ய வேண்டும் என்று கருத்தில் கொள்ள வேண்டும்.

இந்த நேரத்தில் வைத்திய இலாகாவில் வேலைக்கு அமர்ந்திருக்கும் டாக்டர்கள் பிரைவேட்டாக ப்ராக்டீஸ் பண்ணலாம் என அனுமதிக்கிறோம்; அம்மாதிரி அவர்கள் தொழிலையும் சட்ட பூர்வமாகத் தடை செய்யவில்லை. ஆனால், சுகாதாரத் துறையில் ஓரளவுக்கு அதே அளவு பட்டம் பெற்றுத் தகுந்த பொறுப்பு வகிக்கும் அதிகாரிகள் பலர் அரசாங்கத்திற்கும், டிபார்ட்மெண்டிற்குமே காலமெல்லாம் வேலை செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு எந்த அளவுக்கு உயர்வும், உற்சாகமும் கொடுக்க முடியுமோ, அந்த அளவுக்குக் கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்திச் சொல்லிக்கொள்ளுகிறேன். சுகாதார இலாகாவிலுள்ள ஹெல்த் இன்ஸ்பெக்டர்கள், ஸானிடரி லைனில் உள்ள இன்ஸ்பெக்டர்கள், சிப்பந்திகள் எல்லோரும் மேல் மட்டத்திற்கு உயர்வு பெறக் கூடிய முறையில் அவர்களுக்கு B. H. போன்ற பரீட்சைகளுக்குப் போய் தகுதியடையும் சந்தர்ப்பங்கள் கொடுத்து, அதிக அனுபவம் உள்ளவர்களுக்கு உயர்வு கொடுக்கும் அளவுக்கு அவர்களைப் பயன்படுத்தலாம் என்ற ஆலோசனையைச் சொல்ல விரும்புகிறேன்.

பல்வேறு ஜில்லாக்களுக்கும் இந்த மானியத்தின் கீழ் பணம் ஒதுக்கப்பட்டிருந்தாலும், மூன்றாவது திட்ட காலத்தில் அதிக வாய்ப்பு அளித்திருந்தாலும், திருநெல்வேலி ஜில்லாவைப் பொறுத்த வரை தகுந்த தொகை வகையோடு ஒதுக்கப்படவில்லை என்று இந்த அரசாங்கத்திற்குப் பணிவாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சென்ற ஐந்தாண்டு திட்டத்தில், செய்த வேலைகளை தொடர்ந்து நீடிக்கும் என்ற நம்பிக்கையோடு இருக்கிறார்களா? என்று கேட்க விரும்புகிறேன். திருநெல்வேலி-வண்ணாரப்



20th March 1961] [Sri M. S. Selvarajan]

பேட்டையில் இருக்கும் பெண்கள் ஆஸ்பத்திரியும், பாளையங்கோட்டையில் நல்ல முறையில் நிறைவேறிவரும் ஆஸ்பத்திரி கட்டிடத்திற்கு மாற்றப்பட இருக்கிறது என்றாலும், பேறுகால வசதி, out patient department அங்கேயே தொடர்ந்து கொடுக்க வேண்டிய அவசியத்தில் இருக்கின்றன. ஏனென்றால், திருநெல்வேலி நகரத்தில் ஒரு ஆஸ்பத்திரி இருக்கிறது; பாளையங்கோட்டைக்கும் திருநெல்வேலி டவுனுக்கும்மத்தியில் கொக்கரகுளம் பகுதியில் வாழும் பல்லாயிர மக்களுக்கும் மத்தியில் ஜங்ஷன வண்ணாரப் பேட்டையிலுள்ள பல்லாயிர மக்களுக்கும் தேவையாயிருக்கிறது. திருநெல்வேலி ஜில்லாவில் மேற்கு வடக்குப் பகுதிகளில் சில வசதிகள் செய்ய இருக்கிறார்கள் என்றாலும், கிழக்கே, தெற்கே உள்ள தாலுக்காக்கள் ஒருமுகமாக புறக்கணிக்கப்படுவதான எண்ணம் ஏற்படுகிறது. உதாரணமாக திருச்செந்தூர்—தாலுகாவின் தலைநகரம்; தேச முழுமையிலிருந்தும் யாத்திரிகர்கள் வந்த வண்ணமாக இருக்கும் இடம். அங்கே நான் ஒன்றுக்கு 800, 1,000 பேஷண்டுகள் சிகிச்சை பெறுகிறார்கள்; அங்கே, கவர்ச்சி மிக்க ஆஸ்பத்திரி, டாக்டர்கள் இருந்தாலும், நல்ல பணியாற்றி வந்தாலும், அந்த ஆஸ்பத்திரி வளர்ச்சிக்கு, Bed Strength-ஐ அதிகரிக்க, சிப்பந்திகளெல்லாம் வசிக்கக் கூடிய விடுதி வசதிகள், x-ray வசதிகள் இவை அங்கு தேவை என்று பல காலமாகக் கூறியும் அவைகளுக்கு இவ்வாண்டில் பெரும் அளவுக்கு பணம் ஒதுக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக் காட்ட வேண்டியிருக்கிறது.

காயல்பட்டினம் combined water supply scheme 48-வது ஆண்டிலேயே டாக்டர் ராஜன் இருந்த காலத்திலேயே நிறைவேற்ற வேண்டுமென்று அஸ்திவாரம் போட்டும், பைலட் ஸ்கீம்தான் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பது பரிதாபத்துக்குரியது என்று சொல்ல விரும்புகிறேன். அதைத் தொடர்ந்து துரிதமாக, பூரணமாக நிறைவேற்ற ஏற்பாடு செய்ய வேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன். பல பஞ்சாயத்துக்களை இணைத்து, 11 கிராமங்களுக்கு வசதி கொடுக்க என்று போட்ட திட்டம் அது. தண்ணீர் கொடுக்கப்படாத—ஆனால் திட்டத்தில் இணைக்கப்பட்ட பஞ்சாயத்துக்களை விடுபட்ட சிற்றூர்களில் வரி வசூல் செய்வதில் கஷ்டம் இருக்கிறது. அதை எல்லாம் பரிசீலனை செய்து எந்த அளவுக்கு விடுபட்ட பகுதிகளுக்கும் தண்ணீர் கொடுத்து குறையை நிறைவேற்றி வைக்கலாம் என்று பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். விக்கிரமசிங்கபுரம் பல்லாயிரம் மில் தொழிலாளிகள் நிறைந்த ஊர். அவர்களின் தண்ணீர் திட்டக்கோரிக்கை இந்த ஆண்டிலும் இடம் பெறவில்லை என்று காண வருந்துகிறோம்.

நேஷனல் வாட்டர் சப்ளை திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட கக்கூஸ்கள் பலன் பெறாத அளவுக்கு இருக்கிறது. கக்கூஸ்கள் உபயோகமற்றதாகப் போய்விடாமல், அவைகள் நல்ல முறையிலே உபயோகிப்பது பற்றி நல்ல முறையில் சுகாதார விளம்பரம் செய்யப்பட வேண்டியது அவசியம். சுகாதார முறையில் இவைகளை உபயோகிக்க தூண்டுதல் அவசியமாக இருக்கிறது. கிராமப்புறங்களிலே உள்ள குழந்தைகளின் பிஞ்சு உள்ளத்திலே இந்த சுகாதார முறையைப் போதித்து பழக்கத்தில் கொண்டுவர வேண்டி, இந்த வருஷத்தில் 100 பள்ளிகளில் கக்கூஸ் வசதிகள் செய்து கொடுக்கத் திட்டமிட்டு இருப்பது வரவேற்கத் தக்க விஷயம். இதை விளம்பரம் செய்வதில் ஹெல்த் விஸிட்டர்கள் பெரும் பங்குகொள்ள ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

சாதாரணமாக ஒரு ஹெல்த் இன்ஸ்பெக்டர் செய்ய வேண்டிய வேலையை டாக்டர் பட்டம் பெற்றவர்தான் கவனிக்க வேண்டும் என்று இல்லை. வளர்ந்துவரும் வைத்தியத் தேவையை கருத்தில்கொண்டு, டாக்டர் பட்டம் பெற்று ஹெல்த் ஆபீஸர்களாக இருக்கக்கூடியவர்களின் சேவையையும், வைத்தியத் துறைகளையும் பயன்படுத்திக்கொள்ள முயற்சி செய்ய வேண்டும். இன்றையதினம் அவர்கள் வீட்டு வைத்திய தேவையைக் கவனிக்க கூட அவர்களுக்குப் போதுமான பயிற்சியோ, வசதியோ இல்லை. இது பெரிய தேசீய நஷ்டம். ஆகவே, இதையும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்ளுகிறேன்.

*SRI A. GOVINDASAMY : சட்டமன்ற உதவி சபாநாயகர் அவர்களே, சுகாதார மானியத்தின் மீதும், வைத்திய வசதி மானியத்தின் மீதும் கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய தமிழ் நாட்டில் 13 மாவட்டங்களில் மூன்று மாவட்டங்களைத் தவிர, கன்னியாகுமரி, நீலகிரி, திருநெல்வேலி மாவட்டங்களைத் தவிர, இதர மாவட்டங்களிலே இருக்கக்கூடிய நரம்புச் சிலந்தி வியாதியை எந்த அளவு அரசாங்கம் கவனித்து, நடைமுறையில் அந்த வியாதி வராமலும், வந்தவர்களுக்கு தகுந்த சிகிச்சையும், அளிக்கத் தகுந்த நடவடிக்கை எடுத்து வெற்றி கண்டிருக்கிறார்கள் என்று கூர்ந்து கவனிக்கிறபோது, எதிர் பார்த்த வெற்றி கிடைக்கவில்லை என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. குடி தண்ணீர் வசதி இல்லாத காரணத்தினாலும், தேங்கிக் கிடக்கிற தண்ணீரைக் குடிக்கிற காரணத்தினாலும்தான் இந்த வியாதி ஏற்படுகிறது என்று சொல்லிவிடலாம். அது போதாது. இந்த வியாதி வந்தவர்களுக்கு அதை குணப்படுத்த எந்த எந்த வகையில் சிகிச்சை அளிப்பது என்பதை கவனிக்க வேண்டும். நமது அமைச்சர் அவர்கள் நிச்சயமாகப் பார்த்திருக்கக் கூடும்—அவரே பார்த்திருக்கிறேன் என்று சொல்லி ஒத்துக்கொள்ளுகிறார்—ஒரு Bat-க்குப் போடக்கூடிய அளவுக்கு சுருள் சுருளாக நரம்பு வந்துகொண்டே இருக்கும். ஆறு மாதத்திற்கு வெளியே நடமாட முடியாது. குணப்படுத்தினாலும், பிறகு 6 மாதம் கஷ்டப்படுகிற நிலைமை இருக்கிறது. என் மாவட்டத்தில் காடாம் புலியூர், திருக்கோவிலூர், செஞ்சி, விழுப்புரம், விருத்தாசலம், கள்ளக் குரிச்சி, முதலிய இடங்களில்தான் இவ்வியாதி மிகவும் அதிகமாக இருக்கிறது. முன்பு சுகாதார அமைச்சரிடத்தில் சொன்னபோது இதற்கு ஏதோ மருந்து கொடுக்கிறோமே தவிர, சரியான மருந்து இன்னும் கண்டுபிடிக்கப் படவில்லை என்றார்கள். அந்த நிலைமையை உடனடியாக மாற்றி அமைக்க வேண்டும். என்னுடைய நண்பர் திரு. விஸ்வநாதன், எம். எல். ஏ., அவர்களுடைய கிராமம் கொடுக்கூருக்குச் சென்று இருந்தேன். அங்கே குடி தண்ணீர் நல்ல காபி மாதிரி கலங்கி இருக்கும். அந்தத் தண்ணீரைப் பார்த்தவுடனேயே ஊருக்குப் போய்விடலாம் என்ற அருவருப்பு உண்டாகும். அவருடைய முயற்சியினால் ஒவர் டாங்க் கட்டப்பட்டிருக்கிறது என்று தெரியவந்தது. தேத்தாங்கொட்டை போட்டு தெளிய வைக்க வேண்டிய நிலைமையை ஆங்காங்கே மாற்றி அமைத்தாக வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தாய்மார்கள் சுகமாக பிரசவிப்பதற்கு உதவியாக ஸ்கில்டு மிட் ஒய்ப்ஸ்கள் போதுமான அளவுக்கு இல்லை. அது மிகவும் தேவை என்று சொல்லுகிறபோது, " At present only 2/5th of the confinements receive skilled attention " என்று சொல்லுகிறார்கள். 5-ல் 2 பாகம் மட்டும் தேர்ச்சி பெற்றவர்கள் இருக்கிறார்கள் என்றால் பாக்கி 3 பாகம் கிடைக்காததற்குக் காரணம் என்ன ? அவர்களுக்கு என் பயிற்சி கொடுக்கக்கூடாது ?

" The aim is to see that every village is attended to by qualified midwives. Since it is not possible to provide a qualified midwife for each village, a sort of training 900 Thayis for the year 1960-61 was sanctioned each Thayi being trained for six months." ஏதோ கடையில் தான் சொல்வார்கள், உப்பு இருக்கிறதா என்றால் பப்பு உந்தி என்று. அது போல இங்கே மிட் ஒய்ப் போதுமான அளவு இல்லையென்று சொல்லிவிட்டு, அவர்களுக்கு ட்ரெயினிங் கொடுப்பது பற்றி பேச்சு இல்லை. தாயிகளுக்கு ட்ரெயினிங் கொடுக்கிறோம் என்கிறார்கள். மேலும், " It is proposed to give in-service training for 180 health in-pectors instead of Doctors " என்கிறார்கள். பயிற்சிக்கு ஆள் கிடைக்கவில்லை என்பதில்லை. மிட் ஒய்ப் ட்ரெயினிங்குக்கு, நர்ஸ் பயிற்சிக்கு, மெடிகல் காலேஜுக்கு சேருவதற்குப் பலர் வந்தாலும் கூட இடம் இல்லை என்பதுதான் பெரும் குறையாக இருக்கிறது. அரசாங்கத்தின் தயக்கம்தான் இந்தக் குறைக்குக் காரணம் என்று சுட்டிக்காட்டரும்புகிறேன்.



அடுத்தாற்போல அரசாங்கம் கொடுத்திருக்கிற புள்ளி விவரங்களைப் பார்க்கிறபோது சந்தோஷமாக இருக்கிறது. ஆனால் நடைமுறையில் ஏற்படுகிற கால தாமதத்தைப் பார்த்து வருந்தாமல் இருக்கமுடியாது. நல்லவேளையாக கனம் சுகாதார அமைச்சரும், கனம் மராமத்து அமைச்சரும், இங்கே இருக்கிறார்கள். இரண்டு பேரும் இருக்கிற சமயத்தில் சொல்ல விரும்புகிறேன். 1956-ல் கடலூர் ஆஸ்பத்திரிக்கு 100 படுக்கைகொண்ட கட்டிடத்திற்கு அஸ்திவாரக் கல் நாட்டினார்கள். கனம் முதல் அமைச்சர் திரு. காமராஜர் அன்றைய ஸ்தல ஸ்தாபன அமைச்சர் திரு. ராமசாமி படையாச்சி, முந்நாள் சுகாதார மந்திரி திரு. ஏ. பி. ஷெட்டி, ஆகிய மூன்று அமைச்சர்களும் வந்திருந்தார்கள். அடுத்து 1957-ல் தேர்தல் வந்துவிட்டது. 1962-ம் ஆண்டு தேர்தல் வரப் போகிறது. இன்னும் அந்தக் கட்டிடம் கட்டப்படவில்லை. கட்டிடம் கட்டுவதற்கு 1960-ல்தான் ஆரம்பித்தார்கள். சக்கரபாணி செட்டியார் என்பவர் காண்டிராக்ட் எடுத்தார். ஆனால் அவரால் அதைப் பூர்த்தி செய்ய முடியவில்லை. அந்த ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட்டு வேறு யாருக்காவது காண்டிராக்ட் உடனடியாக விட்டால்தான் வேலை பூர்த்தியாகும் என்று P.W.D. என்ஜினீயர் சிபார்சு செய்திருக்கிறார். இருந்தாலும் இன்னும் இந்த கான்ட்ராக்ட் ரத்து செய்யப்படவில்லை. வேறு யாருக்கும் கொடுக்கப்படவும் இல்லை. கட்டிட வேலை அப்படியே பாதியில் பூர்த்தி செய்யப்படாமல் கிடக்கிறது. சக்கரபாணி செட்டியார் வேண்டியவராக இருப்பதால்தான் இந்த காண்டிராக்ட் ரத்து செய்யப்படவில்லை.

THE HON. SRI P. KAKKAN : சக்கரபாணி செட்டியார் வேண்டியவர் என்றோ, வேண்டாதவர் என்றோ ஒரு காரியம் செய்யப்படுவதில்லை. வேலை நடந்த வரையிலும் நன்றாக இருக்கிறது. பாக்கியையும் நல்ல வகையில் பூர்த்தி செய்வதற்குத் தக்க ஏற்பாடுகள் செய்துகொண்டு இருக்கிறோம்.

SRI A. GOVINDASAMY : இந்த உத்தரவாதம் கொடுத்த வரையில் நல்லதுதான். எங்களுக்கு ஒன்றும் சக்கரபாணி செட்டியார் வேண்டாதவர் என்று இல்லை. தனிப்பட்ட கருணை உங்களுக்கு வேண்டுமானால் அவர் பேரில் இருக்கலாம். அவர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர். தேர்தலுக்கு மிகவும் அனுகூலமாக உங்களுக்கு இருக்கக் கூடியவர். ஆனால் இன்னும் வேலை துவக்கப்படவில்லை. வேலூர் க்ஷயரோக ஆஸ்பத்திரிக்கும் அஸ்திவாரக் கல் நாட்டினார் திரு. காமராஜர். கல் நாட்டுவதற்கு எடுத்துக்கொள்ளப்படுகிற முயற்சி கட்டிடம் கட்டுவதில் காணோம் என்றுதான் சொல்ல விரும்புகிறேன். கடலூர் தலைமை ஆஸ்பத்திரியில் டாக்டர் மதுரம் அவர்கள் திறமையாக பணி புரிவதால், பொது மக்கள் திரளாக வைத்தியம் பார்த்துக்கொள்ள வருகிறார்கள். அவர்களுக்கு இட வசதி செய்து கொடுக்க முடியாமல் டாக்டர் கஷ்டப்படுகிறார். ஆகவே, கட்டிடத்தை உடனடியாகப் பூர்த்தி செய்யக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தனிப்பட்ட ஆஸ்பத்திரிகள், வேலூர் அமெரிக்கன் ஆஸ்பத்திரியும், திருக்கோவிலூர் ஆஸ்பத்திரியும், சிங்கிப்பட்டி ஆஸ்பத்திரியும் மிகவும் நன்றாக நடக்கின்றன. காரணம் சிறந்த டாக்டர்களை எல்லாம் அங்கே வைத்திருக்கிறார்கள். இங்கே கடலூர் ஆஸ்பத்திரியில் கிருஷ்ணன் என்ற டாக்டர் இருந்தார். டி.பி. வியாதிக்கு மிகவும் கெட்டிக்காரர். ஆனால் அவரைக் கொண்டு போய் கிராமத்தில் போட்டிருக்கிறார்கள். சிறந்தவர்களை தலைமை ஆஸ்பத்திரியில், தலைநகர ஆஸ்பத்திரியில் வைத்துக்கொள்வது எவ்வளவோ சிறந்தது. இப்படிக் கிராமத்தில் கொண்டு போய்ப் போடுவதினால், அவர்களுடைய திறமையே நமக்குப் பயன்படாமல் போகிறது. இன்னும் கஸ்தூரிபா ஆஸ்பத்திரியில் இரண்டு ஷிப்ட் என்று ஆறு, ஆறரை மணிக்கு மேல் வேலை வாங்குகிறார்கள். சேலத்தில் எப்.என்.ஓ. தவறாக நடந்தார்கள் என்று அவர்கள் பேரில் நடவடிக்கை எடுத்தார்கள். அவர்கள் மன்னிப்பு எழுதிக் கொடுத்தால் விடுவதாகச் சொல்லி, மன்னிப்பு எழுதிக் கொடுத்த பிற்பாடும் வேலையிலிருந்து நீக்கியது நியாயமில்லை.

தாங்கள் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டால், அதை மன்னிக்கும் மனப்பான்மை ஏற்படவேண்டும். அதையும் அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். ப்ரைமரி ஹெல்த் ஆஸ்பத்திரிகளில் வேலை செய்கிறவர்களுக்கு சம்பள உயர்வு கொடுக்கப்படுகிறது. அதே போல் மற்றவிடங்களிலும் வேலை செய்கிறவர்களுக்கும் சம்பள உயர்வு கொடுத்தால்தான் அவர்கள் அக்கறையோடும், ஊக்கத்தோடும் வேலை செய்ய வழி ஏற்படும். பின்னர், கோவிலூரில் ஒரு பப்ளிக் ஹெல்த் சென்டர் கட்ட முடிவு செய்து இடம் தேடுவதில் காலத்தைக் கழித்து வருகிறார்கள். அதை உடனடியாகச் செய்து தீர வேண்டும். 10,000 ரூபாய் கொடுக்க, நிலம் கொடுக்க அங்குள்ளவர்கள் முன்வந்தும் அது நடத்தப்படவில்லை. ஆகவே, கோவிலூரில் அவசியம் ஒரு பிரைமரி ஹெல்த் சென்டர் தொடங்கப்பட வேண்டும், சீக்கிரத்தில். பின்னர், விருத்தாசலம் ஆஸ்பத்திரியில் மெடர்னிடி வார்ட்ஸ் இல்லை. அங்கு ஆப்பரேஷன் தியேட்டர் இல்லை. இப்படி சொல்லிக்கொண்டே போகலாம். பெயரளவில் ஆஸ்பத்திரி என்று வைத்து நடத்தாமல் அவை மக்களுக்கு பயன் அளிக்கும்படியாக இருக்கும்படிச் செய்ய வேண்டும். பின்னர், கொடுக்கிற உணவு, கண்ட்ராக்டர்கள் அழுகிப்போன பழங்களையும், அழுகிப்போன முட்டைகளையும் கொடுக்கிறார்கள். நல்ல முட்டை, நல்ல காய்கறி எங்கே போகிறதோ தெரியவில்லை. இதையும் கவனித்து வேண்டியது செய்ய வேண்டும். பின்னர் அமைச்சர் அவர்கள் அடிக்கடி ஆஸ்பத்திரிகளுக்குப் போய்ப் பார்க்க வேண்டும். ஆஸ்பத்திரிகளில் உள்ள குறைபாடுகளைக் கவனிப்பதோடு, சுகாதார அமைச்சர் அவர்கள் சுகாதாரமாக இருக்கிறார்கள், அவர்கள் நீண்ட காலம் இருந்து ஹெல்த் மினிஸ்டர் ஹெல்தியாக இருக்கிறார்கள் என்ற நிலையை உண்டுபண்ண வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **SRI M. R. KANDASWAMI MUDALIYAR :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சபை முன் வந்திருக்கக்கூடிய ஹெல்த் மான்யக் கோரிக்கையை ஆதரித்து நான் சிற்சிலவிஷயங்கள் கூறவிரும்புகிறேன். நம் ராஜ்யத்தில் சென்ற பத்து ஆண்டுகாலமாக வைத்தியத் துறையிலும், சுகாதாரத் துறையிலும் அதிகமான அளவில் முன்னேற்றம் அடைந்திருக்கிறோம் என்பதில் எந்தவிதமான ஆட்சேபனையும் இருக்க முடியாது. தேவைக்கு தகுந்த அளவில் அபிவிருத்தி ஏற்படவில்லை என்று வேண்டுமானால் சொல்லலாமே தவிர ஏற்கெனவே உள்ளதை விட நாம் நல்ல அளவில் முன்னேற்றம் அடைந்திருக்கிறோம் என்பதில் சந்தேகமில்லை. பல நண்பர்கள் பல குறைகள் சொன்னார்கள். டாக்டர்கள் போதிய அளவு இல்லை, போதிய அளவு சுகாதார ஆபீஸர்கள் இல்லை என்று. உண்மை. நமது ராஜ்யத்தின் பற்றாக்குறையைப் போக்கி இவ்வளவு அபிவிருத்தி செய்தும் இன்னும் ஏராளமான டாக்டர்கள் தேவையாய் இருப்பதால், ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒவ்வொரு டாக்டர் நியமிக்கும் அளவு அவ்வளவு தூரம் படித்து வசதியுள்ள டாக்டர்கள் முன்வரவில்லை என்றால், படிப்புத் துறையில் கூட அதிகமான பேர்களை உற்பத்தி செய்ய முடியாத நிலை இருப்பதுதான் அதற்குக் காரணம். அதோடு நான்கு வருடங்களாக நான் சொல்லிக்கொண்டே வருகிறேன். அது இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை. ராசிபுரம் தாலுகாவில் வெண்ணந்தூரில் ஒரு பிரசவ விடுதி கட்ட வேண்டுமென்று நான்கு வருடங்களாக கேட்டுக் கொண்டே வருகிறேன். ராசிபுரம் தாலூகா ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரி தவிர, சேலம் செல்வதைத் தவிர வேறு எங்கும் ஆஸ்பத்திரியே கிடையாது. பிரசவ ஆஸ்பத்திரிக்கு போக வேண்டுமென்றால் 16 மைல்தூரம் போக வேண்டியிருக்கிறது. இது பற்றி பல முறை சொல்லியும் யாதொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை இதுவரையிலும் என்பதை நான் வருத்தத்துடன் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அங்குள்ள பெண்மணிகள் பிரசவிப்பதேயில்லை என்ற நோக்கத்தில் அமைச்சர் அவர்கள் இவ்வளவு அலட்சியமாக இதைக் கருதுகிறார்களோ என்னவோ தெரியவில்லை என்று கூட சந்தேகிக்கக்கூடிய அளவில் இருக்கிறது. அப்படியில்லையென்றால் நான்கு வருடங்களாக அங்கு ஒரு பிரசவ ஆஸ்பத்திரி வேண்டுமென்று கேட்டுக் கொண்டுவந்த போதிலும் அங்கு ஏன் ஒன்று அமைக்கப்படவில்லை. இந்த





இடம் பலகிராமவாசிகளான 30,000 ஜனத்தொகையிருக்கிறது. அப்படி ஜனத்தொகையுள்ள கிராமங்களுக்கு நடுவே ஒரு பிரசவ ஆஸ்பத்திரியிருந்தால் கிராம மக்களுக்கு அது மிகவும் சௌகரியமாகயிருக்கும். அதைக் கவனித்து அமைச்சர் அவர்கள் உடனடியாக அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பின், ஆட்டயாம்பட்டி என்பது 30,000 ஜனத்தொகையுள்ள நான்கு கிராமம் கொண்ட ஏரியா. அங்கிருந்து 13 மைல்கள் சென்று சேலத்திற்கு சென்றால் தவிர பிரசவ ஆஸ்பத்திரி மற்றயிடங்களில் இல்லை. இங்கும் ஒரு பிரசவ ஆஸ்பத்திரிக்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்குள்ள பொது மக்கள் தாங்கள் கொடுக்க வேண்டிய தொகையை கொடுக்கத் தயார். அதற்கான மனுக்களும் கொடுத்திருக்கிறார்கள். அதையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, குடிதண்ணீர் வசதி சரியாக இல்லாததின் காரணமாக பலயிடங்களிலும் பலவித வியாதிகள் வருகின்றன. திரிச்செங்கோடு, ராசிபுரம் போன்றயிடங்களில் குடிதண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்காக பல முறை விண்ணப்பங்கள் செய்து கொண்டிருக்கிறார்கள், பல ஆண்டுகளாக. அங்கு, ராசிபுரம், திரிச்செங்கோடு, இவ்விடங்களில் அவசியம் வெகு சீக்கிரத்தில் குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பின், ஆட்டயாம்பட்டி, சென்னகிரி, ராஜபாளயம், போன்றயிடங்களில் வருடத்தில் இரண்டு, மூன்று மாதங்கள் போக மற்ற நாட்களில் ஒரு குடம் தண்ணீருக்கு ஒரு அணா கொடுத்துத்தான் மக்கள் வாங்க வேண்டியிருக்கிறது. இதுபற்றியும் நான் நான்கு வருடங்களாக சொல்லிக் கொண்டே வருகிறேன். அதுமட்டுமல்ல, வரண்ட கிணறுகளிலிருந்து தண்ணீரை இறைத்து இறைத்துக் குடிப்பதினால் பல வியாதிகள் வருகின்றன. ஆகவே, இந்த இடங்களில் குடிதண்ணீர் வசதி அவசியம் உடனடியாக ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சேலம் ஜில்லா பெரிய ஜனத்தொகை கொண்ட ஜில்லா. அங்கு ஆஸ்பத்திரியில் படுக்கை வசதி போதவில்லை. இந்த ஆண்டு அதற்காக பல லட்சம் ஒதுக்கியிருந்தாலும் படுக்கைகளை அதிகப்படுத்த வேண்டும். அதோடு, குஷ்டரோகிகளுக்கு அங்கு தகுந்த வார்ட் கிடையாது. ஞாயிற்றுக்கிழமை ஒரு மணி நேரம் அல்லது இரண்டு மணி நேரம் அவர்களை வெளியில் நிறுத்தி இன்செக்ஷன் செய்து அனுப்புகிறார்கள். அதற்காக ஒரு தனி ப்ளாக் ஏற்படுத்தி குஷ்ட ரோக நோயாளிகளுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பின்னர், ஆஸ்பத்திரியில் வேலை செய்யும் சிப்பந்திகளுக்கு வேலை நிர்ணயம், இன்னின்ன வேலைகளை இன்னின்ன பேர்கள் செய்ய வேண்டுமென்ற திட்டமில்லாததால் சமீபத்தில் பலர் ஸ்ட்ரைக் செய்து, அதன் பேரில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பலர் டிஸ்மிஸ் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் மன்னிப்பு எழுதிக் கொடுத்தும் யாதொரு நடவடிக்கைகளும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. இன்னின்ன வேலையை இன்னின்னார் செய்ய வேண்டுமென்ற நிர்ணயம் இல்லாததால் தான் இந்த 20 பேர்களை டிஸ்மிஸ் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. அதனால் தான் இந்த சிக்கல் ஏற்பட்டது. இன்னின்ன உத்தியோகஸ்தர்கள் இன்னின்ன வேலைகள் செய்ய வேண்டுமென்ற நிர்ணயம் இருந்தால் இந்த சிக்கல் ஏற்படாது. வெண்ணந்தூர், ஆட்டயாம்பட்டி இவைகளின் சுற்றுப்புரத்தில் பிரசவ ஆஸ்பத்திரியே கிடையாது. அவர்கள் ஆஸ்பத்திரி ஏற்படுவதற்காக 50,000 ரூபாய் தயார் செய்திருக்கிறார்கள். ஆகவே, அங்கு ஒரு லட்சம் ரூபாய் செலவில் ஒரு ஆஸ்பத்திரி கட்டிக் கொடுக்க வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நகரத்தில் உள்ளவர்களுக்கு மட்டும் வசதி செய்து கொடுத்தால் போதாது. கிராமங்களிலும் வைத்திய வசதி செய்து கொடுக்க வேண்டும். நான்கு வருடங்களாக அங்கு பிரசவ ஆஸ்பத்திரி வேண்டுமென்று கேட்டுக்கொண்டும், அது குறித்து எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளாததுபற்றி நான் வருந்துகிறேன். இந்த ஆண்டிலாவது அதைச் செய்து கொடுக்க வேண்டும். பின்னர், குடிதண்ணீர் வசதியைப் பொறுத்த வரையில், காவேரி, பொன்னி ஆறு ஜலத்தைக் கொண்டுவந்து கொடுக்கக்கூடிய திட்டத்தை கொண்டு வந்தால் நான் மேற்குறிப்பிட்ட கிராமங்களுக்கு, அவர்கள் அணா கொடுத்து தண்ணீர் வாங்கக்கூடிய நிலை

[Sri M. R. Kandaswami Mudaliyar] [20th March 1961

ஏற்படாது. அதோடு அந்தக் கிராம மக்களும் சுகாதாரமான முறையில் வாழவும் முடியும். ஆட்டயாம்பட்டியில் சாக்கடைகள் இருக்கின்றன, நான்கு ஆண்டுகளாக நான் சொல்லியும் கூட அங்கு ட்ரெயினேஜ் கட்டி விட்டபாடில்லை. ஹெல்த் ஆபீஸர்கள் அவ்வளவு அசிரத்தையாக இருக்கிறார்கள். அங்கு உள்ள எலிமெண்டரி ஸ்கூல் முன்னால் தண்ணீர் தேங்கி கிடக்கிறது. அதுபற்றி மாணவர் சங்கத்திலிருந்து முதல் அமைச்சர் அவர்களுக்கு ஒரு மகஜர் எழுதிக் கொடுத்திருந்தார்கள். பள்ளிக்கூடத்தை விட்டு வெளியே வருவதற்கு, கீழே கால் வைக்கக்கூட இடமில்லை. அதையும் கவனித்து கிராமங்கள் சுகாதாரமாக இருக்கக் கூடிய நிலையை ஏற்படுத்த வேண்டும், கிராமங்களில் சுகாதார வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இதை அமைச்சர் அவர்கள் கவனித்து கிராமங்களில் டாக்டர்களைப் போட்டு, கிராமங்களில் சிறு சிறு டிஸ்பென்ஸரிகளாவது வைக்கவேண்டும். திரு. கோவிந்தசாமி அவர்கள், கிராமங்களுக்கு நல்ல டாக்டர்கள் தேவையில்லை என்பது சரியல்ல. நல்ல டாக்டர்களை கிராமங்களுக்கு அனுப்ப வேண்டும். நகர்புறங்களிலானால் தனி டாக்டர்கள் எவ்வளவோ பேர்கள் இருக்கிறார்கள். ஆகவே அவர்களிடமும் வைத்தியம் செய்து கொள்ளலாம். (மணியடிக்கப்பட்டது.) ஆகவே கிராமங்களுக்கு நல்ல டாக்டர்களை அனுப்பி கிராம மக்களுக்கு வேண்டிய விதத்தில் வைத்திய வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு எல்லோருக்கும் பத்து நிமிடங்கள் கொடுத்தார்கள், ஆனால் நான் ஐந்து நிமிடங்களில் முடித்துக் கொள்ள வேண்டுமென்று தலைவர் அவர்கள் சொன்னதால், இன்னும் பல விஷயம் சொல்ல வேண்டியிருக்கிறதெனினும் . . . . .

**DEPUTY SPEAKER**: கனம் அங்கத்தினர் பேச ஆரம்பித்து பத்து நிமிடங்கள் ஆகிவிட்டதே.

**SRI M. R. KANDASWAMY MUDALIYAR**: அதற்கு, எனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இத்துடன் என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

12-30 p.m. **SRI K. SATTANATHA KARAYALAR**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மருத்துவ பொதுநலசுகாதாரம் இவைபற்றிய மான்யக் கோரிக்கை விவாதத்தில் பொதுவான ஒருசில கருத்துக்களை இந்த அவை முன் வைக்க அவாவுறுகிறேன். சாதாரணமாக இந்த மருத்துவத் தொழில், ஒரு பெரிய லட்சியத்தைக் கொண்டு அமைய வேண்டியது அவசியம். **'What greater height can man attain than conquest over human pain'** என்ற ஓர் உயரிய லட்சியத்தை வைத்து மருத்துவத் தொழில் நடைபெற வேண்டியது மிக அவசியம். 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்கிற அடிப்படையில் இதில் பணியாற்றுகின்றவர்கள் வேலை செய்தால் தான் நன்றாக இருக்கும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக ஆசுபத்திரிகளில் போய் வருகின்ற நோயாளிகளுக்குத் தெரியும், அவ்விதம் ஆசுபத்திரிகளில் ஒன்றுமே நடைபெறுவதில்லை என்று. இப்படிப்பட்ட குறைகளைப் போக்குவதில் பல சிக்கல்கள் இருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடும், மருத்துவ நிபுணர்கள் அதிகமாக இல்லை என்று சொல்லக் கூடும். அதிகமான பேர்களுக்கு பயிற்சி அளிக்க வாய்ப்பும் வசதியும் இல்லை, குறிப்பாக நிதிநிலை அதற்கு ஒத்துக்கொள்ளவில்லை என்று சொல்லக் கூடும். ஆனால் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்றை மட்டும் வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன். நாட்டு வைத்தியத்தில் நல்ல சிறந்த மருந்துகள் இருக்கின்றன, அவைகள் எல்லாம் போதிய அளவிற்கு பயன்படுத்தப் படவில்லை என்பதை வலியுறுத்திக்கூற விரும்புகிறேன். எங்களூர் வட்டாரத்தில் குற்றாலம் என்கிற இடம் இருக்கிறது. அங்கே சித்த வைத்தியத்திற்காக பலர் வருவார்கள், சித்த வைத்தியம் என்றால், யுனானி வைத்தியம், சித்த வைத்தியம் என்பதை சொல்லவில்லை, சித்தக் கோளாறு, பைத்தியம் இதனால் பாதிக்கப்பட்டவர்கள் அங்கு வருகிறார்கள். அங்கே சாதாரணமான ஒருவர் சர்ப்ப கிரந்தா (ரௌல்பியா ஸர்பன்டினா) என்கிற மூலிகையின் மூலம் கஷாயம் கொடுக்கிறார்கள். அதோடு அங்குள்ள அருவியில் குளிப்பாட்டுகிறார்கள் நோயாளிகளை. இதனால் பலரும் குண



20th March 1961] [Sri K. Sattanatha Karayalar]

மடைந்து வருகிறார்கள். இந்த சர்ப்ப கிரந்தா என்கிற மூலிகையிலுள்ள "எக்ஸ்டிராக்ட்டை" (சத்தை) எடுத்துத்தான் பல ஆசுபத்திரிகளிலும் அலோபதி சிகிச்சைக்காக கொடுத்து வருகிறார்கள். அதே போன்று தான் ஆஸ்த்மா நோய்க்கும் இண்டு, இசங்கு, கர்பூரவல்லி, குருத்தக்காளி, துளசி இலைகளைச் சேர்த்து கஷாயம் போட்டு மூன்று வேளை நான்கு வேளை கொடுத்தால் மிகவும் பலன் கிடைக்கிறது என்று பலர் கூறுகிறார்கள், ஈஸ்னோபிலிஸ் என்கின்ற நோயும் இதன்மூலம் குணமடைகிறது என்று சொல்லுகிறார்கள். இம்மாதிரிப்பட்ட நோய்களுக்கு மூலிகைகள் மூலம் நல்ல குணம் கிடைக்கிறது என்று சொல்லுகிறார்கள். மேலும் ஆஸ்த்மாவுக்கு கடுமையான விஷத்தை புடம் போட்டு மருந்து தயார் செய்கின்றார்கள். இது சாதாரணமாக எல்லாக் குழந்தைகளுக்கும் கொடுக்கப்படுகிறது. இப்படிப்பட்ட பல மருந்துகள் எல்லாம் இருந்தும்கூட, விஞ்ஞான முறையில், விளக்கமான முறையில், ஆராய்ச்சி செய்யப்படவில்லை. இப்போது இந்தியன் கவுன்சில் **of research** இம்மாதிரிப்பட்ட மருந்துகளை ஆராய்ச்சி செய்வதற்காக தனியாக கமிட்டி ஒன்று நிறுவி அதனுடைய சாங்கோபாங்கமான அறிக்கையும் சர்க்கார் முன் வந்துள்ளது. குறிப்பாக குற்றாலம் வட்டாரத்தில் ஓர் ஆராய்ச்சி கூடத்தை ஏற்படுத்தி அதன்மூலம் அங்குள்ள வைத்தியர்களை எல்லாம் ஊக்குவித்து, அவர்கள் மூலமாக பல அரிய மருந்துகளை ஆராய்ச்சி செய்தால் மிகவும் நன்றாய் இருக்கும், அவ்விதம் செய்வது சாலச் சிறந்தது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பொது சுகாதாரத்தைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்ல அவாவுறுகிறேன். பொது சுகாதாரத்தை எடுத்துக்கொண்டால், நமது ராஜ்யத்தில் 3½ கோடி மக்கள் இருக்கிறார்கள், இதில் 'டியூபர்கோலின் டெஸ்ட்' 51 லட்சம் பேர்களுக்கும், 'வாக்ஸினேஷன்' 16.7 லட்சம் பேர்களுக்கும் நடந்திருப்பதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது மிகவும் குறைந்த எண்ணிக்கையாகத்தான் இருக்கிறது என்பது நமக்கு எல்லோருக்கும் தெரியும். இப்போதுள்ள நிலையில் மூன்றில் ஒருவருக்கு டி.பி. நோய் ஏற்பட்டிருக்குமோ என்று ஐயப்பட வேண்டியிருக்கிறது. இதை எப்படி நாம் தீர்க்கப் போகிறோம் என்பதைப்பற்றி நாம் கவனிக்கவேண்டும்.

கிராமங்களில் போதிய அளவு பிரசவ வசதி கிடைப்பதில்லை என்கின்ற குறை இருந்து கொண்டிருக்கிறது. இதோடு கிராமங்களில் இருக்கின்ற பழைய கால முறைகளை அனுசரித்து நடக்கின்ற மருத்துவச்சிக்கு "தாய்களுக்கு" பயிற்சி கொடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிகிறது. இப்போது 900 பேர்களுக்கும் 1960–61-ல் 4,000 பேர்களுக்கும் பயிற்சி கொடுக்கப் போவதாக சொல்லப்பட்டிருக்கிறது. இது எனக்கு மிகவும் கவலை அளிக்கக்கூடியதாக இருக்கிறது. **"changing the leopard's spots"** என்கின்ற முறையில் இது வெற்றி அடையாது. இவர்கள் இன்னும் கிராமங்களில் பிரசவத்திற்கு போக வேண்டுமென்றால், ஏற்கெனவேயுள்ள பழைய முறையிலேயே, நடந்து கொள்வார்கள் இந்த பயிற்சியின் மூலம் எந்த அளவுக்கு சீர்திருத்த முடியும், ஆதலால் இது நல்ல முறையில் சாத்தியமாகாது. சாத்தியமாகும் வெர்னகுலர் (ரெட் ஜாக்கட்) டிரெயினிங் அதிகப்படுத்த வேண்டும். தாய் பயிற்சி டெம்பரறியாகத்தான் என்று அமைச்சர் முன்னால் சொன்னார்கள். இதை டெம்பரறி என்று கூட வைத்திருக்காமல் உடனடியாக இதை கைவிட்டுவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதை நாம் நீடித்துக் கொண்டிருப்போம் என்றால், இன்றைக்கு நாட்டில் இருக்கக்கூடிய தவறானமுறைக்கு சர்க்கார் அங்கீகாரம் கொடுத்து முத்திரை கொடுப்பது போல் ஆகும், அத்தாரிட்டியோடு அவர்கள் இந்த வேலையை இனி கையாண்டு வருவதாக ஆகிவிடும். ஆகவே இதை உடனடியாக நிறுத்துவதற்கு கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் மிட்வைப்ரி டிரெயினிங்கை அதிகப்படுத்த வழிவகை செய்ய வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, இப்போது அதிகமான அளவில் டாக்டர்கள் கிடைப்பதில்லை என்றும், க்வாலிபிக்கேஷன் உள்ளவர்கள் கிடைப்பதில்லை என்றும் சொல்லப்படுகிறது. இதற்காக 'பாரா மெடிக்கல்' ஆட்களை தயார் செய்வதற

[Sri K. Sattanatha Karayalar] [20th March 1961

தாக பயிற்சி கொடுக்கப்படுவதாக தெரிகிறது. இதற்காக அதிகமான ஆட்களுக்கு பயிற்சி கொடுக்க எற்பாடு செய்யவேண்டும். அதோடு ரிசர்ச் சைடில் புதிதாக வருகின்ற எம்.பி.பி.எஸ். ஆட்களை போடாமல், நோயாளிகளை பரிசீலனை செய்வதில் இவர்களைப் போட வேண்டும். அதே நேரத்தில் ஓய்வு பெற்ற நீண்ட கால அனுபவம் உள்ளவர்களை ஆராய்ச்சி செய்கின்ற இடத்தில் நியமிக்க வேண்டும். அதனால் அதிகமான அளவில் டாக்டர்கள் இல்லை என்கின்ற குறை ஓரளவுக்கு நீங்கும் என்பதை இச்சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கிராமங்களில் இருக்கின்ற ஹெல்த் விஸிட்டர்ஸ்-க்கு அதிகமாக பயிற்சி அளிக்க வேண்டும். அவர்களுடைய எண்ணிக்கை இப்போது குறைவாகத்தான் இருந்துகொண்டிருக்கிறது. இவர்கள் பல இடங்களுக்கும் போக வேண்டியிருக்கிறது, ஃபாமிலி பிளானிங் வேலையிலும் இவர்கள் ஈடுபடவேண்டியிருக்கிறது. ஆகவே, இந்த எண்ணிக்கையை அதிகமாக்க வேண்டியது மிகவும் அவசியம் என்பதை எடுத்துக் கூற விரும்புகிறேன். அதோடு ஆசுபத்திரி வசதிகளை எடுத்துக்கொண்டால், இன்றைக்கு டிஸ்ட்ரிக்ட் லெவலில் தான் ஆசுபத்திரிகள் அபிவிருத்தி அடைந்திருக்கின்றன. தாலூகா அளவில் இருக்கக்கூடிய ஆசுபத்திரிகள் கூட அபிவிருத்தி அடையவில்லை, காரணம் கேட்டால் நிதிநிலை அனுமதிக்கவில்லை என்று சொல்லக்கூடும். ஆதலால் பல கிராமங்களை ஒன்றாகச் சேர்த்து ஒரே யூனிட்டாக ஏற்படுத்தி, அவைகளுக்கு மொத்தமாக ஒரு மொபைல் ஆசுபத்திரியை அமைத்துக் கொடுத்தால் நல்லதாக இருக்கும், இவ்விதம் 20, 25 கிராமங்களைச் சேர்த்து ஒரே யூனிட்டாக ஏற்படுத்தி, இங்கு மொபைல் ஆசுபத்திரியும் அமைத்துக் கொடுத்தால் இவர்களுடைய குறைகளை ஓரளவுக்கு நிவர்த்திக்க முடியும் என்று எண்ணுகிறேன். இதைப் பற்றி பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குழந்தைகளைப் பொறுத்தவரையில், கிரமங்களில் இவர்களுடைய சுகாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக கண் இல்லாத குழந்தைகள், செவி கேட்காத குழந்தைகள், கால் இல்லாத குழந்தைகள், கை இல்லாத குழந்தைகள் இவர்கள் எல்லாம் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை சமீபத்தில் சில பள்ளிகளுக்கும் போனபோது பார்க்கக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. கிராமங்களில் ' போலியோ ' என்பதை, சாதாரணமாக வாதம் என்று சொல்லுகிறார்கள், அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. இவர்களுக்கு நிவாரணம் கொடுக்க ஏதாவது செய்தாக வேண்டும். இந்தக் குழந்தைகள் தங்கள் வாழ்நாள் முழுவதும் சமுதாயத்திற்கு பயன்படாத நிலையில் போய்விடக் கூடாது. ஆகவே இவர்களுடைய நலனில் அரசாங்கம் மிகுந்த அக்கரை காட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, ஆசுபத்திரியில் வேலை செய்யக்கூடிய ஊழியர்களைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். பொதுவாக நான் சொல்லுகின்ற குறைகளை மந்திரிகள்கூட ஒப்புக்கொள்ள தயங்குவார்கள் என்று நம்புகிறேன். எந்த ஆசுபத்திரியிலும் கடைநிலை ஊழியர்கள் முதல், மேல்நிலையிலுள்ள ஊழியர்கள் வரை நல்ல முறையில், நாணயமான முறையில் வேலை செய்கிறார்கள் என்று சொல்ல நான் தயாராக இல்லை. எந்த ஆசுபத்திரியை எடுத்துக் கொண்டாலும், . ' ஸ்டதஸ்கோப் ' பணம் வாங்குகிறது அதனால், ' பெட்பான் ' னும் பணம் வாங்குகின்ற நிலையைத்தான் நாம் பார்க்க முடிகிறது. ஒழுக்கமாகவும், நாணயமாகவும் யார் இருக்க வேண்டுமோ அல்லது யார் அவற்றுக்கு பொறுப்போ அவர்கள் ஒழுக்கமாகவும் நாணயமாகவும் நடந்து கொள்ள வேண்டும், அப்போது தான் மற்றவர்களும் அதே போன்று நடந்து கொள்வார்கள். சட்டம் அனுமதிக்கிறது. என்று வேண்டுமானால் சொல்லக்கூடும். நான் எப்போதும் இந்த கடைநிலை ஊழியர்களிடம் வற்புறுத்துவது, நீங்கள் இந்த வேலையைச்செய்வது தன்னலமற்ற சேவையாக இருக்கவேண்டும் என்பதுதான். ஆனால் அதற்குத் தகுந்தவாறு அவர்களுக்குக் குறைந்தபட்ச எல்லா வாய்ப்பும் வசதியும் அளிக்கவேண்டும். சேவை மனப்பான்மையுடன் நடந்து கொண்டால்தான் ஆசுபத்திரிகளில் ஒழுங்காக வேலைசெய்ய முடியும் என்பதை நான் அடிக்கடி வற்புறுத்தி வந்திருக்கிறேன். அதே வற்புறுத்தல் டாக்டர்களுக்கும்



20th March 1961] [Sri K. Sattanatha Karayalar]

பொருந்தும். டாக்டர்கள் பிரைவேட் பிராக்டீஸ்-ஸில் மிக கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். நாம் கொடுக்கக்கூடிய ஊதியத்திற்கும், அவர்கள் வெளியில் சம்பாதிக்கக்கூடிய பணத்திற்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கிறது. வெளியில் அவர்கள் மாதம் ஒன்றுக்கு பிரைவேட் ப்ராக்டீஸ் மூலமாக 1,000 ரூபாய் 2,000 ரூபாய் சம்பாதித்து விடுகிறார்கள். இந்த நிலைமை அவசியம் போகத்தான் வேண்டும். அதற்கான வழிவகை செய்யவேண்டும். ஆசுபத்திரிகளில் வரக்கூடிய நோயாளிகளின் எண்ணிக்கை வர வர பெருகிக் கொண்டே வருகிறது. அதே நேரத்தில் ஆஸ்பத்திரிகளில் வேலை செய்யக்கூடியவர்களின் எண்ணிக்கையும் அதற்குத் தகுந்தபடி உயரவில்லை முன்னால் 50 பேர்ககளுக்கு ஒரு ஆள் வேலை செய்த இடத்தில், இப்போது சுமார் 60 முதல் 100 பேர்களுக்கு ஒரு ஆள் வேலை செய்கிறார்கள். ஒவ்வொரு இடத்திலும் டாக்டர்கள் எத்தனை, டிரெயினிங் டாக்டர் எத்தனை, நர்ஸ்கள் எத்தனை, தோட்டிகள் எத்தனை, லச்சீஸ் எத்தனை என்று கணக்கெடுக்க வேண்டும். எம். என்.ஓ., ஸ்டாஃப் நர்ஸ்களுக்கும் டே ட்யூட்டி, நைட் ட்யூட்டி என்றிருக்கிறது. ஒரு மனிதன் ஒரு பணியைச் செய்வதில், அதுவும் ஆஸ்பத்திரியில் பணி செய்வதில் எத்தனை நபர்களுக்கு சேவை செய்ய முடியும் என்று கணக்கு எடுக்க வேண்டும். நோயாளிகளை மட்டும் கூட்டிக்கொண்டு போனால், கீழ் மட்டத்தில் இருக்கக் கூடிய ஆட்களை அதிகப்படுத்தவில்லையென்றால் ஆஸ்பத்திரி நிர்வாகத்தில் பெரிய குறை ஏற்படும். அதன் காரணமாக சர்க்கார் மீது மக்களுக்கு கெட்ட எண்ணம் ஏற்படும். இன்றைய தினம் கனம் அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும்போது "கார்டனர், வாச்மன், தோபி, ஸ்வீப்பர்" போன்றபல இனங்களுக்கும் தகுந்த அளவு ஆட்கள் இல்லாததால், போதுமான ஆட்கள் இல்லாததால், அவர்களுக்கு வேண்டிய ஓய்வு கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். எல்லா இலாகாக்களிலும் வாராந்திர விடுமுறை இருக்கிறது. அவர்களுக்கும் அந்த உணர்ச்சி வருவது இயற்கை. தங்களுக்கும் வாராந்திர விடுமுறை வேண்டுமென்று இராதா ? அவர்களுக்கு நியாயம் வழங்கக்கூடிய முறையில் வேலையில்லாத் திண்டாட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களை எக்ஸ்சேஞ்சிலிருந்து உடனடியாகத் தருவிக்கக் கூடாதா ? எத்தனை பேர்கள் தேவை ? இவர்கள் கிடைக்கமாட்டார்களா ஒன்று, இதனை செய்யப் போகிறோம் என்று சொல்லுங்கள். இல்லையென்றால் செய்யப்போவதில்லை இந்த லிவு வசதியைக் கொடுக்கப்போவதில்லை என்று சொல்லி விடுங்கள். நம்பிக்கை கொடுத்துவிட்டு அதற்கான வாய்ப்புகளும் வசதிகளும் செய்து கொடுக்கவில்லையென்றால், நிர்வாகத்தில் இருப்பவர்களுக்கு பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. இதனால் பல சண்டை சச்சரவுகள் ஏற்படுகின்றன. இதற்கு ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுக்காத முறையில் இதை ஒழுங்குபடுத்திக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் வேண்டிக் கொள்கிறேன். கடை ரகத்தில் வேலை செய்யக் கூடிய ஊழியர்கள் பல தொழில்கள் செய்து வருகிறார்கள். தங்களுக்கு இருக்கும் பழக்கம் காரணமாக பல நிபுணத்துவமான வேலைகளைச் செய்து வருகிறார்கள். உதாரணமாக எக்ஸ்ரே யூனிட்டில் வேலை செய்யக் கூடிய எம்.என்.ஓ. தன்னுடைய அனுபவத்தில் பல வேலைகளைச் செய்து வரக்கூடியவராக இருக்கிறார். அவர்களுக்கு இருக்கும் பயிற்சி காரணமாக, அவர்கள் செய்யக்கூடிய வேலை காரணமாக சில திறமைகள் வந்திருக்கின்றன. அதை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். புதிதாக ஆட்களை எடுக்கும்போது அவர்களை கீழே இறக்கி விட்டு, அல்லது அவர்களைப் போகச் சொல்லி விட்டு, வேறு ஆட்களை நியமிப்பதால் அவர்களுடைய அத்தனை நாள் சேவை நாட்டுக்கும் நமக்கும் பயன்படாத முறையில் போகிறது. அவர்களுக்கு மேலும் பயிற்சி கொடுத்து எந்தெந்த இலாகாவில் எடுத்துக் கொள்ளலாம் என்று பரிசீலனை செய்து அவர்களைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன். வேலைக்கு வரக் கூடியவர்களுக்கு மேலே போக டெஸ்ட்களை வைத்திருக்கிறோம். உதாரணமாக ரெவின்யூ இலாகாவில் இருக்கக் கூடியவர்களுக்கு ரெவின்யூ டெஸ்ட் போன்ற டெஸ்ட்களை வைத்து அந்த டெஸ்ட்களில் பாஸ் செய்தவர்களுக்கு உத்தியோக உயர்வு கொடுப்பதுபோல, குறைந்த பட்சம் இன்ன படிப்பு வேண்டுமென்று வைத்து பிறகு சில டெஸ்ட்களை வைத்து பாஸ்செய்தால்

[Sri K. Sattanatha Karayalar] [20th March 1961

மேலே போகக் கூடிய முறையில் இன்ஸென்டிவ் கொடுக்கும் முறையில் அவர்களுக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன்.

அவசியம் டாக்டர்களுக்கும், இன்னும் மருத்துவ மனைகளில் வேலை செய்யக்கூடியவர்களுக்கும் மருத்துவ மனைக்கு பக்கத்திலேயே வீட்டுவசதி ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். கிராமாந்திரங்களில் இந்தக் குறை மிகப்பெரிய குறையாக இருக்கிறது. கிருஸ்தவ டாக்டர்கள் கிராமங்களுக்கு போனால் அவர்கள் தங்குவதற்கு சில இடங்களில் இடம் கிடைப்பதில்லை. அதைத் தவிர்க்க அந்தந்த ஆஸ்பத்திரிகளுக்கு அடுத்தபடி எல்லா மாவட்டங்களிலும் சென்னையிலும் கூட, முக்கியமான ஊழியர்கள் அத்தனை பேர்களுக்கும் குறைந்த பட்சம் 50 சதவீதத்தினருக்கு வீட்டு மனைகள் கொடுக்கும் திட்டத்தை வகுத்து அதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டும் என்று வேண்டிக்கொள்ளுகிறேன். ஒருவனுக்கு 8 மணி நேர வேலை, வாராந்திர விடுமுறை இதைப் பற்றி சர்வ தேச ரீதியில் ஐ.எல்.ஓ. மாநாட்டில் வலியுறுத்தி வலியுறுத்திக் கூறுகிறார்கள். அமெரிக்காவில் 100 ஆண்டுகளுக்கு முன்பு இதற்காக ஒரு போராட்டமே நடந்தது. இப்போது இந்த சாதாரண அம்சத்தைக்கூட நாம் நடைமுறையில் கொண்டுவரவில்லையானால் பார்ப்பவர்கள் எள்ளி நகையாடக் கூடியதாக இருக்கிறது. சுதந்திரம் பெற்று இவ்வளவு நாட்களாகியும் 8 மணி நேர வேலை, வாராந்திர விடுமுறை இவைகளை அமுல் நடத்தாமல் சர்வதேச அரங்கில் பேசுகிறோம்—ஐ.எல்.ஓ. மாநாட்டில் வலியுறுத்துகிறோம். நம் லட்சியம் ஒன்றாகவும் நடைமுறை ஒன்றாகவும் போய்விடுகிறது. ஆக, நான் பணிவோடு வேண்டிக் கொள்வது, இந்த மிகக் குறைந்த பட்ச கோரிக்கைகளை அங்கீகரித்து, ஆஸ்பத்திரிகளில் வேலை செய்பவர்களின் குறைகளைப் போக்கி பெட்பானிலிருந்து ஸ்டெதாஸ்கோப் வரையில் பணம் எதிர்பார்க்காத வகையில் அதற்கான வழிவகைகளை வகுத்துக்கொடுக்கவேண்டுமென்று கூறிக் கொள்ளுகிறேன்.

* SRI V. K. RAMASWAMY MUDALIYAR: **Mr. Deputy Speaker**, while supporting the Cut Motions moved to the Demands under discussion, I would like to make a few observations.

The first and foremost problem that is facing our State is the dearth of medical hands. This has been a very chronic problem and I am afraid the Hon. Minister has not solved this problem to the satisfaction of the public. Every hospital in the State is under-staffed and as a result, the public suffer much. What are the reasons? Have the Government probed into this matter? This has been a very long-standing cry. I would request the Government and the Hon. Minister in all earnestness to give a categorical reply as to what they propose to do to meet this long-standing problem. My submission is that the scales of pay fixed by the Government on the recommendation of the Pay Commission are not satisfactory in the case of the staff of the Medical Department when compared to the scales of pay fixed for the staff working in other sister departments. Take for instance the Assistant Engineers working in the Public Works Department. They also come under the category 'technical personnel'. When we compare the scales of pay fixed for them and the doctors, we will be able to realise the disparity in the pay scales. It may be stated that the doctors have some private practice. Well, we cannot say that all doctors have this private practice. Especially, people who are in the remotest villages cannot expect to get any substantial amount from private practice. So, the Government must in all seriousness think about the pay question and do something with a view to ameliorating the



20th March 1961] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

conditions of the doctors. Of course, more Medical Colleges are being opened. Two new College have been opened recently and the Government propose to open another college in Coimbatore. It will no doubt cost quite a lot of money. But, when we think of the expansion of this department, we must come to the irresistible conclusion that we must have more Medical Colleges. I hope the Government will take steps to open one more college, preferably at Coimbatore as early as possible. I also trust that the Government will come forward to increase the present strength of the existing medical colleges.

Sir, one reason that is adduced for the medical people not going to the villages is this. They are not given proper facilities there. The most important facility needed by them is housing. That is not given. Even though the Government may be helping the construction of lots of buildings and they themselves may be putting up houses, I wish to point out that the primary concern of the Government is to see that the doctors posted to the remotest villages are given at least decent houses to live in. Otherwise, they cannot expect these people to go and live in the villages and do some satisfactory work there. Of course, the Prime Minister has been saying that some sort of compulsory system should be introduced in this respect to make the medical graduates to go and work in the villages after taking their degree. How far it will be feasible should be seen in course of time. The present low scales of pay and the lack of proper facilities for the doctors attribute to the dearth of hands. Now, after coming out from the Medical Colleges, they prefer to set up private practice or to go and take up some appointment in the private firms where they are able to earn much more than in Government service.

Another important factor that I would like to emphasise on this occasion is to request the Hon. Minister to send more people abroad with a view to meet the needs of the City. We must have more technical personnel specialised in certain subjects without solely depending on T.C.M. or Colombo Plan aid. Also, the quota of students to be sent abroad from our State is not large when compared to other States. It should be possible for the Government to send more people who are willing to go abroad either by giving them study leave or by sending them on deputation. Otherwise, it may not be possible for us to have some experts in all the fields.

So far as post-graduates are concerned, while other States are producing them in large numbers, we are not turning out as much post-graduates as we should. What are the reasons? Our standard as compared to other States is very high and it should be appreciated. I am one of those who honestly feel that there should be high standard so far as post-graduate education is concerned. But still one redeeming factor that is confronted by the post-graduate students is this. Proper teaching facilities are not given for this post-graduate course. Even last year when I spoke on this Demand, I emphasised this point. Something must be done to give ample facilities for the post-graduate students to take up this course

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [20th March 1961

seriously so that our brilliant and talented men who are selected, should not feel discouraged if they go on appearing for two or three years. So, we want more post-graduate students and I hope this aspect of the matter would be looked into.

One other point that I wish to emphasise, which other hon. Members also have referred to on the floor of this House, is that all Taluk and District Headquarters hospitals should be upgraded and fully equipped. Of course, something has been done now but what has been done is not quite sufficient when compared to what we should do, especially when we are having a growing demand from the public. Still it should be possible for the Government to improve all these hospitals and increase the bed strength and all other things. Of course, I quite appreciate the statement of the Hon. Minister made the other day that there was an increase in the bed strength in all hospitals. But that is not sufficient. This is a very important thing and top priority should be given to it.

So far as the Madras General Hospital is concerned, we have increased its bed strength enormously. Of course, I came to understand that we are catering to the needs of the neighbouring States like Andhra Pradesh and Kerala and so many patients from those States come there and medical aid cannot be denied to those people. So, the Government should consider the question of starting another hospital outside the Madras City with a view to meet the increased needs of the people. The Committee on Estimates have also made recommendations in respect of this matter. I have already stated on previous occasions that the bed strength of all taluk and district headquarters hospitals should be increased. The bed strength of the Royapettah hospital should be increased and all facilities should be given.

Recently the Hon. Minister made a statement to the effect that a Surgical Instructions Factory would be started very soon with the Russian aid. My submission is that while I welcome this step, at the same time steps should be taken to manufacture instruments not easily available in India. Of course, we can import modern equipment but instead of that, to meet our growing and urgent needs, we must seriously think of manufacturing some instruments that are not easily available in our country. Under the Five-Year Plan, all other departments are receiving much assistance from the Centre and a sort of planning has been done. So far as this department is concerned, I think, we have not advanced to the extent to which we should have advanced, because the facilities mentioned by me have not been given. Though the department is working very satisfactorily, still I request the Hon. Minister to go into some of my suggestions in all earnestness and do something. This is all with regard to the Medical Department.

Then with regard to Public Health Department, we find from the Budget Memorandum that Rs. 64 lakhs have been allotted for the Malaria Eradication Programme and similar things. Even though some steps have been taken we have not advanced to such



20th March 1961] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

an extent as to say that all these things have been completely eradicated. Cholera, malaria and other diseases are still there. Filaria has not been controlled except in a few districts. We find that even in the Madras City, filaria is on the increase in Mambalam and other areas.

Coming to the water-supply problem, the water-supply scheme in rural and urban areas is proceeding at a snail like speed. Even in so many municipalities, we have not given adequate protected water-supply. Still the state of affairs there is very horrible and deplorable. With regard to rural areas, even under our Rural Water-Supply schemes and under the National Water-Supply and Sanitation Scheme, sufficient attention has not been paid. Though some amount is spent here and there, still I request the Hon. Minister to see that every village is provided with drinking water well, both in the cheries and in the areas where Caste Hindus live. They should see that a good potable drinking water well is sunk immediately. Top priority should be given to this and even road-making and other development schemes may be deferred. This is a very urgent problem. The water in some of the wells sunk is either brackish or not sufficient for the people in that locality. Some of the wells also should be deepened and wherever it is found that the water is brackish, they should think of sinking some bore-wells in those areas and see that fresh water is made available immediately.

So far as water-supply to the Madras City is concerned, the proposal to bring the Cauveri water to the City is before the Government and they have taken on hand the investigation of this scheme. I do not know when it is going to materialise. It is very unlikely that we may get water from Andhra Pradesh and Kerala but the population in the metropolis is growing day by day and the problem of tapping water sources either from Palar or Cheyyar which is very close by, should also be examined side by side with tapping water sources from the Cauveri and other rivers. Lastly, I find that my friend Sri Sattanatha Karayalar was also talking of the problem of employees in the hospitals. Something should be done in consultation with the Director of Medical Services to solve this problem as early as possible. They are asking for minimum hours of work and some weekly holidays. Of course the department should look into this and carefully examine the matter and see that they arrive at some amicable settlement because we cannot have a discontented staff. I am told that people there who have put in eight or nine years' service are still being continued on a temporary basis. This aspect also should be examined as early as possible. At the same time I should say that the staff also should work hard without giving any room whatsoever for any complaint.

These are some of my suggestions and I hope the Hon. Minister will take note of these suggestions and see that something is done to satisfy the public.

* **The Hon. Sri M. A. MANICKAVELU**: கனம் உதவி சபா 1-00
நாயகர் அவர்களே, இந்த டிப்பார்ட்மெண்டில் ஒன்றும் குறையில்லை, p.m.
எல்லாம் ரொம்ப சரியாக நடக்கிறது என்று சொல்லத் தயாராக இல்லை.

[Sri M. A. Manickavelu] [20th March 1961

நிர்வாகத்திலே, ஆஸ்பத்திரிகளுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுப்பதிலே குறை இருக்கிறது. சில அங்கத்தினர்கள் அதை மிகைப்படுத்தி சொன்னார்கள். சிலர் இருப்பதை இருக்கிறபடி சொன்னார்கள். இன்னும் சிலர் சொன்னது ஒரு அலாதியாக இருந்தது. இதிலே நாம் ஒன்று கவனிக்க வேண்டும். இந்த மருத்துவத் துறை மான்யத்திற்கு பணம் ரொம்ப குறைவாகக் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த மாகாணத்தில் மட்டும் அல்ல, மற்ற மாகாணங்களிலும், மத்திய அரசாங்கத்திலும் இதற்காக ஒதுக்கப்படுகிற தொகை ரொம்பக் குறைவாக இருக்கிறது. சமீபத்தில் மத்திய சுகாதார மந்திரியும், மற்ற மாகாண சுகாதார மந்திரிகளும் கூடினபொழுது "சுகாதார வசதியை அதிகப்படுத்துவதற்கு அதிகப் பணம் ஒதுக்க வேண்டும், சென்ற இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஒதுக்கிய தொகை போதாது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு எவ்வளவு பணம் ஒதுக்குகிறார்களோ அதிலே குறைந்தது 10 சத விகிதம் சுகாதாரத்திற்காக ஒதுக்க வேண்டும்" என்று ஏகமனதாக தீர்மானம் போட்டு சமர்ப்பித்திருக்கிறோம். ஆனால் ஒதுக்கப்பட்ட பணம் மிகக் குறைவாக இருக்கிறது. சுமார் 300 கோடி ரூபாய் என்று நினைக்கிறேன். மொத்தம் மூன்றாவது திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகையில் ரூ. 10,000, 10,500 கோடியில் சுகாதாரத்திற்காக ரூ.300 கோடி சில்லரை தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு காரணம் என்ன சொல்லப்படுகிறது என்றால், மருத்துவத் துறைக்கு நிறைய பணம் ஒதுக்க வேண்டியதுதான். ஆனால், இப்பொழுது இருக்கிற சூழ்நிலையில் இதைவிட அத்தியாவசியமான துறைகளுக்கு பணம் அதிகமாக செலவழிக்கவேண்டியிருக்கிறது. அதாவது, உணவு உற்பத்தி, தொழில் அபிவிருத்தி, இண்டஸ்டிரியல் டெவலப்மெண்டு ஆகிய துறைகளுக்கு அதிகப்பணம் ஒதுக்க வேண்டிய சூழ்நிலையில், இதற்கு அதிகப் பணம் ஒதுக்குவதற்கு இல்லை என்று சொல்லப்படுகிறது. "பிராஸ்பெரிடி ப்ராஜெக்ட்", அதாவது மக்களுடைய நலனுக்காக, அவர்களுடைய நன்மைக்காக அது மிக அவசியம், அதாவது மக்களுக்கு தொழில் வாய்ப்பு செய்து கொடுக்க வேண்டும், வேலை வாய்ப்பு செய்து கொடுக்க வேண்டும், முதலில் உணவுக்குச் சரியான வகையில் வகை செய்ய வேண்டும். உணவுக்கு முதலில் வகை செய்து விட்டுத்தானே மருத்துவ வசதி செய்யவேண்டும். அதுதான் "பேஸிக்", முதல் அடிப்படை உணவு தான் என்று "பிளானர்ஸ்" சொல்லுகிறார்கள். அதற்கு மேலே இருக்கிறவர்களும் இதை நிர்வகிக்கிறவர்களும் அப்படித் தான் சொல்லுகிறார்கள். அந்த அடிப்படையிலே மத்திய அரசாங்கத்திலும் சரி, மாகாண அரசாங்கங்களிலும் சரி இதற்கு வேண்டிய தொகை குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இதற்கு வேறு விதமாகவும் ஒரு வாதம் செய்யலாம். இன்னொரு வாதம் என்னவென்றால் மக்கள் நன்றாக சுகாதாரத்தோடு இல்லாமல் நல்ல திடகாத்திரர்களாக இல்லாமல் உணவு உற்பத்தி, தொழில் அபிவிருத்தி இந்த வேலைகளையெல்லாம் எப்படி சரியாகச் செய்வார்கள்? மக்கள் நோய் இல்லாமல் இருந்தால்தானே செய்ய முடியும்? அதோடு கூட ஏதோ இந்த வேலைகளெல்லாம் முடிந்த பிறகு, அதை அனுபவிக்க வேண்டுமென்றால் நல்ல சுகாதாரத்தோடு இருந்தால் தானே நன்றாக அதனுடைய பலனை அனுபவிக்க முடியும், "டெவலப்மெண்டு ப்ரொகிராமினுடைய" பலனை மக்கள் நல்ல சுகாதாரத்தோடு இருந்தால் தானே அனுபவிக்க முடியும் என்ற வாதம் இப்பொழுது தான் கொஞ்சம் தலை தூக்கிக் கொண்டிருக்கிறது. அந்த வாதத்தை இன்னும் கொஞ்சம் அதிகப்படுத்தவேண்டும். இந்த மாதிரி பிரச்னைகளைப் பற்றி இங்கு அங்கத்தினர்கள் பேசியது பற்றி வரவேற்கிறேன். மேல் சபையிலும் இம்மாதிரி வாதம் கூறப்பட்டது. அது எங்களுடைய கையை இன்னும் கொஞ்சம் பலப்படுத்தும். இப்பொழுதுதான் கொஞ்சம் கொஞ்சம் உணர ஆரம்பித்திருக்கிறார்கள், மருத்துவ துறைக்கு அதிகப் பணம் ஒதுக்க வேண்டுமென்று. அம்மாதிரி உணருகிற நிலைமைதான் இருக்கிறதே தவிர, இன்னும் பணம் தாராளமாக வருகிற நிலைமை வரவில்லை. அதற்கு நாம் மேலும் மேலும் பிரயத்தனப்பட வேண்டும். இன்னும் இந்தத் துறைக்கு அதிகப்பணம் ஒதுக்குவதற்கு நாம் பிரயத்தனம் செய்ய வேண்டும்



20th March 1961] [Sri M. A. Manickavelu]

இன்னொன்று சொல்லப்பட்டது. ஒதுக்கின பணம் செலவாகவில்லை என்று சொன்னார்கள். சுமார் 2 கோடி அல்லது 2½ கோடி ரூபாய் செலவாகவில்லை என்று சொன்னார்கள். அது எந்த வகையில் என்றால் மருத்துவத் துறையில் உள்ள பில்டிங் ஸ்கீம்ஸ் வகையில். "பில்டிங் ஸ்கீம்ஸை" பொறுத்த வரையில் ஆரம்ப காலத்தில் நிறைய சங்கடம் இருக்கிறது. போதுமான இரும்பு அப்பொழுது கிடைக்கவில்லை, சிமெண்டு கிடைக்கவில்லை. எப்படியாவது உடனடியாக கட்டிடங்களை தயார் செய்து விட்டாலும், அந்த கட்டிடங்களை உபயோகப்படுத்துவதற்கு வேண்டிய "எக்விப்மெண்டு" அதெல்லாம் கூட கிடைக்கவில்லை. அந்த சந்தர்ப்பத்தில் நம்முடைய மாகாண நிதி நிலைமையும் ரொம்பவும் கடுமையாக இருந்ததால், இந்தப் பணம் அதற்கு ரொம்ப அனுகூலமாகத் தான் இருந்தது. இந்தத் துறைக்கும் பிரயோசனப்படக்கூடிய நிலையில் இல்லை. ஆதலால் தான் ஜாடையாக அப்படியே இருந்துவிட்டோம். ஆகவே, அந்தப் பணம் அந்த அளவுக்கு செலவழிக்கப்படவில்லை.

மற்றொரு குறை ஆஸ்பத்திரிகளில் போதுமான படுக்கை வசதி இல்லை என்று சொன்னார்கள். நான் ஒத்துக் கொள்ளுகிறேன். படுக்கை வசதி முதலில் எப்படி இருந்தது என்பது பற்றி கொஞ்சம் சொன்னால், அதனுடைய நிலைமை தெரியும். முதல் ஐந்தாண்டுத் திட்டத் ஆரம்ப காலத்தில் 7,955 படுக்கைகள் இருந்தன, கவர்மெண்டு தரப்பு ஆஸ்பத்திரிகளிலே. அந்த எண்ணிக்கை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட ஆரம்பத்தில் 12,806 ஆயிற்று. பிற்பாடு இரண்டாவது திட்ட காலத்தில், சுமார் 4 வருஷ காலத்தில் 3,820 படுக்கை அதிகப்படியாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. 1960-61-ல் 244 படுக்கை சேர்க்கப்பட்டது. 1961-62-ல் 1,604 படுக்கைகள் அதிகப்படியாகச் சேர்ப்பதற்குத் திட்டம் இருக்கிறது. ஆகையால் மொத்தம் ஆரம்ப காலத்தில் 7,955 படுக்கைகளாக இருந்தது, 1961-62-ல் 18,477 படுக்கைகள் அளவுக்கு ஆகும். படுக்கைகளை அதிகப்படுத்துவதென்றால் வெறும் கட்டில்களையும், படுக்கைகளையும் போடுவதென்பது இல்லை. அந்தப் படுக்கைகளுக்குத் தகுந்தமாதிரி, டாக்டர்கள், நர்ஸ்கள், மருந்து முதலிய வசதிகள் ஆசியவற்றை எல்லாம் அதிகப்படுத்த வேண்டும். படுக்கை வசதிக்கு "கன்காமிடண்டாக" இருக்கிற வசதிகளையும் அதிகப்படுத்தியாக வேண்டும். ஆகையால் இதையெல்லாம் ஆலோசித்துத்தான் செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே, அந்த அளவிற்குத்தான் படுக்கைகளை அதிகப்படுத்த முடிந்திருக்கிறது. இப்பொழுது அதிக படுக்கைகளுக்குத் தேவை இருக்கிறது. 20, 30 வருஷங்களுக்கு முன்னால் ஜனங்கள் அதிகமாக ஆஸ்பத்திரிகளுக்குப் போகும் பழக்கம் இல்லை. இப்பொழுது ஜனங்கள் எல்லாவற்றிற்கும் ஆஸ்பத்திரிகளுக்கு வருகிறார்கள். அந்த மனப்பான்மை ஜனங்களுக்கு வந்திருக்கிறது. அதோடு ஜனத்தொகையும் அதிகமாகியிருக்கிறது. இம்மாதிரி காரணங்களினால் அதிகப் படுக்கைகள் நமக்கு தேவைப்படுகின்றன.

படுக்கை எண்ணிக்கை இவ்வளவு இருக்கும்பொழுது அதற்கு வேண்டிய சிப்பந்திகள் போதவில்லை என்று சொன்னார்கள். வாஸ்தவம்தான். நிர்வாகத்தில் எப்படியிருக்கிறது என்றால், ஒவ்வொரு ஆஸ்பத்திரிக்கும் "சாங்ஷண்டு பெட் ஸ்டெரெங்த்" என்று இருக்கிறது. உதாரணமாக திருவல்லிக்கேணி பெண்கள் ஆஸ்பத்திரியில் சாங்ஷண்டு பெட் ஸ்டெரெங்த் 525. அதற்கு மேல் சாதாரணமாக 25 சத விகிதம், 40 சத விகிதம் அதிகமாக நோயாளிகள் இருக்கிறார்கள். "சாங்ஷண்டு ஸ்டெரெங்த்"-க்குத் தகுந்த மாதிரிதான் மற்ற வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. அதாவது டாக்டர்கள், மற்ற சிப்பந்திகள் போன்ற வசதிகளெல்லாம் "சாங்ஷண்டு ஸ்டெரெங்த்" அடிப்படையில் தான் செய்து கொடுக்கப்படுகிறது. ஆனால் அதற்கு மேலே நோயாளிகளின் எண்ணிக்கை இருக்கிறது. அதை "ப்ளோடிங் பாபுலேஷன்" என்று தான் வைத்துக் கொள்ளவேண்டும். அதையும் அங்கீகரித்து, அந்த அளவிலே செய்ய வேண்டும் என்று சொன்னால் அப்படிச் செய்யக் கூடும். இல்லை, அந்த மாதிரி எல்லாம் ஒன்றும் பார்க்க வேண்டாம், "ஸ்டிரிக்டாக" இருந்து விடலாம், "சாங்ஷண்டு ஸ்டெரெங்த்துக்கு" மேல் யாராவது நோயாளி வந்தால், இடம் கிடையாது என்று சொல்லிவிடலாம். ஆனால் அம்மாதிரி நோயாளிகளைச் சொல்லக்கூடாது

என்பதினால்தான் இம்மாதிரி "சாங்ஷண்டு ஸ்டெரெங்த்-க்கு மேலும் நோயாளிகள் அனுமதிக்கப்படுகிறார்கள். ஒரு ஆஸ்பத்திரியில் 500 பேர்கள் தான் "சாங்ஷண்டு ஸ்டெரெங்த்" என்றால், அதற்குமேல் ஒருவர் கூட சேர்க்க வேண்டாம் என்று சொல்லிவிடலாம் என்றால், நோயாளிகளே "எப்படியாவது எங்களை சேர்த்துக்கொள்ளுங்கள், நாங்கள் கீழேயாவது படுத்துக் கொள்ளுகிறோம், எப்படியாவது இடம் கொடுக்கவேண்டும்" என்று கேட்கிறார்கள். இது பற்றி ஒரு 'ப்ளெபிஸைட்' எடுத்தால், வாக்கெடுப்பு எடுத்தால்—பல பேர்கள் பேச்சிலிருந்தே தெரிகிறது—கொஞ்சம் தொந்தரவு இருந்தாலும் இருக்கட்டும். எப்படியாவது இடம் கிடைத்தால் போதும் என்று தான் சொல்லுவார்கள். இம்மாதிரி டாக்டர்கள் விதிக்கு முரணாக அதிகமான நோயாளிகளைச் சேர்க்கிறார்கள் என்றால், அவர்கள் ஒரு "ஹ்யூமன் பீலிங்" பேரில் தான் சேர்க்கிறார்கள். இம்மாதிரி அதிகமான "பேஷண்டுகள்" இருந்தால் அவர்களுக்குக் கஷ்டம் தான். இருந்தாலும், நோயாளிகளின் பேரில் உள்ள அனுதாபத்தினால் தான் படுக்கை எண்ணிக்கைக்கு மேல் ஜாஸ்தியாக இருந்தாலும் அனுமதிக்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்திலே இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். நம்முடைய நாட்டின் பண்பு, இந்த வைத்தியத் துறையில் மாத்திரமல்ல ராணுவத் துறையிலும் கூட நான் படித்திருக்கிறேன், ரொம்பவும் உயர்ந்த முறையில் இருக்கிறது. ராணுவத்திலே ஐரோப்பிய சிப்பாய்கள் காலையிலே பெட் டீ, 8 மணிக்கு ரொட்டி, பழம், இவைகளையெல்லாம் சரிவர கொடுத்தால்தான் அவர்கள் கிரம்பிள் பண்ணாமல் வேலை செய்வார்கள். நம்முடைய பண்பு அப்படிப்பட்டது இல்லை. காப்பி இருக்கிறதோ, இல்லையோ, சாதத்தில் தண்ணீர் போட்டுக் குடித்து விட்டுச் சண்டைக்குப் போகிறோம். இந்த மாதிரி பண்பு நம் நாட்டிலே இருப்பதனால்தான், இவ்வளவு இடைஞ்சல்களையும் பொறுத்துக் கொண்டு, நம்முடைய டாக்டர்கள் மக்கள் நோயினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்களே, ஓரளவுக்கு அவர்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்ற அளவிலே, அதிகப்படியான நோயாளிகளை அனுமதித்துக் கொண்டு, சிகிச்சை செய்து கொண்டு வருகிறார்கள். வேறு வெளி நாடாக இருந்தால் ராணுவத்திலே ஏற்படுகிற நிலைமை தான் ஏற்படும். அந்த அளவுக்கு நம் நாடு போகவில்லை.

* **SRI A. GOVINDASAMY** : கனம் அமைச்சர் அவர்கள் பேசுகிற பாணியைப் பார்த்தால், ஏதோ ஆஸ்பத்திரியில் நோயாளிகளைச் சேர்க்க வேண்டாம் என்று நாங்கள் சொல்லுகிற மாதிரி பேசிக்கொண்டு போகிறார்கள். நோயாளிகள் தரையிலே படுப்பதற்குப் பதிலாக படுக்கையிலே படுப்பதற்கு என்ன வசதிகள் செய்திருக்கிறார்கள் என்பதைத்தான் கனம் அங்கத்தினர்கள் அறிய விரும்புகிறார்கள். டாக்டர்கள் அதிகப்படியான நோயாளிகளை அனுமதிப்பது தவறு என்று யாரும் சொல்லவில்லை.

**THE HON. SRI. M. A. MANICKAVELU** : கீழே மாத்திரம் படுக்கவில்லை, பக்கத்திலே பாய் போட்டுப் படுக்கிறார்கள். கட்டிலுக்கு அடியிலே கூடப் படுக்கிறார்கள் என்றெல்லாம் சொல்லப்பட்டது. இந்த விதியை ரொம்பவும் கண்டிப்பாக அனுசரித்தால், எல்லோரும் கட்டிலிலே படுக்கலாம். ஆனால் இப்பொழுது இருக்கிற நிலையிலே, அதைக் கொஞ்சம் தளர்த்தினால் தான் நோயாளிகளுக்குச் சிகிச்சை செய்ய முடியுமென்று செய்கிறார்கள், ஏழைகளைப் பற்றி எவ்வளவு எல்லாமோ பேசுகிறோம். ரொம்பவும் ஸ்டிரிக்ட்டாகப் பார்த்தால் ஏழைகளுக்கு இடமில்லாமல் போய்விடும். அதனால் தான், கூடுமான வரையில், சாங்ஷண்டு பெட் ஸ்டிரெங்த்துக்கு மேலே கூட அனுமதிக்கிறோம். எந்த அளவுக்கு முடியுமோ, அந்த அளவுக்கு தான் அனுமதிக்கிறோம். இருக்கும் நோயாளிகளைப் பார்த்து அதற்குத் தகுந்தவாறு செய்கிறோம். ப்ளோட்டிங் பேஷண்டுகள் நிறைய வருகிறார்கள். 25 முதல் 40 சதவிகிதம் வரை டீச்சிங் ஆஸ்பத்திரிகளிலே, அதாவது ஜெனரல் ஆஸ்பத்திரி, மதுரை ஆஸ்பத்திரி போன்ற ஆஸ்பத்திரிகளிலே கிளினிகல் ஸ்டடி செய்வதனால் இந்த மாதிரி ஆஸ்பத்திரிகளிலே 20 அல்லது 25 சத விகிதத்திற்கு மேல் சேர்க்கக் கூடாது என்று சொல்லியிருக்கிறோம். மற்ற ஆஸ்பத்திரிகளிலே கொஞ்சம் அதிகமாக இருந்தால் பரவாயில்லை என்று அளவிலே ஏற்பாடு செய்து வருகிறோம்.



எந்த அளவுக்கு ஆஸ்பத்திரிகளில் படுக்கைகளின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது என்று கேட்டார்கள். எங்கெங்கே படுக்கை ஸ்டிரெங்த் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்கிறேன். செங்கற்பட்டிலே 200 படுக்கைகள் கொண்ட ஆஸ்பத்திரி அநேகமாகக் கட்டி முடிகிற தருவாயில் இருக்கிறது. கடலூரிலே 100 பெட்டுகளுக்காக வேலை செய்யப்பட்டு வந்தது. திடீரென்று வேலை நிறுத்தப்பட்டுவிட்டது. காரணம் கண்டிராக்டர்களால் ஏற்பட்ட கோளாறு. துரிதப்படுத்துவதற்கு முயற்சிகள் எடுத்துக் கொண்டு வருகிறோம். சின்ன வீடாக இருந்தால் உடனடியாக ஏதாவது நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம். ஆனால் லட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்யும்பொழுது, எந்த முறையில் கான்ஸல் செய்யவேண்டுமோ சடங்குகளை எல்லாம் பார்த்து, செய்ய வேண்டும். அதைச் சீக்கிரம் முடிக்க வேண்டுமென்பதுதான் சர்க்காருடைய உத்தேசம். என்னுடைய சகா அமைச்சர் முயற்சி எடுத்துக் கொண்டு வருகிறார். பாளையம்கோட்டையில் 250 படுக்கையுள்ள ஆஸ்பத்திரிக்கு ஏற்பாடாயிருக்கிறது. நல்ல இடம். ரொம்ப நன்றாய் அமைந்திருக்கிறது. ஆனால் கனம் அங்கத்தினர் திருநெல்வேலியில் குறைவாகச் செலவு பண்ணியிருக்கிறார்கள் என்று சொன்னார். அங்கு அந்த ஒரு ஆஸ்பத்திரியே 15 லட்சம் ரூபாய் செலவில் ஏற்படுகிறது. பெண்கள் ஆஸ்பத்திரியைப் பற்றிச் சொன்னார்கள். பெரிய ஆஸ்பத்திரிக்கு அங்கே ஏற்பாடு செய்தாலும், மெட்டர்னிட்டிக்கும் பிரயோஜனப் படுத்திக் கொள்ள வேண்டுமென்றுதான் நினைக்கிறேன். அந்த முறையிலே சௌகரியம் செய்யப்படும். நாகர்கோவிலில் 100 படுக்கைக்குத் திட்டமிட்டு வேலை செய்யப்பட்டு வருகிறது. வேலூரிலே படுக்கை எண்ணிக்கையை அதிகப்படுத்த ஏற்பாடு ஆகியிருக்கிறது. சுமார் 100 படுக்கைக்கு வசதி செய்யப்படுகிறது. சேலத்திலே 80 படுக்கைக்கு வசதி செய்யப்படுகிறது. கோயம்புத்தூரிலேகூட 100 படுக்கைக்கு கட்டி முடிந்தாய் விட்டது. இன்னும் சில நாட்களிலே திறக்கப்படும். தஞ்சையிலே 500 படுக்கைக்கு வசதி செய்யப்படுகிறது அது ஒரு டீச்சிங் ஆஸ்பத்திரி. காலேஜ் வருகிறது. கட்டிடத்தைப் பற்றி அங்கத்தினர் திரு. சுப்பிரமணியம் சொன்னார். முதலிலே கொஞ்சம் காலதாமதம் ஆகிவிட்டது. முதலிலே ஒரு இடத்திலே காலேஜ் கட்டுவதற்கு அஸ்திவாரக் கல் நட்டாகி விட்டது. இருந்தாலும் நாட்கள் பே. கப்போக அதை அதிகமாக விஸ்தரிப்பதற்கு இடம் போதாது என்ற காரணத்தினாலே, இங்கே போட்ட அஸ்திவாரத்தை அங்கே போட்டால்கூட பரவாயில்லை என்று நினைத்து, இப்பொழுது வேறு இடத்தில், சுமார் 100 ஏக்கர் விஸ்தீரணமுள்ள இடத்திலே, காலேஜ், ஆஸ்பத்திரி, டாக்டர்களுக்கு இடம் எல்லாம் ஒதுக்கி, கட்டட வேலை நடந்து கொண்டு வருகிறது. இப்பொழுது மதுரையிலே படிக்கிறார்கள். இந்த வருஷத்திலே ஒரு **batch** அங்கே படிப்பதற்கு ஏற்பாடு செய்யலாமென்ற நம்பிக்கை இருக்கிறது. அதற்கு முயற்சி செய்யப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரம்பலூர், ஆத்தூர், விழுப்புரம் இந்த இடங்களிலே 20, 15, 40 என்ற அளவிலே படுக்கை விஸ்தரிக்கப்படுகிறது. அதோடு மற்ற இடங்களிலும் விஸ்தரிக்கப்பட்டு வருகிறது. மாயவரத்தில் 40, திண்டுக்கல்லில் 60, மேலூரில் 40, நிலக்கோட்டையில் 32, திருமங்கலத்தில் 42 இப்படிப் பல இடங்களில் 468 படுக்கைகளுக்கு வசதி செய்யப்படுகிறது. ஒவ்வொரு ஸ்டேஜிலே வேலை நடந்து கொண்டு வருகிறது. எந்த அளவுக்குப் படுக்கை வசதியை அதிகப்படுத்த முடியுமோ அந்த அளவுக்குச் செய்யப்பட்டு வருகிறது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

க்ஷயரோக ஆஸ்பத்திரியைப் பொறுத்த வரையில் சர்க்கார் தரப்பிலே கிடைக்கக்கூடியது 2,145 படுக்கை. அதோடு மற்ற ஆஸ்பத்திரிகளிலே 20 வார்டுகள் இருக்கின்றன. அதிலே 439 படுக்கைக்கு வசதி இருக்கிறது தாம்பரம் டி.பி. சானடோரியத்திலே 548 படுக்கைக்கு வசதி இருக்கிறது. ஈ.எஸ்.ஐ. ஸ்கீம் பிரகாரம் இன்னும் 26 படுக்கை அடங்கிய 2 வார்டுகள் கட்டுவதற்கு ஏற்பாடு ஆகிக் கொண்டு வருகிறது. பெண் மாணவிகளுக்கு 12 படுக்கை கொண்ட ஒரு வார்டும் அங்கே ஏற்பாடாகிக்கொண்டு வருகிறது. வட ஆற்காடு ஜில்லாவிலே, வேலூருக்கு 4 மைல் தூரத்திலே

[Sri M. A. Manickavelu] [20th March 1961

100 படுக்கைகள் அடங்கிய க்ஷயரோக ஆஸ்பத்திரிக்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. ஆஸ்பத்திருக்கு ஏற்பாடு செய்ததெல்லாம் வாஸ்தவம் தான். ஆனால் பிளானிலே சில மாறுதல்கள் செய்யவேண்டி வந்தது. முன்பு எல்லாம் ஆஸ்பத்திரிக்கு திடமான கதவு எல்லாம் வைத்துக் கட்டவேண்டியிருந்தது. இப்பொழுது அந்த மாதிரிச் செய்யவேண்டியதில்லை என்று இருக்கிறது. எக்ஸ்பாண்டட் மெடல் போடலாம். பணம் வைக்கிற கஜானுவுக்குத்தான் இரும்புக் கதவு வேண்டும். ஆஸ்பத்திரிக்கு அப்படி வேண்டியதில்லை. சாதாரணமாக இருந்தால் போதும். எல்லாம் மாறிக்கொண்டு வருகிறது. நம்முடைய நாட்டிலே மட்டுமல்ல, மேல் நாட்டிலே கூட டைப் டிசைனை மாற்றிக் கொண்டு வருகிறார்கள். அந்த முறையில் மாற்றி அமைப்பதிலே காலதாமதம் ஏற்பட்டுவிட்டது.

ஓட்டேரியிலே 140 படுக்கை கொண்ட ஆஸ்பத்திரிக்கு வேலை நடந்து கொண்டு வருகிறது. சாதாரண ஆஸ்பத்திரிக்கு என்ன செலவு ஆகிறதோ, அதைவிட எத்தனையோ மடங்கு க்ஷயரோக ஆஸ்பத்திரிக்குச் செலவாகிறது. சாதாரண ஆஸ்பத்திரியில் 10 அல்லது 15 நாள் அல்லது ஒரு மாதத்தில் டிஸ்சார்ஜ் ஆகிவிடலாம். ஆனால் இங்கே மாதக் கணக்கிலே, வருஷக் கணக்கிலேகூடப் போகிறது. சீக்கிரம் படுக்கை காலியாவது இல்லை. மேல் நாடுகளிலே ஒரு புதுமுறையை அனுஷ்டிக்கிறார்கள். அதாவது டொமிசிலரி டிரீட்மெண்ட் என்று பெயர். ரொம்பவும் அட்வான்ஸ்டு ஸ்டேஜ்லே இருந்தால்தான் ஆஸ்பத்திரியிலே சேர்த்துக் கொள்வார்கள். சாதாரண நோய்களுக்கு ஆஸ்பத்திரியிலே வேண்டியதில்லை. இருக்கிற இடத்திலேயே மருந்து கொடுத்துச் செய்யலாமென்ற முறை இருக்கிறது. அந்த அளவுக்குத்தான் க்ஷயரோக ஆஸ்பத்திரிக்கு வசதி செய்து கொடுக்க முடிகிறது. அம்மாதிரிப் பிரைவேட் ஆஸ்பத்திரிகளும் இருக்கின்றன. சிங்கிப் பட்டியில் இருக்கும் ஆஸ்பத்திரி பற்றிச் சொன்னார்கள். அது நன்றாக வேலை செய்கிறது. நாங்களும் அதற்குப் பணம் கொடுத்திருக்கிறோம். முதலில் 30 ஆயிரம் கொடுத்தோம்: பிற்பாடு ஒரு 30 ஆயிரம் கொடுத்தோம் அவர்கள் கேட்டார்கள், மத்திய சர்க்கார் கிராண்டாக, ஒரு லட்சம் ரூபாய். அதையும் மத்திய சர்க்காருக்குச் சிபாரிசு செய்தோம். அவர்கள் 50 அல்லது 60 ஆயிரம் கொடுத்தார்கள் என்று நினைக்கிறேன். அவர்களுக்கும் கஷ்டம் இருக்கிறது. பல இடங்களிலிருந்து வேண்டுகோள்கள் வந்தால், ஒவ்வொரு இடத்திற்கும் கொஞ்சம் கொஞ்சம் கொடுக்க வேண்டியிருக்கிறது. எந்த அளவுக்கு உதவிசெய்ய முடியுமோ அந்த அளவுக்குச் செய்கிறார்கள். கடலூரில்கூட டி.பி. அசோசியேஷன் மூலமாக ஏகப்பட்ட பணத்தைச் செலவு செய்து கட்டிடத்தைக் கட்டிவிட்டு, அதன் பிறகு ஒன்றும் செய்ய முடியாமல் கஷ்டப்பட்டார்கள். நோயாளிகளுக்குச் சிகிச்சை கொடுக்க முடியாமல் முறையிட்டார்கள். அதை அப்படியே விட்டுவிட்டால், கட்டிடத்தில் போட்ட 1½ லட்ச ரூபாய் வீணாகப் போய்விடும். ஆகவே அரசாங்கம் 50 அல்லது 60 ஆயிரம் ரூபாய் கொடுத்து உதவி செய்தது. இப்பொழுது அங்கே 20 பேஷண்டுகள் இருக்கிறார்கள். அது ஒரு பிரைவேட் ஆஸ்பத்திரி. அரசாங்கம் கூடுமான வரையில் உதவி செய்கிறார்கள். திருச்சியில் இருக்கிறது. பெருந்துறையில் இருக்கிறது. கட்டிடத்திற்குப் பணம் கேட்டார்கள். மத்திய சர்க்காரிடம் நாங்கள் முறையிட்டோம். இதற்கும் அவர்கள் பணம் கொடுப்பார்கள் என்று நம்புகிறேன்.

மெடர்னிடி விஷயமாக சொல்லப்பட்டது. முன்பெல்லாம் இருந்ததை விட இன்றைக்கு அதிக வசதிகள் வேண்டியிருக்கிறது. இரண்டாவது திட்ட காலத்தில் மெடர்னிடி சென்டர்கள் 480-க்கு மேல் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த சென்டர்களெல்லாம் ஸ்தல ஸ்தாபனக்காரர்கள் பொறுப்பு. சில பேக்வர்ட் ஏரியாக்களில் அரசாங்கமே ஏற்படுத்தி நடத்துகிறார்கள். இன்றைக்கு இந்த பிரசவ விடுதி விஷயத்தில் அதிகச் செலவு செய்ய வேண்டியிருக்கிறது, அதிக வசதிகள் அளிக்க வேண்டியிருக்கிறது. 40, 50 வருஷங்களுக்கு முன்னே, ஜிப்ஸி என்கிற குருவிக்காரர்கள் இருக்கிறார்களே அவர்கள் போய்க் கொண்டே இருப்பார்கள். பிரசவம் ஆகிவிடும். அந்த அம்மாள் உடனேயே ஸ்நானம் செய்து விட்டு



20th March 1961] [Sri M. A. Manickavelu]

வேலைக்குப் போக வேண்டும். அப்படியில்லையென்றால், She is not fit to be a member of the community. அவர்கள் அவ்வளவு தேக திடகாத்திரத்துடன் இருந்தார்கள். தாய்மார்கள் கோபித்துக் கொள்ளக் கூடாது. இன்றைக்குப் பெண்கள் மேல் அலங்காரத்தைத் தான் பிரதானமாகக் கருதுகிறார்கள். தேகத்தை திடகாத்திரமாக வைத்துக் கொள்ள கவனம் செலுத்துவது இல்லை. அந்தக் காலத்தில் நல்ல வேலை செய்வார்கள், நெல் குத்துவார்கள். இப்பொழுது என்ன, கையில் ஹேண்ட் பாகை வைத்துக் கொண்டு போகிறார்களே தவிர, திடகாத்திரமாக இல்லை.

**Sri K. SATTANATHA KARAYALAR**: It applies to both sexes.

**The Hon. Sri M. A. MANICKAVELU**: மேல்ஸ் எங்கே பிரசவிக்கிறார்கள்? (பலத்த சிரிப்பு.)

**Sri K. SATTANATHA KARAYALAR**: I am talking of their health.

**The Hon. Sri M. A. MANICKAVELU**: I am talking of "பிரசவம்" only. ஆகையினால், சுகாதாரமாக இருக்க, நிறையச் சாப்பிட்டால் மட்டும் போதாது, பேலன்ஸ்ட் டையட்டாக இருக்க வேண்டும். இந்தக் காலத்தில் நல்ல ப்ரொடீன், சத்துக்கள் உள்ள உணவுகள் நிறைய இருக்கின்றன. இவைகளெல்லாம் எக்ஸிபிஷனில் காட்டப்படுகிறது. சொல்லிக் கொடுக்கிறார்கள். இந்தக் காலத்து ட்ரெண்ட் அப்படியிருக்கிறது. அதற்குத் தக்கபடி ஏற்பாடுகள் செய்தாக வேண்டும்.

தாயீஸ் பற்றிச் சொன்னார்கள். அவர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. சாதாரணமாக மருத்துவச்சிகள் இருக்கிறார்கள். அவர்களை அப்படியே விட்டுவிட்டால், அது தப்பான முறையையே வளர்க்கும். அவர்களுக்கு ஒரு நாலு மாதத்திற்கு பயிற்சி அளித்து விட்டால் அதிகத் தீங்கு செய்ய மாட்டார்கள்.

அதற்கு ஒரு rough and ready training for a short time கொடுத்தால் அது ரொம்ப நலமாக இருக்கும் என்று அம்மாதிரி செய்யப்படுகிறது. அது ஒரு டெம்பரரி பேஸிஸ்.

**Sri A. GOVINDASAMY**: "It is proposed to continue the scheme and train about 4,000 Thayis during the Third Plan period at the rate of 800 per year" என்று இருக்கிறதே; அது டெம்பரரியா அல்லது பர்மனெண்டா.

**The Hon. Sri M. A. MANICKAVELU**: Temporary does not mean temporary for days. These people should have some regulated training. It is rough and ready training for a short time. As it is they are without rudimentary knowledge. To give them at least some training, rough and ready training, is what is envisaged. We will have to welcome that. That is the idea with which we are training these Thayis.

**Sri K. SATTANATHA KARAYALAR**: They are allowed to serve life-time.

**The Hon. Sri M. A. MANICKAVELU**: So many will become old and go. Somebody will come. Some could be employed. They won't be left in the lurch.

மெடிகல் காலேஜ் பற்றிச் சொல்லப்பட்டது. இன்றைக்கு 550 மாணவர்களுக்கு இடம் இருக்கிறது. இருக்கும் காலேஜ்களிலேயே இன்னும் அதிகமாக இடம் ஏன் செய்யக் கூடாது என்றால், அதுவும்தான்

[Sri M. A. Manickavelu] [20th March 1961

செய்யப்படுகிறது; 15, 20 என்ற அளவில் செய்யப்படுகிறது. ஸ்டைபெண்ட் கொடுத்து ஏன் கிராமங்களில் வேலை செய்வதைக் கட்டாயமாகச் செய்யக் கூடாது என்று கேட்கப்பட்டது. அப்படிச் செய்வதனால் இன்றைக்கு இருக்கும் மாணவர்களுக்கு ஆரம்பித்தால், இன்னும் ஆறு வருஷத்திற்குப் பிறகுதான் அவர்கள் அம்மாதிரி வேலைக்குக் கிடைப்பார்கள். அதற்குள்ளாகவே, இந்த 5, 6 வருஷத்திலே நமக்கு வேண்டிய டாக்டர்கள் கிடைத்து விடுவார்கள். அந்தக் காலத்தில் நம் பொஸிஷன் ஈஸ் ஆகிவிடும். அதிகமாக காலேஜ்களிலிருந்து படித்த மாணவர்கள் வெளி வருவார்கள். ஆகவே இந்தக் கட்டாயம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. எந்தக் காரியத்திலும் கட்டாயப் படுத்தினால் நல்ல வேலை செய்ய மாட்டார்கள். அதற்கு அவசியமும் இல்லை. இன்றைக்கு ஸ்டைபெண்ட் கொடுத்தால் இன்னும் ஆறு வருஷத்திற்குப் பிறகு தான் நமக்கு டாக்டர்கள் கிடைப்பார்கள். அதனால் தான் அதில் அதிக கவனம் செலுத்த வில்லை.

குடிதண்ணீர் விஷயம் மிகவும் முக்கியமானது. ஒத்துக் கொள்ளுகிறேன். மத்திய சர்க்காரும்கூட அதை நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். அவர்களும் சொல்லுகிறார்கள், மற்ற எதுவும் செய்தாலும் செய்யாவிட்டாலும், குடி தண்ணீர் வசதி எல்லா இடத்திலும் செய்தாக வேண்டும் என்று. ஆகவேதான் இதன் அவசியத்தை உணர்ந்து மத்திய சர்க்கார் ஒரு கமிட்டியை ஏற்படுத்தியிருக்கிறது. அந்தக் கமிட்டிக்கு நம் ஸ்தாபன அமைச்சர் தலைமை வகித்து அநேக இடங்களுக்குச் சென்று பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த கமிட்டியின் ரிப்போர்ட் வந்ததும் பெரிய அடிப்படையில் எல்லா கிராமங்களுக்கும் எப்படி வசதிகள் செய்யலாம் என்று பார்த்து வேண்டிய காரியங்கள் செய்யப்படும். அது ஒரு பெரிய பரிசீலனையானபடியால், அதற்குப் பெரிய அளவிலே ஒரு திட்டம் வேண்டும். அதை எந்த விதத்தில் செய்வது என்று எல்.டி. ஒர்க்ஸ் ஆகவா, அல்லது வேறு எந்த வகையில் என்று தீர்மானித்துச் செய்ய வேண்டும். சாதாரண ஸ்கீமானால், அதில் மக்கள் பங்கும், ராஜ்ய சர்க்கார் பங்கும்தான் அதிகமாக இருக்கும். அதையே நாஷனல் வாடர் ஸப்ளை ஸ்கீமாகச் செய்தால், அதில் 95 பர்செண்ட் மத்திய சர்க்காரே கொடுப்பார்கள். ஆகவே தண்ணீர் வசதி பற்றி நல்ல கவனம்
1-30 p.m. செலுத்தப்படுகிறது. சென்னை குடிதண்ணீர் வசதியைப் பற்றிக்கூட ஸ்ரீ ரெங்கநாத முதலியார் சொன்னார்கள். ஆனால் அவர் சொன்னது ஒன்று எனக்குப் புரியவில்லை. ரெட்ஹில்ஸ் ஏரியில் ஸில்ட் எடுத்தால் நல்லது என்றார்கள். நமக்கு அது ஒரே ஒரு ஏரி இல்லை. பூண்டி ரிசர்வாயர், சோழவரம் ஏரி ஆகிய இரண்டும் இருக்கிறது. ஆகவே தேக்கி வைத்துக் கொள்ள இடம் இல்லாமல் இல்லை. வெளியிடங்களிலிருந்து தண்ணீர் வருவதற்குத்தான் ஏற்பாடு செய்யவேண்டியதாக இருக்கிறது. அதற்காக ஸில்ட் எடுக்கக்கூடாது என்று சொல்லவில்லை. அதை எடுப்பதா இருந்தால் ஒரு கஷ்டம். சில நாட்கள் நகரத்திற்குத் தண்ணீர் சப்ளை செய்ய முடியாது. கலங்கிவிடும். அப்புறம் சில நாட்கள் தெளிய வேண்டி இருக்கும்.

DEPUTY SPEAKER : I take it that the House has no objection to the Hon. Minister taking 10 or 15 minutes more to reply and the House sitting beyond 1-30 p.m.

THE HON. SRI M. A. MANICKAVELU : இதற்காகத்தான் காவேரியிலிருந்துகூட தண்ணீர் கொண்டு வர முயற்சி செய்தோம். ஏதோ அங்கே விவசாயத்திற்குப் பாதகம் ஏற்படும் வகையில் கொண்டு வருவது என்று இல்லை. விவசாயத்திற்குப் பாதகம் இல்லாத வகையில் எங்கேயிருந்து கொண்டு வரலாம் என்பதைப் பரிசீலிப்பதற்காக நான்கைந்து இடங்களில் பார்த்தோம். இன்னொன்று. இப்பொழுது உடனடியாகப் பூண்டியில் இருந்து 20, 30 மைல் தண்ணீர் வரவேண்டியதாக இருக்கிறது, இப்போது திறந்த கால்வாய் வழியாகத்தான் வந்து கொண்டிருக்கிறது. அதை க்ளோஸ்டு ட்யூபில் கொண்டு வந்தால் எத்தனையோ மிலியன் காலன்



20th March 1961] [Sri M. A. Manickavelu]

ஆவியாகப் போவதைத் தடுக்கலாம் என்று கவனம் செலுத்தப்படுகிறது. அதேபோல சோழவரம் புழலேரி ஏரியில் ஆயக்கட்டும் இருக்கிறது. ஒப்பந்தப்படி சாகுபடிக்குத் தண்ணீர் கொடுக்க வேண்டும். அந்த இர்ரிகேஷன் உரிமையையும்கூட நாம் எடுத்துக்கொண்டால் இன்னும் அநேக லட்சம் மிலியன் காலன் தண்ணீர் கிடைக்கும். இதெல்லாம்தான் உடனடியாகக் கவனிக்க வேண்டியது. அப்புறம் லாங் ரேஞ் பாலிஸியாக கோதாவரித் தண்ணீரைக் கொண்டு வரலாம். இன்னும் கங்கையும்கூட அதோடு இணைத்துக்கொண்டு வரலாம். இதையெல்லாம் நம் பேரன், பேரனுக்குப் பேரன் காலத்துக்கு வரும். இப்போதைக்கு நான் சொன்னது தான் பிரயோசனப்படும்.

நேரம் ஆகிவிட்டது. இருந்தாலும் முக்கியமாக சில கனம் அங்கத்தினர்கள் சொன்னதைப்பற்றிச் சொல்கிறேன். அந்த அம்மாள் தாலியைப் பற்றிச் சொன்னார்கள். தாலி திருட்டுப் போயிற்று, ரிப்போர்ட் ஆனவுடன் இண்டராகேஷனுக்கு வரச் சொன்னார்கள். உடனே ஆயாக்கள் எல்லாம் ஸ்ட்ரைக் செய்து விட்டார்கள். அப்புறம் எப்படி இண்டராகேஷன் செய்வது? பிறகு தவறு என்று எழுதிக் கொடுத்தார்கள். அபராதம் போடப்பட்டது. வேலைக்கு வந்தார்கள். தாலியும் கிடைத்து விட்டது. பொதுவாகத் தாலி என்றால் நம் நாட்டுப் பெண்களுக்கு கடவுள் போல. அதற்கு ஒரு தனி மரியாதை, மதிப்பு, சாங்டிடி உண்டு. ஒத்துக்கொள்கிறேன். சமீபத்தில் பத்திரிகையில்கூடப் படித்தேன். கோவில் சாமிக்கு அம்மன் உண்டல்லவா? அந்த அம்மன் தாலியைக் கூடத் திருடன் திருடிக் கொண்டு போய்விட்டானாம். அம்மன் தாலியைத் திருடலாமா என்று கூட அவன் யோசிக்கவில்லை. அந்த அளவுக்கு நாட்டில் சாங்டிடி குறைந்து வருகிறது. மங்கிக் கொண்டு வருகிறது. இதற்குக் காரணம் நாட்டில் நடக்கிற சில இயக்கங்கள்தான்.

SRI A. GOVINDASAMI : இந்த இயக்கத்திற்கு கனம் அமைச்சர் அவர்கள் துணையாக இருந்தார்களா, இல்லையா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கனவில்கூடத் துணையாக இருக்கமாட்டேன். பொதுவாக இந்த இயக்கங்களினால் மக்களுடைய மனதில் சாங்டிடி குறைந்து வருகிறது. இது ஒன்றுதான் என்றில்லை. நான் இப்போது பார்க்கிறேன். அதைச் சொல்லி விடுகிறேன். முன்பெல்லாம் சமுத்திரக் கரையோரம் நடப்பதற்கே அழகாக இருக்கும். அந்தத் தண்ணீர் பட்டுப் பட்டு மெல்லிய ஈர மணல் அப்படியே ரோடு போட்டமாதிரி இருக்கும். நடந்துகொண்டே போகலாம். ஆனால் இப்போது அப்படி நடக்க முடியாது. சமுத்திரக் கரையோரம் மீன் பிடிக்கிறவர்கள் எல்லாம் அசுத்தப்படுத்தி விடுகிறார்கள். போகிற போது அங்கங்கே கண்ணை மூடிக் கொண்டு போக வேண்டியிருக்கிறது. முன்பெல்லாம் சமுத்திரம், ஆறு இங்கேயெல்லாம் அசுத்தப்படுத்துவதே பாபம் என்று கருதப்பட்டு வந்தது. அவற்றுக்கு ஒரு சாங்டிடி இருந்தது. ஆனால் இப்போது அந்த சாங்டிடி எல்லாம் போய்க் கொண்டிருக்கிறது, மங்கிக்கொண்டிருக்கிறது என்பதுதான் எனது தாழ்மையான அபிப்பிராயம்.

தேனீ விஷயமாக கனம் தியாகராஜன் சொன்னார். இங்கே கொடுக்கப்பட்டுள்ள ஸ்டேட்மெண்டுகூட மழுப்பலாக இருக்கிறது என்றார். அவர் கையிலே மட்டும் மழுப்பலான ஸ்டேட்மெண்டு ஏன் போயிற்றோ தெரியவில்லை. இங்கேயே ரொம்ப ஆவேசத்தோடு பேசினார். தொகுதியிலேயும் இதைவிட அதிகமாகத்தான் பேசுவார் என்று நினைக்கிறேன். கனம் அண்ணாமலை, கனம் தியாகராஜன் இவர்கள் பேசுவதைக் கேட்டு சில அதிகாரிகள் " ஏண்டா பொல்லாப்பு " என்று " they act favourably". "இப்படி பேசுவதனாலேயே there are otherpeople who react unfavourably". மக்களில் எத்தனையோ டைப். ஆனால் எந்தக் காரணத்தினால் ஏன் அவர் சொன்னது மட்டும் நடக்கவில்லை என்று தெரியவில்லை. என்னை பார்த்துச் சொன்னது சில நாட்களுக்குள் முன்தான். தேர்தல்கூட வருகிறது. தேனீயில் 20 ஆயிரம் பேர்கள் இருக்கிறார்கள், அங்கே அந்த வசதி இல்லை, இந்த வசதி இல்லை என்று சொல்வது நியாயம்தான்.

[Sri M. A. Manickavelu] [20th March 1961]

எதிர்க்கட்சித் தலைவர் பே ஸ்கேல் பற்றிச் சொன்னார்கள். இப்போது தான் பே கமிஷன் ரிப்போர்ட் வந்தது. ஓரளவு டாக்டர்களுடைய சம்பளங்களை அதிகப்படுத்தியிருக்கிறார்கள். முழுக்க திருப்தி ஏற்படாவிட்டாலும் ஓரளவுத் திருப்தி ஏற்பட்டிருக்கிறது. இன்னும் ஓய்வு பெற்றவர்களை ஏன் போடக்கூடாது என்றார்கள். போட்டுக் கொண்டு வருகிறோம். ஹெல்த் ஆபீசர்கள் போஸ்ட் கூட இருபது, முப்பது பில்லப் ஆகாமல் இருக்கிறது. இத் துறைக்கு வர யாரும் முயற்சிப்பது இல்லை. ப்ராக்டீஸ் இல்லை என்பது தான். அதற்காகத்தான் கமிஷனருக்கு அசிஸ்டெண்டு மாதிரி கொஞ்சம் இத் துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு ட்ரெயினிங் கொடுத்துப் போடலாமோ என்று யோசிக்கப்படுகிறது.

நாட்டு வைத்திய முறையைப் பற்றிச் சொன்னார்கள். அதில் நான் நம்பிக்கை உடையவன். அதற்காக நாட்டுமுறை என்றால் ஏதோ நான்கு ஐந்து மாத்திரைகளை வைத்துக்கொண்டு பெரிய நிபுணர் போல நடிக்கக் கூடியவர்கள் இருக்கிறார்கள். நாட்டுமுறை வளரவேண்டும் என்பதற்காகத் தான் இண்டெக்ரெடெட் காலேஜையே அலபதிக் காலேஜாக மாற்றினோம். காரணம் அங்கு படிக்கிறவர்களுக்கே அந்த முறையில் நம்பிக்கை இல்லை. எப்படி நாட்டுமுறைக் கல்லூரி ஆரம்பிப்பது என்பதற்காக இப்போது யோசனை நடக்கிறது.

முழு நம்பிக்கையோடு அதை ஆராய வேண்டும். நாட்டு முறை வளர வேண்டுமானால் அதை நன்கு ஆராய வேண்டும். நல்ல மருந்துகள் இருக்கிறது. ஏதோ ஒரு ஆசாமி எதையோ கண்டு பிடித்து விட்டு, பின் ஆசாமியை காணவில்லை என்று சொன்னார்கள். ஆக, நான் சொல்வது, இதை "ஸ்டாண்டர்டைஸ்ட்" செய்ய வேண்டும். அதை, "ஸயின்டிபிக்" முறையில் செய்ய வேண்டும். இதில், சிறிது தியாகமும் செய்ய வேண்டும். மேல் நாடுகளில் ரிசர்ச்சில் ஈடுபடுகிறார்கள். பத்து இருபது ஆண்டுகளாக, சரியான ரிசல்ட் இல்லை என்ற நிலையும் ஏற்பட்டிருக்கிறது, அப்படிக் கஷ்டப்பட்டும் கூட, பத்து பதினைந்து ஆண்டுகள் கஷ்டப்பட்டு நன்கு ரிசர்ச் செய்து, நிறைய பணம் செலவு செய்து ஒரு அம்மாள், ரேடியத்தைக் கண்டு பிடிக்க கஷ்டப்பட்டு, பின்னால் வெற்றியும் பெற்றார்கள். ஆகவே, பண ஆசையில்லாது, கஷ்டப்பட்டு தியாக உணர்ச்சியோடு இந்த முறையைப் பற்றி ரிசர்ச் செய்தால்தான் பலன் ஏற்படும். சித்தர், அது இது என்று பெரிய பெயர்களை மட்டும் சொல்லிக் கொண்டிருந்தால் போதாது. நாட்டு முறை வைத்தியத்தை வளர்க்க உத்தேசம் இருக்கிறது. இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் நடு நடுவில் பல தொந்தரவுகள் ஏற்படுகின்றன. அதில் "மாடர்ன் மெடிஸினையும்" புகுத்த வேண்டுமென்று சொல்கிறார்கள். அப்படிப் புகுத்தினால் அதிலே போய்விடுகிறார்கள். ஆக, இந்தக் கஷ்டங்கள் இருக்கின்றன. பொதுவாகப் பார்த்தால், பல கஷ்டங்கள் இருக்கின்றன இத்துறையில். அதாவது டாக்டர் பற்றாக்குறை, பணக் கஷ்டம், உடனடியாக கட்டிடங்கள் கட்ட முடியாத நிலை, இப்படி பல கஷ்டங்கள் இருக்கின்றன. ஆகவே, கூடுமான அளவு எவ்வளவு செய்ய முடியுமோ அவ்வளவு செய்யலாம். 12, 15 வருடங்களுக்கு முன்னால் "ஆவரேஜ் ஸ்பான் ஆப் லைப்" 27 யிருந்தது. இப்பொழுது 44-க்கு வந்திருக்கிறது. தாய்மார்களின் இறப்பு, "இன்பன்டைல் மார்டாலிட்டி" இவை பெரிய அளவில் குறைந்திருக்கின்றன. ஸ்வீடனை எடுத்துக்கொண்டால் அங்கு கூட கிராமங்களில் 10,000 பேர்களுக்கு ஒரு டாக்டர்தான் இருக்கிறார். ஆனால் அங்கு "ஸ்பான் ஆப் லைப்" 68, 70 என்றிருக்கிறது. ஆகவே, கொஞ்சம் கொஞ்சமாக தான் செய்ய முடியும். கனம் அங்கத்தினர்கள் சொன்ன யோசனைகளைக் கவனிக்கிறேன், பல உபயோககரமான யோசனைகளை, கருத்துக்களைச் சொன்னார்கள், மேற்கொண்டும் சொல்லப்படுகிற கருத்துக்களையும் கவனித்து வேண்டியதைச் செய்ய நான் தயாராய் இருக்கிறேன். வட ஆற்காடு, தென்னாற்காடு இவ்விடங்களில் உள்ள புது நோயைப்பற்றிச் சொன்னார்கள். அதற்குக் காரணம் என்னவென்று சரியாகக் கண்டு பிடிக்க முடியவில்லை. உடனடியாக நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டார்கள். அஸிஸ்டெண்ட் டயரக்டர் ஆப் பப்ளிக் ஹெல்த் போய்ப் பார்த்தார், டயரக்டரும் போய்ப் பார்த்தார், டி.எம்.ஓ., வந்தவாசி தாலூகாவில் காம்ப் செய்திருக்கிறார்கள். "93 deaths has so far occurred in North Arcot district while the number of deaths in South Arcot is 32" இது ஒரு புது வித நோயாகயிருக்கிறது. ஆனால் "பேட்டல் கேஸ்" குறைவு. சில பிராந்தியங்களில் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதை ஆராய பெரிய அளவில் ஏற்பாடு நடத்தப்பட்டிருக்கிறது. "Investigation units from the King Institute and Water Analysists have been deputed" அவ்வளவுதான் செய்ய முடியும். வேண்டிய மருந்துகள் கொடுக்கிறார்கள். "சானிட்டரி என்வயர்மென்டை" நன்கு செய்திருக்கிறார்கள் என்று சொல்லிக்கொண்டு நேரம் அதிகமாகிவிட்டதால் இந்த மானியக் கோரிக்கையை அங்கீகரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





DEPUTY SPEAKER: Is the hon. Member, Sri K. Sattanatha Karayalar, pressing his Cut Motion?

SRI K. HATTANATHA KARAYALAR: I press my Cut Motion, Sir.

DEPUTY SPEAKER: The question is—

'That the allotment of Rs. 5,51,96,400 under Demand XVI—Medical be reduced by Rs. 100.'

The Cut Motion was put and lost.

DEPUTY SPEAKER: I now put the Demand to the vote of the House. The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 5,51,96,400 under Demand XVI—Medical.'

The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER: Is the hon. Member, Sri V. Subbiah, pressing his Cut Motion?

SRI V. SUBBIAH: I press my Cut Motion, Sir.

DEPUTY SPEAKER: The question is—

'That the allotment of Rs. 2,35,58,300 under Demand XVII—Public Health be reduced by Rs. 100.'

The Cut Motion was put and lost.

DEPUTY SPEAKER: I now put the Demand to the vote of the House. The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 2,35,58,300 under Demand XVII—Public Health.'

The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER: Is the hon. Member, Sri K. Sattanatha Karayalar, pressing his Cut Motion?

SRI K. SATTANATHA KARAYALAR: I press my Cut Motion, Sir.

DEPUTY SPEAKER: The question is—

'That the allotment of Rs. 2,75,55,500 under Demand XXXIX—Capital Outlay on Public Health be reduced by Rs. 100.'

The Cut Motion was put and lost.

DEPUTY SPEAKER : I now put the Demand to the vote of the House. The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 2,75,55,500 under Demand XXXIX—Capital Outlay on Public Health.'

The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER : The House will now adjourn and meet against at 8-30 a.m. on Tuesday, the 21st March 1961.

The House then adjourned.

## V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### *A.—Statutory Rules and Orders.*

180. *Notification under Section* 1 (4) *of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act,* 1948 *regarding the Ryotwari Settlement of Estates in Sivaganga taluk of Ramanathapuram district, issued with G.O. Ms. No.* 5288, *Revenue, dated* 23*rd December* 1960. [*Laid on the Table of the House under Section* 67 (4) *of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari Act,* 1948 (*Madras Act XXVI of* 1948).]

181. *Notification under Section* 1 (4) *of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act,* 1948 *regarding the Ryotwari Settlement of Estates in Arantangi taluk of Thanjavur district issued with G.O. Ms. No.* 213, *Revenue, dated* 12*th January* 1961. [*Laid on the Table of the House under Section* 67 (4) *of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act,* 1948 (*Madras Act XXVI of* 1948).]

### *B.—Reports, notifications and other papers.*

106. *Statement* [a] *for Assurance No.* 1037 [*Question No.* 296 (10) *asked by Sri M. A. B. Arumughaswamy on* 19*th August* 1960].

107. *Statement* [b] *for Assurance No.* 1099 (*Question No* 510 *asked by Sri P. G. Manickam on* 7*th September* 1960).

108. *Statement* [c] *for Assurance No.* 1106 (*Question No.* 561 *asked by Sri S. M. Annamalai on* 9*th September* 1960).

---

a Placed on the table of the House on 20th March 1961 and printed as Appendix III on page 183 infra.

b Placed on the table of the House on 20th March 1961 and printed as Appendix IV on page 184 infra.

c Placed on the table of the House on 20th March 1961 and printed as Appendix V on page 185 infra.



## APPENDIX I.

[Vide answer to starred question No. 930 asked by Sri K. Sattanatha Karayalar at the meeting of the Legislative Assembly held on 20th March 1961, page 99 supra.]

| *Serial number and place.* (1) | *Number of houses.* (2) | *Amount to be spent.* (3) |
|---|---|---|
| | | RS. |
| GOVERNMENT PROJECTS. | | |
| 1 Sivakasi (Phase-I) | 66 | 2,13,000 |
| 2 Sivakasi (Phase-II) | 26 | 83,000 |
| 3 Sivakasi (Phase-III) | 64 | 2,11,150 |
| 4 Sivakasi (Phase-IV) | 64 | 2,11,000 |
| 5 Virudhunagar (Phase-II) | 116 | 3,82,800 |
| 6 Vellanur | 406 | 13,15,000 |
| 7 Madurai | 200 | 11,90,100 |
| 8 Singanallur | 200 | 8,40,000 |
| 9 Sembium (Phase-II) | 58 | 2,89,000 |
| 10 Guindy (Phase-I) | 80 | 2,78,520 |
| 11 Guindy (Phase-II) | 80 | 2,80,000 |
| 12 Guindy (Phase-III) | 120 | 4,31,000 |
| 13 Virudhunagar (Phase-I Sulakarai) | 20 | 66,000 |
| 14 Pettai (Phase-I) | 20 | 66,000 |
| 15 Pettai (Phase-II) | 20 | 66,000 |
| 16 Tiruchirappalli (Phase-I) | 20 | 66,000 |
| 17 Tiruchirappalli (Phase-II) | 20 | 70,000 |
| 18 Madurai (Phase-I) | 20 | 66,000 |
| 19 Madurai (Phase-II) | 20 | 70,000 |
| 20 Katpadi | 20 | 66,000 |
| 21 Salem | 20 | 66,000 |
| 22 Thanjavur | 20 | 66,000 |
| 23 Erode | 20 | 66,000 |
| CO-OPERATIVE PROJECTS. | | |
| 1 Rajapalayam | 188 | 6,62,000 |
| 2 Koilpatti | 139 | 4,13,000 |
| 3 Udumalpet | 120 | 3,81,000 |
| 4 Peelamedu | 96 | 1,79,000 |
| 5 Kavandampalayam | 71 | 2,46,000 |
| 6 Singanallur | 94 | 3,25,000 |
| 7 Ondiputhur | 74 | 2,56,000 |
| 8 Varadarajapuram | 52 | 1,80,000 |
| 9 Maniyakarampalayam | 86 | 2,98,000 |
| 10 Uppilipalayam | 77 | 2,67,000 |
| 11 Dalmiapuram | 63 | 2,32,000 |
| 12 Mettur | 50 | 1,48,000 |
| 13 Mettur | 121 | 4,19,000 |
| 14 Mettur | 48 | 1,43,000 |

[20th March 1961

PRIVATE EMPLOYERS.

| *Serial number and name of the Management.* | *Number of houses.* | *Amount to be spent.* |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | RS. |
| 1 The Rukmani Mills, Madurai .. .. .. | 50 | 1,92,500 |
| 2 Messrs. Shanmuga Nadar and Sons, Virudhunagar. | 28 | 70,000 |
| 3 Messrs. India Cements Limited, Thalayuthu, Tirunelveli. | 450 | 14,85,000 |
| 4 Sree Visalakshi Mills Limited, Madurai .. .. | 338 | 11,56,100 |
| 5 Sree Thiagarajar Mills, Madurai .. .. .. | 56 | 2,15,600 |
| 6 Sree Meenakshi Mills, Madurai .. .. .. | 60 | 2,31,000 |
| 7 Thiagosar Alai, Manaparai .. .. .. .. | 56 | 2,15,600 |
| 8 Sree Sivagami Mills, Limited, Madurai .. .. | 56 | 2,15,600 |
| 9 The Standard Motor Products of India, Madras .. | 183 | 8,52,500 |
| 10 Sree Seshasayee Industries Limited, Vadalur P.O. (South Arcot). | 140 | 4,74,200 |

## APPENDIX II.

[Vide answer to starred question No. 939 asked by Sri K. Sattanatha Karayalar at the meeting of the Legislative Assembly held on 20th March 1961, page 106 supra.]

| *Categories of staff in the city State hospitals for whom no leave reserve post has been sanctioned for allowing them a weekly holiday.* | *Reasons for not having sanctioned the leave reserve post.* |
|---|---|
| (1) | (2) |
| 1 Gardener .. .. .. | The number of personnel in these categories is not large enough to create leave reserve posts for them. However arrangements have been made to grant them half or full holiday in a week to the extent possible and without much dislocation to normal duties in the institutions concerned. |
| 2 Watchman .. .. .. | |
| 3 Dhoby .. .. .. | |
| 4 Sweeper .. .. .. | |
| 5 Stretcher-bearer .. .. | |
| 6 Barber .. .. .. | |
| 7 Pharmacy Mazdoor .. .. | |
| 8 Ambulance Driver .. .. | |
| 9 Theatre Assistant .. .. | |
| 10 Gurkha Watchman .. | |
| 11 Ambulance Attendant .. | |
| 12 Lift Attendant .. .. | |
| 13 Dispensary cooly .. .. | |
| 14 Disinfectant cooly .. .. | |
| 15 Masalchi .. .. .. | |
| 16 Table boy .. .. .. | |
| 17 Cook Mati .. .. .. | |
| 18 Fireman .. .. .. | |
| 19 Water-woman .. .. | |
| 20 Pump Lascar .. .. | |
| 21 Gate Peon .. .. .. | |



20th March 1961]

## APPENDIX III.

[Vide item V-B-106—Answer to Legislative Assembly starred question No. 296, dated 19th August 1960, page 180 supra.]

Statement showing the names of villages in Dindigul Division of Madurai district where houses have been completed under the Housing Scheme for Scheduled Castes during 1959-60.

| *Name of villages.* | *Number of houses completed.* |
|---|---|
| (1) | (2) |
| Ayyankottai, Pudur .. .. .. .. .. | 20 |
| Thoppupatti, hamlet of Vemboor .. .. .. | 14 |
| Rengasamudram, hamlet of Chitharavu .. .. | 16 |
| Vavidamarudur .. .. .. .. .. .. | 20 |
| Mettuneerathan .. .. .. .. .. .. | 14 |
| Kottaimedu .. .. .. .. .. .. | 12 |
| Othakoilpatti, hamlet of Pudupatti .. .. .. | 10 |
| Pappampatti .. .. .. .. .. .. | 20 |
| Velayuthampudur .. .. .. .. .. | 10 |
| Total .. | 136 |

[20th March 1961

## APPENDIX IV.

[Vide item V-B-107—Answer to Legislative Assembly starred question No. 510, dated 7th September 1960, page 180 supra.]

(a) and (b) A sum of Rs. 8·05 lakhs has been allotted for 1960–61 for Leprosy Relief work in the State. There is only one scheme implemented by this State from the funds allotted by the Government of India called the Leprosy Control Scheme on which the entire amount received from the Government of India will be fully utilized for opening new Leprosy Subsidiary Centres at various places according to the pattern envisaged under the scheme. Thirteen Leprosy Subsidiary Centres and one Treatment and Study Centre have already been established in the State. It is proposed to open two Leprosy Subsidiary Centres during 1960–61, recently allotted by the Government of India. Each centre established under the above scheme carries out the following activities :—

(i) A case finding programme through Leprosy surveys;

(ii) Treatment of all cases of leprosy;

(iii) Follow-up of healthy contacts of patients;

(iv) Publicity and health education regarding leprosy; and

(v) Welfare activities for the patients and dependants.



20th March 1961]

## APPENDIX V.

[Vide item V-B-108—Answer to Legislative Assembly Starred Question No. 561, dated 9th September 1960, page 180 supra.]

| *Assurance Number.* | *Reference.* | *Subject.* | *Promise made.* | *Action taken by Government.* |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1106 | Starred Question No. 561, dated 9th September 1960, by Sri S. M. Annamalai, M.L.A. | Number of applications received from Kalambur village, North Arcot district for the starting of rice mills in 1960. | The information is being collected and will be placed on the table of the House. | The answer to the Question is as follows.—<br>(a) Three applications have been received.<br>(b) and (c) Two persons whose applications were rejected under Madras Rice-Mills Licensing Order, 1955, have applied in 1960 for permits under the Rice-Milling Industry (Regulation) Act, 1958. |

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Tuesday, the 21st March 1961.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, the Deputy Speaker Sri B. BHAKTAVATSALU NAIDU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

### *Chemical Fertilizer Price*

* 951 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1960-ல் ரசாயன உரம் நியாய விலையில் விற்க சர்க்கார் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The distribution of chemical fertilizers which are supplied to the State by the Government of India from the Central Pool is done as a Government Trading Scheme on " No-Loss-No-Profit " basis under the supervision and control of the Board of Revenue (Food Production) and the Collectors of the districts. Prices are fixed by Government with reference to the Central Pool Price and adding to it reasonable margins for the Government stock-holder and the retail distributor and towards administrative charges within the over-all margin fixed by the Government of India.

The prices so fixed are the maximum and are notified under the Fertilizer (Control) Order, 1957. The distributors' depots are inspected by the authorized Agriculture Department officers with a view to ensure that the fertilizers are sold at rates not exceeding the prices notified by the Government.

SRI S. M. ANNAMALAI : ஸார், சில நேரங்களில், கூட்டுறவு சங்கங்களில் உரங்கள் கிடைக்காத நேரத்தில் பப்ளிக் பஜாரில் படி ஒன்று 1–6–0-க்கு விற்கப்படுகிறது. இதைப்பற்றி போலீசாரிடத்தில் சொல்லும்போது இதன்பேரில் நடவடிக்கை எடுக்க செக்ஷன் இல்லை என்று சொல்லுகிறார்கள். ஆகவே இதைத் தடுப்பதற்கு சர்க்கார் மேற்கொண்டிருக்கும் நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : உரத்தில் பற்றாக் குறை ஏற்படுவதின் காரணமாகத்தான் கள்ள மார்க்கட் ஏற்படுகிறது. பெர்டிலைஸர் கண்ட்ரோல் ஆர்டர் என்கிற ஆர்டரின்கீழ் உள்ள விதிகளின் படி தவறுகள் ஏதாவது நடந்தால் அதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. முக்கியமாக நாம் இந்த உரங்களை கூட்டுறவு சங்கங்களுக்குக் கொடுத்து வருகிறோம். இதிலிருந்து பிரைவேட் மார்க்கட்டுக்கும் போய்விடுகிறது. கூட்டுறவு சங்கங்களில் தவறுகள் நடக்கும் போது அவ்வப்போது நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். தவறுகள் தெரிந்தால் உடனே லைசன்ஸ் கான்ஸெல் செய்யப்படுகிறது. பொதுவாக பற்றாக்குறை அதிகமாக இருப்பதினால்தான் அதிக விலை கொடுத்து விவசாயிகள் வாங்குகிறார்கள்.

**Sri J. MATHA GOWDER** : ரசாயன உரம் அதிக விலைக்கு வெளியில் விற்பதாகச் சொல்லப்படுகிறது, கூட்டுறவு சங்கங்கள் வெளியில் விற்று விடுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அப்படியானால் கூட்டுறவு சங்கங்கள் மூலம் வெளியில் எவ்வளவு விற்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுமா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : கூட்டுறவு சங்கங்களில் ஒன்றிரண்டு இடங்களில் அங்கங்கே தவறுகள் நடைபெறுகின்றன. அவைகளின் மீது உடனடியாக நடவடிக்கையும் எடுக்கப்படுகிறது. தனிப்பட்டவர்களிடத்தில் வாங்குவதாக இருந்தாலும் விலை அவ்வளவு கூடுதலாக இருக்கிறது என்று சொல்லமுடியாது. அதோடு கூட்டுறவு சங்கங்கள் மூலம் நாம் விவசாயிகளுக்கு கடனாக கொடுத்து வருகிறோம். அதையும் அவர்கள் சில இடத்தில் விற்று விடுகிறார்கள். அதுவும் இப்போதுள்ள திட்டத்தின்படி அந்தந்த பஞ்சாயத்துகளின் பொறுப்பிலேயே இந்த உர விநியோகம் நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பற்றுக்குறை ஏற்படும்பொழுது ஒன்றிரண்டு இடங்களில் விவசாயிகளால்கூட அதிக விலைக்கு விற்கப்படுகின்றன. இதில் இருக்கின்ற பற்றுக்குறையும் மதிப்பும் தான் இந்தக் கோளாறுகளுக்கு எல்லாம் காரணம்.

**Sri R. SRINIVASA IYER** : ஸார், அயல் நாடுகளிலிருந்து நமக்கு வரும் ரசாயன உரம், அதாவது அமோனியம் சல்பேட் போன்றவைகள், என்ன விலைக்கு அடங்குகிறது. சிந்திரியில் கிடைக்கும் உரம் என்ன விலை அடங்குகிறது. இந்த இரண்டு விதங்களில் வரும் உரத்திற்கு விலையில் அதிக வித்தியாசம் இருப்பதாக சொல்லப்படுகிறதே; இதன் காரணம் என்ன, இதையொட்டி குறைவான விலைக்குக் கொடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : அயல் நாடுகளிலிருந்து வரும் உரத்தை எல்லாம் ஒன்றாகச் சேர்த்துத்தான் விலை நிர்ணயிக்கப்படுகிறது. வெளிநாட்டு உரம் விலை அதிகமாக இருப்பதால் ஓரளவு சப்ஸிடைஸ் செய்யப்படுகிறது. அதன்படி இப்போது நிர்ணயிக்கப்பட்டிருப்பது, இந்திய அரசாங்கம் நிர்ணயித்திருப்பது யூரியாவுக்கு டன் ஒன்றுக்கு 45 ரூபாய், அமோனியம் சல்பேட்டுக்கு 35 ரூபாய், அமோனியம் கால்ஷியம் நைட்ரேட்டுக்கு 30 ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டது. இப்போது மெட்ரிக் முறை வந்தபின் அதற்கு தகுந்தவாறு விலை மாறுதல் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

**Sri N. R. THIAGARAJAN** : சர்க்காரிலிருந்து லோன் கூப்பன் இருப்பவர்களுக்குத்தான் கூட்டுறவு சங்கங்களிலிருந்து உரம் கொடுக்கப்படுகிறது. அப்படியிருக்கும்போது இந்த உரம் எப்படி தெருவிற்கு வருகிறது ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : லோனில் வாங்கக்கூடியவர்கள்கூட வெளியில் விற்றுவிட்டால் அவர்கள் கையில் ரொக்கமாக ரூபாய் கிடைத்துவிடுகிறது.

**Sri V. K. KOTHANDARAMAN** : ஸார், நியாய விலைக்கடைகளில் உரத்திற்குப் பற்றுக்குறை இருப்பதாக சொல்லப்படுகிறது. அநியாய விலையில் வெளியில் எவ்வளவு வேண்டுமானாலும் கிடைக்கிறது. இதைத் தடுப்பதற்கு சட்டம் இருப்பதாகவும் அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். இதன்பேரில் நடவடிக்கை எடுத்தாலும் 10 ரூபாய், 20 ரூபாய் என்று அபராதம்தான் விதிக்கிறார்கள். அப்படியில்லாமல், இம்மாதிரி தவறு செய்கின்றவர்கள் யாரையாவது இந்த ஐந்து வருட காலத்தில் இரண்டு வாரமாவது கம்பி எண்ணக்கூடிய வகையில் உள்ளே தள்ளியதுண்டா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : அநியாய விலை என்று சொல்வது தவறு. இவ்விதம் அதிகவிலையில் தாராளமாக கிடைக்கிறது என்று சொன்னால், என்னுடைய கவலை ஓரளவு நீங்கியிருக்கும். பொதுவாக ரசாயன உரத்திற்கு பற்றுக்குறை இருக்கிறது. விவசாயிகள் எந்த





விலை கொடுத்தும் வாங்குவதற்கு தயாராக இருக்கிறார்கள். இதில் தவறு செய்கின்றவர்களுக்கு சட்டப்படி என்ன என்ன நடவடிக்கைகள் எடுக்க முடியுமோ அந்த நடவடிக்கைகள் எல்லாம் எடுக்கப்படுகிறது.

**Sri V. K. RAMASWAMY MUDALIYAR** : Is there any possibility of our State becoming self-sufficient in this matter at least in the next year? If not, what steps, will the Government take to substitute these fertilizers with a view to stepping up food production?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : There is no question of this State becoming self-sufficient. It is in the All-India Pool and whatever is secured and whatever is produced is put in the All-India Pool and it is being distributed and we are getting only as much percentage as other States are able to get. Some more factories are expected to go into production soon. Further, we do expect under the Third Plan more imports of fertilizers as more foreign exchange could be made available even through export of agricultural products or agro-industrial products. Therefore, we do except that the situation will considerably improve during the Third Plan period. Apart from that, we are commending green manure and other organic manure for adoption by the ryots and the ryots also have been taking to them.

**Sri P. G. MANICKAM** : ஸார், தேசீய விஸ்தரிப்புத்திட்டம் எல்லா இடங்களுக்கும் கொண்டுவரப்படும்பொழுது, இந்த தேசீய திட்ட அதிகாரிகள் மூலமாகவே உர விநியோகம் நடைபெற அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : அப்படி செய்யவேண்டும் என்பது இப்போது சர்க்காருக்கு உத்தேசமில்லை. தேசீய விஸ்தரிப்புத் திட்டம் எல்லா பகுதிகளுக்கும் வரும்போது, கூட்டுறவு சங்கங்களும் எல்லா இடங்களுக்கும் வரும். அப்போது அதன்மூலம் ரசாயன உரம் விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யப்படும். கூட்டுறவு சங்கங்களின் மூலமாகத்தான் உர விநியோகம் நடைபெறவேண்டும் என்பது சர்க்காருடைய கொள்கை.

**Sri S. NAGARAJA MONIGAR** : இப்படி அநியாயமான விலைக்கு அநியாயமாக இந்த உரம் தாராளமாக விற்கப்படுகிறது என்கிற கருத்தை அடிக்கடி சர்க்காருடைய கவனத்திற்கு யாராவது கொண்டு வந்தார்களா ? அப்படியானால் அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : அநியாய விலை என்று சொல்வது சரியல்ல, என்னதான் அதிகமாக விலை இருந்தாலும் விவசாயிகள்தான் இதை வாங்குகிறார்கள். பொதுவாக பற்றுக்குறை இருக்கிறது. இருந்தாலும் அதிகமான விலை என்று சொல்ல முடியாது.

**Sri T. T. DANIEL** : May I know whether it is a fact that this Fertilizer Control Order has got certain loopholes and hence, the authorities are not able to detect cases of adulteration and black-marketing and proceed further in the matter?

**The Hon Sri M. BHAKTAVATSALAM** : I hope the hon. Member has studied this question. If he has got any specific ideas, I request him to communicate the same to me so that I may further look into the matter.

[21st March 1961

*Tiger Menace (at Katteri)*

*952 *Q.*—SRI A. VEDARATHNAM (on behalf of SRI P. S. CHINNADURAI) : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு ஜில்லா, திருப்பத்தூர் தாலுகா, ஜோலார்பேட்டை ரயில்வே ஸ்டேஷனுக்கு அருகிலுள்ள காட்டேரி கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்கள், கண்ணன் என்பவர் கொடிய வேங்கைப் புலியுடன் நேரடியாகப் போரிட்டு, ஊர் மக்களை ஆபத்திலிருந்து காப்பாற்றியதாகவும், அதனால் அவருடைய உடல் உறுப்புகள் பாதிக்கப்பட்டு வேலை செய்ய சக்தி இழந்திருப்பதால் ராஜ்ய அரசியலார் அவருக்குப் பரிசளிக்க வேண்டுமென கோரி, 20–9–1960 தேதியிட்டு அனுப்பிய விண்ணப்பத்தை அரசாங்கத்தார் பெற்றுக்கொண்டார்களா ?

(இ) அப்படியானால், அதன்மீது அரசியலார் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) The Chief Conservator of Forests and the Collector of North Arcot district have been consulted in the matter and their reports are being examined.

*Nagercoil Hospital (improvement)*

*953 *Q.*—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the amount allotted for improving the Nagercoil District Hospital in the Second Five-Year Plan;

(*b*) the amount spent so far; and

(*c*) whether there is any proposal to acquire about 55 acres of land for the construction of additional buildings for the above hospital?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Rs. 4·08 lakhs.

(*b*) Rs. 1,94,916 up to 31st December 1960.

(*c*) Yes.

SRI T. T. DANIEL : May I know the reason for not spending the whole amount under the Second Plan? May I also know the total amount that has been allotted for improving this hospital?

THE HON. SRI M. A. MANICKAVELU : In the first stage, it is proposed to spend Rs. 7,59,200. No doubt, there is a Master Plan, which will cost Rs. 19·45 lakhs or so. That is a very long-range scheme. For the present, the Government will confine themselves to spending this Rs. 7 and odd lakhs for the improvement of the hospital.

SRI T. T. DANIEL : May I know, under the Master Plan, how many beds would be provided in that hospital. May I also know the period within which the Master Plan would be completed according to the phased programme?

THE HON. SRI M. A. MANICKAVELU : It is not only a question of increasing beds. The proposal is to bring up the hospital at Nagercoil to a Headquarters Hospital standard with all facilities



21st March 1961]

like specialised equipment, etc. The Master Plan is spread over 20 or 30 years. Nowadays we prepare Master Plan so that for any development of increase of population in future, we must envisage now alone.

SRI T. T. DANIEL : In view of the fact that the present premises where the hospital is located, is not so extensive as to implement all the schemes in the Master Plan, will the Government think of finding out some other site also so that the buildings envisaged in the Master Plan may be conveniently constructed.

THE HON. SRI M. A. MANICKAVELU : Master Plan is not the issue now.

*Collectors (travelling allowance and dearness allowance)*

*954 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN (on behalf of SRI M. KALYANASUNDARAM) : Will the Hon. the Minister for Revenue be pleased to state the amount of travelling allowance and dearness allowance drawn by the Collector of each district for the year 1959–60 and for the first six months of 1960–61?

THE HON. SRI M. A. MANICKAVELU : A statement [a] is placed on the table of the House.

SRI V. K. KOTHANDARAMAN : ஜில்லா கலெக்டர்கள் சுற்றுப் பிரயாணம் செய்த செலவு இனத்தைப் பார்க்கிற நேரத்திலே செலவழிக்கப்பட்ட தொகையானது மிகவும் அதிகப்படியாக இருக்கிறது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் உணருகிறார்களா ? பெரிய ஜில்லாக்களிலும் சிறிய ஜில்லாக்களிலும் ஒரே மாதிரி செலவாகியிருக்கிறது. அதற்கான காரணம் என்ன என்பதை அறிந்துகொள்ள அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதற்கு திட்டவட்டமாக என்ன காரணம் சொல்வதென்று தெரியவில்லை. அதிகமாக சுற்றுப் பிரயாணம் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டால் அதிகமாகச் செலவாகிறது. பெரிய ஜில்லாக்களில் விஸ்தீர்ணம் அதிகமாக இருக்கிறது. பல காரணங்களினால் ஜில்லாவிற்கு ஜில்லா வித்தியாசம் இருக்கிறது.

SRI S. RANGANATHA MUDALIAR : Sir, from the statement laid on the table of the House, we find that the Collector of Madurai drew the smallest amount of travelling allowance during 1959–60, whereas in the following six months he drew very nearly that amount. Does it mean that the tour of the Collector was poor in 1959–60, and if so, what was the poverty of tour due to?

THE HON. SRI M. A. MANICKAVELU : There is no question of poor or rich here. Whenever there is necessity to tour, they tour. In some parts of a year there is necessity and in some other parts of a year there may not be necessity.

SRI S. M. ANNAMALAI : இந்த ஸ்டேட்மெண்டிலிருந்து அதிகமான பணம் டி.ஏ. ஆக மாவட்ட கலெக்டர்கள் பெறுகிறார்கள் என்று தெரிய வருகிறது. இதற்கு முக்கிய காரணம் அமைச்சர்கள் சுற்றுப்

[a] Printed as Appendix I on page 272 infra.

பிரயாணம் வரும்போது கலெக்டரும் அமைச்சர்களுடன் வருவதால் டி.ஏ. அதிகமாக ஆகிறது. ஆகையால் அமைச்சர்கள் சுற்றுப்பிரயாணம் வரும் போது கலெக்டர்கள்கூட வரக்கூடாது என்று உத்திரவு போட சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதுவே காரணம் இல்லை. எல்லா சமயங்களிலும் கலெக்டர்கள் அமைச்சர்களோடு வருவதில்லை. சில சமயங்களில் கூட வரவேண்டாமென்று நாங்களே சொல்லி விடுகிறோம்.

SRI S. RANGANATHA MUDALIAR : Madurai district is one of the biggest districts and it is not conceivable that tour is not necessary in some parts of the year and necessary in other parts of the year. If the tour of the Collector is poor, in the interest of planning, would the Government issue instructions to maintain a particular phase of tour in a year?

THE HON. SRI M. A. MANICKAVELU : More tours will arise if there is necessity. Sometimes it is possible to know things from the central headquarters. In some cases one has to travel about and find out. So, it all depends upon the circumstances.

SRI P. G. MANICKAM : மாவட்ட கலெக்டரோடு பிரயாணம் செய்யக்கூடிய குமாஸ்தா, சிப்பந்திகளுடைய பயணப்படி, அன்றுடப்படி இவைகள் இந்தத் தொகையோடு சேர்க்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : I do not think so. The main question relates to Collectors.

SRI R. SRINIVASA IYER : Is it a fact that Tahsildars are given permanent T.A., and if so, is there any proposal for fixing the T.A. of Collectors also on a monthly basis?

DEPUTY SPEAKER : I do not know how this question arises from the main question?

THE HON. SRI M. A. MANICKAVELU : The main question relates to Collectors but the supplementary question relates to Tahsildars. A separate question may be put.

*Artesian wells (North Arcot)*

* 955 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு ஜில்லாவில் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் நீர் ஊற்றுக் கிணறுகள் எந்தெந்த ஊர்களில் தோண்டப்பட்டன, தாலுகாவாரியாக ?

(இ) மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் எத்தனை தோண்டப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No scheme for sinking of artesian wells has been in operation in the district during the period of the Second Five-Year Plan.

(*b*) There is no proposal to sink artesian wells in the district during the period of the Third Five-Year Plan.





*Lower Bhavani area (Agricultural Research Stations)*

* 956 *Q.*—SRI N. K. PALANISAMI (on behalf of SRI K. R. NALLASIVAM) : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கீழ் பவானிப் பகுதியில் விவசாய ஆராய்ச்சிக்கு "சங்கம்" என்ற ஒன்றை சர்க்கார் ஆரம்பித்துள்ளார்களா ?

(இ) அதன் அங்கத்தினர் யார் யார் ?

(உ) அதன் வேலை என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No Agricultural Research Association as such has been constituted for the Lower Bhavani Project area. But, the Government have sanctioned the convening of an annual conference called the "Lower Bhavani Project Ayakatdars Conference" to discuss the research problems of the area. A copy of the Government Order [a] constituting the Conference, is placed on the table of the House.

(*b*) A list of non-officials who have been selected to serve in the Conference is also placed on the table of the House.

(*c*) The object of the Conference is to ascertain from representative local ryots the research problems for which they would like an answer or assistance from the Agricultural Research Station, Bhavanisagar.

SRI S. NAGARAJA MONIGAR : இந்த மாதிரி வருஷம் ஒரு முறை மாநாடு கூட்ட கீழ்பவானி விஷயத்தில் ஏற்பாடு செய்திருப்பதாகக் கூறினார்கள். புதிதாகக் கட்டப்பட்டிருக்கிற எல்லா அணைகளுக்கும் இந்த மாதிரி ஏற்பாடு உண்டா ? அப்படி ஏதாகிலும் செய்யக் கருதுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அப்படி ஒவ்வொரு இடத்திலும் கூட்டவேண்டுமென்ற அவசியம் இல்லை. கீழ் பவானி ஆயக்கட்டில் பிரத்தியேகமான பிரச்னைகள் இருக்கின்றன. ஆராய்ச்சிக்குப் பயன்படும் என்பதற்காக அவர்களுடைய யோசனைகளைக் கேட்கவும் அவர்களுக்கு ஆலோசனைகளைச் சொல்லவும் இந்த மகாநாடு கூட்டப்படுகிறது. கனம் அங்கத்தினருடைய தொகுதியில் கிருஷ்ணகிரி பிராஜெக்ட் இருக்கிறது. நேற்றுக்கூட நான் கலெக்டரிடம் விசாரித்தேன். தண்ணீர் வேண்டும் வேண்டும் என்று கேட்டார்கள். போதுமான அளவு தண்ணீர் இருக்கும்போது அந்தத் தண்ணீரைப் பயன்படுத்தாமல் இருக்கிறார்கள். இதில் கனம் அங்கத்தினரைப் போன்றவர்கள் அக்கரை எடுத்துக்கொண்டு மக்களுக்கு எடுத்து உரைத்தால் போதிய பலன் அளிக்கும்.

SRI A. VEDARATHNAM : கீழ் பவானியில் உள்ளவர்களுக்கு என்ன விசேஷமான பிரச்னை—மற்ற இடங்களில் இல்லாத பிரச்னை—என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அது புஞ்சை ப்ராஜெக்டாக எடுத்துக்கொள்ளப்பட்டது. அதுவும் புஞ்சை தானியங்கள் ஒரு வருஷமும் மாற்றி பருத்தி போடுவது என்றும் எடுத்துக்கொள்ளப் பட்டது. இப்போது தண்ணீர் இருப்பதால் புஞ்சை சாகுபடி செய்ய முடியவில்லை. நெல் சாகுபடி செய்ய அனுமதி வேண்டுமென்று கூறினார்கள். நெல் சாகுபடி செய்ய அனுமதி கொடுக்கப்பட்டது. அதற்கேற்ப பிரத்தியேகமான பிரச்னைகள் ஏற்படுகின்றன. இதற்காகத் தான் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

[a] Printed as Appendix II on pages 272-275 infra.

[21st March 1961

SRI S. NAGARAJA MONIGAR : குறிப்பாக கிருஷ்ணகிரி ப்ராஜெக்ட்டில் விவசாய முன்னேற்றத்தை அதிகரிக்க அடிக்கடி அதிகாரிகளும் விவசாயிகளும் சேர்ந்து கலந்து பேசவேண்டிய சந்தர்ப்பம் குறைவாக இருப்பதால்தான் இந்த நிதானம் இருக்கிறது என்ற காரணத்தினால் இதனை அங்கேயும் செய்யலாமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப் பற்றி கனம் அங்கத்தினர் அவர்கள் சேலம் கலெக்டரிடம் யோசனை கூறினால் வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வார்.

### *Labour Relations Officer (State Electricity Board)*

* 957 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to appoint a Labour Relations Officer in the Madras State Electricity Board?

THE HON. SRI R. VENKATARAMAN : Yes, Sir. But the Government have decided to drop the proposal for the present and to re-examine it after some time, if necessary.

SRI N. K. PALANISAMI : May I know why the proposal has been deferred?

THE HON. SRI R. VENKATARAMAN : There was some difference of opinion as to the relative position of the Labour Officer, whether he should function directly under the Chairman of the Electricity Board or under the Chief Engineer, Electricity Board. So, on account of this difference of opinion, we have deferred the proposal.

### *Raiding brothels (Powers to Police Officers)*

* 958 Q.—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of SRI A. A. RASHEED) : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether the Government have recommended to the Union Government to make suitable amendment to the Suppression of Immoral Traffic in Women and Girls Act, 1956, to vest powers in Police Officers of the rank of Inspectors and above to raid brothels; and

(b) if so, the reason therefor?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes, Sir.

(b) As the Deputy Superintendents of Police who have been appointed as Special Police Officers under the Suppression of Immoral Traffic in Women and Girls Act, 1956, are often out of headquarters and engaged in investigation of grave crimes, inspections, etc., they do not find time either to raid brothels or to prosecute the cases in the courts. Therefore, it was felt that officers not below the rank of Inspector of Police should be appointed as Special Police Officers under the above Act.



21st March 1961]

SRI S. NAGARAJA MONIGAR : இந்த விபசாரத் தடுப்புச் சட்டம் 1956-ம் வருஷத்தில் கொண்டுவரப்பட்டது. இந்தக் கேள்வியிலே பொது மகளிர் மனைகளைச் சோதனையிட என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. பொது மகளிர் என்பது 1956-ம் வருஷத்திலேயே தீர்ந்துவிட்டது என்று நினைக்கிறேன். இப்போது பொதுமகளிர் மனை என்று சொல்லுவது எந்த மனைகளைக் குறிப்பிடுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இங்கே ஆன்ஸர் ஒன்றும் மன்றத்தில் வைக்கவில்லை. இதற்கு என்ன விளக்கம் சொல்லுவது ? விளக்கம் சொல்லுவது அவசியமா என்று தெரியவில்லை.

### *Central Seed Corporation (Establishment)*

* 959 Q.—SRI S. M. ANNAMALAI : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மத்திய விதைக் கார்ப்பொரேஷன் (Central Seed Corporation), ஒன்று நிறுவ இந்த ராஜ்யத்தின் அபிப்பிராயம் கேட்டு மத்திய அரசாங்கம் எழுதியிருக்கிறார்களா ?

(இ) அதற்கு இந்த அரசாங்கம் அனுப்பிய பதில் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No, Sir.

(b) Does not arise.

### *Nurses (Scholarships)*

* 960 Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) the number and nature of scholarships received for undergraduates and Post-graduate education in the nursing profession from the Countess of Dufferin's Fund; and

(b) the number utilized?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) None of the nurses in this State are receiving scholarships from the Countess of Dufferin's Fund. Five scholarships were received for midwifery training for 'undergraduates' education in the nursing profession.

(b) Out of these five scholarships four have been utilized.

SRI K. SATTANATHA KARAYALAR : Why the other one was not utilized?

THE HON. SRI M. A. MANICKAVELU : The other one after some time discontinued.

SRI K. SATTANATHA KARAYALAR : May I know whether any other scholarships has been received from the Countess of Dufferin's Fund?

THE HON. SRI M. A. MANICKAVELU : No, Sir. Only for this category of training the scholarship from Dufferin's Fund was available. But we have the Auxiliary Nurse Midwifery Course for which there is no stipend from the Dufferin's Fund.

## *Medical students (stipends)*

*961 Q.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நர்சுகளுக்கு படிக்கும்போது ஸ்டைபெண்டு பணம் கொடுப்பது போல் டாக்டர்களுக்கு ஏன் கொடுக்கப்படுவதில்லை ?

THE HON. SRI M. A. MANICKAVELU : Stipends are being given to persons undergoing the nurses' training since there is a great dearth of trained nurses. Further the nurse pupils are assigned regular duties similar to those in service, for a certain number of hours daily, while undergoing their training. They are also required to serve the Government for a minimum period of three years on completion of their training. The same is not the case in respect of medical students.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், கிராமப் பகுதிகளிலே இருக்கக்கூடிய ஆஸ்பத்திரிகளிலே பல டாக்டர்கள் வேலை செய்வதற்கு வராத நிலை இருக்கின்ற கராணத்தினாலே, அவர்களும் கண்டிப்பாக நர்சுகளைப் போல் 3 வருஷ காலம் வேலை செய்வதற்கு டாக்டர்களுக்கு ஸ்டைபெண்டு கொடுத்து படிக்க வைத்து, இந்த நிபந்தனை விதிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : நேற்றே விவாதத்தின் போது நான் இதைப்பற்றிச் சொன்னேன். இப்போது கிராமாந்திரங்களிலே கூட டாக்டர்கள் போய் வேலை செய்கிறார்கள். இப்போது காலியிருப்பது 15, 16 ஸ்தானங்கள்தான். மேலும் இந்த வருஷத்திலே போதுமான டாக்டர்கள் கிடைப்பார்கள் என்று தெரிகிறது. இந்தமாதிரி ஸ்டைபண்ட் கொடுத்தால் 5, 6 வருஷங்கள் கழித்துத்தான் நமக்கு டாக்டர்கள் கிடைப்பார்கள். அதற்குள்ளாகவே இருக்கிற நிலைமை மாறும் என்று கருதுகிறேன்.

SRI S. NAGARAJA MONIGAR : இப்படி சர்க்காருக்கு 3 வருஷத்திற்கு வேலை செய்வதாக எழுதிக் கொடுத்தால் அல்லாது, மனிதப் புண்ணுக்கும், மனிதநோய்க்கும் வைத்தியம் செய்யக்கூடிய பண்பாடு இந்த டாக்டர்களுக்கு இல்லாத காரணத்தால், தேச பக்தியோடு கிராமாந்திரங்களுக்குச் சென்று பணியாற்ற முன் வராத காரணத்தினால், அவர்களுக்கு எந்தவிதமான சலுகையும் அளிக்கக்கூடாது என்று கருதுகிறேன். இதைச் சர்க்கார் செய்யுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : ஏதோ ஒரு காலத்தில் அப்படி இருந்திருக்கலாம். இப்போது டாக்டர்கள் மிகுந்த சேவா உணர்ச்சியோடு கிராமங்களுக்குப் போய் வேலை செய்கிறார்கள். அதுவும் பல இடையூறுகளுக்கு இடையே, இதை நானும் நேரில் பார்த்திருக்கிறேன். ரொம்ப ஆர்வமாகக் கூட வேலை செய்கிறார்கள். இந்த மனப்பான்மை அவர்களிடையே இப்போது அதிகமாக வளர்ந்துகொண்டு வருகிறது.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், டாக்டர்கள் மிக சேவா மனப்பான்மையுடன் கிராமங்களிலே வேலை செய்வதாக கனம் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இப்போது ஒன்றிரண்டு மாதத்திற்கு முன்னால், டி.எம்.எஸ். ஆபீஸிலே டாக்டர்கள் கிராமப் பகுதியிலே இருக்கக்கூடிய ஆஸ்பத்திரிகளுக்குப் போய் வேலை செய்யவேண்டுமென்று சொன்னபோது 60 சத விகிதம் டாக்டர்கள் நாங்கள் கிராமங்களுக்குப் போய் வேலை செய்ய மாட்டோம், நகரத்தில் வேலை கொடுக்காவிட்டால், நாங்கள் தனியாக டிஸ்பென்சரி வைத்து நடத்துகிறோம் என்று சொல்லக்கூடிய அளவிற்கு





சொல்லப்பட்டிருக்கிறது. இது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? ஆகவே இதுபோன்ற நிலைமை இருக்கின்ற காரணத்தினால், உடனடியாக இதுபோன்று ஸ்டைபண்ட் கொடுத்து டாக்டர்களைப் படிக்க வைப்பதற்கு அரசாங்கம் முன் வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : ஏதோ சிறுபான்மையோர் சொல்லி இருக்கலாம். பெரும்பான்மையோர் இப்போது நல்ல முறையிலே தான் வேலை செய்கிறார்கள். அதனால் சில வருஷங்களுக்கு முன்னால் 50, 60 பிரைமரி ஹெல்த் சென்டர்களிலே டாக்டர்கள் இல்லாமல் இருந்தது, இப்போது குறைந்திருக்கிறது. இப்போது 118 பிரைமரி ஹெல்த் சென்டர்களில் டாக்டர்கள் இருக்கிறார்கள். அங்கெல்லாம் அவர்கள் சேவா மனப்பான்மையுடன்தான் வேலை செய்கிறார்கள். எப்போது பார்த்தாலும் நாம் குறையே சொல்லிக்கொண்டிருந்தால், அவர்கள் எவ்வளவு வேலை செய்தாலும் குறையே சொல்கிறார்களே என்று, பழைய மாதிரியே செய்யலாம் என்ற எண்ணத்திற்கு இடம் ஏற்படும். ஆகவே, இப்படி குறை சொல்ல வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## *Calling bells in hospitals*

*962 Q.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் டாக்டர்களையும் நர்சுகளையும் அழைக்க *Calling bell*-களை வைக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : No, Sir.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், நமது ஆஸ்பத்திரிகளிலே டாக்டர்கள், நர்சுகள் மிக மிகக் குறைவாக இருப்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஆகவே பேஷண்டுகள் அவர்களை அடிக்கடி கூப்பிடுவது என்று சொன்னால், ரொம்பவும் கஷ்டமாக இருக்கிறதென்ற காரணத்தினால், அவர்களுக்கு ஆபத்து ஏற்படக்கூடிய நேரத்திலே உதவிக்கு அழைப்பதற்கு இந்தமாதிரி காலிங் பெல்லை வைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்தக் கேள்வியில் கனம் அங்கத்தினர் காலிங் பெல் கேட்பது நோயாளிகளுக்கு அல்ல, நர்சுகள் டாக்டர்களைக் கூப்பிடுவதற்கு என்று சொல்லுகிறார்கள். எப்போதும் டாக்டர்களுடனேயே நர்சுகள் இருப்பதால், அவர்களுடன் கூடப் போவதால் காலிங் பெல் எதற்கு ?

## *Dairy farm (Madurai)*

*963 Q.—SRI N. R. THIAGARAJAN : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரையில் ஒரு பால் பண்ணை ஆரம்பிக்க உத்தேசமிருக்கிறதா ?

(இ) அதற்கு எவ்வளவு செலவாகும் ?

(உ) மதுரை சிலைமான் அருகே உள்ள சக்கிமங்கலத்தில் காலியாக உள்ள நிலத்தை இதற்குப் பயன்படுத்த உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No, Sir.

(b) & (c) Do not arise.

[21st March 1961

9 a.m. **Sri K. SATTANATHA KARAYALAR** : இது செப்டெம்பரில் நடக்குமா ? அல்லது டிசம்பர் வரையில் போகுமா ? சமீபத்தில் சட்டசபை மெம்பர்கள் அங்கு போயிருந்தபொழுது, அங்கத்தினர்களுடைய அபிப்பிராயம், ஒரு வேளை இன்னும் காலதாமதம் ஆகுமோ என்று தோன்றிற்றே ? அதற்கு முன்பாக அது நடக்குமா ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : 'மைனிங்' செய்கிற பொழுது பூமிக்கு அடியிலே எப்படி இருக்கும் என்று திட்டவட்டமாகச் சொல்லமுடியாது. இப்பொழுது 140 அடி ஆழம் போயிருக்கிறது. இன்னும் 40 அடி ஆழம் போனால் லிக்னைட் வரும். 40 அடிக்கு இடையில் களி முதலியவைகள் இருக்கின்றன. 'வாடர் பிரெஷர்' இவ்வளவு இருக்கிறது என்று தெரியாது. எல்லாம் நம் திட்டமிட்டபடி நிறைவேறினால் செப்டெம்பர் மாத இறுதியில் வந்துவிடும். வேறு ஏதாவது இதிலே தடங்கல் ஏற்பட்டால் சற்று காலதாமதம் ஆகலாம். ஆனால் அவ்விதமான தடங்கல் ஏற்படும் என்று இப்பொழுது எதிர்பார்ப்பதற்கு இல்லை.

*Electricity Board Accounts Subordinates (demands)*

*969 *Q.*—**Sri V. K. KOTHANDARAMAN** : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாடு எலக்டிரிசிடி போர்டு அக்கவுண்ட்ஸ் சபார்டினேட்ஸ் யூனியனில் 1960-ம் வருஷம் அக்டோபர் மீ 26உ நிறைவேற்றப்பட்ட 12½% ஸ்பெஷல் அலவன்ஸ் போன்ற பல கோரிக்கைகளைப் பற்றிய லெட்டர் கனம் மின்சார அமைச்சருக்குச் சேர்ந்ததா ?

(இ) அப்படியானால், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : (*a*) Yes, Sir.

(*b*) The Government have since passed orders on the requests.

*Industrialisation Schemes (Third Plan)*

*970 *Q.*—**Sri N. K. PALANISAMI** : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any of the scheme for Industrialisation in the Third Five-Year Plan period is affected by the cut made in the allocation of funds for the Madras State; and

(*b*) if so, to what extent?

**The Hon. Sri R. VENKATARAMAN** : (*a*) The major industries to be started in the State are either in the Central sector of the Plan or in the private sector. The reduction in the size of the State's Third Plan does not therefore affect these schemes.

(*b*) Does not arise.

**Sri N. K. PALANISAMI** : May I know, Sir, whether the Government have submitted any proposal to the Centre regarding the starting of industries where the State Government would invest 50 per cent of the capital and 49 per cent would be collected from the public? If so, what happened to that proposal?

**The Hon. Sri R. VENKATARAMAN** : We have made no such proposal.



21st March 1961]

*Cases of change of sex*

*971 *Q.*—**Sri A. VEDARATHNAM** (on behalf of **Sri A. A. RASHEED**) : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether any cases of change of sex have been registered in any of the Government Hospitals in the State in 1959–60?

**The Hon. Sri M. A. MANICKAVELU** : One case of change of sex was brought to the out-patient Department of the Government Hospital, Karur (Tiruchirappalli district) during September 1960.

**Sri A. VEDARATHNAM** : தயவுசெய்து இதனுடைய விவரத்தை விளக்க முடியுமா ?

**The Hon. Sri M. A. MANICKAVELU** : இப்பொழுது இந்த விவரங்களையெல்லாம் சொல்லுவது அவ்வளவு உசிதமாகத் தோன்றவில்லை. கனம் அங்கத்தினர் அவர்கள் என்னிடம் வந்தால் அதைப்பற்றி நான் அவர்களுக்குச் சொல்லுகிறேன். (சிரிப்பு.)

**Sri V. K. KOTHANDARAMAN** : ஆணும் பெண்ணும் இல்லாத அலிகளை பெண் வார்டில் அனுமதிக்கப்பட்ட கேஸ்கள் எங்கெங்கே என்பதை அறிய முடியுமா ? அதுபற்றி சர்க்காருக்கு புகார் வந்திருக்கிறதா ?

**The Hon. Sri M. A. MANICKAVELU** : இந்த சமாசாரம் ஆண் பெண்ணாக மாறுவது அல்லது பெண் ஆணாக மாறுவது பற்றிய விசித்திரம்.

*Misappropriation (Bodinaickkanur Cardamom Co-operative Society)*

*972 *Q.*—**Sri N. R. THIAGARAJAN** : கனம் கைத்தொழில அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை ஜில்லா போடிநாய்க்கனூர் ஏலக்காய் கூட்டுறவு சங்கத்தில் மோசடிகள் நடந்ததாக புகார் வந்ததா ?

(இ) அது சம்பந்தமாக போலீஸ் புலன் விசாரணை என்னவாயிற்று ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : (அ) No, Sir.

(இ) Does not arise.

**Sri N. R. THIAGARAJAN** : ஏலக்காய் கூட்டுறவு சங்கத்திலிருந்து ரூ. 10 லட்சத்திற்கு மேல் விற்பனை வரி மட்டும் மோசடி நடந்துள்ளதாக திட்டவட்டமாக கேள்விப்படுகிறேன். அதாவது உண்மையா ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : கனம் அங்கத்தினர் அந்த விதமான புகார் பற்றிய எல்லா விவரங்களையும் எழுதி அனுப்பினால், சர்க்கார் அதைப் பரிசீலனை செய்யும்.

*Malaria (eradication)*

*973 *Q.*—**Sri A. VEDARATHNAM** : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அமெரிக்க சர்க்கார் இந்திய சர்க்காருக்கு மலேரியா ஒழிப்பிற்காக கொடுத்த ரூ. 49 கோடியில் நம் மாநிலத்திற்குக் கிடைத்த தொகை எவ்வளவு ?

(இ) அத்தொகை மூலம் என்னென்ன திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன ?

**The Hon. Sri M. A. MANICKAVELU** : (அ) Rs. 94,32,809.

(இ) A statement[a] is placed on the table of the House.

---

[a] Printed as Appendix III on pages 275–276 infra.

[21st March 1961

SRI A. VEDARATHNAM : இந்த மலேரியா வியாதி கொசுவினுல் பரவுகிறது—எப்படி காலரா தண்ணீரால் பரவுகிறதோ அதே போன்று. அப்படியிருக்கிற மலேரியா எராடிகேஷன் ஸ்கீமில் இங்கே மேஜை மீது வைக்கப்பட்டிருக்கிற அறிக்கையில் கொசுவை ஒழிப்பதற்குத் திட்டம் கிடையாது என்று கூறப்பட்டிருக்கிறதே. கொசுவை ஒழிக்காமல் எப்படி மலேரியாவை ஒழிக்க முடியும் என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்தக் கொசுக்களில் பல விதம் இருக்கின்றன. மலேரியா கொசு வேறு. அதுதான் மலேரியாவை உண்டாக்குகிறது. மக்களைக் கடித்துத் தொந்தரவு செய்கிற கொசு வேறு. இப்பொழுது "கான்சென்ட்ரேட்" செய்து கவனம் செலுத்துவது "மலேரியா பேரிங் மஸ்கிடோஸ்" பேரில்தான். அதற்கெல்லாம் தான் அப்படி சொல்லியிருக்கிறோம்.

SRI S. M. ANNAMALAI : இந்த "டி.டி.டி." அடித்த பிறகு கொசு அதிகமாகிவிட்டது. மூட்டைப்பூச்சியும் அதிகமாகிவிட்டது. அதைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ? மலேரியா வருவதற்குப் பதிலாக இந்த நோய் அதிகப்படியாக ஆகிவிட்டது. அதைத் தடுப்பதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிருர்கள்.?

THE HON. SRI M. A. MANICKAVELU : இம்மாதிரி சம்பவம் ஏற்பட்டிருக்கிறது. முன்பு கும்பகோணத்தில் கொசுவை ஒழிக்கும்போது, ஈ அதிகமாகிவிட்டது. பிறகு ஈயை ஒழிப்பதற்கு வேறு பிரயத்தனம் செய்யவேண்டியிருந்தது.

SRI M. K. SOMASUNDARAM : இந்தத் திட்டம் கிராமங்களில்தான் அதிகமாக அனுசரிக்கப்படுகிறது. முனிசிபாலிடிகளில் இந்தத் திட்டம் அனுசரிக்கப்படாத காரணத்தினுல் அங்கு கொசு அதிகமாக இருக்கிறது. ஆகவே, முனிசிபாலிடிகளுக்கும் இந்தத் திட்டத்தை விஸ்தரிப்பதற்கு அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்தத் திட்டம் பிராந்தியம் பூராவுக்கும் உண்டு. ஆனுல் மலேரியா "எபிடெமிக்" எங்கெங்கே அதிகமாக இருக்கிறதோ அங்கே கொஞ்சம் தீவிரமாக இருக்கும். எல்லா இடங்களிலும் இதை ஒழித்துக் கட்டவேண்டுமென்று தான் எல்லா இடங்களுக்கும் சேர்த்துத் திட்டம் போடப்பட்டிருக்கிறது. ஒரு பெரிய திட்டம் போடப்பட்டு அதற்கு ஏராளமான பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தமிழ் நாடு அரசாங்கமும் செலவு செய்கிறது. மத்திய அரசாங்கமும் அதற்குப் பணம் செலவு செய்கிறது.

SRI K. SATTANATHA KARAYALAR : இந்தக் கொசு ஒழிப்புத் திட்டத்தின் அடிப்படையே எல்லா இடங்களிலும் ஒன்று போல கொசுக்களை ஒழித்து விடவேண்டும் என்பதுதான் என்று தெரிகிறது. கொசு ஒழித்த இடங்களிலே புதிதாக பல கொசுக்கள் வருவதன் காரணமாக, இந்தக் கொசுக்களுக்கெல்லாம் இப்பொழுது அடிக்கக்கூடிய டி.டி.டி-க்கு "இம்யூனிடி" வந்து விடாதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : "இம்யூனிடி" வந்து விடும் என்று தான் அவசரம் அவசரமாகச் செய்யப்படுகிறது. ரொம்ப நாட்கள் ஆனுல், இம்யூனிடி வந்து விடும் என்று தான் பெரிய அளவிலே திட்டம் போட்டு சீக்கிரம் சில வருஷங்களுக்குள்ளேயே அதை முடிக்கவேண்டுமென்று இந்தியா பூராவுக்கும் இந்தத் திட்டம் போடப்பட்டிருக்கிறது.

SRI A. VEDARATHNAM : மேஜை மீது வைக்கப்பட்டிருக்கிற அறிக்கையில் 'It may be mentioned that the National Malaria Eradication Programme does not contemplate any project for eradication of mosquito population' என்றுதான் கூறியிருக்கிறதே அல்லாமல், அந்த மலேரியா கொசுவை ஒழிக்கப்போவதாகக்கூட அதில்காணப்படவில்லை. அப்படியிருக்கும்



21st March 1961]

பொழுது கனம் அமைச்சர் அவர்கள் மலேரியா கொசுவைத்தான் ஒழிக்கிருர்கள், மற்ற கொசுவை ஒழிப்பதில்லை என்று குறிப்பிட்டார்கள். அதன் விவரம் என்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : Though the statement may read like that, the inference is that the concentration is to eradicate the malaria bearing mosquitos and not other kinds of mosquitos by technical name.

SRI T. KARIA GOUNDER : கொசுக் கடியினுல் மலேரியா வருவதாக முடிவு இருக்கும்பொழுது, கொசுவை நீக்கும்பொழுது மூட்டைப் பூச்சி வந்திருப்பதால், அதனுடைய உபத்திரவத்தால் ஏதாவது வியாதி உண்டாகிறதா என்று சர்க்கார் பரிசீலனை செய்தார்களா ? அப்படியிருந்தால் அதன் விவரத்தை அறிவிக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : அதனுல் வியாதி ஒன்றும் இல்லை. அசௌகரியம்தான். அந்த அசௌகரியத்தினுல் தான் அதைப் பற்றி இங்கே கேள்வி எழுப்பக் கூடிய நிலைமை ஏற்பட்டது.

SRI S. NAGARAJA MONIGAR : இந்த "டி. டி. டி" அடித்தால் அழிந்து, ஒழிந்து போகாமல் அதிகமாக் உற்பத்தி ஆவதற்கு கொசுக்கள் முன் வருமானுல், அவைகள் இந்திய வை-பாரதத்தை மதிக்காமல், இந்திய அரசியல் சட்டத்திற்கு உட்படமாட்டேன் என்று சொல்கிற கொசுக்களா ?

(பதில் இல்லை.)

## *Nurses and midwives (Relief)*

*974 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்திலுள்ள ஆஸ்பத்திரிகளில் வேலை செய்யும் நர்ஸ்கள், மிட்வைப்புகள் அடிக்கடி காயலாவாகி விடுகிருர்கள் என்பது உண்மையா ?

(இ) இதற்குக் காரணமென்ன ?

(உ) அதற்கான பரிகாரம் காண சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : ( No, Sir,

(இ) Does not arise.

(உ) Periodical medical check up is being done in every 3 months.

SRI V. K. KOTHANDARAMAN : நமது ஆஸ்பத்திரிகளில் நர்சுகள் மிகவும் குறைவாக இருப்பதன் காரணமாகவும், அவர்களுக்கு இருக்கிற வேலைப் பளுவின் காரணமாகவும், மாதத்தில் ஒன்றிரண்டு நாட்கள் தான் விடுமுறை கிடைக்கிறது என்ற காரணமாகவும் அவர்கள் அடிக்கடி நோயால் பாதிக்கப் படுகிருர்கள் என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? ஆகவே, அவர்களுக்கு வாரத்திற்கு ஒரு நாளாவது விடுமுறை கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir. It is now being done in all the hospitals in the City and in some hospitals in the mufassal also.

[21st March 1961

### *Palar Basin Rules (Cancellation)*

* 975 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of SRI A. A. RASHEED) : Will the Hon. the Minister for works be pleased to state—

(*a*) whether the Government have received any petitions from the Ryots in North Arcot district for the cancellation of the Palar Basin Rules ; and

(*b*) if so, the steps taken thereon ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) The Government are relaxing the Palar Basin Rules wherever necessary. They do not consider it now necessary to cancel the rules.

SRI V. K. KRISHNAMURTHY : தலைவர் அவர்களே, "பாலாறு பேஸின் ரூல்ஸ்" வட ஆற்காடு மாவட்டத்தைப் பெரிதும் பாதிக்கிறது. எத்தனை அடியில் தண்ணீர் எடுக்கக்கூடாது, எத்தனை அடியில் எடுக்கலாம் என்ற விதியை விளக்கமாக கலெக்டருக்கும், மின்சாரப் பகுதியினருக்கும், பி. டப்ளியூ. டி-க்கும் அரசாங்கம் உத்தரவிட்டதா ? அதில் மயக்கமாகக் கூறியிருப்பதால், மயக்கமாக இல்லாமல் விளக்கமாகச் சொல்ல அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI P. KAKKAN : இந்த "ரூல்ஸை"ப்பற்றி ஜனங்களுக்கு விளக்கமாக நன்றாகத் தெரிவிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இரண்டாயிரம் அடிக்குள்ளே கிணறுகள் வெட்டக் கூடாது என்று ஏற்கனவே அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. அதுவும் வடகிழக்கு பருவக் காற்று நன்றாக இருந்தால்தான் அங்கத்தினர்கள் கேட்டால் கூட ரூல்ஸை ரிலாக்ஸ் செய்வதற்கு அரசாங்கம் கவனிக்குமே ஒழிய, பருவ மழை இல்லாவிட்டால் ஒன்றும் கொடுக்க முடியாத நிலைமைதான் இருக்கிறது. கடைசியாகத்தான் கலெக்டர் அவர்கள் பரிசீலனை செய்து ரூல்ஸை தளர்த்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அது சம்பந்தமாக ரெவின்யூ போர்டின் ரிப்போர்ட்டு வந்த பிறபாடு கவனிக்கப்படும்.

SRI T. KARIA GOUNDER : இந்த பாலாறு பேஸின் விதிகளை பிரதம எஞ்சினியர் அவர்கள் பார்வையிட்டு அதன் பேரில் சர்க்காருக்கு ரிப்போர்ட் வந்திருக்கிறதா ? அந்த ரிப்போர்ட்டை அனுசரிக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன். ஏற்கனவே என்ன செய்திருக்கிறார்கள் என்பதையும் அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

THE HON. SRI P. KAKKAN : கலெக்டர் அவர்கள் இப்பொழுது இந்த விதிகளைத் தளர்த்திக் கொடுக்கவேண்டுமென்று ரெவென்யூ போர்டு மூலமாக அனுப்பியிருக்கிறார் என்ற தகவலைச் சொன்னேன். கிணறுகள் வெட்டப்பட்டிருக்கின்றன. ஓரளவுக்கு விதிகளைத் தளர்த்திக் கொடுத்தால் விவசாய மக்களுக்கு நன்மை இருக்குமென்று எழுதி அனுப்பியிருக்கிறார்கள். ரெவென்யூ போர்டின் அபிப்பிராயம் தெரிந்த பிறபாடு முடிவு எடுக்கப்படும்.

SRI M.P. SARATHI : இந்த விதிகள் இருக்கும்பொழுதே 100 அடிக்குள்ளும், 50 அடிக்குள்ளும் கிணறுகள் வெட்டுவதற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. சிலருக்குக் கொடுக்கப்பட்டு, சிலருக்குக் கொடுக்கப்படாமல் இருப்பது சர்க்காருக்குத் தெரியுமா ? இல்லை என்று சொன்னவர்களுக்குக் கொடுப்பதற்கு இந்த விதிகளை ரத்து செய்ய சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI P. KAKKAN : டிசெர்விங் கேஸ்களிலே அவசியமாகக் கொடுக்கவேண்டுமென்று கலெக்டர் எக்ஸிகூடிவ் எஞ்சினியரைக் கலந்துகொண்டு சிபார்சு செய்திருக்கும் கேஸ்களிலும் அரசாங்கம் அனுமதி கொடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



21st March 1961]

SRI V. K. KOTHANDARAMAN : இந்த பாலாறு பேஸின் விதிகளிலே, ஸ்பிரிங் சானலிலிருந்து 2,000 அடி என்று இருக்கிறது. அதே போன்று ஒரு கிணறுக்கும் இன்னொரு கிணறுக்கும் 2,000 அடி இருக்கவேண்டுமென்று முறை இருக்கிறது. இது நியாயமற்ற முறை என்று சர்க்கார் உணருகிறதா ? கிணறுகள் எவ்வளவு தூரத்தில் இருந்தாலும் ஸ்பிரிங் சானலிலிருந்து 500 அடி என்று நிர்ணயித்து இதைத் திருத்தி அமைப்பார்களா ?

THE HON. SRI P. KAKKAN : என்னுடைய தகவல்படி, 500 அடி என்று இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பக்கத்திலே கிணறு இருக்கும்பொழுது ஏன் இந்தமாதிரி உத்தரவு பிறப்பிக்கவேண்டுமென்று கேட்கிறார்கள். ஒரு கிணறு இருக்கும்பொழுது, இன்னொரு கிணற்றுக்கு பெர்மிஷன் கொடுத்தால், இங்கேயும் தண்ணீர் இருக்காது, அங்கேயும் தண்ணீர் இருக்காது. இதை எல்லாம் பார்த்துத் தான் செய்கிறோம்.

SRI S. M. ANNAMALAI : வட ஆற்காட்டிலே எத்தனையோ நதிகள் ஓடுகின்றன. இந்த பாலாறு பேசின் விதிகளை வைத்துக்கொண்டு அவை எல்லா நதிகளுக்கும் பொருந்தும் என்று சொல்லுவது நியாயமா ? பாலற்றைப் பொறுத்தவரையில் இருந்தாலும் பரவாயில்லை. மற்ற எல்லாக் கிளை நதிகளுக்கும் இது பொருந்தும் என்று சொல்லுவதால், ஆர்ட்டீஸியன் வெல்கள், ரிவர் பம்பிங் ஸ்கீம்கள் கொண்டுவர முடியாமல் இருக்கிறதே. கிளை நதிகளுக்கு 1,000 அடி என்று அமைச்சர் சொன்னார்கள். அதைக் குறைந்தபட்சம் 200 அடிக்குக் குறைப்பதற்கு சர்க்கார் முன்வருவார்களா ?

THE HON. SRI P. KAKKAN: கனம் அங்கத்தினர் திரு. கோதண்டராமன் 500 அடியாகக் குறைக்கவேண்டுமென்று சொன்ன பொழுது, முடியாது என்று சொன்னேன். இப்பொழுது அங்கத்தினர் 200 அடிக்குத் தளர்த்த முடியுமா என்று கேட்கிறார். எல்லாம் பரிசீலனையில் இருக்கிறது. இப்பொழுது எந்த முடிவும் சொல்வதற்கு இல்லை. ஏற்கெனவே பரிசீலனை செய்து கீழே இருக்கிற ஆயக்கட்டுதாரர்களையும் கலந்து, அவர்களுக்கும் பாதகமாக இல்லாத முறையிலே, இந்த மாதிரி செய்தால்தான் நல்லது என்று கருதி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

### *Aluminium factory at Mettur*

* 976 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—மேட்டூரில் அலுமினிய தொழிற்சாலை எப்போது ஆரம்பிக்க உத்தேசம் ?

THE HON. SRI R. VENKATARAMAN : The Madras Aluminium Company Limited, is taking steps to establish an aluminium factory at Mettur. According to present indications the factory may go into production in a couple of years.

SRI V. K. KOTHANDARAMAN : இது தனியார் துறையிலா அல்லது பொதுத் துறையிலா ? மூலதனம் எவ்வளவு ?

THE HON. SRI R. VENKATARAMAN : தனியார் துறையிலே நடக்கிறது. அதனுடைய "ஆதரைஸ்டு காபிட்டல்" சற்றேறக்குறைய 10 கோடி ரூபாய்.

SRI A. VEDARATHNAM : இதில் எதிர்பார்க்கக் கூடிய உற்பத்தி அளவு எவ்வளவு ?

THE HON. SRI R. VENKATARAMAN : பத்தாயிரம் டன் அலுமினியம்.

[21st March 1961

*Rice (price)*

* 977 *Q.*—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the causes for the rise in the price of rice; and

(*b*) the steps taken to bring down the price?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Usually the price of rice goes up during the lean months of the year and comes down after the harvest;

(*b*) In order to bring down the rise in price of rice, fair price shops were opened in all needy areas of the State for distribution of rice at cheaper rates to the poor people.

SRI T. T. DANIEL : Is it not a fact that the price of rice shot up to Rs. 1-2-0 and Rs. 1-4-0 per Madras Measure some months before and may I know whether the reason for such rise is the transport of large quantities of rice to the adjacent States ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There has not been too much of export of rice to neighbouring States. According to the figures I have, the price of II sort rice for the week ended 4th March 1961 and for the week ended 12th March 1961 had been 95 nP. per Madras Measure. This is the figure for Madras city.

SRI S. M. ANNAMALAI : விலைகளைக் கட்டுப்படுத்துவதற்காக நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டு இருக்கின்றன என்று அமைச்சர் சொன்னார். பெப்ரவரி மாதக் கடைசியிலே அரிசி விலை இரண்டு புள்ளி ஏறியிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்களே, அது உண்மையா ? அப்படியானால், அரிசி விலை ஏற்றத்தைத் தடுப்பதற்கு சர்க்கார் ஏன் முயற்சி எடுத்துக் கொள்ளக் கூடாது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில் மார்ச்சிலே விலை 95 ந. பை. பெப்ரவரியிலே 94 ந. பை. இருந்தது. ஜனவரியிலே 92 ந.பை. ஆக இருந்தது. அறுவடை காலத்திலே குறைகிறது, மறுபடியும் ஏறிக்கொண்டு போகிறது. ஏறிக்கொண்டு போகிறது என்பதை மறுக்கவில்லை. அதற்கு ஒரு பரிகாரமாகத்தான் எங்கெங்கே அவசியமிருக்கிறதோ, அங்கங்கே நியாய விலைக்கடைகள் திறக்கப்படுகின்றன.

SRI P. S. K. LAKSHMIPATHI RAJ : மற்ற விலைவாசிகள் உயர்ந்திருக்கிறபொழுது, குறிப்பாக விவசாயிகளுக்கு ஏதோ கொஞ்சம் வருமானம் கிடைக்கும். இந்த அரிசி விலையை மட்டும் குறிப்பிட்டுச் சொல்லுவானேன்? ஒரு படத்திலே நடிப்பதற்கு ஒரு லட்சம், இரண்டு லட்சம் என்று அதிகப் பணம் வாங்குகிறார்களே, அதை மட்டும் குறிப்பிடாததற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எல்லோரும் அரிசியை உணவாகக் கொள்கிறார்கள். சாப்பிடுவதற்கு அரிசி வேண்டியிருக்கிறது. அரிசி விலை அதிகமாக இருந்தால் கவலை ஏற்படுகிறது. இரண்டு நாட்களுக்கு முன்பு ஒரு பத்திரிகையில் பார்த்தோம். கும்பகோணம் மார்க்கெட்டிலே மணங்குக்கு ஏதோ ஒரு ரூபாய் குறைந்துபோய்விட்டது, அதனால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டுவிடும் என்று போட்டிருந்தது. அம்மாதிரி கலவரத்தை உண்டுபண்ணுவதும் சரியல்ல. விவசாயிக்குக் கவலை ஏற்படக்கூடிய அளவுக்குக் குறையவில்லை. அதிகமாகத்தான் இருக்கிறது.



21st March 1961]

SRI S. NAGARAJA MONIGAR : பிரும்மாண்டமாக முன்னேறிவரும் ரஷியாவிலே ஒரு தக்காளிப்பழம் 4 ரூபாய் என்று பத்திரிகையில் வந்ததை சர்க்கார் கவனித்திருக்கிறார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ரஷியாவிலே உள்ள விலையையும் நம்முடைய நாட்டில் உள்ள விலையையும் ஒப்பிட்டுப் பார்ப்பது சரியல்ல. அதை வைத்துக்கொண்டு இங்கே கணக்குப் போடுவது சரி இல்லை.

*Fair price shops for rice (Tiruchirappalli)*

* 978 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of SRI M. KALYANASUNDARAM) : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of Fair Price Shops opened in Tiruchirappalli district; and

(*b*) the total quantity of rice issued through these shops, month by month up to December 1960 ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) 26 Fair Price Shops have been opened in Tiruchi district.

(*b*) The total quantity of rice issued through these shops is as follows :—

For November 1960—66 tons.

For December 1960—102 tons and 5 maunds.

*Rice (exports and imports)*

* 979 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of SRI T. SAMPATH) : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether rice exports from and imports into our State have been affected on account of short supply of railway wagons; and

(*b*) if so, what arrangement has been made to meet the situation?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There have been no complaints about short supply of Railway wagons for export of rice from this State. As regards the import of rice, in June 1960, some representations were received from Tadepalligudem, Gudiwada and Vijayawada regarding the short supply of Railway wagons for transport of rice from Andhra Pradesh into our State. The matter was taken up with the Railways who reported that every endeavour was being made to meet the demands. A subsequent representation, dated 12th February 1961 from the Nagapattinam Chamber of Commerce pointing out certain difficulties in the supply of wagons is being looked into.

SRI K. SATTANATHA KARAYALAR : May I know the quantity exported from and imported into this State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The total quantity in terms of rice exported from this State by rail is 211,043.9 tons in 1960.

[21st March 1961

SRI K. SATTANATHA KARAYALAR : Imports?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The total arrivals from the Andhra Pradesh by rail during 1960 are 89,529·3 tons.

*Industrial Establishments (Administration).*

* 980 Q.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தொழில் ஸ்தாபனங்களில் நிர்வாகத்தில் தொழிலாளர்கள் பங்குகொள்ளும் முறை அமுலில் கொண்டுவரப்பட்டுள்ளதா ?

(இ) எந்தெந்த ஸ்தாபனங்களில் ?

(உ) இல்லையென்றால், காரணமென்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) ஆம்.

(இ) தனியார் துறையில் சென்னை சிம்ஸன் குரூப் கம்பெனிகளில் அமுல் நடத்தப்படுகிறது.

(உ) இந்தக் கேள்வி எழவில்லை.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், இது போன்று பொதுத் துறையில் நடைபெறுகிற ஸ்தாபனங்களிலே ஏன் இந்த் முறையைக் கொண்டுவர முடியவில்லை ? அதற்கு ஏன் முயற்சி எடுக்கக் கூடாது ? இம்மாதிரி நடவடிக்கை எடுக்க உத்தேசம் உண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த முறையை அமுல் நடத்த வேண்டுமானால், அந்த ஸ்தாபனத்தில் ஒரே யூனியன் இருக்க வேண்டும் ; அப்படியிருக்கும் ஒரே யூனியனில் 80 சதவிகித ஊழியர்கள் அங்கத்தினர்களாக இருக்கவேண்டும். அப்படி இல்லாமல் பல யூனியன் களாக இருந்தால், ஜாயிண்ட் கௌன்சில் ஆப் மேனேஜ்மெண்ட் நடத்த முடியாது ; அப்பொழுது இதை ஏற்படுத்தினால் சிதறுண்டு கிடக்கும் தொழிலாளிகளினால் உற்பத்திப் பெருக்கம் ஏற்படாது.

SRI J. MATHA GOWDER : அப்படி பிளாண்டேஷன் ஏரியாவில் தனியாக ஒரே யூனியனாக, பலம் பொருந்தியதாக இருந்தால், ஒரே தோட்டத்திலே அப்படி இருந்தால், இந்த முறையை அமுல் நடத்த பரிசீலனை செய்யப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த முறை மான்யுபாக்சரிங் இண்டஸ்ட்ரீஸ்க்குத்தான் ; ப்ளான்டேஷன் போன்ற தொழில்களுக்கு அமுல் நடத்த உத்தேசம் இல்லை.

SRI A. VEDARATHNAM : ஸிம்ஸன் கம்பெனியில் தொழிலாளிகள் பங்கு கொள்ளும் ஏற்பாடு அமுலுக்கு வந்ததிலிருந்து ஏற்பட்டிருக்கும் அனுபவம் எப்படி இருக்கிறது ? நிர்வாகம் எப்படி வேலை செய்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : அது மிகவும் திருப்தி கரமாகவே இருக்கிறது என்று அந்த நிர்வாகஸ்தர்களும், தொழிற் சங்க அங்கத்தினர்களும் சொல்லுகிறார்கள் ; உற்பத்தி கணிசமான அளவில் அதிகரித்திருக்கிறது.

SRI V. K. KOTHANDARAMAN : ஸிம்ஸன் கம்பெனியிலும் தொழி லாளிகள் மத்தியிலும் பல தொழிற் சங்கங்கள் இருந்த போதிலும், இது போன்ற முறையை அமுலாக்கப் படுகிறது. ஆகவே . . . .

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் சொல் லும் விவாம் தவறு. அதனால் " ஆகவே . . . " என்ற கேள்வியின் எழவி . .



21st March 1961]

SRI V. K. KOTHANDARAMAN : பல தொழிற் சங்கங்கள் இருந் தாலும், மெஜாரிடி சங்கத்தின் பிரதிநிதித்துவத்தைக் கொண்டு, அந்த அடிப்படையில், இந்த முறையை அமுலாக்க முயற்சி எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : அந்த விதமான திட்டத்தை கனம் அங்கத்தினர் இந்தப் பதவிக்கு வரும்போது உருவாக்கலாம். இன் றைக்கு இருக்கும் நடைமுறையில் பல சங்கங்கள் இருந்தால், ஜாயிண்ட் கௌன்ஸில் நடத்த முடியாது. அப்படிச் செய்தால் போட்டியும், சண்டை யும்தான் வளரும். உற்பத்தி அதிகரிப்புக்குப் பதிலாக, சண்டைதான் நன்றாக வளரும். ஆகவே அப்படி அமுல் நடத்த முடியாது.

SRI T. S. RAMASWAMY : குரோம்பேட்டையிலுள்ள ட்ரான்ஸ்போர்ட் ஒர்க்ஷாப்பில் இந்த முறை அமுல் நடத்தப்பட்டதா ? என்ன அனுபவம் அங்கே ?

THE HON. SRI R. VENKATARAMAN : குரோம்பேட்டையில் அமுல் நடத்த சில முயற்சிகள் செய்தோம். அதற்குள்ளே, அங்கே ஸ்ட்ரைக் ஏற் பட்டது ; சுமுகமான உறவு இல்லாததால் இந்த ஏற்பாட்டைச் செய்ய முடிய வில்லை.

SRI J. MATHA GOWDER : ஸார், சென்ற வருஷ பட்ஜட் உரை யில் கனம் நிதி அமைச்சர் தொழில் சங்கங்கள் பங்கு கொள்ள முன் வந்தால், அதை வரவேற்று உதவி செய்வோம் என்றார்கள் ; இப் பொழுது தொழில் அமைச்சர் ப்ளாண்டேஷன் ஏரியாவுக்கு விஸ்தரிக்க சர்க்கார் முன் வரவில்லை என்கிறார்கள். ஆகவே, அரசாங்கத்தின் கொள் கைகள் என்ன என்று திட்டவட்டமாகச் சொல்ல முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த இரண்டு அமைச்சர் களும் சொன்னது வேறு வேறு கருத்துக்கள். கம்பெனிகளில் தொழி லாளிகள் பங்குதாரர்களாக தங்கள் சேமிப்பைப் போடவேண்டும் என்றது நிதி அமைச்சரின் கருத்து ; பணம் வாங்குகிறீர்கள் வெவ்வேறு துறைகளில், போனஸ் பணம் முதலியவை ; அவற்றை சேமிப்பாகப் போட்டு பங்கு தாரர்களாக வாருங்கள் என்ற உயர்ந்த லட்சியத்தைச் சொன்னார்கள் அவர்கள். நான் சொல்லுவது, ஜாயிண்ட் கௌன்சில் ஆப் மேனேஜ் மெண்ட், நிர்வாகத்தை நடத்துவதில், தொழிலாளிகளும், முதலாளி களும் கலந்து ஆலோசித்து, எந்த விதமான நிர்வாகம் இருக்க வேண்டும், எதனால் உற்பத்திப் பெருக்கம் ஏற்படும் என்ற முறையில் செய்ய வேண் டும் என்ற கருத்து. எஞ்ஜினியரிங் இண்டஸ்ட்ரீஸ், மான்யூபாக்சரிங் இண்டஸ்ட்ரீஸ்களில்தான் இதை நன்றாகச் செய்ய முடியும். ப்ளாண்டே ஷன்களில் செய்வது சுலபமில்லை. அந்த அபிப்பிராயம் ராஜ்ய சர்க்கா ருக்கு இல்லை என்று சொன்னேன்.

SRI A. VEDARATHNAM : ஸார், கனம் அமைச்சர் கூறிய பதிலி லிருந்து, இந்த முறை அனுபவத்தில் நன்றாக வேலை செய்வதாகவும், சுமுகமான உறவு நிலவுவதாகவும், உற்பத்தி பெருகுவதாகவும் சொன் னார்கள். ஏன் இந்த முறையைக் கொண்டு வர, ஒரு தொழில் ஸ்தாபனத் தில் ஒரே சங்கம்தான் இருக்க வேண்டும், தொழிலாளிகள் ஒரே சங்கத்தில் தான் ஈடுபடவேண்டும் என்று ஏன் செய்யக்கூடாது ?

THE HON. SRI R. VENKATARAMAN : அது தொழிலாளிகள் செய்ய வேண்டிய விஷயம். அதைச் சட்ட பூர்வமாகச் செய்ய சர்க்காருக்கு உத்தேசம் இல்லை.

SRI V. K. KOTHANDARAMAN : எழுபத்தைந்து பர்சண்டுக்கு மேல் தொழிலாளிகளை அங்கத்தினர்களாகக் கொண்ட சங்கமாக இருந்தால், அது போன்ற தொழில்களில் இந்த முறையை அமுலுக்குக் கொண்டு வர முயற்சி எடுக்கப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : It is a hypothetical question.

DEPUTY SPEAKER : Questions are over.

[21st March 1961

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II.—CORRECTION TO ANSWER TO A SUPPLEMENTARY QUESTION.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, with reference to Question No. 979, I answered in reply to a supplementary question that the total export of rice to Kerala by rail was 211,043.9 tons. I would like to make a correction and I am sorry for the mistake. In addition to this export of rice to Kerala by rail, 26,685·8 tons of paddy were also exported to Kerala by rail. In terms of rice, paddy works out to 17,790·5 tons of rice. So the total export of rice including paddy to Kerala is 2,28,834·4 tons.

## III.—STATEMENT OF DEMANDS FOR GRANTS FOR EXCESS EXPENDITURE IN THE YEAR 1957–58.

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, I rise to present the statement of Demands for grants for excess expenditure in the year 1957-58. The appropriations originally provided for in the Budget Estimates cannot in the nature of things be expected to tally entirely with the actuals, and excesses under some grants are inevitable. The total of the excesses of expenditure under voted grants which is now sought to be covered by legislative approval is Rs. 107 lakhs roundly against a total final appropriation of Rs. 16,027 lakhs. The Explanatory note and the Annexure appended to the statement of demands give in full the reasons for the excess in each case. The Public Accounts Committee constituted for the year 1959-60 at its meeting held during the course of the year examined the reasons for the excesses and have recommended in their Report published in August 1960 that demands for grants to cover the excess expenditure over the final sanctioned appropriation under each grant might be presented to the Legislative Assembly.

I commend for the acceptance of the House the statement of Demands for grants for excess expenditure in the year 1957-58.

## IV.—FINAL SUPPLEMENTARY ESTIMATES FOR THE YEAR 1960–61.

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, I rise to present the Final Supplementary Estimates for the year 1960-61. The Supplementary demand before the House is for Rs. 24·69 crores out of which Rs. 11·02 crores is on the Revenue Account, Rs. 8·43 crores is on the Capital Account and the balance of Rs. 5·24 crores under "Loans and Advances".

2. The Revised Estimates for 1960–61 have been presented to the House along with the Budget for 1961-62. The Final Supplementaries have been drawn up on the basis of the actual requirements for the year under various heads which closely follow the Revised Estimates for 1960-61.

A study of the detailed explanatory statement placed before the House will show that the demands for further expenditure are mainly under development heads.



21st March 1961] [Sri C. Subramanim]

Revenue Account.

3. The appropriation of Rs. 1·15 crores under Education reflects larger requirements under Teaching Grants (Rs. 47 lakhs), under the Mid-day Meals Scheme (Rs. 6 lakhs) and for the expansion of N.C.C. (Rs. 12 lakhs).

4. A sum of Rs. one crore has been asked for under "Harijan Welfare" where there has been a substantial step up in expenditure in the current year. Out of this Rs. 24 lakhs are required for Houses and House sites and Rs. 36 lakhs for the Scholarship Programme.

5. An item of special interest is the demand for an additional sum of Rs. 80 lakhs under Local Development Works in which the outlay in the current year is expected to reach Rs. one crore exclusive of the contribution in kind and labour from the public of Rs. 13 lakhs approximately. As hon'ble Members are aware, the programme now extends to Rural Water Supply Works, Road Works and the construction of Village School Buildings.

6. Apart from "Suspense" heads, the main item of additional expenditure in "Civil Works" is the additional provision of Rs. 50 lakhs for maintenance and repairs. This includes Rs. 15 lakhs for flood repairs, Rs. 5 lakhs for the Roads in Tiruttani area and Rs. 25 lakhs for the improvement of important bus routes and other rural roads in order that they may be handed over to Panchayat Unions in good condition.

7. While presenting the last Supplementary Estimates, I had referred to the provisions made for the implementation of the new Panchayat Reform. An important provision in this regard is the demand in the present Supplementaries of Rs. 36 lakhs as grants to Village Panchayats to match the House tax levied by them. Largely on account of this matching provision in the new Panchayats Act, the total house tax levied by Panchayats in the State has nearly doubled from Rs. 20 lakhs to Rs. 36 lakhs in the current year. I am sure that this encouraging trend will be welcomed by all sections of the House.

An additional transfer of Rs. 27 lakhs to Local Bodies has been provided for under "Entertainments Tax" in accordance with the increased receipts under this head.

8. The other significant provisions made for development expenditure in the Revenue Account are: Rs. 17 lakhs for more intensive exploitation of Forest produce which is reflected in higher receipts under "Forests" of Rs. 54 lakhs, Rs. 49 lakhs under "Medical" mainly under diet, drugs and hospital equipments consequent on increase in bed strength, Rs. 61 lakhs under "Public Health" mainly for the National Malaria Eradication Programme, Rs. 29 lakhs under "Agriculture" for the intensification of plant protection measures, Rs. 23 lakhs under "Co-operation" and Rs. 10 lakhs under "Animal Husbandry".

[Sri C. Subramaniam] [21st March 1961

**Capital Accounts.** 9. Apart from the gross appropriation under "Suspense" heads which are entirely wiped off by credits, the significant additional provisions in the Capital Account are: Rs. 63 lakhs for the Special Minor Irrigation Programme, Rs. 32 lakhs for the Rural Water-Supply and Rs. 16 lakhs for National Water-Supply Schemes and Rs. 17 lakhs for Road Works in the Backward areas of Ramanathapuram District. Under State Trading Schemes, an extra provision of Rs. 86 lakhs has been made for meeting arrears due to the Government of India towards supply of chemical fertilizers.

**Loans and Advances.** 10. The main component of the demand under "Loans and Advances" is the additional loan of Rs. 259 lakhs to the State Electricity Board. The original loan requirement for the Board was fixed on the basis of a Capital Outlay of Rs. 12 crores in 1960–61 to be met partly by the Board floating an open market loan of Rs. 3·3 crores. The Capital Outlay on Power is now anticipated to reach Rs. 14 crores in the current year and the Board has not been able to go in for open market borrowing. As a result of these factors, an additional sum of Rs. 259 lakhs to the Electricity Board has become necessary. The demand also includes Rs. 11 lakhs more for the Middle-Income Housing Scheme, Rs. 10 lakhs more for the Low-Income Housing Schemes and Rs. 11 lakhs more for Weavers' Housing and Industrial Housing Schemes. A ways and means advance of Rs. 75 lakhs to the State Khadi Board has been provided. This will be recouped at the end of the current year.

11. Sir, I have very briefly summarised the important provisions in the Final Supplementary statement for the current year which reflect the increase in the tempo of expenditure on Plan Schemes. Budgetary control over expenditure is only a device to see that monies are spent on the right priorities approved by the Legislature and in an economical way. The additional appropriations before the House satisfy these cardinal tests and I am sure the House will, therefore, welcome and approve them.

With these few words, Sir, I commend the Third Supplementary Estimates for the acceptance of the House.

## V.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1961–62—*cont.*

## DEMAND V—MOTOR VEHICLES ACTS ADMINISTRATION).

**9–30 a.m.** THE HON. SRI V. RAMAIAH: On the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 11,85,500 under Demand V—Motor Vehicles Acts Administration.".

DEPUTY SPEAKER: Motion moved—

"That the Government be granted a sum not exceeding Rs. 11,85,500 under Demand V—Motor Vehicles Acts Administration."



21st March 1961] [Deputy Speaker]

Sri V. K. Kothandaraman may now move his Cut Motion.

SRI V. K. KOTHANDARAMAN: மோட்டார் வெகிக்கிள்ஸ் ஆக்ட்ஸ் அட்மினிஸ்ட்ரேஷன் டிமாண்டின் கீழ் என் பெயரால் வந்திருக்கக் கூடிய 345-வது வெட்டுப் பிரேரணையை நான் பிரேரேபிக்கிறேன்.

"That the allotment of Rs. 11,85,500 under Demand V—Motor Vehicles Acts Administration be reduced by Rs. 100."

DEPUTY SPEAKER: Cut Motion moved—

"That the allotment of Rs. 11,85,500 under Demand V—Motor Vehicles Acts Administration be reduced by Rs. 100."

The Demand as well as the Cut Motion are before the House for discussion. I think the Hon. Minister wants to make some statement or so.

THE HON. SRI V. RAMAIAH: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, முன்னுரையாக நான் சொல்லவேண்டியதையெல்லாம் ஒரு அறிக்கை தயார் செய்து அதில் இந்த இலாகா செய்துள்ள பல்வேறு வேலைகளைப் பற்றியெல்லாம் சுருக்கமாக எடுத்துக் கூறியிருக்கிறேன். ஆகையால் முன்னுரையாக நான் அதிக நேரம் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. எனது விருப்பம், கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் இந்த விவாதத்தில் கலந்து கொண்டால் நன்றாக இருக்கும் என்பது. கடந்த நான்கு ஆண்டுகளாக இந்த இலாகா செய்திருக்கக்கூடிய பல்வேறு முயற்சிகள் குறித்து கனம் அங்கத்தினர்கள் கருத்துக்களைத் தெரிந்து கொள்ள சந்தர்ப்பம் கிடைத்தால் இன்னும் மேலும் நல்ல விதத்தில் இந்த இலாகாவைப் பொறுப்போடு நடத்துவதற்கு வசதி ஏற்படும். ஆகவே கனம் அங்கத்தினர்கள் இதில் அதிக நேரம் பங்கெடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடைசியாக நான் ஏதாவது சொல்ல வேண்டியிருந்தால் இந்த விவாதத்தின் கடைசியில் ½ மணி நேரம் எடுத்துக் கொண்டு கனம் அங்கத்தினர்கள் சொல்லக் கூடிய கருத்துக்களுக்குப் பதில் சொல்லும் முறையில் மேலும் இதை நல்லவிதமாகச் செயல்படுத்துவதற்கு என்னென்ன புதிய ஆலோசனைகள் கூறப்படுகிறதோ அவைகளுக்கு எல்லாம் பொறுப்போடு பதில் சொல்லக் கூடிய முறையில் கடைசியில் ½ மணி நேரம் கொடுத்தால் போதும் என்று கூறிக் கொண்டு கனம் அங்கத்தினர்கள் இதில் கலந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

SRI V. K. KOTHANDARAMAN: கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இந்த மோட்டார் போக்கு வரத்து இலாகாவைப்பற்றி நமக்குத் தெரியும். இந்த ராஜ்யத்தில் சமீப காலம் வரையில் ஒரே கம்பனியாக இருந்து பஸ் சர்வீஸ் எல்லாம் பல சர்வீஸ்களாக மாற்றப்பட்டு வருகிறது என்பதை நாம் பார்க்கிறோம். அதற்குக் காரணம் என்ன என்பதைப் பற்றி கனம் அமைச்சர் அவர்களுக்கும், சர்க்காருக்கும் தெட்டத் தெளிவாகத் தெரியும் என்பதை எடுத்துக்கூற ஆசைப்படுகிறேன். ஒரு சர்வீஸாக இருப்பதை பல சர்வீஸ்களாக எதற்காக வேண்டி மாற்றப்படுகிறது என்று பார்க்கவேண்டும். இன்று சர்க்காருக்குக் கொடுக்கக்கூடிய பல்வேறு வரியிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக வேண்டியும் அதே போன்று தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய சலுகைகளிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக வேண்டியும் இது போன்று பல சர்வீஸ்களாக, தன் பேரில் அல்லது மனைவியின் பேரில், பிள்ளைகள் இருந்தால் அத்தனை பிள்ளைகளின் பேரில் இப்படி பல சர்வீஸ்களாக இந்த ராஜ்யம் பூராவுமே இன்றைக்கு மாற்றப்பட்டு வருகிறது. இதனால் சர்க்காரின் வருமானம் எந்தளவு பாதிக்கப்படுகிறதென்பதை அமைச்சர் அவர்கள் நன்கு சிந்தித்துப் பார்க்க வேண்டும் இதை நன்கு சிந்தித்துப் பார்த்து ஒரே குடும்பத்திலிருந்து ஒரு சர்வீஸாக இருந்ததை பல சர்வீஸ்களாக மாற்றக்கூடிய அளவிற்கு அனுமதிப்பது சரியா, முறையா, இதனால் எந்தளவு சர்க்கார் பாதிக்கப்படுகிறது, தொழிலாளர்கள் இதனால் எப்படிப் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை 9–30 a.m.

[Sri V. K. Kothandaraman] [21st March 1961

யும் உணர்ந்து அதற்கு வேண்டிய வழிவகைகள் செய்யக்கூடிய முறையில் சட்டதிட்டங்களை மாற்றியமைக்க வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதேபோன்று மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் 25 சத விகிதம் பஸ் ரூட்டுகளை அதிகப்படுத்தவேண்டுமென்று மத்திய அரசாங்கத்திலிருந்து ஒரு உத்தரவு வந்தது, நமது ராஜ்ய சர்க்காரும் உத்தரவு பிறப்பித்துள்ளது. ஆனால் கனம் அமைச்சர் அவர்கள் சொல்லலாம், 35 சத விகிதம், 40 சத விகிதம் அதிகப்படுத்தப் பட்டிருக்கிறதென்று. ஆனால் வட ஆற்காடு ஜில்லாவைப் பொறுத்தமட்டும் நான் சொல்வேன். அங்கு ரெயில்வே போக்குவரத்து மிகக் குறைவான தாலுக்காக்கள் பல இருக்கின்றன. அங்கு காடுமேடுகள் அதிகமாக இருப்பதால், அங்கு ஒரு குறிப்பிட்ட கிராமத்திலிருந்து நகரத்திற்கு, ஜில்லா தலைநகருக்கு வர வேண்டுமென்றால் இரண்டு, மூன்று பஸ்கள் மாறி மாறி அவர்கள் ஏறி பிரயாணம் செய்யக்கூடிய அளவிற்குப் பல பகுதிகள் இன்றும் இருந்துகொண்டிருக்கின்றன. இன்றைக்கு ரயில்வே போக்குவரத்து வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று சொன்னால் எங்கள் கையிலே ஒன்றும் இல்லை, மத்திய சர்க்கார்தான் செய்யவேண்டும், அவர்கள் செய்யவில்லை என்று சொல்கிறார்கள். அந்த அளவிற்கு பஸ் போக்குவரத்தும் இருந்துகொண்டிருக்கிறது. குறிப்பாக கிராமங்கள் முன்னேற வேண்டும். விவசாய அபிவிருத்தி ஏற்பட வேண்டுமென்று சொல்கிற இந்த நேரத்திலே இது போன்ற பஸ் போக்குவரத்து மேலும் அதிகப்படியாகச் செய்ய வேண்டும். இதன் மூலமாக பல துறைகளிலே உதவி செய்ய முடியும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஒரு சர்வீசை உறவினர்களே சேர்ந்து லிமிடெட் கன்சர்ன் ஆக ரிஜிஸ்டர் செய்து கொள்ளுகிறார்கள். பல பேர் தனித்தனியாக ஒரே குடும்பத்தில் இருக்கிறவர்கள் ரிஜிஸ்ட்ரேஷன் செய்துகொண்டு சலுகைகள் பெறக்கூடிய நிலைமையில் இருக்கிறார்கள். ராணுவத்திலிருந்து வெளி வந்த தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து கூட்டுறவு முறையிலே பஸ்களை ஓட்டுவதாக எக்ஸ் மிலிட்டரி மென் சர்வீஸ் என்ற பெயரிலே அமைத்திருக்கிறார்கள். இதுமாதிரி தொழிலாளர் நடத்துவதற்கு பர்மிட் கொடுக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படுத்தித் தருவது நல்லது. இதில் அரசாங்கம் தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்பொழுது லாரி போக்குவரத்து அதிகப்படியாக நடைபெறுகிறது. அதுவும் இராத்திரி காலங்களிலேதான் அதிகமாக நடைபெறுகிறது. இவை உணவுப் பொருள்கள் ஏற்றிச் செல்வதால் அனுமதிக்கப்படுகிறது என்று சொல்லுகிறார்கள். ஆனால் உண்மையில் என்ன நடக்கிறதென்றால் ஸ்மக்லிட் கூட்ஸ்களைத்தான் அதில் ஏற்றிச் செல்கிறார்கள். அப்படியிருக்கும் போது இது பொதுமக்களின் நன்மைக்காக என்று சொல்லப்படுகிறது. ஒரு நாள் தவறாமல் இரவு நேரங்களில் இவ்வாறு எடுத்துச் செல்வதைத் தடுப்பதற்கு இரவு நேரத்தில் 12 மணிக்குமேல் லாரி போக்குவரத்து இருக்கக்கூடாதென்று தடைபோட்டு எந்த இடத்திற்கு எந்த லாரிகள் அந்த நேரத்தில் வந்தாலும் அந்த இடத்திலேயே நிறுத்திக் கொள்ள வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன். இதற்காக சட்ட திட்டங்களை மாற்றித் திருத்தி அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்பொழுது மார்க் சிஸ்டம் என்று சொல்லக்கூடிய முறையிலே பர்மிட்டுகள் வழங்கப்படுகின்றன. எந்தத் தொழிலாளர்கள் போட்டாலும் பஸ் ரூட் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் ஒருவனுடைய கைகால்களையும் கட்டிப்போட்டுவிட்டு அவனுக்கு முன்னால் சாப்பாட்டை வைத்துவிட்டு சாப்பிடமாட்டேன் என்று சொல்கிறார்களே என்று சொன்னால் எப்படியிருக்குமோ அப்படித்தான் இந்தத் தொழிலாளர்களுக்கு பஸ் ரூட் கொடுப்பதும் இருக்கிறது. அப்படி தொழிலாளர் யாருக்காவது பஸ் ரூட் கொடுத்தாலும் கூட பிலீட் ஓனர்கள் அதைத் தடுத்து நிறுத்த ஹைகோர்ட் வரைக்கும் அல்லது சுப்ரீம் கோர்ட் வரைக்கும் போவதற்குத் தயாராக இருக்கிறார்கள். அவர்களுக்கு வசதியும் இருக்கிறது. தொழிலாளர்களாக இருந்தாலும் சரி, சாதாரண வியாபாரியாக இருந்தாலும் சரி ஒன்று சேர்ந்து நடத்த முன் வந்தால் அவர்களுக்கு வாய்ப்பு அளிக்க சட்டதிட்டங்களை மாற்றி அமைக்கவேண்டு



21st March 1961] [Sri V. K. Kothandaraman]

மென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இரண்டு மூன்று நாளைக்கு முன்பு நான் ஒரு கேள்வி கேட்கும்போது கோயம்பத்தூரில் பொன்னுசாமி என்ற ஒரு ஹரிஜனனுக்குக் கொடுக்காததற்குக் காரணம் அவருக்கு ஒர்க் ஷாப் இல்லை, இந்த மார்க் சிஸ்டம் அடிப்படையில் அவருக்குக் கொடுக்கவில்லை என்று பதில் அளித்தார்கள். இன்று ஹரிஜன மக்களும் ஏழை மக்களும் பலனடைய முடியாத அளவிற்குப் பல சங்கடங்கள் இருக்கின்றன. பெரிய பெரிய பணக்காரர்கள் ஏகபோக உரிமையுடன் அனுபவிக்கக்கூடிய அளவிற்கு நிலைமை இருக்கிறது. 3½ லட்சம் ஜனத்தொகை இருக்கக்கூடிய கோயம்புத்தூரில் 120 டவுன் சர்விஸ் பஸ்கள் ஓடுகின்றன. ஐந்து லட்சம் ஜனத்தொகை இருக்கக்கூடிய மதுரையில் டி.வி.எஸ். நடத்துகிற பஸ் சர்விசில் 60 பஸ்கள்தான் ஓடுகின்றன. இப்படி ஜனத்தொகை அதிகமாக உள்ள மதுரையில் 60 பஸ்கள்தான் ஓடுகின்றன. இதை ஆராய்வதற்காக ஒரு ஸ்பெஷல் ஆபீசரைப் போட்டு அவர்களும் ரிபோர்ட்டை சமர்ப்பித்திருக்கிறார்கள். இன்னும் 80 பஸ்களாவது போடக்கூடிய அளவிற்கு நிலைமை இருக்கிறதென்று தெரிவித்தார்கள். அப்படி இருந்தும் அந்த ரிபோர்ட் சமர்ப்பித்து ஒரு வருஷத்திற்கு மேல் ஆகியும் இது வரையில் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டார்கள் என்பது தெரியவில்லை. டி.வி.எஸ். ஸ்தாபனம் உலகத்திற்கே வழிகாட்டியாக இருக்கிறது, பஸ் போக்குவரத்தை நன்றாக நடத்துகிறார்கள், உரிமையைக்கூட அவர்களுக்குக் கொடுத்துவிடலாம் என்றெல்லாம் ஒரு சில அங்கத்தினர்கள் சொல்லலாம். என் அமைச்சர் அவர்கள் கூட சொல்லலாம். ஒரு ஜில்லாவின் ஏகபோக உரிமையை ஒருவர் கையிலேயே இம்மாதிரியாக ஒப்படைக்கக்கூடாது என்று தான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்த உரிமை யாராகயிருந்தாலும் அவர்களுக்குப் போகக்கூடாது. கூட்டுறவு முறையிலே எல்லாத் தொழில்களையும் ஆரம்பிக்கப் போகிறோம் என்று சொல்லக்கூடிய இந்த நேரத்திலே எல்லாம் ஆமை வேகத்தில்தான் போகிறது. யார் இந்தத் தொழிலை நடத்த முன்னுக்கு வந்தாலும் அவர்களுக்கு பஸ் ரூட் கொடுக்கக்கூடிய நிலைமை ஏற்படவேண்டும். அதற்காக முயற்சி எடுத்துக்கொள்கிறவர்களை ஊக்குவிப்பது அரசாங்கத்தின் கடமை. முடிந்த வரையில் கூட்டுறவு முறையில் இந்தத் தொழிலை நடத்துவதற்கு முன்வந்தால் அவர்களுக்குக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். இன்றைக்கு பஸ் போக்குவரத்து தேசியமயமாக்கவேண்டுமென்று சொல்லக்கூடிய நேரத்திலே எல்லா ரூட்டுகளையும் அரசாங்கமே உடனடியாக எடுத்துக்கொள்ளவேண்டும்.

இப்பொழுது லாங் ரூட் சர்விஸ் பஸ்ஸை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். நகரசபை பஞ்சாயத்து யூனியனை அமைக்கக்கூடிய நிலையிலே ரோடு போடுவதற்காக சர்க்காரிடம் 1,000 ரூபாய் வாங்குவதற்காக புதுப் புது வரிகளைப்போட்டு கிராம மக்கள் பேரிலே திணிக்கக்கூடிய நிலைமையை உண்டாக்காமல், பஸ்ட் கிளாஸ் முனிசிபல் ஏரியாவில் இருக்கும் நகரசபைக்கு இந்த ரோட்டுகள் போடுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். லாங் ரூட்டில் ஓடக்கூடிய பஸ்களிலே ஒரு பக்கத்தில் "பான்" இருக்கிறது. கடைசிவரையில் பஸ்ஸில் காற்று வருவது கிடையாது. லக்ஷுரி கோச்சில் இருக்கும் தண்ணீர் வசதி கூட இதில் இல்லை. ஆகையால் நல்ல முறையில் காற்று வசதி உண்டாக்க திருத்தி அமைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். மேலும் அங்கே பத்திரிகை வசதியும் செய்து கொடுக்க வேண்டும். இந்த லாங் ரூட் பஸ் சர்விஸில் ஒன்றுக்கு இரண்டுக்கு போவதற்கு கண்ட இடத்தில் நிறுத்தவேண்டிய நிலைமை இருக்கிறது. இதற்கும் வசதிசெய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். குறிப்பாக அங்கங்கே இரண்டு மூன்று இடத்தில் ஏறி பிரயாணம் செய்யக்கூடிய கிராமங்களுக்கு பஸ் போக்குவரத்து அதிகப்படியாகச் செய்ய வேண்டும். ஏகபோக உரிமையை ஒருவர் கையிலே கொடுக்கக்கூடாது. இப்பொழுது ஷார்ட் ரூட் பஸ் பர்மிட் 15 மைல்களுக்குக் கொடுப்பதற்குப் பதிலாக 25 மைல்களுக்குக் கொடுக்கும் அளவில் திருத்தி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். சட்ட திட்டங்கள் எல்லாம் ஓரளவுக்கு மாற்றி அமைக்கப்படவேண்டும். மதுரையில் வேண்டிய அளவுக்கு டௌன் பஸ்களை விஸ்தரிக்க அமைச்சர் அவர்கள் கவனம்

[Sri V. K. Kothandaraman] [21st March 1961

செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தேசியமயமாக்கும் விஷயத்தில் தேர்தலுக்கு முன்னால் தேசீய மயமாக்கும் பிரச்னை உங்களிடத்தில் வரவே வராது. ஆகவே தேர்தலுக்குப் பின்னாவது, தேசியமயமாக்கும் விஷயத்தில் கவனம் செலுத்தவேண்டும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**Sri P. S. K. LAKSHMIPATHI RAJ :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மான்யத்தின் மீது ஒரு சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன். பஸ் போக்குவரத்தில் ஒரு புதிய சகாப்தத்தை அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கிறது. கடந்த காலங்களில் பஸ் போக்குவரத்து என்று சொன்னால், அஞ்சி நடுங்கிக்கொண்டிருந்த காலம் இருந்தது. ஆனால் இப்போது அப்படியல்ல. முன்னால், நகரங்களிலுள்ள போக்கிரிகளை எல்லாம் பஸ்களின் ஏஜெண்டுகளாக நியமித்து பஸ்களின் சொந்தக்காரர்களின் கையாட்களாக வேலை செய்து கொண்டு வருவார்கள். பஸ் ஏற வரும் பிரயாணிகளின் மூட்டைகளை வாங்கி பிடுங்கி ஒரு வண்டியில் வைத்து விடுவார்கள், மனைவி ஒரு பஸ்ஸில் ஏற வேண்டியிருக்கும், புருஷன் வேறு ஒரு பஸ்ஸில் ஏற வேண்டியிருக்கும், குழந்தை இன்னொரு பஸ்ஸில் இருக்கும். இந்த அவல நிலைமை எல்லாம் போக்கி, இப்போது நல்ல தொரு சட்டத்தை எல்லாம் கொண்டு வந்து பஸ் போக்குவரத்தை அனுகூலமான ஒரு சாதனமாக கொண்டு வந்ததற்கு நாம் அரசாங்கத்தைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அது மட்டுமல்ல, பஸ் போக்குவரத்தில் ஒரு புதிய நிலைமையை சிருஷ்டித்துக்கொண்டிருக்கிறார்கள். நெடுந்தூரத்திற்கு எல்லாம் இப்போது பஸ் வசதி இருக்கிறது. கோயம்புத்தூரிலிருந்து கன்னியாகுமரிக்கும், சென்னையிலிருந்து திருச்சிராப்பள்ளிக்கும், திருச்சிராப்பள்ளியிலிருந்து கன்னியாகுமரிக்கும் நீண்ட தூர பஸ் போக்கு வரத்தை நாம் ஏற்படுத்தியிருக்கிறோம். இந்த பஸ் போக்குவரத்துகள் எல்லாம் நல்ல முறையில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆரம்பத்தில் வேண்டுமானால் சில குறைபாடுகள் இருக்கலாம். இதில் முக்கியமாக திருத்திக்கொள்ளவேண்டிய ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். அதாவது இந்த நெடுந்தூர பஸ்களில் அதிகமான சார்ஜ் விதிக்கப்பட்டிருப்பதாக கிராம வாசிகள் கூறுகிறார்கள். ஆகவே இதில் விதிக்கப்பட்டிருக்கின்ற சார்ஜ்ஜை சிறிதளவு குறைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு நெடுந்தூர பஸ் போக்குவரத்தில் சில வசதிகளும் செய்து கொடுக்கவேண்டும். எனக்கு முன்னால் பேசிய கனம் திரு. கோதண்டராமன் அவர்கள் சொன்ன சில விஷயங்களை எடுத்துக்கொள்ளலாம். எப்படி விமான போக்குவரத்தில் பத்திரிகைகள் கொடுத்து பிரயாணிகளுக்கு அலுப்பு தட்டாமல் பார்த்துக்கொள்கிறார்களோ, அதே போன்ற வசதி இதிலேயும் செய்து கொடுக்கப்பட வேண்டும். இப்போது தண்ணீர் வசதி இருக்கிறது. சோடா கலர் எல்லாம் வைக்கப்பட்டிருக்கிறது. இவ்வித சௌகரியங்கள் எல்லாம் செய்து வைக்கப்பட்டிருக்கின்றன.

அதோடு மட்டும் அல்ல, கனம் கோதண்டராமன் அவர்கள், மதுரையில் நடைபெறும் டி.வி.எஸ். பஸ் போக்குவரத்தைப்பற்றி மிகவும் வருத்தத்தோடு சொன்னார்கள். ஏற்கனவே அவர்களுடைய கட்சிக்கும் டி.வி.எஸ். கம்பெனிக்கும் பொருந்தாது என்பது உலகறிந்த விஷயம். இந்த கம்பெனியில் அவர்களுடைய கைவரிசையை எல்லாம் காட்டின பின்னால் இவர்களுடைய கட்சி தோல்வி யடைந்திருக்கிறது என்பதும் எல்லோருக்கும் தெரியும். இந்த கம்பெனிக்கு எதிராக இவர்கள் நடத்திய போராட்டத்தில் இவர்கள் தோற்று விட்டார்கள். நான் வேண்டுமானால் சவாலாக கேட்டுக் கொள்கிறேன், மதுரைமாநகரில் இந்த பஸ் போக்குவரத்து வேண்டாம் என்று யாராவது சொல்லட்டும் பார்க்கலாம், அப்படி சொல்லுவதாய் இருந்தால் இவர்கள் சொல்வதை உண்மை என்று எடுத்துக்கொள்ளலாம். நான் டி.வி.எஸ். கம்பெனிக்காக வக்காலத்து வாங்கி பேசவில்லை. இவ்விதம் குறிப்பிடுவார்கள் என்று அவர்கள் முன் கூட்டியே தெரிவித்துவிட்டார்கள். இன்று ஆசியாவிலேயே, இது போன்ற பஸ் போக்குவரத்தை நடத்தக்கூடியதொழில் அதிபரை எங்கேயாவது பார்க்க



21st March 1961] [Sri P. S. K. Lakshmipathi Raj]

முடியுமா என்று கேட்கிறேன். நல்ல யோக்கியத் தன்மையுடனும் நாணயத்துடனும் நியாயமாகவும் பஸ் போக்குவரத்தை நடத்திவரக்கூடியவர்களை பார்க்கவேண்டுமென்றால் தமிழகத்தில் இருந்துவரக்கூடிய இரண்டொருவர்களில் டி.வி.எஸ். என்பதும் ஒன்று என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். அவர்கள் எவ்வளவு திறமையாக நிர்வகித்து வருகிறார்கள் என்பதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். அவர்கள் எந்தெந்த ரூட்களில் எல்லாம் பஸ் விடுகிறார்களோ அந்த ரூட்களில் போகின்ற லாரிகளில் ஒரு காந்த இயந்திரத்தை பொருத்தி வைத்து, அதன் மூலம் ரோடில் விழுந்து கிடக்கும் லாடங்களை எல்லாம் பொறுக்கி எடுக்கிறார்கள். அதே ரூட்டில் பல பஸ்கள் போய்க்கொண்டிருந்தாலும் அவர்கள் தங்கள் சொந்த செலவிலேயே இதை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவ்வளவு தூரம் அவர்கள் இந்த தொழிலில், எதிர்காலத்தில் நம்பிக்கையை வைத்து ஈடுபட்டு வருகிறார்கள் என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். அதோடு பஸ் முதலாளிகளைப்பற்றி குறிப்பிட்டார்கள். சில விஷயங்களை அரசாங்கம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். புதிதாக வருகின்றவர்களுக்கு இப்போது கொடுக்கப்பட்டிருக்கும் ரூட்டுகளின் தூரம் மிகவும் குறைவு. இப்போது 15 மைல் என்றிருப்பதை 25 மைல் அல்லது 30 மைல் என்று திருத்த வேண்டும். புதிதாக பஸ் போக்குவரத்தை நடத்த பலர் முன் வர வேண்டும் என்று அரசாங்கம் விரும்பியபோதிலும் சில சட்டத்திட்டங்கள் சர்க்காரால் நிர்ணயிக்கப்படுகின்றன. அதில் காண்பிக்கப்படும் பாரபட்சத்தின் காரணமாக புதிய ஆட்களுக்கு இடமில்லாமல் போய்விடுகிறது என்பதை சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். புதிய ஆட்கள் இதற்காகப்போகும் போது இதில் அனுபவம் இல்லை என்று சொல்லி விடுகிறார்கள், போதிய சக்தி இல்லை என்று சொல்லிவிடுகிறார்கள், புள்ளி என்று ஏதோ வைத்துவிட்டு அதை மறுத்துவிடுகிறார்கள் என்கிற புகார்கள் அதிகமாக இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே இதில் கொஞ்சம் கவனம் செலுத்தி இந்த சட்டத்திட்டங்களை மாற்றியமைப்பதோடு, இப்போது 15 மைல் என்று இருப்பதை 25 மைல் என்று ஆக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். அதோடு இப்போது, திருப்பதியில் இருப்பது போல் பழனி தேவஸ்தானத்திற்கும் அரசாங்கம் சலுகை காட்டவேண்டும். திருப்பதியானது இந்தியாவிலேயே அதிக வருமானமுள்ள தேவஸ்தானமாக இருக்கிறது. காரணம் அங்குள்ள பஸ் போக்குவரத்தை எல்லாம் அவர்களுடைய பொறுப்பிலேயே விட்டிருக்கிறார்கள். அதேபோல் பழனிக்கும் அந்த தேவஸ்தானத்தின் பொறுப்பிலேயே கொடுக்கவேண்டும். பழனி கேரளாவின் பக்கத்தில் இருப்பதால் அங்கு யாத்திரீகர்கள் அதிகமாக வந்து போகிறார்கள். அவர்கள் இங்கு வரவேண்டுமென்றால், மூன்று நான்கு பஸ்கள் ஏறி மாறி வரவேண்டும். ஆகவே ஒலவக்கோடிலிருந்து பழனிக்கும், திருச்சூரிலிருந்து பழனிக்கும் நேரடியாக பஸ் போக்குவரத்து நடைபெற ஆவன செய்ய வேண்டும், இதற்கு சட்டபூர்வமாக ஏதாவது தடங்கல்கள் இருந்தாலும் அவைகளை எல்லாம் நீக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதே போன்று நேரடியாக சேலத்திலிருந்தும், திருச்சியிலிருந்தும், இன்னும் பல பகுதிகளிலிருந்தும் பழனிக்கு பஸ் விட வேண்டும். பஸ் போக்குவரத்தை பொறுத்த அளவில் சில பஸ் முதலாளிகள் பழைய பஸ்களையே வைத்துக்கொண்டு அவற்றை பெயிண்ட் செய்து வைத்துக் கொள்கிறார்கள், இன்சின் எல்லாம் மிக மோசமாக இருக்கிறது. இவர்கள் எல்லாம் ஏராளமாக சம்பாதிக்கிறார்கள். இவர்கள் எல்லாம் நல்ல முறையில் பஸ் விடுமாறு கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைய உலகில், பஸ், சினிமா, ஹோட்டல் இவைகள் தான் வருமானம் தரக்கூடிய இனங்களாக இருந்து கொண்டிருக்கின்றன. பஸ் போக்குவரத்தில் இன்னும் லாபகரமான முறையில் நடத்தக்கூடிய வகையில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். சில தாலூகா ஏரியாக்களில் உள் புறங்களில் இரண்டொரு பாலங்கள் சரியாக இல்லை என்ற காரணத்திற்காக பஸ்கள் உள்புறங்களுக்குப் போவதே இல்லை. ஆகவே இம்மாதிரி இருக்கின்ற பாலங்களை எல்லாம் கட்டிக்கொடுத்து தாலூகாக்களில் போகின்ற எல்லா பஸ்களுக்கும் ஊருக்குள் போகின்றவாறு வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பழனியை பொறுத்தவரையில், மெயின் ரோட்டில் பஸ் வருகிறது. ஆனால்

பழனியின் உட்பக்கத்தில் பஸ் வருவதில்லை. இதை விஸ்தரிப்பதற்கு ஒன்றிரண்டு பாலங்கள் சரியாக இல்லாததின் காரணமாக பழனியின் உட்பக்கத்தில் பஸ் போகாமல் இருக்கிறது. இதுபோன்ற விஷயங்களில் அரசாங்கம் சிரத்தை எடுக்கவேண்டும். புதிதாக வருபவர்களுக்கு சந்தர்ப்பம் கொடுக்கவேண்டும். இப்போது 25 சத விகிதம் புதிதாக வருகின்றவர்களுக்கு கொடுக்கவேண்டும் என்று இருந்தாலும் கூட, பலவித காரணங்களால் புதிதாக வருகின்ற பலருக்கு அனுமதி கிடைக்காமல் போய்விடுகின்றது. புதிதாக அவர்கள் தொழில் நடத்துவதற்கு வாய்ப்பு இருக்க வேண்டும், வசதி இருக்கவேண்டும். அதோடு நீண்ட தூர பஸ் போக்குவரத்து என்று சொல்லும் போது அதை 120 மைல் என்று குறைக்க வேண்டும். எல்லா இடங்களிலும் போக்குவரத்து வசதி பெருக வேண்டும், கட்டணம் ஓரளவுக்கு குறைய வேண்டும். அரசாங்கம், தனிப்பட்டவர்கள் நடத்தும் வியாபாரத்தைப்போல் இல்லாமல், லாபத்தை மட்டும் நோக்கமாக கொண்டிராமல், வரவும் செலவும் சரிக்கட்டிப் போகக் கூடிய நிலையில் இந்த நிர்வாகத்தை நடத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

10 a.m **SRI V. S. MANIKKASUNDARAM :** ஸார், மந்திரி அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த மான்யக் கோரிக்கையை முழு மனதோடு ஆதரிக்கிறேன். இந்த மான்யத்தைக் கோரும் முன்பாக அவர்கள் அச்சிட்டு மெம்பர்களிடையே வழங்கியிருக்கும் அறிக்கையில் கண்ட விஷயங்களைப் பற்றி மிகவும் சந்தோஷமடைகிறேன். அவர்கள் இன்னும் அடுத்த வருஷத்திலேயும், அதற்குப் பின்னால் வரும் காலத்திலும் ஏற்படுத்த வேண்டிய சில இம்ப்ரூவ்மெண்ட்டைப் பற்றி நான் சில விஷயங்களை குறிப்பிட விரும்புகிறேன்.

சாதாரணமாக அட்வைஸரி பாடீஸ் ( Advisory body ) என்ற முறையில் ஒவ்வொரு இடத்திலும் இந்த டிரான்ஸ்போர்ட் அட்வைஸரி கமிட்டி (Transport Advisory Committee) என்று ஏற்படுத்தியிருப்பது போலவே ஜில்லா லெவலில் டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ப் கவுன்ஸிலுக்கு இப்போது இருப்பதை விட இன்னும் அதிகமான ஒரு சந்தர்ப்பம் அளிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்ஸிலிலே டிரான்ஸ்போர்ட் விஷயமாக வரக்கூடிய கோரிக்கைகளை அங்கு இருக்கக் கூடிய தலைமை வகிக்கும் கலெக்டர் இஷ்டப்பட்டால் அனுமதிக்கலாம், அவருக்கு இஷ்டமில்லையென்றால் அனுமதிக்காமலிருக்கலாம் என்ற முறையில் இருக்கிறது. டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்ஸிலின் (District Development Council) தீர்மானங்கள் அமுல் நடத்தப்பட்டதா இல்லையா என்று தெரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படவில்லை. தலைமைவகிக்கும் கலெக்டர் அவர்களோடு டிரான்ஸ்போர்ட் அத்தாரிட்டி (Road Transport Authority )என்ற முறையில், தீர்மானங்கள் அவ்வப்போது நிறைவேற்றப்பட்டால் எந்தெந்தத் தீர்மானங்கள் நிறைவேற்றப்படவில்லை என்றும், ஏன் நிறைவேற்றப் படவில்லை என்பதற்கு சமாதானம் சொல்லவும் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, இல்லிஸிட் டாக்ஸீஸைக் (Illicit Taxis) குறைக்க சில நடவடிக்கைகள் எடுத்திருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள், அது மிகவும் பாராட்டக் கூடிய அம்சம் என்பதைப் பற்றி சந்தேகமே இல்லை. ஸிட்டியில் இருக்கக் கூடிய இல்லிஸிட் டாக்ஸீஸ் வீதாசாரத்தை விட சுற்றுப்புற நகரங்களில் இருக்கக் கூடிய இல்லிஸிட் டாக்ஸீஸ் அதிகமாக இருக்கின்றன என்று அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கும் என்று நினைக்கிறேன். அவைகளை படிப்படியாக நல்ல முறையில் பர்மிட் வாங்கிய டாக்ஸீஸாக மாற்றுவதற்கு ஒரு திட்டத்தை வகுத்து அதை மிகவும் தீவிரமாக அமுல் நடத்த வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக அவர்கள் 'Development of Tourism என்ற தலைப்பின் கீழ் பல முக்கிய நடவடிக்கைகள் எடுத்திருப்பதாகத் தெரிவித்தார்கள். அதற்காக அரசாங்கத்தைப் பாராட்டிக்கொள்ள விரும்பு





கிறேன். அதிலே அவர்கள் ஊட்டி, கோடைக்கானல், குற்றாலம் போன்ற இடங்களில் போய், தங்கி, திரும்பி வருவதற்கான ஏற்பாடுகளை இணைத்து செய்தால், அதை ஒரே திட்டமாக அமுல் நடத்தினால் போகிறவர்களுக்கும் அங்கு தங்கியிருப்பவர்களுக்கும் வசதியாக இருக்கும் என்ற காரணத்தினால் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை ஒன்றாக இணைத்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆக்ஸிடெண்ட்ஸைத் தடுக்க சில நடவடிக்கைகள் எடுத்திருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்கள். ஆக்ஸிடெண்ட்ஸ் எந்த முறையில் ஏற்படுகின்றன. என்பதைப் பற்றியும் அவைகளைத் தடுக்க என்ன நடவடிக்கைகளை எடுத்தால் நலமாக இருக்கும் என்று தெரிந்துகொள்வதற்காகவும் அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கக் கூடிய டிரைவர்கள் கண்டக்டர்கள் அவர்களைக் கலந்து, அவர்களுடைய பிரதிநிதிகளைக் கலந்து, என்ன பரிகாரம் தேட முடியும், என்ன காரணத்தினால் ஏற்படுகிறது என்று கண்டு பிடித்து அதற்கான நிவாரணத்தைத் தேடவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

நான் மிக முக்கியமாக எடுத்துச் சொல்லவேண்டுமென்று விரும்பியது வேலையாட்களுக்கும் பொது மக்களுக்கும் உள்ள உறவை நல்ல முறையில் சீர்திருத்திக் கொடுக்கத் தக்க ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று மிகவும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். சாதாரணமாக பஸ் போன்ற போக்குவரத்துக்களில் முக்கியமாக சில குறிப்பிட்ட நிர்வாகஸ்தர்களால் நடத்தப்படக்கூடிய பஸ்களில் இருக்கக் கூடிய உறவு பிற பகுதிகளில் இருப்பதில்லை, அதற்குக் காரணம் என்னவென்றால் அங்கு வேலை செய்யக்கூடிய ஆட்களுக்கு பொது மக்களுடைய சேவைக்காக தாங்கள் நியமிக்கப்பட்டிருக்கிறோம் என்ற எண்ணம் நல்ல முறையில் அமையாமல் இருப்பதுதான் என்று நான் கருதுகிறேன். நிச்சயமாக இந்த எண்ணம் நீக்கப்பட வேண்டும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து அவர்கள் பொது மக்களோடு நல்ல முறையில் உறவு கொண்டு பணியாற்ற வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மான்யத்தை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன்.

**SRI M. SELVARAJ :** மதிப்புக்குரிய துணை தலைவர் அவர்களே, இன்றையதினம் மோட்டார் போக்குவரத்து சட்ட மான்யத்தின் மீது கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுப் பிரேரணையை ஆதரித்து எனது கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

குறிப்பாக அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கையில் அட்வைஸரி பாடி என்ற ஒரு ஏற்பாட்டினை செய்து வைத்திருக்கிறோம் என்றும், அதில் இரண்டாவது பிரிவிலே டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்ஸிலின் யோசனைகளை நாங்கள் ஏற்று நடத்துகிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் எங்களுடைய மாவட்டத்தைப் பொருத்தவரையில் அந்த டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்ஸிலில் இந்தமாதிரி ஒரு ஏற்பாட்டினை இது வரையில் அவர்கள் கடைபிடிக்கவில்லை என்றும், இன்னும் பல டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்ஸில்களில் கூறப்படுகிற யோசனைகளை இந்த சர்க்கார் ஏற்ற நடத்தவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டையும் எடுத்துக் கூற விரும்புகிறேன். பல வித தீர்மானங்களை பல மாவட்டங்களில் தீர்மானம் செய்து அனுப்பினாலும் அவைகளை எந்த அளவில் நிறைவேற்றியிருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் திட்ட வட்டமாகத் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தப்படியாக அவர்கள் பஸ்களுக்கு பர்மிட் வழங்குகிற முறையைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன் அதிலே 15 மைல் அளவுக்கு புதிதாக வருகிறவர்களுக்கும், 15 முதல் 75 மைல் வரையில் 1 முதல் 4 பஸ்கள் வரையில் வைத்திருப்பவர்களுக்கும், 75 மைல்களுக்கு மேல் அதற்கு மேல் உள்ளவர்களுக்கும் கொடுக்கப்படுகிறது என்ற ஒரு குறிப்பைக் கொடுத்திருக்கிறார்கள் ஆனால் 15 மைல் அளவுக்கு " நியூ கமர்ஸ் " என்ற முறையில் இது வரையில் எவ்வளவு பர்மிட் வழங்கப்பட்டிருக்கிறது என்று தரப்படவில்லை. பரவலாகப் பார்க்கும்போது புதிதாக

பஸ்களுக்கு ரூட்டுகள் கொடுக்கும்போது இப்போதைய ஏற்பாட்டின்படி எந்தவிதமான சாதகமான பலனையும் மக்களிடத்தில் ஏற்படுத்தவில்லை என்று சொல்ல முடிகிறது. பெரும்பாலான பஸ் முதலாளிகள் அதிகப்படி பஸ்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இது சோஷலிஸ சமுதாயத்தை பரவலாக கொண்டு வரவேண்டும் என்ற திட்டமாகக் கொண்டு வந்தாலும் புதிதாக வருகிறவர்களுக்கு எந்த விதமான பலனும் இல்லை என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். அவர்களுக்கும் க்வா..லிபிகேஷன்ஸ் என்ற முறையில் வொர்க்ஷாப் ..பெஸிலிட்டீஸ் இருக்கிறதா, ஏற்கெனவே மோட்டார் டிரான்ஸ்போர்ட் கம்பெனியில் வேலையில் இருந்தவர்களா என்று அவர்களுடைய யோக்கியதாம்சங்களைப் பார்க்கிறார்கள். பொதுவாக க்வாலி..பிகேஷன்ஸ் என்ற முறையில் எடுத்துக் கொண்டால் அவர்களுக்கு அந்த ரூட்டிலே சொந்த இடமோ அல்லது கட்டிடமோ இல்லாமல் இருந்தாலும் அவர்கள் அதில் ஏதோ ஒரு கொட்டகையைப் போட்டுக் கொண்டு வொர்க்ஷாப் என்று 3—4 டூல்ஸை வைத்து ஸர்ட்டி..பிகேட் வாங்கி விடுகிறார்கள். அதை ஒரு காரணமாகக் காண்பித்து ரூட் வழங்கப்படுகிறது. குவாலிக்பிகேஷன்ஸ் என்று பார்க்கும்போது அவர்கள் தொழிலில் ஈடுபட்டவர்களா அல்லது மெக்கானிக்காக இருந்தவர்களா என்று இந்த 1—2 க்வாலி..பிகேஷன்ஸ் தவிர மற்ற க்வாலி..பிகேஷன்ஸைப் பார்ப்பதில் அர்த்தமில்லை என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். அதன் காரணமாக அநேகர்களுக்குக் கொடுக்கப்பட்ட பஸ் ரூட்டுகள் மேலே அப்பீலுக்குப் போகும்போது டிரிப்யூனல்களால் தள்ளப்படுகின்றன. இன்னும் பஸ் பர்மிட் கொடுப்பதில் பெண்களுக்கும் பஸ் பர்மிட்டுகள் கொடுக்கப்படுகின்றன. அவர்களுக்கு எந்த வித க்வாலி..பிகேஷன்ஸை வைத்து பஸ் பர்மிட் கொடுக்கப்படுகிறது என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஒருவருக்கு 20—30 பஸ்கள் இருக்கின்றன. அவரது மனைவியாருக்கு ஒரு பஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. எந்தவிதத்தில் கொடுக்கப்பட்டது என்று தெரியவில்லை. அவளது கணவர் 2 மைல்களுக்கு அப்பால் இருந்து கொண்டிருக்கிறார் (கனம் ஸ்ரீ வி. ராமையா: அப்பீலில் என்ன ஆயிற்று?) அப்பீலுக்குப்போய் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. அதை ஆட்சேபித்தவர்களுக்கு ஒரு பர்மிட் கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் மாவட்ட தலைமை அதிகாரியிடத்தில் இந்த அதிகாரத்தை ஒப்படைத்திருக்கிற காரணத்தினால் பல தவறான வழிகளில் பர்மிட் வழங்க நேரிடுகிறது. இதைத்தான் சென்ற ஆண்டும் அதற்கு முன் ஆண்டும் நடந்த விவாதத்தின் போது எடுத்துக் கூறினேன். ஒரு கமிட்டி ஏற்படுத்தி அவர்கள் முடிவு செய்து தனிப்பட்டவர்களுக்கு வழங்க வேண்டும் என்ற முறையில் மாற்ற முயற்சிப்பார்களானால் ஓரளவுக்கு இந்த நிலைமை மாறும். மீண்டும் பரவலாக சர்க்கார் மீது குற்றம் சாட்டப்படுகிறது. சர்க்கார் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும் தான் பர்மிட் வழங்கப்படுகிறது என்று நான் திட்ட வட்டமாக நிரூபிக்க முடியும். இப்போது சர்க்காரால் எழுப்பப்படுகிற கடன்களுக்கும் பரிசுப் பத்திரத்திற்கும், இவைகளில் குறிப்பாக எங்கள் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் 50 லட்சம் ரூபாய் அளவுக்கு பரிசுப் பத்திரம் விற்கவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 30 லட்சம் ரூபாயை பஸ் சொந்தக்காரர்களிடத்திலிருந்து வசூலிக்கிறார்கள். பெரிய பணக்காரர்களிடத்திலிருந்து சர்க்கார் பணம் வசூலிப்பதை நான் ஆட்சேபிக்கவில்லை. அவர்களிடத்திலிருந்து அதிகப்படி ரூபாய்களை பரிசுப் பத்திரம் மூலமாகவும் கடன்கள் மூலமாகவும் வாங்குவதால் பர்மிட்டுகள் வழங்குவதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அவர்களுக்கு சலுகை செய்து தரவேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இப்படி அவர்கள் பரவலாக பிற்பட்ட மாவட்டமாகிய என்னுடைய மாவட்டத்தில் 50 லட்ச ரூபாய் வசூலிக்க வேண்டுமென்று மதிப்பு போட்டு வசூலிக்கும்போது, அவர்களுக்கு இந்த பஸ் முதலாளிகள்தான் உதவி செய்கிறார்கள். அவர்கள் தான் 15,000, 20,000, 30,000 என்று கொடுத்து விட்டு, நாங்கள் நீங்கள் கேட்டபடி பணம் கொடுத்திருக்கிறோம் ஏன் எங்களுக்கு இந்தச் சலுகை செய்யக்கூடாது என்று உரிமையோடு





அதிகாரிகளை நெருங்குகிறார்கள். அதிகாரிகளும் அவர்களுக்கு செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே இந்தமாதிரியான கடன் வசூலைச் செய்ய வேண்டுமென்றால், அதைக் கூடுமானவரையில் பஸ் சொந்தக்காரர்களைக் தான் கொடுக்கும்படி அதிகாரிகளும் அணுகுகிறார்கள். இப்படி வசூல் செய்வதைவிட அவர்களுக்கு இன்னும் கொஞ்சம் வரியை அதிகமாகப் போட்டு வசூல் செய்யக்கூடிய ஒரு ஏற்பாட்டைச் செய்வதற்கு ஒரு வழிவகை செய்தால், ஓரளவுக்கு சர்க்காருடைய கட்சிக்கு வசூலாவது குறையுமென்பதை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்த மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கும் பஸ் ரூட்டுகள் வழங்கப்பட்டிருக்கிறது. இது எந்த குவாலிபிகேஷனில் கொடுக்கப்படுகிறது என்று தெரியவில்லை. வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவருக்கு, தென் ஆற்காடு மாவட்டத்தில் பஸ் பர்மிட் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு ஒர்க்ஷாப் கிடையாது, மற்ற எவ்வித குவாலிபிகேஷனும் கிடையாது. ஆனால் அவருக்கு இப்போது அங்கே 4, 5, பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கிறன்றன. இதைத்தவிர, அவருடைய மாவட்டத்தில் 15 பஸ்கள் ஓடுகிறது. அவர்கள் பஸ் ரூட்டை எப்படி வாங்குகிறார்களோ, அதேபோல் பஸ் ரூட்டுகளை விற்பதற்கும் ஏற்பாடு செய்துகொண்டு வருகிறார்கள். ஆகவே இப்போது இருக்கிற எல்லாவித நிபந்தனைகளையும் நீக்கிவிட்டு, அதிகாரிகள் தங்கள் இஷ்டம் போல் எவருக்கு வேண்டுமானாலும் கொடுத்துக் கொள்ளலாம் என்ற முறையை வைத்துக்கொண்டால், எந்தமாதிரியான பிரச்னையும் அல்லது எந்தவிதமான பேச்சும் பேச மாட்டார்கள் என்றும், ஆகவே இதிலே ஒரு திட்டவட்டமான கொள்கையைக் கடைப்பிடிக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இப்போது 75 மைலுக்குள்ளே இருக்கும் ரூட்டுகளை வழங்குகிறோம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நம்முடைய கனம் தொழில் அமைச்சர் அவர்கள் 120 மைலுக்கு மேலுள்ள ரூட்டுகளை சர்க்கார் தேசீய மயமாக்குவதற்கு ஏற்பாடு செய்ய இருக்கிறது என்று சொன்னார்கள். திட்டவட்டமாக 75 மைலுள்ள ரூட்டுகளையும் தனியாருக்கு வழங்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். இவைகளையும் படிப்படியாக தேசிய மயமாக்கினால், சர்க்காருடைய வருமானத்தையும் பெருக்க முடியும். இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், மேஜர் பஞ்சாயத்துக்கள், மற்றும் முனிசிபாலிடிகள் தங்களுக்கு பஸ் ரூட்டுகள் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்போது இவைகளுக்கெல்லாம் என்டர்டெயின்மெண்ட் வரி யூனியனுக்கு செலுத்த வேண்டியிருக்கிறது. எங்களுடைய விருத்தாசலம் பஞ்சாயத்திலே ஆண்டு ஒன்றுக்கு 50,000 ரூபாய் என்டர்டெயின்மெண்ட் வரி செலுத்த்த வேண்டியிருக்கிறது. இப்படி 50,000 ரூபாயைச் செலுத்த வேண்டுமானால், மக்களுக்கு அதிக வரியைப் போட வேண்டியதாக இருக்கிறது. இதைப்போல் பல முனிசிபாலிடிகளும் அதிகமான தொகையைக் கொடுக்கவேண்டியிருக்கிறது. ஆகவே, மக்கள் மீது வரி விதிப்பைக் குறைப்பதற்கு, பரவலாக பஸ் பர்மிட்டுகளை இந்தப் பஞ்சாயத்துக்களுக்கும், முனிசிபாலிடிகளுக்கும் கொடுப்பதில் எந்தவிதமான ஆட்சேபணையும் இருக்க முடியாது. ஆகவே இவர்களுக்கு வழங்கக்கூடிய வகையில், ஒரு புதிய திட்டத்தை வகுக்க வேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

டிரான்ஸ்போர்ட் வெகிகில் விஷயத்தைப் பொறுத்த மட்டில், ஆந்திர மாகாணத்தில் 9½ டன் ஏற்றிச் செல்லலாம் என்றிருக்கிறது. ஆனால் நம்முடைய மாகாணத்திலோ 9 டன் என்று வைத்திருக்கிறார்கள். இப்படியிருப்பதால், ஆந்திராவிலிருந்து வரக்கூடியவர்கள் லோடு அதிகமாக இருக்கிறது என்று பிடிக்கப்பட்டு தண்டிக்கப்படுகிறார்கள். ஆகவே இது விஷயத்தில் அண்டை ராஜ்யங்களைக் கலந்து, ஒருமுகமான ஏற்பாட்டைச் செய்து கொள்ளவேண்டும் மென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இப்போது பஸ் ஸ்டாண்டுகளைப் பொறுத்த மட்டில், சர்க்கார் ஏ, பீ, சி. என்று பிரித்திருக்கிறார்கள். இதிலே அதிகப்படியான செலவுகளை பஞ்சாயத்து போர்டுகளும், முனிசிபாலிடிகளும் ஏற்றுக்கொள்ள வேண்டியிருப்பதால், இப்போது ஏதோ ஒரு அளவுக்கு பஸ் ஒன்றுக்கு வசூலிக்கப்படும் தொகையை நீக்கி, பஸ் ஒன்றுக்கு 1 ரூபாய் வீதம் வசூல் செய்தால் மிகவும் வசதியாக இருக்கும். இதனால் பஸ் முதலாளிகளை இது எந்த வகையிலும் பாதிக்காது. ஆகவே இப்படி வசூல் செய்வதற்கான ஒரு ஏற்பாட்டை அவர்கள் செய்து தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக, இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற எல்லாத் தொழிலாளிகளுக்கும் இன்சூரன்சு திட்டத்தை அமுலுக்கு கொண்டு வர வேண்டியது மிகவும் முக்கியம். இதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். சென்னையைப் பொருத்த மட்டில், டாக்சி டிரைவர்களுக்கு எந்தவிதமான நிலையும் கிடையாது. அதேபோல் தான் இந்த பஸ், லாரி ஓட்டக்கூடிய டிரைவர்களுக்கும் எந்தவிதமான வசதிகளும் செய்யப்படவில்லை. சிலர் அன்றாடக் கூலிக்கும் அமர்த்திக் கொள்ளப்படுகிறார்கள். அவர்களுக்கு பெர்மனெண்டான ஒரு வசதியைத் செய்து தரவேண்டு மென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், லாரிகளிலே வருகின்ற ஓவர் லோடுகளை ஏதோ நகரத்திலே தான் செக் பண்ணுகிறார்களே தவிர, கிராமாந்திரங்களிலே சரிவர செக் பண்ணுவதே கிடையாது. ஆகவே ஆங்காங்குள்ள ஆர். டி. ஓ. க்களுக்கு தாக்கீது அனுப்பி, அவர்கள் நல்லமுறையில் செக் செய்ய வேண்டுமென்று ஏற்பாடு செய்யவேண்டும். நகரத்தை எடுத்துக் கொண்டாலும், அல்லது மற்ற இடங்களை எடுத்துக் கொண்டாலும், லாரி ஒன்றுக்கு 12 டன் லோடுக்கு குறையாத அளவில்தான் இன்றைக்கு ஏற்றுக் கொண்டு போகின்றன. இதன் காரணமாக ஆங்காங்குள்ள பாதைகள், கல்வர்ட்டுகள் பாதிக்கப்படுகின்றன. அதன்மூலம் பல விபத்துக்களும் ஏற்படுகின்றன. ஆகவே இதைத் தடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக சில ரூட்டுகளைத் திறக்கின்ற நேரத்தில், குறிப்பாக நெய்வேலியிலிருந்து சென்னைக்கும், மற்றும் அது போன்று பெரிய தொழிற்சாலைகளிலிருந்து சென்னை நகரத்திற்கும் இன்னும் பலபலப் புதிய ரூட்டுகளை நாம் எடுக்க வேண்டும். புதிதாக பிளாக் டெவெலப்மெண்ட் ஆபீசுகள் திறக்கின்றபோது, கிராமப்புறங்களிலே தான் பிளாக்குகள் திறக்கவேண்டுமென்று திறப்பதால், அந்தக் கிராமத்திலிருந்து அண்டையிலுள்ள நகரத்திற்கு புதிய பாதைகளையும் ஏற்படுத்த வேண்டும். இப்படி ஆங்காங்கு புதிய புதிய மார்க்கங்களை யெல்லாம் திறப்பதற்கு வழி வகை செய்யவேண்டும்.

நம்முடைய கனம் அமைச்சர் அவர்கள் இந்த இலாகாவிலே கடந்த 4 வருஷங்களாக இருந்து நல்ல அனுபவம் பெற்றவர். அந்த அனுபவத்தைக் கொள்கை அளவில் செயல்படுத்தாமல், நல்ல முறையிலோ அவர்கள், எடுத்துக்காட்டாக பஸ் ரூட்டுகளை யெல்லாம் குறிப்பாக சர்க்கார் கட்சியைச் சார்ந்தவர்களுக்குத்தான் கொடுத்து சலுகை காட்டப்படுகிறது என்ற குற்றச்சாட்டு ஏற்படாமல் இருக்கும் விதத்தில் நடந்து கொள்ள வேண்டுமென்று நான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். விபத்தைத்தடுக்கின்ற முறையிலே லாரிகளினுடைய ஹெட் லைட்டின் பவரைக் குறைக்க வேண்டுக். அல்லது வேறு ஏதாவது மாற்று ஏற்பாடுகள் மெக்கானிக்கல் முறையிலே செய்ய முடியுமானால், இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு இன்றைக்கு லாரிகள், 50 60 மைல் வேகத்திலே செல்லுவதை நாம் பார்க்கின்றோம். கார்கள் வந்தால் கூட, அவர்கள் ஒதுங்குவது கிடையாது. அதே போல் பஸ்கள் வந்தாலும் அவர்கள் ஒதுங்குவது கிடையாது. இதைத் தவிர ரோடுகளும் அகலமாக இல்லாத காரணத்தினால், அவ்வப்போது விபத்துகள் ஏற்படுகின்றன. அதோடு, இரவு நேரங்களில் லாரிகளுக்கு தடை செது விட்டால், நாம் விடியற்காலையில் பார்ப்போமேயானால் ஆட்களை நகரத்தில் நகர முடியாதபடி ஆகிவிடும். ஆகவே அப்படி இரவு நேரம் முழுவதிற்கும் தடை விதிக்காமல் இரவு



12 மணியிலிருந்து 2 அல்லது 3 மணி வரை லாரிகள் போகக்கூடாது என்று அளவிலே, முக்கியமாக தூக்க நேரத்திற்கு மட்டும் தடை விதித்துவிட்டு, பின்னர் லாரி போக்கு வரத்தை அனுமதித்தால் இந்த நெருக்கடிப் பிரச்னை தீரும். ஆகவே இவைகளையெல்லாம் கனம் அமைச்சர் அவர்கள் கவனிக்கும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, இப்போது ஒரு மாகாணத்திலிருந்து மற்றொரு மாகாணத்திற்கு செல்லுகின்ற இடங்களில் சௌக்கி போஸ்டுகள் அமைத்திருக்கிறார்கள். இந்த இடத்தில் வேலைக்கு அமர்த்தப்பட்டவர்கள், இது ஏற்பட்ட நாள் முதற்கொண்டு கிட்டத்தட்ட 2 அல்லது 2½ வருஷங்களாக அதே இடத்தில் தொடர்ச்சியாக இருந்து வருகிறார்கள். அப்படி அவர்களை தொடர்ச்சியாக இருக்கச் செய்யாமல், 3 மாதங்களுக்கு ஒரு முறையாவது மாற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி இல்லாவிட்டால் பல குறைகள் ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறது. இப்படித் தவறுகள் ஏற்படுவதற்கு இது காரணமாக இருப்பதாலே, ஓரளவு இவர்களால் சர்க்காருக்கு விற்பனை வரியை ஏமாற்ற முடியாமல் நல்ல முறையிலே அதிகமான லாபம் வரக்கூடியதாக இருந்தாலும், இன்னும் திறமையாக தங்கள் கடமையிலே வேலை செய்யக்கூடிய வகையிலே அவ்வப்போது போட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **Sri P. G. MANICKAM :** மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, கனம் மின்சார அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த மான்யத்தை ஆதரித்து சில சங்கதிகள் சொல்ல விரும்புகிறேன். இன்று மேஜை மீது வைத்திருக்கக்கூடியதிலே 1960–61-ம் வருஷத்திய எஸ்டிமேட்டிலே, ரோடுகளை அதாவது பஸ் போகக்கூடிய ரோடுகளை செம்மைப்படுத்தி, சீர்திருத்தி அவைகளை பஞ்சாயத்து போர்டுக்கு ஒப்படைப்பதற்காக 25 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதோடு சில ரோடுகளை ரூரல் ரோடுகளாக சேர்த்து, இத்தொகை மூலமாக அங்கீகரிக்கப்பட்டுள்ள ரோடுகளையும் சேர்த்து செப்பனிடும்படி பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சில புதிய சாலைகளை செப்பனிடப்படாமல், பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அப்படி ஒப்படைக்கப்பட்டிருக்கும் ரோடுகளை சரியான முறையிலே பஞ்சாயத்து யூனியன்கள் நிறைவேற்றுமா என்பது சந்தேகமாகத்தான் இருக்கிறது. அது சம்பந்தமாக என்னுடைய அபிப்பிராயத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்படி பஞ்சாயத்து யூனியன்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் ரோடுகளைச் செப்பனிடும் வேலைகளையெல்லாம் ஹைவேஸ் இலாகாவுக்கு விட்டு விட்டால், அவர்கள் நல்ல முறையிலே போடுவார்கள். இது விஷயமாக கனம் அமைச்சர் அவர்களுடைய அபிப்பிராயம் என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

(Sri K. Sattanatha Karayalar in the Chair)

கூடுமான அளவுக்கு இந்தபஸ்ரூட்டுகளை ஹைவேஸ் டிபார்டுமெண்டு எடுத்து நடத்துவதற்கான ஒரு திட்டத்தை சர்க்காரே ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, குறிப்பாக எங்கள் ஜில்லாவிலே பஸ் ஸ்டாண்டுகள் அநேக இடங்களில் தனிப்பட்ட முதலாளிகளினால் தான் நடத்தப்பட்டு வருகிறது. கோபிச்செட்டிப்பாளையம் முனிசிபாலிடியை எடுத்துக்கொள்ளுவோம். அங்கு முனிசிபாலிடிக்கு சம்பந்தப்பட்ட ஒரு பஸ் ஸ்டாண்டு இருக்கிறது. தனிப்பட்ட முதலாளிகளுக்கு சம்பந்தப்பட்ட 3 பஸ் ஸ்டாண்டுகள் இருக்கின்றன. அவரவருடைய பஸ்களை அந்தந்த முதலாளிகள் அவருடைய பஸ் ஸ்டாண்டில் நிறுத்தி வைக்கிறார்கள், அங்குதான் பிரயாணிகளுக்கு டிக்கெட் முதலியவைகள் வழங்கப்படுகிறது. இதனால் பிரயாணிகளுக்கு எவ்வளவோ இடையூறுகள் ஏற்படுகின்றன. ஒரு பஸ் ஸ்டாண்டுக்கும் இன்னொரு பஸ் ஸ்டாண்டுக்கும் குறைந்தது 2, 3 பர்லாங் தூரம் இருக்கிறது. ஒரு பஸ் ஸ்டாண்டில் இறங்கி இன்னொரு இடத்திற்கு போகவேண்டிய பிரயாணி வேறு பஸ் ஸ்டாண்டுக்கு நடந்து தான் செல்ல வேண்டியிருக்கிறது. மூட்டை முடிச்சை தூக்கிக்கொண்டு இங்கும், அங்கும் அலைய வேண்டியிருக்கிறது. சர்க்காரே இதில் போதிய கவனம் செலுத்தி

எங்கு ஸ்தல ஸ்தாபனங்களினால் பஸ் ஸ்டாண்டுகள் நிறுவப்பட்டிருக்கிறதோ, அங்கே தனியாருடைய பஸ் ஸ்டாண்டு நிறுவப்படக் கூடாது, அது தவறு. அவ்வாறு நிறுவுவதனால் பொது மக்களுக்கு இடைஞ்சல் ஏற்படுகிறது என்று தெரிவித்து, ஸ்தல ஸ்தாபனங்கள் ஏற்படுத்தும் பஸ் ஸ்டாண்டுகளையே அங்கீகரித்து அங்கிருந்து தனிப்பட்ட முதலாளிகளுடைய எல்லா பஸ்களும் புறப்படுவதற்குரிய ஒழுங்கு செய்யும்படியாக நான் சர்க்காரை மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கோவை ஜில்லா டிஸ்டிரிக்ட் டெவலப்மெண்டு கவுன்சிலில் புதிய பஸ் ரூட்டுகள் திறக்கப்படவேண்டும் என்று தீர்மானம் போட்டு சர்க்காருக்கு அனுப்பியிருக்கிறோம். அந்த ரூட்களெல்லாம் குறிப்பாக "ஷார்ட் ரூட்ஸ்" "மீடியம் ரூட்ஸ்" தான். இதைப்பற்றி சர்க்கார் கவனித்து அந்த இடங்களுக்கெல்லாம் புதிய பஸ் ரூட்கள் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கோவையிலிருந்து கோபிக்கு சாதாரணமாக இரவு 8½ மணிக்கு வந்து தங்கும் ஜி.டி. பஸ் டிரான்ஸ்போர்ட் பஸ் பெருந்தலையூரில் தங்கி, அங்கிருந்து புறப்படுவதற்கு ஒழுங்கு செய்யவேண்டுமென்று டிஸ்டிரிக்ட் டெவலப்மெண்டு கவுன்சிலில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி கனம் அமைச்சர் அவர்களுக்கு ஒரு மகஜர் கொடுத்திருக்கிறோம். அம்மாதிரி செய்து கொடுத்தால் அங்குள்ள ஜனங்களுக்கு பெரிய நன்மையும், சௌகர்யமும் ஏற்படும். நான் சொன்ன இடத்திலே நெடுந்தூரம் பஸ்களே கிடையாது. அங்கிருந்து கோவைக்குச் செல்லவேண்டுமானால்—சுற்றுப்புறத்திலுள்ள ஏறத்தாழ 100 கிராமங்களிலுள்ள மக்கள்—கோவைக்குச் செல்லவேண்டுமானால், 9 மைல் தூரம் இன்னொரு பஸ்ஸில் பிரயாணம் செய்து கோவை செல்ல வேண்டியிருக்கிறார்கள். கோவை சென்றால், அவர்கள் திரும்பி வருவதற்கு வசதி இல்லாததினால் ஈரோடு அல்லது கோபியில் இரவில் தங்க வேண்டியிருக்கிறது. இந்த நிலைமை ஜனங்களுக்கு கஷ்டமாக இருப்பதினால் கோபியில் வந்து தங்கும் ஜி.டி. டிரான்ஸ்போர்ட்டு பஸ் பெருந்தலையூரில் தங்கி, அங்கிருந்து புறப்படுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஹரிஜனங்களுக்கு பஸ் ரூட் பர்மிட் வழங்குவது பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். ஹரிஜனங்களில் ஒரு சிலர் தான் பஸ் ரூட் பெர்மிட் கேட்டு சர்க்காருக்கு விண்ணப்பம் அனுப்பியிருக்கிறார்கள். இப்பொழுது கோவையில் கூட்டுறவு சங்கம் நடத்துகிற 2, 3 ஹரிஜனங்கள் பஸ் பெர்மிட்டுக்கு சர்க்காருக்கு மனுச் செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு தொழிற்சாலையும் இருக்கிறது. ஹரிஜனங்கள் கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவும், அல்லது தொழிற்சாலை வைத்து நடத்துபவர்கள் பஸ் ரூட் பெர்மிட் கேட்டால், அவர்களுக்கு ஏதோ குறைந்த அளவு சலுகை காண்பித்து, அப்படிப்பட்டவர்களுக்கு இந்த பஸ் ரூட் பெர்மிட்டுகள் வழங்கப்படவேண்டும் என்று நான் சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, டாக்ஸி, ஆடோ ரிக்ஷாக்களில் மீட்டர்கள் அநேகமாக பொருத்தப்படவில்லை. கோவை ஜில்லாவிலே பெரும்பாலான டாக்ஸிகளிலும், ஆடோ ரிக்ஷாக்களிலும் மீட்டர்கள் பொருத்தப்படவில்லை. இதனால் அவர்கள் கேட்கும் வாடகையை பொதுஜனங்கள் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. மைலேஜ் பற்றி கவலையில்லை. மொத்தமாக அவர்கள் பொதுவாகச் சொல்லும் தொகையை ஜனங்கள் கொடுக்கத் தான் வேண்டியிருக்கிறது. ஆகையினால் அப்படிப்பட்ட இடங்களில் ஆடோ ரிக்ஷாக்களிலும் டாக்ஸிகளிலும் மீடர்கள் பொருத்தப்பட்டால், மிகவும் சௌகர்யமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

குறிப்பாக அநேக தடவைகளில் நான் சட்ட சபையில் இதைப் பற்றி சொல்லியிருக்கிறேன். சில பஸ்களில் சாமான்கள் வைப்பதற்கு மேல் தட்டுகள் நிறுவப்படவில்லை. சிலபஸ்களில் மேல் தட்டுகளில் நிறுவப்பட்டிருக்



கிறது. மேல் தட்டுகள் நிறுவப்படாத பஸ்களில் பிரயாணிகள் உட்காரும் இடத்திலேயே சாமான்களை வைத்துக்கொள்கிறார்கள். பெரிய சாமான்களை பஸ்களுக்கு மேலே போட்டுவிடுகிறார்கள். சிறிய சாமான்களை பிரயாணிகள் தங்கள் பக்கத்திலேயே வைத்துக்கொள்கிறார்கள். இதனால் மற்ற பிரயாணிகளுக்கு எவ்வளவோ இடைஞ்சல் ஏற்படுகிறது. சில பஸ்களில்தான் இப்பொழுது மேல் தட்டுகள் இருக்கின்றன. எல்லா பஸ்களிலும் சாமான்கள் வைப்பதற்கு மேல் தட்டுகள் நிறுவுவதற்கு சர்க்கார் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். புதியதாக பஸ்கள் கட்டும்போதாவது மேல் தட்டுகள் அத்தியாவசியமாக வைக்கப்பட வேண்டும் என்று ஒரு உத்தரவை சர்க்கார் பிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பஸ்களை நிறுத்தும்போதும், பஸ்கள் புறப்படும்போதும் கண்டக்டர்கள் விஸில் அடிப்பது சில சமயங்களில் பிரயாணிகளின் காதுகளை செவிடு ஆக்கிவிடும்போல் இருக்கிறது. காது ஜவ்வுக்கு ஏதாவது கெடுதல் உண்டாக்கக்கூடிய அளவுக்கு, அவர்கள் விஸில் அடிக்கிறார்கள். சில இடங்களில் கை விரல்களால் கூட விஸில் அடிக்கிறார்கள். இதனால் பக்கத்தில் இருக்கக்கூடிய பிரயாணிகள் காது செவிடாகக்கூடிய நிலைமை கூட ஏற்படுகிறது. ஆனால் சில பஸ்களில் பெல் இருக்கிறது. பெல் அடிக்கிறபொழுது பிரயாணிகளுக்கு எந்த விதமான தொந்தரவும் இல்லை ஆகவே, விஸில் அடிக்காமல், எல்லா பஸ்களிலுமே மணி வைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, கோவையிலிருந்து புறப்படுகிற எல்லா ரயில்களிலும் கூட்டம் அதிகமாக இருக்கிறது. அதனால் பிரயாணிகள் எவ்வளவோ கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, கோவையிலிருந்து சென்னைக்கு ஈரோடு வழியாக ஒரு எக்ஸ்பிரஸ் பஸ் விட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனனுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **SRI R. KRISHNASAMI REDDIAR** : கனம் தலைவர் அவர்களே, இந்த போக்கு வரத்து இலாகா பற்றிய அறிக்கையை 16 பாகங்களாகப் பிரித்து நமக்கு அளித்ததற்காக, பூரா விவரங்களையும் அதில் அடக்கி, அங்கத்தினர்கள் நன்ருகப் புரிந்துகொள்ளும் அளவுக்கு இந்த இலாகா பற்றிய விவரங்களை நமக்கு விளக்கிக் காட்டியிருப்பதற்காக, அமைச்சர் அவர்களுக்கு முதல் முதலில் நான் நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன். நம்முடைய மாகாணத்தில் இந்த இலாகாவின் தலைமைப் பொறுப்பு நல்ல அனுபவம் மிக்க, திறமை வாய்ந்த, தகுதி உள்ள ஒரு ரெவின்யூ போர்டு அங்கத்தினரிடம் அவர் டிரான்ஸ்போர்ட்டு கமிஷனராக இருந்து பணியாற்றும் வகையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அவருடைய பார்வையின் கீழ் இந்த இலாகா நல்ல முறையிலே செயலாற்றி வருகிறது. அதற்கு அடுத்தாற்போலும் நல்ல அனுபவம் உள்ள உத்தியோகஸ்தர்கள் இருப்பதினால் மொத்தத்தில் இந்த இலாகா நல்ல முறையில் நடந்து வருகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

அதற்கு அடுத்தாற்போல, இந்த இலாகா சம்பந்தப்பட்ட வரையில், அவ்வப்பொழுது இந்த மாகாணத்தில் இருக்கக் கூடிய விஷயங்களை சர்க்கார் நேரடியாக தெரிந்துகொள்ளுவதற்காக ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் அட்வைஸரி கமிட்டி என்று ஒன்று ஏற்படுத்தி, அதிலும் தகுந்த நபர்களை நியமித்து, விஷயங்களை அங்கு நல்ல முறையிலே தீர்க்கமாகத் தெரிந்து கொள்ளுவதற்காக சர்க்கார் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அது மிகவும் பாராட்டக்கூடிய விஷயம். அந்த 'பாடி' 'ப்யூர்லி' அட்வைஸரி பாடியாக, இருந்தாலும் கூட, சர்க்கார் ஒரு முடிவுக்கு வருவதற்கு அந்தக் கமிட்டி மிக உதவியாக இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால், இந்தக் கமிட்டியானது 2 மாதத்திற்கு ஒரு முறை, 3 மாதத்திற்கு ஒரு முறை அடிக்கடி கூடி பல விஷயங்களை ஆலோசிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

10-30 a.m.

இந்தப் பெர்மிட்டுகள் கொடுப்பதைப் பொறுத்த வரையில், ஹைகோர்ட்டுக்கு ஒரு கேஸ் சென்றபொழுது, இந்தப் பர்மிட் கொடுப்பதற்குத் தகுந்த வழிகளை வகுத்து அதன்படி வழங்க வேண்டுமென்று சர்க்காருக்கு அவர்

கள் ஒரு விஞ்ஞாபனம் கொடுத்திருந்தார்கள். அதன்படி விரிவான விதிகள் தயார் செய்து, ஒரு ஜி.ஓ.வை வெளியிட்டு, அதன்படி இந்த பெர்மிட் கொடுக்கும் வழக்கம் அமலில் இருக்கிறது. இதிலேதான் ஒரு சிக்கல் ஏற்பட்டுவிட்டது. ஜில்லாக்களைப் பொறுத்த வரையில், இந்த ஜி.ஓ.வை அடிப்படையாக வைத்துக்கொண்டு, பெர்மிட் கொடுக்கும் வழக்கத்தைக் கையாளுகிறார்கள். அதே போல், அதற்கு மேல் அப்பீல் செய்யும்பொழுது ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் அப்பெலேட் டிரிப்யூனல் இந்த ஜி.ஓ.வை ஆதாரமாக வைத்துக்கொண்டு தீர்ப்பளிக்கிறார்கள். இந்த உத்தரவு எவ்வளவு தூரம் நடைமுறையிலே சரியாகக் கையாளப்படுகிறது என்பதைத் தெரிந்து கொள்வதற்கு வசதியாக சர்க்காரிடத்திலே எந்த விதமான இயந்திரமும் இல்லை. தான் போட்டிருக்கும் கருத்துப்படி இந்த மாகாணத்திலே பஸ் பெர்மிட்டுகள் வழங்கப்படுகின்றனவா, அப்பீலிலே அதை அனுசரித்து அதிகாரத்தை உபயோகித்திருக்கிறார்களா என்பதைக் கவனிப்பதற்கு சர்க்காருக்கு சந்தர்ப்பமே இல்லை. அதற்குப் பிறகு பெர்மிட் கிடைக்கப் பெறாதவர் ஹைகோர்ட்டுக்கு ரிட் மனு போடுகிறார். இந்த ஜி.ஓ. அடிப்படையிலே பெர்மிட் வழங்கி, ஹைகோர்ட்டுக்குச் சென்றபொழுது, இந்த ஜி.ஓ.வுக்கு மதிப்பில்லை என்று ஹைகோர்ட்டிலே சொல்லிவிட்டார்கள். அதையும் இந்த அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள்.

"While disposing of certain writ petitions, the High Court suggested that the State Government might frame rules laying down the principles on which the selection from among the applicants for stage carriage permits might be made and that such rules must be reasonable and in the interest of the public and that the rules so framed should be followed by all Transport authorities while granting permits for stage carriages. The Government examined the suggestion made by the High Court and decided to lay down certain principles . . ."

இதிலே உள்ள டிபெக்ட் என்னவென்றால், சர்க்கார் இந்த ஜி.ஓ.வை விதிகளாக வெளியிட்டிருந்தால், அது ஹைகோர்ட்டுக்குச் சென்றிருந்தால், அதை ஒரு வகையிலே எடுத்துக்கொள்வதற்கு சௌகரியமாக இருந்திருக்கும். இந்த ஜி.ஓ.வை "It is not a record" என்று பல கேஸ்களிலே சொல்லிவிட்டார்கள். சர்க்கார் விதி முறைகளை வகுத்து, ரூல்ஸாகப் போட்டிருந்தால், எவ்வளவு தவறுதல் நடந்திருக்கிறது என்று ஹைகோர்ட்டு தீர்மானிக்கலாம். நிர்வாக உத்தரவுகள் பேரில் கோர்ட்டுகள் தலையிடுவது நியாயமில்லை என்று கருதி சில தீர்ப்புகளிலே சொல்லியிருக்கிறார்கள். இந்த நிலைமை தொடர்ந்து நீடிப்பதனால், பெர்மிட்டுகள் கொடுப்பதிலே சிக்கல்கள் ஏற்படுகின்றன. சமீபத்திலே ஆந்திராவிலே கூட ரூல்ஸ் போட்டுவிட்டார்கள். அதே மாதிரி இங்கேயும் ரூல்ஸ் பிரேம் பண்ணியிருந்தால், சுலபமாக இருந்திருக்கும். ஏ-க்குப் பெர்மிட் கொடுக்கப்பட்டதைப் பற்றியோ, அல்லது பி-க்கு பெர்மிட் கொடுக்காததைப் பற்றியோ நாம் இங்கே விவாதிக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால், இந்த ஜி.ஓ.ப்படி பெர்மிட்டுகள் கொடுக்கப்படுகின்றனவா என்று தெரிந்துகொள்வதற்கு சர்க்காருக்கு சந்தர்ப்பம் இல்லை. இந்த மாதிரி நிலைமையிலே விஷயங்கள் இருப்பதால், இந்த ஜி.ஓ.வை ரூல்ஸாக பிரேம் செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களை மிகவும் தாழ்மையோடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, ஒரு குறிப்பிட்ட ரூட்டிலே ஒரு பெர்மிட் கொடுக்கப்படுகிறது. அந்த ரூட்டிலே ஒரு பஸ் அதிகமாகப் போட வேண்டும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தீர்மானம் செய்து ஒரு பஸ் விடுகிறார்கள். இந்த ரூட்டுகளைத் திறப்பது, பஸ்களை விடுவது, இதெல்லாம் மோட்டார் வாகனச் சட்டத்திலே ரீஜனல் டிரான்ஸ்போர்ட் அதிகாரிக்குத்தான் அதிகாரம் இருக்கிறது. வேறு யாருக்கும் அதிகாரம் கிடையாது. சர்க்கார் பார்த்து இந்த ரூட்டிலே வண்டி விட வேண்டுமென்று சொன்னாலும், ரீஜனல் டிரான்ஸ்போர்ட் அதாரிட்டிக்கு உத்தரவு அனுப்பி, அவர்தான் அதை அமுலாக்க வேண்டும். நேரடியாக பெர்மிட் வழங்கும் அதிகாரம்



மோட்டார் வாகனச் சட்டத்திலே கொடுக்கப்படவில்லை. ஏ-என்ற ஒருவருக்கு பெர்மிட் கொடுத்தால், பி என்பவர் அவருக்குப் பெர்மிட் கிடைக்காத காரணத்தால் ஹைகோர்ட்டுக்குப் போகிறார். ஏ, என்பவருக்குக் கொடுத்தது சரியா, பி என்பவருக்குக் கொடுக்காதது சரியா என்ற அளவிலே ஹைகோர்ட்டார் தீர்ப்புக்கூற வேண்டும். அவர்கள் ஒரு கொள்கை அளவிலே இந்தப் பிரச்னையைத் தீர்க்கும் வகையிலே இரண்டு பேரும் ஓட்டிக்கொண்டு இருங்கள் என்று சொல்லுகிறார்கள். தனிப்பட்ட கேஸ்களிலே சொல்லுகிறார்கள் என்று நான் சொல்லவில்லை. நிர்வாகத்திலிருந்து நீதியைப் பிரிக்க வேண்டுமென்று சொன்னோம். அதன்படி பிரித்தோம். இங்கே கவர்ன்மெண்ட் எக்ஸிக்யூடிவ் ரீஜனல் டிரான்ஸ்போர்ட் அதாரிட்டியின் கையில் அதிகாரம் இருக்கிறது. ஒரு ரூட்டிலே ஒரு பஸ் விடலாமா, இரண்டு பஸ் விடலாமா என்று தீர்மானிக்க வேண்டிய இந்த விஷயத்தைக் கவனிக்காமலேயே, இரண்டு பஸ்களும் ஓட்டும் என்று சொல்லுகிறார்கள். இரண்டு பஸ்களும் ஓட்டும். காலவரையறை இன்றி ஓட்டும். அதைப் பற்றிக் கவலையில்லை. ஆனால் ரீஜனல் டிரான்ஸ்போர்ட் அதிகாரியின் அதிகாரம் புறக்கணிக்கப்பட்டிருகிறதா, அல்லது சர்க்காரின் அதிகாரம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறதா, என்பதைப் பரிசீலிக்க வேண்டும். ஒரு பஸ் விட வேண்டுமென்று சொன்னால், ஆறு மாத காலத்திற்கு முன்பே நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது. அந்த ரூட்டிலே ஒரு பஸ் விட உத்தேசித்திருக்கிறோம் என்று 47-வது செக்ஷன்படி ஒரு நோடிபிகேஷன் பிறப்பிக்க வேண்டும். உதாரணமாக தஞ்சை ஜில்லாவை எடுத்துக்கொள்ளுவோம். அங்கேயுள்ள ரீஜனல் டிரான்ஸ்போர்ட் அதாரிட்டி, ஏ என்ற இடத்திலிருந்து, பி என்ற இடத்திற்கு பஸ் விட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது, யாருக்காவது ஆட்சேபனை இருக்கிறதா என்று கேட்கவேண்டும். அதன் பிறகு அவசியம் என்று சொல்லுகிறவர்களும், தேவையில்லை என்று சொல்லுகிறவர்களும், சம்மதத்தையோ, அல்லது ஆட்சேபனையையோ தெரிவிக்க வேண்டும். அதன் பிறகு ரீஜனல் டிரான்ஸ்போர்ட் அதாரிட்டி மீட்டிங்கில் வைத்து, தேவை என்று தீர்மானித்தால், அதை ஒப்புக்கொண்டு, அதை அமல் செய்துவிட முடியாது. மாகாணத் தலைவராக இருக்கக் கூடிய டிரான்ஸ்போர்ட் கமிஷனர் அவர்களுக்கு, இன்ன மாதிரி எந்தெந்த இடத்திலே புது பஸ் விட தீர்மானித்திருக்கிறோம், இப்பொழுது இந்த மாதிரி பஸ்கள் போய்க் கொண்டு இருக்கின்றன, யார் யார் ஆட்சேபனை செய்திருக்கிறார்கள், யார் சம்மதம் தெரிவித்திருக்கிறார்கள் என்ற விஷயத்தை எல்லாம் சொல்லி, நாங்கள் பஸ் விட முடிவு செய்திருக்கிறோம், உங்களுடைய அனுமதி வேண்டும் என்று கேட்பார்கள். டிரான்ஸ்போர்ட் கமிஷனர் அனுமதி கிடைத்தவுடன் மனுச் செய்தவர்களுக்கு 57-வது செக்ஷன் பிரகாரம் நோட்டிபிகேஷன் அனுப்பி, பர்மிட் கொடுத்து பஸ் வாங்குவதற்கு நாலு மாதம் அவகாசம் கொடுப்பார்கள். இந்தக் காலதாமதம் சட்டத்திலே அனுமதித்திருக்கும் காலதாமதம். இவ்வளவு பரிசீலனைகள் செய்து முடிவு செய்யப்பட்ட விஷயம் ஹைகோர்ட்டுக்கு ரிட் மனு மூலமாகப் போன உடனே, இரண்டு பஸ்களும் ஓட்டும் என்று கூறிவிடுகிறார்கள். இப்பொழுது ஒரு டிபுடி கலெக்டர் வேலைக்கு இரண்டு பேர்கள் மனுப் போட்டு ஒருவரை நியமித்த பிறகு, மற்றவர் ரிட் போட்டால், இரண்டு பேர்களையும் அதே பதவியில் நியமிக்க முடியுமா ? அதே மாதிரி இம்போர்ட் லைசென்சு கொடுக்கும்பொழுது, ஒருவருக்குக் கொடுத்து, மற்றவருக்கு கொடுக்காமல் இருந்து, ரிட் போட்டால் இரண்டு பேர்களுக்கும் கொடுக்கலாம் என்று சொல்ல முடியுமா ? ஆகையால் எந்த நடைமுறையில் இந்தச் சட்டம் இயங்குகிறது என்று புரிந்துகொள்ள முடியவில்லை. எனக்கு இந்தத் துறையிலே 25 வருஷ காலமாக அனுபவம் இருக்கிறது. க்ளீனராக இருந்திருக்கிறேன். கண்டக்டராக இருந்திருக்கிறேன். டிரைவராக இருந்திருக்கிறேன். மானேஜராக இருந்திருக்கிறேன். முதலாளியாகவும் இருந்திருக்கிறேன். இப்பொழுது சட்ட சபை அங்கத்தினராகவும் இருக்கிறேன். மோட்டார் கம்பெனியிலே தொழிலாளியாக இருந்தால் இதற்குள் ரிடையர் ஆகியிருப்பேன். இப்படி நேரடியாக, சர்க்காருக்குத் தெரியாமலேயே, ரீஜனல் டிரான்ஸ்போர்ட் அதிகாரிக்குத் தெரியாமலேயே திடீரென்று ஒரு நாள் பஸ் ஓடுகிற நிலைமை இந்த மாகாணத்தில் ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

[Sri R. Krishnasami Reddiar] [21st March 1961

கொள்கை அளவில் அது சரியா ? உயர் நீதிமன்றத்தைப் பற்றிக் குறை கூறவில்லை. அவர்களிடம் எனக்கு கௌரவமும் மதிப்பும் உண்டு. கொள்கை அளவில் அது " as usual " இரண்டு பஸ்கள் விடலாம் என்பது சரியாகத் தோன்றவில்லை. ஆகவே இந்த விஷயத்தில் அடிப்படையான ரூலாக வகுத்து இருந்தால் மட்டும் வேலை செய்ய முடியாது. அடிப்படையான காகிதத்தை " It is not a record " என்று சொல்லிவிட்டார்கள். இதற்குத் தகுந்த பரிகாரம் தேட வேண்டும் என்று அமைச்சர் அவர்களை மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஏற்கனவே நான் சொன்னது போல், டிரான்ஸ்போர்ட் கமிஷனராக இருப்பவர் உயர்ந்த பதவி வகிப்பவர், அறிவும் ஆற்றலும் படைத்தவர். அவர்கள் ஒரு ரூட் எடுக்கும்போது, அதன்பேரில் ரிவிஷனல் பவர்கள் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் அதாரிட்டிக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் அதிகாரி இரு வேலைகளுக்குப் பொறுப்பானவர், நிர்வாகத்திலும், டெப்டி டிரான்ஸ்போர்ட் கமிஷனராகவும் இருக்கிறார்கள். ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் அதாரிட்டிக்கு சில ரிவிஷனல் பவர்கள் இருக்கின்றன. டிரான்ஸ்போர்ட் கமிஷனரால் இல்லை என்று சொல்லப்பட்ட விஷயத்தில், இந்த ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் அதாரிட்டி என்கிற டிப்டி கமிஷனர் ரிவிஷனல் பவர் உள்ளவராக இருக்கிறார். கமிஷனர் இல்லை என்றதை டெபுடி கமிஷனர் வேறு அதிகாரம் காரணமாகத் திருப்புவது என்பது மனித தர்மத்திற்கு விரோதமாக இருக்கிறது. இந்தக் குறைபாடுகளை நீக்க வேண்டும் என்று அமைச்சரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, புது ரூட்டுகள் ஓபன் செய்வது பற்றி, புது ரூட் எது, இருக்கும் ரூட் எது என்பது பற்றிக் கொஞ்சம் சொல்ல விரும்புகிறேன். இங்கிருந்து செங்கல்பட்டுக்கு 10 பஸ்கள் ஓடுகின்றன என்று வைத்துக் கொள்வோம். மதராஸுக்கும் செங்கல்பட்டுக்கும் உள்ள ரூட்டில் அதிக பஸ் என்றால் அது எக்ஸிஸ்டிங் ரூட்டில் அடிஷனல் பஸ் என்று ஆகிறது. ஆனால், ஒரு புதுப் பாதையை வகுத்து, செங்கல்பட்டுக்குக் குறுக்கே போய், அதற்கு அப்பால் இரண்டு மைல் உள்ள " X " என்ற ஒரு இடத்திற்குப் போவதாக இருந்தால், அது செங்கல்பட்டுக்கு அப்பால் இரண்டு அல்லது ஒரு மைல் போவதால், **It is purely a new route, that is called a new route** அந்த முறை இருக்கக் கூடாது. அப்படி இரண்டு மைல், ஒரு மைல் வித்தியாசத்தில் புது ரூட் என்று அமைத்தால் அது பல விதங்களில் பாதகமாக விளைகிறது. அப்படிப் புது ரூட் ஓபன் செய்யும்போது அது **unserved** ரூட்டில் 50 சதவிகிதமாவது அது போக வேண்டும். அப்பொழுதுதான் அது நியூ ரூட்டாகக் கருதப்பட வேண்டும். செங்கல்பட்டுக்கும் மதராஸுக்கும் உள்ள ரூட் " எக்ஸ் "க்குப் போனால் அது இரண்டு மைலே அதிகம் போவதால், அதை ஒரு புது ரூட்டாகக் கருதுவது சரியாகாது. இம்மாதிரி இருக்கும் குறைகளை நீர்த்தால்தான் பஸ் தொழில் வளர முடியும். இன்றைக்குப் பஸ்காரர்களுக்கும் நல்ல முறையில் உதவிகள் செய்ய வேண்டும். ஒரு வண்டியின் விலை பல ஆயிரம் ரூபாய்கள் அதிகரித்து விட்டிருக்கிறது ; 30 ரூபாய் கொடுத்த டிரைவருக்கு இன்றைக்கு 120 ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆகையினால், அவர்களும் வாழ வேண்டும், வளர வேண்டும் என்ற முறையில் செய்ய வேண்டும். அந்த இண்டஸ்ட்ரியை அழிக்கக் கூடாது என்ற முறையில் செய்ய வேண்டும். ஆகவே, பஸ்காரர்களுக்கும் ஆசை காட்டினால்தான் அந்தத் தொழில் வளர வாய்ப்பு இருக்கும். அவர்களுக்கு அதிக லாபம் கிடைக்கிறதென்றால், அந்த அளவுக்கு அவர்களும் வரிகள் முதலியவை செலுத்த வேண்டியிருக்கிறது. இல்லையென்றால், மைலுக்கு மூன்று பைசாதான் வசூலிக்க வேண்டும் என்று சொல்லிவிட்டால் போகிறது. ஆகவே, மேலும், மேலும் புதுப்புது பஸ்கள் வேண்டும், பாசஞ்சர்களுக்கு சௌகரியங்கள் அதிகமாகச் செய்ய வேண்டும் என்றால், பஸ்காரர்களுக்கும் சில வாய்ப்புகள் வசதிகள் கொடுத்தாக வேண்டும். அப்பொழுதுதான் நாட்டிலே பஸ் தொழில் நல்ல முறையிலே பெரிய அளவில் பெருக முடியும். இன்றைக்கு இந்தியாவிலேயே நம் மாநிலத்தில்தான் பல நல்ல பஸ் போக்கு வரத்து இருக்கிறதிது. இம்மாதிரி நல்ல முறையில் இருக்கும் பஸ் போக்கு வரத்து எந்த மாநிலத்திலும் கிடையாது.



21st March 1961] [Sri R. Krishnasami Reddiar]

ரெயிலுக்குச் சமமாக ஓடக்கூடிய பஸ்கள் நம் மாநிலத்தில்தான் இருக்கின்றன. லக்ஷுரி கோச்சுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் மிகச் சிறந்த முறையில் இயங்குகின்றன. கூடுமான வரையில், சிறந்த நாகரீகமாக, சுத்தமாக, சிறந்த சேவைகள் உள்ள பஸ் போக்கு வரத்து நம் மாநிலத்தில்தான் இருக்கிறது என்று நாம் பெருமைப்பட வேண்டும். ஆகவே, புது ரூட் என்றால், அது இருக்கும் ரூட்டின் 50 சத விகித அளவு இருக்க வேண்டும் என்ற விதியைக் கையாள வேண்டும்.

இந்த எக்ஸிஸ்டிங் ரூட்டில் அடிஷனல் பஸ் போட டிரான்ஸ்போர்ட் கமிஷனர் அங்கீகாரம் வேண்டியதில்லை என்று ஒரு விதி. அதை மாற்றி அதிகப்படி பஸ்கள் போட்டாலும் அவர்கள் அங்கீகாரம் வேண்டும் என்ற விதியைச் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஆர். டி. ஓ. ஆபீஸ்களுக்கு அடிக்கடி போயிருக்கிறேன். அங்கே இருக்கும் வேலைகள் சுலபமாகச் செய்யப்படுவதில்லை. இன்றைக்கு பர்மிட் ரென்யூவல் இருக்கிறது. பர்மிட்டுகள் மூன்று வருஷத்திற்கு ஒரு முறை ரென்யூபண்ண வேண்டும் என்று இருக்கிறது. இப்பொழுது ரேடியோ லைசென்சு ரென்யூ பண்ண வேண்டும் என்று இருக்கிறது. அது குறிப்பிட்ட காலத்திற்குள் எல்லாம் செய்தாகிவிட வேண்டும் என்று ரூல் இருக்கிறது. அதனால், 10, 12 நாட்களில் எல்லா லைசென்ஸுகளும் ரென்யூ ஆகிவிடுகின்றன. குறிப்பிட்ட தேதியில், நவம்பர் 30–ம் தேதியோ அல்லது டிசம்பர் 31–ந் தேதியோ அல்லது ஜனவரி 31–ந் தேதியோ அது முடிந்து விடுகிறது. அந்த கிளார்க்குக்கும் அதற்குப் பிறகு வேலையில்லை. மற்ற வேலைகளைக் கவனிக்கலாம். ஆனால், இந்த மோட்டார் லைசென்ஸ் என்றால் விடிந்து எழுந்தால் தினசரி ரென்யூவல்தான். அந்த முறையை மாற்ற சட்டத்திலேயே 3 வருஷத்திற்கு மேற்படாமல் 5 வருடத்திற்குள்ளாக செய்ய வசதி செய்திருப்பதை உபயோகப்படுத்தலாம். அந்த இடைவேளையில் ரென்யூவல்களைச் செய்யலாம். இடைவேளையில் பர்மிட்டுகள் கொடுப்பதை 3 வருஷம் 8 மாதம் என்று இடைவேளைக்குத் தக்கபடி கொடுக்கலாம். அப்படிச் செய்தால் நடுவில் இரண்டு மூன்று வருஷங்களுக்கு ரென்யூவல் வேலையே இருக்காது. அந்த கிளார்க்கும் மற்ற வேலைகளில் ஈடுபடலாம். ஆகவே, அந்த விஷயத்தில் கவனம் செலுத்தி, சாத்தியமான முறையில் அதைத் திருத்தி அமைக்க வேண்டும் என்று அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் அப்பலேட் ட்ரிப்யூனலிலிருந்து ஆர்டர்கள் வர பல நாட்கள் தாமதமாகிறது. ஹைகோர்ட்டிலே கேட்கவேண்டும் என்கிறார்கள். ஆர்டர் எதுவானாலும், " ஸெட் அஸைட் ", " மாடிபைட் " என்று எதுவானாலும் ஆர்டரை சீக்கிரமாகக் கொடுத்தால் நலமாக இருக்கும். 60, 90 நாட்கள் ஆகிவிடுகிறது. அதைத் தவிர்க்க வேண்டும்.

இந்த இலாகாவிலே வருமானம் 6 கோடி, செலவு கிட்டத்தட்ட 12 லட்சம். ஆகவே, அட்மினிஸ்ரேஷனுக்கு, கலெக்ஷனுக்கு ஆகும் செலவு வருமானத்தில் 2 சத விகிதம்தான். ஆனாலும், ஆர்.டி.ஓ.க்களுக்குப் போதுமான சம்பளம் கொடுக்கப்படவில்லை என்பது என் அபிப்பிராயம். இப்பொழுது ஒரு ஜில்லாவிற்கு ஒரு ஆபீசர் இருக்கிறார். ஒரு டிபுடி கலெக்டர் சம்பளம் ரூ. 375–25–800 என்று பட்ஜட்டில் பார்த்தேன், அதே நேரத்தில் ஒரு ஆர்.டி.ஓ.க்கு ரூ. 350—25—650 வரும். ஆக அவர் 12 வருஷத்திற்கு இங்க்ரிமெண்ட் வாங்குவார் ; அதன் பிறகு 12 வருஷம் ஒரு இங்க்ரிமெண்டும் இல்லாமல் இருப்பார். இந்த டிபார்ட்மெண்ட் ஒரு குறுகிய டிபார்ட்மெண்ட். விரிவான டிபார்ட்மெண்ட் அல்ல. ஆகவே, பெரிய பொறுப்புக்கு ஏற்றவாறு பெரிய சம்பளமும் கொடுக்க வேண்டும் என்றுசொல்ல விரும்புகிறேன். இதற்கு முன்னால் மதராஸில்கூட செக்ரடரியாக இருந்தவர் ஐ.ஸி.எஸ். கேடரைச் சேர்ந்தவராக இருந்தார்கள். ஆகவே, இவைகளை எல்லாம் கருத்தில் கொண்டு, அபிப்பிராயங்களில் எவை உசிதம் என்று படுகிறதோ அவற்றை எடுத்துக்கொண்டு இந்த ட்ரான்ஸ்போர்ட் தொழிலை மேலும் மேலும் வளர்ச்சி அடையக்கூடியதாகச் செய்ய வேண்டும், அதற்கான உதவிகளைச் செய்ய வேண்டும் என்று அமைச்சரைக் கேட்டுக்கொண்டு, இந்த சந்தர்ப்பம் கொடுத்ததற்காக நன்றி தெரிவித்துக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

[21st March 1961

* SRI M. S. SELVARAJAN ; சபைத் தலைவர் அவர்களே, பஸ் போக்கு வரத்து மானியத்தை நான் ஆதரிக்கிறேன். கடந்த ஐந்து வருஷக் காலத்தில் 249 புதிய மார்க்கங்களில் பஸ்கள் போட்டும், 1,414 மைல் ரோடுகளுக்கு புதிய பஸ் வசதிகள் செய்து கொடுத்திருப்பதும் ஒரு சிறிய சாதனையில்லை. கடந்த 4, 5 வருஷ காலமாக இந்த இலாகா முன்னேறி வருகிறது. இதற்குக் காரணம் இந்தத் துறையிலே பணியாற்றி வரும் இந்த இலாகாவினரும், அமைச்சர் அவர்களும்தான் பொறுப்பு என்று சொல்ல முடியும். அந்த அளவிற்கு வளர்ந்திருக்கக் கூடிய இந்தத் துறைக்கு தகுந்தாற்போல் சிவில் தாப்பு ரோடு பராமரிப்பிலும் வளர்ச்சி ஏற்பட்டால்தான் இந்த இலாகாவும் கவர்ச்சிகரமாகப் பணியாற்ற முடியும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ரோடு பராமரிப்பு செலவிற்கு முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 6 கோடி ரூபாய் செலவிட்டு இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திலும் 11 கோடி ரூபாய் செலவிட்டிருக்கிறது. இப்போது வரக்கூடிய மூன்றாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் ஒதுக்கக் கூடிய பணம் மிகவும் குறைவு, அவ்வளவு போதுமானதாக இல்லை. இன்று வளர்ந்து வரக்கூடிய வளர்ச்சிக்குப் போதுமான அளவிற்கு இந்தத் தொகை ஒதுக்கப்படவில்லை என்பது என்னுடைய பணிவான கருத்து. சாதாரணமாகப் பார்க்கப் போனால், குக்கிராமங்களிலே ஓரளவிற்கு பஸ் போக்கு வரத்து செய்யப்பட்டிருந்தாலும் இன்னும் செய்ய வேண்டியது நிறைய இருக்கிறது. இப்போது குக்கிராமங்களுக்கு ரஸ்தாக்கள் போடப்பட்டிருக்கின்றன என்பதை நாம் மறந்துவிட முடியாது. அதைத் தவிர அதிக சீட்டின் அமைப்பில்கூட இந்த மாறுதல் செய்ய வேண்டும். அந்த முறையிலே பெரிய பஸ்கள் பெரிய மார்க்கங்களில் விடக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஏற்கனவே அதிகமாக ஓடக்கூடிய நிலைமை இருந்தும் மீண்டும் மீண்டும் அதிகமான பஸ்கள் விடக்கூடிய நிலைமை இருந்தாலும் சிறிய ஊர்களில் கிராமப் பகுதிகளில் அதுவும் விவசாயிகள் இருக்கக் கூடிய பகுதியிலே இன்றைய நிலைமையில் எந்த அளவு இருக்கிறது என்று பார்ப்போமானால், அங்கே அதிகமாகப் பஸ்கள் விடப்படவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். அந்தப் பிரதேசத்தில் மாறுதல் ஒன்றும் செய்யப்படவில்லை. ஆகையால் இந்த விஷயத்தில் சர்க்கார் தாராள மனப்பான்மையுடன் இந்த நோக்கத்தை நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். சாதாரணமாக ஒரு பஸ்ஸிலே 10, 15, 20 பேர் போகக்கூடிய நிலையிலே மத்தியிலே இடைவெளி விடாமல் ஒரு ஓரத்தில் இடைவெளி பொறுத்தி பிரயாணிகளுக்கு ஏறவும் இறங்கவும் வசதி செய்துகொடுத்தால் இம்மாதிரியான சிறு பஸ்கள் சிறு குக்கிராமங்களுக்கு குறுகிய பாதைகளிலே போவதற்கு உதவியாக இருக்கும் என்று பணிவுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்த விஷயத்தில் கனம் அமைச்சர் அவர்களும், அதிகாரிகளும் கவனம் செலுத்துவார்கள் என்று நம்புகிறேன்.

போக்குவரத்துத் துறையிலே இன்றைய தினம் புதிதாக நல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. கமிஷனர் ஆபீஸில் அபிவிருத்தி பிரிவு ஒன்று இருக்கிறது. ஜில்லா ஜில்லாவாக சென்று அங்கேயுள்ள தேவைகளை அறிந்துகொள்வதற்கு வழிவகைகள் செய்யப்பட்டு வருகின்றன. அதற்காக சில அதிகாரிகள்கூட நியமித்து ஒரு ரிப்போர்ட்டும் சமர்ப்பிக்கப்பட இருக்கிறது. இந்த ரிப்போர்ட் அரசாங்கத்தின் கவனத்திற்கு வருவதற்கு சில மாதங்கள், அல்லது வருஷமாகும். இது வருகிற வரையில் ஆர்.டி.ஓ.வோ அல்லது மேல் உள்ள அதிகாரியோ காத்திருக்காமல் தேவையான மார்க்கங்களில் வசதி செய்து கொடுக்கவேண்டும்.

கிராமப் பகுதியிலே இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமை என்னவென்றால் மூன்று மைலுக்கு அப்பால்தான் ஒரு பஸ் ஸ்டாப் இருக்கிறது. இதனால் கிராமத்திலுள்ள மக்கள் மூன்று மைலுக்கு மத்தியிலுள்ள இடங்களிலே பஸ் ஸ்டாப் இருக்கவேண்டுமென்றால் ஆர்.டி.ஓ. இப்பொழுது இருக்கக்கூடும் சட்டதிட்டத்தின் பிரகாரம் சில இடங்களிலேதான் பஸ் ஸ்டாப் கொடுக்கமுடிகிறது. ஆகவே இந்த விஷயத்தில் சர்க்கார் கவனம் செலுத்தி சற்று தாராள மனப்பான்மையுடன் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்படி இருப்பதனால் சில சமயங்களில்



21st March 1961] [Sri M. S. Selvarajan]

இரவு நேரங்களில் அவர்களுடைய கிராமத்திற்கு வருகிற நேரத்தில் இறங்க முடியாத நிலைமை இருக்கிறது. ரோடு ஓரமிருக்கும் சிறு ஊரானாலும் அங்கங்கு பஸ் ஸ்டாப் தாராளமாக கொடுப்பதால் சுற்றியுள்ள இரண்டு மூன்று மைல் சுற்றளவுக்குள் கிராமத்தில் உள்ள ஜனங்களுக்கு சௌகரியமாக இருக்கும். குறிப்பிட்ட இடங்களில் மாத்திரம் பஸ் ஸ்டாப்புகளிருப்பதால் அவசியமில்லாமல் பஸ்ஸில் அதிக கட்டணம் செலுத்த வேண்டியதிருக்கிறது.

கடந்த இரண்டு மாதத்திற்கு முன்பு திருநெல்வேலி ஜில்லாவில் போக்குவரத்து திடீரென தடைப்பட்டது. காரணம் ஒன்று இரண்டு நாள் பெரிய மழை பெய்த காரணத்தினாலே அந்த இடத்திலே பஸ்கள் ஓடவில்லை. அதுவும் பெரிய ரஸ்தாக்களிலே நேஷனல் ஹைவேஸ், ஸ்டேட் ஹைவேஸ் போன்ற இடங்களிலேகூட போக்கு வரத்து தடைப்பட்டது. இந்தவிதமாக போக்குவரத்து ஸ்தம்பிப்பு எதிர்பாராதவிதமாக மழை பெய்ததினால் ரஸ்தாக்கள் சரியாக இல்லாத காரணத்தினால் போக்கு வரத்துக்கு தடை ஏற்பட்டது. ரோட்டு பராமரிப்பு இலாக்கா இந்த விஷயத்தில் கவனம் செலுத்துமானாலும் பஸ் போக்குவரத்துக்கு எந்தெந்த இடங்களில் இத்தகைய தடைகள் ஏற்பட்டன என்ற இலாக்கா விபரத்தை ரோட்டு பராமரிப்பு இலாக்காவின் கவனத்திற்குக் கொண்டுவந்து இதற்குத் தனி நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கு வழி செய்யவேண்டும். இதற்காக மத்திய சர்க்காரிலிருந்தோ மாகாண சர்க்காரிலிருந்தோ உதவியைப் பெற்று நல்ல முறையிலே நிவாரண நடவடிக்கை எடுத்துக்கொள்ள தூண்ட வேண்டும். சிறு சிறு கிராமப் பகுதியிலே பஸ் ரூட்டுகள் ஊரை அடுத்து இல்லாத காரணத்தினால் சில பர்லாங்கு கிராம மக்கள் நடக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதிலும் இரவு நேரங்களில் அவர்கள் மிகவும் கஷ்டப்படக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. ஆகையால் பெரிய சாலை அருகில் உள்ள ஊருக்குள் இரவு நேரங்களிலாயினும் பஸ் போய் வரக்கூடிய சாத்தியக்கூறுகளை சர்க்கார் ஆராயவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்று பஸ் ஸ்டாண்டுகளை அபிவிருத்தி செய்வதற்கு முன் ஏ.பி.ஸி. என்று மூன்று பிரிவுகளாக பிரித்திருக்கிறார்கள். இந்த பஸ் ஸ்டாண்டுகளிலே சுகாதார வசதிகளும் மற்ற வசதிகளும் தருவதற்கு சட்டதிட்டங்கள் அமைத்து இந்த மூன்று பிரிவோடு டி பிரிவும் சேர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். சிறிய பஞ்சாயத்துக்களிலே மூன்று, நான்கு பஸ்கள் தங்குவதற்குத்தான் இடம் இருக்கின்றன. உதாரணமாக குற்றாலத்திற்கும் திருநெல்வேலிக்கும் போகும் வழியில் ஆலங்குளம் என்ற பஞ்சாயத்து இருக்கிறது. இது சிறிய பஞ்சாயத்தாக இருப்பதனால் அவர்கள் இங்கு ஒரு பெரிய பஸ் ஸ்டாண்டை அமைக்க முடியவில்லை. ஆகையால் இம்மாதிரி மைனர் பஞ்சாயத்துக்கு இருக்கக்கூடிய சட்டதிட்டங்களைத் சீர்திருத்தி அவர்களுக்கு விசேஷ சலுகை கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆகையால் மைனர் பஞ்சாயத்து விஷயத்தில் கவனம் செலுத்துவதற்கு டி பிரிவை அமைப்பது நல்லது என்று கூற விரும்புகிறேன்.

சிலயிடங்களில் தாராளமாக பஸ் போக்குவரத்து நடந்துகொண்டிருக்கிறது. 50, 100 தடவை பஸ் போகக்கூடிய இடங்களும் சில இருக்கின்றன. இருந்தாலும் அனாவசியமாக கஷ்டம் கொடுக்கக்கூடிய அளவிற்கு லாரி போக்குவரத்து தடை செய்யப்படுகிறது. ஆனால் லாரிகள் போகாமல் இல்லை. ஏரல் என்ற ஊர் தூத்துக்குடிக்கு அடுத்தாற்போலுள்ள வர்த்தக ஸ்தலம், கடந்த இரண்டு ஆண்டுகளாக கண் கலங்கும் அளவிற்கு அங்குள்ள வியாபாரிகள் கஷ்டப்படக்கூடிய அளவிற்கு லாரி போக்குவரத்து தடைப்பட்டிருக்கிறது, லாரி போக்குவரத்து வேறுமுறைகளில் நடந்துகொண்டுதான் இருக்கிறது, ஆனால் கஷ்டங்கள் பல இருக்கின்றன, ஆக அவர்கள் அனாவசியமாக தப்பு வழிகளில் போக வேண்டியிருக்கிறது, அது அவசியமில்லை. பஸ்கள் இரவு பகல் ஓடிக்கொண்டிருக்கும்போது லாரி போக்குவரத்து ஏன் தடைப்படுத்தப்படுகிறது என்பதை பரிசீலனை செய்து தகுந்த நடவடிக்கைகள் எடுத்து தகுந்த உத்தரவுகள் இடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பின்னர், திருநெல்வேலி,

[Sri M. S. Selvarajan] [21st March 1961

நாகர்கோவிலிற்கு செல்லும்போது இடையிலுள்ள வள்ளியூரில் ஒரு பஸ் ஸ்டாண்ட் அமைக்க தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருப்பதாக தெரிகிறது. எந்தளவு அப் பிரச்னையை சீக்கிரமாக தீர்க்க முடியுமோ அந்தளவு சீக்கிரமாக அதைச் செய்து முடித்தால் இரண்டு மூன்று தாலுகாவிலுள்ள மக்கள் உளம் குளிரும். பின்னர், டாக்ஸி சம்பந்தப்பட்டவரையில், எக்மூர், சென்டரல் ஸ்டேஷன்களுக்கு வண்டி ஏற்றிச் செல்கிறவர்களும், அங்கிருந்து வண்டி ஏறிச் செல்பவர்களும் அளவில்லாத கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள். டாக்ஸிவாலாவின் இஷ்டம் போல் ஏற்றிச் செல்கிறார்கள். எங்கே செல்ல வேண்டுமென்பதுதான் அவர்களது முதல் கேள்வி. இதுபற்றியும் கவனிக்க வேண்டும். ஆனால் கடந்த இரண்டு மூன்று மாதங்களாக நல்லதொரு சிறிய மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. போலீஸ் அதிகாரிகள் அங்கிருந்துகொண்டு ஒழுங்காக அவைகளை ஒழுங்குபடுத்திக் கொண்டு வருகிறார்கள். அந்த முறை நீடிக்கப்பட வேண்டும். பின்னர், சென்னை ஸிட்டியில் இருப்பது போன்று, டாக்ஸிகளில் உள்ள மீட்டர் வசதியை திருநெல்வேலி போன்ற ஜில்லா தலைநகரங்களில் உள்ள டாக்ஸிகளிலும் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு கூடுதல் தொகை வேண்டுமானாலும் நிர்ணயிக்கலாம். ஆகவே, இந்த மீட்டர் வசதியை ஜில்லா தலை நகரங்களிலாவது ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். பின்னர், வெயிட்டிங் சார்ஜ் குறைவாகயிருப்பதால் டாக்ஸிக்காரர்கள் அவசரப்படுகிறார்கள். அதனால் மனக்கசப்பும் ஏற்படுகிறது, வீண் விவகாரங்களும் ஏற்படுகின்றன. அதையும் எந்தளவு நிவர்த்தி செய்ய முடியும் என்று கவனித்து அதையும் நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (பெல்) ஆக, நல்ல முறையில் வேலை செய்து கொண்டிருக்கும் இந்த இலாகாவினர் முற்றிலும் பாராட்டத் தக்கவர்களாவார்கள். பஸ் ரூட்களை தாராளமாக அனுமதித்தால்தான் பழுதடைந்து கிடக்கிற ரோடுகளும் நல்ல முறையில் சீர்படுவதற்கு முடியும். என்ஜினியர்கள் முன்கூட்டியே தகுதியான ரோடுகளின் ஜாபிதாவை ஆர்.டி.ஓ.-க்களுக்கு அனுப்ப ஏற்பாடு செய்யலாம்.

11 p.m. **Sri V. SUBBIAH :** தலைவர் அவர்களே, இந்த மான்யத்தின் பேரில் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து, ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். குறிப்பாக டிரான்ஸ்போர்ட் விஷயத்தில் கிராமப் பகுதிகளில்பெரும் பகுதியும் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. இன்றைய தினம் கிராமங்களுக்கு பஸ் விடவேண்டுமென்றால் வருடக் கணக்கில் தாமதம் ஏற்படுகிறது. ஆர்.டி.ஓ.-க்களிடம் கேட்கும்போது, அதை அங்கீகரித்து விட்டோம். அப்ரூவலுக்கு சென்ட்ரல் டிராபிக் போர்ட்டுக்கு போயிருக்கிறது என்று சொல்கிறார்கள். ஒன்றிரண்டு வருடங்களுக்கு இடையில் கிராம ரூட்கள் கிடைக்கிறதா என்றால் கிடைப்பதில்லை. ஆக, இந்த இலாகாவில் பெரிய சுணக்கம் இருக்கிறது. இருபத்தைந்து மைல்கள் உள்ள இடங்களில் புதியவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்க வேண்டுமென்ற நிலையிருக்கிறதா என்று பார்த்தால், பல பஸ்கள் வைத்திருக்கக் கூடிய பெரிய முதலாளிகள் ப்ரைவேட் கம்பனிகள் ரிஜிஸ்தர் செய்து அவர்கள் அந்த ரூட்டை தங்களுக்கு கொடுக்க வேண்டுமென்று அப்ளிகேஷன் போட்டு அதற்கு நல்ல முறையில் வொர்க்ஷாப் தயாரித்துக் கொடுத்து வேறு பெயரில் அந்த ரூட்டை அவர்களே வாங்குவதற்குள்ள சந்தர்ப்பத்தை உண்டாக்கிக் கொள்கிறார்கள். இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தை உண்டாக்கிக் கொள்கிறார்கள் என்றால் அவர்களுக்கும் டிரான்ஸ்போர்ட் அதிகாரிகளுக்கும் நிறைய தொடர்பு இருப்பதாலும், அவர்கள் தங்கள் செல்வாக்கை உபயோகித்து அதிகப்படியான மார்க்குகள் வாங்கி அந்த ரூட்டை வாங்கிக் கொள்ளக் கூடிய முறையில் தயார் செய்து கொள்கிறார்கள். தங்கள் செல்வாக்காலும், பணத்தாலும் இப்படி நடக்கிறது என்பதை பலவிடங்களில் நான் கேள்விப்படுகிறேன். இத்தகைய நிலை மாற வேண்டும். குறிப்பாக புதிய ரூட்கள் வரக்கூடிய இடங்களில் 15 மைல் என்பதை 25 மைலாக்க வேண்டும். அதிலும் பஸ் முதலாளிகள் வேறு ரூபத்தில் வேறு பெயரிட்டு தங்கள் சொந்தக்காரர்கள் அல்லது தங்கள் பங்காளிகள் பெயரில் ஒரு கம்பெனியை ரெஜிஸ்தர் செய்து பஸ் ரூட்டு வாங்குவது என்ற



21st March 1961] [Sri V. Subbiah]

முறையிருந்தால் புதியவர்களுக்கு இந்த நாட்டில் ரூட் கிடைப்பதற்குரிய சந்தர்ப்பமேயிருக்காது என்ற நிலைதான் ஏற்படும். பரவலான முறையில் 2, 3, 4 பஸ்கள் என்று பஸ்கள் விடக்கூடிய அளவிற்கு நல்லதொரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். அது பரவலான முறையில் அமைக்கப்பட வேண்டும். அதல்லாமல் 50, 60 பஸ்கள் வைத்திருப்பவர்களின் ஏகபோக உரிமையாக இது ஆகிவிடக்கூடாது. அப்படி ஏகபோக உரிமையாக நம் நாட்டில் கொடுக்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டு பரவலாக எல்லாயிடங்களிலும் இருந்து கொண்டிருக்கிறது. இந்த முறையை மாற்ற அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். பின்னர் ரீஜனல் டிரான்ஸ்போர்ட் அத்தாரிட்டீஸ், டிராபிக் இன்ஸ்பெக்டர்ஸ், வேறு டிரான்ஸ்போர்ட் அதிகாரிகள் இவர்கள் பேரில் பல குறைகள் கூறப்படுகின்றன. குறிப்பாக இன்று லாரி விபத்துக்கள் அதிகமாக ஏற்படுகின்றன என்றால், லாரிகளில் ஏற்றிச் செல்லப்படுகிற லோடை, அதிகாரிகள் சரியாக கவனிப்பதில்லை. விபத்துக்கள் ஏற்பட முக்கிய காரணம், "ஓவர் லோடிங்" தான் என்று சொல்ல முடியும். லாரியில் ஏற்றிச் செல்கிற அதிகப்படியான லோடிங்க் காரணமாகத்தான் விபத்துக்கள் ஏற்படுகின்றன. என்றுதான் எல்லோரும் கருதுகிறார்கள். வேறு காரணங்களும் இருக்கலாம். ஆனால் இதுவும் ஒரு முக்கிய காரணமாகும். இப்படி ஏற்றிச் செல்வதை, டிரான்ஸ்போர்ட் அதிகாரிகள், இன்ஸ்பெக்டர்ஸ், இவர்கள் லஞ்சப் பழக்கத்தால் தாராளமாக வாங்கிக் கொண்டு விடுகிறார்கள் என்ற வதந்தி இருந்து கொண்டிருக்கிறது. எங்கும் அப்படியே கூறப்படுகிறது. ஆகவே, நல்ல முறையில் வேண்டிய கண்காணிப்புகள் செய்து லாரி விபத்துக்கள் ஏற்படுவதைத் தவிர்க்க வேண்டும். நாணயம் உள்ளவர்களால் டிரான்ஸ்போர்ட் இன்ஸ்பெக்டராக இருக்க முடியவில்லை என்பதை என் அனுபவத்தில் கண்டேன். சிறு குழந்தையிலிருந்தே அவரை எனக்குத் தெரியும். புது அனுபவம் உள்ளவர், லஞ்சத்தைப் பற்றியே நினைக்காதவர், கண்ணியமான குடும்பத்தில் பிறந்தவர், விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர், அவர் இந்த இன்ஸ்பெக்டர் உத்தியோகத்தில் இருந்தார்கள். நாலைந்து மாதங்கள்கூட அவரால் இந்த உத்தியோகத்தில் இருக்க முடியவில்லை. எங்கு பார்த்தாலும், ஓவர் லோடை பிடித்து விடுகிறார் என்ற கூச்சல். பணத்திற்காக அவர் ஒன்றுமே செய்வதில்லை. பெரியவர்களின் சிபார்சுக்காக விடுவதுமில்லை என்ற நிலை ஏற்பட்டதால் அவரை வேறு ஒரு இலாகாவிற்கு மாற்றி விட்டார்கள். இப்படியிருக்கிறது, நிலைமை. அதைப் பார்க்கும்போது, இந்த இலாகாவில் பணத்தை வைத்துக் கொண்டு, செல்வாக்கை வைத்துக்கொண்டு எதை வேண்டுமென்றாலும் சாதிக்கலாம் என்ற நிலையில்தான் இந்த இலாகா இன்றைய தினம் இருந்துகொண்டிருக்கிறது. இந்த நிலையை மாற்றியமைக்க சர்க்கார் தைரியமாக நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். அவர்களிடம் கண்காணிப்பாக நடந்துகொள்ள வேண்டும். பஸ் ஸ்டான்ட்களை மூன்று விதமாக பிரித்திருக்கிறார்கள். பெரிய நகரங்களில், மேஜர் பஞ்சாயத்துக்களில்கூட தெருக்களில் நின்றுகொண்டுதான் பஸ்கள் பிடிக்க வேண்டிய நிலை இருக்கிறது. மூன்று வித க்ளாஸிபிக்கேஷனில் எதுவாகயிருந்தாலும் முக்கிய இடங்களில் பஸ் ஸ்டான்ட்ஸ் அமைக்க வேண்டும். நாஷனல் ஹைவேஸ் போகக்கூடிய இடங்களில்கூட, பெரிய இடங்களில்கூட ரோடில் நின்றுகொண்டுதான் பஸ் பிடிக்கக்கூடிய நிலை இன்றும் இருக்கிறது. ஆகவே, நல்ல முறையில் முக்கியமான இடங்களிலாவது பஸ் ஸ்டான்ட்ஸ் ஏற்படுத்த வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். இல்லாவிடில் டிரான்ஸ்போர்ட் என்பதற்கே அர்த்தம் இல்லாததோடு, நல்ல முறையில் இந்த இலாகா செயல்பட முடியாது. கிராமப் புறங்கள் தொழில் நகரங்களோடு பஸ் போக்குவரத்தில் இணைக்கப்படவேண்டும். பெரிய பெரிய நகரங்களில் இன்று பலவித தொழில்கள் நடக்கும்போது, ஐந்தாறு மைல் சுற்றுப் புறங்களிலிருந்துகிராமங்களிலுள்ள மக்கள் கிராமங்களிலிருந்து, யந்திரத் தொழில் செய்யும் தொழிற்சாலைகளுக்கும், கடைச் சிப்பந்திகளாகவும், மற்றப்படி வியாபாரம் செய்வதற்கும் கிராமங்களிலிருந்து நகர்புறங்களுக்கு வந்துகுவிகிறார்கள். இரவில் அவர்கள் தங்கள் அலுவல்களை முடித்துவிட்டு செல்வதற்கு எந்தவிதமான மார்க்கமும் இல்லை. அங்கே தங்கிவிட வேண்டியிருக்கிறது.

ஆகவே, இரவு 9 மணிக்கு மேல் கிராமங்களுக்குச் சென்று விட்டு திரும்பி வரக்கூடிய அளவில் பஸ் ரூட்கள் கொடுக்க வேண்டும். அப்படிச் செய்வதினால், நகர்புறங்களில் ஏற்படக்கூடிய ஜனப் பெருக்கமும் குறையும். கிராமத்திலிருந்து வந்து வேலை செய்யும் ஏழை மக்களின் செலவினங்களும் குறையும். நகரங்களில் இருந்து கொண்டு, சினிமா, ஹோட்டல்கள் போன்றவைகளில் பணத்தை வீணாகச் செலவு செய்து, மேலும் நாகரீக வாழ்க்கையில் ஈடுபட்டு தாங்கள் கூலி வேலை செய்து சம்பாதிக்கக்கூடிய பணத்தை அங்கேயே செலவழித்துவிட்டு வீட்டிற்கு ஒன்றும் இல்லாத நிலையில்தான் போகிறார்கள். இப்பேர்பட்ட பஸ் வசதி கிராமங்களுக்கு இருக்குமானால் தொழிற்சாலைகளில் வேலை செய்துவிட்டு அதன் பின்னால் கிராமங்களுக்கே போக வசதியாக இருக்கும். ஆகவே இம்மாதிரிப்பட்ட இடங்களில் புதிய ரூட்கள் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கிராமப்புறங்களிலுள்ள ரோடுகளை எடுத்துக்கொண்டால் ஹைவேஸ் டிவிஷனல் இன்ஸ்பெக்டர், அல்லது இன்சினியர் சரியானபடி ரோடுகளை சர்டிபை செய்வதில்லை. கிராமப்புறங்களை பொறுத்த அளவில் இந்த அதிகாரிகள் எல்லாம் அலட்சியமாகவே இருந்து வருகிறார்கள். அன்-மெட்டல் ரோடாக இருக்கின்ற ரோடுகளில்கூட பஸ் போக்குவரத்து இருந்துகொண்டிருக்கிறது. இதே நேரத்தில் சில கிராமங்களுக்கு பஸ் போக்குவரத்து ரோட் சர்டிபை செய்ய வேண்டுமென்றால், ரோடுகள் சிறிதாக இருக்கிறது. சரியானபடி கல்வெட்டுகள் இல்லை என்றெல்லாம் சொல்லி சர்டிபை செய்ய மறுத்துவிடுகிறார்கள். ஆனால் அதை உடனடியாகக் கவனத்தில் எடுத்து அந்தக் குறைபாடுகளை நீக்குவதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்வதில்லை. இதில் டிரான்ஸ்போர்ட் அத்தாரிட்டிகளின் சிரத்தை மிகவும் குறைவாக இருந்துவருகிறது. அங்கு எங்கள் பக்கத்தில் கோவில்பட்டியின் பக்கத்திலுள்ள ஒரு கிராமத்திற்கு பஸ் போக்குவரத்து வேண்டும் என்று கேட்டு இரண்டு வருடங்கள் ஆகின்றன. இந்த ரூட் சாங்ஷன் செய்தும் இந்த ரூட்டில் பஸ்கள் விடவில்லை. இதில் டிரான்ஸ்போர்ட் நிர்வாகத்தில் பெரிய சுணக்கம் ஏற்படுகிறது. எனக்கு முன்பு பேசியவர் இதற்கெல்லாம் காலவரம்பு இருப்பதாக சொன்னார்கள். இருக்கலாம். இருந்தாலும்கூட கால வரம்பு என்பது வருஷக் கணக்காக இருந்து கொண்டிருக்கிறது. இதற்குள் கொடுக்கப்பட்ட பீரியட் எல்லாம் முடிந்து போகக்கூடிய அளவில் கால தாமதம் ஏற்படுகிறது. அதோடு இந்த நிர்வாகத்தில் பல சிக்கல்கள் இருக்கின்றன. அதை வைத்துக்கொண்டு இதற்காக வசதி செய்ய முன் வருகின்றவர்களையும் தடுத்து நிறுத்திவிடுகின்றார்கள். அதோடு இனிமேல் பஸ் ரூட்டுகளை கொடுக்கும்போது, அதிகமாகவும், எக்ஸ் சர்வீஸ் நபர்களுக்கும், கூட்டுறவு சம்மந்தமான ஸ்தாபனங்களுக்கும் புதிய ரூட்டுகளை கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பல இடங்களில் ஒரே முதலாளியே மூன்று வித பெயர்களால் பஸ்கள் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். குமரன் டிரான்ஸ்போர்ட் என்று வைத்துக்கொள்கிறார்கள், விஜயகுமரன் டிரான்ஸ்போர்ட் என்று வைத்துக்கொள்கிறார்கள். மோகன் குமரன் டிரான்ஸ்போர்ட் என்று வைத்துக்கொள்கிறார்கள். இப்படி பல பெயர்களில் வைத்துக்கொண்டு, தனித்தனியாக கணக்கெழுதி, அரசாங்கத்தை ஏமாற்றிக்கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் தடுக்க வேண்டும். மேலும் இந்தத் துறையில் இருக்கின்ற குறைகளை எல்லாம் மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். குறிப்பாக எல்லா கிராமங்களுக்கும் பஸ் போக்குவரத்து பெருக வேண்டும் என்கின்ற ஒரே காரணத்தைக்கொண்டு இந்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

**SRI S. KHADIR SHERIFF :** கனம் தலைவர் அவர்களே, டிரான்ஸ்போர்ட் மினிஸ்டர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த மான்யத்தை ஆதரித்து பேச முன் வந்திருக்கிறேன். இன்றைய தினம் பஸ் போக்குவரத்தில் நமது மாகாணம் தலை நிமிர்ந்து நிற்கிறது என்றால் அதற்குக் காரணம், நமது அதிகாரிகளுடைய தைரியம்தான் என்றுதான் சொல்ல வேண்டும். உண்மையிலேயே, நான்கு வருடங்களுக்கு முன்பு பிரயாணிகளுக்கு எவ்வளவோ கஷ்டங்களும், நஷ்டங்களும் இருந்துகொண்டிருந்தன. இப்போது நமது டிரான்ஸ்போர்ட் மினிஸ்டர் அவர்கள் பதவி





யேற்ற பிறகு இதில் தகுந்த நடவடிக்கை எடுத்து இன்றைக்கு நமது மாகாணத்தில் நல்ல முறையில் இந்த நிர்வாகம் நடப்பதற்கு வழிவகை செய்திருக்கிறார்கள். டெப்யூடி டிரான்ஸ்போர்ட் கமிஷனர் அவர்களும் இந்த நிர்வாகத்தை ஒழுங்காக நடத்தி வருவதைப்பற்றி எல்லோரும் அறிவார்கள். அதோடு அவர்களுடைய செக்ரட்டரியும் சேர்ந்து உண்மையாக ஒத்துழைத்து வருவதால், நமது மாகாணத்தில் யாரும் குறை சொல்லாத வகையில் பஸ் போக்குவரத்து நடந்து வருகிறது. இதற்கெல்லாம் காரணம் நமது அமைச்சர் அவர்களும், அதிகாரிகளும்தான். சில நண்பர்கள், நமது மாகாணத்தில் பஸ் போக்குவரத்தில் நல்ல சௌகரியங்கள் இல்லை என்று சொன்னார்கள். அதைப் பார்த்து நான் வருத்தப்படுகிறேன். நான் வேறு பல மாகாணங்களுக்குப் போய் பார்த்திருக்கிறேன். அங்கெல்லாம் பிரயாணிகள் எவ்வளவோ கஷ்டப்படுகிறார்கள். நம் நாட்டில் இது இல்லை. இதை யாரும் இல்லை என்று சொல்ல முடியாது. நான்கு வருடங்களுக்கு முன்னால்கூட நம் நாட்டில் பிரயாணிகளுக்கு எவ்வளவோ கஷ்டங்கள் இருந்தன. இவைகளை எல்லாம் நீக்குவதற்கு நம்முடைய மினிஸ்டர் சாதாரண பாஸஞ்சர் போல் எல்லா பஸ் ஸ்டாண்டுகளிலும் போய் நின்று மக்களுடைய கஷ்டங்களை அறிந்து அதை நீக்குவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். இதை நாம் பெருமையாகச் சொல்லிக்கொள்ளலாம். அதோடு ஓவர் லோட இருக்கின்ற இடங்களை எல்லாம் பார்த்து அதை எல்லாம் கண்டுபிடித்து, நடவடிக்கை எடுத்ததின் காரணமாக இப்போது ஓவர் லோட் என்கின்ற காரியமே இல்லாத வகையில் கொண்டுவந்திருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, நண்பர் கோதண்டராமன் அவர்கள் தங்கள் சொந்த அபிப்பிராயத்தை வைத்துக்கொண்டு டி.வி.எஸ். கம்பெனியைப்பற்றி, என்னவெல்லாமோ பேசிவிட்டார்கள். அது மிகவும் வருந்தத் தக்கது. நம்முடைய மாகாணத்திலேயே அந்த ஸ்தாபனம் தலை சிறந்து விளங்குகிறது. இந்த நிர்வாகத்தில் இருக்கக்கூடியவர்கள் எல்லாம் சட்டதிட்டங்கள் தெரிந்தவர்கள். அதுமட்டுமல்ல, இதில் இருக்கின்றவர்கள், மேல் நாடுகளுக்கு எல்லாம் போய் எந்த விதமாக பஸ் போக்குவரத்தை நடத்த வேண்டும் என்பதை அறிந்து அதன் மூலம் நடத்திகொண்டிருக்கின்றவர்கள். ரயில்கூட 10 நிமிடம், அரை மணி என்று காலம் தாமதித்து வரும். ஆனால் டி.வி.எஸ். பஸ்கள், லாரிகள் இவைகள் குறித்த நேரத்தில் வந்து சேரும் என்பதை யாரும் மறுக்க முடியாது. இரண்டாவது, நண்பர் கோதண்டராமன் அவர்கள், சொன்னார்கள், சில பஸ் முதலாளிகள், தங்கள் பிள்ளைகள், மனைவி இவர்கள் பேரில் பஸ் பெர்மிட்டுகளை எடுத்து நடத்தி வருகிறார்கள் என்று. இது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். டாக்டர் வேலை செய்து கொண்டிருப்பவர், தனது பிள்ளையை டாக்டராக ஆக்க வேண்டும் என்பதில் கவனமாய் இருப்பார்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் தங்கள் குமாரர்கள் உத்தியோகஸ்தர்களாக வரவேண்டும் என்று ஆசைப்படுவார்கள். அதே போலதான் தொழில் நடத்தக்கூடியவர்கள் தங்கள் குமாரர்கள் அவ்விதமே வர வேண்டும் என்று ஆசைப்படுவார்கள். ஆகவே, இதை அவர்கள் சொன்னது சரியல்ல, அவர்கள் ஏதோ தங்கள் சொந்த காரணத்தினால் இவ்விதம் குறிப்பிட்டது மிகவும் வருத்தத் தக்கது. மேலும், எங்கள் பகுதியில் இந்த மார்க் ஸிஸ்டம் இருந்து வருகிறது. இதை அதிகாரிகள் நல்ல முறையில்தான் நடத்தி வருகிறார்கள். லிமிடட் என்று இருக்கக்கூடியவர்களுக்கு ஒரு மார்க் கொடுக்கப்படுகிறது. இதை வைத்துக்கொண்டு பலரும் இவ்விதம் மார்க் எடுக்கின்ற வகையில் முன் வந்துவிடுகிறார்கள். இதற்காக கொண்டுவரப்பட்ட சட்டம் வருவதற்கு முன்னால் சென்னையில் 10, 15 லிமிடட் கம்பெனிகள் இருந்தன. பின்னால் இவ்விதம் ஒரு சட்டத்தை சர்க்கார் கொண்டு வந்ததின் பின்னால் அனேக பஸ் முதலாளிகளும் லிமிடட் கம்பெனி என்று ஏற்படுத்திக்கொண்டார்கள். இதன் காரணமாக நியாயமாக கிடைக்கவேண்டியவர்களுக்கும் பெர்மிட் கிடைக்காமல் போய் விடுகிறது. ஆகவே குறைந்தது நான்கு அல்லது ஐந்து வருடங்கள் அனுபவம் இருந்தால்தான் இந்த மார்க் ஸிஸ்டம் அனுசரிக்கப்படும் என்று சொல்லக்கூடிய நிலைமையை கொண்டுவர வேண்டும் என்று தாழ்மையாக கேட்டுக்கொள்கிறேன்.

[Sri S. Khadir Sheriff] [21st March 1961

தனியார் துறையில் நடத்தப்படும் பஸ் தொழிலின் பஸ் முதலாளிகள் இன்றைக்கு சர்க்கார் அளிக்கும் உத்தரவுகளை அப்படியே நிறைவேற்றி தொழிலாளிகளுக்கு எந்தெந்த சலுகைகள் கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறார்களோ அதைப் போல் இரண்டு பங்கு சலுகைகளைக் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். இதைப் போல வேறு எந்தத் தொழிலாளிகளுக்கும் இத்தகைய வசதி இருப்பதாகத் தெரியவில்லை.

ஒரு வண்டி வாங்க வேண்டுமானால், 50—60 ஆயிரம் ரூபாய்கள் தேவையாக இருக்கிறது. இன்றைய தினம் மதுரை கார்ப்பொரேஷன் டவுனுக்குள் ஒரு பஸ் ஸ்டாண்ட் வைத்திருக்கிறது. அதில் ஜனங்கள் நிற்பதற்கு இடம் கிடையாது. ஒரு வண்டி போய்த் திரும்புவதற்கு இடம் கிடையாது. அப்படி இருக்கும் சந்தர்ப்பத்தில் பஸ் ஸ்டாண்ட் ஏற்பட்ட காலத்திலிருந்து மாதம் ஒன்றுக்கு 10 ரூபாய் வீதம் வாடகை வாங்கிக்கொண்டிருந்தார்கள். திடீரென்று பஸ் வைத்திருப்பவர்களுக்குக்கூட சொல்லாமல் மாதம் ஒன்றுக்கு 25 ரூபாய் என்று ஏற்படுத்திவிட்டார்கள். அது அவ்வளவு நியாயம் அல்ல. அங்கு ஜனங்களுக்கும் சௌகரியம் இல்லை. —பஸ்களுக்கும் சௌகரியம் இல்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் 10 ரூபாயாக இருந்ததை 25 ரூபாயாக மாற்றியது வருந்தத் தக்கது.

பஸ் போக்குவரத்து இருக்கக்கூடிய ரோடுகளை பராமரிக்கும் பொறுப்பை பஞ்சாயத்து யூனியன்களிடத்தில் ஒப்படைக்கப் போவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த வேலையை பஞ்சாயத்து யூனியன் அவ்வளவு சௌகரியமாகச் செய்ய முடியாது. அவர்களால் நல்ல முறையில் பஸ்கள் போகக்கூடிய ரோடுகளைப் பராமரிக்க முடியாது. அதை அரசாங்கமே ஹைவேஸ் டிபார்ட்மெண்டில் எடுத்து நடத்தினால் சரியாக இருக்கும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சில நண்பர்கள் சொன்னார்கள் மூன்று வருஷ காலத்திற்கு முன்பு சென்னை மாகாணத்தில் 25 சத விகித பஸ்களை அதிகரிக்க வேண்டுமென்று உத்தரவிட்டும் அனேக ஜில்லாக்களில் இது நடக்கவில்லை என்று சொன்னார்கள். நான் தைரியமாகச் சொல்ல விரும்புகிறேன். நார்த் ஆர்க்காட் ஜில்லாவில் 25 சத விகிதத்துக்கு மேல் 38 சத விகிதமாக உயர்த்தியிருக்கிறார்கள். நார்த் ஆர்க்காட் ஜில்லாவில் எந்த வித குறைவும் இல்லாமல் பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

பஸ் ஸ்டாண்டுகளைப் பொறுத்தவரையில் சர்க்கார் கவனிக்கவேண்டிய கடமை இருக்கிறது. அனேக பஸ் ஸ்டாண்டுகளில் ஜனங்கள் பஸ்ஸில் ஏறுவதற்குக் கஷ்டப்படுகிறார்கள். பஸ்ஸில் ஏறிக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்போது சர்க்கார் ஒரு சட்டத்தைக் கொண்டுவர வேண்டும். பஸ் ஸ்டாண்டில் இருக்கும்படியான ப்ரோக்கர்களாலும் மற்றவர்களாலும் ஜனங்கள் கஷ்டப்படாமல் இருக்க வேண்டுமானால், ஒரு லைசென்சு முறையை ஏற்படுத்த வேண்டும். அப்படி லைசென்சு உள்ளவர்கள் படித்தவர்களாக இருக்க வேண்டும். இந்த முறையில் சர்க்கார் ஒரு சட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்களுடைய தொந்திரவு பொறுக்க முடியவில்லை. போலீஸ் அதிகாரிகளும் ஒன்றும் செய்ய முடியவில்லை. லைசென்சு என்ற முறை இருந்தால், அவர்கள் ஒழுங்காக டைமோடு வந்து டைமோடு போய் வேலை செய்வார்கள். இல்லையென்றால், ஒவ்வொரு ஜில்லாவிலும், ஒவ்வொரு டவுனிலும் ஒவ்வொரு பஸ் ஸ்டாண்டிலும் அவர்களுடைய தொந்திரவு ஜாஸ்தியாக இருக்கிறது. அவர்களாலேயே முதலாளிகளுடைய பெயர்கூட கெட்டுப்போகிறது. போலீஸும் அவர்களைக் கவனிக்க சந்தர்ப்பம் இல்லாமல் போகிறது. அவர்களுக்கு அநேக விதச் சலுகைகள் இருப்பதால் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, இதை லைசென்சு முறையில் கொண்டு வந்தால் நலமாக இருக்கும்.

அடுத்தபடியாக, பஸ்காரன், பஸ்காரன் என்று பேசுகிறார்கள். அதிலும் நான் எதிர்க் கட்சி மெம்பர்களிடம் கேட்டுக்கொள்ளுகிறேன் பஸ்காரன் என்பவன் மிகவும் பொறுப்பு உள்ளவன். அவன் தொழிலை



21st March 1961] [Sri S. Khadir Sheriff]

நடத்த வேண்டுமானால், குறைந்த பட்சம் ரூ. 60,000 இல்லாமல் நடத்த முடியாது. தயவு செய்து பஸ்காரன் என்று மட்டமாகப் பேசக் கூடாது. அவர்கள் ரொம்பவும் பொறுப்புள்ளவர்கள். சர்க்காருக்கு டாக்ஸை முதலில் கட்டுவது பஸ்காரன்தான். டாக்ஸேஷன் கட்டுவதாக இருந்தால், மூன்று மாதங்களுக்கு முன்பாகக் கட்டுகிறான். சர்ஜார்ஜை ஒரு மாதத்திற்கு முன்பாகக் கட்டுகிறான். இன்கம்-டாக்ஸை ஒரு வருஷத்திற்கு முன் கட்டுகிறான், இவ்வளவு கௌரவத்தோடு தொழிலை நடத்துபவர்களை அவ்வளவு மட்ட ரகமாக நினைக்கக் கூடாது என்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

*SRI P. U. SHANMUGAM: சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, பஸ் போக்குவரத்தினுடைய மானியத்தின் மீது நடைபெறும் விவாதத்திலே கலந்துகொள்ளுகிற நேரத்தில் ஒரு சில கருத்துக்களை நானும் சபையின் முன்பு வைக்க விரும்புகிறேன்.

புதுப் பாதைகள் கொடுப்பது சம்பந்தமாக இந்த மன்றத்தில் பேசிய நண்பர்கள் பலரும் எடுத்துப் பேசியிருக்கிறார்கள். ஒரு புதுப் பாதை கொடுப்பது என்று சொன்னால், மாவட்டக் கலெக்டர்தான் கொடுக்க வேண்டும்—மாவட்ட கலெக்டர்தான் துவக்க வேண்டும்—என்ற ஒரு நிலை இருந்துகொண்டு வந்தது என்பதை நாம் எல்லோரும் அறிவோம். புதியதாக டிஸ்ட்ரிக்ட் டெவலெப்மெண்ட் கவுன்ஸிலிடம் இனி புதுப் பாதைகளைத் துவக்கும் பொறுப்பை ஒப்படைக்கப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அது உள்ளபடியே வரவேற்க வேண்டியதுதான். ஆனால் அப்படி வரவேற்கிற நேரத்தில், ஆளும் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் பெரும் அளவில் இருந்து அந்த வாய்ப்பைப் பெற்றிருக்கிற காரணத்தினால் ஆளும் கட்சியை ஆதரிக்கிற பஸ் முதலாளிகளுக்கு சாதகமாக இருப்பார்களோ என்று அச்சம் ஏற்படக் கூடிய முறையில் நிலைமை இருக்கிறது. அதைத் தவிர்க்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் சர்க்காரை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

புது பஸ் ரூட் தேவை என்று சொன்னால், நான் முன்பே சொன்னேன், யார் புதுப்பாதை துவக்குவதைப் பற்றி ஆட்சேபிக்கிறார்களோ, யார் புதுப் பாதை தேவையில்லை என்று ஆட்சேபிக்கிறார்களோ அவர்களுக்கே அந்த பஸ் ரூட்டைக் கொடுக்கிறார்கள். அது உள்ளபடியே மிக மிக வெட்கப்பட வேண்டிய காரியம். அதைச் செய்யக் கூடாது என்று சொல்லிக் கொள்ளுகிறேன். புதுப் பாதை துவக்கும்போது, அதை வேண்டாமென்று சொல்லக் கூடிய பஸ் முதலாளிகள் யாராக இருந்தாலும் அவர்களுக்கே அந்த ரூட்டைக் கொடுப்பது மிகவும் அவமானமாகும்—கொடுக்கக் கூடாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பர்மிட் வழங்கும் முறை இருக்கிறதே, தங்கள் மூலமாக நான் தாழ்மையோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். அவர்கள் வைத்துக்கொண்டிருக்கிற முறையை மாற்றிக்கொள்ள வேண்டும். இதற்கு முன் ஒரு முறை எந்தக் கருத்தை வலியுறுத்தினேனோ அதையே வலியுறுத்தி ஆளும் கட்சிக்குச் சாதகமாக இருப்பவர்களுக்கு பர்மிட் வழங்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டை மீண்டும் சர்க்கார் மீது சுமத்துகிறேன். புது பர்மிட்டுகள் வழங்கும்போதும் சர்க்காருடைய தலையீடு இருக்கிறது. எனக்கு முன் பேசிய கனம் அங்கத்தினர் செல்வராஜ் அவர்கள் பேசும்போது அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டுச் சொன்னார்கள்—ஒரு பெண்மணிக்கு பர்மிட் வழங்கப்பட்டதைப் பற்றிக் குறிப்பிடும்போது அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டுச் சொன்னார்கள்—அப்பீலில் என்ன ஆயிற்று என்று கேட்டார்கள். என்ன ஆயிற்று என்று வெட்கப்பட வேண்டியது கனம் அங்கத்தினர் அல்ல, திராவிட முன்னேற்றக் கழகம் அல்ல, இந்த சர்க்கார்தான் வெட்கப்பட வேண்டும். சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் செய்யக் கூடிய முடிவு நீதிமன்றத்தினால் தூக்கி எறியப்படுகிறது என்று சொன்னால், சர்க்கார் செய்வது அக்கிரமம், அநியாயம் என்பதற்கு அத்தாட்சி வேறு என்ன வேண்டும்? தவறுக்கு மேல் தவறு செய்துகொண்டு போவதன் பொருள் என்ன? எதாவது ஒரு முனையில் திருத்த வேண்டாமா? ஏன் செய்யவில்லை? கனம் செல்வராஜ் அவர்கள் சொன்னார்கள், அந்த

[Sri P. U. Shanmugam] [21st March 1961

மாவட்டத்தில் இருப்பவர்களுக்கல்லாமல் வேறு மாவட்டத்தில் இருப்பவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது என்று. அதே குற்றச்சாட்டை நானும் இந்த சர்க்கார் மீது சுமத்த விரும்புகிறேன். வட ஆற்காடு மாவட்டத்தில் இருக்கக்கூடிய முதலாளிகளுக்கு தென் ஆற்காடு மாவட்டத்தில் பஸ் ரூட் கொடுத்தால்—வட ஆற்காடின் எந்தப் பகுதியையுமே தொடாத முறையில் பஸ் பர்மிட் கொடுத்தால்—இந்த அக்கிரமத்தை என்னவென்று சொல்வது ? தென் ஆற்காடு மாவட்டத்தில் இருப்பவர்கள் அத்தனை பேரும் திறமை அற்றவர்களா ? அல்லது தகுதி அற்றவர்களா ? அல்லது யோக்கியதை அற்றவர்களா ? என் கொடுக்கக் கூடாது ? வட ஆற்காடு பஸ் முதலாளிக்கு கொடுப்பதற்கு தனிப்பட்ட காரணம் என்ன ? நான் பெயர்களைச் சொல்லி இந்த மன்றத்தில் ஒரு புயலைக் கிளப்பிவிட விரும்பவில்லை. ஆனால் இதை சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இதனால் சர்க்காருடைய பெயர் எந்த அளவுக்கு இழுக்கு அடைகிறது, எந்த அளவுக்கு பாதிக்கப்படுகிறது என்று அக்கறை உள்ளவர்கள் யோசித்து முடிவு கட்ட வேண்டும். கலெக்டர்கள் பஸ் பர்மிட்டுகள் கொடுக்கிறார்கள். ஆகவே, இந்த சர்க்கார்தான் இந்த நிலைமை ஏற்படாதபடி திருத்திக்கொள்ள உத்திரவுகளைப் போட வேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன்.

'மார்க் லிஸ்டம்' என்று வைத்திருக்கிறார்கள். மார்க் லிஸ்டத்தை வைத்துக்கொண்டு லிமிடெட் கம்பெனியாக ஆக்கினால் ஒரு மார்க் அதிகம் என்று சொன்னால் எல்லா முதலாளிகளும் லிமிடெட் கம்பெனியாக ஆக்குகிறார்கள். புது பஸ் பர்மிட் வாங்கலாம் என்ற ஆசையோடு இப்படிச் செய்கிறார்கள். புதியதாக வேறு யாராவது புது பர்மிட் (அனுமதி) வாங்க வேண்டுமென்றால் அவர்களுக்கு இருக்கும் இன்னலும் இடைஞ்சலும் கொஞ்சநஞ்சமல்ல. உயர்நீதி மன்றம் வரையில் அப்பீலுக்கு பணத்தை சேர்த்து வைத்துக்கொண்டிருக்கிற பஸ் முதலாளியை எதிர்த்து புதிய பர்மிட் வாங்குவதற்குள் அவர் ஏழையாக ஆகவேண்டிய நிலை ஏற்படுகிறது.

1-0 a.m. ஓடுகின்ற பஸ்களில் குறுகிய இடங்களுக்கு டிக்கெட் கொடுப்பதே கிடையாது. நான் ஏதோ குற்றம் சாட்டுகிறேன் என்று நினைக்க வேண்டாம். பல இடங்களிலே பல கிராமங்களிலே போய்க் கேட்டால், அங்கிருக்கக் கூடியவர், 'இப்படிக் குறுகிய தூரத்திற்கு டிக்கட் கொடுப்பது கிடையாது' என்று சொல்லுவதைப் பார்க்கலாம். இதைத்தவிர, அதிக தூரத்திற்கு டிக்கட் கொடுத்துவிட்ட பிறகு, இடம் காலி இருந்தால்தான் 'ஏறித் தொலையுங்கள்' என்று சொல்லி, குறுகிய தூரத்திற்குச் செல்லக் கூடியவர்களுக்கு டிக்கெட் கொடுக்கிறார்கள். அப்படி கொடுக்கப்

(Deputy Speaker in the Chair.)

படும் டிக்கெட்டும் அவர்கள் செல்லக்கூடிய இடத்திற்குக் கொடுக்கிறார்களா என்றால் கிடையாது. 8 அணா கொடுத்து டிக்கெட் வாங்கிக்கொள், நீ செல்லக்கூடிய கிராமத்திலே வேண்டுமானால், இறங்கிக்கொள், என்றுதான் டிக்கெட் கொடுக்கப்படுகிறதேயொழிய அவர்கள் உண்மையிலேயே போகக் கூடிய 2 அணா அல்லது 3 அணா தூரத்திற்கான டிக்கட் கொடுக்கப்படுவதில்லை. இதை சர்க்கார் முன் நிரூபிக்க முடியாது என்றில்லை. என்னுடைய தொகுதியிலுள்ள கிராமங்களுக்கு வந்து கேட்டால், ஆயிரக்கணக்கான பேர்களை வைத்து இதை நிரூபிக்க முடியும். இதைப் பற்றி மேலதிகாரிகளுக்குப் புகார் எழுதினால், அல்லது மாவட்ட அபிவிருத்தி குழுவிலே எடுத்து அதிகாரிகளிடம் சொன்னால் பஸ் முதலாளிகள் காங்கிரஸ்காரர்களாக இருக்கின்ற காரணத்தினால் அதைப்பற்றிக் காதிலேகூடப் போட்டுக் கொள்வதில்லை. இந்தக் கொடுமையைத்தான் நாம் பார்க்கின்றோம். ஆனால் கிராமங்களுக்குச் சென்றால்,அங்குள்ள மக்கள், "நாங்கள் 3 அணா, 4 அணா தூரத்திற்குச் செல்வதற்கு எங்களிடம் 8 அணா கொடுக்க வேண்டுமென்று வாங்குகிறார்களே, இது நியாயமா ?" என்று கேட்கிறார்கள். "8 அணா கொடுத்து உங்களுக்கு வேண்டிய இடத்தில் இறங்கிக் கொள்ளுங்கள்" என்று சொல்பவர்களுக்குத்தான் இந்த அரசாங்கம் உதவி செய்கிறதே தவிர, இதற்கு என்ன பரிகாரம் செய்ய வேண்டுமென்று கேட்டால், அதற்கு ஒன்றும்



21st March 1961] [Sri P. U. Shanmugam]

பதிலே கிடையாது. ஆகவே அவர்கள் இப்படி 8 அணா கொடுத்துக் கொண்டுதான் பிரயாணம் செய்யக்கூடிய நிலைமை இன்னும் நீடிக்க வேண்டுமா என்று கேட்க விரும்புகிறேன். இதிலே சர்க்காருக்கு எவ்விதப் பொறுப்பும் இல்லையா ?

"கிவ் அண்டு டேக் பாலிசி" அதாவது "கொடு, பெறு" என்ற முறையில் தான் இன்று இந்த அரசாங்கம் நடைபெற்றுக்கொண்டு வருகிறது. பஸ் முதலாளிகளைப் பார்த்து, "நீங்கள் தேர்தலுக்கு நிதி கொடுங்கள் ; நாங்கள் வாங்கிக் கொள்ளுகிறோம்," என்று இவ்விஷயத்தைப் பச்சையாக ஒப்புக்கொண்டுதான் இந்த சர்க்கார் இயங்கிக்கொண்டு வருகிறது. பஸ் முதலாளிகளுக்கு அனுமதியைக் கொடுத்து, அவர்களிடம் தேர்தல் நிதி வாங்குவது என்று சொன்னால், ஜனநாயக ரீதியிலே இந்த சர்க்கார் நடக்கிறது என்று சொல்ல முடியுமா ? இதுதான் ஜனநாயகமா? எனக்கு முன் ஒரு பஸ் முதலாளி, "டி.வி.எஸ்.நன்றாக நடக்கவில்லையா?" என்று சொன்னார்கள். அதைப்பற்றி இங்கே பேசிய ஒரு கம்யூனிஸ்டு அங்கத்தினர், குற்றம் குறைகள் இருப்பதாகச் சொன்னார். அவர் அப்படிச் சொன்னதைப் பற்றிக்கூட கவலையில்லை. 45 பஸ்களை வைத்துக் கொண்டிருக்கிற ஒரு பஸ் முதலாளியே, "டி.வி.எஸ். நன்றாக நடத்தப் படுகிறதே", என்று சொன்னால், இவர் பஸ்கள் சரியாக ஓடவில்லையா ? உள்ளபடியே அவர், வட ஆற்காடு மாவட்டமாகிய என் மாவட்டத்தை மிகவும் தாழ்த்திப் பேசிவிட்டார்கள் என்றே கருதுகிறேன். நான் கேட்கிறேன், டி.வி.எஸ்.-ஐ, ஏன் இப்படி வானளாவப் புகழ்ந்து கொண்டிருப்பானேன் ? சர்க்காருடைய சலுகைகள் இவர்களுக்கு மட்டும் அளிக்கப்படவில்லையா ? கொஞ்சம் எண்ணிப் பார்க்கவேண்டும். மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டத்திலே யோசனைகள் கூறப்பட்டு, சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்டு இருக்கிற பெரும்பாலான ரூட்டுகள் இருக்கின்றன. திருச்சியிலே ஜெயங்கொண்டான்போன்ற இடங்கள் இருக்கின்றன. அங்கெல்லாம் ரூட்டுகள் எல்லாம் யாருக்குக் கொடுக்கப்படுகின்றன ? புதியதாக விண்ணப்பித்துக் கொள்பவர்களுக்கா ? கிடையவே கிடையாது. இதுபற்றி டி.வி.எஸ். முதலாளி சர்க்காருக்கு மனுக் கொடுத்ததால், அத்தனை ரூட்டுகளையும் நிறுத்தி வைத்திருக்கிறார்கள். ஏன் இப்படி நிறுத்திவைக்க வேண்டும் ? மாவட்ட நீதிமன்றம், அல்லது முன்சீப் கோர்ட் தீர்ப்பு ரத்து செய்யப்படுகிறது. சாதாரணமாக "ஸ்டே" கொடுக்கும் அதிகாரம் அங்குள்ள மேலதிகாரிகளுக்கு இருக்கவேண்டும். அதுதான் நீதி, நியாயம். இந்த உத்திரவுகளை அங்குள்ள நீதிமன்றங்கள்தான் பரிசீலனை செய்து உத்திரவு போடக் கூடியதாக இருக்கவேண்டும். ஆனால் அப்படியில்லாமல், இவர்களாக "ஸ்டே" போடக்கூடிய முறையை நான் இந்தச் சமயத்தில் வன்மையாகக் கண்டிக்கின்றேன்

அது மட்டுமல்ல ; மற்றொரு முக்கியமான விஷயத்தை குறிப்பிட விரும்புகிறேன். சர்க்காரே தொழில் கோர்ட்டு வைத்துவிட்டு, தொழிலாளிக்கும் முதலாளிக்கும் உள்ள சச்சரவுக்கு நியாயமான முறையிலே உத்திரவு போட்டு, "இவ்வளவு உதவித்தொகை கொடுக்க வேண்டும், இவ்வளவு போனஸ் தொகை கொடுக்கவேண்டும்" என்று தீர்ப்பளித்தும், அதை ஏற்க மறுக்கின்ற பஸ் முதலாளிகளுக்கு மீண்டும் புது பஸ் பெர்மிட்டுகளைக் கொடுக்கக் கூடாது. அப்படிக் கொடுப்பது சர்க்காருக்கே பெருத்த அவமானமாகும். ஆனால் அப்படிப்பட்டவர்களுக்குத் தான் இந்தச் சர்க்கார் பஸ் பர்மிட்டுகளை மீண்டும் வழங்குகிறது. சர்க்காரால் ஏற்படுத்தப்பட்ட தொழில் நீதிமன்றத்தை அவமானப்படுத்தப்படுகின்ற விதத்திலே, அதனால் அளிக்கப்படுகின்ற தீர்ப்பை ஏற்க மறுக்கும் முதலாளிக்கு மீண்டும் பஸ் பர்மிட் கொடுப்பது நியாயமா ? ஏன் இப்படிச் செய்ய வேண்டும் ? இந்தமாதிரியாக அநியாயம் நடப்பதை சர்க்கார் களைந்தெறிய வேண்டாமா ?

பஸ்களைத் தேசிய மயமாக்க வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகமும், மற்றும் எதிர்க் கட்சியினரும் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். ஆனால் அப்படிச் செய்கிறார்களா ? ஏதோ ஒன்றிரண்டு, "ரூட்"டுகளை மட்டும் எடுத்துக்கொண்டு, மற்றபடி எல்லா வகைகளிலும் முதலாளி

[Sri P. U. Shanmugam] [21st March 1961

களுக்குத்தான் சாதகமாக இருந்து கொண்டு வருகிறார்கள். ஏன் இப்படி இருக்க வேண்டுமென்பது தான் கேள்வி ? இப்படி இல்லாவிட்டால், தேர்தலுக்கு பணம் வேண்டுமே ? அதற்கு எங்கே போவது ? இதுதானா ஜனநாயகம் ? இந்த நேரத்திலே " ஏன் பஸ்களை தேசிய மயமாக்கவில்லை ", என்று சர்க்காருக்கு நான் சவால் விடுவதற்குத் தயாராக இல்லை. அப்படி சவால் விட்டும் பிரயோசனமில்லை. தங்கள் மூலமாக கேட்டுக் கொள்கிறேன். அதேமாதிரி இன்னொன்றும் கேட்க விரும்புகிறேன். சர்க்காருக்குத் தைரியம் இருந்தால் அதைச் செய்யட்டும். இந்தச் சர்க்காரிலே நிலத்திற்கு எப்படி உச்சவரம்பு வைத்திருக்கிறார்களோ, அதைப்போல் இந்த பஸ்களுக்கும் ஒரு உச்சவரம்பு வைக்கட்டுமே பார்க்கலாம் ? " ஒருவருக்கு 3 பஸ்களுக்கு மேல் வைத்துக்கொள்ளக் கூடாது ", என்று தைரியமிருந்தால் செய்யட்டுமே? இதை மட்டும் இந்த சர்க்கார் விரும்பவில்லை. ஏன் இதை மட்டும் செய்யக்கூடாது ?

(ஒரு அங்கத்தினரிடமிருந்து, "ஏன் சினிமாவையும் தேசிய மயமாக்கக் கூடாது " என்று குரல் கேட்டது.)

சினிமாவைத் தாராளமாக தேசீய மயமாக்குங்களேன். நான் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. " அண்ணா ஸ்டூடியோ " என்றிருக்கிறதா ? அல்லது, " கருணாநிதி ஸ்டுடியோ " என்றிருக்கிறதா ? சினிமாவைத் தாராளமாக தேசிய மயமாக்குங்கள். நாளை, திராவிட முன்னேற்றக் கழகமோ எதிர்ப்பு செய்யமாட்டோம். அதற்குப் பதிலாக வரவேற்கிறோம். அதேபோல் பஸ்களுக்கும் உச்ச வரம்பு கொண்டு வாருங்கள். இந்த விஷயங்களிலே சர்க்காருக்குத் துணிவு இருந்தால், திராணி இருந்தால், தைரியம் இருந்தால் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

## VI.—STATEMENT BY THE HON. THE MINISTER FOR REVENUE *RE* INAGURATION OF THE SCHEME TO ERADICATE SMALL-POX IN THE CITY AND CHINGLEPUT DISTRICT.

**THE HON. SRI M. A. MANICKAVELU :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, தங்கள் அனுமதியின் பேரில் ஒரு விண்ணப்பம் செய்ய விரும்புகிறேன். இந்த வைசூரியை ஒழிப்பதற்கு இப்போது ஒரு பெரிய திட்டமிருக்கிறது. அதற்காக செங்கல்பட்டு ஜில்லாவிலே பைலட் ஸ்கீம் போட்டு ஏற்கெனவே 5 லட்சம் மக்களுக்கு அம்மை குத்தியாகி விட்டது. இப்போது சென்னையில் பெரிய அளவிலே இத்திட்டத்தை அமுலுக்கு கொண்டு வருவதற்காக, 150 ஹெல்த் இன்ஸ்பெக்டர்கள் தீவிர அம்மை குத்தும் திட்டத்தின் கீழ் இன்றைக்கு இங்கே வந்து ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. யார் யார் இந்த சபையில் அம்மை குத்திக்கொள்ள விருப்பமோ அவர்கள் லைஞ்ரிக்குச் சென்று அங்கே குத்திக்கொள்ளலாம். இப்போது 2, 3 அமைச்சர்கள்கூட அம்மை குத்திக் கொண்டார்கள் என்பதை நான் இங்கு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

## V.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1961-62—*cont.*

### DEMAND V—MOTOR VEHICLES ACT ADMINISTRATION—*cont.*

**SRI W. P. A. R. CHANDRASEKHARAN :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, போக்குவரத்து அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் கோரிக்கையை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன். அதாவது பஸ்களில் சீட்டிங் காபாசிடி மொத்தம் 40 சத வீதம் 56-ஆம் வருஷத்தில் இருந்ததைவிட கூடியிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது வரவேற்கத் தகுந்த விஷயம். ஆனால் இதில் " Standing accommodation in city and town buses " சேர்ந்திருக்



21st March 1961] [Sri W. P. A. R. Chandrasekharan]

கிறதா என்ற விஷயம் தெளிவாக தெரியவில்லை. இது ஏன் என்று தெரியவில்லை. ஸ்டாண்டிங் அக்காமடேஷன் இவ்வளவு தூரம் முன்னேறி வரும்பொழுது, (standing accommodation)-யும் சிட்டிங் அகாமடேஷனாக மாற்றுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென்று விண்ணப்பித்துக் கொள்கிறேன்.

இதைத்தவிர, இங்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் அறிக்கையில் " Organisasation of Transport Department " என்று இருப்பதோடு, " அட்வைஸரி பாடீஸ் " என்று இருப்பதில், டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சில் நிறைவேற்றும் தீர்மானங்கள் இங்கேயே யோசனையாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறது. ஆனால் டிஸ்டிரிக்ட் டிரான்ஸ்போர்ட் அதாரிடீஸாக இருக்கும் கலெக்டர் அவர்கள், டிஸ்டிரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சிலுக்கு தலைமை வகிப்பதால், இந்த மாதிரியான பஸ் ரூட்டுகள் சம்பந்தமாகவோ அல்லது பஸ் டிரான்ஸ்போர்ட் (stand) சம்பந்தமாகவோ வரும் தீர்மானங்களை அவர் அனுமதித்து விட்டால், அது பழையபடி டிரான்ஸ்போர்ட் அதாரிடி என்ற நியதி பொறுப்புக்கு தடங்கலாக வருகின்றது என்ற கூச்சம் காரணமாகவோ என்னவோ அவர் அந்த மாதிரி தீர்மானங்களை அனுமதிப்பதில்லை. மதுரை ஜில்லாவில் டிஸ்டிரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டத்தில் இந்த மாதிரி அனுமதிக்காமல் இருக்கக்கூடிய நிலைமைதான் இருக்கிறது. இம்மாதிரி இருக்கும்போது நான் ஒன்று கூறுவேன். இப்போது ஸ்டேட் அட்வைஸர் போர்டு இருப்பது மாதிரி, ஜில்லா அளவில் அட்வைசரி போர்டு அமைத்து, அதற்கு ஸ்டாசுடரி பவர்கள் கொடுக்க வேண்டும். அல்லது சும்மா அட்வைசரி போர்டாக இருந்தால், அந்த அட்வைஸ்களை நிறைவேற்றி, தீர்மானங்களாகி நிறைவேற்றப்பட்டால் இப்போது குறிப்பிட்ட எல்லாவிதமான குறைபாடுகளையும் நீக்குவதற்கு ஏதுவாக இருக்கும்.

அது மாத்திரமல்ல. ரேட்டுகளும், மற்றபடி சாமான் வைப்பது முதலிய வசதிகளைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறது. அதற்கு ஒரு " கோடிபிகேஷன் " ஏற்படுத்த அனுமதிக்கப்பட வேண்டும், எவ்வளவு ரேட்டு, என்னென்ன சாமான் எவ்வளவு எடையில் அனுமதிக்கப்பட வேண்டுமென்ற பூரா விவரங்களையும் ஆராய்ந்து, அந்த மாதிரியான ஒரு திட்டத்தை அமுலுக்கு கொண்டு வர வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அது தவிர, இந்த ரூட்ஸ் சம்பந்தமாக பார்ப்பதில் குறுகிய ரூட்கள் 15 மைல் என்று இருப்பதை கொஞ்சம் விஸ்தரித்து 25 மைல்களாக்கி, புது " எண்ட்ரண்ட்ஸ் "-க்கு முக்கியத்துவம் அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். கனம் மந்திரி அவர்கள் சமர்ப்பித்த அறிக்கையில் எல்லா விவரங்களும் கொடுக்கப்பட்டிருந்தாலும், " நியூ எண்ட்ரண்ட்ஸ் " எத்தனை பேர்கள் இதில் வந்திருக்கிறார்கள் என்பதற்கும் விவரம் கொடுக்கப்பட்டிருந்தால் நல்ல ஒரு விளக்கமாக அமைந்திருக்கும். " நியூ எண்ட்ரண்ட்ஸ் " எத்தனை பேர்கள் என்பதை அடுத்த அறிக்கையிலாவது குறிப்பிடவேண்டும். அல்லது அமைச்சர் அவர்கள் பதிலிலாவது தெரிவிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அது தவிர, பஸ் ஸ்டாண்டுகள் சம்பந்தமாக எல்லோரும் கூறினார்கள். இப்பொழுது கிராமாந்திரப் பகுதிகளில் மற்ற காரியங்களில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றம் அத்தனையும் தெரிந்து, ஆங்காங்கு பஸ் ஸ்டாண்டுகளுக்கு மிகவும் தேவை அதிகமாக ஏற்பட்டிருக்கிறது. இந்த பஸ் ஸ்டாண்டுகள் இவ்வளவு தூர அளவுக்கு கட்டப்படவேண்டும் என்ற விதியை விலக்கி, அவசரத் தேவை இருந்தால் அந்த ஊர்களுக்கு பஸ் ஸ்டாண்டுகள் அமைக்கும்படியும், அம்மாதிரி அமைக்கப்படும் பஸ் ஸ்டாண்டுகளுக்கு வேண்டிய சௌகரியங்கள் செய்வதற்கும், பஸ் ஸ்டாண்டுகளில் கட்டணங்கள் வசூலிப்பதற்கும் பஞ்சாயத்துகளுக்கோ அல்லது பெரிய முனிசிபாலிடிகளுக்கோ அதிகாரம் பூரணமாக கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அது தவிர, எல்லோரும் குறிப்பிட்டார்கள் லாரி டிரான்ஸ்போர்ட்டைப் பற்றி. இரவு நேரங்களில் அவர்கள் லாரிகளை ஓட்டிக்கொண்டு போகிறார்கள் பெரிய ரோடுகளில், அவைகளை இரவு நேரத்தில் நிறுத்திவிட வேண்டும் விபத்துகள் ஏற்படாமல் தவிர்ப்பதற்காக என்றும் கூறப்பட்டது. அம்மாதிரி நிறுத்தி பரீட்சார்த்தமாக பார்த்து, அது நல்ல முறையில் நடைபெறவில்லை என்று தீர்மானத்திற்கு வந்து, பழையபடி லாரி போக்குவரத்து இரவு நேரங்களில் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இதை இன்னொரு மாதிரியாக சமாளிக்கலாம் என்று நான் கருதுகிறேன். மோட்டார் சைகிள்கள் கொடுக்கப்பட்ட "ஆக்ஸிலியரி ஸ்பெஷல் போலீஸ் போர்ஸ்" ஏற்படுத்தி அவர்களை 30 மைலுக்கு ஒருவராக நிறுத்தி ராத்திரியில் குறிப்பிட்ட நேரத்தில், மாலை 4 மணியிலிருந்து காலை 10 மணி வரையில், அந்த குறிப்பிட்ட அளவு நேரத்தில் போகக் கூடிய லாரிகளை கண்காணிக்கச் செய்ய வேண்டும். அதாவது, வேகம், நிறை இன்னும் "ரோடு சென்ஸ்" என்று கூறப்படும், அதாவது இடது பக்கத்தில் போகிறார்களா என்பதையும் மொத்தமாக கண்காணித்து உடனடியாக நடவடிக்கை எடுத்தால் ரோடு விபத்துக்கள் குறையும். இன்னொரு கருத்தும் கூறப்பட்டது. லாரிகள் ராத்திரியில் போவதால் அவைகளில் அனுமதிக்கப்படாத சாமான்களை கொண்டு போகிறார்கள் என்று சொல்லப்பட்டது. அதற்கு இது நல்ல பாதுகாப்பு முறையாக அமையும். முதலாவதாக இந்த ஏற்பாட்டை நாஷனல் ஹைவேஸ்-ல் பரீட்சார்த்தமாக செய்து பார்த்து, அது எவ்வாறு இயங்குகிறது என்று கண்காணித்து அதை பிறகு எல்லா முக்கியப்பாதைகளிலும் நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சாதாரணமாக பார்த்தால், ரோடுகளில் பெரிய அகலமாக இருக்கும் இடங்களைத் தவிர, மற்ற குறுகிய இடங்களில் யாரும் நல்ல தளத்தை உபயோகப்படுத்தவேண்டும் என்ற ஆர்வத்தால் மற்றவர்களுக்கு ரோடினுடைய சரியான பங்கைக் கொடுக்காமல் போய்க்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அது மாதிரி இடங்களில் "சென்டிரல் இண்டிகேஷன் லைன்ஸ்" நாஷனல் ஹைவேஸ்-ல் ஏற்படுத்தினால் அவர்களுடைய மனப்பான்மை இண்டிகேஷன் லைனுக்கு உள்பட்டே போவதற்கு ஏதுவாக அமையும். அது தவிர, லாரிகள், பஸ்கள் ஓரமாக நின்று பிரயாணிகளையோ, சாமான்களையோ ஏற்றுவதற்கும், மற்ற காரியங்கள் செய்வதற்கும் "இண்டிகேஷன் லைன்ஸ்" நேஷனல் ஹைவேஸிலாவது ஏற்படுத்தி அதைப் பரீட்சார்த்தமாக நடத்திப் பார்த்து, பிறகு நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இதெல்லாம் தவிர, பொதுவாக "நாஷனலைஸேஷன்" பற்றி ரொம்பவும் ஆர்வத்துடன் எல்லோரும் பேசினார்கள். என்னைப் பொறுத்தமட்டிலும், நான் என்ன கூறிக்கொள்ளுகிறேன் என்றால், நமது சென்னை ஸிடி பஸ் டிரான்ஸ்போர்ட்டை சர்க்கார் எடுத்துக் கொண்டு விட்டார்கள். அது தவிர எக்ஸ்பிரஸ் பஸ்கள் 17 ரூட்கள் சர்க்கார் வசம் இருக்கின்றன. இன்னொரு 17 ரூட்கள் தனியார் துறையிலே இருக்கின்றன. "எக்ஸ்-சர்விஸ்மென்" கூட்டுறவு சங்கங்கள் மூலமாக பஸ் விடுகிறார்கள். தனிப்பட்ட முதலாளிகளும் பஸ் விடுகிறார்கள். அத்தனையிலும் நடைமுறையில் இருக்கும் ஏற்றத்தாழ்வுகளை அனுசரித்து, தரத்தை அனுசரித்து, எது நல்ல முறையில் இருக்கிறது என்று பார்த்து, பஸ் நடத்துகிறவர்கள் மீது உள்ள கோபம் அல்லது பிரியத்தை விட்டு, பாரபட்சம் அற்ற முறையில், அதனால் ஏற்படும் நன்மையை உத்தேசித்து அந்தந்தப் பகுதியில் அந்தந்த "ஸெக்டாரை" அனுமதிக்க வேண்டும் என்று நான் இங்கே தெரிவித்துக் கொள்ளுகிறேன். அம்மாதிரி செய்தால் எல்லா குறைபாடுகளும் நீங்கிவிடும். யார், யார், தனிப்பட்டவர்களா அல்லது எந்தப் பகுதி என்பதல்ல; நமக்கு வேண்டியது நல்ல பிரயாண வசதி, நல்ல துரிதமான போக்குவரத்து வசதி. அதை யார் கொடுத்தாலும் சரி, சரியாக வரி முதலியவைகளையெல்லாம் கட்டி யார் மக்களுக்கு நன்மை பயக்கக் கூடிய வகையில் சரியாக நடத்துகிறார்களோ, அவர்களை அனுமதிக்க வேண்டியது தான். அம்மாதிரி செய்யவேண்டுமென்று கூறிக்கொள்ளுகிறேன்.





பேபி டாக்ஸியில் 3 பிரயாணிகள் ஏறலாம் என்றிருப்பதை, 4 பேர்களாக்கி. அவர்கள் புதியதாக ரேட்டு அதிகமாக கேட்பதாகத் தெரிகிறது. அப்படி பிரயாணிகளின் எண்ணிக்கையை கூட்டித்தான் ரேட்டைக் கூட்ட வேண்டும். அப்படிக் கூட்டாமல் ரேட்டை மட்டும் கூட்டிவிட்டால், மக்கள் பாதிக்கப்படுவார்கள். ஆகவே, 4 பேர்களாக்கி அவர்கள் கேட்கும் ரேட்டு சரியாக இருந்தால் அதையும் கூட்டிக் கொடுத்து வேண்டியதைச் செய்ய வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, என்னுடையை உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

* SRI P. M. MUNUSAMI GOUNDER: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்று நமது அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த மான்யத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். முக்கியமாக இந்த மான்யமானது இரண்டு அம்சங்களைப் பெற்றிருக்கிறது. ஒன்று பொதுமக்களுக்கு சேவை செய்யக்கூடியது என்பது. இரண்டாவது, அதிகச் செலவின்றி சர்க்காருக்கு அதிகமாக வருமானம் வரக்கூடியது என்பது. அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கக் கூடிய புள்ளி விவரங்களினால் நாம் இதை அறிகிறோம். அதிலும் இந்த ஆண்டு அமைச்சர் அவர்கள் புள்ளிவிவரங்களை மிக்க விவரமாக கொடுத்திருக்கிறார்கள். மோடார் டிரான்ஸ்போர்ட்டு சம்பந்தமான விஷயங்கள் பல அங்கத்தினர்களுக்கு தெரியாமல் இருந்தது. வெளியிலே இருப்பவர்களுக்குக் கூட தெரியவில்லை. ஏதோ அமைச்சர் அவர்கள் ஒருவருக்கு பெர்மிட் கொடுக்க வேண்டுமென்று சொல்லி விட்டால், உடனே அவர்கள் கொடுத்துவிடுகிறார்கள் என்பது ஒரு தவறான கருத்து என்று தெரிந்தும்கூட சில அங்கத்தினர்கள் அம்மாதிரி சொல்லுவதைப் பார்க்கும் பொழுது இது மிக விசனிக்கக்கூடிய விஷயம். எந்த விதமான அடிப்படையில், எந்த விதமான "ப்ரின்ஸிபில்ஸ்" பேரில் பெர்மிட் வழங்கப்பட வேண்டுமென்று சட்டம் இருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் ஆர். டி. ஏ. பெர்மிட் வழங்க வேண்டுமே தவிர, மற்றபடி உடனடியாக அமைச்சர் கூப்பிட்டுச் சொல்லிவிட்டால் உடனே கொடுக்கவே முடியாது. பெர்மிட் கொடுப்பதற்கு "மார்க்ஸ் ஸிஸ்டம்" வைத்திருக்கிறார்கள். புதியதாக பெர்மிட்கள் எந்த அடிப்படையில் கொடுக்கவேண்டும் என்பதற்கு மார்க்குகள் எந்த அளவுக்கு கொடுக்க வேண்டுமென்பது நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. வொர்க்ஷாப் இருக்கவேண்டும், லிமிடெட் கம்பெனியாக இருக்க வேண்டும், அனுபவம் இருக்க வேண்டும். இம்மாதிரி ஒவ்வொரு தகுதிக்கும் மார்க்குகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஏதோ அமைச்சருக்குத் தெரிந்தவர்களுக்கு பெர்மிட் கொடுத்துவிடுகிறார்கள் காங்கிரஸ் சம்பந்தப்பட்டவர்களுக்கு பெர்மிட் கொடுத்துவிடுகிறார்கள் என்றெல்லாம் சர்க்காரையும், உத்தியோகஸ்தர்களையும் குற்றம் சாட்டும் முறையில் பேசுவதென்பது மிகவும் கண்டிக்கத்தக்கது. எல்லாவற்றையும் அறிந்து பேசவேண்டும். எதையும் அறியாமல் பேசக்கூடாது என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

முக்கியமாக டிரான்ஸ்போர்ட்டு சம்பந்தமாக இரண்டுவிதமான ஆபீஸ்கள், ஒன்று சென்னையில் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டு ஆபீஸ், இரண்டு ஜில்லாவில் "ஆர்.டி.ஓ." ஆபீஸ் ஆகிய ஆபீஸ்கள் இயங்குகின்றன. இது சம்பந்தமாக எனக்கு முன்னால் பேசிய காங்கிரஸ் அங்கத்தினர் கிருஷ்ணசுவாமி ரெட்டியார் அவர்கள் மிக அழகாகவும் தெளிவாகவும் அவை எந்த முறையில் நடக்கின்றன என்பதை மிக நன்றாக எடுத்துச் சொன்னார்கள். அதிலிருக்கும் கஷ்டங்களைப்பற்றி, நானும் சில கருத்துக்கள் சொல்ல ஆசைப்படுகிறேன். ஏனென்றால், நாம் சரியான வகையில் செயல்படும் பொழுது இது மாதிரியான நிகழ்ச்சிகள் மேலாக உள்ள இலாகாவிலும், மேல் மன்றங்களிலும் நடக்கின்றன என்பதைக் கூட எடுத்துக் காட்டினார். கீழே "ஆர்.டி.ஏ" ஒருவருக்குப் பெர்மிட் கொடுத்துவிட்டால், "எஸ்.டி.ஏ."வினால் வேறு ஒருவருக்கு பெர்மிட் கொடுக்கப்படுகிறது. பிறகு உயர் நீதி மன்றத்திற்குப் போனால் இந்த இரண்டு பேர்களும், அல்லது 3 பேர்களும் ஓட்டலாம் என்ற முறையை கையாள்வதைப் பார்த்தால், இது மிக்க பரிதாபப்படக் கூடிய விஷயமாகும். இந்த ஒரு அடிப்படையில் உயர்நீதி மன்றங்களிலே இந்த மாதிரிச் செய்கிறார்கள். ஆகவே இதைப் பரிசீலனை

[Sri P. M. Munusami Gounder] [21st March 1961

செய்து அதற்குத் தகுந்த வழி செய்ய வேண்டும். இதை நீடிக்க விட்டால் நல்ல பெயருடன் விளங்கிக் கொண்டிருக்கும் நம்முடைய சர்க்காருக்கு நல்லதல்ல என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கெட்ட வழியிலே இழுத்து எல்லோரும் ஹைக்கோர்ட்டுக்குப் போகவேண்டும் என்ற எண்ணத்தை வளரவிடக்கூடாது. ஒரு கால வரையறையை நிர்ணயித்தால் நன்றாக இருக்கும். ஆர். டி.ஏ. போர்ட் ஆர்டருக்கு மேல் ஸ்டேட் அப்லேட் டிரிப்யூனலுக்கு அப்பீல் செய்யலாம். அதற்கு மேல் அப்பீல் இடையாது என்று நிர்ணயித்தால் நன்றாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

எஸ்.டி.ஏ. ஆபீசிலும், ஆர்.டி.ஏ. ஆபிசிலும் தாமதங்கள் ஏற்படுகின்றன என்று பல அங்கத்தினர்கள் சொன்னார்கள். உத்தியோகஸ்தர்களைப் பற்றி நான் குறை கூறவில்லை. அவர்களுக்கு இருக்கக் கூடிய வேலைகளைப் பார்க்கும் பொழுது, அதிகமான அளவுக்கு அங்கே ஸ்டாப் இருந்தால் நான் நம்முடைய வேலைகளும் சௌகரியமாக நடைபெறுமென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அவர்களுக்கு வேலைகளை அதிகமாகக் கொடுத்துவிட்டு, நாம் சொல்லக் கூடிய காரியங்கள் உடனடியாக நடைபெறவில்லை என்று சொன்னால், அது அவர்கள் பேரில் சொல்லக் கூடிய குற்றம் அல்ல. எஸ்.டி.ஏ ஆபீசில் அதிகமான அளவுக்கு உத்தியோகஸ்தர்களை நியமிக்க வேண்டும். தலைமை ஸ்தானத்தில் வேலை பார்க்கும் கமிஷனர் போர்டு மெம்பராக இருக்கிறார். போர்டு மெம்பருக்கே அதிகமான வேலை இருக்கிறது. டிரான்ஸ்போர்ட் இலாகாவையும் அவரிடம் கொடுத்தால், மேற்கொண்டு அவருக்கு ஓவர்பர்டன் என்று சொல்லலாம். அதைவிட டெபுடி கமிஷனராக இருப்பவரை டிரான்ஸ்போர்ட் கமிஷனர் என்று அழைத்து, அவரிடம் இதை ஒப்படைத்தால் நன்றாக இருக்கும். செகரடரி என்பவரை டெபுடி கமிஷனராக ஏற்பாடு செய்தால் இந்த ஆபீசில் வேலைகள் துரிதமாக நடைபெறும். நாலு இடங்களிலே பைல்கள் தங்கினால் வேலைகள் நின்றுவிடுகின்றன. இந்த டிரான்ஸ்போர்ட் டிபார்ட்மெண்ட் மக்களுக்கு சேவை செய்யக்கூடியது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அப்படியிருக்கும்பொழுது, அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி, அதிகமான ஸ்டாபை நியமித்து, ஜில்லாவிலும் ஆர்.டி.ஏ. ஆபீசில் அதிகமான உத்தியோகஸ்வதர்களை நியமித்து, வேலைகளை உடனடியாக நடத்துவதற்கு வேண்டிய உத்திரவுகளைப் பிறப்பிக்க வேண்டுமென்றுகேட்டுக்கொள்கிறேன்.

பஸ்களுக்காக டயர்கள் வழங்கும் விஷயத்தைப் பற்றி அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். பெரிய டயர்களுக்கு டிமாண்ட் இருக்கிறது. கஷ்டம் இருக்கிறது. அதை மறுக்க முடியாது. இதிலே ஒரு விஷயத்தை நான் குறிப்பிட விரும்புகிறேன். ஐந்து பஸ்களுக்கு மேல் வைத்திருந்தால் சர்க்காரிலே அவரை ப்ளீட் பஸ் ஆப்பரேட்டர் என்று அழைக்கிறார்கள். ஆனால் இந்த டயர் வழங்கும் கம்பெனிகளிலே, அதாவது குட் இயர், டன்லப், இந்தியா சூப்பர் இவைகளிலே 12 பஸ்களுக்கு மேற்பட்டு வைத்திருப்பவர்களைத் தான் ப்ளீட் ஆப்ரேட்டர் என்று அழைக்கப்படுகிறார்கள். சர்க்காரிலே ப்ளீட் ஆப்பரேட்டர் என்று சொல்லுவது சரியா அல்லது இந்த கம்பெனிகளிலே ப்ளீட் ஆப்பரேட்டர் என்று சொல்லுவது சரியா என்று தெரியவில்லை. பன்னிரண்டு பஸ்களுக்கு அதிகமாக வைத்திருப்பவர்களுக்கு இந்தக் கம்பெனிகளே நேரடியாக டயர்களை வழங்குகிறார்கள். பன்னிரண்டு பஸ்களுக்குக் கீழாக வைத்திருப்பவர்களுக்கு சர்க்கார் முறைப்படி ப்ளீட் பஸ் ஆப்பரேட்டர் என்று அழைக்கப்பட்டாலும்கூட, நேரடியாக டயர்கள் வழங்குவது கிடையாது. ஆகவே மற்ற கடைகளுக்குச் சென்று வாங்கவேண்டியிருக்கிறது. சிண்டிகேட் வைத்திருக்கிறோம், சிண்டிகேட் மூலமாக டயர்கள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதிலே இருக்கிற கஷ்டம் என்னவென்றால், லாரிகளையும், பஸ்களையும் ரெஜிஸ்டர் செய்து, அவர்கள் டயர் தேய்ந்திருக்கிறதா இல்லையா என்று பார்க்க வேண்டும். விலை கொடுப்பது நாம், பணம் கொடுத்து டயர் வாங்குவது நாம். அப்படியிருக்கும்பொழுது, அவர்களிடத்திலே போய் ரெஜிஸ்டர் செய்து கொண்டு, டயர்களை காண்பிக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். இந்த மாதிரி ஒரு சிண்டிகேட்டிற்குப் பதிலாக



21st March 1961] [Sri P. M. Munusami Gounder]

எத்தனை ஆயிரம் மைல் ஓடியிருக்கிறது. ஒரு வருஷத்திற்கு எத்தனை டயர்கள் செலவாகும் என்று கணக்கிட்டுக் கொடுத்தால் நலமாக இருக்கும். ஆறு மாதத்திற்கு டயர் மாற்றக்கூடிய நிலைமை இருப்பதன் காரணமாக, ஒரு பஸ்ஸுக்கு ஒரு வருஷத்திற்கு 14 டயர்கள் என்று நிர்ணயித்து, 2 பஸ்கள் இருந்தாலும் சரி, 4 பஸ்கள் இருந்தாலும் சரி, நேரடியாக டயர்கள் வழங்கினால், இப்பொழுதுள்ள பிளாக் மார்க்கெட் முறை போய்விடும். சிண்டிகேட்டிலே தவறுகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதிகமாகப் பணம் கொடுப்பவர்களுக்கு டயர் கிடைக்கிறது. நியாயமான முறையில் டயர்கள் கொடுக்கவில்லை என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அவர்கள் புள்ளி விவரங்களை வைத்துக் கொண்டு பேசலாம். நான் அனுபவத்திலிருந்து பேசுகிறேன். இந்த அனுபவசாத்தியமில்லாத முறையை நீடித்தால் பிளாக் மார்க்கெட் முறையை அதிகமான அளவுக்கு ஆதரிப்பது போல் இருக்கும். பன்னிரண்டு பஸ்கள் வைத்திருந்தால் தான் ப்ளீட் பஸ் ஆப்பரேட்டர் என்ற முறையை மாற்றி, சர்க்கார் விதிப்படி 5 பஸ்கள் வைத்திருந்தாலும் ப்ளீட் பஸ் ஆப்பரேட்டர் என்று சொல்லக் கூடிய நிலைமை இருக்கும்பொழுது, 5 பஸ்களும் அதற்கு மேற்பட்டு பஸ் வைத்திருப்பவர்களுக்கும் நேரடியாகக் கொடுக்கலாம் என்று கம்பெனிகளுக்கு உத்தரவு பிறப்பித்து, அவர்களும் கொடுப்பதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

புதிய ரூட்டுகள் ஆரம்பிப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது என்று குறிப்பிட்டார்கள். சட்டப்படி செக்ஷன் 46, 47, 56, 57 பிரகாரம் நோட்டிபிகேஷன்கள் அனுப்ப வேண்டியிருக்கிறது. இதற்கு சுமார் ஆறு மாதம் அல்லது ஒரு வருஷ காலம் ஆகிறது. ஏற்கனவே பஸ்கள் ஓடக்கூடிய இடங்களிலே காலதாமதம் ஏற்பட்டால் பாதகமில்லை. ஆனால், பஸ் ஓடாத இடங்களிலே, இந்த நோட்டிபிகேஷன் இல்லாதபடி, ஆர். டி. ஓ.–வே நேரடியாக சென்று பார்த்து, பரிசீலனை செய்து, அவசியம் என்று தோன்றினால் உடனடியாக பஸ் விடலாம் என்று செய்தால், மக்களுக்கு சேவை செய்யக்கூடிய வகையிலே இருக்கும். இதனால் மற்ற பஸ்காரர்களுக்கு இடைஞ்சல் கிடையாது.

அடுத்தபடியாக, பஸ் பாடி கட்டும் விஷயத்தைப் பற்றிச் சொல்ல வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு பஸ்ஸும் வீல் பேசுக்குத் தகுந்தபடி பாடி கட்டக்கூடிய நிலையில் இருக்கிறது. 165, 200, 215 என்று வித்தியாசமான வீல் பேஸ்கள் இருக்கின்றன. தவிர, 50 ஸீட்டுகள், 60 ஸீட்டுகள், 70 ஸீட்டுகள் என்று கட்டக் கூடிய நிலையிலும் இருக்கிறது. இந்த மாதிரி நிலைமை இல்லாதபடி, இதை ஒரு ஸ்டாண்டர்டாகச் செய்யவேண்டும். அதாவது 125 வீல் பேஸ் இருந்தால் 25 சீட்டுகள், 215 இருந்தால் 50 ஸீட்டுகள் என்ற முறையிலே உத்தியோகஸ்தர்கள் பரிசீலனை செய்து நிர்ணயம் செய்து விட வேண்டும். அப்படிச் செய்தால் எந்தவிதமான தகராறும் இருக்காது. இல்லையென்றால் எம்.வி. இன்ஸ்பெக்டரைப் பார்ப்பதும், ஆர்.டி.ஓ.–வைப் பார்ப்பதும் போன்ற பல இடைஞ்சல்கள் ஏற்படுகின்றன. வேலையைக் குறைப்பதற்கு இது ஒரு வழி என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக கிருஷ்ணகிரி—பங்களூர் ரூட்டைப் பற்றிச் சொல்லவிரும்புகிறேன். அங்கே நெருக்கடி அதிகமாக இருக்கிறது. அமைச்சர் அவர்களும் நேரடியாகப் பார்த்திருக்கிறார்கள். ஹோசூரில் கணக்கில்லாமல் இல்லீகல் வான்கள் ஓடுகின்றன. பத்து 12 வருஷங்கள் ஆக பஸ்கள் விடவில்லை. பங்களூர்—இண்டிரா ஸ்டேட் ரூட் என்று அந்த மாகாணத்து அமைச்சரும், நமது அமைச்சரும் ஆலோசித்து பரிசீலனை செய்து போட வேண்டுமென்று சொல்லப்பட்டு வருகிறது. ஜன சௌகரியத்தை முன்னிட்டு பஸ் போக்குவரத்து வசதியைச் செய்ய வேண்டும். பஸ் போட்டுவிட்டால் இந்த வான்கள் தானாகவே நின்றுவிடும். அமைச்சர் வந்திருக்கும் பொழுது கூட 40 பேர்களைக் கொண்ட ஒரு வானை நிறுத்தி சப் இன்ஸ்பெக்டரிடம் தெரிவிக்கப்பட்டது. இம்மாதிரி அமைச்சரே பார்த்தும் அதிகாரிகள் பார்த்தும், பழைய நிலைமையை நீடித்துக் கொண்டு வருகிறது. நான் சொல்லிய விஷயங்களை பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

(இந்த சமயத்தில் மணி அடிக்கப்பட்டது).

[21st March 1961

12 noon. * SRI V. K. KRISHNAMURTHY : அவைத் தலைவர் அவர்களே, போக்கு வரத்து மானியக் கோரிக்கையை ஆதரித்து வரவேற்கின்றேன். வளரும் சமுதாயத்தில் போக்கு வரத்து இன்றியமையாததென்று இயம்ப வேண்டியதில்லை. மக்கள் போகவும் வரவும், பொருள்கள் போகவும், வரவும் போக்குவரத்து அரண் செய்கிறது. அமைச்சர் மிகவும் தெளிவாக விளக்கம் தந்துள்ளார்.

1960-ல் 160 மைல் ஓடிய பஸ்கள் 1961-ல் 200 மைல் ஓட நீட்டியிருப்பது வரவேற்கத் தகுந்தது : 25 பர்செண்ட் அதிகரித்திருப்பது நலம் பயக்கவே. 1956-ல் 3,792 பஸ்கள். 1961-ல் 4,920 பஸ்கள் வளர்ச்சியின் எடுத்துக்காட்டு. முன்பு பஸ்கள் போகாத இடங்களில் 2·49 புதிய பஸ்கள் ஓடுகின்றன. 1,114 மைல் நீளம் ஓட வகை செய்ததை வரவேற்கத் தகுந்தது. வட ஆற்காடு மாவட்டத்தில் ரயில் போகாத பகுதிகள் நிரம்ப உண்டு.

அண்மையில் ஆந்திரப் பகுதியிலிருந்து தமிழகம் சேர்ந்த பகுதியிலும் புறக்கணிப்பட்டுள்ளது. விண்ணம்பள்ளி பகுதி தமிழ் நாட்டிற்குச் சேருமென்று ஆந்திரர்கள் கைவிட்டார்கள் ; இப்பொழுது வளர்ச்சியின்றி இருக்கிறது ; பாதை யில்லை. பஸ் போக்கு வரத்து இல்லை. காட்பாடியிலிருந்து விண்ணம்பள்ளிக்கு பஸ் ஓட ஏற்பாடு செய்யவும் மாவட்ட அதிகாரிகள் ஆவன செய்தாலும் தனியார் எதிர்ப்பு, தடை இருக்கிறது ; அரசாங்கம் தலையிட்டு உடனே காட்பாடி—விண்ணம்பள்ளி பஸ் ஓட ஏற்பாடு செய்யவேண்டும்.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் பாதை அமைக்க குறைந்த பணம், மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்தில் பாதை அமைக்க குறைந்த பணம் ஒதுக்கியுள்ளார்கள். இதனால் பாதை இருந்த இடத்தில் பஸ்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. ஆனால் பாதை இல்லாத இடத்தில் பஸ் இல்லை. பாதையும் பஸ்ஸும் இணைந்து இயங்க வேண்டும். புதிய பாதைகள் அமைத்து பஸ்கள் அதிகமாக ஓடவிடவேண்டும். நம் நாட்டிற்கு ரயில் பாதை நீடிக்கவில்லை ; புதியதாகவும் அமைக்கவில்லை. குடியாத்தம் முதல் அரக்கோணம் வரையிலும், வேலூர் முதல் திருவண்ணாமலை வரையிலும் ரயில் செல்லுகிறது. என்றாலும், உட்பகுதியில் ரயில் பாதை இல்லை. ஷட்டில் சர்வீஸ் வட ஆற்காடு மாவட்டத்தில் கிராமங்களுக்குப் புகுத்துமாறு கோருகிறேன். வேலூர் தாலுகாவில் அணைக்கட்டு, அப்புக்கல், கீழ் கொத்தூர், ஒடுகத்தூர், இப்பகுதிகளில் பஸ் ஓடவில்லை. பதினைந்து கிராமங்களுக்கு போக்குவரத்து இல்லை. பாதை அமைத்து பஸ் ஓடவிட ஏற்பாடு செய்ய வேண்டும். வேலூர் டவுன் பஸ்ஸை ஓசூர் வரை நீட்ட ஆவன செய்ய வேண்டும்.

விபத்துக்கள் அதிகமாகின்றன. பள்ளி சென்று வீடு திரும்பும் வரையில் குழந்தைகளைப் பற்றிய கவலை யாவருக்கும் உண்டு. கார்—பஸ்—லாரி ஓட்டுகிறவர்கள் அக்கறையின்றி ஓட்டுகிறார்கள். விபத்தோ ஆபத்தோ என்ற அவல நிலைகள் வளர்ந்து வருகின்றன. இதைத் தடுக்க அரசாங்கம் முன் வர வேண்டும். டேகோகிராப் கருவி பஸ், லாரி, கார் இவைகளில் கட்டாயம் வைக்க வேண்டும். வேகம் குறைக்க வேண்டும். இல்லை எனில் ஆபத்துக்கள் ஏற்படும்.

கண்டக்டர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும். சமுதாய மக்களிடைப் பழகுவதால் சிவிலிடி அண்ட் சிவிக் கான்ஷன்ஸ் வளரவேண்டும் ஆசிரியர்களுக்கு அளிக்கும் பயிற்சிபோல் கண்டக்டர்களுக்கும் கட்டாயம் பயிற்சி அளிக்க வேண்டும். மாண்பு, தகவு, சால்பு, பெருந்தகமை இன்ன பிற வளர ஆவன செய்ய வேண்டும். இம்மானிய கோரிக்கையை வரவேற்கிறேன். வணக்கம்.

DEPUTY SPEAKER : The hon. Member Sri R. Srinivasa Iyer will now speak. I wish to inform the hon. Member that the time limit is reduced to seven minutes.



21st March 1961]

* SRI R. SRINIVASA IYER : Sir, as the time goes on the time gets reduced like a tail, perhaps. But let not the development of the motor transport get reduced in that way. From the report of the administration of the Department which was circulated to the hon. Members, we find that lots of achievements have taken place in the development of motor transport. Road transport facilities have to be increased further so as to benefit the villages. We must remember that road transport is integrated with our development programme. In these days when people are travelling from Bombay to London in seven hours in a Boeing plane it is but natural for villagers to expect to travel to markets and nearby towns very quickly. In this respect I would suggest that our Motor Transport Vehicles Taxation Act requires amendment because under section 10 (4) of Act III of 1931, there shall be paid to each district board and to each municipal council a sum equivalent to the average annual income derived by such board or council during the three years ending on the 31st day of March immediately preceding the commencement of the Madras Traffic Control Act, 1938, from fees on licences granted to motor vehicles under section 166 of the Madras Local Board Act, 1920 or section 174-A of the Madras District Municipalities Act, 1920, as the case may be. This is more than 30 years old. If the compensation is based on that calculation, the District Board or the Panchayat Union Council which takes its place cannot maintain the length of roads within their jurisdiction. If sufficient amount is not provided to the Panchayat Union Councils for the maintenance of roads, what we have developed during the past two Five-Year Plans, i.e., 10 years, will be lost and the roads will not be maintained in good condition. Therefore, Sir, this Act has got to be amended. I do not say that the Government are not giving enough grant generally. What I wish to point in this connection is that the Panchayat Act which provides a rate of 40 nP., per head for road development and road maintenance is absolutely negligible. It is not possible to maintain the length of roads with that money. Of course, it may be stated that they can raise some money by way of taxes. There is a limit to this also. We must also consider another aspect of the matter. Consequent on the development of motor traffic for the past 30 years or so, we are getting much more money now from motor traffic. Therefore, it is but proper that the provision of law which requires only a small percentage of the income from the motor traffic to be made available for road development in the village parts, should be suitably amended.

Sir, in this connection, several hon. Members asked for amending this 15-mile rule for new bus routes and new entrants to the field of Bus Transport as 25 miles. Apart from that, we will have to encourage new operators instead of discouraging them. It is better for the public that as many as possible enter this field. If we say more than 15 miles, they may have 15 miles and one furlong or 15 miles and three furlongs. So, it will benefit the existing bus operator and not the new one. To enable the old opera-

tors to get the permit for the new route also the length is particularly made lengthier than 15 miles. This should be avoided and where the length of new road is about 15 miles a few furlongs more or less the new comer should be preferred.

There are several snags in the administration which have to be looked into. I am neither a bus operator nor a goods vehicle operator. Purely as a passenger using the buses, as a villager living in the villages, I say that more amenities should be provided to the bus passengers. As many new routes as possible must be opened. At present, when they go on consulting the Divisional Engineer (Highways) and other officers, it takes six months and in some cases even one year, even for ascertaining whether the road was all right, even when it is metalled with granite gravel and such other things. All these snags must be removed. If they want to satisfy the general public at large, the Government must come forward to open as many bus routes as possible, let alone the delay in granting permits.

Mention was made about two operators running bus service in the same route under orders of the High Court. I do not mind even if a third man comes into the scene and runs another bus service. Because, to that extent, the public will benefit. Let there be not one, but two and even more number of buses connecting the villages. That is what the villagers want at the present moment. We must remember that the agriculturists produce 50 per cent of our national wealth. If their development is to be the criterion, motor transport must be inter-linked with the development of village development.

Sir, I recollect that nobody has so far spoken about the goods vehicle traffic. I am bound to point out in this connection that in the matter of providing employment, the Railways do not provide employment as much as the road traffic does. From the statistics available, I find that the ratio in this respect between motor transport and the railways is 7 : 1. That is, for every 7 people employed in the motor transport, only one is employed in the railways, for the corresponding ten mileage or passenger mileage. In our planning we seek to provide employment for our people. Therefore, the proper thing to be done is to increase motor traffic as much as possible. I want to make it clear that I do not want that motor traffic should compete with railway traffic. Because, there is a complaint that the tax on diesel oil has been increased only for the purpose of favouring the railways as against the motor transport. It is not so. The recent report of the Committee on Road-Railway Co-ordination must be implemented in every respect. I request the Government to give new bus routes, not parallel to railways. If we really want to help the villagers, we must open new routes which should serve as feeder routes to railway stations. They should be interlinked with railways. I mean, they should feed the railway transport. In all areas not connected by railways, we must have new bus routes and the buses run on these routes should take passengers and also goods to



the nearest railway stations. These new routes that I want the Government to open should not run parallel to the railways. For example, we have got buses running from Tiruchirappalli to Coleroon. For every half an hour or so there is a bus. It goes to the railway station, takes the passengers and goes to its destination. It is no doubt convenient. But if we want to avoid competition between the railways and road transport, and at the same time benefit the public, we must develop cross country roads.

As the time at my disposal is very limited, I wish to refer to one other important matter before I close my speech. A large number of Express Bus routes have been opened and more are sought to be opened. But, at the same time, the value of time does not seem to have been considered. Because, all these Express buses are run during the day-time only. When I drew the attention of the Government and the Hon. Minister during the question hour to this aspect of the matter and asked whether these Express buses would be run during the nights also, I was told that the Government were afraid that there would be accidents caused if buses were run during the nights. Government to be afraid of accidents! They must take steps to avoid accidents and try to remove the reasons for such accidents occurring. Anyway, if they do not want to run these buses entirely during the nights, at least they must agree to running these Express Buses in such a way that the journey would be covered half during the day-time and half during the night. Instead of the buses starting from Madras at 6-30 a.m. and reaching Tiruchirappalli or Tanjore in the evening by 4-30 or 5-00 p.m., they could start the buses from Madras, say, by 2 p.m., so that they may reach their destination by 9 p.m. or so. Likewise, from the other side, the buses, may start by 3 p.m. and reach Madras by 10 p.m. Anyway, it takes 8 hours for the journey. Let half of it be covered in the day and half during the night. At present, a passenger is expected to waste the entire day-time, which is very precious to most of them, in the bus-journey. If my suggestion is accepted, I am sure, the passengers will have at least a part of the day to attend to their business.

The Government must also come forward to take effective steps to reduce the number of accidents on the roads, especially, the Trunk roads. In this connection, I must point out that the lorry-drivers are a menace to fast traffic. I do not say that they should not at all be allowed to ply during night time. It is not practicable, I know. Because all our goods have to be transported from one place to another and we can ill-afford to block their transport during that period. But, we must lay down certain rules and regulations which they should be asked to strictly adhere. For example, they should be asked to stop their vehicles when they face a passenger bus or motor car. They should be asked to dim their head lights. Also, they should be asked to limit their speed. Some such regulations will have to be made to reduce the number of accidents. I have travelled from Tanjore to Madras during nights by road. Whenever I used to see a lorry coming in front, I used to ask the driver of my vehicle to stop for a while and proceed further after the lorry had passed us. Otherwise, there will be an

[Sri R. Srinivasa Iyer] [21st March 1961

accident, I know. That is the situation that we are facing today. (The time bell was rung.) I shall finish soon, Sir. Therefore, while opening more Express bus routes, I request the Government to consider the feasibility of running some Express buses during the nights also. This will, to a certain extent, avoid overcrowding in the trains also.

With regard to the seating accommodation in the buses, I have to say a few words. There should be a limit which we should not exceed in regard to this matter. Of course, we have our Leviathan buses with a capacity of even 70. I would suggest that the capacity should be limited to 50. In the case of shorter routes, say of 10 or 15 miles, we must have smaller buses with lesser capacity, say of 24 or 30 just as we had about 10 years ago. While increasing the capacity, I mean the seating capacity, we must also have an eye on whether there was sufficient leg-room in the buses. In many buses, the seating arrangement was very uncomfortable and the passengers experience a lot of inconvenience. Of course, recently a scheme of seating passengers has been evolved by the Commissioner of State Transport in the Government Transport buses. The seats are comfortable. But, the same cannot be said of other buses. In many buses, where the seating capacity of a particular seat was only 3, four people are asked to sit in it. We do not have enough room even to stretch our legs. It is very difficult for 4 persons to sit so close to each other and travel for long distances. If people who are a little bulky get into such buses woe unto them. Moreover, the space provided inside the buses in many cases is not roomy, and we very often experience one knee attacking the other. We cannot be happy over such state of affairs. We must take effective steps to minimise the difficulties experienced by the passengers, especially those who undertake to travel long-distances. I think the calculation of tax on the basis of the number of passengers is the main reason for increasing the seating capacity of buses. I request the Hon. Minister to study the accommodation position in the buses, especially the mofussal buses and take early steps to ease the position so that the passengers, especially the long-distance passengers, may be enabled to travel without difficulty and inconvenience and if possible in comfort.

There is one other important matter on which I wish . . .

DEPUTY SPEAKER : I am sorry, I cannot give more time to the hon. Member. He has already taken more time than what is allotted. He should have adjusted his speech according to the time allotted to him. Hon. Member Sri M. R. Kandaswami Mudaliyar will now speak.

• SRI M. R. KANDASWAMI MUDALIYAR : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சபைமுன் வந்திருக்கும் போக்குவரத்து சாதன மான்யத்தை ஆதரித்து சிற்சில விஷயங்கள் கூற விரும்புகிறேன். மற்ற மாநிலங்களைவிட சென்னை ராஜ்யத்தில் ஓடக் கூடிய டிரான்ஸ்போர்ட் நல்ல



21st March 1961] [Sri M. R. Kandaswami Mudaliyar]

முறையில் நிர்வாகத்திலும், பஸ்களிலும், பொது ஜனங்களுக்கு சௌகரிய மான முறையில் அமைந்து திருப்திகரமான முறையில் ஓடுகிறது என்பதை வெளி மாகாணங்களுக்கு சென்றிருக்கக்கூடிய நண்பர்கள் அனைவரும் ஒப்புக்கொள்வர், யாரும் அதை மறுக்க மாட்டார்கள். ஆக, சிறந்த முறை யில் பணியாற்றக் கூடிய இந்த டிரான்ஸ்போர்ட் மான்யத்தை வரவேற்று நான் சிற்சில விஷயங்கள் கூற விரும்புகிறேன். நமது மாகாணத்தில் ஓடக்கூடிய டிரான்ஸ்போர்ட்டிலும் சிற்சில குறைகள் இருக்கத்தான் செய் கின்றன, அவைகளை நிவர்த்தி செய்யுமாறு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். சில பஸ்களில் மூன்று பேர்கள் உட்காரக்கூடிய ஸீட்ஸ் இருக்கின்றன. அதில் இட நெருக்கடியிருக்கிறது. ஆதலால் அவை களில் மூன்று பேர்கள் உட்காரக் கூடிய முறையில், அதாவது தாராளமாக உட்காரக்கூடிய முறையில் அவைகளை அமைக்குமாறும் கேட்டுக்கொள் கிறேன். இதோடு இப்பொழுது 15 மைல்களுக்குத்தான் புதிய நபர் களுக்கு, புதிய ரூட்கள் கொடுக்கவேண்டுமென்று இருப்பதை 20 மைலகள் என்றாவது ஆக்கவேண்டும். ஏனெனில், 15 மைல்களுக்குள்ளாக போக்கு வரத்தை வைத்துக்கொண்டால் நெடுஞ்சாலைகளில் வெகு தூரத்திற்கு செல்லக் கூடிய பஸ்கள் அங்கு ஓடுவதால் புதிதாக யாருக்கு ரூட்டு கொடுக்கப் பட்டிருக்கிறதோ அல்லது யார் புதிதாக ரூட் எடுத்திருக்கிறாரோ அவருக்கு அது கட்டுப்படியாகாது. ஆகவே, இந்த 15 மைல் என்பதை 20 மைலாக விஸ்தரிக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, இங்கு இப்போது பல நண்பர்கள் பேசுகிறார்கள். நம் முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. சண்முகம் அவர்கள் இனிமேல் பஸ்களுக்கு பெர்மிட் கொடுக்கும் பொறுப்பை, ஜில்லா டெவலப் மெண்ட் கவுன்சில்-க்கு விட்டுக்கொடுக்கின்ற காரணத்தால், இனிமேல் காங்கிரஸ்காரர்களுக்குத் தான் சலுகை எல்லாம் கிடைக்கும், மற்றவர் களுக்கு ஒன்றுமே கிடைக்காது என்ற முறையில் பேசினார்கள். நான் கேட்கிறேன், காங்கிரஸ்காரர்களுக்கு பெர்மிட்டே கொடுக்கக் கூடாது என்று ஏதாவது அரசியல் சட்டம் இருக்கிறதா என்று நான் கேட்கிறேன். காங்கிரஸ் காரனாய் இருந்தால் பஸ் பெர்மிட கொடுக்கக்கூடாது, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களுக்குத்தான் பெர்மிட் கொடுக்கவேண்டும் என்று எந்த அரசியல் நிர்ணயச் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது என்று நான் கேட்கிறேன். இந்த நாட்டில் இன்றைக்கு காங்கிரஸ் கட்சி எல்லாவித உரிமைகளையும் பெறுவதற்கு உரிமையுண்டு. அவர்களுக்குத்தான் முதல் சலுகை கொடுக்கவேண்டும். ஏனென்றால் அவர்கள் தான், இந்த தேசத் தின் நன்மைக்காக, இந்த தேசத்தினுடைய நல்வாழ்வுக்காக அல்லும் பகலும் பாடுபட்டு பல நிர்மாண வேலைகளை செய்தவர்கள். இன்றைக்கு காங்கிரஸ்காரர்கள் இல்லாவிட்டால் இந்த சபையில் திரு. சண்முகம் அவர்கள் கூட வந்து உட்கார்ந்திருக்க முடியாது என்பதை அவர்கள் உணர்ந்து பேச வேண்டும். அப்படி தேசத்திற்கும், தேச நலனுக்கும் வேண்டிய தேசியப் பற்றுடன் வேலை செய்த தேசிய வாதிகளுக்கு, இந்த நாட்டில் எல்லா மக்களுக்கும் கிடைக்கின்ற சலுகை அல்லது உரிமை கிடைக்கக்கூடாது என்று யாராவது சொல்வார்களேயானால் அதைவிட வடிகட்டின முட்டாள்தனம் ஒன்றுமே இருக்க முடியாது.....

DEPUTY SPEAKER: The hon. Member should not use that word. He should withdraw it.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : அவர்கள் முன்னால் சொன்னதும் தவறு என்றால் நான் சொன்னதும் தவறு என்று ஒத்துக் கொள்கிறேன் . . .

THE HON. SRI V. RAMAIAH : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் கந்தசாமி முதலியார் அவர்கள் ஏதோ காங்கிரஸ் காரர்களுக்கு மட்டும் தான் எல்லா சலுகையும் கொடுத்துவிட்டார்கள் அவ்விதம் கொடுத்துவிடக்கூடாது என்று சொல்லப்பட்டதை எதிர்த்து அவ்விதம் கொடுக்கப்பட வேண்டியது நியாயம் என்ற முறையில்

தன்னுடைய பேச்சில் குறிப்பிட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் பெர்மிட் கொடுக்கின்ற முறையில் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்பதைப்பார்த்து பெர்மிட்கள் வழங்குவதில்லை. அதில்கட்சி அடிப்படை கிடையாது. இதற்கு மாறாக இதை யாரோ எந்த அடிப்படையில் கூறினார்கள் என்பதற்காக அதற்கு பதில் சொல்லக்கூடிய முறையில் இன்னாருக்குத்தான் உரிமை இருக்கிறது என்று பேசவேண்டாம். இன்னாருக்கு அல்லது இந்தக் கட்சியைச் சேர்ந்தவருக்குத்தான் சலுகை கொடுக்கவேண்டும் என்று எந்தவிதமான சட்டமும் நம்மிடத்தில் கிடையாது. ஆகவே முக்கியமான இந்த விவாதத்தில், கஷ்டமான வார்த்தைகளை உபயோகப்படுத்தி, இங்கே நடந்து கொண்டிருக்கக்கூடிய நல்ல சர்ச்சையை திருப்பிவிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**SRI M. R. KANDASWAMI MUDALIYAR :** எனக்குக் கொடுக்கப்பட்டிருந்த நேரத்தில் பாதியாகிவிட்டது. ஆகவே இரண்டு மூன்று நிமிடங்கள் அதிகமாக ஒதுக்கிக்கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**DEPUTY SPEAKER :** அப்படி தர முடியாது. கனம் அங்கத்தினர் அவர்கள் விஷயத்தை விட்டுவிட்டு வேறு எதையெல்லாமோ பேசினதால் தான் நேரம் குறைந்து போய்விட்டது. இன்னும் இரண்டு நிமிடங்களில் உங்கள் பேச்சை முடித்துக்கொள்ளவேண்டும்.

**SRI M. R. KANDASWAMI MUDALIYAR :** அமைச்சர் அவர்கள் சொன்னபடி சட்டதிட்டங்களின்படி இந்த பெர்மிட்டுகள் எல்லாம் வழங்கப்படும் என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். ஆனால் சண்முகம் அவர்கள் பேசும்போது எதையோ நினைத்துக்கொண்டு எதையோ பேசுவது போல்—அவலை நினைத்துக்கொண்டு உரலை இடிப்பது போல்—எதையோ நினைத்துக்கொண்டு பேசுகிறார்கள்.

**DEPUTY SPEAKER :** அவர்கள் சொன்னதற்குத்தான் கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். நீங்கள் அதையே இன்னும் திருப்பி பேசிக்கொண்டிருப்பதில் என்ன பிரயோசனம் ?

**SRI M. R. KANDASWAMI MUDALIYAR :** முக்கியமாக இதில் அமைச்சர் அவர்களிடம் ஒரு விண்ணப்பத்தை தெரிவித்துக் கொள்கிறேன். எக்ஸ்-சர்வீஸ்மென்களுக்கு எந்த முறையில் அரசாங்கம் இந்த விஷயத்தில் சலுகை கொடுக்கிறதோ அதே முறையில் அரசியல் தியாகிகளுக்கும் சலுகைகள் அளிக்க வேண்டும். அவர்கள் தங்களுடைய உடல், பொருள், ஆவி அனைத்தையும் தியாகம் செய்து அதன் மூலமாக அவர்களுடைய குடும்பத்தினர்கள் கஷ்டமும் நஷ்டமும் அடைந்திருக்கிறார்கள். ஆகவே எக்ஸ் சர்வீஸ்மென்களுக்கு கொடுக்கக்கூடிய சலுகைகளை இந்த தியாகிகளுக்கும் செய்து கொடுப்பதோடு அவர்களுக்கு இதில் ஏற்படுத்தியிருக்கக்கூடிய செக்டார், மார்க் முதலிய லிஸ்டங்களை எல்லாம் தளர்த்தி தனியாக இவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். அதோடு பிரத்தியேகமாக சில பஸ் ரூட்களை இவர்களுக்கு கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்பேர்ப்பட்ட தியாகிகள் எல்லாம் அன்று கஷ்டப்பட்டதினால் தான் இன்றைக்கு நாம் அமைச்சர்களாகவும் அங்கத்தினர்களாகவும் இங்கே வந்திருக்கிறோம். ஆனால் இன்றைக்கு அப்பேர்ப்பட்ட தியாகிகள் நடுத்தெருவில் பிச்சைக்காரர்களாக திரிகின்ற அவல நிலையை நாம் பார்த்துக்கொண்டு இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன். சிற்சில குறைகள் எங்குமே இருக்கத்தான் செய்கின்றன. கூட்டுறவு முறையில் எல்லா பஸ் போக்குவரத்தையும் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று சொல்லப்பட்டது. இன்றைக்கு அரசாங்கத்தை பலர் வரி கொடுக்காமல் ஏமாற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்றும் சொல்லப் பட்டது. சமூகத்தில் ஒரு சில அயோக்கியர்கள் இருக்கலாம். கதை எழுதி பணம் வாங்கி அதில் பாதியை கணக்கில் வைத்து வரியை நியாயமாக அரசாங்கத்திற்கு கொடுக்காமல் இருப்பதற்காக சிலர் வேறு கணக்குகளை





எழுதி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நபர்கள் இருக்கக் கூடிய காலத்தில் எப்படி அரசாங்கம் நல்ல முறையில் நடக்கும் என்பதை நண்பர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மணியடிக்கப்பட்டது.)

***SRI S. M. ANNAMALAI :** சட்டமன்ற உதவித் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தின் முன்னால் கொண்டுவரப்பட்டிருக்கும் இந்த மானியக் கோரிக்கையின் மீது கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப்பிரேரணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த மானியத்தை பார்க்கின்றபொழுது பலசட்டமன்ற உறுப்பினர்கள் பாராட்டிப் பேசினார்கள். என்னால் அவ்விதம் பாராட்ட முடியாது. காரணம் என்னவென்றால் சென்னை நகரத்தில் ஓடுகின்ற பஸ்களின் எண்ணிக்கை 500 என்று முன்னாள் நம்மிடத்தில் சொல்லப்பட்டது. அதே நேரத்தில் மாநிலம் பூராவிலும் ஓடுகின்ற பஸ்களின் எண்ணிக்கை என்னவென்று அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கின்ற புள்ளிவிவரங்களிலிருந்து பார்த்தால் 4,920 என்று தெரிகிறது. சென்னை நகரத்தில் வேண்டுமென்றால் அலுவலகத்திற்கு செல்லக்கூடியவர்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்று சொல்லலாம். ஆனால் இந்த அளவை எடுத்துக்கொண்டு விகிதாச்சாரப்படிபார்த்தால் மாநிலம் பூராவுக்கும் ஓடுகின்ற பஸ்களின் எண்ணிக்கை போதுமானது என்று சொல்ல முடியாது. அதைப்போலவே இதன் மீது தரப்பட்டிருக்கும் நிர்வாக அறிக்கையைப்பார்த்தால் மக்கள், பஸ்கள் அதிகமாக தேவை என்று விரும்புகிறார்களா, இல்லையா, என்று பார்த்தால் மக்கள் அதிகமாக விரும்புகிறார்கள் என்று இங்கே கொடுத்திருக்கக் கூடிய நிர்வாக அறிக்கையிலிருந்து புலப்படுகிறது. புதிய ரூட்டுகளுக்கு வந்திருக்கும் அப்ளிகேஷன்களின் எண்ணிக்கை 108, இதில் சாங்க்ஷன் செய்யப்பட்டது 57 தான். அதைப்போலவே வேரியேஷன் செய்வதற்காக வந்திருக்கும் அப்ளிகேஷன்களின் எண்ணிக்கை 243, அதில் அங்கீகரித்தது 101 தான். இதில் 50 சதவிகிதம் தான் அதிகாரிகளால் அங்கீகரிக்கப் பட்டிருக்கிறது. இதிலிருந்து மக்களிடத்தில் தேவை அதிகமாக இருக்கிறது என்பது தெரிகிறது. ஆனால் அந்த அளவுக்கு மாநிலத்தில் பஸ்கள் ஓடவில்லை. அதே சமயத்தில் "**number of passengers carried**" மிக மிகக் குறைவாக இருக்கிறது. 1958-வது வருடத்திற்கு தரப்பட்டிருக்கும் இந்த நிர்வாக அறிக்கையில் திருச்சி மாவட்டத்தைப்பற்றி புள்ளிவிவரம் தரப்படவில்லை. மற்ற மாவட்டங்களை எடுத்துக்கொண்டால் "**number of passengers carried**" மிக மிகக் குறைவாக இருக்கிறது. அதோடு "டாக்ஸ் எவேஷன்"-னும் அதிகமாக இருந்து வருவதை நம்மால் பார்க்கமுடிகிறது. இதன் மூலம் பஸ் முதலாளிகள் சர்க்காருக்கு கொடுக்கக்கூடிய வரிகளை கொடுக்காமல் சர்க்காரை ஏமாற்றுகிறார்கள் என்பதும் தெரிய வருகிறது. பஸ்கள் போகின்ற கணக்கை காண்பிக்கக்கூடிய ட்ரிப் ஷீட் இரண்டு விதமாக, டூப்ளிகேட்டுடன் வைத்துக்கொள்கிறார்கள். அதே மாதிரி தான் டிக்கட்டுகள் கணக்கையும் இரண்டு விதமாக வைத்துக்கொள்கிறார்கள். உண்மையாக 50 பிரயாணிகள் சென்றார்கள் என்றால் சர்க்காரிடத்தில் 30 அல்லது 20 பிரயாணிகள் சென்றார்கள் என்று அவர்கள் டூப்ளிகேட் கணக்கு காண்பிக்கிறார்கள். சர்க்காருக்கு இன்கம் டாக்ஸை கொடுப்பதை ஏமாற்றுவதற்காக இவ்விதம் கணக்கை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த அடிப்படையில் பார்த்தால் "நம்பர் ஆப் பாஸஞ்சர்ஸ் கேரீட்" மிக மிகக் குறைவாக இருக்கிறது என்பது நன்றாக விளங்கும். அது மட்டுமல்ல, டிரைவர்களுக்கும் கண்டக்டர்களுக்கும் தரப்படுகின்ற சம்பளத்தைப் பார்த்தால் அவர்களுடைய புத்தகத்தில் 120 ரூபாய் ஒரு ட்ரைவருக்கு சம்பளம் என்று எழுதி கையெழுத்து வாங்கி விட்டு 60 ரூபாய் தான் உண்மையாக கொடுக்கிறார்கள். கண்டக்டர்களுக்கும் 120 ரூபாய் சம்பளம் என்று கையெழுத்து வாங்கிவிட்டு உண்மையில் அவர்களுக்கு கொடுப்பது 60 ரூபாய் தான். இப்படி தவறாக கணக்குகளை எல்லாம் எழுதி வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

**DEPUTY SPEAKER : The hon. Member's time is up.**

[21st March 1961

**Sri S. KHADIR SHERIFF**: Sir, on a point of order கனம் அங்கத்தினர் அவர்கள் உண்மையில் விஷயம் ஒன்றும் தெரியாமல் இந்த சபையில் பஸ் ஓணர்கள் இரண்டு கணக்குகள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள், இரண்டு ட்ரிப் ஷீட்ஸ் வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றும் அதோடு ட்ரைவர்களுக்கும், கண்டக்டர்களுக்கும் 120 ரூபாய் என்று கையெழுத்து வாங்கிவிட்டு 60 ரூபாய் தான் கொடுக்கிறார்கள் என்றும் சொல்வதும் மிகவும் வருந்தத்தக்கது. அவர் சொல்வது உண்மையென்றால் அவரால் இதை நிரூபிக்க முடியுமா என்று கேட்கிறேன்.

**DEPUTY SPEAKER**: இதில் பாயின்ட் ஆப் ஆர்டர் ஒன்றுமில்லை.

**Sri S. M. ANNAMALAI**: ஆகவேதான் இந்த டாக்மெண்டைப் பார்க்கின்றபோது உண்மையிலேயே டாக்ஸ் இவேஷன் இருக்கிறது என்று என்னால் நிச்சயமாகச் சொல்ல முடியும். அதைப்போலவே 15 மைல்களுக்கு உட்பட்ட நியூ எண்ட்ரன்ட்ஸ் எவ்வளவு பேர்கள் என்று தரப்பட்டிருக்கிறதா என்றால் நிர்வாக அறிக்கையிலும் காணப்படவில்லை— அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற ஸ்டேட்மெண்டிலும் ஒன்றும் சொல்லப்படவில்லை. வேண்டுமானால் 1 பஸ் வைத்திருப்பவர்கள் 140 பேர்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறதே தவிர புதிதாக லைசென்ஸ் பெற்றவர்கள் எத்தனை பேர்கள் என்று சொல்லப்படவில்லை. 1958-க்குப் பிறகுதான் இந்த முறை அமுலுக்கு வந்தது என்றால் இப்போது தந்திருக்கிற அறிக்கையிலாவது அமைச்சர் அவர்கள் தந்திருக்கலாம்.

12-30 p.m. அதைப்போலவே நம்பர் ஆஃப் ஆக்ஸிடெண்ட்ஸ், எத்தனை பேர்கள் இறந்தார்கள் என்ற புள்ளிவிவரத்தைக் கூட அமைச்சர் அவர்கள் தரவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டத்தில் செய்யப்படுகிற சிபாரிசுகளை கவனித்துச் செய்கிறோம் என்று சொன்னார்கள். எந்தெந்த மாவட்டங்களிலிருந்து சிபாரிசுகள் வந்தன, அவைகளுள் எந்தெந்த ரூட்டுகளை ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள் ? டிரான்ஸ்போர்ட் கமிஷனர் எந்தெந்த ரூட்டுகளை ஏற்றுக்கொண்டிருக்கிறார் ? இந்த புள்ளிவிவரங்களை வைக்க வேண்டும். என்னைப்பொறுத்த வரையில் வட ஆற்காடு மாவட்டத்தில் எத்தனை சிபாரிசுகளை அனுப்பினோமோ அவைகள் ஒன்றும் அமுல் செய்யப்படவில்லை. அங்கிருந்து அப்பீலுக்கு வந்து ரிவிஷனுக்கு வந்து வேண்டுமானால் யாருக்காவது கிடைத்திருக்கலாம். உண்மையில் டெவலப்மெண்ட் கவுன்சில் சிபாரிசுகள் டிரான்ஸ்போர்ட் கமிஷனராலும் மற்றவர்களாலும் அங்கீகரிக்கப்படவில்லை.

நேரம் ஆகிவிட்ட காரணத்தினால் இன்னும் ஒரு விஷயத்தை மட்டும் குறிப்பிட்டு விட்டு முடித்துக்கொள்கிறேன். ப்ராட்வே பஸ் ஸ்டாண்டுக்குச் சென்றால் அங்கே நிற்கவே முடியாத நிலை இருக்கிறது. அந்த பஸ் ஸ்டாண்டை வேறு இடத்திற்கு மாற்றும் யோசனை சர்க்காரிடத்தில் இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அதை வேறு இடத்திற்கு மாற்றுவதோடு கூட இரண்டு இடங்களில் பஸ் ஸ்டாண்டுகளை கட்டி சுகாதார முறையில் வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

* **Sri V. ARUNACHALA THEVAR**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இச்சபையிலே நமது போக்குவரத்து இலாகா அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த மான்யத்தை ஆதரித்து நான் ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். அதாவது இந்த போக்குவரத்து சம்பந்தப்பட்ட மட்டில் கடந்த 30 வருஷ காலங்களில் நாம் யோசித்துப்பார்க்கும் அளவில், இதற்கு முன்னால் திருச்சி ஜங்ஷனில் ஒரு பிரயாணி வந்து இறங்கினால் புருஷன் ஒரு பஸ்ஸிலும், பெண்சாதி ஒரு பஸ்ஸிலும், அவர்களது சாமான்கள் இன்னொரு பஸ்ஸிலுமாக இப்படி போகவேண்டிய நிலைமை வந்து விடும். அந்த சாமான்களை அவர்கள் தேடிப் பிடிப்பதில் சாமான்களை இழந்து விடுபவர்கள், கண்டக்டர்கள், டிரைவர், க்ளீனர்



21st March 1961] [Sri V. Arunachala Thevar]

இவர்களிடத்தில் அடிபடுவது உண்டு. அதைக்காண பரிதாபகரமாக இருக்கும். 1950-ம் வருஷத்தில் இது மாறி விட்டது. புதுக்கோட்டை பிராந்தியத்தில் 1939-ம் வருஷத்திலேயே நல்ல முறையில் மாறுதல் அடைந்தது. அப்பொழுதுதான் டி. வி. எஸ். புதுக்கோட்டையில் பஸ் விட ஆரம்பித்தார்கள். நல்லது செய்தவர்களை நன்றாகப் பாராட்ட வேண்டும். நான் சொன்னமாதிரி சந்தர்ப்பங்கள் இல்லாமல் ஓவர்லோடு என்பதை எந்த விதத்திலும் அங்கீகாரம் செய்யாமல் சர்வீஸை நடத்தி வருகிறார்கள். புதுக்கோட்டையை நிர்வாகம் செய்து வந்த டாட்டன்ஹாம் அவர்கள் இன்ஸ்பெக்ஷனுக்காக போன காலத்தில் அவர் சென்ற கார் பழுதாகி விட்டதால், வேறு கார் எதும் அங்கு இல்லாமல், டி.வி.எஸ். பஸ் வந்தபோது, அதில் போக முடியுமா என்று கேட்டார். அப்போது அந்த பஸ்ஸில் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு பிரயாணிகள் இருந்தார்கள். அந்த ட்ரைவரும் கண்டக்டரும் தங்களால் ஓவர்லோட் ஏற்ற முடியாது என்றும் தகவல் சொல்லி சீக்கிரமாக கார் அனுப்புவதாகவும் சொல்லி விட்டுச் சென்று விட்டார்கள். டாட்டன்ஹாம் அவர்கள் ஊருக்குப்போனதும் டி.வி.எஸ். கம்பெனியைப் பற்றி பாராட்டியிருக்கிறார்கள். அந்த முறையில் போக்குவரத்து சர்வீஸை நல்ல முறையில் நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. அந்த சில வருஷங்களில் சிலோனில் கண்டி பகுதியில் பஸ் நடத்தக்கூடியவர்கள் இவர்கள் பஸ் நடத்துவதைப் பார்த்து அந்த மாதிரி நடத்தவேண்டுமென்பதற்காக ஒரு கமிட்டி வந்தது. ஆறுமாதம், ஒரு வருஷம் இருந்து பார்த்துவிட்டுப் போயும் அவர்களால் சிலோனில் அந்தமாதிரி நடத்த முடியவில்லை. நமது நாட்டிலே நடக்கிற பஸ் போக்குவரத்தைப் பார்த்துவிட்டு அன்னிய நாடுகளிலே, சிலோனைப் பொறுத்த வரையில் நான் சொல்லுகிறேன், அந்த வண்டிகளில் மனிதர் ஏறி சஞ்சாரம் செய்ய முடியாத அளவுக்கு இருக்கிறது. ஊருக்குப் பிறகு ஓவர்லோடு அதிகமாக இருக்கிறது. ஒரு பஸ்ஸில் 60 பேர்கள் பிரயாணம் செய்கிறார்கள். அந்த மாதிரி நிர்வாகம் நடக்கிறது. மைசூரைப் பார்த்தால்கூட நமது ஊரிலே தன்னுடைய செய்யப்பட்ட பஸ்கள் தான் ஓடுகின்றன என்பதைப் பார்த்தேன். அவ்வளவு நல்ல முறையில் நடக்கிறது.

புது ரூட்டுகள் கொடுப்பதிலே 15 மைல்கள் என்று வைத்திருப்பது மிகவும் குறைவு, அதை 25 மைலாக அதிகரிக்க வேண்டும், இல்லாவிட்டால் கொடுத்தும் பிரயோசனம் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

எக்ஸ்பிரஸ் பஸ் திருச்சியிலிருந்து மதராஸ் போவதில் நானும் போய்க்கொண்டிருக்கிறேன். போக வர நல்ல வசதியாக இருக்கிறது. ஆனால் டைம் தான் கூடுதலாக இருக்கிறது. காலையில் திருச்சியிலிருந்து 11 மணிக்கு புறப்படும் பஸ் 8 மணிக்கு வரலாம். 11 மணிக்கு பிற்பாடு எந்தக் காரியமும் செய்ய முடியாது. 1 மணிக்கு புறப்பட்டு 8—9 மணிக்கு வந்தால் பாஸெஞ்சர்கள் சாப்பிட்டு வர வசதியாக இருக்கும். காலையில் 3—4 மணிக்குப் புறப்பட்டால் சீக்கிரம் போய் காலையில் வேலைகளைப் பார்க்க வசதியாக இருக்கும். அதோடு பத்திரிகை முதலிய செய்திகளைக்கொடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

***Sri G. ANNAMALAI MUTHURAJA**: சட்டமன்ற உதவித் தலைவர் அவர்களே, அமைச்சர் கொண்டு வந்திருக்கும் மான்யத்தை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். திருச்சி தாலூகாவில் அந்த நல்லூர் தொகுதியில் சில பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. டவுன் பஸ் என்று 5 மைலுக்கு மட்டும் அந்த ஊர் ஆர்.டி.ஓ. பர்மிட் கொடுத்திருக்கிறார். பக்கத்தில் உள்ள கிராமங்களுக்குப் போக ஜனங்களுக்கு போக்குவரத்து இடையூறாக இருக்கிறது. ஆகையால் 5 மைல்களுக்கு அப்புறம் 2-3 மைல் போக முடியாத அளவுக்கு கஷ்டப்படுகிறார்கள். பக்கத்திலுள்ள கிராம மக்களெல்லாம் 5 மைல் வரையில் பஸ்கள் வருகின்றன, பக்கத்தில் 2 மைல் தான் இருக்கின்றன, அதற்கு பஸ் விட்டால் எவ்வளவோ சௌகரியமாக இருக்கும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால் டவுன் பஸ் 5 மைல் என்பதை கூடுதலாக்கி

[Sri G. Annamalai Muthuraja] [21st March 1961

10 மைல் போகலாம் என்று எக்ஸ்டென்ட் செய்யவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். சட்டத்தைத் திருத்தவேண்டுமென்றால் அதையும் திருத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தநல்லூரை அடுத்து பட்டவை, தொப்பு, குழுமணி, திருச்சந்துறை என்ற கிராமங்கள் இருக்கின்றன. அதெல்லாம் 10 மைலுக்கு உட்பட்ட கிராமங்கள். அந்த கிராமங்களுக்கு பஸ் போக வசதி இல்லை என்றும் பர்மிட் கொடுக்க முடியாது என்றும் கலெக்டர் சொல்லிவிட்டார்கள். அந்த ரோடு குறுகலாக இருப்பதால் பஸ் போக முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த மாதிரி குறுகலாக இருந்தால், அதனால் பஸ் போக முடியாது என்று சொன்னால், சில இடங்களில் சின்ன வான்கள் போய்க்கொண்டிருக்கின்றன, அந்த மாதிரி வான்கள் போக அனுமதி கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இடையூறாக இருக்கக்கூடிய ரோடுகளை அகலப்படுத்தி வான்கள் போக வசதி செய்துகொடுக்கும்படி கேட்டுக் கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* **Sri N. MAHALINGAM** : Mr. Deputy Speaker, Sir, while supporting the Transport Demand, I appreciate the development that has been made in the field of Transport in the Madras State but still there is very great scope for development of transport. As it is now transport is not being treated as an industry. I wish to point out with great regret that the treatment meted out to transport is getting bad. It is being considered just like a 'jutka' and it is not considered an industry. Only if the transport industry is properly organized, the public will get proper benefit. In 1944–45 there was a proposal before the Central Government to co-ordinate the transport activities and that the State and Central Governments should take shares in a newly formed company along with the private operators and that proper and efficient operators should be selected to operate the newly formed companies. But subsequently we found that that proposal had not been implemented and it was practically given up. Originally a fleet was considered as consisting of 20 buses and the intention was to raise the fleet strength to 100. Now it is reduced to three and then again raised to five. If five buses are considered 'fleet' it is only a misnomer. So, the Government should reconsider the whole question of transport.

The policy of the Government is to nationalize transport. If nationalization of transport is to be properly implemented, a regular policy will have to be formulated. At present the total number of buses plying in the Madras State would come to about 4,000 and 40 new motor companies can be formed at the rate of 100 buses for each, with both the State Government and the existing operators taking shares in those newly formed companies. If the railways also want shares, the State Government could decide about it. If on this basis, some re-thinking is done, it will be possible for the State Government to nationalize it at a future date by just paying compensation to the private operators.

Now new routes are given at the whims and fancies of individuals. They just apply and then it is considered by various authorities and then it goes to the Court. Thus a lot of confusion has



21st March 1961] [Sri N. Mahalingam]

been created in the transport industry. If the real intention of the Government is to nationalize transport, they must lay down a proper policy and that has been my experience as a transport operator for the last 30 years. So, the Government and the Cabinet should rethink about the policy that is being at present followed.

About facilities for proper running of transport, we are not using available facilities. The Government have introduced long-distance express buses. An express bus costs about Rs. 60,000 to Rs. 70,000 and it is impossible to get information when there is break-down on the way unless it is radio-controlled and run efficiently. In many of the continental countries, taxis are radio-controlled with the result we can know about the movement of the vehicles. The only thing is that the All-India Radio should permit a particular wave-length to be operated by the Transport companies. The All-India Radio refused to allow a particular wave-length to be operated by the Transport industry. Now only they have agreed to three vehicles of our State Transport being radio-controlled. So, the State Government should press upon the Central Government that for the proper development of the Transport industry, transport companies should be allowed to operate a particular wave length so that the movement of buses can be controlled whenever there is a breakdown or accident. Then only we can get information about it immediately.

During the beginning of the Second-Plan period, at a meeting of the State Transport Advisory Committee, I suggested that there should be a 25 per cent increase in the number of buses in the State. I regret to say that that suggestion has not been implemented. Now with the increasing business activity and industrial tempo, more number of buses are needed on various routes including new routes. Therefore it would be necessary for the Government to examine the matter properly and increase the number of buses wherever necessary so that people can travel comfortably. I feel that with increasing tempo of development envisaged in the Third Plan, greater number of buses and conveniences are necessary.

Another proposal that I submitted to the Government through the State Transport Advisory Committee was that night express buses should be introduced. If we go to the Central Station or Egmore Station on any day, we will find that every one of the railway compartments is packed like sardines. Some hon. Members referred to overloading in buses. I do not know whether those hon. Members have ever gone to the railway station and travelled in the third-class compartment. I am not justifying overloading in buses, but I am only saying that railways are not able to give proper conveniences to the people and so they should at least allow the transport industry to give alternative conveniences. For that purpose, night express bus is absolutely necessary and I have no objection to the Government starting it.

[Sri N. Mahalingam] [21st March 1961

Also, if we want to reduce the number of accidents, it is necessary that the drivers and other staff working in the vehicles should have proper rest. That is possible only if they are large units. So, for the proper development of Transport, it is high time that the Government take a long range view of the whole question and decide on certain basic policies. Thank you, Sir.

DEPUTY SPEAKER: The hon. Member Srimathi Anandanayaki, will now speak. She should finish her speech within five minutes.

* SRIMATHI T. N. ANANDANAYAKI: Then I will rush through my points, Sir. கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கொடுத்திருக்கிற [illegible] ஒன்றை [illegible] கொள்கிறேன். இப்போது [illegible] ஜி.ஓ. 1298 போட்டு, நாம் அதில் கண்டுள்ளபடி [illegible] கொண்டு வந்திருக்கிறோம். அதற்குமேலும் எஸ்.டி.ஏ.க்கு அப்பீல் போட்டு, அதற்கு மேலும் ஹைகோர்ட்டுக்கு வரலாம். இன்றைக்கு கேஸ்கள் பல பொதுவாக இந்த போட்டா போட்டியில் [illegible] அதிகமாக வந்திருக்கின்றன. [illegible] மென் [illegible] இந்த முறையிலே [illegible] ஆனாலும் கட்சிக்கு [illegible] கண்ட வாறு பேசுவதற்கு எந்த விதத்திலும் இடமில்லை. அவர்கள் சட்டத்தைப் புரிந்து கொள்ளாத காரணத்தாலோ, அல்லது அறியாமை யாலோ, அல்லது அதிகாரத்தாலோ இப்படிப் பேசுகிறார்களோ [illegible] இதைப் பொறுத்தமட்டில் இதிலே [illegible] சட்டத்திலும் சட்டப்படி தான் நாம் [illegible] இருக்கிறோம். இதற்குப் பின்னால் அந்த பர்மிட் [illegible] பர்மிட் [illegible] பர்மிட்டா என்று பார்த்துக் கொள்ளலாம். [illegible] சட்டத்திலே இடமிருக்கிறது. இதிலே சலுகை என்று சொல்வதற்கே இடமில்லை. அதற்கு மேல் ஒரு ஜி.ஓ. போட்டிருக்கிறது. [illegible] 100 அல்லது 56-படி சர்க்கார் கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு கொடுப்பதில் [illegible] அதிகம் போட லாம் என்று கூறியிருக்கிறது. ஆனால் [illegible] ஜி.ஓ.வில் லிமிடெட் கம்பெனி என்று குறிப்பிட்டிருக்கிறது. அது எந்த காரணத்தினால் போடப் பட்டிருக்கிறது என்று தெரியவில்லை. லிமிடெட் என்று போட்டிருப்பதால் "எபிஷியன்ஸி" அதிகரிக்கிறது என்று சொன்னார்கள். இதிலே என்ன "எபிஷியன்ஸி" வருகிறது என்று தெரியவில்லை. இப்படி லிமிடெட் என்று போட்டிருப்பதால் அதிலே [illegible] ஊக்காரம் [illegible] என்று [illegible] அதிகரிக் கிறது என்று [illegible] மிருந்து அறிய [illegible] லிமிடெட் கம் பெனி என்று போட்டிருக்கிற [illegible] புரிந்துகொள்ள முடிய வில்லை. ஒருவேளை இப்படி லிமிடெட் கம்பெனி என்று போடுவதால், பலர் அதிலே சேர்ந்து [illegible] இருப்பதாலே, வரு மானமும் அதிகமாகிறது [illegible] புரிந்துகொள்ள முடியவில்லை. அப்படி எடுத்துக் கொண்டாலும் ஜி.ஓ. படி லிமிடெட் கம்பெனிக்கு குறைந்தது இரண்டு பேர்கள் இருந்தால் போதும் என்று போடப்பட்டிருக்கிறது. முக்கியமாக [illegible] லிமிடெட் கம்பெனியில் மனைவி, புருஷன் அல்லது அண்ணன், தம்பி ஆகிய இரண்டு பேர்கள் சேர்ந்து கொண்டு, லிமிடெட் கம்பெனி நடத்தக்கூடிய நிலைமைதான் இருக்கிறது. ஆனால் கூட்டுறவு ஸ்தாபனத்தில் அங்கு பல பேருக்கு வருமானம் செல்ல முடிகிறது. நம்முடைய 'ஜி.ஓ.படி பிரைவேட் லிமி டெட் கம்பெனிக்கும், பப்ளிக் லிமிடெட் கம்பெனிக்கும் வித்தியாசம்



21st March 1961] [Srimathi T. N. Anandanayaki]

கிடையாது. அதேமாதிரி இன்று ஒரு பஸ் 200 மைல் போகலாம் என்று கூறுகிறார்கள். ஒரு பஸ் 200 மைல்கள் ஓடினால்தான் 'ஸர்சார்ஜ்,' பிளாக் மார்க்கெட்டில் டயர் வாங்குவது, ரிபேர் செய்வது போன்ற செலவுகளுக்கெல்லாம் முதலாளிகளுக்கு கட்டுபடியாகும். இருநூறு மைல் கள் பஸ் ஓடினால்தான் '**it will be economic**'. புதிய ரூட்களில் பஸ்களை விடுவதற்கு முன்னால், இப்பொழுது ஓடுகிற பஸ்கள் 200 மைல்களை முடித்து விடுகிறதா என்பதைப் பார்த்தால் தான் மிகவும் நல்லது. '**uneconomic**'-ய் இருக்கக்கூடாது. இருநூறு மைல்கள் ஒரு பஸ் ஓடுகிறதா என்று பார்ப்பதில், ரூட்டில் '**variation,**' கொடுத்து 200 மைல்கள் ஓடச் செய்யலாம். அல்லது **number of trips increase**-யை செய்யலாம். எப்படியாவது ஒரு பஸ் 200 மைல் ஓடும்படியான நிலைமைக்குக் கொண்டு வரவேண்டும். '**variation,**' கொடுப்பது பழைய ஜி.ஓ. 2265-படி கொடுக் கிறார்கள். '**changed circumstances**' அதாவது, இருக்கிற சூழ்நிலையில் மாறுதல் ஏற்பட்டிருக்க வேண்டும். அப்பொழுதுதான் '**variation**' கொடுக்கிறார்கள். இம்மாதிரி '**variation**' கொடுப்பதை இனிமேல் தாராளமாகக் கொடுக்க வேண்டும். இன்றைக்கு ஒரு பஸ் 200 மைல்கள் ஓட வேண்டுமென்று நாம் விரும்புகிறபொழுது, பக்கத்தில் 2 மைல் 5 மைல், 10 மைல் தூரத்தில் வேரியேஷன் இருந்தால், அதைக் கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் புதிய புதிய கிராமங்களுக்கு பஸ் போக்கு வரத்து வசதி ஏற்படும். பத்து மைலுக்கு மேல் கொடுக்கக் கூடாது என்ற நிலைமை இருக்கக்கூடாது. வேரியேஷன், ரூட்டுக்கு குறைவாக இருந்தால், அதாவது 50 மைல் ரூட் இருந்தால் 25 மைல், 30 மைல் வரையிலும் வேரியேஷன் கொடுத்து, 200 மைல்கள் முடியும்வரையில் கொடுப்பது நல்லது.

புதிய ரூட்கள் 'ஓபன்' செய்வதென்றால் செக்ஷன் 47-படி அந்த ரூட் அவசியமா, வேண்டாமா என்று 'ஆர்.டி.ஏ.' முடிவு செய்து பிறகு டிரான்ஸ்போர்டு கமிஷனர் 'அப்ரூவல்' வாங்கவேண்டும். எதற்காக டிரான்ஸ்போர்டு கமிஷனர் 'அப்ரூவல்' வாங்க வேண்டும்? இதனால் காலதாமதம் ஆகிறது. 'லோகல் அதாரிடிக்குத்' தான் தெரியும், இந்த ரூட் அவசியமா, இல்லையா என்று. அது 'ஸர்வ்டு ஏரியாவா' அல்லது 'அன்ஸெர்வ்டு ஏரியாவா' என்பது 'லோகல் அதாரிடிக்குத்' தான் தெரியும். செக்ஷன் 47-வது பிரகாரம் ஆர்.டி.ஏ. ரெகமெண்டு பண்ணி னால், டிரான்ஸ்போர்டு கமிஷனர் அப்ரூவல் வாங்கவேண்டி யிருக்கிறது. **we should not centralise.** '**Decentralise**' செய்ய வேண்டும். சில டைம்களில் 'ஆர்.டி.ஏ.' 'ரெகமெண்டு' செய்தால் கூட, அதற்கு டிரான்ஸ்போர்டு கமிஷனர் 'அப்ரூவல்' கொடுப்பதில்லை. ஆகவே, இதற்கு டிரான்ஸ்போர்ட்டு கமிஷனர் 'அப்ரூவல்' அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

அப்பீலுக்கு ஸ்டாம்பு கட்டணம் ரூபாய் 100-ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. ரூபாய் 10 ஆக இருந்ததை, அரசாங்கத்திற்கு அதிக ஆசை, அதை ரூபாய் 100-ஆக உயர்த்தியிருக்கிறார்கள். பஸ் சம்பந்தப்பட்டவரை அம்மாதிரி கட்டணத்தை உயர்த்தினால் கூட பரவாயில்லை. ஆனால் லாரிகளுக்குக்கூட ரூபாய் 100 ஸ்டாம்பு கட்டணம் என்று சொன்னால், அது அவர்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அவர்கள் வக்கீல் பீஸ் கொடுப்பதற்கே சங்கடமாக இருக்கிறது, அப்படியிருக்கும் பொழுது அப்பீலில் ஸ்டாம்பு கட்டணம் ரூபாய் 100 கொடுக்க வேண்டுமென்றால், அது மிகவும் கஷ்டம், அம்மாதிரி ஸ்டாம்பு பீஸ் ரூபாய் 100 என்று நிர்ணயித்திருப்பது தவறு. அதைக் குறைக்க வேண்டும். வேண்டுமானால் பஸ் சம்பந்தப்பட்டவரை அவர்கள் கட்டலாம். ஆனால் லாரி சம்பந்தப்பட்ட வரை அப்பீலுக்கு ரூபாய் 100 ஸ்டாம்பு கட்டணம் செலுத்த வேண்டும் என்று சொல்லுவது லாரிக்காரர்கள் நியாயம் பெறக்கூடாது என்று தடுப்பதுபோல் ஆகும். நியாயத்தை ரொம்பவும் சுலபமாக பெறக்கூடிய நிலைமை இருக்க வேண்டும். ஸ்டாம்பு கட்டணம் வசூலிப்பது என்பது முக்கிய நோக்கமாக இருக்கக்கூடாது. இத்துடன் என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளு கிறேன்.

[21st March 1961

* SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Mr. Deputy Speaker, Sir, while supporting the cut-motion under this Demand, I would like to make a few observations. I am one of those who think that Government should not think of nationalisation of transport. Of course it would be suitable for some people to talk of nationalisation. I am one of those who honestly feel that Government should not take over all routes run by private operators. I am saying this for the simple reason that Government are incompetent to maintain this transport. Inefficiency has set in to a great extent. When Government are not able to maintain buses in the City, why on earth should they think about nationalisation of bus transport. One finds in America that there is efficiency in all sectors. So far as Madras City is concerned, what should I say? It is a sorry state of affairs. We find every day letters coming in the "letters to the Editor" column in the newspapers about some defects or other in the working of the nationalized bus transport in the City. There are so many difficulties experienced by passengers, though the Hon. Minister in charge of bus transport in the City was arguing the other day that the nationalized system was working well. Side by side I would like to make one request, though it may not directly come under the portfolio of the Hon. Minister who is now piloting the present demand. You take one route in the City and side by side you give permit for the same route to a private operator and see how it works. The way in which a private operator would manage the affair would be much more efficient than Government undertaking. You tax them to the utmost and try to get as much money as possible. If you then take the profit and loss statement, you will find the tax that you will get from private transport will be much more than the profit you are getting from this nationalised transport. It is only on this account that I am strongly opposed to nationalisation of transport because Government cannot manage them efficiently.

The question of issue of permits was raised by several hon. Members. I would like to tell the Hon. Minister that the fact that there is such an elaborate procedure to be gone through with regard to obtaining and granting of permits people are getting vexed up. Government must seriously think of examining this subject in consultation with the Transport Commissioner and the Deputy Transport Commissioner and see whether a method cannot be evolved by which these applications are disposed of as quickly and as early as possible. Another factor which contributes to the delay is the inadequate staff in the Transport Commissioner's office, and at the lower level. The Hon. Minister must take stock of pending papers and seriously think of augmenting the staff and giving them all facilities to see that papers that are sent to officers are disposed of as quickly as possible.

The hon. the Lady Member was just now talking about the enhancement of fees for filing of appeals, the fees prescribed even for revision of permit is very high. So far as I know several



21st March 1961] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

small operators find it very difficult, with the growing cost on maintenance, to pay full fees. I do not know whether this was also discussed at the Transport Advisory Committee. Still I would request Government to consider whether it will not be possible to revise these fees to a great extent.

There are of course so many loopholes in the working of this system. With regard to the elaborate procedure which one should follow at present, Government must revise these rules and try to plug all loopholes. Though the administration at the higher level is very efficient (I should pay compliments to the officers at the top level) the position in the district level and lower level is far from satisfactory. Lots of delays. There are ever so many things which I am unable to explain on the floor of the House. Government with the help of the Transport Commissioner must see that efficiency is maintained without giving room for any complaint whatsoever. That is my submission.

We find also that with regard to opening of inter-district routes, there is an elaborate procedure. For the thing to be finalised, the papers must go from one transport authority to the other transport authority. It takes six months or one year for following all the procedures; with the result it takes nearly 1½ years or more to finalise the grant of a permit. That kind of thing should go.

I heard that in America if you want to get a permit from San Francisco to Washington, you find only one central authority at the State level. Of course they call for reports. But they dispose of the thing as quickly as possible.

Then, Sir, there is the Planning and Development Wing which has been opened recently. So far as the Great Southern Trunk Road is concerned they have recommended recently some routes. We find some operators complaining that those routes are not at all paying and some are on the verge of closure. This is the kind of assessment that is made by the Planning and Development Wing. On what basis did they do it? Whether these things are properly done should be looked into. Government should look into all the permits granted. I know even in my own district of Chingleput, there are so many routes where there is competition and where people stand in queues waiting for buses. Even ordinary facilities are not given. This should be properly attended to.

I am one of those who oppose the variation of bus routes, unless it be for a distance of 4 or 5 miles to connect some village which is not already connected by bus. Some people on the pretext of opening routes, ask for routes from Chingleput to Ponneri and then they want to extend it to Satyavedu, we find that by giving that variation the trips are reduced and the people are put to lot of inconvenience. If you find that the traffic warrants it, you can increase the number of buses instead of giving variation. 1 p.m.

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [21st March 1961

As regards overloading at the district level, especially in my own district it is not checked properly. We have previously appointed flying squads. I am sorry that these squads pass on the information about their tour programme, etc. It is not as effectively done as it was some years back. That should also be looked into.

No doubt workshop facilities should be insisted upon. I find Sir, here even though many of the small operators are just to satisfy Government rules have some tools, but still any work is not done. The rules must be relaxed. Operators know better how it should be done. If they lose one single trip, they stand to lose to a very large extent. Of course, if some operator produces a certificate from big companies like T.V.S. that rule is relaxed but still the other immediate requirements are not observed to-day. This should also be looked into.

Lorry speeds are not controlled. This should be controlled very effectively.

With regard to bus-stand at Madras even in the year of grace 1961, and at the advanced stage of civilisation, we are having a poor bus-stand. It is horrible to look at it. But the Government may say that it is the duty of the Corporation to improve the bus-stand. How did they improve the roads during the visit of Her Majesty? It will be possible for the Government to give more aid to the Corporation for improving the bus-stand. Unless they do it, the public will think that they are not given any proper facilities they deserve.

Sir, so many hon. Members were talking about night express service. This night service will lead to accidents. Duty registers are not checked properly. You find some lorry drivers, they put somebody's name and they go on travelling during days and nights with the result lots of accidents are happening every day. When night trains are running in all directions where is the necessary for night express service? Instead of night service, the trips may be increased or put more buses and if you run them efficiently during day that will beet the needs of the public.

With regard to stopping of lorries during nights I am not one of those who is not in favour of it. If all the lorries are allowed to run during day, it will be a peak hour traffic and there will be great congestion. There should be some relief during day. It will also prevent highway robberies. If you ban lorry service completely during night time, there will be highway robberies. I am not in favour of stopping lorry service during nights.

As the time allotted to me is very limited, I am closing my speech with these few words.

**The Hon Sri. V. RAMAIAH** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் இந்த மான்யத்தின் மீது 22 கனம் அங்கத்தினர்கள் பங்கு எடுத்துக் கொண்டு, அநேகமாக எல்லோருமே இந்த இலாகாவினுடைய நிர்வாகத்தைத் திறமையாக நடத்துவதற்கு நல்ல கருத்துக்களை எல்லாம்



21st March 1961] [Sri V. Ramaiah]

சொல்லியிருக்கிறார்கள். ஒவ்வொருவரும் கூறிய யோசனைகளை நான் ஆராய்ந்து பதில் சொல்லுவதற்கு முன், இந்த விவாதத்தின்போது நான் கொடுத்திருக்கக் கூடிய அறிக்கையை எல்லா அங்கத்தினர்களுமே நன்றாகப் படித்து, அந்த அறிக்கைக்குத் தகுந்த முறையிலே கருத்துக்களைச் சொன்னார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் ஒரே ஒரு கனம் அங்கத்தினர் இந்த அறிக்கையில் குறிப்பிட்டிருக்கும் விஷயத்தைப் புரிந்துகொள்வதற்கே முயற்சி எடுக்காமல், இல்லாததைக் கற்பனை செய்து கொண்டு அரசாங்கத்தின்மீது கடுமையான வார்த்தைகளைச் சொல்லி, அவர் தாம் சொல்லியிருக்கும் வார்த்தைகளுக்கும் இந்த அறிக்கைக்கும் சம்பந்தம் இல்லாத முறையிலே சவால்களை விட்டிருக்கிறார். குற்றச்சாட்டு என்ற வார்த்தையை சொல்லி விட்டால் தன்னுடைய வேலை முடிந்துவிட்டது என்று பேசிவிட்டுப் போய்விட்ட அந்த கனம் அங்கத்தினருக்கு மட்டும் ஆரம்பத்திலேயே பதில் சொல்லிவிடுகிறேன்.

திருவண்ணாமலைத் தொகுதியைச் சேர்ந்த கனம் அங்கத்தினருக்கு இந்தப் போக்குவரத்து நிலையைப் புரிந்துகொள்வதற்கு ஏதேனும் ஒரு முயற்சி இருந்ததா என்று பார்த்தால், இல்லை என்பதை அவருடைய கட்சியைச் சேர்ந்த கனம் செல்வராஜ் அவர்களும், திரு. அண்ணாமலை அவர்களும் ஒப்புக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன். அவர் பேசிய வார்த்தைகளுக்கும் அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கும் விஷயத்திற்கும் சம்பந்தமே இடையாது. கனம் அங்கத்தினர் இந்த டெவலப்மெண்ட் கவுன்சிலினுடைய பொறுப்பிலே, ஏதோ பஸ் பெர்மிட்டுகள் வழங்கும் அதிகாரம் கொடுக்கப் போவதாகச் சொன்னார். உண்மையிலேயே அவர் ஒரு பெரிய கற்பனைவாதி என்று தான் நான் புரிந்து கொள்ள முடிகிறது. இதுவரையிலும் சினிமா உலகத்திலேதான் கற்பனை அதிகமாக இருக்குமோ என்று நினைத்தேன். ஆனால் சினிமாக் கதைகள் எழுதுபவர்களைக் காட்டிலும், அவருக்கு கற்பனை மிக மிக அதிகமாக இருக்குமோ என்று அச்சம் எனக்கு ஏற்பட்டு விட்டது. அவர் பல சவால்கள் விட்டார். அரசாங்கத்திற்கு தைரியம் இருக்கிறதா என்று கேட்டார். இந்த மாதிரி பேசிவிட்டால் பிரச்னைகள் தீர்ந்துவிடும் என்று கருதுகிறார் போலும். இம்மாதிரி பேசினால் அவர்களுக்கும் நன்றாக இருக்காது, அவர் கட்சியைச் சேர்ந்த மற்றவர்களுக்கும் நன்றாக இருக்காது. குறிப்பாக நுணுக்கமாகப் படித்துக் குற்றம் குறைகளை எடுத்துக் காட்டுகிற கனம் அண்ணாமலைக்குக் கூட நன்றாக இருக்காது. (ஒரு அங்கத்தினர்: அவர்களுக்குள்ளே சண்டை மூட்டப் பார்க்கிறீர்களா?) சண்டை மூட்டிவிட வேண்டும் என்ற எண்ணம் எனக்குக் கிடையாது.

இந்த டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சிலுக்கு எவ்வளவு அதிகாரம் இருக்கிறது என்பதை நாம் சட்டத்திலேயே நிர்ணயித்து இருக்கிறோம். டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சிலுக்கு, போக்குவரத்து இலாகா சம்பந்தப்பட்ட பிரச்னைகளிலே ஆலோசனை கூறுவதற்கு இந்தச் சபை தான் இடங்கொடுத்தது. போக்குவரத்து சம்பந்தப்பட்ட பிரச்னைகளிலே யோசனை கூறுவதற்கு எப்படி மாகாண ரீதியில் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் அட்வைசரி கமிட்டி அமைப்பை வைத்திருக்கிறோமோ, அது போல் ஜில்லா ரீதியாகவும் இந்த டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சிலை ஏற்படுத்துவதற்கு முன்பு ஒரு அமைப்பை வைத்து இருந்தோம். டிஸ்ட்ரிக்ட் பஞ்சாயத்துச் சட்டம், இந்த டெவலப்மெண்ட் கவுன்சில் கான்ஸ்டிடியூஷன் இவைகள் இந்தச் சபையில் பரிசீலனைக்கு வரும்போது, இந்தச் சபை தான் மின்சாரம் சம்பந்தப்பட்ட பிரச்னை, போக்குவரத்து சம்பந்தப்பட்ட பிரச்னை, இவைகள் இந்த கவுன்சிலின் பார்வைக்குக கொண்டுவர வேண்டும் என்று விரும்பியது. ஜில்லா ரீதியாக இருக்க வேண்டும் என்ற முடிவை இந்தச் சபை தான் செய்தது. அந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டு, ஜில்லா ரீதியாக இருக்கக்கூடிய போக்கு வரத்துப் பிரச்னைகளைப் பரிசீலனை செய்வதற்கு இந்த டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சிலின் பொறுப்பிலேயே விட்டு இருக்கிறோம். இந்தப் பொறுப்பை நாம் கொடுத்து ஒன்று அல்லது ஒன்றரை வருஷம் ஆகிறது. திரும்ப இதைப் பரிசீலனை செய்யவேண்டும் என்ற கருத்தை இங்கே பேசிய பல அங்கத்தினர்கள் வெளியிட்டார்கள். இதை திரும்பப் பரிசீலிக்க வேண்டும் என்று நானும் நினைக்கிறேன்.

[Sri V. Ramaiah] [21st March 1961

இந்தப் பொறுப்பை டிஸ்ட்ரிக்ட் டெவலெப்மெண்ட் கவுன்சிலுக்கு விட்டு விட்டிருல் கலெக்டர் அதற்குத் தலைவராக இருக்கக்கூடிய காரணத்தாலும், ஆர்.டி.ஒ.-க்கும் அதிகாரியாக இருக்கக்கூடிய காரணத்தாலும் இதை மறுபடியும் பரிசீலனை செய்ய வேண்டும் என்ற கருத்தை அங்கத்தினர்கள் தெரிவித்தார்கள். போக்குவரத்து சம்பந்தமான பிரச்னைகளுக்குப் பாதகம் இல்லாத நிலைமையிலே இதைப் பரிசீலனை செய்யலாம். ஆகையால், டிஸ்ட்ரிக்ட்டெவலப்மெண்ட் கௌன்சிலுக்கு ஆலோசனை கொடுக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் அண்ணாமலை, நாங்கள் டிஸ்டிரிக்ட் டெவலப்மெண்ட் கௌன்சிலில் போட்ட தீர்மானத்தை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை என்று சொன்னார்கள். இந்த டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கௌன்சிலின் ஆலோசனைகள் எதுவும் சர்க்காருக்கு வரவேண்டிய அவசியமே இல்லை. அந்தப் பொறுப்பு ஆர்.டி.ஒ. அவர்களுடையது. அவர்கள் பரிசீலனை செய்து விதி முறைப்படி அங்கீகாரத்திற்கு டிரான்ஸ்போர்ட் கமிஷனருக்கு அனுப்ப வேண்டும். அரசாங்கத்திற்கு வரவேண்டிய அவசியம் இல்லை. ரீஜனல் ட்ரான்ஸ்போர்ட் அதாரிடியும் முறைப்படி சிபாரிசு செய்த பிறகு, ட்ரான்ஸ் போர்ட் கமிஷனர் குறுக்கே நிற்கவேண்டிய அவசியம் இல்லை. கனம் மகாலிங்கம் தங்கள் பிரசங்கத்தில் சொன்ன மாதிரி, இந்த மாகாணத்தில் போக்குவரத்து ஒரு இண்டஸ்ட்ரியாக மாற வேண்டும் ; அதற்குத் தகுந்த சூழ்நிலையை அரசாங்கம் உறுவாக்கவேண்டும். அவர்கள் சொல்வது போல் "**whims and fancies of local authorities**" என்று இல்லாமல், அது வரையறைக்கு உட்பட்டு இயங்க வேண்டும். அதனால்தான் அது ட்ரான்ஸ்போர்ட் கமிஷனருக்கு வரவேண்டும் என்பது. அதே நேரத்தில் மூன்றாவது திட்டத்தில் இந்தப் போக்குவரத்து நல்ல அபிவிருத்தியடையவேண்டும் என்று, கனம் ஸ்ரீனிவாச அய்யர் சொன்னதுபோல், கிராமவாசிகளுக்கும், நகர வாசிகளுக்கும் ஒட்டுமொத்தமாக வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். ஸ்ரீமதி அம்மையார் சொன்னார்கள் அதை "டிசெண்ட்ரலைஸ்" பண்ணவேண்டும் என்று. அது ரொம்ப சுலபம். இந்தப் போக்குவரத்தைப் பொருத்த வரை, டிசெண்ட்ரலைஸ் பண்ணி, பஞ்சாயத்து யூனியன், பஞ்சாயத்து கௌன்சில் இவர்கள் விருப்பத்திற்கு இந்தப் போக்குவரத்து நடத்தலாம். ஆனால் அது பொதுவாக இந்த மாகாண போக்குவரத்து அபிவிருத்தியை அவர்கள் சிந்திக்கவில்லை என்பதைத்தான் காட்டுகிறது. போக்கு வரத்தைப் பற்றி இவ்வளவு விவரமான அறிக்கை கொடுத்திருப்பதற்குக் காரணம், சர்க்கார் அதை ஒரு லைசென்ஸ் வழங்கும் இலாகாவாகக் கருதவில்லை ; சர்க்காரின் எண்ணம் இது ஒரு அபிவிருத்தி இலாகா, இது ஒரு முக்கிய இலாகா என்று கருதுகிறது. அப்படியில்லையென்றால் இந்த மாகாணத்தில் நாம் விரும்பும் அளவுக்குப் போக்குவரத்து நல்ல முறையில் இயங்க முடியாது. நினைக்கக்கூடிய மாறுதல்களும் ஏற்பட முடியாது. ஆகவே இதை ஒரு ஸ்பெஷலைஸ்ட் டிபார்ட்மெண்டாகவே கருத விரும்புகிறேன் ; நிபுணர்கள் அடங்கிய டிபார்ட்மெண்டு ஆக ஆக்க வேண்டும் ; கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்ட பல்வேறு கருத்துக்களைப் பார்த்தால், நான் நினைக்கும் முறையிலே இது செயல்பட வேண்டும், அந்த வகையில் இதை உருவாக்க வேண்டும் என்ற கருத்து வலுவடைகிறது.

இன்றைக்கு ஒரு பகுதியிலே அதிக பஸ்கள் விட வேண்டும் என்ற காரணம் அதிகமாக இருக்கலாம். உதாரணமாக கனம் கோதண்டராமனை எடுத்துக் கொண்டால், அவர்கள் பஸ்ஸில் போக முயற்சி எடுக்கலாம் ; பஸ் டாண்டில் நிற்பார் ; டிக்கட் கிடைக்காது. உடனே அவர்கள் அந்தப் பகுதியில் அதிக பஸ்கள் விட வேண்டும் என்பார்கள். கனம் அண்ணாமலை பஸ் நிலையத்திற்குப் போவார், அங்கு பஸ் கிடைக்காது, அவர் உடனே பஸ் முதலாளி மேல் கோபம் அடைவார். இதன் காரணங்களைப் புரிந்து கொள்ள அவர்களுக்குச் சரியான புள்ளி விவரங்கள் கிடையாது. சர்க்காருக்கே தக்க புள்ளி விவரங்கள் கிடையாது. அவைகளைச் சரிசெய்ய வேண்டும்.

கனம் அங்கத்தினர் மகாலிங்கம் சொன்னார்கள், இரண்டாவது திட்டகாலத்தில் 25 பர்செண்ட் பஸ்களை அதிகப் படுத்த வேண்டும் என்று சொன்னேம். அது இன்னும் நிறைவேறவில்லை, அதற்கு எடுத்துக்கொண்ட



21st March 1961] [Sri V. Ramaiah]

முயற்சிகள் என்ன என்று கேட்டார்கள். இன்றைக்கு நம்மிடம் இருக்கும் புள்ளி விவரங்களைப் பார்த்தால், கடந்த 3, 4 வருஷங்களில் அதிகமாக போக்குவரத்து வசதி ஏற்படுத்தியிருக்கிறோம் என்பது தெரியும். இன்றைக்கு பஸ் எண்ணிக்கையைப் பொறுத்த வரையில், 3,792 லிருந்து 4,920 பஸ்கள் வரை அதிகரித்திருக்கிறது. அதிகரிக்கப்படவேண்டும் என்று சொல்லும்போது, அதைச் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும். அதே நேரத்தில் பஸ்களில் உள்ள ஸீடிங் கபாஸிடியையும் புரிந்து கொள்ள வேண்டும். ஸீடிங் கபாஸிடியைப் பார்த்தால், 1956-ல் 151,180 தான். அதுவே இன்றைக்கு 221,400 அளவுக்கு உயர்ந்திருக்கிறது. ஸ்ரீ ஸ்ரீநிவாச அய்யர் சொன்னது போல பஸ்களை ஓட்டினால் மட்டும் போதுமா ? நமக்கு இருக்கக்கூடிய வசதிகளை வைத்துக் கொண்டு முழுப் பலனையும் அடையும் முறையில் செய்தாக வேண்டும். இன்றைக்கு அதிகமாக பஸ் போக்குவரத்து வசதிகள் ஏற்படவேண்டும் என்று சொல்லும்போது, மற்றொரு பக்கத்தில் கஷ்டம் ஏற்படுகிறது. பஸ்களுக்குத் தேவையான எல்லாப் பொருள்களும், வெளி நாடுகளிலிருந்து வரவேண்டியிருப்பதால், பாரின் எக்ஸ்சேஞ்ச் தேவைப்படுகிறது. அதைக் கண்டு பிடித்தாக வேண்டியிருக்கிறது. கிடைக்கும் எல்லாப் பாரின் எக்ஸ்சேஞ்சையும் பஸ் போக்கு வரத்துக்கே உபயோகிக்கலாம், மற்ற ஆக்க வேலைகளைப்பற்றி அக்கறையில்லை என்று சொல்லிவிட முடியாது. ஆகவே அந்தக் கஷ்டத்தையும் பார்க்க வேண்டும். டெவலப்மெண்ட் ஆக்டிவிடிகளில் முன்னேற்றம் காணவேண்டும். ஆகவே கிடைக்கும் பாரின் எக்ஸ்சேஞ்ச் எல்லாவற்றையும் பகிர்ந்து எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

கனம் அங்கத்தினர் ஸ்ரீனிவாச அய்யர் சொன்னார்கள், சீட்டுகளில் உட்காரக்கூட முடியாமல், நெருக்கடி இருக்கிறது என்று. அதை நாங்கள் உணராமல் இல்லை. பஸ் பிரயாணத்தில் உள்ள கஷ்டங்கள் எங்களுக்கும் தெரியும். நான் நல்ல பஸ்கள் இல்லாத காலத்திலேயே பஸ்ஸில் போய் இருக்கிறேன். இந்த ஸீடிங் கபாஸிடி பொறுத்த வரை ஏதோ நன்றாகப் பரிசீலனை செய்யாமல் செய்து விட்டதாக நினைக்க வேண்டாம். நிபுணர்கள் கருத்துக்களைக் கலந்துகொண்டு, இதிலே சம்பந்தப்பட்டவர்களின் கருத்துக்களையும் வைத்துக் கொண்டுதான் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறோம்.

இன்றையதினம் போக்கு வரத்துக்கு அதிகப்படியான தேவை ஏற்பட்டிருக்கிறது. நேற்றைய தினமோ அல்லது அதற்கு முந்திய தினமோ சில அங்கத்தினர்கள் கூறினார்கள், ஒரு பர்லாங், இரண்டு பர்லாங் கூட நடக்க மக்களுக்கு மனம் வரவில்லை என்று. ஆக, கிராமப் புறங்களிலும் போக்கு வரத்து வசதியை அதிகப்படுத்த வேண்டுமென்று மக்கள் விரும்புகிறார்கள். குறிப்பாக வட ஆற்காடு ஜில்லாவைப் பொறுத்த வரையில் கூறுகிறேன், அங்கு நான் போகும்போது கிராமங்கள் தோறும், அங்குள்ள மக்கள் கோரிக்கைகள் கொடுக்கிறார்கள். ஒரு நாளுக்கு 10, 12 கிராமங்கள் போகும் பழக்கம் எனக்கு உண்டு. நான் போகக்கூடிய கிராமங்களிலிருந்தெல்லாம் கோரிக்கைகள் கொடுக்கப்படுகின்றன. எவ்வளவு பின்தங்கிய கிராமமாக இருந்தாலும் சரி, அவர்கள் கொடுக்கக்கூடிய மனு, அவர்களுக்கு வேண்டியது அவர்களது கிராமத்திலிருந்து நேரிடையாகச் சென்னைப்பட்டணத்திற்கு பஸ்விட வேண்டுமென்பதாகும். எல்லாம், அவரவர்கள் கிராமங்களிலிருந்து நேரிடையாகச் சென்னைப்பட்டணத்திற்கு பஸ் விட வேண்டுமென்பதுதான். கனம் ராமஸ்வாமி முதலியார் அவர்களுக்குத் தெரியும், அவர்கள் ஜில்லாவிலும் இதே கோரிக்கைதான். கனம் சடயப்ப முதலியார் அவர்கள் இந்த விவாதத்தில் பங்கெடுத்துக் கொள்ளாவிட்டாலும் அவர்களது ஒரே கோரிக்கை அவரது கிராமத்திலிருந்து சென்னைப்பட்டணத்திற்கு நேரிடையாகப் பஸ் விட வேண்டுமென்பதுதான். பெரிய ட்ரங்க் ரோடுகளில் எப்படி ஐந்து அல்லது பத்து நிமிடங்களுக்கு ஒரு முறை பஸ்கள் ஓடுகிறதோ அதே போன்று எல்லா கிராமங்களிலிருந்தும் ஓட வேண்டுமென்றுதான் மக்கள் ஆசைப்படுகிறார்கள். ஸ்ரீனிவாச ஐயர் அவர்கள் கூட அதைப் பற்றிச் சொன்னார்கள், ஆர்.டி.ஒ. பர்மிட் கொடுக்கட்டும்,

எஸ்.டி.ஏ. பர்மிட் கொடுக்கட்டும், எவ்வளவு பர்மிட்டுகள் கொடுத்தாலும் மக்கள் எல்லாம் வேண்டுமென்கிருர்கள். நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். ரூட்டுகள் அதிகம் கொடுத்தால், அதிக லாபம் வரும் என்று நினைக்கிருர்கள். அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று சொல்கிறபோது, இதன் " எக்கனுமிக்ஸ் " ஐ படித்துப் புரிந்துகொள்ள வேண்டும். எவ்வளவு அதிகப்படுத்த முடியும், எவ்வளவு தாங்கும் என்று புரிந்து கொள்ளவேண்டும். கட்டுப்பாடு இல்லாத முறையில் பஸ் ரூட்டுகளை அதிகப்படுத்திக் கொண்டே போய், அதிகமாக எங்கு பார்த்தாலும் பஸ் ரூட்டுகளைத் திறந்து விடும் பட்சத்தில் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஸ்தம்பிதம் ஏற்பட்டு விடும். அதனுல் பெரும் நஷ்டம் ஏற்படும். அதனுல் அபிவிருத்தி வேலைகளுக்குக் குந்தகம் ஏற்படும். கடந்த நான்கு வருடங்களில் போக்கு வரத்தில் ஏற்பட்டிருக்கக் கூடிய அபிவிருத்தியைக் கண்காணித்துப் பார்த்து வந்தால், வரக்கூடிய ஐந்து வருடங்களில் என்ன செய்யவேண்டும், எந்தெந்த வழிகளில் எப்படி எப்படி செயல்பட வேண்டும், எந்த முறையில் செய்யவேண்டும் என்பதை ஆராய்ந்து பார்ப்பதற்காக மத்திய அரசாங்கம் இரண்டு கமிட்டிகளைப் போட்டிருக்கிருர்கள். மசானி கமிட்டி முடிவு வந்திருக்கிறது. அதைவிட நல்ல முறையில் நன்கு ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்பதற்காக நியோகி கமிட்டியைப் போட்டிருக்கிருர்கள். மசானி கமிட்டி ஒரு முக்கிய முடிவைச் சொல்லியிருக்கிருர்கள். ஒவ்வொரு போக்கு வரத்து இலாகாவிலும் ஒவ்வொரு டெவலப்மெண்ட் " விங்க் " இருக்க வேண்டுமென்று. இந்தக் கருத்தை அவர்கள் தெரிவிப்பதற்கு முன்பாகவே, நமது அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் அந்தக் கருத்து அடிப்படையில் நாம் ஒரு " டெவலப்மெண்ட் விங்க் " ஏற்படுத்தியிருக்கிறேம். இந்த விங்கைப் பொறுத்த வரையில் இப்பொழுது அது ஆரம்பக் கட்டத்தில்தான் இருக்கிறது. ஒவ்வொரு ஜில்லாவிலும் பஸ் போக்கு வரத்தை எவ்வளவு அதிகப்படுத்த வேண்டும், அதற்கு என்ன காரணம், அங்கு மொத்தத்தில் செய்யப்படுகிற அபிவிருத்தி வேலைகள், அங்குள்ள தேவை எல்லாவற்றையும் பார்த்து, எல்லாப் புள்ளி விவரங்களையும் வைத்துக்கொண்டு ஒரு அறிக்கை கொடுக்கச் சொல்லியிருக்கிறேம். அந்த அதிகாரியைப் பொறுத்த வரையில், பல ஜில்லாக்களில் நேரிடையாகப் பார்த்து அவர்களது முடிவைச் சொல்லியிருக்கிருர்கள். அது உபயோககரமாயிருக்கிறது. அந்த அடிப்படையில் போக்கு வரத்து வளர வேண்டுமென்று நான் நிச்சயமாக ஆதரிக்கிறேன். விருப்பு, வெறுப்புக்கு இடம் கொடுக்காமல், மற்றவர்களின் குறுக்கீடுகளுக்கு இடம் கொடுக்காமல், ஒரு தனிப்பட்ட பாடியே போய் பல புள்ளி விவரங்களை வைத்துக்கொண்டு முடிவிற்கு வருகிருர்கள். இது ஆரம்பக் கட்டத்தில் இருக்கிறது என்று சொன்னேனே, காரணம் இந்த விங்கைப் பொறுத்த வரையில் இன்னும் தீவிரமாக அது செயல்பட வேண்டுமென்பதுதான் என் ஆசை. அவர்களுக்கு இன்னும் அதிகப்படியான அதிகாரங்கள் கொடுக்க வேண்டுமென்பதுதான் என் ஆசை. படிப்படியாக இவர்கள் அந்தஸ்தை உயர்த்தி, சில காலத்திற்குள், திரு. மஹாலிங்கம் அவர்கள் சொன்னது போல், குறிப்பிட்ட அதிகாரிகளின் விருப்பு, வெறுப்புக்கு இடம் இல்லாதபடி புது ரூட்டுகள், வேரியேஷன் கொடுப்பது, இவைகளில் அதிகப்படி கவனம் செலுத்தக்கூடிய முறையில் வேண்டிய, தக்க மாறுதல்கள் செய்ய வேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேன். இவை, ஒரு திட்ட அடிப்படையில் இருக்க வேண்டுமென்பது என் ஆசை. அதற்கு முன்னேடியாக ஒரு அதிகாரியை நியமித்திருக்கிறேம். திரு. செல்வராஜ் அவர்கள் சொன்னது போல் டெவலப்மெண்ட் விங்கின் முடிவு வரும் வரை, ஒரு ஜில்லாவின் போக்கு வரத்து வசதியைக் குறைப்பதோ, அல்லது அதிகப்படுத்துவதையோ தடுப்பதற்கில்லை. இப்பொழுது நிலவிவரும் முறைப்படி ஜில்லா போக்கு வரத்து அதிகாரி ஆர்.டி.ஏ. இவர்கள் புது ரூட்டுகள் திறந்து கொண்டிருக்கிருர்கள். இடைக்காலத்தில் இருக்கக்கூடிய கஷ்டம் ஒரு புறம் இருக்க இந்த அதிகாரிகள் தானகவே செயல்பட்டுக் கொண்டிருக்கிருர்கள். மற்றெரு பக்கத்தில் இந்த விங்கைச் சார்ந்தவர்கள் புது முடிவு எடுத்துக் கொண்டிருக்கிருர்கள். எங்கெங்கு தேவை என்னென்ன இருக்கிறது





என்று பார்த்து முடிவுகள் எடுக்க வேண்டுமென்பது என் ஆசை. அதற்குத் தகுந்தாற்போலுள்ள சூழ்நிலையை வளர்த்துக் கொண்டிருக்கிறேம். 1956-ல் இந்த மாகாணத்தில் அதிக பட்சம் நாள் ஒன்றுக்கு எவ்வளவு மைல்கள் பஸ்கள் ஓடிக் கொண்டிருந்தது, இன்று எவ்வளவு உயர்ந்திருக்கிறது என்பதைப் பற்றி விவரம் கொடுத்திருக்கிறேன். 1956-ல் அதிக பட்சம் 160 மைல் தான் போக முடிந்தது, இன்றையதினம் சாதாரண பஸ்கள் 200 மைல், எக்ஸ்பிரஸ் பஸ்கள் 280 மைல்கள் ஓடிக்கொண்டிருக்கிறது. 200, 280 மைல்கள் என்று சொல்லும்போது ஒரே ஜில்லாவிலேயே இருக்க முடியுமா, அல்லது இரண்டு மூன்று ஜில்லாக்களைத் தொடக் கூடிய நிலை ஏற்படுமா, சிறு சிறு ரூட்டுகள் இருந்தால் போதுமா, சிறிய ரூட்டுகளை ஆரம்பித்து வைத்துவிட்டு, அம்மையார் அவர்கள் சொன்னது போல், " வேரியேஷன் " கொடுத்து, நீட்டிக் கொண்டே போவதா, இவை போன்ற பெரிய பிரச்னைகள் கவனிக்கப்பட வேண்டியிருக்கின்றன. ஆகவே, இதை ஒரு அபிவிருத்தி இலாகாவைப் போல் கருதி, புது முயற்சிகள் எடுக்க வேண்டும் என்பது என் ஆசை. மேலும் நல்ல நிர்வாகத்துடன் மக்களின் விருப்பங்களுக்குத் தகுந்தபடி, அவர்களின் தேவைக்குத் தகுந்தபடி, இன்றுள்ள சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு அதோடு மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டகால அபிவிருத்தி வேலைகளில் ஈடுபட்டிருப்பதை மனதில் கொண்டு, அதன் டெம்போவை மனதில் கொண்டு, எப்படி போக்கு வரத்து சாதனத்தை மேலும் உயர்த்த முடியும் என்பதை மனதிற் கொண்டு, வேண்டிய முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது. நான் பல இடங்களில் பேசும்போது என் கருத்தைச் சொல்லுவதுண்டு. எனது ஆசை மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவதற்கு முன் எல்லா கிராமங்களுக்கும் பாதை வசதி ஏற்பட வேண்டும் என்பதுதான். பாதை வசதி ஏற்பட்டால் மட்டும் போதாது. பஸ்களும் ஓட வேண்டுமென்பது. கிராமவாசிகளுக்குப் போக்கு வரத்து வசதியை எந்த அளவு நாம் அதிகமாக ஏற்படுத்திக் கொடுக்கிறேமோ, அந்த அளவு நமது திட்டங்கள் முன்னேறும் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. கிராமவாசிகள் ஆக்க வேலைகளில் அதிகமாக ஈடுபடக் கூடிய சக்தி படைத்தவர்கள். அவர்களுக்கு அப்படி ஆக்க வேலைகளில் ஈடுபட வேண்டுமென்ற எண்ணமும் உண்டு. ஆகவே, அந்த எண்ணத்தை நம் நாட்டின் முன்னேற்றத்திற்காக பயன்படுத்திக்கொள்ளவேண்டும். எந்த அளவிற்கு நாம் போக்கு வரத்து வசதிகளை அதிகப்படுத்திக் கொடுக்கிறேமோ அந்த அளவு நம் மாநிலம் துரிதமாக முன்னேறும் என்பதில் யாதொரு சந்தேகமும் கிடையாது. டிரான்ஸ்போர்ட்டை ஒரு இண்டஸ்ட்ரியாகக் கருத வேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன். டிரான்ஸ்போர்ட் பிரச்னைகளை ஏனே தானே என்று பார்க்காமல் நல்ல முறையில் கண்காணித்து, இது நிபுணர்கள் நடத்த வேண்டிய ஒரு வேலையாக மாற வேண்டுமென்பதுதான் என் ஆசை. அந்த அடிப்படையில் இன்று சொன்ன பல்வேறு கருத்துக்களையும் மனதில் கொண்டு இந்த இலாகாவை இன்னும் நல்ல முறையில் நடத்துவதற்கு, என்னென்ன புது முயற்சிகள் எடுக்க வேண்டுமோ, அவைகளை எடுத்துக் கொள்ள நான் தயாராயிருக்கிறேன். இந்த விவாதத்தில் 22 அங்கத்தினர்கள் பங்கெடுத்துக் கொண்டார்கள். அவர்கள் கூறிய கருத்துக்களை எல்லாம் நான் எடுத்துக் கொள்ளுகிறேன். இதில் கூறப்பட்ட நல்ல கருத்துக்களைத்தான் எடுத்துக்கொள்ள முடியும். கனம் ப. உ. சண்முகம் அவர்கள் சொன்னது மாதிரி ஏதாவது கற்பனை செய்துகொண்டு சொன்னுல் அதை எல்லாம் ஏற்றுக் கொள்ளமுடியாது. அவர்கள் கூட இருக்கின்ற திரு. செல்வராஜ் போன்றவர்களைக் கேட்டால்கூட இதை ஒத்துக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். அவர் குறிப்பிட்டு ஒரு விவகாரத்தைச் சொல்லும்போது அதைப் பற்றியுள்ள விவரங்களை அறிந்து கொள்வதற்கு நான் முயற்சி செய்கின்றேன். 1-30 p.m.

DEPUTY SPEAKER : May I know how long will the Hon. Minister take to finish his reply?

THE HON. SRI V. RAMAIAH : Five more minutes, Sir.

[Sri V. Ramaiah] [21st March 1961]

அதோடு ஒரு கட்சியைச் சேர்ந்தவர்களுக்குத் தான் பெர்மிட் கொடுக்கப்படு
கிறது என்று சொல்லுவதில் நிச்சயமாக அவ்விதம் கொடுப்பதில்லை
என்கின்ற ஒரு உறுதியை என்னால் உங்கள் முன் சொல்ல முடியும்.
இந்த விஷயத்தில் அரசாங்கத்தினுடைய குறுக்கீடு நிச்சயமாகக் கிடையாது.
ஆகவே, எஸ். டி. ஏ. மீது இது மாதிரி எந்த விதமான குற்றச்சாட்டும்
கிடையாது. இதில் முக்கியமாகக் காங்கிரஸ் கட்சியில் இருக்கின்ற சிலருக்கு
பெர்மிட்டுகள் கொடுப்பதற்குரிய எல்லா அம்சங்களும் இருந்தும் கூட
காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் என்கின்ற காரணத்தால் பெர்மிட்
கொடுக்கப்படவில்லை என்கின்ற குற்றச்சாட்டைத் தான் நான் அடிக்கடி
கேட்கிறேன். ஆகவே கட்சிக் கண்ணோட்டத்தோடு அதிகாரிகள்
நடந்து கொள்கிறார்கள் என்று சொல்வதற்கு இதில் இடமேயில்லை.
கட்சிச் சார்பில் கொடுக்கலாம் என்றிருந்தால் இதைச் சுலபமாகச் செய்து
கொண்டிருக்கலாம். ஆகவே, கலெக்டர்கள், மற்றுமுள்ள அதிகாரிகள்
கட்சிக் கண்ணோட்டத்தோடு நடந்து கொள்கிறார்கள் என்ற குற்றச்சாட்டுக்கு
இடமேயில்லை என்பதைத் தெரிவித்து கொள்கிறேன். கனம் அங்கத்தினர்
ப. உ சண்முகம் அவர்கள், ஏதோ ஓர் அம்மையாரின் பேரில் பெர்மிட்
கொடுக்கப்பட்டதாகச் சொன்னார்கள். இதைப் பற்றி விசாரித்தேன். சொல்
வதில் வெட்கப்படுவதற்கு என்ன இருக்கிறது என்று தெரியவில்லை. விசா
ரித்த பிறகு முடிவு தெரிந்தது, இதில் வெட்கித் தலை குனியவேண்டும்
என்று சொல்வதற்கு என்ன இருக்கிறது என்று தெரியவில்லை. இந்த
இலாகாவிலுள்ளவர்கள் எந்த முறையில் நடந்து கொள்கிறார்கள் என்பது
கனம் செல்வராஜ், திரு அண்ணாமலை போன்றவர்களுக்கு நன்றாகத்தெரியும்
என்று நம்புகிறேன். இந்த இலாகாவைப் பொறுத்த வரையில், கட்சிக்
கண்ணோட்டத்துடனோ, அல்லது வேறு எந்த முறையிலேனும் தவறாகவோ
கடந்த நான்கு வருடங்களில் பெர்மிட் வழங்குவதில் நடப்பதில்லை என்
பதை என்னால் சொல்ல முடியும். அதன் காரணமாகத்தான் இந்த
அறிக்கையை தைரியமாக உங்கள் முன் என்னால் வைக்க முடிகிறது.

பஸ் ஸ்டாண்டுகளைப் பற்றிப் பலர் குறிப்பிட்டார்கள். முன்னால் எல்லாம்
நகர சபைகள் பஸ் ஸ்டாண்டுகளில் வாங்கக் கூடிய பணத்தை அதற்காகச்
செலவு செய்வதில்லை. இப்போது அப்படியல்ல. முன்னால் இதிலிருந்து
கிடைக்கின்ற பணத்தைக் கொண்டு பள்ளிக்கூடத்தை நடத்துவார்கள்,
வேறு பல வேலைகளை நடத்துவார்கள். ஆனால், இப்போது அப்படியல்ல.
பல பஸ் ஸ்டாண்டுகளை நான் நேரடியாகப் பார்வையிட்டிருக்கிறேன்.
இப்போது இதற்காக பெருமுயற்சி எடுக்கப்பட்டு நல்ல விதமாகத் திருத்தப்
பட்டிருக்கிறது. மேலும் நல்ல முறையில் பஸ் ஸ்டாண்டுகளை அமைப்ப
தற்கு டிரான்ஸ்போர்ட் கமிஷனர், ஸ்தல ஸ்தாபன இன்ஸ்பெக்டர் இவர்
களை எல்லாம் சேர்த்து ஒரு கமிட்டி அமைத்து அது செய்கின்ற முடிவு
களை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். ஒரு பிரயாணி பஸ் ஸ்டாண்டுக்கு
வந்தால், பஸ் வருவது வரையிலும் காத்திருந்து, பஸ் வந்த பிறகு
பஸ்ஸில் ஏறிப் போவது வரையிலும் நல்ல முறையில் இருப்பதற்கு
எல்லா விதமான வசதிகளும் இருக்க வேண்டும் என்பதுதான் என்னு
டைய ஆசை. தஞ்சாவூர் பஸ் ஸ்டாண்டைப் பற்றிச் சொன்னார்கள்.
அங்கேயும் பல வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இருந்தாலும் கூட
அங்கு ஐந்து நிமிடம் அங்கே தங்கியிருக்க முடியாது. பழ வியாபாரிகள்
அதிகமாக இருக்கிறார்கள். இதன் காரணமாக ஈக்களின் தொந்திரவு
அதிகமாகிக் கொண்டிருக்கிறது. முனிசிபாலிட்டிகள் எல்லாம் பணத்தைச்
செலவு செய்து, பஸ் ஸ்டாண்டைக் கட்டிவிட்டால் மட்டும் போதாது.
நல்ல முறையில் அதை பாதுகாத்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்க
வேண்டும். ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்
வது எல்லாம், உடனடியாக இருக்கின்ற பஸ் ஸ்டாண்டுகள் எல்லாம் நல்ல
முறையில் இருப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும்
என்பதுதான். பிரயாணிகள் ஒரு சில மணி நேரம் பஸ் ஸ்டாண்டில்
தங்கியிருந்தால் கூட, எந்த விதமான கஷ்டமும் இல்லாத முறையில்
இருக்கக்கூடிய முறையில் வசதிகளைப் பெருக்க வேண்டும். அதோடு முக்கிய
மாக எப்போதும் அதிகமாகப் பேசாத திரு காதர் ஷெரீப் அவர்கள்



21st March 1961] [Sri V. Ramaiah]

சொன்னார்கள், பஸ் ஸ்டாண்டுகளில் புக்கிங் தொந்திரவு அதிகமாக
இருக்கிறது என்று. இராமநாதபுரம், மதுரை போன்ற மாவட்டங்களில்
இந்தத் தொல்லை இருப்பதாகத் தெரியவில்லை. வடஆற்காடு மாவட்டத்தில்
மட்டும் ஏன் இது அதிகமாக இருக்கிறது என்று தெரியவில்லை.
இருந்தாலும் என்னுடைய அதிகாரிகள் இதைப் பற்றிக் கவனித்து
இதைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்வார்கள் என்று
தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பொதுவாக டூரிஸம் இப்போது நமது நாட்டில் வளர்ந்து கொண்
டிருக்கிறது. இதை இன்னும் நல்ல முறையில் வளர்க்க வேண்டும்.
என்னுடைய ஆசையெல்லாம், இந்தத் தலைநகரைப் பொறுத்த மட்டில்
இங்குள்ள மக்கள் விடுமுறை நாட்களில் வெளியே போய் எல்லா இடங்
களையும் பார்ப்பதற்கு வசதி செய்திருக்க வேண்டும். பஸ் சொந்தக்காரர்
கள் கூட இதில் ஏதாவது வசதிகள் செய்து கொடுக்க முன்வந்தால்,
அதற்காகச் சர்க்காருடைய உதவியைக் கேட்டால் அதைக் கவனிப்பதற்கும்
நான் தயாராக இருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.
நகரத்தில் இருக்கக்கூடிய மக்கள் பக்கத்தில் இருக்கும் பல இடங்களையும்
போய்ப் பார்த்து வரக் கூடிய வசதி இருக்க வேண்டும். கனம் அங்கத்
தினர்கள் கூட கழிந்த வாரத்தில் நெய்வேலி, வீடூர் பிராஜக்ட் போன்ற
வைகளைப் போய்ப் பார்வையிட்டு வந்ததாக அறிந்தேன். அதை நான்
வரவேற்கிறேன். டூரிஸ்ட் டிராபிக்கைப் பொறுத்த வரையில் நல்ல முறை
யில் விருத்தி அடையச் செய்ய வேண்டும் என்பதுதான் இந்த இலாகா
வினுடைய நோக்கம். இதற்காக வேண்டிய நடவடிக்கைகளை இந்த
இலாகா எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளு
கிறேன். ஒரு முக்கியமான விஷயத்தை மட்டும் குறிப்பிட்டுவிட்டு முடித்
துக் கொள்ளுகிறேன். தற்போது பஸ் போக்கு வரத்தில் நெருக்கடி ஏற்
பட்டிருப்பதைப் பற்றி திரு. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் சொன்னார்
கள். ஒரு ரூட்டில் பஸ் விட வேண்டுமென்று ஏ, பி என்று இரண்டு பேர்
கள் பெர்மிட் கேட்கின்றார்கள். அவர்களுடைய தகுதிகளை எல்லாம்
அரசாங்கம் பார்த்து ஆர். டி. ஓ. அவர்கள் ஏ என்பவருக்குப் பெர்மிட்
கொடுக்கிறார், உடனே பி என்பவர் ஹைகோர்ட்டுக்கு வந்து வக்கீல்களை
பிடித்து ரிட் பெடிஷன் ஒன்று போட்டுவிடுகிறார், அதைக்
கோர்ட்டாரும் அங்கீகாரம் செய்து விடுகிறார்கள். அதை அங்கீகரிப்பதுடன்
இதன் மீது முடிவு எடுக்கும் வரையில் பி என்பவருக்கும் பெர்மிட்
கொடுக்க அனுமதித்து விடுகிறார்கள். இதன் காரணமாக இரண்டு பெர்
மிட்காரர்கள் ஒரே ரூட்டில் போட்டியாகப் பஸ் போக்கு வரத்தை நடத்திக்
கொண்டிருக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இவ்விதம் இப்போது
144 ரூட்டில் இருப்பதாக என்னிடம் கணக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.
இது ரொம்பவும் கஷ்டமாகத் தான் இருக்கிறது. இருந்தாலும் கூட இன்
றைக்கு இருக்கக்கூடிய சட்ட அடிப்படையில் ஹைகோர்ட்டினுடைய முடி
வுக்குக் குறுக்கே நின்று நம்மால் ஒன்றும் செய்ய முடியாது. ஒரு ரூட்
டில் பஸ் விடுவதற்குப் பெர்மிட் வாங்க வேண்டுமென்றால் எவ்வளவோ
கஷ்டங்கள் இருக்கின்றன. இதற்காக நான்கைந்து மாதங்கள் கஷ்டப்பட
வேண்டியிருக்கிறது. இவ்விதம் எக்ஸிக்யூட்டிங் அடிப்படையில் நான்
கைந்து மாதங்களில் நடக்கக் கூடியதை ஹைகோர்ட்டில் ஒரே நிமிஷத்தில்
நடத்தி விடுகிறார்கள். இதை வைத்துக் கொண்டு இரண்டு, மூன்று வரு
டங்கள் பஸ் ஓடிவிடுகிறது. இதற்கு என்ன செய்யலாம் என்பதைப் பற்றி
சர்க்கார் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. இப்போது திரு. கிருஷ்ணசாமி
ரெட்டியார் அவர்கள் சொன்னதன் பின்னால் அல்ல, இதற்கு முன்னாலே
சர்க்கார் இதைப் பற்றிப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. இருந்
தாலும் கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னதையும் ஒரு தூண்டு
கோலாக வைத்துக் கொண்டு இதை நன்றாகப் பரிசீலனை செய்து முடிவு
எடுக்க சர்க்கார் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளு
கிறேன். கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒரு பெரிய பிரச்னையைப்
பற்றிச் சொன்னார்கள், பிராட்வே பஸ் ஸ்டாண்டைப் பற்றி, பிரயாணிகள்
சௌகரியமாகப் போய் அங்கு தங்கியிருக்கக்கூடிய முறையில் எல்லா
வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டார்கள்

[Sri V. Ramaiah] [21st March 1961

இதைப் பற்றி விசாரித்து ஒரு ரிபோர்ட்டைக் கொடுக்க வேண்டும் என்று ஒரு கமிட்டியை சர்க்கார் நியமித்தது. முன்பு கவுன்சில் மெம்பராய் இருந்த கனம் வி. வி. ராமசாமி அவர்கள் தலைமையில் இந்தக் கமிட்டி நன்றாகப் பரிசீலனை செய்து ஒரு ரிபோர்ட்டைக் கொடுத்திருக்கிறது. அது அரசாங்கத்தினுடைய கையில் வந்திருக்கிறது. இப்போது பரிசீலனையும் நடந்து கொண்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். ஆகவே, இதன் மீது சீக்கிரமாகவே நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மேலும், ஹரிஜனங்களுக்கும் பஸ் ரூட்டுகள் வழங்க வேண்டும் என்கிற பிரச்னையைப் பற்றி கனம் மாணிக்கம் அவர்கள் சொன்னார்கள். அதே போன்று தியாகிகளுக்கும் வழங்க வேண்டும் என்றும் சொல்லப்பட்டது. இது இப்போதுள்ள அரசியல் சட்டத்திற்கு முரண்பாடாக இருக்கிறது.

DEPUTY SPEAKER: I have no objection if the House permits the Hon. Minister to take some more time for his reply.

THE HON. SRI V. RAMAIAH: அடுத்தபடியாக, எப்படி மாஜி ராணுவத்தினருக்குக் கூட்டுறவு அடிப்படையில் பஸ் பர்மிட்டுகள் கொடுக்க வசதி ஏற்பட்டிருக்கிறதோ அதே போல ஹரிஜன மக்களும், அல்லது பஸ் போக்கு வரத்துத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளிகளும், தியாகிகளும் சேர்ந்து கூட்டுறவு சங்கங்கள் வைத்துக் கொண்டால் அவர்களுக்குக் கூட்டுறவு சங்கங்களுக்குக் கொடுக்கும் அந்தச் சலுகைகளும் கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆக, அந்த முறையில் இதில் ஆசை கொண்டிருக்கும் ஹரிஜன அங்கத்தினர்களும், தியாகிகள் சார்பாகப் பேசக் கூடிய அங்கத்தினர்களும், போக்கு வரத்துத் தொழிலாளர்கள் சார்பாகப் பேசக் கூடிய கனம் அங்கத்தினர் கோதண்டராமன் அவர்களும் முயற்சி எடுத்துச் செய்யலாம். ஏன் நானே செய்யவில்லை என்று கேட்டார்கள். எனக்கு வேறு வேலையில்லை என்றால் அதைச் செய்து கொண்டிருக்கலாம். அவர்களைப் போல உள்ளவர்கள் முயற்சி எடுத்துக்கொண்டு நல்ல விதமாகச் செய்ய வேண்டும்.

இன்னும் இங்கே குறிப்பிட்டிருக்கிற எல்லாப் பிரச்னைகளையும் வரக் கூடிய வருஷத்தில் எனது இலாகா தீர்த்துக் கொடுக்க முயற்சி எடுக்கும். நிச்சயமாக கனம் அங்கத்தினர் கோதண்டராமன் அவர்கள் வெட்டுப் பிரேரணை மூலமாகச் சொல்ல வேண்டிய கருத்துக்களைச் சொல்லிவிட்டார்கள். வரக்கூடிய மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் போக்கு வரத்து இலாகா ஆக்க வேலைகளுக்குப் பயன்படும் இலாகாவாக அமைகிறது. ஆகையால், கனம் அங்கத்தினர் அவர்கள் தங்களுடைய வெட்டுப் பிரேரணையை வலியுறுத்த மாட்டார்கள் என்று நம்பிக்கை கொண்டு எனது உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

SRI P. M. MUNUSWAMI GOUNDER: நான் பேசும்போது இண்டர் ஸ்டேட் ரூட் விஷயமாக வலியுறுத்திச் சொன்னேன். கிருஷ்ணகிரியிலிருந்து பங்களூர் வரை பஸ் போக்கு வரத்தைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

THE HON. SRI V. RAMAIAH: ஹொசூர், கிருஷ்ணகிரி வட்டாரத்தில் போகும்போது பார்த்தேன். அங்கு அதிகமாக வான்கள் ஓடிக் கொண்டிருக்கின்றன. அந்த வட்டாரத்தில் போக்கு வரத்து வசதியை அதிகப்படுத்த வேண்டும். அதிகப்படுத்த வேண்டுமானால், பக்கத்து மாகாண ஓரத்தில் போக வேண்டும். இது வரையில் டிரான்ஸ்போர்ட் கமிஷனர், டெபுடி கமிஷனர் முயற்சியெடுத்துக் கொண்டிருக்கிறார். அதைத் துரிதப்படுத்த அந்த மாகாணத்திலிருக்கக்கூடிய போக்கு வரத்து இலாகா அமைச்சரோடு பேசி அந்தக் கஷ்டம் இல்லாமல் செய்ய முயற்சி எடுக்



21st March 1961]

DEPUTY SPEAKER: Is the hon. Member Sri Kothandaraman, pressing his cut motion?

SRI V. K. KOTHANDARAMAN: Yes, Sir, I am pressing my cut motion.

DEPUTY SPEAKER: The question is—

'That the allotment of Rs. 11,85,500 under Demand V—Motor Vehicles Acts Administration be reduced by Rs. 100.'

The cut motion was put and lost.

DEPUTY SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 11,85,500 under Demand V—Motor Vehicles Acts Administration.'

The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER: The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow. 1-42 p.m.

**The House then adjourned.**

## VII.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### *A.—Statutory Rules and Orders.*

182. *Notification issued with G.O. Ms. No. 401, Home, dated 1st February 1961 excempting vehicle MSX 4601 belonging to the United Nations International Children's Emergency Fund and used for B.C.G. Vaccination Compaigns from payment of the tax.* ***[Laid on the Table of the House under Section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]***

### *B. Reports' Notifications and other papers.*

109. *Madras Village Courts (Amendment) Bill, 1961 (L.C. Bill No. 2 of 1961), and annexure to the Bill.*

110. *The Madras Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1961 (L.C. Bill No. 3 of 1961).*

111. *Note on Demand XVI—Medical.*

112. *Note on Demand XVII—Public Health.*

[21st March 1961

## APPENDIX I.

[*Vide* answer to the Starred Question No. 954 asked by Sri V. K. Kothandaraman (on behalf of Sri M. Kalyanasundaram) at the meeting of the Legislative Assembly held on 21st March 1961, page 191 supra]

*Particulars of travelling allowance and daily allowance drawn by the Collectors during* 1959-60 *and for the first six months in* 1960-61.

| Name of the district. | Amount of travelling allowance and daily allowance drawn during 1959-60. | | 1960-61. (first six months.) | |
|---|---|---|---|---|
| | RS. | NP. | RS | NP. |
| Tiruchirappalli .. .. | 6,778 | 19 | 3,775 | 15 |
| South Arcot .. .. .. | 5,453 | 21 | 2,524 | 37* |
| Kanyakumari .. .. | 4,420 | 29 | 2,435 | 80 |
| The Nilgiris .. .. .. | 4,334 | 36 | 2,090 | 09* |
| Madras .. .. .. | .. | | 38 | 24 |
| Ramanathapuram .. .. | 5,002 | 05 | 2,563 | 67 |
| North Arcot .. .. .. | 5,251 | 25† | 2,273 | 27* |
| Tirunelveli .. .. .. | 5,126 | 74 | 2,140 | 55 |
| Thanjavur .. .. .. | 4,460 | 47 | 3,058 | 17 |
| Madurai .. .. .. | 3,350 | 91 | 2,737 | 28 |
| Coimbatore .. .. .. | 5,728 | 44 | 2,614 | 12 |
| Chingleput .. .. .. | 4,077 | 53 | 2,462 | 23* |
| Salem .. .. .. .. | 4,576 | 46 | 2,152 | 62 |
| Total .. | 58,559 | 90 | 30,864 | 96 |

* First 5 months only.
† For 11 months only.

## APPENDIX II.

[Vide answer to the Starred Question No. 956 asked by Sri N. K. Palanisami (on behalf of Sri K. R. Nallasivam) at the meeting of the Legislative Assembly held on 21st March 1961, page 193 supra.]

*A.*—(*a*) No Agricultural Research Association as such has been constituted for the Lower Bhavani Project area. But, the Government have sanctioned the convening of an Annual Conference called the "Lower Bhavani Project Ayakatdars Conference" to discuss the research problems of the area. A copy[a] of the Government Order, constituting the Conference, is placed on the table of the House.

(*b*) A list of non-officials who have been selected to serve in the Conference is also placed on the Table of the House.

(*c*) The object of the Conference is to ascertain from representative local ryots the research problems for which they would like an answer or assistance from the Agricultural Research Station Bhavanisagar.

[a] Printed as Annexure to Appendix II on pages 273-275 infra.



21st March 1961]

## ANNEXURE TO APPENDIX II.

### ENCLOSURE.

### G.O. Ms. No. 3482, Food and Agriculture, dated 16th October 1958.

[Agriculture—Research—Agricultural Research Station, Bhavanisagar—Association of non-officials for formulation of Research work in the Ayokat—Constitution of a conference—Ordered.]

Read the following paper;—

From the Board of Revenue, B.P. Mis. 673/58, dated 31st May 1958.

Order—No. 3482, Food and Agriculture, dated 16th Oitober 1958

It was brought to the notice of Government that the Research problems tackled at the Agricultural Research Station, Bhavanisagar, were based on those which were thought of and foreseen from the official side only and it was therefore considered desirable to ascertain from the ryots themselves in the Ayacut, what sort of problems they could themselves anticipate and for which of them they would like an answer or assistance from the Research Station. The Board of Revenue which was accordingly asked to formulate necessary proposals in this regard recommended in consultation with the Director of Agriculture, the Chief Engineer, Public Works Department, and the Collector of Coimbatore—

(i) that a Conference called the Lower Bhavani Project Ayakatdars Conference be convened annually in the month of June or July as may be decided by the Collector of Coimbatore;

(ii) that the object of the Conference would be to discuss Research problems with the ryots;

(iii) that the following be co-opted to represent in the Conference :—

*List of persons co-opted to represent in the Lower Bhavani Project Ayakatdars Conference.*

(1) Collector of Coimbatore—Ex-officio President.

(2) The Executive Engineer, Lower Bhavani Project, Canals Division, Erode.

(3) The Revenue Divisional Officers concerned.

(4) Joint Director of Agriculture (Planning and Development).

(5) Dean, Agricultural College, Coimbatore or his nominee.

(6) Twenty representatives of ryots selected by the Collector who will hold office for a term of three years.

(7) The Deputy Director of Agriculture, Coimbatore.

(8) The Superintendent of Agricultural Research Station, Bhavanisagar. The District Agricultural Officers, Coimbatore and Nilgiris may also be permitted to attend the meetings; and

(iv) that the Executive Engineer, Lower Bhavani Project Division, as Convenor of the Conference be asked to get the subjects to be discussed at the Conference a month in advance and circulate them to the members well in advance of the Conference.

[21st March 1961

2. The Government accept the proposals of the Board of Revenue referred to in paragraph (1) above and accordingly sanction the convening of an Annual Conference with the persons mentioned therein as members.

The Conference will be held for a period of three years in the first nstance.

3. The official representatives will be entitled to the Travelling Allowance as per Madras Travelling Allowance Rules when they attend such conferences and their absence from Headquarters on this account will be treated as on duty. The ryots attending the Conference will not be paid any Travelling Allowance by the Government.

4. This order issues with the concurrence of the Finance Department vide their U.O. Note No. 80203 Allcs./58, dated 18th August 1958.

LIST OF NON-OFFICIALS SELECTED TO SERVE IN THE LOWER BHAVANI PROJECT AYAKATDARS CONFERENCE.

*I. Gobichettipalayam taluk.*

1 Sri K. K. Muthusami Gounder, Mirasdar, Alukkuli Post Office, Gobichettipalayam taluk.

2 Sri Sengoda Nadar, Mirasdar, Modachur, Gobichettipalayam taluk.

3 Sri Chidambaranatha Gounder, Mirasdar, Nadupalayam, Kurumandur P.O.

4 Sri D. V. Venkatarama Chettiar, Doddampalayam, Thoppampalayam P.O.

5 Sri Chinnathambi Naicker, Shenbagapudur P.O., Satyamangalam taluk.

*II. Bhavani taluk.*

1 Sri P. N. Appavoo Gounder, Pannankattur, hamlet of Odathurai.

2 Sri Kuppuswami Mudaliar, President, Panchayat Board, Kavandapadi.

*III. Erode taluk.*

1 Sri R. Shanmugam, B.SC., Palanigoundanpalayam, hamlet of Pasur.

2 Sri V. S. Ramalinga Gounder, Vattakkalvalasu, hamlet of Punjaikilampadi, Malayampalayam post.

3 Sri S. P. Subbaraya Gounder, Modakurichi.

4 Sri P. K. Palanisamy, Purapallikattuvalasu, hamlet of Injampalli.

5 Sri K. Chinnasamy, Poochakkattuvalasu, hamlet of Basuvapatti.



21st March 1961]

*III. Erode taluk*—cont.

6 Sri Kotravel, Valaithottavalasu, Kasturibaigram.

7 Sri Kolandaisamy Gounder, Odanalli, Kasturibaigram.

8 Sri K. M. Magudapathy Gounder, Mirasdar, Kodumudi.

9 Sri Santhana Gopalakrishna Iyer, Landlord, Unjalur.

10 Sri E. K. M. Hajee Ahamed Ibrahim Sahib, President, Panchayat Board, B. P. Agraharam.

*IV. Dharapuram taluk.*

1 Sri K. A. Senapathi Gounder, M.L.A., Dharapuram.

2 Sri Nallasenapathy Sakkarai Manradiar, M.L.C., Pattagar of Palayakottai, Palayakottai Post.

3 Sri D. Ramasamy Goundar, Landlord, Mettupalayam, Mettupalayam Post, (via) Vellakoil.

## APPENDIX III.

[*Vide* answer to the Starred Question No. 973 asked by Sri A. Vedarathnam at the meeting of the Legislative Assembly held on 21st March 1961, page 201 supra.]

The National Malaria Eradication Programme is being implemented as a Second Five-Year Plan Scheme out of the Technical Co-operation Mission aid. The Government of India have offered to meet one half of the estimated additional cost on the operation of the Eradication Programme in the State and bear the entire expenditure on materials and equipments, etc.

Prior to the implementation of National Malaria Eradication Programme, the National Malaria Control Programme was carried out only in 3·7 endemic Units in the State covering a population of 3·7 millions in endemic pockets of the Nilgiris, Coimbatore, Salem, South Arcot, North Arcot, Madurai, Ramanathapuram, Chingleput, Tirunelveli and Kanyakumari districts. Now with the assistance received under the National Malaria Eradication Programme (1) the National Malaria Control Programme has been switched over to National Malaria Eradication Programme from 1958–59 and (2) 27·75 additional Units were established in 1959-60 and the Anti-Malaria Operations were extended to the rest of the State irrespective of the degree of malariousness present. In other words, from 1959-60, the whole State was covered under the National Malaria Eradication Programme. The Programme of D. D. T. Spray in endemic or hypo-endemic areas has been followed as per calendar of spray activities prescribed for each area, viz. two rounds of D. D. T. Spray in endemic areas and one round in hypo-endemic areas during the Malaria transmission season. From 1960-61, the second phase of the National Malaria Eradication Programme, viz., the Surveillance Phase has commenced concurrently with the Scheduled Spraying Programme of the

Attack Phase in the National Malaria Eradication Programme
Units. The Surveillance Staff visit door to door once a fortnight
to ascertain whether any fever cases would have occurred within
the fortnight of the previous visit and if so, immediately
arrange for treatment with a single dose of four aminoquinoline
anti-malaria drugs. They also take blood smear from each fever
case for laboratory examination to identify whether it is a case of
malaria and, if so, arrange for continued treatment with 8 amino-
quinolines. These cases are observed at selected intervals till
they are cleared finally as free from Malaria. It may be mention-
ed that the National Malaria Eradication Programme does not
contemplate any project for eradication of mosquito population.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Wednesday, 22nd March 1961.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, the Deputy Speaker (SRI B. BHAKTAVATSALU NAIDU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

* 981 Q.—

DEPUTY SPEAKER : Since the Hon. Minister for Industries has not yet come, we shall take up question No. 981 later.

*Orphans, deaf, etc. (census)*

982 Q.—SRI T. S. RAMASWAMY (on behalf of SRI T. T. DANIEL) : Will the Hon. the Minister for Finance be pleased to state the number of orphans, deaf, blind, lepers and lame in the State at present?

THE HON. SRI C. SUBRAMANIAM : According to the report received from the Director of Public Instruction, Madras in 1959, grants from that Department were given to 27,598 orphans in the orphanages in this State. Apart from this, there may be orphans in orphanages not receiving any grant from the Education Department and orphans under the care and maintenance of the Social Welfare Organizations or private persons. No information is available regarding their total number.

According to the 1951 Census, there were 47,472 lapers including doubtful cases in the entire Madras State excluding Kanyakumari district and Shencottah taluk of Tirunelveli district. Information is not available in regard to their present number.

As regards the deaf, blind and lame no information is available.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware of the fact that not a single deaf and dumb school is run by the Government for the handicapped? If so, will the Government consider the question of running a deaf and dumb school at district headquarters for the handicapped in the districts?

THE HON. SRI C. SUBRAMANIAM : There are deal and dumb schools. Government do extend assistance to these institutions.

SRI K. B. S. MANI : ஸார், இப்பேர்ப்பட்ட பிறவிக் குருடர்களுக்கும், நொண்டிகளுக்கும் அந்நிய நாட்டு உதவி கொடுக்கப்படுகின்றதா? அப்படி கிடைக்கும் அந்நிய உதவியிலிருந்து விஞ்ஞான ஆராய்ச்சி மூலம் அவர்களுக்கு உதவி செய்வதற்கு முயற்சி செய்யப்படுமா ?.

THE HON. SRI C. SUBRAMANIAM : அதைப் பற்றி என்னிடத்தில் இப்போது தகவல் இல்லை.

[22nd March 1961

Sri P. S. K. LAKSHMIPATHI RAJ : ஸார், இப்படிப்பட்ட செவிடு, குருடு ஆகிய அனாதைகளுக்கு பெரிய அளவிலே ஆஸ்ரமங்கள் வைத்து உதவி புரிவதற்கு தேவஸ்தானங்களுக்கு அரசாங்கம் பெரிய அளவில் உதவ முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

The Hon. Sri C. SUBRAMANIAM : தேவஸ்தானங்களிலுள்ள நிதியிலிருந்து இந்த ஏற்பாட்டைச் செய்தால் நல்லது என்பது என்னுடைய கருத்து.

Sri A. A. RASHEED : May I know whether steps have been taken for employment of these handicapped?

The Hon. Sri C. SUBRAMANIAM : Yes. Some steps have been taken. There is the question of unemployment of able-bodied persons also. Therefore we have to take a balanced view of these things.

Sri A. GOVINDASAMI : அனாதை இல்லங்களுக்கு சர்க்கார் எந்த அளவிலே உதவி செய்கிறது?

The Hon. Sri C. SUBRAMANIAM : இதுபற்றி தனிக் கேள்வி போட்டால் நல்லது.

Sri K. B. S. MANI : ஸார், இம்மாதிரி நொண்டிகளாக இருப்பவர்கள் சிலருக்கு சர்க்கார் தனிப்பட்ட சலுகைகள் கொடுத்து, படிப்புத் துறையிலே முன்னுக்கு கொண்டு வந்திருக்கிறது. ஆனால் அவர்கள் உத்தியோகம் பெறுவதிலே சில கஷ்டங்கள் இருப்பதால், அப்படிப்பட்டவர்களுக்கு உத்தியோக விஷயத்திலும் தனிச் சலுகை கொடுத்து, அவர்கள் உத்தியோகம் பெறுவதற்கு சலுகை காட்ட அரசாங்கம் முன்வருமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இதிலே அவர்கள் எந்த வேலைக்குத் தகுதியோ அந்த வேலை கொடுப்பதற்கு முயற்சி செய்யப்படுகிறது. இதிலே தனிச் சலுகை ஒன்றும் கொடுப்பதற்கில்லை.

Sri N. MARUDACHALAM : ஸார், கோவையிலே திருப்பூரில் ஒரு ஆதி திராவிடர் கைத்தறித் தொழில் பயிற்சி பெற்று, சொல்லிக் கொடுத்துக்கொண்டு வந்த நேரத்திலே இரண்டு கண்களும் தெரியவில்லை என்பதற்காக அவர் உத்தியோகத்திலிருந்து நீக்கப்பட்டார். அவருக்கு ஏதாகிலும் உதவித் தொகை கொடுத்துதவ சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இது தனிப் பிரச்னை. இந்தக் கேள்வியில் இது எழவில்லை.

### *Milk and milk products*

* 983 *Q.*—Sri P. G. MANICKAM : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பால் அல்லது பால் சம்பந்தப்பட்ட உணவுப் பொருள்கள் தயாரிப்பதற்கான திட்டங்கள் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறதா ?

(இ) அவ்வாறிருப்பின், இத் திட்டங்களின் விவரங்கள் யாவை ?

(உ) இத் திட்டங்களுக்காக எவ்வளவு தொகை தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) Loans will be granted to the Rural Milk Supply Co-operative Societies organized under the Madras Dairy and Milk Project and under the Co-operative Sector and also to the



22nd March 1961]

licensees in the Milk Colony at Madhavaram for the purchase of milch animals. Financial assistance will be granted for the purchase of machinery for the manufacture of by-products of milk. The questions of granting financial assistance to the Tirunelveli Co-operative Milk Supply Society for the purchase of machinery for the manufacture of by-products of milk and to the Kodaikanal Co-operative Milk Supply Union for the provision of additional equipments for cheese-making is under consideration.

(*c*) Rs. 22 lakhs.

Sri P. G. MANICKAM : ஸார், பால் அல்லது பால் சம்பந்தப்பட்ட உணவுப் பொருள்களிலிருந்து என்னென்ன விதமான பொருள்களைத் தயாரிப்பதற்கு இப்போது அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : பல பொருள்களைத் தயாரிக்கலாம். அதுவும், பாலை கெட்டுப் போகாத அளவில் தவிர்த்து அதிலே முக்கியமாக வெண்ணெய் போன்று இன்னும் பல பொருள்கள் தயாரிக்கலாம். இப்போது அதற்கான கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

Sri A. GOVINDASAMI : மாதவரம் பண்ணையை பம்பாயிலே இருக்கும் பால் பண்ணை அளவிற்கு உயர்த்துவதற்கு அரசாங்கம் ஏதாவது திட்டமிட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன் ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : பம்பாயிலுள்ள அளவில் செய்தால் மாத்திரம் போதாது என்பதை கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். பம்பாயிலுள்ள ஆரே பால் பண்ணை ஒரு சிறிய அளவிலே ஒரு சிறு பகுதிக்குமட்டும் தான் உதவும் வகையில் இயங்கிக் கொண்டு வருகிறது. நாம் அதற்கு மேலும்கூட உயர்த்த வேண்டும். மாதவரம் பால் பண்ணையிலே இப்போது உள்ள அளவிலே மட்டுமல்லாமல், கனம் அங்கத்தினர் மாவட்டமாகிய தென் ஆற்காடு, செங்கல்பட்டு, வட ஆற்காடு ஆகிய மாவட்டங்களிலேகூட கடன் கொடுத்து, பால் மாடுகள் வாங்கிக் கொடுத்து, அவர்களிடமிருந்து பாலை வாங்கி அதையும் சேர்த்து பெரிய அளவில் செய்ய வேண்டுமென்பது தான் அரசாங்கத்தினுடைய உத்தேசம்.

Sri P. S. K. LAKSHMIPATHI RAJ : ஸார், ஆங்கிலேயர்கள் இந்த நாட்டை விட்டுச் சென்று விட்டதன் காரணமாக, கொடைக்கானலில் வேலையின்றி இருக்கும் தொழிலாளர்களுக்கு வேலை கிடைப்பதற்கு இப்படிப்பட்ட பால் பண்ணை ஒன்றை அங்கே அமைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இதைப் பற்றி தான் சற்று முன்பு கூட சொன்னேன். அதைப்பற்றி கூட உத்தேசம் இருக்கிறது.

Sri S. NAGARAJA MONIGAR : ஸார், பாலினுடைய அவசியத்தை நன்றாக உணர்ந்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காக நகரங்களில் கோடிக்கணக்கான ரூபாய் அந்நிய உதவி கொண்டு செலவு செய்து, அதனுடைய குறையை ஓரளவு பூர்த்தி செய்து வருகின்ற காலத்திலே, மற்ற கிராமப் பகுதிகளிலே கூட்டுறவு சொஸைடிகளில் பாலுக்கு விற்பனை வரி போடுவதைக் குறைத்தால் அல்லது கடன் வசதிகள் செய்து கொடுத்தால் நல்லது. அந்த வசதியை அங்கெல்லாம் ஏற்பாடு செய்வதற்கு முடியுமா என்று கேட்டுக் கொள்கிறேன் ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : கிராமாந்திரங்களில் பல இடங்களில் கூட்டுறவு ஸ்தாபனங்கள் ஏற்படுத்தி, மற்ற ஸ்தாபனங்களை எப்படி உயர்த்துகிறோமோ அந்த அளவிலே வளர்த்து, அதன் மூலம் அவர்களுடைய வருமானத்தை உயரச் செய்ய வேண்டுமென்பதுதான்

[22nd March 1961

அரசாங்கத்தினுடைய நோக்கம். இதற்கு விற்பனை வரி சம்பந்தமில்லை என்றாலும்கூட, கனம் நிதி அமைச்சர் அவர்கள் வரவு செலவு திட்டம் சமர்ப்பிக்கின்றபோது கூறியதுபோல், இதற்கெல்லாம் எவ்வளவு சலுகை கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பது கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும். ஆகவே எந்தெந்த வகையிலே சவுகரியங்கள் அளித்து, பாலின் உற்பத்தியை கிராமாந்திரங்களிலே பெருக்கி, அதன் மூலம் அங்குள்ளவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

**Sri V. K. KOTHANDARAMAN** : ஸார், பாலிலே இருக்கக்கூடிய சத்தைவிட பால் பவுடரிலே சத்து மிகமிகக் குறைவாக இருக்கிறது என்று சொல்லப்படுவது உண்மையா ? ஆகவே பாலை எந்த அளவு அதிகப்படியாக பெருக்கவேண்டுமோ, அந்த அளவில் பெருக்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : கனம் அங்கத்தினர்களுடைய அரிய யோசனையே, அரசாங்கத்தின் உத்தேசமும் ஆகும்.

**Sri A. VEDARATHNAM** : ஸார், பால் பண்ணைகளை விருத்தி செய்ய வேண்டுமானால், அதற்கு முக்கியமாக மாடுகள் மேய்வதற்கு மேய்ச்சல் தரிசு நிலங்கள் நிரம்ப வேண்டும். இப்போது அந்த மேய்ச்சல் தரிசுகள் எல்லாம் எப்படியோ மறைந்து விட்டன. அதையெல்லாம் மீண்டும் கிடைக்கும்படி செய்ய அரசாங்கம் முன்வருமா ? அதோடு தீனி விலை அதிகமாக இருப்பதால் அதையும் குறைப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : மறைந்த மேய்ச்சல் தரையை மீண்டும் பெறுவது கஷ்டம்தான். இருந்தாலும், மேய்ச்சல் வசதிக்கும், தீனி பெருகுவதற்கும் என்னென்ன செய்யவேண்டுமோ, அரசாங்கம் அதிலே எல்லாம் கவனம் செலுத்திக் கொண்டுதான் வருகிறது.

### *Butter*-cum-*Milk Factory*

* 984 *Q.*—**Sri P. G. MANICKAM** : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பாலைப் பால் பவுடராகவும், வெண்ணையாகவும் மாற்றுவதற்கான தொழிற்சாலை ஒன்று நிறுவுவது பற்றி அரசாங்கத்தாரால் பரிசீலனை நடத்தப்பட்டு வருகிறதா ?

(இ) அப்படியாயின், இத்தொழிற்சாலை எந்த இடத்தில் நிறுவப்படும் ?

(உ) இத்தொழிற்சாலை நிறுவப்பட எவ்வளவு தொகை தேவைப்படும் ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : (*a*) & (*b*) There is a proposal for establishment of butter-*cum*-milk powder factory included in the Third Five-Year Plan. The location of the factory and the time of implementation of the Scheme have yet to be finalised.

(*c*) The outlay for the scheme in the Third Five-Year Plan is Rs. 15 lakhs.

### *Textile workers (wages)*

* 985 *Q.*—**Sri N. MARUDACHALAM** : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதில் அளிப்பாரா—

நெசவாலைகளிலிருந்து நீக்கப்பட்ட நெசவாலைத் தொழிலாளர்களின் வேலை நீக்குதலைத் தகுந்த நீதிமன்றம் ஊர்ஜிதம் செய்யும் வரை ஆலை முதலாளிகள் அவர்களுக்கு அரைச் சம்பளம் கொடுக்கும்படிச் செய்வதற்கான ஏற்பாடு செய்யும் உத்தேசம் உண்டா ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : No, Sir.



22nd March 1961]

**Sri N. MARUDACHALAM** : ஸார், தொழிலாளர் யில்லிலேயிருந்து வேலையிலிருந்து நீக்கப்பட்ட பிறகு, அட்ஜுடிகேஷன் மூலமாக தீர்ப்பளிக்கப்பட்டு அவர்கள் வேலைக்குச் சென்றால், முதலாளிகள் அவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ளாமல், தொழில் கோர்ட்டை விட்டு ஹைகோர்டுக்குப் போகிறார்கள். அங்கு செல்வதால் காலதாமதம் ஏற்படுகிறது. அதனால் அந்த சமயத்தில் தொழிலாளர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அந்த சமயத்தில் அவர்களுக்கு பாதிச் சம்பளமாவது கொடுப்பதற்கு சிபாரிசு செய்ய சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : அந்தவிதமான உத்தேசம் இப்போது இல்லை.

DEPUTY SPEAKER : Since the Hon. Minister for Industries has already come, we will take up question No. 981.

### *Retired Deputy and Joint Registrars (Re-employment)*

* 981 *Q.*—**Sri S. M. ANNAMALAI** : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கூட்டுறவு இலாகாவில் **Deputy Registrars, Joint Registrars** பதவிகளில் ஓய்வுபெற்றவர்கள் எத்தனை பேர் இவ்வாண்டு நியமிக்கப்பட்டுள்ளனர் ?

(இ) அதற்கான காரணங்கள் யாவை ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : (அ) No retired Deputy Registrar or Joint Registrar of Co-operative Societies has been re-employed in the Co-operative Department during the current year.

(இ) Does not arise.

**Sri S. M. ANNAMALAI** : இப்படி பல பேர்கள் "ஸீனியர் ஹாண்ட்ஸ்" சர்வீஸில் உள்ளவர்கள் ப்ரமோஷனுக்குக் காத்துக்கொண்டிருக்கும்பொழுது ஓய்வு பெற்ற சில பேர்களை மறுபடியும் வேலையில் வைப்பது நியாயமா ? இதை சர்க்கார் பரிசீலித்தார்களா ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : அது மாதிரி வைக்கவில்லை என்று பதில் சொன்னேன்.

### *S.S.L.C. Examination (failures)*

* 986 *Q.*—**Sri A. A. RASHEED** (on behalf of **Sri S. PAKKIRISAMI PILLAI**) : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the percentage of failures in the S.S.L.C. Examination in October 1960; and

(*b*) the reasons therefor?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : (*a*) Among the candidates who appeared for the Examination, 76 per cent were not eligible for University Courses of study.

(*b*) No special reason can be assigned to the high percentage of failures, but generally, candidates appearing for the October Examinations do not fare as well as those appearing for the March Examinations.

Sri A. A. RASHEED : May I know, Sir, what are the steps the Government have taken to prevent the colossal wastage of man-hours and money?

The Hon. Sri C. SUBRAMANIAM : I do not understand the question. Perhaps, the hon. Member, Sri A. A. Rasheed, means how more number of students will be enabled to pass the examination. We are trying to improve the quality of education.

Sri A. GOVINDASAMI : ஜில்லாவில் படிக்கக்கூடிய மாணவர்கள் எஸ்.எஸ்.எல்.ஸியில் குறிப்பாக விஞ்ஞான பரீட்சையிலும், ஆங்கிலப் பரீட்சையிலும் தேர்வு பெறாமல் இருக்கிற நிலைமைக்குக் காரணம் போதுமான "எல்.டிக்கள்" கிடைக்கவில்லை என்று சொல்லப்படுகிறதே ? அதைத் தடுப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் ?

The Hon. Sri C. SUBRAMANIAM : அதைத் தவிர்ப்பதற்கு இப்பொழுது அவர்களுக்கு உயர்ந்த சம்பள விகிதம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டிலே அதிகமான பேர்கள் பயிற்சி பெறுவதற்கு முன் வந்திருக்கிறார்கள்.

Sri K. SATTANATHA KARAYALAR : மூன்றுவதுபாரம் படிப்பு முடிந்தவுடனேயே சர்க்கார் ஒரு பரீட்சை வைத்தால் தரக்குறைவான மாணவர்கள் மேலே போகாமல் இருப்பதற்கு வாய்ப்பு இருக்குமே.

The Hon. Sri C. SUBRAMANIAM : எல்லோருக்கும் பொதுவாக "ஸெவென்த் ஸ்டாண்டர்டு" என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அப்பொழுது இதுபற்றி கவனிக்கப்படும்.

Sri A. VEDARATHNAM : மிகப் பெரும்பாலான மாணவர்கள் ஆங்கிலத்தில் சில மார்க்குகள் குறைவாக வாங்கிய காரணத்தினால் பரீட்சையில் தவறியிருக்கிறார்களா ? மற்ற பரீட்சைகளில் தேறியிருந்தால்கூட ஆங்கிலப் பரீட்சையில் தவறிய காரணத்தினால், அந்த மொழிப் பரீட்சையில் தேறாத காரணத்தினால், அவர்களை தங்கவைப்பதன் மூலம் நமது தேசீய நஷ்டத்தை தவிர்க்க அரசாங்கம் ஏதாவது முயற்சி எடுத்துக்கொள்ளுவார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : அந்த மாதிரி மாணவர்களுக்கு பாஸ் கொடுப்பதனால் தேசீய லாபம் ஒன்றும் வந்துவிடாது. அவர்களுக்கு போதுமான தகுதி இருந்தால்தான் தேசத்திற்கு நன்மை ஏற்படும். ஆங்கிலத்தில் பல விஷயங்களையும் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே, அதையும் கணக்கில் எடுத்துக்கொள்ளுவது அவசியமாக இருக்கிறது.

Sri S. RANGANATHA MUDALIAR : Sir, in most schools in our State, excursions and N.C.C. camps are arranged in the months of February and March and in that way they are interfering with the studies of the students resulting in failures. Would the Government take measures to see that these camps and tours are arranged in the early part of the year?

The Hon. Sri C. SUBRAMANIAM : I do not think the reason given by the hon. Member is correct for the failures that are taking place. The camps are arranged in such a way that they do not interfere with the curricular activities.



Sri A. GOVINDASAMI : பல பள்ளிக்கூடங்களில் விஞ்ஞானக் கூடங்கள் இல்லாமல் இருப்பதினாலும், அதற்குத் தேவையான கருவிகள் இல்லாமல் இருப்பதினாலும், அந்த நிலைமையை தவிர்ப்பதற்கு அரசாங்கத்தால் தனியாக நிதி ஒதுக்க முடியுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : விஞ்ஞானக்கூடங்களுக்கு கட்டிடங்கள் கட்டுவதற்கும், அதற்கான கருவிகள் அமைப்பதற்கும் சிறப்பாக பள்ளிக்கூடங்களுக்கு உதவி வழங்கப்படுகிறது. பல பள்ளிக்கூடங்கள் இப்பொழுது கட்டிடங்களும், கருவிகளும் பெற்று வருகிறார்கள்.

Sri S. NAGARAJA MONIGAR : தமிழ் மொழி 'தாய் மொழி என்று ஆசைப்பட்டு இருக்கிற மொழியிலிருந்து மாறிக்கொண்டிருக்கும் நேரத்தில் இம்மாதிரியான கஷ்டங்கள் தவிர்க்க முடியாதது. இன்னும் சில வருஷங்களுக்கு நமது வருங்கால சந்ததிகளுக்கு இந்தக் கஷ்டம் இருக்கத்தான் செய்யும். படித்த பிறகும் கூட நமது மாகாணத்திற்குள்ளேயே அவர்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைப்பதிலும் இம்மாதிரி கொஞ்சம் கஷ்டம் இருக்கும் என்பது சரியான எண்ணம் தானா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் பதில் சொன்னதற்காக அவர்களுக்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

Srimathi KAMALAMBUJA AMMAL : இம்மாதிரி பரீட்சையில் தவறியவர்களின் எண்ணிக்கை தொகையில் கிராமப் பகுதிகளிலுள்ள மாணவர்கள் அதிகமா ? அல்லது நகர்புறங்களிலுள்ள மாணவர்கள் அதிகமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இரண்டு பக்கத்திலும்தான் இருக்கும். நகரப் பகுதியிலே இருப்பவர்களுக்கு மற்றவிஷயங்களில் மனதை வேறு வழியிலே செலுத்தக்கூடிய சந்தர்ப்பங்கள் இருப்பதினால் அவர்கள் தவறிவிடுகிறார்கள். கிராமப் பகுதிகளில் போதுமான வசதிகள் இல்லாததினால், அங்கே பலமாணவர்கள் தவறிவிடுகிறார்கள். ஒன்றுக்கு ஒன்று சரி செய்துவிடும் என்று நினைக்கிறேன்.

*Agricultural production programme (aid)*

* 987 Q.—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there is any proposal to give special grants and technical aid to Panchayats and Panchayat Unions for implementing comprehensive agricultural production programme during the Third Five-Year Plan in the State; and

(b) if so, the details thereof?

The Hon. Sri C. SUBRAMANIAM : (a) & (b) A total sum of Rs. 750 lakhs for a period of five years has been provided in the Panchayat Development Schematic Budget of this State for agricultural activities in all the Panchayats and Panchayat Unions.

The total provision of Rs. 750 lakhs will be allocated equally among all Panchayat Development Blocks at the rate of 2 lakhs per block for five years. Out of the total allotment of Rs. 2 lakhs, a sum of Rs. 1 lakh will be reserved for distribution as a specific percentage grant among Panchayats of the Block for being used on certain specific purposes prescribed by Government. In respect of the above one lakh, the grant will cover two-thirds of the expenditure incurred by the Panchayat.

[22nd March 1961

The balance of Rs. 1 lakh per block for the five-year period will be made available as out-right grant to Panchayat Unions to be used on certain other specific purposes.

SRI N. K. PALANISAMI : Sir, in view of the fact that the present method of raising foodcrops in blocks and Panchayat Unions are in effective, whether there is any proposal to substitute the present method so that money allotted can be effectively spent and more foodcrops can be raised?

THE HON. SRI C. SUBRAMANIAM : The first presumption of the hon. Member that there has not been any increase in agricultural production, is wrong. I do agree that it would be more effective when the Panchayat Unions are brought into the picture.

SRI V. K. KOTHANDARAMAN : விவசாய உற்பத்தி திட்டத்தை நிறைவேற்றுவதற்கு விவசாய கருவிகள் அவசியமானது. எப்படி இரும்பு " கோட்டா " தனியார்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறதோ, எப்படி முதலில் உர விநியோகத்தை தனியார்களுக்கு கொடுத்துக்கொண்டு வந்து, பிறகு கூட்டுறவு சங்கங்களின் மூலம் உரம் விநியோகம் செய்யப்படுகிறதோ, அதேபோன்று விவசாய கருவிகளை உற்பத்தி செய்வதற்காக பஞ்சாயத்து யூனியன்களுக்கு " ஸ்டீல் கோட்டா " கொடுத்து உதவி செய்ய ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தக் கேள்வி எழவில்லை.

SRI S. M. ANNAMALAI : கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிற பொழுது ஒவ்வொரு பிளாக்குக்கும் ரூ. 2 லட்சம் தரப்படும் என்று சொன்னார். ஒரு பிளாக் என்று சொன்னால், சில பிளாக்கில் 2 பிர்காக்கள் இருக்கின்றன, மக்கள் தொகை அதிகமாக இருக்கிறது. சில பிளாக்குகளில் ஒரு பிர்க்கா இருக்கிறது, ஜனத்தொகை குறைவாக இருக்கிறது. மக்கள் தொகை குறைவாக இருக்கும் பிளாக்குக்கும், அதிகமாக இருக்கும் பிளாக்குக்கும் ஒரே ரீதியாக ரூ.. 2 லட்சம் கொடுப்பது நியாயமா ? மக்கள் ஜனத்தொகை அடிப்படையில் இதைப் பிரித்துக் கொடுப்பதற்கு சர்க்கார் முன்வருவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஏறக்குறைய ஒரே அளவு ஜனத்தொகை இருக்கக்கூடிய அளவுக்குத் தான் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். மாறுதல் கொஞ்சம் தான் இருக்கும். சில இடங்களில் பரப்பு அளவு அதிகமாக இருக்கலாம். இதையெல்லாம் கவனத்தில் கொண்டு ஒரு கணக்குப் போட்டு இதைப் பிரித்துக் கொடுப்பது என்றால், மிகவும் கஷ்டமாக இருக்கும். ஆகையினால் ரூ. 2 லட்சம் என்று பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

SRI A. GOVINDASAMI : உற்பத்தி பெருக்கத்திற்காக ஒவ்வொரு பஞ்சாயத்திலும் விவசாய சங்கம் அமைப்பதற்கு அரசாங்கத்தில் ஏதாவது திட்டம் இருக்கிறதா ? விவசாய சங்கம் அமைத்தால் கட்சிகள் அதில் புகுந்துவிடும் என்று தேசீய அபிவிருத்திக் குழுவில் கருதி, அந்த எண்ணத்தைக் கைவிடவேண்டுமென்று ராஜ்ய சர்க்கார்களுக்கு சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அம்மாதிரி என்னிடம் தகவல் ஒன்றும் இல்லை. தனியாக விவசாய சங்கம் ஏற்படுத்தவேண்டியது அவசியமா என்பதை பரிசீலிக்கவேண்டும். பஞ்சாயத்துகளே விவசாய அபிவிருத்திக்கு பொறுப்பு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லுகிறபொழுது, அதற்குள் விவசாய சங்கம் ஒன்று ஏற்படுத்தி, பஞ்சாயத்துக்கும் விவசாய சங்கத்திற்கும் ஒரு போட்டியை உண்டாக்க வேண்டும் என்று கனம் அங்கத்தினர் அவர்கள் நினைக்கிறார்களா என்று தெரியாது.



22nd March 1961]

பஞ்சாயத்தில் தலையிடமுடியவில்லை என்றால், விவசாய சங்கத்திலாவது தலையிடலாமா என்று திராவிட முன்னேற்ற கழக அங்கத்தினர் எண்ணுகிறார்களா என்பது தெரியவில்லை.

SRI N. MARUDACHALAM : பஞ்சாயத்து ஏரியாவுக்கு ரூ. 2 லட்சம் கொடுப்பதாகச் சொல்லுகிறார்கள். பின்தங்கிய பஞ்சாயத்து ஏரியாவுக்கு அதிகமாகக் கொடுப்பதற்கு சர்க்கார் ஆலோசிக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : பின்தங்கிய பஞ்சாயத்துளுக்கு வேறு வகையிலே அதிக மான்யம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

*Bridge aaross Pazhavarn (Thiruppanandal-Narasingampettai Road)*

* 988 *Q.*—SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : கனம் பொது மராமத்து அமைச்சர் நயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திருப்பனந்தாள்—நரசிங்கம்பேட்டை சாலையில் (வயா) திருலோக்கிருரியமூலை பழவாற்றிற்கு பாலம் கட்டி கப்பிபோட திட்டம் உண்டா ? எப்போது அவ்வேலை ஆரம்பிக்கப்படும் ?

THE HON. SRI P. KAKKAN : Both metalling the road and construction of bridge have not been included in any approved programme at present.

Sri T. R. RAMAMIRTHA THONDAMAN : ஸார், இந்த திருப்பனந்தாள் நரசிங்கம்பேட்டை (வயா) திருலோக்கிருரியமூலை ரோடு நீண்ட நாளாக மண் ரோடாகவே இருந்து, ரெயில்வே ஸ்டேஷனுக்குப் போகும் ரோடாக இருக்கிறது. இந்த மூன்றாவது திட்டத்திலாவது, முதலாவதாக இந்த ரோட்டைப் போட்டு படிவாத்துரை பாலத்தையும் கட்ட நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI P. KAKKAN : அந்த ரோடு போட இப்பொழுது அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. கனம் அங்கத்தினர் சொல்லுவதால் மீண்டும் பரிசீலனை செய்து அதைச் செய்ய முன்வரலாம்.

*Rural Development Department (expenditure)*

* 989 *Q.*—SRI T. S. RAMASWAMY : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the total expenditure by the State Government under the Rural Development Department for the last two years (1958-59 and 1959-60);

(*b*) the total expenditure for the salaries of officers and contingencies; travelling allowances and dearness allowances, rents and stationery for the last two years; and

(*c*) the percentage of expenditure on salaries and travelling allowance and dearness allowance to the total expenditure?

THE HON. SRI C. SUBRAMANIAM :

| | | |
|---|---|---|
| (*a*) | 1958-59. | RS. |
| | Community Development, National Extention Service, Local Development Works and Training Centres. | 3,00,28,912 |
| | Loans .. .. .. .. .. .. | 1,39,49,052 |
| | Total .. | 4,39,77,964 |

[22nd March 1961

| 1959–60. | RS. |
|---|---|
| Community Development, National Extension Service, Local Development Works, and Training Centres. | 3,19,69,233 |
| Loans .. .. .. .. .. .. | 1,24,84,488 |
| Total .. | 4,44,53,721 |

(b) Expenditure on 'pay and allowances' Office contingencies' and 'Other charges'.—

| | RS. |
|---|---|
| 1958–59 .. .. .. .. .. .. | 1,20,45,365 |
| 1959–60 .. .. .. .. .. .. | 1,24,56,640 |

| | |
|---|---|
| (c) 1958–59 .. .. .. . | 19·82 per cent. |
| 1959–60 .. .. .. .. | 22·64 per cent. |

*Conduct of a Professor (enquiry)*

* 990 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Finance be pleased to state the present stage of enquiry into the conduct of the Professor of Geography, Presidency College, Madras, now under suspension?

THE HON. SRI C. SUBRAMANIAM : The Tribunal for Disciplinary Proceedings which enquired into the conduct of the officer has submitted its report to Government and it is under examination.

SRI A. A. RASHEED : Is it a fact that the enquiry against this Professor was conducted by two Tribunals and if so, may I know the reason for this double enquiry ?

THE HON. SRI C. SUBRAMANIAM : The first Tribunal did not examine some of the important witnesses. Therefore, it was ordered that those witnesses should be examined. Meanwhile, there was a change in the Tribunal and I think that is why the hon. Member says that there were two Tribunals.

SRI A. VEDARATHNAM : விசாரணையின் முடிவு என்ன என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : முடிவு எடுக்கவில்லை ; பரிசீலனையில் இருக்கிறது.

SRI A. A. RASHEED : Is it a fact that the Professor concerned has been under suspension for three years and if so, may I know the reason for the delay in arriving at a decision?

THE HON. SRI C. SUBRAMANIAM : It was mentioned by the hon. Member himself that the matter had to be enquired twice.

SRI V. K. KOTHANDARAMAN : இந்தப் பேராசிரியர், முதல் ட்ரிப்யூனல், இவர் குற்றவாளியில்லை என்று தீர்ப்பு அளித்ததாகவும் அதன் மேல் இன்னும் சிலபேரை விசாரணை செய்ய வேண்டுமென்றே இரண்டாவது ட்ரிப்யூனல் போடப்பட்டிருக்கிறது என்பதும் உண்மையா ?



22nd March 1961]

THE HON. SRI C. SUBRAMANIAM : அதற்கு ஆதாரம் கிடையாது ; இந்த விஷயத்தில் சர்க்கார் ஒரு முடிவு எடுப்பதற்கு முன்பு மற்ற விவரங்களைச் சொல்ல முடியாது.

*Hindi in Teachers' Training Schools*

* 991 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் இப்போது ஹிந்தி போதனை நிறுத்தப்பட்டிருக்கிறதா ?

(இ) அப்படியானால், இதன்மூலம் வேலை இழந்த ஆசிரியர்கள் எத்தனை பேர் ?

(உ) இப்படி வேலை இழந்த ஹிந்தி பண்டிதர்களுக்கு அரசாங்கம் வேறு என்ன வாய்ப்பளித்திருக்கிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM :

(அ) Yes, Sir.

(இ) Eighteen, Sir.

(உ) No steps were taken to provide these pandits with alternative appointments as such of those as were qualified could secure employment in the high schools which were opened in 1960–61. The appointment of unqualified teachers was purely on a temporary basis and no steps were necessary to retain them in service.

SRI A. VEDARATHNAM : தகுதி பெற்ற ஹிந்தி பண்டிதர்கள் எல்லோரையும் ஹைஸ்கூல்களில் அப்஺ார்ப் செய்யப்பட்டுவிட்டதா ? ஹிந்தி பண்டிதர்கள் இல்லாத இடங்களுக்கு அவர்களை நியமிக்க அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது சர்க்கார் பள்ளிகளில் இல்லை ; தனிப்பட்ட பள்ளிகளில் அவசியம் இருக்கும் இடங்களில் இந்த பண்டிதர்கள் நியமிக்கப்படுவார்கள்.

SRI P. S. K. LAKSHMIPATHI RAJ : ஒரு சில பள்ளிகளிலே ஆசிரியர்களே ஹிந்தி வகுப்புக்குப் போகும் மாணவர்களை வகுப்புக்குப் போகாமல் வெளியே போய்விடுங்கள் என்று சொல்வது சர்க்காருக்குத் தெரியுமா ? அதைத் தடுக்க ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதுமாதிரி தகவல் இல்லை ; அங்கத்தினருக்குக் கிடைத்தால் அதை எனக்குத் தனியாக எழுதி அனுப்பக் கோருகிறேன்.

*Wage Board for beedi workers*

* 992 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பீடித் தொழிலாளர்களுக்கு சம்பள நிர்ணய போர்டு அமைக்க உத்தேசமுண்டா ?

(இ) இது விஷயமாக நமது சர்க்கார் மத்திய சர்க்காருக்கு என்ன ஆலோசனை கூறியுள்ளார்கள் ?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) பீடித் தொழிலாளர்களுக்கு சம்பள நிர்ணய போர்டு அமைக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் இல்லை.

[22nd March 1961

(இ) இது விஷயமாக மத்திய சர்க்காரிடமிருந்து ஒரு தகவலும் வரவில்லை. இந்த சர்க்காரும் மத்திய சர்க்காருக்கு ஒரு ஆலோசனையும் கூறவில்லை.

**SRI V. K. KOTHANDARAMAN** : ஸார், ஒரு ராஜ்யத்திலே, குறிப்பாக நம் ராஜ்யத்திலே மினிமம் வேஜ் இருக்கும்போது, பக்கத்து ராஜ்யங்களிலே அதைவிடக் குறைந்த கூலி இருப்பதால், இந்தக் கூலியைக் கொடுக்க முடியாமல், பக்கத்து ராஜ்யங்களுக்கு பீடி தொழிற்சாலைகளை எடுத்துப் போய் நடத்தும் காரணத்தால், நம் சர்க்காருடைய வருமானமும் தடைபடுகிறது, இந்த ராஜ்யத்திலே தொழிலாளிகளுக்கும் வேலையில்லாமல் போகிறது என்கிற காரணத்தினால், வெகு விரைவில் அகில இந்திய ரீதியில் ஒரு பீடி நிர்ணய போர்டை நிறுவ நடவடிக்கை எடுப்பார்களா ?

**THE HON. SRI R. VENKATARAMAN** : கனம் அங்கத்தினரின் முன்னுரை அவ்வளவும் தவறு. பக்கத்து ராஜ்யங்களில் நம் ராஜ்ய மினிமம் வேஜைவிடக் குறைவு இல்லை. ஆகவே ஆலோசனைக்கு அவசியம் இல்லை.

**SRI K. SATTANATHA KARAYALAR** : பீடிக்கு குறைந்த பட்ச கூலி நிர்ணயம் செய்வதில் நீளம் ஒரு இன்ச், ஒன்றரை இன்ச், இரண்டு இன்ச் என்ற அடிப்படையில் செய்திருக்கும்போது, அது இடத்திற்கு இடம் மாறுபடுவதற்குக் காரணம் என்ன ?

**THE HON. SRI R. VENKATARAMAN** : மினிமம் வேஜ் அந்த அடிப்படையில் முதலில் சிபாரிசு செய்யப்பட்டது. சென்ற ஜூலை மாதம் 1960-ம் வருஷத்தில், ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டோம். அது பீடித் தொழில் பூராவுக்கும் அமுலாகும். அந்த ஒப்பந்தத்தில் ஜாடி பீடி, சாதா பீடி என்ற இரண்டே வகையில் கூலி நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. அது இப்பொழுது திருப்திகரமாக அமுல் நடக்கிறது.

**SRI V. K. KOTHANDARAMAN** : ஆந்திர ராஜ்யத்திலே, சித்தூர் பிராந்தியத்தில் ரூ. 1–2–0 அல்லது 1–6–0 தான் கூலி; ஆகையினால் குறிப்பாக இன்றைக்கு "எக்ஸ்பிரஸ்" பீடி, "7 மார்க்" பீடி இது போன்றவைகளை பல கம்பெனிகள் நடத்திக்கொண்டு வருகிறார்கள் என்பது அமைச்சருக்கு ஞாபகத்தில் இருக்கும். இதுபற்றி வடஆர்க்காடு பீடி தொழிற்சங்கம் எழுதியிருக்கிறது, பரிசீலனை செய்ய வேண்டும் என்று. ஆகவே ஒரு சம்பள நிர்ணய போர்டைக் கொண்டுவர முயற்சி எடுக்கப்படுமா ?

**THE HON. SRI R. VENKATARAMAN** : சர்க்காருக்கு இருக்கும் தகவலில் கனம் அங்கத்தினர் சொன்னது தவறு என்று இருக்கிறது.

*Department enquiries on Police officers (Kanyakumari)*

* 993 Q.—SRI T. S. RAMASWAMY : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the number of Police officers against whom departmental enquiries were made in Kanykumari district in 1960;

(b) the nature of punishments given to them and the reasons therefor;

(c) the number of appeals pending before the Government at present; and

(d) the number of Police officers dismissed in other districts during 1959–60 and 1960–61?



22nd March 1961]

THE HON. SRI M. BHAKTAVATSALAM :

(a) 28.

(b)

| | |
|---|---|
| Dismissal | 2 |
| Removal from service | 1 |
| Compulsory retirement | 2 |
| Reduction of pay | 20 |
| Censure | 1 |
| Warning | 1 |
| Black mark | 1 |

These punishments have been awarded for various reasons like unlawful detention, neglect of duty, disobedience of orders, misdemeanours, absence without permission, reprehensible conduct, etc.

(c) 3.

(d)

| | |
|---|---|
| 1959–60 | 124 |
| 1960–61 (upto 30—11—1960) | 115 |

*Appointment of High Court Judges (All-India Panel)*

* 994 Q.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Government have accepted or not the recommendation of the Union Government for the appointment of High Court Judges from All-India Panel of names?

THE HON. SRI C. SUBRAMANIAM : The proposal that High Court Judges should be appointed from an All-India panel is not a recommendation addressed by the Union Government to this Government. It is a recommendation addressed to the Union Government by the States' Reorganisation Commission. The question of the State Government accepting or not accepting the recommendation does not, therefore, arise.

SRI A. A. RASHEED : May I know the advantages in having such as All-India Panel of names?

THE HON. SRI C. SUBRAMANIAM : I would suggest to the hon. Member to go through the States' Reorganization Commission's report.

*Scholarships to Students of other States*

* 995 Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the Government have granted any scholarships to students studying in other States; and

(b) if so, the courses for which such scholarships are given?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Yes, Sir.

[22nd March 1961

(b) (1) One scholarship in the Rashtriya Indian Military College, Dehra Dun;

(2) One scholarship for the Ph.D. course in the Indian School of International Studies, New Delhi;

(3) Two scholarships for training in Marine Engineering at Calcutta; and

(4) One scholarship for the Executive Cadets of the Training Ship " Dufferin ".

**Sri K. SATTANATHA KARAYALAR** : ஸார், நம் மாவட்டத்திலே இருக்கும் சில கோர்ஸ்களுக்கு, மாணவர்கள் இதர மாவட்டங்களில் படிப்பதால் ஸ்காலர்ஷிப்கள் கொடுக்கப்படுவதில்லை ; மாணவர்கள் தங்கள் பெற்றோர்கள். அந்த மாவட்டங்களிலே இருக்கும் காரணத்தால், அங்கே படிக்கிறார்கள், கல்வித் தரத்தில் அந்த ஸ்டேட்டுகளில் சிறந்தவர்களாக இருந்தாலும், நம் மாகாண அடிப்படையில் கொடுக்கப்படுவதில்லை என்பது உண்மையா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : நாம் கொடுக்கும் ஸ்காலர்ஷிப்கள் மற்ற ராஜ்யங்களில் படிக்கும் இந்த மாகாண மாணவர்களுக்குத்தான் கொடுக்கப்படுகிறது.

9 a.m. **Sri K. SATTANATHA KARAYALAR** : டெக்ஸ்டைல் டெக்னாலஜி நம் மாகாணத்தில் இருப்பதால் பிற மாகாணத்தில் படிப்பவர்களுக்கு கொடுப்பதில்லை. அங்கு படிக்கிறவர்கள் சென்னையைச் சேர்ந்தவர்களாக இருக்கிற காரணத்தால் அந்த ஸ்டேட் கொடுப்பதற்கில்லை. நம் ஸ்டேட்தான் கொடுக்கவேண்டும். அதற்காக நம் மாகாணத்திலிருந்து அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படுமா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : இங்கே படிப்பதற்கு வசதி இருக்கும்போது வெளி மாகாணத்திலே படிக்கக்கூடிய மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுப்பதில்லை. இதனால் சில கணக்கு வைக்க முடியாமல் போய்விடுகிறது என்பதற்காக இதை கவனிக்கவேண்டியிருக்கிறது.

**Sri S. NAGARAJA MONIGAR** : அப்படி பிற மாகாணங்களில் படிக்கும் நமது மாணவர்களுக்கு இப்போது கொடுக்கும் ஸ்காலர்ஷிப்பையே அதிகரிக்க சர்க்கார் முன்வருமா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : இது போன்ற சில சிறப்புப் பாட பயிற்சிகளுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படுகிறது. இப்பொழுது கொடுக்கக்கூடிய பணம் போதும் என்று சர்க்கார் கருதுகிறது. அவசியம் ஏற்பட்டால் பின்னால் பரிசீலனை செய்யப்படும்.

**Sri A. GOVINDASAMI** : இதர ராஜ்யங்களிலிருந்து இங்கு பயிலும் மாணவர்களுக்கு கல்விச் சலுகை வழங்கப்படுகிறதா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : பொதுவாகக் கேள்வி கேட்டால் உடனே சொல்வதற்கில்லை. தனிக் கேள்வி போடவேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன்.

### *Tractor factory*

*996 *Q.*—**Sri A. VEDARATHNAM** : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னைக்கு அருகாமையிலுள்ள செம்பியத்தில் ஆரம்பமாக இருக்கும் டிராக்டர் தொழிற்சாலையில் நம் மாநில, மத்திய சர்க்கார்களின் பங்குகள் என்ன ?



22nd March 1961]

(இ) வெளிநாட்டு உதவி இதற்கு உண்டா ?

(உ) இதன் உற்பத்தி சக்தியும், வேலை வாய்ப்பு அளவும் என்ன ?

(எ) எவ்வளவு மூலதனத்தில் இது துவக்கப்பட இருக்கிறது ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : (அ) The industrial undertaking referred to by the hon'ble Member is being set up in the private sector and neither the State Government nor the Central Government has any financial interest in it.

(இ), (உ) & (எ) Since the Industry is entirely in the private sector, Government have no responsibility in these matters.

**Sri A. VEDARATHNAM** : இந்த இயந்திரசாலையை அமைப்பதற்கு எந்த வெளிநாட்டார் உதவியைக் கேட்டார்கள். இங்கு உற்பத்தி செய்யும் டிராக்டரின் விலை எவ்வளவு ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : எந்த வெளி நாட்டிலிருந்து வந்தார்கள் என்று சொல்லத் தயாராய் இல்லை. ஆனால் 3,000 டிராக்டர்கள் உற்பத்தி செய்ய முடியும் என்று சொல்ல முடியும்.

### *Bonus to workers*

* 997 *Q.*—**Sri V. K. KOTHANDARAMAN** : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வருடா வருடம் தொழிலாளர்களுக்கு போனஸ் தகராறில்லாமல் கிடைக்க ஆராய்ச்சி செய்ய கமிட்டி அமைக்க உத்தேசமுண்டா ?

(இ) எந்த அடிப்படையில் ? விவரமென்ன ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : (அ) & (இ) இதுபோன்ற கமிட்டி அமைக்க ராஜ்ய அரசாங்கத்திற்கு உத்தேசம் இல்லை.

**Sri V. K. KOTHANDARAMAN** : பத்திரிகையில் பார்த்தோம், கனம் தொழிலாளர் அமைச்சர் அபிப்பிராயம் ஒன்று வெளியிட்டதை ; மூன்று மாதம் போனஸ் வரக்கூடிய பணத்தை ஸ்மால் சேவிங்ஸில் போடவேண்டுமென்ற அடிப்படையிலே ஒரு திட்டம் வரப் போவதாக. இதுமாதிரி திட்டம் ஏதாவது உண்டா ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : இது மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லை என்றாலும் மூன்று மாதத்திற்கு அதிகமாக போனஸ் வாங்கக்கூடிய தொழிலாளர்கள் அவர்களுடைய வருங்கால நன்மையை உத்தேசித்து சட்டம் இயற்றவேண்டுமென்ற அபிப்பிராயம் சர்க்கார் பரிசீலனையில் இருக்கிறது.

### *Cheatings*

* 998 *Q.*—**Sri T. S. RAMASWAMY** :
**Sri A. A. RASHEED** : } Will the Hon. the Minister for Home be pleased to state the number of cases brought to the notice of the Government where the public have been cheated by persons posting as astrologers, palmists, psychopaths, magicians, fortune-tellers, fortune-changers and doctors?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : The number is thirteen, Sir.

[22nd March 1961

SRI A. A. RASHEED : Is it a fact that the victims of the fortune-tellers and quacks are generally old maids and old men?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do not know about the age of these people. But there are also victims of some of these people who claim themselves to be sex specialists and that might have interested the hon. Member. There was a complaint against one person who claimed to be a sex specialist and he was communicating with so many people and administering all kinds of medicine and that case is just now under investigation.

SRI N. R. THIAGARAJAN : ஜோதிடம், ரேகை சாஸ்திரத்தில் கொஞ்சம்கூட உண்மையில்லை என்பதை 40 ஆண்டுகாலமாக ஆராய்ந்து கண்டுபிடித்தது என் அனுபவம். இன்னும் பேய் பிசாசு என்று வேறு மக்களிடத்தில் பயம் இருந்துவருகிறது. இதெல்லாம் ஒன்றும் இல்லை என்று சர்க்கார் மக்களுக்குத் தெரிவிப்பதற்கு ஒரு புஸ்தகத்தை வெளியிடுவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஜோதிடம், ரேகை சாஸ்திரம் என்பது மிகவும் கவர்ச்சிகரமான விஷயம். நாற்பது ஆண்டுகாலமாக கனம் அங்கத்தினர் அவர்கள் ஆராய்ச்சி செய்து சில விஷயத்தை கண்டுபிடித்திருப்பார்கள் எனுல் அவைகள் எல்லோருக்கும் பயன்தரக் கூடிய வகையிலே அவர்களே ஒரு நூலை எழுதலாம் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

SRI A. A. RASHEED : Sir, will the Government consider to take more vigorous steps to prevent cheating of the public on a large scale by these quacks and other people?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Whenever cases of cheating are brought to the notice of the Government or the Police, they do take action.

SRI P. G. MANICKAM : நற்காலம் கூறுவோர் என்ற முறையிலே எல்லா கிராமங்களிலும் வந்து பொதுமக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் பிழைப்பிற்காக இவ்வாறு செய்கிறார்கள் என்பதால், அரசாங்கம் இவர்களை போலீஸ் மூலமாக அடக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவ்வாறு நடைபெறுவதற்கு நற்காலம் குறிப்பவர்களிடத்தில் நம்பிக்கை உடையவர்கள் இருப்பதால்தான். நற்காலம் தெரிந்துகொள்வதற்காக அவர்களை அழைக்கிறார்கள். இவ்வாறு பல பெரிய மனிதர்களும், பணக்காரர்களும் ஜோதிடர்களை தங்கள் பக்கத்திலே வைத்துக்கொண்டு ஏதாவது சொல்லும்படி கேட்டுக்கொண்டிருப்பார்கள். அப்படிப்பட்ட மனிதர்கள் இருக்கும் போது ஜோதிடர்களை குறை சொல்வது நல்லதல்ல.

SRI A. GOVINDASAMI : சில செய்தித்தாள்கள் ராசி பலன் தினப்பலன் முதலியவைகளை பிரசுரம் செய்கிறார்களே, இதைத் தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இம்மாதிரி பத்திரிகைகளை வாங்குபவர்கள் இருப்பதனால்தான், அவர்கள் பிரசுரிக்கிறார்கள்.

SRI S. NAGARAJA MONIGAR : குதிரைப்பந்தயம், சீட்டு ஆட்டம் சூதாட்டம் போன்ற பந்தயங்களில் ஈடுபட்டு மனமுடைந்து இறந்து போகிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தெரியும். இதிலும் ஜோதிடத்தில் நம்பிக்கை உள்ளவர்கள்தான் ஈடுபடுகிறார்கள்.



22nd March 1961]

SRI T. S. RAMASWAMY : Are the Government aware of the fact that one palmist has been given 'Padma Bhushan' or 'Padma Sri' by the Government of India and if so, whether there is any difference of outlook between this Government and that Government in respect of the matter?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no question of any difference in outlook between this Government and the Central Government. Palmistry is a well recognised science which is accepted in the world and if any title is given by the Government of India, it is because of the recognition of the proficiency of the person concerned.

*Iron and steel factories in North*

* 999 Q.—SRI A. A. RASHEED : }
SRI T. S. RAMASWAMY : } Will the Hon. the
SRI N. R. THIAGARAJAN : }
Chief Minister be pleased to place on the Table of the House a report of his visit to iron and steel factories in the North?

THE HON. SRI C. SUBRAMANIAM : A Report[a] is placed on the table of the House.

SRI A. A. RASHEED : Which of the factories inspected in North India are more suitable for the location of the iron and steel factory in Salem?

DEPUTY SPEAKER : The question put by the hon. Member is not clear.

THE HON. SRI C. SUBRAMANIAM : How can the factories be located here? They have already been located in particular places. They cannot be shifted here (Laughter).

*Industries Minister's visit to U.N.O.*

* 1000 Q.—SRI A. VEDARATHNAM : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கனம் அமைச்சர் அவர்கள், அண்மையில் ஐக்கியநாடு சபை சென்றதன் மூலம் நம் மாநிலத்தில் தொழில் வளர்ச்சி சம்பந்தமாக என்னென்ன புது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன ? விவரமென்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : During his recent visit to the United Nations, Minister for Industries had discussions at Washington with the Department of Industries and Commerce of the United States of America, the World Bank, the Development Loan Fund Authorities, and the India Supply Mission, Washington. The information gathered about foreign firms who were interested in collaborating with firms in Madras for setting up new industries in this State, was transmitted to industrialists of Madras. These Madras firms are now in correspondence with their foreign counterparts.

---

[a] Printed as Appendix on page 369–370 infra.

[22nd March 1961

**SRI A. VEDARATHNAM** : கனம் தொழில் அமைச்சர் அவர்கள் பல மேல்நாடுகளுக்குச் சென்று அங்கு பெற்ற செல்வாக்கின் மூலமாக அங்குள்ள சில நிபுணர்களைக் கொண்டுவந்து உயர்தரக் கல்வி போதிப்பதற்கு முயற்சி எடுப்பார்களா ?

**THE HON. SRI R. VENKATARAMAN** : இண்டியன் இன்ஸ்டிட்யூட் ஆப் டெக்னாலஜியில் ஜெர்மன் நிபுணர்கள் உதவி செய்துக்கொண்டு வருகிறார்கள்.

**SRI S. NAGARAJA MONIGAR** : கனம் தொழில் அமைச்சர் அவர்கள் அந்நிய நாடுகளைப் பார்த்த வரையில் அங்கு தொழில்கள் குவியல் முறையில் ஏற்படுத்துகிறார்களா ? அல்லது பரவலாக ஏற்படுத்துவதை ஆமோதிக்கிறார்களா ? அங்குள்ள முன்னேற்றத்தை வைத்துக்கொண்டு நம் நாட்டில் பரவலான முறையில் தொழில்கள் அமைப்பதிலுள்ள கஷ்டங்கள் அல்லது அனுகூலங்கள் என்னென்ன ?

**THE HON. SRI R. VENKATARAMAN** : மேல் நாடுகளில் கூட தொழில்கள் எல்லாம் குவியலாகத்தான் சிலயிடங்களில் இருக்கின்றன. எந்தெந்த இடத்தில் இயற்கை வளம் இருக்கிறதோ அங்கு அந்தத் தொழில்கள் எல்லாம் இருக்கும். பிட்ஸ்பர்க்கில்தான் இரும்புத் தொழிற்சாலைகள் எல்லாம் இருக்கின்றன. எங்கெங்கு வசதிகள் இருக்கிறதோ அங்கு தொழில்கள் அமைக்கப்படும். கனம் அங்கத்தினர் போட்ட கேள்வி அவரது ஜில்லாவிற்கு சாதகமாகயில்லை என்று மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

### *Kinder-garden schools*

* 1001 *Q.*—**SRI V. K. KOTHANDARAMAN** : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆரம்பப் பள்ளிகளுக்கு குழந்தைகளை தயார்படுத்த நமது ராஜ்யத்தில் எத்தனை கிண்டர் கார்டன் பள்ளிகள் எங்கெங்கே உள்ளன, ஜில்லாவாரியாக ?

(இ) தனியார் நடத்துவது எத்தனை ? சர்க்கார் நடத்துவது எத்தனை?

(உ) மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எந்த அளவுக்கு அதிகப்படுத்த உத்தேசம் ?

**THE HON. SRI C. SUBRAMANIAM** : (*a*) Three schools in Madras City and one in Kanyakumari district.

(*b*) Three and one.

(*c*) There is no proposal for expansion of this kind of education during the Third Five-Year Plan.

**SRI V. K. KOTHANDARAMAN** : நேரு பிறந்த தினத்தை குழந்தைகள் தினம் என்று சிறப்பான முறையில் கொண்டாடப்படுகிறது. ஆகவே, ஆரம்ப பாடசாலைகளை பக்குவப்படுத்தி சிறு குழந்தைகளுக்கு இதேபோன்று கிண்டர் கார்டன் பாடசாலைகளை ஏற்படுத்துவதற்கு எதனால் இவ்வளவு கவனக்குறைவு அல்லது சிரத்தைக்குறைவு ஏற்படுகிறது, காரணம் என்ன ?

**THE HON. SRI C. SUBRAMANIAM** : நேரு பிறந்த தினம் கொண்டாடுவதற்கும் இந்த கேள்விக்கும் என்ன சம்பந்தம் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. புரிந்துகொண்ட பிற்பாடு தான் இதற்கு பதில் சொல்ல முடியும்.



22nd March 1961]

**SRI K. ANBAZHAGAN** : கிண்டர் கார்டன் முறையில் குழந்தைகளுக்கு பயிற்சி அளிப்பதை நம் நாட்டிற்கு ஏற்ற விதத்தில் மாற்றி வேறு விதத்தில் கையாண்டு பயிற்சி முறைப்பள்ளிகள் ஏற்படுத்தமுடியும் என்ற கருத்தை கனம் அமைச்சர் அவர்கள் வெளியிட்டார்களே, அது பற்றி இப்பொழுது ஏதாவது திட்டமிருக்கிறதா ?

**THE HON. SRI C. SUBRAMANIAM** : பரிசீலனையில் இருக்கிறது.

**SRI A. VEDARATHNAM** : பள்ளி செல்லும் வயதிற்கு முந்திய குழந்தைகளுக்காக நம் மாநிலத்தில் கி டர் கார்டன் முறை, மாண்டிசோரி முறை, ப்ரி-பேஸிக் என்ற மூன்று திட்டங்கள் அமுலில் இருக்கிறதே, அரசாங்க அனுபவத்தில் இதை பரீட்சித்துப் பார்த்ததில் இதில் எந்த முறை சிறந்தது என்று அறிவிக்க முடியுமா ?

**THE HON. SRI C. SUBRAMANIAM** : ஒவ்வொரு முறையிலும் சில சிறந்த அம்சங்கள் இருக்கின்றன. பணியாற்றக் கூடிய ஆசிரியர்களைப் பொறுத்திருக்கிறது, எந்த முறை வெற்றி பெறுகிறது என்பது. இதில் முக்கிய கஷ்டம், இதில் ஏற்படக்கூடிய செலவு. ஒவ்வொரு குழந்தைகளுக்கும் அதிக செலவு ஏற்படுவதால் லட்சக்கணக்கான குழந்தைகளுக்கு இப்படிப்பட்ட பயிற்சி கொடுப்பது என்பது முடியாத காரியம். ஆகவே கனம் அன்பழகன் அவர்கள் கேட்ட கேள்வியின் அடிப்படையில், நம் நாட்டிற்கு ஏற்ற சூழ்நிலையில் தகுந்தபடி எப்படி இந்த முறையை மாற்றியமைத்து எல்லாக் குழந்தைகளுக்கும் எவ்வாறு கொடுக்க முடியும் என்பது பரிசீலனையில் இருக்கிறது.

### *Small scale Industries (Aids)*

*1002 *Q.*— **SRI V. K. KOTHANDARAMAN** : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் **Small-scale Industries**-களுக்கு **State Bank** கள் மூலம் என்னென்ன உதவி செய்யப்படுகிறது ?

(இ) கடன் தொகை எவ்வளவு வரை கொடுக்கப்படுகிறது ?

(உ) அப்படி கடன் கொடுத்தால், என்னென்ன நிபந்தனைகளின் பேரில் கொடுக்கப்படுகிறது ?

**THE HON. SRI R. VENKATARAMAN** : (*a*), (*b*) & (*c*) A copy of the pamphlet issued by the State Bank containing necessary particulars in respect of the Pilot Scheme is placed in the Library of the Madras Legislature. The scheme has been extended to all branches of the Bank. It is understood that the State Bank is bringing out a revised pamphlet which may be obtained from them for further particulars.

### *Political sufferers (relief)*

* 1003 *Q.*—**SRI A. A. RASHEED** : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government have received recently any petition from the General Secretary, Madras District Political Sufferer's Conference, regarding relief to political sufferers; and

(*b*) if so, the action taken thereon?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM** : (*a*) Yes.

(*b*) As adequate assistance to political sufferers is being already rendered no further action was considered necessary.

[22nd March 1961

SRI T. S. RAMASWAMY : May I know whether the Government Order granting educational concession to children of political sufferers has not been implemented this year?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The hon. Member may put a separate question to the Hon. Minister for Education.

SRI V. K. KOTHANDARAMAN : இந்தத் தியாகிகளின் குடும்பங்களுக்கு எப்படி இலவசக் கல்விக்காகவேண்டி சர்க்கார் ஏற்பாடு செய்திருக்கிறதோ அதே போன்று மருத்துவ சலுகையும் கொடுக்க வேண்டுமென்று கோரிக்கை வந்திருக்கிறதா ? அது குறித்து சர்க்காரின் அபிப்பிராயம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது விஸ்தரிக்கப்பட்டிருக்கிற வசதிகளோடு மேற்கொண்டும் புதிய வசதிகள் செய்வதாக இப்பொழுது உத்தேசம் ஒன்றுமில்லை.

### *Agricultural college*

* 1004 Q.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

சாத்தனூர் அணைக்கட்டுக்குப் பக்கத்தில் விவசாயக் கல்லூரி ஆரம்பிக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATASALAM : No, Sir.

* 1005 Q.—SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆடுதுறையில் விவசாயக் கல்லூரி 1961–62-ல் ஆரம்பிக்க உத்தேசமுண்டா ?

(இ) அதற்காகத் தனியார் துறையில் நிலம் இனமாக கொடுப்பதாக விண்ணப்பம் ஏதேனும் வந்ததா?

(உ) அதன்மேல் எடுத்த முடிவு என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No, Sir.

(b) Yes, at Kabistalam in Thanjavur district.

(c) No decision has been taken yet.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : ஆடுதுரையில் ஒரு விவசாயக் கல்லூரியை ஆரம்பிக்க வேண்டுமென்று நீண்டகாலமாக வற்புறுத்தப்பட்டு வருகிறது. அதை ஆரம்பிப்பதற்கு நிலம் தருவதாக, கபிஸ்தலத்திலிருந்து திரு. கருப்பைய மூப்பனார் அவர்கள் மனுக்கள் போட்டிருப்பதாக பத்திரிகைகளில் பார்த்தோம். தவிர உற்பத்தித் திட்டங்கள் போன்றவைகள் அமுலாகும் பிரதேசங்களில், அப்படிப்பட்ட ஒரு விவசாயக் கல்லூரி ஏற்படுத்துவது அவசியம். கனம் அமைச்சர் அவர்கள் ரஷ்யாவிற்குச் சென்று அங்கு இப்படிப்பட்ட விவசாயக் கல்லூரிகளில் ஏராளமான மாணவர்கள் பயிலுகிறார்கள் என்று சொன்னார். ஆகவே அங்கு விவசாயக் கல்லூரி அமைக்க சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கபிஸ்தலத்தில் நிலம் அளிக்க முன்வந்தது பற்றி பரிசீலனை செய்யப்பட்டு வருகிறதென்று சொன்னேன். நிலம் மட்டும் போதாது, ஒரு விவசாயக் கல்லூரி அமைப்பதற்கு. தஞ்சையில் வேண்டுமென்றால், பக்கத்திலுள்ள சிதம்பரத்தில் அண்ணமலை யூனிவர்ஸிட்டியில் ஒரு விவசாயக் கல்லூரி இருக்கிறது. மூன்றாவது திட்டத்தில் மற்றும் ஒரு கல்லூரி அமைக்க திட்டமிருக்கிறது. எங்கு அமைப்பது, மதுரையில் அமைப்பதா, தஞ்சாவூரில் அமைப்பதா, வேறு எங்கே அமைப்பது என்று பரிசீலனை செய்து முடிவு செய்யப்பட வேண்டிய விஷயம்.



22nd March 1961]

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Arising out of the answer given by the Hon. Minister, may I know whether there is any proposal before Government at least to increase the strength of the present college?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : We have sufficiently increased the strength. I am afraid it may not be possible and practicable to increase the strength in the Agricultural College at Coimbatore still further.

SRI M. D. THIAGARAJA PILLAI : தஞ்சையில் ஒரு விவசாயக் கல்லூரி ஏற்படுத்த சுந்தர பெருமாள் கோவில் கருப்பையா மூப்பனார் அவர்கள் ஆயிரம் எக்கர் நிலம் கொடுக்க முன்வந்திருக்கிறார்கள். அது பற்றி யோசித்து சர்க்கார் ஒரு கல்லூரி ஏற்படுத்த முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கபிஸ்தலத்தில் என்று சொன்னது அதே விஷயம்தான். விவசாயக் கல்லூரி அமைக்க நிலம் மட்டும் போதாது என்று சொன்னேன். அவர் சொன்னது தர்ம சொத்து. உபயோகத்திலிருந்து எமாற்றுவதற்கு என்று யாரும் நினைக்க வேண்டாம்.

### *Orphanages*

* 1006Q.--SRI S. M. ANNAMALAI : கனம் உள் விவகார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) நம் மாநிலத்தில் நடைபெறும் அனாதை இல்லங்கள் சரியாக நடைபெறவில்லை என்பது உண்மையா ?

(இ) அப்படியானால், அதைப்போக்க சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No, Sir.

There is no justification to generalise that the orphanages in the State are not properly administered.

(b) Does not arise.

SRI S. M. ANNAMALAI : அஷ்யூரன்ஸ் கமிட்டி, அனாதை இல்லங்கள் சரிவர நடத்தப்படவில்லை என்று ரிப்போர்ட் செய்திருக்கிறது. கனம் அமைச்சர் அவர்கள் ரிபோர்ட் வேறு விதமாகயிருக்கிறது. இதற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அனாதை இல்லங்கள் சரிவர நடப்பதில்லை என்று அவர்கள் கேட்பது. எல்லா இல்லங்களும் சரியாக நடக்கவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள் அவர் கேள்வியில். அவ்வாறு சொல்வதற்கு ஆதாரம் இல்லையென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

### *Punjab Cattle for breeders*

* 1007 Q.—SRI T. S. RAMASWAMY : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether there is any scheme under which the Government of India supplies cattle from Punjab free of cost to breeders;

[22nd March 1961

(*b*) if so, the details of the scheme; and

(*c*) the number of heads of cattle thus brought to our State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) Yes, Sir. The productive stray Hariana cows and heifers available in the Punjab State are supplied free of cost to the individual breeders, co-operative societies, temples, Goshalas, etc., by the Government of India.

(*c*) One hundred and sixty-four cattle have been obtained for rearing in Government Farms. One thousand, four hundred and forty-seven cattle have been supplied to private breeders.

*Persons over 80 years (Financial help)*

* 1008 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether any financial help has been given to old persons above 80 in 1959–60; and

(*b*) if not, whether there is any proposal to give financial help to old persons?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No, Sir.

(*b*) There is no such proposal under consideration.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware of the fact that old men above 80 find it difficult to pull on without financial assistance? If soo, will the Government come forward at least to start some old age homes so that they can spend the remainder of their days there in comfort.

THE HON. SRI C. SUBRAMANIAM : I do not think old age homes would be a solution for this.

SRI J. MATHA GOWDER : அண்டை ராஜ்யமாகிய ஆந்திராவில் 70 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு உதவித்தொகை கொடுப்பதாக பத்திரிகைகளில் பார்த்தோம். நமது மாநிலத்திலும் அப்படி கொடுத்தால் என்ன ? அதுபற்றி பரிசீலனை செய்யப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அங்கு இருக்கக்கூடிய நிலைமையை அனுசரித்து எந்தத் திட்டங்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்று சர்க்கார் முடிவுசெய்கிறது. இச்சர்க்கார் இந்தத் திட்டத்திற்கு இப்பொழுது முதலிடம் கொடுத்து அதற்காக நிதி செலவழிக்க வேண்டுமென்று கருதவில்லை.

*Farm in Varushanadu*

*1009 *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதில் அளிப்பாரா—

மதுரை ஜில்லா, பெரியகுளம் தாலூகா' நரசிங்கபுரம் கிராமம், வருஷ நாடு பகுதியில் உள்ள தரிசு நிலத்தில் பெரிய பண்ணை வைக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

SRI N. R. THIAGARAJAN : பெரியகுளம் தாலூகா, நரசிங்கபுரம் கிராமம், வருஷநாடு பகுதியில் 250 சதுர மைல் நிலத்தில், 150 மைல் பாரஸ்டாக இருக்கிறது. அங்கு 100 சதுர மைல் காலியாக



22nd March 1961]

இருக்கிறது, அங்கு சிலர் உழுது கொண்டிருக்கிறார்கள். கனம் அமைச்சர் அவர்கள் 10,000 ஏக்கர் பண்ணை வைக்க நிலம் இல்லை என்று சொன்னதாக பத்திரிகைகளில் பார்த்தேன். அந்த 10,000 ஏக்கர் பண்ணையை அங்கு வைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : 10,000 ஏக்கர் நிலம் இருந்தால் அதைத் திருத்தி விவசாயத்திற்கு கொண்டு வரக்கூடியதாகயிருக்க வேண்டும். நிலம் இருப்பதோடு தண்ணீர் வசதியும் இருக்க வேண்டும். இதையெல்லாம் பார்த்து செய்யவேண்டியிருக்கிறது. அது இருந்தால் மேலும் பரிசீலனை செய்யப்படும்.

*Coconut cultivation*

*1010 Q.—SRI A. VEDARATHNAM : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) தென்னை சாகுபடியை விஸ்தரிக்க அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறதா ?

(இ) அதன் விவரமென்ன ?

(உ) இதற்காக அரசாங்கம் அளிக்கும் உதவி என்ன ?

(எ) அதற்காக ஒதுக்கியுள்ள தொகை எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) Yes, Sir.

(இ) It is proposed to bring an area of 10,000 acres in the coastal taluks of Ramanathapuram district under Cocoanut Cultivation during the course of 5 years at the rate of 2,000 acres per year.

(உ) The proposal under consideration is for allotting land for cocoanut cultivation to small land-holders, landless poor people and Ceylon repatriates. Loan assistance is contemplated for enabling reclamation of land, fencing of seedlings, digging of wells, etc.

(எ) As the scheme has not yet been finalised, only a token provision of Rs. 100 has been proposed for the year 1961-62.

SRI A. VEDARATHNAM: ஸார், தஞ்சை ஜில்லாவில் உள்ள கடற்கரைப் பகுதியில் மலையாளத்தைப்போல் நல்ல முறையில் தென்னை மரங்கள் வளருகின்றன. கடந்த 1952-ம் ஆண்டிலும் 1955-ம் ஆண்டிலும் ஏற்பட்ட கடும் புயல் காரணமாக சுமார் 10 லட்சம் தென்னை மரங்கள் சேதமடைந்து விட்டன. அதை புனருத்தாரணம் செய்கின்ற முறையில் கொஞ்ச காலத்திற்கு தென்னங்கன்றுகளை பாதி விலைக்கு சர்க்கார் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அதன் பின்னால் அதை நிறுத்திடார்கள். மீண்டும் அவ்விதம் உதவி செய்து தென்னை மரங்களை மேலும் உற்பத்தி செய்வதற்கு சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தஞ்சாவூர் ஜில்லாவில் பட்டுக்கோட்டை தாலூகாவில் புயலால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு, பழைய நிலைமையை கொண்டு வருவதற்காக பலவிதமான வசதிகள் சர்க்காரால் செய்து கொடுக்கப்பட்டு வந்தன. அந்த வகையில் தென்னம் நாற்றுகளும் கொடுக்கப்பட்டு வந்தன. ஆனால் இந்த வசதி ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு தான் கொடுக்க முடியும். அந்த காலத்திற்குள் விவசாயிகள் அதை பூரணமாக உபயோகித்துக்கொள்ள வேண்டும். இல்லையென்றால் விவசாயிகள் போதிய அக்கரை எடுத்துக்கொள்ளவில்லை என்று தான் எடுத்துக்கொள்ள முடியும். அதோடு அங்கு ஒரு ஆராய்ச்சிப் பண்ணையும்

கூட அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த முறையில் தஞ்சாவூர் ஜில்லாவுக்கு பல வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன.

**Sri V. K. RAMASWAMY MUDALIYAR** : Sri, May I know whether there is any proposal to start similar farms in the coastal areas of Chingleput and South Arcot districts?

**The Hon. Sri M. BHATKTAVATSALAM** : We are just doing it in the coastal areas in Ramanathapuram district and then we have also taken up areas in Tindivanam taluk, Kazhuveli swamp area. By and by this will be extend to other districts also.

**Sri P. G. MANICKAM** : ஸார், விவசாய நிலங்களுக்கு தண்ணீர் பாய்வதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஏரிக்கரையோரங்களில் தென்னை மரங்களை பயிரிடலாம். அவ்விதம் செய்தால் லட்சக்கணக்கான மரங்களை நம்மால் பயிரிட முடியும். அதன் மூலம் நல்ல வளர்ச்சியும் ஏற்பட முடியும். ஆகவே பி.டபிள்யூ.டி. இலாகா மூலமாக தென்னை மரங்களை வளர்ப்பதற்கு உரியத் திட்டத்தை கொண்டு வருவதற்கு சர்க்கார் முயற்சி செய்யுமா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : கனம் அங்கத்தினர் அவர்கள் அக்கரை கொண்டிருப்பது போல் அந்தந்த இலாகாவினரும் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். அதோடு கனம் அங்கத்தினர் அவர்கள் போன்றவர்கள் ஆங்காங்குள்ள விவசாயிகளுக்கும் எடுத்துச்சொல்லி இதில் அக்கரை எடுக்க ஏற்பாடு செய்தால் நன்றாக இருக்கும்.

**Sri R. KRISHNASAMI NAIDU** : ராமனாதபுரம் ஜில்லாவில் தொண்டி பகுதியில் ராமனாதபுரம் மத்திய கூட்டுறவு பாங்க்-க்குச் சொந்தமான 30, 40 ஏக்கர் கொண்ட ஒரு தென்னம் தோப்பு இருக்கிறது. அது நர்ஸரி ஆராய்ச்சிப் பண்ணை ஏற்படுத்த தகுதியான இடம் என்று விவசாய இலாகா அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அந்த இடத்தை எடுத்துக்கொள்ள அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : இது கூட்டுறவு பாங்குக்குச் சொந்தமானது என்று கனம் அங்கத்தினர் அவர்களே தெரிவித்தார்கள். இருந்தாலும் கனம் அங்கத்தினர் போன்றவர்கள் இதில் அக்கரை எடுத்துக்கொண்டு, அங்கேயிருக்கின்ற விவசாய இலாகாவை நாடினால், இதில் என்ன செய்ய முடியுமோ அதை செய்து கொடுக்க முன் வருவார்கள்.

**Sri A. VEDARATHNAM** : ஸார், மரங்களை வளர்க்கின்ற இயக்கத்தில் வேறு எல்லாவிதமான கன்றுகளையும் (**Seedlings**) பாதி விலைக்கு கொடுத்து வருகிறார்கள். ஆனால் தென்னை மரத்தை மட்டும் இதிலிருந்து விலக்கியிருக்கிறார்கள். இதற்கு என்ன காரணம் என்றும் தெரியவில்லை. இதையும் பாதி விலையில் கொடுத்தால் தென்னை மரங்களை அதிகமாக உற்பத்தி செய்வதற்கு வசதியாக இருக்கும். இதற்காக விவசாய பண்ணை தேவையாக இருக்கிறது. இப்போது ஒவ்வொரு பிளாக்கிலும் இரண்டு மூன்று விவசாய பட்டதாரிகள் இருக்கிறார்கள். ஆகவே எல்லா பிளாக்குகளிலும் இந்தக் கன்றுகளை உற்பத்தி செய்து கொடுப்பதற்காக, எந்த இடத்திலுள்ள கன்றுகள் சிறந்தது என்பதைப் பார்த்து—மலையாளத்திலுள்ள கன்றுகள் மிக சிறந்தது என்று சொல்லுகின்றார்கள்—இவைகளை எல்லாம் பார்த்து, எல்லா பிளாக்கிலும் ஆராய்ச்சிப் பண்ணையை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : நான் முன்பு கூறியது போல் பல வகையில் மக்களுக்கு எதெது தேவை என்று அறிந்து அதற்கான வசதிகள் செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதிலும் முக்கியமாக ஏழைகளுக்கு, குறிப்பாக சிலோனிலிருந்து வந்தவர்களுக்கு, எல்லாம் இந்த உதவிகள் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். இந்த உதவி எல்லோருக்கும் அளிக்கவேண்டும் என்பதில்லை. குறிப்பாக தென்னைமர நாற்றுகளை உற்பத்தி செய்வதில் எது சிறந்தது என்பதைப் பார்த்து



No.——

சிலோன் நாற்று சிறந்ததா, அல்லது மலைய[illegible]திலுள்ள நாற்று சிறந்ததா என்பதைப் பார்த்து, அவைகளை உற்[illegible] செய்து வேண்டியவர்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது[illegible]

**Sri T. R. RAMAMIRTHA THONDAMA**[illegible] [illegible]ங் கன்றுகள், தஞ்சாவூர் ஜில்லாவில் நல்ல முறையில் வ[illegible] பலன் கொடுத்திருக்கிறது. இப்போது பட்டுக்கோட்டையில் இருக்கும் பண்ணையிலிருந்து எல்லோரும் பயன் பெற்றுக்கொள்ள முடிவதில்லை. ஆகையால் நாம் ஏற்படுத்தப்போகும் எல்லா பஞ்சாயத்துகள், பஞ்சாயத்து டெவலப்மெண்ட் கவுன்ஸில்கள் இவைகள் மூலமாக கன்றுகளை தயார் செய்து பாதி விலையில் கொடுத்தால் விவசாயிகளுக்கு பயனுள்ளதாக இருக்கும். அதே போன்று, பி.டபிள்யூ.டி. மூலமாகவும் இதை வளர்க்கலாம் காவேரி ஓரங்களில். ஆகவே இதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு, தென்னம்பிள்ளைகளை ஆளாக்க சர்க்கார் முன் வருவார்களா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : இதில் கனம் அங்கத்தினர் போன்றவர்கள் அக்கரை காட்டுவதை நான் வரவேற்கிறேன். சென்ற அக்டோபர் 2-ம் தேதி பல இடங்களில் பஞ்சாயத்துகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. அடுத்த தமிழ் வருஷப் பிறப்பன்றும் சில பஞ்சாயத்துகள் அமைக்கப்படும். அப்போது இந்த பஞ்சாயத்துகள் இதில் அக்கரை எடுத்துக்கொள்வார்களானால் அரசாங்கம் அதற்கு வேண்டிய உதவிகளைச் செய்து கொடுக்க தயாராய் இருக்கிறது.

**Sri K. B. S. MANI** : தஞ்சை ஜில்லாவில் முத்துப்பேட்டை, அரந்தாங்கி, அதிராம்பட்டினம் போன்ற இடங்களில் தென்னங்கன்றுகள் பயிரிடுகிறார்கள். அதிராம்பட்டினத்தில் பத்து விதமான கன்றுகளைத் தயார் செய்து வினியோகித்து வருகிறார்கள். ஆனால், அவர்கள் குறைந்த விலைக்கு கொடுக்க முடியவில்லை என்றும், அதில் பல சிரமங்கள் இருக்கின்றன என்றும் சொல்லுகிறார்கள். ஆகவே, இது போன்ற பண்ணைகளுக்கு அரசாங்கம் மானியம் கொடுத்து, அதன் மூலம் அரை விலைக்குக் கொடுக்க அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** ; இம்மாதிரி யாராவது விசேஷ அக்கறை எடுத்திருந்தால், அதை அந்தந்த ஜில்லாவில் இருக்கும் ஜில்லா விவசாய இலாகாவினரை அணுகி தெரிவித்தால், அதற்கு வேண்டிய உதவிகளைச் செய்து கொடுப்பார்கள்.

**Sri A. GOVINDASAMI** : இடைக்கநாடு பகுதியில் ஒரு விவசாய ஆராய்ச்சிப் பண்ணை ஏற்படுத்த அரசாங்கத்தினிடத்தில் உத்தேசம் உண்டா ? அதே போன்று பாலூர் பகுதியிலும் ஏற்படுத்த உத்தேசம் உண்டா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : செங்கல்பட்டு ஜில்லாவிலுள்ள இடைக்கநாடு பகுதியில் ஏற்படுத்த இப்போது உத்தேசமில்லை. அதே போன்றுதான் திண்டிவனம் பகுதியில் இப்போது ஒரு பண்ணை இருப்பதால் கடலூர் வட்டாரத்திற்கும் தேவையில்லை என்று கருதப்பட்டிருக்கிறது.

**Sri K. SATTANATHA KARAYALAR** ; ஸார், தென்னங் கன்றுகள் ஒரே இடத்தில் உற்பத்தி செய்தால், அது மூன்று ஆண்டுகளுக்குத் தான் நல்ல முறையில் வளரும். அதற்குப் பின்னால் வேறு இடங்களில் தான் பயிரிட வேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஆகவே, இப்போதே வேறு இடங்களை அக்வொயர் செய்வதற்கோ, அல்லது வாடகைக்கு எடுப்பதற்கோ அரசாங்கம் ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்களா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : இதைப்பற்றி ஆராய்ச்சி செய்வதற்காக பல நிபுணர்கள், இதற்காகவே இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் இதைப் பற்றி பரிசீலித்து வேண்டிய முடிவை எடுப்பார்கள்.

**DEPUTY SPEAKER** : Questions are over.

[22nd March 1961

[*Note.*—An asterisk * at the Commencement of a speach indicates revision by the Member.]

II.—CALLING ATTENTION TO THE FAILURE AND DESTRUCTION OF CROPS DUE TO VAGARIES OF MONSOON IN UDAYARPALAYAM TALUK IN TIRUCHIRAPPALLI DISTRICT.

SRI K. R. VISWANATHAN : Mr. Deputy Speaker, Sir, under Rule 41 of the Assembly Rules, I beg to call the attention of the Hon. the Minister for Home to an urgent matter of public importance, viz., failure and destruction of crops due to vagaries of monsoon in Udayarpalayam taluk in Tiruchirappalli district and the consequent inability of the ryots to repay the New Well Subsidy loans.

9-30 a.m. THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I would like to make the following statement. According to the report received from the Collector of Tiruchirappalli, there has been no failure and destruction of crops due to the vagaries of monsoon in Udayarpalayam taluk. Both dry and wet crops have yielded well above average. In stray cases due to heavy rains in November 1960, some wet fields were affected. They are being granted remission under B.S.O. 13. Among the dry crops, the earlier sowings of groundnut and cumbu did not thrive due to lack of rains. But this deficiency of yield was compensated by the good yield from later sowings which benefited from rains though belated. In any case, the condition in Udayarpalayam taluk as a whole is normal and the Government consider that there is no warrant for any concession by way of postponement of kist or loan advances.

III.—ANNOUNCEMENTS.

(1) ELECTION OF MEMBERS TO THE HOUSE COMMITTEE.

DEPUTY SPEAKER : I have to announce to the House that the following Eleven Members were duly nominated for the election of even Members of the Madras Legislative Assembly to the House Committee for the financial year 1961–62 :—

1 Sri N. P. M. Chinnia Gounder.
2 Sri K. S. G. Haja Sheriff.
3 Sri M Kandasamy Padayachi.
4 Sri M. R. Kandasamy Mudaliyar.
5 Srimathi Kamalambujammal.
6 Sri N. Marudachalam.
7 Sri K. G. Palanisamy Gounder.
8 Sri A. V. P. Periavalaguruva Reddiar.
9 Sri S. Ramaswamy Thevar.
10 Sri M. Selvaraj.
11 Sri V. Vedayyan.

As the number of candidates who wer eduly nominated is equal to the number of vacancies to be filled, viz., ELEVEN, I hereby declare them to have been duly elected to the House Committee.



22nd March 1961] [Deputy Speaker]

Under Rule 221 (1) of the Madras Legislative Assembly Rules, the Hon. Speaker has nominated (1) Srimathi Sathyavanimuthu, (2) Sri C. Muthiah, (3) Sri N. K. Palanisami and (4) Sri T. S. Ramaswami to the Committee.

The Deputy Speaker is the ex-officio Chairman of the House Committee.

(2) GOVERNOR'S RECOMMENDATION FOR INTRODUCTION OF CERTAIN BILLS.

DEPUTY SPEAKER : I have to announce to the House that the Governor has given his recommendation for the introduction in the Legislative Assembly of the following Bills :—

(1) The Madras General Sales Tax (Second Amendment) Bill, 1961.

(2) The Madras (Added Territory) Extension of Laws Bill, 1961.

IV.—GOVERNMENT MOTIONS *RE* ASSOCIATION OF COUNCIL MEMBERS WITH THE COMMITTEE ON SUBORDINATE LEGISLATION.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

"That this House recommends to the Legislative Council that they do nominate three Members from the Council to associate with the Committee on Subordinate Legislation of this House for the financial year 1961–62 and communicate to this House the names of the Members so nominated."

DEPUTY SPEAKER : The question is—

"That this House recommends to the Legislative Council that they do nominate three Members from the Council to associate with the Committee on Subordinate Legislation of this House for the financial year 1961–62 and communicate to this House the names of the Members so nominated."

The motion was put and carried.

V.—GOVERNMENT BILLS.

(1) THE MADRAS GENERAL SALES TAX (SECOND AMENDMENT) BILL, 1961

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

"That leave be granted for the introduction of the Madras General Sales Tax (Second Amendment) Bill, 1961."

DEPUTY SPEAKER : The question is—

"That leave be granted for the introduction of the Madras General Sales Tax (Second Amendment) Bill, 1961."

The motion was put and carried and leave was granted.

[22nd March 1961

THE HON. SRI R. VENKATARAMAN : I introduce the Bill, Sir.

DEPUTY SPEAKER : The Bill is introduced.

(2) THE MADRAS (ADDED TERRITORY) EXTENSION OF LAWS BILL, 1961.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

'That leave be granted for the introduction of the Madras (Added Territory) Extension of Laws Bill, 1961."

DEPUTY SPEAKER : The question is—

"That leave be granted for the introduction of the Madras (Added Territory) Extension of Laws Bill, 1961."

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI R. VENKATARAMAN : I introduce the Bill, Sir.

DEPUTY SPEAKER : The Bill is introduced.

(3) THE MADRAS IRRIGATION CESS (AMENDMENT) BILL, 1961.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, on behalf of the Hon. the Minister for Revenue, I move—

"That leave be granted for the introduction of the Madras Irrigation Cess (Amendment) Bill, 1961."

DEPUTY SPEAKER : The question is—

"That leave be granted for the introduction of the Madras Irrigation Cess (Amendment) Bill, 1961."

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI P. VENKATARAMAN : I introduce the Bill, Sir.

DEPUTY SPEAKER : The Bill is introduced.

## VI.—VOTING ON DEMAMDS FOR GRANTS FOR THE YEAR 1961-62.

### DEMAND XV—EDUCATION.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 21,00,87,200 under Demand XV—Education."

DEPUTY SPEAKER : Motion moved—

"That the Government be granted a sum not exceeding Rs. 21,00,87,200 under Demand XV—Education."

I understand that hon. Member Sri K. Anbazhagan is moving his cut motion (No. 374) under this Demand. He may move it now.



22nd March 1961]

SRI K. ANBAZHAGAN : கனம் தலைவர் அவர்களே, கல்வித் துறையில் பொது நிர்வாகம் காலந்தாழ்ந்து நடந்து வருவதை விளக்கவும், கல்வித் தரம் உயருவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டியதைப் புலப்படுத்தவும், நான் வெட்டுத் தீர்மானம் தந்திருக்கிறேன். அதை நான் முன் மொழிகிறேன்.

"That the allotment of Rs. 21,00,87,200 under Demand XV Education be reduced by Rs. 100."

DEPUTY SPEAKER : Cut Motion moved—

"That the allotment of Rs. 21,00,87,200 under Demand XV Education be reduced by Rs. 100."

May I know how much time the Hon. Minister will require for his reply ".

THE HON. SRI C. SUBRAMANIAM : Forty-five minutes, Sir.

DEPUTY SPEAKER : All right. The Demand and the cut motion are now before the House for discussion.

*SRI N. K. PALANISAMI : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் மந்திரி அவர்கள் நேற்றையதினம் கோயம்புத்தூரிலே பேசக்கூடிய காலத்தில் இந்தப் பள்ளிகளை ஹையர் செகண்டரி பள்ளிகளாக மாற்றக் கிட்டத்தட்ட வருஷம் ஒன்றுக்கு 20 வீதம் 5 வருஷத்தில் 100 நான் மாற்ற முடியும். ரெக்கரிங் எக்ஸ்பென்ஸஸ் ஒரு பள்ளிக்கு 10,000 ரூபாய் வீதம் 1,300 பள்ளிகளுக்கு 13 கோடி ரூபாய் ஆகும். மேலும், நான்-ரெக்கரிங் எக்ஸ்பென்டிசர் 14 கோடி ஆகும் என்ற முறையில் பேசியிருக்கிறார். ஆகவே இன்றையதினம் பூராவையும் ஹையர் செகண்டரி ஆக மாற எத்தனை வருஷம் ஆகும்? வருஷத்திற்கு 20 பள்ளிகள் என்று சொன்னால் பூரா பள்ளிகளையும் மாற்ற எத்தனை வருஷம் ஆகும்? படிக்கும் மாணவனின் நிலை என்ன என்று யோசிக்கும் காலத்தில் கல்வியில் ஒரு குழப்பமான நிலை இருக்கிறது என்று நான் அறிகிறேன். மேலும், போதுமான பள்ளி வசதிகள் கிடையாது. லாபரட்டரி வசதிகள் கிடையாது. போதுமான டிரையின்ட் டீச்சர்ஸ் கிடையாது. இதை எல்லாம் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்தப் புதிய கல்வித் திட்டத்தைக் கொண்டுவரும் காலத்தில் ப்ரைமரி எடுகேஷன் லோயர் செகண்டரி எடுகேஷன், ஹையர் செகண்டரி எடுகேஷன், ப்ரி-யூனிவர்ஸிடி என்ற வகைகளில் 14 வருஷப் படிப்பு வேண்டுமென்று போட்டோம். இந்த 14 வருஷங்களில் லோயர் செகண்டரியை எடுத்துக் கொண்டாலும், ஹையர் செகண்டரியை எடுத்துக்கொண்டாலும், கலாசாலைகளை எடுத்துக்கொண்டாலும் போதனா மொழியாக தமிழ் மொழி இருக்க வேண்டும். என்பது நமது திட்டம். ஆனால், இப்போது என்ன நிலைமை ஏற்பட்டிருக்கிறது. கலாசாலைகளில் தமிழைப் போதனா மொழியாக ஏற்படுத்தும்போது, பெரிய எதிர்ப்பு ஏற்படுகிறது. அத்தகைய எதிர்ப்பு காரணமாக நாம் போட்டிருக்கும் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவரும் நிலைமை இல்லை. இப்படிப்பட்ட ஒரு நிலைமை இருக்கிறது. படிப்படியாகக் கலாசாலைகளில் தமிழைக் கொண்டுவருவதாக இருந்தாலும் இப்போதைய திட்டப்படி 20 வருஷங்கள் ஆகும். இந்த 20 வருஷ காலத்தில் மாணவர்கள் எந்த அளவு படிக்கமுடியும். ஆங்கிலத்திலேயே படிக்கும் மாணவர்களுக்கும், தமிழில் படிக்கும் மாணவர்களுக்கும் வித்தியாசம் இருக்காதா? திறமையில் ஏற்றத் தாழ்வு இருக்காதா? இப்படிப்பட்ட ஒரு நிலைமை இருக்கிறது. ஏற்கனவே நாம் போட்ட திட்டப்படி 14 வருஷத்தில் டிகிரி கோர்ஸ் படித்து முடிக்க வேண்டும்—இது முன்பு இருந்த முறைக்கு ஒரு வருஷம் குறைவு. ஏற்கனவேயே நம்முடைய கல்வியின் தரம் மிகக் குறைவாக இருக்கிறது. மேலும் ஒரு வருஷம் குறைகிறது என்றால், இன்னும் கீழ்த்தரமாகத்தானே போகும்? அது மட்டுமல்லாமல், இன்றையதினம் வேறு தேசங்களோடு

[Sri N. K. Palanisami] [22nd March 1961

ஒப்பிட்டுப்பார்த்தால், ஸ்காண்டிநேவியா, இங்கிலாந்து, ஜெர்மனி, ரஷ்யா இவைகளை எடுத்துக்கொண்டால், 10 வருஷ காலத்தில் அங்கு இருக்கக் கூடிய மாணவனுக்கு சகல படிப்பும் சொல்லிக் கொடுக்கப்படுகிறது— கணிதம், விஞ்ஞானம் முதலிய துறைகளில். இங்கு டிகிரி கோர்ஸில் எந்த அளவுக்குச் சொல்லிக் கொடுக்கப்படுகிறதோ, அந்தப் பூரா பாடத்தை யும், 10 வருஷ காலத்தில் கற்றுக் கொடுக்கப்படுகிறது. அதை அடிப் படையாக வைத்து கல்வியின் தரத்தை மேலும் உயர்த்துவதற்கு பதிலாக இம்மாதிரியாக ஏற்கனவேயே தரம் குறைவாக இருக்கும் காலத்தில் மேலும் ஒரு வருஷம் குறைத்தது அதன் தரத்தை மேலும் குறைப்பதாக ஆகும்.

இன்னொன்று பார்க்கிறோம். ஒரு ஹைஸ்கூலில் படித்துவிட்டு ப்ரீ-யூனிவர்ஸிடிக்குப் போகும்போது தமிழில் படித்துவிட்டு கலாசாலைக்குச் சென்றவுடன் ஆங்கிலத்தில் படிக்க வேண்டியிருப்பதால் அது புரிவதற்கு ஒரு வருஷம் ஆகிறது.

அதற்குமேல் இரண்டு வருஷம் படித்த பிறகுதான் விஷயம் புரியும். இந்த இரண்டு வருஷத்தில் எந்த அளவுக்குச் சொல்லிக் கொடுக்க முடியும் ? யூனிவர்ஸிடி முறையிலும், பழைய முறையிலே அமைக்கா மல், இம்மாதிரி தமிழிலே கலாசாலைகள் நடக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்தால், அவர்களுக்கு ஒன்றும் புரியாது. ஆகவே இதற்கு ஒரு மாற்று முறை கண்டாக வேண்டும். இந்த மாற்று முறையை மேலெழுந்த வாரி யாகக் கொண்டுவந்தால், கல்வியிலே தரம் மிகவும் மோசமாகப் போகும். கடைசியிலே புதிய கல்வி முறை பெரிய ஆபத்தான நிலைமைக்குத்தான் கொண்டுபோய் விடும். ஆகவே, இன்றையதினம், பி.யு.சி. படிப்பானது இரண்டு வருஷமாகச் செய்ய வேண்டுமா அல்லது ஒரு வருஷமாக செய்யவேண்டுமா ? என்பதை முடிவு செய்ய வேண்டும். அதே போல் இதை ஹையர் செகண்டரியில் சேர்க்க வேண்டுமா அல்லது காலேஜில் சேர்க்க வேண்டுமா என்பதையும் முடிவு செய்தாக. வேண்டும். இல்லாவிட்டால் இந்தத் தரமானது மிகவும் குறைந்து விடும். அது மட்டுமல்ல. வேண்டுமானால் இன்டர்மிடியேட் காலேஜில் இதைச் செய்ய முடியும். ஆனால் சொல்லிக் கொடுக்கக் கூடிய பள்ளிக்கூடம் பி.யு.சி. ஒரு வருஷம் ; இரண்டாவது வருஷத்தை இத்துடன் இணைக்க முடியாது. அது மட்டுமல்ல. இன்டர்மிடியேட் காலேஜில் இருக்கக் கூடிய ஆசிரியர்களுக்கு பயிற்சி முதலியன கொடுத்து, அவர்களுக்கு அந்த மாதிரி யான முறையிலே சொல்லிக் கொடுக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்தா லொழிய, கல்வியின் தரத்தை உயர்த்த முடியாது. ஆகவே தரத்தை உயர்த்தக் கூடிய அளவிலே, நாம் மேலும் இதை புனராலோசனை செய்ய வேண்டும். அப்படிப் புனராலோசனை செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று நான் சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அது மட்டுமல்ல. இன்றையதினம் ப்ரைமரி கிளாசிலே பேசிக் கல்வி முறை புகுத்தப்படுகிறது. இதுவரையிலும் அது என்ன பலனை அளித் திருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். தற்போது சொல்லிக் கொடுக்க கூடிய விதம் எந்த விதத்திலும் பலன் அளிக்கக் கூடாத முறையில்தான் இருக்கிறது. நாம் நினைத்தது போல் இந்தக் கல்வியை எல்லாப் பள்ளிக் கூடங்களிலும் கொண்டுவர முடியாத அளவிலே தான் அந்தக் கல்வி இருக்கிறது. இந்த ஆதாரக் கல்வியை என் சில ப்ரைமரி பள்ளிகளில் புகுத்த வேண்டும் ? எலிமெண்டரி கல்வியை எடுத்துக்கொண்டால், அது வெறும் லிடரரிதான். ஒத்துக்கொள்கிறேன். இதிலே ஆதாரக் கல்வியிலே இருக்கிற நல்ல அம்சங்களைப் புகுத்தினால் நல்லது. அதா வது, கைகளுக்கு வேலை, புலங்களுக்கு வேலை ஆகிய சில நல்ல அம்சங்கள் இதிலே அமைந்திருக்கிறது. இந்த நல்ல அம்சங்களை மட்டும் எடுத்து எலிமெண்டரி கல்வியில் இணைத்து, எந்த முறையிலே கல்வி இருக் கவேண்டுமோ அந்த முறையிலேசெய்தால் நன்றாக இருக்கும் வெறும் ஆதாரக் கல்வியை மட்டும் இதிலே புகுத்தினால், அதிலே எந்த விதமான பிரயோஜனமும் இல்லை. " **All education through Crafts** " என்று ஆதாரக் கல்வியில் இருக்கிறது. தக்கிளி நூற்க வேண்டும். பையன்கள் தோட்ட வேலை செய்ய வேண்டுமென்றெல்லாம் அதிலே



22nd March 1961] [Sri N. K. Palanisami]

சொல்லப்படுகிறது. ஆனால் அப்படி விவசாயம் செய்ய வேண்டிய நேரத் திலே அவர்களை விளையாடச் சொல்லுகிறார்கள். கடைசியிலே ஐந்து வரு ஷம் முடிந்த பிறகு அவர்களுக்கு ஒன்றும் தெரியாது. இந்த முறையைப் போக்க வேண்டும். ஆகவே இந்தத் திட்டத்தை அப்படியே கொண்டு வருவதால், பையன்களுக்குப் படிப்பு வராது. " **Practice of self-reliance, cultural activities Correlation** " போன்ற நல்ல அம்சங் களை இந்த எலிமெண்டரி கல்வி முறையோடு எந்த அளவில் சேர்க்க வேண்டுமோ, அந்த அளவில் சேர்க்கக் கூடிய முறையில் அமைக்க வேண்டும். அந்த மாதிரி கொண்டுவரக் கூடிய நேரத்தில் கல்வி முறை சிறந்ததாக அமையக் கூடும்.

அடுத்து, பாடப் புத்தகத்தை எடுத்துக் கொள்வோம். இதை எப்படி செலக்ட் செய்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். ஆசிரியர்கள் தான் இதை செலக்ட் செய்கிறார்கள். இதைத் தவிர, கல்வியில் சம்பந்தமில்லாத வர்களும் இந்தக் கமிட்டியில் இருக்கிறார்கள். ஐந்தாவது வகுப்புக்குப் பாடப் புத்தகம் செலக்ட் செய்ய வேண்டுமானால், ஐந்தாவது வகுப்புக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கக்கூடிய ஆசிரியரே அந்தக் கமிட்டியில் இருந்து பாடப் புத்தகத்தை செலக்ட் செய்ய வேண்டும். அப்படி அல்லாது மேல் வகுப்பு ஆசிரியர்கள், கீழ் வகுப்புக்களுக்குப் பாடப் புத்தகங்களை செலக்ட் செய்வது என்று சொன்னால், அதனால் அது நல்ல முறையிலே அமைய முடியாது. ஏனெனில் அந்தந்த வகுப்பு ஆசிரியர்களுக்குத் தான் அந்தந்த வகுப்பு மாணவர்களுடைய தரம் தெரியும். ஆகவே, இந்தப் பாடப் புத்த கம் செலக்ட் செய்யக்கூடிய நேரத்தில், அந்தந்த வகுப்பிலே இருக்கக் கூடிய ஆசிரியர்களே அந்தந்த வகுப்புக்குரிய பாடப் புத்தகங்களை செலக்ட் செய்ய வேண்டுமென்று ஏற்பாடு செய்வது மிகவும் நியாயமாகும்.

அடுத்து சோஷியல் ஸ்டேடஸை எடுத்துக் கொள்வோம். இதிலே பூகோ ளம், சரித்திரம், ஹைஜீன் ஆகிய மூன்றும் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆகவே இந்தப் பாடம் எதற்கு ? இதனால் பையன்கள் விளையாடக் கூடிய நிலை யில் தான் இருக்கிறார்கள். பூகோளம், சரித்திரம், ஹைஜீன் ஆகிய பாடங் களைத் தனித்தனியாகச் சொல்லிக் கொடுத்தால்தான் அது மாணவர்களுக்குப் பிரயோஜனமாக இருக்க முடியும்.

பதினான்கு வருஷப் படிப்பு இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். இந்த 14 வருஷ காலத்தில் மாணவன் எந்த அளவுக்குப் படிக்க வேண்டும், என்னென்ன பாடங்களை, எந்தெந்த அடிப்படையிலே வைக்க லாம் என்பதற்கு ஒரு திட்டம் இப்போது கிடையாது. ஏனென்றால், மூன்றாவது பாரத்தில் படிக்கக் கூடியதையே, 10 வது கிளாசிலேயும் படிக்கக் கூடிய அளவில்தான் இன்று கல்வித் திட்டம் அமைக்கப்படு கிறது. " **The same thing is repeated** " என்ற நிலைமையில் தான் இருக்கிறது. ஆகவே இதை, " **Graded Scale** " ல் வைத்து, இன்னென்ன முறையிலே படிக்க வேண்டுமென்ற அவசியம் இருக்க வேண்டும்.

இன்னும் மாணவர்களை எடுத்துக்கொண்டால், " **Adulteration of milk** " என்பதைத்தான் அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கிறார்கள். பாலிலே தண்ணீரைக் கலப்பது எப்படி, அதிலே சாக்கரி பவுடர் போட்டால் இப்படியாகும் என்று சொல்லித் தரப்படுவதைத் தான் இன்றும் காண்கிறோம். இந்த மாதிரி முறையிலே சொல்லிக்கொண்டு வருவதை அவசியம் நீக்க வேண்டும். அது மட்டுமல்ல. இன்றைய தினம் உல்சிலி முதல் வெல்சிலி வரை என்று சொல்லிக் கொடுக்கப்படுகிறது. இது இப்படிச் சொல்லிக் கொடுக்கவேண்டுமா ? இப்படிச் சொல்லிக் கொடுப்ப தால், என்ன பிரயோஜனம் ? அதிலேயும் குறிப்பாகப் பெண்களுக்கு இதிலே என்ன அக்கறை இருக்கிறது ? இன்னமும் இது சொல்லிக் கொடுக்கப்பட்டுதான் வருகிறது. இதை விடுத்து, தேசத் தலைவர்களைப் பற்றியோ, மற்ற நல்ல முறைகளிலோ, தேச பக்தியை வளர்க்கக்கூடிய பாடங்களைச் சொல்லித் தருவது மிகவும் அவசியமாகும்.

அடுத்தபடியாக, மிட் டே மீல்ஸ் ஸ்கீம் அதாவது, பகலுணவுத் திட்டம்; 1947–48–ம் வருஷத்தில் " **Post-war Reconstruction Scheme** " என்று இருந்தது. ஒரு பகலுணவுக்கு 1½ அணா

[Sri N. K. Palanisami] [22nd March 1961

கொடுத்தார்கள். ஐந்து வருஷம் நடந்தது. ஒன்பது கோடி ரூபாய் செலவழித்தார்கள். கடைசியிலே அது என்ன ஆயிற்று ? இன்றைக்கு இதற்கு 6 ந.பை. சர்க்கார் கொடுக்கிறது. ஆசிரியர்கள் பையன்களுடைய பெற்றோர்களிடமிருந்து 4 ந.பை. வசூல் செய்ய வேண்டும். இப்படிப் பெற்றோர்கள் மாதத்திலே 20 நாட்களுக்கு மேல் கொடுப்பதற்குத் தயாராக இல்லை. தவிர, ஆசிரியர்கள் தங்களுடைய பாடங்களை எல்லாம் விட்டுவிட்டுத் தான் பணத்தைச் சேகரிக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இப்படி வசூல் செய்வதற்கு அவர்கள் புறப்பட்டால், பாடம் கெட்டு விடுகிறது. அதோடு மத்தியானத்தில் சாப்பாட்டையும் பங்கிட வேண்டும். இந்த வேலையும் ஆசிரியர்களைச் சேர்ந்தது. ஆகவே அவர்களுக்குக் கல்வி சொல்லிக் கொடுப்பதற்கு நேரம் கிடையாது. இந்த நிலையிலேதான் இன்றைக்குக் கல்வியின் தரம் இருக்கிறது என்பது நன்கு தெரிந்த விஷயம். கார்ப்பரேஷனில் லேபர் டிபார்ட்மெண்ட் கடந்த 30 வருஷங்களாக நடந்து கொண்டிருக்கிறது. அது ஒழுங்காக நடைபெற்றுக் கொண்டு வருகிறது. காரணம், அதற்கான செலவு பூராவும் கார்ப்பரேஷனால் ஏற்றுக் கொள்ளப் படுகிறது. அதே முறையிலே இந்த மத்தியான உணவு முறையும் நல்ல முறையிலே நடக்க வேண்டுமென்று சொன்னால் நம்முடைய சர்க்காரே இதற்கான பூராத் தொகையையும் கொடுக்க வேண்டும். அப்படி நம்முடைய சர்க்காரே பூராத் தொகையையும் கொடுக்க முடியாத நிலைமையில் இருந்தால், மத்திய சர்க்காரிடம் உதவி கேட்க வேண்டும். ஸ்ரீ நந்தா அவர்கள் கூட இதைப் பற்றி நம்முடைய சர்க்காரை ஆலோசனை செய்ய வேண்டுமென்று கூறியிருப்பதாகப் பத்திரிகையில் பார்த்தேன். ஆகவே, மதிய உணவுக்கான பூராத் தொகையையும் நமது சர்க்காரே ஏற்றுக் கொள்ள வேண்டும். அல்லது அவசியம் மத்திய சர்க்காரிடம் இதற்குக் கிராண்டு வாங்கவேண்டும்.

நம்முடைய மாகாணம் காம்போஸிட் ஸ்டேட்டாக இருந்த காலத்தில் கூட 8 கோடி ரூபாய் அல்லது 9 கோடி ரூபாய்தான் கல்விக்காகச் செலவு செய்திருக்கிறோம். இப்போதுள்ள நம்முடைய மாகாணத்திற்கு மட்டும் கல்விக்காக 21 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், அது மிகவும் பெருமைக்குரிய விஷயம் தான். இதிலே மிகவும் முக்கியமானது செகண்டரிக் கல்வி. இந்த செகண்டரிக் கல்விக்காக மட்டும் ஒரு தனி டைரக்டர் தேவை. காரணம் இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையிலே இப்போதுள்ள டைரக்டரால் எல்லாக் காரியங்களையும் செய்ய முடியாது. ஏற்கனவே பல திட்டங்களைப் பார்க்க வேண்டியிருக்கிறது. அவரால் இப்போது நிர்வாகத்தையே சரியான முறையிலே நடத்த முடியவில்லை. செகண்டரிக் கல்வியைச் சட்டபூர்வமாகக் கவனிப்பதற்கு என்று ஒரு தனி டைரக்டர் இருக்க வேண்டும். இது மிக முக்கியம். சரியான முறையிலே இதை நடத்திச் செல்வதற்கு அவசியம் ஒரு தனி டைரக்டரை இதற்குப் போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் வேஸ்டேஜ் பற்றிய நிலைமையைக் கொஞ்சம் பார்க்க வேண்டும். " **Wastage is a National loss** " என்று சொல்லப் படுகிறது. மாணவன் செலவு செய்து படிக்கிறான். எந்த அளவுக்கு மாணவன் உபயோகமாக இல்லையோ, அந்த அளவிற்கு நாட்டிற்கு நஷ்டம் ஏற்படுகிறது. ஆனால் அதைப் போக்கக்கூடிய ஒரு நிலைமையை வகுக்கப் படவில்லை.

**DEPUTY SPEAKER** : The hon. Member has got one more minute.

**Sri N. K PALANISAMI** : Sir, I want two more minutes. இன்றைதினம் எடுத்துக் கொண்டால், மாணவர்கள் பரீட்சைக்கு அடிமைகளாக்கப்பட்டு, பாஸ் செய்யக்கூடிய நிலைமைதான் இருக்கிறது. அந்தந்தக் கிளாசிலே அந்தந்த வகுப்புக்குரிய பாடங்களைப் படித்து, அதிலே பாஸ் செய்ய வேண்டும். ஆனால், எக்ஸ்டெர்னல் எக்ஸ்பிரீயன்சுக்கு 40 மார்க்கும், பாடத்திற்கு 60 மார்க்கும் என்று வைத்துக் கொண்டால் நல்லது. இப்படிச் செய்தால், வேஸ்டேஜ் ஓரளவு குறையும். ஆகவே, இதைச் சர்க்கார் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.



22nd March 1961]

DEPUTY SPEAKER : Each Hon. Member is allotted ten minutes. The hon. Member Sri V. K. Krishnamurthy will now speak.

* **Sri V. K. KRISHNAMURTHY** : அவைத் தலைவர் அவர்களே, கல்வி வளம் பெருக, செல்வ வளம் கோரும் கல்வி மானியக் கோரிக்கையைப் பாராட்டி வரவேற்கிறேன். கல்வி வளர்ச்சியே நாட்டு வளர்ச்சி என்னும் அடிப்படையில் கல்வி அமைப்பு அமைந்திருத்தலை கனம் அமைச்சரவர்கள் அறிவித்தமையைப் பாராட்டுகிறேன். 1958–ல் ரூ. 11 கோடி, 1959–ல் ரூ. 12 கோடி, 1960–ல் ரூ. 15 கோடி, 1961–ல் ரூ. 17 கோடி, 1962–ல் ரூ. 20.61 கோடி என்று கல்வி மானியத்திற்காக தொகை ஒதுக்கியிருப்பதை ஒப்பு நோக்கிப் பார்க்கின், கல்வி வளர்ச்சிக்காக மிகவும் அதிகமாக, ஆரம்பக் கல்வி வளர்ச்சிக்கு மேல்புலத்தையும் வெல்லும் நிலைமையில் தமிழ் நாட்டு அரசாங்கம் செலவு செய்திருப்பது பாராட்டுதற்குரியது.

முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 45 சத விகிதம் குழந்தைகள் ஆரம்பப் பள்ளிக்குச் சென்றனர் ; இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 75 சத விகிதம் குழந்தைகள் ஆரம்பப் பள்ளிக்குச் செல்லுகின்றனர். ஆரம்பக் கல்விக்கு நம் தமிழ் நாட்டு அரசாங்கம் செய்யும் செலவு வியத்தற்குரியது ; மேல்புல நாடுகளை வெல்லும் வகையில் ஆரம்பக் கல்விக்குச் செய்யும் செலவு பாராட்டுதற்குரியது.

இலவசக் கல்வி இனிதே அளித்து வரும் உயரிய திட்டம், உணவையும், உடையையும் அளிக்க முன்வந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது. இத் திட்டம் பழங் காலந்தொட்டே நம் நாட்டில் இருந்து வருகிறது. சீத்தலைச் சாத்தனார் அன்றே ' பசிப்பிணி என்னும் பாவி ' என்றுரைத்தார். மணிமேகலை அட்சயபாத்திரம் ஏந்தி உணவு நல்கிய பெருமையை நன்கு இயம்புகிறது இலக்கியம். உணவு அளிக்கும் திட்டத்தைக் குறை கூறுவோரும் உண்டு. முந்நூறு கிராமங்களுக்குச் சென்று மக்கள்பால் பள்ளிச்சீரமைப்பைக் கூறியதும், மனமிகவுவந்து வள்ளல்போல் வாரி வழங்கினார்கள். இத் திட்டம் அரசியலுக்கப்பாற்பட்டு, பச்சிளங் குழந்தைகளிடை நிலவியுள்ள பஞ்சம், பட்டினி, வறுமை இவைகளை அறவே அகற்ற வந்த திட்டம். அரசியல் பொருளாதார சமுதாய சித்தாந்திகளையும் கடந்து குழந்தைகளுக்கு உணவளிக்கும் திட்டம், பள்ளிச் சீரமைப்புத் திட்டம் அண்மையில் வேலூரில் நடந்த மாபெரும் மாநாடு இந்தியாவின் புகழைப் பெற்றது.

இதை எதிர்ப்பவர்கள் மார்க்கசீய வாதிகள். வறுமையை முன்னிறுத்தி, வர்க்கப் போரைத் தோற்றுவித்து, அவலத்தை உண்டாக்கி, ராணுவ உதவி கொண்டு ஜனநாயகத்தை ஒழிக்க விரும்புகிறவர்கள் தான் இதை எதிர்க்கிறார்கள். குடும்பங்களுக்கு முதன்மை அளிக்காமல் நாட்டிற்காகக் குடும்பங்கள் என்று கூறும் மார்க்கசீய கொள்கை சைனாவில் இருப்பதை அறிவிக்க விழைகிறேன். இளங் குழந்தைகளிடையே பட்டினித் தத்துவத்தை விளக்க முயலும் மார்க்கசிய வாதிகள் நாட்டின் எதிரிகள். ஆதலால் பள்ளிச் சீரமைப்புத் திட்டத்தை மேன்மேலும் ஆதரிக்க வேண்டுகிறேன். இந்தத் திட்டத்திற்கு அரசாங்கம் மேலும் மேலும் ஊக்கம் கொடுக்க வேண்டும்.

தமிழ் நாட்டில் மலர்ந்த இத் திட்டம் மற்ற மாநிலங்களில் பரவி இந்தியாவில் இணையற்றதாயியங்கி, கீழ்நாடுகளில் தலைசிறந்து விளங்கி, உலகப் பாராட்டலைப் பெற்ற திட்டம் என்று பெருமையுடன் கூறுகின்றேன்.

இலவசக் கல்வியைப் 11–வது வகுப்பு வரைப் புகுத்த ஏற்பாடு செய்திருப்பது மகிழ்ச்சியுற வைக்கிறது. திங்களுக்கு ரூ. 100 ஊதியமுடையோருக்கு இச் சலுகை உண்டென்பதை மாற்றி, விலைவாசியை முன்னிட்டு திங்களுக்கு ரூ. 250 அல்லது 300 வரை ஊதியம் பெறுகிறவர்களுக்கு இச்சலுகை அளிக்கப் பெற வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

[Sri V. K. Krishnamurthy] [22nd March 1961

பதினொருவது வகுப்பு வரை பாட மொழி தமிழ் ; கல்லூரியிலே பாட மொழி ஆங்கிலம். இந்நிலை மாற வேண்டும். 11–வது வகுப்பு வரை தமிழ் பயின்று பின்னர் ஆங்கில மொழி பாட மொழி எனில் வியப்பாக இருக்கிறது. உரிய மொழியாம் தமிழுக்கும், ஆதிக்க மொழியாம் ஆங்கிலத்திற்கும் போர் ; இந்நிலை ஐரோப்பாவிலிருந்தது. லத்தீன் மொழி ஆதிக்க மொழியாக இருந்தபொழுது, ஆங்கில மொழி, பிரஞ்சு மொழி உரிய மொழி ஆகவில்லை. பொருளை அறிவதற்குக் குறித்த மொழி பயில வேண்டுமென்பது ஏற்புடைத்த கொள்கையல்ல. ஆங்கில நாட்டில் பாட மொழி பிரஞ்சு அல்ல ; பிரஞ்சு நாட்டில் பாட மொழி ஆங்கிலமல்ல. ஆனால் தமிழ் நாட்டில் பாட மொழி ஆங்கிலமென்று இருக்கிறது. இம் முறை ஒழிக்கப்பட வேண்டும்.

தமிழ் மொழி வளர்ச்சி அடையவில்லை என்று கூறுகிறார்கள். பாட மொழி பற்றிப் பேச பல்கலைக் கழகத்தினருக்குத் தான் உரிமை என்று கூறுவது பொருந்தாத வாதம். படைத்த இலக்கியத்தைப் படித்துக் கூறும் இயல்புடையவருக்கே மொழி பற்றிப் பேச உரிமையுண்டென்றால், இலக்கியத்தைப் படைக்கிற வல்லுனர்கள் இந்த மன்றத்தில் உண்டு என்று பெருமையுடன் கூறி, ஆதலால் பாட மொழி பற்றிப் பேச உரிமையுண்டு என்று கூறுகின்றேன்.

[உவமையற்ற அமைதி நிறை இலக்கணமும் முழுமை எய்திய இலக்கியமும் தமிழுக்குண்டு. தமிழ் பல இலக்கிய மறுமலர்ச்சிகளைக் கண்டு சமுதாயத்திற்குப் புது வாழ்வளித்து, வாழும் மொழியாக, வாழ்வளிக்கும் மொழியாக இலங்கல் வெள்ளிடைமலை. முச்சங்க காலத்தில் வளர்ந்து மறுமலர்ச்சி எய்தியமை கண்கூடு ; காப்பிய காலத்தில் மறுமலர்ச்சி எய்தியது ; திருமுறை காலத்தில் மற்றொரு மறுமலர்ச்சி ; ஆனால், திருத்தக்க தேவர், கச்சியப்ப முனிவர், சேக்கிழார், கம்பர், இவர்களால் படைக்கப்பட்ட இலக்கியங்களே பொற்கால இலக்கியங்கள். இவ் விலக்கியங்கள் பொருள் ஆழமும், சொற் சுவையும், நலம் நல்கும் வகைகளும் கொண்டன. உலக இலக்கிய வளர்ச்சிகளுடன் இப் பொற்காலத்தில் தோன்றிய தமிழ் இலக்கியங்கள் போட்டியிடும் பெற்றிமையுடன் விளங்கிய தோடல்லாமல், அளவிலும், ஆழத்திலும் மிகுந்தன.

சேக்கிழார் காலத்திற்குப் பிறகு தொடர்ந்து தலைமுறைக்குப் பல நூல்கள் தோன்றின எனினும், 17–ம் நூற்றாண்டில் சிவஞான யோகிகளின் சித்திரக் கவிகளும், விளக்க உரைநடையும், சித்தாந்த ஆராய்ச்சியும் சீர்மையுடன் விளங்கின. 18–ம் நூற்றாண்டில் மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் ஒரு லட்சம் பாடல்கள் பெருமையைத் தருகிறது. வேறு எம் மொழியில், இந் நாட்டில் எவர் பாடியுள்ளார் ? இராமலிங்க அடிகளின் அருட் பாடல்கள்—இங்கிரு மாலை—மிகச் சிறந்த பாடல்கள்.

19–வது நூற்றாண்டு மறைமலை அடிகளின் தனித் தமிழ் ஊழி உவமையற்ற உரைநடை. மேல்புல உரைநடைகளுடன் போட்டியிடும் பெற்றிமை எய்தியுள்ளது. ஜகவீர பாண்டியனின் திருக்குறள், குமரேச வெண்பா மிகப் பழமைக்கும், புதுமைக்கும் ஒற்றுமை கண்டு இணைந்த இலக்கியத்தின் மறுமலர்ச்சி. விபுலானந்த அடிகளின் யாழ் நூல் புது வாழ்வளிக்கும் நல்ல நூல்.

இவையனைத்தும் மொழி வளர்ச்சியைக் காட்டாமலில்லை. இங்கிலாந்தில் ஷேக்ஸ்பியர் நாடகங்களும், மில்டனின் செய்யுட்களும், ஷெல்லி கீட்சு பைரல் ஆகிய இவர்களின் செய்யுட்களே மொழியின் அடிப்படை ; இவைகளை ஒப்பு நோக்கின் தமிழ், வளர்ச்சி அடைந்த மொழி. கிரேக்க மொழி, லத்தீன் மொழி, சமஸ்கிருத மொழி ஒரு மறுமலர்ச்சி அடைந்து கண்காட்சியில் விளங்குகின்றன. தமிழ் வளர்ச்சியடையாத மொழி என்று கூறுவது ஏற்றுக்கொள்ள முடியாத வாதம்.

மொழியொலி முறைப்படி அமைந்த மொழி தமிழே. ஓர் எழுத்துக்கு ஓர் ஒலி, ஓர் ஒலிக்கு ஓர் எழுத்து, உயிர் ஒலி, மெய் ஒலி ஆகிய வகுப்பு முறை, ஒலிப் பிறப்பு அடியாக அவற்றின் வரிசைமுறை, இவைகள்



22nd March 1961] [Sri V. K. Krishnamurthy]

யாவும் தமிழ்மொழியில் அமைந்துள்ளன. ஆங்கிலமொழி இப்படி அமையவில்லை. உதாரணமாக ஓஷன், என்ற வார்த்தையை எடுத்துக் கொண்டால், அதிலுள்ள எழுத்துக்களுக்குத் தகுந்தாற்போல் உச்சரிப்பு செம்மையாக இல்லை. எழுத்தின் ஒலி முறை, சொல்லமைப்பு பொருளுணர்த்தும் நெறி இவைகள்தான் மொழி வளர்ச்சிக்கு அடிப்படை. இம் முறையில் அமைந்த தமிழ்மொழி வளர்ச்சிபெறவில்லை என்று கூறுவது நெறியல்ல, நேர்மையுமல்ல, உண்மையுமல்ல. ஆதலால் தமிழ் மொழி எல்லாக் கல்லூரிகளிலும் பாட மொழியாகக் கட்டாயம் இருந்தே தீர வேண்டும். இதில் காலங் கடத்தல் கூடாது.

திருக்கோவைக்கு நல்ல உரை தேவை. பல்கலைக் கழகம் இத் திருப்பணியில் ஈடுபட வேண்டுகிறேன். சித்திரக் கவிகளைப் பாடினவர்கள் மூவர். சம்பந்தர், சிவஞான யோகிகள், மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை. ஏகபாதம், மாலைமாற்று, மொழி மாற்று, திருச்சகர மாற்று, திருக்கோமுத்திரி, திருவியமகம் இவைகளைப் பாட புத்தகங்களில் புகுத்தலாம்.

சிவஞான யோகிகளின் பேருரை மிகச் சிறந்த உரை. பொருளை அகம்—அகப் புறம், புறம்—புறப்புறம் என நான்கு வகைப்படுத்தி, ஒவ்வொன்றையும் ஒற்றுமை, வேற்றுமை, உடன்பாடு—எதிர் மறை, அகம்—புறம் என அறு வகையாக ஆய்ந்து விளக்கங் கண்டவர். இதைத் தத்துவப் பகுதிக்கு வைத்தல் வேண்டும்.

தொல்காப்பியத்தில் செய்யுளியல் உயிர் பகுதி. இதை வெள்ளைவாரணன் ஆய்ந்து 78,125 விகற்பங்கள் என்று கண்டு பிடித்துள்ளார். புலவர் வகுப்புக்கு இப் பகுதியைக் கட்டாயம் வைக்கலாம்.

தனக்கென எழுத்து முறை உடைய மொழி உலகிலேயே தமிழ் ஒன்றே. மேல் நாடுகளில் லத்தீன் எழுத்து வடிவம்தான் மற்ற மொழிகள் கொண்டுள்ளன. வட இந்தியாவிலும், தமிழ் நாடு நீங்கலாக தென்னிந்தியாவிலும் சமஸ்கிருத எழுத்து வடிவம்தான் எல்லா மொழிகளும் பெற்றுள்ளன.

க, ங, ச, ஞ, ட, ண, என்ற எழுத்தொலிகள் தொண்டை, அண்ணம், நா ஆகிய இவ்விடங்களில் பிறக்கின்றன என்று கிரேக்க–லத்தீன்–ஆரிய இலக்கணங்கள் இயம்பின. மொழி ஒலி வளர்ச்சி, வளர்ச்சியுற்ற பின்னர் இம் மூவகை ஒலிகள், நா, முதல், இடை, கடை என்ற இடங்களில் தோன்றும் என்று 19–ம் நூற்றாண்டில் மேல்புலத்தில் கண்டனர். இவ்வுண்மை தொல்காப்பியர் அன்றே கண்டனர். ஆதலால் மொழி ஒலி ஆராய்ச்சியைப் பல்கலைக் கழகத்தில் அமைக்க வேண்டுகிறேன்.

ஒடுக்க அறிவும், சமய அறிவும் தேவை. நூல் அறிவு வாலறிவாகத் திரும்ப வேண்டும்.

யாழ் நூல் முறைப்படி யாழ் அமைத்தல் வேண்டும். தமிழ் இலக்கியத்தில் ஆராய்ந்தவைகளை ஆங்கிலத்தில் வரைந்தால்தான் பல்கலைக் கழகம் ஏற்று பட்டம் தருகிறது. இதை மாற்றித் தமிழிலே வரைய விதி செய்யலாம்.

மாணவர்கள் தரம் குறைவதற்குக் காரணம் ‘ நோட்ஸ் ’. எவ்வளவு ஆசிரியர்கள் கற்றுக் கொடுத்தாலும், குறுக்கு வழியில் தேர்ச்சி பெற ‘ நோட்ஸ் ’ கையாளப்படுகிறது. நோட்ஸுக்குத் தடை விதித்துப் பாடங்களைக் குறைத்து, அறிவு வளர ஆவன செய்யயக் கோருகிறேன். வணக்கம்.

* **SRIMATHI P. K. R. LAKSHMIKANTHAMMAL**: கனம் உதவி 10
சபாநாயகர் அவர்களே, இந்தக் கல்வி மானியத்தை ஆதரித்து ஒருசில a.m.
வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். யாரும் கண்டிராத வகையில் நம் மாகாணத்தில் 11–வது வகுப்பு வரை ஜாதி, மத, வேறுபாடின்றி, ஏழை மாணவர்கள் அவ்வளவு பேருக்கும் இலவசமாகக் கல்வி வசதி அளிக்க வேண்டும் என்று கருணைகூர்ந்து கனம் நிதி அமைச்சர் அவர்களும் கனம்

[Srimathi P. K. R. Lakshmikanthammal] [22nd March 1961

முதல் அமைச்சர் அவர்களும் செய்திருப்பதற்கு அவர்களுக்கு நாம் மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம். நம் தமிழ் நாடு கடமைப்பட்டிருக்கிறது என்று சொல்ல வேண்டும். தமிழ் நாட்டின் சார்பில் நம் நன்றியை அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாகக் கட்டாயக் கல்வி பற்றிச் சொல்லும்போது, ஜனநாயக நாட்டிலே கல்வி மிக முக்கியமானது. ஜனநாயகம் நல்ல முறையிலே வளர வேண்டும், பண்போடு வளர வேண்டு மென்றால், அடிப்படையானது கல்வி. அத்தனை பேரும் கல்வி அறிவு படைத்தவர்களாக இருக்க வேண்டும்; கிராமத்திலுள்ள ஒவ்வொரு குழந்தையும், நகரத்தில் உள்ள ஒவ்வொரு குழந்தையும், கல்வி கற்க வேண்டும். அதற்கான வசதிகளைச் சர்க்கார் செய்து தர வேண்டும். இந்த அறிக்கைகளிலிருந்து நாம் இந்த 10, 12 ஆண்டுகளில் எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறோம் என்பது நன்கு விளங்குகிறது. சென்ற வருஷத்தில் எவ்வளவு செய்திருக்கிறோம், இந்த வருஷம் எவ்வளவு செய்கிறோம், இன்னும் வரும் வருஷத்தில் எவ்வளவு செய்ய இருக்கிறோம் என்று பார்க்கும்போது, நம் நாட்டில் கல்வி வளர்ச்சி எவ்வளவு துரிதமாக நடைபெறுகிறது என்று அறிந்து கொள்ளுகிறோம். நம் கல்வி முறையில் குறை சொல்ல இடமும் இல்லை என்று கருதுகிறேன். ஆனால், தனிப்பட்டவர்களால் நடத்தப்படும் ஆரம்பக் கல்வி நிலையங்களுக்குச் சென்ற வருஷத்தில் நிர்வாகச் செலவு, மெயின்டினன்ஸ் கிராண்ட் என்று சொல்வார்களே, அது 15 சத விகிதம் கொடுப்பதாக இருந்தது. ஆனால், அந்த 15 சத விகிதம் எல்லாப் பள்ளிகளுக்கும் கொடுத்தார்களா என்றால், அவர்கள் எல்லோரும் அடையவில்லை. ஒரு சிலர்தான் அடைந்தார்கள் என்று தெரிகிறது. அதற்குக் காரணம் விளங்கவில்லை. இந்த வருஷம் அந்த 15 சத விகிதத்தைக் குறைத்து 10 சதவிகிதம் அல்லது 7½ சதவிகிதம்தான் வழங்கப் போகிறார்கள் என்பதைப் பார்க்கும்போது, அதிர்ச்சியுறுகிறேன். கட்டாயக் கல்வி கொண்டு வந்திருக்கும் இந்த நேரத்தில், எல்லாக் குழந்தைகளுக்கும் வேண்டிய பள்ளிக்கூடங்களை சர்க்காரே நிர்வகிக்க முடிந்தாலும், இஷ்டப்பட்டுத் தனியார் நடத்தும் பள்ளிக்கூடங்களுக்கும் இம்மாதிரியான சலுகைகளைக் கொடுத்தால்தான், கல்வி நல்ல முறையில் வளர வசதியாக இருக்கும். ஆகையினால், இந்த 15 சதவிகிதம் என்று இருப்பதைக் குறைக்காமல் கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர்களுக்குக் கட்டுபடியாகும். கட்டட வாடகை கொடுக்க வேண்டியிருக்கிறது. அதன்மேல் பல செலவினங்கள் இருக்கின்றன. அவைகளை எல்லாம் ஒன்றாகச் சேர்த்துப் பார்த்தால் 20 பர்செண்ட் கொடுத்தாலும் அவர்களுக்குப் போதாது. ஏற்கனவே 15 பர்செண்ட் மானியம் சரியாகக் கொடுக்கவில்லை என்று சொல்லும்போது, அதை இப்படிக் குறைப்பது என்பது இன்னும் அவர்களுக்குக் கஷ்டமாகப் போய்விடும். அவர்கள் எப்படி தங்கள் பள்ளிகளை நிர்வகிக்க முடியும் என்று தெரியவில்லை. சர்க்கார் பள்ளி கட்டட வாடகையைக் கொடுத்துவிட்டு, அதன்மேல் 10 சதவிகிதம் கொடுத்தாலும் அவர்கள் எப்படியோ சமாளித்துக் கொள்வார்கள். ஆகவே இதைக் கனம் அமைச்சரவர்கள் கவனித்து கட்டட வாடகையையாவது தனியாகக் கொடுத்துவிட்டு, அதன் பிறகு 10 பர்செண்ட் கொடுக்க வசதி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்பொழுது நாம் தமிழிலேயே கல்லூரிகளில் போதனை செய்யப்பட வேண்டும் என்பதற்காகப் பரீட்சார்த்தமாகக் கோயம்புத்தூரில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. எனக்கு முன் பேசிய அங்கத்தினர்கள் சொன்னார்கள் 11-வது வகுப்பு வரை தமிழிலேயே படித்துவிட்டு, பி.யு.ஸி. வகுப்பில் திடீரென்று எப்படி ஆங்கிலத்தில் படிப்பது, புரிந்துகொள்வது என்று தெரியவில்லை என்று. ஆகையினால், இந்தப் புகுமுக வகுப்பில் கூட தமிழ்தான் போதனா மொழியாக இருக்க வேண்டும் என்கிறோம். அப்படி இருக்கும்போது, மருத்துவ, என்ஜினீரிங் கல்லூரிகளில் அத்தனை பாடங்களையும் எந்த முறையிலே ஆங்கிலத்தில் படிக்க முடியும் என்று தெரியவில்லை. ஆங்கிலத்தின் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்று சொல்லுவதில் நியாயம் இருக்கிறது. மருத்துவ, பொறியியல் கல்லூரிகளில் ஆங்கிலம் மூலமாகப் படிக்க ஆங்கிலத்தின் தரம் மிக உயர்ந்ததாக



22nd March 1961] [Srimathi P. K. R. Lakshmikanthammal]

இருக்க வேண்டும் என்பது யாரும் ஒத்துக் கொள்ளக் கூடியதே. ஆகவே, ஆங்கிலத்தின் தரம் உயர்த்தப்பட வேண்டும்; இல்லையென்றால், அந்த அளவுக்கு ஆங்கிலத்தில் படிப்பது நிறுத்தப்பட வேண்டும்.

இன்றைக்கு நாம் 5-வது வகுப்பிலிருந்து ஆங்கிலத்தை ஆரம்பிக்க இருக்கிறோம். அதை 3-வது வகுப்பிலிருந்தே ஏன் ஆரம்பிக்கக் கூடாது. ஆரம்பத்தில் இன்றைக்கு மூன்று வகுப்பு வரை ஒரே பாஷையைத் தான் கற்கப் போகிறோம். ஆகவே 3-வது வகுப்பிலேயே ஆரம்பித்தால் வசதியாக இருக்கும் தொடர்ந்து படிக்கும்போது, எட்டாவது ஸ்டாண்டார்டில் இந்தியையும் சேர்த்து மூன்று பாஷைகள் படிக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே மூன்றாம் வகுப்பிலேயே ஆங்கிலத்தை ஆரம்பிக்கலாம் என்பதைப் பரிசீலனை செய்து, சிக்கல்கள் இல்லாமல் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

கல்லூரிகளில் தமிழ் மொழியைப் போதனா மொழியாக நாம் ஆக்க இருக்கிறோம். அதைக் கட்டாயமாகச் செய்ய வேண்டும் என்ற கருத்து இருக்கிறது நம் நிதி அமைச்சருக்கு. அது சரியான கருத்தேயாகும். ஆங்கிலம் ஒரு அன்னிய மொழி. நாம் பயிற்சி பெற்றாலும், அந்தப் பாஷையின் கௌரவ அளவுக்குத் தான் கற்க வேண்டும். அதை மீடியமாக வைப்பதற்ில்லை. அந்த பாஷை மூலமாகக் கல்வி கற்பது என்பது சரியாகாது என்பதை ஒத்துக் கொள்ளுகிறேன். இருந்தாலும்கூட ஆங்கிலத்தின் மூலமாகக் கல்வி புகட்ட வேண்டும் என்று விரும்பி அம்மாதிரிச் செய்ய முற்படும் கல்லூரிகளுக்கும் சர்க்கார் மானியம் கொடுக்க வேண்டும்; அவர்கள் அம் மாதிரிப் போதிப்பதால் எந்த விதமான கஷ்டமோ, தொந்திரவோ வந்துவிடாது. சர்க்காரில் உத்தியோகத்திற்கு வருபவர்களை வேண்டுமானால், தமிழ் போதனா மொழியாகக் கற்றவர்களுக்குத்தான் உத்தியோகம் கொடுப்பதில் முதல் இடம் என்று வைத்துவிடலாம்.

நாட்டில் கல்வி மிகவும் உயர்ந்து வருகிறது, எங்கும் நல்ல முறையில் பரவி வருகிறது. எந்த வித ஆட்சேபணையும் கிடையாது. ஆனால், அதற்குத் தக்க முறையில் பண்பு உயரவில்லை என்று வருந்துகிறேன். கல்வியின் அளவுக்குப் பண்பும் உயர வேண்டும். அப்பொழுதுதான் நாட்டின் கௌரவமும், தரமும் உயரும். கல்விக்கூடங்களிலே, ஒழுக்கம், மத போதனைகள் எல்லாம் கற்றுக் கொடுக்க வேண்டும். அறிவையும், பண்பையும் உயர்த்த வேண்டும். அம்மாதிரிச் செய்ய சர்க்கார் தக்க உதவிகள் கொடுக்க வேண்டும். மத சம்பந்தம் என்று சொல்லும்போது ஒழுக்கத்தையும், பண்பையும்தான் நான் குறிப்பிடுகிறேன்.

மேலும் சிறிய ஆரம்பப் பள்ளிக்கூடங்களிலே படிக்கும் குழந்தைகளுக்கு யார் பாடங்களைக் கற்பிக்க வேண்டுமென்றால் பெண்ணாகத்தான் இருக்க வேண்டும் என்று திட்டவட்டமாகச் சொல்ல ஆசைப்படுகிறேன். முதல் வகுப்பிலிருந்து ஐந்தாவது வகுப்பு வரையிலும் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியர்கள் பெண்ணாகத்தான் இருக்க வேண்டும். ஆண் குழந்தைகளாக இருந்தாலும், பெண் குழந்தைகளாக இருந்தாலும் இவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியர்கள் பெண்களாக அமர்த்தப்பட வேண்டும். இந்த மாதிரியாகக் கல்வித் துறையிலே ஒரு சீர்திருத்தம் ஏற்பட்டு புரட்சிகரமான மாறுதலை உண்டு பண்ண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் பெண்கள்தான் பொறுமை உள்ளவர்கள்; சாந்த குணம் படைத்தவர்கள், குழந்தைகளிடத்தில் அன்பு கொண்டவர்கள். கல்விக்கு தெய்வம் சரஸ்வதி என்று சொல்வார்கள். சரஸ்வதியும் பெண் அம்சமாக இருக்கக்கூடிய காரணத்தினால் குழந்தைகளுக்குப் பெண்களே போதிக்க வேண்டும். ஆகையால் அவர்களையே ஆசிரியைகளாக அமர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

*SRI A. CHIDAMBARANATHA NADAR: கனம் தலைவர் அவர்களே, நமது மாநிலக் கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த இந்த மானியத்தை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். தமிழ் நாட்டில் கல்வி வளர்ச்சிக்காக கனம் கல்வி அமைச்சர் அவர்கள் நல்ல முறையிலே பல காரியங்கள் செய்துகொண்டு வருகிறார்கள் என்பது மட்டு

[Sri A. Chidambaranatha Nadar] [22nd March 1961

மல்லாமல் இது மாதிரி நல்ல முறையிலேயும், வெற்றிகரமாகவும் நமது மாநிலக் கல்வி இலாகா டைரக்டர் அவர்களும் நடத்தித் தருகிறார்கள் என்றால் அது ஒரு நாளும் மிகையாகாது. நமது மாநிலம் பூராவும் 1961-ம் ஆண்டு சென்சஸ் எடுக்கப்பட்டது. இதனால் நமது கல்வித் துறையில் நம் மாகாணத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் திட்டவட்டமாக அறிந்துகொண்டிருக்கிறோம். அதுவும் விசேஷமாக எனது மாவட்டத்தில் நல்ல முன்னேற்றம் இருப்பது கண்டு நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். எங்களுடைய மாவட்டம் இந்த ராஜ்யத்துடன் சேர்ந்த பிறகுதான் நல்ல முறையிலே நடந்து வருகிறது என்று சொன்னால் அது மிகவும் பெருமைப்படக்கூடிய விஷயம். இந்த முறையில் கன்யாகுமரி மாவட்டத்தில் நல்ல முறையிலே சர்க்கார் நடத்தி வருகிறார்கள் என்று சொல்வதை நான் வரவேற்கிறேன். கழிந்த காலத்தில் நாங்கள் திரு—கொச்சி ராஜ்யத்தில் இருந்தபோது மருத்துவக் கல்லூரியிலோ அல்லது என்சினியரிங் கல்லூரியிலோ இடம் வேண்டுமென்று சொன்னால் கங்கையைக் கொண்டு வருவது போல்தான் இருந்தது. நமது மாகாண சர்க்கார், காங்கிரஸ் சர்க்கார் விசேஷ கவனம் செலுத்தி எங்களை நல்ல முறையிலே ஆதரித்து பொறியியல், மருத்தவக் கல்லூரிகளிலேயும் எம்.ஏ., எம்.எஸ்.ஸி படிப்பதற்கான வசதிகளையும் செய்து கொடுத்திருக்கிறார்கள் என்பதை உண்மையாக நான் இந்த மாவட்டப் பிரதிநிதி என்ற முறையிலே பெருமையுடன் பாராட்டுகிறேன்.

நாங்கள் இந்தக் கழிந்த காலத்தில் இருந்து இந்த ராஜ்யத்துடன் சேர்ந்து ஏறத் தாழ 4½ ஆண்டுகள் ஆகிவிட்டன. இங்குள்ள ஆசிரியர்கள் நல்ல முறையிலே நடத்தப்படவில்லை என்று நாங்கள் சொல்லவில்லை. இருந்தாலும் சர்க்காருடைய கழிந்த கால உத்தரவுகள் பலர் மனதிற்கு வேதனை தரக்கூடியதாக இருக்கின்றன. இப்போது சர்க்கார் உத்தரவிலே எஸ்.எஸ்.எல்.ஸி. படித்தோ அல்லது மலையாளம் ஹையரோ அல்லது தமிழ் ஹையரோ படித்து அதற்குப் பிறகு டீச்சர்கள் ஒரு வருஷம் டிரெயினிங் இருந்தால் அவர்களை மிடில் ஸ்கூலிலே ஆசிரியராக நியமிக்கப்பட இருந்தார்கள். ஆனால் இப்போது வந்த உத்தரவின் பிரகாரம் இம்மாதிரி ஆசிரியர்கள் 10 வருஷம் அனுபவம் பெற்றிருந்தாலும்கூட எஸ்.எஸ். எல்.ஸி. பாஸ் பண்ணி விட்டு இரண்டு வருஷங்களாவது டிரெனியிங் பெற்றிருக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. உண்மையிலே இது வருத்தப்படவேண்டிய விஷயம். இந்த உத்தரவை எங்கள் மாவட்டத்தில் அமுல் நடத்த வேண்டாமென்று நமது கல்வி அமைச்சரையும் கல்வி அதிகாரியையும் கேட்டுக் கொள்ளுகிறேன். இனிமேல் வரக்கூடியவர்களுக்கு இம்மாதிரி எஸ்.எஸ். எல்.ஸி. பாஸ் செய்துவிட்டு வரக்கூடியவர்களுக்கு வேண்டுமென்றால் இரண்டு வருஷம் டிரெயினிங் என்ற முறையைக் கையாளலாம். இதைத் தவிர இந்த உத்திரவானது ஸ்டேட் ரிஆர்கனைசேஷன் ஆக்ட்க்கும், அரசியல் நிர்ணயச் சட்டத்திற்கும் மிக முரண்பாடாக இருக்குமென்று நான் நம்புகிறேன்.

இதைத்தவிர நமது கனம் கல்வி அமைச்சர் அவர்கள் மேடையிலே ரொம்பவும் அழகாகச் சொல்வதை நாம் கேட்டிருக்கிறோம். ஆசிரியர்கள் நிலைமை உயர்ந்தால்தான் நாடு வளம் பெறும். நாடு வளம் பெற்றால் தான் நாட்டிலுள்ள மக்கள் சுபிட்சமாக வாழ முடியும் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அந்தந்த மாவட்டத்தில் அந்தந்தத் திட்டத்தை மிகவும் நல்ல முறையிலே நடத்தி வருவதற்கு முக்கிய காரணம் ஸ்ரீமான் சுந்தரவடிவேலு என்று சொல்ல விரும்புகிறேன். இதைத் தவிர எங்கள் மாவட்டத்தில் உள்ள சில குறைகளைச் சொல்ல விரும்புகிறேன். எங்கள் மாவட்டத்திலே டி.இ.ஓ.-வாக இருக்கிறவர் என்ன நினைக்கிறார் என்றால் அவர்களேதான் கல்வி இலாக்கா டைரக்டர் என்று. இந்த ராஜ்யத்தில் கல்வி இலாகா டைரக்டர் இருக்கிறாரோ இல்லையோ என்று சந்தேகப்படும்படியாக நடந்து கொள்கிறார். குறிப்பாக மக்களின் பிரதிநிதியாக அவர்களிடம் சென்று சில விஷயங்கள் செய்யப்படவில்லை என்று சொன்னால் அவர்களுக்குக் கோபம் வருகிறது. தனக்கு என்ன தோன்றுகிறதோ அதைத்தான் செய்வார். மக்களுடைய ஆட்சி நடக்கிறது என்று கூடப் புரிந்து கொள்ள முடியவில்லை. இம்மாதிரி அவர்களுடைய போக்கு



22nd March 1961] [Sri A. Chidambaranatha Nadar]

சென்றால் அது மக்களுடைய நன்மைக்கு ஆபத்தாக முடியும். நான் அதைப் பற்றிப் பேசும்போது என்னுடைய அன்பர் ஸ்ரீ சட்டநாதர் சிரிக்கிறார். அவர்களுக்கு நன்றாகத் தெரியும் இந்த விஷயம். எங்கள் மாவட்டம் திரு—கொச்சி இருந்த காலம் தொட்டு அவர்களுக்குத் தெரியும். டிரெயினிங் படிப்பிற்கு சில ஆட்களை எடுத்தார்கள். அது பொது மக்கள் வரவேற்கும் நிலையில் இல்லை. அதில் நான் கீழே குறிப்பிடும் பெண் ஒருத்தி இவருக்கு முளகுமேடு பள்ளியில் அனுமதிக்கப்பட்டாள். ஆனால் அந்தப் பெண் சில தினங்கள் கழிந்து எனக்கு சுகம் இல்லை சற்று சூடான இடத்திற்கு நாகர் கோயிலுக்கு அனுப்பி விடுங்கள் என்று கேட்டாள். இதற்கு அவர்கள் சொன்னார்கள் உங்கள் தலைமை ஆசிரியருக்கு ஒரு மனுப் போடுங்கள். என்னிடம் வந்ததும் பார்க்கிறேன் என்று சொன்னார்கள். இம்மாதிரி அந்தப் பெண் தலைமை ஆசிரியருக்கு ஒரு மனு போட்டாள். அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டு அவளையும் பள்ளியிலிருந்து நீக்கி விட்டார்கள். ஆனால் இதை அறிந்த சர்க்கார் இடமளிக்க உத்தரவிட்டார்கள்.

இதைப் பற்றி கனம் அமைச்சர் அவர்களுக்கும் கல்வி இலாகா டைரக்டருக்கும் தெரிவித்ததுண்டு. இதைத் தவிர அங்கு ஷிப்ட் சிஸ்டம் இருந்தது மாற்றப்பட்டது. இதை நான் வரவேற்கிறேன்.

மாற்றப்பட்ட ஷிப்ட் சிஸ்டத்தை வெற்றிகரமாக நடத்த வேண்டுமென்றால் சிவன் பிள்ளை இருந்தால் நடத்த முடியும் என்று நினைப்பது கண்டு வருத்தப்படுகிறேன். நம் மா நிலத்தில் எவ்வளவு பேர்கள் பி.ஏ., எல்.டி. எம்.ஏ., எல்.டி. படித்த கெட்டிக்காரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் வந்தாலும் போதும். அவர்கள் வந்தால் அதை வெற்றிகரமாக நடத்துவார்கள் என்ற நம்பிக்கை எனக்கும் உண்டு. இந்த நாட்டிலுள்ள அத்தனை பேர்களுக்கும் உண்டு. குறிப்பாக என் மாவட்டத்தைச் சேர்ந்த மக்களுக்கு அந்த நம்பிக்கை உண்டு. நல்லெண்ணத்தோடு சொல்கிறேன். நம் நாடு நல்ல முறையில் வளர்கிறது, நடக்கிறது. சென்னை ராஜ்யத்தைப் பார்த்துப் படி என்று அடுத்த மாகாணங்களில் உள்ளவர்கள் சொல்கிறார்கள். இதைக் கேட்கும்போது நம் மாகாணத்தைச் சார்ந்தவர்கள், விசேஷமாக காங்கிரஸ் கட்சியில் இருக்கக்கூடிய அத்தனை ஜனப் பிரதிநிதிகளும் இதைக் கேட்டுப் பெருமைப் படுகிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் இப்படிப்பட்ட அதிகாரிகளை வைத்து நிர்வாகம் நடத்துவது அவ்வளவு உசிதமில்லை என்று சொல்லிக் கொண்டு எனக்குப் பேசுவதற்கு இவ்வளவு நேரம் அளித்த என் கட்சிக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**Sri M. KARUNANITHI** : சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, கல்வி மான்யத்தின் மீது தரப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து நான் என்னுடைய கருத்துக்களை இங்கு தெரிவிக்க விரும்புகிறேன். இந்தியாவிலே ஆரம்பப் பள்ளிகளில் குழந்தைகளுக்காகத் தயாரிக்கப்படும் பாடப் புத்தகங்களின் தரம் பெரும்பாலும் மோசமானதாக இருக்கிறது, உள்ளடக்கம், அச்சு, அமைப்பு எல்லாமே மிகவும் மோசம் என்று நான் சொல்லவில்லை. டிஸம்பர் மாதம் 28-ம் தேதி கான்பூரில் நடைபெற்ற அகில இந்தியக் கல்வி மகாநாட்டிற்குத் தலைமை வகித்த நமது கல்வி அமைச்சர் திரு. சுப்ரமணியம் அவர்கள் எடுத்துக் காட்டியிருப்பதை நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கல்வியின் தரம் குறைந்திருப்பதற்குக் காரணம் ஆரம்பப் பள்ளிப் புத்தகங்களின் அமைப்பும், உள்ளடக்கம் என்று சொல்லப்படுகிற பொருள் அடக்கமும் கூடத் தரக் குறைவானதாக இருக்கிறது என்பதை அம் மகாநாட்டில் நமது கனம் அமைச்சர் அவர்கள் சொன்னதோடு அல்லாமல் அதைத் திருத்துவதற்கு தக்க வழிவகைகளைக் காணவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் எடுத்துக் கூற விரும்புகிறேன். கல்வியின் தரம் குறைவாக இருப்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. ஆசிரியர்களின் வாழ்க்கை நிலை சரியான அளவிற்கு உயர்த்தப்படாதது ஒரு காரணம். கல்வித்தரம் உயர வேண்டுமென்றால் ஆசிரியர்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்தாக வேண்டும். ஆசிரியர்களின் சம்பளத்தை அதிகமாக உயர்த்தியிருக்கிறோம் என்ற காரணத்தினால் மட்டும் அவர்கள்

[Sri M. Karunanithi] [22nd March 1961

வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியாகி விட்டது என்பதற்கு ஒரு சான்ருகக் காட்டுவார்களேயாளுல், அதற்கு நான் அல்ல, டெல்லி பாராளு மன்றத்தில் மத்திய அரசின் கல்வி அமைச்சராக இருக்கும் ஸ்ரீ ஸ்ரீமாலி அவர்கள் ஆசிரியர்களுக்குக் கொடுத்துள்ள சம்பள உயர்வு, தற்போது ஏற்பட்டிருக்கும் பண்டங்களின் விலைவாசி உயர்வால் பயன்படாமல்போய் விட்டதென்று அண்மையில் குறிப்பிட்டுக் காட்டியிருப்பதை இங்கு நெரிவிக்க நான் கடமைப் பட்டிருக்கிறேன். ஆசிரியர்களால் எப்படி மாணவர்களுக்கு நிம்மதியாகப் பயிற்சி அளிக்க முடியும் என்பதை நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். பால் சாப்பிடுவது உடம்பிற்கு நல்லதென்று பள்ளிகளில் போதித்து விட்டு வீட்டிற்குச் செல்கிற ஆசிரியர் தன் குழந்தை குட்டிகளுக்குப் பால் வாங்கித்தர வக்கற்ற நிலையில், வழியற்ற நிலையில், வாடிக்கொண்டிருக்கிருர்கள் என்ருல் பள்ளிக்கூடத்தில் கரும்பலகையில் பால்காரி என்று எழுதிக் காட்டி, "பா, ல்; கா, ரி," என்று எழுதிக் காட்டி மாணவர்களுக்குப் பாடம் போதிக்கின்ற நேரத்தில் திரும்பி வீட்டிற்கு செல்லும்போது பால்காரி பழைய கடனைக் கேட்க காத்திருப்பாளே என்ற நினைவு அவர் உள்ளத்தில் தோன்றுமாளுல் அவர் போதிக்கும் பாடம் அத்துடன் நடைப்பட்டுப் போகும் என்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை. இன்றையதினம் ஆசிரியர்களுக்குத் தரப்படுகிற வேலை, மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பது என்பது மட்டுமல்ல, இன்று ஆசிரியர்களுக்குப் பல பல வேலைகளை அரசினர் தந்திருக்கிருர்கள். சென்சஸ் எடுப்பது ஆசிரியர்களின் வேலையாக இன்றையதினம் தரப்பட்டிருக்கிறது. வாக்காளர் பட்டியல் சேகரிப்பது ஆசிரியரின் வேலையாகத் தரப்பட்டிருக்கிறது, டி.பி. ஸீல் விற்பனை செய்வது அவர்களது வேலையாகத் தரப்பட்டிருக்கிறது, கொடி விற்பனை செய்ய வேண்டியது அவர்களது வேலையாகத் தரப்பட்டிருக்கிறது. சிலவிடங்களில் பரிசுப் பத்திரங்கள் விற்க வேண்டிய நிலையும் இருக்கிறது, ஆசிரியர்களுக்கு. பள்ளிக்கூடச் சீரமைப்பிற்கு வேண்டிய சாமான்கள் சேகரிப்பது போன்ற இக்கட்டான நிலையில் இருக்கிருர்கள் ஆசிரியர்கள். மதிய உணவுத் திட்டத்திற்குப் பொருள் பெறும் காரியத்தையும் அவர்கள் செய்ய வேண்டியிருக்கிறது. நான் இந்தக் காரியங்கள் வேண்டாமென்று கூறவில்லை. மதிய உணவு அளிப்பதும் பள்ளிச் சீரமைப்பும் அத்தியாவசியமானவை என்பதை நான் உணர்ந்திருந்தாலும் அவைகளுக்காக நேரத்தை செலவிடும் ஆசிரியர்கள், பள்ளியில் பாடம் போதிக்கும் நேரத்தை கொள்ளை கொண்டு இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபடவேண்டியவர்களாயிருக்கிருர்கள் என்பதை இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்த எழெட்டு வேலைகளை ஆசிரியர்கள் பார்க்கும் போது, அவர்களுக்கு அதற்காகத் தனிச் சலுகைகள் தரப்பட்டாலும் கூட, தரப்படவில்லை என்று எனக்குத் தெரியும், அப்படித் தரப்பட்டாலும் கூட இந்த வேலைகளைச் செய்து கொண்டு பள்ளிகளில் கல்வித் தரத்தை உயர்த்த அவர்களால் இயலுமா என்பதை மதிப்பிற்குரிய கல்வி அமைச்சர் அவர்கள் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியர்களுக்குப் பல இடங்களில் எப்படி போலீஸ் காரர்களுக்கு வீடுகள் கட்டுத் தரப்படுகிறதோ அதே போன்று ஆசிரியர்கள் கிராமங்களில் குடியேறி குடியிருப்பதற்கு வீடில்லாமல் தவிக்கும் நிலையில் அவர்கள் இன்று இருப்பதால் கிராமங்களில் ஆசிரியர்களுக்கு வீடு கட்டித் தருகிற திட்டத்தை இந்தச் சர்க்கார் செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பள்ளிகளின் கல்வித் தரம் உயர பாடப் புத்தகங்கள் எவ்வளவு முக்கியமானதோ அதேபோல் ஆசிரியர்களின் நிலையும் உயர்வது அவசியம். அதே போன்று பள்ளி நிர்வாகமும் ஒரு முக்கிய பொறுப்பாகும். பஞ்சாயத்து யூனியன் கௌன்சில் உரையில் நமது கல்வியமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்தில் கூறியதாக எனக்கு நினைவு, மாவட்டக் கழக உயர்தர ஆரம்பப் பள்ளிகளை பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்தில் விட்டு விட்டு, மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளிகளை சர்க்காரே எடுத்துக் கொள்வது என்று முடிவு செய்திருப்பதாகவும் உயர்நிலைப் பள்ளிகளை சர்க்கார் நிர்வாகத்தில் நேரிடையாகக்கொண்டு வருவது சர்க்கார் திட்டம் என்று கனம் அமைச்சரவர்கள் கூறியிருப்பதாகக் கருதுகிறேன். ஆளுல் அது எப்படி செயல்படுகிறது என்ருல் அதற்கு ஒரு உதாரணம் கூறவிரும்புகிறேன். தஞ்சை மாவட்டத்தில் திருவாரூர் கழக உயர்நிலைப் பள்ளியை, நான் கேள்விப்பட்டேன், திருவாரூரிலுள்ள ஒரு திடீர் காங்கிரஸ் காரா,ஒரு பணக்காரருக்கு அந்தப் பள்ளியைத் தனிப்பட்ட முறையில் மாற்றித்



22nd March 1961] [Sri M. Karunanithi]

தருவதற்கான முயற்சிகள் வெகு வேகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. திருவாரூர் பொது மக்களும், சர்வ கட்சிக்காரர்களும் அந்த முறை கூடாது, அந்தப் பள்ளியை மாவட்டக் கழக நிலையிலிருந்து தனிப்பட்ட ஒருவரின் உரிமையாக மாற்றக் கூடாது என்றும், அவர் நில உச்ச வரம்பிலிருந்து தப்பித்துக் கொள்ள இக் காரியத்தை மேற்கொள்கிருர் என்றும் திருவாரூர் மக்கள் குரல் எழுப்புகிருர்கள். அதற்கிடையில்கூட அந்தப் பள்ளியைத் தனியார் நிர்வாகத்தில் விடுவதற்கான வேலைகள் மிகத் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருப்பதை நான் இங்கு ஞாபக மூட்ட விரும்புகிறேன். ஒரு காங்கிரஸ்காரருக்குக் கொடுக்கக் கூடாது என்று நான் கருதுவதாக கனம் அமைச்சர் அவர்கள் எண்ணிளுல் திருவாரூரில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற நகராண்மைக் கழகம் காங்கிரஸ் கட்சியின் தலைமையில்தான் நடைபெறுகிறது, அந்தக் கழகம் வழி இந்தப் பள்ளி இயங்குவதற்குஆவன செய்ய வேண்டும். அடுத்து, கல்லூரிகளில் மாணவர்கள் எந்த அளவு சங்கடப்படுகிருர்கள் என்பது குறித்து கான்பூரில் பேசிய கனம் அமைச்சர் அவர்கள் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிருர்கள். இன்டர்மீடியேட் வகுப்பை ஒழித்தது எவ்வளவு தவருனது என்று அவர் அங்கு சுட்டிக் காட்டி இருக்கிருர்கள். நாமும் உணர்கிருேம். செகண்டரி பள்ளிகளில் பிரதேச மொழியில் பாடங்கள் கற்பித்தால் அவர்கள் ப்ரீ யூனிவர்ஸிட்டிக்கு போகும் போது அவர்கள் எல்லாப் பாடங்களையும் ஆங்கிலத்தில் படிக்க வேண்டியிருக்கிறது, என்று குறிப்பிட்டிருக்கிருர்கள். திடீரென்று ஏற்படும் மாறுதல் காரணமாக மாணவர்கள் தங்களை ஒரு ஆண்டில் சரிப்படுத்திக் கொள்ள முடியவில்லை. ஆகவே ப்ரீ யூனிவர்ஸிட்டியை எடுத்து விட்டு அதற்குப் பதிலாக உயர்தர செகண்டரிப் பள்ளி, 11-வது வகுப்பு ஏற்படுத்திய பிறகு மற்ெருரு சிரமமும் ஏற்படுமென்று கூறியிருக்கிருர்கள். 11-வது வகுப்புவரை பிரதேச மொழியில் கற்கும் மாணவர்கள் பட்டப் படிப்பிற்குச் செல்கிறபோது அங்கு ஆங்கிலத்தில் படிக்க வேண்டியிருப்பதால் சர்வகலாசாலையின் தரம் பாதிக்கப்படும். தொழில் நுட்பப் படிப்பிற்காகச் செல்லக்கூடிய மாணவர்களுக்குப் பல தொல்லைகள் ஏற்படுமென்றும் கூறியிருக்கிருர்கள். இந்த நிலைமை மாற்றுவதற்கு கனம அமைச்சர் அவர்கள் என்ன வழி செய்யப் போகிருர்கள் ? கல்லூரிகளில் பிரதேச மொழியைத் தொடர்ந்து வைக்கப் போகிருர்களா, கோவையில் செய்திருப்பதைப் போன்று சென்னை கல்லூரிகளிலும் அத்தகைய முறையைப் புகுத்துவதற்கு வேண்டிய முயற்சிகள் ஈடுபடப்போகிருர்களா அல்லது 11-வது வகுப்பில் எல்லாப் பாடங்களையும் ஆங்கிலத்தில் போதிப்பது பற்றி ஆராயப் போகிருர்களா, இப்பொழுதுள்ள நிலையில் அது இல்லை என்பது நிரூபிக்கப்பட்டு விட்டது. ஆகவே, இது பற்றியதொரு விளக்கத்தை கனம் அமைச்சர் அவர்கள் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக இந்த ஆண்டு எஸ்.எஸ்.எல்.ஸி. தேர்வு (பிரைவேட் 10-30 a.m.
காண்டிடேட்) தனிப்பட்ட முறையில் பரீட்சை எழுதுகின்றவர்கள் தங்கள் ஊரின் அருகாமையில் இருக்கின்ற சென்டர்களைக் கேட்கின்ருர்கள். நாகையில் இருக்கின்ற ஒரு மாணவன் அதன் அருகாமையில் இருக்கின்ற ஒரு சென்டரை குறிப்பிட்டுக் கேட்டிருந்தும்கூட, அந்த சென்டர் கொடுக்கப்படாமல், தொலைவிலுள்ள கடலூர் சென்டருக்கு அனுமதி கொடுக்கிருர்கள். இதளுல் அந்த மாணவர்களுக்குப் பல தொல்லைகள் ஏற்படுகின்றன. இந்த நிலைமைகளை எல்லாம் அடுத்த ஆண்டிலாவது அகற்றுவதற்கு சர்ககார் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக மாணவர்கள் அரசியலில் பங்கு பெறலாமா என்பதைப்பற்றி இந்த மாமன்றத்தில் பல முறைகள் விவாதிக்கப்பட்டிருக்கிறது. அதோடு சர்வகட்சிகள் ஒன்று சேர்ந்து இதன் மீது எடுத்த முடிவு என்னவாயிற்று ? அந்த முடிவை யார் மீறிளுர்கள் ? மாணவர்கள் மகாநாடுகளில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களோ அல்லது திராவிட முன்னேற்றக் கழகச் சொற்பொழிவாளர்களோ கலந்து கொண்டு இந்த முடிவை மீறிளுர்களா ? அல்லது காங்கிரஸ் தலைவர்களோ அல்லது காங்கிரஸ் அமைச்சர்களோ இம்மாதிரியான மகாநாடுகளில் நாம் எடுத்த முடிவை மீறி கலந்து கொண்டார்களா? என்பதைப்பற்றி சற்று யோசித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

[22nd March 1961

**Sri A. VEDARATHNAM**: கனம் துணைத் தலைவர் அவர்களே, இங்கு கொண்டு வரப்பட்டிருக்கும் கல்வி மான்யத்தைப் பாராட்டும் முகத்தாலும் அதை வரவேற்கும் முகத்தாலும் சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். கல்வி இலாகா ஆற்றி வருகின்ற பல பணிகளைப் பற்றி நம்முடைய மாநிலத்திலுள்ளவர்கள் மட்டுமல்ல,—நான் வரவு செலவுத் திட்ட விவாதத்தில் குறிப்பிட்டதுபோல் நம்மிடமிருந்து பிரிந்து போன பாகிஸ்தான், ஐ.நா. ஸ்தாபனம், யுனெஸ்கோ போன்ற இடங்களில் எல்லாம் கல்வித் துறையில் நமது தமிழகம் முன்னேறி வந்திருப்பதைப் பற்றிப் புகழ்ந்து வருகிறார்கள் என்றால், இதைவிட நமது இலாகாவுக்கு வேறு புகழ் இருக்கிறது என்று சான்று கூற வேண்டிய அவசியமே இல்லை. நம்முடைய மாகாணத்தில் கல்வி முன்னேற்றம் எந்த முறையில் வளர்ந்தது என்பதைப்பற்றி அகில இந்திய ரீதியில் எப்படியிருக்கிறது என்பதற்குச் சான்று வேண்டுமென்றால் சமீபத்தில் அகில இந்திய ரீதியில் கொடுக்கப்படும் பத்மஸ்ரீ என்ற பட்டம் நமது கல்வி இலாகா இயக்குநர் அவர்களுக்குக் கொடுத்திருப்பதையே எடுத்துக்கொள்ளலாம். அவர்களுக்குக் கிடைத்திருக்கும் இந்த பத்மஸ்ரீ என்ற பட்டம் அவர்களுக்கு மட்டும் கிடைத்திருக்கும் சிறப்பல்ல, இந்த இலாகாவில் பணியாற்றக் கூடிய எல்லா ஆசிரியர்களுக்கும், இதில் பணியாற்றுகிற எல்லாத் தொண்டர்களுக்கும் குறிப்பாக இந்த மாநிலத்திற்கே கிடைத்திருக்கும் சிறப்பாகும். இதைப் பற்றி நாம் எல்லோருமே மகிழ்ச்சியடைய முடியும்.

**Sri A. V. P. ASAITHAMBI**: பத்மஸ்ரீ என்றால் அர்த்தமென்ன என்பதைச் சொல்ல முடியுமா ?

**Sri A. VEDARATHNAM**: அர்த்தம் தெரியவில்லை என்றால், அகராதியைப் புரட்டிப் பார்த்தால் தெரியும், வேறு எங்கும் போகவேண்டியதில்லை. நமது லைப்ரரியிலேயே இருக்கிறது, போய்ப் பார்த்துக் கொள்ளலாம். (குறுக்கீடு) நான் போய் பார்க்க வேண்டியதில்லை, அவர்களே அந்தக் கைங்கரியத்தைச் செய்து கொள்ளலாம். அடுத்தபடியாக, ஆசிரியர்களுடைய சம்பள விகிதத்தைப்பற்றி, எங்கள் ஜில்லாவாசியாக இருந்தாலும், திருச்சி ஜில்லாவை, பிரதிநிதித்துவம் வகிக்கக் கூடிய கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள். பல வசதிகள் ஆசிரியர்களுக்குச் செய்து கொடுத்திருந்தும், இப்போதும் அதில் குறைகள் இருக்கின்றன என்று இப்படிச் சொல்வது கேலிக்கு இடமான விஷயம் என்றுதான் நம்மால் சொல்ல முடியும். பே கமிஷன் திட்டத்தை இன்றைக்கு முற்றிலும் அப்படியே எடுத்துக் கொண்ட மாகாணம் அகில இந்திய ரீதியில் ஒரு மாகாணம் உண்டு என்று சொன்னால் அது நம்முடைய தமிழகம்தான் என்பதை நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். நேற்றுக்கூட பார்லிமெண்டில் மத்திய மந்திரி ஸ்ரீ ஸ்ரீமாலி அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள், பே கமிஷன் திட்டத்தை அப்படியே ஒப்புக்கொண்ட மாகாணம் நமது மாகாணம்தான் என்பது மட்டுமல்ல, ஆசிரியர்களுக்குப் பென்ஷன் திட்டம், இன்ஷூரன்ஸ் திட்டம், பிராவிடண்ட் பண்ட் திட்டம் போன்ற அனைத்தையும் ஏற்றுக் கொண்டுள்ள மாகாணம் நமது மாகாணம் என்று டாக்டர் ஸ்ரீமாலி அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று சொன்னால் ஆசிரியர்களுடைய விஷயத்தில் மற்றவர்கள் பொறாமைப்படக்கூடிய அளவில் நம்முடைய மாநிலம் இருக்கிறது. அந்த அளவுக்கு நம்முடைய மாகாணம் முன்னேறியிருக்கிறது என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது. குறை கூறுவதற்கு என்று வேண்டுமானால் எதையாவது சொல்லிக் கொண்டிருக்கலாம். அவ்விதம் செய்கின்ற கைங்கரியமானது சரியானது என்று சொல்ல முடியாது. அந்த அளவுக்குப் பல நன்மைகளை செய்திருக்கிறது நம்முடைய சர்க்கார். சீமைக்கு நமது கல்வி அமைச்சர் போயிருந்த காலத்தில் இங்கிலாந்து நாட்டிலுள்ளவர்கள் நமது கல்வி முன்னேற்றத்தைப் பற்றி நமது அமைச்சர் அவர்களிடத்தில் பாராட்டியிருக்கிறார்கள். எதிர்காலத்தில் நல்ல மாணவர்களைத் தோற்றுவிக்கக்கூடிய ஒரு இலாகாவாக இருக்கின்ற இந்த இலாகாவில் இருந்த பல குறைகளையும் இன்றைக்கு நிவர்த்தி செய்திருக்கிறார்கள். நம்மைவிட்டுப் பிரிந்து போன ஆந்திரா போன்ற மாகாணங்களில்கூட பே கமிஷன் கொடுத்த ரிப்போர்ட்டை இதுவரை திருப்பிக்கூடப் பார்க்காமல் இருந்து கொண்டிருக்கிறார்கள்.



22nd March 1961] [Sri A. Vedarathnam]

ஆந்திரா மாகாணத்திலுள்ள அசெம்பிளி அங்கத்தினர் ஒருவரைக் கண்டபோது அவர்கள்கூடத் தெரிவித்தார்கள், பே கமிஷன் ரிப்போர்ட்டை அப்படியே ஏற்றுக்கொள்ள முடியாமல் இருக்கிறது, சென்னை சர்க்கார்தான் அப்படியே ஏற்றுக் கொண்டிருக்கிறது என்று அவர்களே சொன்னார்கள் என்றால் இதில் குறை சொல்வதற்கு இடமே யில்லை என்று சொல்லலாம். மாணவர்களிடத்தில் அரசியல் கட்சி போய் பிரசாரம் செய்யக்கூடாது என்கின்ற கருத்தை அகில இந்தியாவுக்கே நாம்தான் தெரிவித்தோம். அகில இந்தியாவுக்கே நாம் வழிகாட்டியாக இருந்தோம். சர்வ கட்சிகளும் சேர்ந்து இதில் ஒரு முடிவுக்கு வர ஒத்துக் கொண்டார்கள். எல்லா அரசியல் தலைமைகளும் ஒப்புக்கொண்டது. ஆனால் ஒரே ஒரு கட்சி மட்டும், தங்களுடைய தலைமை இங்கு இல்லை என்றும், அந்தத் தலைமை இதை ஒப்புக் கொள்ளவில்லை என்றும் தெரிவித்தார்கள். எல்லோராலும் ஒப்புக்கொண்ட ஒரு முடிவை ஒரு கட்சித் தலைமை மட்டும் அங்கீகரிக்கவில்லை என்ற காரணத்திற்காகத்தான் இதுவரை அது அமல் நடத்தப்படாமல் இருக்கிறது என்று என் முன்னால் பேசிய என்னுடைய நண்பர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். கனம் நிதி அமைச்சர் அவர்களுக்கு நான் ஒரு வேண்டுகோள் விடுகிறேன், இந்த மாநிலத்திலுள்ள எல்லா அரசியல் கட்சிகளும் ஒத்துக்கொண்ட ஒரு முடிவை ஒரு கட்சியினுடைய தலைமை பீடம் மட்டும் அங்கீகரிக்கவில்லை என்ற காரணத்திற்காக இவ்வளவு முக்கியமான ஒரு தீர்மானத்தை, அகில இந்தியாவிலும் போற்றக் கூடிய ஒரு தீர்மானத்தைக் கைவிட வேண்டியதில்லை என்று கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய மாகாணம் சம்பந்தப்பட்ட வரையில் இதை உடனடியாக அமலுக்குக் கொண்டு வர வேண்டியது மிக மிக அவசியம் என்பதை நான் கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் நமது மாகாணத்தில் கல்வி எந்த அளவுக்கு முன்னேறி இருக்கிறது என்பதற்கு ஏராளமான புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பத்து வருட காலத்திற்குள் 14 ஆயிரம் மாணவர்களாக இருந்தவர்கள் இப்போது 26 ஆயிரம் மாணவர்களாகப் பெருகியிருக்கிறார்கள். அதோடு பள்ளிக்குச் செல்லக்கூடியவர்கள் 45 சத விகிதத்தினராய் இருந்தது, இப்போது 75 சத விகிதமாய் உயர்ந்திருக்கிறது. இது ஒரு பெரிய ஆச்சரியமாய (Miracle) சேவை என்றுதான் சொல்ல முடியும். அந்த அளவுக்குத் திறமையாக சேவை செய்து வருகிறார்கள். கல்வித் துறையில் நமது மாகாணம் அதிவேகமாக, மனதில் நாம் எண்ணுவதைவிட வேகமாக முன்னேறி வருகிறது என்கிற விஷயத்தை நான் குறிப்பிட விரும்புகிறேன். அதோடு கார்ப்பரேஷனில் நடக்கும் மதிய உணவுத் திட்டத்தைப்பற்றி இங்கு பலர் குறிப்பிட்டார்கள். இங்கே நல்ல முறையில் இந்தத் திட்டம் நடைபெறுவதற்கு அமெரிக்காவிலிருந்து அரிசி கொடுக்கின்றார்கள் என்று சொல்லப்பட்டது. இதோடு இன்னும் இதை நல்ல முறையில் எப்படி நடத்த முடியும் என்பதைப்பற்றி ஆராய ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கமிட்டி, இந்த நகரத்தில் இருக்கின்ற பள்ளி மாணவர்களுக்கு மட்டும் பணத்திற்குப் பதிலாக தான்யங்கள் கொடுக்கிறார்கள் என்றால், கிராமப் புறங்களிலுள்ள மாணவர்களுக்கும் ஏன் இவ்விதமே தான்யங்களைக் கொடுத்து உதவக் கூடாது என்பதைப்பற்றி பரிசீலிக்க வேண்டும். கார்ப்பரேஷனில் இருக்கின்ற குழந்தைகள் என்ன புண்ணியம் செய்ததோ, கிராமப் புறங்களில் இருக்கின்ற குழந்தைகள் என்ன பாவம் செய்ததோ தெரியவில்லை. ஆகவே எல்லாக் குழந்தைகளுக்கும் இந்த உதவியைச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது) குறிப்பாக எனக்கு முன்னால் பேசிய கம்யூனிஸ்டு அங்கத்தினர் சொன்ன ஒரு விஷயத்தை மட்டும் குறிப்பிட்டுவிட்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

ஆதாரக் கல்வி பற்றி அவர் பேசினார். இது வரையில் 'இன் டோட்டோ' ஆட்சேபித்து வந்தவர்கள் அதிலும் சில நல்ல அம்சங்கள் இருக்கின்றன என்று சொன்னதானது வசிஷ்டர் வாயால் ஒத்துக்கொண்ட மாதிரி இருக்கிறது. நல்ல அம்சம் என்று அவர் சொன்னதாவது கோ-ரிலேடெட் டீச்சிங்கும் செல்ஃப் ரிலையன்ஸும். ஆதாரக் கல்வியில் எது முக்கியமானது என்று சொன்னால் சுய தேவைத் திட்டமும் கோ-ரிலேடெட்

[Sri A. Vedarathnam] [22nd March 1961

டீச்சிங்கும் கிராஃப்ட் மீடியமும்தான் என்று ஒத்துக் கொண்டார்கள். இதை மற்ற திட்டத்தோடு இணைக்க வேண்டும் என்று சொன்னார்கள். பாடப் புத்தகத்தை வைத்துக் கொண்டு கோ-ரிலேட் செய்ய முடியாது. இதை சரியாக ஆராய்ந்திருந்தால் இந்த மாதிரி சொல்லியிருக்க மாட்டார்கள். நான் ஒரு விஷயம் கூற விரும்புகிறேன். இப்போது நிறையப் பள்ளிகள் விருத்தியாகின்றன. இப்படி அதிகமாக இந்த சாதாரண பழைய முறை மெக்காலே கல்வித் திட்டம் விருத்தியானால் வேலையில்லாத் திண்டாட்டத்தினால் சர்க்காரையே திணற அடித்து விடும். அதற்காகத் தொழில் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். பள்ளிகளெல்லாம் ஆதாரக் கல்விமுறையில் இருக்க வேண்டும். முன்பு போஸ்ட்-பேசிக் பள்ளிகள் 5—6 ஆரம்பிக்கப் போவதாகச் சொன்னார்கள். ஆனால் ஒன்றுதான் ஆரம்பமாகியிருக்கிறது. இதில் கவனம் செலுத்த வேண்டும். நிதி நிலை அறிக்கை சமர்ப்பித்ததானது இந்த நாட்டில் ஒன்றும் இல்லை என்று இன்ஃபீரியாரிட்டி காம்ப்ளெக்ஸோடு இருப்பவர்களுக்கு இது ஒரு பெரிய லிட்ரெச்சராக இருக்கிறது என்று சொல்ல வேண்டும். ஆதாரக் கல்வியைப் பற்றியும் ஒரு சில வார்த்தைகளைக் குறிப்பிட்டிருந்தால் பொன் மலர் மணமும் உடைத்து என்பதற்கு ஒப்பாக ஆகும். உலகத்திலே எந்த நாட்டிலும் இல்லாத கல்வித் திட்டத்தை அண்ணல் காந்தியடிகள் நமக்குக் கொடுத்தார்கள். சுயராஜ்யம் வாங்கியதைவிட முக்கியமானது ஒன்று உண்டு என்றால் அது ஆதாரக் கல்வி என்று கூறியிருக்கிறார். கல்லூரிகளில் தமிழைக் கொண்டு வந்தது இதைக் காட்டிலும் சிறந்த விஷயம். காந்தியடிகள் சொன்ன ஒரு விஷயத்தைப் படித்துக் காட்டி விட்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன். பயிற்சி மொழி பற்றியது இது. "அந்நிய மொழி (ஆங்கிலம்) பயிற்சி மொழியாக இருப்பது நம் மொழிகளின் வளர்ச்சிக்குத் தடையாக உள்ளது. எனக்கு ஒரு சர்வாதிகாரியின் அதிகாரம் இருக்குமென்றால் நான் இன்றே நம் சிறுவர்கள் அந்நிய மொழி மூலம் கல்வி கற்பதை நிறுத்தி விடுவேன். எல்லா ஆசிரியர்களையும், விரிவுரையாளர்களையும் உடனே தாய்மொழி மூலம் கற்பிக்கும்படி கட்டளை இடுவேன். இம் மாற்றத்தை எதிர்ப்பவர்களை வேலையிலிருந்து நீக்கி விடுவேன். பாடப் புத்தகங்கள் தயாராகும் வரை காத்திருக்க மாட்டேன். பயிற்சி மொழி மாறிய பின் அவை தாமாகவே வந்துவிடும்" என்று கூறுகிறார். இன்னும் இருக்கிறது. இரண்டு தடவைகள் மணி அடித்து விட்டதால் இதோடு நிறுத்திக்கொள்கிறேன். இன்னும் விஞ்ஞான பாடங்களைத் தமிழில் கொண்டுவர முடியாது என்று சொல்லுகிறோம். ஜப்பானில் அனாட்டமி, ஃபிஸியாலஜி புத்தகங்களை எவ்வளவு அழகாக அச்சிட்டு வழங்கியிருக்கிறார்கள். இதற்கெல்லாம் தமிழ் பதங்களை எப்படித் தயாரித்திருக்கிறார்கள் என்பதை நமது அதிகாரிகளும் முக்கியமாக சுகாதார அமைச்சர் அவர்களும் இந்தப் புத்தகத்தைப் பார்க்க வேண்டும். நமது கல்லூரி மாணவர்களுக்கு எவ்வளவு பயனுள்ள புத்தகமாக இருக்கும் என்று பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த மான்யத்தை முழு மனதோடு ஆதரித்து எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

*SRIMATHI KAMALAMBUJAMMAL : கனம் உதவி சபா நாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த மான்யத்தை ஆதரித்துப் பேசும்போது பள்ளி நிர்வாகத்திலே ஏற்படக்கூடிய சில சிக்கல்களை மாத்திரம் எடுத்துக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்குப் பள்ளிகளில் டீச்சர்-ப்யூப்பில் ரேஷியோ என்று புகுத்தி இருக்கிறோம். முப்பத்தைந்து அல்லது 40 பிள்ளைகளுக்கு ஒரு ஆசிரியர் என்ற முறையில் வைத்து அந்த முறையில் நடைபெற வேண்டும் என்று இன்றைக்கு நாம் ஏற்பாடு செய்திருக்கிறோம். அந்த முறையானது நகரப் புறங்களிலும் முனிஸிபல் ஏரியாக்களிலும் ஓரளவு சரியாக இருக்கும். ஏனென்றால் அங்கே ஒவ்வொரு வகுப்பிலும் 30, 35, 40, 45 மாணவர்கள் வரும் சூழ்நிலை இருக்கிறது. ஆனால் கிராமப்புறங்களுக்கு இந்தத் திட்டத்தை விஸ்தரிப்பதன் மூலமாக நிறையச் சங்கடங்கள் ஏற்படுகின்றன. கிராமப்புறங்களில் ஒரு வகுப்பிலே 30 அல்லது 35 மாணவர்களைக் காண முடியாது குறைந்த அளவில்தான் இருப்பார்கள். முதலாவது, 2-வது வகுப்புகளில் வேண்டுமானால், 30 பிள்ளைகள் ஏறக்குறைய வரலாம்.



22nd March 1961] [Srimathi Kamalambujammal]

ஆனால் மேலே போகப் போக குறைந்து கொண்டு போகிறது. அப்படிக் குறைந்து போகும் காரணத்தினால் இரண்டு மூன்று வகுப்புகளை ஒன்றாகச் சேர்த்தால்தான் 30 அல்லது 35 குழந்தைகள் வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இப்படி மூன்று வகுப்புகளுக்கு ஒரே ஆசிரியர் இருந்து பாடங்களை நடத்த வேண்டுமென்ற நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. அந்த முறையில் பார்க்கப் போனால் மூன்று வகுப்புகளுக்கும் பாடத் திட்டங்களில் வித்தியாசம் இருக்கிறது. ஒவ்வொரு வகுப்புக்கும் தனிப்பட்ட ஸிலபஸ் இருக்கிறது. ஒவ்வொரு வகுப்புக்கும் உள்ள ஸிலபஸ்ஸை ஆசிரியர் முடிக்க வேண்டுமானால், மூன்று வகுப்புகளை ஒன்றாகச் சேர்த்து வைத்து பாடங்களை நடத்துவதால் நல்ல முறையில் முடிக்க முடியாது. நல்ல தரமான கல்வி கொடுக்க முடியும் என்ற நம்பிக்கை இருக்க முடியாது. இதைச் செய்வதிலே நிதி நிலைமை நமக்குக் கட்டுபடியாக இல்லை என்று நான் அறிகிறேன். இருந்தாலும் ஓரளவுக்குக் கிராமப்புறங்கள் விஷயத்தில் அதுவும் ஹையர் எலிமெண்டரி செக்ஷன்ஸ் இருக்கும் பள்ளிகள் விஷயத்தில் சற்று முக்கியமாகக் கவனம் செலுத்த வேண்டும். ஹையர் எலிமெண்டரி செக்ஷன் இருக்கிற பள்ளிகளில் 8-வது வகுப்பை முடிக்கும் போது சர்க்கார் பரீட்சை—ஈ.எஸ்.எல்.ஸி. வைக்கிறோம். ஒரே ஆசிரியராக இருந்து கொண்டு 6, 7, 8 என்ற மூன்று வகுப்புகளை எடுத்து நடத்தும் போது 8-வது வகுப்புக்கு அதிகப்படியாகக் கவனம் செலுத்த வேண்டிய நிலையில், 6—7 வகுப்புகளைக் கவனிக்க முடிவதில்லை. மூன்று வகுப்புகளையும் சேர்த்தால்தான் 30 பேர்கள் வருகிறார்கள் என்ற நிலை இருப்பதனால் இதைத் தனியாக இரண்டு ஆசிரியர்கள் போட்டுக் கவனிக்க முடியவில்லை. இந்த முறையைக் கையாளுவதில் பிற்பட்ட கிராமங்களில் இதை ஓரளவுக்குத் தளர்த்தியாக வேண்டும். ஏறக்குறைய 15—20 பிள்ளைகளுக்கு ஒரு ஆசிரியர் என்ற முறையில் பிற்பட்ட பகுதிகளில் கொண்டு வரவில்லையென்றால் கல்வியில் தரம் நன்றாக இருக்க முடியாது. கேள்வி நேரத்தின் போது கனம் நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் பல வசதிகள் இல்லாதன் காரணமாக தேர்வுகளில் பல மாணவர்கள் தவறி விடுகிறார்கள் என்று. அதற்கு இதுவும் ஒரு காரணம்தான் என்று நான் நினைக்கிறேன். இதற்கு முக்கியமாக வசதி செய்து நிதி நிலைமையை வேறு வழிகளில் சரிக் கட்டி இதற்கு ஏற்பாடு செய்யாவிட்டால் கிராமப்புறங்களில் உள்ள பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் கல்வி நல்ல தரமுள்ளதாக இல்லாமல் மேலே வரும்போது ஸ்டாண்டர்ட் குறைந்து போகிறது என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். காரணம் ஒரே ஆசிரியர் மூன்று வகுப்புகளை சரியாக கண்காணிக்க முடியாது. முன்பு ஹையர் எலிமெண்டரி ஸ்கூல்களில் ப்யூன் அல்லது ஆயா வைத்துக் கொள்ளும் சூழ்நிலை இருந்தது. இன்றைக்கு 200 பையன்கள் இருந்தால்தான் ஒரு ப்யூன் கொடுக்கும் நிலைமை ஏற்பட்டு விட்டது. ஆயா வைத்துப் பிள்ளைகளைக் கூட்டிக் கொண்டு வருவதை நிறுத்திவிட்டிருக்கிறோம். க்ரிஸ்ட்டியன் மிஷன் பள்ளிகளைப் பார்க்கும் போது அங்கே செல்லக்கூடிய பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. அங்கே ஆயாக்களை வைத்துப் பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு வரும் சூழ்நிலை இருக்கிறது. கிராமப் புறங்களில் உள்ள தாய் தந்தையர்கள் பிள்ளை பள்ளிக்குச் சென்றதா இல்லையா என்றுகூடப் பார்க்கும் நிலைமை இல்லாததால், அதன் காரணமாக பிள்ளைகளைக் கவனிக்க முடிவதில்லை. ஆயா அல்லது ப்யூன் வீடுகளுக்குச் சென்று பிள்ளைகளைக் கூட்டிச் செல்லும் சூழ்நிலை இருந்தால் நல்ல முறையில் எண்ணிக்கை அதிகமாக இருக்கும். அதன் காரணமாக நான் முன்னாலே சொன்ன தொந்தரவைத் தவிர்க்கச் செய்யும் நிலைமை ஏற்பட்டுவிடும்.

இன்றைக்கு மதிய உணவுத் திட்டம் எல்லாப் பள்ளிகளிலும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தில் காண்டிராக்ட் எடுத்து செய்யக் கூடியவர்கள் எங்கேயாவது சமைத்துக் கொண்டு வந்து போட்டுவிடுகிறார்கள். அதையே பள்ளிகளில் செய்யும் நேரத்தில் ஆசிரியர்களும், பிள்ளைகளும் பாட நேரத்தை ஒதுக்கி அந்த நேரத்தைச் செலவழித்து சமைக்கும் சூழ்நிலை ஏற்படுகிறது. குறைந்த நேரத்தில் 2—3 வகுப்புக்களைச் சேர்த்து வைத்துக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் இந்த வேலையையும் ஆசிரியரும் பிள்ளைகளும் சமைக்க வேண்டும் என்ற சூழ்நிலை இருக்குமானால் கல்வியின் தரம் மிகவும் குறைவாக ஆகிவிடக் கூடியதாக இருக்கிறது. ஒரு

[Srimathi Kamalambujammal] [22nd March 1961

ப்யூன் அல்லது ஆயாவை நியமிப்பதன் மூலமாக ஓரளவு மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இந்த முறையில் விடுதலை கிடைக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படி ஒரு ஆயா அல்லது ப்யூனை அங்கே அமர்த்துவதன் மூலம், அவர்கள் மத்திய உணவுத் திட்டத்தை கவனித்துக் கொள்வதற்கும், அதனால் உபாத்தியாயர்களும் வகுப்பிலேயே உட்கார்ந்து மாணவர்களைக் கவனித்துக் கொண்டு நல்ல முறையிலே பாடம் சொல்லிக் கொடுப்பதற்குப் போதுமான ஒரு சூழ்நிலை ஏற்படும். ஆகவே அரசாங்கம் இதை மறு பரிசீலனை செய்து, இதற்கு ஏதாவது வழி வகைகள் செய்ய வேண்டுமென்று இந்தச் சமயத்தில் கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நமது கல்வி அதிகாரிகளுக்கு எந்த ஜில்லாவிலும் ஜீப் வசதிகள் கிடையாது. வேறு எந்த ஜில்லாவிலாவது இருக்கிறதோ இல்லையோ, செங்கை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் ஜீப் வசதி இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. மற்ற எல்லாவித அதிகாரிகளுக்கும் ஜீப் கொடுக்கப்பட்டிருக்கிறது. கலெக்டருக்கு ஜீப் இருக்கிறது. என்ஜீனியருக்கு ஜீப் இருக்கிறது. ஆனால் முக்கியமாகக் கல்வியிலே கவனம் செலுத்தக் கூடிய கல்வி அதிகாரிகளுக்கு ஜீப் இல்லை. இந்த ஜீப் இல்லாத காரணத்தினால் எல்லாப் பள்ளிகளையும் அவர்கள் தணிக்கை செய்வதற்கு முடியாத ஒரு நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அதோடு இன்றைக்கு டிப்டி இன்ஸ்பெக்டர்களை அதிகமாக்கி இருக்கிறோம். இந்த ஜில்லா அதிகாரிகளை இரண்டாகச் செய்யலாமா என்று யோசனை செய்து கொண்டிருக்கிறோம். இந்த ஜில்லா அதிகாரிகளுக்கு **additional** ஜில்லா அதிகாரி போட்டு அவருக்குத் தனியாக ஒரு காரியாலயம், அந்தக் காரியாலயத்திற்கு வாடகை, அதற்காக சில ஸ்டாப் முதலியவைகளைப் போட்டு, அதற்குச் செலவு செய்வதைவிட, அவர்களுக்கு ஜீப் கொடுத்தால், ஒரு நாளைக்கு மூன்று அல்லது நான்கு பள்ளிகளை வசதியாகச் சென்று காண்பதற்கு அவர்களால் முடியும். ஆகவே இந்த மாதிரி தனியாக ஆபீஸ் போட்டு, அதற்குச் செலவு செய்வது சிக்கனமாக இருக்குமா அல்லது கல்வி அதிகாரிக்கு மட்டும் ஒரு ஜீப் கொடுத்து, அதன் மூலம் பள்ளிக்கூடங்களைக் கண்காணிப்பது அதிகச் செலவாகுமா என்பதை ஆலோசனை செய்து, பிறகு இது விஷயத்திலே அரசாங்கம் ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு எல்லா ஜாதியினரும், எல்லா மதத்தினரும் எந்தவிதமான வேறுபாடுமின்றி வருமானத்தில் பின்தங்கி இருந்தால் அந்தக் காரணத்தைக் கொண்டு சலுகை யாவருக்கும் கொடுக்கப்படுகிறது. இது மிக மிக வரவேற்கத் தக்கது. ஆனால் எந்த ஜாதியினராக இருந்தாலும், பிற்பட்ட இனத்தவராக இருந்தாலும், 100 ரூபாய்க்கு மேல் சம்பாதிக்கக் கூடியவராக இருந்தால், அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்குக் கட்டாயம் பள்ளிக்கூடத்தில் சம்பளம் கட்டவேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. ஒரு தனிப்பட்ட மனிதன் 120 ரூபாய் சம்பாதிப்பவனாக இருந்து, அவனுக்கு நான்கு பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்குச் செல்ல வேண்டியிருந்தால், ஒவ்வொரு பிள்ளைக்கும் அவன் சம்பளம் கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. இந்த முறையிலே சற்றுக் கவனம் செலுத்த வேண்டும். இந்தக் காலத்திலே 100 அல்லது 150 ரூபாய் இருந்தால்கூட ஒரு ஏழை தன்னுடைய குடும்பத்தை நடத்துவதற்கு முடியாமல் கஷ்டப்பட வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே முன்பு இருந்ததை வைத்துக் கொண்டு, இப்போதும் இந்தக் காலத்திலும் அப்படியே அதை வைத்திருப்பது அவ்வளவு சிறந்ததாக இல்லை. ஆகவே அதை எப்படியாவது சற்று உயர்த்த வேண்டுமென்று நான் கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

* SRI S. RANGANATHA MUDALIAR: Mr. Deputy Speaker, Sir, I hertily support the Demand of the Hon. the Finance Minister under this head. The Demand for Rs. 21 crores is a staggering figure compared to the estimate of the other States under this head. Our State has recognized that any progress in



22nd March 1961] [Sri S. Ranganatha Mudaliar]

the country must be hinged on education and has therefore very consistently and effectively adopted the policy of universalizing the education in our State. Ere long our State will beat the record of any other State in our country. In the southern zone, Kerala is considered to be most advanced in respect of education. But I am sure our State will beat the record of Kerala, if it has not already done so. Our State has been considered the pioneer State by other States particularly in respect of its new schemes, viz., the Midday Meal Scheme and the School Improvement Scheme. These two schemes have orginated spontaneously from the co-operative efforts of the common man inspired in no small degree by our Director and also by the liberal attitude of our Education Minister. The Midday Meals Scheme and the School Improvement Scheme are held out as examples to be followed by other States. Yesterday I read in the dailies that certain M.Ps. have joined together in a conference and wanted the Central to adopt the scheme and extend and apply them to other States. The services of our State in this regard has been amply recognized by no less than our President when he was here. He presided over the Conference at Vellore when the School Improvement Scheme was inaugurated. Ever since that time he has been mentioning in season and out of season that Madras example must be followed if our country should be educated on a universal basis and therefore he has properly recognized the service of our Director and conferred on him the unique title of Padma Shri which has not been conferred upon any other Director in any other State so far. This recognization is not confined to him but it is a recognition given to our State and to the liberal policy adopted by the Government. Padma Shri is given to the whole State and not to the Director alone.

Further, Sir, I am personally indebted to the Hon. the Minister and to the Director for the great help which they have rendered to improve the conditions in my constituency. My constituency at the time of integration was most backward. Without our asking, the Director has sanctioned three High Schools and has opened a number of Elementary Schools. We are asking for two more High Schools this year and he has also started a Basic Training School at Tiruttani. He has promised to sanction a Girls' High School also. I believe the Director remembers that promise and I think he will fulfil that promise. My thanks are due to the Director and particularly to the Hon. Minister in this respect.

One other thing I wish to impress on the Government is the need for organising a separate Department of Archaeology for our own State. There is one Department of Archaeology in the Centre under the Ministry for Scientific Research and Cultural Affairs. I regret to say that our monuments have not been properly looked after by the Central Department of Archaeology. It is not peculiar to this time but from the very beginning neglect was there even as early as 1939, when the British Government appointed one Sir Leonard Woolley as Director-General of Archaeology to review the working of the Archaeological Survey of India. He said that ' in

[Sri S. Ranganatha Mudaliar] [22nd March 1961

the case of the Southern Circle, where conditions are peculiar and the interests of archaeology have been much neglected, it is essential that the Circle Superintendent be a Hindu, who would have access to temples and advisable that he be a native of the province.' Further on page 8 of his report he says : 'India is one of the richest countries in the world for remains of the earliest phases of man's existence; in the south, they are particularly abundant. It is not too much to say that this rich field has been entirely overlooked by the Archaeological Survey of India and remains unknown to science. The neglect of it by the Archaelogical Survey is due to the fact that the study of stone age antiquities is highly specialized and lies quite outside the scope of the ordinary archaeologist.' Thus, according to the expert opinion of Sir Leonard Wooley, the interest of the Madras Circle was neglected for a long time and up to 1939. Sir Mortimer Wheeler became the Director-General of Archaeology in 1944 or so with the specific purpose of implementing the recommendations of Sir Leonard Woolley. Wheeler found the department terribly understaffed. He had to recruit new scholars, trained them and posted them to different circles. In 1947, prehistorian, who was a specialist in prehistory, and who was not a specialist in historic monuments was appointed Superintendent of the Madras Circle. He continued in office at Madras from 1947 to 1958 but for brief period of service elsewhere. Thus the prehistorian had to look after historic monuments for which he had no qualifications. He had almost no time to look after prehistory, for which he had special qualifications.

11 a.m. In 1958 he was suddenly called away to Delhi to take up another post and the Madras circle remained without a Superintendent for two more years, that is, till 1960. From 1958 to 1960, a Muslim Assistant Superintendent, who had no access to temples, was in charge of the circle. Thus, the long neglect of the Madras circle which Woolley had noticed in 1939, continued right up to 1960 in spite of the clear warnings of that eminent archaeologist. What is the position now? Some scholar from another State is now the Superintendent. It does not mean that there is paucity of similar qualified men in our own State. The peculiar feature of our State is our temples. In this respect, other States cannot compare with us. So, a special kind of approach is needed for understanding these monuments. Therefore, it is very necessary as Sir Leonard Woolley has stated, that a man of this State, preferably, a Hindu who has access to the temple must be appointed. Since archaeology is a concurrent subject, our State has got a right to be consulted before any Superintendent is appointed to look after our temples. The monuments are divided into three categories, viz., monuments of National importance, the State monuments and the monuments which do not come under either of these categories, but which are in a way, looked after by the Hindu Religious Endowments Board. Simply because some of the monuments have been taken over by the Central Government, they are labelled as Monuments of National importance. It does not mean that other monuments which are outside the purview of the Central Government's Archaeological Department, are not monuments of national



22nd March 1961] [Sri S. Ranganatha Mudaliar]

importance and so it is not worth spending much money upon those monuments. That is not a correct view to be taken. It is this mistaken impression which has been responsible for the States—including our State—not coming forward to have a Department of Archæology of their own. It is high time that we had our own Department. It is gratifying to note that on more than one occasion, our Minister has told the House that the Government were contemplating the early organization or formation of a Department of their own. Thank you, Sir.

*Sri K. SATTANATHA KARAYALAR : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மான்யத்தில் சுமார் ரூபாய் 21 கோடி நாம் செலவிடுகிறோம். இது மேலும் மேலும் வளர்ந்து வரக்கூடிய செலவினம் இது மிக வேகமாக வளர்ந்து வரக்கூடிய ஒரு துறை. நமது நாட்டிலே, அதுவும் சென்னை மாகாணத்திலே கிராமங்களிலெல்லாம் மிக வேகமாக கல்விபரவிக் கொண்டு வருகிறது என்பது உண்மை. ஆனால் எந்த அளவு பரவலாக இருக்கிறதோ, அந்த அளவுக்குத் தரம் குறைந்திருக்கிறது உயர்ந்திருக்கிறதா என்று பார்த்தால், இல்லை என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது. இதற்குப் பல காரணங்கள் இருக்கக்கூடும். குறிப்பாக ஆசிரியர்களுடைய தரக் குறைவு, உதாசீனம், அவர்களுக்கு இருக்கக்கூடிய அதிருப்தி முதலியவைகள் சில காரணமாக இருக்கக்கூடும். பள்ளிக் கூடங்களின் நிலைமை அங்கு இருக்கக்கூடிய வசதிகள் ஆகியவை மற்றொரு காரணம். மேலும் கிராமாந்திரத்தில் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் கல்வியில் அதிகம் கவனம் செலுத்துவதில்லை. ஆகவே, இந்த பல காரணங்களினால் கல்வி எவ்வளவு வேகமாகப் பரவுகிறதோ அந்த வேகத்திற்குத் தகுந்த முறையில் தரம் உயர்வாக இல்லை. இது மிகவும் கவனிக்க வேண்டிய விஷயம். சர்க்கார் தரப்பில் நிர்வாகத் துறையில் இருப்பவர்கள் தரத்தை உயர்த்துவதற்கான முறையில் இன்ஸ்பெக்ஷன் முதலியவைகள் அதிகமாக நடத்தி இதை நல்ல முறையில் பரிபாலனம் செய்ய வேண்டியது மிகவும் அவசியம். அப்படிச் செய்தால் தான் நாம் செலவு செய்யக்கூடிய பெரும் தொகைக்குத் தகுந்த முறையிலேயே பலன் தருவதாக இருக்கும். அப்படி மாற்றி அமைக்க வேண்டி, இன்றிருக்கக்கூடிய டிபார்ட்மெண்டை புனர் நிர்மாணம் செய்ய வேண்டுமா, அல்லது 2, 3 பிரிவுகளாகப் பிரித்து, 'பிரைமரி எஜுகேஷன்' வேறு, 'செகண்டரி எஜுகேஷன்' வேறு, 'காலேஜியேட் எஜுகேஷன்' வேறு என்று பிரித்து தனித் தலைமையின் கீழ் கொண்டு வரவேண்டுமா என்பதைப்பற்றி பரிசீலிக்க வேண்டியது மிகவும் அவசியம் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு இருக்கக்கூடிய பலதரப்பட்ட பள்ளிக் கூடங்களை ஒன்றுபடுத்தி 'பிரைமரி எஜுகேஷன்' என்று சொன்னால் எது என்று வரையறுத்து, அதிலே ஒரு பரீட்சை வைத்து, அல்லது 7-வது படிவத்தில் ஒரு சர்க்கார் பரீட்சை வைத்து மிகப் பெரிய அளவுக்கு 11-வது வகுப்பு வரையிலும் மாணவர்கள் செல்வதைத் தடுக்க வேண்டும். சாதாரணமாக மாவட்டங்களில் வேலை செய்யக்கூடிய ஆர்டிஸன் தொழிலாளிகளுக்கு இதர வேலைகளுக்கும் இந்தப் பரீட்சை போதும் என்று வைத்து விடவேண்டும். கீழ்மட்டத்திலுள்ள பல வேலைகளுக்கு இந்தக்கல்வி போதும். அதை ஒரு சர்க்கார் பரீட்சையாக வைப்பது அவசியம் என்று வலியுறுத்த விரும்புகிறேன்.

பள்ளிக்கூடங்களில் தரம், ஆசிரியர்கள் அதிருப்தி பற்றி சில விஷயங்களைச் சொல்ல அவாவுறுகின்றேன். சில பள்ளிக்கூட ஆசிரியர்கள் அந்தந்த இடத்திலேயே வசிப்பதில்லை. சமீபத்தில் சில பள்ளிக்கூடங்களைப் பார்ப்பதற்கு எனக்கு வாய்ப்பு கிடைத்தது. அப்படி ஒரு பள்ளிக்கூடத்தைப் பார்க்கக்கூடிய நேரத்தில் அங்கு இருக்கக்கூடிய ஒரு கரும்பலகையில் ஒரு பஸ் அட்டவணை எழுதப்பட்டிருந்தது. எந்தப் பகுதிக்கு எந்தப் பஸ் எப்பொழுது புறப்படுகிறது, வந்து சேருகிறது என்பதை மிக நன்றாக, அழகாக எழுதி வைத்திருந்தார்கள். காலையிலே 10, 11 மணிக்கு எந்த பஸ் வரும், மாலையிலே 2½ மணி, 3 மணி முதல் எந்த பஸ் போகும் என்றெல்லாம்

[Sri K. Sattanatha Karayalar] [22nd March 1961

எழுதப்பட்டிருந்தது. இது எதற்காக என்று நான் கேட்டேன். ஆசிரியர்
கள் வருவதற்கும், போவதற்கும் அவர்கள் பஸ் கிளம்பும் நேரத்தையும்,
வந்துசேரும் நேரத்தையும் பார்க்க வேண்டி யிருக்கிறது என்று சொன்
னார்கள். மணியைப் பார்த்துக் கொண்டே ஆசிரியர்கள் வேலை செய்
கிறார்கள். அந்தப் பள்ளிக்கூடத்தில் இருக்கக்கூடிய 10, 14 ஆசிரியர்
களில் எத்தனை பேர்கள் அந்த ஊரில் இருக்கிறார்கள் என்றால், ஒரே ஒரு
ஆசிரியர் தான் அந்த ஊரில் வசிக்கக்கூடியவர். இது போன்ற நிலைமை
மாறி எல்லா ஆசிரியர்களும் அந்த ஊரிலேயே தங்குவதற்கு உள்ள வசதி
செய்து கொடுக்க வேண்டும். எப்பொழுது ஊர் போய்ச்சேருவோம் என்ற
எண்ணத்திலேயே ஆசிரியர்கள் அங்கு வேலை செய்வதென்றால் அது
சரியாக இருக்காது.

பள்ளிக் கூடங்களிலே இருக்கக்கூடிய ஆசிரியர்கள் மத்தியிலே பலவித
மான அதிருப்தி இருக்கிறது. ஆனால் தரக்குறைவும் ஆசிரியர்கள் மத்தி
யிலே இருக்கிறது. இதையெல்லாம் நிவர்த்தி செய்வதற்கு பல 'ரிப்ரெ
ஷர் கோர்ஸ்' நடத்துவது மிகவும் அவசியம் என்று நான் சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன். பொதுவாக நான் ஆசிரியர்கள் மீது பழியாகச்
சொல்லவில்லை. ஆசிரியர்களில் மிகச் சிறந்த ஆசிரியர்களும் இருக்கிறார்கள்
என்பதற்கு எடுத்துக்காட்டு இல்லை என்று சொல்ல முடியாது. எங்கள்
ஊரில், செங்கோட்டையில் சில தினங்களுக்கு முன்பு ஒரு சம்பவம் நடந்தது.
ஒரு வீட்டிற்கு அருகாமையில் இருக்கக்கூடிய கிணற்றில் 2 வயது குழந்தை
தவழ்ந்து வந்து விழ எதுவாயிற்று. அந்தக் குழந்தையின் பாட்டி
குழந்தையைக் காப்பாற்ற ஓடிவந்தாள். அவளும் கிணற்றில் விழுந்து
விட்டாள். அண்டை வீட்டில் இருந்த ஒருவர் இவர்களைக் காப்பாற்ற
முயன்ற பொழுது அவரும் கிணற்றில் விழுந்து விட்டார். இப்படி மூன்று
பேர்கள் கிணற்றில் கிடக்க, பக்கத்தில் கூடி இருந்த ஒரு சிலர் என்ன
செய்வது என்று ஆலோசித்துக் கொண்டிருக்கிற நேரத்தில், சாதாரண
பிரைமரி ஸ்கூல் தலைமை ஆசிரியர் ஒருவர்—அவருக்கு சுமார் 50 வயது
இருக்கும், பல குழந்தைகளுக்கு தகப்பனாரானவர்—ஆலோசனை செய்யா
மல் வேகமாக கிணற்றில் இறங்கி பல கஷ்டங்களுக்குள்ளாகி அந்த
மூன்று பேர்களையும் காப்பாற்றினார். அம்மாதிரி தன்னலமற்ற சேவை
செய்யக்கூடிய ஆசிரியர்கள் பலர் இந்த நாட்டில் இருக்கிறார்கள் என்ப
தற்கு இந்த சம்பவம் எடுத்துக்காட்டாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்
காட்ட விரும்புகிறேன். இருந்தும், தரக்குறைவு ஆசிரியர்கள் மத்தியிலே
இருக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது. இப்படிப்பட்ட தனிப்பட்ட சிலர்
சிறந்த முறையிலே சேவை செய்யக்கூடியவர்களும் இருக்கிறார்கள்.
இம்மாதிரி சிறந்த சேவை செய்யும் நபர்களைப் பாராட்டும் வகையிலே
சர்க்கார் சில விருதுகள் வழங்குகிறார்கள். அது வரவேற்கக்கூடிய விஷ
யம். இம்மாதிரி சிறந்த சேவை செய்வதற்கு ஆசிரியர்களை ஊக்குவிப்ப
தற்கு அது ஹேதுவாக இருக்கிறது. அதே நேரத்தில் ஆசிரியர்கள் இடை
யிலே இருக்கக்கூடிய அதிருப்திகளை நீக்க வேண்டியது மிக அவசியம்.

கன்யாகுமரி மாவட்டத்திலுள்ள ஆசிரியர்களுடைய குறையைப்பற்றி
எனக்கு முன்பு பேசிய நண்பர் குறிப்பிட்டார். கன்யாகுமரி, செங்கோட்டை
மாவட்டத்தில் 100-க்கு 80 பள்ளிக்கூடங்கள், அதுவும் செங்கோட்டை
மாவட்டத்தில் 100-க்கு 100 சர்க்கார் பள்ளிககூடங்கள். அந்தப் பள்ளிக்
கூடங்களில் வேலை செய்யும் ஆசிரியர்களிடையே ஒரு பெரிய அதிருப்தி
இருக்கிறது. ராஜ்யப் புனரமைப்புக்குப் பிறகு இவர்கள் செகண்டரி
கிரேடு டீச்சர் என்று கருதப்படவில்லை. உதாரணமாக அங்கே, டி.எஸ்.
எல்.ஸி., ஈ.எஸ்.எல்.ஸி. சர்டிபிகேட் பெற்றவர்கள், ஓராண்டு காலம்
பயிற்சி பெற்றவர்கள் செகண்டரி கிரேடு ஆசிரியர்களாகக் கருதப்பட்டார்கள்.
இங்கு இருக்கக்கூடிய பழக்கம் என்ன வென்றால் செகண்டரி கிரேடு
ஆசிரியர்கள் இரண்டு வருஷ டிரெயினிங் 'அண்டர்கோ' செய்ய
வேண்டும். இரண்டு தரப்பினர்களுக்கும் கிட்டத்தட்ட ஒரே சில
பஸ் தான். **Teaching Method of English** இங்கிலீஷ் டீச்சிங்'
தான் கிடையாது. இப்பொழுது சமீபத்தில் பிறப்பித்த சர்க்கார்
உத்தரவுப்படி, அங்கு செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக இருந்
தவர்கள், ஒரு வருஷம் பயிற்சி பெற்றவர்கள் 10 ஆண்டு காலம்
சேவை செய்திருந்தால், அவர்கள் செகண்டரி கிரேடு டீசர்களாகக் கருதப்



22nd March 1961] (Sri K. Sattanatha Karayalar]

படுவார்கள். ராஜ்ய புனரமைப்புக்குப் பிறகு 1—11—1956-க்கு பிறகு
2, 3 ஆண்டுகளாக அங்கு டிரெயினிங் பள்ளிகள் நடந்துகொண்டிருக்
கின்றன. அப்படி ஓராண்டு காலம் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் அந்த
மாவட்டத்திலேயே வேலையில் இருக்கிறார்கள். புதியதாக இரண்டு ஆண்டு
காலம் பயிற்சி பெற்றவர்கள் அவர்களுக்கு மத்தியிலே வந்தால், புதிய
தாக வந்தவர்கள் சீனியர்களாக ஆகிவிடுகிறார்கள். ஏழு, எட்டு வருஷங்
களுக்குப் பிறகு தான் இந்த ஆசிரியர்களுக்கு அவர்களுடைய நிலைமை
வரும். ஆனால் இவர்களுக்குப் பிறகு வேலைக்கு வந்தவர்கள் ஸீனியராக
வந்துவிடுகிறார்கள்.

இதனால் இந்த ஆசிரியர்களுக்கு நீண்ட நாட்களாக அதிருப்தி ஏற்பட
சந்தர்ப்பம் இருக்கிறது. அதைப் போக்க வழிவகை செய்ய வேண்டு
மென்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஒரு பர்லாங் தூரத்திற்கு அப்பால்
கேரளத்தில்இருக்கும் ஆசிரியர்களுக்கும் இவர்களுக்கும் சம்பள வித்தியாசம்
இருப்பது மேலும் மனக் குறையை வளர்க்கிறது. இன்றைக்கு நம் ராஜ்யத்
திலே கொடுத்திருக்கும் சம்பள விகிதம் ரூபாய் 90—140 என்று இருக்
கிறது. அதே நேரத்தில் கேரளதில் 35—3—80 என்பதிலிருந்து இன்றைக்கு
40—120 என்று ஆகி அதோடு ரூபாய் 45 டி.ஏ. ஆகவும்
பெறுகிறார்கள் இதை யெல்லாம் மனதில் கொண்டு குறை
யில்லாமல் செய்யவேண்டும். ராஜ்ய புனரமைப்புக்குப் பிறகும்
ஒரு ஆண்டு ட்ரெயினிங் பள்ளி நடந்து வந்தது அந்த ஆசிரியர்
அத்தனைபேரும் "செகண்டரியாக அங்கீகரிக்கப்பட வேண்டும் இல்லையானால்
இவர்கள் மத்தியில் ஒரு தீராத மனக்கசப்பு இருந்து கொண்டேயிருக்கும்.
நான் குறிப்பிட்ட துணிகர வேலையைச் செய்த ஆசிரியர்கூட இம்மாதிரி தமிழ்
ஹையர் படித்து ஆசிரியராக இருப்பவர் என்று தான் தோன்றுகிறது.
ஆசிரியர்களுக்கு இன்றைக்கு தன்னம்பிக்கை ஏற்படக் கூடிய வகையில்
இதைச் செய்ய வேண்டும்.

அடுத்ததாக ப்ரைமரி பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியர்களுக்கு எந்த
விதமான அலவன்ஸும் கிடையாது. குறைந்தது தலைமை ஆசிரியர்க
ளுக்கு ரூபாய் 10 ஆவது கொடுக்க வேண்டும். கண்டின்ஜென்ஸி செல
விற்காக மாதம் ஒரு ரூபாய் வழங்கப்படுகிறது. அது எப்படிப் போதும்?
அது மிகமிகக் குறைவு. ஒரு சாக்பெட்டி வாங்க வேண்டுமானாலும் பத்து
அணா ஆகிறது. இவைகளை யெல்லாம்கூட சர்க்கார் ஸ்டேஷனரி டிபார்ட்
மெண்ட் மூலம் சப்ளை செய்து அவர்களுக்கு உதவி செய்யலாம்.

இந்தக் கல்வி மானியத்தில் பல கோடி ரூபாய்களைச் செலவழிக்கிறோம்.
அதற்குத் தகுந்த பலனை அடைய நாம் நடவடிக்கைகள் எடுக்கவில்லை
என்பதை வருத்தத்தோடு சொல்லிக் கொள்ளுகிறேன்.

**Sri V. S. MANIKKASUNDARAM** : மிஸ்டர் டெபுடி ஸ்பீக்கர், இன்று
கொண்டு வந்திருக்கும் கல்வித் துறை மானியத்தை ஆதரிக்கும் நேரத்
தில், தமிழ் நாட்டிலே கல்வித்துறையில் அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது
என்பதையும், அதற்கான நல்லதொரு திட்டத்தை அமுலாக்கி வருகிறார்
கள் என்பதைப் பற்றியும், வெளிநாட்டிலிருந்து வருகிறவர்களும் பாராட்டு
வது ஒருபுறம் இருக்க, பெருவாரியான ஏழை எளிய மக்கள் எல்லோரும்
இதற்கு ஆதரவு தருகிறார்கள் என்பதைக் காண நாம் பெருமை அடைய
இடம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். 11-வது
வகுப்பு வரை இலவசக் கல்வி கொடுக்க ஏற்பாடு செய்திருப்பதையும் நன்றி
யோடு பாராட்டுகிறேன். நல்ல முறையிலே கல்வி பெருக, கல்வி சீர்
திருத்த மாநாடுகள் மாவட்டங்கள் தோறும் போட்டு, இலவச உணவும்
உடையும் அளித்து ஏழை எளியவர்கள் குழந்தைகளுக்குக் கல்வி வசதிகள்
கொடுப்பதை மனமாரப் பாராட்டுகிறேன். இதிலே கல்வி அமைச்சரவர்
களும், கல்வி இலாகா இயக்குனரும் பாடுபடுவது பற்றி சிறப்பாக அவர்
களைப் பாராட்டுகிறேன். ஏழை எளிய மக்கள் கல்வியின் அவசியத்தை
உணராமல் குழந்தைகளைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பாமல் இல்லை.
ஆனால், பெருவாரியாக அவர்களுடைய பொருளாதார நிலை குழந்தைகளைத்
தொடர்ந்து பள்ளிகளில் விட்டுவைக்க முடிவதில்லை. ஆகவே, இந்தக்
குறைகளை அறிந்து அரசாங்கம் அவர்களுக்கெல்லாம் உணவும் உடையும்.
தந்து வசதிகள் செய்து கொடுப்பது எல்லோரும் பாராட்டக் கூடியதாக
இருக்கிறது.

[Sri V. S. Manikkasundaram] [22nd March 1961

(Sri K. Sattanatha Karaiyalar in the Chair.)

இந்தக் கல்வி சீர்திருத்த மாநாடு பற்றி ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு அமைக்கப்பட்டிருக்கும் பஞ்சாயத்துக்களிலும் பஞ்சாயத்து யூனியன்களிலும் இந்தத் துறையில் மிக அதிகமாக எதிர் பார்க்க இடம் இல்லை. இதிலே கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஆங்கில போதனு மொழி இயக்கம் பற்றி ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். எந்த வகுப்பிலிருந்து என்பது ஒரு கேள்வி. ஐந்தாவது வகுப்பிலிருந்து என்று தெரிவிக்கிறார்கள். என்னைப்பொறுத்த வரை, சிறிய குழந்தைகளாக இருக்கும் போதே, 3-வது, 4-வது வகுப்பிலேயே ஆரம்பித்தால் ஒரு கஷ்டமும் ஏற்பட்டுவிடாது. ஐந்தாவது வகுப்பு என்பதற்கு என்ன விசேஷ காரணம்? இன்றைக்கு நாம் ஐந்தாவது வகுப்பிலிருந்து என்று சொன்னாலும், பெற்றோர்கள் பலர் தங்கள் குழந்தைகளுக்கு 5, 6 வயதிலிருந்தே தனியாக உபாத்தியாயர்களை வைத்துச் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்து விடுகிறார்கள். அதை யாரும் மறுக்க முடியாது. நாட்டில் நிலவரம் அப்படியிருக்கும்போது, இலவசமாக ஏழை எளியவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பது மட்டும் ஏன் ஐந்தாவது வகுப்பிலிருந்து என்று சொல்ல வேண்டும். இதைக் கொஞ்சம் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். நாட்டிலே ஏழை எளியவர்களுக்கும் மற்றவர்களுக்கும் சம சந்தர்ப்பம் கொடுக்க வழி காணவேண்டும்.

போதனுமொழி சம்பந்தப்பட்டவரை, கோயம்புத்தூரில் ஒரு கல்லூரியில் மட்டும் ஹ்யூமானிடிஸ் என்ற பகுதிக்கு மட்டும் தமிழ் போதனு மொழியாக இருப்பது இன்னும் எல்லா கல்லூரிகளுக்கும் விஸ்தரிக்கப்படவேண்டும். ஸ்கூல் பாடங்கள் அவ்வளவும் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு துரிதமாக தமிழ் மொழியில் போதிக்கப்பட வேண்டும். ஆங்கிலத்தின் தரம் உயர வேண்டும் என்று சொல்வதில் ஆட்சேபணையில்லை. ஆனால், அதன் தரம் குறைவதற்கு இம்மாதிரி தமிழ் போதனு மொழியாக இருப்பது என்று ஒரு சாரார் கருதுகிறார்கள். அப்படியானால், அந்த முறையில் ஆங்கிலத்தை அதன் தரத்தை உயர்த்த வேண்டும் என்று எடுக்கும் நடவடிக்கைகள் தமிழைப் பாதிக்காத முறையில் அமைய வேண்டும் என்பதைச் சிந்திக்க வேண்டும். ஆனால், ஒரு மொழி படிப்பதால் இன்னொரு மொழி பாதிக்கப்படும் என்ற வாதத்தை ஒத்துக் கொள்வதற்கில்லை. ஆகவே, தரக் குறைவு என்றால் அதற்கு வேறு ஏதோ காரணம் இருக்க வேண்டும். அது தமிழில் போதிப்பதால் என்பதை ஒத்துக் கொள்வதானால், அது தமிழுக்கு பாதகம் ஏற்படுத்தும் வாய்ப்பு உள்ளதாக இருப்பதால், அந்த நிலை ஏற்றுக் கொள்ள முடியாதது. இன்றைக்கு எனக்குத் தெரிந்த வரையில், எஸ்.எஸ்.எல்.ஸி. வரை படித்த மாணவர்களிடையே, எஸ்.எஸ்.எல்.ஸி வரை தமிழில் படித்ததால் மேலே ஆங்கிலம் இருக்கக்கூடாது என்ற ஆட்சேபணை அவர்களிடம் இல்லை. அதனால் அவர்களுக்கு ஏதோ பெரிய கெடுதல் வந்ததாகவும் சொல்லவில்லை.

நான படிக்கிற காலத்தில் எட்டாவது வகுப்பு வந்ததும் ஆங்கிலத்தில் பாடம் கற்பிக்க ஆரம்பித்தார்கள். அப்பொழுது ஒரு மாணவன் வேறு ஒரு மொழியில் நாம் படிக்க வேண்டியிருக்கிறதே என்ற உணர்ச்சி இல்லாமலேயே படித்து வந்தான். இப்பொழுது மாணவர்களுக்கு ஏற்படாத ஒரு எண்ணத்தை, மற்றவர்கள் ஏற்படுத்திக் கொடுக்க ஏதுவாகும் என்று இதைச் சொல்பவர்கள் கவனித்து எண்ணிப் பார்க்க வேண்டும். மேல் படிப்பிற்குப் போகிறவர்களுக்கு எந்த மொழியில் பாடம் கற்றுக் கொடுக்கப்படுகிறதோ அந்த மொழியை மட்டும் ஏற்கெனவே கற்றுக் கொடுத்திருந்தால் போதும் என்பதை இன்னும் சில உதாரணங்களால் சொல்ல முடியும். என்ஜினியர்கள், டாக்டர்கள் போன்றவர்களை மேல் படிப்பிற்காக அனுப்புகிறோம். எனக்குத் தெரிந்த ஒரு மெக்கானிக்கல் என்ஜினியர் போஸ்ட் கிராஜுவேட் கோர்ஸுக்கு ஜெர்மனுக்குப் போனார்கள். அவர் திரும்ப வந்ததும் நான் அவரைக் கேட்டேன், எந்த மொழியில் நீங்கள் அங்கு பாடங்கள் கற்றீர்கள் என்று. அவர்கள் சொன்னார்கள், ஜெர்மன் பாஷையைக் கற்றுக்கொண்டு ஜெர்மன் பாஷையிலேயே பயிற்சியை பெற்றதாகத் தெரிவித்தார்கள். ரஷ்யாவிற்கு ஒரு என்ஜினியரிங் க்ராஜுவேட் போய்ப் பயின்றதும் எனக்குத் தெரியும். அங்கு ரஷ்ய பாஷையில்தான் போதனுமுறை அமைந்திருப்பதாகச் சொன்னார்கள். அங்கு போய் ஒரு குறுகிய காலத்தில் அந்த பாஷையைக் கற்றுக்கொண்டு பின்னர் அங்கு பாடம் கற்க வேண்டியிருந்தது என்றும் கூறினார். அதனால் அவர்களுக்கு எந்தவிதமான சங்கடமும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. ஆகவே, இங்கு போதனுமொழி தமிழாகத் தான் இருக்க வேண்டுமென்பதில் ஒரு வித ஆட்சேபணையும் இருக்க முடியாது. பின், சம்பள சலுகை விஷயம் பற்றி அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது, ஏழை மாணவர்களுக்கு 11-வது வகுப்பு வரை இலவசக் கல்வி அளிக்கப்படுமென்று. ஏழை மாணவர்கள் யார் என்பது பற்றி தயவு செய்து திட்டவட்டமாகத் தெரியப்படுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுவரை 1,200 ரூபாய் வருட வருமானத்திற்கு உள்பட்டவர்கள் ஏழை மாணவர்கள் என்று சொல்லிவிட்டு, இனிமேல் ஏழை மாணவர்கள் என்று பொதுவாக சொல்லியிருப்பதும் அவ்வளவு பொருந்தாது. பொதுவாகக் கூறிவிட்டால், யாருக்கு இந்த சலுகை கிடைக்கும் என்ற கவலையைக் கொடுக்கும் நிலை ஏற்படுகிறது. (மணியடிக்கப்பட்டது) தமிழில் பாடம் படிக்கக் கூடியவர்களுக்கு, 3,000-க்குள்ளாக வருமானம் இருப்பவர்களுக்கு ஸ்டைபண்ட் கொடுப்பதாகக் காட்டியிருப்பது போல் இதிலும் குறைந்த பட்சம் 3,000 ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்கும் இலவசக் கல்வி கொடுக்க வேண்டும். பின்னர், தொழில் கல்வி பற்றி ஒரு வார்த்தை. தொழில் கல்விக்கு போனவுடன் ஜாதி அடிப்படை புறப்பட்டு விடுகிறது. பாக்வேர்ட் க்ளாஸைச் சார்ந்தவர்களுக்கு அது நல்ல பலனைக் கொடுக்கிறது. ஏழை மாணவர்கள் என்று நிரூபிக்கக் கூடியவர்களுக்கு, அவர்கள் பார்வேர்ட் கம்யூனிட்டியைச் சார்ந்தவர்களாகயிருந்தாலும் ஏன் அவர்களுக்கும் இந்த சலுகை கொடுக்கக்கூடாது? அவர்கள் பார்வேர்ட் கம்யூனிட்டியைச் சேர்ந்தவர்கள் என்பதினால் மட்டும் அவர்கள் பொருளாதாரத் துறையில், மெட்டீரியல் ஸைடில் முன்னேற்றம் பெற்று விட முடியாது. (பெல்) ஒரே ஒரு வார்த்தை. சமீப காலத்தில் "போஸ்டல் ட்யூஷன்", "ஈவினிங் க்ளாஸஸ்" நடத்துவது இவைபற்றி பெரிய சர்ச்சை நடந்து கொண்டிருக்கிறது. பிற மாநிலங்களில் இருப்பது போன்று இங்கும் "ஈவினிங் கிளாஸை" ஏன் வைக்கக் கூடாது? போஸ்ட் க்ராஜுவேட் கோர்ஸுக்கு ஈவினிங் கிளாஸ் வைப்பது வேலையில் இருப்பவர்களுக்கு நல்லபடி படித்து முன்னேற சந்தர்ப்பம் கிடைக்க உதவும். ஆகவே, "ஈவினிங் க்ளாஸஸ்" வைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.



22nd March 1961] [Sri V. S. Manikkasundaram]

* **Sri W. P. A. R. CHANDRASEKARAN** : தலைவர் அவர்களே, நமது கல்வியமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் மான்யக் கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் கூற முற்படுகிறேன். கடந்த பத்து ஆண்டுகளில் 16,000 ஆரம்பப் பாடசாலைகள் இருந்தன இன்று 25,700 ஆக அதிகரிக்கப்பட்டிருக்கிறது. ஆறுவது முதல் 11-வது வயது வரை பள்ளிக்குச் செல்பவர்களின் எண்ணிக்கை 45 சத விகிதத்திலிருந்து 75 சத விகிதமாக அதிகரிக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது வரவேற்கத் தக்கது. ஜூன் மாதம் முதல் 11-வகுப்பு வரையில் மாதம் 1,200 ரூபாய்க்குள் வருமானம் உள்ளவர்களுக்கு இலவசப் படிப்பு கொடுக்கப்போவதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதுவும் வரவேற்கத் தக்கது. சில அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள், 1,200 என்றிருப்பதை 3,600 வரை உயர்த்தலாம் என்று. நான் சொல்வது, 11-வது வகுப்பு வரையில் வருமான கட்டுப்பாடில்லாது எல்லோருக்கும் இலவசக் கல்வி கொடுத்தால் மிகவும் உதவியாயிருக்கும். 1, 2, 3 பாரங்கள் வரை 1,200 ரூபாய் வருமானம் உள்ளவர்களைக் கணக்கெடுத்துப் பார்த்தால் அந்த எண்ணிக்கை கிட்டத்தட்ட 89% வருகிறது. மீதி இருப்பவர்கள் 11% தான். 4, 5, 6 பாரங்களை எடுத்துக்கொண்டால் இருப்பது 27% தான். இந்தத் திட்டத்தைப் புகுத்தினால் அந்த பெர்ஸென்டேஜும் குறையும். இப்போது இதற்காக 56 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள்

[Sri W. P. A. R. Chandrasekaran] [22nd March 1961

தெரிவித்திருக்கிறார்கள். இந்த 89% கணக்கை வைத்துப் பார்த்தால், இன்னும் 10 அல்லது 20 லட்சம் ரூபாய் போட்டால் 11-வது வகுப்பு வரை எல்லோருக்குமே வருமானக் கட்டுப்பாடில்லாத முறையில் இலவசக் கல்விச் சலுகை கொடுத்துவிட முடியும். தற்சமயம் பாவர்ட்டி சர்டிபிக்கேட் வாங்க வேண்டுமென்று இருக்கிறது. உத்தியோகஸ்தர்களிடம் போய் வாங்கவேண்டுமென்றால் அவர்களுக்கு மாமூல் அல்லது பொது ஜனங்களில் யாராவது இந்த வேலை பார்த்தால் அவர்களுக்குத் தாகு கொடுத்துத்தான் சர்டிபிகேட் பெறுகிறார்கள். சராசரி ஒரு சர்டிபிகேட்டுக்கு 10 ரூபாய் என்று வைத்துக் கொள்ளலாம். அப்படி வரும்போது ஒரு தாசில்தார் கிட்டத்தட்ட 2,000 கையெழுத்து போடுகிறார்கள். ஆக, 2,000 கையெழுத்திற்கு 20,000 ரூபாய் வருகிறது. எல்லோருக்கும் இந்த இலவசக் கல்விச் சலுகையைக் கொடுத்தால் இந்த அனாவசியச் செலவு மக்களுக்கு ஏற்படாது. ஆக, 11-வது வகுப்பு வரை எல்லாருக்கும் இந்த சலுகையைக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 11-வது வகுப்பை இப்பொழுது புகுத்துவதில் கிட்டத்தட்ட 25 வருடங்களில் பூர்த்தியாகும் என்று கூறப்படுகிறது. 25 வருடத்தில் பழையபடி 10-வது வகுப்பு வரையுள்ள பள்ளிகள் மேலும் திறக்கும் போது இன்னும் அதிகப்படி காலமாகி விடுமோ என்று ஐயப்படவேண்டியிருக்கிறது. ஆகவே இதற்குத் தனி முக்கியத்துவம் கொடுத்து பத்து ஆண்டுகளுக்குள்ளாகவே இதைச் செய்து முடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு ஆவன செய்ய வேண்டும். பின்னர், 11-வது வகுப்பு புகுத்தப்படும் நேரத்தில் 10-வது வகுப்பு வரை உள்ள பரீட்சைகளுக்கு ஆங்காங்கு ஜில்லா அளவில் கல்வி உத்தியோகஸ்தர், ஹெட்மாஸ்ட்டேர்ஸ் போன்றவர்களைக் கொண்ட ஒரு போர்ட் அமைத்து அவர்கள் சர்டிபிகேட் கொடுக்கலாம் என்று வைத்தால் அது "டிசென்ட்ரலைஸ்" செய்வதற்கு உகந்ததாக அமையும். 11-வது வகுப்பு பரீட்சையை சர்க்காரே நடத்தி சர்க்காரே சர்டிபிகேட் கொடுக்கலாம். ஆகவே, இதையும் கவனிக்கவேண்டும். கல்விச் சீரமைப்பு மகாநாடு பற்றி இங்கு பேசப்பட்டது. நிலக்கோட்டையில் ஒரு மகாநாடு நடைபெறும்போது டயரக்டர் வந்து தலைமை வகித்தார்கள். அப்பொழுது டெல்லியிலிருந்து அங்கு வந்திருந்த ஸ்ரீ ஸின்ஹா என்பவர் சொன்னார், இது உண்மையில் நடைபெறுகிறதா, எப்படி நடைபெறுகிறது என்று பார்த்து டெல்லி ராஜ்யத்தில் இதை நடைமுறையில் கொண்டு வருவதற்
11-30 a.m. காக என்னை அனுப்பியிருக்கிறார்கள், இதைப் பார்த்து வருவதற்காக என்று கூறினார்கள். ஆகவே தெற்கிலிருந்து வடக்கிற்கு திட்டங்கள் போய் நாம் செய்வதை அவர்களும் பின்பற்றுகிறார்கள் என்பதைக் குறிப்பிடுவதற்காகத்தான் இதை நான் இங்கு சொல்கிறேன்.

இந்த மாதிரியாக கல்வி சீரமைப்பு மகாநாடுகள் நல்ல முறையில் நடைபெறுவதும், மதிய உணவுத் திட்டம் மிகவும் சீரிய முறையில் நடைபெறுவதும் மிகவும் மகிழ்ச்சிக்குரிய விஷயம். இதில் ஏதோ ஒரு சில குறைபாடுகள் இருக்கின்றன என்பதற்காக இதை அடியோடு அகற்றிவிட முடியாது. அவ்விதம் ஏதாவது குறைகள் இருந்தால் அவற்றை நல்ல முறையில் நீக்கிவிட்டு இதை நடத்த வேண்டும். இவ்விதம் மதிய உணவுத் திட்டம் இருப்பதால், ஆசிரியர்களுடையவும் மாணவர்களுடையவும் கவனம் படிப்பிலிருந்து போய்விடுகிறது என்று கூறப்படுகிறது. அந்தமாதிரியாக இதற்கென்று நேரம் போய்விட்டாலும் பரவாயில்லை. இந்தக் காரியத்தை விடாமல் தொடர்ந்து நடத்திக்கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மதுரை ஜில்லாவில் இதுவரை ஒரு விவசாயக் கல்லூரியும் கிடையாது. இது இந்த கல்வி மான்யத்தின்கீழ் வருகின்றதா இல்லையா என்று எனக்குத் தெரியாது. எப்படியிருந்தாலும் அங்கு ஒரு விவசாயக் கல்லூரியை ஏற்படுத்த வேண்டும். அதோடு மதுரையிலுள்ள காலேஜ்களை எல்லாம் சேர்த்து மதுரையில் ஒரு சர்வகலாசாலையை ஏற்படுத்தவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். அதோடு நிலக்கோட்டையில் ஒரு டிரெயினிங் ஸ்கூலும், சோழவந்தானில் ஒரு பெண் பள்ளிக்கூடமும் (கேர்ள்ஸ் ஸ்கூல்) ஏற்படுத்தவேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்



22nd March 1961]

* SRI K. S. G. HAJA SHERIFF (TEMPORARY CHAIRMAN): Sir, I rise to speak in support of the Demand moved moved by the Hon. Minister for Education. Sir, irresby the Hon. Minister for Education. Sir, irrespective of any party consideration, if only a person very dispassionately sees the work done by this Department and the plan that they have formulated for improving education in our State, he shall have to speak in support of not only the Demand but he should also compliment the Government for achieving so much. It was a matter for very great satisfaction when the Hon. Minister announced that free education would be given to children, irrespective of caste or creed, upto Standard XI. In this connection, I would also suggest that compulsory education also should be given to all children upto School Final, as otherwise, I am afraid, we will be making a thing wherein we will not give these children minimum education and eradicate illiteracy. Sir, I would plead for opening of more technical courses, particularly commercial courses. We have programmed to forge ahead industrially and with the growth and development of industries, unless we give immense opportunities to train children in various aspects, it will be difficult to open more and more types of industries because there will come a time when there will not be suitable personnel to man industries. Similar is the case with commercial courses also. All these industries require people with good knowledge to administer. Unless there is good administration, industries cannot successfully run and to that extent we require more commercial courses to be opened, wherein there will be opportunities to get trained commercially.

Sir, one important thing that I would like to urge is that free educational concession, I understand, is limited to persons earning about Rs. 100 and this limit requires to be enhanced to at least Rs. 150 for this reason. A worker whether he is employed in a workshop or in a factory or even otherwise, is earning not less than Rs. 4 or 5 and if he is to educate a couple of children, it will be very difficult for him to educate them unless this limit is enhanced to Rs. 150. It may be possible that the Government have to incur more expenditure but it will be worthwhile incurring more expenditure in this direction.

Sir, I would like to suggest certain more facilities for teaching staff. As the Government are anxious that labour should be given more housing facilities wherever they are working, the teaching staff should be given free residential quarters. I know that we have done a great deal to the teaching staff but this particular thing would go a very long way in satisfying them and also in giving them quite good compensation for their livelihood.

Sir, in general we have been doing very well in this respect. I hope that with the plan that the Government have formulated our State would become one of the foremost States in removing illiteracy. In 1951 the percentage of literacy in our State was 20·2 and in 1960–61 it is 30.2. From this we can find out the amount of headway that we have made and for all these things, we have to

[Sri K. S. G. Haja Sheriff] [22nd March 1961

congratulate the Government. We should also encourage them so that they can do much more good work in this important direction. Thank you, Sir.

SRIMATHI SATHIYAVANIMUTHU: சட்டமன்ற தற்காலிகத் தலைவர் அவர்களே, இந்த மான்யத்தின் மீது கொடுத்திருக்கக் கூடிய வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்தக் கல்வி மான்யத்தின் மீது அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய அறிக்கையில் பெண்களுக்குரிய பல் தொழில் பயிற்சி நிலையங்கள் மூன்று துவக்க இருக்கிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். இவ்விதம் பாராட்டுவதின் மூலமாகக் குறைகளை எடுத்துச்சொல்லக்கூடாதா என்றால், இதில் நிச்சயமாக சில குறைகளை சொல்லித்தான் ஆக வேண்டும் என்கின்ற நிலைமை வந்து சேருகின்றது. ஜாதி சமய வேறுபாடின்றி எல்லோருக்கும் சலுகை கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் சில திட்டங்களை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிறார்கள். ஜாதி, சமய அடிப்படையில் வித்தியாசங்கள் இருக்கின்ற வரையிலும் அவர்களுக்குச் சலுகை காட்ட வேண்டும் என்பது ஊரறிந்த உண்மையாகும். இதுவரை இந்த அடிப்படையிலே கல்விக்கு அளிக்கப்பட்டுவந்த சலுகை இனிமேல் பொருளாதார அடிப்படையில் கொடுக்கப்படும் என்றும், இவ்விதம் 11-வது வகுப்பு வரையிலும் பொருளாதார அடிப்படையில் சலுகைகள் கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதுவரை சாதி, சமய அடிப்படையில் சலுகைகள் கொடுக்கப்பட்டு வந்த போதிலும் கூட ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,200-க்கு மேல் ஊதியம் பெறுகின்றவர்களுக்கு இந்தவிதமான சலுகை இல்லாமல் இருந்தது. இப்போது சாதி, சமய வேறுபாடுகளை ஒழிக்க விரும்புகிறோம் என்று சொல்லுகின்ற நேரத்தில் சமுதாயத்தில் இருந்துவருகின்ற மேடுபள்ளங்களை எல்லாம் ஒரே நிலையில் கொண்டு வரவேண்டும் என்று விரும்புகின்ற நேரத்தில், சமுதாயத்தில் பொருளாதார அடிப்படையில் இல்லாமல் கொடுக்கப்பட்டுவந்த சில சலுகைகள், உத்தியோக உயர்வு, போன்ற பல சலுகைகள் பாதிக்கப்படக்கூடாது என்றுதான் எங்களைப்போன்றவர்கள் கருதுகின்றார்கள். சாதி, சமய அடிப்படையைவிட்டு, தகுதி, திறமை போன்றவைகளை மட்டும் கருத்தில் எடுத்துக்கொண்டு, உத்தியோகங்கள் போன்றவைகள் கொடுக்கப்படுமானால், இப்போதுள்ள சூழ்நிலையில் சமுதாயத்தில் கீழ்நிலையில் இருக்கின்ற மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்றுதான் என்போன்றவர்கள் அஞ்சுகின்றோம். இதைப்பற்றி "பட்ஜெட்" விவாதத்தில்கூட நான் குறிப்பிட்டிருக்கிறேன். அதைத்தான் இப்போதும் உங்கள் மூலமாக கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம். இதற்கான விளக்கத்தை அமைச்சர் அவர்கள் இதே மன்றத்தில் தரவேண்டும். சமுதாயத்தில் இன்றைக்கு தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கிடைத்துவந்த சலுகைகள், உத்தியோக உயர்வுகள் போன்றவைகளுக்கு எந்த விதமான குந்தகமும் ஏற்படாது என்பதை உறுதிமொழியாகத் தரவேண்டும். தகுதி, திறமை இவைகளைக்கொண்டு சலுகைகள் கொடுக்கப்படும் போது, பின்தங்கிய மக்கள் எந்தவிதத்திலும பழிவாங்கப்படமாட்டார்கள் என்கின்ற உறுதியை அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் தரவேண்டும் என்று மிகவும் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மதிய உணவு, இலவச உடை இவைகள் மாணவர்களுக்குத் தருகிறோம் என்கிற திட்டத்தை இந்த மன்றத்திலேயே நாம் பல முறை பேசியிருக்கிறோம். மதிய உணவு, இலவச உடை இவைகள் தருகிறோம் என்று ஆசை காட்டக்கூடிய அதே நேரத்தில் இதற்கான நிதியை வசூல் செய்வதற்காக மாணவர்கள் அனுப்பப்படுகிறார்கள். ஆசிரியர்கள் இதற்காக எந்த அளவு பயன்படுத்தப்படுகிறார்கள் என்பதைப்பற்றி இந்த மன்றத்தில் பல முறை எடுத்துக்கூறப்பட்டிருக்கின்றன. குழந்தைகள் பள்ளிக்கு வரவேண்டும் என்கிற நோக்கத்தில் அவர்களுக்கு இந்த விதமான ஆசையைக்காட்டி நாம் அழைக்கின்றோம். குறிப்பாக, "பெண் குழந்தைகளுக்கு இலவசமாக ஆடைகள் தருகிறோம்" என்று அழைக்கின்ற நேரத்தில் இதற்கான பணத்தை வாங்கி வரும்படி மாணவர்களிடத்தில் ஆசிரியர்கள் கூறுகிறார்கள். அந்தக் குழந்தை வீட்டுக்குப்போய், தாய், அல்லது



22nd March 1961] [Srimathi Sathiyavanimuthu]

தந்தை இடத்தில் "ஒரு அணா, இரண்டு அணா தாருங்கள்" என்று கேட்கிறது. இல்லாவிட்டால் "அரிசியாவது கொடு" என்று கேட்கிறது. கையில் பணம் இல்லாத அந்தத் தாயோ அல்லது தந்தையோ திடீரென்று வருகின்ற ஆத்திரத்தில் அந்தக் குழந்தையை வீட்டில் போட்டு அடிக்கிறார்கள்

(Deputy Speaker in the Chair.)

பள்ளியிலே ஆசிரியர் அடிக்கிறார்—வீட்டிலே பெற்றோர் அடிக்கிறார்கள். நாமோ குழந்தைகளுக்கு "உணவு தருகிறோம், உடை தருகிறோம்" என்று ஆசை காட்டி வரவழைத்துவிட்டு இந்த மாதிரி செய்வது சரியல்ல. எனவே, இதனை வரிப்பணத்திலிருந்து தரவேண்டும். நிதி வசூல் செய்வதில் அதிகாரிகள் தான் வசூல் செய்யவேண்டும். ஆசிரியர்கள் நிர்ப்பந்தப் படுத்தப்படுவதால், மாணவர்கள் நிர்ப்பந்தப்படுத்தப்படுவதால் இதனால் பொது மக்களிடத்தில் வெறுப்பு ஏற்படுகிறது. கேலியாகச் சொல்லும்போது, வரியை வாங்குகிற சர்க்கார், நமக்கெல்லாம் இப்படி கல்வி தருகிறோம் என்று சொல்லி, பெற்றோர்களைப் பணம் கேட்கிறது, "கௌரிக்குக் கல்யாணமாம், அவரவர் வீட்டில் வைபோகமாம்" என்று சொல்வது போல இருக்கிறது—என்று மக்கள் வேதனை அடைகிறார்கள். இன்னும் வேதனைக்குரிய ஒரு செய்தியை இங்கே சொல்ல ஆளாக்கப்பட்டேன் என்று வருந்துகின்றேன். பள்ளிகளில் கல்வி அதிகாரியின் மறைந்த ஒரே ஒரு மகனின் திருவுருவப் படத்தைத் திறந்து வைக்கும்படி வற்புறுத்தப்படுகிறார்கள் என்று வேதனையோடு தெரிவித்துக்கொள்கிறேன். பெற்ற மனம் எப்படி வேதனைப்படும் என்பது எனக்குத் தெரியும். இருந்த ஒரே பிள்ளை இறந்துவிட்டால் பெற்ற உள்ளம் வேதனைப்படும்—அப்படி வேதனை தரத்தக்க ஒரு சம்பவத்தைப் பற்றி சொல்ல நேரிட்டதைக் குறித்து வருத்தப்படுகிறேன். இதனால் பரவலாக எண்ணங்கள் ஆசிரியர்கள் மத்தியிலும், பொது மக்கள் மத்தியிலும் பரவுகிறது. "அதிகாரிகளின் நல்லெண்ணத்தைப் பெறவேண்டுமானால், அவரது மகனின் படத்தைத் திறந்து வைத்தால் சரியாகிவிடும்" என்ற எண்ணம் ஏற்படுகிறது. படத்தைத் திறந்து வைப்பதில் அமைச்சர்கள் கலந்துகொள்ளுகிறார்கள். இதனால் தவறான எண்ணம் வரும்போது மக்கள் வேதனைப்படுகிறார்கள், அதைப்பற்றிச் சொல்வதற்கு நான் மிகவும் வருத்தம் அடைகிறேன். மிகவும் கவலைகொள்கிறேன். மேலும் அதிகாரிகள் பல இடங்களில் பள்ளிச் சீரமைப்புத் திட்டம் மூலமாக கல்விக்குத் தேவையான பொருள்களை வசூல் செய்கிறார்கள். அதிகாரிகளும், மற்றவர்களும், பொது மக்களிடத்தில் கல்விக்காக நிதி என்று சொல்லி வசூல் செய்து, அமைச்சரது கையில் நிதி தருகிறோம் என்று தருகிறார்கள்—தருகிறவர்கள் கை உயருகிறது, அமைச்சரது கை தாழ்கிறது. கொடுக்கும்போதும் வாங்கும்போதும் கொடுக்கும் நேரத்திற்கு அடுத்தபடி நான் கேட்பதைத் தரவேண்டும், அப்போது உங்கள் கை உயர வேண்டும், எங்கள் கை தாழவேண்டும் என்ற எண்ணத்தோடு கொடுப்பதாக எங்களைப்போன்றவர்கள் கருதுகிறோம். அப்பேற்பட்ட நிதி வசூல் செய்யாது, வேறு முறையில், கலா நிகழ்ச்சி மூலமாக வசூல் செய்தால் உண்மையில் பாராட்டத் தகுந்ததாக ஆகும், ஒருவரும் குறை சொல்லவும் முடியாது.

ஆதாரக் கல்வி குறித்துச் சொல்லும்போது, "ஆரம்பப் பள்ளிகளில் இது கூடாது", என்று சொல்ல விரும்புகிறேன். ஆரம்பப் பள்ளிகளில் படிக்கும் பச்சைப் பாலகன் என்று சொல்லுகிற சிறிய குழந்தைகளுக்கு ஆதாரக் கல்வி என்ற பெயரால் நூல் நூற்க தக்ளி தரப்படுகிறது. ஒரு குழந்தை—மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த குழந்தை என்று நினைக்கிறேன்—7 வயது குழந்தை—பகல் நேரத்தில், ஆசிரியர் அதன் கையில் தக்ளியைக் கொடுத்து நூற்கச் சொல்லி விட்டுச் சென்று விட்டார். அக்குழந்தைக்கு உரக்கம் வந்திருக்கிறது, உரங்கிக்கொண்டே நூல் நூற்றுக்கொண்டிருந்தது, உரக்கத்தினால் மயக்கமுற்று "தக்ளி"யின்மேல் விழுந்து சற்று கண்ணுக்கு அப்பாற்பட்ட இடத்தில் பொத்துக்கொண்டு காயப்பட்டது. கொஞ்சம் தவறியிருந்தால் கண்ணையே குத்தியிருக்கும். 7 வயதுக் குழந்தைக்கு "தக்ளி" கொடுத்து நூல் நூற்கச் சொல்வதைத் தானா ஆதாரக் கல்வி என்று சொல்லுகிறோம்? ஆசை காட்டி வரவேற்று இப்படி வேலை

வாங்குவதற்காகவா பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பினேன் என்று பெற்றோர்கள் வேதனைப்படுகிறார்கள். இப்படிப்பட்ட வேதனை தரக்கூடிய கல்வி ஆரம்ப பள்ளிகளில் வேண்டாம். வேண்டுமானால் உயர்தரப் பள்ளிகளில் பயிற்சியைத் தரவேண்டும் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

இன்னும் இந்தத் துறையில் அநேக கவனக் குறைகள் இருக்கின்றன. என்னிடத்தில் ஒரு புகார் சொல்லப்பட்டது. 1958-ம் ஆண்டில் ஒரு பெண் ஈ.எஸ்.எல்.சி. பரீட்சை எழுதியிருக்கிறாள். எழுதிய பிறகு தேறியதற்கு உரிய அதிகாரபூர்வமான "சர்டிபிகேட்" கொடுத்திருக்கிறார்கள். சாரதா வித்யாலாய ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் இடம் பெற்று இரண்டு ஆண்டு பயிற்சி பெற்றிருக்கிறாள். நாளை 23-ம் தேதி பரீட்சை. ஒரு வாரத்திற்கு முன்னர் அந்தப் பள்ளி அதிகாரிகள் "நீ போகஸ் சர்டிபிகேட் வாங்கிக் கொண்டு வந்து பள்ளியில் சேர்ந்திருக்கிறாய், ஆகையால் பரீட்சை எழுதக் கூடாது" என்று சொல்லி பள்ளியை விட்டுச் செல்லவேண்டுமென்று அனுப்பிவிட்டனர். பொய் சர்டிபிகேட்டாக இருந்தாலும் யாரால் தரப் பட்டது ? அதிகாரி கையெழுத்திட்டுத் தரப்பட்டிருக்கிறது. அதைக் குறித்து சர்க்கார் கெஜட்டில் வெளியாகியிருக்கிறது. குறிப்பிட்டு அந்தத் தேதியை என்றால் சொல்ல முடியும்—போர்ட் செயின்ட் ஜார்ஜ் கெஜெட்டில் அந்தப் பெண் தேர்ச்சி பெற்றிருக்கிறாள் என்று வெளியாகி யிருக்கிறது ; சர்டிபிகேட்டும் இருக்கிறது ; பயிற்சிப் பள்ளியில் சேர்க் பட்டிருக்கிறாள். இரண்டு ஆண்டுகள் படித்திருக்கிறாள். 23-ம் தேதி உரிய தேர்ச்சி பெறுவதற்கு பரீட்சை எழுதவேண்டும் என்று சொல்லும்போது பொய் என்று சொன்னால், இது யார் செய்த குற்றம் ? இந்தக் குற்றத்தைக் கண்டுபிடிக்க இரண்டு ஆண்டு காலமா ? இரண்டு ஆண்டு காலமாகக் குற்றம் கண்டுபிடிக்கவில்லையென்றால் அதற்கு இந்தப் பெண் தானா பழி வாங்கப்பட வேண்டும் ? பரீட்சை எழுத அனுமதி கொடுத்துவிட்டு, குறை எங்கே என்று கவனிக்கக் கூடாதா ? பரீட்சை எழுத அனுமதி மறுக்கப்பட்ட அந்தப் பெண் ஒரு ஆதித் திராவிடப் பெண்—மதுராந்தக வட்டத்தைச் சேர்ந்த பெண். கண்டபடி போகஸ் சர்டிபிகேட் தரப்படு கிறது, அரசாங்கத்தால் வெளியிடப்படுகிற கெஜட்டில் வெளியாகிறது என்றால் இப்பேர்ப்பட்ட குற்றங்கள் நடைபெறக்கூடாது என்று கூறிக்கொள் கிறேன்.

* **SRIMATHI A. S. PONNAMMAL** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்த மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நம் நாட்டில் பொருளாதார முன்னேற்றத்தைக் கொண்டுவரவேண்டு மென்றால், அதற்கு மூல காரணம், முதல்படியாக உள்ளது கல்வி தான். அந்த அடிப்படையில் பட்டி தொட்டிகளிலும் உள்ளவர்கள் கல்வி அறிவு பெறவேண்டும், அறிவு வளர்ச்சி பெருகி மக்களை நல்ல அறிவு பெறச் செய்யக் கூடிய முறையில் அமைச்சர் அவர்கள் வகுத்த இந்தத் திட்டம் எல்லா மக்களும் போற்றக் கூடிய அளவில் இருந்துகொண்டிருக்கிறது. உதாரணமாக பெண்கள் கல்வியை எடுத்துக்கொண்டால் ஆண்களைக் காட்டி லும் எவ்வளவோ பெண்கள் கிராமப்புறங்களில் இருந்துகொண்டிருக்கிறார் கள். அவர்களும் சம அந்தஸ்தை அடையவேண்டுமானால், நம்மிடத்தில் நல்ல திறமையாக வேலை செய்யக் கூடிய டைரக்டர் இருந்தாலும்கூட பெண்களுக்கு ஒரு தனி டைரக்டரை நியமித்து ஆங்காங்கு பெண் கல்வியை உயர்த்த அந்த அடிப்படையில் காரியம் செய்தால் நன்றாக இருக்கும்.

ஆதாரக் கல்வியையும் விருத்தி செய்வதில் அந்த அடிப்படையில் அதற்காகவும் தனியாக ஒரு டைரக்டரை நியமித்தால், ஆதாரப்பள்ளிகள் நல்ல முறையில் நடக்க, வேலை வாய்ப்பு இல்லாமல் அநேகம் பேர்கள் கஷ்டப்படுகிறார்களே அந்த நிலைமையைப் போக்க வசதியாக இருக்குமென்று நான் கருதுகிறேன். நாம் இன்றைய தினம் எத்தனையோ கோடி செலவு செய்கிறோம். இதையும் அமைச்சர் அவர்கள் நன்றாக ஆராய்ச்சி செய்து பார்த்தால் நன்றாக இருக்கும்.





தவிர குழந்தைகளுக்கு ஜாதி மத வித்தியாசம் இல்லாமல் கல்வி வசதி அளிக்க வாய்ப்பு ஏற்படுத்தியிருக்கிறோம். அதே போல குருடர்கள், ஊமைகள், கால் இல்லாதவர்கள் இவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது—அவர்களுக்குத் தனியாக ஒரு திட்டத்தைத் தயார் செய்து இப்பேர்ப்பட்ட குழந்தைகள் நன்றாகப் படிக்கவேண்டுமென்பதற்காக தக்க தொரு நடவடிக்கை எடுத்தால் நன்றாக அமையும் என்று நான் கருது கிறேன். அதையும் அமைச்சர் அவர்கள் செய்வார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.

பகலுணவுத் திட்டத்தைப் பற்றிப் பேசும்போது அதில் சில குறைபாடு கள் இருக்கின்றன என்பதை இங்கே சுட்டிக்காட்டினார்கள். பெற்றோர்கள் 4 ந.பை. கொடுப்பது பற்றி பேசப்பட்டது. அதைப்பற்றி பலர் குறை கூறினார்கள். இன்றைக்கு இந்தத் திட்டத்தைப் பற்றி நம்முடைய தேசமே, ஏன் அயல்நாடுகள் போன்றவைகள்கூட தமிழ்நாட்டிலே நடக்கக் கூடிய இந்தத் திட்டத்தைப் போற்றி, தமிழ் அமைச்சரவையை வாழ்த்தி, அதைத் தங்கள் நாடுகளிலும் பின்பற்ற வேண்டுமென்ற ஒரு சூழ்நிலை இப்போது ஏற்பட்டுக்கொண்டு வருகிறது. இன்னும் இதை நல்ல முறையிலே செய்ய வேண்டுமானால், நாம் 6 ந.பை.-க்குப் பதிலாக அரிசியாகக் கொடுத்துவிட்டு ஜனங்கள் கொடுக்கும் 4 ந.பை.-க்குப் பதிலாக அவர்களிடமிருந்து விறகும் காய்கறியும் கொடுத்தால் போதுமானது. இம்மாதிரியாக ஒவ்வொரு வீட்டிலுமுள்ள பெற்றோர்கள் கொடுத்துதவுவதற்குத் தயாராக முன்வருகிறார்கள் என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்பு கிறேன்.

இதேபோன்று இப்போது உடைகளும் தருகிறார்கள். இந்த உடைகள் கொடுக்கும்போது, 11 வயதுள்ள எல்லாப் பிள்ளைகளுக்கும், மாணவ மாணவிகளுக்கும் தாராளமாகத் தைத்துக்கொடுப்பதற்குப் பெற்றோர்களும் பிறரும் முன்வந்து கொண்டிருக்கிறார்கள். இந்த அடிப்படையில் பெரிய பணக்காரரிலிருந்து, கீழே இருக்கக்கூடியவர்கள் வரை ஒரே யூனிபாரம் தைத்துக்கொள்ள வேண்டுமென்ற ஒரு நிலைமை ஏற்படச் செய்வார்களா னால், அது இன்னும் சிறப்பாக இருக்குமென்று நான் கருதுகிறேன். நாங்கள் தைத்துக்கொடுக்கிறோம் என்று அவர்கள் மிகுந்த உற்சாகத்தோடு முன்வருகிறார்கள். அப்படித் தைத்துக்கொடுக்கும் உடைகளைக் குறிப்பாகப் பெண்களுக்குக் கொடுக்கிறார்கள், அதை நான் வரவேற்கிறேன். ஆனால் பெண்களுக்கு இப்படிக் கொடுக்கும் உடையானது ஒரே அளவாக இருப்ப தால் அதாவது 10 வயதுப் பெண்ணுக்கு என்று வயதைக் குறிப்பிட்டு அந்த விதத்திலே இந்த உடைகளைத் தைப்பதால், சிலருக்கு முழங்காலுக்கு மேல்கூட இந்த உடைகள் இருக்கக்கூடிய ஒரு நிலைமை ஏற்படுகிறது. அந்த நிலைமையை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் இங்கே நம்முடைய மாகாணத்தைப் பொறுத்தவரையில் 8-வது, 9-வது, 10-வது என்று அதுவரை படித்துவிட்டு, அதிலே பாஸ் ஆகாமல், அதோடு வேலையில்லாமலும் இருக்கக்கூடியவர்கள் ஆண் களும், பெண்களும் அநேகம் பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு எந்த விதமான வேலையும் கிடைப்பதில்லை. அப்படி என்ன வேலை செய்யப் போகிறாய் என்று கேட்டால், அவர்கள் ப்யூன் வேலைக்குப் போகப் போகி றோம் என்று சொல்லக்கூடிய அளவிலே இருக்கிறார்களே தவிர, அவர் களுக்கு ஒரு வேலை வாய்ப்பு கிடைப்பதற்கு இல்லாமல் இருக்கிறார்கள். இதுமாதிரி 8-வது வரை படித்து விட்டுப் பல பேர்கள் கிராமங்களில் இருக் கிறார்கள். அவர்களுடைய இந்தக் குறையைப் போக்கவேண்டுமென்றால் அதற்கு ஒரு பாலிடெக்னிக் போன்ற ஒரு தொழிற்கல்வியை விஸ்தரித்து நடத்தலாம். அப்படி ஒரு பாலிடெக்னிக்கை ஏற்படுத்தி அதிலே இப்படி 8 முதல் 10 வரை படித்துள்ள மாணவர்களைச் சேர்த்து, அவர்களுக்கு ஓரளவு வேலை வாய்ப்பு கொடுக்கின்ற அளவிலே செய்தால், இன்னும் நன்றாக இருக்கும் என்பதைக் கனம் அமைச்சர் அவர்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதோடு பள்ளிக்கூடங்களுக்கு அருகிலே ஏழை ஆசிரியர்களுக்காக வீடுகள் கட்டும்படி அரசாங்கம் சென்ற ஆண்டில் எங்களுடைய மதுரை ஜில்லாவில் 40,000 ரூபாய் ஒதுக்கியது. நாங்கள்கூட அதற்காக

[Srimathi A. S. Ponnammal] [22nd March 1961

நிலங்கள் கொடுத்தோம். அந்த ஊரிலே உள்ள ஜனங்கள் மகஜர் கொடுத்தும் அந்த நிலத்தை ரிஜிஸ்டர் செய்து கொடுத்தார்கள். அப்படி நிலத்தைக் கொடுத்து, ஒதுக்கப்பட்ட 40,000 ரூபாயைக் கட்டிடத்திற்குச் செலவு செய்யாமல், அது டீச்சிங் கிராண்டுக்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று கலெக்டர் அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார். பள்ளிக்கூடத்திலே வேலை செய்யக் கூடியவர்கள் தாங்கள் தங்குவதற்கு இடமில்லாமல், ஓரிடத்தில் சாமானை வைத்துக்கொண்டும், ஓரிடத்தில் சமைத்துக்கொண்டும், ஒரு புறத்திலே மற்றவைகளை வைத்துக்கொண்டும், தங்கள் வீட்டைப் பள்ளிக்கூடத்திலே வைத்துக்கொள்ளக்கூடிய ஒரு நிலைமைதான் இப்போது எங்கு பார்த்தாலும் இருக்கிறது. இப்படி மிகவும் கஷ்டமான நிலைமையில் இருக்கக் கூடியதை அங்கே போய்ப் பார்க்கும்போது காணமுடிகிறது. ஆகவே ஆங்காங்கே பள்ளிக்கூடங்களிலே வேலை செய்யக்கூடிய ஆசிரியர்களுக்கு சர்க்கார் பணம் கொடுத்தாவது இல்லாவிட்டால் அந்தந்த கிராமங்களிலுள்ள பொது மக்கள் பணம் போட்டாவது அவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கவேண்டியது மிகவும் அவசியமாகும். அப்போதுதான் அவர்கள் இன்னும் திறமையாக வேலை செய்ய முடியும். ஆகவே இதைக் கனம் அமைச்சர் அவர்கள் தீவிரமாக யோசித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உதாரணமாக, ஏழை ஹரிஜன பெண் டீச்சராக இருந்தால் அவர்கள் மிகவும் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. அவர்களை ஊரில் கிணற்றில் தண்ணீரைக்கூட எடுப்பதற்கு அனுமதிப்பதில்லை. ஆனால் என்னுடைய தொகுதியில் அப்படியில்லை. ஒன்றிரண்டு இடங்களில் அப்படி இருந்தது. அதைக்கூட சமரசம் செய்து வைத்துவிட்டோம். அப்படி இருந்தாலும் இப்படிப்பட்டவர்களுக்கு கிராமத்திலே தங்குவதற்கு வீடுகள்கூட கொடுக்க மாட்டார்கள். சில இடங்களில் ஜாதி இந்துக்கள் அவர்களை இன்னும் தீண்டக்கூட முடியாத நிலைமையில் இருக்கிறது. ஆகவே இதையெல்லாம் கனம் அமைச்சர் அவர்கள் நன்கு கவனித்து அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் ஒரு நிலைமையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதைத் தவிர, இப்போது சிரமத்தோடுதான் பள்ளிக்கூடத்திற்குப் பக்கத்தில் நிலம் கிடைக்கிறது. ஒரு சில கிராமங்களிலே பூமிதானம் கேட்ட போது, நிலத்தைக் கொடுத்துவிட்டு, இப்போது அந்த நிலத்தைக் கொடுக்க முடியாது என்று சொல்கிறார்கள். அதேபோல்தான் பள்ளிக்கூடத்திற்காக நிலத்தைக் கொடுத்துவிட்டு, இப்போது அந்த நிலத்தைக் கொடுக்க முடியாது என்று சொல்கிறார்கள். நீங்கள் தானே கையெழுத்துப்போட்டு, பள்ளிக் கூடத்திற்காக என்று நிலத்தைக் கொடுத்தீர்கள் என்று கேட்டால், அப்போது ஏதோ கேட்டார்கள், கையெழுத்துப்போட்டோம், இப்போது கொடுக்க முடியாது என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு நிலைமை ஒரு சில இடங்களில் இருந்துகொண்டு வருகிறது. இதிலே நாம் சரியாகக் கவனம் செலுத்தி, அந்த நிலங்களையெல்லாம் பள்ளிக்கூடங்களுக்கு வாங்கிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இப்போது நிறைய ஹையர் கிரேடு டீச்சர்களை உற்பத்தி செய்து அவர்கள் வேலை இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இவர்களுடைய புரொடக்ஷன் அதிகமாகி விட்டதால், செகண்டரி கிரேடு டீச்சர்களை வேலைக்கு அமர்த்திக்கொள்வதால், இவர்கள் வேலை இல்லாமல் திண்டாடக்கூடிய நிலைமையில் இருக்கிறார்கள். இந்த நிலையைப் போக்க வேண்டுமென்றால், ஒன்று ஹையர் கிரேடு டீச்சர்கள் பயிற்சிப் பள்ளியை எடுத்துவிட்டு, அந்த இடத்தில் செகண்டரி கிரேடு பயிற்சிப் பள்ளியாக மாற்றவேண்டும், அதோடு அல்லாமல் புதிதாக நிறையப் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தி, அதிலே இவர்களையெல்லாம் உடனடியாக வேலைக்கு அமர்த்திக்கொள்ள வேண்டும். இன்னும் எங்கெங்கே அதிகமாக பள்ளிக்கூடங்களை ஏற்படுத்த வேண்டுமோ, அங்கெல்லாம் பள்ளிக்கூடங்களை அதிகமாக ஏற்படுத்த வேண்டும். அமைச்சர் அவர்கள்கூட பதில் சொல்லும்போது, இந்தப் பயிற்சிப் பள்ளியிலே கிராமங்களிலே வசதி குறைவாக இருக்கின்ற காரணத்தினால் அதிகம் தேறுவதில்லை என்றும், நகரங்களிலே இதற்கு



22nd March 1961] [Srimathi A. S. Ponnammal]

வசதி அதிகமாக இருந்தும் மாணவர்களே வேறு துறையில் கவனம் செலுத்துவதால் சரியாகத் தேறுவதில்லை என்றும் கூறினார்கள். அதற்கு அவர்களை முன்னேற்றுகின்ற வகையிலே, அவர்கள் நன்கு கவனம் செலுத்திப் படிக்கக்கூடிய வகையிலே, கிராமங்களிலே ஹாஸ்டல் வசதிசெய்து கொடுத்தால், அவர்கள் அரசாங்கத் தேர்விலே அதிகமான அளவுக்குத் தேறுவார்கள் என்று கூறிக்கொண்டு, என்னுடைய வார்த்தைகளை முடித்து கொள்கிறேன்.

*** Sri V. SUBBIAH** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்றைய நிதி நிலை அறிக்கையைப் பற்றிக் குறிப்பிட வேண்டுமென்றால், இந்த ஆண்டின் நிதி நிலை அறிக்கையிலேயே இது மிக முக்கியமான இனம் என்று சொல்லக்கூடிய பெருமை இந்த மான்யத்திற்கு இருக்கிறது என்று சொல்லலாம். இந்தப் பெரிய இனத்திற்கு 21 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய மாகாணத்தின் மொத்த வருமானத்திலே நான்கில் ஒரு பகுதியாக, ஒரு பெரும் பகுதியான தொகையை இந்த மான்யத்திற்கு ஒதுக்கியது பெருமைபடக்கூடிய விஷயமேயாகும். இது வரவேற்கக் கூடியதுமாகும். ஆனால் இது எந்த அளவில் செயல்படுகிறது, அதனுடைய நன்மை என்ன என்று பார்க்கும் போது, பெரும்பாலும் மக்கள் குழப்பமான நிலையில்தான் இருக்கிறார்கள் என்ற காரணத்திற்காகத்தான், இந்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

குறிப்பாக, இன்றைக்கு கிராமப் பகுதியிலே இதிலே ஒரே குழப்பம் தான். குழந்தைகளிடத்திலே காந்தியடிகளுடைய திட்டமான பேசிக் கல்வி முறையும், அன்று இந்த நாட்டை ஆண்ட அந்நியர் பிரிட்டிஷார் ஆண்ட காலத்தில் இருந்த கல்வித் திட்டமும் இருக்கிறது. இந்த இரண்டுக்கும் ஒரே குழப்பம். இந்த இரண்டிற்கிடையே சீனியர் பேசிக் பள்ளியில் படிப்பவர்களுக்குகிடையேயும், உயர் நிலைப் பள்ளிகளிலே படிப்பவர்களுக் கிடையேயும் ஒரே கஷ்டமும், குழப்பமும்தான். அவர்களுடைய தரத்தைப் பார்க்கும்போது பழைய நிலைமையிலே இருக்கக்கூடிய திண்ணைப் பள்ளிக்கூடத்திலே இருக்கக்கூடிய தரத்திற்கும் குறைவாக இருக்கிறது என்று சொல்லலாம். நான்கூட திண்ணைப் பள்ளிக்கூடத்தில் எண் சுவடி, குழிப்பெருக்கு முதலியவைகளைப் படித்தவன். கணக்கிலேயும், ஆங்கிலத்திலேயுங்கூட பார்ப்போமேயானால், இன்று தரம் மிகக் குறைந்த அளவில்தான் இருக்கிறது. பள்ளித் தரம் தான் குறைந்திருக்கிறது என்றால், ஒழுக்கத்திலும் அவர்களுடைய தரம் குறைந்திருப்பதை நினைக்கும்போது மிகவும் வருந்த வேண்டியிருக்கிறது. இந்த நிலை இன்றைக்கு எங்கு பார்த்தாலும் அநேகமாக இருக்கிறது. தொழிற் கல்வியைப் பற்றி ஒன்றும் சொல்வதற்கில்லை. ஆனால் இன்றுள்ள நிலையைப் பார்க்கும் போது, அது எங்கே கொண்டுபோய் விடுமோ என்றுதான் பயமாக இருக்கிறது. கலாசாலைகளிலும், தொழிற் கலாசாலைகளிலும் மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் குழுவிலும் இப்படிப்பட்ட ஒரு நிலைமைதான் இருந்து கொண்டிருக்கிறது. அதிலும், கிராமப் பகுதிகளிலே இருந்து கலாசாலைக்கு வரும்போது, மாணவர்களுடைய தரம் எப்படி இருக்கிறது என்றால், மிகவும் குறைந்த அளவிலேதான் இருக்கிறது. அதனால் பெரும்பாலும் அவர்கள் புறக்கணிக்கப்படுகின்ற ஒரு நிலைமைதான் இன்று பரவலாக இருந்து கொண்டிருக்கிறது.

அது மட்டுமல்ல. இன்றைக்கு நாம் பார்ப்போமானால், பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் நிறைய பேர், ஆயிரக்கணக்கான பேர்கள் வேலையில்லாது இருக்கிறார்கள். கிராமப் பகுதிகளிலே சீனியர் பேசிக் பயிற்சி பெற்று விட்டு, நிறைய பேர்கள் தெருவிலேதான் நின்று கொண்டிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் என்ன செய்யப் போகின்றீர்கள் ? அவர்கள் எல்லாம் இன்றைக்குக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற நிலையைத் தான் பார்க்கிறோம். இது மாறவேண்டும். ஆனால் அரசாங்கம் ஒன்று சொல்ல முடியும். எதிர் காலத்திலே காந்தியார் கல்வி இந்த நாட்டிலே வரப்போகிறது, அப்போது இந்த நிலைமை இருக்காது என்று சொல்லலாம். அப்போது வரும்போது பார்த்துக் கொள்ளலாம். இன்றைக்கு அவர்கள் இப்போது சும்மாத்தானே இருந்து கொண்டிருக்க வேண்டும்?

[Sri V. Subbiah] [22nd March 1961]

இன்றைக்கு இந்த நிலைமைகளை யெல்லாம் பார்க்கும்போது கிராமத்திலே உள்ள மாணவர்கள், நகரத்திலே உள்ள கலாசாலை வகுப்புகளுக்குப் போகும்போது, அவர்களுடைய நிலை இன்றைக்கு ஒரே குழப்பமாகத்தான் இருக்கிறது. இன்றையக் கல்வித் திட்டமும், அரசாங்கத்தினுடைய நிலையுமே அத்தன்மையதாகத்தான் இருக்கிறது. மேலும், இப்போதுள்ள பெருவாரியான கலாசாலைகளில் பாஷை தமிழ் மொழியாக இருந்து கொண்டிருக்கிறது. இதிலேயும் பொது மக்களிடையே ஒரே குழப்பம் தான். அதேபோல் இந்த நயா பைசாவிலும், மெட்ரிக் எடையிலும் மக்களிடையே ஒரே குழப்பம்தான். கல்வித் துறையிலும் மாணவர்களிடையே ஒரே குழப்பம்தான். மேலும் கலாசாலைகளில் பாஷைக் குழப்பம். மக்களிடையே நடை முறையிலே இப்படி இருக்கக் கூடிய குழப்பத்தையும், சிக்கலையும் எந்த ரூபத்திலே தீர்க்க செயல்பட வேண்டுமென்பதை யோசிக்க வேண்டும். அது மட்டுமல்ல. தனியார் நடத்தக் கூடிய பள்ளிக் கூடங்களிலே, மனேஜ்மெண்டு பள்ளிக்கூடங்களிலே ஆசிரியர்களுக்குச் சரியாக சம்பளமே கொடுப்பதில்லை என்ற ஒரு குறை இருக்கிறது. பல நல்ல மானேஜ்மெண்டுகள் இருக்கலாம். சில இடங்களில் சில தவறுகள் இருக்கின்றன என்பதை மறக்கமுடியவில்லை.

12 noon. முதியோர் கல்வித் திட்டம் ஒரு நல்ல திட்டம். அதை கிராமப் பகுதிகளிலே வரவேற்கிறார்கள். அது இன்றைக்கு எப்படி இருக்கிறது ? எங்கேயாவது ஒழுங்காக நடக்கிறதா, நடைமுறையில் இருக்கிறதா என்று பார்த்தால், அது போய்விட்டது. முதியோர் கல்வித் திட்டமே பல கிராமங்களில் இல்லாத அளவுக்குப் போய்விட்டது. சில கிராமங்களிலே ஆரம்பித்து வந்தார்கள். அதற்குப் பின்னாலேயே மூடிவிட்டே போய்விட்டார்கள். அந்த நிலையில்தான் இருக்கிறது. நல்ல திட்டத்திற்கு செலவழிக்கக்கூடிய பணம் மக்களிடையே பிரயோசனமற்ற நிலையில், நல்ல முறையில் செயல்படாமல், போய்க்கொண்டிருக்கிறது. முதியோர் கல்வித் திட்டத்தை மேலே இருக்கக்கூடிய உத்தியோகஸ்தர்கள் நல்ல முறையில் கண்காணிக்கிறார்களா என்றால், இல்லை என்று சொல்லக்கூடிய அளவில்தான் இருக்கிறது. அது மட்டுமல்ல. கிராமங்களில் 300 ஜனத் தொகை இருந்தால் அங்கே ஒரு பள்ளிக் கூடம் வைக்கப் போகிறோம் என்று சொல்லுகிறார்கள். எத்தனை எத்தனையோ கிராமங்கள் எங்கள் பகுதியில் காட்ட முடியும் பள்ளிக்கூடம் இல்லாமல். அதற்குக் காரணம் ஒரு மைலில் வேறு பள்ளிக்கூடம் இருக்கக் கூடாது என்ற விதி நடைமுறையில் இருக்கிறது. அதுதான் இம்மாதிரி எல்லா கிராமங்களிலும் பள்ளிக்கூடம் ஏற்படுத்துவதைத் தடுக்கிறது. அம்மாதிரி இருக்கும் விதியை எடுத்துவிட்டு 300 ஜனத்தொகை உள்ள எல்லா கிராமங்களிலும் பள்ளிக்கூடங்கள் இருக்க வேண்டும் என்ற விதியை இயற்றவேண்டும்.

இம்மாதிரி பல குறைகள் இருக்கின்றன கிராமங்களில். கிரமங்களிலுள்ள ஆதாரப் பாடசாலைகளிலும், ஓராசிரியர் பள்ளிக்கூடங்களிலும் நல்ல வாசகசாலை இருக்கிறதா என்று பார்த்தால் கிடையாது. எங்கோ ரொம்பக் குறைவான சில புஸ்தகங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அர்த்தமற்ற தன்மையில், மக்களுக்கு, கிராமத்தார்களுக்கு, விவசாயிகளுக்கு பொருத்தமற்ற நிலைமையில் ஏதோ சில புஸ்தகங்கள் வைக்கப்பட்டிருக்கின்றனவே தவிர வேறு ஒன்றும் இல்லை. எல்லா கிராமங்களிலும் கண்டிப்பாக ஒரு வாசகசாலை இருக்க வேண்டும் என்ற நிலைமை ஏற்படுத்த வேண்டும். அப்படி அங்கே வாசகசாலை வைப்பதற்கு கட்டிடங்கள் இல்லாமல் இருக்கலாம். கிராமங்களிலே மாட்டுத் தொழுவத்தில்கூட பள்ளிக்கூடங்கள் நடக்கின்றன. நகரங்களில் பார்க்கும்பொழுது லட்சக்கணக்கான ரூபாய் கட்டிடங்களுக்காகச் செலவழிக்கப்படுகிறது. கட்டிடத்திற்காகக் கொடுக்கப்படும் மான்யங்களில், நகரங்களில் எவ்வளவு செலவழிக்கப்படுகிறது, கிராமங்களில் எவ்வளவு செலவழிக்கப்படுகிறது என்று பார்த்தால், கிராமப் பகுதிகளிலே மிகக் குறைவான அளவுக்குத்தான் பணம் செலவழிக்கப்பட்டிருக்கிறது. கிராமங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தில் அதிகமாக செலவழிக்கப்படாமல் போய்விட்டது. ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பது, பெண் ஆசிரியர்களுக்கு தனியாக வீடுகள் கட்டிக்கொடுப்பது என்ற விஷயத்திலும் குறைந்த அளவில் செயல்படக்கூடிய நிலைதான்



22nd March 1961] [Sri V. Subbiah]

இருந்து கொண்டிருக்கிறது. கிராமத்திலே அடித்ளமாக இருக்கக்கூடிய காந்தி அடிகளின் திட்டம் நிறைவேற்றப்படவேண்டும். பேஸிக்காக இருக்கக்கூடிய ஆதாரக் கல்வி இருக்கிறதே அதிலிருந்து காந்தியடிகள் கண்டுபிடித்த முறைப்படி செயல்பட்டு உயர் நிலைக்கு வந்தால்தான், ஒழுக்கம் இருக்க முடியும், எதிர்காலத்தில் அவர்கள் வாழ்க்கையிலே சந்தோஷம் இருக்க முடியும், நாட்டிற்கு அவர்கள் நல்ல முறையில் பணியாற்ற முடியும், எந்தத் துறையிலும் அவர்கள் சிறந்தவர்களாக பணியாற்ற முடியும். அந்த அடிப்படைத் திட்டத்தை ஏற்று நடத்தி வந்தால்தான் இந்த ரூ. 21 கோடியும் நல்ல முறையில் செலவானதாக நினைக்க முடியும் என்று கூறிக்கொண்டு, இத்துடன் என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER : There are still seven or eight members who wish to speak. Therefore I reduce the time-limit for each hon. Member from ten minutes to five minutes. Sri Krishnasami Naidu may now speak.

*Sri R. KRISHNASAMI NAIDU : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கல்வி அமைச்சர் அவர்களால் இங்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் கல்வி மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற நான் முன்வருகிறேன். ஆதாரப் பள்ளிக்கூடங்களில் நூற்புத் திட்டம் சரிவர செயல்படாத நிலை சென்ற வருஷத்தில் சில மாதங்களில் ஏற்பட்டு இருந்தது. அதற்குப் பரிகாரம் காணும் வகையிலே காலாகாலத்தில் அந்தப் பள்ளிக்கூடங்களுக்கு பஞ்சு கிடைக்கும்படி ஏற்பாடுகள் செய்ய வேண்டும். பரவலாகப் பார்க்கும்பொழுது சில பள்ளிக்கூடங்களுக்கு தேவைக்கு அதிகமாக கருவிகள் வழங்கப்பட்டிருக்கிறதோ என்று பார்ப்பவர்கள் மனதில் ஒரு சந்தேகம் ஏற்படுகிறது. தேவைக்கு அதிகமான கருவிகள் ஒரு பள்ளிக்கூடத்தில் இருந்தால், அவைகளை சரிவரப் பார்த்து வேறு பள்ளிக்கூடங்களுக்கு மாற்றுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டும். நூற்பு திட்டம் சரிவர இயங்க, நேரத்தை சற்றுக் குறைத்தால்கூட, அது சரிவர நடைபெற ஏற்பாடுகள் செய்வது மிகவும் அவசியம் என்று கருதுகிறேன். நூற்பு ஒரு தொழில் கல்வியாக அமைக்கப்பட்டால்கூட, அந்தந்தப் பகுதிகளிலுள்ள சந்தர்ப்பங்களுக்கேற்ப, சூழ்நிலைக்கு ஏற்ப, விவசாயத்தையும் முக்கியமான ஒரு தொழிற் கல்வியாகக்கூட அமைப்பது மிகவும் நல்லது. அதற்காக சில பள்ளிக் கூடங்களில் அவர்கள் தாங்களே வாங்கி வைத்திருக்கக்கூடிய நிலங்களை சீர்திருத்தி தக்க ஏற்பாடுகள் செய்வதற்கு, கிணறுகள் தோண்டுவதற்கு, பம்பு செட்டுகள் முதலிய சௌகரியங்கள் செய்து கொடுத்து அந்த நிலத்தை சீர்திருத்தி பண்படுத்துவதற்காகக்கூட அரசாங்கமே அதற்கு மான்யம் வழங்குவது மிகவும் நலம் என்று கருதுகிறேன். அதையும் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கிராமப்புறத்திலுள்ள உயர்நிலைப் பள்ளி சம்பந்தப்பட்டவரையில், 7-வது வகுப்பு வரையில் ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறது. அது உயர்தர ஆரம்பப் பள்ளிக்கூடம். அதற்குமேல் 8, 9, 10-வது வகுப்பிற்காக ஒரு உயர்நிலைப் பள்ளி அமைந்திருக்கிறது. இப்படி ஒரே இடத்தில் இப்படிப்பட்ட பள்ளிக்கூடங்கள் அமைந்திருப்பது அனுபவபூர்வமாக நாம் பார்க்கும்பொழுது அது அவ்வளவு பொருத்தம் அல்ல என்று நாங்கள் கருதுகிறோம். ஆகையினால் ஒரே ஊரிலே, 7-வது வகுப்பு வரையிலும் ஒரு பள்ளிக்கூடம் அதற்கு மேல் 3 வகுப்புகள் உள்ள ஒரு உயர்நிலைப் பள்ளிக்கூடம் என்ற நிலை மாறி, 6 முதல் 10-வது வகுப்புகள் வரையிலும் ஒரே உயர்நிலைப் பள்ளி அமைப்பது என்ற நிலை வந்தால், அங்கே படிப்பின் தரம் உயர்வதற்கும், நிர்வாகத்திற்கும் மிகவும் பொருத்தமாக அமையும் என்ற ஒரு அனுபவத்தை நாங்கள் காண்கிறோம். இதைக் கல்வி இலாகா இயக்குநர் அவர்களின் கவனத்திற்கும், அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டுவர விரும்புகிறேன். இந்தக் குறை பல ஆண்டுகளாக சொல்லப்பட்டு வருகிறது. இதை ஆராய்ந்து பார்த்து நிவர்த்திப்பதற்கு வேண்டுவன செய்யுமாறு நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இவ்வாறு கிராமப்பகுதிகளிலே அமைந்துள்ள உயர்நிலைப் பள்ளிகளில் மூன்று வகுப்புகள் மட்டும் இருப்பதன் காரணமாக, மாணவர்களுடைய சங்கியை குறைவாக இருக்கிறது என்ற ஒரு நிலைமை ஏற்படுகிறது. இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலமாக பள்ளிக்கூடங்களுக்கு கொடுக்கக்கூடிய சில கட்டிட கிராண்டுகள் பெற்று, "லாபரெட்டரி" முதலிய வசதிகளை செய்து கொள்ளுவதற்குக்கூட இது தடையாக இருக்கிறது. அந்தப் பள்ளிக்கூடங்களின் வளர்ச்சிக்கு அந்த அனுகூலத்தை உபயோகப்படுத்திக்கொள்ள இது தடையாக இருக்கிறது என்று நாங்கள் கருதுகிறோம். ஆகவே, ஏற்கனவே உள்ள ஆரம்பப் பள்ளிக்கூடம் 5-வது வகுப்பு வரையிலும் இருக்கவேண்டும். பிறகு ஹைஸ்கூல் இருக்கக்கூடிய இடங்களிலே 6 முதல் 10-வது வகுப்பு வரையில் அமையக்கூடிய வகையிலே இந்த ஆண்டிலேயே அதற்கான ஏற்பாடுகள் செய்யுமாறு நான் பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஐந்தாவது வகுப்பு வரையிலும் உள்ள ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் குறைந்தபட்சம் 3-வது வகுப்பு வரையிலும் பெண் ஆசிரியர்கள்தான் இருக்கவேண்டும் என்ற ஒரு நிலைமையை ஏற்படுத்துவதற்கு, கல்வி அமைச்சர் அவர்கள் இதை நயவு செய்து மனதில் கொண்டு ஆவன செய்யவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன். மூன்றாவது வகுப்பு வரையிலும், ஏன் நான்காவது வகுப்பு வரையிலும்கூட பெண் ஆசிரியர்களே இருந்தால், எதிர்காலம் மிகவும் நன்றாக இருக்கும். பெண்கள் அநேகமாக வேறு துறைகளிலே உத்தியோகத்திற்கு செல்லுவதை விடுத்து, இந்தத் துறையிலே அவர்களை பணியாற்றும்படிச் செய்வது நாட்டிற்கும், சமுதாயத்திற்கும் மிகவும் உபயோககரமாக இருக்கும் என்ற கருத்தைத் தெரிவித்துக் கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

* **Sri T. R. RAMAMIRTHA THONDAMAN**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மன்றத்தில் கொண்டு வரப்பட்டிருக்கும் கல்வி மான்யத்தை நான் ஆதரிக்கிறேன். கல்வித் துறையிலே நம் தமிழ் நாடு மற்றைய மாநிலங்களைவிட நல்ல முன்னேற்றம் கண்டிருக்கிறது என்பதை பல மெம்பர்கள் இங்கே எடுத்துப் பேசினார்கள். பாராளுமன்றத்திலும், இதர மாநிலங்களிலும் திட்டக் கமிஷன் முடிவுகளை நிறைவேற்றக்கூடிய ஒரே ஒரு சர்க்கார் நமது சர்க்கார் என்று சொன்னார்கள். பல விஷயங்களில் முன்னேற்றம் கண்டிருக்கிற நமது சர்க்கார் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கக்கூடிய விஷயத்திலும் முன்னேற்றகரமான நல்ல திட்டத்தை நிறைவேற்றியிருக்கிறது என்பது குறித்து எல்லாப்பகுதியினரும் பாராட்டியிருக்கிறார்கள். அதற்காக நான் கல்வி அமைச்சர் அவர்களை மனமாற பாராட்டுகிறேன். அதே நிலையில் கல்வித் திட்டத்தை எந்த முறையில் நிறைவேற்றவேண்டுமென்பதற்காக ஆரம்பப் பள்ளிக்கூடம் முதல் உயர்நிலைப் பள்ளிக்கூடம் வரையில், ஏன் கல்லூரியில்கூட, இலவச உடை வழங்குவதற்கும், மதிய உணவு வழங்குவதற்கும், இன்னும் இது போன்ற காரியங்களில் உயர்ந்த ஆர்வம் பெற்றிருக்கும், நமது நாட்டிலுள்ள ஆசிரியர்கள் எல்லோரும் தங்களுடைய தளபதி என்று போற்றக்கூடிய அளவுக்கு ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மனதில் இடம் பெற்றுள்ள கல்வி இலாகா டைரக்டர் அவர்களை நான் மிகவும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அவருடைய நல்ல சேவையை பாராட்டி நிலையை அறிந்து அவர்களுக்கு சர்க்கார் "பத்மஸ்ரீ" என்ற பட்டம் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக இந்த சர்க்காரை நான் பாராட்டுகிறேன்.

ஆசிரியர்களுக்கும், அவர்களை உற்சாகப்படுத்தி கல்வி முறையில் முன்னேற்றம் காணவேண்டுமென்பதற்காக ஆசிரியர்களுக்கு பரிசு கொடுப்பது என்ற திட்டம் இருக்கிறது. அதைக் காட்டிலும், ஆசிரியர்களுக்கு அந்தந்த மாதச் சம்பளம் மாதம் முதல் தேதியன்றே கிடைக்கச் செய்தால், அவர்கள் பெரு மகிழ்ச்சியோடு பணியாற்றுவார்கள், அதையும் சர்க்கார் செய்யும் என்று எதிர்ப்பார்க்கிறேன். ஆரம்பக் கல்வியை வளர்க்க இலவச உணவு, உடை கொடுக்கும் திட்டங்கள் 100-க்கு 100 ஏழைப் பிள்ளைகள் கல்வி





பயில வசதியாயிருக்கிறது. அவை, பாராட்டத் தக்கவை. அதே நேரத்தில் ஆரம்ப பாடசாலைகளிலிருந்து வரும் மாணவர்கள் தொடர்ந்து படிக்க வசதியாக அதற்கு வேண்டிய உயர்நிலைப் பள்ளிகளையும் ஆங்காங்கே ஏற்படுத்த வேண்டும். சர்க்கார் அதைச் செய்ய முயற்சி எடுத்து இருக்கிறார்கள். என் தொகுதியில் ஏழு ஆரம்பப்பாடசாலைகள் ஏற்பட்டு ஹைஸ்கூல் இல்லாக் குறையில் என்னுடைய ஜில்லாவில் சோழபுரம், திருப்பனந்தாள், பந்தநல்லூர் முதலிய இடங்களிலிருந்து ஜில்லா போர்டு மூலமும் தனியாக துரைமாராலும் ஹைஸ்கூல் கேட்டு விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. அவற்றை அங்கீகரித்து அங்கு உயர்நிலைப் பள்ளிகள் இந்த வருஷ பள்ளி ஆண்டிலேயே ஏற்பட வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதன் அங்கீகாரங்களை உடனடியாக செய்யக் கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் கல்லூரிகளும் போதவில்லை. திருப்பனந்தாள் மடத்து ஸ்ரீலஸ்ரீ அடிகளார் (காசிவாசி அருள் நந்தி) ஆடுதுறையில் குமரகுருபரன் கல்லூரி என்று ஒரு கல்லூரி ஏற்படுத்த முன் வந்திருக்கிறார்கள். அதற்காக 300 வேலி நிலமும் எழுதி வைத்திருக்கிறார்கள். அதைக் கூட ஆடுதுறை எம். என். சொக்கலிங்கம் செட்டியார் முன் வந்திருக்கிறார். அவர்தாம் எங்களை ஏற்றுக் கொண்டு, சர்க்கார் உதவியும் கொடுத்து அந்தக் கல்லூரியையும் ஆடுதுறையில் ஏற்படுத்தி அதற்கு வேண்டிய இதர வசதி கொடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கல்வித் துறையில் பல முன்னேற்றங்களைக் கண்டு, பல நல்ல காரியங்களைச் செய்வதைக்கண்டு ஆசிரியர்கள் சந்தோஷமாக வேலை செய்கிறார்கள். அதே நேரத்தில் மதிய உணவுத் திட்டத்திலும், இலவச உடை வழங்கு திட்டத்திலும் அவர்கள் நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள் என்று சொல்லப்பட்டது. அந்த மாதிரி நிர்ப்பந்தம் எங்கும் இல்லை. ஆனால், உடை வழங்க கல்வி அதிகாரியை ஆசிரியர்கள் அழைத்தால், அவர்கள் போய் அந்தப் பணியைச் செய்ய மூன்று மாத காலம் தாமதம் ஏற்படுகிறது. கல்வி அதிகாரி 12 ஜில்லாக்களுக்கும் போய் வரவேண்டும். ஒரு ஜில்லாவிற்கு மாதத்திற்கு மூன்று நாளாவது போகவேண்டும். இவர்கள் எங்கள் ஜில்லாவிற்கு எத்தனை நாம் வந்திருக்கிறார்கள்? சென்னையிலே இருக்க வேண்டுமென்பதைக் குறைத்து மக்கள் விரும்பும் போது, அவர்கள் எண்ணத்தை நிறைவேற்ற, ஆங்காங்கே அவர்கள் செல்ல வேண்டுமென்று அவர்களுக்கு சர்க்கார் அனுமதியளித்து, என்னுடைய ஜில்லாவிற்கு மாதம் மூன்று நாளாவது வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**Sri S. NAGARAJA MONIGAR**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தச் சந்தர்ப்பம் கொடுத்ததற்காக மகிழ்ச்சியடைகிறேன். இந்த கல்வி மானியத்தை ஆதரிக்கிறேன். மஞ்சக் காமாலையாக இருப்பவர்கள் வியாதி நிர ஆராய்ச்சி செய்து, மூலிகைகள் ஏதாவது இருந்தால் நல்லது என்று தோன்றுகிறது. ஏதோ ஒன்றுமே செய்ய வில்லை, நடக்கவில்லை என்று தங்கள் உள்ளம் அஞ்சாமல் பேசுகிறார்கள். வீடு கட்டுகிறவனுக்கு எதிராளியாக இருக்க வேண்டாம் என்று கேட்கத் தோன்றுகிறது. சுமார் 80 கோடியளவில் இருக்கும் பட்ஜட்டில் ஏறக்குறைய நாலில் ஒரு பங்கு செலவிடும் இந்த இலாகாவில் ஒன்றுமே நடக்கவில்லை என்கிறார்கள். இந்தத் தொகையைப் பார்க்கும்போது, மற்ற மந்திரிகள்கூட எப்படி இவ்வளவு பெரிய தொகைக்கு ஒத்துக்கொண்டார்கள் என்று ஆச்சரியப்படவேண்டிய நிலைதான் இருக்கிறது. தொழில் பள்ளி முதற்கொண்டு உபகாரப் பணம் பெறுகிறது. ஒன்றுமேயில்லையென்றால்—ஆனால் இப்பொழுதெல்லாம் கொஞ்சம் குறைந்திருக்கிறது இரண்டு ஒன்று இருக்கிறது என்று ஒப்புக் கொள்ளுகிறார்கள். கொஞ்சம் ஞானக் கண் திறந்திருக்கிறது என்று நினைக்கிறேன். அவ்வளவு பெருமையோடு நடக்கும் இந்த கல்வி சம்பந்தமான மானியத்தின் பேரில் எதிர்கட்சியின் கட்மோஷன் இல்லாமல் இருந்தால் நன்றாக இருக்கும். கட்மோஷனே வேண்டாம் என்று சொல்லவில்லை. எல்லாவற்றிற்கும் என்று வரும்போது, அது அவ்வளவு சரியாகப்படவில்லை. குறைகள் இருந்தால் அவற்றைச் சொல்ல வேண்டும் என்றால் கட்மோஷன் கொடுத்தால்தானா?

[Sri S. Nagaraja Monigar] [22nd March 1961

கொடுக்காமலேகூடத்தான் பேசலாம். அப்படிப்பட்ட பேச்சை வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். ஆகையினால், வேலை நுழைத்தது போல்—வள்ளுவர் உள்ளத்திலே தான் வேல் நுழைந்தது—செய்த நன்றியை மறக்கக்கூடாது. மேல் சபையிலே கூடச் சொன்னார்கள். . . .

**DEPUTY SPEAKER :** மேல் சபையில் பேசியதைபற்றி இங்கே பேச வேண்டாம்.

**SRI S. NAGARAJA MONIGAR :** செய்நன்றி மறப்பது சரியாகாது. செய்யும் காரியத்திற்கு இடைஞ்சல் இல்லாமல் இருந்தாலே போதும். செய்வதை கொஞ்சம் பாராட்டினால் செய்பவர்களுக்கும் அதிக உற்சாகம் இருக்கும்.

கல்வித்தரம் குறைந்துவிட்டது, ஆசிரியர்கள் நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் போய் பெற்றோர்களின் மனதை மாற்றுவதில் ஈடுபடுகிறார்கள். அவ்வளவுதான். நல்ல சம்பளம் வாங்கும் உபாத்தியாயர்கள், வெயில் கால விடுமுறை, குளிர்கால விடுமுறை என்றெல்லாம் இரண்டு மூன்றுமாத லீவு அடைகிறார்கள். செக்ரெட்டேரியட்டில் பார்த்தால் ஊழியர்கள் மணிக்கணக்காக உழைக்கிறார்கள். ஆசிரியர்கள் எப்படா மணியடிக்கும் என்று பார்த்துக்கொண்டேயிருப்பதா ? உணவும் உடையும் கொடுத்து வரவழைக்கும் மாணவர்களுக்கு நக்க முறையில் போதிக்க வேண்டாமா? தரம் குறைகிறது என்கிறார்கள். எங்குதான் தரம் குறையவில்லை. சபையிலே கூடத்தான் இப்பொழுது தரம் குறைந்திருக்கிறது. . . . . .

**SRI A. GOVINDASAMI :** Sir, on a point of order. சபையில் தரம் குறைந்திருக்கிறது என்று சொல்லுகிறார்களே. . . .

**DEPUTY SPEAKER :** The hon. Member should not use such words.

**SRI S. NAGARAJA MONIGAR :** நான் சொல்வதைப் பூரா கேட்காமல் சொல்கிறார்கள். . . . . . .

**DEPUTY SPEAKER :** The hon. Member's time is up. He should resume his seat.

**SRI T. KARIA GOUNDER :** சார், நல்லதைப் பேசினால் கோபம் வருகிறது. (குறுக்கிடு) நாங்கள் வெம்பு பண்ணும் பழக்கம் இல்லாதவர்கள். . .

**DEPUTY SPEAKER :** டிமாண்டைப் பற்றிப்பேசுங்கள். ஐந்து நிமிஷம் தான் இருக்கிறது.

* **SRI T. KARIA GOUNDER :** கனம் நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த மானியத்தை நான் வாயார வாழ்த்தி மனதாரப் புகழ்ந்து ஒப்புக்கொண்டு, வெட்டுப் பிரேரணையை எதிர்த்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கனம் நிதியமைச்சர் அவர்கள் உலகிலேயே எங்குமில்லாத முறையில், முன்னேற்றப்பாதையை வகுத்துக்கொண்டு, நல்லதொரு திட்டத்தையும் அமைத்துக் கொண்டு, அவர்களும் இந்த இலாகா சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் செய்யும் நன்மைகளுக்கெல்லாம் நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

கல்வி சீர்திருத்த மாநாடுகள் பற்றிக் குறை கூறப்பட்டது. வேலூரில் ராஷ்ட்ரபதி திறந்து வைத்த சமயத்தில் இவர்கள் வந்து பார்த்திருக்க வேண்டும். பாத்திரக் கடைக்காரர்களிடம் போய் விளம்பரத்திற்காக வாங்கி வந்தார்கள் என்கிறார்கள். அந்தக் கூட்டத்தைப் பார்த்திருந்தால், அங்கே நிலவிய உற்சாகத்தைப் பார்த்திருந்தால் தெரியும் ; சரித்திரத்தில் என்றும் கண்டிராத அளவில் அது சிறப்பாக நடந்தது ; நான் கூட வசூல் செய்தேன். பணம் கொடுக்க மக்கள் முன் வருகிறார்கள், கட்டிடம் கட்டிக் கொடுக்க மக்கள் முன்வருகிறார்கள். எனது நண்பர் சொன்னதுபோல், தங்கள் ஊனக்கண்களை மறைத்து வைத்து விட்டு ஞானக் கண்ணோடு பார்க்க வேண்டுகிறேன், சர்க்கார் மக்களுக்காக என்னென்ன உதவிகள் செய்து வருகிறார்கள் என்பதை. எதற்கெடுத்தாலும், ஆசிரியர்களை அதற்காக உபயோகப்படுத்துகிறார்கள், இதற்காக உபயோகப்படுத்துகிறார்கள் என்று



22nd March 1961] [Sri T. Karia Gounder]

குற்றம் சொல்லிக்கொண்டேயிருப்பதில் பிரயோஜனம் இல்லை. எல்லோருக்கும் இலவசக் கல்வி கொடுக்க வேண்டுமென்ற திட்டத்தை, தாழ்ந்த ஜாதி, உயர்ந்த ஜாதி என்ற வித்தியாசம் இல்லாமல் பொருளாதார அடிப்படையில் ஏழை மாணவர்களுக்கு இலவசக்கல்வி அளிக்க முன் வந்திருக்கிறார்கள், சர்க்கார். நண்பர் சந்திரசேகரன் அவர்கள் கூறியது போல் நாட்டு மக்கள் எல்லோருக்குமே உயர்நிலைப் பள்ளி வரை இலவசக் கல்வி அளிப்பதற்கு கல்வியமைச்சர் அவர்கள் மீண்டும் புனராலோசனை செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். மதிய உணவுத் திட்டத்தைப் பற்றி நான் ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். பள்ளிக்கூட நேரத்தில் ஆசிரியர்கள் போய் கேட்பதில்லை. ஆசிரியர்களுக்குள்ளேயே இப்பொழுது போட்டியிருக்கிறது. அதிலும் இப்பொழுது சம்பளக் கமிஷன் சிபாரிசு பிரகாரம் அவர்களுக்கு சம்பள உயர்வு கொடுத்திருப்பதில் அவர்கள் மிக்க மகிழ்ச்சி அடைந்திருக்கிறார்கள். நான் படிக்கும் காலத்தில் ஆரம்பப் பள்ளி ஆசிரியருக்கு 6 ரூபாய்தான் சம்பளம் இருந்தது. இப்பொழுது ஒரு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கடைசியில் விலகிச் செல்கிறபோது 90 ரூபாய் பெறுகிறார். பள்ளி நேரத்தில் ஆசிரியர்கள் பிள்ளைகளின் பெற்றோர்களை அணுகுவதில்லை. அவர்களாகவே, உணர்ச்சியோடு செல்கிறார்கள். அதுவும் அடுத்த பள்ளியில் 50 பிள்ளைகளுக்கு இலவச உணவு கொடுக்கிறார்கள் என்றால் நாம் 100 பிள்ளைகளுக்காவது பகல் உணவு கொடுக்க வேண்டுமென்று நினைக்கக் கூடிய நிலையில்தான் இன்று ஆசிரியர்கள் இருக்கிறார்கள். மதிய உணவுத் திட்டம், உடை வழங்கும் திட்டம் இவைகளில் ஆசிரியர்கள் நல்ல மனப்பான்மையோடு உணர்ச்சி வசமாக உற்சாகமாக ஈடுபட்டிருப்பது போற்றத்தக்கது. பின்னர், கலா நிகழ்ச்சிகள் பற்றிச் சொன்னார்கள். கலா நிகழ்ச்சிகள் பற்றி எங்களுக்கு அனுபவம் இல்லை, பழக்கமில்லை. கலைநிகழ்ச்சிகள் நடத்தி நிதி திரட்ட எங்களுக்கு பழக்கமில்லை. பள்ளிக்கூடங்கள் திறந்தார்கள். உடனே மூடி விட்டார்கள், இந்த அவல நிலை இந்நாட்டில் இருப்பதாக பத்திரிகைகளில் பார்க்கிறோம் என்றெல்லாம் சொன்னார்கள். எங்கள் ஜில்லாவில் பள்ளிக்கூடம் இல்லாத கிராமமே கிடையாது. 300 உயர்நிலைப் பள்ளிகள் . . .

**DEPUTY SPEAKER : The hon. Member will resume his seat.**

**SRI T. S. RAMASWAMI :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த கல்வி இலாகா, மிகச் சிறந்த முறையில் நடக்கக்கூடிய ஒரு இலாகா என்பது நாம் மட்டுமல்ல இந்திய தேசத்திலுள்ள எல்லோருமே ஒப்புக் கொள்ளக்கூடிய ஒன்றாகும். வருகிற ஆண்டு கல்வித் துறைக்காக 20·81 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது அரிய பெரிய திட்டங்களை நாம் வகுத்திருக்கிறோம். இலவசக் கல்வி பொறுத்த மட்டில் ஒரு " .·.பேஸ்ட் ப்ரோக்ராமாக " இரண்டாவது ஆண்டில் இருக்கிறோம், அடுத்த ஆண்டு மூன்றாவது ஆண்டுக்கு போகப்போகிறோம். செண்ட் பர்ஸெண்ட்டும் பள்ளிக்குச் செல்லக்கூடிய அளவிற்கு அதற்கான திட்டங்களும், சட்டமும் நமக்கு தேவை என்பதை நான் எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். பதினொன்றாவது வகுப்பு வரை ஏழை மாணவர்களுக்கு இலவசக் கல்வி கொடுக்கப்போவதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது, வரவேற்கத் தக்க விஷயமாகும். அதே நேரத்தில் எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள் குறிப்பிட்டபடி, 1,200 ரூபாய் என்று இருப்பதற்குப் பதிலாக எல்லோருக்குமே இலவசக் கல்வி கொடுப்பதென்றால், நிலக் கோட்டை அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டார்கள், 11 சதவிகிதம் பேர்கள்தான் இந்த 1,200 ரூபாய்க்கு மேற்பட்டு வருமானம் வரக் கூடியவர்களின் குழந்தைகள் இருப்பார்களென்று. ஆகவே, எல்லோருக்குமே இலவசக் கல்வி கொடுக்கக்கூடிய திட்டத்திற்கு அதிகச் செலவு ஆகப் போவதில்லை. கேரளாவை எடுத்துக் கொண்டால் அங்குள்ள ஜனத் தொகை ஏறக்குறைய இங்குள்ளதற்கு பாதி அளவு இருக்கும். 1½ கோடியிருக்கிறது. அங்கு பொருளாதார அடிப்படையில் இல்லாமல் எல்லோருக்குமே இலவசக் கல்வி கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். " போர்த் பாரம், பிப்த் பாரம் " என்று ஆகி விட்டது, அடுத்தவருடம் " ஸிக்ஸ்த் " வரை இலவசக் கல்வி என்று குறிப்பிட்டிருக்கிறார்கள், அங்கு. கல்விக்காக சென்ற ஆண்டு அவர்கள் 16 கோடி செலவழித்து, வருகிற ஆண்டு 18 கோடி செலவழிக்கிறார்கள் என்றால் நாம் 20 கோடி செலவழிப்ப

[Sri T. S. Ramaswami] [22nd March 1961]

தோடு கூடுதல் அதிகப்படியாக ஒரு 3 கோடி செலவழித்தால் எல்லோருக்குமே 11 வகுப்பு வரை இலவசக் கல்வி வசதி அளிக்க முடியும், அதோடு நம் மாநிலம் இந்தியாவில், பல துறைகளில் எடுத்துக்காட்டாக விளங்குவது போன்று கல்வித் துறையிலும் நாம் ஒரு எடுத்துக்காட்டாக இருக்க முடியும் என்று எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். மதிய உணவுத் திட்டத்தைப் பொறுத்த மட்டில், அது எவ்வாறு நடைபெறுகிறது என்பதை ஆராய ஒரு கமிட்டி வேலை செய்து கொண்டு வந்தது. அவர்கள் அறிக்கை சமர்பித்து விட்டார்கள் என்று கருதுகிறேன். அதில் பல ஊழல்கள் நடந்து கொண்டு வருகின்றன. அரசாங்கம் எவ்வளவு தூரம் நல்லெண்ணத்தோடு காரியங்கள் செய்து கொண்டு வருகிறார்களோ அந்தளவு நல்லெண்ணத்தோடு பலயிடங்களில் காரியங்கள் நடைபெறவில்லை. 150 மாணவர்களுக்கு பகல் உணவு கொடுக்க வேண்டுமென்றால், உண்மையில் கொடுப்பது 100 மாணவர்களுக்குத்தான் கொடுக்கப்படுகிறது என்ற குறை பல ஜில்லாக்களில் பலயிடங்களில் இருக்கின்றன. ஆனால் கன்னியாகுமரி ஜில்லாவைப் பொறுத்த மட்டில் அதற்கு நேர்மாறான முறைதான் இருக்கிறது. அங்கு 100 மாணவர்களுக்கு அலவென்ஸ் கொடுத்தால் 150 மாணவர்களுக்கு கொடுக்கப்படுகிறது. கமிட்டி அங்கத்தினர்கள் இதுபற்றி அறிவித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். இதை அரசாங்கம் கவனித்து வேண்டியது செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, கன்னியாகுமரி ஜில்லாவும், செங்கோட்டை தாலூகாவும் இதோடு இணைந்த பிறகு, இங்குள்ள பே ஸ்கெயில்லை அங்கும் விஸ்தரித்திருக்கிறார்கள். க்ராஜுவேட் டீச்சர்ஸை எடுத்துக் கொண்டால் 4 ஆண்டுகள், 10 ஆண்டுகள் சர்வீஸ் ஆனவர்கள். சர்வீஸ் குறைவாகயிருந்தாலும் சரி அல்லது கூடுதலாக இருந்தாலும் சரி, அங்குள்ளவர்களுக்கும் இங்குள்ளவர்களுக்கும் அதாவது இரண்டு இடங்களிலும் ஒரேவித சர்வீஸ் போட்டிருந்தாலும், அங்குள்ளவர்களின் சம்பளம் இவர்களை விட குறைவாகயிருக்கிறது என்று அங்குள்ள க்ராஜுவேட் டீச்சர்ஸ் வருத்தப்படுகிறார்கள். கன்னியாகுமரி ஜில்லாவில் உபாத்தியாயராக இருப்பது எங்கள் குற்றமா என்று அவர்கள் கேட்கிறார்கள். அங்குள்ள ஒருவருக்கு நாலு வருடம் சர்வீஸாகிறது, இங்குள்ள ஒருவருக்கு நாலு வருடம் சர்வீஸாகிறதென்றால் இங்குள்ளவரை விட அங்குள்ளவருக்கு சம்பளத்தில் ஐந்து ரூபாய் குறைவாக வித்தியாசமிருக்கிறது. பத்து வருடம் சர்வீஸ் என்றால் பத்து ரூபாய், 15 வருடங்கள் சர்வீஸ் என்றால் 30 ரூபாய் குறைவு என்றிருக்கிறது நிலைமை. ஏன் இந்த வித்தியாசம்? ஆகவே, இதைக் கவனித்து அங்குள்ளவர்களின் குறையைக் தீர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பின்னர், லைப்ரரீஸ். எல்லா உயர்நிலைப் பள்ளியிலிருந்தும் மாணவர் ஒருவருக்கு ஒரு ரூபாய் வீதம் லைப்ரரி பீஸ் வாங்குகிறார்கள். எஸ். எல். பி. ஸ்கூல் என்பது கன்னியாகுமரி ஜில்லாவில் வைத்ததே பெரிய பள்ளிக் கூடம். அங்கு இரண்டு ஆண்டுகளாக லைப்ரரிக்கு புத்தகங்களே வாங்கவில்லை. ஆனால் வருடாவருடம் மாணவர்களிடமிருந்து ஆயிரக்கணக்கான ரூபாய் லைப்ரரி பீஸாக வாங்கப்படுகிறது. இதர ஜில்லாக்களில் அரசாங்கத்திலிருந்தே லைப்ரரி புத்தகங்கள் வாங்க அதிகமாக பணம் கொடுக்கிறார்கள். ஆனால் இங்கேயோ, மாணவர்கள் கொடுக்கக்கூடிய பணத்திலிருந்தாவது, அவர்களிடமிருந்து வசூலிக்கும் தொகையையாவது புத்தகங்கள் வாங்க உபயோகிக்க வேண்டும்., (மணி அடிக்கப்பட்டது). தமிழ் ஹயரைப் பற்றி ஒரு வார்த்தை. தமிழ் ஹயர் என்ற முறை அங்கு வழங்கி வந்தது. தமிழ் ஹயர் பாஸ் செய்தால், அதன் தரம் எஸ்.எஸ்.எல்.ஸி. தரத்திற்கு ஒப்பாகும் அது, ஆங்கிலம் தவிர. ஆங்கில்ம் தவிர மற்றவைகளில் அதன் தரம் எஸ்.எஸ்.எல்.ஸி. யை விட உயர்ந்ததே. இன்று அப்படி ஹயர் பாஸ், செய்து விட்டு ஆசிரியர் வேலையில் இருக்கக்கூடியவர்களின் நிலை, செகண்டரி டீச்சர்ஸின் நிலையில்லாது ப்ரைமரி டீச்சேர்ஸின் நிலையில்தான் அவர்கள் இருக்கிறார்கள். அதை புனர் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களின் தரம் ஒருவிதத்திலும் குறைந்ததல்ல. தமிழில் எல்லாம் சொல்லிக் கொடுப்பதால் 11 வருடங்களில் படிக்க வேண்டியதை அவர்கள் 9 வருடத்தில் படித்து விடுகிறார்கள். அவர்களை செகண்டரி ஸ்கூல் டீச்சர் தரத்தில்தான் வைத்திருந்தார்கள். இதையும் புனர்பரிசீலனை செய்ய வேண்டும். . . . . . . . . . .



22nd March 1961]

*SRI M. S. SELVARAJAN: தலைவர் அவர்களே, கல்வித் துறை மான்யத்தை நான் ஆதரிக்கிறேன். அன்னிய ஆட்சி காலத்தில் நமக்கு கிடைக்கின்ற கலால் வருமானத்தின் ஏற்றத்தாழ்வுக்குத் தக்கபடி மான்யம் பெற்று வந்த கல்வி இலாகாவானது கடந்த பத்துவருட காலத்தில் கவர்ச்சிகரமான முறையில் முன்னேறியிருக்கிறது. குறிப்பாக 11 ஆயிரம் பள்ளிக்கூடங்களை புதிதாக ஆரம்பித்ததுடன் இப்போது ராஜ்ய வருமானத்தில் நான்கில் ஒரு பங்கை கவரும் அளவிற்கு பணியாற்றி வருகிறார்கள் கல்வி இலாகாவினர். இந்த வருடம் புதிதாக நம்முடைய ராஜ்ய அரசாங்கம் ஏழை மாணவர்களுக்கு 11-வது வகுப்பு வரையிலும் கல்விச் சலுகை அளிக்க வேண்டும் என்று முடிவு செய்திருக்கிறது. இதை அமல் நடத்துவதில் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். முக்கியமாக இப்போது இருக்கின்ற முறையில் பாக்வார்ட், மோஸ்ட் பேக்வார்ட் இனங்களுக்கு சலுகை வழங்கப்பட முதல் ஆண்டு மானேஜ்மெண்டுகளுக்கு அட்வான்ஸ் கிராண்ட் கொடுக்கப்படாததின் காரணமாக சில மானேஜ்மெண்ட்கள் தடுமாற நேர்ந்தது. ஆகவே இப்புதிய சலுகையை அமுல் நடத்துவதற்கு மானேஜ்மெண்டு பாடசாலைகளுக்கு ஆரம்ப காலத்திலேயே கிராண்டை வழங்குவதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு ராஜ்ய அரசாங்க அதிகாரிகள் "பாவர்டி சர்டிபிக்கேட்" கொடுப்பதில் வருமானம் குறித்து மனுவுடன் ஒரு உறுதிமொழியையும் பெற்றோரிடம் வாங்க வேண்டும். அந்த உறுதிமொழி தவறாக இருக்கும் என்றால் அதற்கு பின்னால் அதன் மீது நடவடிக்கை எடுக்க வேறு சட்டதிட்டங்களைச் செய்து கொள்ளலாம். சில இடங்களில் பெரிய குடும்பமாக இருக்கலாம், அவர்களுக்கு விசேட சலுகை கொடுக்க வேண்டும். இவைகளை எல்லாம் நாம் கவனிக்க வேண்டும். இதில் நாம் எடுத்திருக்கக்கூடிய முயற்சி மிகவும் பெரிது. இதை மிகவும் தைரியத்தோடு நிறைவேற்றவேண்டும். இதை சரியான முறையில் நடத்தினால் தான் இந்தத் திட்டம் போற்றத்தக்கதாக இருக்கும். உணவு, இலவச உடை அளிக்கும் விஷயத்தில் "பேரன்ஸ் அஸோஸியேஷனையும்" சேர்த்து அவர்களின் பிரதிநிதிகளை பரிசீலனை கமிட்டியில் சேர்த்துக் கொள்ளவேண்டும். இதில் பெற்றோர்களின் பிரதிநிதிகளையும் நேரடியாக சேர்த்துக்கொள்வது தான் நல்லது என்று நான் அபிப்பிராயப்படுகிறேன். பாடசாலையில் உணவு வழங்கப்பட்ட விபரத்திற்கு வாராவாரம் பெற்றோர்களின் எழுத்து மூலமான அத்தாட்சி பெற வகை செய்யலாம். 12-30 p.m.

குறிப்பாக, செகண்டரி கல்வி, கல்லூரி கல்வி சம்பந்தமாக சென்னை சர்வகலாசாலை உப அத்யட்சகர் அவர்கள் ஒருவிதமாகவும் அரசாங்கத் தரப்பில் ஒரு விதமாகவும் கருத்துக்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. கல்வித்துறையில் கருத்து வேறுபாடுகள் இருப்பதாக மக்களிடத்தில் அதிலும் முக்கியமாக மாணவர்களிடத்தில் ஒரு எண்ணம் இருந்து கொண்டிருக்கிறது. இதன் காரணமாக பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஆகவே இதில் கவனம் செலுத்தி ஒரு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்லூரிகளில் இருக்கின்ற இடங்கள் பூர்த்தியாவதை பொறுத்தவரையில், எனக்குத் தெரிந்த வரையில் எங்கள் ஜில்லாவில் பாளையங்கோட்டையிலுள்ள செண்ட் ஜான்ஸ் கல்லூரியில் மட்டும் தான் ஒதுக்கப்பட்ட இடங்கள் பூர்த்தியாகியிருக்கிறது என்றும் வேறுள்ள கல்லூரிகளில் சென்னை ராஜ்யத்தில் ஆர்ட்ஸ் காலேஜ் போன்ற கல்லூரிகளில் ஒதுக்கப்பட்ட இடங்கள் இன்னும் காலியாகவே இருக்கின்றன என்றும் என்னுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. என்னுடைய கவனத்திற்கு இவ்வளவு தான் வந்திருக்கிறது என்றால் என்னுடைய கவனத்திற்கு வராமல் எத்தனையோ இடங்கள் இதேபோன்று இருக்கலாம். ஆகவே இதற்குக் காரணம் என்ன என்பதை நன்றாக பரிசீலனை செய்து பார்த்து இவ்விதமான குறைகள் இல்லாதவாறு பார்த்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதோடு இப்போது இருக்கின்ற பாடசாலைகளை உயர் மட்ட, ஹையர் செக்கன்டரி பாடசாலைகளாக மாற்ற வேண்டும் என்றுள்ள திட்டத்தில் சில பாடசாலைகள் மாற்றப்படவிருக்கின்றன. ஆனால் இதே முறையில் போய்க்கொண்டிருந்தால் எல்லா பாடசாலைகளையும் மாற்றுவதற்கு

[Sri M. S. Selvarajan] [22nd March 1961

இன்னும் எத்தனை தலைமுறையாகுமோ என்றுள்ள பயம் ஏற்படுகிறது. இவைகளையெல்லாம் கவனிக்கிறபொழுது கல்வியமைப்பு முறையில் இன்னும் முடிவில்லாமல் குழப்பமிருப்பதாக தோன்றுகிறது. இதில் ஏதாவது சிக்கல்கள் இருக்கும் என்றால், இதற்கென்று தனியாக மீண்டும் ஒரு உயரிய கமிட்டியை அமைத்து அவசரமாக முடிவு எடுப்பது தான் நல்லது என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன். பஞ்சாயத்து யூனியன்களுக்கு கல்விப் பொறுப்புகளையும் வருங்காலத்தில் நாம் கொடுத்து விடப்போகிறோம். அதில் அதிக கவனம் தேவை. முக்கியமாக சில பள்ளிக்கூடங்களை பஞ்சாயத்து ஏரியாக்களில் பஞ்சாயத்துக்களே 30, 40 வருடங்களாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இம்மாதிரிப்பட்ட பள்ளிக்கூடங்களை அவர்களிடமே பிரைவேட் மானேஜ்மென்ட்களை விட்டிருப்பதுபோல் விட்டு விட்டால் என்ன தவறு என்பதையும் நாம் ஆலோசித்துப் பார்க்கவேண்டும். அடுத்ததாக, பேஸிக் எஜுகேஷன் எந்த அடிப்படையில் நடந்து கொண்டிருக்கிறது, இதை இன்னும் நல்ல முறையில் எப்படி இயங்கச் செய்ய முடியும், என்பதைப்பற்றி ஆலோசிக்க வேண்டும். அதோடு இதில் ஆசிரியர்கள் சுமார்ச்சிகரமான முறையில் எந்த அளவில் பணியாற்ற முடியும் என்பதைப் பற்றியும் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பேசிக் முறை கல்விதான் கதிமோட்சம் என்றால் இரண்டாவது திட்டகாலத்தில் முதல் நான்கு ஆண்டுகளில் திட்ட இலக்குப்படி, பாடசாலைகள் பேசிக்காக மாற்றப்படவில்லை, ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப் படவில்லை. கடைசியாண்டில்தான் அவசர அவசரமாக நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இவைகளுக்கெல்லாம் காரணமென்ன ?

மேலும், செக்கண்டரி கிரேட், டிக்ளயேர்ட் ஹயர் கிரேடு போஸ்டில் வேலை செய்யக்கூடியவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் செகண்டரி கிரேடு சம்பளம் பெறுகிறார்கள். ஆனால் அவர்களுக்குப் போதிய வெயிட்டேஜ் கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே அவர்களுடைய குறைகளையும் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆசிரியர் பயின்ற கல்விக்குத் தக்க ஊதியத்தைப் பெற்று உற்சாகமாய் பணியாற்றக் கூடிய அளவு வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக நான் கேட்டுக்கொள்வது, திருநெல்வேலி ஜில்லாவில் சீக்கிரமாகவே ஒரு இன்சினியரிங் காலேஜ்-ஜை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**SRI A. GOVINDASAMI** : கனம் சட்டமன்ற உதவித் தலைவர் அவர்களே, இங்கு கொண்டுவரப்பட்டிருக்கும் கல்வி மான்யத்தின் மீது கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப்பிரேரணையை ஆதரித்து பேசுகின்ற நேரத்தில், அரசியல் சட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் உறுதிமொழியை நிறைவேற்ற நமது கல்வி அமைச்சர் அவர்கள் தவறிவிட்டார்கள் என்பதை சுட்டிக்காட்டவும் விரும்புகிறேன். கடந்த பத்து வருட காலமாக இதே அமைச்சர் அவர்கள் கல்வி அமைச்சராக இருந்தும், அரசியல் சட்டத்தில் எல்லோருக்கும் இலவச கட்டாயக் கல்வி அளிக்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டிருந்தும், அதை ராஜ்ய சர்க்கார் தாங்களும் நிறைவேற்ற முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்று சொன்னாலும் கூட, மூன்றாவது ஐந்தாண்டுத்திட்ட காலம் ஆரம்பமாகிற இந்த நேரத்திலும் சரியானபடி நிறைவேற்றப்படவில்லை, ஏன் இந்த அளவுக்கு காலதாமதம் ஆகிறது என்பதை கல்வி அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும்.

**THE HON. SRI C. SUBRAMANIAM** : நீங்கள் எந்த உலகத்தில் இருந்து கொண்டு பேசுகிறீர்கள் என்று தெரியவில்லை.

**SRI A. GOVINDASAMI** : நான் இந்த உலகத்தில் இருந்து கொண்டு தான் பேசுகிறேன். அரசியல் சட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்ற உறுதிமொழிப்படி நீங்கள் நடக்கவில்லை, அதைத்தான் நான் சுட்டிக்காட்டுகிறேன். மேலும் கிராமங்களில் பள்ளிக்கூடங்களை அமைப்



22nd March 1961] [Sri A. Govindasami]

பதைப் பொறுத்தவரை 300 மக்கள் இருக்கக்கூடிய இடத்தில் கூட பள்ளிக்கூடம் ஏற்படுத்தப்படும் என்று சொல்லப்பட்டது. எங்களது தொகுதியில் 1,000 மக்கள் இருக்கக்கூடிய மூன்று கிராமங்களில் பள்ளிக்கூடம் ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டும் இதுவரை பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தவில்லை, என் தொகுதியில் இருக்கின்ற பள்ளிச்சேரி, விப்புதூர், சேர்ந்தனூர் என்ற மூன்று கிராமங்களிலும் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு மைல் தூரத்திற்குள் பள்ளிக்கூடம் இருந்தால் அந்த இடத்தில் வேறு பள்ளிக்கூடம் ஏற்படுத்த முடியாது என்று இருக்கிற சட்டத்தின் அடிப்படையில் வேறு பள்ளிக்கூடம் அமைக்க முடியாது என்று சொல்லப்படுகிறது. **'within a radius of one mile'** என்கிற சட்டத்தின் அடிப்படையில் வேறு எங்காவது, ஒரு மைலுக்குள் பள்ளிக்கூடம் இருந்தாலும் அதை எடுத்து மாற்றக்கூடிய நிலைமை ஏற்படுகிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதன் காரணமாக ஐந்தாறு வயதுள்ள குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்கு நடந்து போக கஷ்டப்படுகிறார்கள். அதோடு முக்கியமாக, அரசாங்க உதவி பெற்று வரும் பள்ளிகளில் சம்பளத்தில் 15 சதமானம் என்ற அடிப்படையில் மான்யம் கொடுக்கப்பட்டு வந்தது. இதன் காரணமாக இப்போது பல பள்ளிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. மேலும் இதன் மூலம் இப்போது கிடைக்கிற சலுகை 7½ சதமானம் என்று அவர்கள் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். இதைக்கொண்டு அவர்கள் நிர்வாகத்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். வாடகை 50 ரூபாய், 80 ரூபாய் என்று கொடுக்கவேண்டியிருக்கிறது. ஆகவே இதை உயர்த்தி 10 சதவிகிதம் என்ற அடிப்படையில் கொடுக்கவேண்டும், அப்படி கொடுத்தால் தான் இந்தப்பள்ளிகள் எல்லாம் நல்லமுறையில் இயங்க முடியும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னையில் சர்ச் பார்க் கான்வென்ட் என்கின்ற பள்ளியில், இந்தப்பள்ளி அரசாங்கத்தினுடைய உதவியைப் பெறவில்லை என்றிருந்தாலும் கூட, சர்க்காரினுடைய அனுமதியைப் பெற்றுத்தான் நடக்கிறது. இந்தப்பள்ளியில், ஒரு குழந்தைக்கு ஸ்டாலின் என்கிற பெயர் இருந்ததின் காரணமாக அந்தக்குழந்தைக்கு அந்தப்பள்ளியில் இடம் கொடுக்க மறுக்கப்பட்டது. இந்த நிலை ஏற்பட்டது வேறு யாருக்குமல்ல, ஸ்டாலின் என்ற பெயர் கொண்ட குழந்தை, நம்முடைய அங்கத்தினர் கருணாநிதி அவர்களின் புதல்வன் தான். அவர்களுக்குத்தான் இந்த நிலைமை ஏற்பட்டது.

(கனம் ஸ்ரீ சி. சுப்பிரமணியம் : திராவிட நாட்டிலுள்ளவர்களின் பெயரை கொடுக்காமல் ஏன் ரஷ்யாவிலுள்ளவர்களின் பெயரை கொடுத்திருக்கிறார்கள்!) பள்ளிகளில் மதிய உணவு, இலவச உடை இவைகள் கொடுத்து வருகிறார்கள். இதற்கான திட்டங்களை ஓரளவு நல்ல முறையில் நடத்தி வருகிறார்கள், அதற்காக திரு. சுந்தரவடிவேலு அவர்களை நான் பாராட்டுகிறேன். அதோடு இவர்களது முயற்சியைப் பின்பற்றி வேறு பல மாகாணங்களும் நடவடிக்கை எடுக்க முன் வந்திருக்கிறார்கள். உடை வழங்கும் விஷயத்தில் ஏழை ஆசிரியர்கள் வற்புறுத்தப்படுகிறார்கள் என்பதை இங்கு பல முறை எடுத்துக்காட்டியிருக்கிறோம். ஏற்கனவே இந்தக் குழந்தைகள் ஏழைகளாக இருப்பதினால்தான் அவர்கள் அரை நிர்வாணமாக பள்ளிக்கு வரக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. இந்த நிலையில் ஆசிரியர்கள் போய் பெற்றோர்களிடத்தில் போய் நிதி கேட்கும்போது, இதனால் ஏதாவது பாதகம் ஏற்பட்டுவிடுமோ என்று பயந்து கையில் பணம் இல்லாவிட்டாலும் கூட, ஏதாவது தட்டுமுட்டு சாமான்களை கொடுத்தாவது இதற்கு நிதி உதவுகிறார்கள். இந்த நிலையைப்பற்றி நானும் திரு. சுந்தரவடிவேலு அவர்களும் கலந்து கொண்ட விழுப்புரம் மகாநாட்டில் குறிப்பிட்டிருக்கிறேன். வேண்டுமென்றால் பணக்காரர்களிடத்தில் வாங்கி ஏழைகளுக்கு கொடுக்கட்டும், அதுவும் போதவில்லை என்றால் செலவில் 50 சத விகிதத்தை அரசாங்கமே ஏற்றுக் கொள்ளவேண்டும். இந்தபகல் உணவு ஆறு ந.பை.-க்கு கொடுக்கப்படுகிறது, காங்கிரஸ் சர்க்காரால் ஆறு ந.பை.-வுக்கு சோறு போடப்படுகிறது என்று காங்கிரஸ் பிரசாரம் வேண்டுமென்றால் செய்யலாமே தவிர, உண்மையிலேயே வயிறார ஒரு குழந்தைக்கு ஆறு ந.பை.-க்கு சோறு போட முடியுமா என்பதைப்பற்றி யோசித்துப்பார்க்கவேண்டும். ஆறு நயாபைசாவைக்கொண்டு எந்தக் குழந்தைக்கும் நிறைவை காட்டிவிட முடியாது.

[Sri A. Govindasami] [22nd March 1961

மேலும் கணவனும் மனைவியுமாக இருக்கின்ற இரண்டு ஆசிரியர்களை வெவ்வேறு இடங்களில் போடக்கூடாது. இவர்களை பிரிப்பதால் பள்ளிகளில் நல்ல முறையில் வேலை நடைபெறுது. அமைச்சர் அவர்கள் புன்னகை புரிகிறார், இதிலிருந்து நான் சொல்லுவதின் கருத்தை அவர்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்று நம்புகிறேன்.

பள்ளிகளை பிரிப்பதில், ஒரே பிளாக்கின் கிழ் இருக்கின்ற பகுதிகளிலுள்ள பள்ளிகளை ஒன்றாகச் சேர்த்து பிரிக்கவேண்டும். அப்போது தான் நிர்வாகத்திற்கு சிரமமில்லாமல் இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் இந்த விஷயத்தில் கவனம் செலுத்துவார்கள் என்றும் நம்புகிறேன்.

குறிப்பாக ஆசிரியர்களின் சம்பள உயர்வைப்பற்றி இங்கு சொல்லப்பட்டது. இப்போது ஏற்பட்டிருக்கும் விலைவாசி உயர்வின் காரணமாக தங்களுக்கு கிடைத்து வரும் சம்பளம் போதாது என்று ஆசிரியர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். டாக்டர் ஸ்ரீமாலி அவர்கள் பார்லிமென்டில் சொன்னதை வேறு விதமாக கன அங்கத்தினர் ஒருவர் கூறி எதிர்கட்சியில் இருந்து சொல்லப்பட்ட கருத்துக்கள் அறியாமையினால் சொன்னது என்ற முறையில் பேசினார்கள். குறிப்பாக மயிலம், சிதம்பரம் கல்லூரிகளில் பயின்று இப்போதும் வேலை கிடைக்காமல் எத்தனையோ பேர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டுமென்றால் உடனேயோ இந்த அரசாங்கம் வேலை கொடுக்கட்டும் என்று குறிப்பிட விரும்புகிறேன். தொழில் கல்வியைப் பொறுத்தவரையில் இதில் பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் பலர் பாதி ஊதியம் பெற்றுவருகிறார்கள். இவர்கள் பெற்றுவருகின்ற சம்பளம் குறைவு, அதோடு இவர்களுக்கு கொடுத்த சம்பள உயர்வும் போதாது.

* **Sri S. RAMASAMI THEVAR** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில வார்த்தைகளை நான் சொல்ல விரும்புகிறேன். நமது மாகாணம் கல்வித் துறையில் முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்றாலும், இருக்கக்கூடிய அறியாமையைப் போக்க நாம் இன்னும் பாடுபட்டாக வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். இப்போது 100-க்கு 30 பேர்கள் தான் படித்திருக்கிறார்கள் என்றால் கூடிய விரைவில் எல்லோரையும் படித்தவர்களாக ஆக்குவது நமது கடமை. எங்கும் தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. கிராமங்களில் பள்ளிகள் அமைந்திருந்தாலும் படிப்பின் தரம் குறைவாக இருக்கிறது. இதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. 60—70 பிள்ளைகள் இருக்கக் கூடிய பள்ளிகளில் கூட ஒரு ஆசிரியர் தான் வேலை செய்கிறார். இந்த நிலைமையைப் போக்கவேண்டும். ஆரம்பத்தில் பிள்ளைகளுக்கு நல்ல முறையில் கல்வி கற்றுக்கொடுக்கவேண்டும். இது மட்டும் வெட்டி வேலை அல்ல. அவ்வப்போதே பாடங்களைப் படித்தால் தான் கல்வியில் முன்னுக்கு வர ஏதுவாக இருக்கும். எல்லாவற்றையும் பின்னால் சேர்த்துப் படித்துக்கொள்வதென்பது முடியாது. ஆகவே, இதில் சர்க்கார் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக அநேக பள்ளிகளுக்கு கட்டிட வசதிகள் இல்லாமல் இருக்கின்றன. இதையெல்லாம் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முக்கியமாக 6 வயதிலிருந்து 11 வயது வரையில் கட்டாயமாக பிள்ளைகளைச் சேர்க்க திட்டம் வேண்டும். அறியாமையைப் போக்க கட்டாயக் கல்வியை அவசியம் புகுத்தவேண்டும்.

பிள்ளைகள் பள்ளிகளுக்கு வருவதற்கு கவர்ச்சி இருக்கவேண்டும். தாங்களாகவே வரும் அளவில் பாடங்களை போதிக்கவேண்டும். கிராமங்களில் இப்போது பூங்கா, விளையாடுமிடங்கள் எல்லாம் ஏற்படுத்தப்படுகின்றன. இவைகளை பள்ளிகளுக்கு அருகாமையில் ஏற்படுத்தினால் நன்றாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



22nd March 1961] [Sri S. Ramasami Thevar]

அடுத்தபடியாக, மதிய உணவுத் திட்டத்தில் ஆசிரியர்களை அதில் சேர்த்து அப்படி அந்த வேலையை அவர்களுக்குக் கொடுக்காமல் இதை பஞ்சாயத்துக்கு விட்டுவிடுவது நல்லது என்று பல காரணங்களைக் கொண்டு சொல்லிக் கொள்கிறேன்.

அறந்தாங்கி எல்லா வகைகளிலும் பிற்போக்காக இருக்கிற மாதிரி கல்வியிலும் பிற்போக்காக இருக்கிறது. $1\frac{1}{4}$ லட்சத்திற்கு மேல் ஜனத்தொகை உள்ள தாலுகா. ஆனால் அங்கு இரண்டு உயர்நிலைப் பள்ளிகள் தான் இருக்கின்றன. ஒன்று ஒரு சத்திரத்தில் நடக்கிறது. மற்றொன்று அறந்தாங்கியில் நடக்கிறது. அதற்கு போதிய கட்டிடம் இல்லை. இப்போது தான் கட்டிடம் கட்டப்படுகிறது. இன்னும் அறந்தாங்கியை பிற்போக்கில் விடாமல் நல்ல பள்ளிகளை ஏற்படுத்தி நல்ல முறையில் கல்வியைப் பரப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அமைச்சர் அவர்கள் அரும்பாடு பட்டு இந்த இலாகாவை நிர்வகித்து நல்ல தொகையை செலவழிக்கும் உயரிய நோக்கம் கொண்டிருக்கிறார். அதைப் பற்றி நாம் எல்லோரும் பாராட்ட வேண்டியதுதான். கல்விச் செல்வம்தான் மக்களுக்கு பெரும் செல்வம். ஆனால் இந்தத் துறையிலும் அரசியல் சேர்க்கை புகுந்து விடுவதால் தான் லட்சியம் நிறைவேறாது மாசுபடுகிறது. அரசியல் சேர்க்கை இல்லாமல் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : Hon. Member Sri Anbazhagan may now speak. I allot fifteen minutes for him. I hope he will try to finish his speech within that time.

* **Sri K. ANBAZHAGAN** : சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, இன்று கல்வி மானியத்தை ஒட்டித் தரப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தையும் அமைச்சர் அவர்கள் ஒரு முறை கூர்ந்து கவனிப்பார்களானால், இன்று நாங்கள் என்னென்ன கருத்துக்களைப் பேசவேண்டுமென்று கருதுகிறோமோ அவ்வளவு கருத்துக்களும் வெட்டுத் தீர்மானங்கள் வடிவத்தில் தரப்பட்டிருக்கிற காரணத்தினால் அவைகளைக்கொண்டே அவர் ஆலோசித்து கல்விநிலை குறித்து நல்ல பல முடிவுகளுக்கு வர முடியும் என்று நம்புகிறேன். ஏறத்தாழ 21 கோடி ரூபாய் இந்தக் கல்வித் துறைக்குச் செலவழிக்கும் நேரத்தில், இதில் பெரும் அளவுக்கு பொறுப்பு எடுத்துக்கொள்ளுபவர்—ஒருவர் அமைச்சர், இன்னொருவர் கல்வித் துறை இலாகா தலைவர். மற்றவர்களுக்கு அதிகப் பொறுப்பு இல்லை. நிதி அமைச்சரே கல்வித் துறைக்கும் சேர்த்து அமைச்சராக இருப்பதை விட அவரோடு ஒரு துணை அமைச்சர் கல்விக்கு என இருந்தால் நன்றாக இருக்கும். என்றாலும் நான் இப்படி சொல்லும் போது இது காலம் கடந்து விட்டதாகவே தோன்றும். ஆனால் கல்வித் துறையின் தலைவராக இருப்பவர் ஒருவராக இருப்பதால் இவ்வளவு பொறுப்பையும் ஏற்று அவரால் காலத்தில் நிறைவேற்ற முடிவதில்லை என்பதைக் கவனித்து தொடக்கக் கல்விக்கு தனி கல்வித் துறைத் தலைவர் என்ற முறையிலோ அல்லது கல்லூரிக் கல்விக்கு தனி கல்வித் துறைத் தலைவர் என்ற முறையிலோ வகுக்கப்பட்டு இத்துறை பிரிக்கப்படவேண்டும் என்ற கருத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைக் கூறுவதற்கு மற்றொரு முக்கிய காரணம் உண்டு. கல்வித் துறையைப் பற்றி சென்ற ஆண்டில் நான் பேசுகிறபோது கல்வி இலாகாவின் அறிக்கை அவ்வப்போது நமக்குக் கிடைப்பதில்லை—காலம் தாழ்ந்தே கிடைக்கிறது—இரண்டு ஆண்டுகளுக்குப் பின் கிடைக்கிறது என்று தெரிவித்தேன். கடைசியாக 1957–58-ம் ஆண்டின் அறிக்கைதான் வந்திருக்கிறதே தவிர 1958–59, 1959–60 ஆகிய இரண்டு ஆண்டுகளின் அறிக்கைகள் கிடைத்திருக்கத்தக்கவை—ஏனோ கிடைக்கவில்லை. அப்படி கிடைக்கும் போது மிக விரிவாக, பெரிதாக, வெளியிடப்படுவதால், ஒவ்வொன்றும் 6 ரூபாய், 7 ரூபாய் விலை அளவுக்கு அரசாங்கத்தின் பணம் செலவழிக்கப்படுகிறது. கல்வித் துறையினருக்கு கல்வி அமைச்சர் மூலமாக நான்

[Sri K. Anbazhagan] [22nd March 1961

தெரிவித்துக்கொள்வேன், இந்த நிர்வாக அறிக்கை இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை வெளிவந்தாலே போதும், ஆனால் ஒரு சுருக்கக் குறிப்பு 6 மாதங்களுக்கு ஒரு முறையோ அந்தந்த ஆண்டோ தரப்படுமானால் அது சிறப்பாக இருக்கும்.

அடுத்து கல்வி பற்றி அரசாங்கத்தின் நோக்கத்தைக் குறித்து யாரும் ஐயுறவில்லை—அமைச்சருக்கு நல்லெண்ணம் இருக்கிறது என்பதையும் கல்வி வளரவேண்டும் என்று கருதுகிறார் என்பதையும் குறித்து நானும் ஐயுறவில்லை—இந்த நோக்கம் கூட அமைச்சருக்கு இல்லை என்றால், அவர்கள் அமைச்சர்களா என்று கேட்பேனே தவிர, அவருடைய நோக்கத்தை மறுக்கவில்லை. ஆனால் அந்த நோக்கத்தை நிறைவேற்றும்போது ஏற்படுகிற சிக்கல்களைத்தான் எதிர் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களும், ஆளும் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களும் ஆளும் கட்சியைச் சேர்ந்த அம்மையாருங்கூட எடுத்துச் சொன்னார்கள். அரசாங்கம், ஒரு வகுப்புக்கு ஏறத்தாழ 40 பிள்ளைகள் இருக்கவேண்டும், குறைந்தது 35 பேர்கள் இருந்தால்தான் ஒரு ஆசிரியரை அனுமதிப்போம் என்று சொல்லுமானால் அதனால் எந்த அளவு கல்வியின் தரம் தாழ்கிறது என்று அமைச்சர் அவர்கள் அருள் கூர்ந்து பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். கான்வென்ட் பள்ளிகளின் தரம் உயர்வாக இருக்கிறது என்றால், ஒவ்வொரு வகுப்பிலும் பிள்ளைகளின் எண்ணிக்கையைக் குறைவாக வைத்திருப்பதுடன் ஆசிரியர்களுக்குப் பொறுப்பையும் பங்கிட்டுத் தருகின்றனர். நமது நிர்வாகத்தில் உள்ள பெரும்பாலான பள்ளிகளில் ஒரு ஆசிரியர் நியமிக்கப்பட்டுள்ளவற்றுள் அவரும் பள்ளியை மூடிவிட்டு நிதிவசூலுக்குப் போவதும் அல்லது இரண்டு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருந்தால் ஒரு ஆசிரியரிடத்தில் ஒப்படைத்துவிட்டு இன்னொருவர் வெளியே சென்று வசூல் செய்யப் போவதும் ஆக இப்படி ஒரு இக்கட்டான, சிக்கலான வருந்தத்தக்க நிலை நீடித்திருக்கிறது என்பதை உணர்ந்து, ஆராய்ந்து, அதை மாற்றுவதற்கான வழிகளைக் காணவேண்டும். அன்பழகன் எடுத்துச் சொல்கிற காரணத்தினால் குற்றம் சாட்டுவதற்காகவே சொல்லுகிறான் என்று எண்ணுவதை விட்டு, நாட்டு மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைக் கேட்டறிந்தாவது நடவடிக்கை எடுக்கவேண்டும். பல்வேறு இடங்களில் இருந்து இப்படிப்பட்ட குறைகளை எதிர் கட்சியிலுள்ள எங்களுக்கு எழுதுகிறார்கள், ஏதாவது ஒரு தடவை சட்ட மன்றத்தில் எடுத்துச் சொல்வார்கள் என்ற நினைப்போடு. அப்படி வந்தவற்றையே இங்கே குறிப்பிடுகிறேன். உண்மையிலேயே கோவை மாவட்டத்தில்—பவானி வட்டாரத்தில் என்று நான் நினைக்கிறேன்—ஆசிரியர்களும் மாணவர்களும் அரசாங்கம் விற்கும் பரிசுப்பத்திரங்களை குறைந்தது 15 ரூபாய் அளவுக்காவது வாங்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். தென் ஆற்காடு மாவட்டத்திலிருந்தும் ஆசிரியர்கட்கு தரும் தொல்லைகளைப் பற்றி எழுதியிருக்கிறார்கள். ஆசிரியருக்கு ஏற்படும் இக்கட்டான நிலைமை எந்தக் காரணத்தினால் ஏற்பட்டாலும் அதைத் தடுக்க முன்வரவேண்டும்.

மற்றொன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 35 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்று கணக்கிடுவதைவிட, அந்த முறையில் ஊதியம் கணக்கிடுவதை விட ஒரு வகுப்புக்கு ஒரு ஆசிரியர்— வகுப்பில் 35 பேர்கள் வரையில் இருக்கலாம்—என்று ஏற்க வேண்டும். கல்விக்காக 21 கோடி ரூபாய் செலவழிக்கிறார்கள். இதனால் இன்னும் 2—3 கோடி ரூபாய் செலவு கூடுதலானாலும் அமைச்சர் அவர்கள் இதனை அருள்கூர்ந்து கவனிக்கவேண்டும்.

ஆதாரக் கல்வியைப்பற்றித் திரும்பத்திரும்பச் சொல்லுகிறோம். இதைப் பற்றிய தெளிவான விளக்கம் யாரும் தரவில்லை. இதற்கு ஆதரவாகப் பேசுகிறார்களே தவிர, போற்றுகிறார்க[illegible] தவிர, ஆதாரத்தோடு இதனால் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது எ[illegible]வாரில்லை. இதுகுறித்து நான் பல்வேறு ஆசிரியர்களைக் கலந்த[illegible]கிறேன், இதனை ஆசிரியர்களே கேலி செய்கிறார்கள். ஆதார[illegible]பெறுபவர்கள் பயிற்சிப் பள்ளியிலே அளிக்கப்படும் பயிற்சினை[illegible]ாகச் சொல்லுகிறார்கள், புள்ளிகளில் உள்ள மாணவர்கள் எ[illegible] பெறுகிறார்கள் என்று எவரும் காட்ட முடியவில்லை.



22nd March 1961] [Sri K. Anbazhagan]

நமது நிதி அமைச்சர் அவர்கள் அண்மையில் மேல்நாடு சென்று வந்திருக்கிற காரணத்தினால் இந்த வகையான ஆதாரக் கல்வியை எந்தெந்த மேல் நாடுகளில் வைத்திருக்கிறார்கள் என்று கேட்க விரும்புகிறேன். மேற்கு ஜெர்மனி போன்ற நாடுகள் முன்னேறியது இந்த ஆதாரக் கல்வியினால்தான் என்று அவர் தெரிவிப்பாரேயானால் நானும் அதனை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன் என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

அடுத்து தொழில் கல்வி தேவை என்பதை நாட்டில் உள்ள எந்த நல்லறிவாளரும் மறுக்க மாட்டார்கள். படித்தவர்களிடம், நகத்தில் அழுக்குப்படாமல் வாழவேண்டும் என்றுள்ள மனப்பான்மையை மாற்ற வேண்டுமென்பதற்குத்தான் இந்தத் திட்டத்தைப் புகுத்துகிறோம் என்று சொல்லுபவர்கள் நம் நாட்டைப் பொறுத்த வரையில் மக்கள் தொழில் கிடைக்கவில்லை என்று கூறுகிறார்களே தவிர, தொழில் செய்யமாட்டோம் என்று கூறவில்லை என்பதை உணரவேண்டும். ஆனால் குழந்தைகட்கு தொழில்பயிற்சி பெற முடியாத வயதில், தேடமுடியாத பருவத்தில், ஆதாரக்கல்வி என்று நக்கிளி நாப்படுகிறது. நம் நாட்டில் செல்வர்கள் வீட்டு மக்கள் வேண்டுமானால் தொழில் செய்யும் மனம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் ஏழை எளியவர்களாக இருக்கிறவர்கள் எல்லோரும் தொழில் செய்யும் ஆர்வத்தோடுதான் இருக்கிறார்கள்.

ஆகவே அந்த மனப்பான்மையுள்ள மக்களுக்கு எந்த வகையில் தொழிற் கல்வி பெறுவதற்கு வசதி செய்ய முடியுமோ அதற்கான தனி முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆதாரக் கல்வியை வளர்ப்பதற்காக, 1,500 ஆரம்பப் பள்ளிகளை இதற்கு மாற்றவேண்டுமென்று நினைத்தோம், ஆனால் அதன்படி தொடங்கி இன்று 2,100 பள்ளிகளை இப்படி மாற்றிவிட்டோம் என்று பெருமையாகச் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் நான் இதற்காகக் கவலைப்படுகிறேன். வரவிருக்கும் அடுத்த ஆண்டிலே இன்னும் 1,000 பள்ளிக்கூடங்களை இப்படி மாற்றப் போகிறோம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. அதற்காக 1,000 ஆசிரியர்களுக்கு பயிற்சி தந்திருக்கிறோம் என்றும் சொல்கிறார்கள். நான் சொல்கிறேன், ஆதாரப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களில் 10 பேரையும், சாதாரண முறையில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களில் 10 பேரையும் அழைத்து, இதைப் பற்றி அவர்களுடைய எண்ணம் என்ன, அவர்களுக்கும், இவர்களுக்கும் என்ன வேறுபாடு, என்ன சிறப்பு, ஏற்பட்டுள்ளது என்று பரிசீலனை செய்து பார்த்து, மனதுக்கு சரியென்று பட்டால்—நடைமுறைக்கு இது ஏற்றது என்று தோன்றினால் இதை வைத்துக் கொள்ளலாம். ஆனால் அதற்கு முன் ஆராய்ந்தறிவது அவசியம் என்பதை இந்தச் சமயத்திலே வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, இன்றைக்கு 10-ம் வகுப்பு வரை ஆதாரக் கல்வி முறையில் பயிற்சி பெற்று கல்லூரிக்கு சேர வரும்போது அல்லது பொறியியற் கல்லூரியிலோ, அல்லது மருத்துவக் கல்லூரியிலோ சேரும்போது, ஆதாரக் கல்வி முறையிலே பெற்ற பயிற்சி அவர்களுடைய திறமையை எந்தவகையிலாவது அதிகப்படுத்த உதவுகிறதா? மற்ற மாணவர்களைவிட இவர்களுக்குத்தான் தொழிலில் ஆர்வம் அதிகம் இருக்கிறதா என்பதையாவது ஒரு புள்ளி விவரக் கணக்குச் சேகரித்து ஆராய்ந்து பார்க்கட்டும். அப்படிச் செய்யாது, இந்த ஆதாரப் பயிற்சியை 6, 7 வயது இளம் மாணவர்களுக்கு அளிப்பது என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. அவர்களை இந்தப் பயிற்சி எந்த விதத்திலும் உயர்த்திவிடாது. 11, 12 வயது நிறைந்த மாணவர்களுக்கு ஒரு தொழிலைச் சொல்லிக்கொடுப்பது என்று இருக்குமானால் 11-வது வகுப்பை முடிக்கும் வரை 4 ஆண்டு காலத்தில் ஏதாவது, ஒரு தொழில் பயிலும் அளவிலே இந்தப் பயிற்சி அவர்களுக்கு உதவியாக இருக்கலாம். இதை அமைச்சர் அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும் எண்ணிப்பார்த்தால் இந்த முறையையே ஏற்று நிறைவேற்றுவார்கள். என்று நம்புகிறேன்.

[Sri K. Anbazhagan] [22nd March 1961

'பைபர்கேட்டட் கோர்ஸ்' என்ற பிரிக்கப்பட்ட வகுப்பு முறையினைப் பரப்புவதற்கு ஒரு திட்டம் இருப்பதோடு அதன்படி 36 பள்ளிக்கூடங்களை கைத்தொழில் பள்ளிகளாக்கப்போவதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. கைத்தொழில் பயிற்சிக்கு 36 பள்ளிக்கூடங்களை மாற்றுவது போதாது. இன்றுள்ள உயர்நிலைப் பள்ளிக்கூடங்களில் பாதி அளவு அவ்வாறு மாற்றியமைக்கப்பட வேண்டும். அதற்கு எவ்வளவு கோடி செலவானாலும் அமைச்சர் முயற்சி எடுத்துக் கொண்டால், ஆதாரக் கல்வியைவிட இத்திட்டம் நல்ல முறையில் செயல்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறு குழந்தைகளுக்குத் தருகிற தொழில் பயிற்சி எந்த அளவிலும் அவர்களுக்குப் பயனளிக்கவில்லை. அதைச் சொல்லிக் கொடுக்கின்ற ஆசிரியர்களுக்கும் அதிலே ஊக்கம் உண்டாகவில்லை. அதற்கு நேர்மாறான நிலையையும் மனோபாவத்தையும் தான் வளரச்செய்கிறது. 10 வயதுக்குக் குறைந்தவர்களுக்கு இந்த மாறுபட்ட மனநிலைதான் ஏற்படும். எனவே 10 வயதிற்கு மேற்பட்டு 15, 16 வயதளவில் தொழில்கல்வி பயிற்றுவிக்கப்படுவதே பயன் தரும் என்று நான் கருதி வற்புறுத்துகிறேன். அதோடு 108 பள்ளிகளில் நூலக வசதிகளைப் பெருக்குவதற்குத் திட்டமிட்டு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதையும் இன்னும் விருத்தி செய்வது அவசியம் என்று நான் கருதுகிறேன்.

அதற்கடுத்து நான் ஒரு பொதுவான கருத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மாணவர்களை அரசியலுக்கு இழுக்கக்கூடாது, அவர்கள் அரசியலிலே பங்கு பெறக்கூடாது என்று பொதுவாக சொல்லப்படுகிறது. ஆனால், அவர்கள் அரசியலை அவசியம் அறிந்து கொள்ள வேண்டும். அவர்கள் அரசியலைப்பற்றிக்கூடப் பேசலாம், ஆனால் கட்சி அரசியலில்தான் பங்கு பெறக்கூடாது என்று கூறுவதே முறையாகும். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்களும், கல்வி அமைச்சர் நடத்திய மாநாட்டில் மாணவர்கள் கட்சி அரசியலில் இருக்கக் கூடாது என்ற பொதுக்கருத்தை ஒப்புக்கொண்டதற்கு பின்னால், மாணவர் இயக்க மாநாடுகளில் கட்சித் தலைவர்கள் கலந்துகொள்ளாத முறையை மேற்கொண்டிருக்கிறார்கள். ஆனால் என்ன காரணத்தாலோ அது அமைச்சர்களாலேயே மீறப்படுகிறது. முதல் அமைச்சரேசென்று அவர்களுக்கு அரசியல் பாடம் சொல்லிக்கொடுக்க கூடிய அளவில் செயலாற்றி வருகிறார். எங்களுக்கும் தெரியாததல்ல, மாணவர்களை எப்படி எங்கள் பக்கம் இழுப்பது என்பது. ஆனால் இப்படித்தான் இனி நடப்பது என்று தீர்மானித்து விட்டால் நாங்கள் சிறிதும் கஷ்டமின்றியே மாணவர்களைத் திருப்பிக்கொள்ள முடியும். ஆனால் அதைக் குறித்து இப்போதாவது நம் கல்வி மந்திரி அவர்கள் தக்கதொரு முடிவினை, அனைவருக்கும் பொதுவாக எடுத்துக்கூற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆசிரியர்களுக்குத் தரப்படுகின்ற ஊதியம் ஏராளம், அதைக் கண்டு நாங்கள்கூடப் பொறாமைப் படுகிறோம் என்ற கருத்தை நண்பர் சர்தார் வேதரத்னம் அவர்கள் பேசும்போது தெரிவித்தார்கள். எந்த அடிப்படையில் சொன்னார்கள் என்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. சர்தார் அவர்கள் சட்டையில்லாமலே வாழக்கூடிய பழக்கமுடையவர், ஆனால் ஆசிரியர்கள் பாவம் சட்டை போடப்பழகிக் கொண்டவர்களாயிற்றே. அவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் காணவில்லை. வேண்டுமானால் நம்மால் இதற்குமேல் சம்பளம் கொடுக்க முடியவில்லை என்று சொல்லலாம். அதைத் தவிர, ஆசிரியர்களுடைய நிலை உயர்ந்துவிட்டது என்று பேசினால், நம்மை நாமே ஏமாற்றிக்கொள்பவர்களாக ஆவோமா என்றுதான் ஐயுற வேண்டியிருக்கிறது.

அதற்கடுத்து நான் தெரிவிக்க விரும்பும் கருத்து பாடமொழி பற்றியது. இந்தத் திட்டத்திலே நம்முடைய கல்வி மந்திரிக்கு நல்லதொரு நோக்கம் இருக்கிறதென்றே சொல்லலாம். ஆனால் செயலிலே அந்த அளவுக்கு வேகம் இல்லாமல் இருப்பதற்கு என்ன காரணம் என்பதை ஆராய்ந்தறிய வேண்டும். தமிழ்மொழியைக் கொண்டுதான் தமிழர் கல்வி அறிவைப்பெற வேண்டுமென்றால் தமிழ் பற்றுள்ள எவரும்,



22nd March 1961] [Sri K. Anbazhagan]

தமிழ் நாட்டிலுள்ள எவரும் மறுக்க மாட்டார்கள். ஒருவேளை தாங்கள் மேற்கொண்ட பழக்கத்தாலும், பயிற்சியாலும் ஆங்கிலத்திலேயே பயிற்சி இருக்கவேண்டுமென்று சிலர் கேட்கக்கூடும். ஆனால் நாட்டு மக்கள் அறிந்துள்ள தமிழ் மொழியில் பயிற்சி தரப்போகிறோம், அப்படிப்பட்ட பயிற்சிக்கான வழிவகைகள் நிறைவேறி வருகிறது, என்போர் அதற்காக 30 பாடப் புத்தகங்களைத் தமிழிலே வெளியிட்டிருக்கிறோம், இன்னும் 50 புத்தகங்களை எழுதிக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் மட்டும் போதாது. விஞ்ஞானக் கருத்துடைய பலப் பல நூல்கள், தொழிலிலே ஏற்படும் வளர்ச்சியை அறியக்கூடிய வகையில் வரக்கூடிய நூல்கள் ஆகியவைகளை வெளியிடுவதற்கு, அந்தந்த துறையிலே ஈடுபட்டுள்ள ஆசிரியர்களுக்கு ஊக்கம் அளித்து பல்வேறு நூல்களை வெளியிடத் தூண்ட வேண்டும். அமெரிக்காவிலிருந்தும், இங்கிலாந்திலிருந்தும் அந்தந்த மக்களின் தாய்மொழி வாயிலாக விஞ்ஞான நூல்கள் வெளிவருவதற்கு ஓரளவு நிதி உதவி செய்ய முன்வருவதாகக் கேள்விப்படுகிறேன். மத்திய சர்க்கார் கல்வி மந்திரி அவர்கள் இந்தியில் எத்தனை புத்தகங்கள் வெளிவந்தாலும் அத்தனையும் வெளியிடுவதற்கு உதவி செய்யப்படும் என்பதை எடுத்துச் சொல்லிவிட்டு, பிற வட்டார மொழிகளுக்கும்கூட உதவிகேட்டால் கொடுக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள். நிதி மந்திரி அவர்கள் இதில் தனது முழு செல்வாக்கையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஒரு வகுப்புப் பாடத்திட்டத்துக்கு 18 புத்தகங்கள்தான் தேவை என்ற அளவிலே மட்டும் இருக்கக்கூடாது. இதைத் தவிர பல நூல்கள் தேவைப்படுகின்றன. இதனால் ஒவ்வொரு துறையிலும் இப்போது பாடத்திட்டத்தை ஒட்டி வெளிவரும் நூல்களைத் தவிர்த்து, பொதுக்கருத்தை வளர்த்தி ஜெனரலைசேஷன் முறையில் பல்வேறு விஞ்ஞான நூல்கள் வெளியிட நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல்கலைக் கழகத்திலும், கல்லூரிகளிலும் பயிலும் மாணவர்கள் எல்லோரும் நிதி வசதியோடு படிக்கவில்லை. அவர்களில் பெரும்பாலோர் ஏழைகளாக இருக்கிறார்கள். வாழ்வுக்கே மிகவும் கஷ்டப்படும் குடும்பத்தினர். அப்படிப்பட்ட மாணவர்கட்கு உதவ வட நாட்டுக் கல்லூரிகள் சிலவற்றுடன் இணைத்து பல இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டுகள் ஆரம்பித்து, ஓய்வு நேரங்களில் ஏழை மாணவர்கள் தொழில் செய்து ஊதியம் பெறுவதற்கு வழிவகை செய்யப்போவதாக இரண்டு நாட்களுக்கு முன்னே மத்திய சர்க்கார் கல்வி மந்திரி அவர்கள் பேசியிருக்கிறார். அப்படிப்பட்ட திட்டம் நம்முடைய தமிழ் நாட்டிற்கும் மிகவும் அவசியமாகும். நம்முடைய மாணவர்கட்கும் அந்த வாய்ப்புக் கிடைக்க தமிழ் நாட்டிலும் ஓரிரு கல்லூரிகளிலாவது இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளும்படிக் கேட்டுக்கொள்ளுகிறேன். கல்லூரியுடன் தொழில் பேட்டை இணைவது மாணவர்கட்கு பேருதவியாகும்.

இன்றையதினம், ஆசிரியர்கள் தமிழையே பாட மொழியாகக்கொண்டு திறமையான முறையிலே ஆர்வத்துடனும் பயிற்றுவிக்க வேண்டுமென்றால், பயிற்சிக் கல்லூரிகள் தமிழிலேயே நடக்க உற்சாகமும், ஊக்கமும் அளிக்க வேண்டும். சைதை ஆசிரியர் பயிற்சிப் பள்ளியினரும், அதன் முதல்வரும் தமிழ் மொழியிலே பயிற்சிக்குரிய பல்வேறு நூல்களை இயற்றுவதில் ஊக்கமுடன் செயல்பட்டு வருகிறார்கள் என்று அறிவதால் அவர்களுக்கு என் உளமார்ந்த பாராட்டுதலை கனம் அமைச்சர் அவர்கள் மூலமாக தெரிவித்துக்கொள்ளுகிறேன். அக் கல்லூரி இத்துறையில் செயல்படுவதற்கு மேலும் ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கல்வித் துறை நிர்வாகத்தில் சில பள்ளிகளுக்கு நியாயமான அனுமதிகூட மறுக்கப்படுகிறது என்று நான் முன்னரே தெரிவித்திருக்கிறேன். பல குறிப்புகளை நான் சென்ற ஆண்டில் பேசுகின்றபோது இந்தச் சட்ட மன்றத்திலேயே கொடுத்திருக்கிறேன். அதோடு பள்ளிக்கு தரப்படவேண்டிய உதவித் தொகையும் தரப்படுவதில்லை. இப்போது உதாரணத்திற்கு ஒன்று சொல்லுவேன். செங்கல்பட்டு மாவட்டத்தில் உத்திர மேரூருக்குப் பக்கத்தில் மானமதி இருக்கிறது. அங்குள்ள உயர் தொடக்க நிலைப்பள்ளியில் சுமார் 800 மாணவர்கள் படிக்கிறார்கள்.

அவர்கள் அத்தொடக்கநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்க வேண்டுமென்று கேட்டும் ஏனோ அனுமதி மறுக்கப்படுகிறது. அதற்காக மாவட்டக் கல்வி அதிகாரி ஆணையின்படி 5,000 ரூபாய் செலுத்தி, இரண்டு ஆண்டுகள் ஆகியும் அதற்கு இன்னும் அனுமதி மறுக்கப்பட்டு வருகிறது. கல்வி இலாகாவிலே இவ்வளவு தாமதம் இருக்கிறது. மாணவர்கள் நல்ல முறையிலே ஆண்டுதோறும் படித்து 'பாஸாக' வேண்டுமென்கிற கல்வி இலாகாவினர், ஆண்டுதோறும் தங்கள் கடமையிலே 'பெயிலாகிக்' கொண்டு வருகிறார்கள். இதனைக் கல்வி இலாகாவையோ அல்லது கல்வி டைரக்டர் அவர்களையோ குற்றம் சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. கல்வி இலாகா டைரக்டர் எனது நெருங்கிய நண்பர், ஓர் வகையில் உறவினரும்கூட. அவருடைய இலாகாவிலே இப்படியெல்லாம் குறை ஏற்படுகிறது என்பதைத்தான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இதைத் தவிர, பள்ளிக்கூடங்களை புதிதாக அமைப்பதில் ஒரு சிலருக்கு சலுகைகள் காட்டப்பட்டு வருகிறது. கல்வி இலாகா டைரக்டரின் சொந்த ஊராகிய நெய்யாடிப்பாக்கத்தில் ஒரு உயர்நிலைப் பள்ளிக்கூடம் அண்மையில் தோன்றியதால் அதற்குப் பக்கத்தில் 3 மைல் வட்டாரத்திலுள்ள ஆரப்பாக்கத்தில் இருந்துவரும் பள்ளியின் மாணவர் தொகையையும் வளர்ச்சியையும் அது கெடுத்திருக்கிறது. கல்வி இலாகாவின் டைரக்டரின் சொந்த ஊரில் ஒரு தனிக் கல்லூரியே ஏற்பட வேண்டுமென்பதில் ஆசை இருக்க வேண்டியதுதான். எனக்கும் அவ்வித ஆசையில் வெறுப்பில்லை. ஆனால், அதே நேரத்தில் பக்கத்து ஊரிலே உள்ள எல்லாப் பள்ளிக்கூடங்களும் வளர வேண்டுமென்பதையும் கவனத்தில் வைத்துக்கொண்டு, எதையும் படிப்படியாக உயர்வடையச் செய்ய வேண்டும். மேலும், கல்வித் துறை நிர்வாகத்தில் அடிக்கடி சில அரசியல் வாதிகளின் குறுக்கீடுகளும் இருந்து வருகிறது. இதை எல்லாம் கல்வித் துறை நிர்வாகத்தில் உள்ளவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அடுத்து தெரிவிக்க விரும்புவது முக்கியமானது. தனியார் பள்ளிக்கூடங்கள் சம்பளம் வசூலிப்பதாக இருந்தாலும், 15 சத விகிதம் அளவுக்கு நிர்வாகச் செலவை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமென்று சொன்னார்கள். ஆனால், அதனால் செலவு அதிகமாகிறது என்ற காரணத்தாலோ என்னவோ, அது மீறப்பட்டு பல தனியார் பள்ளிகள் அரசாங்கத்தின் உதவித் தொகை கிடைக்காமல் திண்டாடிக்கொண்டிருக்கின்றன. நண்பர் திரு. ஏ. கோவிந்தசாமி அவர்கள்கூட இதைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். அப்படிப்பட்ட பள்ளிக்கூடங்களுக்கு தாங்கள் தருவதாகச் சொன்ன சிறு தொகையையாவது முறைப்படி கொடுங்கள் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். உதவித் தொகைக்குப் பதிலாக 5–வது வகுப்பு வரை மாணவர்களிடம் சம்பளம் வாங்கிக்கொள்ளலாம் என்று சொல்லுகிறார்கள். அப்படி மாணவர்களிடத்திலே சம்பளம் வாங்குவது காரணமாக ஆசிரியர்களுக்கு முறைப்படி நியாயமான சம்பளம் கொடுக்க முடியாமல் பாதிச் சம்பளம், மூன்றில் ஒரு பங்கு சம்பளமும், முக்கால் சம்பளமும் கொடுக்கக்கூடிய நிலைமையில் தனியார் பள்ளிகள் இருக்கின்றன என்பதை கனம் அமைச்சர் அவர்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, ஒன்று இப்படிப்பட்ட எந்தப் பள்ளிக்கூடத்திலும் 5–வது வகுப்பு வரை மாணவரிடம் சம்பளம் வாங்கக்கூடாது என்ற நியதி இருக்கவேண்டும். அப்படி இசையாத பள்ளிகளை சர்க்கார் ஏற்றுக்கொண்டு நடத்த முன்வர வேண்டும். இல்லாவிட்டால் அதன் ஆசிரியர்கட்கு அரசாங்கத்திலிருந்தே நேரடியாக சம்பளம் அளித்திட வேண்டும். இந்த இரண்டுமற்ற நிலையில், இன்று ஆசிரியர்கள்தான் மிகவும் திண்டாடுகிறார்கள். இதை கனம் அமைச்சர் அவர்கள் ஆழ்ந்து சிந்தித்து முடிவு செய்வார்களென்று நம்புகிறேன்.

1 p.m.

கடைசியாக ஏழை மாணவர்கட்கு சம்பளச் சலுகை அளித்திருக்கின்ற நோக்கத்தை வரவேற்கிறேன். ஆனால், ரூ. 100 அளவு மாத ஊதியம் பெறுகிறவர்களுக்கு அவர்களுடைய குழந்தைகளே ஏழைப் பிள்ளைகள் என் கருதப்பட்டு அவர்கட்கு மட்டும் சம்பளச் சலுகை வழங்கப்பட்டுள்ளது என்.ஜி.ஓ. வினருக்கு ரூ. 300 அளவு ஊதியம் இருந்தாலும்



கல்விச் சலுகை தரக்கூடிய நேரத்தில்—அரசாங்க ஊழியர் என்ற காரணத்தினால், அவர்களுக்கு அச்சலுகை கொடுப்பது முறைதான் என்று சொன்னாலும், மற்றவர்களுக்கும் ரூ. 200 அளவிற்காவது, ஆண்டு ஒன்றுக்கு ஊதியம் ரூ. 2,400 அளவு வரையிலாவது 11–வது வகுப்பு வரையில் சம்பளச் சலுகை தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். உயர்நிலைப் பள்ளிகளில் 11–வது வகுப்பு துவங்குவதற்கு முன்வரும்போது அதன் 'தரம்' குறையாமலும், கவனித்துக் கொள்ளவேண்டும். 11–வது வகுப்பினைப் பள்ளியில் ஏற்படுத்தவும், ஒப்புக்கொண்டு, பிரியூனிவர்ஸிடி என்னும் புகுமுக வகுப்பு நீங்கலாக—மூன்றாண்டுகளில் பட்டப் படிப்பு பெறுவது மாணவர் கல்விதரத்தைக் குறைத்துவிடும் என்ற கருத்தையும், அமைச்சர் வெளியிட்டிருப்பதால்,—ஒரு இக்கட்டான நிலைமையை உண்டாக்கியிருக்கிறார். எம்முறையை அமைச்சர் முழு மனதுடன் ஆதரிக்கிறார் என்று எண்ணிப் பார்க்கும் எனக்கும் அது இக்கட்டான நிலைமையாகத்தான் தோன்றுகிறது. காரணம் கல்வித் தரம் எங்கு குறைந்துவிடுமோ என்ற கவலை. அது பற்றி பல்வேறு நிபுணர்களைக்கொண்டு தக்கபடி ஆராய்ச்சி செய்து செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தொழில் பள்ளிக்கூடங்கள் அனைத்தையும் ஒரே இலாகாவிடம் ஒப்படைக்க வேண்டுமென்று முன்னாலேயே தெரிவித்திருக்கிறேன். இண்டஸ்ட்ரியல் ஸ்கூல்ஸ் 'பாலி டெக்னிக்ஸ்' இரண்டையும் சேர்த்து, ஒரே நிர்வாகத்தின்கீழ் கொண்டு வரவேண்டும். இளஞ்சிறார் தொழிற் பயிற்சிக் கல்லூரி என்று பெயர் வைத்திருக்கிறார்கள். இவைகளெல்லாம் ஒரே நிர்வாகத்தில் வருவதற்கு வழிவகை காணவேண்டும். அமைச்சர் அவர்கள் இவற்றைக் கவனித்து தக்க விடை தருவார்கள் என்று கருதி, என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* **THE HON. SRI C. SUBRAMANIAM:** கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இந்த மானியத்தில் பேசி பொதுவாக கல்வித் துறை ஆற்றி வருகிற பணியை வரவேற்றுப் பாராட்டியதற்காக எல்லா அங்கத்தினர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்த மானியத்திற்கு ரூ. 20 கோடிக்கு மேல் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி எல்லோரும் பாராட்டிப் பேசினார்கள். அந்த அளவுக்கு நிதி ஒதுக்கியிருக்கிற காரணத்தினாலே இதை நிறைவேற்றுகிற இலாகாவிற்கு அதிகப்பொறுப்பு ஏற்படுகிறது என்பதையும் நாம் மனதில் கொள்ள வேண்டும். ஏதோ 2 கோடி, 3 கோடி என்று சொன்னால், அதில் தவறு ஏற்பட்டுவிட்டாலும்கூட பரவாயில்லை என்று விட்டுவிடலாம். ஆனால், இவ்வளவு பெரிய அளவிலே தொகையை செலவழிக்கிறபொழுது, அதற்கு நல்ல பலன் ஏற்பட வேண்டும் என்பதை நாம் எல்லோரும் எதிர்பார்க்கிறோம். ஆகையினால்தான் கனம் அங்கத்தினர்கள் ஆங்காங்கு நடைபெறுகின்ற குறைகளைப்பற்றி எடுத்துச் சொல்வார்களேயானால், ஏதோ குறை சொல்லுவதற்காக அப்படிச் சொல்லுகிறார்கள் என்று நான் எடுத்துக் கொள்ளவில்லை. அந்தக் குறைகள் திருந்த வேண்டும். ரூ. 20 கோடி செலவழிப்பதற்கு நல்ல பலன் ஏற்பட வேண்டுமென்கிற முறையிலே ஒவ்வொருவரும் நல்லெண்ணத்தோடு அந்தக் குறைகளை எடுத்துச் சொன்னார்கள் என்றுதான் நான் எடுத்துக்கொள்ளுகிறேன். குறை சொன்னது சரியா, இல்லையா என்பது ஒரு புறம் இருக்க, அவர்களுடைய நல்லெண்ணத்தை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன் என்பதை முதலில் நான் சொல்லிக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்குக் கல்வியினுடைய முக்கியத்துவத்தை இந்தச் சபை அறிந்திருப்பது மட்டுமல்ல. மக்களும் நல்ல முறையிலே அதை உணர்ந்திருக்கக்கூடிய காரணத்தினால்தான் கல்வித் துறையிலே இவ்வளவு விரிவாக பணியாற்ற முடிகிறது என்பதையும் நான் தெரிவித்து கொள்ளவிரும்புகிறேன். மக்களிடையே கல்விக்கான ஆர்வம் இல்லாமல் இருக்குமானால், எத்தனை கோடிக்கணக்கான ரூபாய் செலவழித்தாலும் கூட, இந்த அளவிற்கு நாம் கல்வியை விரிவாக பரப்பி இருக்க முடியாது என்பதை நாம் எல்லோரும் உணர வேண்டும். அவ்வாறு சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கக் கூடிய மாறுதல் பெரிய புரட்சிகரமான மன மாறுதல் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அத்துடன் இன்றைக்கு நாட்டிலே புதியதோர் சமுதாயம் அமைந்து

[Sri C. Subramaniam] [22nd March 1961

நாட்டில் இருக்கக்கூடிய குறைகளை எல்லாம் தீர்க்கக் கூடிய முறையிலே பல்வேறு துறைகளிலே முன்னேற்றம் காண வேண்டும் என்று கூறுகிற பொழுது, அதில் அடிப்படையாக இருக்கக் கூடியது கல்வி என்பதை இன்றைக்கு எல்லோரும் உணர்ந்து வருகிறார்கள். சமீபத்தில் பேராசிரியர் கால்ப்ரைத்.—'இப்பொழுது அமெரிக்க தூதுவராக இந்தியாவுக்கு வர இருப்பவர் ஒரு அரிய கருத்தை வெளியிட்டிருந்ததை அங்கத்தினர்கள் கவனித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். ஒரு பின்னடைந்திருக்கக் கூடிய நாட்டில் முன்னேற்றம் அடைய வேண்டும் என்று சொன்னால், அதற்கான சூழ்நிலை அந்த சமுதாயத்தில் இருந்தால்தான் முன்னேற்றம் அடைய முடியும். முன்னேற்றம் அடைவதற்கான சூழ்நிலையிலே முதல் இடம் பெறக்கூடியது கல்வி. எந்த அளவுக்கு கல்வி வளர்ச்சி இருக்கிறதோ, அந்த அளவுக்குத்தான் எந்தத் துறையாக இருந்தாலும் சரி, அதில் முன்னேற்றம் காண முடியும். இன்றைக்குப் பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் காண்கிறோம் என்று சொன்னால், அதற்குக் காரணம் தொழில் துறையிலே பணியாற்றிவருபவர்கள், தொழில் துறையிலே ஈடுபட்டிருப்பவர்கள் கல்வி பெற்றிருக்கிறார்கள், பயிற்சி பெற்றிருக்கிறார்கள். அந்தக் காரணத்தினால்தான் தொழில் துறையிலே ஓரளவு நல்ல வெற்றி காண முடிந்திருக்கிறது. இன்றைக்கு விவசாயத் துறையிலே நாம் குறிப்பிட்ட அளவு முன்னேற்றம் காண முடியவில்லை. அதற்கு அடிப்படையான காரணம் அதில் ஈடுபட்டிருக்கக் கூடிய பலர் எழுதப் படிக்கவும்கூடத் தெரியாத ஒரு கீழான நிலையில் இருக்கிறார்கள் என்பதுதான். அதனால்தான் விவசாயத் துறையில் நாம் எதிர்பார்த்த அளவுக்கு முன்னேற்றம் காண்பது கஷ்டமாக இருக்கிறது. அந்த முன்னேற்றத்திற்கான சூழ்நிலை ஏற்படுத்துவதற்கு கல்வி கற்பிப்பது மிகவும் அவசியம் என்ற கருத்தை மிகவும் வலியுறுத்தியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் நாம் பார்க்கிறபொழுது, நாட்டில் இருக்கக்கூடிய எல்லா மக்களுக்கும், ஜாதி வித்தியாசம் இல்லாமல், மத வித்தியாசம் இல்லாமல் எந்த விதமான வித்தியாசமும் இல்லாமல் எல்லோரும் கல்வி பெறுவதற்கான ஒரு வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும் என்கின்ற முறையில்தான் இன்றைக்கு அரசியல் சட்டத்தில் கூட 45-வது விதியிலே எல்லோருக்கும் 6 வயதிலிருந்து 14-வது வயது வரையில் இருக்கக்கூடிய எல்லோருக்கும், அதிலும் இந்தச் சட்டம் ஆரம்பித்த 10 வருஷங்களுக்காக எல்லோருக்கும் கல்வி கொடுத்தாக வேண்டும் என்று அதில் விதிக்கப்பட்டிருக்கிறது. திடீரென்று "கனம் கோவிந்தசாமி அவர்கள் பேசும்பொழுது இது ஏன் நிறைவேற்றப்படவில்லை என்பதற்கு கல்வி மந்திரி சமாதானம்கூற வேண்டும் என்று சொன்னார்கள். உண்மையிலேயே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவர் தவறாக எடுத்துக்கொள்ளக் கூடாது. திராவிட முன்னேற்றக் கழகத்தினர் நோக்கமே, அவர்கள் பார்வையே இந்த அடிப்படையில் அமைந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்று சொன்னால், 45-வது விதியில் இப்படி போட்டிருந்தால் கூட, அதை நாம் நிறைவேற்ற முடியுமா, அதிலே இருக்கக்கூடிய கஷ்டங்கள் என்ன என்பதைப் பற்றி இன்றைக்கு இல்லை, 4 வருஷங்களாக நாம் பேசிக்கொண்டு வருகிறோம். அப்படிப் பேசிக்கொண்டு வருவது மட்டுமல்ல. ஏதோ தனித்து வேறு எங்கேயோ பேசுவது என்பதில்லை. இங்கே பேசி, இங்கே இருக்கக் கூடிய தலைவர்களையும் கலந்து ஆலோசித்து, இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையில் 6 வயதிலிருந்து 14 வயது வரையில் உள்ள எல்லோருக்கும் கல்வி கொடுப்பது என்பது முடியாத காரியம்; ஆகையினால் இந்த இலக்கை மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும்; 6 வயதிலிருந்து 11-வயது வரை இருக்கக் கூடிய எல்லோருக்கும் மூன்றாவது ஐந்தாண்டு திட்ட காலத்திற்குள் கல்வி கொடுப்பது என்பதே முடிந்தால் மிகப் பெரிய காரியமாக இருக்கும் என்பதை நாம் எல்லாத் தலைவர்களும் கூடி முடிவு செய்த அடிப்படையில்தான். இன்றைக்கு அகில இந்தியாவிலும் இதைப் பற்றிப் புனராலோசனை செய்ய வேண்டும் என்பதை ஒப்புக்கொண்டிருக்கிறோம். இன்றைக்கு 6-லிருந்து 11-வது வரையிலுள்ளவர்களுக்கு மூன்றாவது ஐந்தாண்டு திட்ட காலத்திற்குள் கல்வி புகட்டுவது என்ற இலக்கை அமைத்துக் கொண்டால் போதும் என்று அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு இருக்கும்பொழுது, திடீரென்று இதற்குச் சமாதானம் சொல்ல



22nd March 1961] [Sri C. Subramaniam]

வேண்டும் என்று கேட்டபொழுது, எனக்குக் கேள்வி கேட்கத் தோன்றிற்று, கனம் கோவிந்தசுவாமி அவர்கள் எந்த உலகத்தில் இருக்கிறார்கள் என்று. அதன் காரணமாகத்தான் எனக்கு அம்மாதிரி கேட்கத் தோன்றிற்று. என்ன காரணம் என்று கேட்டார்கள். கேட்டதற்கு அதை நான் விளக்கினேன்.

அதோடு மட்டுமல்ல. இன்றைக்குக் கல்வி பரவலாக கொடுக்கக்கூடிய காலத்திலே, அதே சமயத்திலே தரம் குறையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதைப் பற்றி எல்லோரும் வலியுறுத்தினார்கள். அது மிகவும் வரவேற்கக் கூடியது. ஏனென்றால், கல்வி பெரும் அளவுக்குப் பரவலாக இருந்து, தரம் குறைவாக இருக்குமானால் அதன் காரணமாக நமக்கு நல்ல பலன் ஏற்படாது. ஒரு அறிவாளிக்குப் பதிலாக, 1,000 அரை அறிவாளிகள் இருந்தால்கூட, அதற்குச் சமமாகச் சொல்ல முடியாது. 1,000-த்துக்கு அரை 500 என்று கணக்கு போட்டு விட முடியாது. இன்றைக்குக் கல்வி நல்லமுறையில் நமக்கு ஏற்படவேண்டும் என்பதைப் பற்றி யாரிடத்திலும் கருத்து வேற்றுமை இருக்க முடியாது. அதை எப்படிச் சாதிப்பது என்பதுதான் இன்றைக்கு நம் முன்னால் இருக்கக்கூடிய முக்கியமான பிரச்னை. இதில் ஆசிரியர்கள் பொறுப்பு எவ்வளவு இருக்கிறது என்பதை நாம் எல்லோரும் உணர்கிறோம். ஆசிரியர்களுடைய தரம் ஒரு புறம் இருக்க, அவர்கள் எந்த அளவு படித்திருக்கிறார்கள் என்பது ஒரு புறம் இருக்க, அவர்களுடைய மனோநிலையும் அதற்கு உதவியாக இருக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. எவ்வளவு தரம் உள்ளவர்களாக, எவ்வளவு திறமை உள்ளவர்களாக இருந்தாலும், அவர்களுக்கு மனக் குறை இருந்துகொண்டிருக்குமேயானால், மனச் சோர்வு இருந்து கொண்டிருக்குமேயானால், இந்த ஆசிரியர் பணியை நல்ல முறையில் நடத்த முடியாது. அந்தச்சோர்வு நம் நாட்டிலே தொடர்ந்து ஆசிரியர்கள் மத்தியிலே இருந்து வந்திருக்கிறது. அதை நாங்கள் உணராமலில்லை. அதைத் தீர்க்க ஐந்து, ஆறு, வருட காலமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வந்திருக்கிறது. கடைசியாக சம்பள விகிதத்தை மாற்றி அமைத்திருக்கும் முறையிலே பல அங்கத்தினர்கள் போதாது என்று சொன்னார்கள். பல இடங்களிலே நான் இதை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். நாம் இன்றைக்குக் கொடுத்திருக்கும் சம்பள உயர்வு நிர்ணயித்திருப்பது ஒரு ஆரம்பம்; அது இதோடு நின்றுவிடக் கூடாது. அவர்களுடைய ஊதியத்தை உயர்த்த, அந்தஸ்தை உயர்த்தத் தொடர்ந்து முயற்சிகள் எடுக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி வந்திருக்கிறேன். கொடுத்திருப்பது போதாது; ஆனாலும் கொஞ்சம் மனக் குறை நீங்கியிருக்கிறது. ஆனால், அந்த மனக் குறை குறையக் கூடாது, அது வளர வேண்டும் என்று செய்தால், நாம் இத்தனை செலவழிப்பதற்கு முழுப் பலன் இல்லாமல் போய் விடும் என்பதைத்தான் திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்களுக்குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அவர்கள் குறையை உணர்ந்துதான் கொடுத்திருக்கிறோம். சம்பள விகிதத்தைப் பற்றி ஸ்ரீ மாலி பார்லிமெண்டில் பேசி இருப்பதாகச் சொன்னார்கள். எதைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள், எந்தக் கட்டத்தில் பேசியிருக்கிறார்கள் என்று புரிந்துகொள்ளாமல் பேசுகிறார்கள். "சம்பள உயர்வு போதாது; விலைவாசி உயர்ந்திருக்கும் அளவில் போதாது என்று சொல்லியிருக்கிறார்கள்" என்று சொன்னார்கள். அவர்கள் சொன்னது என்ன? தமிழ் நாட்டிலே கொடுத்திருக்கும் சம்பள விகிதத்தை மற்ற ராஜ்யங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது—டில்லி போன்ற சிறு சிறு பகுதிகளை விட்டுவிட்டு—தமிழ் நாட்டிலேதான் சம்பளம் உயர்ந்திருக்கிறது; மற்ற ராஜ்யங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இங்கேதான் உயர்ந்திருக்கிறது; மற்ற ராஜ்யங்களையும் மத்திய சர்க்காரில் இருக்கும் மந்திரி அவர்கள் எல்லா ராஜ்யங்களையும் அம்மாதிரி உயர்த்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஒவ்வொரு இடத்தில் கொடுத்திருக்கும் இரண்டு ரூபாய், மூன்று ரூபாய் ஐந்து ரூபாய் இதெல்லாம் இன்றைக்கு இருக்கும் நிலையில் போதாது என்று சொல்லியிருக்கிறார்கள். அதை வைத்துக்கொண்டு, மற்ற ராஜ்யங்களின் நிலைமையை வைத்துக்கொண்டு நாம் கொடுத்திருப்பதும் போதாது என்று சொல்லுவது சரியாகாது. எந்த உயர்வு கொடுத்தாலும் போதாது தான். ஆயிரம் ரூபாய் வாங்குகிறவர்களுக்கும் போதாது என்ற நிலைமை

இருக்கிறது. ஆகவே, நமக்கு இருக்கும் வசதிகளைக்கொண்டு, எந்த அளவுக்குக் கொடுக்க முடியும் என்று பார்க்க வேண்டும். கடைசியாக ஒவ்வொரு ஆசிரியர்களுக்கும் 250 ரூபாய் சம்பளம் கொடுக்க வேண்டும் என்றால், அது தத்துவ ரீதியாக மறுக்க முடியாது. ஆனால், அது கனவு, நனவில் ஆகக்கூடிய விஷயம் அல்ல என்று மறுத்துச் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே எந்த அளவில் ஆசிரியர்கள் ஊதியத்தை உயர்த்தி அவர்களைத் திருப்தி செய்யலாம் என்ற முறையில் செய்யப்பட்டிருக்கிறது. இப்போதைக்கு திருப்தியடைந்திருந்தாலும், அவர்கள் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த முயற்சி தொடர்ந்து எடுக்க வேண்டும். அந்த அடிப்படையில் ஆசிரியர்களுக்கு இருக்கக்கூடிய மனக்குறையை நீக்கிவிட்டு, போதிய உற்சாகத்தைக் கொடுத்தால்தான் அவர்கள் கல்விப்பணியில் வெற்றியடைய முடியும். இன்றைக்கு நல்லதொரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது, ஆசிரியர்கள் மத்தியில். அதை நான் சென்ற இடங்களிலெல்லாம் கவனிக்கிறேன்; நான் கவனிப்பது மட்டுமல்ல, இதிலே சம்மந்தம் இல்லாதவர்களும் ஆராய்ந்து வந்து சொல்லும்போது, "ஆம்; நல்லதொரு சூழ்நிலை இருக்கிறது" என்று எண்ணம் உண்டாகிறது; அப்படியிருக்கும் சூழ்நிலையைக் கெடுக்க, எந்த விதத்திலானாலும் சரி, அது அரசியல் நோக்கமாக இருந்தாலும் சரி அல்லது என்னைக் குற்றம் சாட்டும் முறையானாலும் சரி அல்லது கல்வி இலாகா இயக்குநரைக் குற்றம் சாட்டுவதாக இருந்தாலும் சரி, எந்த அடிப்படையிலானாலும் சரி, வேறு எந்த நோக்கமானாலும் சரி, அந்த நல்ல சூழ்நிலையைக் கெடுக்காமல் இருக்கவேண்டும் என்ற கோரிக்கையை அடிபணிந்து சமர்ப்பிக்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்குக் கல்வித் தரம் உயர வேண்டும் என்றால், 35 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்றிருக்கிறதை எப்படி மாற்றி அமைக்க வேண்டும் என்று பார்க்க வேண்டும் என்று திரு அன்பழகன் எடுத்துச் சொன்னார். இதுவும் நானாக எடுத்த தீர்மானம் இல்லை. கல்விக்காக ஒரு குழு அமைத்து, அந்தக் குழு ஒவ்வொரு பிரச்னையையும் ஒவ்வொன்றாகப் பரிசீலனை செய்து, கடைசியாக ஏற்றுக்கொண்ட முடிவு என்பதை திரு அன்பழகனுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். (குறுக்கீடு) அவர்கள் இல்லாமல் செய்த முடிவுகள் என்கிறார்கள். அப்படி என்றால், அவர்கள் இல்லாவிட்டால், இந்தக் குழு செய்தது என்பதை அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எந்த அடிப்படையில் 35 என்று நிர்ணயிக்கப்பட்டது என்று யோசிக்க வேண்டும். எந்த நாட்டிலும், முன்னேற்றம் அடைந்திருக்கும் நாட்டிலும் கூட, அப்படிச் செய்திருக்கிறார்கள். வேறு நாடுகளை எடுத்துக் காட்டுங்கள் என்று சொன்னார்கள். இன்றைக்கு இங்கிலாந்தில் 50, 60 குழந்தைகளுக்கு ஒரு ஆசிரியர் சொல்லிக்கொடுக்கும் நிலைதான் இருக்கிறது. இன்றைக்கு அங்கு சென்று பாருங்கள். இன்றைகு அங்கு இருக்கும் நிலைமையைப் பார்த்தால், சட்ட ரீதியாக 35 இருந்தாலும், நடைமுறையில் 45, 50 என்றுதான் இருக்கிறது. நான் அங்கிருக்கும் கல்வி அமைச்சரோடு இதை விவாதித்தேன். சட்ட ரீதியாக 35 தானே என்று கேட்டபோது, அம்மாதிரிச் செய்ய முயற்சி எடுக்க வேண்டும், அதைத்தான் செய்கிறேன் என்றார்கள். அங்கே 15 வயது வரைக் கட்டாயக் கல்வி கொடுக்கப்படுகிறது. அதை இன்றைக்கு 16 வயது வரை என்று ஆக்க வேண்டுமென்றால், அமைச்சர் முதலிலே 40, 45 மாணவர்கள் பல இடங்களிலே இருப்பதை—எல்லா இடங்களிலும் இல்லை—சட்ட ரீதியாகக் குறைக்க முதலிடம் கொடுக்க வேண்டும், அதற்கு முயற்சி எடுத்து வருவதாக வெளியிட்டார்கள். இன்றைக்கு நம் தமிழ் நாட்டிலே மட்டுமல்ல, இந்தியாவிலே மட்டுமல்ல, உலகத்திலேயே எல்லோருக்கும் படிப்பு கொடுக்க வேண்டுமென்று ஒரு புதிதாக நடவடிக்கை எடுக்கும்போது, இந்த மாதிரி அடிப்படையில்தான் செய்ய முடிகிறது. அதனால்தான் பரிசீலனை செய்து பார்த்து, 35-ஆ, 40-ஆ, 45-ஆ, 30-ஆ அல்லது 25-ஆ எப்படி வைக்க முடியும் என்று பரிசீலனை செய்து பார்த்து நம்மிடமுள்ள வசதிகளையும் வைத்துக்கொண்டு 6 வயது முதல் 11 வயது வரை கொடுப்பதாக இருந்தால், 35 என்று இருந்தால் நலம் என்று முடிவு செய்யப்பட்டது. இதையே 30 என்றாலும் ஒன்றும் தவறு இல்லை, ஆனால் இன்றைக்கு 35 என்று முடிவு எடுக்கப்பட்டது. அது இன்றைக்கு நடைமுறையிலே இருக்கிறது. இது இப்படியே 35-ல்



நின்றுவிடும் என்று யாரும் நினைக்க வேண்டாம். இன்றைக்கு 6 முதல் 11 வயது வரை என்கும்போது இப்படிச் செய்திருக்கிறோம். பிற்பாடு பள்ளிக்கூடத்தில் 14 வயது வரை எல்லோருக்கும் படிப்புக் கொடுக்க வேண்டும் என்று வரும்போது, படிப்படியாக அது 30 குழந்தைகளுக்கு ஒரு ஆசிரியர் என்று மாற்றலாம்; ஏன், 25 அல்லது 20 என்றுகூட மாற்றலாம். அதே சமயத்தில் கல்வித் தரம் உயர்ந்துகொண்டே போகும் அளவில் நடவடிக்கைகளை எடுத்து அவற்றை ஏற்றுக்கொண்டு பணியாற்ற வேண்டும் என்ற கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

**Sri K. ANBAZHAGAN**: கனம் அமைச்சரவர்கள் சொல்லும் ஏற்பாட்டில், 35-க்கு மேல் குழந்தைகள் இருந்தால் வேறு வகுப்பு வைத்துக்கொள்ள அனுமதி கொடுக்கிறார்களா இன்றைக்கு ஒரு ஆசிரியர் இரண்டு, மூன்று வகுப்புக்களைச் சேர்த்து நடத்தும் அந்தத் தொல்லையைத் தவிர்க்க அமைச்சர் என்ன செய்ய போகிறார்கள்?

**The Hon. Sri C. SUBRAMANIAM**: 35-க்கு மேல் ஒரு மாணவன் இருந்தாலும் வேறு இன்னொரு ஆசிரியரை நியமித்துக்கொள்ளலாம். 36-க்கு இரண்டு ஆசிரியர்கள் இருக்கலாம். அப்படியே 70-க்கு இரண்டு ஆசிரியர்கள், 71-க்கு மூன்று ஆசிரியர்கள் என்ற முறையிலே செய்து கொள்ளலாம் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் நடக்கிறது என்று தெரிவிக்கிறேன். அந்த ஆணை ஒரு வருஷத்திற்கு முன்பே பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் புது ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு வருகிறார்கள்.

பல வகுப்புக்களுக்கு ஒரு ஆசிரியர் இருப்பதைப் பற்றிச் சொல்லும்போது, அது பள்ளிக்கூடங்கள் எப்படி அமைகிறது என்பதைப் பொறுத்து இருக்கிறது. ஒரு மைல் என்ற விதியை வைத்துக்கொண்டு, 300 ஜனத்தொகை கொண்ட இடத்தில் ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்த விடமாட்டேன் என்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். இன்றைக்கு நாம் எடுத்திருக்கும் முயற்சி, எங்கே இருந்தாலும் ஒரு குழந்தை 5, 6 வயது முதல் 11 வயது வரை ஒரு மைலுக்கு மேல் நடந்து செல்லக்கூடிய நிலைமை இருக்கக் கூடாது என்பது. அந்த அடிப்படையில் பள்ளிக்கூடம் ஏற்பட்டிருக்கிறதா என்று பார்க்க வேண்டும். ஒரு மைலுக்கு மேலானால், எந்த அளவுக்கு இன்னொரு பள்ளிக்கூடம் ஏற்படுத்த வேண்டும் என்று பார்க்க வேண்டும்.

முன்னூறு பேர்கள் உள்ள இடங்களிலெல்லாம் பள்ளிக்கூடங்களை நிறைய ஏற்படுத்திவிட்டால் என்ன என்று கேட்கலாம். 300 என்று இருக்கும்போது எவ்வளவு குழந்தைகள் அங்கு இருக்க முடியும், 30 குழந்தைகள் இருக்க முடியும், அதற்கு நாலு வகுப்புகள் வைக்க வேண்டியிருக்கிறது. கனம் அன்பழகன் அவர்கள் யோசனையை ஏற்றுக்கொண்டால் ஒவ்வொரு ஊருக்கும் நாலு ஆசிரியர்களை போட்டாக வேண்டும். அப்பொழுது ஏழு மாணவர்களுக்கு ஒரு அசிரியர் என்ற நிலை வருகிறது. பள்ளிக்கூடங்கள் பெரியதாக அமையும்போது அங்கு அதிகப்படி மாணவர்கள் வருகிறார்கள். ஒவ்வோரு வகுப்பிலும் 35 மாணவர்கள் என்று சொல்லும்போது ஒவ்வொரு வகுப்பிற்கும் ஒவ்வொரு ஆசிரியர் என்ற நிலை ஏற்படுகிறது. ஆக, பள்ளிகளை அமைப்பதில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டியிருக்கிறது. 300 ஜனத் தொகைக்கு ஒரு பள்ளிக்கூடம் வையுங்கள் என்றால் இரண்டு பர்லாங்கில் ஒரு பள்ளிக்கூடம் இருந்தாலும், எங்கள் கிராமத்தில் வையுங்கள், எங்கள் பகுதியில் வையுங்கள் என்று கேட்கக் கூடும். அதனால் நமது நோக்கமும் நிறைவேறாது. பின்னர், ஆதாரக் கல்வியைப் பற்றிச் சொன்னார்கள். கொஞ்சம் காரசாரமாகவே கனம் அன்பழகன் அவர்கள் பேசினார், வெளிநாடுகளில் இருக்கிறதா என்பது பற்றி. இதே அமைப்பில் இல்லாது வேறு வித அமைப்பில் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். புத்தக ரூபமாக படிப்பு பெறுவதைவிட அனுபவ ரூபமாக படிப்புப் பெறுவதினால் நல்ல பலன் ஏற்படுகிறது என்பதை நிபுணர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆங்காங்கு அவர்களுக்குத் தக்கபடி, அங்குள்ள சூழ்நிலைக்கேற்ப இதை அமைத்துக்கொண்டிருக்கிறார்கள். நம் நாட்டுச் சூழ்நிலைக்குத் தகுந்தபடி அந்தத் தத்துவத்தை

[Sri C. Subramaniam] [22nd March 1961

நாம் எப்படி பயன்படுத்தலாம் என்று பார்த்து ஒரு திட்டம் கொடுத்திருக்கிறார்கள் மஹாத்மா காந்தியடிகள். அப்போதைய சூழ்நிலைக்கேற்ப ஒரு திட்டம் கொடுத்தார்கள். ஆனால் நம் சமுதாயத்தில் மாறுதல்கள் ஏற்பட ஏற்பட இந்த ஆதாரக் கல்வி முறையை, இந்தத் தத்துவத்தை நிறைவேற்றும்போது, சூழ்நிலைக்கேற்ப அதை மாற்றி அமைத்துக் கொண்டுதான் போகவேண்டும். மஹாத்மா காந்தி ஒரு காலத்தில் அப்படிச் சொன்னார்கள் என்பதற்காக அப்பொழுது சொன்னதை அதையே பிடித்துக்கொண்டு இருக்க வேண்டுமென்று நினைத்தால் கல்வி வளர்ச்சி அடையாது, தேங்கிப்போகும் நிலைதான் ஏற்படும். ஆதாரக் கல்வி பற்றித் தீவிரமாக சொல்லுகிற தீவிர வாதிகளுக்கு நான் இதைச் சொல்ல விரும்புகிறேன். மாறுதல்கள் ஏற்படும்போது, ஆதாரக் கல்வியே அழிந்து போய்விட்டது என்று சொன்னால் மாறி வருகிற சமுதாய அமைப்பிற்கேற்ப அதை மாற்றி அமைக்காவிடில் அது உதவாமலேயே போய்விடும். மாறி வருகிற சமுதாயத்திற்கு ஏற்ற முறையில், அனுபவ அடிப்படையில் அறிவு பெற வேண்டுமென்ற தத்துவத்தை சூழ்நிலைக்கேற்ப மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டும். நிபுணர்கள் ஆலோசனைக்கேற்ப, அவர்கள் வழி காட்ட வேண்டுமென்ற அடிப்படையில், சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப மாற்றிக்கொள்ள வேண்டும். அப்படி மாறுதல்கள் செய்யும்போது அதை எதிர்ப்பார்களேயானால், ஆதாரக் கல்வியை ஆதரிப்பவர்கள்தான் அதை எதிர்ப்பவர்களாவார்கள். மாறுதல்கள் ஏற்படும்போது அதை விரும்பாதவர்கள், அதை எதிர்ப்பவர்களை விட, இவர்கள்தான் அதற்கு பாதகம் விளைவிக்கும் நிலையை ஏற்படுத்திவிடுகிறார்கள் என்று சொல்லிக்கொள்வது மிகவும் அவசியமாக இருக்கிறது. உயர்நிலைப் பள்ளி, கல்லூரிகள் இவைகளில் கல்வித் தரம் உயர வேண்டுமென்பது குறித்து நாம் எல்லோரும் ஆவல் கொண்டிருக்கிறோம். அப்படிக் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமோ அவைகளை எடுத்துக்கொண்டு வருகிறோம். பின் பாட புத்தகங்கள் பற்றி கனம் பழனிஸ்வாமி அவர்கள் குறிப்பிட்டார். கனம் கருணாநிதி அவர்களும் குறிப்பிட்டார் என்று நம்புகிறேன். இன்றைய நிலையில், பாடப் புத்தகங்கள் குழந்தைகளுக்கு நன்கு உதவக் கூடிய அளவிற்கு, அந்த முறையில் அமையவில்லை என்ற கருத்தை வெளியிட்டிருக்கிறேன். ஆம், அக்கருத்தை மாற்றிக் கொள்வதற்குள்ள ஏது இதுவரையில் ஏற்படவில்லை. நல்ல புத்தகங்களை எந்த முறையில் தயாரிக்க முடியும், எப்படி நல்ல முறையில் அச்சிட வேண்டுமென்பதைப் பற்றி சர்க்கார் வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அடிப்படையில் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது. அதற்கான தனி அச்சு இயந்திரங்கள் தருவிக்கப்பட்டு ஆரம்ப பள்ளிகளுக்கு உள்ள பாடப் புத்தங்களை சர்க்காரே தயார் செய்ய வேண்டுமென்று சொல்லும்போது சர்க்கார் அதிகாரிகளே புத்தகங்களை எழுத வேண்டுமென்ற அடிப்படையில் அல்ல. தக்க நூலாசிரியர்களைக் கொண்டு நிபுணர்களைக் கொண்டு, திறமையுள்ளவர்களைக் கொண்டு ஆராய்ந்து அந்த அடிப்படையில் புத்தகங்கள் எழுதப்பட வேண்டுமென்று சொல்கிறோமே தவிர, வேண்டுமானால் போட்டி வைத்து அதில் வெற்றி பெறுகிற புத்தகத்தை அச்சிடும் பொறுப்பைத்தான் சர்க்கார் எடுத்துக் கொள்ளப்போகிறதே தவிர, சர்க்காரே புத்தகங்கள் தயாரிக்கப் போகிறதாம் என்று பல பத்திரிகைகள் தலையங்கங்கள் கூட எழுதி விட்டன. நரான் எழுதப் போகும் புத்தகம் அல்ல, இயக்குனர் எழுதப் போவதில்லை, அல்லது வேறு அதிகாரிகள் எழுதப் போவதில்லை, நிபுணர்கள் எழுதும் புத்தகங்கள் தர்ன். தனிப்பட்டவர்கள் போட்டி போட்டுக் கொண்டு ஏன் எழுதக்கூடாது, அவற்றை ஏன் போடக்கூடாது ? என்று கேட்கலாம். குறைந்த செலவில் குறைந்த தரமுள்ள புத்தகங்கள் தயார் செய்ய முடியும், மோசமான காகிதத்தில் மோசமாக வெளிவிடலாம், ஆக லாப அடிப்படையில்தான் நோக்கம் செல்கிறதே தவிர குழந்தைகளுக்கு இது எந்தளவு பயன்படும், எந்தளவு உபயோகமாக இருக்கும் எந்தளவி அறிவு வளரும், என்று பார்த்து வெளியிடக் கூடிய புத்தகங்களைப் பார்ப்பது அரிதாகயிருக்கிறது. ஆங்காங்கு சில சில புத்தகங்கள் இருக்கலாமோ என்னவோ. ஆக, நல்ல புத்தகங்கள் வெளி வரவேண்டும். இப்படி பல்வேறு விதங்களில் கல்வித் தரத்தை உயர்த்த முயற்சி செய்து வருகிறோம். பின்னர்



22nd March 1961] [Sri C. Subramaniam]

மத்திய உணவுத் திட்டத்தை நிறைவேற்றி வருகிறோம். குழந்தைகள் நல்ல உடை அணிந்து வந்தால் நல்ல சூழ்நிலை ஏற்படும் என்பதற்காக உடை வழங்கும் திட்டம் இருக்கிறது. பின், பள்ளிச் சீரமைப்பு வேலைகளில், ஆசிரியர்கள் பங்கு கொள்ளலாமா என்பது பற்றி பலவித கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. ஆசிரியர்கள் காலம் வீணாகப் போகிறதே என்றெல்லாம் கூறப்பட்டன. படிப்பு சொல்லிக்கொடுக்கக்கூடிய காலத்தில் இந்தப் பணிகளில் ஈடுபடக்கூடாது என்று வற்புறுத்தப்பட்டிருக்கிறது. இதை மீறிச் செய்கிறார்கள் என்றால், சொல்வதை மீறி பல்வேறு செயல்களில் ஈடுபடுகிறவர்கள் இல்லை என்றில்லை. வேறு இயக்கங்களில் ஈடுபட்டிருப்பது, ஆசிரியர்கள் ஈடுபட்டிருப்பது நமக்குத் தெரியாதா ? அப்பொழுது ஒன்றும் கூறாமல், இப்பொழுது இதற்கு வந்து பள்ளிக்கூடமே கெட்டுப் போய் விட்டது, எல்லாம் மோசமாக நடக்கிறது என்று ஆசிரியர்களுக்கு பரிந்து சொல்கிறார்கள். ஒன்று நான் இங்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். சட்டம் இருந்தால், இன்னபடி செய்யவேண்டும் இல்லையெனில் வேலையை விட்டு நீக்கி விடுவோம் என்று சொல்லலாம். மந்திரியாக இருந்தாலும் சரி, இயக்குனராகயிருந்தாலும் சரி, வேறு எந்த ஜில்லா அதிகாரியாகயிருந்தாலும் சரி, இந்தக் காலத்தில் யாரையும் நிர்பந்தப்படுத்தி விதிகளுக்கு மீறி அதிகப்படியாக வேலை செய்ய வேண்டுமென்று, அவர்கள் இஷ்டம் இல்லாமல் வேலை செய்ய வேண்டுமென்று நிலையை ஏற்படுத்துவது என்றால் அந்நிலையை ஏற்படுத்த முடியும் என்று என் அனுபவம் சொல்லவில்லை, மற்றவர்களுக்கு அந்த அனுபவம் இருந்தால் நான் பாராட்டுகிறேன். ஆகவே, யாரையும் நிர்பந்தப் படுத்துவது என்பதில்லை. முன்பு நான் கூறியதுபோல் நல்லதொரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. நல்ல ஆர்வம் மக்களிடையே ஏற்பட்டிருக்கிறது. ஆக, ஆர்வத்துடன் இத்தகைய நல்ல காரியங்களில் ஈடுபட்டிருக்கும் ஆசிரியர்களுக்கு நாம் பாராட்டுதல் கூறவேண்டும். அவர்கள் இப்படிப்பட்ட பணிகளில் ஈடுபடுவது பற்றி அவர்களை ஊக்குவிக்க வேண்டுமென்று நான் பணிவுடன் ஆனால் உறுதியுடன் முக்கியமாக திராவிட முன்னேற்றக்கழக அங்கத்தினர்களுக்கும், அவர்களது உப தலைவர் அவர்களிடமும் விண்ணப்பித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, ஆசிரியர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தைப் பற்றி பலர் குறிப்பிட்டார்கள். இதில் அங்கத்தினர்கள் அக்கரை கொண்டிருப்பதைப்பற்றி நான் வரவேற்கிறேன். உடனடியாக இதை செய்து கொடுக்க வேண்டியதுதான். பல ஆசிரியர்களுக்கும் பள்ளி இருக்கும் இடத்தின் பக்கத்தில் குடியிருக்க வீடுகள் இல்லை என்றால் பிரயோசனம் இல்லை, அதிலும் பக்கத்தில் இருக்க வேண்டும். பள்ளிகூடம் ஒரு பக்கமும், குடியிருக்கும் இடம் இன்னொரு பக்கத்திலும் இருந்தால் பல விதமான கஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஆகவே இன்றைக்கு ஆசிரியர்களுக்கு உடனடியாக நிறைவேற்றி வைக்க வேண்டிய திட்டம் என்கின்ற அளவில் இதை எடுத்து நடத்த வேண்டியது மிகவும் அவசியம். அதிலும் குறிப்பாக கிராமப்புறங்களில் பரவலாக இந்த வீடு கட்டும் திட்டத்தை நிறைவேற்றி வைப்பதின் மூலமாகத்தான் பள்ளிகளில் நல்ல முறையில் கல்வி உயருவதற்கும் அடிப்படையாக அமையும் என்பதை குறிப்பிட விரும்புகிறேன். இல்லையென்றால் வீடுகளுக்குச் செல்வதற்காக பஸ்களை எதிர்பார்த்துக்கொண்டும், கடிகாரத்தை எதிர்பார்த்துக் கொண்டும் இருக்க வேண்டிய நிலைதான் ஏற்படுகிறது. பக்கத்தில் வீடுகள் இல்லையென்றால் எப்போது வீடுகளுக்குப் போவது என்று பார்க்க வேண்டியது அவசியமாகிறது. இன்றைக்கு போலீஸ் அதிகாரிகள் எல்லோருக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும் என்றுள்ள திட்டத்தின் அடிப்படையில் மூன்று நான்கு வருடங்களுக்குள் இந்தத் திட்டத்தை நிறைவேற்றி, குறைந்து 100-க்கு 80 பேர்கள் இந்த வாய்ப்பைப் பெறக்கூடிய அளவுக்கு இந்தத் திட்டத்தை நிறைவேற்றி வைக்க வேண்டும் என்கின்ற எண்ணத்தில்தான் நாம் இப்போது வேலை செய்து கொண்டிருக்கிறோம். ஆசிரியர்கள் விஷயத்தில் இதைவிட இன்னும் தீவிரமாக வீடு கட்டும் திட்டத்தை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லுகின்ற கருத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். இதில் என்னால் இயன்ற வரை முயற்சி எடுத்துக்கொள்வேன் என்கின்ற உறுதியைத்தான் இப்போது உங்கள் முன்னால் என்னால் சொல்லிக்கொள்ள முடியும்.

1-30 p.m.

[22nd March 1961

DEPUTY SPEAKER : I think the House has no objection to sit till the Hon. Minister finishes his speech.

**THE HON. SRI C. SUBRAMANIAM** : கல்விச் சலுகை அளிக்கின்ற விஷயத்தைப் பொறுத்தவரை, இப்போது 11-வது வகுப்பு வரையிலும் எல்லோருக்கும் கல்வி பெற வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் நாம் திட்டங்களை வகுத்திருக்கிறோம். இதில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த கனம் சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்கள் இதன் காரணமாக பின்தங்கிய மக்கள் பழி வாங்கப்படமாட்டார்கள் என்று உறுதிமொழி தர வேண்டும் என்று சொன்னார்கள். இதில் ஏன் இப்பேர்ப்பட்ட வார்த்தைகளை உபயோகிக்க வேண்டும் என்று தெரியவில்லை. தயவு செய்து இப்பேர்ப்பட்ட வார்த்தைகளை இதற்காக உபயோகிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். பிற்பட்ட மக்களுக்கு பாதகம் விளைவிக்க வேண்டும் என்றோ, அல்லது அவர்களை பழி வாங்க வேண்டும் என்றோ யாரும் நினைக்கமாட்டார்கள், அவ்விதம் நினைத்திருப்பார்கள் என்று எண்ணியிருந்தால், மனதில் இருக்கின்ற அந்த எண்ணத்தை நீக்கிவிட வேண்டும் என்று மிகவும் பணிவுடன் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு சமூகத்தில் பிற்பட்ட நிலையில் இருக்கின்ற பின்தங்கிய மக்களை முன்னுக்குக் கொண்டுவர வேண்டும் என்கின்ற எண்ணம்தான் எல்லோருக்கும் இருக்கிறது, குறிப்பாக இந்த சர்க்காருடைய கொள்கையும் அதுதான்—வேண்டுமென்றால் அதற்கான முயற்சிகள் போதாது என்று சொல்லுங்கள், அதை ஒத்துக்கொள்கிறேன், ஆனால் அதற்காக பின்தங்கிய மக்கள் பழிவாங்கப்படுவார்கள் என்றெல்லாம், கருத்துக்களை சொல்லுவது அவ்வளவு நல்லதல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன், அவர்கள் எதை நினைத்துக்கொண்டு இவ்விதம் சொன்னார்களோ தெரியவில்லை, அல்லது அவர்களுடைய பேச்சினுடைய பழக்கம் தான் இவ்வாறு அமைந்து விட்டதோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது, ஆகவே இது போன்ற வார்த்தைகளை விட்டு விடுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு மற்றவர்களுக்கு புதுச் சலுகைகள் கொடுப்பதின் காரணமாக பிற்பட்டவர்களுக்கு கொடுக்கப்பட்டுவரும் சலுகைகள் போய்விடும் என்று யாரும் நினைக்க வேண்டாம். இன்றைக்குப் பிற்பட்ட சமூகத்தினர்களுக்கு குறிப்பாக அரிஜனங்களுக்கு கொடுக்கப்பட்டுவரும் எந்த சலுகையும் இப்போது மற்றவர்களுக்கு கொடுக்கப்பட்டு வரும் சலுகைகளில் ஒரு சிறிய அளவு கூட குறையாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன், இதில் யாரும் சந்தேகப்பட வேண்டிய அவசியம் இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (ஆரவாரம்) சமூகத்தில் இருக்கின்ற மற்ற ஏழைகளுக்கு சலுகை அளிக்க வேண்டும் என்று சொல்லும் போது பிற்பட்ட மக்களுக்கு கொடுக்கப்பட்டு வரும் சலுகைகளை குறைத்து விட்டு அதன் மூலம் இவர்களுக்கு சலுகை கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை, எடுக்கப் போவதும் இல்லை, யாரும் அவ்விதம் எடுக்கவும் மாட்டார்கள் என்று நம்புகிறேன். பிற்பட்ட மக்கள் எந்த அளவுக்கு சமூகத்தில் உயர்ந்து வருகிறார்களோ, அந்த அளவுக்கு நாட்டில் சோஷியலிச சமுதாயத்தை அமைக்க முடியும், அது மட்டுமல்ல, அடித்தளத்திலிருக்கின்ற மக்கள் எந்த அளவுக்கு உயருகின்றார்களோ அந்த அளவுக்கு நாட்டில் பொது மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை நல்ல முறையில் அமைக்க முடியும் என்கின்ற கொள்கையை காங்கிரஸ் கட்சி தன்னுடைய தனிப்பட்ட கொள்கையாக ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆகவே இதில் கனம் சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்கள் சந்தேகப்பட வேண்டிய அவசியமே யில்லை; காங்கிரஸ் கட்சியினுடைய ஆட்சியில் என்றைக்கும் அரிஜனங்களுக்கு நியாயம் வழங்கப்படும், அதுமட்டுமல்ல, நியாயத்திற்கு மேலாகவும் சலுகைகள் அளிக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். (ஆரவாரம்): . . .

**SRI M. KARUNANITHI :** கான்பூர் மகாநாட்டில் பேசிய கனம் அமைச்சர் அவர்கள் பின்தங்கிய பிள்ளைகளுக்கு தனியாக ஆசிரியர்களை அமர்த்தி அதிக நேரம் பாடங்கள் சொல்லித்தரப்படும் என்ற கருத்தை தெரிவித்திருந்தார்கள், அதற்கு சர்க்கார் செய்திருக்கும் முடிவு என்ன என்பதை விளக்க வேண்டுகிறேன்.



22nd March 1961]

**THE HON. SRI C. SUBRAMANIAM** : ஆம், அதற்கான பணியும் இப்போது நடந்து கொண்டுதான் இருக்கிறது என்பதை கனம் கருணாநிதி அவர்களுக்கு மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது இருக்கக்கூடிய நேரத்திற்குப் பின்னால் கூடுதலாக இன்னொரு மணி நேரம் பாடம் சொல்லிக்கொடுக்க வேண்டும் என்று ஆசிரியர்களை கேட்டுக் கொள்ளும்போது, அவர்களும் அதை ஏற்றுக்கொள்ளும்போது, இதே திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்கள், பார்த்தீர்களா, இப்போதுள்ள வேலை போதாது என்று இன்னும் கூடுதலாக வேலை செய்யச் சொல்லுகிறார்கள், இது நியாயமா என்றெல்லாம் ஆசிரியர்கள் மனதில் துவேஷத்தை வளர்க்கக்கூடிய விதத்தில் பிரசாரம் பண்ண ஆரம்பித்து விடுவார்கள். இந்த விதத்தில் துவேஷம்தான் வளருமே ஒழிய பிற்பட்ட பிள்ளைகளுக்கு இதனால் என்ன நன்மை கிடைக்கிறது என்பதைப் பார்க்க மறந்து விடுகிறார்கள். ஆகவே இனிமேல் யாரும் இம்மாதிரியான துவேஷத்தை வளர்க்கின்ற முறையில் எந்த விதமான பிரசாரத்தையும் செய்ய வேண்டாம், அதன் மூலம் எந்த விதமான நன்மையும் ஏற்படாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு இதற்காக திட்டம் வகுக்கப்பட்டு, பல பள்ளிகளிலும் தனிப்பட்ட முறையில் பாடம் சொல்லிக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதையும் ஒரு குறையாக, மதிய உணவுத் திட்டத்தில் ஆசிரியர்களை உபயோகிக்கிறார்கள், சிரமைப்புக்கு ஆசிரியர்களை உபயோகிக்கிறார்கள், இவர்களுக்கு தங்கள் பிள்ளைகளுடைய முகத்தைப் பார்க்க நேரம் வேண்டாமா, பெண்சாதியை பார்க்க நேரம் வேண்டாமா என்றெல்லாம் பேச ஆரம்பித்து சர்க்காரை குறை சொல்ல ஆரம்பித்து விடுகிறார்கள், இதில் அவர்களாகவே விரும்பி வந்து வேலை செய்ய முன்வந்தாலும்கூட, அவர்களாகவே போட்டி போட்டுக் கொண்டு வேலை செய்ய முன் வந்தாலும், அவர்கள் கட்டாயமாக வேலை செய்ய வேண்டியிருக்கிறது என்று அழகாக பேசி குறைகளை சொல்லும் போதுதான் இம்மாதிரியான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கின்ற நம்முடைய மனமும் தளர்ந்து போகின்றது என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அடுத்ததாக . . .

**SRI A. GOVINDASAMI** : 11-வது வகுப்பு வரையில் சலுகைகள் அளித்திருப்பதற்கு மகிழ்ச்சி தெரிவிக்கும் நேரத்தில் பின்தங்கிய மக்கள் என்ற இனத்தில் இருக்கின்றவர்களுக்கு '**most backward and backward communities**' எந்த விதமான பாதகமும் ஏற்படாது என்கின்ற உறுதியை அமைச்சர் அவர்கள் தர வேண்டும். அப்போதுதான் அமைச்சர் அவர்களுடைய நல்லெண்ணத்தில் நம்பிக்கை ஏற்பட முடியும்.

**THE HON. SRI C. SUBRAMANIAM** : நான் முன்னால் தெரிவித்தது, முன்னால் கொடுத்த வாக்குறுதி பொதுவான வாக்குறுதிதான். இன்றைக்கு சமூகத்தில் யார் சலுகை பெறுபவர்களாக இருந்தாலும், அவர்களுக்கு அந்தச் சலுகைகள் கிடைப்பதில் எந்த விதமான பாதகமும் ஏற்படாது என்ற பொதுவான வாக்குறுதியை கொடுத்தேன். கனம் சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்கள் அரிஜனங்களைப்பற்றி குறிப்பாக சொன்னதின் காரணமாக, அதைத் தனியாக சொன்னேனே தவிர வேறு ஒன்றுமில்லை. மற்றவர்களுக்கு சலுகை கிடைப்பதால் இப்போது சலுகை கிடைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு இப்போது கிடைத்துக்கொண்டிருக்கக் கூடிய சலுகைகள் குறைக்கப்பட்டுவிடும் என்று யாரும் எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. இதில் குறிப்பிடப்பட்டிருக்கும் சலுகைகள் எல்லாம் கல்வி பெறுவதற்குரிய சலுகைகளே தவிர உத்தியோகம் கிடைப்பதிலோ அல்லது வேறு எந்த விஷயத்திலும் அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அரிஜனங்களுக்கும் பிற்பட்ட வகுப்பாருக்கும் அதிக அளவில் சலுகைகள் கொடுக்க வேண்டும் என்று அரசியல் சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இப்போது சலுகைகள் பெற்றுக்கொண்டிருப்பவர்கள் யாராக இருந்தாலும்சரி அவர்களுக்கு தாங்கள் பெறக் கூடிய சலுகைகள் எந்த விதத்திலும் குறைக்கப்பட மாட்டாது என்கின்ற உறுதியை கூறிக்கொள்கிறேன்.

[22nd March 1961

(SRI K. SATTANATHA KARAYALAR : The English School-Leaving Certificate is also there.)

THE HON. SRI C. SUBRAMANIAM : அடுத்ததாக, கன்னியாகுமரி ஜில்லாவைப் பொறுத்தவரை, ஆசிரியர்களுக்கு இருந்து வரும் சில வேறுபாடுகளைப்பற்றி இங்கு சொன்னார்கள். இதில் இருக்கின்ற சிக்கலை முதலாவது புரிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். கன்னியாகுமரி ஜில்லாவில் கல்வி நடப்பது மட்டுமல்ல, அங்குள்ள முறைகளில் பல வேறு விதமாக இருந்துவருகின்றன. ஷிப்ட் முறை ஸிஸ்டம் எல்லாம் அங்கே நடந்து கொண்டிருந்தது. ஆசிரியர்களுடைய படிப்பைப் பொறுத்த மட்டிலும் இங்குள்ள ஆசிரியர்களுக்கும், அங்கேயுள்ள ஆசிரியர்களுக்கும் பெருத்த வித்தியாசம் இருந்து வந்திருக்கிறது. அங்குள்ள ஆசிரியர்களின் பயிற்சி காலம் ஒரு வருடம். நம்முடைய ராஜ்யத்தில் இருந்து வருவது இரண்டு வருடங்கள். இதையும் நாம் நன்றாக யோசித்துப் பார்க்க வேண்டும். இங்கு தமிழ்நாட்டில், எஸ்.எஸ்.எல்.ஸி. படிப்பு ஆங்கிலத்தோடு சேர்த்து படித்து, இரண்டு வருடங்கள் ஆசிரியர் பயிற்சி பெற்ற பிறகு தேறி வருகிறவர்களை நாம் செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் என்று குறிப்பிடுகிறோம். அதே நேரத்தில், ஆங்கிலத்தில் எல்லா பாடங்களும் இல்லாமல், ஒன்பது வருடங்கள் படித்துவிட்டு, ஒரு வருடம் ஆசிரியர் பயிற்சி பெற்று தேறி வருகின்றவர்களையும் ஒன்றாக எடுத்துக்கொள்ள முடியுமா என்பதைப்பற்றி நாம் ஆலோசனை செய்து பார்க்க வேண்டும். பதினொரு வருடம் படித்து விட்டு இரண்டு வருடம் ஆசிரியர் பயிற்சியும் முடித்தவர்களும், ஒன்பது வருடங்கள் படித்து விட்டு ஒரு வருடம் ஆசிரியர் பயிற்சியும் முடித்தவர்களும் ஒன்றாக வைத்துக்கொள்ள வேண்டும் என்று அங்குள்ளவர்கள் சொல்லுகின்றார்கள். அப்படியென்றால் இது இங்குள்ளவர்களுக்கு நியாயம் வழங்குவதாக இருக்குமா என்பதைப்பற்றியும் நாம் ஆலோசிக்க வேண்டும். ஆகவே இரண்டு பேர்களையும் பாகுபாடு செய்யத்தான் வேண்டியிருக்கிறது. பின்னால் அவர்களுக்கு வேறு விதியே இல்லையா என்றால் அதற்கும் வழி செய்யப்பட்டிருக்கிறது, அதாவது 10 வருடம் பணியாற்றியிருப்பவர்கள் ஒரு வருடம் ஆசிரியர் பயிற்சி பெற்றிருந்தாலும்கூட, அவர்களும் செக்கண்டரி கிரேட் ஆசிரியர்களாக எடுத்துக்கொள்ளப்படுவார்கள் என்கின்ற அடிப்படையில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த முடிவு சர்க்காராலேயே எடுக்கப்பட்ட முடிவு அல்ல, அங்குள்ள எல்லா எம்.எல்.ஏ.-க்களையும் அங்குள்ள ஆசிரியர்களின் சூழ்நிலையையும் கலந்து எடுக்கப்பட்ட முடிவு. ஆகவே இதற்கு மேலாக இந்தப் பிரச்னையை கிளப்பிக்கொண்டிருந்தால் அது இப்போது இருக்கக் கூடிய நல்ல சூழ்நிலையை கெடுக்கக் கூடியதாகவே இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அதே போன்றுதான் எல்.டி. ஆசிரியர்களைப் பற்றியும் குறிப்பிட்டார்கள். எல்.டி. ஆசிரியர்களுக்கு அங்கு கொடுக்கப் பட்டு வந்தது 40 ரூபாயோ, 50 ரூபாயோ தான். இங்கு நாம் இப்போது 150 ரூபாய் என்று ஏற்படுத்தியிருக்கிறோம். முன்பு அவர்கள் எவ்வளவு குறைவாக சம்பளம் வாங்கியிருந்தாலும்கூட, நம்முடன் சேர்ந்த பின்னால் இங்கேயிருக்கக்கூடிய சம்பளத்தை அவர்களுக்கும் கொடுத்தாக வேண்டும் என்று நாம் சொல்லுகிறோம். இப்போது 50 ரூபாய் வாங்கினாலும் 100 ரூபாய் வாங்கினாலும் 100 ரூபாயில் ஆரம்பிக்கலாம் என்பதுதான் திட்டம். இதற்கு முன்னால் நான்கு வருஷம் வேலை செய்துகொண்டிருந்தோம், அந்த நான்கு வருஷத்திற்கும் சேர்த்து நான்கு வருஷ உயர்வு கொடுக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். அதுதான் அங்குள்ள நிலைமை. பரிசீலனை செய்து குறைவான சம்பளத்தை உயர்த்தும்போது திட்டப் பிரகாரம், விதிப் பிரகாரம் மிகக் குறைவான சம்பளம் இருந்தால் அந்த அளவுக்கு உயர்த்த வேண்டும் என்று உயர்த்த முடியுமே தவிர இதற்கு முன் பணியாற்றிய வருஷங்களுக்கு சேர்த்து அந்த அளவுக்கு உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று சொன்னால், இப்படி ஏற்றுக் கொள்ளும் விதி இல்லை. இவர்களுக்கு இப்போது எந்த விதத்திலும் குறைவு கிடையாது. இப்போது ஒவ்வொருவரும் ரூ. 30—40 அதிகமாக வாங்கும் நிலை ஏற்பட்டிருக்கிறதே தவிர ஒன்றும் குறைவு கிடையாது. தயவு செய்து அவர்கள் மனதிலே ஆசையைக் கிளப்பி சூழ்நிலை கெடக்கூடிய நிலைமையை ஏற்படுத்த வேண்டாம். எல்லோருக்கும் கொடுக்கப்பட்டுள்ள சலுகைகள்



22nd March 1961] [Sri C. Subramaniam]

அவர்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ளன. இனிமேல் 1956-லிருந்து சேர்கிறவர்களுக்கு இந்தப் பிரச்னை வராது. ஏனென்றால் இந்த மாதிரி பயிற்சி பெற வேண்டும் என்று வைத்து விட்டோம். அதனால் அவர்களுக்கும் உடனடியாக இந்த சம்பளம் கொடுத்துவிடுகிறோம். இத்தகைய சூழ்நிலையில், நம்மிடத்தில் வந்து சேரும் சூழ்நிலையில் சில சங்கடங்கள் ஏற்பட்டுத்தான் தீரும். ஆக இதனை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI M. WILLIAM : On a point of clarification, Sir. For the graduate teachers in Kanyakumari district, a gradation list has been prepared and approved by Government. But we find that those who are juniors are getting more salary than those who are seniors to them as per gradation list. Will the Government be pleased to give at least the salary of the junior to the senior?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதிலே திடீரென்று கேள்வி கேட்டால் பதில் சொல்ல முடியாது. இதைப்பற்றி குறிப்பாக எழுதிக் கொடுத்தால் பரிசீலனை செய்து யாருக்காவது நியாயம் வழங்கப் படாமல் இருந்தால் நியாயம் வழங்க ஏற்பாடு செய்ய முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொரு விஷயத்தை இங்கே முக்கியமாக விவாதத்தில் வந்ததைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். இங்கே தனிப்பட்டவர்களைப்பற்றி பேசுவது சரியல்ல. நான் மத்தியில் எழுந்து பேச வேண்டாமென்று இருந்து விட்டேன். ஒருவர் ஒரு டீ.இ.ஓ. பற்றிப் பேசினார். இன்னொருவர் யாரையோ பற்றி பேசினார். (குறுக்கீடு) திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவரும் பேசினார். தனிப்பட்டவர்களைப் பற்றிப் பேசுவது—அதிலும் குற்றம் குறை கூறுவது தவறு என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். டீ.இ.ஓ. பற்றி சில கருத்துக்களை கனம் சிதம்பரநாத நாடார் அவர்கள் தெரிவித்தார்கள். அவர்கள் சொன்னது சரியாக இருக்கலாம்—சரியாக இல்லாமலும் இருக்கலாம். ஒரு தனிப்பட்ட கருத்தை பொதுச் சபையில் சொல்லி தனது கருத்துக்கு வலிவு தேட முயற்சிப்பது தவறு என்று தெரிவித்துக் கொள்கிறேன். இன்னொன்று இப்போது ஞாபகத்திற்கு வருகிறது. கனம் சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்கள் தான் தனிப்பட்ட ஒரு பெண்ணின் விஷயத்தைப்பற்றி, சர்ட்டிபிகேட் பற்றி குறிப்பிட்டார். அந்த பெண் என்ன சொன்னாள் என்பதுதான் அவர்களுக்குத் தெரியும். இதில் இருக்கக்கூடிய குறைகள் என்ன, என்ன காரணத்தினால் இது மறுக்கப்பட்டது என்ற பூரா விஷயமும் அவருக்குத் தெரிந்திருக்க முடியாது. அவர்கள் சொன்னதையும் வைத்துக்கொண்டு உண்மையாக என்ன நடந்தது என்று பரிசீலனை செய்துதான் முடிவு எடுக்கப்படுகிறது. ஆகையால்தான் தனிப்பட்ட கருத்துக்களை இங்கு எடுத்துச் சொல்வதன் மூலமாக ஒரு கட்சியை எடுத்துச் சொல்லுகிறார்களே தவிர—இப்போது உடனடியாக என்னால் இதைப்பற்றி எடுத்துச் சொல்ல முடியாது. பத்திரிக்கையில் வரும் போது ஏதோ பெரிய தவறு நடந்துவிட்டது என்ற எண்ணம் ஏற்படலாம், அந்த முறையில் உண்மையான நிலைமை என்ன என்பது தெரியாமல் போகிறது. தனிப்பட்டவர்களுக்கு நியாயம் வழங்கப் படவில்லை என்றால் எழுதிக் கொடுக்கலாம். பரிசீலனை செய்கிறோம். பரிசீலனை செய்து வேறு மாதிரி முடிவு இருந்தால், நாம் நினைப்பது நடக்கவில்லை என்றால் நியாயம் வழங்கப்படவில்லை என்று சொல்லக் கூடாது. எல்லாவற்றையும் பார்த்துத்தான் முடிவு எடுக்கப்படுகிறது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கடைசியாக, இந்த 100 ரூபாய் மாதத்திற்குக் குறைவாக வரும்படி உள்ளவர்களை ஏழைகள் என்று வைத்திருப்பதிலே அதை 150 ஆக உயர்த்த வேண்டுமென்று சிலர் சொன்னார்கள், 200 ஆக உயர்த்த வேண்டுமென்று சிலர் சொன்னார்கள், 300 ஆக உயர்த்த வேண்டும் என்று சிலர் சொன்னார்கள், சிலர் எந்த விதமான வரம்பும் வேண்டாமென்று சொன்னார்கள். நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், இது ஒரு ஆரம்பம்.

[Sri C. Subramaniam] [22nd March 1961

இப்போது 100 ரூபாயில் ஆரம்பிக்கிறோம். பிறகு 150, பிறகு 200, பிறகு 250, பிறகு 300 என்று படிப்படியாகச் செல்லும்போது பணக்காரர், ஏழை என்ற வித்தியாசம் இல்லாமல் தகுதி இருந்தால் எவ்வளவு வேண்டுமானாலும் படிக்கலாம் என்று ஏற்படுத்தி விட்டால் நாம் ஒரு லட்சியத்தை அடைந்ததாகக் கருதலாம். இதன் மூலமாகக் குறிப்பிடும்போது, 11 வயது வரையில் எந்த வித வித்தியாசமும் இல்லாமல் சம்பளச் சலுகை கொடுக்கப்படுகிறது என்று சொல்லும்போது இதை நான் முதற்படியாகத்தான் சொன்னேன். நாம் இன்னும் பல படிகளைத் தாண்ட வேண்டியிருக்கிறது. நூறு என்று வைத்திருப்பது சரி என்று சொல்லவில்லை. இன்றைக்கு இருக்கும் வரவு செலவுத் திட்டத்தை வைத்துக்கொண்டு இதற்கு மேல் போவதானால் அதிகமான அளவுக்குத் துண்டு விழும், இன்னும் பல சிக்கல்கள் வரும். அதனால்தான் இப்போது 100 என்று வைத்திருக்கிறோம். தொடர்ச்சியாகப் பரிசீலனை செய்து, கொஞ்சம் கொஞ்சமாக உயர்த்தி, கடைசியாக தகுதியுள்ளவர்கள் யாராக இருந்தாலும், பணக்காரர்கள் என்ற காரணத்தினால் தகுதி இல்லாதவர்கள் எத்தனை வருஷம் வேண்டுமானாலும் படிக்கலாம் என்ற நிலை நீங்கி, தகுதியுள்ளவர்கள் எந்த அளவு வேண்டுமானாலும் படிக்க அத்தகைய ஒரு லட்சியத்தை அடைவதற்கு அந்தப்படியில் மேலே ஏற முயற்சித்துக் கொண்டிருக்கிறோம். அதில் ஏறுவது சுலபமல்ல. இதற்கு இந்தச் சபையின் முழு ஒத்துழைப்பும் மக்களுடைய முழு ஒத்துழைப்பும் கிடைக்கும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக்கொண்டு இந்த மான்யத்தை . . .

**Sri M. KARUNANITHI** : திருவாரூர் பற்றி . . .

**The Hon. Sri C. SUBRAMANIAM** : திருவாரூர் விஷயத்தைப்பற்றிச் சொல்லுகிறேன். தனிப்பட்டவர்களுக்கு கொடுத்துவிட்டதாகச் சொன்னார்கள். தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்கவில்லை. ரிஜிஸ்டர் செய்யப்பட்ட சொஸைட்டிக்கு கொடுக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. என்னென்ன அபிவிருத்திகள் செய்ய வேண்டும், என்னென்ன காரியங்கள் செய்ய வேண்டும் என்ற கண்டிஷன்கள் பேரில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அபிவிருத்திகள் நடக்குமானால் தனிப்பட்ட சொஸைட்டிக்கு, ரிஜிஸ்டர்ட் சொஸைட்டிக்கு கொடுப்பது தவறல்ல என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் கருணாநிதிக்கு ஒருவர் பெயர்தான் தெரிகிறது. அதை வைத்துக்கொண்டு தனிப்பட்டவர்களுக்கு கொடுக்கப்பட்டதாக நினைக்கிறார். ரிஜிஸ்டர் செய்யப்பட்ட சொஸைட்டிகளுக்கு கொடுக்கப்பட்டு, நிபந்தனைகள் போட்டு, நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அபிவிருத்திகள் செய்யப்பட வேண்டும், செய்தால்தான் அவர்களிடத்தில் இருக்கும் இல்லையென்றால் எந்த விதமான நஷ்ட ஈடும் இல்லாமல் எடுக்கப்படும் என்ற நிபந்தனையின் பேரில் சொஸைட்டிக்குக் கொடுக்கப்படுகிறது என்று சொல்லிக்கொண்டு . . .

**Sri A. GOVINDASAMI** : எய்டெட் ஸ்கூல்பற்றி . . .

**The Hon. Sri C. SUBRAMANIAM** : ஆம். எய்டெட் ஸ்கூல் பற்றிச் சொன்னார்கள். பதினைந்து சத விகிதம் இருந்ததை 10 சத விகிதம் ஆக்கியதைப்பற்றி கனம் அங்கத்தினர்கள் கோவிந்தசாமி அவர்களும், லட்சுமிகாந்தம் அம்மாள் அவர்களும் குறிப்பிட்டார்கள். பதினைந்து சத விகிதம் கொடுக்கப்பட்டு வந்தபோது என்னவென்றால் அடிப்படை சம்பளம் என்ன கொடுக்கப்பட்டு வந்ததோ அதில் 15 சத விகிதம் கொடுக்கப்பட்டது. இப்போது சம்பளத்தை உயர்த்தியிருக்கிறோம். பஞ்சப்படியை சம்பளத்தோடு சேர்த்திருக்கிறோம். இப்போதைய சம்பள விகிதத்தில் 10 சத விகிதம் ஆனது முன்னாலே இருந்த சம்பள வீதத்தில் 15 சத விகிதத்தை விட அதிகமாக இருக்கிறது என்று கணக்கிடப்பட்டு நிரூபித்துக் காண்பிக்கப்பட்டிருக்கிறது. பதினைந்து, பத்து என்று மட்டும் பார்த்துக்கொண்டு சொல்ல வேண்டாம், மேலாலேயே பார்த்துக்கொண்டு பேச வேண்டாமென்று திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களை கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு). உங்கள் வாடை அங்கும் அடித்து விட்டது போல இருக்கிறது. சாவகாச தோஷம். ஆக, இதைப் பார்த்தால் 10 சத விகிதம் என்பதானது முன்பு கொடுத்ததைவிட அதிகத் தொகை



22nd March 1961] [Sri C. Subramaniam]

என்பதை உணர்வார்கள். யாருக்கும் கஷ்டம் ஏற்படுத்த வேண்டும் என்று சர்க்காருடைய கொள்கை இல்லை. கல்வித் திட்டம் முழுதும் வெற்றி அடைய வேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இத்தனை பேசியதற்குப் பிற்பாடாவது, கல்வித் துறையிலாவது வெட்டுப் பிரேரணை வேண்டாம், அதற்கு கனம் அங்கத்தினர் அன்பழகன் மற்றவர்களுக்கு வழிகாட்டியாக இருப்பார்கள் என்று தெரிவித்துக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**Srimathi T. N. ANANDANAYAKI** : On a point of clarification, Sir. Certain schools are levying very high fees. High fees are collected from students in some schools in North Madras. A student of I standard has to pay Rs. 3 as fees. It is not as if only rich people are sending their children to schools. I would like the Hon. Minister . . . .

**The Hon. Sri C. SUBRAMANIAM** : இதிலே சம்பளம் வாங்கும் பள்ளிகளுக்குப் போக வேண்டும் என்று யாரையும் நிர்ப்பந்தம் செய்வது கிடையாது ; பக்கத்தில் சம்பளம் இல்லாமல் சொல்லிக் கொடுக்கும் பள்ளிகளை விட்டு விட்டு, இதற்குத்தான் போக வேண்டுமென்று சொன்னால் அவர்கள் சொல்லுகிற சம்பளத்தைக் கொடுத்துத்தான் ஆக வேண்டும்.

**DEPUTY SPEAKER** : Is the hon. Member Sri Anbazhagan pressing his cut-motion.

**Sri K. ANBAZHAGAN** : Yes, Sir.

**DEPUTY SPEAKER** : The question is—

"That the allotment of Rs. 21,00,87,200 under Demand XV—Education be reduced by Rs. 100."

The cut-motion was put and lost.

**DEPUTY SPEAKER** : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 21,00,87,200 under Demand XV—Education."

The motion was put and carried and the Grant was made.

**DEPUTY SPEAKER** : The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow. 1-4 p.m.

The House then adjourned.

[22nd March 1961

Pilot Low Shaft Furnace using the magnetite ores of Salem, for which purpose 2,000 tons of Salem ore and 2,000 tons of limestone, also from Salem, are being sent to the National Metallurgical Laboratory. During the visit to the National Metallurgical Laboratory, attention was specially drawn to the valuable work done at the Laboratory on the beneficiation and sintering of Salem magnetite ores and the production of substitute alloys like nickel-free stainless steel.

6. On December 8th, the Ministers visited the Rourkela Steel Project, one of the three steel projects undertaken by the Government of India during the Second Five-year Plan. The Technical Consultants of the project are the West German Firms, Krupps and Demag. The steel plant has an installed capacity of 1 million tons of ingot steel per annum and is served by Rolling Mills producing exclusively flat products like plates, strips, tin-plates, etc. The most distinctive feature of Rourkela is that, for making 75 per cent of the steel output of the plant, viz., 750,000 tons per annum, three L.D. converters are employed. The L.D. process is an Austrian process for steel making and significantly bears the names of two Austrian industrial centres Linz and Donawitz. The characteristic feature of this process is that oxygen of 99·5 per cent purity is used for the production of steel. Its superiority over the conventional processes of steel-making consists in its relatively lower capital and processing costs. Besides, it is a fast process and one ton of L.D. steel can be produced per minute.

7. The Ministers were shown round the Bhilai Steel Project on December 9th, 1960. This has been established with Soviet assistance and has an installed capacity of one million tons of ingot steel. Bhilai concentrates mainly on the production of rails and structurals. One lakh and fifty thousand tons of billets are also produced annually for supply to re-rollers. The two distinctive features of this Project are—

(1) High top pressure is employed in the blast furnace, which results in a higher output of pig-iron per ton of coke; and

(2) a sintering plant has been set up to render iron-ore fines which are too small for use in the blast furnace suitable for reduction in the furnace by forming them into large size lumps.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Thursday, the 23rd March 1961.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, the Deputy Speaker (SRI B. BHAKTAVATSALU NAIDU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS

*Panchayat Courts*

* 1011 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1958-ம் ஆண்டு பஞ்சாயத்துச் சட்டம் அமுலுக்கு வந்த இடங்களில் பஞ்சாயத்து கோர்ட்டு வேலைகளை நிறைவேற்ற என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Board of Revenue has been asked to take necessary steps to establish Village Courts under section 6 of the Madras Village Courts Act, 1888, and to create Courts of Village Munsifs under section 7 of the Act in the areas where Madras Panchayat Act, 1958 has come into force.

SRI S. M. ANNAMALAI : ரெவின்யூ போர்டு நடவடிக்கை எடுத்து அதற்குண்டான வேலைகள் செய்வதற்கு முன்னால் இப்பொழுது இந்தச் சட்டம் அமுலுக்கு வந்த இடங்களில் ரூ. 50, 100-க்கு உட்பட்ட சில வழக்குகளை முனிசிப் கோர்ட்டில் தாக்கல் செய்வதா அல்லது பஞ்சாயத்து கோர்ட்டில் தாக்கல் செய்வதா என்ற தகராறுகள் இருந்து கொண்டிருக்கின்றன. ஆகையினால் இதை விளக்கி அப்படிப்பட்ட வழக்குகள் எந்த கோர்ட்டில் பதிவு செய்யவேண்டுமென்று சர்க்கார் உத்தரவிடுவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதெல்லாம் பரிசீலிக்கப்பட்டு வேண்டிய உத்தரவுகள் பிறப்பிக்கப்படும்.

SRI A. VEDARATHNAM : இதற்கு முன் இந்த வழக்குகளை பஞ்சாயத்துகள் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுத்து வந்தது அரசாங்கத்திற்குத் திருப்தி அளிக்கவில்லையா ? எந்தக் காரணத்தினால் இந்தப் பஞ்சாயத்துக்களிடமிருந்து நீதி வழங்குதல் எடுக்கப்பட்டது என்பதைத் தெரிவிக்க முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்பொழுதுள்ள நிலையில் இந்தக் கேள்வியை இந்தச் சட்ட மன்றத்தினிடம் தான் போட வேண்டும். பஞ்சாயத்துகளுக்குள்ள இந்த அதிகாரத்தை எடுத்து விட வேண்டுமென்று இந்தச் சட்டமன்றம் ஒப்புக் கொண்டிருக்கிறது. இம்மாதிரி நீதியை நிர்வகிக்கிற பொறுப்பு தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்துகளுக்கு வேண்டாம் என்று அரசாங்கம் கருதியது. அந்தக் கருத்தை இந்த மன்றமும் ஏற்றுக் கொண்டு, அதன்படி சட்டம் நிறைவேற்றியிருக்கிறது.

[23rd March 1961

## *Coconut palm (yield)*

* 1012 *Q*.—SRI K. B. S. MANI (on behalf of SRI T. T. DANIEL): Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) what is the average yield of the nuts per coconut tree in the various districts of the State; and

(*b*) how this statistics is collected?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) The average yield of nuts per coconut palm, districtwise in this State in 1959–60 are as follows:—

| | |
|---|---|
| Chingleput—37. | Thanjavur—49. |
| South Arcot—46. | Madurai—38. |
| North Arcot—36. | Ramanathapuram—37. |
| Salem—47. | Tirunelveli—46. |
| Coimbatore—40. | Kanyakumari—36. |
| Tiruchirappalli—37. | |

(*b*) The average yield per coconut palm is worked out on the basis of the average yield per acre and the number of palms per acre. The yield per acre is determined on the basis of the yield in the Government farms and the local knowledge of the Agricultural officers. The number of palms per acre is calculated on the basis of the estimates prepared during the sample survey conducted in 1959–60 and other available information in the department.

SRI K. B. S. MANI: இந்த "பாரங்களை" அதிகப்படுத்துவதற்கான ஏற்பாடுகளும், தென்னை விளைச்சலை அதிகப்படுத்துவதற்கான ஆராய்ச்சியும் நடைபெறுகிறதா? அப்படி நடைபெற்றிருந்தால், அதை நல்ல முறையிலே விளக்கமாக தமிழிலே அச்சடித்துப் பொதுமக்களுக்கும், மற்றவர்களுக்கும் பயன்படும்படிச் செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ஆராய்ச்சி நடத்தப்பட்டு வருகிறது. அச்சுப் போட்டுக் கொடுத்தால் மட்டும் பயன் இல்லை. ஆராய்ச்சியைத் தவிர, தென்னை மரங்கள் வளர்ப்பவர்கள் அதிலே அதிக அக்கறை எடுத்துக் கொள்ளும் வகையிலே கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. முக்கியமாக, தஞ்சாவூர் மாவட்டத்தில் விசேஷ கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

SRI A. VEDARATHNAM: இப்பொழுது கனம் அமைச்சர் அவர்கள் கொடுத்த புள்ளி விவரத்தில் எல்லாவற்றைக்காட்டிலும் அதிக "ஈல்டு" இருக்கிற அந்தப் பகுதியில் தென்னையை விருத்தி செய்வது தானே முறை. தஞ்சாவூரில் இதில் விசேஷ கவனம் செலுத்துவதாக கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அங்கு 49 வீதம் சராசரி "ஈல்டு" இருக்கிறது. அங்கே விசேஷ கவனம் எந்த முறையில் செலுத்தப்பட்டு, என்ன செய்ய உத்தேசித்திருக்கிறார்கள் என்பதை அறிவிக்க முடியுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: தஞ்சையில் 49, என்றால் அதற்கு அடுத்தது சேலத்தில் 47. தென் ஆற்காடு மாவட்டத்தில் ஒன்று தான் குறைவு, 46. ஏறக்குறைய அதிக "ஈல்டு" கொடுக்கும் மாவட்டங்கள் இம்மாதிரிச் சில இருக்கின்றன. ஆனால் தஞ்சாவூரில் விசேஷ கவனம் செலுத்தப்படுகிறது என்றால், அங்கே ஆராய்ச்சிப் பண்ணை இருக்கிறது. அங்கே நாத்து வைக்கப்பட்டு, அது கொடுக்கப்பட்டு வருகிறது. இன்னும் தென்னை மரம் வைத்து உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்கு வேண்டிய யோசனைகள், மற்ற உதவிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.



23rd March 1961]

SRI N. MARUDACHALAM: கோவையில் நொய்யல் நதிக்கரையில் தென்னந் தோப்புகள் அதிகமாக இருக்கிறது. சில சமயங்களில் அங்கே தண்ணீர் அடித்துக் கொண்டு போய் தென்னந் தோப்பு சேதப்படுத்தப்படுகிறது. ஆகவே, அரசாங்கம் இதற்கு வேண்டிய பாதுகாப்பு சுவர் கட்டி அங்கு இருக்கும் தென்னை மரங்களுக்குப் பாதுகாப்பு அளிக்க உத்தரவிடுவார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: தென்னை மரத்திற்கு ஈரம் வேண்டும். தென்னை மரம் கடலோரத்தில் இருந்தால் நல்லது. கடலோரம் கோவையில் இல்லை. நொய்யல் போன்ற ஆற்று ஓரங்களில் தென்னை மரங்கள் இருந்தால், அதனுடைய சொந்தக்காரர்கள் அதற்கு என்ன பாதுகாப்பு வேண்டுமோ அதில் முதலில் அக்கறை எடுத்துக் கொண்டு, பிறகு தெரிவித்தால் விவசாய இலாகா அதைக் கவனித்து எத்தகைய உதவி கொடுக்க முடியுமோ, அல்லது எத்தகைய யோசனை அளிக்கக் கூடுமோ அதில் கவனம் செலுத்துவார்கள்.

SRI V. SUBBIAH: இராமநாதபுரம் மாவட்டத்தில் தென்னை வளர்ப்பதற்கு மணற்பாங்கான கடலோரம் இருக்கிறது. அந்த நிலையில் இருந்தும் கூட அங்கு "ஈல்டு" அவ்வளவு குறைவாக இருப்பதற்குக் காரணம் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: குறைவாக இருப்பதற்குக் காரணம் விவசாயிகள் போதிய அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை என்பது தான். நான் நேற்றுகூட விடை அளித்தேன், விவரம் கொடுத்து இராமநாதபுரம் மாவட்டத்தில் 10,000 ஏக்கர் நிலத்தில் விவசாய இலாகா கவனம் செலுத்தி தென்னை வளர்ப்பதில் அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறது. நான் சில இடங்களில் விசாரித்தேன். இராமேசுவரம் பிராந்தியத்தில், ராமநாதபுரம் மாவட்டத்தில் நிலம் வைத்துக் கொண்டிருப்பவர்கள் ஒன்றுமே விளைவிப்பது இல்லை. காட்டு இலாகாவுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ குத்தகைக்குக் கொடுத்து தென்னை அல்லது சவுக்கு வளர்க்க ஏற்பாடு செய்யலாம் என்று சொன்னால் அதைப் பற்றி அவர்கள் அக்கறை எடுத்துக்கொள்ளுவதில்லை. பேருக்கு 30 ஏக்கர், 50 ஏக்கர் இருந்தால் போதும் என்று அவர்கள் நினைக்கிறார்கள்.

SRI M. A. B. ARUMUGHASAMY: தென்னை மரங்கள் வளர்ப்பதை ஊக்குவிக்கும்பொருட்டு, மழை காலங்களில் ஆற்று ஓரங்களில் ஏற்படும் வெள்ளத்தினால் உண்டாகக்கூடிய சேதத்தைத் தடுப்பதற்கு, தடுப்புச் சுவர்கள் அமைக்கும் செலவை அரசாங்கமே ஏற்றுக்கொள்ளும் முறையில் சர்க்கார் அதற்கு ஒரு குறிப்பிட்ட உதவித் தொகை மூலம் நிவாரணம் அளித்து, விவசாயிகளை ஊக்குவிப்பதற்கு முன் வருவார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இதற்கெல்லாம் முதன் முதலாக அடிப்படையிலே விவசாயிகள் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும். விவசாயிகள் போதியஅக்கறை எடுத்துக்கொள்ளவில்லை என்றால், கனம் அங்கத்தினரைப் போன்றவர்கள் கொஞ்சம் விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டும். அதற்கு மேலே அரசாங்கம் வேண்டியதைச் செய்யும்.

## *Road to Aravatla Village.*

* 1013 *Q*.—SRI V. K. KOTHANDARAMAN: கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குடியாத்தம் தாலுகாவில் அரவட்லா என்கிற ஊர் மலையின் மேல் இருப்பதால் அதற்கு வண்டி போக்குவரத்து பாதை சரியாக இல்லாத காரணத்தினால் மேற்படி ஊர் மக்களுக்கு வேண்டிய பொருள்களையெல்லாம் கழுதையின்பேரில் கொண்டுபோகப்படுவது சர்க்காருக்குத் தெரியுமா?

[23rd March 1961

(இ) மேற்படி குறையைப் போக்க உடனடியாக ரோடு போட உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) The hon. Member himself has made a representation to the Government in the matter.

(b) The matter is under the consideration of the Government.

SRI V. K. KOTHANDARAMAN: இந்த அரவட்லா மலையின் மீது மூன்று கிராமங்கள் இருக்கின்றன. சுமார் 1,500 மக்கள் வசிக்கிறார்கள். 100 வருஷங்களுக்கு முன்னால் "க்லோஷர் ஏரியா" என்கிற முறையில் அது இருந்தது. ஆனால் சமீபத்தில் காடு கண்டிராக்டர் அவருடைய லாபத்தை உத்தேசித்து லாரி போகக் கூடிய அளவுக்கு மலையை உடைத்து ரோடு போட்டிருக்கிறார்கள். அந்த ரோடுக்கு மெட்டல் போட்டு வசதி செய்து கொடுத்தால் போக்குவரத்திற்குச் சௌகரியமாக இருக்கும். மக்களுக்குத் தேவையான பொருள்களைக் கொண்டு செல்லுவதற்கு வசதியாக இருக்கும். ஆகவே, அதைத் துரிதப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: காட்டு இலாகா ரோடு போட்டிருக்கிறார்கள். தேவைக்கு எவ்வளவு வேண்டுமோ அந்த முறையில் போட்டிருக்கிறார்கள். மெட்டல் போடவில்லை. ஆனால், இதற்கு மெட்டல் போட வேண்டுமானால் ரூ. 1½ லட்சம் செலவாகிறது. ஆகையால், மராமத்து இலாகாவுடன் கலந்து ஆலோசித்து, அவர்கள் அதை ஏற்றுக் கொள்ளவேண்டும். அந்த ரோடு எல்லோருக்கும் உபயோகப் படவேண்டும் என்று அவர்கள் கேட்கிறார்கள். அதைப்பற்றி காட்டு இலாகாவுக்கு ஆட்சேபணை இராது. எல்லாம் பரிசீலனையில் இருக்கிறது.

SRI V. K. KOTHANDARAMAN: சென்ற இரண்டு வருஷ காலமாக மராமத்து இலாகா காட்டு இலாகாவைக் காட்டுகிறது. காட்டு இலாகா மராமத்து இலாகாவைக் காட்டுகிறது. அந்த அளவுக்குத் தான் நிலைமை இருந்து வருகிறது. இரண்டு ஆட்டில் ஊட்டிய குட்டியைப் போல இம்மாதிரி ரோடு வசதி போதுமான அளவுக்கு இல்லாமல் அவஸ்தையாக இருக்கிறது. கனம் அமைச்சர் அவர்கள், இரண்டு பேர்களும் கூடி யோசனை செய்து இதைத் துரிதப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இரண்டு ஆட்டில் ஊட்டிய குட்டி என்று பழமொழி சொல்லுவதற்காக கனம் அங்கத்தினர் இப்படிச் சொல்லவேண்டாம். அப்படி ஒன்றும் தகராறு இல்லை. நான் முன்பே இதை விளக்கினேன். இதற்கு அதிகச் செலவாகிறது. மராமத்து இலாகா ஏற்றுக் கொள்ளவேண்டும். 1½ லட்ச ரூபாய் செலவு செய்வதென்றால் உடனடியாக எடுத்துக்கொண்டு அந்தத் திட்டத்தை நிறைவேற்றிவிட முடியாது. இதிலே வேண்டிய கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. தகராறு ஒன்றும் இல்லை.

### *Pests (paddy crops)*

* 1014 *Q.*—SRI S. LAZAR: Will the Hon. the Minister for Home be pleased to state whether any study and research has been made over the causes and prevention of pests to paddy crops in Lalgudi taluk which is being regularly affected for the past five or six years?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No separate study and research of the type mentioned have been made in the Lalgudi area as pests occur wherever paddy is cultivated and as there is nothing peculiar about this area.



23rd March 1961]

### *Physical Directors (scales of pay)*

* 1015 *Q.*—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the Government have received any petition from the Physical Directors who are working in the various educational institutions in this State, about the present scales of pay; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI C. SUBRAMANIAM: (a) Yes, Sir.

(b) The matter is under consideration.

SRI N. K. PALANISAMI: May I know whether the Government are aware of the fact that the Physical Directors are low paid when compared to other States and if so, may I know why the Government have not taken a quick decision to increase their emoluments?

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, this matter has been considered by the Pay Commission and they have made certain recommendation and that has been accepted. Over that, some representations have been made which are under the consideration of the Government.

### *Lady typists (employment)*

* 1016 *Q.*—SRIMATHI P. K. R. LAKSHMIKANTHAM (on behalf of SRIMATHI RAJATHI KUNCHITHAPATHAM): கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டத்திலுள்ள வட்டார வளர்ச்சி அலுவலகங்களில் டைபிஸ்ட்கள், கிளார்க்குகள் தேவைக்கு சமீபத்தில் (Employment) ஆபீஸிலிருந்து பெண்கள் பெயர் எத்தனை சிபாரிசு செய்யப்பட்டன ?

(இ) எத்தனை பேர் வேலைக்கு எடுக்கப்பட்டார்கள் ?

(உ) பெண்களையே எடுக்கவில்லையென்றால் அதற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM: (அ), (இ) & (உ) கீழ்ப்பிரிவு குமாஸ்தாக்கள், தட்டெழுத்தாளர்கள் தேவைக்கு 19 பெண்கள் பெயர் சிபாரிசு செய்யப்பட்டது. 19 ஆண்கள் மாத்திரம் எடுக்கப்பட்டனர். சௌகரியக் குறைவுள்ள இடங்களில் வேலை செய்ய வேண்டியிருப்பதைக் கருதி, ஆண்களே தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவ்விடங்களில் பெண்கள் தங்குவதற்கான சரியான இடவசதி கிடைப்பது கடினம்.

### *Reserve Forest lands in Kanyakumari (lease)*

*1017 *Q.*—SRI T. S. RAMASWAMY: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the number of acres in the reserve forest in the Kanyakumari district leased out on cultivation basis in (i) Rubber plantation areas, (ii) Softwood plantation areas, (iii) in teak plantation areas; and

[23rd March 1961

(b) the total lease amount realized so far during 1959-60 and 1960-61 from Kanyakumari district under Kumri Cultivation Scheme?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) (1) Rubber plantation areas—326 acres.

(2) Softwood Plantation areas—665 acres.

(3) Teak Plantation areas—911·50 acres.

(b) (1) 1959-60—Rs. 2,013.

(2) 1960-61—Rs. 11,923.

SRI T. S. RAMASWAMY: May I know the average lease amount in these areas per acre?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: This is kumri cultivation. I do not have the figure about the average lease amount. In kumri cultivation, a nominal rent is levied and they are expected to safeguard the plantation and in this area, I am glad to inform the hon. Member that kumri cultivation has been fairly satisfactory.

*Police officials and constables (dismissal)*

* 1018 *Q.*—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the number of police officials and constables dismissed in the year 1959-60; and

(b) the reason for their dismissal?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) the number of police officials and constables dismissed from service during 1959-60 is 127;

(b) The reasons for their dismissal were reprehensible conduct, desertion from the force, gross neglect of duty, corruption, fabricating false evidence, insubordination and indisciplinary conduct and grave misconduct.

SRI A. A. RASHEED: May I know the number of police officials and constables dismissed in Madras City?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Their total number is 127, but I do not have the figures separately for the city.

SRI S. M. ANNAMALAI: ஸார், இம்மாதிரி தண்டிக்கப்பட்டு, நீக்கப்பட்டவர்களில் கெஜெட் உத்தியோகஸ்தர்கள் எத்தனைபேர்; நான் கெஜட் உத்தியோகஸ்தர்கள் எத்தனை பேர்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Only one Gazetted Officer has been dismissed and the others were all Non-Gazetted officers.

SRI A. A. RASHEED: May I know the number of police officials and constables who were reinstated as a result of Court orders?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: If the hon. Member gives notice of a separate question, I can give the information.



23rd March 1961]

SRI K. B. S. MANI: ஸார், இம்மாதிரி தண்டிக்கப்பட்டு, நீக்கப்பட்ட போலீஸ்காரர்கள் சிறு வயதிலேயே உத்தியோகத்திற்கு வருவதனால், மற்றத் தொழில்கள் செய்ய தகுதியற்றவர்களாக இருக்கிறார்கள் என்பதையும் மனதில் கொண்டு, மறு பரிசீலனை செய்து, ரிவர்ஷன் போன்ற சில பனிஷ்மெண்டுகளைக் கொடுத்து அவர்களை ரீ-எம்ப்ளாய் பண்ண முயற்சி எடுக்கப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அவர்கள் திருப்திகரமாக வேலை செய்ய, கட்டுப்பாடு மிக அவசியமாக இருக்கிறது. எல்லாவற்றையும் பார்த்துத்தான் நடவடிக்கை எடுக்கிறோம். இதிலெல்லாம் தனிப்பட்டவர்கள் பேரில் அங்கத்தினர் அதிக அக்கரை எடுத்துக் கொள்வது நல்லதல்ல என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

SRI T. S. RAMASWAMY: May I know whether any of the police officials and constables coming from Kanyakumari district were dismissed? In view of the "changed over" circumstances and the former practices prevailing in the former Travancore-Cochin State, may I know whether the Government will consider their case favourably?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I do not have the particulars about the matter relating to the hon. Member's question. But, I may tell him that no member of the Police Force from Kanyakumari district has been dismissed because he belonged to Kanyakumari.

*Social Welfare Schools*

DEPUTY SPEAKER: As the hon. Member who gave notice of starred question No. 1019 is not in his seat, the question and answer will be printed in the Proceedings.

* 1019 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) the number of Social Welfare Schools in our State; and

(b) the number recognised?

THE HON. SRI C. SUBRAMANIAM: (a) Presumably the Members refers to the State Social Welfare Advisory Board, Madras. No schools are run by the Board in this State.

(b) Does not arise.

*Vedaranyam Block (misappropriation)*

* 1020 *Q.*—SRI A. VEDARATHNAM: கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வேதாரண்யம் பிளாக்கில் ஏதேனும் நிதி கையாடல் நடந்திருக்கிறதா?

(இ) எவ்வளவு நிதி கையாடப்பட்டது?

(உ) அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM: (அ) நடந்திருக்கிறது.

(இ) ரூ. 1,527·87 நயாபைசே.

(உ) நிதியைக் கையாடிய கணக்கர் போலீசாரால் கைது செய்யப்பட்டு நாகப்பட்டிணம் சப்-மாஜிஸ்ட்டிரேட்டால் விசாரிக்கப்பட்டு, ஆறு மாத கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார். ரூ. 673·96 நயாபைசே திருப்பிப் பெறப்

பட்டுள்ளது. மீதித் தொகையைக் கணக்கரின் பூர்வீக சொத்திலிருந்து திருப்பிப் பெற தஞ்சாவூர் கலெக்டர் தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்.

Sri A. VEDARATHNAM : இந்த நிதியைக் கையாள்கிறவர்கள் போதுமான நிதி இல்லாதவர்களாக இருப்பதனால் இந்த நிலைமை ஏற்பட சந்தர்ப்பம் வருகிறது ; ஆகவே நிதியைக் கையாள்பவர்களிடமிருந்து தகுந்த செக்யூரிடி வாங்கி, அப்படி உள்ளவர்களை ப்ளாக்குகளில் நியமிக்க ஏற்பாடு செய்ய அரசாங்கம் முன் வருமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : அவசியமாக இருக்கக் கூடிய கேசுகளில் ஜாமீன் தொகை வாங்கப்படுகிறது. இந்த இடத்தில் பெற்றார்களா என்ற விவரம் இப்பொழுது என்னிடம் இல்லை.

*Co-operative Hand-pounded Rice Industry Society in North Madras (misappropriation)*

* 1021 *Q.*—Sri V. K. KOTHANDARAMAN : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வட சென்னையிலுள்ள கூட்டுறவு கைக்குத்தல் அரிசி தொழில் சங்கத்தில் 6,000 ரூபாய்க்கு மேல் மோசடி ஏற்பட்டிருப்பது உண்மையா ?

(இ) அதற்குப் பொறுப்பாளிகளின்மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) No Sir, but a sum of R.s 2,425·59 has not been properly accounted for in the Cash Book of the North Madras Handpounding Rice Workers' Co-operative Society, Limited.

(*b*) An enquiry is being conducted into the matter.

Sri V. K. KOTHANDARAMAN : எவ்வளவு காலமாக விசாரணை நடத்தப்பட்டு வருகிறது ? விசாரணை முடிய இன்னும் எவ்வளவு காலம் பிடிக்கும் ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : எவ்வளவு காலமாக என்ற விவரம் இப்பொழுது என்னிடம் இல்லை ; எப்பொழுது முடியும் என்று சொல்ல முடியாது.

Sri V. SUBBIAH : கூட்டுறவு இலாகாவில் பரவலாக இம் மாதிரி எல்லா செக்ஷன்களிலும், ஸ்டோர்ஸ், மார்கெடிங் சொஸைடிகள் முதலியவைகளில் இந்தக் குறை ஜாஸ்தியாக இருக்கிறதே, அதற்குக் காரணம் என்ன ? அப்படி நடக்காமல் பார்த்துக் கொள்ளப்படுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இது கூட்டுறவு இலாகாவில் மட்டுமல்ல, மற்ற சர்க்கார் இலாகாக்களிலும், தனிப்பட்டோர் ஸ்தாபனங்களிலும் ஏற்படுகிறது; வருஷா வருஷம் ஆடிட் செய்யப்படுகிறது. அப்படி ஆடிட் செய்யப் பட்டபோது தான் இந்தப் பணக் குறைவு கண்டுபிடிக்கப் பட்டது. அதன் பேரில் விசாரணை நடத்தப்பட்டது, நடவடிக்கை எடுக்கப் பட்டது.

*Actors and Technicians (award of prizes)*

* 1022 *Q.*—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have any proposal to award prizes for the best actors and technicians; and

(*b*) if so, the details thereof?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.





Sri N. K. PALANISAMI : May I know whether this Government have been consulted by the Central Government whenever they gave prizes or awards to film actors and actresses belonging to this State?

The Hon. Sri C. SUBRAMANIAM : I do not have with me just now the details of the procedure followed. The question is with reference to this Government, viz., whether we have any intention of giving prizes and I said, 'No'. If the hon. Member wants information about any other thing, he may put a separate question.

*Assembly and Parliamentary Elections (Reserved Seats)*

* 1023 *Q.*—Sri T. S. RAMASWAMY : Will the Hon the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Central Government have communicated to the State Government regarding the abolition of the reserved seats in the Assembly and Parliamentary Elections and replacing them by Reserved Constituencies;

(*b*) if so, the nature of the communication; and

(*c*) the nature of reply sent by the State Government, if any?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) & (*b*) The Election Commission has invited suggestions for the splitting up of the two-member Parliamentary and Assembly Constituencies in this State.

(*c*) A reply will be sent to the Commission as soon as details have been examined.

I may add, Sir, that since then this reply has been sent.

Sri V. SUBBIAH : மேல் ஜாதியினர் வாக்குரிமை தன் இனத்திற்கு இல்லை என்ற துவேஷ எண்ணத்தின் பலனை உணர்ந்து செயல்படுகின்றனவா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : அதைப் பற்றியெல்லாம் ஆலோசனை செய்து, பார்லிமெண்ட் இந்த சட்டத்தைச் செய்திருக்கிறது. கனம் அங்கத்தினர் சொல்லும் கருத்தையும் பரிசீலனை செய்திருப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

Sri P. G. MANICKAM : இரட்டைத் தொகுதிகளை ஒற்றைத் தொகுதிகளாக்கி, வோட்டர்கள் ஜாபிதா எல்லாம் எவ்வளவு காலத்தில் முடிவு அடையும் ?

The Hon. Sri C. SUBRAMANIAM : தேர்தலுக்குள் முடியும்,

Sri C. NATARAJAN : தொகுதியைப் பிரிப்பது பற்றி நம் சபையில் விவாதிக்க ஆலோசனை உண்டா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : அது சட்டமாகிவிட்டது ; ஆலோசனை செய்வதில் என்ன பலன் ?

Sri C. NATARAJAN : இந்த ஆலோசனை பேரில் வரும் கருத்துக்களையும் வைத்து ஏற்படக்கூடிய தகராறுகளைத் தடுக்க உதவியாகச் செய்யமுடியுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : சட்டம் வந்தாகிவிட்டது ; இதில் என்ன சிக்கல் வரும் என்று தெரியவில்லை. அப்படி ஏதாவது சிக்கல் வரும் காலத்தில் ஆலோசனை செய்யலாம்.

[23rd March 1961

SRI M. P. SARATHI : தனியாகப் பிரிக்கக்கூடிய இந்தத் தொகுதியில் ஹரிஜன் அல்லாதார் நிற்பதற்கு உரிமை இல்லாமல் போய்விடும் நிலைமை ஏற்படுவதனால் அவர்களுடைய உரிமையைப் பாதுகாப்பதற்கு சர்க்கார் முயற்சி எடுக்குமா ? இதைத் தவிர இப்பொழுது இருக்கிற நிலைமையில் பின்னால் கோர்ட்டுக்குப் போனால் என்ன ஆகும் என்பதைக் கவனித்தீர்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM : சட்ட நுணுக்கங்களை ஆராய்ந்து பார்த்துத்தான் பார்லிமெண்டிலே இருக்கின்ற நம்முடைய மாகாணத்தைச் சேர்ந்த அங்கத்தினர்கள் உள்படத்தான் இந்தச் சட்டத்தை நிறைவேற்றி இருக்கிறார்கள். ஆகையால் இதில் உரிமை என்று சொன்னால் ஹரிஜனங்களுக்கு பாதுகாப்பு வேண்டுமென்றுதான் அவர்களுக்கு இந்த சலுகை கொடுக்கப்படுகின்றது.

SRI T. S. RAMASWAMY : நம்முடைய ராஜ்யத்திலே அப்படி எத்தனை தனித் தொகுதிகள் வைக்கப்பட்டிருக்கின்றன ? இந்த இடங்களிலே ஹரிஜனங்கள் மெஜாரிட்டியாக இருக்கிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இரட்டை மெம்பர் தொகுதியெல்லாம் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

SRI K. R. VISWANATHAN : May I know on what basis the jurisdiction of the constituency for the reserved candidate has been determined?

THE HON. SRI C. SUBRAMANIAM : That will be done by the Election Commission. Perhaps they may take into account concentration of Scheduled Caste population.

SRI V. K. KOTHANDARAMAN : பாராளுமன்றத்தில் அப்படி தனியாக பிரிக்க வேண்டுமென்று ஒரு முடிவிற்கு வருவதற்கு முன்னதாக நம் ராஜ்ய சர்க்காரை கேட்டார்களா ? அதற்கு நம் ராஜ்ய சர்க்கார் என்ன ஆலோசனை சொன்னார்கள்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இதைப் பற்றி முதல் அமைச்சர்கள் அடங்கிய கூட்டத்திலே ஆலோசனை செய்யப்பட்டது. அங்கே இம்மாதிரி பிரிப்பதற்கு ஒத்துக்கொண்டார்கள். இதை எல்லாம் வைத்துக் கொண்டு மத்திய சர்க்காரால் பாராளுமன்றத்திலே இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

SRI P. G. MANICKAM : நம்முடைய ராஜ்யத்தில் அதிகப்படியான ரிசர்வ் ஸ்தானத்தை உண்டாக்குவதற்கு சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது இருக்கிற அளவுதான் ரிசர்வ் ஸ்தானங்கள் இருக்கும்.

SRI P. S. K. LAKSHMIPATHI RAJ : நம் மாகாணம் சம்பந்தப்பட்ட வரையாவது இதற்கு விதிவிலக்கு அளிக்குமாறு பாராளு மன்றத்தில் கோரி அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொண்டாதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : சட்டமாகிவிட்டது. இனிமேல் விதிவிலக்கு கொடுப்பது என்பது முடியாத காரியம். இம்மாதிரி விதிவிலக்குக் கொடுப்பதற்கு சட்டத்திலே இடம் கிடையாது. இந்தியா முழுவதற்கும்தான் இந்தச் சட்டம் இயற்றப்பட்டது.

SRI V. K. KOTHANDARAMAN : ஹரிஜனங்கள் தனியாக ஒதுக்கப்படக்கூடிய நேரத்திலே, எலெக்ஷன் கமிஷன் அபிப்பிராயமானது ஹரிஜன் தொகுதியில் ஹரிஜனங்களாலேயே தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்று, அதன் மூலமாக அவர்கள் உரிமையை பாதுகாப்பதுபோலாகும் என்று தெரிவித்திருக்கிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்த மாதிரி ஹரிஜன் ஹரிஜனங்களாலேயே தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்றும், முஸ்லீம்கள் முஸ்லீம்களாலேயே தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்றும். பெண்கள் பெண்களாலேயே தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்பது அரசியல் சட்டத்திலேயே விலக்கப்பட்டிருக்கின்றன. கனம் அங்கத்தினர் விரும்பியமாதிரி எலெக்ஷன் கமிஷன் விரும்பினாலும் செய்ய முடியாது.



23rd March 1961]

## *Chairmen of Panchayat Unions (use of Jeeps)*

*1024 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பஞ்சாயத்து யூனியன்களை அமைப்பதற்கு முன்னால் உபயோகிக்கப்படுத்தப்பட்டு வந்த ஜீப் கார்களை பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் உபயோகப்படுத்தலாமா ?

(இ) எந்த அளவுக்கு யூனியன் தலைவர், யூனியன் கமிஷனர் முதலியவர்கள் உபயோகப்படுத்த வேண்டுமென்பதைப்பற்றி சர்க்காரால் உத்தரவு அனுப்பப்பட்டுள்ளதா ?

(உ) விவரம் மேஜைமீது வைக்கப்படுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes.

(*b*) Yes.

(*c*) A copy of the order * is placed on the table of the House.

SRI V. K. KOTHANDARAMAN : பஞ்சாயத்து யூனியன் தலைவர் பஞ்சாயத்து யூனியன் எரியாவிலே ஒரு கோடியிலே இருந்து கொண்டு மற்றொரு கோடியிலுள்ள ஆபீசுக்குப் போகவேண்டுமென்றால் ஜீப்பை அனுப்பிவைத்து அதன் மூலம் அங்கே போகிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : பஞ்சாயத்து யூனியன் பிரிசிடெண்ட் ஒரு கோடியில் இருந்தாலும். ஆபீஸ் மத்தியில்தான் இக்கும். அங்கங்கே இருக்கக்கூடிய பஞ்சாயத்து தலைவர்கள் ஒத்துப்போகக்கூடிய விஷயம் இது. இது சட்டசபை அங்கத்தினரோ அல்லது சர்க்காரோ உத்திரவு போட்டு நடத்தக்கூடிய விஷயம் அல்ல. இதை எல்லாம் நிர்வகிக்கக்கூடிய பஞ்சாயத்து பிரெசிடெண்டைப் பொறுத்து இருக்கிறது.

SRI C. NATARAJAN : தலைவர் அவர்களே, இந்த பஞ்சாயத்து யூனியன் தலைவர் ஜீப் உபயோகப்படுத்துகிற மாதிரி உதவித் தலைவரின் உபயோகத்திற்கும் கொடுக்க முடியாதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: அப்படியென்றால் அங்கத்தினரும் கேட்பார்கள் என்ற நிலைமை ஏற்படும். பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுக்கு சில அலுவல்கள் பார்ப்பதற்கு வேண்டி ஜீப் கொடுக்கப்படுகிறது. பஞ்சாயத்து யூனியன் தலைவர் இல்லாத காலத்திலே பஞ்சாயத்து யூனியன் அலுவல்களை உபதலைவர் பார்க்கும்போது இந்த ஜீப் அவரால் உபயோகப்படுத்தப்படும்.

SRI S. M. ANNAMALAI : மேஜைமீது வைக்கப்பட்டுள்ள அறிக்கையிலே 'The Panchayat Union Chairman may use the Block jeep' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தும்கூட சில சமுதாய நலத் திட்டப் பகுதியிலே ஜீப்பை உபயோகிப்பதில் சேர்மெனுக்கும், பி.டி.ஓ. விற்கும் தகராறு ஏற்படுகிறது. இம்மாதிரி தகராறு ஏற்படாமல் இருக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளுகிறது ? ஜீப் யாருடைய பொறுப்பில் இருக்கிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : எல்லா விஷயங்களுக்கும் பி.டி.ஓ. தான் பொறுப்பு. பஞ்சாயத்து யூனியன் தலைவர் உபயோகிப்பதற்கும் கொடுக்கப்படுகிறது.

* Printed as Appendix on page 458 infra.

[23rd March 1961

*Road repairs*

* 1025 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் நவம்பர் மாத மழையின் காரணமாக எத்தனை மைல் நீளமுள்ள ரோடுகள் சேதமடைந்துள்ளன ?

(இ) அவைகளை மீண்டும் புதுப்பிக்க உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டதா ?

(உ) இதற்கு மத்திய சர்க்காரிடம் உதவி கேட்கப்பட்டதா ? விவரமென்ன ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) 2,295 miles.

(*b*) Yes, Sir.

(*c*) No, Sir.

SRI V. K. KOTHANDARAMAN : இப்போது மழையின் காரணமாக சேதம் அடைந்த ரோடுகளிலே எத்தனை மைல் நீளம் பழுது பார்க்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI P. KAKKAN : உடனடியாக எல்லா ரோடுகளும் பழுது பார்க்கப்பட்டுத்தான் இருக்கிறது. முன் இருந்த நிலைமையைப் போல் இப்பொழுது இல்லை. "ஒரு பேஸ்ட் ப்ரொக்ருமுக்கு" கொண்டு வரமுடியும் என்று சொல்ல விரும்புகிறேன்.

*Formation of Panchayat Union Council (Students' procession), Madurai*

* 1026 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the officials of the Education Department, Madurai District, recently conducted a students' procession in connection with the formation of the Panchayat Union Councils; and

(*b*) whether any complaint has been lodged by the parents to the Government against this sort of propaganda?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir.

(*b*) No complaint was received from any quarter.

*Liquor permit holders*

* 1027 *Q.*—SRI T. S. RAMASWAMY : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of persons who have been given permits to drink alcohol; and

(*b*) the number of persons who have been holding such permits for more than 10 years?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Particulars of the number of persons who have been given permits for personal consumption of bottled foreign liquor or Indian made foreign spirits during the year 1960, i.e., from 1st January to 31st December 1960 under the various categories are as follows :—

(1) The number of Indians permanently residing in this State who have been given annual permits (fresh grant and renewals) on medical grounds, issued, by Government ... ... ... ... ... 1,506



23rd March 1961]

(2) The number of temporary residents in the State, i.e., persons who are not citizens of India, who have been given annual permits (issued by the Board of Revenue) ... ... ... ... ... 1,348

(3) The number of temporary residents and visitors (Indians from other States) who have been given temporary permits by the Board of Revenue. 366

(4) The number of Army Officers who have been given permits by the Board ... ... ... 136

(5) The number of distinguished visitors to whom temporary permits have been issued during their visits to this State ... ... ... ... 1,053

(*b*) Particulars of the number of persons who have been holding such annual liquor permits for more than 10 years could not be complied as the old records are not available at this distance of time.

SRI A. VEDARATHNAM : இந்த பர்மிட்டுகளை அவர்கள் துஷ்பிரயோகம் செய்யாமல் இருப்பதற்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : துஷ்பிரயோகம் செய்தால் இந்தப் பர்மிட் கான்ஸல் செய்யப்படும்.

SRI A. A. RASHEED : Sir, may I know whether the Government have any particulars regarding the number of liquor permits issued to women in our State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Just now I do not have those particulars with me. If the hon. Member is so much interested in getting these particulars, he may put a separate question and I will answer it.

SRI J. MATHA GOWDER : இதர மாகாணங்களிலிருந்து நீலகிரிக்கு வருகிறவர்களுக்கு கலெக்டர் மூலமாக மது பர்மிட் கொடுப்பதாக பத்திரிகையிலே படித்தேன். இது உண்மையா ? இதன் நோக்கம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்போது வெளியிலே இருந்து வருகிற யாத்திரிகர்களுக்கு இந்த விஷயத்தில் தடை இருக்கக் கூடாது என்றால் இது அரசாங்கத்தின் அடிப்படையான கொள்கைக்கும், விதிகளுக்கும் முரண்பாடாக இல்லாமல் இருந்தால் அந்த அளவிற்கு இது தளர்த்தப்பட்டு வருகிறது.

SRI K. ANBAZHAGAN : உயர்ந்த வகையான, விலை அதிகமான சாராயங்களுக்கு மட்டும் இப்பொழுது விதிவிலக்கு தரப்படுகிறது. பெர்மிட் தரப்படுகிறது. கள்ளும் அதேபோல் இதை விட நல்ல முறையில் மருந்து வகையில் பயன்படுவதால் கள்ளுக்கும் இதே பர்மிட் கொடுக்க வழிவகை செய்யப்படுமா ? 9 a.m.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதற்கு, வைத்தியர்கள் சர்டிபிக்கேட் கொடுத்தால் என்ன செய்யலாம் என்பதுபற்றி யோசிக்கலாம். வைத்தியர்கள் குடிப்பதற்கு என்று சர்டிபிக்கேட் கொடுப்பதில்லை. உடல் நிலையையொட்டி கொடுக்கிறார்கள். அதேபோல் உடல் நலத்திற்காக கள் வேண்டும் என்று வைத்தியர்களை நாடி அவர்கள் அதற்கு சர்டிபிக்கேட் கொடுப்பார்களானால் பின்னால் அது பற்றி யோசனை செய்யலாம்.

SRI S. M. ANNAMALAI : யாத்திரிகர்களாக வருபவர்களுக்கு மதுரை மாவட்டத்திலும், நீலகிரி மாவட்டத்திலும் டாக்டர் சர்டிபிக்கட் இல்லாமலே மது பானங்கள் பெர்மிட் வழங்கலாம் என்று சொல்லப்

[23rd March 1961

பட்டிருக்கிறது. அப்படியானால் பிற நாடுகளிலிருந்து வருகிற யாத்திரிகர்களுக்கு மட்டுமா அல்லது நமது மாநிலத்திலிருந்தே அங்கு யாத்திரை செல்பவர்களுக்கும் பெர்மிட் வழங்கினால் நமது கொள்கை அதனால் பாதிக்கப்படாதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : வெளிநாடுகளிலிருந்து வருகிறவர்கள் குடிப்பழக்கம் உள்ளவர்களாயிருந்தால் அவர்களுக்கு தொந்தரவு இருக்கக்கூடாது என்றுதான் இந்தஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன், இரண்டு நாட்களுக்கு முன்பு அமெரிக்காவிலிருந்து வந்த ஒரு யாத்திரிகர் என்னிடம் சொன்னார், அமெரிக்காவில் எல்லோருமே குடிப்பதில்லை, ஆகவே அங்கிருந்து வருகிறவர்களுக்கு, குடிப்பழக்கம் உள்ளவர்களுக்கு, பெர்மிட் கொடுப்பதை கவனித்து பார்க்கவேண்டுமென்று சொன்னார். பல பேர்கள் ஆசிரியர்களாக வருகிறார்கள். அவர்களால் அதிகம் செலவு செய்யமுடியாது, ஆகவே வெளிநாடுகளிலிருந்து வருகிற யாத்திரிகர்களுக்கு ஒருவிதத் தொல்லையும் இருக்கக் கூடாதென்றுதான் விதிகள் அப்போதைக்கப்போது தளர்த்தப்படுகிறது.

SRI S. RAMALINGA PADAYACHI : நமது அரசாங்கம் உயர்ந்த கொள்கைகளை கடைப்பிடிக்கும்போது வெளிநாடுகளிலிருந்து வரும் யாத்திரிகர்களுக்கு மட்டும் ஏன் பர்மிட் கொடுக்க வேண்டும், அவர்களுக்கும் தடை இருக்கக்கூடாதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நமது கொள்கையை மற்றவர்களிடம் நாம் நிர்ப்பந்தித்து, புகுத்துவது சரியல்ல.

SRI N. R. THIAGARAJAN : விலைக்கு விற்காமல் வீட்டிலேயே சாராயம் காய்ச்சிக் குடிக்க அனுமதித்து விடலாம் என்று ஒப்பற்ற தலைவர் ராஜாஜி அவர்கள் கூறினார்களே, இது சர்க்காருக்குத் தெரியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : யார் கூறினார்கள் என்று எனக்குத் தெரியாது. கனம் அங்கத்தினர் அவர்களுக்கு இதில் அவ்வளவு அக்கரையிருக்குமானால் அதை எடுத்து ஒரு பிரேரபணையாக அரசாங்கத்தினிடம் கொண்டுவந்து சொன்னால் அதைப்பற்றி கவனிக்கலாம், இது வரையில் அப்படி இதைப்பற்றி கவனமே இல்லை.

### *" Tamil Nadu " agitation*

* 1028 Q.—SRI A. A. RASHEED :
SRI K. SATTANATHA KARAYALAR : } Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the number of persons arrested in the agitation for renaming the Madras State as Tamil Nadu; and

(b) the number of persons (i) prosecuted and (ii) convicted?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No arrests were made anywhere in the State except in one isolated instance. It appears that in the Nilgiris district six persons were arrested under section 151, Cr.P.C., on the 16th February 1961.

(b) Nil.

SRI A. A. RASHEED : May I know whether these prisoners were treated as political prisoners?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no question of politics in this. As I said in only one case in Nilgiris, six persons were arrested under section 151, Cr.P.C. I do not know whether the case has been concluded.



23rd March 1961]

SRI V. K. KOTHANDARAMAN : கிளர்ச்சிக்குப் பிறகு தமிழ் நாடு என்று பெயர் வைக்க ஏற்றுக்கொண்ட காரணத்தினால், பொதுவாக எந்தப்பிரச்னையாகயிருந்தபோதிலும் கிளர்ச்சி செய்வது மூலமாகத்தான் காரியத்தைச் சாதிக்க முடியும் என்ற மனோபாவம் பொதுமக்களிடையே வளர்ந்திருக்கிறது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பொதுமக்கள் மத்தியில் அவ்வித மனோபாவம் ஒன்றும் வளர வில்லை. ஆனால் கனம் அங்கத்தினர் அவர்கள்தான் அப்படி ஒரு பிரசாரம் செய்யப் பார்க்கிறார்கள் என்று புலப்படுகிறது. அவர்களுக்கு நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன், என்ன மாறுதலை அரசாங்கம் ஒப்புக்கொண்டு முடிவுசெய்து நிறைவேற்ற வருகிறதோ அந்த மாறுதல் இந்தக் கிளர்ச்சி ஏற்படுவதற்கு முன்பே முடிவு செய்யப்பட்ட விஷயம். இந்தக் கிளர்ச்சியின் தலைவரிடமே இது தெரிவிக்கப்பட்டது. ஒவ்வொருவரும் தாங்கள் தான் சாதித்துவிட்டோம் என்று சொல்வதானால் யார் வேண்டுமானாலும், எதை வேண்டுமானாலும் சொல்லிக்கொள்ளலாம்.

SRI J. MATHA GOWDER : நீலகிரியில் அரெஸ்ட் செய்யப்பட்டவர்கள் எல்லோரும் விடுதலை அடைந்து விட்டார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : முதலில் பெயிலில் விடப்பட்டிருந்தது. பின்னால் என்ன நடந்தது என்று தெரியவில்லை.

SRI J. MATHA GOWDER : அவர்கள் பேரில் இன்னும் ஏதாவது நடவடிக்கைகள் இருக்குமானால் கிளர்ச்சிகள் முடிந்து விட்டதே; ஆகவே அவர்களை விடுதலை செய்ய சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் அவர்கள்மீது அனுதாபம் காட்டுவது ஏன் என்று எனக்குப் புரியவில்லை. அங்கு, சிவில் கோர்ட் நடக்கிறது, கோர்ட் காம்பவுண்டுக்குள் உட்கார்ந்து கொண்டார்கள். கோர்ட் நடக்கிறது என்று கூறியும் கேட்காமல் சப்தம் போட்டுக் கொண்டிருந்தார்கள். அப்படி கோர்ட் நடவடிக்கைகள் பாதிக்கப்படக் கூடியவாறு நடந்துகொண்டார்கள். விடுதலை செய்வது பற்றி, பிரத்தியேக சலுகை காட்டவேண்டுமென்பதற்கு இடமில்லை.

### *Residential peons of officers (discharged)*

*1029 Q.—SRI V. K. KOTHANDARAMAN :
SRI M. P. SARATHI: } கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சம்பளக் கமிஷன் சிபார்சின்பேரில் ஆபீசர்களின் வீடுகளில் வேலை செய்யும் பியூன்களை வேலையிலிருந்து எடுத்துவிடப் போவது உண்மையா ?

(இ) எப்போது முதல் ?

(உ) எந்த அளவுக்கு எடுத்துவிடுவதாக உத்தேசம் ?

(எ) எடுக்கப்படும் பியூன்களுக்கு வேறு வேலை கொடுப்பதாக உத்தேசமுண்டா ? விவரம் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) Based on the recommendation of the Madras Pay Commission, for a reduction in the present strength of peons in Government Service, the Government have formulated a scheme for a gradual retrenchment of peons sanctioned for work in the residence of certain officers. The Government have sanctioned Rs. 30 per mensem to officers who would prefer to surrender their residence peons. Every officer, who is entitled to a peon in his residence, was given the option, to retain the peon or surrender him and receive Rs. 30 per mensem as compensatory allowance *in lieu* of the peon. The

[23rd March 1961

allowance given is to enable the officer to make his own arrangement to ensure that the official work done by the residence peon continues to be discharged.

(இ) The scheme came into operation from the 15th December 1960.

(உ) It has been ordered that no peon who had put in more than one year total aggregate service on 15th November 1960 should be discharged against surrender of residence peons by officers.

(எ) The question of giving preference to retrenched peons, who are qualified for appointment, in fresh vacancies in future will be considered.

**Sri V. K. KOTHANDARAMAN**: இந்த 30 ரூபாய் சம்பளத்தில் இன்றைய விலைவாசி அடிப்படையில் அவர்களுக்கு ப்யூன்கள் கிடைப்பார்கள் என்று சர்க்கார் கருதுகிறதா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM**: முழு நேர ப்யூன்கள் கிடைப்பார்கள் என்றால் வைத்துக்கொள்ளலாம். அல்லது, ரெஸிடென்ஷியல் ப்யூன்ஸ் வேலைக்கு முழு நேர ப்யூன்கள் அவசியமில்லை. அந்தச் சம்பளத்திற்கு, சிறிது நேரம் வேலை பார்க்கும் முறையில் வேண்டுமானால் ஏற்பாடு செய்யலாம் என்பதை ஒப்புக்கொண்டு அப்படிச் செய்ய முடியும் என்ற அடிப்படையில் இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

**Sri T. S. RAMASWAMY**: May I know how many such peons have been surrendered so far?

**The Hon. Sri C. SUBRAMANIAM**: At the time the answer to this question was formulated, 162 officers have exercised their option to surrender their respective peons.

### *Mofussal bus-stand in the City*

* 1030 *Q.*—**Sri A. A. RASHEED**: Will the Hon. the Minister for Electricity be pleased to state with reference to answers given to Questions Nos. 154 and 135 on 4th September 1959 the decision taken in regard to the shifting of the mofussal bus-stand in the Madras City from its present location?

**The Hon. Sri V. RAMAIAH**: The proposal to shift the mofussal bus-stand was examined but was not accepted by Government.

**Sri A. A. RASHEED**: May I know whether the Hon. Minister is aware of the fact that the sanitary conditions in the existing bus-stand are a disgrace to the City?

**The Hon. Sri V. RAMAIAH**: Government have knowledge of the existing conditions and they have set up a small Committee to go into it and the Committee has submitted its report and it is being looked into.

**Sri K. ANBAZHAGAN**: இப்பொழுதுள்ள வெளியூர் பஸ் நிலையமானது, பொது மக்கள் தங்குவதற்கு இடவசதியற்றதாகவும், பஸ்கள் வந்து நிற்க போதுமான இடமற்றதாகவும் இன்னும் பல வகைகளில் பொதுமக்களுக்கு தொல்லை தருவதுமாகவும் இருப்பதால் அதை உடனடியாக மாற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

**The Hon. Sri V. RAMAIAH**: இப்பொழுது பஸ் ஸ்டாண்ட் இருக்கக்கூடிய இடத்திலிருந்து அதை மாற்றியமைக்க ஆலோசனையில்லை. இப்பொழுது இருக்கக்கூடிய பஸ் ஸ்டாண்டில் போதுமான வசதிகள் ஏற்படுத்துவதற்காக பிரத்தியேகமாக ஒரு கமிட்டி போட்டு அவர்கள் சமீபத்தில் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அதைப் பரிசீலனை செய்து பஸ் ஸ்டாண்டை நல்ல முறையில் அமைக்க, என்னென்ன முயற்சிகள் எடுக்கவேண்டுமோ அவை எடுக்கப்படும்.



23rd March 1961]

**Sri M. K. SOMASUNDARAM**: இப்பொழுதிருக்கக்கூடிய பஸ் ஸ்டாண்டை மாற்றியமைக்காவிட்டாலும் அங்கிருக்கக்கூடிய வியாதியஸ்தர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா ? பஸ்களில் ஏறி வியாபாரம் செய்யக் கூடிய அளவிற்கு குஷ்டரோகிகள், போன்றவர்களை வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**The Hon. Sri V. RAMAIAH**: கமிட்டி ரிப்போர்ட் பரிசீலனை செய்யப்பட்டு வேண்டிய முடிவுகள் எடுக்கப்படும்.

**Sri V. K. RAMASWAMY MUDALIYAR**: This has been under the serious consideration of the Hon. the Minister for a long time with the result that people are being put to lot of inconvenience there. Will the Hon. the Minister visit the bus stand? May I know when exactly a decision will be taken?

**The Hon. Sri V. RAMAIAH**: This has been under our serious consideration. That is why we thought we must have the entire question thoroughly examined and proper decisions taken. The Committee has just submitted its report and it is being examined. After the examination is over, appropriate steps will be taken.

**Sri A. A. RASHEED**: Sir, is the Hon. Minister aware that nearly 500 buses use the bus-stand now? Will the Government expedite the construction of the bus-stand with all the modern facilities and amenities?

**The Hon. Sri V., RAMAIAH**: I will look into it.

**Sri K. ANBAZHAGAN**: அந்த பஸ் நிலையத்திற்கு வேண்டிய இடம் குறைவாக இருக்கிறது என்ற காரணத்தால், மாடிக் கட்டிடம் அமைத்து, கூடுதலான அளவில் மக்கள் தங்கக்கூடிய வசதிகளை செய்து கொடுக்கக்கூடிய முறையில் பெரும் செலவில் கட்டிடத்தை கட்ட அரசாங்கம் திட்டம் வகுக்குமா ? அல்லது அண்டர் கிரௌண்டில் கட்டிடம் அமைக்கின்ற முறையிலாவது திட்டங்களை வகுப்பதற்கு சர்க்கார் முன் வருமா ?

**The Hon. Sri V. RAMAIAH**: இதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் கமிட்டி தந்திருக்கின்ற ரிப்போர்ட்டுகளை பரிசீலிக்கும் போது, கனம் அங்கத்தினர் அவர்கள் தெரிவித்த கருத்துக்களையும் அரசாங்கம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### *Panchayat Presidents (visit to Madras)*

* 1031 *Q.*—**Sri V. K. KOTHANDARAMAN**: கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்திலுள்ள பஞ்சாயத்து போர்டு தலைவர்களையும், விவசாயத் தலைவர்களையும் சென்னைக்குத் தருவிக்கப்பட்டதன் நோக்கமென்ன ?

(இ) அதனால் சர்க்காருக்கு எவ்வளவு செலவாகியது ?

**The Hon. Sri C. SUBRAMANIAM**: (*a*) The Presidents of Panchayats were enabled to visit Madras to see the Khadi and Village Industries Exhibition, the Industrial and Commercial Exhibition, and a few important factories and establishments in and around Madras.

[23rd March 1961

Government have not arranged visits of Kisans to Madras specially.

(b) The particulars of the expenditure incurred on the visit to Madras of the Presidents of Panchayats are being collected and will be placed on the table of the House.

Sri C. NATARAJAN : தலைவர் அவர்களே, இந்த பஞ்சாயத்து தலைவர்களை எல்லாம் இங்கு வரவழைத்து கூட்டம் போட்டு அதில் ஜாயிண்ட் டெவலப்மெண்ட் கமிஷனர் அவர்கள் இந்த முன்னேற்றங்களை எல்லாம் பாருங்கள், இவைகளை எல்லாம் செய்த காங்கிரஸ் கட்சிக்கு ஓட்டு போடுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இது மிகவும் தவறான கருத்து. இவ்விதம் யாராவது பொய்யான கருத்துக்களை சொன்னதை கேட்டுவிட்டுத் தான் கனம் அங்கத்தினர் அவர்கள் இவ்விதம் சொல்லுகிறார்கள் என்று நினைக்கிறேன். அவ்விதம் ஒன்றும் நடக்கவே இல்லை.

Sri T. S. RAMASWAMY : May I know Sir, the rate of travelling allowance and the daily allowance allowed to them? Is it a fact that they are meagre?

The Hon. Sri C. SUBRAMANIAM : இது அவர்களே செய்துகொண்ட ஏற்பாடு, நாம் T.A., D.A., ஒன்றும் கொடுக்கவில்லை. பஞ்சாயத்துகளிலிருந்தே இதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்து கொண்டார்கள் என்றுதான் என்னிடம் தகவல் இருக்கிறது.

Sri J. MATHA GOWDER : இவ்விதம் பஞ்சாயத்து தலைவர்கள் இங்கு வருவதால் இந்த இடத்திலுள்ள வேலைகளை எல்லாம் பார்க்க முடிகிறது. இவ்விதம் மேலும் நமது மாகாணத்தில் நடைபெற்றிருக்கும் பல திட்டங்களையும் பார்வையிடுவதற்கு அவர்கள் உத்தரவு கேட்டால் அதைக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இங்கு வந்தவர்கள் நெய் வேலியைக் கூடபோய் பார்த்தார்கள் என்று நினைக்கிறேன். அதன் காரணமாகத்தான் திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர் அவர்கள் இதற்கு ஆட்சேபணை சொன்னார்கள் என்று நம்புகிறேன். இந்த மாகாணத்தில் சர்க்காரால் ஒன்றுமே செய்யப்படவில்லை என்று சொல்லுவதற்கு இது எங்கே குறுக்கே நின்று விடுமோ என்ற பயத்தால்தான் இவ்விதம் ஜாயிண்ட் டெவலப்மெண்ட் கமிஷனர் வாயிலாக சொன்னார்கள் என்று நினைக்கிறேன். மேலும் இம்மாதிரி போகவேண்டும் என்று சர்க்காரின் உதவியை நாடினால் அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படும்.

### *I.A.S. (super time-scale)*

* 1032 Q.—Sri N. K. PALANISAMI : } Sri T. S. RAMASWAMY : } Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there is any proposal to create a super time-scale for I.A.S. Officers;

(b) if so, the details thereof; and

(c) the basis on which the candidates would be selected for the same?

The Hon. Sri C.SUBRAMANIAM : (a) Yes Sir.

(b) The State Government have addressed the Government of India for the creation of four selection grade posts in the grade of Rs. 1,800—50—100—100—100—100—2,250 per mensem to be filled by I.A.S. Officers.



23rd March 1961]

(c) Does not arise, as the Government of India's orders have not been received.

Sri N. K. PALANISAMI : May I know, Sir, the object of creating such posts?

The Hon. Sri C. SUBRAMANIAM : முன்னால் இருந்த ஐ.ஸி.எஸ். காரர்களுக்கு சூப்பர் டைம் ஸ்கேல் இருந்து வந்திருக்கிறது. அது ஐ.ஏ.எஸ். காரர்களுக்கு இல்லை. அதிலும் முக்கியமாக மற்ற ராஜ்யங்களில் இருக்கின்ற ஐ.ஏ.எஸ். காரர்களுக்கு இந்த முறை இருந்து வருகிறது. அந்த முறையில்தான் நம்முடைய ராஜ்யத்திலும் ஏற்படுத்தவேண்டும் என்று அரசாங்கம் முன் வந்திருக்கிறது.

Sri N. K. PALANISAMI : May I know, Sir, whether this is peculiar to this State ? Is it followed by other States ?

The Hon. Sri C. SUBRAMANIAM : As a matter of fact, we are late in the field ; perhaps, we are the last.

### *Regional Engineering College (location)*

*1033 Q.—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the location of Regional Engineering College under the Third Five-Year Plan was considered by the Government during January 1961; and

(b) whether any decision was taken thereon?

The Hon. Sri C. SUBRAMANIAM : (a) No, Sir.

(b) Does not arise.

### *Poultry farm (Alathampadi)*

*1034 Q.—Sri A. VEDARATHNAM : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லாவில் உள்ள ஆலத்தம்பாடியில் ஓர் பெரிய கோழிப்பண்ணையை ஆரம்பிக்க அரசாங்கம் முடிவு செய்திருக்கிறதா ?

(இ) என்ன செலவில், எப்போது ?

(உ) இதற்கு மத்திய அரசாங்க உதவி உண்டா ? எவ்வளவு ?

(எ) ஆண்டுதோறும் இதற்காகும் நடைமுதல் செலவு என்ன ?

(ஐ) இதிலிருந்து எதிர்பார்க்கப்படும் வருமானம் எவ்வளவு ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (a) Yes, Sir. It is proposed to establish one Poultry Extension Centre.

(b) at a total cost of Rs. 63,450 during 1960–61.

(c) Yes, Sir. The Central assistance is at the following rates—

| | | | | |
|---|---|---|---|---|
| Non-recurring | | .. | 75 per cent of the expenditure as grant and 25 per cent as loan. | |
| Recurring | 1st year | .. | 50 per cent of the expenditure. | |
| | 2nd year | .. | 33 1/3 | Do. |
| | 3rd year | .. | 25 | Do. |
| | 4th year | .. | Nil. | |

[23rd March 1961

(*d*) Rs. 9,000 (roughly).

(*e*) Rs. 800.

**SRI A. VEDARATHNAM** : இந்த மாதிரி கோழிப்பண்ணைகள் வேறு எங்காவது இருக்கின்றனவா, இல்லையென்றால் புதிதாக ஏற்படுத்தும் உத்தேசமுண்டா ? அப்படியென்றால் எங்கே ஏற்படுத்துவதாக உத்தேசம் இருக்கிறது ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM** : இம்மாதிரி 25 சென்டர்களில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. திருச்சி, தஞ்சாவூர், சேலம், தென்னார்காடு, மதுரை, நீலகிரி, கன்னியாகுமரி, செங்கற்பட்டு போன்ற பல ஜில்லாக்களிலும் இது அமைக்கப்பட்டிருக்கின்றது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மேலும் 20 சென்டர்களில் 20 லட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்த திட்டங்கள் இருக்கின்றன.

**SRI K. B. S. MANI** : இப்போது ஏற்படுத்தப்பட்டிருக்கும் கோழிப் பண்ணைகளில் எத்தனை கோழிகள் இருக்கின்றன. இதில் பெரிய கோழிப் பண்ணை எது ? மேலும், தனிப்பட்டவர்கள் யாராவது கோழிப்பண்ணை நடத்த முன்வந்தால் சர்க்கார் எந்த விதமான உதவிகளை செய்து கொடுக்கும் என்பதை தெரிவிக்க வேண்டுகிறேன்.

**THE HON. SRI M. BHAKTAVATSALAM** : இதைப்பற்றியுள்ள விவரங்களை எல்லாம் அறிந்து கொள்ள வேண்டுமென்றால் தனியாக கேள்வி போடவேண்டும்.

## *Electricity supply to villages in Javadu Hills*

* 1035 *Q.*—**SRI S. M. ANNAMALAI** : கனம் மின்சார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வடாற்காடு மாவட்டம் போளூர் தாலூகா ஜவ்வாது மலையிலுள்ள கிராமங்களுக்கு மின்சாரம் விஸ்தரிக்க மானியம் கொடுக்கும் உத்தேசம் உண்டா ?

**THE HON. SRI V. RAMAIAH** : No, Sir.

**SRI S. M. ANNAMALAI** : ஸார், இந்த ஜவ்வாது மலையிலுள்ளவர்களுக்கு, சில இடங்களில் மின்சாரம் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டபோது, அது "அன்ரெம்படனரேடிவ்"வாக இருக்கிறது என்று மின்சார வசதி செய்து கொடுக்கப்படவில்லை. இதற்காக சர்வே செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே "ஹில் டிரைப்" வாழுகின்ற இடம் என்ற முறையில் இந்த இடத்தைக் கருதி இதற்காக அரிஜன இலாகாவிலிருந்து பணத்தைப் பெற்று உடனடியாக மின்சாரவசதி செய்து கொடுப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா ?

**THE HON. SRI V. RAMAIAH** : முன்பு இந்த இடத்தில் சர்வே செய்யப்பட்டு இந்தத் திட்டம் கட்டுப்படியாகாது என்று கருதி கைவிடப்பட்டது. இப்போது மீண்டும் அதே இடத்தில் சர்வே செய்யச் சொல்லியிருக்கிறோம். அரிஜன இலாகாவிலிருந்து மான்யம் பெற்று இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியாது. மின்சார போர்டாரே இம்மாதிரிப்பட்ட இடங்களுக்கு எந்தெந்த முறையில் வசதி செய்துகொடுக்க முடியுமோ அந்தந்த முறையில் வசதி செய்து கொடுப்பார்கள். பொதுவாக ஹில் டிரைப் இருக்கக் கூடிய இடங்களுக்கு எல்லாம் எந்த முறையில் வசதி செய்து கொடுக்க முடியும் என்பதைப்பற்றி பரிசீலனை செய்து அதன் அடிப்படையில் வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**SRI S. NAGARAJA MONIGAR**: இப்படி மின்சாரத்தை மலைகளிலும், காடுகளிலும், மூலைமுடுக்குகளிலும் விஸ்தரிக்க முடியும், அவ்விதம் செய்து கொண்டும் இருக்கிறார்கள் என்ற காரணத்தினால்தானே இவ்விதம் மலையிலுள்ள மக்கள் கேட்கிறார்கள் ?

(பதில் இல்லை.)



23rd March 1961]

## *Bus service (Chamarajanagar-Coimbatore)*

* 1036 *Q.*—**SRI N. K. PALANISAMI** : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether any agreement has been made between Madras and Mysore Governments for running a passenger bus service between Chamarajanagar and Coimbatore; and

(*b*) if so, the details thereof?

**THE HON. SRI V. RAMAIAH** : (*a*) & (*b*) There is a proposal under consideration for running a bus service on the route Mysore to Coimbatore *via* Chamarajanagar and Satyamangalam. The matter is under correspondence with the Government of Mysore.

**SRI N. K. PALANISAMI** : May I know, Sir, whether the permit would be given to the State Transport or private operators soon after the agreement is reached between this Government and Mysore Government?

**THE HON. SRI V. RAMAIAH** : This has to be discussed with the Government of Mysore.

**SRI P. G. MANICKAM** : ஸார், கோயம்புத்தூரிலிருந்து மைசூர் ராஜ்யத்தின் எல்லைக்குள்ளிருக்கும் தாளவாடி வரைக்கும் ஒரு புது பஸ் ரூட்டை ஏற்படுத்துவதற்காக நமது சர்க்காரும், மைசூர் சர்க்காரும் ஏதாவது கடிதப் போக்குவரத்து நடத்தி வருகிறார்களா ? அப்படியானால் அதன் விவரங்கள் யாவை ?

**THE HON. SRI V. RAMAIAH** : தனியாக கேள்வி போடவேண்டும்.

## *Sub-Registrar's office at Sendhurai*

* 1037 *Q.*—**SRI S. RAMALINGA PADAYACHI** : கனம் மின்சார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி ஜில்லா, உடையார்பாளையம் தாலூகா செந்துறையில் சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ் திறக்க வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் அரசாங்கத்திற்கு மகஜர் அனுப்பினார்களா ?

(இ) அப்படியானால், அதன்பேரில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

**THE HON. SRI V. RAMAIAH** : (*a*) Yes, Sir.

(*b*) The proposal for opening a Sub-Registry Office at Sendurai in Udayarpalayam taluk, Tiruchirappalli district was considered and deferred in the past. The proposal has again been taken up for consideration with certain other similar proposals. Final decision has not yet been taken in the matter.

**SRI S. RAMALINGA PADAYACHI** : நீண்ட நாளாக இந்தப் பிரச்னை அரசாங்கத்தால் ஒப்புக் கொள்ளப்பட்டது. ஆந்திரா மாகாணப் பிரிவினையின் காரணமாக ஒத்திவைக்கப்பட்டது. ஆகையால் இதன் அவசியத்தை உணர்ந்து கனம் அமைச்சர் அவர்கள் உடனடியாக இதை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்வார்களா ?

**THE HON. SRI V. RAMAIAH** : செந்துறையில் சப்-ரெஜிஸ்டிரார் ஆபீஸ் வேண்டுமென்று அங்குள்ள மக்கள் கருதுகிறார்கள். அதை ஒரு காலத்தில் பரிசீலனை செய்ய முடியாமல் இருந்தது. இப்போது எங்கெங்கு உடனடியாக திறக்கவேண்டும் என்பதைப் பற்றி பரிசீலனை செய்து அதன்

[23rd March 1961

படி முடிவு எடுக்கப்பட்டு வருகிறது. இந்த வருடம் ஆறு இடங்களில் திறக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதற்கான சூழ்நிலை செந்துரையிலும் ஏற்பட்டவுடன் அங்கும் ஏற்படுத்த முடிவு செய்யப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

*Members of the Kanyakumari Devaswom Board (T.A.)*

* 1038 *Q.*—Sri T. S. RAMASWAMY : Will the Hon. the Minister for Home be pleased to state the total amount of Travelling allowance drawn by each of the member of the Kanyakumari Devaswom Board during the year 1960?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : The President and members of the Kanyakumari Devaswom Board have not drawn any travelling allowance so far.

Sri T. S. RAMASWAMY : May I know the reason why they have not drawn the travelling allowance? May I also know whether the Hon. Minister is aware of the fact that they are at present spending from their own pockets?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : I may tell the hon. Member that we cannot compel them to draw their travelling allowance.

*Excise Department in Kanyakumari (Opening of fire)*

* 1039 *Q.*—Sri T. S. RAMASWAMY : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of firings by the Excise Department in the Kanyakumari district after the re-organization of States and the circumstances;

(*b*) the number wounded and killed on the each occasion;

(*c*) whether any Departmental enquiry was made on those occasions; and

(*d*) if so, the details thereof?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) There has been no case of opening of fire by any official of the Excise Department in Kanyakumari District after the re-organization of States.

(*b*), (*c*) & (*d*) : Do not arise.

*Cottage Industries (Vedaranyam Block)*

* 1040 *Q.*—Sri A. VEDARATHNAM : கனம் உள்விவகார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ல் வேதாரண்யம் பிளாக்கில் இதுவரை என்னென்ன குடிசை கைத்தொழில்கள் எந்தெந்த கிராமங்களில் ஆரம்பிக்கப்பட்டன ?

(இ) ஒவ்வொன்றிலும் இதுவரை ஏற்பட்ட லாப நஷ்டமென்ன ?

(உ) அத்தொழில்கள் எல்லாம் நன்கு நடைபெற்று வருகின்றனவா? இல்லையானால் எங்குள்ள எந்தத் தொழில் ஏன் நன்றாக நடைபெறவில்லை ? .

(எ) இவற்றை மீண்டும் நல்ல முறையில் நடத்த முயற்சிக்கப்படுமா?.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) No Village Industries unit was started in Vedaranyam Block in 1960.

(*b*), (*c*) and (*d*) : Do not arise.



23rd March 1961]

Sri A. VEDARATHNAM : இப்போது அங்கே ஆரம்பித்து நடைபெறுகின்ற கைததொழில்கள் எல்லாம் வேறு எந்த இலாகாவினால் நடைபெறுகின்றன என்பதை அறிவிக்க முடியுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : வில்லேஜ் இண்டஸ்ட்ரீஸ் ஸ்கீம் வில்லேஜ் இண்டஸ்ட்ரீஸ் இலாகாவின் கீழ்தான் ஆரம்பிக்கப்படும்.

DEPUTY SPEAKER : Questions are over.

**[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

## II.—ADJOURNMENT MOTION *RE* FAILURE OF GOVERNMENT TO ARREST THE RISE IN PRICES OF FOOD GRAINS.

DEPUTY SPEAKER : I have received notice of an adjournment motion from hon. Member Sri S. M. Annamalai to discuss a matter of urgent public importance, viz., failure of Government to arrest the rise in prices of foodgrains and foodstuffs.

The adjournment motion relates to rise in prices. Prices have not suddenly risen so as to be discussed by adjourning the business of the House. Further the hon. Member gave notice of a cut motion under Demand XVIII—Agriculture—about the failure of the Government in bringing down the prices of foodgrains. But he did not move the same. The matter is a continuing one and cannot be brought as an adjournment motion. The hon. Member has other ways of raising the matter. I, therefore, withhold my consent for moving it.

## III.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1961–62—*cont.*

### DEMAND XXVII—CIVIL WORKS—WORKS.

### DEMAND XXVIII—CIVIL WORKS—ESTABLISHMENT AND TOOLS AND PLANT.

### DEMAND XLII—CAPITAL OUTLAY ON CIVIL WORKS.

The Hon. Sri P. KAKKAN : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 8,76,57,200 under Demand XXVII—Civil Works—Works."

DEPUTY SPEAKER : Motion moved—

"That the Government be granted a sum not exceeding Rs. 8,76,57,200 under Demand XXVII—Civil Works—Works."

I understand that hon. Member Sri V. K. Kothandaraman is moving his cut motion (No. 380) under this Demand. He may move it now.

Sri V. K. KOTHANDARAMAN : Sir, I move—

"That the allotment of Rs. 8,76,57,200 under Demand XXVII, Civil Works—Works be reduced by Rs. 100."

DEPUTY SPEAKER : Cut motion moved—

"That the allotment of Rs. 8,76,57,200 under Demand XXVII. Civil Works—Works be reduced by Rs. 100."

THE HON. SRI P. KAKKAN : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,67,28,600 under Demand XXVIII. Civil Works—Establishment and Tools and Plant."

DEPUTY SPEAKER : Motion moved—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,67,28,600 under Demand XXVIII. Civil Works—Establishment and Tools and Plant."

I understand that hon. Member Sri K. Sattanatha Karayalar is moving his cut motion under this Demand. He may move it now.

SRI K. SATTANATHA KARAYALAR : Sir, I move—

"That the allotment of Rs. 1,67,28,600 under Demand XXVIII Civil Works—Establishment and Tools and Plant be reduced by Rs. 100."

DEPUTY SPEAKER : Cut motion moved—

"That the allotment of Rs. 1,67,28,600 under Demand XXVIII Civil Works—Establishment and Tools and Plant be reduced by Rs. 100."

THE HON. SRI P. KAKKAN : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 5,17,43,600 under Demand XLII. Capital Outlay on Civil Works."

DEPUTY SPEAKER : Motion moved—

"That the Government be granted a sum not exceeding Rs. 5,17,43,600 under Demand XLII. Capital Outlay on Civil Works."

I understand that hon. Member Sri K. Sattanatha Karayalar is moving his cut motion under this Demand. He may move it now.

SRI K. SATTANATHA KARAYALAR : Sir, I move—

"That the allotment of Rs. 5,17,43,600 under Demand XLII. Capital Outlay on Civil Works be reduced by Rs. 100."

DEPUTY SPEAKER : Cut motion moved—

"That the allotment of Rs. 5,17,43,600 under Demand XLII. Capital Outlay on Civil Works be reduced by Rs. 100."



Two hours have been allotted for the consideration of these Demands. How long will the Hon. Minister take for his reply?

THE HON. SRI P. KAKKAN : About 25 minutes, Sir.

**SRI N. MARUDACHALAM :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த சிவில் ஒர்க்ஸ் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். அதாவது இன்று சிவில் ஒர்க்ஸ் சம்பந்தப்பட்ட இலாகாவிலே இப்போது ரோடு, பாலம், மற்றும் சின்னச் சின்ன ரோடுகளையெல்லாம் மராமத்து செய்வதற்காக இன்று 8 கோடி ரூபாய்க்கு மேல் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த சிவில் ஒர்க்ஸிலே ஏற்கெனவே எல்லாப் பகுதிகளிலும் இந்த ரோடு வேலைகளும், பால வேலைகளும் அல்லது இவைகளை யெல்லாம் மராமத்து செய்வதாகவும் குறிப் பிடப்பட்டிருக்கிறது. அதே சமயத்தில் கோவையிலே எந்தவிதமான மராமத்து வேலை செய்ததாகவோ அல்லது பாலம் கட்டியதாகவோ இந்தப் புத்தகத்தில் குறிப்பிடப்படவில்லை. ஆகையால் இன்று கோவையிலே ரோடு வசதியோ, பாலம் கட்டும் வசதியோ இல்லையென்று எண்ணுகிறார்களா ? காரணம் என்னவென்பதை எனக்கு விவரங்களோடு கனம் அமைச்சர் அவர்கள் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

கோவையிலே இன்றைக்கு மிக முக்கியமான 4 ரோடுகள் இருக்கின்றன. அதாவது நகரத்திலே இருந்து சிறுவாணி செல்லக்கூடிய ரோடு ஒன்றிருக்கிறது. இரண்டாவதாகத் தடாகம் ரோடு ஒன்றிருக்கிறது. அதோடுகூட விவசாயப் பண்ணையிலிருந்து, மருதமலை செல்லக்கூடிய இடத்தில் ஒரு ரோடு இருக்கிறது. இவைகள் எல்லாம் மிக முக்கியமான ரோடுகள். இந்த ரோடுகளிலே இன்றைக்குச் சாதாரணமாக ஒரு பஸ் போக்குவரத்து மட்டும் போய்க் கொண்டு வருகிறது. அப்படி போய்க் கொண்டு இருந்தாலும், இன்றைக்கு கர்ப்ப ஸ்திரீ ஒருவள் அந்த பஸ்ஸிலே போனால் அவளுடைய கர்ப்பம் தானாகவே கலங்கிவிடும். அந்த மாதிரியான நிலைமையில் தான் இன்றைக்கு ரோடுகள் அங்கே இருக்கின்றன. ரோடுகளுக்கு உண்மையிலேயே மெட்டல்கள் போடுவதில்லை. அப்படி மெட்டல்கள் போடுவதாக இருந்தால், அந்த ரோடுகளில் மெட்டல்களைக் கொண்டு வந்து கொட்டி, ஒரு வருஷம் அது அங்கேயே இருந்து மக்கி, மண்ணாகப் போன பிறகு, மறுபடியும் அ[illegible]நச் சலித்து போடக்கூடிய நிலைமையில் தான் இருக்கிறது. இந்த முறையிலே அங்கு நல்ல முறையிலே ரோடு வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை.

இன்றைக்கு சிறுவாணிக்குப் போகிற ரோட்டை எடுத்துக் கொண்டால், வழியில் அங்கே பெரிய தேவஸ்தலங்கள் இருக்கின்றன. பேரூர் என்ற ஒரு ஊர் இருக்கிறது. அந்த தேவஸ்தானத்திலே ஆருத்ரா தரிசனம் நடக்கும் போது பார்த்தால், ஜனங்கள் நெருக்கம்தான் அதிகமாக இருக்கும். பஸ் போக்குவரத்துக்கூட நடைபெற முடியாத அளவுக்கு ஜன நெருக்கம் அங்கு அப்படி அதிகமாக இருக்கும். இதற்குக் காரணம் அந்த தேவஸ்தானத்திற்குச் செல்லக்கூடிய ரோடுகள் அதிகமான அளவில் விரிவு படுத்தப்படவில்லை. இந்தமாதிரி சமயங்களில் பஸ்கள் நகருக்குள்ளே வருவதுகூட கிடையாது. இந்த ரோட்டை விரிவுபடுத்த வேண்டுமென்று டிஸ்டிரிக்ட் டெவலெப்மெண்ட் கவுன்சிலிலேகூட குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் அதைப் பற்றி எவ்வித நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. ஆகவே இந்த ரோடுகள் எல்லாம் இன்றைக்கு ஆருத்ரா தரிசனத்திற்கு போகும்போதும், அதைப்போல் மார்கழி உத்திரத்திற்குப் போகும்போதும் ஜனங்கள் கஷ்டப்படக்கூடிய அளவிலே தான், பஸ்கள் நகருக்கு வெளியே நிற்கக்கூடிய அளவிலே தான், ஜன நெருக்கடி காரணத்தாலும், ரோடுகள் அகலப்படுத்தப்படாமல் இருப்பதாலும் இன்றைக்கு இருந்து கொண்டு வருகிறது. ஆகவே இதை அகலப்படுத்தி, பஸ் போக்குவரத்து தாராளமாகப் போகக்கூடிய அளவிலே இதைச் செய்ய வேண்டு 9-30
மென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு தடாகம் ரோட்டை எடுத்துக் a.m.
கொண்டால், மெட்டல் சரியாகப் போடவில்லை. மண் போட்டு, ஜெல்லியை

[Sri N. Marudachalam] [23rd March 1961

மேலே போட்டு தட்டிவிட்டுப் போய்விட்டார்கள். அந்த நிலையில்தான் தடாகம் ரோடு இருக்கிறது. நான் சொன்ன நான்கு ரோடுகளையும் உடனடியாகச் சரிப்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் அந்தப் பகுதியில் உள்ள ஜனங்களுக்கு போக்குவரத்திற்கு சௌகரியமாக இருக்கும். தொண்டாமுத்து ரோடிலும் பல பள்ளங்கள் இருக்கின்றன. எந்த விதத்திலும் அந்த ரோட்டில் சௌகரியம் செய்யப்படவில்லை. பாலம் கட்டப்படவில்லை. இந்த விதத்தில்தான் அந்தப் பகுதியில் ரோடுகள் இருக்கின்றன.

ஹைவேஸ் டிபார்ட்மெண்டில் ரோடுகளை பராமரிப்பதற்காகக் கூலி ஆட்கள் இருக்கிறார்கள். நூற்று ஐம்பது பேர்கள் இருக்கிறார்கள். அதில் 60 ஆண்களும், மற்றவர்கள் பெண்களுமாக இருக்கிறார்கள். பெண்களுக்கு மாதத்திற்கு ரூபாய் 29½ சம்பளம். ஆண்களுக்கு ரூபாய் 40 சம்பளம். இந்த சம்பளத்தைக் கொண்டு அவர்கள் வாழ்க்கை நடத்த முடியுமா? ரோடு பராமரிப்பதற்காக உற்சாகத்துடன் அவர்கள் வேலை செய்ய முடியுமா? அவர்களுடைய சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டும். அதோடுகூட 10 வருஷம், 12 வருஷமாக வேலை செய்யும் அவர்கள் நிரந்தரமாக்கப்படவில்லை. 'டெம்பரரியாகத்' தான் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய வேலையை நிரந்தரமாக்கவும், அவர்களுக்கு சம்பளத்தை அதிகப்படுத்திக் கொடுக்கவும், சர்க்கார் கொடுக்கும் எல்லா சலுகைகளையும் அவர்களுக்குக் கொடுக்கவும் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். அப்படி எடுத்தால்தான் ரோடு பராமரிப்பு தொழிலாளிகள் நல்ல முறையில் வேலை செய்வார்கள், உற்சாகத்தோடு வேலை செய்வார்கள். சில பெரிய சம்பளக்காரர்கள் பஞ்சப் படியை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். இந்தக் கூலி ஆட்களுக்கு பஞ்சப்படி என்பதே கிடையாது. 'பே கமிஷன்' கொடுத்த 5 ரூபாய் உயர்வும் அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு பஞ்சப்படி கொடுக்கப்பட வேண்டும். 'பே கமிஷன்' அளித்த ரூபாய் 5 உயர்வும் அவர்களுக்குச் சேர்த்து அளிக்கவேண்டும். அந்தப் பகுதியிலே உள்ள பெரும்பாலான மக்கள் ஏழை மக்கள். ஆகவே, மராமத்து இலாகாவில் வேலை செய்யக் கூடியவர்களுக்கு கனம் அமைச்சர் அவர்கள் நிரந்தரமாக வேலை கொடுத்து, அதிகப்படியான சம்பளத்தையும் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நகரசபையில் சில ரோடுகள் இருக்கின்றன. அதைப் பராமரிப்பதற்கு முனிசிபாலிடிகளுக்கு லோன் கொடுத்து, உடனடியாக ரோடுகளை விரிவுபடுத்துவதோடு அல்லாமல், அந்த ரோடுகளைச் சுத்தம் செய்ய வேண்டும். குடி தண்ணீர் வசதி சில கிராமங்களில் இல்லை. தாழ்த்தப்பட்டவர்கள் இருக்கக்கூடிய கிராமங்களாக இருந்தாலும் சரி, ஜாதி ஹிந்துக்கள் இருக்கக்கூடிய கிராமங்களாக இருந்தாலும் சரி, குடி தண்ணீர் வசதி இல்லாமல் ரொம்பவும் கஷ்டமாக இருக்கிறது. அந்தப் பகுதியில் 100 அடி, 200 அடியில் கிணறு தோண்டினால்கூட தண்ணீர் கிடைப்பது கஷ்டமாக இருக்கும். அந்தப் பகுதிக்குச் சிறுவாணித் தண்ணீரைக் கொண்டு வருவதற்கு சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நகரசபைக்கு பக்கத்தில் ஊருக்கு மத்தியிலே ஒரு குளம் இருக்கிறது. அந்தக் குளத்தை எடுத்துவிட வேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்களிடத்தில் மகஜர் கொடுத்திருக்கிறோம். அந்தக் குளம் இருப்பதினால் நகரத்தை விரிவுபடுத்த முடியவில்லை. அதனால் பாசன வசதி அதிகமாகவும் இடையாது. 100 ஏகர் நிலத்திற்குத்தான் பாசன வசதி கிடைக்கிறது. அதற்குக் கூட வேறு ஏற்பாடு செய்துகொள்ளலாம். முத்தண்ணங்குளத்திலிருந்து ஒரு பெரிய கால்வாய் வெட்டி பெரிய குளத்தில் கொண்டு வந்து சேர்த்துக் கொள்ளலாம்.

**THE HON. SRI P. KAKKAN:** குளத்தை ஆழப்படுத்துவதுபற்றியும், குடி தண்ணீர் வசதி பற்றியும் அங்கத்தினர் அவர்கள் இந்த டிமாண்டில் பேசுகிறார்கள். அது சம்பந்தமான டிமாண்டுகளெல்லாம் முடிவடைந்து விட்டன. இந்த டிமாண்டு ரோடு பராமரிப்பு சம்பந்தமானது. பெரு



23rd March 1961] [Sri P. Kakkan]

வழித்துறை, பொதுப்பணித் துறை சம்பந்தப்பட்ட மானியங்கள் இப்பொழுது கோரப்பட்டிருக்கின்றன. அது சம்பந்தமான விஷயங்களைத் தான் கனம் அங்கத்தினர் அவர்கள் பேசவேண்டும்.

**SRI N. MARUDACHALAM:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நான் ரோடு அகலப்படுத்துவது பற்றிதான் பேசினேன், குளத்தை ஆழப்படுத்துவதுபற்றி பேசவில்லை. அந்தக் குளத்தையே எடுத்துவிடவேண்டுமென்று நாங்கள் சொல்லுகிறோம்.

**SRI K. ANBAZHAGAN:** ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர், ஸார், கனம் அமைச்சர் அவர்கள் தந்திருக்கிற அறிக்கையிலே இரண்டாவது பக்கத்திலே சிறிய பாசன வேலைகள், தேசிய நீர் வழங்கு சுகாதாரத் திட்ட வேலைகள், கிராம நீர் வழங்கு திட்ட வேலைகள் இவற்றிற்கு பெருவழி பொதுப்பணிகள் துறையினர் பொறுப்பேற்பர் என்று தெரிவித்திருக்கிறார்கள். அப்படி மாறாக, அதைப்பற்றி இந்த விவாதத்திலே பேசக் கூடாது என்று சொல்லுவது எப்படி நியாயமாகும் என்று அறிய விரும்புகிறேன்.

**DEPUTY SPEAKER:** It is not a point of order but only a point of information.

**THE HON. SRI P. KAKKAN:** கனம் அன்பழகன் நன்றாக இந்த அறிக்கையைப் படித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். பஞ்சாயத்து நிர்வாகத்தின் அமைப்பிற்குப் பொருந்தும் வகையில டெப்யூடி சீப் என்ஜினியர் பதவி ஒன்றை ஏற்படுத்தி சிறிய பாசன வேலைகள், தேசீய நீர் வழங்கு சுகாதாரத் திட்ட வேலைகள் முதலியவைகள் அவருடைய மேற்பார்வையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அங்கத்தினர் அவர்கள் சொல்லுவது, குளத்தை மூடும்படியாகச் சொல்லுகிறார்கள்.

**SRI N. MARUDACHALAM:** இந்த குளத்தினால் அதிகப் பாசனம் கிடையாது. குளத்தை மூட வேண்டுமென்றுநான் மகஜர் (Petition) கொடுத்திருக்கிறோம். கனம் மந்திரி அவர்களும் அதை ஒத்துக்கொண்டு வந்திருக்கிறார்.

**THE HON. SRI P. KAKKAN:** கண்மாயை மூடுவதற்கு நான் ஒத்துக் கொண்டு வந்திருப்பதாக தயவு செய்து இந்த மன்றத்தில் தவறாகக் கூறவேண்டாம் என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

**DEPUTY SPEAKER:** அம்மாதிரி சொல்லுவது தவறு.

**SRI N. MARUDACHALAM:** நகரத்தை விரிவுபடுத்துவதற்கு அந்தக் குளம் இடைஞ்சலாக இருக்கிறது. அப்படி 30-வது வார்டு இருக்கிறது. டவுன் இப்படி இருக்கிறது. இரண்டு பகுதியையும் இணைக்க முடியாமல் குறுக்கே குளம் இருக்கிறது. அதனால் பாசன வசதியும் அதிகமாக கிடையாது. முத்தணங்குளத்திலிருந்து ஒரு கால்வாய் வெட்டி பெரிய குளத்திற்குக் கொண்டு வந்து சேர்த்துவிடலாம். நகரத்தை விரிவுபடுத்துவதற்கு கனம் அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதோடு நான் முன்பு குறிப்பிட்ட நான்கு ரோடுகளையும் துரிதமாக செப்பனிடவேண்டும். ரோடு சிப்பந்திகளுக்கு அதிகப்படியாக சம்பளம் கொடுக்க வேண்டும். அவர்களை நிரந்தர ஊழியர்களாக ஆக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

**SRI M. SELVARAJ:** மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் இங்கு கோரப்பட்டிருக்கும் மான்யத்தின் மீது கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரேபணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். குறிப்பாக சென்னையிலிருந்து மதுரை வரை

செல்லக்கூடிய டிரங்கு பாதையை எடுத்துக் கொண்டால் செங்கற்பட்டு மாவட்டம் வரையில்தான், அந்த எல்லை வரையில் தான் அந்தப் பாதை நன்றாக அகலப்படுத்தப்பட்டு இருக்கிறது. அதற்கு மேலாக செல்லக் கூடிய பகுதிகளில், அதிலும் குறிப்பாக தென் ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அந்த எல்லைக்குட்பட்ட பாதைகள் அந்த அளவுக்கு அகலப்படுத்தப்படவில்லை. அந்தப் பகுதியிலுள்ள பாதை அபிவிருத்தி அடையாமல் இருக்கிறது. ஆகவே, அந்த மாவட்ட வேலைகளைப் பொறுத்தவரையில் துரிதமாக அதற்கான நிதியை ஒதுக்கி பாதையை அகலப்படுத்தி, செப்பனிடவேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்ளுகிறேன். சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாகவும், போன ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாகவும், குறிப்பாக விருத்தாசலம் சிதம்பரம், கடலூர் ஆகிய இடங்களில் பல பாதைகள் உடைப்புகள் ஏற்பட்டு, பல பாலங்களும் அந்த அளவுக்கு பழுதடைந்திருக்கின்றன. அங்கேயுள்ள பாதைகள் இம்மாதிரி சீர்கேடான நிலைமையில் இருக்கின்றன. இதைப்பற்றி இந்த மாமன்றத்தில் பல தடவைகள் எடுத்துச் சொல்லியும்கூட, 1, 1½ ஆண்டுகள் ஆகியும் கூட அந்தப் பாதைகளை செப்பனிடும் வேலை துரிதமாக நடைபெறவில்லை. அதற்கு என்ஜினியர் சொல்லும் முக்கிய காரணம் ரோடுகளுக்கு வேண்டிய கருங்கல் ஜெல்லிகள் போதுமான அளவுக்குக் கிடைக்கவில்லை என்பதுதான். நெய்வேலித் திட்டம் வந்தபிறகு அவர்கள் கருங்கல் ஜெல்லிகளை அதிக விலை கொடுத்து வாங்கிவிடுகிறார்கள். மேலும் தகுந்த கண்டிராக்டர்களும் கிடைப்பதில்லை என்று சொல்லுகிறார்கள். அதற்கு வேண்டிய ட்ரான்ஸ்போர்ட் பெஸிலிடீஸ் இல்லை என்றும் சொல்லுகிறார்கள். உண்மையிலேயே இன்றைக்கு 16 ரூபாய் விற்ற ஜல்லி எங்கள் மங்களபேட்டை முதலிய பகுதிகளில் ரூபாய் 24-க்கு விற்கப்படும் நிலை இருக்கிறது. அந்த நிலைமையை உணர்ந்து ஓரளவு பாதைகள் போடவேண்டிய பொருள்கள் சுலபமாகக் கிடைக்கச் செய்து, நல்ல கண்ட்ராக்டர்களை வைத்துப் பாதைகளைப் போடவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். நெய்வேலி திட்டத்திற்குப் பிறகு இந்த ஆண்டு அதிகமான எடையுள்ள மெஷின்கள் போவதால், சின்னச் சின்ன கல்வர்ட்டுகள், விரால் விடுகின்றன. இப்பொழுதுதான் பாதைகளைத் திருப்பி விடுகிறார்கள். வரப்போகும் மழைக் காலங்களில், உடனடியாக நடவடிக்கை எடுக்காவிட்டால், உடைப்புகள் ஏற்பட்டு போக்குவரத்து பெரும் அளவுக்கு பாதிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதிலும் என் தொகுதியான விருத்தாசலம் பகுதியில் சிறுசிறு கிராமங்களுக்கு இணைப்புப் பாதைகள் அதிகமாக இல்லை. அதற்கான ஏற்பாடுகள் இந்த ஆண்டில் எடுக்க வில்லை. அதை உடனடியாக எடுக்க வேண்டும். நல்லூர் ப்ளாக்கிலிருந்து, பல தீர்மானங்கள் அனுப்பியிருக்கிறோம். பெண்ணாடத்திலிருந்து 9 மைலுக்கு முதலில் ஆர். டி. டிபார்ட்மெண்டில் ஒரு மண் பாதை போட்டார்கள். அதற்கு மேல் ஒன்றும் செய்யாமல் இருக்கிறார்கள். அதை உடனடியாகச் செய்தால் கும்பகோணத்திற்குப் போக ஒரு ஷார்ட் பாதையாக இருக்கும்; 20, 30 மைல்கள் குறையும்.

இந்த இலாகாவில் கீழ்த்தர சிப்பந்திகளுக்கு, பே கமிஷன் சிபாரிசுகள்படி சம்பள உயர்வுகள் சரிவர அமுலுக்குக் கொண்டு வரவில்லை. அதைக் கவனித்து ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விருத்தாசலம் நகரத்தைப் பொறுத்த வரையில், நகரத்தின் நடுவில் மணிமுத்தாறு ஓடுகிறது. அங்கே ஒரு பாலம் இருக்கிறது. இப்பொழுது அதன் மேல் ஒரு பஸ் நுழைந்தால், பக்கத்திலே கூட மக்கள் நடப்பது கஷ்டமாக இருக்கிறது. மற்றபடி குதிரை வண்டியோ, வேறு பஸ்ஸோ போகமுடியாது. இரண்டாவது திட்ட காலத்தில் இரண்டே முக்கால் லட்ச ரூபாயில் வேலை செய்வதாக இருந்து அது கைவிடப்பட்டிருக்கிறது. அதை மேலும் ஆராய்ந்து அந்த வேலையைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஏற்கனவே அமைச்சரவர்கள், போன ஆண்டு



என்று நினைக்கிறேன். கடலூருக்கு வந்தபோது, மாவட்ட அதிகாரிகளையும் வரவழைத்து, மக்கள் சொன்ன குறைகளை எடுத்துக் காட்டி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதன் பேரில் அதிகாரிகள் ட்ரிலிங் ஆபரேஷன் செய்து, எந்த அளவுக்கு அந்த ஆற்றில் மணல், களிமண் இருக்கிறது என்று பார்த்தார்கள் அதன் பிறகு அது கைவிடப்பட்டிருக்கிறது. நாலு அடி அகலம் கடலூரில் செய்தது போல, இங்கேயும் அகலப்படுத்தினால், ஜனங்கள் நடக்கப் பெரிய உதவியாக இருக்கும். அதை உடனடியாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

**Sri V. K. KOTHANDARAMAN** : ஸார், போக்கு வரத்து சம்பந்தப்பட்ட பிரச்சினையிலே, இன்றைக்குப் பெரிய அளவுக்கு நாட்டிலேயே நம் ராஜ்யத்திலேதான் ரோடு போக்குவரத்து நல்ல முறையிலே அமைக்கப்பட்டிருக்கிறது என்று பெருமைப் படக்கூடிய அளவுக்கு இருந்த போதிலும், 100-க்கு 80 பேர் இருக்கக் கூடிய கிராமங்களிலே, ஒரு கிராமத்திற்கும் பக்கத்து நகரத்திற்கும் தொடர்பு இருக்கும் அளவில் ரோடு வசதிகள் இல்லாத காரணத்தால், கிராம மக்கள் எந்த அளவுக்குக் கஷ்டப்படுகிறார்கள், பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது கனம் அமைச்சரவர்களுக்கும் தெரிந்த விஷயம்தான். முக்கியமாக கிராமங்களுக்கு ரோடு போடுவதில் தீவிர கவனம் செலுத்தப்படவேண்டும். அப்படி இன்றைக்குச் செலுத்தப்படவில்லை என்பதை ஞாபகத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஒரு கிராமத்திலிருந்து நகரத்திற்குப் போகவேண்டுமானால் பல கிராமங்களிலிருந்து இரண்டு மூன்று பஸ்கள் மாறிமாறி ஏறிப் பிரயாணம் செய்ய வேண்டியிருக்கிறது. அதற்குக் காரணம் நாங்கள் அங்கே பஸ் ரூட்டுகள் ஓபன் பண்ண வேண்டுமானால் அங்கே மெட்டல் ரோடுகள் இல்லை என்கிற அளவுக்கு 3,000 4,000 5,000 என்று ஜனத்தொகை இருக்கும் கிராமங்களுக்குக் கூட நிலைமை இருக்கிறது என்பதையும் அமைச்சர் ஞாபகத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன். ஆகவே, அம்மாதிரி கிராமங்களுக்கு போக்கு வரத்து சாதனங்களை உடனடியாகச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இன்றைக்கு பஸ் போக்கு வரத்து ஏற்பட்டால் மாத்திரம் போதாது. இன்றைக்கு எந்த எந்தப் பாதைகளில் பஸ் போகிறதோ அந்த ரோடுகளையெல்லாம் தார் ரோடுகளாகச் செய்வதில் கவனம் செலுத்த வேண்டும். மூன்றாவது திட்ட காலத்தில் பஸ் போக்குவரத்து ரோடுகள் தார் போட ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் இப்பொழுது டயர் கிடைக்கவில்லை. ப்ளாக் மார்க்கெட்டில்தான் வாங்கவேண்டியிருக்கிறது. ஆகவே பல போக்கு வரத்தும் ஸ்தம்பித்து விடும். ஆகவே இந்த ரோடுகளுக்குத் உடனடியாகத் தார் போட்டால் நலமாக இருக்கும் என்பதை ஞாபகப் படுத்த விரும்புகிறேன்.

ஆந்திராவிலிருந்து நம் ராஜ்யத்தோடு சேர்ந்திருக்கும் பகுதியில் உள்ள கிராமங்கள் ரொம்பவும் மோசமான நிலையில் இருக்கின்றன. அந்தக் கிராமங்களிலே ரோடு என்பதே கிடையாது. கனம் அமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்தார்கள். ஆந்திராவிலிருந்து நம்மோடு சேர்ந்திருக்கும் பகுதிகளுக்கு ரோடு போட விசேஷ கவனம் செலுத்துவோம், விசேஷமாக அதற்குப் பணத்தை ஒதுக்குவோம், ரோடுகளைப் போடுவோம் என்று சொல்லப்பட்டது. ஆனாலும் 15,000 ஜனத் தொகை உள்ள பகுதிகளும் கவனிக்கப்படவில்லை. அதை உடனடியாகக் கவனிக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மெட்றாஸ் டு கேப் என்ற கோஸ்டல் ரோடு போடுவதாகச் சொல்லப்பட்டது. அது எந்த வகையில் செய்தாலும் நேஷனல் ஹைவேஸாகப் போடுவதாக இருந்தாலும் அதை உடனடியாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். காரணம் என்ன வென்றால் இன்றைக்கு சமுத்திரக் கரை ஓர மக்கள் காலையில் கடல் மேல் சென்று

மாலையில் மீன்களைப் பிடித்து வந்தாலும் அவர்களுக்கு அதன் விற்பனையால் நல்ல வருமானம் வரக்கூடியதாக இருந்தாலும் அதன் பலனை அவர்கள் அடையமுடியாத நிலையில்தான் இருக்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் தாங்கள் பிடித்து வந்த மீன்களைப் பல இடங்களுக்கு எடுத்துச் செல்லும் வகையில் ரோடு செதிகள் இல்லை. அதனால் மற்றவர்கள் அவர்களிடமிருந்து குறைந்த விலையில் வாங்கி மற்ற இடங்களுக்கு எப்படியோ எடுத்துச் சென்று அதன் லாபத்தை. முழுப் பலனை அடையும் நிலையில்தான் இருக்கிறது. ஏழை மக்கள் தங்கள் உழைப்பின் பலனை அடையமுடியவில்லை என்கிற நிலைமைதான் இருக்கிறது. மீனவர்களை முன்னேறச் செய்ய அதைச் செய்கிறோம், இதைச் செய்கிறோம் என்று சொன்னால் போதாது. அவர்களுக்கு ரோடு வசதி கொடுப்பதன் மூலமாகத்தான் அவர்கள் பிடித்து வந்த மீன்களின் விற்பனையினால் முழுப்பலனையும் அடைய முடியும் என்பதை உணரவேண்டும்.

இன்றைக்கு திருச்சி ஜில்லாவிலே குறிப்பாக திருச்சி நகரத்திலே இரண்டு சூபரிண்டெண்டிங் என்ஜினியர்கள் இருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். அவர்களில் ஒருவர் திருநெல்வேலிக்கும் மற்றவர் திருச்சிக்கும் என்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஒருவரை ஒரு இடத்திற்கு என்று நியமித்து விட்டு அங்கு கட்டட வசதி இல்லை என்று இங்கே திருச்சியில் வைத்தால் என்ன பிரயோஜனம்? கட்டடம் இல்லாவிட்டால் வேறு ஏதாவது ஏற்பாடு செய்து ஒரு கட்டடத்தை வாடகைக்கு வாங்கி அவரைத் திருநெல்வேலியிலேயே வைத்து அவர் ஆபீஸ் அங்கேயே வைக்கப்பட வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். அதில் கவனம் செலுத்த வேண்டும். அப்பொழுதுதான் போக்குவரத்தைப் பராமரிக்க அவரால் முடியும். மேலும் திருநெல்வேலி எஸ். ஈ. இன்றைக்கு திருச்சியில் இருப்பதால் பலவகையிலும் நிர்வாகச் .செலவு அதிகமாகத்தான் இருக்கும். வேலைகளும் துரிதமாக நடப்பதில்லை. ஆகவே இந்த விஷயத்தில் தீவிரக் கவனம் செலுத்தி அந்த எஸ். ஈ.யை திருநெல்வேலியில் இருக்கச் செய்ய தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதே போன்று, சென்ற ஆண்டு பட்ஜட் கூட்டத்திலேயே நான் சொல்லியிருக்கிறேன், இந்த இலாகாவில் பல ஊழல்கள் இருக்கின்றன என்று. உடனே நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லி அமைச்சரவர்கள் சொன்ன பிரகாரம் அதைப்பற்றி எழுதியும் கொடுத்தேன். அடுத்து என்ன செய்தார்கள் என்பது ஒன்றும் தெரியவில்லை. செங்கல்பட்டு செக்‌ஷனிலே தார் திருட்டுப் போனதாகத் தெரிவித்ததில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ; மெட்ராஸ் நார்த் செக்‌ஷனிலே அம்மாதிரிப் பல ஊழல்கள் சம்பந்தமாக என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பது போன்ற தகவல்கள் ஒன்றும் நமக்குக் கிடையாது. லெட்டர் வந்ததற்கு, 'வந்தது, உடனே நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம்' என்று சொல்லப்பட்டதே யொழிய, ஆறு மாதத்திற்கு மேலே ஆகப் போகிறது, இது வரையில் என்ன ஆயிற்று என்று தெரியாது. எந்த ஒரு துறையாக இருந்தாலும் வருஷக் கணக்கில் விசாரணை செய்து கொண்டு உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க முடியாத அளவுக்கு நிலைமை இருப்பதைப் பார்க்கிறோம். வருஷக் கணக்கில் நீடிக்கவிட்டு, ஸஸ்பென்ஷனில் வைத்து சம்பளம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு, கடைசியில் நிலைமை என்ன என்றால் 'விசாரணை செய்யப்பட்டது, போதுமான ஆதாரங்கள் இல்லாத காரணத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டது' என்று சொல்லக் கூடிய அளவுக்கு இன்றைய தினம் நிலைமை இருப்பதைப் பார்க்கிறோம்.

**The Hon. Sri P. KAKKAN** : ஆதாரம் இல்லாவிட்டாலும் தண்டிக்க வேண்டும் என்று கனம் அங்கத்தினர் சொல்லுகிறாரா ?

**Sri V. K. KOTHANDARAMAN** : ஆதாரம் இல்லாவிட்டாலும் தண்டிக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. டிலே டாக்டிக்ஸ், அதாவது நாளை நீட்டி தட்டிக் கழித்து ஒன்றும் இல்லாமல்



செய்துவிடும் ஏற்பாட்டைத்தான் சொல்லுகிறேன். கவனித்து ஆதாரம் இருக்கிறதா இல்லையா என்று உடன் விசாரணை செய்து உடனுக்குடன் நடக்க வேண்டும் என்பது எனது கருத்து. யார் எது எழுதிக் கொடுத்தாலும் உடனே தண்டிக்க வேண்டும் என்று நான் விரும்ப மாட்டேன், சொல்லவும் மாட்டேன், நீங்களும் அந்த மாதிரி செய்ய மாட்டீர்கள் என்று தெரியும். நாள் கடத்தக் கூடாது. நாள் கடத்துவதால் எந்த வித நடவடிக்கையையும் எடுக்க உதவிகரமாக இருக்காது என்றுதான் சொல்லுகிறேன்.

அடுத்தபடியாக குடியாத்தம் தாலுக்காவில் ரோடு போட இடம் கொடுக்க மாட்டேன் என்று சொல்லப்படுகிறது. நீங்கள் சொல்லி வாங்கிக் கொடுங்கள் என்று பல காரணங்கள் காட்டப்படுகின்றன. கிராம மக்களே 'பணம் கொடுக்கிறோம், இதை அக்வயர் செய்து கொடுங்கள்' என்று சொல்லிக் கொண்டு வந்த போதிலும், வசதி படைத்த பெரிய மனிதராக இருப்பதால் அவர்கள் நிலத்தில் கை வைக்கப் பயப்படும் நிலையில் இருக்கிற நமது சர்க்கார் 10—15 வருஷ காலமாக குடியாத்தம் தாலுக்காவில் மாச்சம்பட்டு கிராமத்தில் ரோடு போடுவதில் ரோடைக்கூட நாங்களே போட்டுக்கொள்கிறோம் என்று சொல்லும் அளவுக்கு முன் வந்தும் அந்த இடத்தை வாங்கிக் கொடுக்கும் நிலைமை கிடையாது. ஏழைப்பட்டவனாக இருந்தால் உடன் எடுத்துக் கொள்ளப்படுகிறது. வசதி படைத்தவனாக இருந்தால் கிட்டப் போக முடியாது என்று தட்டிக் கழிக்கும் நிலைமை இருந்து வருகிறது என்பதைப் பார்க்கிறோம்.

அதே போன்று அரவட்லா மலையின் மேல் மூன்று கிராமங்கள் இருக்கின்றன. அந்த ஊர்களுக்குப் பாதை போட வேண்டுமென்று சொன்னால் காட்டிலாகா 'நாங்கள் போட முடியாது, மராமத்து இலாகாதான் போட வேண்டும்' என்று சொல்லுகிறார்கள். மராமத்து இலாகா 'எங்களிடம் பணம் இல்லை, காட்டிலாகாதான் போட வேண்டும்' என்று சொல்லுகிறார்கள். இப்படி இரண்டு ஆட்டிலே ஒட்டிய குட்டி மாதிரி இருக்கிறது. யாரும் கவனிக்காது இருக்கிறார்கள். இரண்டு அமைச்சருக்கும் சண்டை, தகராறு என்று நான் பிரிக்கவில்லை—அந்த மாதிரி சொல்லவில்லை. எங்களுக்குள் தகராறு கிடையாது, அந்த அர்த்தத்தில் பிரிக்கக் கூடாது என்று சொன்னார்கள். இந்தப் பாதையைப் போட்டுத் தர வேண்டுமென்று மூன்று வருஷங்களுக்கு முன்னாலிருந்து கேட்டு வரப்படுகிறது. மலைமேல் இருப்பவர்களுக்கு உணவுப் பொருள்கள் மற்றும் அத்தியாவசியமான சகல சாமான்களும் கழுதை மேல் ஏற்றிக்கொண்டு கீழேயிருந்து மேலே கொண்டு போக வேண்டும், மேலேயிருந்து கீழே வர வேண்டும் என்ற நிலைமை இருப்பது வருத்தப்படக் கூடிய விஷயம். ஆகவேதான் அந்த ரோடு போடவேண்டிய அவசியம் இருக்கிறது. ஒரு லட்சத்து இருபது-ஆயிரம் ரூபாய் செலவு ஆகிறது, அவ்வளவு பெரிய தொகையைச் செலவு செய்துபோடத் தயாராக இல்லை என்று சொல்லக்கூடிய நிலைமை இருக்குமானால் அந்த மலைமேல் இருக்கக்கூடிய 2,000-க்கும் அதிகமாக மக்கள் காலமெல்லாம் கஷ்டப்பட வேண்டுமா ? போக்குவரத்து வசதி இல்லாமல் இதே நிலைமை இருக்க வேண்டுமா ? வெள்ளைக்காரர்கள் காலத்தில் போட்டு விடப்பட்ட பாதை இருக்கிறது. ஆந்திரா பகுதியில் 36 அடி போட்டு விட்டிருக்கிறார்கள். அதையே திருப்பிவிட வேண்டியதுதான். மராமத்து அமைச்சரிடத்தில் இதைப் பற்றிப் பேசியாகி விட்டது. காட்டிலாகா அமைச்சரிடத்தில் பேசியாகி விட்டது. அதிகாரிகளிடத்தில் பேசியாகி விட்டது. அதிகாரிகள் இந்தப் பாதையைப் போட விரும்புகிறார்கள். அமைச்சர்கள் தான் 'இவ்வளவு பெரிய தொகையை என் செலவழிக்கவேண்டும், மலைமேல் பாதையைப் போட இவ்வளவு என் செலவழிக்கவேண்டும்' என்று நினைக்கிறார்கள் என்று காலையில் கேள்விக்குப் பதில் சொல்லியதிலிருந்து தெரிகிறது. அந்த மாதிரி எண்ணம் இருக்கக் கூடாது. தாழ்த்தப்பட்டவர்களை விடப் பின் தங்கியிருக்கும் மக்கள் அவர்கள். அவர்களுக்கு நாங்கள் அதிகத் தொகை செலவழிக்கிறோம், மத்திய சர்க்கார் கூட கிராண்ட் கொடுக்கிறார்கள், லோன்கள் கொடுக்கிறார்கள் என்று சொல்லக் கூடிய இந்த நேரத்தில், இந்த ஹில் ட்ரைப்ஸுக்கு ரோடு போட்டுக்

கொடுக்கும் நிலைமை இல்லாமலிருந்தால் அது மிகவும் வருத்தப்பட வேண்டிய விஷயம் என்று இந்த நேரத்தில் அமைச்சர் அவர்களுக்குத் தாழ்மையோடு தெரிவித்துக்கொண்டு அரவட்லா மலைவாசிகளுக்கு ரோடைப் போடவேண்டுமென்றும், அதே போன்று பேர்ணாம்பட்டிலிருந்து போகக் கூடிய ரோடையும் மெட்டல்ட் ரோடாகப் போட்டு வசதிசெய்து கொடுக்கவேண்டுமென்றும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

1954-ம் வருஷ உப தேர்தலில் கனம் முதல் அமைச்சர் அவர்கள் நின்று போட்டியிட்டபோது 'காமராஜ் அவர்களுக்கு ஓட்டு போடுங்கள், அவர் ஜெயித்து வந்தவுடனே இந்த ரோடைப் போடுகிறோம்' என்று சொல்லி ஓட்டு வாங்கப்பட்டது. இன்றைக்கு நான் போனால் என்ன கேட்கிறார்கள் என்றால், " அவர்கள் வந்தார்கள், இப்போது நீங்கள் கேட்கிறீர்கள், ஆளைப்பட்ட முதல் அமைச்சராலேயே ஒன்றும் நடக்கவில்லையென்றால் நீங்கள் என்ன செய்ய முடியும்? அதிலும் நீங்கள் எதிர் கட்சிக்காரர்கள் " என்று கேள்வி கேட்கும் நிலைமை ஏற்பட்டு தவறான எண்ணம் உண்டாகும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே . . . .

**The Hon. Sri P. KAKKAN** : அந்த மாதிரி ஜனங்கள் கேட்கிறார்கள் என்று அந்தப் பிரசங்கத்தை இங்கே செய்கிறீர்கள் போல இருக்கிறது.

**Sri V. K. KOTHANDARAMAN** : அந்தப் பகுதிக்கு அமைச்சர் அவர்களே வந்தால் அமைச்சர் அவர்களையே கேட்கிறார்களா இல்லையா என்று தெரிந்துகொள்ள முடியும். அப்போதும் அமைச்சர் என்ன சொல்லுவார் என்றால், அங்கத்தினர் தூண்டி விட்டாற்போல் இருக்கிறது. எழுதிக் கொடுத்து கொடுங்கள் என்று சொல்லியிருக்கிறார், ஆகையால் நான் கொண்டு வந்தார்கள், இல்லையென்றால் கொண்டுவர மாட்டார்கள் என்று சொல்லலாம். ஆகக்கூடி மக்கள் பலன் அடையவேண்டும். நல்ல முறையில் போக்குவரத்து இருக்க வேண்டும் என்கிற காரணத்தினால்தான் நான் தெரிவித்துக்கொள்கிறேனே தவிர நான் சொல்லி வாங்கிக் கொடுத்தேன் என்ற பெயர் எனக்கு வேண்டாம். அமைச்சரிடம் சொல்லியவுடன் முடிவு எடுத்து போட்டுக் கொடுத்தால் க்ரெடிட் பூராவும் அமைச்சருக்கே இருக்கட்டும், அதை நான் ஒத்துக்கொள்ளத் தயார் என்று சொல்லிக்கொள்ளுகிறேன். இந்த ரோடுகளை உடனடியாக கவனம் செலுத்திப் போட்டுக்கொடுக்கவேண்டுமென்றும் புதிதாக எல்லாக் கிராமங்களுக்கும் ரோடு வசதி கொடுக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**Sri K. N. PALANISWAMI GOUNDER** : கனம் உதவிசபா நாயகர் அவர்களே, இன்றைய தினம் ரோடு போக்குவரத்து மான்யத்தை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். நமது குடியரசு நாட்டிலே மற்ற ராஜ்யங்களைக் காட்டிலும் ரோடு போக்குவரத்து சிறந்து இருப்பதைப் பற்றிப் பாராட்டியாக வேண்டும். நம் நாடு சுதந்திரம் பெற்ற பிறகு நமது ராஜ்யத்தில் இரண்டு ஸ்தாபனங்கள் மற்ற ராஜ்யங்களுக்கு வழிகாட்டியாக இருக்கின்றன —ஒன்று மின்சாரம், இரண்டாவது ரோடு போக்குவரத்து. மற்ற ராஜ்யங்களுக்கெல்லாம் இந்த ராஜ்யம் வழிகாட்டியாக இருப்பதைப் பற்றி நாம் பெருமைப்படவேண்டும். அதற்காக அமைச்சர், காரியதரிசி, பிரதம என்ஜினீயர், மற்ற என்ஜினீயர்கள் எல்லோரையும் பாராட்டுகிறேன். நாம் சுதந்திரம் அடைந்த பிறகு, கடந்த 10—12 ஆண்டுகளில் ரோடு போக்குவரத்து நல்ல முறையில் சௌகரியமாக இருக்கிறது. நம் ராஜ்யத்தைப் பார்க்கும்போது மற்ற ராஜ்யங்களெல்லாம் பார்த்துப் பொறாமைப்படும் முறையில் இருக்கிறது. அதற்காக நான் நமது சர்க்காரைப் பாராட்டுகிறேன்.

ஹைவேஸ் டிபார்ட்மெண்ட் ரோடுகள் நகரங்களில் செல்லும்போது ரொம்பவும் பழுதடைந்திருக்கிறது. வெளியிலே இருப்பதை விட நகரங்களில் உள்ள ரோடுகள், திருப்பூர், கோயம்புத்தூர் போன்ற நகரங்களில் மிகவும் மோசமாக இருக்கின்றன. நகரங்களில் ரோடுகளின் இரு பக்கங்களிலும் கடைகள் என்க்ரோச்மெண்ட் செய்து போக்குவரத்துக்கு வசதி இல்லாமல் இருக்கிறது. இந்த என்க்ரோச்மெண்ட் இல்லாமல், அகலப்ப





படுத்தி தார் ரோடு அல்லது கான்க்ரீட் ரோடு போட முயற்சி எடுத்துக் 10 a.m.
கொள்ளவேண்டும். நகர பஸ்கள் இருக்கக் கூடிய இடங்களில் பஸ் ஸ்டாப்புகளை அதிகமாக அமைக்கவேண்டும். இந்த விஷயத்தில் சில இடங்களில் நகரசபை ஏற்பாடு செய்கிறது. அதோடு கூட சர்க்கார் உதவித் தொகை கொடுத்து எல்லா இடங்களிலும் நல்ல பஸ் ஸ்டாப்புகளையும் ஷெட்டுகளையும் ஏற்படுத்திக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். இன்றைக்குப் பல ரோடுகளை டிரங்க் ரோடாக மாற்றுகிறார்கள். அப்படிச் செய்யும்போது அங்கு பாலங்களும் அமைக்கிறார்கள். அவ்வாறு அவினாசியில் ஒரு பாலம் அமைத்திருக்கிறார்கள். அந்தப் பாலம் கட்டுவதற்கு லட்சம் ரூபாய் செலவாயிற்று. கோயம்பத்தூரில் இருந்து சென்னைக்கு வருவதற்கு சேலம், உளுந்தூர்பேட்டை வழியாக வரவேண்டும். ஆகையால் சேலம் உளுந்தூர் பேட்டை வழியாக சென்னைக்கு வரும் ரோட்டை டிரங்க் ரோட்டாக செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இது போல் கோயம்பத்தூரில் இருந்து கேரளாவிற்கு வரும் ரோட்டையும் டிரங்க் ரோட்டாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தவிர ஹைவேஸ் டிபார்ட்மெண்ட் அசிஸ்டன்ட் என்ஜினியருக்கும் 100 மைல் ஜூரிஸ்டிக்ஷன் இருப்பதனால் ஜீப் கொடுத்து வருகிறார்கள். அவர்கள் போகக்கூடிய ரோடுகள் சரிவர இல்லாததினால் காரில் போகமுடியாது; ஜீப்பில்தான் போக வேண்டும். ஆகையால், இந்த ரோட்டுகளை சீர்படுத்தி அவர்களுக்குக் கார் வாங்குவதற்கு லோன் வசதி செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இன்னும் அவர்களுக்கு வீட்டுவசதியும் செய்து கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். பரம்பிகுளம் பிராஜக்ட், கீழ் பவானி ப்ராஜக்ட் நிறைவேற்றப்படும் நேரத்தில் அவர்களுக்கு வீட்டுவசதி செய்து கொடுத்தார்கள். இதுமாதிரி டிவிஷனல் அசிஸ்டன் என்ஜினியர்களுக்கும் வீடுகள் இல்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால் அவர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதைத் தவிர இந்த டிபார்ட்மெண்டில் இருப்பவர்கள் எல்லாம் நன்றாக வேலை செய்துவருகிறார்கள். குறை ஒன்றும் சொல்வதற்கில்லை. கனம் அமைச்சர் அவர்களும் டிபார்ட்மெண்ட் என்ஜினியர்களும் இன்னும் அதிக உற்சாகத்துடன் வேலை செய்வார்கள் என்று சொல்லிக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகிறேன்.

***Sri A. CHIDAMBARANATHA NADAR** : கனம் தலைவர் அவர்களே, நமது பொது மராமத்து அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் மான்யத்தை ஆதரித்துச் சிலவார்த்தைகள் சொல்லவிரும்புகிறேன். உண்மையாகவே ஸ்ரீமான் கக்கன் அவர்களைப்பற்றி சொன்னால் இந்த நிர்வாகத்தை நடத்துவதற்கு மிகத் திறம் பெற்றவரும், எல்லோருக்கும் பொருத்தமான முறையில் நடக்கும் ஒரு பெரிய மனிதர். இதை எதிர்க்கட்சிக்காரர்கள்கூட ஒப்புக் கொள்வார்கள் என்ற பெரும் நம்பிக்கை எனக்கு உண்டு. அவர்களுடைய தலைமையின்கீழ் நடத்திச்செல்வதற்குப் பெரும் துணைபுரிகிறது ஒரு சக்தி. அந்தச் சக்திதான் ஸ்ரீ ஈ. பி. ராயப்பா என்றால் மிகையாகாது. ஸ்ரீ ஈ. பி. ராயப்பா ஒரு மிலிடரி மேன் என்று சொல்வார்கள். அவர்களுடன் நெருங்கிப் பழகி இருந்ததால் அவரைப்பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். இவர்களிடத்தில் சென்று அந்தந்தத் தேவைகளைப் பற்றிச் சொன்னால் உடனடியாக அந்தந்த ஆபீசர்களைக் கலந்தாலோசித்து திட்டவட்டமாகக் காரியம் நடக்கும், நடக்காது என்று சொல்லிவிடுவார். இவ்வாறு நல்லமுறையில் நடத்திவரும் அந்த டிபார்ட்மெண்ட் அதிகாரியை மனமார வாயார வாழ்த்தாமல் இருக்கமுடியாது. அவர்களின்கீழ் வேலை பார்க்கும் பொதுமராமத்து சீப் என்ஜீனியர் ஆக இருந்தாலும் சரி, ஹைவேஸ் சீப் என்ஜீனியராக இருந்தாலும் சரி எல்லோருக்கும் பொருத்தமான முறையில் நடந்து கொண்டிருக்கிறார்கள். சென்னையைப் பற்றி அயல் மாநிலக்காரர்கள் இந்த அதிகாரிகளைப்பற்றிச் சொல்லும் போது இங்கு உள்ள பழைய பியூராக்கிரடிக் டைப் மாறவில்லை என்று சொல்லுவார்கள். ஆனால் இம்மாதிரி இல்லாமல் அதிகாரிகள் நல்ல

முறையில் நம்முடைய தேவைகளுக்குச் செவி சாய்த்து நல்லமுறையிலே நடவடிக்கை எடுத்துவருகிறார்கள் பணிபுரிகிறார்கள், என்று சொல்லும்போது நான் உண்மையிலே பெருமைப்படுகிறேன்.

இன்னொன்று, ஸ்ரீமான் ராமய்யா அவர்கள் தலைமை தாங்கி நடத்தி வரும் எலக்ட்ரிசிடி டிபார்ட்மெண்ட். இதை மிகவும் திறமையாக நடத்திச் செல்கிறார். எதிர்க்கட்சி அன்பர்களும் நன்றாக நடக்கிறது என்று சொன்னார்கள். அந்த முறையிலே அவர்களுடைய தலைமையில் அந்த டிபார்ட்மெண்ட் நடந்துவருகிறதென்றால் அது பாராட்டக்கூடிய விஷயம். காங்கிரஸ்காரர்கள் வேண்டும், காங்கிரஸ்காரர்கள் அல்லாதார் கூடாது என்ற மனப்பான்மை அவர்களுக்குக் கிடையாது. அதற்காக அவர்களை மிகமிகப் பாராட்டுகிறேன். நமது அமைச்சர் அவர்கள் இருக்கிறார்களே அவர்களுக்கு பெரிய குணம் உண்டு. யார் போய்ச் சொன்னாலும் இந்தக் காரியம் ஆகவேண்டுமென்று, அதற்கு அவர்கள் தடங்கல் ஒன்றும் சொல்வது கிடையாது. அவர்களுடைய சக்திக்குத் தக்கவாறு வெற்றிபெரும் அளவில் நல்ல மனப்பான்மைக் கொண்டு கவனம் செலுத்துவார்கள். ஒருகாலத்தில் நான் திரு-கொச்சியில் மந்திரியாக இருந்த அனுபவத்தினால் இவரைப் பார்க்கும்போது உண்மையாகவே மகிழ்ச்சியடைகிறேன்.

சில நண்பர்கள் கோஸ்டல் ரோட்டுகளைப்பற்றிச் சொன்னார்கள். அன்பர் ஸ்ரீ கோதண்டராமன் அவர்களும் கோஸ்டல் ரோட்டு போடவேண்டுமென்று சொன்னார்கள். உண்மையாகவே இது நாட்டுக்கு மிகவும் அவசியம். திரு-கொச்சி ராஜ்யத்தில் இருக்கும்போது 28 மைல் தூரம் ஒரு கோஸ்டல் ரோட்டு நாங்கள் போட்டோம். இந்த ரோடு வெவந்சி புரத்திலிருந்து நாடார் உவரி செல்கின்றது. அதற்கு 60 அடி வீதி என்று நினைக்கிறேன். இப்பொழுது இவர்கள் கோஸ்டல் ரோட்டுகளை அமைப்பது பற்றி நான் பெருமைப்படுகிறேன். மேலும் இங்கு உப்பாறு, நாட்டாறு, அனுமந்தநதி போகிறது. இம்மூன்று நதிகளின்மீதும் பாலங்கள் கட்டுவதற்கு ஆணை பிறப்பித்திருந்தது. அந்த நடவடிக்கை எடுத்துக் கொண்டதற்கு உண்மையிலே நான் பெருமைப்படுகிறேன். இதனால் எங்கள் மாவட்டத்தில் பெரிய வசதி உண்டு. எனக்கு இந்த டிபார்ட்மெண்டைப்பற்றிக் குறை சொல்வதற்கு ஒன்றுமே கிடையாது. என்னுடைய மாவட்டத்தில் ரயட்ஸ் ரோட்டு இருக்கிறது. அது 22 அடி தான் இருக்கிறது.

அன்றுள்ள சர்க்கார் 22 அடியில் ரோடு போட்டிருந்தாலும் இன்று ஜனநெருக்கடி அதிகமாக அதிகமாக 1951-ல் உள்ள ஜனத்தொகையை அனுசரித்து 8,50,000 பேர்கள் எங்கள் மாவட்டத்தில் இருந்தார்கள். இன்று 2 லட்சம் கூடியிருப்பதைக் கண்டு உண்மையில் நான் பெருமைப்படுகிறேன், சர்க்கார் அதை ஆதரிக்காமல் இருந்தாலும் கூட. ஆக, ஜனநெருக்கடி அதிகமாகும் போது ரோடுகள் தக்கபடி விரிவாக்கப்பட வேண்டும், அப்படி விரிவாக்கிக் கொண்டு வருகிறீர்கள் என்பதை நான் அறிவேன். எங்கள் மாவட்டத்திலுள்ள அத்தனை ரோடுகளும் விரிவாக்கப்படவேண்டும். கடைசியாக, சில ரோடுகளில் பாலங்கள் இல்லாமல் இருந்து கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட இடங்களைக் கவனித்து துரிதமாக வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு புண்ணியமான முறையில் மக்களுக்கு நல்ல ஸ்திதியில் நல்ல மனப்பன்மையோடு வேலை செய்யக் கூடிய இந்த இலாகாவைப் பெரிதும் பாராட்டி உரையை முடித்துக் கொள்கிறேன்.

*SRI V. SUBBIAH: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மான்யத்தின் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து குறிப்பாக கிராமப் பகுதிகளில் ரோடுகள் இன்றையதினம் எப்படிக் காட்சியளிக்கின்றன என்பதை விளக்க விரும்புகிறேன். இன்று, எட்டு மைல்களுக்கு மேல் உள்ள ரோடுகள் கிராமப் பஞ்சாயத்து யூனியன்களிடம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. திருநெல்வேலி ஜில்லாவை எடுத்துக் கொண்டால், அங்குள்ள கிராம ரோடுகள் அநேக ஆண்டுகளாக பராமரிப்பற்ற தன்மையில் தான் இருந்து கொண்டிருக்கின்றன. அவைகளை எடுத்துப் பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸில்களிடம் கொடுத்தால் என்ன ஏற்படுகிறதென்றால் அவர்கள் அவைகளைப் பராமரிக்க வழியற்ற நிலையில் என்ன





செய்வது என்று தெரியாமல் அப்படியே போட்டுவிட்டார்கள். எட்டு மைல் தூரம் ஒரு பஞ்சாயத்து யூனியனுக்குக் கொடுப்பதென்றால், அவர்களால் அதில் ஒன்றுமே செய்ய முடியவில்லை. பஞ்சாயத்துகளுக்குக் கொடுப்பது 2 மைல்களுக்குமேல் இருக்கக்கூடாது. அரசாங்கம் நிதி உதவியளித்தாலும் பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸில்கள் செய்வதற்குத் திறனற்ற முறையில், எந்தெந்தத் தலைப்புகளில் எதை எதைக் கொண்டு போய்ச் சேர்ப்பது என்று புரியாமல் செயல் படாமலே இருக்கிறார்கள். சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கத்தால் பல ரோடுகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. கோவில் பட்டி, ஏழாயிரம் பண்ணை ரோடு எட்டு மைல் தூரம் மெட்டலாக்கப்பட்டும், சில்லரை கல்வர்ட்டுகளும் முடிக்கப்பட்டிருக்கின்றன; கோவில் பட்டியில் இருந்து சாத்தூருக்கு 14 மைல் தூரம் செல்ல வேண்டும்; அதிலிருந்து பத்து மைல் போனால் ஏழாயிரம் பண்ணைக்கு போக முடியும். அது ராமநாதபுரம் ஜில்லாவோடு இணைக்கக் கூடியதொன்றாகும். நமது ராஜ்யத்தில் உள்ள பெரிய ரோடுகளில், இந்த ஏழாயிரம்பண்ணை ரோடு பெரிய வியாபார ஸ்தல ரோடு. சிவகாசியோடும் இணைக்கக் கூடியது கோவில்பட்டியை. இடையில் பல கிராமங்கள் இருக்கின்றன. வாழை, தென்னை, கரும்பு, புகையிலை போன்ற பணப்பொருள்கள் உற்பத்தியாகும் கிராமங்களை இணைக்கக்கூடியது. சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் இந்த ரோடு எடுக்கப்பட்டு விட்டது. அந்த ரோடை ரிப்பெயர் செய்ய பஞ்சாயத்து யூனியன் கௌன்ஸிலோ அல்லது ஜில்லா போர்டோ ஒரு வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. மண் போடும் அளவில்கூட செயலற்ற தன்மையில்தான் இருக்கிறது. ஜெ. ஈ. அவர்கள் அதைப் பார்க்கப் போகும்போது அவர்களால் ஒரு மைலுக்கு அப்புறம் போக முடியவில்லை. ஜீப் கூட போக முடியாத அளவில்தான் அங்கு ரோடுகள் இருக்கின்றன. ஆகவே, எட்டு மைல்களுக்கு மேல் உள்ளதை அரசாங்கமே ஏற்றெடுத்து நடத்தவேண்டும். கப்பல் ஓட்டிய தமிழன் பிறந்த ஓட்டப்பிடாரத்திலிருந்து கோவில்பட்டிக்கு பசுவந்தானை மார்க்கம் ஒரு ரோடு செல்கிறது. அந்த ரோடும் வேலை பூர்த்தியாகாமல் அப்படியே, மெட்டலாகாமல் நிற்கிறது. பின்னர், சிவகாசி கழுகுமலை ரோடு எவ்வளவோ ஆண்டுகளுக்கு முன்னால் ஆக்கப்பட்டது. அதில் எர்த் வொர்க் செய்ய முடியாத அளவில், நில ஆர்ஜிதம் செய்யமுடியாத அளவு பல ஆண்டுகளாகயிருந்து கொண்டிருக்கிறது. கழுகுமலை என்பது நமது ராஜ்யத்திலேயே பெரிய மாட்டுச் சந்தை உள்ள இடம். அது ஒரு புன்னிய ஸ்தலமும்கூட. அங்கு லட்சக்கணக்கான மக்கள் வருகிறார்கள். அதோடு சிவகாசியையும் இணைக்கக்கூடிய பெரிய ரோடு. அங்கு பல ஆண்டுகாலமாக எந்தவித வேலையும் செய்யப்படாமல் இருக்கிறது. இது, அமைச்சர் அவர்களுக்கும் தெரிந்திருக்கலாம். ஆனால் செயல்பட ஏனோ தயங்குகிறார்கள். திருநெல்வேலியோடு ராமநாதபுரம் ஜில்லாவை இணைக்கக் கூடிய நான்கு முக்கியமான ரோடுகள் இருக்கின்றன. அவை, பஞ்சாயத்து யூனியனிடம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த நிலை இருந்தால் வேலை ஒன்றுமே நடக்காது. அந்த ரோடுகள் இன்று எந்த நிலையில் இருக்கிறதென்றால், இன்னும் சில ஆண்டுகள் கழிந்தால் அந்தப் பகுதியில் இப்படி ஒரு ரோடு இருந்ததா என்ற நிலைதான் ஏற்படும். ஆகவே, அந்த ரோடுகளை அரசாங்கமே எடுத்துக் கொண்டால் தான் அவைகளை நன்கு பராமரித்து வைத்துக்கொள்ளமுடியும். இவைகளைவிட முக்கியத்துவம் குறைந்த ரோடுகள் எல்லாம் எடுக்கப்பட்டிருக்கின்றன அரசாங்கத்தின் கீழ் காரணம் அவைகள் நீளமாக இருப்பதால் என்று நினைக்கிறேன். நான் முக்கியமாகக் குறிப்பிட விரும்புவது, ஒரு ஜில்லாவோடு இன்னொரு ஜில்லாவை இணைக்கக்கூடிய ரோடுகளை அரசாங்கம் தன் கையில் அவசியம் எடுத்துக் கொள்ளவேண்டும். பின், பெரிய ட்ரங்க் ரோடுகளில்தான் டார், சிமெண்ட் போன்றவை எம். டி. ஆர்ல்.ல்தான் போடுகிறார்களே தவிர கிராமப் பகுதிகளை எட்டிப் பார்ப்பதேயில்லை. 3,000, 4,000 ஜனத்தொகை கொண்ட கிராமங்களை அப்பேர்ப்பட்ட கிராமங்களோடு இணைக்கும் ரோடுகளை நன்கு கவனித்துப் பராமரிக்க வேண்டும். அப்படிப்பட்ட பல ரோடுகள் இன்றையதினம் பராமரிக்கப்படாமல் இருக்கின்றன. இன்று, பல கிராமங்கள் ரோடுகள் அற்ற நிலையில்

இருக்கின்றன. சமுதாய நலத்திட்டம், இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் இவைகள் ஆன பிறகும் கூட பல கிராமங்கள் இன்று ரோடு வசதியற்று இருக்கின்றன. பல காரணங்கள் அதற்கு சொல்லப்படுகின்றன. நிலம் கொடுக்கக்கூடியவர்கள் கன்ஸெண்ட் எழுதிக் கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். இருக்கலாம். அதற்காக கிராமங்களைப் பெரிய ரோடுகளுடன் இணைக்காமல் இருந்து விடுவதா ? ஆக, இந்த ரோடு அமைக்கும் விஷயத்தில் லாண்ட் அக்விஸிஷனைத் துரிதமாகச் செய்ய வேண்டும். பின்னர், கட்டிட விஷயம். கிராமங்களுக்காக அரசாங்கத்தால் ஒதுக்கப்படுகிற தொகை எந்தளவு செலவு செய்யப்படுகிறது என்று பார்த்தால் அவை சரியாகச் செலவு செய்யப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டைக் கூற முடியும். அங்கிருக்கிறவர்கள் அதை எற்றுச் செய்யவில்லையோ என்னவோ, கிராமங்களில் கட்டிடம் கட்ட ஒதுக்கப்படுகிற தொகை பெரும்பாலும் லாப்ஸ்ஸாகி அந்தப் பகுதிகளில் கட்டிட வேலைகள் நடக்காமலேயே இருக்கின்றன. கிராமங்களில் ஆசிரியர்கள் குடியிருக்க வீடுகள், ஹரிஜன குடியிருப்பு வீடுகள் போன்ற வீடு கட்டும் திட்டங்கள் நல்ல முறையில் அமைக்கப்படவேண்டும். ஆக, கிராமங்களிலும் கட்டிடங்களை நல்லபடி அதிகப்படியான முறையில் கட்டவேண்டும். அதில், காண்ட்ராக்டர்களிடம் விடுவதைவிட நேரடியாகவே அவர்களிடம் கொஞ்சம் பணம் கொடுத்து கட்டப்பட்டு நல்லமுறையில் கட்டிங்கள் பலமாக நன்றாகயிருக்கவேண்டும். நல்லமுறையில் எல்லா வசதிகளோடும் உள்ளதாக இருக்கவேண்டும். பின்னர், வைப்பாற்றில் ஒரு பாலம் 50,000 ரூபாய் இருக்கும், எப்படி பெரிய எஸ்டிமேட் போட்டுப் பாலம் ஒன்று கட்டப்பட்டது. அதன் அடித்தளம் எவ்வளவு இருக்கவேண்டுமென்றால், 15 அடி ஆழத்திற்குக் கீழ் மண் பாறையிருப்பதாக என்ஜினியர்கள் சொல்லியிருக்கும்போது 6 அடியில் கான்க்ரீட் போட்டு, அதில் பைப்களை நிறுத்திப் பாலம் அமைத்து விட்டார்கள். அதன் நிலை என்ன என்றால் மறுநாளே மழையில், அவ்வளவு பைப்பும் அடித்துக் கொண்டு போய் விடப்பட்டு, இன்னும் அதேபோல் காட்சியளிக்கிறது. அதைப்பற்றி விசாரிக்கப்பட்டதா ? அரசாங்கம் அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ? இந்தப் பாலம் வைப்பாற்றில், திருவேங்கடத்திற்கு இரண்டாவது மைலில் இருக்கிறது. இதில் வேலை செய்யப்பட்டபிறகு பெய்த அடுத்த மழையிலேயே எல்லாவற்றையும் அடித்துக்கொண்டுபோய் விட்டது. இந்த என்சினியர்கள் எல்லாம் என்ன செய்தார்கள் என்று தெரியவில்லை அதில் வைக்கப்பட்டிருந்த பைப்புகள் போனதின் காரணம் என்ன ? என்சினியர்கள் பேரில்தான் தவறுகள் இருக்கின்றன என்றால், அவர்கள் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ? இம்மாதிரி நடந்திருப்பதை எத்தனையோ சொல்லிக் கொண்டிருக்கலாம். அதேபோன்றுதான் இந்த இலாகாவில் அதிகமான அளவில் லஞ்ச ஊழல்கள் இருந்து கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. கீழே இருந்து மேலே இருக்கின்றவர்கள் வரையிலும் இந்த விதமான லஞ்ச ஊழல்கள் அதிகமாக இருந்து கொண்டிருக்கின்றன, இதற்கு அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. வேண்டுமென்றால் பல தகவல்கள் கனம் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வராமல் இருக்கலாம். அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வந்தால் உடனே நடவடிக்கை எடுக்க முன்வருவார்கள் என்பதும் எனக்குத் தெரியும். ஆகவே இதைப்பற்றிப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் முன்னால் குறிப்பிட்ட பாலங்களைப்போல் எத்தனை பாலங்கள் கட்டியிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. என்னுடைய தொகுதியைப் பொறுத்த அளவில் திரும்பியும் எந்தவிதமான பாலமும் அமைக்கவில்லை என்று தெரிகிறது. ஆகவே இதையெல்லாம் கவனித்து வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **SRI K. S. ARDHANAREESWARA GOUNDER** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்களால் கொண்டு வந்திருக்கும் மான்யத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். குறிப்பாக நம்முடைய மாகாணத்தில் இருக்கக்கூடிய ரஸ்தாக்களைப்பற்றி





நம் ராஜ்யத்திலுள்ளவர்கள் பாராட்டுவது மட்டுமல்ல, வெளிநாடுகளில் இருக்கக்கூடியவர்களும் இந்த இலாகா செய்து வரக்கூடிய வேலைகளைப் பற்றிப் பாராட்டக்கூடிய அளவுக்கு நம்முடைய இலாகா பணியாற்றி வருகிறது என்றால் நாம் அதற்காக இந்த இலாகாவை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். குறிப்பாக இந்த இலாகாவை நிர்வகிக்கக்கூடிய இன்சினியர் அவர்கள் மிகவும் திறமைசாலியாகவும் இளம் வயதுள்ளவராகவும் இருக்கின்றார்கள், இப்பேர்ப்பட்ட ஒரு இன்சினியர் அவர்களை இந்த இலாகாவின் தலைவராகப் போட்டிருப்பது மிகவும் பாராட்டுதற்குரியது. அதே மாதிரி இந்த இலாகாவின் காரியதரிசியாக இருக்கக்கூடியவர் நல்ல முறையில் வேலை செய்யக்கூடிய அதிகாரியாக இருக்கிறார். ராணுவத்தில் வேலை செய்த அனுபவம் உடையவர். அவர்களை இந்த இலாகாவுக்குப் போட்டு வேலைகளை துரிதமாக நடப்பதற்குத் தகுந்த வழியில் நடவடிக்கை எடுத்திருப்பதற்கும் நாம் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மேலும், மத்திய சர்க்காரிலிருந்து மாநில சர்க்காருக்கு வருடா வருடம், கொடுத்துக்கொண்டிருக்கும் மான்யத்தைக் குறைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம் சென்னை ராஜ்யத்தில் ரஸ்தாக்கள் நன்றாக இருக்கின்றன என்கிற காரணத்தை வைத்துக்கொண்டு நம்முடைய மான்யத்தைக் குறைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதன் காரணமாக இப்போது இரண்டு மூன்று வருடங்களாக நம்முடைய ராஜ்யத்திலுள்ள ரோடுகளின் தரம் எல்லாம் குறைந்து கொண்டு வருகிறது அதற்கு முக்கிய காரணம் இதுதான், ஆகவே மாநில சர்க்கார் இதற்காக மத்திய சர்க்காரிலிருந்து அதிக அளவில் தொகை பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,

அடுத்ததாக, பி.டப்ளியூ.டி., ஹைவேஸ் போன்ற இலாகாக்களில் அஸிஸ்டன்ட் இன்சினியர், டிவிஷனல் இன்சினியர் போன்றவர்களை நாம் நியமித்திருக்கிறோம். இவர்களுக்கு எல்லாம் ஜீப் வசதி செய்து கொடுத்தால் தான் அவர்கள் நல்ல முறையில் வேலைகளைப் பார்க்க முடியும். நாம் வேறு எத்தனையோ டிப்பார்ட்மெண்டுகளுக்கு எல்லாம் ஜீப்-கள் கொடுத்திருக்கிறோம். அவ்விதம் எல்லாம் கொடுத்துவிட்டு அவசியமாக இருக்கின்ற இவர்களுக்கு கொடுக்கப்படாமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்க விஷயம். சென்ற மாதத்தில் அதிகமான இடங்களில் மழை பெய்ததின் காரணமாக பல ரோடுகள் சேதமடைந்திருக்கின்றன. இவைகளில் எல்லாம் இப்போது இரவு பகலாக வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. இவைகளை எல்லாம் போய் சரியான முறையில் பார்க்கவேண்டுமென்றால் இதிலுள்ள அதிகாரிகளுக்குப் போக்குவரத்து வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அனேகமாக எல்லா இடங்களிலுள்ள இந்த இலாகாவின் ஆபீஸ்கள் வாடகைக் கட்டிடங்களில் தான் இருக்கின்றன. இவ்விதம் கொடுக்கப்படுகின்ற வாடகைகளைக் குறைத்துக்கொள்ள முடியுமா என்பதைப் பற்றி நாம் ஆலோசிக்க வேண்டும். இந்த இலாகாவுக்கு என்று தனியாகக் கட்டிடம் இல்லாமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்க விஷயம். ஆங்காங்கு இந்த இலாகாவுக்கு என்று தனியாகக் கட்டிடம் கட்டிக்கொடுத்தால் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு வாடகைச் செலவும் குறையும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, இந்த இலாகாவில் வேலை செய்யக்கூடியவர்களுக்கு, ஆசிரியர்களை ஊக்குவிப்பதற்கு ஒரு திட்டம் வகுத்து, யார் நல்ல முறையில் பாடம் சொல்லிக் கொடுக்கின்றார்களோ அவர்களுக்கு வருடம் தோறும் பட்டம் கொடுக்க வேண்டும் என்று எப்படி ஒரு திட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறார்களோ, அதேபோன்று இந்த இலாகாவில் நன்றாக வேலை செய்யக்கூடியவர்களுக்கும் ஒரு திட்டம் வகுத்துக் கொடுத்தால் நன்றாக இருக்கும், இவ்விதம் அவர்களுக்கு ஓர் உதவியைச் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த இலாகாவில் ரிட்டயர் ஆகக்கூடியவர்களுக்கு, எக்ஸ்-சர்வீஸ்மென்களுக்குச் சலுகை செய்து கொடுப்பதற்காக எப்படி ப்ஸ்ரூட்டுகளைக் கொடுத்திருக்கிறோமோ அதே போன்று இந்த இலாகாவில் ஓய்வு

பெற்றிருக்கக்கூடியவர்களுக்குக் கூட்டுறவு சொஸைட்டிகள் அமைத்து,
ரஸ்தா அமைப்புகள், பாலங்களைக் கட்டுதல் போன்ற காண்டிராக்ட் வேலை
களை இவர்களுக்கே கொடுத்தால், இவர்களுக்கு உற்சாகம் அளிக்கக்கூடிய
தாய் இருக்கும் என்று சர்க்காருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியில், மேட்டூரிலிருந்து மைசூ
ருக்கு மாகேஸ்வரம் வழியாக ஒரு ரஸ்தா போட வேண்டும் என்று இந்த
சபையில் இதற்கு முன்பும் சொல்லப்பட்டிருக்கிறது. இப்போதுதான்
இத்திட்டத்தை மத்திய சர்க்காருக்கு அனுப்பியிருக்கிறார்கள் என்று கேள்விப்
படுகிறேன். இந்த ரோடு போடுவதாக இருந்தால் குறைந்தது 100 மைல்
களாவது மைசூருக்கு சேலத்திலிருந்து போவதற்குக் குறையும் என்று
சொல்லுகிறார்கள். இந்த ரஸ்தாவில் இரண்டு மைல் தூரம் மேட்டூர்
டௌன்ஷிப்பில் இருக்கின்றது. இதிலிருந்து இந்த ரோட்டைப் பாது
காப்பதைவிட இதை நேஷனல் ஹைவேஸில் எடுத்து விட்டால் ரோடு நல்ல
முறையில் பயன் அடையும் என்பதை எடுத்துக் கூறிக்கொள்கிறேன்.

அடுத்ததாக, பள்ளிப்பாளையத்தில் 13 லட்சம் ரூபாய் செலவில் ஒரு
பாலத்தை அமைத்திருக்கிறார்கள். இந்தப் பாலத்தை நல்ல முறையில்
உபயோகிக்க வேண்டுமென்றால், நல்ல முறையில் ரோடுகளை டைவர்ஷன்
கொடுத்தால் தான் பிரயோசனகரமாய் இருக்கும். இதற்கான பணம்
அனுமதிக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். உடனடியாக இதற்கான
பணத்தை ஒதுக்கிக்கொடுத்து, டைவர்ஷன் ரோடுகளை அமைத்துக்கொடுத்து
இந்தப் பாலத்தை உபயோகிப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கோயம்புத்தூரிலிருந்து, மேட்டூருக்கு ரஸ்தாவின்
தரத்தை உயர்த்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக நிதி அமைச்சர்
அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். இந்த ரஸ்தாவை மேட்டூர் வரை
யிலும் நிறுத்திவிடாது, கிருஷ்ணகிரி, தொப்பூர் வரையிலும் நீட்டித்தர
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நேஷனல் ஹைவேஸ் ரஸ்தாவில் சில இடங்களில்
போக்குவரத்துக்கு பெரிய மரங்கள் இடைஞ்சலாக இருக்கின்றன. இவைகளை
எல்லாம் எடுத்துவிட வேண்டும். இவ்விதம் மரங்களை அப்புறப்படுத்து
கின்ற நேரத்தில் பக்கத்தில் வேறு நல்ல மரங்களை ஏற்படுத்த வேண்டும்.
அப்போது தான் விபத்துக்கள் இல்லாமல் தடுக்க முடியும் என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சில ரோடுகளில் பாலங்கள் மிகவும் குறுகலாக இருக்
கின்றன. இதனால் இரவு காலத்தில் பல விபத்துக்கள் ஏற்படுகின்றன.
ஆகவே விபத்துக்களைத் தடுக்கவேண்டும் என்ற முறையில், லாரிகள் எல்
லாம் இரவு காலங்களில் போவதற்கு வசதியாக குறுகிய பாலங்களை
எல்லாம் விரிவுபடுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பவானி—மேட்டூர் ரஸ்தாவில் அகலம் குறைவாக
இருக்கின்ற ரோடுகளில் பல மரங்கள் நிற்கின்றன. இவைகள் எல்லாம்
நேஷனல் ஹைவேஸ்-ஸில் சேர்ப்பதாக இருக்கின்றன. ஆகவே இதன்
பக்கத்தில் போக்குவரத்துக்கு இடையூறாக இருக்கக்கூடிய மரங்களை எடுத்து
விட்டுப் புதிய மரங்களை வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

10-30 அதுவும் தவிர கிராமங்களில், முக்கியமாக எனது தொகுதியில்
லோகல் டெவலப்மெண்ட் ஸ்கீமில் கிட்டத் தட்ட 100 மைல் அளவுக்கு
அவர்களுக்கு எந்த விதத் தொகையையும் கொடுக்காமல் ரோடுகள் போடப்
பட்டிருக்கின்றன. அத்தகைய ரோடுகள் செப்பனிடப்படாமல் இருக்கின்
றன. சர்க்காரிலே அந்தத் திட்டத்திற்கு 10 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்ப
தாகச் சொல்லுகிறார்கள். 10 லட்சம் ரூபாய் ஒரு ஜில்லாவிற்குக் கூடப்
போதாது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஏனென்றால்
கிராம ரஸ்தாக்களைப் புதிதாக அமைத்திருக்கிறார்கள். அவைகளைச் செப்ப
னிட இன்னும் அதிகமாக துண்டு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.



**Sri V. SANKARAN** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே,
இந்த இலாகா சம்பந்தப்பட்ட வரையில் அதிகமாகக் குற்றம் குறைகள் கூற
முடியாது. வேலைகளெல்லாம் செவ்வனே செய்யப்பட்டு வருகின்றன.
இருந்தபோதிலும் சில சில குறைபாடுகள் இல்லாமல் இல்லை. அவைகளை
யும் திருத்திக்கொண்டால் பொதுவாக எல்லாம் நன்றாக அமையும் என்று
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

உதாரணமாக ரஸ்தாக்கள் சம்பந்தமாக எடுத்துக்கொண்டால், டிஸ்ட்
ரிக்ட் போர்ட் ரோடுகள் என்று சொல்லப்படும் ரோடுகளைப் பொறுத்த
வரையில், பொதுவாக டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்ஸில் மீட்டிங்கு
இந்த ஒரு குறிப்பிட்ட விஷயம் சம்பந்தமாக ஒரு ஃபார்ஸாக ஆகி விட்டது.
ரஸ்தாக்கள் சம்பந்தமாக மெம்பர்கள் இந்த ரஸ்தாவைச் செப்பனிட
வேண்டும், இந்த ரஸ்தா போடவேண்டும் என்று சொல்லும்போதும்,
சப்ஜெக்ட் கொண்டு வரும்போதும் தலைவர், 'நிதி வசதி இல்லை, நிதி வசதி
இல்லை' என்ற அதே பாட்டைத் திருப்பபிச் சொல்லவேண்டியிருக்கிறது.
மெம்பர்களுக்கே நாம் எவ்வளவு கொண்டு வந்தாலும், கூட்டத்தில்
எடுத்துச் சொல்லும்போது கண்டிப்பாக அதே பதில் தான் கிடைக்கும்
என்ற எண்ணம் ஏற்பட்டுவிட்டது. ஆகவே டிஸ்ட்ரிக்ட் போர்ட் ரோட்ஸ்
சம்பந்தமாக அதிகப் பணம் ஒதுக்கி நல்ல முறையில் வைக்க ஏற்பாடு
செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கல்லூரிகள், பள்ளிக்கூடங்கள், ஆஸ்பத்திரிகள் சம்
பந்தமாக, ஏராளமான பணச் செலவில் பல்வேறு கட்டிடங்கள் கட்டப்படு
கின்றன. முக்கியமாக மதுரை சம்பந்தப்பட்ட மட்டில் மருத்துவக் கல்லூரி,
ஹாஸ்பிடல் இவைகளுக்குப் பல லட்சக்கணக்கான ரூபாய் செலவழித்து
கட்டிடங்கள் கட்டப்பட்டு இருக்கின்றன. கட்டுவதற்கு முன்பாக அடிப்படை
வசதிகள் இருக்கின்றனவா என்று பார்க்கவேண்டும். அப்படி அடிப்படை
வசதிகளை வளரச் செய்துகொண்டு பிறபாடு கட்டிடங்களைக் கட்டினால்
நன்றாக இருக்கும். உதாரணமாக மதுரையில் மருத்துவக் கல்லூரி ஆரம்
பிக்கப்பட்டிருக்கிறது. அங்கு போதுமான தண்ணீர் வசதி கிடையாது.
மாணவர்கள் குளிப்பதற்குக் கூட ஆற்றங்கரைக்குச் செல்ல வேண்டியிருக்
கிறது. பல லட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்து அடிப்படை வசதிகள்
கூட இல்லாதது பரிதாபகரமான விஷயம். கட்டிடத்தைக் கட்டிவிட்டு
அடிப்படைத் தேவைகளைத் தேடுவதை விட கட்டிடத்தைக் கட்ட ஆரம்பிப்ப
பதற்கு முன்பாகவே அவைகளைத் தயார் செய்து கொண்டு ஆரம்பித்தால்
நலமாக இருக்கும். ஸயண்டிபிக் இன்ஸ்ட்ருமெண்ட்ஸைக் கழுவுவதற்கு
ஸா.',ப்ட் வாட்டர் இல்லாமல் இப்போது டப்பில் தண்ணீர் வைத்துக் கழுவும்
நிலைமையாக இருக்கிறது.

அதே போன்று ஹாஸ்பிடலில் ஆபரேஷன் பிளாக்கைக் கட்டி முடித்து
விட்டு ஸ்டெரிலைஸிங் பிளாக் இல்லாமல் பல மாதங்கள் காத்திருக்க
வேண்டியிருந்தது. இந்த மாதிரி சில சில குறைபாடுகளால் கால தாம
தம் ஆகிறது. பெட் .·.பெஸிலிட்டீஸ், காட் .·.பெஸிலிட்டீஸ், fans
(மின்சார விசிறிகள்) இல்லாமல் கட்டிடம் கட்டி, பல லட்சக் கணக்கில்
செலவு செய்து, ஓப்பனிங் ஸெரிமனியும் நடந்து மதுரை ஆஸ்பத்திரியில்
சில பிளாக்குகள் பல மாதங்கள் வேலை துவங்காது இருந்தன. இன்னும்
பல இடங்களில் சின்னச் சின்ன சாமான்கள் இல்லாமல் தாமதம் ஆகின்
றது. உதாரணமாக பாலம் சம்பந்தமாக எடுத்துக்கொண்டால்—இப்போது
அது நிவர்த்திக்கப்பட்டு விட்டது, ஆனால் அந்த மாதிரி திரும்ப வரக்
கூடாது—பாலம் கட்டி முடிந்து, ஆக்ஸஸ் டு தி பிரிட்ஜ், அதற்கு உள்ள
இடத்தைக் கையோடு அக்விஸிஷன் செய்யாமல், தாமதம் ஆனதில் பல
லட்சக் கணக்கில் செலவு செய்தும் பல மாதங்கள் பாலத்தை உபயோகப்
படுத்த முடியாமல் இருந்தது. இதிலே பாதைக்கான இடத்தை அக்வயர்
செய்து கைவசம் எடுத்துப் பாலம் கட்டும்போதே ரோடுகளைப் போடவேண்டும்.
காலம் விரயமானால் அந்த அளவுக்கு செலவழித்த பணத்திற்கு வட்டி
நஷ்டம் ஏற்படுகிறது. ஆகையால் இதை மனதில் வைத்துக்கொள்ள
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று சுகாதார வசதிகளை எடுத்துக்கொண்டால் முக்கியமாக நீதி மன்றங்கள் சம்பந்தப்பட்ட வரையில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அநேகமாக எல்லா மாவட்டங்களிலும், கோர்ட்டுகளில் வக்கீல்களும் கட்சிக்காரர்களும் மற்றவர்களும் ஜலமலம் போக சரியான வசதி கிடையாது. உதாரணமாக மதுரை டிஸ்ட்ரிக்ட் ஹெட் க்வார்ட்டர்ஸ் கோர்ட்டில் எந்த வித வசதியும் கிடையாது. மதுரை மாவட்ட கோர்ட்டைப் பற்றி மட்டும் சொல்லவில்லை—இந்த நிலை எங்கும் இருக்கிறது—ஆனாலும் குறிப்பாக அங்கு இருக்கிறது. ஆகவே இதை முக்கியமாகக் கவனிக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுரையில் இன்றைக்கு கிரிமினல் கோர்ட், சப்-மாஜிஸ்ட்ரேட்ஸ் கோர்ட், ஃபர்ஸ்ட் அடிஷனல் கோர்ட் எல்லாம் பழைய ஆஸ்பத்திரி கட்டிடத்தில்கொட்டகைகள் மாதிரி அமைக்கப்பட்டு இருக்கிறது. வக்கீல்கள் உட்காரக் கூட ரூம் கிடையாது. அவர்களுக்கும் பப்ளிக் ப்ராஸிக்யூட்டர் அவர்களுக்கும் எல்லோருக்கும் உட்கார இட வசதி செய்து தரவேண்டும். அடிப்படைத் தேவைகள் இல்லாமல் இருக்கின்றன. இவைகளைப் பூர்ணமாக கவனித்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதே போன்று பல வசதிகளையும் தேவைகளையும் நன்ருகப் பார்த்து செய்யப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக அரசாங்க அலுவலகங்களுக்குக் கட்டிடங்கள் கட்டத் திட்டமிடப்பட்டிருக்கிறது. அது ஒரு நல்ல அம்சம்தான். வாடகைக்கு கட்டிடங்கள் கிடைப்பதற்கு நகரங்களில் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. முக்கியமாக சேல்ஸ்-டாக்ஸ், கமர்ஷியல் டாக்ஸ் போன்ற ஆபீஸ்களினுல் நல்ல வருமானம் நமக்குக் கிடைக்கிறது. கட்சிக்காரர்கள் அந்த ஆபீஸ்களுக்குச் செல்லும்போது உட்கார இடமில்லாமல் காக்க வைத்து வெய்யிலில் நிற்க வைக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. வருமானம் கொடுக்கும் வியாபாரிகள் வரும்போது உட்கார இடமில்லாமல் இருப்பது வருந்தத்தக்கது. அவர்களுக்கு உட்கார வசதிகளை ஏற்பாடுகள் செய்து கட்டிடங்களைக் கட்ட வேண்டும். அரசாங்கத்திற்கு வருமானத்தில் கணிசமான பகுதி இவர்களிடமிருந்து சேல்ஸ்-டாக்ஸாக வருவதால் அதிகமான வசதி செய்து கொடுத்தால் நலமாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ளுகிறேன். பல மாடிக் கட்டிடங்களை அமைக்கலாம். அரசாங்கத்திற்குச் சொந்தமாக இடம் இல்லையேல் அக்வயர் செய்து கட்டிடங்களைக் கட்டலாம். இல்லாவிட்டால் பல மாடிக் கட்டிடங்களை அமைக்கலாம். கூடுமான வரையில் சொந்தக் கட்டிடங்களில் அலுவலகங்கள் அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அக்விஸிஷன் சம்பந்தமாக எடுத்துக்கொண்டால், ஸ்லம் க்ளியரன்ஸ் அக்விஸிஷனில் மதுரை போன்ற நகரங்களில் அந்த மான்யத் தொகை செலவழிக்கப்படாமல் நின்று விட்டது பல நல்ல காரியங்கள் முடியாமல் நின்று விட்டன. சீக்கிரத்தில் அக்விஸிஷன் முடிக்கப்பட்டு காரியங்கள் நடக்கும்படிப் பார்த்துக்கொள்ளவேண்டும்.

ஓவர் பிரிட்ஜ் சம்பந்தப்பட்ட மட்டில் மதுரையில் இரண்டு ஓவர் பிரிட்ஜுகள் அமைக்கவேண்டுமென்று பல காலமாகச் சொல்லிக்கொண்டிருக்கிறோம். ஒன்று திருப்பரங்குன்றம் ரோடு பவர் ஹௌஸ் சமீபத்தில். அங்கே அங்கத்தினர்களும் அமைச்சர் அவர்களும் கூட கதவு சாத்தப்பட்டு, வெகு நேரம் காத்திருக்க வேண்டிய அனுபவம் ஏற்பட்டு இருக்கிறது. மற்ற இடத்தில் கதவு இல்லாததால் லெவல் கிராஸிங்கில் டவுன் பஸ்ஸும் ரயிலும் மோதி 2–3 பேர்கள் இறந்துபோகக் கூடிய நிலைமை ஏற்பட்டது. கவர்னர் உட்பட அமைச்சர்களெல்லாரும் திருப்பரங்குன்றம் ரோடு லெவல் கிராஸிங்கில் அங்கே அவஸ்தைக்கு ஆளாகியிருக்கிருர்கள். பல காலமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். அது சம்பந்தமாக இன்னும் ஆரம்ப வேலை கூட ஆகவில்லை. அந்த ஓவர் பிரிட்ஜுகளை சீக்கிரமாகக் கட்டினுல் நன்ருக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். . . . . . . .

**DEPUTY SPEAKER** : The hon. Member's time is up.





**SRI A. GOVINDASAMI** : சட்ட மன்ற உதவித் தலைவர் அவர்களே, இந்த மான்யத்தின்மீது கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரரேரணையை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த அறிக்கையைப் படித்த போது ஒரு இடம் என்னுடைய மனதை ரொம்பவும் கவர்ந்திருக்கிறது. அந்த இடம் "நம்முடைய மாநில அமைச்சர்கள் டெல்லியிலே தங்குவதற்கு வசதியான இடமின்றி தவிக்க நேரிடுகிறது" என்பதாகும். நம்முடைய மந்திரிகளுக்கே இந்த கதி என்பதை எண்ணி நான் வருந்தாமல் இருப்பதற்கில்லை. அதற்காக 6 லட்சம் ஒதுக்கி இருப்பதை நான் வரவேற்கிறேன். இந்த 6 லட்சம் போதாது. மந்திரிகள் தவிக்க நேரிடுகின்றது என்று சொல்லும்போது, நானும் என்னுடைய நண்பர்களும் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கக்கூடிய கான்ஸ்டிடியூஷன் அவுசிலிருந்து வெளியேற்றப்பட்டது நினைவிற்கு வருகிறது. எங்களுக்கு அரை மணி நேரம்கூட அவகாசம் கொடுக்காமல், பெட்டி படுக்கைகளையெல்லாம் வெளியிலே போட்டு விரட்டியடித்ததை நினைக்கும்போது வடநாட்டுக்காரர்கள் எவ்வளவு கொடியவர்கள், இதேபோல் மந்திரிகளையும் எப்படித் தவிக்க வைத்திருப்பார்கள் என்று நான் வருந்த வேண்டியிருக்கிறது.

**THE HON. SRI P. KAKKAN** : கனம் அங்கத்தினர் அவர்கள் இந்தச் சமயத்திலே சொல்லாமல் சொல்கிருர். இப்போது இங்கே கட்டப்படுகிற விடுதி மந்திரிகள் மட்டும் தங்குவதற்காக அல்ல. இங்குள்ள சட்டசபை அங்கத்தினர்களும், அங்கே அறை காலியிருந்தால் தங்கலாம். மொத்தத்தில் சென்னையில் இருந்து போகக்கூடியவர்களுடைய நன்மைக்காகத்தான் கட்டப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**SRI A. GOVINDASAMI** : நம்முடைய மந்திரிகளுக்கு இந்த நிலைமை வந்திருக்கக் கூடாது. அவர்கள் அசோகா ஓட்டலுக்குச் சென்று தங்க முடியாது. பொருளாதார வசதி குறைவு, ஆனுல் மற்ற இடங்களில் மந்திரிகள் தங்குவதற்கு வசதி செய்து கொடுத்திருப்பதுபோல், இவர்கள் தங்குவதற்கும் இங்கே வசதி செய்து தரவேண்டும். எல்லா மாகாணங்களிலும் இந்த முறையில் கெஸ்ட் அவுஸ் கட்டியிருக்கிருர்கள். ஆனுல் அவர்கள் ஏன் கட்டவில்லை என்று தெரியவில்லை. அப்படி அவர்கள் வைத்திருந்தாலும், நமக்கு இடம் கொடுப்பதில்லை. அந்த நிலையில் தான் "எங்களுக்கு இடம் கிடைக்காமல் தவிக்க நேரிடுகிறது" என்று குறிப்பிட்டிருக்கிருர்கள். ஆகவே இந்தக் கட்டிடம் கட்டப்பட வேண்டியது மிகவும் அவசியம். அதிலே சட்டசபை உறுப்பினர்களுக்கும் வசதி செய்து தரவேண்டும். அதற்குத் தொகையை இன்னும் அதிகரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்க அலுவலகங்கள் வாடகைக் கட்டிடங்களிலே இருக்கக்கூடிய நிலைமையில் இல்லாமல், சொந்தக் கட்டிடங்கள் கட்டுவதற்காக 50 லட்சம் ரூபாய் 1960–61-க்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் இதற்குக் கூடுதலான தொகையை ஒதுக்கவேண்டும். பழைய சட்டசபைக்குப் பக்கத்தில் காலி இடம் இருக்கிறது. அங்கேயெல்லாம் 5, 6 மாடிக் கட்டிடங்கள் கட்ட இருக்கிருர்கள் என்ருலும், அங்குள்ள நிலங்களையெல்லாம் இன்னும் நல்ல முறையிலே உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு, நான் குறிப்பாக இந்த ஐந்து ரோடுகளின் விசேஷத்தைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். அதிலே கிராமசாலைகள் தான் கடைசியாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்கு முதலிடம் கொடுக்கப்பட வேண்டியது அவசியம். அதுதான் வெட்டுப் பிரரேரணையின் குறிக்கோளான கருத்து என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைய தினம் விக்ரவாண்டி லோயர் அணைக்கட்டு நெய்வேலிக்கு குறுக்கு வழியாக இருக்கின்ற காரணத்தால், இந்த வழியாக பெரிய பெரிய ராட்க்ஷச எஞ்சின்கள் அடிக்கடி அந்த வழியாகப் போய்க் கொண்டிருக்கிறது. நேற்றுக்கூட மவுண்ட் ரோடில் ஒரு ராட்க்ஷச என்ஜின் நின்று கொண்டிருந்ததைப் பார்த்தேன். இந்த என்ஜின்கள் போவதால் பல பாலங்கள் ரிப்பேர் செய்யக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. பல கட்டப்பட்ட பாலங்கள் இடிந்து கொண்டும், ஆட்டம் கொடுக்கக்கூடிய

நிலைமையிலும் இருக்கிறது. ஆகவே இந்த விக்ரவாண்டி லோயர் அணைக் கட்டிற்கு உடனடியாக ஒரு பாலம் கட்ட வேண்டியது மிகவும் அவசியமாகும். அதேபோல் விழுப்புரத்திற்கு அருகாமையிலே ஒரு பாலம் கட்டியிருக்கிறார்கள். அந்தப் பாலம் கட்டுவதற்கான நிலத்தைக் கொடுத்தவர்களுக்கு இன்னும் நஷ்ட ஈடு கொடுக்கவில்லை. அதையும் விரைவிலே கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே போல் கிராமத்திலே வெள்ளப்பாழ் ஏற்பட்டு ரோடுகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளெல்லாம் கவனிக்கப்படாமல் விடப்பட்டிருக்கின்றன. அவைகளையும் உடனடியாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு முக்கியமாக கிராமங்களுக்கும், மெயின் ரோடுகளுக்கும் இணைப்பு இருக்கவேண்டியது அவசியம். அதிலும், குறிப்பாக, கடலோரத்திலே வசிக்கின்ற மீனவர்கள் இருக்கக்கூடிய குப்பத்திற்கும், ஊர்களுக்கும் தொடர்பு இருக்கவேண்டும். அது விஷயத்திலும் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மந்திரிகளும், கவர்னரும் அடிக்கடி கிராமங்களுக்கு வரவேண்டுமென்று மக்கள் வற்புறுத்துவதற்கு முக்கியமான காரணம், அப்படி மந்திரிகள் வரும் போதுதான் கொஞ்சம் மண்ணையாவது வாரிப்போட்டு, அவர்கள் ஆடாமல் வருவதற்கு வசதி செய்யப்படுகிறது. ஆனால் அப்படிப் போடப்படுகின்ற ரோடுகள் ஒரு மழை அடித்தவுடன் இருந்த இடம் தெரியாமல் போய் விடுகிறது. மழைத் தண்ணீர் தான் அந்த இடத்தில் தங்குகிறது. இதற்கு எடுத்துக்காட்டாக, நமது அண்ணா அவர்களின் தொகுதியிலே உள்ள தண்டலம் கிராமத்திற்கு நமது முதல் மந்திரி அவர்கள் வந்திருந்தாகள். அப்போது அவருடைய வருகைக்காக 7 மைல் தூரத்திற்கு ரோடு போட்டார்கள். ஆனால் இப்போது அங்கு அந்த ரோட்டையே காணோம். இந்த நிலைமைதான் இன்றிருக்கிறது.

இன்னும் பல ரோடு வசதிகள் செய்யப்பட வேண்டும். குளித்தலை-முசிறி செல்லக்கூடிய தூரம் 50 மைல் இருக்கும். இது ஒரு வியாபார ஸ்தலமாக இருப்பதால், இதற்கிடையே ஒரு பாலம் ஒரு மைல் தூரத்திற்குப் போட்டால் வசதியாக இருக்கும் என்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதேபோல் சில ரூட்டுகளில் பஸ் போகவேண்டுமென்று சொன்னால், ரோடு சரியாக இல்லை, ஆகவே பஸ் போக முடியாது என்று சொல்லப்படுகிறது. இந்தக் காரணத்தால் பல இடங்களில் இன்றைக்கு பஸ் போக முடியாத ஒரு நிலைமை ஏற்படுகிறது. வளவனூர், பக்கமேடு ஆகிய இரண்டு ரூட்டுகள் கரும்பு செஸ்ஸிலே இருந்து சாங்ஷன் ஆகியிருக்கிறது. அதைத் துரிதப்படுத்திச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் என்னுடைய தொகுதியில் சொர்ணூர் பாலம் மிகவும் குறுகிய சிறிய பாலமாக இருக்கிறது. இதுபற்றி கனம் அமைச்சர்களுக்கும், முதல் மந்திரி அவர்களுக்கும் அவர்கள் அங்கு வரும்போது கார் போவதற்கு எவ்வளவு கஷ்டமாக இருக்கிறது என்பது தெரியும். இது பிரஞ்சுக்காரர் பங்காரு காலத்திலே போடப்பட்டதால், அதையும் இப்போது கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் பங்காரு வாய்க்காலில் ஒரு குறுகிய பாலம் கட்டுவதையும் கவனிக்க வேண்டும். நார்சிங்பேட்டை-செஞ்சிக்கு குறுக்கே பஸ் போக்குவரத்து ஏற்படுத்துவதற்கு துரிதமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதைக் குறிப்பாக, ஜில்லா போர்டு முடிவடைகிற காலத்திற்குள்ளாகவே, எல்.டீ. ஸ்கீமில் எடுத்து உடனடியாக முடிக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்வதோடு, கள்ளக்குறிச்சி மலைப் பகுதிக்கும் சாலை வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

* **SRI K. ANBAZHAGAN** : சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, நாட்டினுடைய நல்வாழ்வுக்கு மிக முக்கியமான பகுதியாக இருக்கும் பல்வேறு விதமான கடமைகளை நிறைவேற்றுவதற்குரிய இந்த மான்யத்தில், கிராமங்களை முக்கியமாகக் கவனிக்க வேண்டுமென்ற அடிப்படையிலே, போக்குவரத்து சாலைகள் பெருக வேண்டுமென்ற நோக்கத்தோடும் பல்வேறு வெட்டுத் தீர்மானங்கள் இங்கே தரப்பட்டிருக்கின்றன. இப்படி





வெட்டுத் தீர்மானம் வந்திருப்பதன் முக்கியமான நோக்கம், காரியங்கள் இன்னும் தீவிரமாக, துரிதமாக நடக்க வேண்டும் என்பதற்காகத் தானே அல்லாமல், இதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை மிக அதிகம், அதைக் குறைக்க வேண்டுமென்பதற்காக அல்ல. எனவே, இதிலே ஏதோ தவறான நோக்கத்தால் வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் கருதாமல், சொல்லப்படுகின்ற கருத்துக்களைத் தக்க முறையில் நிறைவேற்றுவதற்கு வழிகாண வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த மானியத்தில் பேசுகின்ற நேரத்தில், முக்கியமாகக் குறிப்பிட விரும்புவது ஹைவேஸ் இலாகாவிலுள்ள சூபரின்டென்டிங் என்ஜினியர் அவர்கள் எதிர்காலத்திலே கிராமங்களிலே உள்ள சிறிய நீர்ப்பாசன வேலைகளின் பொறுப்பையும் மேற்கொள்ளுவது பற்றியதாகும். அவர்கள், அத்துடன் தேசீய நீர் வழங்கு-சுகாதாரத் திட்ட வேலைகளையும், கிராம நீர் வழங்குத் திட்ட வேலைகளையும் பொறுப்பேற்று நடத்துவார் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வேலைகள் வேண்டுமானால் அவர் கவனிப்பது பயனளிப்பதாக இருக்க முடியும். ஆனால் சிறிய நீர்ப்பாசனங்களை ஹைவேஸ் இன்ஜினியரிடம் ஒப்படைப்பது, ஏற்கனவே ரெவின்யூ இலாகாவில் இருந்ததை, மறுபடியும் ஒரு புதிய இலாகாவிற்கு மாற்றி ஒப்படைப்பதற்கே சமமாகும் என்பதுதான் என்னுடைய கருத்தாகும். ஆகவே இதைப்பற்றி மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே அமைக்கப்படுகிற பெருவழிகளிலும், நெடுஞ்சாலைகளிலும் தேசியப் பெருவழி சாலைகள் மட்டுமே இன்றைய தினம் குறிப்பிடத்தக்க முறையிலே இருக்கின்றன. ஆனால் வடநாட்டிலே சில பகுதிகளில் எக்ஸ்பிரஸ் ஹைவேஸ் என்று துரிதமாக வண்டிகள் செல்லக்கூடிய வகையில் சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட எக்ஸ்பிரஸ் சாலைகளை நம்முடைய நாட்டிலேயும் அமைக்க முயற்சி எடுக்க வேண்டுமென்றும், அப்படி அமைப்பதினால் சென்னை-விழுப்புரம் இடையேயுள்ள 100 மைல்களுக்கு இந்த துரிதப் பாதையை ஏற்படுத்த முயற்சி எடுத்துக்கொள்வதோடு, சென்னை-வேலூர் இடையேயும் இந்த துரிதப் பாதையை அமைக்க முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த இரண்டு பாதைகளிலும் அதிகமாகப் போக்குவரத்து நடந்து வருவதால், மேலும் விபத்துகளின்றியும் துரிதமாகவும் செல்வதற்கு உதவுமாதலால் இந்தச் சாலைகளை எக்ஸ்பிரஸ் ஹைவேஸாக மாற்ற உடனடியாகவும், துரிதமாகவும் பணியாற்ற வேண்டும். அடுத்து சாலைகள் பழுது பார்க்கப்படுவதற்குப் போதுமான இயந்திரக் கருவிகள் கிடைக்கவில்லை, அதாவது சாலையை மட்டப்படுத்தி அழுத்தும் உருளைகள் போன்ற உயர்தர இயந்திரக் கருவிகள் கிடைக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. அப்படி 20,000 ரூபாய் விலைக்கு மேற்பட்ட இப்படிப்பட்ட இயந்திரக் கருவிகளை வாங்குவதிலும் பல சிக்கல்கள் இருக்கின்றன என்று கூறப்பட்டது. அப்படி இந்த இயந்திரங்கள் கிடைப்பதாக இருந்தாலும் தாமதமேற்படுகிறது. வட நாட்டிலே இருக்கிற ஒரு பெரிய இயந்திர உற்பத்திசாலை மட்டுமே இந்தக் கருவிகளை உற்பத்தி செய்து வினியோகிப்பதால்தான் அதிகத் தாமதமேற்படுகிறது என்றும் சொல்லப்படுகிறது. அப்படி அந்தக் கம்பெனியிடமிருந்து வருவதாக இருந்தாலும் மூன்றாண்டுக் காலம் ஆகிறது என்று சொல்லப்படுவதால் இதற்கான பணத்தைத் தனியாக ஒதுக்குமாறு கேட்டு வெளிநாட்டுச் செலாவணி பெற்று நாமே வெளிநாடுகளிலிருந்து இந்தக் கருவிகளை விரைவிலே துரிதமாகக் கொண்டுவருவதற்கு இந்த அரசாங்கம் முயற்சிக்கவேண்டும்.

மற்றொரு கருத்தையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். பொதுவாகவே போக்கு வரத்திலே அபிவிருத்தி ஏற்பட வேண்டுமானால், நம் நாட்டிலுள்ள நீண்ட கால்வாய்களில் போக்கு வரத்துக்களைப் புதுப்பிக்க இந்த இலாகாவினர் கவனம் செலுத்த வேண்டும். பக்கிங்காம் கால்வாயைத் திருத்தி அமைக்க வேண்டும். அதைப் போல் தெற்கே பாண்டிச்சேரி வரையில் போகக் கூடிய மற்றொரு கால்வாயையும் போக்கு வரத்துக்கு உபயோகப்படக் கூடிய வகையில், ஆழப்படுத்தி, பல்வேறு பண்டங்

களைக் கொண்டு செல்ல அவைகளைப் பயன்படுத்தவேண்டும். இதுவரையிலும் எதும் செய்யப்படாமலிருக்கிற காரணத்தால், இத்துறையிலே அரசியலார் கவனம் செலுத்தினால், இதனால் சென்னை நகரத்திலே கூட பல வகைகளிலே போக்கு வரத்தில் உள்ள தொல்லைகள் குறையும் என்று நம்புகிறேன்.

அதற்கடுத்து, காட் ரோடுகள் மலைப்பகுதிகளிலுள்ள பாதைகள் போடப்படுவதிலே மிகுந்த தாமதம் இருக்கிறது. எறத்தாழ, 10, 12 ஆண்டுகளுக்கு முன்பு கொடைக்கானல் பகுதியில் பூலத்தூர் பாதை போடத் தொடங்கி, நடுவிலே நிறுத்தப்பட்டு, இதுவரை அந்த வேலை நிறைவேற்றப்படாமல் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அதைப் பற்றி அரசாங்கம் கவனிக்க வேண்டும்.

டெல்லியில் கட்டப்படப்போகின்ற மாளிகை சென்னை விடுதி என்று பெயரிடப்போவதாகத் தெரிவித்தார்கள். அரசாங்கத்தினுடைய நல்ல எண்ணத்தில் தமிழ் நாடு என்ற பெயர் இடம் பெற்றிருக்குமானால், அந்த மாளிகைக்குத் தமிழ் நாடு மாளிகை அல்லது தமிழக மாளிகை என்று பெயரிட வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த அளவுடன் வேறு கருத்துக்களைச் சொல்லுவதற்கு நேரம் இல்லாததால், மற்றும் பல உறுப்பினர்கள் சொன்ன குறைகளையும் நிவர்த்திப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கூறிக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

*SRI R. KRISHNASAMI NAIDU : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களால் கோரப்பட்டிருக்கிற மானியத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்தப் பொதுப் பணித் துறைக்கு சமீப சில வருஷங்களாக அதிகமான பொறுப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் அனைவரும் அறிவோம். கடந்த முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் ஏற்கனவே அவர்களால் மேற்கொள்ளப்பட்டிருக்கிற பல பணிகளைத் தவிர, இப்பொழுது முக்கியமாக ஹைவேஸ் டிபார்ட்மெண்டு கிராம நலப் பணித் துறையையும் சேர்த்து அவர்கள் பணி புரியவேண்டுமென்ற திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் துறையினருக்கு மேலும் மேலும் அதிகப் பொறுப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவர்கள் கடந்த பல ஆண்டுகளாக நல்ல விதமாகப் பல பணிகளை நன்கு நிறைவேற்றியிருக்கிறார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. முக்கியமாக, ஹைவேஸ் டிபார்ட்மெண்டில் ஏற்கனவே இருக்கக்கூடிய வேலையோடு கூட, சிறிய நீர்ப்பாசனத் துறையையும், இன்னும் கிராமப் பணித் துறையிலே ஏற்பட்டுள்ள பல பணிகளையும் சேர்த்து இருப்பதன் காரணமாக கிராமப் பகுதிகளுக்கு இதனால் நன்மை ஏற்படும் என்று நான் கருதுகிறேன்.

முக்கியமாக இந்த சந்தர்ப்பத்தில் நான் சொல்லிக்கொள்ள வேண்டியது என்னவென்றால், முதல் ஐந்தாண்டு திட்ட காலத்திலும், இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்திலும் ஆரம்பிக்கப்பட்ட 'அதர் டிஸ்டிரிக்ட் ரோடுகள்' 'ஓ. டி. ஆர்.' என்று சொல்லக்கூடிய ரோடு வேலைகள் இன்னும் முடிவடையாமல் இருந்துகொண்டிருக்கின்றன. அந்த வேலைகளை சீக்கிரம் முடிக்கவேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். முக்கியமாக என்னுடைய தொகுதியில் ஸ்ரீவில்லிபுத்தூரில் ஓ. டி. ஆர்.—48', ஓ. டி. ஆர்-59 சம்சிகாபுரத்திலிருந்து கோபாலபுரம் வழியாக டிஸ்டிரிக் பார்டர் வரையில் இருக்கக்கூடிய ரோடு, ஆகிய மூன்று ரோடுகள் முதல் ஐந்தாண்டு திட்ட காலத்திலேயே எடுத்துக்கொள்ளப்பட்ட ரோடுகள். அவைகளில் ஓ.டி.ஆர்.-48' ரோடு வேலை முடிவடைந்துவிட்டது. மற்ற இரண்டு ரோடுகளில் மண் வேலையே இன்னும் முடிவடையாத நிலைமையில் இருந்துகொண்டிருக்கிறது. இந்த வேலைகளை மேற்கொள்ளுவதிலே அரசாங்கத்திற்கும் பெருவழித் துறை பணியாளர்களுக்கும் அதிக சிரமங்கள் இருக்கின்றன என்பதில் சந்தேகம் இல்லை. ரோடுகளுக்காக நிலம் பெறுவதிலும், சில இயந்திரங்கள் கொண்டு செல்லுவதிலும் பல கஷ்டங்கள் இருக்கின்றன இந்த வேலைகளை நிறைவேற்றும் வகையிலே, ஆனால் இந்த வேலை





களை இடையிடையே விட்டுவிட்டு செய்வதினால், அவைகள் முடிவடையாத நிலைமை ஏற்பட்டு விடுகிறது. அதன் காரணமாக அந்தப் பகுதிகளுக்கு பாட்டை வசதிகள் இல்லாமல் இருக்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. கிராமங்களில் ரோடு வேலைகள் செய்யப்படும்போது, பல பகுதிகள் மண் வேலை ஆரம்பித்து, சிறிது சிறிதாக இடையே விட்டுவிட்டு செய்வதால் பழைய பாட்டை வழியாக வண்டிகள் போவதற்கு முடியாமல் கிராமத்தார்கள் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் அதனால் ஒரு அதிருப்தியும் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த வேலைகள் நடைபெறுவதில் ஏற்படும் தாமதத்தை கொஞ்சம் மனதில் கொண்டு சீக்கிரம் அந்த வேலைகளை நிறைவேற்றவேண்டும். முதல் ஐந்தாண்டு திட்ட காலத்தில் வகுக்கப்பட்ட ரோடு வேலையை இம்மாதிரி முடிவடையவில்லை என்று நான் சொல்லுகிறேன். இதை அமைச்சர் அவர்களும், அந்த இலாகாவில் உள்ள பெரிய அதிகாரிகளும் கவனத்தில் கொண்டு இந்த வேலைகளை சீக்கிரம் முடிக்கவேண்டும்.

இந்த ரோடுகள் செல்லும் வழிகளில் மத்தியிலே ரயில்வே பாதைகள் செல்லுகின்றன. அந்தப் பாதைகளுக்கு லெவல் கிராஸிங் போடவேண்டும் என்று சொன்னால், லெவல் கிராஸிங் அமைப்பதற்கு ரயில்வே டிபார்ட்மெண்டார் தங்களுக்கு பணம் கொடுக்கவேண்டும். வருஷம் பூராவும் லெவல் கிராஸிங்கில் காத்துக்கொண்டிருக்கக்கூடிய 2 பேர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்காக வேண்டி ஆயிரக்கணக்கான ரூபாயும், அந்த லெவல் கிராஸிங் அமைப்பதற்கான செலவையும் கொடுக்கவேண்டும் என்று கேட்கிறார்கள். இது ஒரு அநீதியான கோரிக்கை என்று நான் கருதுகிறேன். தொன்று தொட்டு சென்று கொண்டிருக்கிற சாலைகளில் வழியாக ரயில்வே ரோடுகள் அமைக்கப்படவில்லையா? இந்த லெவல் கிராஸிங்கை ரயில்வே டிபார்ட்மெண்டார்தான் அமைத்துக்கொள்ள வேண்டும் என்று ஒரு நியதியை ஏற்படுத்தவேண்டும். இதில் ஒரு அநீதி இருக்கிறது என்று நான் சொல்லுகிறேன். பாதையை நாம் அமைத்துக்கொள்ளவில்லை. ஏற்கனவே அந்த வழி சென்று கொண்டிருந்த தொன்று தொட்டு இருந்த சிறிய பெரிய சாலைகளின் வழியாகத்தான் ரயில்வே பாதைகள் அமைந்திருக்கின்றன. இந்தசாலைகள் முன்னாலேயே அமைந்திருக்கின்றன. ரோடுகள் போடாததால் அது பாதை இல்லையா? மங்கம்மா சாலையின் நடுவே பல ரயில்வே ரோடுகள் செல்லுகின்றன. சிறிய சிறிய ஸ்தல ஸ்தாபனங்கள் ரோடுகளை பராமரிப்பதற்கே முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. பணம் பற்றாக்குறையாக இருக்கிறது. அப்படியிருக்கும்போது ரயில்வே டிபார்ட்மெண்டு லெவல் கிராஸ்ங் கட்டுவதற்கான செலவையும் ஸ்தல ஸ்தாபனங்களே ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கோரிக்கை விடுவது நியாயம் இல்லை. அது நியாயம் இல்லாத ஒரு கோரிக்கையாக அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய ராஜ்ய அரசாங்கம் இந்த வகையில் ஒரு நீதி பிறக்கும்படியான வகையிலே அவர்களிடத்திலே முரண்டி ஒரு நியாயத்தை நிலைநாட்ட வேண்டும். இந்தப் பொறுப்பை ரயில்வேதான் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஸ்தல ஸ்தாபனங்கள் தலையில் இந்தப் பொறுப்பை சுமத்தக்கூடாது. இந்த வகையிலே நியாயம் ஏற்படுவதற்கு நமது ராஜ்ய சர்க்கார் அதிகமாக பொறுப்பு ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

அந்த வகையிலே நான் சொன்ன ஓ. டி. ஆர்,—48', ரோடிஸ் 1949-50-ல் அமைக்கப்பட்ட ரோடில் ஒரு லெவல் கிராஸ்ங் ஏற்படாத காரணத்தினால், வண்டிகள் மழை பெய்யும் காலத்தில் அந்தப் பாதைகள் வழியே செல்ல முடியாமல் கஷ்டமாக இருக்கிறது. 2 பர்லாங் செல்ல முடியாத நிலைமை இருக்கிறது. அந்த ரோட்டில் நடமாட்டம் இல்லாமல் போய்விடுகிறது பல மாதக் கணக்கில் இதின் காரணமாக. இந்த விஷயத்திலே சீக்கிரம் நடவடிக்கை எடுக்கவேண்டும். ஓ. டி. ஆர்.—48-ல் அமைக்கப்பட இருக்கும் ஒரு பாலம் கூட அமைக்கப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்தவற்கான திட்டம் இருந்தது. இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் கூட அந்த வேலை முடிவடையும் என்று சொல்லப்பட்டது.

ஆனால் அந்த வேலை இன்னும் முடிவடையாத காரணத்தினால் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. அந்த வேலை முடியாமல் இருப்பதற்கு ஏதாவது காரணம் இருக்கலாம். அதையெல்லாம் கவனித்து தக்க ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேஜர் டிஸ்டிரிக்ட் ரோடு, ஹைவேஸ் டிபார்ட்மெண்டு எடுத்துக்கொள்ளுகிறார்கள். ஓ.டி.ஆர் ரோடுகளில் சில ரோடுகளை ஹைவேஸ் டிபார்ட்மெண்டு எடுத்துக்கொள்ளும்பொழுது பஸ் மார்க்கத்திலுள்ள ரோடுகளை முதலில் எடுத்துக்கொள்ளுகிறார்கள். மற்றபடி உள்ள ஓ.டி.ஆர். ரோடுகளை பஞ்சாயத்து யூனியன் பராமரிப்பில் வைத்துக்கொள்ளவேண்டும் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வருஷமும் அரசாங்கம் எத்தனை மைல் நீளமுள்ள ரோடுகளை ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் பிரதேசத்திலிருந்து எடுத்துக்கொள்ளவேண்டுமென்பதைப் பார்த்து எடுத்துக்கொள்ளுவோம் என்று சொல்லப்படுகிறது. முக்கியமாக அந்த வகையில் ராஜ்ய அரசாங்கம் கொஞ்சம் தாராள மனப்பான்மை காட்டவேண்டும். பஞ்சாயத்து யூனியனில் 60,000 அல்லது 70;000 ஜனத்தொகை இருக்கிறது, ஜனத்தொகை அளவில் தலைக்கு 40 நயா பைசா வீதம் ரோடுகள் பராமரிப்பதற்கு கிராண்டு கிடைக்கிறது. உத்தேசமாக ரூபாய் 25,000 அல்லது 30,000 கிடைக்கும். இந்தப் பணத்தை வைத்துக்கொண்டு எத்தனை மைல் நீளமுள்ள ரோடுகளை பராமரிப்பதற்கான சக்தி பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஏற்படுகிறது என்பதைகொஞ்சம் மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். கூடுமானவரையில் ஓ. டி. ஆர். ரோடுகளை அதிசீக்கிரம் ஹைவேஸ் டிபார்ட்மெண்டு எடுத்துக்கொள்ளும் வகையிலே நம்முடைய திட்டம் இருக்கவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்திலே பணிவோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

என்னுடைய தொகுதியில் 3 பஞ்சாயத்து யூனியன்கள் இருக்கின்றன. மூன்றுக்கும் சேர்ந்து மொத்தமாக 90 மைல் நீளம் பராமரிக்க வேண்டிய ரோடுகள் இருக்கின்றன. தலைக்கு 40 நயா பைசாவீதம் கிடைக்கக்கூடிய கிராண்டு சுமார் ரூபாய் 75,000 கிடைக்கிறது. சராசரியாக ரோடு பராமரிப்புக்கு மைல் ஒன்றுக்கு ரூபாய் 700, அல்லது 800 தான் கிடைக்கிறது. இப்படியிருக்கும்போது அவர்கள் புதிய ரோடுகளை எப்படி மேற்கொள்ள முடியும், இருக்கக்கூடிய ரோடுகளை பலப்படுத்தும் வகையிலே எவ்வாறு பஞ்சாயத்து யூனியன்கள் செயல்பட முடியும் ? ஆகையினால் இதைக் கொஞ்சம் கவனத்தில் வைத்துக்கொண்டு, ரோடு பராமரிப்பு சம்பந்தப்பட்டமட்டில் பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிகமாக பொறுப்பு ஏற்படாத வகையில் காரியங்கள் புரியவேண்டும். இன்னும் கிராம ரோடுகளை பலப்படுத்துவதற்கும் சிறிய சிறிய கிராமப் பஞ்சாயத்தை சுற்றியுள்ள இடங்களில் புதிய ரோடுகளை போடுவதற்குமான பொறுப்பை பஞ்சாயத்து யூனியன்களோ, பஞ்சாயத்துகளோ, எடுத்துக்கொள்வதிலே கஷ்டங்கள் இருந்துகொண்டிருக்கின்றன. அதி சீக்கிரம் ஓ. டி. ஆர். ரோடுகளை ஹைவேஸ் டிபார்ட்மெண்டில் எடுத்துக்கொள்ளும் வகையில் கொள்கை வகுத்து, அதற்கான பணத்தையும் ஒதுக்கவேண்டும். பஞ்சாயத்து யூனியன்களின் மீது இந்தப் பொறுப்பை சுமத்துவதில் நியாயம் இருக்காது
11 a.m. என்பதை இந்த சமயத்தில் தெரிவித்துக்கொண்டு, லெவல் கிராஸிங் விஷயத்திலும் முக்கியமாக கவனம் செலுத்தவேண்டும் என்று கூறிக்கொள்ளுகிறேன். மைல் கற்களிலே "ஸ்ரீவில்லிபுத்தூர்" என்பதை "திருவில்லிபுத்தூர்" என்று போட்டிருக்கிறது. இப்படிச் சில இடங்களிலே இருக்கிறது; எல்லா இடங்களிலும் இல்லை. இது யார் அனுமதியின் பேரில் செய்யப்பட்டது. இதில் மேல் அதிகாரிகளின் உத்தரவுப்படி செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. பொறுப்பற்ற முறையில் நேர்ந்திருக்கிறது என்று தோன்றுகிறது. சிலர் நினைத்தபடி செய்வதாக இருந்தால், இது ஒரு பெரிய நிர்வாகத்திற்கு நல்ல பொருத்தமாக இல்லை. சிற்சில இடங்களிலே, சில மைல் கற்களிலே இம்மாதிரி இருக்கிறது. இந்த வருஷம் 1961-62 வேலைகளை தொடர்ந்து செய்ய முயற்சி எடுக்கப்படும் என்று சபைக்குக் கொடுத்துள்ள அறிக்கையில் இருப்பதைக் காண சந்தோஷமாக இருக்கிறது. பலபேரும் சேர்ந்து சிபாரிசு செய்து இருந்த மகாலிங்கம் மலைக்கு ரோடு போடுவதை மனதில் கொண்டு இந்த வருஷம் போட ஏற்றுக்கொண்டிருப்பதற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.



* **Sri M. K. MARIAPPAN** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் கொண்டுவந்திருக்கும் பெருவழித் துறை மானியத்தை ஆதரித்துப் பேசுகிறேன். நாட்டின் அபிவிருத்திக்கு, மக்கள் முன்னேற்றத்திற்கு, இந்த துறையின் பணி எவ்வளவு அவசியம் எப்பதை உணர்ந்து பரவலாகப் பார்க்கும்போது அரியதொரு காரியங்களைச் செய்திருக்கிறது. அப்படி ஏற்பட்டிருக்கிறது இல்லை என்று யாராலும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது. இருந்தாலும், சிற்சில குறைபாடுகள் இருக்கின்றன. இதில் என்னுடைய தொகுதியாகிய அரூர் தாலூகா ரொம்பப் பின்தங்கிய பகுதி ஏதோ சிலர் பாவம் என்று சொல்லுகிறார்களே, அப்படி ஏதாவது இருக்குமோ என்று நினைக்கிறேன். அரூருலிருந்து தீர்தாமலை 22 மைல் இருக்கிறது. சென்ற ஆண்டுகூட நம் முதல் அமைச்சரவர்களும், மின்சார அமைச்சர் கனம் ராமையா அவர்களும்கூட அந்த ரோட்டில் பிரயாணம் செய்தார்கள்; அதன் நிலையைப் பார்த்தார்கள். சென்ற வாரத்தில் அந்தப் பிராந்தியத்தில் ஒரு உற்சவத்தின்போது கூட்டத்திற்கு நண்பர் பழனிசாமி அவர்களையும், சகோதரி பொன்னம்மாளையும் அழைத்துப்போனேன். அப்பொழுது அவர்கள் அந்த ரோடு நிலையைப் பார்த்து "இது உங்கள் தொகுதியா?" என்று கேட்டார்கள். அதைக் கேட்டு வெட்கப்பட வேண்டிய நிலைதான் இருந்தது. அந்த தீர்தாமலையில்தான் தற்போது இரும்புக் கனி இருப்பதாகவும், அதுபற்றி ஆராய்ச்சி நடப்பதாகவும் தெரிகிறது. அவசியம் அந்த ரோட்டை நல்ல நிலைக்குக் கொண்டு வரவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்.

பாபுரெட்டிப்பட்டியிலிருந்து பள்ளிப்பட்டிக்கு போகும்போது மரட்டாறு இருக்கிறது. அதற்கு ஒரு பாலம் கட்ட வேண்டுமென்று நீண்ட நாளாக, நான்கு ஆண்டுகளாக இந்த சட்ட மன்றத்திலே சொல்லி வந்திருக்கிறேன். அது மூன்றாவது திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படும் என்று சொல்லப்பட்டது; அதை இப்பொழுது அந்த திட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். பள்ளிப் பட்டியிலிருந்து தென்கரைகோடைக்கு 5 மைல்; அங்கே வாணியாறு, வறட்டாறு, ஆலப்பாரம் கோடி என்று மூன்று ஆறுகள் போகின்றன. அங்கே 15 கிராமங்கள் 5 மைல் விஸ்தீர்ணத்தில் இருக்கின்றன. அதைப்பற்றியும் சென்ற ஆண்டில், அங்குள்ள ரோடு நிலைமை, மரங்கள் நிலைமை இவை பற்றிச் சொல்லியிருக்கிறேன். ஆனால், அந்த ரோட்டுக்கு, அந்த ஆறுகளுக்குப் பாலம்பற்றி இன்னும் விமோசனம் ஏற்படவில்லை. அவற்றை மூன்றாவது திட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறேன்.

அதேபோன்று அரூர்-தர்மபுரி போகும்போது நாவலை ஏரிக்கரை இருக்கிறது. அதன் கரை மத்தியில் பஸ் போய்க்கொண்டு இருக்கும்போது அது எந்த நேரத்தில் சாய்ந்துவிடுமோ என்று மக்கள் பீதியடைகிற, நிலைமைதான் இருக்கிறது. ஆகவே, அதை அகலப்படுத்த வேண்டும். அதை இப்பொழுது சொல்லுகிறேன். இந்த மூன்றாவது திட்டத்தில் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று. இன்னும் இது போன்று கிராமமக்கள் வசதிகளில் குறைபாடுகள் இருக்கின்றன. அதோடுகூட அரூர் தாலூகா மிகவும் பிற்போக்கானது. தீர்தா மலையில் ஒரு தேவஸ்தானம் இருக்கிறது. அங்கே அடிக்கடி மக்கள் அந்த ஆலயத்திற்கும், அந்த தீர்த்தத்தில் குளிக்கவும், யாத்திரிகர்கள் போய்க்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் சௌகரியத்திற்காக ஒரு முசாபரி பங்களா, ஜனங்கள் தங்க ஒரு பங்களா கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதேபோன்று அரூர் தாலூகாவில் பாபுரெட்டிபட்டி ஒரு பெரிய கிராமம் சமுதாய நல அபிவிருத்தி திட்டங்களின் அலுவலகங்கள் இருக்கிறபடியால், அதிகாரிகளோ, அமைச்சர்களோ பிராயணகாலத்தில் தங்க இடம் இல்லை. ஆகவே அங்கும் ஒரு பங்களாவைக் கட்டவேண்டுமென்று

கேட்டுக்கொள்ளுகிறேன். அதேபோன்று ஒறனுமந்த தீர்த்தத்திலிருந்து தீர்த்தாமலைக்கு 7 மைல் தூரம்; 57 முதல் 61 வரை அங்கேதான் ஒரு பாலம் கட்டப்பட்டிருக்கிறது. அதற்கு மகிழ்ச்சி தெரிவிக்கிறேன். அந்த ரோடுக்கும், தீர்த்தாமலைக்கு போகும் ரோடுக்கும் தார் போட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சேலம்—திருப்பத்தூர் போகும் ரோட்டில் 24-வது மைலில் 3-வது பர்லாங்கில் ஒரு சிறிய ஓடை வருகிறது. அந்த ஓடைக்கு செமண்ட் பாலம் போடவேண்டுமென்று பன்முறை ஜில்லா கௌன்சில் கூட்டங்களில் சொல்லியிருக்கிறேன். அந்த வேலை மூன்றாவது திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படும் என்று சொல்லுகிறார்கள். அது சர்க்கார் மெயின்ரோடு, மெட்ராஸ் ட்ரங்க் ரோடு. அந்த ரோடுக்கு செமண்ட் போடவேண்டும் என்றால் சர்க்காரில் பணம் இல்லை என்கிறார்கள். இதை இப்பொழுது பஞ்சாயத்து யூனியனுக்கு ஒதுக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. யூனியனில் அதையெல்லாம் நிர்வகிக்கத் தகுந்த முறையிலே நிதியை ஒதுக்கினால்தான் பஞ்சாயத்து யூனியன் இவற்றையெல்லாம் பராமரிக்கமுடியும்; அதற்கு எது உண்டாகும். இல்லையானால், வெள்ளையன் எப்படி நம் நாட்டை தேசிய சர்க்காரிடம் கொடுத்து போனானோ, அதேபோல், நாமும், அவல நிலையில்தான் பஞ்சாயத்து யூனியன்களிடமும் கொடுப்பதாகும். ஆகவே அரூர் தொகுதி மக்கள் சார்பிலே, அந்த மக்களுடைய பிரதிநிதி சொல்லுவதையும் கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* **Sri K. SATTANATHA KARAYALAR**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைமீது உள்ள விவாதத்திலே பங்கு எடுக்கும்போது, ஒரு விஷயத்தை முதலிலேயே கூற அவா உறுகிறேன். பொதுவாக இதர இலாகாக்களில் போல் இல்லாமல், இந்தத் துறையில் பணியாற்றும் பலதரப்பட்ட ஆட்களும், கீழ் மட்டத்திலிருந்து, உயர்நிலை வரை எல்லோரும் ஒரு திறமையான, பொறுப்பான பணியைச் செய்கிறவர்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. பிற மாநிலங்களோடு ஒப்பிட்டுப்பார்க்கும்போது, இந்த பெருவழித் துறையில், மராமத்துத் துறையில் நம் மாநிலம் நல்ல நிலையில் முன்னேறி உள்ளது என்பது தெளிவான விஷயம்.

அகில இந்திய ரீதியில் வந்திருக்கக்கூடிய பல ரிப்போர்ட்டுகளைப் பார்க்கும்போது அதில் நம் மாநிலத்திலுள்ள பெருவழிகள் பரவலாகவும் நல்ல முறையிலும் அமைந்துள்ளது என்று பொதுவாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் மைல்களை மட்டும் பார்த்துவிட்டு நாம் பெருமிதம்கொள்வது அத்தனை நன்மை பயக்காது. இந்தத் துறையைப் பொறுத்தமட்டில் நிர்வாகத் துறை நல்லமுறையில் செயல்படினும் கொள்கை அடிப்படையில், அரசியல் ரீதியில் மேலிருந்து நிர்வகிக்கக்கூடியவர்களின், கொள்கைகளால் சில குறைகள் ஏற்படுகிறது. குறிப்பாக நாம் ரோடுகளின் தரத்தை எடுத்துக்கொண்டால் அவைகளை வெளி மாநிலங்களோடு ஒப்பிட்டுப்பார்க்கும்போது நம் ரோடுகளின் தரம் குறைவாயிருக்கிறது. பிற மாநிலங்களில் ஒரு மைலுக்கு செலவிடும் தொகையை நமது மாநிலத்தில் உள்ளதோடு ஒப்பிட்டுப்பார்த்தால் நாம் செலவிடக்கூடிய தொகை குறைவு. இருக்கக்கூடிய பணத்தை வைத்துக்கொண்டு எவ்வளவு மைல்களுக்கு ரோடுகள் அமைக்கலாம் என்ற கண்ணோட்டத்தோடு செயல்படும் செய்கை சரியல்ல, என்பது என் பணிவான கருத்து. இந்தந்த தொகுதிகளில், இவ்வளவு இவ்வளவு ரோடுகள் போட்டுவிட்டோம் என்று பிரசாரத்திற்காக அது பயன்படலாமே தவிர நல்லமுறையில் செய்யப்பட்டதா என்று பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். ரோடுகள் மராமத்து செய்வது, செப்பனிடுவது இவைகள் காலாகாலத்தில் செய்யப்படுகிறதா, அதற்காகவேண்டிய நிதிகள் ஒதுக்கப்படுகிறதா என்று பார்க்கவேண்டும். தரக்குறைவான இயந்திரங்களை வைத்துக்கொண்டு, வீட்டில் சாணகத்தைக்கொண்டு மெழுகுவது போல் டார் போடுகிறார்களே தவிர பொதுவில் தரம் குறைவாகத்தான் இருக்கிறது. "அஸ்பால்ட்காண்க்ரீடிங்" எந்த தரத்தில் வேண்டுமோ, அப்படி நம்மால்



செய்ய முடியவில்லை. அகில இந்திய ஸ்டாண்டேர்டில் இங்கு செய்யப்படுகிறதா என்று பார்த்தால் இல்லை. இது யாருடைய தறக்குறைவும் அல்ல. நாம் செலவிடும் பணத்தை வைத்துக்கொண்டு பலயிடங்களில், பலமைல்களில் ரோடு செய்ததாகக் காட்டி பிரசாரம் செய்வதற்கு இது பயன்படுமே தவிர வேறு ஒன்றுமல்ல. ஆகவேதான் சொன்னேன் கொள்கை அடிப்படையில்தான் தகராறு இருக்கிறதென்று. தேசீய பெருவழிகள் எந்த விதத்தில், எந்த ரீதியில் இருக்கவேண்டுமென்று இருக்கிறது. அப்படி நம் மாகாணத்தில் இல்லை. ஆகவே, அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது நம் மாநிலத்திலுள்ள தேசீய பெருவழிகள் அகில இந்திய ஸ்டான்டேர்டில் இருக்கிறதா அகில இந்திய ஸ்டான்டேர்டு என்ன அந்த ஸ்டான்டேர்டுக்கு தகுந்த முறையில் எவ்வளவு மைல்கள் நாம் வைத்திருக்கிறோம், அதற்கு குறைவான தரத்தில் எவ்வளவு மைல்கள் இருக்கின்றன என்று சொன்னால் நல்லது. பல ரோடுகளில் ஒரு கார் இன்னொரு காரை ஓவர்டேக் செய்து போக வேண்டுமானால் ரோடிற்கு கீழே இறங்கி போகவேண்டியிருக்கிறது. ரோடுகள் அமைக்கும்போது அஸ்பால்ட் காங்கிரீட்டிங், டார்க்ரீட்டிங் ப்ளாக் டாப்பிங் (Water Bound Makudam) என்பதெல்லாம் பெயர் அளவிற்கு செய்யப்படுகிறது தவிர ஸர்பேஸ் ட்ரெஸிங் செய்வது என்றால் "பண்டிங்" செய்வதே கிடையாது. சென்னையிலிருந்து கேரளத்திற்கு அல்லது நாகர் கோயிலுக்கு சென்றால் காட் செக்ஷனை தாண்டியவுடன் கேரள எல்லையை அடைந்தவுடன் கேரள ராஜ்யத்திலுள்ள ரோடுகளின்தரத்தின் வித்தியாசம் நன்கு தெரியும். கொல்லத்திலிருந்து ஒருவர் செங்கோட்டை வருகிறார் என்றால் செங்கோட்டை வரும்வரையில் அவர் சுகமாக தூங்கிக்கொண்டே வரலாம். ஆனால் செங்கோட்டை எல்லை வந்தவுடன் அவர் தானாகவே எழுந்து விடுவார். அதற்குள்ள காரணம் என்ன? அங்குள்ள ரோடுகள் அவ்வளவு அழகாக, நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கின்றன.

**The Hon. Sri P. KAKKAN**: அங்கு ரோடுகள் சொற்பம். இங்கு எவ்வளவு இருக்கின்றன என்று யோசித்துப் பார்க்கவேண்டும்.

**Sri K. SATTANATHA KARAYALAR**: கூடுதல் இடம் இருக்கிறது என்று சொல்லி குறைந்த தொகையை வைத்துக்கொண்டு சமாளிக்கிறீர்கள் என்றுதான் சொல்கிறேன். ஆக அதிக பணம் இதற்காக ஒதுக்க வேண்டுமென்றுதான் நான் சொல்கிறேன். மந்திரிக்கு எதிராக பைனான்ஸ் டிப்பார்ட்மெண்ட் இருக்கலாம். அமைச்சர் அவர்கள் கையில் அதிகப்படி தொகை கொடுத்தால்தான் ரோடுகளை நன்றாக வைத்துக்கொள்ள முடியும் என்றுதான் நான் சொல்லுகிறேன். நம் தேசீய பெரு வழிகள் அகில இந்திய ஸ்டாண்டர்ட்க்கு குறைந்த ஸ்டான்டேர்டில் இருக்கக்கூடாது. எக்ஸ்பிரஸ் ஹைவேஸ் பற்றி சில அங்கத்தினர்கள் கூறினார்கள். நம் மாநிலத்தில் இதுவரை அமையவில்லை. இந்த திட்ட காலத்தில் சென்னையிலிருந்து பெங்களூர், சென்னையிலிருந்து திருச்சி அல்லது விழுப்புரம் வரையாவது எக்ஸ்பிரஸ் ஹைவேஸ் அமைய வேண்டியது மிக மிக அவசியம். அதற்கு வேண்டிய எல்லாவித முயற்சிகளையும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பின், கோஸ்டல் ஹைவேஸ் போட ஏற்கனவே ஒரு திட்டம் உண்டு. அதையும் துரிதப்படுத்த வேண்டியது செய்யவேண்டும். கடற்கரை பக்கத்திலுள்ள கிராமங்களை அடுத்து உள்ளே புகுந்து போகக்கூடிய முறையில் அந்த ரோடுகள் அமைய வேண்டும். ஆனால் அவைகளை வளைத்து கொண்டு போகாமல் அமைக்க வேண்டும். மாவட்ட சாலைகள் பற்றி எனக்கு முன் பேசிய அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். பஞ்சாயத்து யூனியன் கையில் அவைகளை ஒப்படைக்கிறார்கள். பஞ்சாயத்தைப் பொறுத்தமட்டில் அவர்கள் கையில் ஏற்கனவே பணம் கிடையாது. அதிலும் அரசாங்க கொள்கைதான் காரணம். இன்றுள்ள நிலையில் நபர் ஒன்றுக்கு 50 நயா பைசா அவர்களுக்கு கொடுக்கப்படுவதால் பஞ்சாயத்து இந்த ரோடுகளை செப்பனிடவோ அல்லது பராமரிக்கவோ முடியுமா என்று நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். பலயிடங்களில் வாய்க்கால்களைத்தான் ரோடுகளாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதே நிலைதான் தொடர்ந்து இருக்கும். நமது பொறுப்பை

அவர்கள் தலையில் வேண்டுமானால் சுமத்திவிடலாம். ஆனால் அது தவறான கொள்கை. அடுத்தபடியாக, இந்தத் துறையில் வேலை பார்க்கக் கூடிய தொழிலாளர்களின் வருங்காலத்தை நாம் நிர்ணயிக்க வேண்டும். இந்தத் துறையில் வேலை பார்க்கும் தொழிலாளர்களை பஞ்சாயத்து யூனியன் கையில் ஒப்படைக்கப்போகிறோமா அல்லது அரசாங்கமே நேரிடையாக பராமரிக்கப் போகிறார்களா ? இவர்களில் நீண்ட நாட்கள் சர்வீஸ் ஆனவர்கள்கூட இன்னும் நிரந்தரம் செய்யப்படாதிருக்கிறார்கள். இதை அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டும். அவர்களை உடனடி நிரந்தரம் செய்ய வேண்டும். பின்னர், இந்த ரோடுகளில் மொத்தம் எவ்வளவு டிரான்ஸ் போர்ட் இருக்கிறது. எந்தளவு மக்கள் இந்த ரோடுகளை பயன்படுத்துகிறார்கள் என்பதைப்பற்றி திட்டவட்டமாக புள்ளிவிவரங்கள் தயார் செய்து அந்த அடிப்படையில் நாம் திட்டமிட்டு இவைகளை செப்பனிடுதவற்குள்ள வழிவகைசெய்யவேண்டும். அதில்லாவிடில் ரோடுகளில் குழி விழுந்து அவை சீர்கெட்டுப்போய்விடும். எவ்வளவு டன்னேஜ்ரோடுகளில் போக்குவரத்துஇருக்கிறது என்பதையும் கவனித்து செய்ய வேண்டும். இந்தத் துறையிலுள்ள தொழிலாளர்கள் பற்றி ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன். 1956–57-ல் நிதி நிலை அறிக்கை சமர்ப்பித்த சந்தர்ப்பத்தில் நிதியமைச்சர் அவர்கள் சில தரத் தொழிலாளர்களுக்காக, மஸ்தூர், மெக்கானிக்கல் அண்ட் டிரான்ஸ்போர்ட் வொர்க்கர்ஸ் இவர்களை நிரந்தரப்படுத்த ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று பிரசங்கத்தில் குறிப்பிட்டிருந்தார்கள். ஆனால் கழிந்த காலம் வரை இதுபற்றி ஒருவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. சமீபத்தில் ஒரு நல்ல துரிதம் இருக்கிறது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். கழிந்த ஒரு வருடத்தில் இதில் அக்கரை எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது. காங்க் கூலீஸ், மஸ்தூர்ஸ் இவர்கள் 10, 15 ஆண்டுகள் சித்தாள் வேலை செய்து வயோதிகர்களாக ஆகிக் கொண்டிருப்பவர்கள் இன்னும் நிரந்தரம் செய்யப்படாமல் இருக்கிறார்கள். சமீபத்தில் சர்வீஸ் ரோல் தயார் செய்வதில் துரிதம் இருப்பதைக் காண்கிறேன். அதை வரவேற்கிறேன். அவர்களை கூடியசீக்கிரத்தில் நிரந்தரமாக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பின்னர், இங்குள்ள லாரி ட்ரைவர்ஸ், ட்ராக்டர் ட்ரைவர்ஸ் இவர்களுக்கும், விவசாய இலாகா போன்ற இலாக்காக்களில் இருப்பவர்களுக்கும் இடையே பே கமிஷன் சிபார்சு செய்ததில் ஏதோ சம்பள வித்தியாசம் இருப்பதாகச் தெரிகிறது. அதையும் கவனித்து லாரி ட்ரைவர்ஸ், புல்டோஸர் ட்ரைவர்ஸ், ட்ராக்டர் ட்ரைவர்ஸ், இவர்களின் சம்பளத்தை தக்கபடி மாற்றியமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பின், காட் செக்ஷன், உறில் செக்ஷன் தொழிலாளர்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். அங்கு சைக்கிளில் செல்ல முடியாது. ஆகவே, அவர்களுக்கு சைக்கிள் அலவன்ஸ் கொடுக்க முடியவில்லை, ஆனால் போக்குவரத்து டீ.ஏ. யாவது கொடுக்கப்படுகிறதா என்றால் எதுவும் கொடுக்கப்படவில்லை. ஆகவே, இதையும் கவனித்து வேண்டிய ஏற்பாடுகளை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பின்னர், கட்டிடம் கட்டுவதை எடுத்துக்கொண்டால், செக்ரட்டேரியட் போன்ற காரியாலயங்களுக்கு தகுந்த இடம் இல்லை என்று கூறப்படுகிறது. எல்லாமே சென்னை நகரிலேயே கட்டவேண்டுமா ? கட்டிடங்கள் கட்டுவதைப்பற்றி ஒரு வார்த்தை சென்னை நகருக்கு ஒரு மாஸ்ட்டர் ப்ளான் தயார் செய்து, இன்டஸ்ட்ரியல் செக்டர், சர்வகலாசாலை பகுதி நிர்ணயிக்க செகரட்டேரியேட் பகுதி போன்றவை வேண்டும். அதில் உத்தியோகஸ்தர்கள் தங்கும் இடம் எங்கு அமைய வேண்டும், மெடிக்கல் செக்டர் எங்கு அமையவேண்டும். என்பதைப் பற்றி எல்லாம் நன்கு ஆராய்ந்து பார்த்து ஒரு மாஸ்ட்டர் ப்ளான் தயார் செய்து அந்த அடிப்படையில் கட்டிடங்கள் கட்டினால் நன்றாயிருக்கும். நகரத்திலிருந்து சிறிது மாறி கோஸ்டல் ஏரியாவில், மஹாபலிபுரம் போகும் பாதையையொட்டி நல்ல பகுதிகளை அக்வயர் செய்து திட்டமிட்டு கட்டிடங்கள் கட்டினால் நூறு ஆண்டுகளுக்குப் பின்னர் நமது சென்னை நகர் எப்படியிருக்க வேண்டுமென்று நாம் கருதுகிறோமோ அந்த முறையில் திட்டமிட்டு அழகாகச் செய்யமுடியும் என்று கூறிக் கொண்டு என் உரையை முடித்து கொள்கிறேன்.



* SRI T. KARIA GOUNDER : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்று இங்கு வந்துள்ள பெருவழித்துறை, பொதுத்துறை மான்யத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அந்தத் துறைக்கு பொறுப்பாக இருக்கின்ற கனம் அமைச்சர் அவர்களும் அந்த இலாகாவில் பணியாற்றுகின்ற செயலாளர் அவர்கள், இந்த இலாகாவில் இருக்கின்ற இஞ்சினியர்கள் முதல் சாதாரண உத்தியோகஸ்தர்கள் வரையில் இந்த இலாகாவில் நல்ல முறையில் பங்கெடுத்துக்கொண்டு செவ்வனே தங்களுடைய பணிகளை நடத்திக்கொண்டு வருகிறார்கள். அதற்காக நாம் நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறோம். அதோடு இதிலுள்ள சில குறைகளையும் எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

எங்கள் ஜில்லாவில், என் பகுதியில் மத்திய சர்க்கார் மான்யம் பெற்று ஏலகிரி மலையில் மலைவாசிகளுக்கு ஒரு பாதைப் போடப்படுகிறது. அந்தப் பாதைக்கு சர்க்கார் இப்போது ஒதுக்கியுள்ள பணத்தில் 3 லட்சம் ரூபாய் செலவு செய்திருப்பதாகத் தெரிகிறது. இன்னும் 13 லட்சம் ரூபாய் செலவு செய்யவேண்டியிருக்கிறது. ஆனால் இதில் மத்திய சர்க்காருடைய மான்யங்கள் கிடைப்பதற்கு சில இடையூறுகள் இருப்பதாக சொல்லப்படுகிறது. அவ்விதம் ஏதாவது இடையூறுகள் இருந்தால் அந்த இடையூறுகளை எல்லாம் விலக்கி இந்த ஆண்டிலேயே அந்த வேலையை நடத்துவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(Sri K. Sattanatha Karayalar in the Chair)

அடுத்ததாக, போளூர்—செங்கம் பாதையில் செய்யாற்றுக்குக் குறுக்கே பாலம் போடுவதற்கான ஏற்பாடுகள் எல்லாம் முடிந்து இப்போது அது சர்க்காரின் பரிசீலனைக்காக வந்திருப்பதாக தெரிகிறது. ஆகவே அதை துரிதமாக நடத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால் செங்கம் பகுதியை பொறுத்த வரை இவ்வாண்டு பெய்த பெரு மழையின் காரணமாக கிராமப்பகுதிகளுக்கு போகின்ற பாதைகள் எல்லாம் மிகவும் சீர்கெட்டு போய்விட்டன. அந்த அளவில் கிராம ரோடுகளை பராமரிப்பதில் அமைச்சர் அவர்கள் அக்கரை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். சில பஸ் ரூட்டுகளிலுள்ள பாதைகள் எல்லாம் கப்பி போடாமல் பஸ் போக்குவரத்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மழை காலத்தில் சீர்கேடு அடைந்ததின் காரணமாக பஸ் போக்குவரத்தே நடத்த முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இதற்காக மான்யம் ஏதாவது ஒதுக்கித்தர வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, செங்கத்திலிருந்து ஆலங்காயத்திற்கு இணைப்பு வேண்டும். இப்போது இந்த இணைப்பு இல்லாமல் இருப்பதின் காரணமாக 50 மைல் சுற்றி வரவேண்டியிருக்கிறது. இது இந்த இலாகாவின் கீழ் வருமா என்பதும் தெரியவில்லை. எப்படியிருந்தாலும், இதை அரிஜன இலாகாவின் கீழ் எடுத்து இதில் புதிய ரோடுகள் போடுவதற்கு அமைச்சர் அவர்கள் அக்கரை எடுத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், பாதைகள் போடுவதற்காக ஆர்ஜிதம் செய்த நிலங்களில் எல்லாம் சிலர் ஆக்கிரமணம் (ஆக்கிரமிப்பு) செய்திருப்பதை தவிர்க்க தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு கிராமப் பகுதிகளில் ரோடுகள் போடும்போது கிராம ரோடுகளை நெடுஞ்சாலைகளில் கொண்டு போய் இணைக்கும்போது அதற்கு புல்டொசர்களை உபயோகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ராணிப்பேட்டை—கிருஷ்ணகிரி ரோட்டில் தார் போடப்பட்டிருக்கிறது. இதில் பள்ளிக்கொண்டா வரையிலும் அகலமாக இருக்கிறது. அதன் பின்னால் அகலம் குறைவாக இருக்கிறது. இதன் காரணமாக போக்குவரத்து சமயத்தில் வண்டிகள் ஒன்றோடொன்று மோதிக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. முன்னால் இது சென்னை—பெங்களூர்

[Sri T. Karia Gounder] [23rd March 1961

தேசிய நெடுஞ்சாலையாக இருந்தது. இப்போது மாகாண நெடுஞ்சாலை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே இதை விஸ்தரிக்க அக்கரை எடுத்துக்கொள்ளுமாறு அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் இப்போது ஆம்பூர் சர்க்கரை மில் ஆரம்பமாகி யிருக்கிறது. இந்த மில்லுக்கு நாள் ஒன்றுக்கு 1,000 டன் கரும்பு ஏற்றிக்கொண்டு வண்டிகள் போக வேண்டியிருக்கும். ஆனால் இதற் கான பாதை மிகவும் சீர்கேடாக இருக்கிறது. ஆகவே இதையும் நல்ல முறையில் ஏற்படுத்தித் தரவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்களை எடுத்துக்கொண்டால், அதன் பகுதிகளில் ரோடுகள் போடு கின்ற விஷயத்தில், ஸ்தல அபிவிருத்திக் திட்டத்தின் கீழ், பணம் குறை வாக இருப்பதின் காரணமாக இதில் வேலைகள் நடைபெறுவதற்கு கால தாமதம் ஏற்படுகிறது. ஆகவே வருட ஆரம்பத்தில் போட வேண்டிய சிறிய சிறிய ரோடுகளையும், அதற்கான எல்லாக்காரியங்களையும் நிறை வேற்றுவதற்காக துரிதமான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதோடு, ஹைவேஸில் இருக்கக்கூடிய மரங்கள் அதிகமாக வீணாகப் போய்க்கொண்டிருக்கின்றன. 100, 200 என்று மரங்களை வெட்டிக்கொண்டும் போகிறார்கள். எங்கள் பகுதியில் இதைப் பாதுகாப்பதற்கு என்று இருக்கின்ற போலீஸ்கள், ஓவர்ஸீயர் கள் இவர்களை கூட பயமுறுத்தி மரங்களை வெட்டிக்கொண்டு போகிறார்கள். மைல் கணக்கில் இவ்விதம் ரோடுகளில் நிற்கும் மரங்களை வெட்டிக் கொண்டு போகிறார்கள். ஆகவே அதை போலீஸ் இலாகாவின் உதவியைக் கொண்டு தடுத்து நிறுத்துவதற்கு வேண்டிய உத்திரவுகளை போட வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, தக்கோலம் ரயில்வே ஸ்டேஷனுக்கும் கூவத்திற்கும் பஸ் போக்குவரத்து இருக்கவேண்டும் என்று கேட்கப்பட்டு அதற்கான பஸ் ரூட்டும் ஸாங்ஷன் செய்து நடந்து வருவதாக தெரிகிறது. வட ஆற்காடு ஜில்லாவைப் பொறுத்தவரை இந்த ரோட்டில் கப்பி போடவில்லை, தார் போடவில்லை. அதோடு இந்த ரோடு தக்கோலத்திலிருந்து சோளிங்கபுரம் வரையிலும் நீடிக்கப்பட்டு இருப்பதால் இந்த ஆண்டே இதற்கான நட வடிக்கை எடுத்துக்கொண்டு இந்தக் குறையை நிவர்த்தி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்தல அபிவிருத்தி திட்டத்தின் கீழ், இப்போது சர்க்காரின் கீழ் பராமரிக்கப்பட்டு வந்த ரோடுகளை எல்லாம் பராமரிப்பதற்காக ஹைவேஸில் கொடுக்கப்பட்டு இருக்கிறது. இதற்கான ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்பட்டு புதிய பஞ்சாயத் கௌன்சிலுக்கு விடப்போகிறோம். ஆனால் இதற்கான பணம் பஞ்சாயத்து கவுன்சிலுக்கு ஜனத்தொகையின் அடிப்படையில் ஒதுக்கப்படுவதால் பணம் போதாமல் இருக்கிறது. ஆகவே இன்னும் அதிகப்படியான தொகை இம்மாதிரிப்பட்ட பஞ்சாயத்து கவுன்சில்களுக்கு சர்க்காருடைய பணத்திலிருந்து கொடுக்கவேண்டும். கிராமப் பாதைகள் எல்லாம் செம்மையாக இருந்தால்தான் கிராமங்களிலுள்ள விளைபொருட் களை எல்லாம் நகரத்திற்கு கொண்டு போகமுடியும் என்பதை சொல்லிக் கொள்கிறேன்.

குறிப்பாக, ஏலகிரி, செங்கம் பகுதியில் 30 மைல்கள் கிராம ரஸ்தாக்கள் இருக்கின்றன. இம்மாதிரி இருக் [illegible] 30 மைல்கள் கிராம ரஸ்தாக்களை பராமரிப்பதற்கு பஞ்சாயத்து [illegible] க்கு பணம் போதாது. ஆகவே, இந்த 30 மைல் நீளமுள்ள ப [illegible] சீர்திருத்தம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* Sri M. R. KANDASAMI MUDALIYAR : கனம் தாற்காலிகத் தலைவர் அவர்களே, தாற்காலிகத் தலைவர் எனக்கும் தாற்காலிகமாக 10 நிமிஷம் என்பதை 5 நிமிஷமாகக் குறைத்து விட்டார்கள். . . . .



23rd March 1961]

Sri K. SATTANATHA KARAYALAR : இது எனது முடிவல்ல, எற்கனவேயே செய்த ஒரு முடிவு.

Sri M. R. KANDASAMI MUDALIYAR : சபைத் தலைவர் அவர்களே 11-30 a.m.
சபை முன் வந்திருக்கக்கூடிய போக்குவரத்து, குடி தண்ணீர், கட்டிடங்கள் பராமரிப்பு, யந்திர சாதனங்கள் ஆகிய இனங்கள் சம்பந்தப்பட்ட மான்யங் களை ஆதரித்து சில விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த மான்யத்தின் மீது பல விஷயங்களைச் சொல்ல முடியாத நிலையில் 10 பேருக்கு 10 நிமிஷம் கொடுத்து, பிறகு பேசக் கூடியவர்களுக்கு 5 நிமிஷம் கொடுப்பது அவ்வளவு சரியல்ல. விவாதத்திற்கான நேரத்தை அதிகப்படுத்தியாகிலும். . . . . . .

Sri A. GOVINDASAMI : ஆன் எ பாய்ண்ட் ஆஃப் ஆர்டர், ஸார், தலைவர் அவர்கள் 5 நிமிஷம் தான் என்று குறிப்பிட்ட பிறகு, தலைவர் அவர்களைக் கண்டிக்கிற முறையில் எப்படி 5 நிமிஷமாகக் குறைக்கலாம் என்று கேட்பது சரியா என்று கேட்கிறேன்.

Sri M. R. KANDASAMI MUDALIYAR : நான் சபைத் தலைவர் அவர் களை 5 நிமிஷமாகக் குறைத்து விட்டார்கள் என்று குறை சொல்ல வில்லை. இந்தச் சபை இதை கவனித்து அதிக நேரம் ஒதுக்கவேண்டும் என்றுதான் சொல்லுகிறேன்.

Sri K. SATTANATHA KARAYALAR (TEMPORARY CHAIRMAN) : கனம் அங்கத்தினர் மான்யத்தைப் பற்றிப் பேசலாம்.

Sri M. R. KANDASAMI MUDALIYAR : தலைவர் அவர்களே, மல்லூரிலிருந்து வெண்ணந்தூருக்குச் செல்வதற்கு ரோடு போடவேண்டு மென்று சொல்லியிருக்கிறேன். ஆனால் இதுவரையில் அந்த ரோடை போடவில்லை. இன்றைய தினம் கிராமங்களை அபிவிருத்தி செய்கிறோம். பெரிய ரோடுகளையெல்லாம் அமைத்துக் கொண்டு வரும் நேரத்தில் கூட கிராம ரோடுகள் இன்னும் சரிவரப் பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பது கிராமவாசி என்ற முறையில் எனக்கு மிக்க வருத்தத்தைக் கொடுக்கிறது என்று சொல்லிக்கொள்ளுகிறேன். வேறு எந்தத் திட்டத்தை நிறுத்தியாகிலும், இந்த மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆகிலும் எல்லாக் கிராமங்களுக்கும் ரோடு வசதி ஏற்படுத்திக் கொடுக்கவேண்டு மென்று அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். உலகம் தோன்றிய நாள் முதலாக விவசாயி நாட்டுக்கு முதுகெலும்பு என்று பேசுவதைத் தவிர, அவர்கள் மெயின் ரோடுக்கு போகவும் வண்டிகள் போக ரோடு வசதி இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள் என்று பார்க்கும் போது மிகவும் வருத்தப்படவேண்டிய நிலையில் இருக்கிறது.

எனது தொகுதியில் கிராம ரோடுகள் பல இடங்களில் போடப்பட வேண்டும் என்று இரண்டு மூன்று ஆண்டுகளாகச் சொல்லியும் கூட இது வரையில் ஒரு ரோடும் அபிருத்தி செய்யப்படவில்லை. அதற்கு 32 லட்சம் ரூபாய் ஜில்லாவாரியாக ஒதுக்கியிருப்பது போதாது. இன்னும் அதிகமாகச் செலவழித்து உடனடியாக அபிவிருத்தி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஆட்டையாம்பட்டியிலிருந்து மசகாளிப்பட்டிவரை செல் லும், அலகாபாத் வழியாக நடுப்புவரை செல்லும் ரோடுகள் போட வேண்டுமென்று பல தடவைகள் சொல்லியிருக்கிறேன். அதையும் போடவேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ரோடுகள் போடுவதற்காக மாகாண அரசாங்கம் ஒதுக்கியதில் 35 லட்சம் ரூபாய் மீதி இருப்பதாகத் தெரிகிறது. அப்படியிருந்தும் இப்போது சேலத்தி லிருந்து திருச்செங்கோடுக்குப் போகும் பாதை பிரிந்து மல்லூர் செல்லும் பாதையில் பாலம் கட்டவேண்டுமென்று இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத் தில் ஸாங்ஷன் ஆகியிருந்தும், எஸ்டிமேட் தயார் செய்ய என்ஜினீயர்கள்

[Sri K. R. Kandasami Mudaliyar] [23rd March 1961

இல்லாததால் நிறுத்தி வைத்திருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். இப்போதாவது சேர்த்திருக்கிறார்களா என்று பார்த்தால் அதிலே காணோம். ஏற்கெனவேயே சேர்க்கப்பட்டதால் இதில் இல்லை என்றாலும், ஏற்கனவேயே ஸாங்ஷன் செய்யப்பட்ட பாலத்தைச் செய்து கொடுக்கவேண்டும்.

வேம்படிதாளம் ரயில் பாலத்தை அகலப்படுத்தவேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். 3—4 மைலில் போவதற்கு பதில் 10—12 மைல் சுற்ற வேண்டியிருக்கிறது. அதையும் உடனடியாகச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆட்டையம்பட்டி வழியாகச் சேலம் செல்லும் வழியிலிருக்கும் ஏரிக்கரையும் பாப்பாரப்பட்டி ஏரிக்கரையும் மிகவும் குறுகலாக இருப்பதால் இப்போது இருக்கும் பஸ்கள் போவதில் பல ஆபத்துக்கள் ஏற்படுகின்றன. அதை அகலப்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ரோடுகள் போட கிராமங்களில் நிலத்தை ஆர்ஜிதம் செய்வதில் கால தாமதம் ஆகிறது. ஆர்ஜிதம் செய்வதிலே அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய பணத்தை உடனடியாகக் கொடுக்காத நிலைமை இருப்பதால் நிலத்தை விடக் கூடியவர்களும் இதை மனதில் வைத்துக்கொண்டு கொடுக்க மறுக்கிறார்கள். நில ஆர்ஜிதம் சம்பந்தமாக பிரத்யேக விதி ஏற்படுத்தி உடனடியாக ஆர்ஜிதம் செய்யவும், ஆர்ஜிதம் செய்த நிலத்திற்கு தொகையை உடனடியாகக் கொடுக்கவும் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் .

மசகாளிப்பட்டியிலிருந்து ஏலாம்பள்ளி போகும் ரோடு நல்ல முறையில் இல்லாததால் தொகுதி மக்கள் அவர்களுடைய பிரதிநிதிகளைக் கண்டிக்கும் நிலையில் இருப்பதால் உடனடியாகப் பழுது பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு குடிதண்ணீர் வசதி பல கிராமங்களில் இல்லாததால் கிராம மக்கள் பாதிக்கப்படக் கூடிய நிலையில் இருப்பதால் அந்த கிராமங்களுக்கு குடிதண்ணீர் வசதி செய்துகொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

* **SRIMATHI HEMALATHA DEVI** : தாற்காலிகத் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பாதைகள் கட்டிடங்கள் இதற்கான மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நமது இந்திய நாட்டிலே 7 லட்சம் கிராமங்கள் இருக்கின்றன. அதிலே நமது மாநிலத்தில் இருக்கும்படியான கிராமங்களெல்லாம் நகர் புறங்களாக விளங்கச்செய்ய வேண்டுமென்ற அடிப்படையில் கிராமங்களிலுள்ள மக்கள் பொருளாதாரத்திலும், கல்வியிலும், நாகரீகத்திலும் முன்னேறவேண்டும் என்ற அடிப்படையில், கிராமங்களுக்கு ரோடு வசதி ஏற்படுத்தித்தரவேண்டும் என்பது முக்கிய நோக்கம் என்ற முறையில் பொதுப் பணித் துறைப் பணியாளர்கள் தேசியப் பெருவழி மாநிலப் பெருவழி, மாவட்ட பெருவழி என்று பிரித்தும், இப்போது பஞ்சாயத்துக்கள் மூலமாகவும் பஞ்சாயத்து யூனியன் மூலமாகவும் ரோடுகள் போட வசதி செய்ய ஆவன செய்வதைப் பற்றியும் பாராட்ட கடமைபட்டுள்ளோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அதோடுகூட ஆஸ்ஃபால்டிக் கான்க்ரீட் ரோடு, சிமெண்ட் கான்க்ரீட் ரோடு 30 மைல் போட்டிருக்கிறோம். 489 மைல்களுக்குத் தார் ரோடு போட்டிருக்கிறோம் என்று சொல்லியிருக்கக் கூடிய கணக்கைப் பார்க்கும் போது, உண்மையிலே நமது மாகாணத்தில் இருக்கும்படியான எல்லா ரோடுகளும் சிமெண்ட் ரோடுகளாக ஆகவேண்டும், தார் ரோடாக ஆக வேண்டும் என்று நாம் விரும்பினாலும் ஒன்றை நினைத்துப் பார்ப்பது அவசியம். அதாவது ஒருவன் ஒன்றுமேயில்லாமல் மூன்று வேளையும் பட்டினியாக இருக்கிறான், இன்னொருவன் மூன்றுவேளையும் நல்ல முறையில் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறான், அப்படி இருக்கக் கூடியவர்களுக்குள் மூன்று



23rd March 1961] [Srimathi Hemalatha Devi]

வேளை மூக்கைப் பிடிக்க சாப்பிடக் கூடியவனுக்கு மேலும் அல்வா, பாதாம் கீர் போன்றவைகளைத் தருகிறோம் என்று சொன்னால் எப்படி இருக்குமோ அந்தமாதிரி இப்போது நல்ல ரோடுகள் இருக்குமிடத்தில் கான்கரீட் ரோடு, தார் ரோடு போடுகிறோம் என்று சொன்னால் கொஞ்சம் சிந்தனை செய்து பார்க்க வேண்டியது அவசியம். ஏனென்றால் பெருவாரியாக நம் மாகாணத்தில் கிராமங்கள் தான் இருக்கின்றன. பட்டி தொட்டிகளும், குக்கிராமங்களும் நரகங்களாக இருக்கின்றன. அந்த நரகங்களாகக் காட்சியளிக்கும் கிராமங்களில் ரோடு வசதி ஏற்பட்டு விட்டால் மின்சார வசதி ஏற்பட்டுவிடும். நமது மின்சார அமைச்சர் அவர்கள் மின்னல் வேகத்தில் மின்சாரத்தைக் கொடுக்கும் ஆற்றல் படைத்தவர். போக்கு வரத்து வசதிக்கும் உத்திரவிட்டுவிடுவார். போக்கு வரத்து வசதி ஏற்பட்டால்தான் அந்தப் பகுதி மக்கள் பொருளாதாரத்துறையில் முன்னேற்றம் அடைந்து, நகரப்புறங்களுக்கு வந்து கல்வித் துறையில் அபிவிருத்தி அடைந்து, அதேபோல நாகரீகத்திலும் நல்ல முன்னேற்றம் அடைய வழிவகை ஏற்பட முடியும். எனவே, இந்த கிராமங்களுக்கெல்லாம் ரோடு வசதிகளை ஏற்படுத்த வேண்டியது மிக மிக அவசியம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது தொகுதியைப் பொறுத்த மட்டில் நாகமரை என்று ஒரு கிராமம் இருக்கிறது. அங்கே 16 மைல் தூரம் ரோடு போட வேண்டியது அவசியம். பல ஆண்டுகளாக எடுத்துக் கூறப்பட்டு வரும் விஷயம். சேலம் ஜில்லாவில் இருக்கும் டிவிஷனல் என்ஜினீயர் அவர்கள் இந்த ரோடை ஹைவேவஸில் ஏற்று இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே ஏற்றுக்கொள்ளலாம் என்று கலெக்டருக்கு தெரிவித்திருக்கிறார். கலெக்டரும் இதை ஏற்றுக்கொண்டு, தனது பதிலில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் என்பதற்கு பதிலாக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் என்று அச்சுப் பிழை ஏற்பட்டதன் காரணமாக தெரிவித்திருப்பதால் இவ்வேலை உடனடியாக எடுத்து நடத்தப்படாமல் உள்ளது. இதைப்பற்றி டிவிஷனல் என்ஜினீயர் அவர்களும் கலெக்டருக்கு 3-வது ஐந்தாண்டுத் திட்டம் என்பதற்குப் பதிலாக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் என்று குறிப்பிட வேண்டும் என்று வற்புறுத்திக் கூறியிருக்கிறார். அப்போது இருந்த கலெக்டர் மாறுதலாகி விட்டதால் பேப்பர் அப்படியே நின்றுவிட்டது. இப்போதுள்ள கலெக்டர் அவர்களுக்கும், அமைச்சர் அவர்களிடத்திலும் விண்ணப்பங்கள் கொடுத்து நான் இதைக் குறித்து விவரங்களைச் சொல்லியிருக்கிறேன். எனவே, இதை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே சேர்த்துக்கொண்டு, ஹைவேஸ் மூலம் இந்த ரோடுகளைப் போடுவதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, தர்மபுரியிலிருந்து ஒகேனகல் வரை ரோடு உள்ளது பற்றியதாகும். இதற்கிடையே பெண்ணாகரத்திலே இந்த ரோடின் இரு புறங்களிலும் கடைகள் முன்னேறி வந்து போக்கு வரத்துக்கு குறுக்கீடாக இருக்கிறது. ஒரு பஸ் போக வேண்டுமென்று சொன்னால், அந்த தெருவிலே நடக்கக்கூடிய மக்களெல்லாம் கடைகளிலே ஏறி ஒதுங்கிக் கொள்ள வேண்டியிருக்கிறது. எனவே இந்த பெண்ணாகரத்திலும், தர்மபுரி ரோடிற்கு இடையிலேயும் ஒரு பை—பாஸ் ரோடு போடுவது மிகவும் அவசியமாக இருக்கிற காரணத்தினாலே, பெண்ணாகரம் **B.A.C.** கட்டிடத்தில் தீர்மானித்து அதை நான் சூப்பரின்டென்டிங் இன்ஜினீயர் அவர்களுக்கும் அமைச்சர் அவர்களுக்கும் தெரிவித்துள்ளேன். இதையும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக் கட்டத்திலாவது சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்

**(Deputy Speaker in the Chair.)**

அதோடு கூட, பல பெரிய பாலங்கள் கட்டப்படுவதைப் பார்க்கும் போது நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். அதேசமயத்தில் இப்படிப்பட்ட பாலம் ஒன்றைச் சேலம், தொப்பையாற்றில் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தர்மபுரி தாலூகாவில் பெரும்பாலை என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அங்கு ஒரு பெரும் பாலம் கட்டப்பட்டு ரோடும் போடப்பட்டுள்ளது. ஆனால் தொப்பையாற்றில் ஒரு பாலத்தை

அமைத்துவிட்டால், பெரும்பாலைக்குச் செல்ல வேண்டுமென்றால் வெகு தூரம் சுற்றிக்கொண்டு போக வேண்டியதில்லை. சேலத்திலிருந்து பெரும்பாலைக்கு இப்போது 77 மைல்களாகிறது. தொப்பையாற்றில் பாலத்தை அமைத்து விட்டால், 33 மைல்தான் ஆகிறது. ஆகவே 44 மைல் தூரத்தை மிச்சப்படுத்த முடியும். இதனால் அப்பகுதி மக்களுக்கு நாம் வசதியளித்ததாகும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இந்த தொப்பையாற்றுப்பாலத்தை 1961-62 ஆண்டிலேயே சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு பாலக்கோட்டில் நகர் பக்கத்திலே சின்னாற்றிற்கு (சன்னத் குமார நதிக்கு) ஒரு சிறிய பாலத்தை அமைத்துவிட்டால், ஆற்றிலே வெள்ளம் வந்துவிட்டாலும், சந்தைக்கும் மற்ற காரியங்களுக்கும் செல்லும் அப்பகுதி மக்கள் ஆற்றின் வெள்ளத்திலே அடித்துப் போகாமல் நலமுடன் வாழ சவுகரியமாக இருக்கும். எனவே இந்த சிறிய பாலத்தையும் 1961-62 ஆண்டிலேயே சேர்த்துக் கொண்டு, அதையும் கட்டிக் கொடுக்க ஆவன செய்ய வேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*Sri N. P. M. CHINNIAH KOVUNDER : மதிப்பிற்குரிய உதவி சபா நாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மான்யத்தை ஆதரித்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நமது மாகாணம் முழுவதும் இப்போது பரவலாக எல்லா கிராமங்களுக்கும் ரோடுகள் அமைக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் என்னுடைய தொகுதியிலேயும் சாதாரணமாக சிறிய கிராமங்களுக்கெல்லாம் ரோடுகள் போடப்பட்டிருக்கிறது. ஆனால் அப்படி ரோடுகள் போடப்பட்டிருக்கிறதே தவிர, சில ரோடுகள் பூர்த்தியாகாமல் இருக்கிறது. இந்த ரோடுகளுக்கு இடையிலே 2 பர்லாங் 4 பர்லாங் தூரத்திற்கு நிலச் சுவான்தார்கள் நிலத்தை விட்டுக் கொடுக்க மாட்டேன் என்று சொல்லுகிறபடியால், ஆங்காங்கு தடைப்பட்டு பல ரோடுகள் இடையிடையே சரியான முறையிலே போடப் படாமல் விடப்பட்டிருக்கின்றன என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கஷ்டமான நிலையைப் போக்க வேண்டுமானால், ஆங்காங்குள்ள டிவிஷனல் இன்ஜினீயர்களுக்கு ரோடுகள் போடுவதற்கு அத்தியாவசியமாக உள்ள நிலத்தை இப்படி ஒரு சிலர் ஆட்சேபிப்பதை அக்வயர் செய்வதற்கு அதிகாரம் வழங்கப்பட்டால் அந்த ரோடுகள் எல்லாம் இப்படி இருக்காது. இந்த அதிகாரம் அவர்களுக்கு ரொம்பவும் அத்தியாவசியமானது. அப்படியிருந்தால், அந்த நிலத்தை எடுத்து உடனடியாக ரோடுகள் போடுவதற்கு வசதியாக இருக்கும்.

பொதுவாக, மணப்பாறைக்குப் பக்கத்தில் காந்தி ரோடு என்று பொதுமக்களால் இனமாக நிலம் கொடுக்கப்பட்டு, பொதுமக்களாலேயே அந்த ரோடு போடப்பட்டது. ஆனால் சுமார் 10 ஆண்டுகளாகியும் இன்னும் அந்த ரோடு பூர்த்தியாகாமல் இருக்கிறது. கனம் அமைச்சர் அவர்கள் வந்தபோதுங்கூட அங்குள்ள ஏராளமான பேர்கள் அமைச்சர் அவர்களிடம் மகஜர்கள் கொடுத்து, இம்மாதிரியாக ரோடுவசதி இல்லாமையால் நாங்கள் மணப்பாறையைச் சுற்றிக்கொண்டு வர வேண்டியிருக்கிறது. அது ரொம்பவும் கஷ்டமாக இருக்கிறது என்று சொன்னார்கள். அந்த ரோடு அமைக்கப்பட்டால் போக்குவரத்திற்கும் மிகவும் வசதியாக இருக்கும். இப்போது அந்த 10 மைல் தூரத்திற்கும் எந்தவிதமான போக்கு வரத்து வசதியும் இல்லாமல் இருக்கிறது. ஆகவே உடனடியாக இதைச் செப்பனிடுவதற்காக 50,000 ரூபாய் செலவாகும் என்று இஞ்சினியர் அவர்களிடமிருந்து எஸ்டிமேட்டும் அனுப்பப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த பேப்பர் என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. காந்திரோடு என்று பெயர் வைத்துக் கொண்டு இப்படி அதைப் போடாமல் வைத்துக் கொண்டிருப்பது மக்களிடையே அதிருப்தியை வளர்க்கிறது ஆகவே இப்படி 10, 12 ஆண்டுகளாக போடாமல் இருக்கும் ரோடை உடனடியாகப் போடுவதற்கு ஏற்பாடு செய்தால், அங்குள்ள மக்களிடையேயும் ஒரு உற்சாகமும், ஒத்துழைப்பும் ஏற்படும். ஆகவே இதைச் சர்க்கார் உடனடியாக எடுத்துக்கொண்டு போடவேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்ததாக, புத்தாநத்தம் பக்கத்தில் திண்டுக்கல்லுக்குப் போகும் ஒரு ரோடு இருக்கிறது. இது மங்கம்மாள் காலத்தில் போடப்பட்ட ரோடு. நீண்டகாலமாக மராமத்து செய்யப்படாத நிலையில் இருக்கிறது. அதையும் போடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல் துவரங்குறிச்சியில் ஒரு ரோடு இருக்கிறது. இதுவும் பழைய காலத்து ரோடு. இன்னும் சரியாகப் போடப்படவில்லை. அதேமாதிரி இழுப்பூர், ஊனையூர் போன்ற இடங்களிலும் நிலத்தை வைத்துக்கொண்டு, அந்த நிலத்தை விட்டுக்கொடுக்க மாட்டோம் என்று சொல்வதை ஒரு பெருங் குறையாக இருந்து வருகிறது. இழுப்பூரில் ஒரு உயர் நிலைப் பள்ளி இருக்கிறது. அந்தப் பள்ளிக்கு வரும் பையன்கள் எல்லாம் 5,6, மைல் சுற்று வட்டாரத்திலிருந்து சைக்கிளில் வரவேண்டியிருக்கிறது. ஆனால் ரோடு சரியாக இல்லாத காரணத்தினால் அவர்களால் அப்படி வர முடியவில்லை. இன்ஜினீயர்களைக் கேட்டால் எழுதி இருக்கிறோம் என்று சொல்கிறார்கள். அவர்கள் அப்படி எழுதியிருந்தாலும், அவருக்கு உள்ளபடியே நல்லெண்ணம் இருந்தாலும் கூட, இந்த அதிகாரிகளால் இதையெல்லாம் செய்ய முடியாத நிலையில்தான் இருக்கிறார்கள். புத்தாநத்தம்-மெய்யம்பட்டி ஆகிய ரோடுகளுக்கு ஜில்லா போர்டில் பணம் கொடுத்திருக்கிறார்கள். அப்படி கொடுத்திருந்தும் இன்னும் அந்த ரோடு போட்டுப் பூர்த்தி அடையவில்லை. அதனால் அங்கே வண்டிகள் கொண்டு போக முடியாத நிலைமை ஏற்பட்டு, தலையிலே மூட்டையை தூக்கிக் கொண்டு போகக்கூடிய நிலைமைதான் ஏற்படுகிறது. இதைத்தவிர, இன்றைக்கு ரோடுகள், ஆங்காங்கே அமைந்திருந்தாலும் கூட, அமைக்கப்பட்டுள்ள ரோடுகள் சரியாக இல்லை. எல். டி. ஓர்க்கில் போடப்பட்ட அத்தனை ரோடுகளும் இன்றைக்கு வீணாகத்தான் கிடக்கிறது. அவைகள் அத்தனையும் " தாயில்லாப் பிள்ளைகள் மாதிரி " தான் இன்று காட்சியளிக்கிறது. 20,000 ரூபாய் செலவு செய்து போடப்பட்ட ரோடுகள் எல்லாம் கூட, இன்றைக்கு மழையினால் அறுத்துக்கொண்டு பாழடைந்த நிலையில்தான் இருக்கிறது. இந்த மாதிரி இருக்கும் ரோடுகளை மேலும் சரி செய்வதற்கு ஏற்பாடு செய்யாமல், இன்னும் புதிய ரோடுகளைப் போடுவதற்கு ஏற்பாடுகள் செய்கிறார்கள். ஆகவே, முதலில் பழைய ரோடுகளை செப்பனிடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

துவரங்குறிச்சியில் ஒரு முசாபரி பங்களா இருக்கிறது. அந்த பங்களா மருங்காபுரி ஜமீனுக்குச் சொந்தமானது. அந்த பங்களாவில் அதிகாரிகள் வந்து தங்குவது வழக்கம். ஆனால் அவர்களுக்கு அதிலே தங்குவதற்கு வசதி குறைவாக இருக்கிறது. ஆனால் அந்த பங்களா இன்னும் அவர்களுக்கே சொந்தமாக இருக்கிறது. அதைப் பணம் கொடுத்து சர்க்கார், வாங்கி, ஒழுங்கு செய்தால் அதிகாரிகள் வந்து தங்குவதற்கு வசதியாக இருக்கும்.

இதைத் தவிர மணப்பாறையில் குடி தண்ணீர் வசதி மிகவும் குறைவு. இருக்கக்கூடிய கிணறுகளில் இருக்கக்கூடிய தண்ணீர் அவ்வளவும் ஒரே உப்புத் தண்ணீர். ஒரே ஒரு கிணறுதான் நல்ல தண்ணீர் கிணறு என்றிருக்கிறது. அந்தத் தண்ணீர் கூட ஈய சத்துள்ள தண்ணீர் என்று சொல்லப்படுகிறது. ஆகவே அங்கிருந்து 10, 20 மைல் தூரத்திலுள்ள காவேரியிலிருந்து இங்குள்ள மக்களுக்கு ஒரு குடி தண்ணீர் திட்டத்தை ஏற்படுத்தி வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏற்கெனவே இத்திட்டத்தைக் கொண்டுவருவதற்கு பல தடவைகள் முயற்சி செய்யப்பட்டு வந்திருக்கிறது. அந்தத் திட்டத்தை இதுவரையிலே ஏன் நிறைவேற்றவில்லை என்று தெரியவில்லை. அங்கு வாரத்திற்கு இரு முறை பெரிய சந்தை கூடுகிறது. அதற்குப் பக்கத்திலுள்ள கிராமங்களிலிருந்து எல்லாம் ஏராளமாக மக்கள் வருகிறார்கள். அவர்கள் எல்லாம் குடிப்பதற்கு குடி தண்ணீர் வசதி கிடையாது. அவர்கள் வரும்போதே உடன் தண்ணீரையும் கொண்டு வரக்கூடிய ஒரு நிலைமைதான் இருக்கிறது. இங்கு இருப்பது அவ்வளவும் உப்புத் தண்ணீராக இருப்பதால், இங்கிருந்து 10,15 மைல் தொலைவிலுள்ள காவேரி தண்ணீரை இங்கு கொண்டு வருவதற்கும், அதோடு நெடு நாட்களாக விடப்பட்டிருக்கும் காந்தி

ரோடை உடனடியாக நிறைவேற்றி வைப்பதற்கும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

SRI K. VINAYAKAM : Deputy Speaker, Sir, hon. Member after hon. Member was speaking in Tamil. So, by way of relief and change, I shall venture to speak in English.

Sir, I rise to support the Demands moved by the Hon. Minister. The barest luxury or the minimum requirement which a villager wants is that he should have a road connecting his village with the neighbouring village. That must be the aim of any Welfare Government also before they can venture to give him all the necessaries or luxuries of his life. Judged from this point of view, our Highways have done the greatest possible good to the largest number of our people in our State. Our Highways compare very well with the rest of the Highways in the country. I have had many occasions during my political sojourns in the north when I had the opportunity of travelling by road. Sir, once after attending a Congress Session at Nagpur, I wanted to visit Wardha, the political capital of the Congress where Gandhiji lived and I found out many variations which were of utilitarin value to our country. The road leading from Nagpur to Wardha—a distance of 60 miles—is a narrow one with a width of only about 8 feet of tarred road. I am mentioning this road so that the House can compare it with the roads on our State. If only the main road leading from Nagpur to Wardha and that too connecting a place where our National Leader was living could be so small with a width only 8 feet of tarred road, we can very well be proud of the of the achievements which we have made. We should not be complacent about it. We do not rest a while and think we have done a good job. We have still to work hard and try to tar as many roads as possible. Even in the interior of our country we have huge busses plying in the main roads. If another vehicle has got to overtake it, that has got to take the muddy portion of the road which raises a huge cloud of dust, which swamps over the neighbouring houses and villages and impair the public health of the locality. So our aim is to tar as many highways, major roads, and if possible, even road connecting small villages.

I am particularly grateful for the Government for the good work they have done in an area which has come to our State recently from the 1st April 1960. I mean undoubtedly Tiruttani taluk. We find within a few months of our Government taking over that area, wonderful work had been carried out there. Large tracts of villages were left uncared for. That was the position under the Andhra Pradesh Government and after our struggle was carried on for ten years we have now found that Madras Government has set apart large amounts of money and quick work had been turned out even in small villages in Tiruttani taluk. But still work has got to be carried on in that area. There are many rivers which have no bridges of any kind. I mean the river



Pallipet and Tiruvalangadu. They are unfordable rivers, during rainy seasons. Buses get stuck up. Lorries could not negotiate the river much less to speak of human beings. I would suggest to Government to take up the question of constructing causeways in Tiruvalangadu as well as Pallipet river. The roads have got to be attended to. It has been a stigma. It is easily believed by our illiterate folk that we lay the roads but we do not carry out the repairs or that we leave it to nature to cause havoc if there is a gale or cyclone. That has been the practice in our country. So I suggest to the department concerned that they should be vigilant and keep a watch over the roads they lay so that the roads may not fall into disrepair and wither away in the end. The question of constructing bridges naturally costs more money to the exchequer. But that hould not deter us from launching upon quick schemes of constructing these bridges wherever they are necessary.

In the City of Madras, the roads are not under the control of the Public Works Department. But roads outside the city limits and which start in the Madras City and emerges outside city—that portion is very well laid down and it is a credit to the Public Works Department. But that portion within the city is awful. After long deliberation between the Corporation of Madras and the Madras Government, some of the roads have been taken directly by the Government Public Works Department and they are laying the roads very well. I wonder to think why Government should think of taking over only the two roads, viz., Poonamallee Road and Mount Road. What is the mania attached to these two roads? There are also other main roads which feed the population coming into the city like the Arcot Road at Kodambakkam. That road has been very well laid down in the exterior portion outside the city limits. But inside the city limits, it is a tragedy for anybody to travel on that road. Similar is the condition obtaining in the Great Northern Trunk Road which connects Calcutta and Nellore. That has to be immediately attended to as well as the road leading to Mahabalipuram (via) Lattice Bridge. I wish the Government pays more attention to these roads, rather than leaving them uncared for at the initial stages.

SRI K. S. G. HAJA SHERIFF : Deputy Speaker Sir, I rise to speak in support of the demmand moved by the Hon Minister for Public Works Department. He has listed in his speech the various achievements, his department has made in the rapid construuction of the highways and he has also stated the various construction of the department has made during the year 1960-61. All these are very gratifying to note : I can also say that development of roads has progressed very much in our State which had enabled the growth of trade and commerce and industry. I must say, Sir, at the same time that the non-building of bridges in the Madras City is causing the trade and public very grate inconvenience. I mean the three bridges, viz., (1) at the High Court level-crossing,

[Sri K. S. G. Haja Sheriff] [23rd March 1961

(ii) Kodambakkam level-crossing and (iii) Washermanpet level-crossing. These are three vital bridge to be constructed. They have not been constructed so far. I have pleaded on the floor of this Assembly and also in the Board of Communications Meeting that these are vial places and that bridges should be constructed there so that the public may not be inconvenienced. But I do not know the circumstances under which they have not been taken up. I would again plead on this floor that with the construction of these bridges the Government can eliminate many obstacles not only to the public but also ease the free flow of trade. The non-construction of the bridges is causing great heardship to the public and trade at present.

Another important aspect I would like to touch upon is the maintenance of the roads, particularly in the city. Last year when I spoke on this subject, the Corporation people immediately took action why we should have criticised about the roads in the city. Fortunately after the rains the roads have proved how badly they were kept and how badly they were costructed. I would suggest that the main roads at least should be taken over by Government for the purpose of maintenance because in a metropolitan city it is very essential that we keep a very good show and particularly at a time when we are industrially forgoing ahead. It is very essential when high packages and machineries have to be moved from the port of import to various places, the main roads will be under constant pressure for damages and strain. Hence it is essential that Government take over these roads and maintain them properly.

I would suggest connecting of every village with the main road. It has been done very well. I do not think it has been done so well in other parts of the country. I must pay a compliment to our Highways people that nowhere in India have the roads been developed so well. I have travelled widely in Northern and other parts of India. I must compliment the Government that they have done very well. But still there are many villages where the tracks are very bad even for the bullock carts to go. I would appeal to the Hon. Minister to see that they are also connected with the Highways so that there might be free flow of traffic and more flow of trade particularly at a time when the railways are not in a position to cater to the needs of the public. Thank you, Sir.

* SRI M. P. SUBRAMANIAM: கனம் சட்ட [illegible] தலைவர் அவர்களே, இந்த மான்யத்தின் மீது இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 1,233 மைல்கள் புதிய சாலைகள் போடப்பட்டிருப்பதாக இந்தக் குறிப்பில் கொடுத் திருக்கிறார்கள். இந்தப்பாதைகள் சமுதாய நலத் திட்டம், எல்.டி. ஒர்க்ஸ், முதலிய திட்டங்களின் கீழ் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் கிராமப் புறங்களில் போட்ட பாதைகளை இன்று பார்க்க முடியவில்லை. காரணம், இந்தப் பாதைகள் பத்தாண்டுகளுக்கு முன்பாகப் போட்டவைகள் இவற்றை நிர்வகிக்க ஒரு ஸ்தாபனம் இல்லை என்ற காரணத்தால், அவை

12 noon.



23rd March 1961] [Sri M. P. Subramaniam]

பராமரிக்கப்படவில்லை. பாதைகள் போட்ட பிறகு, ஜில்லாபோர்ட் இடம் அவற்றை ஒப்படைக்க வேண்டும் என்று சொல்லியும்கூட, அவகளிடம் அதற்கு வேண்டிய நிதி இல்லாததால், பல பாதைகள் ஒப்படைக்கப் படவில்லை. இன்றைக்குப் பஞ்சாயத்து யூனியனிடம் கொடுப்பது என்றாலும், 20, 30 மைலுக்கு ஒரு ப்ளாக்கிலிருந்து இன்னொரு ப்ளாக்குக் போகும், இண்டர்-ப்ளாக் ரோடுகளைத்தான் அவர்கள் கவனிப்பார்கள். மற்ற கிராமப் பாதைகளை எடுக்க முடியவில்லை. அவர்களின் நிதி நிலையும் சரியாக இல்லை. நிதிக்காக வரி போடும் உரிமை இருந்தாலும், 10, 20 மைலுக்கு மேல் எடுக்கக் கூடிய வசதி யூனியன்களுக்கு இல்லை. ஆகவே, பல பாதைகளை நல்ல முறையிலே நிர்வகிக்கும் நிலையில் அவர்கள் இல்லை. ஆனால் புதிதாக பாதைகள் போட வேண்டிய அவசியம் இருக்கிறது. ஆகவே, நாம் இன்றைக்குப் புதுப்புதுப் பாதைகளைப் போடவேண்டுமென்று சொல்லும் போது, போட்ட பாதைகளை நிர்வகிக்கும் நிலையில்லாமல் இருக்கிறோம்; அதற்கு ஒரு நல்ல ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்பதை இந்த அமைச்சர் அவை ஆலோசிக்கவேண்டும்.

இன்றைக்கு பாதைகள் போடும்போது, பாலம் கல்வர்ட்ஸ் கட்டுவதில் குழாய்கள், பைப்ஸ், போடுகிறார்கள். அவைகள் காட்டாறுகள் மேல் கட்டப்படும் போது, மழைகாலத்தில் தண்ணீர் அதிகமாக வரும்போது, அவற்றைப் பெயர்த்துக் கொண்டு போய்விடுகிறது. ஆகவே, மக்கள் இந்த குழாய்களுக்குப் பதிலாக நல்ல முறையில் பாலம் கட்டித்தரவேண்டும் என்று விண்ணப்பங்கள் எழுதியும், இன்ஜினீயர்கள் குழாய்களைத்தான் போடுகிறார்கள். அவர்கள் நினைக்கிறார்கள், இந்த இன்ஜினீயர்கள் குழாய் வியாபாரம் செய்யும் பெரிய கம்பெனிகளோடு ஏற்படுத்திக் கொள்ளும் உடன்பாட்டின்படி இத்தனை ஆயிரம் குழாய்களை வாங்குகிறோம் என்று பேசிக்கொண்டு, இம்மாதிரிச் செய்கிறார்கள் என்று. இதை தயவுசெய்து அமைச்சர் கவனத்தில் வைத்து ஆவன செய்யவேண்டும்.

என் ஆத்தூர் தாலூகாவில், பல கிராமங்களுக்குப் போகும் பாதைகள் ஏரிக் கரைகளின் பேரில் போகின்றன. அந்த ஏரிகள் பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்டில் இருக்கிறது. அங்கே ரோடு போட ஒரு மைலுக்கு 30 ஆயிரம் 40 ஆயிரம் ஆகும் என்கிறார்கள். இவைகளை செய்து மேலும் நிர்வகிக்க P.W.D. இலாகாவிடம் பணம் கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். தேசிய வளர்ச்சி, சமுதாய நலத் திட்டங்களின்கீழ் போடவும் பொது மக்களிடம் அவர்கள் பகுதியைக் கொடுக்கப்பணம் இல்லை. இதைப் பஞ்சாயத்துக்கள் செய்வதானாலும், பணம் இல்லை. பணம் இருந்தாலும் பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட் மெண்டில் அங்கீகாரம் வாங்க வேண்டும் என்கிறார்கள். இதற்குச்சரியான வழிவகைகளை அமைச்சர் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் மலைப்பகுதியான கல்வராயன் மலைப்பிர தேசம் இருக்கிறது, அங்கே 40,000-க்கு அதிகமான மக்கள் வசிக்கிறார் கள். அவர்களுக்கு எந்த நன்மையும் செய்யாவிட்டாலும், அங்கே தொடர்பு கொள்ள நல்ல ரோடு வசதிகள் வேண்டும் என்று மக்கள் கருதுகிறார்கள் அதுதான் அவர்களுக்கு மிகவும் அவசியமான தேவை. ஏனென்றால், அங்கே ஒரு ஆண்டுக்கு பல ஆயிரக்கணக்கான ரூபாய் பெருமானம் உள்ள கடுக்காய் விளைகிறது. அதைக் கொண்டு வெளிப் பிரதேசங்களுக்கு போக அவர்களுக்கு தக்க ரோடு வசதிகள் கிடையாது என்பது ஒரும் பெரும் குறை. இதை பல ஆண்டுகளாக, 52-லிருந்து ஒவ்வொரு வரவு செலவு திட்ட விவாதத்தின் போதும் எடுத்துச் சொல்லப்பட்டு வந்திருக்கிறது. அங்கே சுமார் 11 பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. அவை நன்றாக நடக் கிறதா என்று பார்க்கக்கூட வசதியான ரோடுகள் இல்லை. இந்த ஷெடூல்ட், மலை ஜாதி, ஹில்ட்ரைப்ஸ், மக்களுக்கு வேறு எந்த நன்மையைச் செய்யாவிட்டாலும், இந்த சாலை வசதியாவது செய்து கொடுக்கவேண்டும் என்று வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். மூன்று மைலுக்கு என்று பாதை போட்டார்கள். அது ராமநாயக்கன் பாளயத்திலிருந்து மூன்றாவது மைலில் ஒரு நடு இடத்தில் போய் நிற்கிறது. இன்னும் 2,3, வருஷத்தில்

அந்தப் பாதையே இல்லாமல் போய்விடலாம். அது ஏதாவது ஒரு ஊரில் போய் விட்டால் நன்றாக இருக்கும். இந்தப் பாதைகள் மலைப்பாதைகளாக இருப்பதால், இவற்றிற்கு ஜல்லி போட்டால் நலமாக இருக்கும். முடிந்தால் தார் போட்டாலும் போடலாம். ஆகவே இவைகளை யெல்லாம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

* **Sri T. M, NALLASWAMI** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மானியத்தின் பேரில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். வரும் காலத்தில், பஞ்சாயத்து யூனியன்கள் அமைக்கப் படப்போகிற காரணத்தால், ஏற்கனவே ஜில்லா போர்டினால் பராமரிக்கப் பட்ட சில பாதைகளை ஹைவேஸ் டிபார்ட்மெண்ட் எடுக்கப் போகிறார்கள். சிலவற்றை, கிராமப் பாதைகளை பஞ்சாயத்துக்கு விடப் போகிறார்கள் பஞ்சாயத்து கெவுன்ஸிலில் இருக்கக் கூடிய ஜனத் தொகை அடிப்படையில் தலைக்கு 40 பைசா கொடுக்க திட்டமிட்டிருக்கிறார்கள். கிராம பஞ்சாயத்துக்களுக்கு மாச்சிங் கிராண்ட் கொடுக்க திட்டமிட்டிருக்கிறார்கள். ஆகவே எதிர் காலத்தில் போக்குவரத்துக்காக ஏராளமான தொகை செலவிடப்படும் என்று தெளிவாகத் தெரிகிறது. அது மிகவும் வரவேற்கத்தக்க விஷயம். இப்பொழுது இருக்கும் நிலையில் ஏற்கனவே ஜில்லா போர்ட்டாரால் பராமரிக்கப்பட்ட சாலைகள் நல்ல நிலையில் இல்லை. சர்க்கார் சென்ற ஆண்டில் கணிசமான தொகையை ஒதுக்கி பாதைகளை செப்பனிட்டு இருக்கிறார்கள். இன்றைக்கு கிராம ரோடுகளுக்குத்தான் முதலிடம் கொடுக்கவேண்டும். சமீபத்தில் ரஷியா சென்று வந்த விவசாயத்துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது சொன்னார்கள், அங்கே போக்குவரத்துப் பாதைகளுக்குப் பிரமாதமாகக் கவனம் செலுத்தப்படுவதில்லை என்று. ஆனால் நாம் கிராம ரோடுகளுக்கு முதலிடம் கொடுப்பதுதான் சிறந்த கொள்கை என்று தோன்றுகிறது. இன்றைக்கு மற்ற மாநிலங்களைவிட நம் மாநிலம் முற்போக்கான நிலையில் இருக்கிறது என்பதைப்பாராட்டி, இந்த இலாகாவில் இருக்கும் உத்தியாகஸ்தர்களுக்கும், அந்த துறையை நிர்வகிக்கும் அமைச்சரவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

* **Sri M. KULANDAISAMI GOUNDER** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே இந்த மானியத்தின்பேரில் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். என் தொகுதியில். சேர்வராயன், ஏற்காடு மலைகளில் இருக்கும் ஊர்களுக்குப் போய்வர ரோடு வசதி மிகவும் முக்கியமானது. ஒரு ஊரிலிருந்து மற்ற ஊருக்குப்போக 10, 15 மைல்கள் ஆனாலும், கால்நடையாகவே போகவேண்டியிருக்கிறது. இதற்காக அங்கே ரோடுகள் போடவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இன்னும் பனமரத்துப்பட்டி முதல் குரால் நத்தம் வரை 6 மைல் இருக்கிறது. சூரி ஊருக்கு ரோடு இல்லை என்று வருத்தப்படுகிறேன். இதற்கு வண்டி போக வசதியில்லை. அதனால் மக்கள் தானியங்கள் முதலியவற்றை சேலம் டவுனுக்குச் தலைச் சுமையாக தூக்கிக்கொண்டு போகவேண்டியிருக்கிறது. மாட்டுவண்டிகூட போகப் பாதையில்லை. அங்குபோடும்ரோட்டை ஜல்லி ரோட்டாகப் போடவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். சல்லுத்து என்ற ஊர் இருக்கிறது. அங்கு ரோடே கிடையாது. பனமரத்துப்பட்டியிலிருந்து சல்லுத்துக் கிராமத்துக்கு போவதற்கு மூன்று மைல் ரோட்டே இல்லை. அங்கு ஆஸ்பத்திரியும் இல்லை, பள்ளிக்கூடங்களும் இல்லை. ஆகவே, இதையெல்லாம் கவனித்து வேண்டியது செய்யவேண்டும். ராசிபுரம் தாலூக்காவில், போதமலை என்ற ஒரு கிராமம் இருக்கிறது. ராசிபுரத்திலிருந்து பத்து மைல் தொலைவில் இருக்கிறது. அங்கும் ஒருவித வசதியும் இல்லை. ரோடு வசதியும் கிடையாது. ரோடிற்கு வரவேண்டுமென்றால் பத்து மைல் தூரம் நடந்து வரவேண்டியிருக்கிறது. பலாக்காய், நாரத்தங்காய், ஆரஞ்சு, கிளாக்காய் இவைகளைத் தலையில்வைத்துக் தூக்கிக் கொண்டு பத்து மைல் நடந்துவர வேண்டியிருக்கிறது. இவைகளை தலையில் சுமந்துகொண்டு மலைமேல் நடப்பது என்றால் கஷ்டமாயிருக்கிறது. கனம் ராமையா அமைச்சர் அவர்கள் அங்கு சுற்றுப் பிரயாணம் வந்திருந்தபோது, மலைப் புறத்திலிருந்து கீழே நிலப்புறத்துக்கு குடி வந்து விடுகிறோம் என்று அங்குள்ள மக்கள் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். கவனித்து வேண்டியது செய்யலாம் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்த கிராமத்திற்கு கீழே நிறைய நிலம் இருக்கிறது. அதை அந்த ஏழை மலைஜாதி மக்களுக்கு கொடுத்தால் அவர்கள் அங்கு விவசாயம் செய்துகொண்டு வசதியாக இருக்க முடியும். மலைஜாதியினர் லட்சக்கணக்கில் இருக்கிறார்கள். கொல்லி மலை என்ற ஊர் 50 மைல் விஸ்தீர்ணத்தில் இருக்கிறது. அங்கு ரோடேயில்லை. அரப்பளீஸ்வரன் கோவிலிலிருந்து காளியம்மன் கோவில், ஆண்டியப்பன் கோவில் இந்த இடங்களுக்கு வர 50 மைல் தூரம் இருக்கிறது. இந்த இடங்களுக்கு போய்வர ரோடு வசதியே கிடையாது. அப்படி ரோடு வசதியிருந்தால் சுவாமி கோவிலில் தேர் ஓடுவதைப் பார்க்க ஜனங்களுக்கு வசதியாக இருக்கும். மலைஜாதி மக்களுக்கு ஒரு விதவசதியும் இல்லை. ஹரிஜனங்களுக்குக் கொடுக்கப்படுகிற சலுகைகள் போன்று மலை ஜாதி மக்களுக்கும் கொடுக்கவேண்டும். அஸெம்பளியில் மலை ஜாதி மக்களுக்காக இன்னும் இரண்டு ஸீட்கள் கொடுத்தால் மலை ஜாதி மக்கள் முன்னேற்றம் அடைய வசதியாக இருக்கும். அதே போல் எம்.எல்.ஸி.யாக மலைஜாதி மக்களுக்கு, மேல் சபையிலும், ஸீட்ஸ் ஒதுக்கி ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



**The Hon. Sri P. KAKKAN** : அங்கத்தினர் அவர்கள் இந்த சபையில் இவ்வளவு ஸீட்ஸ் வேண்டுமென்று கேட்கிறார்களா அல்லது ரோடு வேண்டுமென்று கேட்கிறார்களா ?

**Sri M. KULANDAISAMI GOUNDER** : அதோடு இதையும் சேர்த்துக் கொடுக்க வேண்டும். இப்படியெல்லாம் செய்து மலைஜாதியினரை ஆதரித்தால்தான் அவர்கள் முன்னுக்கு வரமுடியும் என்று சொல்லிக் கொண்டு இந்த சந்தர்ப்பத்தை கொடுத்த சபாநாயகர் அவர்களுக்கும், மினிஸ்டர் அவர்களுக்கும், இந்த சபை அங்கத்தினர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

* **Sri V. K. RAMASWAMY MUDALIYAR** : Mr. Deputy Speaker, Sir, while supporting the cut motion under this head, I would like to make a few observations. So far as this department is concerned, especially under the head of Civil Works, we find of late some kind of deterioration in certain respects. The administration should be toned up and it should be strengthened in all ways. This deterioration is because of the undue and unnecessary interference from top to bottom in the internal administration of the department. We find lot of indiscriminate promotions are being made and even with regard to writing of confidential sheets, and with regard to transfers, the recommendations of the Chief Engineers are by-passed. This is a very sorry state of affair and if this is allowed to continue, I am afraid the whole administration will completely come to a standstill. This is one of the major and more important departments. It should be given all encouragement and there should be no interference in its working. Whatever the circumstances may be, the Chief Engineers are the best authorities to do all kinds of work.

Another important factor, which I wanted to mention in this connection is that recently a Divisional Engineer in Kanyakumari district has been reverted, I understand, after he has completed his probation. On account of some representation or other the reversion order has been cancelled and he has been restored. What are all these things due to ? Has the Hon. the Minister looked into this case?

THE HON. SRI P. KAKKAN: கன்னியாகுமரியில் வேலை பார்த்து வந்த டிவிஷனல் என்ஜினியர் அவர்கள் அஸ்ஸிடென்ட் என்ஜினியராக ரிவர்ட் செய்யப்பட்டது வாஸ்தவம். திருச்சி ஜில்லாவில் அவர்கள் வேலை செய்யும்போது அங்கு நன்றாக வேலை செய்யவில்லை- ரோடுகளை நன்கு பராமரிக்கவில்லை என்று கலெக்டர் எழுதியதை வைத்து செய்தோம். மறுபரிசீலனை செய்து பார்க்கவேண்டுமென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அவர்களுக்கு மீண்டும் அந்த உத்தியோகம் கொடுத்திருக்கிறார்கள்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: These things should have been gone into in detail from the very beginning itself.

Another important factor is that on account of the Minister's tour in the interior parts of the district, the work of all these offices get completely upset. Even on a previous occasion I have said this. I wish to reiterate the same. The Superintending Engineer is in charge of three or four districts. I understand that orders have been issued from the highest level, i.e., at the Secretariat level, that the Superintending Engineers, wherever they may be should accompany the Ministers in their tour. Take for instance, the Public Works Department Minister is camping at Tambaram in my district. Supposing the Superintending Engineer is camping at Tirutturaipundi or Arantangi in Tanjore district, does it mean that he should break his camp and come all the way to meet the Public Works Department Minister? What a colossal waste of travelling allowance and waste of time and so many other things? He could as well discuss the entire thing with the Divisional Engineer or the Assistant Engineer concerned. This can at least be stopped. If this is done, it will also result no doubt in saving.

With regard to other departments, construction of buildings in the Industrial Estates, and with regard to formation of roads, etc., for various departments, I do not know why separate establishments under the respective departments should be maintained. I submit that so far as buildings are concerned in the Industrial Estates, they may be brought under the control of the Chief Engineer (Buildings). We find in certain cases superannuated officers are appointed. I can understand the appointment of persons like Sri U. Ananda Rao, who is an Engineer of outstanding ability as a Special Chief Engineer in charge of Parambikulam Project. But we find in some cases, officers who have been found to be incompetent had been appointed after superannuation. This should not be done. Further, wherever the Public Works Department executes the work for other departments such as Forest or Agricultural Department, that should be the entire concern of the Public Works Department and they can execute the work as promptly as possible and hand it over to the departments concerned.

Then, all the district boards in the State have put up a long list of roads to be taken over by the Government. This list is perhaps under scrutiny. It is not known why this matter has been unduly delayed for so long. I do not know why the Government



have not taken early steps to take over these roads and maintain them properly. District boards are not financially sound. They would find it very difficult to maintain the village roads. Village roads are very important, no doubt. But, it is not proper to expect the district boards to spend money on maintaining these roads to be taken over the Government. If the money that the district boards are now spending on these village roads is diverted, it will go a long way to improving village roads. Without improving village communications, we cannot say that we have advanced considerably.

With regard to acquisition proceedings for taking over certain roads, we find that there is enormous delay. In my own constituency, people experience considerable difficulty on account of this delay. A particular paper for acquisition has been pending for the last eight years. People get disgusted. Even if the people in that place were prepared to hand over some land free of cost, the department concerned did not come forward to take over the land on account of the fact that they have to follow a very long-drawn and elaborate procedure in this regard. Such delay should be avoided.

Another important matter and I wish to refer in this connection is that the Government are not prepared to put up a strong fight with the Central Government for more allotments to this State. When we refer to this aspect of the matter and say that the Centre is by-passing the South, motives are sought to be attributed and it is also stated, " Well, you are repeating what the D.M.K. people are stating " and all those things. I may tell the Government that it is not so. The Government should not view our criticism in this respect or from that angle. For instance, take the National Highways. Of course, it may be stated that they are, on the whole, well-maintained. But, I must point out that even in these Highways, there are many culverts and bridges which are in a state of disrepair. These culverts and bridges will have to be widened, because of the increased traffic. For this purpose, we must get more money from the Centre. Take for instance, the Marmalong Bridge in Saidapet. The broadening of this bridge had been the subject-matter of correspondence with the Central Government for a very long time. I do not know when it is going to materialise. It is a very important bridge and is on the very important road connecting the southern districts with the Madras City. It is called the Madras-Cape Camorin Road and is in the heart of the city. On many an occasion, in season and out of season, we experience traffic jam at that place because of the Marmalong Bridge being very narrow. The Government should take early steps to take up this matter.

Now, what has become of the Express Highways about which much had been said by the Hon. the Minister for Public Works a couple of years back. I am told that the Government of India have a sum of Rs. 20 crores which has accumulated from the

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [23rd March 1961

Cement Cess Fund. I also read in the papers sometime back, that a road from Durgapur to Calcutta, at a huge cost of about Rs. 70 lakhs or so, has been proposed. What is it that we are doing here? What concrete steps have the Government taken to press the Government of India to give us more grants to meet our needs? When are we going to get adequate grants from them. When we had a discussion at another meeting at a particular lvel, we stressed the need for taking up the Madras-Bangalore road with a view to connecting the two States. What has become of this road? What has become of our cry in this regard? I would like to know whether our cry is only in the wilderness.

As for coastal roads, we have very important coastal roads and these will have to be properly developed. If we have a good coastal road from here connecting Cape Camorin, it will go a long way in relieving the present congestion of traffic on the Grand Southern Trunk Road. It will also provide good communication for the coastal areas. This is a very important matter. From a speech recently delivered by Union Minister Hon. Dr. P. Subbarayan, I find that it is very unlikely that we will be able to get adequate money for this coastal road in the Third Plan. This requires some clarification. I request the Hon. Minister to impress upon the Central Government the necessity of taking up this road. Unless we are able to take up this coastal road, I am afraid, it may not be possible for us to go ahead with our developmental progammes.

The staff of the department should be considerably strengthened. The Government should sanction more posts of Divisional Engineers or Assistant Engineers. Only some districts have been bifurcated. All the other districts should be bifurcated. Because of the increase in the volume of work, there is urgent necessity for bifurcation of the districts and the sanctioning of more officers. In these matters, the Government should not take the financial implications alone into account. Te volume of work should also be taken into consideration. When they do so, they will themselves find that the work has tremendously increased.

Sometime back, I made certain suggestions for effecting certain changes in the nomenclature of these roads. But, I am sorry to state that these suggestions have not been implemented. The Government should take up this question in right earnest in consultation with the Chief Engineer for Highways. Take for instance, the road from Kancheepuram to Sadras. It is called the "Sadras-Soniappan" road. There is the road connecting Kancheepuram with Chingleput. Also, there is an adjoining road from Chingleput connecting Tirukkazhukundram. From Tirukkazhukundram, two roads branch off, one to Mahabalipuram and another to Sadras. Because of all these things, people are much confused. When we give a name to a particular road, we must take care to see that it does not confuse the people. I am sure that we will be in a position to change the nomenclature of the roads in such a way that the people are not confused.



23rd March 1961] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

In my district, there was heavy flood damage all over and especially in the southern parts of the taluks of Kancheepuram, Madurantakam, etc. Though the work was pushed through well by the Highways Department still the amount allotted for this purpose has not yet been sanctioned. As they have to push through the work most expeditiously, I request the Government to sanction this amount without further delay, so that the work could be completed soon. To-day, we are on March 23. Even though the estimates have been sanctioned till yesterday, the money has not been disbursed for the Chingleput District Board. So, there is a deficit to the extent of Rs. 2 lakhs or so, and the contractors have not been paid so far. The same, I understand, is the cry of the other district boards as well. They too are not able to get the money in time with the result that no contractor is willing to take any work of the Highways Department. This will in turn result in the bad maintenance of our roads. This aspect of the matter has to be taken into consideration.

With these words, I request the Hon. Minister to take all steps possible to tone up the administration and strengthen it in all respects. That is all my submission, Sir.

**THE HON. SRI P. KAKKAN** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மானியத்தில் பங்கெடுத்துக்கொண்டு பல மதிப்பிற்குரிய அங்கத்தினர்கள் பல நல்ல ஆலோசனைகளை சொன்னதற்காக முதலில் என் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். முக்கியமாக எல்லா அங்கத்தினர்களும் கிராம ரோடுகளைப்பற்றித்தான் எடுத்துச் சொன்னார்கள். அந்த ரோடுகள் எல்லாம் நன்றாக அமைக்கவேண்டும் என்பது நம்முடைய விருப்பம். குறிப்பாக கிராம மக்கள் நல்லமுறையில் வாழ வேண்டும் என்கின்ற அடிப்படையில் தான் பஞ்சாயத் சட்டத்தை இந்த சபையில் நிறைவேற்றி அதற்கென்று பல அதிகாரிகளையும் நியமித்து கிராமங்கள் நல்ல நிலைமையில் இருக்கவேண்டும் என்று நாம் பல திட்டங்களை போட்டு நிறைவேற்றிக்கொண்டிருக்கிறோம். நல்ல ரோடுகளை எல்லாம் போட்டு, நல்ல பாதைகளை அமைத்து, கிராமங்கள் எல்லாம் நல்ல முறையில் நடக்கவேண்டும் என்பதற்காகத்தான் இந்த அரசாங்கம் இதில் அதிக அக்கரை எடுத்து பல திட்டங்களை போட்டு வருகிறது. சட்டம் செய்வது மட்டுமல்ல, நல்ல முறையில் அதை நடத்துவதற்கும், கிராமங்களில் சமுதாய நலத்திட்டத்தின் கீழும், பல வேலைகள், பல சிறிய நீர்ப்பாசனத்திட்டங்கள், பல சிறிய ரோடுகளை போடுவது போன்ற பல திட்டங்களை எடுத்து, அவற்றை நல்ல முறையில் பராமரிக்கவும் நாம் எவ்வளவோ நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். இவற்றையெல்லாம் கண்காணிப்பதற்கு போதிய அதிகாரிகள் இருக்கவேண்டும். அதை நன்றாகப் பரிசீலித்துத்தான் டெப்யூடி சீப்-என்சினியர் ஒருவரை சீப்-இன்சினியரின் கீழ் நியமித்து அவருடைய மேற்பார்வையில் பஞ்சாயத்து சட்டங்கள் எல்லாம் நல்லமுறையில் நடந்து அவைகள் எல்லாம் வெற்றி அடைவதற்கு தகுந்த முறையில் தக்க ஏற்பாட்டை செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடு தான் இந்த அரசாங்கம் பல ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறது. அதை மதிப்பிற்குரிய அங்கத்தினர்கள் அறிவார்கள். கிராம ரோடுகள் மிகவும் சீர்கேடான நிலையில் இருக்கிறது என்ற பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். நூற்றுக்கு நூறு கிராம ரோடுகள் எல்லாம் நன்றாக இருக்கின்றன என்று சொல்லமுடியாது. கிராமங்களில் இருக்கின்ற ரோடுகளை எல்லாம் நல்ல முறையில் சீர்திருத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு தான், இப்போது அந்த ரோடு பொதுவழித்துறையின் கீழ் வந்தாலும் சரி, அல்லது டிஸ்ட்ரிக்ட் போர்ட் வேலையாக இருந்தாலும் சரி, கிராம ரோடுகள் என்று இருந்தால் அதை முதலிடம் கொடுத்து எடுத்து,

தேசிய விஸ்தரிப்புத் திட்டத்தின் மூலமாகவோ, அல்லது கிராம அபிவிருத்தித்திட்டத்தின் மூலமாகவோ, அந்த வேலைகளை கவனிக்கவேண்டும் என்கின்ற அடிப்படையில் அதற்காக தனி சிரத்தை எடுத்து, நமக்கு இருக்கின்ற நிதிநிலைமைக்கு தக்கவாறு வேலைகளை நடத்தவேண்டும் என்று ஒரு ஏற்பாடு செய்தோம். 10 லட்சம் ரூபாய் சிறிய ரோடுகளுக்காகவும், பஸ் போகக் கூடிய ரோடுகள் மிகவும் மோசமாக இருக்கும் ரோடுகளுக்கு 15 லட்சம் ரூபாயும், மொத்தத்தில் 25 லட்சம் ரூபாய் செலவு செய்து நல்ல முறையில் செப்பனிடத் திட்டமிட்டோம். ஓரளவுக்கு சில இடங்களில் நல்ல ரோடுகள் போட்டிருக்கிறோம். அது பற்றாது. மேலும் அதிகப்படி நிதி வேண்டுமென்று நேற்று கூடிய போக்குவரத்து ஆலோசனைக் குழு ஒரு தீர்மானம் செய்திருக்கிறது. மேலும் அதிகப்படி நிதி ஒதுக்கி கிராம ரோடுகளை, அல்லது இப்போது ஜில்லா போர்டு ரோடுகளாக இருந்தாலும்
12-30 p.m. பஸ் போவதற்கு மோசமாக, இருந்தால், மேலும் நல்ல முறையில் வைக்க முடிவு செய்திருக்கிறது என்று இந்த மன்றத்தில் சொல்லிக் கொள்கிறேன். இதை கவனித்து கிராம ரோடுகளுக்கு அதிகமாக கொடுத்து கிராம ரோடுகளை நல்ல முறையில் வைக்க நாங்கள் முன் வருவோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தலைக்கு 40 நயா பைசா பஞ்சாயத்து சட்டத்தின் கீழ் ரோடு பராமரிப்புக்காகக் கொடுக்கவேண்டுமென்று இருந்தாலும் அதை வைத்துக் கொண்டு நல்ல முறையில் ரோடுகளை வைத்துக்கொள்ள முடியாது. இதில் மக்களெல்லோரும் அக்கரை எடுத்து தங்கள் தங்கள் ஊருக்கு என்னென்ன நன்மை செய்யவேண்டுமோ அதற்காக அந்தத் தொகைக்கு மேல் போட்டுச் செலவு செய்தால் நல்ல முறையில் இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். சர்க்காரே பூரா பணமும் கொடுத்துவிட வேண்டும், அதுவும் நேரடியாக இங்கேயிருந்து கொடுக்கவேண்டும் என்று சொன்னால் முடியாது. இதற்காகத் தான் மக்கள் திட்டம் என்று போட்டிருக்கிறது, மக்களும் கொடுக்கவேண்டும். மக்களும் ஒத்துழைக்க வேண்டும் என்று தான் அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது. அதற்கிணங்கத் தான் ஓரளவு அரசாங்கம் அள்ளிக் கொடுத்தாலும் மக்கள் அக்கரை செலுத்தி ரோடுகளைப் போடும் காலத்தில், ரோடுகளைப் பராமரிக்கும் காலத்தில் பக்கமிருந்து கவனிக்கவேண்டுமென்று இப்போது சொல்லியிருக்கிறோம். நமது நாடு ரொம்ப நாட்களாக ஏழ்மையாக இருக்கக் கூடிய நாடு. அடிமையாக இருந்த காரணத்தினால் அநேக ரோடுகள் இல்லாமல் இருந்து வந்தோம். சுதந்திரம் வந்து மக்களாட்சி வந்த பிறகு என்ன என்ன நன்மை செய்யவேண்டுமோ அதற்கு திட்டம் போட்டு செய்து வருகிறோம். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றி விட்டோம். 2-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் இருக்கிறோம். மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அடி வைக்கப் போகிறோம். எல்லாவற்றையும் சொல்லி விடலாம்.

" சொல்லுதல் யார்க்கும் எளிது அரியவாம் சொல்லிய வண்ணம் செயல் "—

எதையும் சொல்லி விடலாம்—ஆனால் துட்டு வேண்டும். துட்டு வேண்டுமென்றால் மக்களிடத்தில் போகவேண்டும்—வசதி இருக்கிறவர்களிடத்தில் போகவேண்டும். நம் அரசாங்கம் வரும் நிதியைக் கொண்டு, மக்களுடைய ஒத்துழைப்பைக்கொண்டு ரோடுகளை எவ்வாறு வைக்கவேண்டுமோ அவ்வாறு வைக்க முன்வரும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அரசாங்கமே ரோடுகளைப் பராமரிக்கவேண்டுமென்று மத்திய அராசாங்கமும் மாகாண அரசாங்கமும் சேர்ந்து முடிவு செய்திருக்கிறது. அதற்காக ஒரு திட்டமும் வகுத்திருக்கிறது. அதை 20 வருஷத் திட்டம் என்று சொல்லுவார்கள். 20 வருஷத் திட்டம் என்று சொல்லும்போது 20 வருஷம் கழித்தா என்று சொல்லலாம். நாண்கு ஐந்தாண்டுத் திட்டங்களில் செய்தால் தான் எல்லாக் குறைகளும் தீரும் என்ற முறையில் போடப்பட்டிருக்கிறது. அதுவும விவசாயம் செய்யக் கூடிய பகுதியில் தார் ரோடு அல்லது கப்பி ரோடு இருந்து அதி போட்ட ரோடுக்கு 4 மைல் இருந்தால் அதற்கு ஒரு ரோடு போட வேண்டும், அதே போல பக்கத்து கிராமம் 1½ மைல் இருந்தால்



அதற்கு ஒரு ரோடு போடவேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறோம் அல்லது தஞ்சை மாதிரி இல்லாமல் விவசாயம் இல்லாது இருந்தால், அதாவது சில பகுதிகளில் விவ சாயம் இருந்து, பாதி புஞ்சையாக இருந்தால் மெயின் ரோடுக்கு 8 மைல் இருந்தால் ஒரு கிளை ரோடு வேண்டும், கிளை ரோடிலிருந்து 3 மைலுக்கு சிறிய கிளை ரோடு வேண்டும் என்று போட்டிருக்கிறோம். நெல் அல்லாத, விவசாயம் இல்லாத பகுதிகளில் 12 மைல் இருந்தால் அந்த ஊருக்கு ரோடு போட்டு நல்ல முறையில் வைக்கவேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறது. அந்த வட்டாரத்தில் 5 மைலுக்குள் ஒரு கிராமம் இருந்தால் அதற்கு ரோடு வேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறோம். கிராம சாலைகளை இணைக்கவும் திட்டமிட்டிருக்கிறோம். இந்த முறையில் ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டத்திலும் ஆவன செய்ய அரசாங்கம் நல்ல முறையில் பாடுபட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது 3-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே, எனது உரையிலேயே சொல்லியிருக்கிறேன், மாநிலப் பெருவழிக்காக 4 கோடி ரூபாய் செலவழிக்கப்போகிறார்கள். மாவட்டக் கழக சாலைகளுக்காக 3 கோடியே 60 லட்சம் ரூபாய் செலவு செய்யப் போகிறார்கள். யந்திரங்கள், தளவாடங்கள் இவைகளெல்லாம் வாங்க 60 லட்ச ரூபாய் செலவு செய்யப் போகிறார்கள். இராமநாதபுரம் போன்ற பின் தங்கிய பகுதிகளில், முதுகுளத்தூர் போன்ற பகுதிகளில் செலவழிக்க முன்பு 65 லட்சம் ரூபாய் ஒதுக்கினோம். இன்னும் 25 லட்சம் ரூபாய் செலவழிக்கத் திட்டமிட்டிருக்கிறோம். ரெயில்வே பாலங்கள், ரெயில்வே ஓவர்பிரிட்ஜஸ் இவைகளுக்கெல்லாம் 140 லட்சம் ரூபாய் செலவிடத் திட்டமிட்டிருக்கிறது. அரசாங்கம் திட்டமிட்டு காரியம் செய்கிறது. திட்டமில்லாமல் எந்தக் காரியத்தையும் செய்ய முடியாது. எதையும் உடனடியாகச் செய்ய முடியாது. அவசரப்பட்டு, ஆத்திரப்பட்டு ஒன்றும் செய்ய முடியாது. வழிவகைகளைச் செய்து ஆலோசனை செய்து தான் செய்ய முடியும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மதிப்புக்குரிய கனம் எதிர் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது ஏதோ அதிகாரிகள்—அதாவது செக்ரட்டரி, சீஃப் என்ஜினீயர் இவர்களின் தலையீடு இருக்கிறது, நல்ல முறையில் நீதி வழங்கப்படவில்லை என்று சொன்னார்கள். எதைச் செய்தாலும் நீதியாக, நேர்மையாக இந்த அரசாங்கம் செய்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சீஃப் என்ஜினீயர் அவர்கள் ஏதாவது ப்ரொமோஷனைப் பற்றி சிபாரிசு செய்தால், செக்ரட்டரி அதை பரிசீலனை செய்யவேண்டும். பரிசீலனை செய்யாமல் கண்ணை மூடிக்கொண்டு எனக்கு அனுப்பவா இருக்கிறார்? அந்தக் குறிப்பிட்ட நபரின் கான்ஃபிடென்ஷியல் ரிப்போர்ட்டைப் பார்த்து, ஏதாவது சென்ஷர் இருக்கிறதா, இதில் ஏதாவது அக்கிரமம் இருக்கிறதா, நல்ல மனிதர் தானா, வேறு யாருக்கும் பாதகம் ஏற்பட்டிருக்கிறதா என்று பார்த்து அனுப்புகிறார்கள். அதை வைத்துக்கொண்டு அரசாங்கம் முடிவு செய்கிறது. அங்கே அவர் வேண்டும், இவர் வேண்டும் என்ற மனப்பான்மை இல்லை. கடந்த 4 வருஷங்களாக இந்த முறையில் தான் நாங்கள் ப்ரொமோஷன் கொடுத்து வருகிறோம். யாராவது ஒருவர் சொல்லலாம் எதிர் கட்சித் தலைவரிடத்தில் அதில் அப்படி நடந்து விட்டது, இதில் இப்படி நடந்து விட்டது என்று. யாராவது சொல்வதையெல்லாம் எடுத்துக்கொள்ளக் கூடாது. சர்வீஸ், மெரிட்ஸ் இவைகளையெல்லாம் பார்த்துத் தான் நீதி வழங்கப்படுகிறது. எந்த ப்ரொமோஷனைச் செய்யும்போதும் பார்த்துச் செய்யப்படுகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தவிர கனம் எதிர் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள், மந்திரியின்னோடு சூபரிண்டெண்டிங் என்ஜினீயரெல்லாம் வரவேண்டுமென்று சொல்லுகிறார்கள் என்று. முக்கியமான விஷயங்களில், அதாவது மழை பெய்தது என்றால், அநேக இடங்களுக்குச் சென்று கவனிக்கவேண்டியிருக்கிறது, அந்தந்த சமயத்தில் கட்டளையிட்டு கவனிக்கவேண்டுமென்று சொல்லவேண்டியிருக்கிறது. சும்மா வீட்டில் உட்காருவதற்காக சூபரிண்டெண்டிங் என்ஜினீயரை நாம் வைக்கவில்லை. நல்ல முறையில் பார்க்க வேண்டும் என்று இருக்கிறாரே தவிர, டூர் பண்ணும்போது நீங்கள் வர வேண்டும், சூபரிண்டெண்டிங் என்ஜினீயர் வரவேண்டும், என்று சொல்லவில்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.

[23rd March 1961

**SRI V. K. RAMASWAMY MUDALIYAR**: Sir, has not a general order been issued to the effect that the Superintending Engineer should accompany the Hon. Minister wherever he goes on tour? Even if he goes on tour for political propaganda purposes, the Superintending Engineer will have to accompany him. I can quote the Government Order and even bring it here.

**THE HON. SRI P. KAKKAN**: கனம் அங்கத்தினர் அவர்கள் அந்த மாதிரி இருந்தால் என்னிடம் சொல்லலாம். அந்த மாதிரி ஜீ.ஓ. இருந்தால் அதை மாற்ற முன் வருவேன் என்று சொல்லிக்கொள்ளு கிறேன். ஏதாவது எஸ்.ஈ. கவனிக்கவேண்டும்மென்று இருந்தால் நிச்சய மாக வரவேண்டுமென்று கட்டளை இடுவோம். எந்தெந்த இடத்தில் அவரது பணி, அவரது சேவை தேவையாக இருக்கிறதோ அங்கங்கே வரச் சொல வேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அவர்கள் சொல்லும்போது நில ஆர்ஜிதம் செய்வதிலே தாமதம் ஏற்படுகிறது என்று சொன்னார்கள். இதிலே சாதாரணமாக நிலத்தை ஆர்ஜிதம் செய்யும்போது கொஞ்சம் காலதாமதம் தான் ஆகிறது. ஆகவில்லை என்று யாரும் சொல்லவில்லை. அதற்காகத் தான் வீடு கட்டுவதற்காக இருந்தாலும் சரி, அல்லது ஏழைகளுக்கு நில ஆர்ஜிதம் கொடுப்பதாக இருந்தாலும் சரி அல்லது ரோடுகள் போடுவதற்கு நில ஆர்ஜிதம் செய்வதானாலும் சரி, அவசரச் சட்டத்தை உபயோகப்படுத்தி வெகு சீக்கிரமாக ஆர்ஜிதம் செய்யவேண்டுமென்று அரசாங்கம் கட்டளையிட்டிருக் கிறது. அந்த முறையிலே தான் நிலத்தை ஆர்ஜிதம் செய்து ரோடுகள் போடுவதோ, பாலங்கள் கட்டுவதோ போன்ற காரியங்கள் நடைபெற்றுக் கொண்டு வருகிறது. இதிலே காலதாமதம் ஏற்படுகிறது என்று சொன்னால், சில இடங்களில் நிலத்தின் சொந்தக்காரர்கள் ஹைகோர்ட்டில் ரிட் போட்டு விடுகின்றனர். அவர்களை நீங்கள் ரிட் போடவேண்டாமென்று சொன்னால், இந்த அரசாங்கம் இந்த மாதிரி சர்வாதிகாரம் செய்கிறார்களே என்றும் சொல்வார்கள். அதையும் இந்த அரசாங்கம் சிந்தித்துப் பார்க்க வேண்டியிருக்கிறது. அப்படிப் பார்க்காமலும், ஒருவருடைய நிலத்தை ஆர்ஜிதம் செயயக்கூடாது, இதை விட்டு, அதிகாரிகளைப் பார்த்து வெறு மனே சும்மா இருக்கிறார்கள் என்று கூறுகிறார்கள். அதிகாரிகள் உண்மை யிலேயே பல சேவைகளைச் செய்து வருகிறார்கள். அவர்களை நாம் பாராட்ட வேண்டும். அப்படிப் பாராட்டினால் தான் அவர்களும் மகிழ்ச்சியோடு பல வேலைகளை இனியும் செய்ய முன் வருவார்கள். பாராட்டுவது என்றால் என்ன ? மந்திரிகளுக்கு மாலை போடுகிறார்கள். ஏன் போடுகிறார்கள் ? மாலை போடுகிறதின் மூலம், மேலும் ஒரு பாரம் [illegible] சுமத்தப் படுகிறது. இதுவரை செய்தது போதாது. மேலும் இதைச் செய்யுங்கள் என்று சொல்லி தான் மாலையைப் போடுகிறார்கள். அதே போலத்தான் தான் இந்த அதிகாரிகளைப் பாராட்டுவதும், இப்படி அவர்களைப் பாராட்டு வதன் மூலம், மேலும் நல்ல முறையிலே இந்த மாநிலத்திற்கு தொண்டு செய்வதற்காக முடியுமென்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படு கிறேன். நம்முடைய மாநிலத்திலே அதிகாரிகள் நன்கு வேலை செய்கிறார் கள். ஆகவே தான் நம்முடைய மாநிலத்திலே எல்லா வேலைகளும் துரிதமாக நடைபெறுகிறது. ஒரு சில இடங்களில் கஷ்டங்களும், இடைஞ் சல்களும் இருக்கத் தான் செய்கிறது. ஆகவே தான் கலெக்டர் அவர் களிடத்திலே இந்த அவசரச் சட்டத்தை உபயோகித்துக்கொள்வதற்கு பொர்சு செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

மதிப்பிற்குரிய கனம் அங்கத்தினர் கே. எஸ். கரையாளர் அவர்கள் தரக் குறைவு என்று சொன்னார்கள். அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். நம்முடைய மாகாணத்திலேதான் மற்ற மாகாணங்களைக் காட்டிலும் நல்ல முறையிலே செய்யப்பட்டு வருகிறது. [illegible] திருவாங்கூர் ராஜ்யத்தைப் பற்றியும் அவர்கள் சொன்னார்கள். அங்கே இப்போது கான்கிரீட் ரோடு போடுவதாக இருந்தால் மைலுக்கு



23rd March 1961] [Sri P. Kakkan]

ஒரு லட்சம் செலவாகிறது. தார் ரோடு போடுவதற்கு மைலுக்கு 30,000 செலவாகிறது. திருவாங்கூரைப் பொறுத்தவரையில் ராஜா இருந்த காலத்திலே, நிறைய சிமெண்ட் ரோடு போட்டிருந்தார்கள். அதை ஒப்பிட்டு நம்முடைய மாகாணத்திலே தார் போட்ட ரோடுகளைப் பார்ப்பது நல்லது அல்லவென்று தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய ராஜ்யத் திலே உள்ள ரோடுகள் எவ்வளவோ தூரம் நல்ல முறையில் வைக்கப் பட்டிருக்கிறது. அதோடு நம்முடைய நிதி நிலைமைக்குத் தக்கபடி செய்யப் படும் என்பதையும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தொழிலாளர்களைப் பற்றிச் சொன்னார்கள். ஏற்கெனவே இந்த மான்யக் கோரிக்கையில் இது பற்றி சொல்லியிருப்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இதுவரைக்கும் எல்லோருக்கும் நன்மை செய்திருக்கிறோம். மேலும் பரிசீலனை செய்து, யார் யாருக்கு சட்டப்படி, எந்தவிதத்திலே உதவி செய்யவேண்டுமென்பது இந்த அரசாங்கத்தின் கவனத்திலே இருந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய அன்பழகன் அவர்கள் பேசும்போது, இந்த பஞ்சாயத்து யூனியன்களுக்கு கீழே நீர்ப்பாசன வேலைகள் எல்லாம் ஹைவேஸ் இலாகா வின் டெபுடி சீப் என்ஜினியரின் கீழ் இந்த வேலைகள் சரியாக நடை பெறாது. பி.டபிள்யூ.டி. இடமே நீர்ப்பாசனம் இருக்க வேண்டுமென்று பேசினார்கள். அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மைனர் இர்ரிகேஷன் ஓவர்சியர்கள் இதிலே இருக்கிறார்கள். அவர்கள் இந்த நீர்ப்பாசனப் பகுதியிலே வேலை செய்கிறார்கள். அதனால் இந்த வேலை எந்த விதத்திலும் கெட்டு விடாது. செய்து வந்த வேலைகள் தான் மேற்பார்வையிடப்படுகிறதே ஒழிய, எந்த பிளாக்குகளிலும் நீர்ப்பாசனம் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எப்போதும் வேலை செய்வதற்குச் சித்தமாக இருக்கிறார்கள். ஆகவே இந்த வேலை தாமதப்படும், கெட்டு விடும், என்று எண்ணுவதற்கே இதில் இடமில்லை. நல்ல முறையிலே திட்ட வேலைகளை நன்றாகச் செய்ய ஏற்பாடுகள் செய்யப்படும் என்று அவர்களுக்கு தான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு அவர்கள் எக்ஸ்பிரஸ் ஹைவேஸ் ரோடுகளைப் பற்றியும் சொன்னார்கள். குறிப்பாக இதைச் சென்னை—விழுப்புரம் வரைக்கும் எடுத்துக்கொண்டால் நல்லது என்று சொன்னார்கள். இப்போது ரோடு களை நல்ல முறையிலே கிராண்ட் டிரங்க் ரோடுகளாகப் போடுவதற்கு திட்ட மிடப்பட்டிருக்கிறது என்பது நமக்குத் தெரியும். அந்த முறையிலே தான் இப்போது இரு பக்கத்திலும் அகலப்படுத்தப்பட்டு வருகிறது. அந்த முறை யிலே எந்தவிதமான தங்கு தடையுமின்றி, ஆபத்துக்கள் இல்லாமல் பஸ்கள், பெரிய பஸ்கள் போகக்கூடிய ரோடுகளைப் போடத் திட்டமிடப் பட்டிருக்கிறது. ஆகவே இந்த எக்ஸ்பிரஸ் ஹைவேஸ் விழுப்புரம் வரைக் கும் மட்டுமல்ல, எந்த பகுதியிலே இந்த நிலைமையைக் கொண்டு வந்தால் நல்லது என்பதைப் பரிசீலனை செய்து பார்த்து நல்லதொரு முடிவுக்கு வரலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது டெல்லியிலே கட்டப்படுகின்ற கட்டிடத்தைப் பற்றி பெயர் வைப்பதற்கு "மெட்ராஸ் அவுஸ்" என்று வைப்பதைக் காட்டிலும், "தமிழகம்" அல்லது "தமிழ்நாட்டு அவுஸ்" என்று வைக்கலாம் என்று சொன்னார்கள். நாம் ஏற்கெனவே ஊட்டியிலே "தமிழகம்" என்று பெயர் வைத்திருக்கிறோம். இப்போது தமிழிலே "தமிழ் நாட்டு வீடு" என்றும் ஆங்கிலத்திலே "மெட்ராஸ் அவுஸ்" என்றும் வைக்கலாம் என்றும், ஆகவே இரண்டும் இருக்கும் என்பதை நான் தெரிவித் கொள்கிறேன். இப்படி இரண்டிலும் இருப்பதால், ஆங்கிலம் தெரியா தவர்கள் தமிழிலே புரிந்து கொள்வதற்கும், இரண்டையும் தெரிந்தவர் கள் "மெட்ராஸ் அவுஸ்" என்பதையும் தெரிந்துகொள்வார்கள்.

**SRI A. GOVINDASAMI**: கனம் அமைச்சர் அவர்கள் "மெட்ராஸ் அவுஸ்" என்று இருக்க வேண்டுமென்று கருதுகிறார்கள். சென்னையி லிருந்து தமிழ் தெரியாதவர்கள் போனால் புரிந்து கொள்வதற்காக மெட்ராஸ் அவுஸ்" என்று போடப்படுகிறதா ?

[23rd March 1961

**THE HON. SRI P. KAKKAN** : மற்றவர்களும் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகத் தான் இப்படிப் போடப்படுகிறது. சென்னையிலுள்ளவர்கள் சென்றால் "தமிழ் நாடு வீடு" என்பதைப் பார்த்தே நன்கு தெரிந்துகொள்ளலாம். நம்முடைய சேவையை மற்றவர்கள் பார்த்துப் புரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகத் தான் "மெட்ராஸ் அவுஸ்" என்று போட இருக்கிறோம்.

**SRI V. K. RAMASWAMY MUDALIYAR** : இதே மாதிரி வடக்கேயுள்ளவர்கள் தமிழிலேயா எழுதுகிறார்கள். அவர்கள் ஆங்கிலத்திலே கூட எழுதுவதில்லையே. ஆகவே கனம் அமைச்சர் அவர்கள் மத்திய சர்க்காருக்கு எழுதி இந்தியோடு, தமிழிலும், ஆங்கிலத்திலேயும் எழுத வேண்டுமென்று கேட்டுக்கொண்டால் நல்லது.

**THE HON. SRI P. KAKKAN** : நம்முடைய பண்பாட்டின்படி நாம் நமது கடமையைச் செய்வோம். மற்றவர்கள் பிரச்னை அல்ல இது. நாம் செய்யக்கூடியதை நாம் நன்கு செய்யவேண்டும். நம்முடைய மனச்சாட்சி எப்போதும் நல்ல முறையிலே தான் செயல்படும். "யாதும் ஊரே, யாவரும் கேளீர்" என்று நாம் சொல்வதுண்டு. நாம் பிறருக்கு வழிகாட்டியாக இருப்போம் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கனம் அங்கத்தினர் மருதாசலம் அவர்கள் பேசும்போது, இருக்கிற ஏரியை மூடி விட வேண்டுமென்று சொன்னார்கள். ஏற்கெனவே இதைப் பற்றி பரிசீலனை செய்திருக்கிறார்கள். பரிசீலனை செய்து "ஏரி பிரயோஜனமில்லை" யென்று சொல்லவேண்டியது யார்? பிரதம என்ஜினியர் பார்த்துச் சொல்லவேண்டும். அங்கத்தினர் சொன்னார் என்று, அதற்காக நாம் மூடி விடமுடியாது. எங்கெங்கே மேடாக இருக்கிறதோ, அங்கெல்லாம் பள்ளமாக்கப்பட்டு, சில இடங்களில் நீர்ப்பாசன வசதி செய்யப்பட்டு வருகிறது. ஒரு இடம் நீர்ப்பாசனத்திற்கு உபயோகப்படுமா, படாதா தூரெடுக்க வேண்டுமா, மூடிவிட வேண்டுமா என்பதையெல்லாம் பிரதம என்ஜினியர் அவர்கள் பரிசீலனை செய்து பார்த்துச் சொல்ல வேண்டும். அப்படி அவர் பரிசீலனை செய்து பார்த்து அதை மூட வேண்டாமென்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது புல்டோசரைக் கொண்டு மேடிட்ட இடங்களை, நன்கு ஆழப்படுத்தி தண்ணீரைக் தேக்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதைப் பார்க்கிறோம். ஆகவே இதை மூட வேண்டிய அவசியமில்லை என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

**SRI N. MARUDACHALAM** : ஸார், இந்தக் குளம் மத்தியிலே இருக்கிறபடியால், வெள்ளக் காலத்தில் தண்ணீர் நிரம்பி பக்கத்திலே இருக்கக்கூடிய கிராமங்களில் சேதம் விளைவிக்கக்கூடிய நிலைமையிலே இருக்கிறபடியாலும், அந்தக் குளத்திலே அதிக பாசன வசதி இல்லாத காரணத்தாலும் தான் அந்தக் குளத்தை மூட வேண்டுமென்று அந்தக் கிராமப் பகுதி மக்கள் கனம் அமைச்சர் அவர்களிடம் விண்ணப்பம் கொடுத்திருக்கிறார்கள்.

**THE HON. SRI P. KAKKAN** : கனம் அங்கத்தினர் அவர்கள் மீண்டும் அவர் சொன்னதையே வற்புறுத்திக்கொண்டிருக்கிறார் என்று நினைக்கிறேன். மீண்டும் பரிசீலனை செய்து பார்க்கலாம் என்று கனம் அங்கத்தினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உண்மையிலேயே இப்போது ஏரிகளை யெல்லாம் மூடி விடுகிறது என்ற எண்ணமே இந்த அரசாங்கத்திற்கு இல்லை. பயன்படாத ஏரியாக இருந்தாலும், அங்கு தண்ணீரைத் தேக்கி, பாசன வசதியைச் செய்ய முடியுமா என்று பரிசீலனை செய்வார்கள். ஆனால் ஆயக்கட்டு நிலங்கள் இருக்கும்போது அங்கு கண்மாயை மூடுகின்ற பழக்கம் இந்த அரசாங்கத்திற்கு இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் சில ரோடுகளைப் பற்றி சொன்னார்கள். அம்மாதிரி ரோடுகள் மோசமாக இருந்தால் அதைப் பற்றி விசாரிக்கச் சொல்லுகிறேன். அதைக் கவனிப்பதற்கு ஏற்பாடு



23rd March 1961] [Sri P. Kakkan]

செய்யச் சொல்கிறேன். தொழிலாளர்களைப் பற்றி சொன்னார்கள். கனம் சட்டநாதக் கரையாளர் அவர்களுக்குச் சொன்ன பதில் தான் அவர்களுக்கும். இப்போது "டெய்லி வேஜஸை" அதிகப்படுத்தி கொஞ்சம் சயபனம் கூடக் கொடுத்திருக்கிறோம். மேலும் "பே கமிஷன்" என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பதையெல்லாம் பார்த்து அதெல்லாம் மறுபடியும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. அது பற்றி பின்னால் ஒரு முடிவு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஸ்ரீமான் செல்வராஜ் அவர்கள் பேசுகிறபொழுது விருத்தாசலம் நகரத்திற்குப் பக்கத்திலே இருக்கும் "பிரிட்ஜைப்" பற்றி சொன்னார்கள். நானும் என்ஜினியரிடம் சொல்லியிருக்கிறேன். பாலம் மிகவும் குறுகலாக இருக்கிறது. அகலப்படுத்தவேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். இவ்வளவு குறுகலாக இருக்கும்பொழுது சில சமயங்களில் அதற்குச் சேதம் வரலாம். ஆகவே, இந்த வேலைக்கு "டாப் பிரையாரிட்டி" கொடுத்து அந்தப் பாலத்தை அகலப்படுத்துவதற்கு இப்பொழுது ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதற்கு தக்க நடவடிக்கை எடுத்து அகலப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஸ்பெஷல் கிராண்டு பற்றி சொல்லும்போது, சில ரோடுகள் இன்னும் செப்பனிடப்படவில்லை என்று அவர்கள் சொன்னார்கள். நான் முன்பு சொன்னபடி விசேஷமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் ரோடுகள் செப்பனிடுவதற்காக கிராண்டுகள் கொடுத்திருக்கிறோம். மேலும் இப்பொழுது மழை பெய்ததன் காரணமாக அநேக ரோடுகளுக்கு சேதம் ஏற்பட்டிருக்கிறது. அதற்காக 1961–62-ல் அதிகமாக செலவிடவேண்டுமென்று சொல்லி பிரதம என்ஜினியர் அவர்கள் அரசாங்கத்திற்கு எழுதியிருக்கிறார்கள். அதைப் பரிசீலனை செய்து அதற்குத் தக்க நடவடிக்கை எடுத்து பாதிக்கப்பட்ட பகுதிகளில் பாலங்கள் கட்டுவதற்கும், சேதப்பட்ட பகுதிகளில் உள்ள ரோடுகளை நன்கு வைப்பதற்கும் அரசாங்கம் ஏற்பாடு செய்யும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஸ்ரீமான் வீ. கே. கோதண்டராமன் அவர்கள், அவருடைய பகுதியில் இருக்கிற ரோடு நிலைமையைப் பற்றிச் சொன்னார்கள். அதற்கு முன்பே ஆரம்பத்திலேயே சொன்னேன். ஒவ்வொரு தொகுதியையும் எடுத்துக் கொண்டால், எல்லாத் தொகுதிகளிலும் 100-க்கு 100 மடங்கு செய்ய வேண்டிய எல்லா வேலைகளையும் செய்துவிட்டதாகச் சொல்ல முடியாது. அதுவும் மலைப் பிராந்தியத்தில் ரோடுகள் போடுவதில் எவ்வளவோ கஷ்டங்கள் இருக்கின்றன என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். அதுவும் ஆதிவாசிகள் இருக்கிற பகுதியில் ஆதிவாசிகளுக்காக ஒதுக்கியிருக்கிற பணத்திலிருந்து நல்லதோர் ரோடு போட்டு விட முடியாது. ஹைவேஸ் டிபார்ட்மெண்டு, அல்லது டிஸ்டிரிக்ட் போர்டு அதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். விசேஷமாக இப்பொழுது பின்தங்கிய ஆதிவாசி மக்கள் இருக்கிற பகுதிகளுக்கெல்லாம் மத்திய சர்க்கார் உதவி செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடு இருந்து வருகிறார்கள். சம்பந்தப்பட்ட கமிஷனரும் இப்பொழுதும் இங்கு வரப்போகிறார்கள். ஆகவே, மலைப் பிரதேசங்களுக்கு எவ்வளவு ஒத்தாசை உதவி செய்ய வேண்டுமோ, அதைச் செய்ய அரசாங்கம் முன்வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

"எஸ்.ஈ." பற்றிச் சொன்னார்கள். திருநெல்வேலி சர்க்கிள் என்ஜினியர் திருச்சியில் இருந்து வேலை பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். திருநெல்வேலி சூபரின்டெண்டிங் என்ஜினியர் ஏற்கெனவே திருச்சியில் புள்ளம்பாடி கட்டளை திட்டத்திற்காக ப்ராஜக்ட் சர்க்கிள் என்ஜினியராக பணியாற்றி வந்தார்கள். பிற்பாடு தான் திருநெல்வேலியை பிரித்தோம். அந்த வேலை முடியவில்லை. அந்த வேலை முடிந்த பிற்பாடு சூபரின்டெண்டிங் என்ஜினியர் திருநெல்வேலி வேறு தனியாக பிரிந்து விடுகிறது. மேலும் சரியான வீடும் கிடையாது. எக்ஸ்க்யூடிவ் என்ஜினியர் பங்களாவை கொடுத்துவிடலாம் என்று முதலில் நினைத்

தோம். பிற்பாடு ஒரு கட்டிடமே தனியாக கட்டிவிடலாம் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சூபரிண்டெண்டிங் என்ஜீனியர், திருநெல்வேலி இப்பொழுது திருச்சியில் இருக்கிறார்கள். கட்டிட வேலை முடிவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அது முடிந்தவுடன், அல்லது அதற்கு முன்னாலேயே அவர்கள் தலைமை ஸ்தலத்தை திருநெல்வேலியில வைத்துக் கொள்வார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஸ்ரீமான் பழனிசாமி கவுண்டர் அவர்கள் அவருடைய தொகுதியாகிய திருப்பூரைப் பற்றி பல கோரிக்கைகளை கேட்டிருக்கிறார்கள். பார்த்து பரிசீலனை செய்து எவ்வளவு தூரம் அவர்களது கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு முன் வரமுடியுமோ அவ்வளவுதூரம் முன்வருவோம் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். வீடுகள் அதிகப்படியாக கட்டித்தர வேண்டும் என்று சொல்லுகிறார்கள். வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டியதுதான். அதற்காக ரூ. 50 லட்சம் "ஸ்டாப் க்வார்டர்ஸ்"க்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. நல்ல முறையில் அவர்கள் சுகமாக வாழ்வதற்கு வீடுகள் கட்டிக்கொடுத்து ஏற்பாடு செய்யவேண்டும் என்றுதான் அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. போலீஸ் அன்பர்களுக்கு அதிகப்படியான வீடுகள் இப்பொழுதும் கட்டிக்கொடுக்கப்படுகின்றன. இது வரையிலும் 80 சதவிகிதம் நிறைவேற்றியிருக்கிறோம். அதைக் காட்டிலும் கூடுதலாகச் செய்வதற்கு சௌகர்யம் ஏற்படும்பொழுது செய்யப்படும். பி.டபிள்யூ.டி. சம்பந்தப்பட்ட அன்பர்களுக்கும் இம்மாதிரி நல்ல வசதிகள் செய்து கொடுக்க இந்தத் தொகை பயன்படும். மேலும் தேவையானால் அரசாங்கம் கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மதிப்பிற்குரிய சிதம்பரநாத நாடார் அவர்கள் சில வார்த்தைகளைச் சொல்லி பாராட்டினார்கள். பி.டபுள்யூ.டி. செக்ரடரி, பெருவழித் துறை என்ஜீனியர் ஆகியோர்களைப் பாராட்டினார்கள். என்னையும் கூடப் பாராட்டினார்கள். ரொம்ப சந்தோஷம். மந்திரியாக இருந்து பணியாற்றியிருப்பதால் அவர்களுக்கு மந்திரியினுடைய கஷ்டம் தெரியும். அப்படி மந்திரியாக இருந்தவர் நாங்கள் வேலை செய்ததைப் பற்றி பாராட்டியிருப்பது குறித்து உண்மையிலேயே மகிழ்ச்சி அடைகிறேன். பாம்பின் கால் பாம்புக்குத்தான் தெரியும் என்று சொல்லுவது போல, எப்படி கஷ்டப்பட்டு வேலை செய்கிறார்கள் என்பது அவருக்குத்தான் நன்றாகத் தெரியும், மந்திரியாக இருந்ததால் மந்திரியின் கஷ்டங்கள் அவருக்கு நன்றாக தெரியும், அவர்களுடைய தொகுதிக்குக் கூட போயிருக்கிறேன். அவர் சொன்ன காரியங்களைக் கூட செய்யவில்லை. அப்படியிருந்தும் அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். அவர்கள் சொன்ன காரியத்தை செய்யமுடியாது என்று நான் சொன்னபொழுது, அவர்களே நான சொன்னது நியாயம் என்று பின்னாலே உணர்ந்து கொண்டார்கள். அப்பேர்ப்பட்ட மாஜீ மந்திரியாக இருந்தவர் இப்பொழுது சட்டசபை அங்கத்தினராக இருக்கிறார். அவர்கள் பாராட்டியதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இதர அங்கத்தினர்களும் பாராட்டினார்கள். பிறபாடு சில குறைகளையும் சொன்னார்கள். குறைகள் சொல்லக்கூடாது என்று சொல்லவில்லை. சொல்ல வேண்டியதுதான். இம்மாதிரி பாராட்டியது எங்களுடைய கடமையை நன்றாகச் செய்வதற்கு உற்சாகத்தை ஊட்டும் முறையில் இருப்பதாக எடுத்துக்கொள்ளுவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கோவில்பட்டி தொகுதி அங்கத்தினர் ஸ்ரீமான் சுப்பையா அவர்கள் ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு தக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். கல்வி மான்யக் கோரிக்கை விவாதத்திற்கு பதில் அளிக்கையில் கனம் நிதி அமைச்சர் அவர்கள் இதைப் பற்றிச் சொன்னார்கள். வீடு கட்டிக்கொடுப்பதற்கு எவ்வளவு தூரம் உதவி செய்ய முடியுமோ அவ்வளவு தூரம் செய்வதற்கு திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. கட்டிடங்கள் கட்டுவதற்காக சூபரிண்டெண்டிங் என்ஜினியர் வைத்திருக்கிறோம். அவர்களுக்குக் கீழ் பல டிவிஷனல் என்ஜினியர்கள் இருக்கிறார்கள். அவர்கள் நன்றாக பணி



யாற்றிக் கொண்டு வருகிறார்கள். ஒரு சில இடங்களில் சில கோளாறுகள் இருக்கலாம். ஏதோ ஒரு இடத்தில் ஒரு செங்கல் அல்லது ஒரு சுவர் இடிந்து விழுந்து விட்டால், பூராவும் அப்படித்தான் இருக்கும் என்ற முடிவுக்கு வந்து விட முடியாது. அவர்கள் நல்ல முறையில் அநேக கட்டிடங்களை கட்டி முடித்திருக்கிறார்கள்.

DEPUTY SPEAKER : I have to inform the Hon. Minister that another **Demand has to be considered by the House to-day.**

**THE HON. SRI P. KAKKAN** : சம்பந்தப்பட்ட சீப் என்ஜினியரும், அவருக்குக் கீழே வேலை செய்கின்ற சூபரிண்டெண்டிங் என்ஜினியரும் நன்றாக வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். அதற்காக நான் அவர்களை பாராட்டுகிறேன். மேலும் நல்ல முறையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு அவர்கள் முன் வருவார்கள் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இன்னொரு மான்யத்தையும் இந்தச் சபை நிறைவேற்ற இருப்பதினால், இப்பொழுதும் நேரம் இல்லை. அநேக அங்கத்தினர்கள் நிகழ்த்திய பிரசங்கங்களுக்கெல்லாம் என்னிடத்தில் பதில் இருக்கிறது. எல்லாவற்றிற்கும் பதில் சொல்லுவதற்கு இப்பொழுது நேரம் கிடையாது. (குறுக்கீடு). குழித்தலை பாலத்தைப் பற்றிச் சொன்னார்கள். பரிசீலனை செய்து பார்க்கலாம். நான் எங்கு போனாலும், வீடு வேண்டும், ரோடு வேண்டும், மாடு வாங்குவதற்கு உதவி வேண்டும், பாலம் வேண்டும் என்றெல்லாம் கோரிக்கைகள் வருகின்றன. எல்லாவற்றையும் ஒரே சமயத்தில் செய்து முடித்துவிடமுடியாது. எல்லாவற்றையும் பார்த்து, பரிசீலனை செய்து எவ்வளவு தூரம் செய்ய முடியுமோ அவ்வளவு தூரம் செய்வதற்கு நடைமுறையில் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொண்டு, வெட்டுப் பிரேரணைகளை அங்கத்தினர்கள் வாபஸ் வாங்கிக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : Is the hon. Member Sri Kothandaraman withdrawing his cut motion? 1p.m

**SRI V. K. KOTHANDARAMAN** : I am pressing my cut motion.

DEPUTY SPEAKER : The question is—

'That the allotment of Rs. 8,76,57,200 under Demand XXVII—Civil Works—Works be reduced by Rs. 100.'

The cut motion was put and lost.

DEPUTY SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 8,76,57,200 under Demand XXVII—Civil Works—Works.'

The Demand was put and carried and the Grant was made.

The cut motion of Sri K. Sattanatha Karayalar to Demand XXVIII—Civil Works—Establishment and Tools and Plant was, by leave, withdrawn.

DEPUTY SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 1,67,28,600 under Demand XXVIII—Civil Works—Establishment and Tools and Plant.'

The Demand was put and carried and the Grant was made.

The cut motion of Sri K. Sattanatha Karayalar to Demand XLII—Capital Outlay on Civil Works was, by leave, withdrawn.

[23rd March 1961

DEPUTY SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 5,17,43,000 under Demand XLII—Capital Outlay on Civil Works.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXXII—STATIONERY AND PRINTING.

THE HON. SRI V. RAMAIAH : On the recommendation of the Governor I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 1,41,67,900 under Demand XXXII—Stationery and Printing.'

DEPUTY SPEAKER : Motion moved—

'That the Government be granted a Sum not exceeding Rs. 1,41,67,900 under Demand XXXII—Stationery and Printing.'

SRI K. Sattanatha Karayalar may move his cut motion.

SRI K. SATTANATHA KARAYALAR : Sir, I move the following cut motion :—

'That the allotment of Rs. 1,41,67,900 under Demand XXXII—Stationery and Printng be reduced by Rs. 100.'

DEPUTY SPEAKER : Cut motion moved—

'That the allotment of Rs. 1,41,67,900 under Demand XXXII—Stationery and Printing be reduced by Rs. 100'.

The motion and the cut motion are before the House for discussion.

* SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, I rise to support the cut motion. While doing so, I would like to make some suggestions. The Estimates Committee for the year 1958–59 has submitted a report. From a perusal of the report we find that they have made a number of recommendations. I want to know from the Hon. Minister whether some of the recommendations contained in that Report had been carried out. They have made very useful suggestions. If all the suggestions had not been carried out, the Hon. Minister may kindly go through them and do something in the matter.

The most important thing is the replacement of old obsolete machines. I do not know what steps have been taken with regard to replacement of spare parts, and whether this Government have taken steps to impress on the Government of India the necessity of allotting more foreign exchange for this. Unless we purchase new modern machines and also import the necessary spare parts, it will not be possible to keep pace with the work which is growing day by day.



23rd March 1961] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

Next is "Labour relations". Of course there has been very good and cordial relationhip between labour and management. My submission is incentive bonus system also should be introduced if possible with a view to giving more incentive to the workers, there. Otherwise there won's be much satisfaction. They are already doing very good work. But still something more should be done.

We find that there has been a hue and cry that important Acts are not available easily at the Government Press, when the public approach the Press for purchase of those publications. I would request the Hon. Minister to issue instructions to the officers concerned to stock more of these important Acts and Codes and important publications which are required by the public. This is a longstanding complaint. The Press is over-worked with other urgent work and probably they won't find time for this. This is important and essential.

So far as local bodies are concerned we find that Hoe and Company is having the monopoly. The result is they don't get forms in time. Important application forms which are urgently needed are not issued in time. Government must seriously think of increasing the activities of the Press and see whether it will not be possible for them to supply all forms that are required by the Panchayats and Panchayat Unions and then recover the cost from them. For that more shift system can be introduced.

Lastly we find that there is some amount of wastage in some Government departments; they have used more stationery than required . Government must see the desirability of making a budget provision for printing for each department. That had been suggested by the Estimates Committee. That should be gone into. On the whole I should pay encomums to the Hon. Minister that the administration of this department, especially at the present time, is exceedingly satisfactory. That is all my submission.

* SRI R. SRINIVASA IYER : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது கனம் எதிர்க் கட்சித் தலைவர் பாராட்டிப் பேசிய பிறகு இன்னும் அதிகமாகப் பேசத் தேவையில்லை, ஒன்றிரண்டு வார்த்தைகள் மட்டும் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது, போர்ட் செயின்ட் ஜார்ஜ் கெஜெட்டை ஒரு மாடலாக ரொம்ப நல்ல முறையிலே, ஏற்கனவே இருந்த கன்ப்யூஷனெல்லாம் போய், பல பார்ட்டுகளும் ஒவ்வொன்றும் ஒரு செக்ஷனைகப் போட்டு, தனித்தனியாக வருகிறதனால், பார்க்கிறவர்களுக்கு மிக்க நலமாக இருக்கிறது. (குறுக்கீடு) அது பார்க்கிறவர்களுக்குத் தான் உபயோகமாக இருக்கும் என்பதனால், "பார்க்கிறவர்களுக்கு" என்று சொன்னேன். அது இப்பொழுது ரொம்ப சௌகரியமாக இருக்கிறது.

இந்த அறிக்கை கொடுத்திருப்பதில், 13-வது பக்கத்திலிருந்து, 15-வது பக்கம் வரை **Amenities** என்று சொல்லப்பட்டிருக்கிறது. முக்கியமாக சென்னையில் கவர்மெண்ட் பிரஸ்ஸில் இருக்கக் கூடிய தொழிலாளிகள் ஒரு வருஷத்திற்கு முந்திக்கூட்டம் போட்டு, நாங்களெல்லாம் சிலபேர் போயிருந்தோம், அங்கே "**There exists a cordial relationship between the**

[Sri R. Srinivasa Iyer] [23rd March 1961

**Government and the workers** " என்று இந்த அறிக்கையின் 15-வது பக்கக் கடைசியில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இன்றைக்கு அவர்கள் மட்டும் நன்றி செலுத்தவில்லை. அவர்களுக்காக நானும் மற்றவர்களும் சர்க்காருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். கவர்ன்மெண்ட்பிரஸ் தொழிலாளர்களுக்கு வீடு கட்டப்போவதாக சொல்லப்பட்டிருக்கிறது. அதோடுகூட, இவர்களுக்கும் ரெயில்வேயில் போல, பிரீ பஸ் பாஸாவது கொடுத்து, அவர்கள் இருக்குமிடத்திலிருந்து தொழில் நிலையத்திற்கு போய்வர, சௌகரியம் செய்து கொடுத்தால் நலமாக இருக்கும். லேபர் யூனியனுக்குக் கட்டடம் கொடுத்து வசதி பண்ணியதனால்தான் அங்கே நல்ல சுமுகமான நல்லுறவு நிலவக் காரணமாக இருக்கிறது என்று நினைக்கிறேன். சுமுகமான சூழ்நிலை இருந்தால்தான் வேலை நன்றாக நடைபெறும். இதிலே சில குறைபாடுகளும் இருக்கின்றன. இரண்டொரு விஷயங்களை மட்டும் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஜாஸ்தியாகச் சொல்ல விரும்பவில்லை.

பிரஸ்ஸில் ப்ரூப் ரீடிங் என்று தனியாக ஒரு ப்ராஞ்சு இருக்கிறதோ என்னவோ. அசெம்பிளியில் கொடுக்கும் புத்தகங்கள், மற்ற அறிக்கைகள் எல்லாம் நன்றாக இருக்கிறது, ஒரு மிஸ்டேக் கிடையாது. ஆனால், ஸபார்டினேட் லெஜிஸ்லேஷன் கமிட்டிக்கு வரும் ரூல்கள், ஆக்ட்கள் இவையெல்லாம் மிக்க எழுத்துப் பிழைகள் உள்ளவைகளாக இருக்கின்றன. சில ஸென்டென்ஸ்களில் (**negative**) நெகடிவ்வே இல்லாமல் போய் அனர்த்தம் ஆகிவிடுகின்றன. ப்ரூப் ரீடிங் ப்ரஸ்ஸில் இருந்தால் நன்றாக வேலை செய்ய வேண்டும், இல்லாவிட்டால், ரப் ப்ரூப் பண்ணவேண்டும். அதில் மிஸ்டேக்குகள் இல்லாமல் இருக்கவேண்டும்.

அசெம்பிளி ப்ரொஸீடிங்ஸ் சம்பந்தப்பட்ட வரை, இரண்டு வருஷம் ஆகிறது இன்டெக்ஸ் வரவில்லை இன்னும். இங்கே கேட்டால் இன்டெக்ஸ் ப்ரூப் அனுப்பி விட்டோம் என்கிறார்கள். பல மாதங்களாகியும் அவை இன்னும் ப்ரஸ்ஸில் இருந்து வந்துசேரவில்லை. ஒரு வருஷம் முடிந்ததும் குறைந்தது மூன்று மாதத்திற்குள்ளாவது இன்டெக்ஸ் வர வேண்டும். நாங்கள் ப்ரொஸீடிங்ஸைப் பைண்ட் பண்ணி வைக்க அப்பொழுதுதான் சௌகரியமாக இருக்கும்.

கவர்மெண்ட் பிரஸ் விற்பனை விஷயத்தைப் பற்றி ஒரு சில வார்த்தைகள். அமைச்சரிடம் கூடச் சொன்னேன். அவர்கள் (பிரஸ்) பப்ளிக்கை ட்ரீட் பண்ணுவது மிக மோசம். ஒரு பிரசுரம் வாங்க ஒரு மணி, 1½ மணி காத்து நிற்கவேண்டியிருக்கிறது, மெனக்கடவேண்டியிருக்கிறது. ஒருவர் இருக்கிறது என்கிறார், மற்றவர் இல்லை என்கிறார். இந்த பப்ளிகேஷன் பிராஞ்சு மௌண்ட் ரோடில் இருப்பதை நிச்சயமாக திருத்தவேண்டும், சீர்திருத்தம் ரொம்ப அவசியம்.

ஆக்ட் வந்தவுடன் ரூல்ஸ் போட்டு அதை பப்ளிஷ் செய்கிறோம், உடனே அது "ஸோல்ட் அவுட்" ஆகி விடுகிறது. பின்னர், ஆக்ட்ஸ் அண்ட் ரூல்ஸ்வின் காப்பி கிடைப்பதில்லை. ரூல்ஸ் புதிதாக போடும்போது புதுப் புத்தகங்கள் போட்டாகவேண்டும். பழைய ப்ளாக்கை கலைக்காமல் வைத்திருந்தால்கூட பிரயோஜனம் உண்டு. அக்ட் ஆண்ட் ரூல்ஸ் இரண்டையும் சேர்த்து போடும் முறையில் பொதுமக்களுக்கு குறைந்த விலையில் கொடுக்கப்படுகிறது. ஆனால் அவைகளை கேட்கிற நேரத்தில் கிடைக்கும்படிச் செய்தால் நல்லது.

பின்னர் ஹைகோர்ட் பிரின்டிங்கை புதுக்கோட்டையில் செய்யப்போவதாக காணப்படுகிறது. இப்பொழுது ஹைகோர்ட்டில் இருப்பவர்கள் அநேகமாக தமிழ் ஜட்ஜஸ் ஆக இருப்பதால் தமிழ் டாக்குமெண்ட்ஸை ஆங்கிலத்தில் டிரான்ஸ்லேட் செய்து ப்ரிண்ட் செய்ய வேண்டாமென்று உத்தரவு போட்டு விட்டார்கள். இந்த ஹைகோர்ட் பிரின்டிங்கை புதுக்கோட்டையில் வைத்துக் கொண்டால் "டிலே" ஏற்படும். "ஜுடிஷியரியின் வொர்க்கிங்கை" நாம் வேகமாகச் செய்யவேண்டுமென்று சொல்லி வருகிறோம். ஆகவே இதை புதுக்கோட்டைக்கு மாற்றாமல் இப்பொழுதுள்ள பிரஸை இன்னும் விரிவுபடுத்தி, விஸ்தரித்து இந்த ஹைகோர்ட் பிரின்டிங்கை இங்கேயே வைத்துக்கொள்ள வேண்டும். வேண்டுமென்றால் வேறு சில வேலைகளை இங்கிருந்து மாற்றலாம். சென்ட்ரல் கவர்மெண்ட், லோக்கல் போர்ட்ஸ்



23rd March 1961] [Sri R. Srinivasa Iyer]

இப்படிப்பட்ட ஆபீஸ்களில் வேலைகளை அவர்களுக்கு வேண்டியதை பணம் வாங்கிக்கொண்டு ப்ரிண்ட் செய்து கொடுக்கப்படுவதாக கூறப்படுகிறது. இப்பொழுது ப்ரஸ்களின் தேவை அதிகமாகியிருக்கிறது, முன் பட்டுக் கோட்டையில் ஒரு பிரஸ் இருந்தது, இப்பொழுது அங்கு 9 ப்ரஸ் இருக்கின்றன. அவைகளுக்கு நல்ல வேலையும் இருக்கிறது. ஆகவே, இந்த லோக்கல் போர்ட் போன்றவைகளின் ப்ரின்டிங்கை கவர்மெண்ட் பிரஸில் வைக்காமல் ஹைகோர்ட் பிரின்டிங்கை இங்கு வைத்துக் கொண்டு, இதர வேலைகளை அந்தந்த ஜில்லாக்களிலேயே பிரிண்ட் செய்து கொள்ளச் சொல்லலாம்.

பின்னர் எம். எல். ஏ., எம். எல். சி. அதிகாரிகள் இவர்களுக்கு டயரி கொடுக்கிறார்கள். இதில் ஏன் பாகுபாடு இருக்கவேண்டும், ஒருவருக்கு நல்ல பேப்பரில் இருக்கக்கூடிய முறை, இன்னொருவருக்கு வெறும் பேப்பர் கவர் என்று ஏன் இந்த பாகுபாடு இருக்கவேண்டுமென்று தெரியவில்லை. இதேபோல் பல "ஸஜஷன்ஸை" செக்ரட்டரி அவர்களிடம் சொல்லியிருக்கிறோம். டைரிகள் நல்ல முறையில் கவர்ச்சிகரமாக இருந்தால் நன்றாகயிருக்கும்.

அடுத்தபடியாக, சிவில் லிஸ்ட், ஜுடிஷியல் லிஸ்ட் இவை பிரிண்ட் செய்யப்படுகிறது. இவை, ஒரு வருடம் கழித்து கிடைப்பதில் பிரயோஜனமில்லை. க்வார்டேர்லி லிஸ்ட் தயாரித்து முடிந்தவுடன் அது பப்ளி-க்கு கிடைக்க வசதியிருக்க வேண்டும். **Lists of Acts and Rules in force in Madras State** என்று ஒரு புத்தகம் இருக்கிறது. அது, "அப்-டு-டேட்டாக" இல்லை. அவ்வப்போது கரெக்ஷன் ஸ்லிப்ஸ் இஷ்யூ செய்யவேண்டும். நமது அஸெம்பிளி லைப்ரரியில் கூட கேட்லாக்கை கம்ப்ளீட்டாக, "ஆல்பபட்டிக்கல் ஆர்டரில் அரேஞ்சு" செய்து கம்ப்ளீட்டாக நன்கு அமைத்து இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை ரிப்போர்ட்டு வருகிறது. ஒரு ரூல் அப்ளை செய்ய அதன் காப்பியில்லாததால் அப்படி ஒன்று இருக்கிறதா என்று வேறு இடத்திற்கு சென்று, கலெக்டர் ஆபீஸ் சென்று வாங்கி உத்தரவிடவேண்டியிருக்கிறது. **Rules and Orders in force in our State up-to-date** ஆகயிருந்தால் மக்களுக்கு உதவியாகயிருக்கும். பின்னர், ரோனியோ ட்யூப்ளிகேட்டர்ஸ் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் கௌன்சிலிக்கும் ஒவ்வொன்று சப்ளை செய்யப்படவேண்டும். பின்னர், காக்கி காகிதத்தில் கருப்பு மை கொண்டு எழுத வேண்டாம். ஜில்லாக்களிலிருந்து வருகிற கடிதங்களை பார்த்தால் காக்கி காகிதத்தில் ரோனியோ செய்து வருகிறது, ஒரே மசியாகயிருக்கிறது. ஆகவே, இனி காக்கிப் பேப்பரில் எழுதவேண்டாம், அந்த பேப்பர் வேண்டாம். இந்த டிபார்டுமெண்ட் நல்ல முறையில் நடக்கிறது என்றிருந்தபோதிலும் சில சில குறைகளைத் திருத்தவேண்டியிருக்கிறது. தமிழ் டைப்ரைட்டிங் பாஸ் செய்தவர்களை இங்கிலீஷ் டைப்பிஸ்டாகவும், இங்கிலீஷ் டைப்ரைட்டிங் பாஸ் செய்தவர்களை தமிழ் டைப்பிஸ்டாகவும் போடுகிறார்கள். இதையெல்லாம் பார்த்து சிறு சிறு மாற்றங்கள் செய்யவேண்டியிருக்கிறது. எல்லா பஞ்சாயத்து யூனியன் கௌன்சிலுக்கும் ரோனியோ ட்யூப்ளிகேட்டர்ஸ் கொடுக்க வேண்டும். எலெக்ட்ரிசிட்டி உள்ள இடங்களில் எலெக்ட்ரிக் ட்யூப்ளிகேட்டரும், அது இல்லாத இடங்களில் மெக்கானிக்கல் ட்யூப்ளிகேட்டரும் கொடுக்கவேண்டும், அவசியம் கொடுக்க வேண்டும். (மணி அடிக்கப்பட்டது) தமிழ் டைப்பிஸ்ட்களை கூடுதலாக "ட்ரெயின்" செய்யவேண்டும் . . .

**DEPUTY SPEAKER:** Out of 30 minutes the hon. Member has taken 15 minutes.

**SRI A. GOVINDASAMI:** தலைவர் அவர்களே சர்க்கார் காரியாலயங்களுக்கு வழங்கக் கூடிய காகிதங்கள், மற்ற அத்தியாவசிய பொருள்களை வாங்குவது குறித்தும், சர்க்கார் அச்சகம் குறித்தும் கொண்டு வரப் பட்டிருக்கிற மான்யத்தின் பேரில் இதிலுள்ள சில குறைபாடுகளை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஸ்டேஷனரி அன்ட் ப்ரின்டிங்க்கு ஒரு கண்ட்ரோலர் போடப்பட்டிருக்கிறது. ஸ்டேஷனரிக்கு மட்டும் ஒரு கண்ட்ரோலர் இருக்க வேண்டும். ஆனால் பிரின்டிங்க்கு போடப்படுகிற கண்ட்ரோலர் அச்சுவிவகாரங்களில் தேர்ந்தவராக, அனுபவம்

உள்ளவரை போட வேண்டுமென்பது என கோரிக்கை. அது மட்டுமல்ல. ஒரே ஒரு லேபர் ஆபீசர்தான் போடப்பட்டிருக்கிறார். 3,000 தொழி லாளர்களுக்கு ஒரு லேபர் ஆபீசர் போதாது, குறைந்தது இரண்டு லேபர் ஆபீஸர்களாவது இருக்க வேண்டும். லேபர் ஆபீஸருக்கு போதுமான அதிகாரம் கொடுத்திருப்பதாக தெரியவில்லை. அவருக்கு வேண்டிய அதிகாரங்கள் கொடுத்தால்தான் வேண்டிய சௌக ரியங்களை அவர் செய்து கொடுக்க முடியும். அதிகாரம் இல்லாததால் மற்ற அதிகாரிகள் அவர் சொல்வதைக் கேட்காது அலட்சியப்படுத்துவதாகத் தெரிகிறது. ஆக, போதுமான அதிகாரங்கள் லேபர் ஆபீஸருக்கு கொடுக்கப் படவேண்டும். பின்னர், சர்க்கார் காரியாலயங்களில் வேலை செய்யக்கூடிய கீழ்த்தர சிப்பந்திகளுக்கு கதர் உடை வழங்குகிறார்கள். கதர் உடைக்கு பதிலாக அவர்களுக்கு கைத்தறி உடை வழங்கவேண்டுமென்று இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். கதர் உடை தாங்காது. கீழ்த்தர சிப்பந்திகள் அதிக நேரம் அதிகமாக உழைக்கக் கூடிய நிலையில் இருப்ப தால் வேர்வை பட்டு கதர் சீக்கிரத்தில் கிழிந்துவிடும். ஆகவே, கதருக்கு பதிலாக நல்ல உறுதியான கைத்தறி துணி வழங்கவேண்டும். (குறுக்கீடு) நானும் கதர் போட்டுக்கொண்டிருந்தவன்தான். இப்பொழுதுதான் கதர் கட்டிக்கொண்டு சிலர் இங்கு வந்திருக்கிறார்கள்.

**DEPUTY SPEAKER**: கனம் அங்கத்தினருடைய டைம் ஆகிவிட்டது.

**SRI A. GOVINDASAMI**: பின்னர், டைப்ரைட்டிங் மெஷீன் கள் பல பழுதடைந்து கிடப்பதை நான் நேரில் போனபோது பார்த்தேன். பழுதடைந்த உடனே ஏலத்தில் போடவேண்டுமென்ற மனப்பான்மைதான் ஏற்படுகிறதே தவிர அதை ரிப்பேர் செய்து உபயோகிக்கவேண்டுமென்ற எண்ணம் வருவதில்லை. இந்த அறிக்கையில் அவைகளை ஏலத்தில் விட்டு 18,190 ரூபாய் வந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஏலம் விடுவதற்குப் பதிலாக அவைகளை ரிப்பேர் செய்து உபயோகித்தால் இன்னும் வசதியாகயிருக்கும். அதில்லாமல் ஏலம் போடவேண்டுமென்ற மனப்பான்மை வரக்கூடாது.

மேலும், முனிசிபாலிட்டிகளுக்குள்ள பாரங்களை அச்சிடுவதற்காக ஹோ ஆண்ட் கோ கம்பெனிக்கு ஆர்டர் கொடுத்திருக்கிறார்கள். அதையும் தடுத்துநிறுத்தி சர்க்கார் அச்சகத்திலேயே அச்சடித்துக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் தேவையான சமயத்தில் எல்லா பாரங்களையும் கொடுக்க முடியும். அதோடு இப்போது புதிதாக, பஞ்சாயத்து ஆபீஸ்கள், பிளாக் ஆபீஸ்கள் இவைகள் எல்லாம் நியமிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளில் போதிய ஸ்டேஷனரிகள் இல்லை, போதிய டைப்ரைட்டிங் மெஷின்கள் இல்லை என்று சொல்லப்படுகிறது. இதனால் வேறு ஆபீஸ்களில் போய் டைப் செய்ய வேண்டியிருக்கிறது. இதனால் பல தொல்லைகள் ஏற்படுகின் றன. ஆகவே புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் எல்லா ஆபீஸ்களுக்கும் அவர்களுக்கு தேவைப்படுகின்ற எல்லா பொருட்களையும் வழங்க வேண்டும். இன்றைய தினம் வேஸ்ட் பேப்பர் பிரஸ் கட்டிங் இவைகளை தேக்கி வைத் திருக்கிறார்கள். இந்த இடத்திற்கு போதுமான பாதுகாப்பு இல்லை. இதை அமைச்சர் அவர்கள் வேண்டுமானால் போய் நேரிடையாகப் பார்க்கலாம். பந்தோபஸ்தான இடத்தில் இதை தேக்கி வைத்திருப்பதுதான் நல்லது. ஸ்டேஷனரி சாமான்களை அடிக்கடி கோடவுனிலிருந்து லாரிகள் மூலம் கொண்டுவருகிறார்கள். இவ்விதம் உபயோகப்படுத்தப்படும் கவர்மெண்ட்பிரஸ் லாரி ரிப்பேராகி விட்டால் வெளியிலிருந்து லாரிகளை வாடகைக்கு அமர்த்தி சாமான்களை கொண்டுவருவதாக தெரிகிறது. இவ்விதம் ஏன் வெளியி லிருந்து லாரிகளை வாடகைக்கு அமர்த்த வேண்டும். டிரான்ஸ்போர்ட் வண்டிகளையே ஏன் இதற்கு உபயோகிக்கக் கூடாது, அதோடு அடிக்கடி இந்த கவர்மெண்ட் பிரஸ் லாரிக்கு ஏன் ரிப்பேர் ஏற்படுகிறது என்பதையும் கவனிக்க வேண்டும். நம்முடைய சர்க்கார் பிரஸ் 130 ஆண்டுகளுக்கு முன் தோன்றியது. செக்கண்ட் ஹாண்ட் டைப்புகளையும் 10 ஆட்களையும் கொண்டு ஆரம்பித்த பிரஸ் இப்போது சுமார் 3,000 தொழிலாளர்கள் கொண்ட அச்சகமாக விளங்குகிறது. அதோடு ஐந்து பிரிவுகளாக வேலை செய்கின்ற அளவுக்கு பெரிய பிரஸாக விளங்குகிறது. ஆகவே இதை மாவட்ட ரீதி





யிலும் விஸ்தரிக்க வேண்டும். அப்போதுதான் மாவட்டங்களிலுள்ள ஆபீஸ் களுக்குள்ள வேலைகளை கவனிக்க முடியும். இன்றைக்கு முக்கியமாக வோட்டர்ஸ் லிஸ்ட் அச்சடிக்கிறோம். இதில் ஏராளமான தவறுகள் வரு கின்றன. இறந்து போனவரின் பெயர்கள் எல்லாம் லிஸ்டில் வருகின்றன. இதிலும் முக்கிய கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கி றேன். குறிப்பாக அச்சகத்தில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்குவதில் நியாயம் வழங்கப்படவில்லை என்ற குறை இருந்து கொண்டிருக்கிறது. தொழிலாளர் தலைவர் கோவிந்தசாமி என்பவரை திரும்பவும் வேலைக்கு (ரீ எம்ப்ளாய்மெண்ட்) அமர்த்திக்கொண்டதின் காரணமாக அவர்களுக்குள் ஏதோ தகராறு இருந்து கொண்டிருப்பதாக தெரிகிறது. அதோடு இந்த அறிக்கையில் ஸ்டேஷனரி அஸோஸியே ஷனைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் பிரின்டிங் அஸோஸியேஷ னைப்பற்றி சொல்லப்படவில்லை. இதிலிருந்தே அவர்களிடத்தில் ஏதோ குழப்பம் இருந்து வருவது தெரிகிறது. இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அச்சகத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு வேலை நேரத்தில் பன், டீ, இவைகள் கொடுக்கப்படுகின்றன. பன் கொடுப்பதில் நல்ல பன் கொடுப்பதில்லை என்றும், ஊசிப்போன பன், கொடுக்கப்படுகிறது என்றும், முன்னால் 7 ந.பை. வில் கொடுத்த பன், இப்போது அதை விட குறைந்த 5½ ந.பை, பன் கொடுக்கப்படுகிறது என்றும் சொல்லப்படுகிறது. இவ் விதம் இருக்கின்ற குறையை நிவர்த்தி செய்து தரவேண்டும் என்று கேட் டுக்கொள்கிறேன். அதோடு தொழிலாளர்கள் இதில் இரண்டு ஷிப்ட் வேலை செய்கின்ற நேரத்தில் அவர்களுக்கு அதிக வசதி செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். "காயின் எக்சேஞ்ச்"சில் ஏற்பட்டிருக்கின்ற கஷ்டங்கள் காரணமாக ஸ்பேர் பார்ட்ஸ் கிடைப்பதில்லை என்று சொல்லப் படுகிறது. இதன் காரணமாக மெஷின்கள் வேலை செய்யாமல் தடைப் பட்டு நிற்கிறது. இதிலும் தக்க கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்ஸென்டீவ் போனஸ் கொடுக்கின்ற விஷயத் தில் சர்க்கார் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். முக்கியமாக, இதில் என்னவெல்லாம் செய்யவேண்டும் என்று எஸ்டிமேட் கமிட்டி சிபாரிசு செய்திருக்கிறது. அதை அமல் நடத்துவதற்கு முயற் சிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தனிப்பட்ட அச்சகங்களில் வேலைகள் கொடுப்பதற்காக 6 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ரிவைஸ்ட் எஸ்டிமேட்டில் பிரைவேட் கம்பெனிகளுக்கு இன்னும் அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. (மணியடிக்கப்பட்டது) காரியாலயங்களில் சாதாரண பேனுக்கள் கொடுக்கப்படுகிறது, இதற்குப் பதிலாக பௌண்டன் பேனுக் கள் கொடுக்கப்படவேண்டும். அதோடு அதிகாரிகளுக்கு சப்ளை செய்யப் படும் "க்யிங்க்" சரியான முறையில் பயன்படுத்தப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. இவைகளைப்பற்றி எல்லாம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**SRI K. SATTANATHA KARAYALAR**: கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இந்த மான்யத்தின் மீது ஒன்றிரண்டு வார்த்தை கள் சொல்ல விரும்புகிறேன். ஸ்டேஷனரி சப்ளையைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு டிபார்ட்மெண்டிலும் அவரவர்களுக்கு எவ்வளவு தேவை என்பதை குறிப்பிட்டு இண்டண்ட் அனுப்புகிறார்கள். கண்ட்ரோலரை பொறுத்தவரையில் அவர்கள் குறிப்பிட்ட சதமானத்தை கணக்காக வைத்துக்கொண்டு அந்த அடிப்படையில் வெட்டிக் குறைத்து மீதியை அனுப்பிக் கொடுக்கிறார்கள். அவர்களுடைய சப்ளையைப் பொறுத்து இந்தக் குறைவை அவர்கள் கைக்கொள்கிறார்கள். ஏற்கனவே ஒவ்வொரு டிபார்ட் மெண்டிலும் கொடுக்கின்ற ஸ்டேஷனரி போதாது என்று சொல்லிக் கொண்டிருக்கிற இந்த ஆண்டு மதிப்பீட்டில் சுமார் 65 லட்சம்தான் தேவை என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் முன் ஆண்டில் 68 லட்சமாக இருந்தது. எப்படி குறைந்தது? விலைவாசிகள் எல்லாம் உயர்ந்திருக் கிறது. எழுதுபொருட்களின் விலைகளும் அதிகமாக உயர்ந்துகொண்டேதான் போகின்றன. மேலும் ஒவ்வொரு டிப்பார்ட்மெண்டிலும் எழுதுபொருட் கள் அதிகமான அளவில் தேவைப்படுகின்றன. ஆகவே செலவினத்தில்

[Sri K. Sattanatha Karayalar] [23rd March 1961

குறைவாக காண்பித்திருப்பது சரியல்ல என்று நான் கருதுகிறேன். இதில்
இன்னும் அதிகமான அளவில் நிதி ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். பொதுவாக இந்த இலாகா நல்ல முறையில் செயலாற்றி
வருகிறது என்பது உண்மை. இருப்பினும் பல புத்தகங்கள், பல பிரசுரங்கள்,
பல பாரங்கள் தேவைக்குத் தக்கபடி அச்சடிக்கப்படுவதில்லை என்கின்ற குறை
இருந்து கொண்டிருக்கிறது. இதற்கு இந்த இலாகா பொறுப்பில்லை
என்பது தெரிந்த விஷயம் தான். ஒவ்வொரு டிப்பார்ட்மெண்டுக்கும்
எவ்வளவு தேவை என்பதை இந்த இலாகா அறிந்து கொண்டு அச்ச
டிப்பது இப்போதுள்ள முறையில் முடியாது. ஆகவே இதை பரிசீலனை
செய்து ஒவ்வொரு டிப்பார்ட்மெண்டிலும் எவ்வளவு தேவை என்பதை
அறிந்து, ஒவ்வொரு பிரசுரத்திலும் எவ்வளவு விற்பனைக்குத் தேவைப்படும்
என்பதை கணக்கிட்டு அதன் பிரகாரம் அச்சிட வேண்டும். எந்தெந்த
சட்டங்களில் எத்தனை காப்பிகள் தேவை என்பதை முன் கூட்டியே கணக்
கிட்டு அதற்கு தக்கபடி அச்சடிக்கவேண்டும். அப்போது தான் இதற்காக
தயார் செய்யப்பட்ட பிளாக்குகளையும் பிரஸில் வைத்திருக்க முடியும்.
ஆகவே இதில் நல்ல கவனம் செலுத்தி தேவைக்குத் தகுந்தவாறு புத்த
கங்களை அச்சடித்துக் கொடுக்கக்கூடிய வகையில் வேண்டிய நடவடிக்கை
கள் எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். டைப்-ரைட்டர்களை
பழுது பார்ப்பதிலும், டைப் ரைட்டர்கள் சப்ளை செய்வதிலும் மிகவும் கால
தாமதம் ஏற்படுவதாக சொல்லப்படுகிறது. இவ்விதமில்லாமல் துரிதமாக
நடவடிக்கை எடுக்கவேண்டும். அதோடு அதிகமான அளவில் டைப்ரைட்
டர்களையும் வாங்க வேண்டும். இப்போதுள்ள கையிருப்புகள் போதாது
என்று சொல்லப்படுகிறது. அதையும் அதிகப்படுத்த நடவடிக்கை எடுக்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். .

அச்சகத்தைப் பொறுத்தவரையில், இந்தியாவிலுள்ள பெரிய அச்ச
கங்களில் நமது அச்சகம் ஒன்றாக விளங்குகிறது. ஆனால் இப்போதுள்ள
தரத்தை இன்னும் உயர்த்தவேண்டும். குறிப்பாக சென்னையிலுள்ள
"சந்தமாமா" அச்சகத்தை அமைச்சர் அவர்கள் போய் பார்த்திருப்பார்கள்
என்று நம்புகிறேன். அவர்கள் அச்சு தொழிலை ஒரு கலையாக கருதி,
10, 14 மொழிகளில், பார்ப்பவர்கள் மிகவும் பிரமிக்கத்தக்க அளவில்
அச்சகத்தை ஏற்படுத்தி வைத்திருக்கிறார்கள். யுனைட்டட் ஸ்டேட்டிலிருந்து
வெளிவந்து கொண்டிருந்த "ரீடர்ஸ் டைஜஸ்ட்" டின் பிரதியை இந்தி
யாவிலிருந்து வெளியிடுவதற்கு இந்த அச்சகத்திலிருந்து அச்சடிக்கலாமா
என்று கூட முயற்சி செய்தார்கள் என்று தெரிகிறது. அந்த அளவுக்கு
நல்ல முறையில் கலை நுணுக்கம் நிறைந்த ஒரு அச்சகமாக வைத்துக்
கொண்டிருக்கிறார்கள். அதேபோன்று நமது அச்சகத்தை கொண்டுவர
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஃபார்ம் முதலியவைகளை,
திருச்சி, மதுரை போன்ற ஜில்லாக்களில் அச்சகத்தை ஏற்படுத்தி அச்சடித்து
விட்டு, இதை ஒரு நல்ல தொழில் நுணுக்கமுள்ள அச்சகமாக வைத்திருக்க
வேண்டும். அதோடு பொதுவாக (மாஸ்-ஸாக) வருகின்ற வேலைகளை
பிற அச்சகங்களில் கொடுப்பதை நிறுத்தவேண்டும். தனியார் துறையில்
அச்சடிக்க கொடுப்பதற்காக இதில் இரண்டு லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்
கிறது. இதை அடியோடு நிறுத்தவேண்டும், அதோடு இம்மாதிரிப்பட்ட
வேலைகளை நமது அச்சகத்திலேயே அச்சடித்துக் கொடுப்பதற்கு வழிவகை
செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த அளவுக்கு இந்த
அச்சகம் விஸ்தரிக்கப்படவேண்டும். ஸேல்ஸ் செக்ஷனைப் பொறுத்தவரை
யில், எந்த விதமான லாப நோக்கத்தையும் கருதாமல், இங்கு மாத்திர
மல்லாமல், திருச்சி, மதுரை போன்ற இடங்களிலும் மக்களுடைய தேவையை
பரிசீலித்து அறிந்து கொள்ளக்கூடிய வகையில் அங்கேயும் ஸேல்ஸ்
செக்ஷனை கொண்டு வரவேண்டும். பஞ்சாயத்து சட்டத்தை நாம் அமலில்
கொண்டு வரப்போகிறோம். அதுபோல் வேறு பல சட்டங்கள் இருக்
கின்றன. அவைகள் போதிய அளவு கிடைக்க வேண்டும். இந்த இலாகா
அதற்கு பொறுப்பு இல்லை என்றாலும், இதன் கீழ் இருக்கின்ற ஸேல்ஸ்
செக்ஷன் இதனுடைய தேவைகளை பரிசீலித்து அதற்கேற்றபடி அச்சடிக்க
வேண்டும். ஆகவே இந்தப் பொறுப்பை இந்த இலாகாவே எடுத்துக்
கொள்ளவேண்டும். அப்போதுதான் எதிர் காலத்தில் நல்ல முறையில் வேலை
செய்ய முடியும். அதிலும் தமிழில் பல சட்டங்கள் பிரசுரம் செய்யவேண்டி



23rd March 1961] [Sri K. Sattanatha Karayalar]

யிருக்கிறது. இவைகளை எல்லாம் கவனித்து நல்ல முறையில் நடவடிக்கை
களை எடுக்க வேண்டும் என்று கோரிக்கொண்டு எனது வார்த்தைகளை
முடித்துக்கொள்கிறேன்.

**THE HON. SRI V. RAMAIAH**: கனம் உதவி சபாநாயகர் அவர்
களே, இந்த இலாகாவின் மான்யக் கோரிக்கை விவாதத்தின் மீது
4 அங்கத்தினர்கள் பங்கெடுத்துக் கொண்டார்கள். இன்னும் பல
அங்கத்தினர்கள் இதில் பேசுவதற்கு ஆசைப்படுவதாக இருந்தாலும் நேரம்
குறைவாக இருந்ததின் காரணமாக அங்கத்தினர்கள் பிரசங்கம் எல்லாம்
சுருக்கமாக இருந்தது. இருந்தாலும் அங்கத்தினர்கள் கனம் ஸ்ரீனிவாச
அய்யர், கனம் கரையாளர் போன்றவர்கள் பல நல்ல கருத்துக்களை எடுத்துச்
சொன்னார்கள். குறிப்பாக ஸேல்ஸ் டிபார்ட்மெண்டைப் பொறுத்த
மட்டில் கஷ்டங்கள் இருக்கின்றன என்று சென்ற வருஷமே கனம்
ஸ்ரீனிவாச அய்யர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதில் ஓரளவுக்கு சீர்
திருத்தம் அடைந்திருக்கிறது என்பது என்னுடைய நம்பிக்கை. இன்னும்
தனிப்பட்ட ஸ்தாபனங்களிலே வியாபாரம் எவ்விதம் நல்ல முறையிலே
பக்குவமாக நடக்கின்றதோ அந்த முறையில் இங்கும் நடப்பதற்கு என்
னென்ன செய்யவேண்டுமோ அவற்றையெல்லாம் இந்த வருஷத்தில் கண்ட்
ரோலர் அவர்கள் செய்ய முன் வருவார்கள் என்பதை சொல்லிக்கொள்
கிறேன்.

DEPUTY SPEAKER: I presume the House will give permission to sit beyond 1-30 or till the hon. Minister finishes his reply.

**THE HON. SRI V. RAMAIAH**: இன்னும் அங்கே கொடுக்கக் 1-30
கூடிய பிரசுரங்களில் போதுமான அளவு கிடைக்கவில்லை என்று அவர்கள் p.m.
சொன்னார்கள். அதற்குப் பதில் சொல்லுவது போல கனம் அங்கத்தினர்
கரையாளர் அவர்களும் பிரசுரங்களை அச்சிடுவதில் எத்தனைக் காப்பிகள்
வேண்டுமென்று நிர்ணயம் செய்வது சம்பந்தப்பட்ட இலாகாக்களைச் சேர்ந்த
தாக இருந்தாலும், துரிதமாகக் கிடைக்க என்னென்ன செய்ய வேண்டுமோ
அதை அரசாங்கம் செய்து வருகிறது. அதே போல எதிர்க் கட்சித் தலைவர்
அவர்கள் இந்த இலாகா இன்னும் நல்ல முறையில் செயல்பட எஸ்டி
மேட்ஸ் கமிட்டியின் அறிக்கையைச் சுட்டிக் காட்டிச் சொன்னார்கள். எந்
தெந்த மாறுதல்களை எவ்வப்பொது செய்ய வேண்டுமோ அவைகளைச்
செய்வதற்கு எனது இலாகா தயங்காது என்று சொல்லிக்கொள்ள
விரும்புகிறேன்.

ஒரே ஒரு கருத்தைத்தான் வலியுறுத்திச் சொல்ல வேண்டுமென்று
ஆசைகொண்டு அதைச் சொன்னால் போதும் என்று நினைக்கிறேன்.
எதிர்க் கட்சியைச் சேர்ந்த கனம் அங்கத்தினர் கோவிந்தசாமி
அவர்கள் பிரிண்டிங் பிரஸில் இருக்கக் கூடிய வொர்க்கர்ஸ்
குறித்து ஒன்றும் சொல்லவில்லை இந்த அறிக்கையில் என்று சொன்னார்
கள். அவர்கள் அதைச் சுட்டிக்காட்டிச் சொன்னதற்கு மிகவும் சந்தோஷ
மடைகிறேன். உண்மையில் ஏன் அதிகமாக அதை வலியுறுத்திச் சொல்ல
வில்லை என்றால் எனது நினைப்பு பூராவும் அவர்கள் பக்கத்தில் இருக்க
வேண்டும் என்பதற்காகத்தான் எனது ஆரம்ப உரையில் சொல்லவில்லை.
அவர்கள் சொன்னார்கள் தொழிலாளர்கள் மத்தியில் குழப்பம் இருப்ப
தாக. என்றால் உறுதியாகச் சொல்ல முடியும். இந்த இலாகாவில்
உள்ள 3,000 தொழிலாளர்களை நன்றாகப் புரிந்துகொண்டிருக்கக்கூடிய
காரணத்தினால் இந்த இலாகாவுக்கு மட்டுமல்ல, இந்த மாநிலத்திற்கே
இந்த 3,000 தொழிலாளர்கள் காட்டியிருக்கும் வழியைப் பார்க்கும்
போது கடந்த 3—4 வருஷங்களில் அற்புதமாக வழி காட்டியிருக்கிறார்கள்.
அவர்களுக்கு தேச பக்தி இருக்கிறது. இந்த அறிக்கையை கொடுக்கும்
போது ஆரம்பக் கட்டத்திலேயே இந்த பிரிண்டிங் பிரஸ் ஈஸ்ட்டிலே,
அதாவது மூன்று கான்டினென்ட்ஸை எடுத்துக்கொண்டால், இதுதான்
மிகப் பெரிய அச்சகமாக அமைந்திருக்கிறது. ஆசியா, ஆப்பிரிக்கா,
ஆஸ்ட்ரேலியா இந்த மூன்று கான்டினென்ட்ஸைப் பார்க்கும்போது நமது
சென்னையில் இருக்கக்கூடிய இந்த அச்சகம் தான் மிகப் பெரிய அச்சகமாக
இருக்கிறது. அந்த நிலை ஏற்படக் காரணம் அங்கு செயல்படக்கூடிய

தொழிலாளர்கள் அற்புதமாக ஒத்துழைப்புக் கொடுத்ததுதான். அதி
லும் முக்கியமாக ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டியது சென்னை அச்ச
கத்தில் டபிள் ஷிப்ட் இருக்கிறது. இந்த டபிள் ஷிப்ட் முடியுமா, முடியாத
என்ற நிலை, பல சங்கடங்கள் ஒரு வருஷம் அல்ல, இரண்டு வருஷம்
அல்ல, பல வருஷங்களாக இருந்து வந்தது. இரண்டு தொழிற் சங்கங்கள்
இருந்து இரண்டு நல்ல தலைவர்கள் தான் நடத்திச் சென்றார்கள். இரண்டு
தலைவர்கள் இரண்டு சங்கங்கள் என்று சொன்னால் ஒரு பகுதி வேண்டு
மென்று சொன்னால் மற்றொரு பகுதி வேண்டாமென்று சொல்லும்.
பிறகு இரண்டு தொழிற் சங்கத் தலைவர்களும் விலகிக்கொண்டு அந்த
தொழிலாளர்களிலேயே ஒருவரைத் தேர்ந்தெடுத்து, இரண்டையும் ஒன்
றாக ஆக்கியதில் ஒற்றுமை ஏற்பட்டு எல்லோரும் ஒரு முகமாக
அப்படி டபிள் ஷிப்டுக்கு முயற்சி எடுத்து வெற்றிகரமாக அமைக்கவேண்டும்
என்ற உறுதி கொண்டதால் இந்த அச்சகத்தில் இவ்வளவு பெரிய வெற்றி
ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் செய்த முடிவினால் எங்களுக்குத் தெரியும்
ஒவ்வொரு தொழிலாளிக்கும் கொஞ்சம் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.
அத்தகைய நஷ்டத்தையும் பெரு மனதோடு ஏற்றுக்கொண்டு அவர்கள்
செய்யக் கூடிய தியாகம் மூலமாக, இந்த சென்னை நகரத்தில் மேலும்
1,000 குடும்பங்களுக்கு வாழ்க்கை வசதியைச் செய்து கொடுக்க முடியும்
என்று ஒப்புக்கொண்டு இன்றையதினம் இந்த அச்சகத்திலே 3,000 தொழி
லாளர்களுக்கு மேல் வேலை பார்க்கிறார்கள்—நன்றாகத் திறமையாக வேலை
பார்க்கிறார்கள். 3,000 பேர்கள் இருக்குமிடத்தில் ஏதாவது கொஞ்சம்
மனத்தாங்கல் இருக்கலாம். கனம் அங்கத்தினர் கோவிந்தசாமி அவர்
களும், மற்றவர்களும் இப்படிப் பிளவுபடுத்த வேண்டாமென்று கேட்டுக்
கொள்ளுகிறேன். அவர்களுடைய கஷ்டங்கள் எனக்குத் தெரியும். அவர்
களுடைய கஷ்டங்களைப் புரிந்துகொண்ட காரணத்தினால்தான் மற்ற இடங்
களில் போதுமான வசதிகளைச் செய்து கொடுக்காமல் தள்ளிப் போடுகிறார்
களே அந்த மாதிரி இல்லாமல், அரசாங்க அச்சகத்தில் பன்னும், டீயும்
கொடுக்க வேண்டும் என்று, பொறுப்போடு நல்ல முறையில் கொடுக்க
வேண்டும், நல்ல உணவு கொடுக்க வேண்டும் என்ற முறையில் கண்
காணிப்பாகப் பார்க்கிறோம். 3,000 பேர்களுக்குக் கொடுப்பதில் ஒரு பன்
னில் தவறு ஏற்பட்டால் அதுதான் தெரிகிறது. பாக்கி இருக்கக்கூடிய
2,999 நன்றாக இருப்பது தெரியாது. அது எதிர்க் கட்சியினருடைய . . .

**SRI A. GOVINDASAMI :** ஒரு ரொட்டி மோசமாக இருந்த
தாகச் சொல்லவில்லை, ஒரு ரொட்டி 7 நயா பைசா வீதம் வாங்கிக்
கொடுத்து வந்ததை ஒரு ரொட்டி $5\frac{3}{4}$ நயா பைசா என்ற விலையில் வாங்கிக்
கொடுப்பதற்குக் காரணம் என்ன என்று விளக்க வேண்டும்.

**THE. HON. SRI V. RAMAIAH :** நான் சமாதானம் சொல்லித் தப்பித்
துக்கொள்ள விரும்பவில்லை. ஏதாவது கஷ்டம் இருந்தால்
அதை நிவர்த்தி செய்ய என்றைக்கும் தயங்க மாட்டேன். அவர்களுடைய
ஒத்துழைப்பினால்தான் இந்த அரசாங்கத்திற்குப் பொது மக்கள் மத்தியில்
நல்ல பெயர் ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்கு இருந்த பல கஷ்டங்கள்
நீக்கப்பட்டிருக்கின்றன. அவர்களுடைய ஒத்துழைப்போடு இந்த அச்ச
கத்தை இன்னும் உயர்ந்த நிலைக்குக் கொண்டுவர ஆசை கொண்டிருக்
கிறேன். மெஷினரி வாங்கிவிட்டால் போதாது. வேலை பார்ப்பவர்கள்
நல்ல உணர்ச்சியோடு, ஊக்கத்தோடு வேலை பார்த்தால் நாம் பெருமை
யோடு ஈஸ்ட்டிலேயே இதுதான் பெரிய அச்சகம் என்று சொல்லுகிறோமே
அதே மாதிரி கூடிய விரைவில் கனம் அங்கத்தினர் கரையாளர் அவர்
கள் சொன்னதைப் போல பெரிய அச்சகம் மட்டுமல்லாமல் உயர்ந்த—
சிறந்த—நிறைந்த அச்சகம் என்ற பெயரை அடைய வேண்டும் என்பது
தான் எனது ஆசை—எனது இலாகாவின் ஆசை. அவ்வளவு நல்ல
தொழிலாளர்கள், நல்ல ஆலோசனை சொல்லக்கூடிய தொழிலாளர்கள்,
தேச பக்தி கொண்ட தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இந்த சபையிலே
4 வருஷமாக இதைப் பற்றிப் பேசாவிட்டாலும், இந்த விவாதத்தை ஆரம்
பித்து வைப்பது நல்லது. இதிலே டபிள் ஷிப்ட் வெற்றிகரமாக நடப்பதை
கனம் அங்கத்தினர் கோவிந்தசாமி புரிந்துகொண்டு பேசியிருக்கிறார்.
கனம் அங்கத்தினர் கரையாளர் அவர்களுக்கு இதிலே கொஞ்சம் தெரியும்.





அவர்கள் கொஞ்சம் நல்லவர்கள். நன்றாக நடக்கக்கூடிய இந்த அச்ச
கத்திற்கும் கெடுதல் செய்யக்கூடாது என்று அவர்கள் பக்கத்தில் ஒரு சில
அதிருப்தி அடைந்த தொழிலாளர்கள் போனாலும் சிக்கிக்கொள்வதில்லை.
அவர்களே விலகிக் கொண்டார்கள். இந்த அச்சகத் தொழிலாளர்
களைப் பொறுத்த வரையில் ஒரு லேபர் ஆபீஸர் இல்லை என்று சொன்னார்
கள். அவர்களிடம் நானே ஒரு லேபர் ஆபீஸராக இருக்கிறேன் என்று
சொல்லியிருக்கிறேன். அதே தன்மையில் கண்ட்ரோலரும் மற்ற அதிகாரி
களும் செயல்பட்டு வருகிறார்கள். அந்தத் தொழிலாளர்களுக்கு எந்த
நேரத்திலும் என்னைப் பார்க்கலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது.

பஞ்சாயத்து யூனியன், பஞ்சாயத்து வேலைகளை ஏன் செய்து கொடுக்கக்
கூடாது என்று கேட்டார்கள். இவைகளெல்லாம் திடீரென்று ஏற்பட்டது.
அரசாங்க அச்சகத்தில்தான் செய்ய வேண்டுமென்று சொன்னால் காலம்
கடத்தலாம் என்று சொன்னால் வேலை ஸ்தம்பித்து விடும். அபிவிருத்தி
வேலை நடக்குமிடத்தில் துரிதமாக நடக்க வேண்டும் என்றால், ஸ்தம்பிதம்
செய்து வைக்க ஆசை கொள்ளாத காரணத்தினால்தான் எந்தெந்த வேலை
செய்ய முடியுமோ அதைச் செய்கிறோம். டபிள் ஷிப்ட் ஏற்படுத்தியிருப்ப
தும் அதற்காகத்தான். புது மெஷினரிகள் வாங்கியிருக்கிறோம். இருந்
தும் இது நிறைவு பெறாமல் இருக்கிறது. உடனடியாகச் செய்ய வேண்டு
மானால், இந்த மெஷினரிகள் எல்லாம் வாங்குவதானால், ஃபாரின் எக்
சேஞ்ச் கஷ்டம் வேறு வருகிறது. எந்தப் பொருள் வாங்க வேண்டுமென்றா
லும் நமது நாட்டில் வாங்க முடியாது இருக்கிறது. நமது தேவையைப்
பற்றி வலியுறுத்திச் சொல்லியிருக்கிறோம். மத்திய அரசாங்கமும் நமது
தேவையை உணர்ந்து அவ்வப்போது கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். புது
மெஷினரி எல்லாம் வந்தவுடனே இன்னும் திறமையாக நடக்கும் என்று
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். புதுக்கோட்டையில் டபிள் ஷிப்ட் ஏற்
படுத்த முடிவு செய்திருக்கிறோம் என்று சொன்னவுடன் கனம் அங்கத்தினர்
சீனிவாச அய்யர் ஹைகோர்ட்டுக்குத் தேவையான அச்சகம் அங்கே போய்
விடுமோ என்று பயந்தார்கள். புதுக்கோட்டையில் டபிள் ஷிப்ட் ஏற்
படுத்துவதும், ஹைகோர்ட் பிரஸ்ஸில் டபிள் ஷிப்ட் ஆக்கினாலும் இன்னும்
துரிதப்படுத்தத்தான் செய்யப்படுகிறது. இங்கு நடக்கும் வேலையை புது
கோட்டைக்கு அனுப்பி கால தாமதப்படுத்தும் எண்ணம் இல்லை. ரூட்டீ
னாகச் சில பிரசுரங்கள் செய்ய வேண்டியிருக்கிறது. காலம் கடத்தாமல்
செய்ய வேண்டியிருக்கிறது. யாருக்கும் கஷ்டமில்லாமல் விஸ்தரிப்பு
நடக்குமே தவிர, புதுக்கோட்டையில் செய்வதால் சென்னையில் ஹை
கோர்ட்டுக்குத் தேவையான அச்சு வேலைகள் தாமதப்படும் என்ற எண்ணம்
வேண்டியதில்லை. படித்துப் பார்த்தாலும் கூட ஹைகோர்ட் சம்பந்தப்பட்ட
மட்டில் அச்சு வேலைகள் ரூட்டீனாக நடப்பது புதுக்கோட்டைக்குக் கொடுக்க
திட்டமிட்டிருக்கிறது என்பது தெரியும். அதையும் திரும்பப் பரிசீலனை
செய்து அவசியமிருந்தால் கொடுப்பார்கள். இல்லாவிட்டால் இருக்குமிடத்
தில் தொடர்ந்து செய்ய கஷ்டம் இருக்காது.

இந்த அச்சுக்கூடத்தை இரண்டு தினங்களுக்கு முன்பு சில அங்கத்தினர்
கள் போய்ப் பார்த்திருக்கிறார்கள். பெரும்பாலோர் போய்ப் பார்க்க
வில்லை. எல்லோரும போய்ப் பார்த்திருக்கலாம். எல்லோரும் போய்ப்
பார்க்க வேண்டும் என்பதுதான் எனது விருப்பமும் ஆகும். இது மிகப்
பெரிய அச்சுக்கூடம். நான் ஆரம்ப உரையிலே சொன்னபடி 10 பேரைக்
கொண்டு ஆரம்பித்து, இன்றைக்கு 3,000 பேர்கள் வேலை செய்கிறார்கள்.
இன்னும் 5, 6 வருஷங்களில் இன்னும் நல்ல முறையில் இது விஸ்தரிக்கப்
படும். ஆனால், இதை ஒரே இடத்தில் வைத்துக்கொள்வது நல்லதா, பரவ
லாக வைத்துக்கொள்வது நல்லதா என்பதை எல்லாம் தீர்மானித்து முடிவு
செய்ய வேண்டும். ஏனெனில் இதை ஒரு ஷிப்டிலிருந்து, இரண்டு ஷிப்
டாக்கிய நேரத்திலே, அப்படி ஆக்குவதின் மூலமாக தொழிலாளர்கள்
அதிகமாக்கப்படுகிறார்களே யந்திரங்களுக்கு எங்கிருந்து போவது என்ற
சூழ்நிலை எல்லாம் ஏற்பட்டது. அதே போல் இதை 2 ஷிப்டிலிருந்து
3 ஷிப்டாக்க வேண்டுமென்றால், அதற்கெல்லாம் என்னென்ன செய்ய
வேண்டுமென்று ஆலோசித்துத் தீர்மானிக்க வேண்டியிருக்கிறது. இதை

[Sri V. Ramaiah] [23rd March 1961

எல்லாம் நல்ல விதத்திலே அமையும்படி செய்தாலொழிய, இதைப் பரவலாகச் செய்ய வேண்டுமென்று சொல்லுவதற்கு முடியாது. ஒவ்வொரு ஜில்லாவிற்கும் வைக்க வேண்டும், பின்னால் ஒவ்வொரு தாலுக்காவிற்கும் வைக்க வேண்டுமென்று சொன்னால், அது பற்றி நாம் எந்த முடிவையும் இப்போது சொல்வதற்கில்லை. இப்போதுள்ள மெஷின்களைப் பயன்படுத்தி எப்படி நல்ல முறையிலே மாற்றி அமைக்க முடியும் என்பதுதான் முக்கியப் பிரச்னை. கடந்த நான்கு வருஷங்களாக இந்த விஷயங்களை எல்லாம் நன்கு புரிந்துகொண்ட காரணத்தாலும், தொழிலாளர்களுடைய ஒத்துழைப்பினாலும், அனைவரும் பாராட்டக் கூடிய வகையிலே மாற்றி அமைக்க முடிந்தது. அதற்காக நான் அவர்களை என் மனப்பூர்வமாகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒவ்வொரு ஊழியர்களையும் நான் பாராட்ட ஆசைப்படுகிறேன். ஏனென்றால் அவர்களுடைய நல்ல முடிவின் காரணமாகத்தான் இந்த ஷிப்ட் முறை நடக்குமா, நடக்காதா என்ற சந்தேகமும், நீண்டகாலமாக இருந்த சிக்கலும் நீங்கி இன்று வெற்றியுடன் நடந்துகொண்டிருக்கிறது. இப்படி 2 ஷிப்ட் நடப்பதாலே சர்க்காருக்கும் லாபமேற்பட்டிருக்கிறது. ஆயிரம் குடும்பங்களுக்கு மேலும் வேலை வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. இந்த மாபெரும் நல்ல காரியம் என்னுடைய காலத்திலே நடந்திருப்பதற்கு நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன். நான் பெரும் பாக்கியம் செய்தவன் என்றே நம்புகிறேன். கனம் அங்கத்தினர் ஸ்ரீமதி அனந்தநாயகி அம்மையாரும், இந்தச் சபையிலே இது பற்றி ஆதார பூர்வமாகப் பேசாவிட்டாலும், இதையேதான் குறுக்கிட்டுச் சொல்லிக்கொண்டு வந்தார்கள். இந்த அச்சகம் நல்ல முறையிலே தொடர்ந்து நீண்ட காலம் பணி புரியும் என்று என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்ளுவதற்கு முன் மீண்டும் இதிலே பணி புரிகின்ற எல்லாத் தொழிலாளர்களையும் நான் பாராட்டுகிறேன்.

அப்படி பாராட்டக்கூடிய முறையிலேயும் கனம் அங்கத்தினர் கோவிந்தசாமி அவர்கள் ஒரு சின்ன குற்றச்சாட்டை வைத்தார். யாரோ ஒரு தொழிலாளர் கோவிந்தசாமி என்பவருக்கு எக்ஸ்டென்ஷன் கொடுத்ததைப் பற்றிச் சுட்டிக்காட்டிச் சொன்னார்கள். இந்த டபிள் ஷிப்ட் ஏற்படுத்திய காலத்தில், அதிலே அவர் ஈடுபட்டு, பல சங்கடங்களை அனுபவித்ததைப் பார்த்தால், உண்மையிலேயே அவர் செய்த பெரும் சேவையைப் பார்த்தால் இந்த எக்டென்ஷன் கொடுத்தது அவ்வளவு ஒன்றும் பெரிதல்ல. அவரை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம். அவ்வளவு தைரியத்துடன் சேவை செய்து, அவர் தொழிலாளர்களுக்கு நல்வழிகாட்டினார். இப்போது அங்கு குழப்பம் என்ற வார்த்தைக்கே இடமில்லை. அவ்வளவு அமைதியான முறையிலே அங்கு இப்போது வேலை நடக்கிறது. ஆரம்பத்திலே எந்த விஷயமும் கஷ்டம்தான். இந்த கோவிந்தசாமி அவர்கள் தொழிலாளர்கள் மத்தியிலே பழகியதற்காக அவருக்கு ஒரு பரிசே கொடுக்கலாம். நியாயமாகவே அவருடைய சேவை தேவைப்பட்டது. அதனால் அவருக்கு தொடர்ந்திருக்க அனுமதி கொடுக்கப்பட்டது. இதைப் போல் இன்னும் யார் யாருடைய சேவை அவசியமோ, அவர்களுக்கும் இந்த வசதியைத் தாராளமாகச் செய்துகொடுக்கலாம். அதையும் தொழிலாளர்கள் புரிந்துகொண்டார்கள். ஆகவேதான் அவர்கள் நிம்மதியாக இருக்கிறார்கள். இதிலே எந்த விதமான பாரபட்சமே கிடையாது என்று சொல்லிக் கொள்ளுகிறேன். அதனால்தான் கனம் அங்கத்தினர் கோதண்டராமன் அவர்கள் இந்த வெட்டுப் பிரேரபணையை பிரேரேபிக்கவில்லை. அவர்களுக்குத் தெரிந்து அதைச் செய்திருக்கிறார்கள். கனம் அங்கத்தினர் கரையாளர் அவர்கள் மட்டும்தான் இதைப் பிரேரேபித்து இருக்கிறார்கள். ஆனால், கரையாளர் அவர்களுக்கும் இதைப் பற்றித் தெரியும். அங்கு எல்லாக் காரியங்களும் நல்ல முறையிலே நடக்கின்றன என்பதும் அவர்களுக்குத் தெரியும். 100 ரூபாயாகக் குறைப்பதற்கு அவர்கள் சம்மதிக்க மாட்டார்கள். ஆகவே அவரும் தமது வெட்டுப் பிரேரபணையை வலியுறுத்த மாட்டார்கள் என்று சொல்லி, கனம் அங்கத்தினர்கள் சொல்லிய அரிய கருத்துக்களுக்குத் தக்க முறையில் முயற்சி எடுப்பார்கள் என்பதையும் நான் சொல்லிக்கொள்ளுகிறேன்.



23rd March 1961]

SRI K. SATTANATHA KARAYALAR : I am not pressing my cut motion, Sir.

The cut motion moved by the hon. Member Sri K. Sattanatha Karayalar, was, by leave, withdrawn—

DEPUTY SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 1,41,67,900 under Demand XXXII—Stationery and Printing.'

The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m., to-morrow. 1-44 p.m.

The House then adjourned.

## IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A.—*Statutory Rules and Orders.*

Nil.

### B.—*Reports, notifications and other papers.*

120. *Note on Demand No. XXVI—Community Development Projects, etc.*

121. *Speech of Hon. the Minister for Works on Demand No. XXVII (Civil Works), XXVIII (Establishment and Tools and Plant) and XLII (Capital Outlay on Civil Works).*

122. *Speech of Hon. the Minister for Local Administratiion on Demand XXIX (Civil Works—Grants-in-aid).*

123. *Note on Demand XV (Education)—Tamil and English.*

124. *Speech of Hon. the Minister for Electricity on Demand XXXII (Stationery and Printing).*

APPENDIX

[23rd March 1961.

[Vide answer to starred question No. 1024, asked by Sri V. K. Kothandaraman at the meeting of the Legislative Assembly held on 23rd March 1961, page 381 supra.]

## G.O. Ms. No. 380, Rural Development and Local Administration, dated 9th February 1961.

[Motor Vehicles—Jeeps in Blocks—Use by Chairman, Panchayat Union Council—Instructions.]

READ--the following papers :—

G.O. Ms. No. 2950, Public (R.D.P.), dated the 5th September 1956.

Memorandum No. 102201/P. 5/60-2, dated the 28th July 1960.

*Order—No. 380, R.D. & L.A., dated 9th February 1961.*

Under the Madras Panchayats Act, 1958, Panchayat Union Council is to be formed for each Panchayat Development Block. The first batch of the 75 Panchayat Unions was inaugurated on the 2nd October 1960. The second and third batches of Panchayat Unions will be brought into existence on the 13th April and 2nd October 1961 respectively.

2. The question has been raised as to whether the Chairman of the Panchayat Union Council should be permitted to utilise the block jeep, supplied to each block under the Community Development Programme. The Chairman of the Panchayat Union occupies an important place and has to be accorded the recognition suitable to his status. Government have examined the question of the use of the Block Jeep by the Panchayat Union Chairman and direct that the Panchayat Union Chairman may use the Block jeep for official purposes.

3. Under the existing rules laid down in the orders cited above, the monthly consumption of petrol for the block jeep has been restricted to 275 litres per block. In view of the increased responsibility of the panchayats, especially with regardto the Elementary Education, Government now direct that this monthly consumption of petrol limit of 275 litres be raised to 325 litres per month per Block.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Friday, 24th March 1961**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eigth of the clock, the Deputy Speaker (SRI B. BHAKTAVATSALU NAIDU) in the Chair.

## I. QUESTIONS AND ANSWERS.

### STARRED QUESTIONS.

*Eviction of Harijans (Kanyakumari)*

*897. Q.—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state the number of Harijans occupying poramboke lands in the Kanyakumari district for more than ten years, who were either evicted from their lands or have been served with notice to vacate the lands they are in occupation?

THE HON. SRI M. A. MANICKAVELU : The information is not readily available with the Government and the Government do not also consider that the time and labour involved in collecting it will be commensurate with its usefulness.

SRI T. S. RAMASWAMI : May I know whether the Government are aware of the fact that many of the Harijans who are already settled for more than ten years on lands in which they have invested their toil, sweat and all the savings have been evicted recently, and if so, whether the Government will go into the matter?

THE HON. SRI M. A. MANICKAVELU : Ordinarily the Government do not evict people from places where they could be accommodated but if it is a very objectionable place like tank-bed or the front of a tank, then only the Government interfere.

SRI P. G. MANICKAM : விவசாயத்திற்கு லாயக்கான தரிசு நிலங்களை 10 ஆண்டுகளுக்கு மேற்பட்டு உழுதுகொண்டுவரும் ஹரிஜனங்களுக்கு பட்டா வழங்கவேண்டும் என்றாவது ஜில்லா கலெக்டர்களுக்கு சர்க்கார் ஒரு தாக்கீது பிறப்பிக்குமா ?

THE HON. SRI. M. A. MANICKAVELU : பட்டா வழங்கவேண்டுமென்றுதான் உத்தரவிடப்பட்டிருக்கிறது. ஆனால், 10 ஆண்டு விவசாயம் செய்த காரணத்தினால் மட்டும் பட்டா வழங்கமுடியாது. ஏனென்றால், பட்டா ஏரி, ஏதுவாய், கால்வாய் புரம்போக்கு இந்த மாதிரி இடங்களில் கொடுத்தால், அந்த ஏரியைச் சேர்ந்த ஆயக்கட்டுதாரர்களை பாதிக்கிறது. அந்த மாதிரி ஆட்சேபணை இல்லை என்றால் பட்டா வழங்கப்படும்.

SRI M K. SOMASUNDARAM : விவசாயத்திற்கு லாயக்கான இடங்களில் 15 வருஷங்களாக பயிர்செய்துகொண்டு வந்தவர்களை இப்பொழுது யாருடைய தூண்டுதலின் பேரிலோ வெளியேற்றுவதற்கு முயற்சி

செய்கிறார்கள். அதனால் அவர்களுக்கு பலவிதமான செலவுகள் ஏற்படுகின்றன. அம்மாதிரி நிலங்களை அனுபவித்துக்கொண்டு வருபவர்களை அந்த நிலங்களிலிருந்து வெளியேற்றக்கூடாது என்று அரசாங்கம் கலெக்டர்களுக்கு உத்தரவு பிறப்பிப்பார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: இதே கேள்விக்குத்தான் நான் முன்பு பதில் சொன்னேன். இம்மாதிரி பட்டா வழங்கவேண்டுமென்பதுதான் கொள்கை. ஆனால், ஆட்சேபணை ஏதாவது இருந்தால், பட்டா வழங்குவதற்கு இல்லை. எவ்வளவு தூரம் இதை தளர்த்த முடியுமோ, அவ்வளவு தூரம் தளர்த்தி ஆயக்கட்டுதாரர்களுக்கு பாதகம் இல்லாமல் இருந்தால், பட்டா வழங்கப்பட்டுதான் வருகிறது.

SRI V. K. KOTHANDARAMAN: ஆட்சேபணை இல்லாத இடங்களில் பல ஆண்டுகளாக நிலத்தில் இருந்துகொண்டு வருகிறார்கள். அதையாவது உடனடியாக பட்டா செய்து கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: அம்மாதிரி வந்த வகையில் தான் 3 லட்சம் ஏகர் பட்டா செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது.

SRI T. S. RAMASWAMI: பத்து ஆண்டுகளுக்கு மேலாக நிலம் வைத்திருக்கும் ஹரிஜனங்களையாவது அரசாங்கம் கவனிப்பார்களா ? அவர்களாவது வெளியேற்றப்படாமல் இருப்பதற்கு அரசாங்கம் கவனம் செலுத்துவார்களா, கன்யாகுமரி ஜில்லாவில் ?

THE HON. SRI M. A. MANICKAVELU: இதற்கு 'லிமிடேஷன் லா' பார்க்கவில்லை. நான் முன்னால் சொன்ன அந்தக் காரணம் தான்.

SRI S. M. ANNAMALAI: இந்தக் கேள்வியின் முக்கிய நோக்கம் பட்டா செய்து கொடுப்பதில் காலதாமதம் ஆகிறது என்பதுதான். பட்டா செய்து கொடுப்பதை மேலும் துரிதமாகச் செய்வதற்கு இதர மாவட்டங்களில் ஸ்பெஷல் டெப்யூடி தாசில்தார்கள் போட்டிருக்கிறார்களோ ? அம்மாதிரி இந்த மாவட்டத்திலும் போடப்பட்டதா ? அப்படியானால் இதுவரையில் அவர்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ? இல்லையென்றால், இந்த மாவட்டத்தில் ஒரு டெப்யூடி தாசில்தாரை போடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: எங்கே அவசியமோ அங்கெல்லாம் 'ஸ்பெஷல் ஸ்டாப்' போட்டுதான் வேலை செய்யப்படுகிறது.

SRI P. S. K. LAKSHMIPATHI RAJ: சட்டத்திலுள்ள இதுபோன்ற சிக்கல்களின் காரணத்தினாலே, ஆங்காங்கு உள்ள அரசாங்க நிலங்கள் ஹரிஜன ஏழைகளால் பயிரிடப்படுகிறபொழுது, அதிலிருந்து அரசாங்கத்திற்கு பலன் கிடைக்காமலும், உழைப்பாளிகளுக்கு பலன் கிடைக்காமலும், கிராமாதிகாரிகள் அதில் பணம் பெறுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: அம்மாதிரி கனம் அங்கத்தினருக்கு ஏதாவது தெரிந்திருந்தால், அதுபற்றி என்னிடம் தெரிவிக்கலாம்.

*Lands to Harijans (Kanyakumari)*

* 898 *Q.*—SRI T. S. RAMASWAMI: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the extent of Government lands given to landless Harijans in the Kanyakumari district for cultivation after the re-organization compared to the area given in the other districts; and



(*b*) the number benefited in the Kanyakumari district compared to the other districts?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) & (*b*) No information is available, Sir.

SRI T. S. RAMASWAMI: May I know, when lakhs of acres of land are given to Harijans in other districts, why in the Kanyakumari district alone this policy is not making any headway ?

THE HON. SRI M. A. MANICKAVELU: Now the 'Kuthagapattam' rules are prevailing in that area. The Government are contemplating to extend the provisions of the Board's Standing Order No. 15.

SRI T. S. RAMASWAMI: May I know whether lands will be allotted to Harijans at least on the 'Kuthagapattam' basis?

THE HON. SRI M. A. MANICKAVELU: Not only Harijans but all landless poor who will take to direct cultivation, will be given.

SRI M. K. SOMASUNDARAM: ஒவ்வொரு ஜில்லாவிலும் எவ்வளவு புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன என்பது கணக்கிடப்பட்டிருக்கிறதா ? கன்யாகுமரி ஜில்லாவில் எவ்வளவு நிலங்கள் இருக்கின்றன என்று கணக்கிடப்பட்டிருக்கிறதா ? எத்தனை பேர்களுக்கு நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு கணக்கு இருக்கிறதா ? இருந்தால் அதன் விவரம் யாது ?

THE HON. SRI M. A. MANICKAVELU: நமக்கு புதிதாக வந்த 'டிரான்ஸ்பேர்டு டெரிடரி'யில் இருக்கும் நில 'ரூல்ஸு'க்கும்' நம்முடைய ஜில்லாக்களில் இருக்கும் 'ரூல்ஸு'க்கும்' வித்தியாசம் இருக்கிறது. அங்கு குத்தகை பாட்டம் என்ற 'ரூல்' இருக்கிறது. நம்முடைய திட்டப்பிரகாரம் அங்கு அமுலுக்குக் கொண்டு வந்தால், இதே மாதிரி அங்கும் செய்யலாம்.

SRI S. NAGARAJA MONIGAR: Is it not a fact that in that district the former Government were very considerate towards the Harijans and there is much less to do now?

THE HON. SRI M. A. MANICKAVELU: I think the hon. Member is not conversant with what is prevailing there. Am I to understand that this Government are not considerable towards them? They are as much, if not more.

SRI T. S. RAMASWAMI: இதற்கு முன்னால் உள்ள அரசாங்கம் அதிக உணவு உற்பத்தி திட்டத்தின் கீழ் ஹரிஜனங்களை தரிசு நிலங்களில் பயிரிடும்படிச் சொன்னார்கள். அதன்படி அவர்கள் தங்களுடைய உழைப்பையும், பணத்தையும் செலவழித்து பல ஆயிரக்கணக்கான ஏக்கர்களை பயிர் செய்திருக்கிறார்கள். அவர்கள் 10 ஆண்டுகளுக்கு மேல் பயிர் செய்துகொண்டு இருந்தால், மக்களிடையே ஆட்சேபணை வேறு இல்லாமல் இருந்தால், குத்தகை பாட்டம் 'பேவிலிலாவது' அவர்களுக்கு அந்த நிலங்களைப் பகிர்ந்து கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: 'க்ரோ மோர் புட்' என்ற அடிப்படையில் நிலம் எங்கு வேண்டுமானாலும் பயிர் செய்யலாம் என்று அப்பொழுது சொல்லப்பட்டிருக்கலாம். அது ஒரு நெருக்கடியான நிலைமை. அம்மாதிரி அப்பொழுது சொல்லியிருந்தால்கூட, அதற்கு இப்பொழுது ஆட்சேபணை இருந்தால் அவர்களுக்குக் கொடுப்பதற்கு இல்லை.

**Sri K. PERIANNAN**: நீண்ட நாட்களாக நிலமற்ற ஏழை விவசாயிகள் அந்த நிலத்தில் விவசாயம் செய்துகொண்டு வந்தாலும், இப்பொழுது அந்த நிலத்தை பஞ்சாயத்துகளிடம் ஒப்படைக்கும்பொழுது, பஞ்சாயத்துகள் தரிசு நிலங்களை அதிகப்படியாக குத்தகைக்கு விடுகிறார்கள். அம்மாதிரி நிலமற்ற ஏழைகள் அதிகப்படியான குத்தகை கொடுக்க முடியாத காரணத்திளுல், அந்த நிலத்தைக் குத்தகைக்கு விடாமல், அந்த விவசாயிகளுக்கே கொடுக்கும்படி பஞ்சாயத்துகளுக்கு உத்தரவிட முடியுமா என்று கேட்கிறேன்.

**The Hon. Sri M. A. MANICKAVELU**: புதுச் சட்டப் பிரகாரம் இதெல்லாம் பஞ்சாயத்து நிர்வாகத்தின் கீழே வருகிறது. அதிலே புதுச் சட்டப்பிரகாரம் அரசாங்கம் ஒன்றும் செய்வதற்கில்லை. பஞ்சாயத்து மூலம் தான் செய்யவேண்டும்.

*Adult Education*

* 911 *Q.*—Sri T. S. RAMASWAMI: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of Adult Education Centres at present;

(*b*) the amount spent on Adult Education in 1959–60; and

(*c*) the number educated for the last year?

The Hon. Sri C. SUBRAMANIAM: (*a*) 1,142;

(*b*) Rs. 3,41,700; and

(*c*) 31,082.

**Sri K. VINAYAKAM**: Is it not a fact that the expenditure on this account is a mere waste spent on a dying generation and no useful results have accrued out of this and will the Government take stock of the present situation and then adopt new methods if necessary or give up the entire scheme?

The Hon. Sri C. SUBRAMANIAM: I think the question of waste is a matter of opinion. As far as the dying generation is concerned, I suppose every generation is a dying generation some time or other.

**Sri A. VEDARATHNAM**: இந்த அவையிலே இம்மாதிரி பல முறை முதியோர் கல்வியைப் பற்றி புகார் கூறப்பட்டு வந்திருக்கிறது. எனவே, இப்பொழுது மத்திய உணவுத் திட்டம் நடைபெறுவதைப் பரிசீலிக்க ஒரு கமிட்டி நியமித்ததுபோல, முதியோர் கல்வித் திட்டம் எப்படி நடைபெறுகிறது என்பதை ஆராய்ந்து அரசாங்கத்திற்கு ரிப்போர்ட்டு செய்ய, ஒரு கமிட்டி அமைப்பதற்கு அரசாங்கம் முன் வருமா?

**The Hon. Sri C. SUBRAMANIAM**: இதற்கு கமிட்டி அமைக்க வேண்டியது அவசியமில்லை. இது மாதிரி அதிலே அதிக பலன் ஏற்படவில்லை என்ற காரணத்திற்காக புதிய பள்ளிகள் இனிமேல் ஆரம்பிக்க வேண்டியதில்லை என்றும், வயது அதிகமாக ஆனவர்களுக்கு பயிற்சி கொடுக்கவேண்டியது அவசியமில்லை என்றும், 11 முதல் 18 வயது வரையில் அல்லது 8 முதல் 18 வயது வரையில் இருக்கக்கூடியவர்களுக்கு மட்டும் படிப்பு சொல்லிக்கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் இப்பொழுது தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

**Sri V. K. KOTHANDARAMAN**: இந்த முதியோர் கல்வித் திட்டத்தின் காரணத்திளுல், கல்வி அறிவு பெற்று பலர் பட்டம் கூட பெற்றிருக்கிறார்கள். ஆகவே, முதியோர் கல்விக்கு அதிகப்படியாகப் பணம் ஒதுக்கி, அவர்கள் படித்து முன்னேற வசதி செய்யப்படுமா?



**The Hon. Sri C. SUBRAMANIAM**: யாரோ ஒருவர் பட்டம் பெற்றிருக்கிறார் என்றால், அவர் இந்தப் பள்ளிக்கூடத்தில்தான் படித்தாரோ என்னவோ. இருந்தாலும், பயன் எவ்வளவுக்கு இருக்கிறதோ அவ்வளவுக்கு செலவழிக்கப்படும்.

Sri A. A. RASHEED: May I know whether steps have been taken to bring in adult women also under this scheme?

The Hon. Sri C. SUBRAMANIAM: Man includes woman also.

**Sri N. MARUDACHALAM**: ஸார், முதியோர் கல்வித் திட்டத்தை அவசியம் உள்ள இடங்களிலெல்லாம் ஏற்படுத்த உத்தேசமுண்டா?

**The Hon. Sri C. SUBRAMANIAM**: அவசியம் எங்கு இருக்கிறதோ அங்குதான் ஏற்படுத்தப்படுகிறது.

Sri S. NAGARAJA MONIGAR: ஸார், முதியோர் எந்தெந்தத் துறையில் முன்னேறியிருக்கிறார்கள் என்று கவனிக்க ஒரு கமிட்டி அமைத்தால் நல்லது என்று கனம் ஸ்ரீ வேதரத்தினம் சொன்னார்கள்; 18 வயதுக்கு உட்பட்டவர்கள்தான் முதியோர் கல்வியில் பயனடைகிறார்கள் என்றாலும், கனம் அங்கத்தினர் வினயகம் எந்த வயது வரை என்று தெரியாததால், இறக்கும் சமுதாயத்தினருக்கு இது வேண்டியது அவசியமில்லை என்று கருதுகிறார்கள்; இந்த சந்தர்ப்பத்தில் இவ்வளவு தூரம் பயன் என்று தெரியாது ஆகையால், அதை விடுத்து வேறு வகையில் செய்யலாமா என்று கருதுகிறார்கள்......

DEPUTY SPEAKER: The hon. Member is making a speech.

Sri S. NAGARAJA MONIGAR: I am coming to the question. அதை நல்ல முறையில் நடத்தத் தவறிவிட்டதாலா இந்த நிலை? இது இறுதியான முடிவா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM: அவர்கள் சொன்ன குழப்பத்தில், எனக்கே குழப்பமாக இருக்கிறது; என்ன கேள்வி என்று புரியவில்லை. (சிரிப்பு)

*Beedi Workers (Scope of Factories Act)*

* 919 *Q.*—Sri S. M. ANNAMALAI: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சுருட்டுத் தொழிலாளர்கள், தொழிற்சாலை சட்டத்திற்குட்பட்டவர்களல்லவென்று உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்திருப்பதைக் குறித்து சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

The Hon. Sri R. VENKATARAMAN: The question whether an appeal should be filed in the Supreme Court against the judgment of the High Court was considered and it was dropped as the Government were advised that this was not a fit case to be taken on appeal. The question of amending the Factories Act suitably has already been taken up with the Government of India and their decision is awaited.

**Sri S. M. ANNAMALAI**: கொடுக்கப்பட்டிருக்கும் தாள்களில், தமிழ் கேள்வியில் இது "சுருட்டு தொழிலாளர்கள்" என்று இருக்கிறது; இங்கிலீஷில் "**Beedi Workers**" என்று இருக்கிறது. கனம் அமைச்சர் கொடுத்த பதில் சுருட்டு தொழிலாளிகள் பற்றியா அல்லது பீடித் தொழிலாளர்கள் பற்றியா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN: எனக்கு பீடியும் தெரியாது, சுருட்டும் தெரியாது; இரண்டும் தெரியாது. ஆனால் பீடியும் சுருட்டும் ஒன்றுதான், சிகார்தான் வேறு.

SRI S. M. ANNAMALAI: சென்னை உயர்நீதி மன்றத்திலே இப்படிப் பட்ட வழக்கு சென்று, அதன் மூலமாக பீடி முதலாளிகள், மத்திய கண்ட்ராக்டர்களை வைத்து, தொழிலாளிகளை அவர்கள் மூலம் வைத்து, இந்த சட்டத்திற்கு உட்பட்டவர்கள் அல்ல என்ற முறையில் செய்ததால், கனம் அமைச்சர் சொன்னபடி சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்வது அவசியமில்லை என்றும், மத்திய சர்க்காரே இதுபற்றி யோசித்துக்கொண்டு இருக்கிறார்கள். இதற்கு மத்தியில் இதனால், தொழிலாளிகள் பாதிக்கப்பட் டிருக்கிறார்கள். இதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN: இதனால் தொழிலாளர்கள் பாதிக்கப்படவில்லை. ஏனென்றால், இப்பொழுது இருக்கும் பீடி இண்டஸ்ட்ரியல் ப்ரிமிஸஸ் ஆக்ட் பிரகாரம், யார் ரெஜிஸ்டர் செய்யவேண்டும் என்ற பிரச்சினை வரும்போது ட்ரேட் மார்க் ஒனர் ரெஜிஸ்டர் செய்ய வேண்டுமா, செய்ய வேண்டாமா என்ற பிரச்சினை எழுந்தது. இதற்கு மத்தியில் எந்தக் கஷ்டமும் தொழிலாளர்களுக்கு ஏற்படவில்லை.

SRI K. VINAYAKAM: Instead of approaching the Central Government to amend the Factories Act to suit the provisions of our Beedi Workers' Act, would it not be a better step to consider once again our Beedi Workers' Act and amend it to suit the Factories Act ?

THE HON. SRI R. VENKATARAMAN: This is in the Concurrent List. Whether you amend the Beedi Act or the Factories Act, the concurrence of the Government of India has to be obtained.

SRI S. M. ANNAMALAI: புகையிலை லைசென்ஸ் கொடுக்கும்போது, மத்திய சர்க்காரை வற்புறுத்தி, யார் யார் பீடி பாக்டரிகளை வைத்திருக் கிறார்களோ அவர்களுக்கு மட்டுந்தான் புகையிலை லைசென்ஸ் கொடுக் வேண்டுமென்று மத்திய சர்ககாரை வற்புறுத்த நம் சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்சளா ?

DEPUTY SPEAKER: How does this arise out of the main question ?

THE HON. SRI R. VENKATARAMAN: Still I shall answer that. ஊளம் அங்கத்தினர் சொல்வதற்குப் பல மாதங்களுக்கு முன்பே, மத்திய சர்க்காருக்கு எழுதி, அவர்கள் ஒத்துக்கொள்ளமாட்டேன் என்று சொல்ல, தொழில் சம்பந்தமாக விதிகள் தொழில் சட்டத்தோடும். தொழிலாளிகள் சம்பந்தமாக தொழிலாளிகள் சட்டத்தோடும் விதிகள் இணைக்கப்பட வேண்டும் என்று அவர்கள் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்சள்.

*Dam across Mangarai River.*

* 1041 Q.—SRI M. A. B. ARUMUGHASAMY: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1958-ம் ஆண்டு டிசம்பர் மீ 19-ம் தேதியில் கனம் முதல் அமைச்சர் அவர்கள் திண்டுக்கல் தாலூகாவில் சுற்றுப்பிரயாணம் செய்கையில், ஆத்தூர் தொகுதி கோடல்வாவி மற்றும் சுற்றுவட்டார கிராம பொது மக்கள் சார்பாக மாங்கரை ஆற்றில் ஓர் அணை கட்டி அதன் மூலம் சுமார் 1,500, 2,000 ஏக்கர் பாசனவசதி செய்து கொடுக்கும்படி மகஜர் கொடுக்கப்பட்டதா ?

(இ) அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) No, Sir.

(b) Does not arise.



*Grant of patta*

* 1042 Q.—SRI T.S. RAMASWAMI (on behalf of SRI P. S. CHINNADURAI): கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் ஜில்லா திருப்பத்தூர் தாலூகா நெ. 149 கிராமத்தில் சர்வே நெ. 217/3-ஐச் சேர்ந்த சில நிலங்களைப் பட்டா செய்வது பற்றி 1961-ம் ஆண்டு ஜனவரிமீ 5-ந் தேதியிட்ட மகஜர் ஒன்று சர்க்காருக்கு வந்ததா ?

(இ) அப்படியானால், அதன்மீது அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU: (a) No, Sir.

(b) Does not arise.

*Slum clearance (City)*

* 1043 Q.—SRI T. T. DANIEL:
SRI K. SATTANATHA KARAYALAR: } Will the Hon. the Minister for Industries be pleased to state--

(a) whether the Government have any scheme for the clearance of slums in Madras City;

(b) if so, the details thereof;

(c) how much amount the Government propose to allot in the Third Five-Year Plan for the scheme; and

(d) how many houses the Government intend to construct in the Third Five-Year Plan under this scheme?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) to (d) A statement [a] is placed on the table of the House.

SRI A. A. RASHEED: May I know the steps taken by this Government to prevent new slums appearing in Madras City?

THE HON. SRI R. VENKATARAMAN: We have passed the law relating to eviction of unauthorized occupants from public premises.

SRI P. G. MANICKAM.: ஸார், மேசை மீது வைக்கப்பட்டிருக்கும் குறிப்பிலே 300 லட்சம் ரூபாய், மூன்றுவது திட்டத்திற்கு, "சென்ட்ரல் ஜர்க்கிங் க்ரூப் ஆன் ஹௌஸிங்" கொடுக்க ஒத்துக் கொண்டிருப்பதாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது சென்னை நகரத்திற்கு மட்டுந்தானா அல்லது இதர நகரங்களில் உள்ள சேரிகளுக்கும் சேர்த்தா ? இல்லை யென்றால், இதர நகரங்களுக்கும் சேரி சீரமைப்பை விஸ்தரிக்க என்ன ஏற்பாடு செய்யப் போகிறார்கள் ?

THE HON. SRI R. VENKATARAMAN: மூன்றுவது திட்டத்தின் கீழ் 3 கோடி ரூபாய்கள் செலவழிக்கப்படும். அது ராஜ்யம் பூராவுக்கும் தான், சென்னை நகரத்திற்கு மட்டுமல்ல. முக்கியமான நகரங்களி யெல்லாம் சேரி ஒழிப்புத் திட்டம் அமுல் நடத்தப்படும்.

SRI S. RANGANATHA MUDALIAR: In view of the fact that slum areas are so insanitary, would the Government think of appointing a special sanitary staff to look to sanitation in slum areas, until they are cleared?

[a] Printed as Appendix I on pages . 542-543 infra.

THE HON. SRI R. VENKATARAMAN : I do not think the suggestion is feasible. There are slums because there is overcrowding. Unless overcrowding is removed, this cannot be improved.

SRI K. B. S. MANI : சேரி ஒழிப்பின் மூலமாக வேறு இடங்களுக்கு அப்புறப்படுத்தப்படும் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள் ; அது அதிக தூரத்தில் அமைந்தால், தொழில் நிலையத்திற்குப் போக வர அவர்களுக்கு கஷ்டம் ஏற்படுவதால் அம்மாதிரி இடங்களுக்குப் போக மறுக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு சமீபத்திலேயே, சுகாதார வசதிகளோடு கூடிய கட்டிடங்களைக் கட்டிக்கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ? அந்த முறையில் சேரி ஒழிப்புச் செய்யப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : சேரி ஒழிப்புக்காக வேறு இடங்களில், திறந்த வெளியிலே, குறைந்த வாடகையில், மாதம் 3 ரூபாய் என்று போட்டு, பாத் ரூம், ப்ளஷ் ஒளட் போட்டுக்கொடுத்தால், அது தொலைவில் இருக்கிறது என்று போகமாட்டோம் என்கிறார்கள். அவர்களுக்குப் பக்கத்தில் கட்டிக் கொடுத்து, வாடகை ரூ. 10 என்றால், அது அதிகம் என்று போகமாட்டோம் என்கிறார்கள்.

SRI K. PERIANNAN : தற்போது எந்தெந்த ஜில்லாவில் இந்த சேரி ஒழிப்புத் திட்டம் அமுலில் இருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : இப்பொழுது இல்லை; மூன்றாவது திட்டத்தில் என்று சொன்னேன்.

SRI N. MARUDACHALAM : சேரி ஒழிப்பு கோவை நகரத்திற்குக் கொண்டு வரப்படுமா ? அப்படிக் கொண்டு வர எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது?

THE HON. SRI R. VENKATARAMAN : கோவை நகரமும் கூட சேர்க்கப்பட்டிருக்கிறது. இது மெட்ராஸைப் பொறுத்த கேள்வி.

*Beating of one Chockalingam (Central Jail, Tiruchirappalli).*

* 1044 Q—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) 24—11—60-ல் திருச்சி மத்திய சிறையில் பஞ்சாயத்து போர்டு அங்கத்தினரான சொக்கலிங்கம் என்பவரை ஜெயில் அதிகாரிகள் தடியால் தாக்கி காயப்படுத்ியது உண்மையா ?

(இ) காரணமென்ன ?

(உ) தாக்கியவர்களின்மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No, Sir.

(b) & (c) Do not arise.

SRI V. K. KOTHANDARAMAN : திருச்சி மத்திய சிறையில் சொக்கலிங்கத்தை தாக்கிக் காயப்படுத்தியதாக அமைச்சருக்கும், அதிகாரிகளுக்கும் பல புகார்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. ஆகவே, மீண்டும் பரிசீலனை செய்து, தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அரசாங்கத்திற்கு வரவில்லை. அதிகாரிகளை விசாரித்ததில், புகாருக்கு ஆதாரம் இல்லை என்று தெரிந்தது. அன்றைக்கு அவர் சிறைக்கே 24-ம் தேதி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அன்றைக்கு அவர் சிறைக்கே வரவில்லை; பின் தேதியில்தான் வந்தார். சிறையில் அவருக்கு வைத்திய



சிகிச்சையும் அளிக்கப்படவில்லை. காயப்படுத்தியதாகச் சொல்லப்பட்டிருப்பது தவறு. இப்பொழுது அவர் வெளியில், ஜாமின் விடுதலையில் இருக்கிறார்.

*Harijan Colony (Melpuzhidiyur)*

*1045 Q.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் பொது மராமத்து அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செங்கம் தாலுகா மேல்புழுதியூரில் ஹரிஜன காலனி கட்டுவதற்காக எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டது ?

(இ) அது கட்டி முடிக்கப்பட்டதா? இல்லை என்றால் காரணமென்ன ?

THE HON. SRI P. KAKKAN : (அ) A sum of Rs. 7,700 by way of subsidy and Rs. 2,800 as interest-free loan have been allotted for construction of a housing colony in Melpuzidiyur.

(இ) The construction has not yet been completed. There has been some delay in the execution of the works, as the beneficiaries, who have chosen to use at their own cost, costlier materials and effect improvements not provided for in the approved estimates, are trying to find additional funds to complete the works.

SRI V. K. KOTHANDARAMAN : இந்தக் காலனியைக் கட்டுவதற்கு வேண்டி இதை ஏற்றுக்கொண்ட அந்த நபர் செங்கல் சூளை போடுவதற்காக புறம்போக்கிலுள்ள ரூ. 2,000 பெருமான புளிய மரங்களை வெட்டியிருக்கிறார்களா ? அவர்களிடமிருந்து அந்தப் பணம் வசூலிக்கப்பட்டதா ?

THE HON. SRI P. KAKKAN : காலனி கட்டுவதற்காக அங்குள்ள மரங்களை வெட்டியிருக்கிறார்கள். இதற்காக அவர்கள் ஆயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறார்கள்.

*Case against a Sub-Inspector of Police (Coimbatore)*

* 1046 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether it is a fact that a Police Sub-Inspector in Coimbatore district seduced a college girl; and

(b) if so, the action taken against him?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes, Sir.

(b) The Sub-Inspector of Police was prosecuted for offences under sections 366, 323 and 376, Indian Penal Code. The Sessions Judge, Coimbatore, acquitted the accused giving him the benefit of doubt.

SRI A. A. RASHEED : Sir, is there any proposal to appeal against the judgment ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Government have been advised by the Public Prosecutor that there was no case for appeal, but some departmental action has been taken against him. The proceedings are pending.

SRI K. VINAYAKAM : Is the incumbent still in service? On the grounds of equity will he be removed from service?

[24th March 1961

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have just stated that the departmental proceedings are pending.

*Artisan Repatriates from Ceylon (Loan)*

* 1047 *Q.*—SRIMATHI RAJATHI KUNCHITHAPATHAM : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கொழும்பிலிருந்து விரட்டப்பட்ட தமிழ் நாட்டு, சலவை, சவர, கொல்லர், சோப்பு செய்பவர்களுக்கு அரசாங்கம் கடன் உதவி ரூ. 250 பெற வட்டார வளர்ச்சி அதிகாரிக்கு மனுசெய்யவேண்டுமென்று நெல்லை மாவட்ட கலெக்டர் அறிவித்து இருப்பது உண்மையா ?

(இ) அப்படியானால், நகரப்புரத்திலே வாழும் இந்த தொழிலாளர்கள் யாருக்கு விண்ணப்பித்துக் கொள்ளவேண்டும் ?

(உ) கிராம பஞ்சாயத்துப் பகுதியில் இருக்கும் தொழிலாளிகளுக்கு மட்டும்தான் இந்தச் சலுகையா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) The artisan repatriates living in Block Development areas should apply to Block Development Officers and those in non-block areas to the Tahsildars or the Special Tahsildars for loans, within whose jurisdiction they reside.

(*c*) All artisan repatriates from Ceylon, irrespective of their place of residence, are eligible for this concession.

*Manganallur–Veerasolan Road*

* 1048 *Q.*—SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லா ஆடுதுறையிலிருந்து மங்கநல்லூர் வீரசோழன் சாலைக்கு எப்போது கிராவல் போடப்படும் ?

(இ) அந்த சாலை இப்போது P.W.D.-லிருந்து ஹைவேஸுக்கு மாற்றப்பட்டுள்ளதா ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) The work is not included in the Third Five-Year Plan at present.

(*b*) No, Sir.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : ஆடுதுறை to மங்கநல்லூர் செல்லும் இந்த வீரசோழன் சாலை மூன்று தாலுக்காக்களில் இணைக்கப்பட்டிருக்கின்றன. இந்த இடத்தில் வீர சோழ மன்னனே ஆண்டதினால் அதற்கு அப்பெயர் வந்தது என்று சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட இடத்தில் ரோட்டு வசதிகள் இல்லாமல் இருக்கிறது. பி. டிப்ள்யூ. டி. பராமரிப்பில் இருக்கிறது. இதை ஹைவேஸுக்கு மாற்றி கிரேவல் போட்டு விட்டால் பஸ் போக்குவரத்திற்கு சௌகரியமாக இருப்பதற்காக சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI P. KAKKAN : இப்பொழுது இருக்கும் கண்டிஷனைப் பார்த்து மெட்டல் ரோடு பரப்பப்பட்ட பின்னால் கவனிக்கப்படும்.

SRI A. VEDARATHNAM : ஆற்றோரமாக ரோடுகள் போடுவதில் பி. டிப்ள்யூ. டி.-யா, ஹைவேஸ்ஸா என்ற இரண்டுங்கெட்ட நிலைமை இருப்பதனால் ஏதாவது ஒரு நல்ல பராமரிப்பிலே ஒரு புது முறையை சர்க்கார் வகுக்குமா ?



24th March 1961]

THE HON. SRI P. KAKKAN : ஆற்றோரங்களிலே ரோடுபோடுவது நல்லதல்ல என்பது அரசாங்கத்தின் எண்ணம். எந்தெந்த இடத்தில் ரோட்டுகள் தேவையோ அந்தந்த இடத்தில் ரோடுகள் போட்டு கிராம மக்களுக்கு உதவி செய்து வருகிறார்கள். இந்த ரோட்டை ஹைவேஸ் டிபார்ட்மெண்ட் எடுத்துக்கொண்டு கவனிக்கும்.

*Sri Ranganathar Deity of Srirangam (Thenkalai Namam)*

* 1049 *Q.*—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government have received any petition from the devotees of Sri Ranganatha temple of Srirangam objecting to the putting of Thenkalai Namam on the forehead of the deity therein;

(*b*) if so, the details of their objection; and

(*c*) the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) & (*c*) Do not arise.

SRI K. VINAYAKAM : Sir, what exactly is the difference between this Vadakalai and Thenkalai namams? What is the sanctity attached to these types of namams and on what basis the present system is obtaining in the temples?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The hon. Mem must have known the difference between Vadakalai and Thenk as that between 'u ' and 'y'. So far as I see there is no sanc about the difference in namams. People may have belief namams but this kind of difference is meaningless.

*Bus-stands in City (construction)*

* 1050 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Industries be pleased to state the present stage of the construction of bus-stands in the Madras City ?

THE HON. SRI R. VENKATARAMAN : There are already three bus-stands at the Parry's Corner, T. Nagar and near the Casino. It is proposed to construct three more bus-stands one each at Mandavalli, Vadapalani and Mint and necessary sites when required for the purpose are being acquired. The construction of the bus stands will be taken up as soon as the sites are acquired.

SRI A. A. RASHEED : Sir, is the Hon. the Minister aware of the fact that the travelling public are put to lot of inconvenience especially in the sun and rain for want of shelters? If so, will the Government expedite the construction of these stands as early as possible?

THE HON. SRI R. VENKATARAMAN : Bus-stand is different from bus shelter. So far as shelters are concerned, they are put up in co-operation with the Corporation.

[24th March 1961

SRI K. VINAYAKAM: Sir, is the Hon. the Minister aware of the fact that at present the bus shelters have been constructed from out of the munificence given by the philanthropic public only and they are not constructed from the coffers of either the Corporation or of the Government? Will the Government see the possibility of constructing these shelters from their own funds instead of depending on somebody to offer this kind of aid?

THE HON. SRI R. VENKATARAMAN: A separate question about the bus shelters may be put.

### *Small Saving Scheme (Establishment charges)*

* 1051 *Q.*—SRI M. P. SARATHI: கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிறு சேமிப்புத் துறைக்காகவும், பரிசு பத்திரங்கள் விற்பனைக் காகவும் தனியாக அதிகாரிகள், ஊழியர்கள் எவ்வளவு பேர் நியமிக்கப் பட்டுள்ளனர்?

(ஆ) இத் துறையில் ஆகும் செலவு முழுவதையும் மத்திய அரசாங் கமே ஏற்றுக்கொள்கிறதா?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) A Special Section consisting of one Superintendent, Two Upper Division Clerks and One Typist is working in the Finance Secretariat and a Publicity Assistant in the Public (Information and Publicity) Department on a temporary basis to attend to the work connected with Small Savings Scheme and Prize Bonds. There is no separate staff on a regular basis in the districts for this purpose. However, at present for work connected with the Special Drive for the sale of Prize Bonds some special staff has been sanctioned for six Districts for a period of two months only.

(*b*) The expenditure incurred on staff in connection with Small Savings Scheme and Prize Bonds is met by the Government of India to the extent of 50 per cent of the total expenditure incurred.

SRI S. M. ANNAMALAI: இந்த பிரைஸ் பாண்ட் வசூலிப்பதற்காக வேண்டி ஒவ்வொரு அதிகாரியையும் இவ்வளவுதான் வசூலிக்கவேண்டும் என்று ஏதாவது டார்ஜட் வைக்கப்பட்டிருக்கிறதா? அதேசமயத்தில் சாதாரண மக்களிடம் வற்புறுத்தி வசூலிக்கக்கூடாது என்று சொல்லப் படுகிறதா?

DEPUTY SPEAKER: The question does not arise out of the main question. The Hon. the Minister need not answer.

### *Health Schemes in rural areas (UNICEF aid)*

* 1052 *Q.*—SRI S. M. ANNAMALAI (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR): Will the Hon. the Minister for Revenue be pleased to state the assistance received from the UNICEF during the Second Five-Year Plan period for the development of Health Schemes in rural areas?



24th March 1961]

THE HON. SRI M. A. MANICKAVELU: A statement[a] is placed on the table of the House.

SRI A. A. RASHEED: Sir, from the statement placed on the table of the House it is seen that a mention has been made to 'Referral Hospitals'. May I know, Sir, what is meant by 'Referral Hospitals'?

THE HON. SRI M. A. MANICKAVELU: Hospitals to which complicated cases are referred back are called 'Referral Hospitals'.

SRI T. S. RAMASWAMI: In item 4 (a) under Training Programme a sum of Rs. 4,398·10 is shown as stipend for student trainees. May I know, Sir, whether this amount signifies and for trainees or is it for the whole training programme?

THE HON. SRI M. A. MANICKAVELU: For Public Health Nursing Scheme course of three months' duration a stipend for 38 students at Rs. 150 per student (at the rate of Rs. 50 per mensem) and an honorarium to the lecturers of about Rs. 1,200 per batch are given.

### *Kovilpatti Railway Station (improvements)*

* 1053 *Q.*—SRI V. SUBBIAH: கனம் உள் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கோவில்பட்டி ரயிலடியைப் புது மாதிரியாக அமைக்குமாறும், உடனடியாக அதில் அபிவிருத்தி செய்யுமாறும் நம் மாநில அரசு மத்திய அரசுக்கு சிபாரிசு செய்துள்ளதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No, Sir.

SRI V. SUBBIAH: கோவில்பட்டி ஸ்டேஷனை, 4 லட்சத்திலிருந்து ஐந்து லட்சம் வரை வருமானம் வரக்கூடிய பெரிய ஸ்டேஷனான கோவில் பட்டி ரெயில்வே ஸ்டேஷனில் எந்தவிதமான அபிவிருத்தி வேலைகளும் நீண்டகாலமாக செய்யாமல் இருக்கும்போது, ஆனால் அதைவிட குறைந்த வருமானமுள்ள 500,1000 ரூபாய் வருமானமுள்ள ஸ்டேஷன்களை புதுப் பித்து மின்சார விசிறிகள், விளக்குகள் போன்ற வசதிகள் செய்யப்பட்டு வருகிறது. மழை பெய்தால் 4, 5 அடி தண்ணீர் கட்டக்கூடிய அளவில் விசிறிகள், விளக்குகள் இன்றி இருக்கக்கூடிய நிலைதான் இருக்கிறது. அங்கு விளக்கு, விசிறி ஒன்றும் இல்லை. ஆக, மத்திய அரசாங்கமோ அல்லது ரெயில்வே போர்டோ வருமான அடிப்படையிலா அல்லது எந்த பேஸிஸில் இதையெல்லாம் செய்கிறார்கள்? 9- a.m.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ரெயில்வே இலாகாவினர் கருதுவது, இதைவிட அவசரமான திட்டங்களைச் செய்ய ரெயில்வே நிலையங்களை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று எடுத்துக் கொள்கிறார்கள். இதுவரையில் கோவில்பட்டியை எடுக்கவில்லை, பின்னால் தயாரிக்கும் போது இதைப்பற்றியும் கருதுவதாக சொல்கிறார்கள்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: With regard to the improvement of these railway stations, may I know whether the State Government have got anything to say in the matter? If so, may I know whether they have sent any proposal to the Railway Board with regard to the improvement of some of the important railway stations?

---

[a] Printed as Appendix II on page 544, *infra*.

[24th March 1961

THE HON. SRI M. BHAKTAVATSALAM : If any suggestion or proposal for improvement of any particular railway station is made to this Government, we will forward that proposal to the Railway Board or the Central Government. Apart from that, these proposals could very well be discussed in the Railway Users' Committee and the Consultative Committee where non-officials are there.

SRI M. K. SOMASUNDARAM : கோவில்பட்டியில் இரண்டு ஸ்பின்னிங் மில்ஸ் இருப்பதாலும், குட்ஸ்ட்ரெயின் அங்கு நிற்க வசதியில்லாதிருப்பதாலும் கோவில்பட்டி ரெயில்வே ஸ்டேஷனை அபிவிருத்தி செய்வதற்கு நமது அரசாங்கம் மத்திய அரசாங்கத்தை வற்புறுத்துமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதுபற்றி இந்த சர்க்காருக்கு யாரும் இதுவரையில் யோசனை சொல்லவில்லை. கேள்விரூபமாக சொன்னால் போதாது. குறிப்பாக குட்ஸ்ஷெட் எந்த வகையில் விஸ்தரிக்கவேண்டிய நிமித்தம் இருக்கிறதென்று இந்த சர்க்காருக்கு எழுதியனுப்பினால் அதை மத்திய சர்க்காருக்கு தெரிவிக்கிறோம்.

SRI P. S. K. LAKSHMIPATHI RAJ : தலைவர் அவர்களிடமிருந்து இல விவரங்கள் அறிய விரும்பி இந்தக் கேள்வியை கேட்கிறேன். சென்னை ராஜ்யத்திற்கு தமிழ்நாடு என்று பெயரிடப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு சட்ட சபையிலே ஆங்கிலத்தில் பேசுகிற காரணத்தினால் ஆங்கிலம் ஏறக்குறைய தெரியாத சில மெம்பர்கள் அதை பின்பற்ற இயலாத முறையில் இருக்கிறார்கள். ஆகவே இது பற்றி ஒரு குறிப்பு கொடுக்கும்படி தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : முன்னமேயே நிதி அமைச்சர் அவர்கள் நிலைமையை விளக்கியிருக்கிறார்கள்.

*Dailies, Weeklies and Monthlies (publication)*

* 1054 *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்திற்குள் எத்தனை தினசரி, வார, மாதப் பத்திரிகைகள் இருக்கின்றன ?

(இ) ஒவ்வொன்றின் பெயரென்ன ?

(உ) ஒவ்வொன்றும் எத்தனை பிரதிகள் விற்கின்றன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) the number of dailies, weeklies and monthlies published in our State is 41, 117 and 351 respectively.

(*b*) & (*c*) Copies of a statement furnishing the required particulars are kept in the Legislature Library.

SRI A. A. RASHEED : May I know whether the figure includes yellow journals also?

THE HON. SRI C. SUBRAMANIAM : If the hon. Member gives those figures, I am prepared to take them. He seems to be aware of these things.



24th March 1961]

*Lands to Agriculturists (Tiruthuraippoondi taluk)*

* 1055 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தாலுகாவில் எந்தெந்தக் கிராமத்தில் நிலமற்ற விவசாயிகளுக்கு அளிக்கக்கூடிய சர்க்கார் புறம்போக்கு நிலங்கள் எவ்வளவு இருக்கின்றன ?

(இ) இந்த நிலங்களை அவர்களுக்கு அளிக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (அ) & (இ) The figures are not available with the Government. The Government consider that the time and labour involved in collecting the figures will not be commensurate with the results.

SRI A. VEDARATHNAM : இதன் முன், மகாணத்திலுள்ள, ஜில்லாக்களில் உள்ள தரிசு நிலங்கள் பற்றி இந்த சபையில் கணக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு தாலுகாவில் உள்ளது பற்றி மட்டுந்தான் கேட்கப்பட்டிருக்கிறது. தாலுகா கணக்கு கூட அரசாங்கத்தாரிடம் இல்லையா, தயாரிக்கமுடியாத அளவு அவ்வளவு அதிகமிருக்கிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : The break-up of the figures that the hon. Member wants is not just now available with me. But, I may tell him that on 1—9—1960, 29,375 acres were available for assignment and from 1—9—1960 to 31—1—1961, 1,808 acres were assigned.

SRI A. VEDARATHNAM : இன்னும் பாக்கியிருக்கிற நிலங்களை நிலமில்லாத விவசாயிகளுக்குக் கொடுப்பதற்கு என்ன ஏற்பாடு நடைபெறுகிறது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதற்காக தனி சிப்பந்திகள் ஏற்படுத்தி 2 ஸ்பெஷல் டெப்டி தாசில்தார், 4 ஆர். ஐ. திருத்துறைப்பூண்டி தாலுகாவிலும், மற்ற இடத்தில் ஒரு டெப்டி தாசில்தார், 2 ஆர். ஐ. ஏற்படுத்தி நிலம் வழங்க வேலை செய்யப்பட்டு வருகிறது.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : நிலமற்றவர்களுக்கு நிலம் வழங்குகிற முறையில் மானிலம் பூராவிலுமே இந்த நிலமில்லாதவர்களுக்கு புறம்போக்கு நிலங்களை, பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் இவைகளின் தேவைக்கு அதிகமாக இருக்கக்கூடிய நிலங்களை நிலமற்றவர்களுக்கு கொடுப்பதன் மூலம் அங்கு கூட்டுறவு முறையில் சாகுபடி செய்ய சர்க்கார் உதவி அளித்தால் உணவு உற்பத்திப் பெருக்கம் ஏற்படுவதோடு வேலையில்லாத் திண்டாட்டமும் ஒழியும். அதை சர்க்கார் எல்லாயிடங்களிலும் நிரந்தரமாக கொண்டுவருவதற்கு கொஞ்சம் சீக்கிரம் முயற்சி எடுப்பார்களா ?

THE HON. SRI. M. A. MANICKAVELU : தனிப்பட்ட முறையில் நிலம் வழங்கப்படுகிறது. கூட்டுறவு முறையிலும் நிலம் சாகுபடி செய்ய திட்டமிருக்கிறது. எல்லாம் ஒரேவிதமாக இருக்க வேண்டுமென்பதில்லை. எங்கெங்கு எப்படி எப்படி சௌகரியமோ அப்படி செய்யப்படும்.

SRI A. VEDARATHNAM : நிலம் அனைத்தும் இலவசமாக வழங்கப் படுகிறதா ? அதற்கு கிரயம் வசூலிக்கப் படுகிறதா ? சிலவிடங்களில் கிரயம் வசூலிக்கப்படுவதாக கூறப்படுகிறது. அதன் உண்மை நிலை என்ன ?

THE HON SRI M. A. MANICKAVELU : இரண்டு விதமிருக்கிறது. வால்யூபிள் அன்ட் நான்-வால்யூபிள் லான்ட்ஸ் என்று. நீர்ப்பாசன வசதியுள்ளது வால்யூபிள் லான்ட்ஸ். அதற்குத்தான் ஏதாவது பணம். ஆனால் அனேகமாக நான்-வால்யூபிள் லான்ட்ஸ்தான் கொடுக்கப்படுகின்றன. அதற்கு பணமில்லை.

[24th March 1961

SRI K. B. S. MANI : சர்க்காரால் கொடுக்கப்படுகிற நிலங்களை சிலவிடங்களில் பக்கத்து நிலத்தின் சொந்தக்காரர்களான மிராசுதார்கள் அவைகளை மாற்றுப் பெயர்களில் தாங்களே ஆக்ரமித்துத் தங்களுக்கு சாதகமாக்கி தங்கள் நிலத்தோடு சேர்த்துக்கொண்டு வருவது சர்க்காருக்கு தெரியுமா ? அப்படித் தெரிந்தால் என்ன நடவடிக்கைகள் எடுக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

THE HON SRI M. A. MANICKAVELU : எப்படி எப்படி, எந்தெந்த இடங்களில் இப்படி சம்பவம் நடக்கிறது என்று தெரிந்தால் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

SRI M. K. SOMASUNDARAM : நிலமற்றவர்களுக்குக் கொடுக்கக் கூடிய நிலத்தில் அவர்கள் பயிரிடுகிறார்களா, இல்லை சும்மா போட்டிருக்கிறார்களா ? சும்மா போட்டிருந்தால் அவர்கள்மேல் என்ன நடவடிக்கைகள் எடுக்க உத்தேசம் ?

THE HON SRI M. A. MANICKAVELU : நிலம் கொடுக்கிற விதி பிரகாரம், மூன்று வருடங்களுக்கு உள்ளாக சாகுபடி செய்யவேண்டும், இல்லையென்றால் நிலத்தைத் திருப்பி எடுத்துக் கொள்வது என்பது விதி.

SRI V. K. KOTHANDARAMAN : வால்யூபிள், நான்-வால்யூபிள் என்ற ஒரு நிர்ணயிப்பு இப்பொழுதேயிருக்கிறதா ? அல்லது அந்தந்த நிலத்தை வால்யூபிள் என்று சொல்லக்கூடிய நிலையில் அந்தந்த நிலத்திற்கு தகுந்தாற்போல் நிர்ணயிக்கப்படுகிறதா ?

THE HON SRI M. A. MANICKAVELU : இப்பொழுதே இருக்கிறது. நீர்ப்பாசன வசதி இல்லையென்றால், இல்லை.

*Electric lights (Utharakosa Mangai)*

* 1056 *Q.*—SRI K. VINAYAKAM : Will the Hon. the Minister for Electricity be pleased to state whether any request was made by the panchayat board of "Utharakosa Mangai" of Ramanathapuram district for the provision of electric lights in the streets?

THE HON. SRI V. RAMAIAH : Yes, Sir.

SRI K. VINAYAKAM : May I know the stage at which the proposition stands and when the Panchayat would get street lights?

THE HON. SRI V. RAMAIAH : The work will be taken up during the course of the next year.

SRI K. VINAYAKAM : What was the estimated amount that was demanded from this Panchayat Board and did the Panchayat tender that amount?

THE HON. SRI V. RAMAIAH : A scheme has been prepared and it is a feasible scheme and that is why I said that the work will be taken up during the next year.

*Land ceiling (survey of lands)*

* 1057 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நிலத்திற்கு உச்சவரம்பு கட்டிய பிறகு எவ்வளவு நிலம் உபரியாகக் கிடைக்குமென்பதை சர்வே செய்ய உத்தேசம் உண்டா ?

(இ) அப்படியானால் அதன் விவரமென்ன ?



24th March 1961]

THE HON. SRI M. A. MANICKAVELU : (அ) & (இ) No, Sir.

SRI S. M. ANNAMALAI : ஸார், இப்போது இருக்கிற மசோதாவானது 1960-ம் வருஷம் ஏப்ரல் மீ 6உலிருந்தே அமல் செய்யப்போவதாக மசோதாவில் கூறப்பட்டிருக்கிறது. அப்படியென்றால் எவ்வளவு நிலம் மிச்சப்படும் என்று ஏன் இந்த சர்க்கார் சர்வே செய்யக்கூடாது ? இதைப்பற்றி பிளானிங் கமிஷன் ஏதாவது ஆலோசனை கூறியிருக்கிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : பிளானிங் கமிஷன் ஒன்றும் சொல்லவில்லை, மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறோம், அதன்படி என்னென்ன செய்யவேண்டுமோ அதை அரசாங்கம் செய்து கொண்டிருக்கிறது. அதன் முன்னாலேயே இந்த விவரங்களை ஏன் தெரிந்துகொள்ள விரும்புகிறார்கள் என்று தெரியவில்லை. ஒரு பழமொழி சொல்லுவார்கள், "யார் வீட்டு ஆத்தாள் செத்தாலும் பொழுது விடிந்தால் தெரிந்து போகும்" என்று...... (பலத்த சிரிப்பு)

SRI K. VINAYAKAM : Is it a fact that there is a belief that there would be about two-lakh acres of land in excess of ceiling be available. Meanwhile, transactions have occurred. So there will be diminution in the extent of such lands.

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir, by a rough survey it is expected that more than two-lakh acres of land will be available. Meanwhile, transactions have occurred. So there will be diminution in the extent of such lands.

SRI S. M. ANNAMALAI : ஸார், கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்ற நேரத்தில் யார் வீட்டு ஆத்தாள் செத்தாலும் பொழுது விடிந்தால் தெரிந்து போகும் என்று தெரிவித்தார்கள். 1960-ம் வருஷம் ஏப்ரல் மீ 6உலியே ஆத்தாள் செத்தாய்விட்டது, ஏன் இன்னும் பொழுதுவிடியவில்லை என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அவர் சொல்லுகின்ற பொழுது வேறாக இருக்கலாம். இந்த சட்டத்தைப் பொறுத்த அளவில் இன்னும் பொழுது விடியவில்லை.

*Medals to Harijans Sevaks (Chengam taluk)*

* 1058 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் பொதுமராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ல் வடஆற்காடு ஜில்லா, செங்கம் தாலூக்காவில் ஹரிஜன சேவகர்கள் என்று எத்தனை பேருக்கு பதக்கங்கள் கொடுக்கப்பட்டன அல்லது கொடுக்க சிபாரிசு செய்யப்பட்டுள்ளது ?

(இ) பதக்கம் கொடுப்பதற்கான சிபாரிசு செய்வது யார் ? எந்த அடிப்படையில் கொடுக்கப்பட்டது ?

THE HON. SRI P. KAKKAN : (அ) The Government have not yet received recommendations regarding the award of medals for the year 1960.

(இ) The recommendations are made by the Director of Harijan Welfare and the Collectors of the districts.

Class I medals are awarded to those who have done work like throwing open wells to Harijans, helping entry of Harijans into hotels, arranging marriage of Harijan girls or boys with other

Caste-Hindus. Class II medals are awarded for other welfare work like facilitating entry of Harijans into temples, social welfare work in Harijan quarters, etc.

**Sri V. K. KOTHANDARAMAN :** ஸார், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களோ அல்லது அதன் ஆதரவாளர்களோ தவிர, மற்ற கட்சியைச் சேர்ந்தவர்களோ அல்லது அதன் ஆதரவாளர்களோ அரிஜன சேவை செய்திருந்தால் அவர்களுக்கும் இம்மாதிரி பரிசுகள் வழங்க வேண்டும் என்று ஏதாவது சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறதா ? அப்படியானால் இதுபோன்ற பதக்கங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றனவா ?

**The Hon. Sri P KAKKAN :** சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறதா இல்லையா என்கிற தகவல் இப்போது என்னிடமில்லை இருந்தாலும் கனம் அங்கத்தினர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன், ஆளும் கட்சியாக இருக்கின்ற காங்கிரஸ் கட்சிதான் அரிஜனங்களுக்கு சேவை செய்து வந்திருக்கிறது. தீண்டாமைக்காக அதை எதிர்த்து போராடியிருக்கிறது. இதர கட்சிகள் நாட்டை பிரிக்க வேண்டும் என்று சொல்லுகிறது, ஏழைகளை நிலச்சுவான்தார்களுக்கு எதிராக போராட வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறது. இப்பேர்ப்பட்ட கட்சிகள் எப்படி அரிஜனங்களுக்காக சேவை செய்வதில் ஈடு பட்டிருப்பார்கள் என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

**Sri V. K. KOTHANDARAMAN :** இது கனம் அமைச்சர் அவர்கள் தானாகவே நினைத்துக்கொள்வதா ? இன்று நடைமுறையில் நிலச்சுவான்தார்களுக்கும் அரிஜனங்களுக்கும் சண்டையை ஏற்படுத்த வேண்டும் என்கிற நோக்கம் யாருக்கும் கிடையாது, எந்தக் கட்சிக்கும் கிடையாது. அரிஜனங்களை முன்னேற்றவேண்டும் என்றுதான் எல்லாக் கட்சிகளும் சொல்லுகின்றன. ஆகவே இந்த அடிப்படையில் வேறு ஏதாவதுசொல்லி பொறுப்பை தட்டிக் கழிப்பது சரியல்ல. அரிஜன சேவை செய்கின்றவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கும் பரிசுகள் கொடுக்கவேண்டும் என்ற அடிப்படையில் சிபாரிசு செய்யப்படுமா ?

**The Hon. Sri P. KAKKAN :** எந்தெந்த அரசியல் கட்சிகள் தங்களுக்காக வேலை செய்கின்றன என்பதை அரிஜன மக்கள் நன்குப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அரிஜன நலனில் பற்றுக் கொண்டு உண்மையாக வேலைசெய்தால் அவர்களுக்குப் பரிசு கொடுக்க பரிசீலனை செய்யப்படும்.

**Sri T. S. RAMASWAMI :** சில மாவட்டங்களில் கோவில்களுக்குப் போவதும், எல்லா கிராமங்களுக்குப் போவதும் முன்னாலேயே இருந்து கொண்டிருக்கிறது. அதற்கு எந்த விதமான தடைகளும் ஏற்படுத்தப் படாமல் இருந்து வருகிறது. இம்மாதிரிப்பட்ட இடங்களில் ஆரம்பத்திலேயே அரிஜன முன்னேற்றத்திற்காகவும், தீண்டாமையைப் போக்குவதற்காகவும் பல காலமாக பாடுபட்டு வந்த முதியோர்களுக்கு உதவி செய்ய அரசாங்கம் ஆலோசிக்குமா ?

**The Hon. Sri P. KAKKAN :** ஏற்கெனவே ஆலயங்களுக்கு போக தடையில்லாத இடங்களில் வேறு வேலைகளில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு மெடல்கள் வழங்குவதற்கும் அரசாங்கம் ஆலோசிக்கும்.

**Sri S. M. ANNAMALAI :** ஸார், கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிற நேரத்தில் நாட்டைப் பிரிக்கின்றவர்கள் அரிஜன மக்களுக்கு சேவை செய்ய மாட்டார்கள் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். அதற்காக நான் கவலைப்படவில்லை. சமீபத்தில் செங்கம் தாலுகாவில் பரிசு பெற்றவரைப் பற்றி கனம் அமைச்சர் அவர்களே விசாரித்துப் பார்த்திருந்தால் அவர்களுக்கே நன்றாகத் தெரிந் திருக்கும். இந்த நாட்டில் அரிஜனங்களை தேவையில்லை என்று சொல்லக்கூடியவரும்



அரிஜனங்களை கட்டிவைத்து அடிக்கக்கூடியவருமான ஒரு நபருக்கு பரிசு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக சிபாரிசு செய்த அதிகாரிகள்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**The Hon. Sri P. KAKKAN :** நாட்டைப் பிரிக்கவேண்டும் என்று சொல்லுகின்றவர்கள் அரிஜனங்களுக்கு ஆதரவாக இருக்கமுடியாது என்று என் குறிப்பிட்டேன் என்றால், இந்த பாரத நாட்டில் ஆறில் ஒரு பங்கு அரிஜனங்கள் இருக்கிறார்கள். இவ்வாறு இருக்கக் கூடியவர்கள் பிரிந்தால் அவர்களுடைய பலம் குறையும். ஆகவேதான் பிரியவேண்டும் என்ற கருத்தை அவர்கள் ஆதரிக்க மாட்டார்கள் என்று சொன்னேன், அதோடு கனம் அங்கத்தினர் அவர்கள் ஏதோ யாருக்கோ தவறுதலாக பரிசு கொடுக்கப்பட்டதாக தெரிவித்தார்கள். இதைப்பற்றி கலெக்டர் அவர்களும், அரிஜன நல அதிகாரி அவர்களும். தாசில்தார் அவர்களும் நன்றாகப் பரிசீலனை செய்துதான் முடிவு எடுத்திருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

*Oil-pressing work (Central Jail, Vellore)*

1059 *Q.*—**Sri V. K. KOTHANDARAMAN :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வேலூர் சென்ட்ரல் ஜெயிலில் செக்கு ஆட்டி எண்ணெய் எடுக்கப் படுகிறதா ?

(இ) என்னென்ன எண்ணெய்கள் ?

(உ) எண்ணெய்க்கான பொருள்கள் கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவா அல்லது தனி நபர்களிடமா வாங்கப்படுகின்றன ?

(எ) டெண்டர் கேட்டு வாங்கப்பட்டதா ?

(ஐ) ஆம் என்றால், யார் யாருக்கு டெண்டர் நோட்டீஸ் போனது ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM :** (*a*) Yes, Sir.

(*b*) Gingelly oil alone is manufactured.

(*c*) The raw materials for the manufacture of gingelly oil are being obtained by tender system. At present, gingelly oil seeds are being purchased from the Thorapadi and Allapuram Co-operative Stores Limited, Thorapadi, because of the cancellation of the contract for supply of gingelly oil seeds during 1960-61. The requirements in cane jaggery are being obtained by local purchase as and when required from the cheapest source after calling for quotations.

(*d*) Yes, Sir.

(*e*) Tender notices were sent to all approved contractors.

**Sri V. K. KOTHANDARAMAN :** ஸார், இப்போது வாங்கக்கூடிய எள்ளில் கல்லும் மண்ணும் கலந்து ஜெயிலுக்கு சப்ளை செய்யப்படுகிறது என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? இது விஷயமாக உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு கனம் அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM :** இதைப்பற்றி தகவல் இப்போது என்னிடம் இல்லை.

**Sri S. NAGARAJA MONIGAR :** ஸார், இப்போது ஜெயிலிலே எண்ணெய் உற்பத்தி செய்வது எவ்விதமாக நடைபெறுகின்றது. முன்னால் சிதம்பரம் பிள்ளை போன்றவர்கள் செக்கிழுத்தார்கள் என்று நாம் எல்லாம் அறிந்திருக்கின்றோம். அந்த முறையில்தான் இப்போதும்

[24th March 1961

கைதிகள் செக்கிழுக்கின்றார்கள் என்று தவறாக யாராவது நினைத்துக் கொண்டிருப்பார்கள். ஆகவே இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்போது செக்கை மாடுகள்தான் இழுக்கின்றன.

SRI A. VEDARATHNAM : சிறைகளில் இப்போது உபயோகிக்கப் படுகிற செக்குகள் வார்தா முறை செக்குகளா ? இல்லையென்றால் அவைகளை உபயோகிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப்பற்றித் தனியாகக் கேள்வி போட்டால் பதில் அளிக்கலாம்.

*Political prisoners (release)*

* 1060 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal to release all political prisoners; and

(*b*) if so, when?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI N. K. PALANISAMI : In the case of Kasi Rajan and Rajagopalan, the Government have released them even before the expiry of the sentence. So, will the Government show mercy to other political prisoners also and release them?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Government have considered this particular question and they have decided not to do anything just now.

SRI K. VINAYAKAM : Will the Government desist from releasing such of those prisoners who have committed loot, murder and arson in the name of politics?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : But I cannot give an assurance to the hon. Member. Prisoners will be released when their term expires (Laughter).

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், வெள்ளையன் காலத்தில் கனம் விநாயகம் அவர்கள் சொன்னார்களே, அதைவிடவும் மோசமான சார்ஜ்களையெல்லாம் போட்டு பலர் தண்டிக்கப்பட்டார்கள். அந்தக் காரணத்தின்பேரிலேயே காசிராஜன், ராஜகோபாலன் போன்றவர்கள் தண்டிக்கப்பட்டிருந்தார்கள், அவர்களை விடுதலை செய்யவேண்டும் என்று கிளர்ச்சி செய்தோம். ஆகவே இன்றையதினம் சிறைகளில் இருக்கின்றவர்கள் எந்த முறையில் தவறுகள் செய்தார்கள் என்பது வேறு பிரச்னை. அவர்கள் வேறு எந்தவிதத்திலோ தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அரசியல் கைதிகளாக 10 ஆண்டுகள் சிறையில் இருக்கிறார்கள். ஆகவே வருகின்ற தேர்தலை முன்னிட்டாவது உடனடியாக அவர்களை விடுதலை செய்வதற்கு அமைச்சர்கள் குழுவில் முடிவு செய்ய ஏற்பாடு செய்யப்படுமா ?



24th March 1961]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவர்கள் என்ன குற்றம் செய்தார்கள் என்பதைப்பற்றி இப்போது பேச வேண்டிய அவசியமில்லை. தேர்தலுக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. இவர்கள் எல்லாம் கோர்ட்டில் தண்டனை பெற்றவர்கள். அதை நம்முடைய இஷ்டத்திற்குத் தக்கவாறு மாற்ற முடியாது. மாற்றவேண்டும் என்று சர்க்கார் ஏதாவது சந்தர்ப்பங்களில் நினைத்தால் அவ்விதம் முடிவு செய்யும். இப்போது தண்டனை பெற்றிருப்பவர்களை எல்லாம் அரசியல் கைதிகள் என்று சொல்லிவிட முடியாது. அதை சர்க்காரும் ஒப்புக்கொள்ள முடியாது. ஆகவே இவர்களை விட்டுவிட வேண்டும் என்று சொல்லுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. அந்தப் போக்கையும் சர்க்கார் ஏற்றுக்கொள்ள முடியாது.

SRI N. K. PALANISAMI : May I know whether the Government are aware of the volume of public support for the release of these political prisoners and the Communist Party of India has already planned to place the public views on release of political prisoners before Government? If so, why should not Government comply with those views?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Communist Party of India wants the release of their men who have been convicted for certain grave offences. But I cannot accept that the views of the Communist Party of India reflect the views of the public.

SRI P. S. K. LAKSHMIPATHI RAJ : கனம் அங்கத்தினர் சொன்னார் வெள்ளையர் காலத்தில்கூட கனம் விநயகம் போன்றவர்கள் இருக்கிற கட்சியில் செய்தார்கள் என்று. கடந்த காலத்தில் வெள்ளையர்கள் இருந்தபோது அங்கு இருந்த அதிகாரிகளை எதிர்த்துப் போராடியிருக்கலாம். ஆனால் சகோதரத் தோழர்களையே வெட்டிக் கொலை செய்த சம்பவங்களைக் காட்ட முடியுமா? இவர்களுக்கு ஆதரவு காட்டும் முறையில் விடுதலை செய்யத் தயாராக இருக்கிறதா அரசாங்கம் என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பழைய சரித்திரத்திற்கு இந்த கேள்வி நேரத்தில் போக வேண்டிய அவசியமில்லை.

Sri N. K. Palanisami rose.

DEPUTY SPEAKER : This matter was discussed already when the Jail Demand was discussed in this House. The Hon. Minister has replied suitably. There is, therefore, no need to put any more questions.

*Sales-tax on paddy (removal)*

* 1061 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை நெல் மண்டி கமிஷன் வியாபாரிகள் சங்கத்தின் சார்பில் நெல்லுக்கு விற்பனை வரியை எடுத்துவிடும்படி கோரி 22—12—1960 தேதியிட்ட விண்ணப்பம் சர்க்காருக்கு வந்ததா ?

(இ) அதன்மீது சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) The matter is under examination by the Government.

[24th March 1961

Sri V. SANKARAN: ஸார், இந்த விண்ணப்பம் செய்திருப்பவர்கள் மூட்டைக்கு 4½ அணு கமிஷன் அல்லது ப்ரோக்கரேஜ் வாங்கும் ஏஜெண்டுகள். அப்படியும் நெல்லிலிருந்து வரி மூலம் வரும் வருமானம் ஒரு சில லட்சம் தான் என்பதையும், முக்கிய உணவுப் பொருளாகிய நெல்லுக்கு இதை எடுத்து விட்டால் ஒரு நல்ல gesture ஆக இருக்கும் என்ற முறையில் சீக்கிரத்தில் எடுத்துவிட முடியுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: கனம் அங்கத்தினருக்கு சட்டம் நன்ருகத் தெரியும். இந்த விற்பனை வரி வியாபாரிகளிடமிருந்து வசூலிக்கப்படுகிறதே தவிர இது கன்ஸ்யூமர் டாக்ஸ்தான். ஆகையால் இதை வியாபாரிகள் யாரிடத்தில் விற்கிருர்களோ அவர்களிடத்திலிருந்து வாங்கிக் கொடுக்க எந்தவிதக் கஷ்டமும் இருக்காது என்றுதான் நினைக்கிறேன்.

*Employees in the Office of Electrical Engineer (General) Madras*

* 1062 Q.—Sri V. K. KOTHANDARAMAN: கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை மின்சார இன்ஜினியர் (பொது) அலுவலகத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு சென்னை சம்பளக் கமிஷன் சிபார்சிற்கேற்பக் கொடுக்கப்பட வேண்டிய சம்பளத்தின் பாக்கி கொடுக்கப்பட்டிருக்கின்றதா ?

(இ) இல்லையெனில், அதன் காரணங்கள் யாவை ?

The Hon. Sri P. KAKKAN: (a) & (b) Arrears consequent on the fixation of pay in the revised scales sanctioned in July 1960 have been paid to all employees in the Office of the Electrical Engineer (General), Madras.

Certain posts such as Store-keepers, I and II Grades, and members of the provincialised work-charged establishment in the Electrical Engineer (General) Division have not been included in the pay fixation referred to above. The question of revision of scales for these categories was under the consideration of Government and orders have since been issued on 15—3—1961 laying down revised scales for these posts also.

*Lower Bhavani and other areas (silting)*

* 1063 Q.—Sri T. S. RAMASWAMI: Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) the proportion of area and volume silted up in the catchment area of (1) Lower Bhavani Project, (2) Amaravathi Project and (3) Mettur Reservoir; and

(b) the steps taken by the Government to remove this accumulating silt periodically?

The Hon. Sri P. KAKKAN: (a) There is no possibility of the catchment area of the Projects getting silted up.

(b) Does not arise.



24th March 1961]

Sri T. S. RAMASWAMI: Is it not a fact that people who remove the silt, which is being added up every year, are being prosecuted by the department?

The Hon. Sri P. KAKKAN: Not in the reservoir but in the village, some of them are prevented. Now we have issued instructions to issue permits for removing silt. On getting the necessary permission they are allowed to take this silt.

Sri R. SRINIVASA IYER: காச்மெண்ட் ஏரியா என்று கேட்ட கேள்வி தவறுதலாக இருக்கலாம். தண்ணீர் தங்குமிடத்தில் ஸில்ட்-அப் ஆகிறது. ஒரு டாம் 100 வருஷம்தான் இருக்கும் என்று நிர்ணயம் செய்கிறும், அது ஸில்ட்-அப் ஆகும் என்று சொல்லுகிருர்களே இப்படி ஸில்ட்-அப் ஆகாமல் இருக்க அல்லது ஸில்ட்டை எடுக்க ஏதாவது வழி வகை செய்யப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri P. KAKKAN: கனம் அங்கத்தினர் கேட்பது சரியான கேள்வி. லோயர் பவானியில் அதை மாதிரி ஸில்ட்-அப் ஆகியிருக்கிறது என்று சொல்லுகிருர்கள். அதை அப்புறப்படுத்த வேண்டுமென்ருல் சென்ட்ரல் போர்ட் ஆப் இர்ரிகேஷன் அண்டு பவர் என்ற நிறுவனத்தோடு கலந்து பரிசீலனை செய்துதான் ஏற்பாடு செய்யவேண்டும். பெட் லெவலில் மடை வைத்திருப்பதால் போக வசதி இருக்கிறது. மேட்டூரில் பெட் லெவலில் மடை வைக்கவில்லை. தேவையானுல் வைக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது. அமராவதியில் பெட் லெவலில் மடை இருப்பதால் அங்கேயும் திறந்துவிட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

*Census work (special allowance)*

* 1064 Q.—Sri M. P. SARATHI: கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

'குடியியல் மதிப்பீடு' வேலையில் (Census work) ஈடுபடும் ஆசிரியர்களுக்கு, அந்த வேலைக்கென்று தனியாக ஊதியம் (Special allowance) அளிக்கப்படுகிறதா ? அது உடனுக்குடன் கொடுக்கப்படுகிறதா ?

The Hon. Sri C. SUBRAMANIAM: The teachers who have been appointed as enumerators and supervisors in connection with the 1961 Census are eligible for the honoraria granted by the Government of India. A portion of the amount of honoraria has already been paid to them for the work connected with the house-list operations. The honoraria for the enumeration work will be paid to them on the completion of the work.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR: May I know whether anything extra is also paid to village officers?

The Hon. Sri C. SUBRAMANIAM: I would like to have notice for that.

Sri S. NAGARAJA MONIGAR: ஸார், குறிப்பிட்ட உபாத்தியாயர்களோ, கிராம அதிகாரிகளோ அதிகப்படி வேலை செய்கிருர்கள் என்ற முறையில் ஊதியம் கொடுக்கப்படுவதானுல் எல்லோருக்கும் கொடுக்கப்பட்டு தானே வருகிறது ? இதற்கு முந்தைய சென்ஸஸிலும் கொடுக்கப்பட்டு தானே வந்தது ?

The Hon. Sri C. SUBRAMANIAM: எப்போதும் இருப்பதுபோல் தான்.

[24th March 1961

*Agricultural implements*

* 1065 *Q.*—SRI V. SUBBIAH: கனம் உள் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசினரால் இரும்பு, உருக்கு கோட்டா அனுமதிக்கப்பட்டுள்ள தனிப்பட்ட வியாபாரிகளிடமிருந்து விவசாயக் கருவிகளைப் பெற விவசாயிகள் மிகவும் அவதிப்படுகிறார்கள் என்பது அரசினருக்குத் தெரியுமா ?

(இ) தெரியுமானால், அதன்மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI V. SUBBIAH: மண்வெட்டி, கடப்பாரை, சால், கூணைபட்டை போன்ற விவசாயக் கருவிகள் இப்போது பணம் இருந்தாலும் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. ஆகையால் தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்காமல் கூட்டுறவு மார்க்கெட்டிங் சொஸைட்டி, பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் போன்றவைகளுக்கு கொடுக்கும் உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கூட்டுறவு சங்கங்கள் இருந்தால் அவர்களுக்கு முதல் ஸ்தானம் கொடுக்கப்படுகிறது. இல்லாத இடத்தில் தனிப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட ஃபேப்ரிகேட்டர்கள் மூலமும் கொடுக்கப்படுகிறது. இது கருவிகள் பற்றியது. இரும்புக்குத்தான் அது. விவசாயிகளுக்கு 100-க்கு 50 வீதம் சலுகையும் காட்டப்படுகிறது வட்டார வளர்ச்சிப் பிராந்தியங்களில். இப்போது மற்றொரு திட்டமும் பரிசீலிக்கப் பட்டு வருகிறது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே. அதன்படி மான்யமும் கடனும் கொடுப்பது என்று யோசனை. வருஷத்திற்கு 4 லட்ச ரூபாய் செலவு செய்ய ஒரு திட்டம் பரிசீலனையில் இருக்கிறது. வட்டார வளர்ச்சி இல்லாத பிராந்தியங்களில் கூட விவசாயிகளுக்கு சுலபமாகக் கிடைக்க இப்போது கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: I talk from practical experience. In spite of the answer given by the Hon. Minister, still these things are not easily available. May I request the Hon. Minister to institute again another enquiry to find out the causes of delay in the supply of these things?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Enquiry is not necessary. There is still shortage. There is difficulty. The situation is improving now and I do hope we will be able to have better supply so that this difficulty might be removed.

SRI V. K. KOTHANDARAMAN: ஸார், முதல் சலுகை, இரண்டாவது, மூன்றாவது என்றில்லாமல் எப்படி உர வினியோகத்தில் ஊழல் ஏற்பட்ட காரணத்தினால் தனியாருக்கு இல்லாத முறையில் கூட்டுறவு சொஸைட்டிகளுக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கிறதோ அதே போன்று இதையும் கூட்டுறவு சொஸைட்டிகளுக்கு ஒப்படைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: உரம் அப்படியே வினியோகிக்கப்படுவது. அதை யார் வேண்டுமானாலும் செய்யலாம். இப்போது கூட்டுறவு சங்கங்களுக்குக் கொடுக்கப்பட்டது. ஃபேப்ரிகேட்டிங் என்பது டெக்னிக்கல் விஷயம். எல்லா கூட்டுறவு சங்கங்களும் இதை எடுத்துச் செய்ய தயாராக இருப்பார்கள் என்று சொல்ல முடியாது. அது தான் கஷ்டம்.



24th March 1961]

SRI R. SRINIVASA IYER: ஸார், ஃபேப்ரிகேட்டர்ஸ் என்று லைஸென்ஸ் வாங்கிக்கொண்டு இரும்பு ரா மெட்டீரில் வாங்கி ஃபேப்ரிகேட் செய்யாமல் கம்பியாக இருந்தால இரண்டாக வெட்டி, வேறு மற்றவைகளாக இருந்தால் அப்படியே ப்ளாக் மார்க்கெட்டில் விற்றுவிடுகிறார்கள். அதனால் தான் அக்ரிகல்சரல் இம்ப்ளிமெண்ட்ஸ் கிடைக்கவில்லை. லைஸென்ஸ் வைத்திருப்பவர்கள் வாங்கும் சாமானை ஃபேப்ரிகேட் செய்கிறார்களா என்று விசாரிக்க ஏற்பாடு செய்ய முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இதில் கைத்தொழில் இலாகா அப்போதைக்கப்போது பரிசீலனை செய்து வருகிறது. அது மாத்திரம் போதாது. மக்களிடத்தில் விழிப்பு வேண்டும். சட்ட மன்ற உறுப்பினர்களும் இதைப்பற்றி கண்காணித்து யாராவது தவறு செய்தால் அந்த மாதிரி ஒன்றிரண்டு கேஸ்களை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் கண்டிப்பாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளபபடும். அதன் மூலமாக நிலைமை மாறலாம்.

*Oil resources*

* 1066 Q.—SRI T. S. RAMASWAMI (on behalf of SRI T. T. DANIEL): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any survey was conducted to explore oil in the Kanyakumari district; and

(*b*) if so, when and the results thereof?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

* 1067 *Q.*—SRI A. VEDARATHNAM: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) காவிரி நதியின் ஓரத்தில் எண்ணெய் வள ஆராய்ச்சி சம்பந்தமாக இந்திய சர்க்காருக்கு ருமேனிய நிபுணர்களை அளித்து உதவத் தயாராய் இருப்பதாக, அந்த நாட்டு வர்த்தக மந்திரி கூறியிருப்பதை இந்திய சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்கிறார்களா ? இல்லையானால் காரணமென்ன ?

(இ) வேறு எந்த நாட்டின் உதவியாவது நமக்கு இந்த ஆராய்ச்சிக்குக் கிடைத்திருக்கிறதா ? அதன் விவரமென்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) & (*b*) The Government have no information in the matter.

SRI A. VEDARATHNAM: ஸார், இப்போது இந்த எண்ணெய் வள 9–30
ஆராய்ச்சியை நடத்தி வருவது எந்த நாட்டினரால் ? ருமேனிய அரசாங்கத் a.m.
தார் இந்த விஷயத்தில் நமக்கு உதவி புரிவதாகக் கோரியதை நம்மிடம் நேரே கேட்கவில்லை என்றால், மத்திய அரசாங்கத்தின் மூலமாக அணுக வேண்டிய காரணத்தால், அவர்களை அணுகி என்ன சொன்னார்கள் என்ற விஷயமாவது இந்த அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அவர்கள் இதைப்பற்றி ஏதாவது கேட்டு அறிந்து கொண்டார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN: இப்போது காவேரி நதி பேஸினிலே ஆராய்ச்சியை நம்மவர்கள் செய்கின்றார்கள். ருமேனியா அரசாங்கத்தைப் பற்றிய விவரம் இந்த ராஜ்ய சர்க்காருக்குக் கிடையாது.

SRI K. VINAYAKAM: Sir, may I know from out of the researches made so far has it ever been established that there are oil resources in the Cauvery Basin?

THE HON. SRI R. VENKATARAMAN: The hon. Member knows a little about the technicalities involved in this matter. All researches can only give indications of the possible existence of oil and there are such possibilities.

SRI N. R. THIAGARAJAN: காவேரிப் பகுதியிலே எண்ணெய் பற்றி இதுவரை ஆராய்ச்சிகள் நடந்துகொண்டிருப்பதாக கனம் அமைச்சர் சொன்னார். இதிலே நம்முடைய சர்க்காருக்குக் கிடைத்த தகவல்களைக் கூற முடியுமா?

THE HON. SRI R. VENKATARAMAN: இதற்கு முன்பு இந்தச் சபையிலே இதைப்பற்றி 2, 3 முறை விவரங்கள் கொடுத்திருக்கிறேன். முதலிலே ஏரோநாடிக் செய்தார்கள். இரண்டாவது சீஸ்மிக செய்திருக்கிறார்கள். இந்த இரண்டு சர்வேக்களின் பயனாக, எண்ணெய் இருக்கலாம் என்ற நம்பிக்கை இருக்கிறது. அதற்கு மேல் ஒன்றும் சொல்ல முடியாது.

SRI R. SWAMINATHA MERKONDAR: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் காவேரிப் பகுதியில் ஏதாவது ஆராய்ச்சி நடந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN: காவேரி பேசின் என்று சொல்வது திருச்சி, தஞ்சை எல்லாம் சேர்ந்த பகுதிகள்தான்.

SRI A. VEDARATHNAM: ருமேனியா அரசாங்கத்தார் இந்த ஆராய்ச்சியை நமக்கு இலவசமாகச் செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் இந்த ஆராய்ச்சித் துறையிலே நல்ல அனுபவம் உள்ளவர்களாயிற்றே? அப்படி இருந்தால், ஒருபுறத்திலே இந்த ஆராய்ச்சியை நடத்துவதினால் என்ன நஷ்டம்? இதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள முன்வருமா?

THE HON. SRI R. VENKATARAMAN: ஆரம்பத்திலேயே நான் சொன்னேன். ருமேனியா அரசாங்கத்தார் இதிலே உதவி செய்வதற்கு என்னென்ன கண்டிஷன் கொடுத்திருக்கிறார்கள் என்பது தெரியாது. அதுபற்றிய விவரமே இந்த சர்க்காருக்கு கிடைக்கவில்லை.

SRI A. GOVINDASAMY: ஸார், கனம் அமைச்சர் அவர்கள் அநேகமாக எண்ணெய் இருக்கலாம் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். முடிவாகத் தெரிந்துகொள்வதற்கு மேலும் ஏதாவது ஆராய்ச்சி செய்வதற்கு இந்த அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறதா?

THE HON. SRI R. VENKATARAMAN: தொடர்ந்து மேற்கொண்டு வேலை நடத்தப்படும். அதற்காக டிரிலிங் போடுவதாக இப்போது திட்டம் இருந்துகொண்டிருக்கிறது.

*A person being the President of more than one Co-operative Society (Prohibition)*

*1068 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஒன்றுக்கு மேற்பட்ட கூட்டுறவு சங்கங்களுக்கு ஒரே நபர் தலைவராக இருக்கக்கூடாதென்று எப்போது சர்க்கார் உத்தரவு போட்டார்கள்?

(இ) அவர்கள்மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN: No, Sir. The Government have not issued any such order. But the Co-operative rules have been amended to prohibit a person from being a



member of more than one housing society of any type without the general or special sanction of the Registrar of Co-operative Societies. This rule also provides that any person who was a member of more than one housing society on the date of the commencement of the rules would cease to be a member of all housing societies unless he resigned his membership of all but one of the societies within a month from that date.

(இ) Does not arise.

*New T.B. Sanatoriums (Third Plan)*

*1069 *Q*—SRI V. K. KOTHANDARAMAN: கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மேலும் எத்தனை டி. பி. சானடோரியம் ஆரம்பிக்க உத்தேசம்?

(இ) எங்கெங்கே?

THE HON. SRI M. A. MANICKAVELU: (அ) Nil.

(இ) Does not arise.

SRI V. K. KOTHANDARAMAN: ஸார், மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்திலே புதிதாக மேலும் டி. பி. சானிடோரியங்கள் ஆரம்பிக்கப் போவதில்லை என்று சொல்லும்போது, இப்போது ஆரம்பித்திருக்கிற அல்லது ஆரம்பத்திலே இருந்து கொண்டிருக்கிற சானிடோரியங்களில் மேலும் பல வார்டுகளை ஏற்படுத்தி, படுக்கைகளை அதிகப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: இப்போது இருக்கிற சானிடோரியங்களில் படுக்கைகளை விஸ்தரிப்பதற்கு திட்டம் இருக்கிறது. தாம்பரத்திலே, இன்னும் மற்ற இடங்களிலே உள்ள சானிடோரியங்களில் படுக்கைகளை விஸ்தரிக்கப்படும். அதோடு வேலூருக்கு அடுத்தாற்போல் ஒரு புதிய சானிடோரியம் கட்டுவதற்கு இருக்கிறது. இதிலே முதலில் 40, 50 என்று ஆரம்பித்து கடைசியில் 100 படுக்கைகள் ஆக்கப்படும்.

*Municipal Drainage Schemes (aid)*

*1070 *Q.*—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether any municipalities have applied for aid for undertaking drainage schemes; and

(*b*) if so, the amount asked for?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) Yes. Kumbakonam and Madurai Municipalities.

(*b*)

| | | Loan. | Grant. |
|---|---|---|---|
| | | RS. | RS. |
| **Kumbakonam Municipality** | .. | 84,500 | 84,740 |
| **Madurai Municipality** | .. | 3,43,500 | |

SRI N. K. PALANISAMI: Sir, may I know how much amount has been given to these municipalities so far?

[24th March 1961]

THE HON. SRI M. A. MANICKAVELU : கும்பகோணம் முனிசி பாலிடிக்கு கடனாக ரூ. 84,500. இனாமாக ரூ. 64,700. மதுரைக்கு ரூ. 3,43,500 கடனாக வழங்கப்பட்டிருக்கிறது.

DEPUTY SPEAKER : Questions are over.

(NOTE—ANASTERISK ATTHE COMMENCEMENT OF A SPEECH INDICATES REVISION BY THE MEMBER)

II—INFORMATION *RE* CLOCKSIN THE CHAMBER.

SRI V. K. KOTHANDARAMAN : நம்முடைய சபையிலே உள்ள கடிகாரத்தில் 5 நிமிஷத்திற்கு முன்னாலே 7 நிமிஷம் வித்தியாசத்தைக் காட்டிக்கொண்டு இருந்தது. இப்போது திடீரென்று அது மாற்றியமைக்கப் பட்டிருக்கிறது. இனிமேலாவது இந்த மாதிரி வித்தியாசங்கள் இல்லாத அளவிற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

DEPUTY SPEAKER : எனக்கு எதிரிலே இருக்கிற கடிகாரம் நன்றாகத் தான் இருந்தது. இப்போது எல்லா கடிகாரங்களும் சரியாக இருக்கின்றன. கொஞ்ச நேரத்திற்கு முன் பக்கவாட்டிலே உள்ள கடிகாரங்கள் இரண்டும் நின்று இருந்தன. அவ்வளவுதான்.

III.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1961—1962 —*Cont.*

DEPUTY SPEAKER : Now the discussion on voting on Demands will be continued.

DEMAND XXVI—COMMUNITY DEVELOPMENT PROJECTS, ETC.

THE HON. SRI C. SUBRAMANIAM : On the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 5,01,99,900, under Demand XXVI—Community Development Projects, etc.'

DEPUTY SPEAKER : Motion moved—

'That the Government be granted a sum not exceeding Rs. 5,01,99,900 under Demand XXVI—Community Development Projects, etc. '

SRI S. M. ANNAMALAI : Sir, I move my cut motion—

'That the allotment of Rs. 5,01,99,900 under Demand XXVI—Community Development Projects, etc. be reduced by Rs. 100. '

DEPUTY SPEAKER : Cut motion moved—

'That the allotment of Rs. 5,01,99,900 under Demand XXVI—Community Development Projects, etc. be reduced by Rs. 100. '

**The other Demand may also be moved now.**



24th March 1961]

DEMAND XXXIV—OTHER MISCELLANEOUS CONTRIBUTIONS AND ASSIGNMENTS.

THE HON. SRI C. SUBRAMANIAM : On the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 1,64,50,000 under Demand XXXIV—Other Miscellaneous Contributions and Assignments.'

DEPUTY SPEAKER : Motion moved—

'That the Government be granted a sum not exceeding Rs. 1,64,50,000 under Demand XXXIV—Other Miscellaneous Contributions and Assignments.'

As the hon. Member, Sri K. Sattanatha Karayalar, who has given notice of a cut motion is not in his seat, his cut motion cannot be moved.

The Demand and the cut motions are before the House for discussion.

SRI S. M. ANNAMALAI : சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே சமுதாய நலத் திட்ட நிர்வாகத்திற்கு வேண்டி இங்கு கொண்டு வந்துள்ள மான்யக் கோரிக்கையின் மீது, எனது வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல முற்படுகிறேன். என்னுடைய வெட்டுப் பிரேரணையானது, இந்தச் சட்டம் சரிவர அமுல் நடத்தப்பட்டிருக்கிறதா....

SRI P. S. K. LAKSHMIPATHI RAJ : On a point of order, Sir. கனம் அங்கத்தினர் எனது வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என்று பேசுகிருரே, இப்படி அவர் பேசலாமா ?

DEPUTY SPEAKER : The hon. Member, Sri S. M. Annamalai has moved a cut motion under 'Demand XXVI—Community Development Projects, etc. '

SRI S. M. ANNAMALAI : இந்தச் சட்டமானது நம்முடைய மாகாணத் தில் சரிவர அமுல் நடத்தப்படவில்லை. இதிலே குறிப்பாக, சமுதாய நலத் திட்டப் பகுதியிலே உண்மையிலேயே சட்டத்தை அமுல் நடத்தப்படவில்லை என்ற குற்றச் சாட்டை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகின்றேன். சமுதாய நலத் திட்டப் பகுதிகளுக்கு நாம் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகின்றபோது, நம்முடைய நிர்வாகத்திலே பலவாறுகச் செய்ய வேண்டு மென்ற அடிப்படையில்தான் நாம் சட்டத்தைக் கொண்டுவந்தோம். ஆனால் இந்தச் சட்டம் 1958-லே சட்டமாகியும்கூட, ஏதோ விதிகள், சட்டங்கள் என்ற அளவிலே இருக்கிறதே தவிர, ஒரு ஒழுங்கான சட்ட திட்டங்களை இதுவரையில் பிறப்பிக்கப்படாமல் இருக்கிறது.

அதைப்போலவே, "கைட்" என்னும் ஒரு புத்தகத்தை இப்பொழுது பிரசுரித்திருக்கிருர்கள். அந்தப் புத்தகத்தை நமக்கு சட்ட மன்றத்தில்தான் கொடுக்கப்படுகின்றதே தவிர, அதற்கு முன்பு ஆளும் கட்சியிலே இருக்கின்ற காங்கிரஸ்காரர்களுடைய கையிலே அந்தப் புத்தகத்தை நாம் பார்க்க நேரிடுகின்றது. அதைப் பார்க்கின்றபோது, நம்மைப்போலுள்ள சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு அப்படிப்பட்ட புத்தகங்கள் நம் கைக்கு வருவதில்லை. ஆகவே ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களுக்கு எப்படியும் முன்கூட்டியே இப்படிப்பட்ட புத்தகங்களைக் கொடுத்துவிடுகின்ருர்கள் என்ற உண்மை புலனாயிற்று. உண்மையிலேயே, அந்தப் புத்தகத்தைப் பார்க் கின்றபோதும், இப்போது அந்த சட்டங்களை அமுல் நடத்தப்படுகின் றதையும் பார்க்கின்றபோது நிர்வாகத் துறையிலே அதிகாரம் அதிகமாக்கப்

[Sri S. M. Annamalai] [24th March 1961

சொல்லுகிறேன். ஏறத்தாழ நான்கு ஆண்டுகளாக இந்த சட்டமன்றத்தில் அங்கத்தினராக இருக்கிறேன். நான் இதுவரையிலும் என்னுடைய தொகுதியிலுள்ள சமுதாய நலத் திட்டத்தைப் பற்றியோ அல்லது மற்ற சமுதாய நலத் திட்டங்களைப் பற்றியோ நான் சொல்லியது கிடையாது. கலசப்பாக்கத்தில் ஒரு ஸ்பின்னிங் ஆர்கனைஸர் போட்டார்கள். அவர் ஆற்காட்டிற்கு மாற்றப்பட்டார். வந்ததும் அவர் 'பப்ளிக் மீடிங்' போட்டு காங்கிரஸ் கட்சி சார்பாக நன்றாக, அழகாகப் பேசுகிறார். காங்கிரஸ் கட்சியை ஆதரிக்கவேண்டுமென்று பேசுகிறார். இதைவிட கட்சிப் பிரசாரத் திற்கு வேறு என்ன உதாரணம் இருக்கமுடியும்? பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் மீடிங் நடந்தவுடன் சேர்மன் கூட்டத்தை ஒத்திவைத்துவிட்டுச் சென்ற பிறகு கூட, 'மினிட்' புஸ்தகத்தை எடுத்துக்கொடுத்து மற்ற பஞ்சாயத்து போர்டு தலைவர்களைக்கொண்டு கூட்டத்தை நடத்துவதற்கு பி.டி.ஓ. ஏற்பாடு செய்கிறார்கள். இந்த முறையில் இந்தச் சட்டத்தின் கீழ் நிர்வாகம் நடக்கிறது. இதை ஆராய்ந்து அலசிப் பார்க்கவேண்டும்.

அதுபோல பிளாக்குகள் ஏ.பி.ஸி.டி. என்ற அடிப்படையில் பிரிக்கும் பொழுது, 'ஏ.பி.ஸி.டி. என்று பிற்பட்ட பகுதிகள் என்ற அடிப்படையில் பிரிக்கப்போகிறோம் என்று சொல்லப்படுகிறது. அப்படி பிரிக்கப்படும் பொழுது, பல ஆண்டுகளாக சமுதாய நலத்திட்டம் சில இடங்களில் அமுலில் இருந்தால் கூட, அதாவது போளூர், கலசப்பாக்கம் ஆகிய இடங்களில் சமுதாய நலத் திட்டம் பல ஆண்டுகளாக அமுலில் இருந்தால் கூட—அங்கே ஜவ்வாது மலை இருக்கிறது—மலைவாசிகள் அங்கு அதிகமாக இருக்கிறார்கள். இந்த திட்டங்கள் அங்கு அமுல் நடத்தப்பட்டாலுங்கூட, அந்த இடத்தில் அவர்கள் இன்னும் முன்னுக்கு வரவில்லை. ஆகையினால் அந்தப் பகுதியை பிற்பட்ட பகுதியாக சேர்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாதர் இலாகா மத்திய சர்க்காரால் நடத்தப்படுவது 1–4–61 தேதியி லிருந்து கலைக்கப்படுகிறது என்று நோட்டீஸ் பார்த்தேன். அப்படிக் கலைக்கப்பட்டால் அதிலுள்ள பெண் உத்தியோகஸ்தர்கள் அதிகமாக பாதிக்கப்படுவார்கள். ஏதோ வடநாட்டில் மாதர் இலாகா சரிவர நடக்க வில்லை என்ற காரணத்திற்காக மத்திய சர்க்கார் இதை கைவிடலாம். மத்திய சர்க்கார் கைவிடுவதன் காரணமாக 'நாங்களும் கைவிடுகிறோம்' என்று சொல்லுவது அவ்வளவு நியாயம் அல்ல. இதையும் கவனிக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER: I allot ten minutes to each hon. Member. How long will the Hon. Minister take for his reply?

THE HON. SRI C. SUBRAMANIAM: Half an hour, Sir.

DEPUTY SPEAKER: All right. Hon. Member Sri M. William may now speak.

* SRI M. WILLIAM: கனம் உதவி சபாநாயகர் அவர்களே. இந்த மானியக் கோரிக்கையை ஆமோதித்துப் பேசும்போது, கிராமப் புறங்கள் முன்னேற வேண்டும் என்பதற்காக சமுதாய நலத் திட்டங்கள், பஞ்சாயத்துக்கள் இவை மூலம் செய்யப்பட்டு வருகிற காரியங்களை எல்லோரும் அறிவோம். நாட்டுப் பிரதேசங்கள் முன்னேற வேண்டும். அவர்கள் வாழ்க்கைத்தரம் உயரவேண்டும், வேலையில்லாத் திண்டாட்டம் அகற்றப்பட வேண்டும், பசி, பிணி பட்டினி முதலியவை அகற்றப்பட வேண்டும் என்பதற்காகத்தான் இந்த திட்டங்களைத் தீட்டி, நல்ல முறையிலே செய்யப்பட்டு வருகின்றன என்பதை அனைவரும் அறிவோம்' ஆனால், நாம் எதிர்பார்த்தபடி இந்த திட்டங்களில் வெற்றி காணக் கிடைக்கவில்லை என்றும், ஒரு சில சிக்கல்கள் ஆங்காங்கே ஏற்பட்டிருப் பதன் காரணமாக இந்த திட்டங்கள் நல்ல முறையிலே நடக்கவில்லை என்றும் கூற விரும்புகிறேன். இந்த திட்டங்களெல்லாம் நல்ல வெற்றி யடையவேண்டுமென்றால், அதிகாரிகளும், மக்களும் ஒன்றுபட்டு உழைக்கா விட்டால், நிச்சயமாக நல்ல பலன் கிட்டாது. அப்படி அதிகாரிகளும்,



24th March 1961] [Sri M. William]

மக்களும் ஒத்துழைக்கக் கூடிய சூழ்நிலையை சிருஷ்டிக்க வேண்டியது கவர்மெண்டின் கடமை. நமது கிராமப் பிரதேசங்கள் முன்னேற்றம் அடையவேண்டுமானால், அதற்காக சில பல திட்டங்கள் வகுத்திருக்கிறார்கள்; பொருளாதார முன்னேற்றம் அடையவேண்டுமானால், கிராமங்களில் கிராமத் தொழில்களை கூட்டுறவு அடிப்படையில் நிறுவவேண்டும் என்பதற்காக கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கவேண்டும் என்ற கருத்துடன் 1,000 ஜனத்தொகை, கொண்ட கிராமங்களுக்கு சிறுசிறு சங்கங்கள் ஏற்படவேண்டும் என்று கொண்டுவருகிறார்கள். அதே சமயத்தில் அந்த ஜனங்கள் ஒன்றுபட்டு, பணம் வசூல் செய்து, ஒரு சொஸைடி ரெஜிஸ்டர் செய்து தரவேண்டும் என்று கேட்டால், அநேக காலம் ஆகிறது; காரணம் என்னவென்றால், அருகாமையில் இருக்கும் ஆட்சேபணையினால், அப்படி அருகாமையில் இருக்கும் சொஸைடியின் ஆட்சேபணையைக் கவனிக்க வேண்டியதில்லை. ஆயிரம் ஜனங்கள் உள்ள கிராமத்திலும் ஒரு கூட்டுறவு சங்கம் ஆரம்பிக்கவேண்டுமானால், அடுத்த கிராமத்தின் அபிப்பிராயம் கேட்கவேண்டிய அவசியமில்லை. கூட்டுறவு சங்கங்கள் அமைப்பதில் இருக்கும் இந்த சிக்கலைத் தீர்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கிராமப்புறங்களுக்கு ரோடு வசதிகள் மிகவும் அவசியம் என்று அடிக்கடி கூறி வருகிறோம். ஒரு சில நபர்களால் வேலைகளுக்கு தடை ஏற்படுகிறது. அம்மாதிரி நிலையில் அந்த ஸ்தலத்தை ஆர்ஜிதம் செய்ய வேண்டியது சர்க்காரின் கடமை. பஞ்சாயத்துக்கள் மூலமாக செய்வதானால், வருஷக் கணக்காக ஸ்தலம் ஆர்ஜிதம் ஆகாமல் இருக்கிறது. காலதாமதம் ஆகிறது. இந்தக் குறையிருந்தால் கிராமங்கள் எப்படி முன்னேற்றம் அடைய முடியும்? ஆகவே இந்தச் சிக்கல்களைத் தீர்க்க வகைகளை வகுக்க வேண்டுமென்று வேண்டிக் கேட்கிறேன்.

விளவங்கோடு தாலூகாவில் மேல்புறம் சமூகநலத் திட்டத்தின்கீழ் ஒரு செங்கல் ஆலை ஆரம்பிக்க வேண்டும் என்று சர்க்காருக்கு மனு அனுப்பி ஒரு வருஷம் ஆகிறது. பணம் வசூல் செய்து ஜனங்கள் பாங்கியில போட்டு வைத்திருக்கிறார்கள். அவர்கள் அதற்காக சொஸைடியை ரெஜிஸ்டர் செய்ய எதிர்பார்க்கிறார்கள். அதை சீக்கிரமாக ரெஜிஸ்டர் செய்யாததன் காரணமாக அவர்களிடையே அவநம்பிக்கை ஏற்படுகிறது. ஆகவே இம்மாதிரிக் காலதாமதம் ஏற்படாமல், உடனடியாக ஆவனச் செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வேண்டிக்கொள்ளுகிறேன். கிராமங்கள் முன்னேற்றம் அடையவேண்டும், முன்னேற்றம் அடைய வேண்டும் என்று சொல்லுகிறோம். ஆனால் ஆரம்பிக்கும் தொழில் களெல்லாம், பட்டணங்களில்தான் ஆரம்பிக்கிறோம். அந்த விஷயத்தில் விளவங்கோடு படுமோசமான நிலையில் இருக்கிறது. அது 3 லட்சம் ஜனத் தொகை கொண்டது; அங்கு ஒரு தொழிற்சாலையும் இல்லை. அங்கே ஒரு இண்டஸ்டிரியல் எஸ்டேட் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. தொழில் அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அங்கு விஜயம் செய்தபோது, அங்கே இண்டஸ்ட்ரியல் ஸ்கூல் ஆரம்பிக்கவேண்டும் என்று அவர்களை கேட்டதில், செய்யலாம் என்று சொன்னார்கள். ஆனால், இதுவரைக்கும், நடைமுறையிலே அது வரவில்லை. நாகர்கோவில் பட்டணத்தைத் தேர்ந்தெடுப்பதாகத் தெரிகிறது. அது ஒருபோதும் சரியில்லை. இம்மாதிரி ஸ்தாபனங்கள் மிகப் பிற்போக்கான இடங்களில்தான் ஆரம்பிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

விவசாயத்தை அபிவிருத்தி செய்யவேண்டும் என்று சொல்லுகிறோம். திட்டங்கள் தீட்டுகிறோம். ஆனாலும் குறைகள் இருப்பதால முன்னேறவில்லை. குளங்கள், ஏரிகள் நல்ல நிலையில் இல்லாததால், விவசாயத்தில் க்ருஷியில் நஷ்டம் ஏற்படுகிறது. இவைகள் காலதாமதம் இன்றி நல்ல முறையில் செப்பனிடப்படவேண்டும்.

(Sri S. Ranganatha Mudaliar in the Chair.)

உரத்தை எடுத்துக்கொண்டால், விவசாயிகள் பல மைல்தூரம் போய், அம்மாதிரி அநேக நாட்கள் போய் வரவேண்டிய நிலை இருக்கிறது. அதுவும் காலத்தில் கிடைப்பதில்லை. இவைகளை அகற்றி தகுந்த காலத்தில்

அவர்களுக்குக் கிடைக்கச் செய்யவேண்டும். அவ்வண்ணம் செய்தால்தான், கிராமப் பிராந்தியங்கள் பொருளாதார அடிப்படையில் முன்னேற்றம் அடையும். விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கப் பல திட்டங்கள் இருக்கின்றன. கன்யாகுமரி மாவட்டத்தில் ஒரு சில கிராமங்களில் அக்ரிகல்சுரல் பாங்க் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அது மிகவும் திறம்பட அது வேலை செய்து வருகிறது. ஒவ்வொரு கிராமத்திற்கும் ஏற்றவாறு இந்த திட்டங்களை மாற்றியமைத்து நல்ல முறையிலே செயல்படச் செய்தால், கிராம மக்கள் பலன் அடைவார்கள். எல்லா கிராமங்களிலும் (Agricultural Bank) ஆரம்பித்து ஒழுங்குகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

சமூகநல அதிகாரிகளிடம் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்க எத்தனையோ லட்சக்கணக்கான ரூபாய்களை கொடுத்திருக்கிறார்கள். ஆனால், அதனால் அதிகப் பிரயோஜனம் இல்லை. ஏனென்றால், தக்காவி ரூல்ஸ் என்று சொல்கிறார்களே அவை மிகக் கடுமையாக இருக்கின்றன. ஒரு கடன் வாங்க கிஸ்தித் தொகையில் 15 மடங்கு கொடுப்பதாகச் சொல்லுகிறார்கள். அந்தப் பகுதிகளில் ஒரு ஏக்கருக்கு 1¼ ரூபாய்தான் இங்கு கொடுக்க வேண்டும். ஆகவே ஒரு ஏக்கருக்கு 15 அல்லது 20 ரூபாய்கள்தான் கிடைக்கும். ஆகவே இதை மாற்றி வஸ்துவின் விலையை மதிப்பிட்டு, அதற்கேற்றவாறு கடன் கொடுக்க திட்டம் வகுக்கவேண்டும்.

கிராமப்புறங்களில் இன்னும் சில கஷ்டங்கள் இருக்கின்றன. க்ருஷி செய்வதில் விவசாயிகளுக்கு பல கஷ்டங்களும் ஏற்படுகின்றன. புறம்போக்கு குளங்களை ஆக்கிரமித்து மரங்கள் நடுவது வழக்கமாக இருக்கிறது. அதை அதிகாரிகள் கவனிப்பதில்லை. ஒவ்வொரு ஆக்ரமிப்பையும் பற்றி அறிவிப்புக் கொடுத்தால், அதிகாரிகள் அந்த மனுக் கொடுத்த ஆளைப் பற்றி விசாரணை செய்ய ஆரம்பிக்கிறார்கள். அவர் பேரில் போலீசில் ப்ராது கொடுத்து, கஷ்டப்படுத்துகிறார்கள். இந்த விஷயம் பற்றி ரெவின்யூ அமைச்சரிடம் வேண்டுமானால் நான் சரியான முறையில் எழுத்து மூலம் தெரிவிக்க தயாராக இருக்கிறேன். விவசாயிகள் கஷ்டப்படுத்தப்படுவது சரியில்லை. அதிகாரிகள் ஜனங்களின் ஊழியர்கள், பப்ளிக் சர்வென்ட்ஸ் என்ற மனோபாவம் உள்ளவர்களாக இருக்கவேண்டும். ஆகவே அம்மாதிரி நல்ல ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அதற்கான வழிவகைகளைச் செய்யவேண்டும் என்று சொல்லிக்கொண்டு முடிக்கிறேன். வணக்கம்.

10.00 a.m. *SRI P. G. MANICKAM: மதிப்பிற்குரிய சேர்மேன் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் இந்த மானியத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தத் திட்டமானது பொது ஜனங்களால் மிகவும் வரவேற்கத்தக்க திட்டமாகும். பொது ஜனங்களுக்கும் அதிகாரிகளுக்குமிடையே நெருங்கிய தொடர்பு ஏற்படுத்துவதன் மூலம் திட்டங்களை சரிவர நிறைவேற்றுவதற்காக அமைக்கப்பட்ட திட்டமாகும். இதைத்தான் ராமராஜ்யம் என்று மகாத்மா காந்தி அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இந்த ராமராஜ்யம் வெற்றிகரமாக நடைபெற்றால்தான் சுயராஜ்யம் செழித்தோங்கினதாகும். முக்கியமாக இத்திட்டத்திலே ரோடுகள் ஐந்துவிதமாகப் பிரிக்கப்பட்டு இருக்கின்றன. National Highways, State Highways, Major District Board Roads, Other District Board Roads, Village Roads என்ற ஐந்து வகையிலே மேஜர் ஜில்லா போர்டு ரோடுகள் பஞ்சாயத்து யூனியன் பராமரிப்பின் கீழ் வருகின்றன. அதைப்போலவே "மற்ற ஜில்லா போர்டு ரோடுகளும் பஞ்சாயத்து யூனியன்களிடமே தரப்படுகின்றன. நபர் ஒன்றுக்கு 40 பைசா வீதம் கணக்கிட்டு அந்தத் தொகையானது பஞ்சாயத்து யூனியன்களுக்கு தலசாலை மானியம் என்ற முறையில் கொடுக்கப்போவதாகத் தெரிகிறது. இதற்காக 90 லட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டிருக்கிறது. இப்படிப் பிரித்துக் கொடுக்கப்படுகிற தொகையோடுகூட, பொதுஜனங்களுடைய உதவியும் பெறப்படுகிறது. இணைப்புச் சாலைகளைப் போடும் திட்டத்தைப் பொறுத்தமட்டில் உள்ளூர்ப் பஞ்சாயத்துக்கள்





அல்லது உள்ளூர் மக்கள் கொடுக்க வேண்டிய நிதி, அந்த வட்டாரம், ஏ, பி, ஸி, டி என்ற வகுப்பில் எந்த வகுப்பில் அடங்குமோ அதைப் பொறுத்திருக்கும் என்று இருக்கிறது. இது மிகவும் யோசிக்கவேண்டிய விஷயம். பொதுஜனங்கள் கொடுக்கிற பணத்தைக்கொண்டு மட்டும்—சாலைகள் ஐந்தாறு மைல்கள் கூட நீளமாக இருக்கலாம். அதைப் போட முடியுமா என்பது யோசிக்கவேண்டும். ஆனால் பஞ்சாயத்துகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகையிலே புது வேலைகள் எடுத்துக்கொள்ளக் கூடாது. குறைந்த வேலைகளோ மற்ற வேலைகளோ செய்வதற்கு இந்தத் தொகையைப் பயன்படுத்தக் கூடாது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மற்ற ஜில்லா போர்டு ரோடுகள் என்கிறபோது நான்கு பஞ்சாயத்துகளுக்குச் சேர்ந்த பொது வேலைகளாக இருக்கலாம். பஞ்சாயத்து யூனியனிடம் அதைச் செப்பனிடுவதற்குப் பணம் இல்லாமல் இருக்கலாம். லட்சம் ரூபாய்க்கு மேற்பட்டுச் செலவாகக் கூடிய வேலையாக இருந்தால் பணத்திற்கு அவர்கள் என்ன செய்வார்கள் என்பதும் ஆராயவேண்டும். இப்படிப்பட்ட ரோடுகளையே போட முடியாத நிலைமை ஏற்படடுவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கு என்ன செய்வது என்பதான குறிப்பு தெளிவாகக் கொடுக்கப்படவில்லை என்பதை நான் மிகவும் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இம்மாதிரி ரோடுகள் சம்பந்தப்பட்டவரை ஒரு குறிப்பிட்ட தொகையை சர்க்காரே போட்டுச் செய்யவேண்டும் என்பதாகத் தெரிவித்துக்கொள்கிறேன். இது சம்பந்தமாக ஜில்லா கலெக்டருக்கு ஒரு உத்தரவு பிறப்பிக்கவேண்டும். சம்பந்தப்பட்ட ஹைவேஸ் அதிகாரிகள் இந்தமாதிரி ரோடுகளை நேரிடையாக எடுத்துச் செய்வதற்குரிய நிலைமையில் சாதகமாக இருக்கும்படி இந்தத் திட்டத்தை சர்க்கார் கவனித்து ஆவன செய்யவேண்டுமென்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக தரிசு நிலங்கள். தரிசு நிலங்களில் தற்போது சர்க்கார் இந்தச் சட்டத்தின்கீழ் ஒதுக்கப்படாத காடுகள், மேய்ச்சல் நிலங்கள், வண்டிப்பேட்டைகள், மாட்டுத் தொழுவங்கள், தோப்புகள், சுடுகாடுகள், இடுகாடுகள் போன்ற சிலவகைப் புறம்போக்கு நிலங்களும் பஞ்சாயத்துக்களிடம் நிலைத்துள்ளன. அதோடு தீர்வை விதிக்கப்பட்ட தரிசு நிலங்கள், தீர்வை விதிக்கப்படாத தரிசு நிலங்கள் உட்பட மாநில அரசாங்கத்தாருக்குச் சொந்தமான மற்றவகைப் புறம்போக்கு நிலங்களும் இதரப் பொது நிலங்களும்கூட பஞ்சாயத்தின் உபயோகத்திற்கென கிடைக்கும்படிச் செய்யவேண்டுமென்றும் பலர் எடுத்துச் சொன்னார்கள் என்றும், இவற்றைப் பராதீனம் செய்தல் போன்ற உரிமைகளைப் பஞ்சாயத்துகள் மேற்கொள்ளாத நிலைமையில் இவ்விஷயம் பரிசீலனை செய்யப்படும் என்றும் சர்க்கார் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் ஊர் நத்தம் புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. அங்கே வீடுகள் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு சர்க்கார் பாதுகாப்பு அளித்தாகவேண்டும். மீதி இருக்கிற நிலங்களைப் பற்றி ஆட்சேபனை இல்லை. இந்த விஷயத்தில் போதுமான கவனம் செலுத்தப்படவேண்டும்.

மதிய உணவு திட்டத்தைப் பொறுத்த வரையில் கூடிய வரையில் பொது மக்களுடைய உதவியோடு நடத்தப்படுகிறது என்றாலும்—பஞ்சாயத்துகளும், பஞ்சாயத்து யூனியன்களும், அரசாங்கமும் சேர்ந்து ஒழுங்காக இதைச் செய்வதற்கு வகை செய்யவேண்டும். அதோடு இதுவரையில் ஜில்லா போர்டு உதவி வந்த பிரகாரம் இனி பஞ்சாயத்து யூனியன்கள் புத்தகம், சிலேட் முதலியவைகளை ஹரிஜனங்களுக்கு உதவும் வகையில் சட்டம் திருத்தப்படவேண்டுமென்று தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

SRI V. K. KOTHANDARAMAN : கனம் தலைவர் அவர்களே, இந்த வெட்டுப் பிரேரபணையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சமுதாய நலத் திட்டத் துறையை எடுத்துக் கொண்டால் குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால் இது ஒரு விளம்பர இலாக்கா போன்றுதான் இருக்கிறது. இதற்காக செலவு செய்யக்கூடிய தொகைக்கு ஏற்றவாறு பலன்

கிடைக்கவில்லை என்றுதான் சொல்லவேண்டும். இதைப்பற்றி நான் மாத்திரம் சொல்லவில்லை. இதை ஆராய்ச்சி செய்த மத்திய சர்க்காரில்கூட பலர் கூறியிருக்கிறார்கள். ஏதோ எதிர்க்கட்சிக்காரர்கள் குறைகூற வேண்டுமென்று நினைத்துக் குறைகூறுகிறார்கள் என்று கனம் அமைச்சர் அவர்கள் நினைக்கலாம். ஏதோ இதில் உள்ள குறைகளை எடுத்துச் சொல்வதற்காகத்தான் இதுபோன்ற விவாதம் இங்கு கொண்டுவருகிறோம். இதைப்பற்றி எதிர்க்கட்சி மாத்திரம் சொல்லவில்லை. காங்கிரஸ் கட்சியில் இருப்பவர்களும் குறைகளை எடுத்துச் சொல்கிறார்கள். காங்கிரஸ் கட்சிக்காரர்கள் இந்த மானியத்தை ஆதரிக்கிறேன் என்று குறைகளைச் சொல்கிறார்கள். எதிர்க் கட்சிக்காரர்கள் எதிர்க்கிறேன் என்று குறைகளை எடுத்துச் சொல்கிறார்கள். இதுதான் வித்தியாசம்.

இன்றைக்கு பொதுவாக பஞ்சாயத்துக்களோ, பஞ்சாயத்து யூனியன்களோ மூன்றாவது ஐந்தாண்டு திட்டகாலத்தில் விவசாய அபிவிருத்தி செய்து உற்பத்தியை அதிகமாகப் பெருக்கவேண்டுமென்று சுருக்கமாக சொன்னார்கள். விவசாய அபிவிருத்தியை எடுத்துக் கொண்டால் இன்றைக்கு பெருமளவிற்கு விவசாய உற்பத்தி அதிகமாக இருக்கிறதா என்று பார்த்தால், இல்லை என்றுதான் சொல்லவேண்டும். காரணம் விவசாயத்திற்கு வேண்டிய அளவிற்கு நீர்ப்பாசன வசதி மிக மிகக் குறைவு. கனம் முதலமைச்சர் அவர்கள் வேலூரில் ஒரு கூட்டத்தில் பேசும்போதுகூட சொன்னார்கள். இந்த பழைய மாடுகளையும் ஏறுகளையும் கலப்பைகளையும் வைத்துக் கொண்டு உழுகிறார்கள். இப்பொழுது நவீன கருவிகளையெல்லாம் கொடுத்தும்கூட என்று. ஆனால் இன்றைக்கு பஞ்சாயத்து யூனியன்களுக்கு இதையெல்லாம் கொடுக்கக்கூடிய வசதிகள் இல்லை. அகல உழுவதைவிட ஆழ உழு? 5 தடவை விளையக்கூடிய நிலம் 10 தடவையாக விளையும் என்று சொல்லுகிறார்கள். புல்டோசர், டிராக்டர் கிணறு வெட்டுவதற்கு டிரில்லிங் மெஷின் இதுபோன்ற என்னென்ன நவீன கருவிகள் வேண்டுமோ அவைகளைத் தருவிப்பதற்கு அன்னிய நாட்டு செலாவணி கிடையாது. கோதுமை வாங்குவதற்கு மாத்திரம்தான அன்னிய செலவாணி இருக்கிறது என்கிறார்கள். ஆனால் பெரிய பெரிய முதலாளிகள் மாளிகைகள் கட்டுவதற்காக வேண்டி அவர்களுக்கு உதவி செய்வதற்காக அன்னிய செலாவணி இருக்கும், அதே சமயத்தில் விவசாய அபிவிருத்திக்கு, ஏழை விவசாய மக்களுக்கு உதவி நவீன விவசாயக் கருவிகளை வாங்குவதற்காக அன்னிய செலாவணி இல்லை என்று சொல்லுகிறார்கள்.

**THE HON SRI P. KAKKAN** : கனம் அங்கத்தினர் விவசாயிகளுக்கு வேண்டிய விவசாயக் கருவிகள் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் இரும்பு கலப்பைப் போன்ற கருவிகள் எல்லாம் விவசாயிகளுக்குக் கொடுத்துவருவது அவர்களுக்குத் தெரியாதா ?

**SRI V. K. KOTHANDARAMAN** : காரணம் எதுவாக இருந்தாலும் விவசாய மக்களுக்குத் தேவையான விவசாயக் கருவிகளை உடனடியாகக் கொடுப்பதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும். இதுபோன்ற பஞ்சாயத்து யூனியன் ஏரியாவிலுள்ள விவசாயிகளுக்கு லோன் கொடுக்கும் விஷயத்திலும் உடனடியாகக் கொடுப்பதில்லை. மழைகாலம் போனபிறகு தண்ணீர் வற்றிப்போய்விடுகிறது. அந்தசமயத்தில் பணத்தை அவர்களிடம் கொடுத்தால் அதைத் தவறான முறையில் செலவழிக்கக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படுகிறது. இதனால் இவர்களுடைய நிலங்களை ஏலம் போடக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. ஆகையால் விவசாயிகளுக்குத் தேவையிருக்கும்போது உடனடியாக லோன்களை கொடுத்தால் நலமாக இருக்கும் என்று சொல்ல விரும்புகிறேன். இன்று என்ன நடக்கிறதென்றால் பஞ்சாயத்துக்களில் இருக்கும் பெரிய பணக்காரர்கள் அந்த லோன் வசதிகளைப் பெற்றுக் கொண்டு ஏழை விவசாயிகளுக்கு வட்டிக்கு விட்டு பணம் சம்பாதிக்கிறார்கள். இந்தமாதிரியான நிலைமைதான் இதில் இருந்து வருகிறது. இதைத் தவிர விவசாயிகள் குடும்பத்திலே அண்ணன் தம்பிகள்



இருப்பதனால் ஜாயின்ட் பட்டாவாக இருக்கிறது. அதைப் பிரிக்கும்போது சர்வே செய்து நிலத்தை அளக்கவேண்டும், அதனால் காலதாமதம் ஏற்படுகிறது. இதைப்பற்றி பஞ்சாயத்து யூனியன் கூட்டத்திலும் டிஸ்டிரிக்ட் டெவலெப்மெண்ட் கூட்டத்திலும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இதற்கு உருப்படியான நடவடிக்கை ஒன்றும் எடுக்கவில்லை. சர்க்கார் இதை கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

சாதாரணமாக விவசாயத்தைப்பற்றி தெரிந்த அதிகாரிகள் இருக்கிறார்களா என்று பார்த்தால் கிடையாது. ரெவின்யூ இலாக்காவை எடுத்துக்கொண்டால் வெறும் உப்புக்கல் போட்டமாதிரி சொல்லக்கூடிய அளவிற்கு இருக்கிறதே தவிர விவசாயிகளுக்கு வேண்டிய நன்மையைச் செய்யக்கூடியவைகளாக இல்லை. ஆகையால் விவசாய அனுபவம் உள்ளவர்களைப் போடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இதுபோன்று சோஷியல் வெல்ஃபேர் வொர்க்கர்கள் இருக்கிறார்கள். தயவு செய்து கூடுமான வரை அந்தந்த ஜில்லாவிலே உள்ளவர்களை அந்தந்த ஜில்லாவிலேயே போடவேண்டும். அவர்களை இரண்டு மூன்று ஜில்லாக்களைத் தாண்டிப் போடாமல் அவர்கள் இருக்கும் ஜில்லாவிலேயே போட்டால் சௌகரியமாக இருக்கும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பஞ்சாயத்துக்களுக்கு தரிசு நிலங்கள் இருக்கின்றன. சுடுகாடுகூட பஞ்சாயத்தைச் சேர்ந்ததுதான். கோயம்பத்தூரில பேரூர் பஞ்சாயத்திலே பல வருஷங்களாக சுடுகாட்டு நிலங்களை சும்மா விட்டுவைத்திருந்தார்கள். பஞ்சாயத்து யூனியன் தலைவர் கம்யூனிஸ்ட் தலைவராக வந்ததினால், அந்த நிலம் தேவஸ்தானத்தைச் சேர்ந்தது அதை காலி செய்யவேண்டுமென்று சொல்லக்கூடிய நிலைமை வந்திருக்கிறது இதுபோன்று பல இடங்களில் இருப்பதனால் இதை கவனித்து பஞ்சாயத்துக்கு மாற்றுவதற்கு உருப்படியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மதுக்கரை பஞ்சாயத்தில் இருந்து ரோட்டுகள் போடுவதற்காக பல மகஜர்கள் கொடுக்கப்பட்டன. இதற்கு பல முதலாளிகள் குறுக்கே நிற்கிறார்கள், இதை கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். குறிப்பாக ரோட்டு போடுவதற்காக கிராம மக்களிடமிருந்து 40 ந. பை. கொடுக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். குறைந்தது 500 பேர்கள் என்றால் ரூ. 200 தான் ஆகிறது. 1,000 பேர்கள் என்றால் ரூ. 400 தான் ஆகும். ஆகையால், அவர்களுக்கு ரோட்டு போடுவதற்கு உதவ தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். விவசாயிகளுக்கு கூடுமானவரைக்கும் நீர்ப்பாசன வசதி செய்துகொடுக்க போதுமான அளவு கவனம் செலுத்தவேண்டும். உரம் தருவதற்கும் நவீன விவசாய கருவிகளைக் கொடுப்பதற்கு ஆவன செய்யவேண்டும். சோஷியல் வெல்ஃபேர் செலவுக்கு ஒதுக்கப்பட்ட பணம் அந்தந்த பஞ்சாயத்திற்கு போதுமான அளவு நல்லமுறையில் இயங்குவதற்கு கொடுக்கவேண்டும் இது தவிர 1958-ம் வருஷத்திற்கு முன் பஞ்சாயத்து புறம்போக்கு நிலங்களில் யார் யார் விவசாயம் செய்துக் கொண்டிருந்தாலும், அவர்கள் 10 வருஷ காலம் இருந்தாலும், 20, 30 வருஷகாலமாக இருந்தாலும் அவர்களை உடனடியாக காலி பண்ணச் சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. அதைத் தவிர்த்து ஏதோ ஒரு வருஷம், இரண்டு வருஷம் இருந்தாலும் சட்டரீதியாக 1958-க்குள் புறம்போக்கு நிலங்களை உபயோகித்துக் கொண்டிருந்த காரணத்தினால் அவர்கள் பேரிலேயே பட்டா வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்.

**SRI J. MATHA GOWDER** : கனம் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த ஸ்தல அபிவிருத்தி மானியக் கோரிக்கையை ஆதரித்து என் கருத்துக்களை கூற விரும்புகின்றேன். முன்பு 360 வட்டாரங்களாக பிரிக்கப் போகிறோம் என்று சொல்லப்பட்டிருந்தது. அதை தற்போது 374 வட்டாரங்களாக பிரிக்கப்பட்டிருப்பது

மிகவும் வரவேற்கத் தக்க அம்சமாகும். திட்டமிட்டதைவிட 14 வட்டாரங்கள் அதிகரிக்கப்பட்டிருப்பதைப் பார்க்கும்போது கிராம அபிவிருத்தியில் நமது மாநில சர்க்கார் எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ளமுடியும். அதே நேரத்தில் இந்தக் குறிப்பில் காணப்படிருக்கக் கூடியது, மலைப் பிரதேசங்களுக்கும், ப்ளெயின்ஸ்க்கும். ஜனத்தொகை அடிப்படையில் விகிதாசாரத்தைப் பிரித்துக் கொண்டு வரக்கூடிய விதத்தை இந்த மன்றத்தில் நான் அடிக்கடி கூறி வந்திருக்கிறேன். உதாரணமாக, 3 வது பக்கத்தில் ஏழாவது பாராவில், "பஞ்சாயத்து யூனியன் சாலைகள் என்று பிரிக்கப்பட்டவற்றை பஞ்சாயத்து யூனியன்கள் பராமரிக்க முடியுமா என்ற சந்தேகம் தோன்றியது என்று சொல்லப்பட்டிருக்கிறது." பஞ்சாயத்து யூனியன்களினால் இப்படிப்பட்ட மாவட்ட வழிகளை பராமரிக்க முடியுமா என்று நாம் சந்தேகிக்கிறோம்........ஆனால் பஞ்சாயத்து யூனியன் சாலைகள் என்று பிரிக்கப்பட்டவற்றிற்கு அவைகளை நிர்வகிக்க பஞ்சாயத்து யூனியன்களுக்கு கணிசமான அளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது என்று இருப்பதை நான் வரவேற்கிறேன், ஆனால் ஒருவருக்கு 40 நயா பைசா வீதம் என்று கணக்கிட்டுக் கொடுத்தால் 500 ஜனத்தொகை கொண்ட கிராமத்திற்கு, வியாபார ஸ்தலங்களை இந்த கிராமங்களோடு இணைப்பதற்கு சாலைகள் அமைக்க இந்த 40 நயா பைசா வீதம் கொடுத்தால் ரோடுகள் அமைக்க முடியுமா; ப்ளெயின்ஸ் எப்படியோ தெரியாது. ஆனால் மலைப் பிரதேசங்களிலும் இதே கணக்கை வைத்துக்கொண்டு பெர் காப்பிட்டா கணக்குப்படி, ஜனத்தொகை அடிப்படையில் கொடுக்கப்பட்டால் நீலகிரி பிரதேசத்தைப் பொறுத்த வரையில் நான் சொல்லமுடியும், எப்படி இதைக்கொண்டு அங்கு வேலை செய்து முடிக்க முடியும் ? ஹரிஜனங்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் விஷயத்தில அந்த இலாகாவிலிருந்து, ப்ளெயின்ஸில் வீடு கட்ட வீடு ஒன்றுக்கு 750 ரூபாய் கொடுக்கிறோம். ஆனால் நீலகிரியில் ஒரு வீடு கட்டுவதற்கு 1,000 ரூபாய் கொடுக்கப்படுகிறது. காரணம் அங்கு விலைவாசிகள் அதிகம். மலைப் பிரதேசங்களில் பௌண்டேஷன் போட அதிகச் செலவாகும். ஆக, ஒரு இலாகாவில் மலைப் பிரதேசத்திற்கும் ப்ளெயின்ஸுக்கும் உள்ள வித்தியாசத்தை வைத்துக்கொண்டு கணக்கிடும்போது மற்ற இலாக்காக்களில் இதைப்பற்றி பரிசீலனை செய்யாமல் ஜனத்தொகை அடிப்படையில் போட்டுவிடுகிறார்கள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடியப்போகிறது நீலகிரியில் பத்து மைல் ரோடு போடவேண்டுமென்றால், அதற்காகும் செலவைக் கொண்டு ப்ளெயின்ஸில் 40 மைல் ரோடு போட முடியும். ஆக, இப்படி தொகை ஒதுக்கும்போது மற்ற சமுதாயத் திட்டப் பகுதிகள் முன்னேறிக்கொண்டு போகும்போது, நீலகிரியில் இருக்கக்கூடிய மக்கள் மட்டும் முன்னேற்றம் அடைய முடியாததொரு நிலை ஏற்பட்டிருப்பதை அமைச்சர் அவர்கள் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். நாலு ஆண்டுகளாக இந்த மன்றத்தில் இதைப் பற்றி நான் கூறிக் கொண்டு வந்திருக்கிறேன். அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது தயவு செய்து இதைப் பற்றியதொரு விளக்கம் கொடுத்தால் நான் மிகவும் நன்றியுள்ளவனாக இருப்பேன். அங்கு, எந்தவிதமான வேலையும் செய்யமுடியவில்லை. அங்குள்ள மாவட்ட கழகத்தை எடுத்துக்கொண்டால், சர்க்காரிடம் கடன் கேட்டுக்கொண்டேயிருக்கிறோம். சர்க்காரும் கடன் கொடுத்திருக்கிறார்கள். கடனை நாங்கள் அடைக்க முடியாத நிலைதான் இருக்கிறது. மாவட்டச் சாலைகளை பராமரிக்க எங்களுக்கு பண வசதி போதியதாகயில்லை. ஆறு மாதத்திற்கு இவை வேலை செய்ய, 4,000 ரூபாய் கொடுக்கப்படுகிறது. ஆண்டுக்கு 8,000 ரூபாய். ஆக, 4,000 ரூபாயை வைத்துக்கொண்டு ஒரு ஜில்லாவின் ரோடு வேலைகளை செய்து முடிக்கமுடியுமா ? அதுவும் நீலகிரி ஜில்லாவில், அடிக்கடி நான் சொல்லி வந்திருக்கிறேன். எங்கள் பிராந்தியங்களில் மண் ரோடு அல்லது ஜல்லி ரோடு போட்டால் சர்க்கார் பணமும், மக்கள் பணமும்தான் விரயமாகும் என்று அடிக்கடி கூறியிருக்கிறேன். 10,000 ரூபாயில் மண் அல்லது ஜல்லி ரோடு அமைத்துவிட்டால் நல்ல பலத்து மழை பெய்யும்போது அங்கு அதிகப்படியான ஸ்லோப்ஸ் இருப்பதால் அந்த ரோடுகளை எல்லாம் தண்ணீர் அடித்துக்கொண்டு போய்விடுகிறது. ஆகவே போடப்படுகிற ரோடுகளை தண்ணீர் அடித்துக்கொண்டு போகாமல் இருக்க தார் ரோட்ஸ் போடவேண்டும். தார் போடாமல் நீலகிரி ஜில்லாவில் ரோடுகளே நிற்காது என்று அடிக்கடி நான் கூறி வந்திருக்கிறேன். தார் போட்டு விட்டீர்களானால் ஒரு முறை போட்டால், அது பத்து ஆண்டுகள் நிற்கும். அதனால் வருடந்தோறும் ஜில்லா போர்ட் செலவு செய்யும ஆயிரக்கணக்கான ரூபாயையும் நாம் மீதம் செயய முடியும். அதில்லாமல் ரோடுகளை பராமரிக்க 500 வேண்டுமென்றால் 5,000 ரூபாய் கொடுத்து, அங்கு நாங்கள் மண்ணையும் தூவி விடுகிறோம். ஒரு நல்ல மழை பெய்தால் அந்த ரோடு தண்ணீரால் அடித்துச் சென்று விடப்படுகிறது. ஆகவே, சர்க்கார் பணம் விரயமாகிறதா இல்லையா ? ஆகவே நீலகிரி ஜில்லாவிற்கு ஒரு ஸ்பெஷல் ஸ்கீம் போடவேண்டும். அதை ஒரு மாடல் ஜில்லாவாக வைத்துக் கொள்ளவேண்டும். ரோடு வசதி செய்வதிலாவது அதை ஒரு மாடல் ஜில்லாவாக எடுத்து தார் செய்யவேண்டும். இதனால் பணம் விரயமாகப் போய்விடாது. இதை சிந்தித்து நீலகிரியை எப்படியாவது முன்னுக்கு கொண்டுவர வேண்டுமென்ற மனப்பான்மை சர்க்காரிடம் வரவேண்டுமென்று நான் பணிவுடன் வேண்டிக்கொள்கிறேன். இங்கு ஒரு குறிப்பு கொடுத்திருக்கிறீர்கள். மாநில அரசாங்கம் மாநில பெரு வழிகள் என்ற முறையில் முக்கியத்துவம் வாய்ந்த சாலைகளின் பராமரிப்பை ஏற்றுக்கொள்ளும் என்று இருக்கிறது. முக்கியத்துவம் வாய்ந்தது என்று சொன்னால் ஒருக்கால் பெரு வழித்துறை அல்லது அதிக போக்குவரத்துள்ள சாலைகளை மட்டும் சர்க்கார் எடுத்துக்கொள்ளும் என்ற மனப்பான்மையில் சொல்லியிருந்தால், நீலகிரியிலும் இரண்டு மூன்று பெரு வழிச் சாலைகள் இருக்கின்றன. காலிக்கட், மேட்டுப்பாளயத்திலிருந்து வருகிற ரோடுகள் போன்று அங்கும் பெரிய ரோடுகள் இருக்கின்றன, ஆனால் கிராமப் புறங்களில் உள்ள முக்கியத்துவம் வாய்ந்த ரோடுகளையும் முக்கியத்துவம் வாய்ந்த ரோடுகள் என்று காரணத்தை காட்டி எடுத்துக்கொண்டால் நிச்சயமாக அந்த ஜில்லா ரோடுகளை நன்கு பராமரிக்க முடியும். அடுத்தபடியாக, கோத்தகிரி வட்டாரத்தைப்பற்றி ஒரு வார்த்தை. கோத்தகிரி வட்டாரத்தை இன்று ஒரு ப்ளாக்காக பிரித்திருக்கிறோம். அங்குள்ள மக்கள் எப்படி இருக்கிறார்கள் என்றால். பிற்பட்ட மக்கள், ஆதிவாசிகள் தவிர வேறு யாரும் இல்லை. வேறு இடங்களில் ஆதிவாசிகள் அதிகமாகவுள்ள இடங்களை, ட்ரைபல் ஏரியாஸ் என்று எடுத்துக்கொள்வதாகக் கேள்விப்பட்டேன். அப்படி எடுத்துக்கொண்டால் அவருக்கு மத்திய அரசாங்க மான்ய, உதவியும் கிடைக்கும். ஆகவே, கோத்தகிரி ஏரியாவை ஒரு ட்ரைபல் ஏரியா என்று நீங்கள் பிரகடனம் செய்யவேண்டும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் மார்ச் 31-ம் தேதியோடு முடியப்போகிறது. அப்படி முடியும் தருவாயிலும் கூட இந்த மலைவாசி மக்கள் வாழும் இடங்களில் ரோடு வசதியே கிடைக்கவில்லை என்று வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, இந்த கோத்தகிரி வட்டாரத்தை தயவு செய்து அமைச்சர் அவர்கள் ஒரு ட்ரைபல் ஏரியா என்று டிக்ளயர் செய்து, அதை ஒரு ட்ரைபல் ஏரியாவாக எடுத்துக்கொள்ளவேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.



*SRI R. KRISHNASAMI NAIDU: தலைவர் அவர்களே, 10–30 a.m.
கிராம அபிவிருத்தி, ஸ்தல நிர்வாகத்துறை மான்யக் கோரிக்கையின் மீது ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். 1958-ம் வருஷத்திய பஞ்சாயத்து சட்டமும், ஜில்லா அபிவிருத்தி கழகத்தினுடைய சட்டமும் நிறைவேற்றப்பட்டதற்குப் பின்னால் கிராமங்களின் முன்னேற்றத்திற்கு என்று பல வழிவகைகளை அரசாங்கம் வகுத்திருக்கிறது. இந்த இரண்டு வருஷ காலத்தில் அரசாங்கத்தின் தலைமை காரியாலயத்திலுள்ளவர்கள், இந்தத் திட்டத்தை சரிவர நடத்துவத்துவதற்காக மிகவும் பத்தி சிரத்தையோடு முன்னேற்பாடுகளையும் காரியங்களையும் செய்து கொண்டிருக்கிறார்கள். இதை யாரும் பாராட்டாமல் இருக்கமுடியாது. இந்தத் திட்டம் அரசியல் சாசனத்தில் நாம் வகுத்துக்கொண்டுள்ள கொள்கையை நல்லமுறையில் நிறைவேற்றும் வகையிலும், காந்தியடிகள் கருதிய கிராம ராஜ்யம் அமையவேண்டும் என்ற நோக்கத்துடனும் அவர்கள் மிகவும் கணிசமான சிரமத்தை

எடுத்துக்கொண்டு இந்த காரியங்களை நல்லபடியாக செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் அனைவரும் நேரடியாக, சட்டசபை அங்கத்தினர் என்ற வகையில் அறிந்திருக்கிறோம். அந்த வகையில் ராஜ்ய அளவில் எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், ஜில்லா அளவிலும், ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் அளவிலும், கிராம அளவிலும் செயல்படுவதற்கான காரியங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. எவ்வளவு தான் பக்தி சிரத்தையோடு காரியங்களை செய்தாலும் பொதுமக்களும் ஸ்தலத்திலுள்ள நிர்வாக அதிகாரிகளும் ஒரே மனப்பான்மையுடன் ஒத்துழைத்து விஷயங்களை சரிவர புரிந்து கொண்டு திட்டங்களை நன்றாக தெரிந்து கொண்டு இந்தத் திட்டங்கள் யாருடைய நன்மைக்காக செய்யப்பட்டிருக்கின்றன, இதனால் ஏற்படும் நன்மைகள் என்ன, இதனுடைய பலனை யார் அடைவார்கள் என்பதை எல்லாம் தெரிந்துகொண்டு இந்தத் திட்டத்தில் ஒத்துழைத்தால் இந்தத் திட்டம் சரிவர நிறைவேறும் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்கமுடியாது. இந்தத் திட்டத்தின் மூலம் ஏற்படுகின்ற புதிய பணிகளை அரசாங்க சிப்பந்திகளானாலும் சரி, பொதுமக்களானாலும் சரி, இவைகளை நன்றாகப் புரிந்து கொள்வதில் ஆரம்பத்தில் பல கஷ்டங்கள் ஏற்படத்தான் செய்கின்றன. அதற்குத் தகுந்த மனப்பான்மை எல்லோரும் வகுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது, இந்த விஷயங்களை தெரிந்து கொள்வதில் இவர்களுடைய போக்கு நல்ல வகையில் செயல்பட வேண்டியிருக்கிறது. அதற்குத் தகுந்த வழியில் அவர்களுடைய மனதையும் சரிப்படுத்திக்கொள்வது சற்று கஷ்டமான காரியம் என்பதை நாம் நன்றாகத் தெரிந்து கொள்ளவேண்டும். ஆரம்பகாலத்தில் பிரத்யட்சமாக என்னென்ன கஷ்டங்கள் ஏற்படும் என்பதை நாம் நன்றாக அறிந்துக்கொண்டிருக்கிறோம். அரசாங்கமும் இந்தத் துறையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளும் காரியங்களை செய்து கொண்டு வரும்போது ஆங்காங்கு பணிகளை நிறைவேற்றும் வகையில் நம்மை எதிர்நோக்கியுள்ள பல வேறு பிரச்னைகள் வரும்போது, அதை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வரவேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள். இதில் நம்மை எதிர்நோக்கியிருக்கின்ற பல்வேறு பிரச்னைகளைப்பற்றி அவ்வப்போது அரசாங்கத்திற்கு தெரிவிக்கவேண்டும் என்று அவர்கள் நம்மை கேட்கின்றார்கள். அதன் காரணமாக பல பிரச்னைகளை நாம் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவரவேண்டியது அவசியமாகிறது. ஆளும்கட்சியின் பக்கத்திலிருந்து பேசுகின்ற அங்கத்தினர்களும், எல்லாவற்றையும் ஆதரித்துக் கொண்டு அவர்களும் குறைகளைத்தான் எடுத்துக் கூறிவருகிறார்கள் என்று ஒரு அன்பர் இங்கு குறிப்பிட்டார்கள். கல்யாணம் நடைபெறவேண்டும், அதுவும் சிறப்பாக நடைபெறவேண்டும். கல்யாணம் சிறப்பாக நடப்பதற்கு என்னென்ன ஏற்பாடுகளை, எந்தெந்த காரியங்கள் சரியாக செய்ய வேண்டுமோ அவைகளை செய்துக்கொடுத்தால் கல்யாணம் சிறப்பாக நடைபெறும். அந்த நன்னோக்கத்துடன் நாங்கள் குறைகளை எடுத்துகாட்டுகிறோம். ஆனால் இழவு வீடாக ஆக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு குறைகளை சொன்னால் இரண்டும் ஒன்றாகாது. ஆட்சியினர் தரப்பில் கருத்துக்களை சொல்லும்போது, காரியங்களை நிறைவேற்றும்போது அவ்வப்போது எதிர்நோக்குகின்ற பல பிரச்னைகளுக்கு பரிகாரம் தேடும் வகையில் அவ்வப்போது ஏற்படும் நிலைமைகளை அரசாங்கத்தில் எடுத்துக்கூற வேண்டியிருக்கிறது ஆகையினால் அரசாங்கத்தின் தரப்பில் கூறப்படும் கருத்துக்களும், வேறு பல விதமான நோக்கங்களைக்கொண்டு சொல்லப்படும் எதிர் கருத்துக்களும். அல்லது அவ்விதம் கூறப்படும் குறைகளும் ஒன்று என்ற வகையில் சொல்லுவது சரியல்ல. வெண்ணெய்க்கும் சுண்ணாம்புக்கும் வித்தியாசம் இருக்கிறது என்பதை யாரும் மறந்துவிடமுடியாது. அந்த அளவில் தான் ஆளும்கட்சி பக்கத்திலுள்ளவர்கள் எடுத்துக் கூறுகிறார்கள். எங்கள் மனதில் பல்வேறு பிரச்னைகள் காரியங்களில் வரும்போது அவைகளை நிவர்த்தி செய்வதற்கு என்ன வழி என்பதைப்பற்றி நாங்கள் ஆலோசிக்கிறோம். அதற்காக நாங்கள் கவலைப்படுகிறோம். வருத்தப்படுகிறோம். ஒவ்வொரு காரியங்களை நிறைவேற்றும்போதும், அதில் ஏற்படும் மனப்பாங்கின் காரணமாக பல முரண்பாடுகள் ஏற்படுகின்றன. அதை தீர்த்துவைக்கின்றவகையில் அரசாங்க சிப்பந்திகளும், பொதுமக்களும் ஒத்துழைக்கவேண்டும் என்று நாங்கள் ஆசைப்படுகிறோம். அவ்விதமான சூழ்நிலை ஏற்படவேண்டும் என்று நாங்கள்



எண்ணுகின்ற நேரத்தில் அதற்காக நாங்கள் பாடுபடுகிறோம், அவ்விதமான சூழ்நிலை ஏற்படாத போதெல்லாம் நாங்கள் வருத்தப்படுகிறோம். அம்மாதிரியான பிரச்னைகளில் சிரத்தை காட்டுகிறோம். இம்மாதிரி விஷயங்களில் கவலைகள் இருப்பதை நாங்கள் பகிரங்கமாக ஒப்புக்கொள்கிறோம், இனி மேலும் ஒப்புக்கொள்ளத் தயாராய் இருக்கிறோம். ஆனால் இம்மாதிரியான காரியங்களை அல்லது சட்டங்களை செயல்படுத்தும்போது பல்வேறு குறைகள் ஏற்படுவதை நாங்கள் சொல்லிக்கொண்டிருக்கிறோம். இவ்விதம் ஒரு சில வார்த்தைகளை ஆரம்பத்தில் கூறிக்கொண்டு, முக்கியமாக இந்தத் திட்டம் நல்லமுறையில் நிறைவேறும் வகையில் விஷயங்களை எடுத்துக் கூறி வருகிறோம். அந்த முறையில் ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். அரசாங்கத்தின் கையில் இருக்கின்ற புறம்போக்கு நிலங்கள், நத்தம் புறம்போக்குகள், மயானங்கள், புறம்போக்கு மரங்களை ஏலத்தில விடுதல், மீன் குத்தகை விடுதல் போன்றவைகளை பஞ்சாயத்துக்களுக்கு கொடுத்திருக்கிறோம். இவைகள் எல்லாம் பல இடங்களிலும் ஒழுங்காக நடைபெற்றுவருகின்றன. இருந்தாலும் ஒரு சில இடங்களில ரெவின்யூ அதிகாரிகள், ஸ்தலத்திலுள்ள அதிகாரிகள் இனனும் அரசாங்கத்திலுடைய பாத்தியதைகள் எல்லாம் எவ்விதம் கிடைப்பது, இவைகளை எல்லாம் பஞ்சாயத்துகள் எவ்விதம் எடுத்துக் கொள்வது என்பதற்கெல்லாம் திட்டவட்டமான உத்தரவுகள் சில இடங்களில் இல்லை என்று கூறப்படுகிறது. இவ்வாறு இருக்கக்கூடிய பிரச்னைகளை ராஜ்ய அளவில் எடுத்துக்காட்டப்படுகின்றன. இதைப்பற்றி விரிவாக இந்த மன்றத்தில் எடுத்துக்கூற வேண்டிய தேவையில்லை. அரசாங்கத்திற்கு இவைகளைப் பற்றி எத்தனையோ தடவைகள் சொல்லப்பட்டிருக்கின்றன என்று நினைக்கிறேன். இதற்கான பரிகாரங்களையும் அரசாங்கம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிந்து நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். ஆனால் கிராமங்கள் அளவில், பஞ்சாயத்து அளவில் இந்தப் பிரச்னைகள் வரும்போது, அங்கேயிருக்கக்கூடிய ரெவின்யூ அதிகாரிகளிடையேயும், புதிதாக வருகின்றவர்களிடையேயும் அபிப்பிராய பேதங்கள் எழுகின்றன, கருத்து மோதல் ஏற்படுகின்றன. ஆகவே அதிகாரம் சம்பந்தப்பட்டவரை யார் யாருக்கு எந்த எந்த வகையில் அதிகாரங்கள் இருக்கின்றன என்பதை உத்தரவுகள் மூலம் தெளிவாக்கவேண்டியது மிக மிக அவசியமாகும். இன்னொன்றையும் கூற விரும்புகிறேன். ரெவின்யூ இலாகா சம்பந்தப்பட்ட மட்டில், கிராம அதிகாரிகள், தாலுகா அளவில் இருக்கக்கூடிய ரெவன்யூ இன்ஸ்பெக்டர் பல குமாஸ்தாக்கள், ரெவின்யூ இலாகா சிப்பந்திகள் சம்பந்தப்பட்ட மட்டில் அரசாங்கத்திலிருந்து பஞ்சாயத்துகளுக்கு பிரித்து கொடுக்கப்பட்டிருக்கும் திட்டங்கள் எவ்விதம் நடைபெறுகிறது, பார்ப்போம் என்கின்ற அளவில் வேடிக்கைப் பார்க்கிற மாதிரி சில சமயங்களில் எனக்கு தோன்றுகிறது அவர்களுடைய நடவடிக்கைகள் இப்போது கொடுக்கப்படும் அதிகாரங்கள் ஏதோ அவர்களிடமிருந்து யாருக்கோ பறிபோகிறது என்கின்ற எண்ணத்தில், இவர்கள் நிர்வாகத்தை நடத்த முடியுமா என்று வேடிக்கை பார்க்கின்ற அளவில் இருக்கிறது என்று நினைக்கிறேன். கலெக்டர் அளவில் இப்போது பொறுப்புகள் எவ்வளவோ குறைந்து கொண்டு வருகின்றன. ஒவ்வொரு ஜில்லாக் கலெக்டரும் அந்தந்த ஜில்லாக்களில் இருக்கக் கூடிய பஞ்சாயத்துகள் சம்பந்தமாக அதிகாரங்களை வரையறுத்துக் கொடுத்து, அவைகள் எல்லாம் நல்லமுறையில் செயல்படும் படியான அளவில், சரிவர சிரத்தையோடு கவனம் செலுத்தி அந்தந்த சமயங்களில் கண்டிப்பான உத்தரவுகள் போட்டு, அவைகள் எல்லாம் சரியான முறையில் நிறைவேற்றப்படுகின்றனவா என்பதையும் மேற்பார்வை செய்யவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு இன்னும் முக்கியமாக இருக்கின்ற ஒன்றிரண்டு விஷயங்களை தெரிவித்துக் கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

இன்னொன்று ஏ. பி. ஸி. டி. என்று பஞ்சாயத்து யூனியன் பிரிக்கப்படுகின்றன. ரோடுகளைப்பற்றி நேற்றைய தினம் பிரஸ்தாபிக்கப்பட்டது. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் கிட்டத் தட்ட 70–75 ஆயிரம் ஜனத்தொகை இருக்கிறது. 25,000 அல்லது 30,000 ரூபாய் வரையில் இந்த ரோடுகளைப் பராமரிப்பதற்காக தலைக்கு 40 நயா பைஸா வீதம் கிடைக்கிறது. எங்கள் பகுதியில் எடுத்துக்கொண்டால் ஒரு பஞ்சாயத்துக்கு 33

மைல் நீள ரோடுகள் இருக்கின்றன ; இன்னொரு பஞ்சாயத்துக்கு 30 மைல் நீள ரோடுகள் இருக்கின்றன ; இன்னொரு பஞ்சாயத்துக்கு 22 மைல் நீள ரோடுகள் இருக்கின்றன. இந்த ரூபாயை வைத்துக்கொண்டு இந்த ரோடுகளைப் பராமரிப்பது கஷ்டம். அதைத் தவிர கிராம ரோடுகள் இருக்கின்றன. இவைகளைப் பராமரிக்க வேறு வழிவகை காணவேண்டும். அதர் டிஸ்ட்ரிக்ட் ரோட்ஸ் பஞ்சாயத்து யூனியனிடம் விடப்பட்டிருக்கின்றன. இவைகளைச் சரிவர பராமரிக்க நிதி நிலை போதாது என்பது தெரிந்த விஷயம். கூடுமான வரையில் பஞ்சாயத்து யூனியனிடம் விடப்பட்டிருக்கிற "அதர் டிஸ்ட்ரிக்ட் ரோட்ஸ்"-ஐ அரசாங்கமே ஒவ்வொரு வருஷமும் ஒரு திட்டமிட்டு ஒரு மைலுக்குக் குறைந்த ரோடுகளை பஞ்சாயத்து யூனியனுக்கு விட்டு விட்டு, அதிக நீளமுள்ள ரோடுகளை, எதிர்காலத்தில் பஸ்கள் விடக் கூடிய ரோடுகளை அரசாங்கமே எடுத்துக்கொள்ளும் ஏற்பாடுகளை ராஜ்ய அளவில் திட்டமிட்டு அதிகமாக ரோடுகளை எடுத்துக்கொள்ளவேண்டும். இப்போதுள்ள 500 மைல் 600 மைல் எடுத்துக்கொள்ளும் நிலைமை மாறி, பஞ்சாயத்து யூனியன் பொறுப்பிலிருந்து அதிக ரோடுகளை எடுத்துக்கொண்டால் இதன் மூலமாக நன்மை ஏற்படும் வகையில் காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* DR. (SRIMATHI) T. S. SOUNDARAM RAMACHANDRAN : சபை உதவித் தலைவர் அவர்களே, நம்முடைய சமுதாய நலத் திட்டத்தைப்போல நல்ல கருவி கிராம முன்னேற்றத்திற்கு இருக்கவே முடியாது. கிராம பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியனும் வந்தபிறகு செயலாற்றவேண்டிய நல்ல யந்திரமும் அவர்கள் கையில் கொடுத்திருக்கிறார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே பல பல திட்டங்கள், சிறியதும் பெரியதுமான திட்டங்கள் வரும்போது அட்மினிஸ்ட்ரேட்டிவ் செட்-அப் எந்த மாதிரி இருக்கவேண்டும் எந்த மாதிரியான நிர்வாகிகள் அதில் செயல்பட வேண்டும் என்று பார்த்தால் தயவு தாட்சண்யம் இல்லாமல் நல்ல முறையில் செயலாற்றும் திறமையுடையவர்களைத் தேர்ந்தெடுப்பது மிக மிக அவசியமாகிறது. ஒரு நல்ல கூர்மையான கத்தி ஒரு நல்ல டாக்டர் கையில் கிடைத்தால் எப்பேர்ப்பட்ட கஷ்டமான ஆபரேஷனையும் செய்யலாம் அதனால் நோயாளி சுகமாக முடியும். ஆனால் அது தகுதியற்றவர் கையில் கிடைத்தால் யாரையாவது கொல்லவும் ஒரு சாதனமாக ஆகும். அதேபோல நம் சமுதாய நலத் திட்டத்திற்காக பிளாக் டெவலப்மெண்ட் ஆபீஸர்களையும் எக்ஸ்டென்ஷன் ஆபீஸர்களையும் தேர்ந்தெடுக்கும்போது அவர்கள் துறையில் கெட்டிக்காரர்களாக இருந்தால் மட்டும் போதாது, மற்றும் விவசாயத் துறை, தொழில் துறைபோல துறையில் கெட்டிக்காரர்களாக இருந்து, கிராமப் பணி என்ற முறையில் செயலாற்றும் மனப்பான்மையும் அதோடு திறமையும் இருக்கவேண்டும் என்பதை மறுக்க முடியாது. அவ்வளவு நல்ல சூழ்நிலையும், ஜனங்களுடைய ஒத்துழைப்பும் இருந்தாலும் அடிக்கடி இந்த நிர்வாகிகளை மாற்றுவதன் மூலமாக நல்ல சமுதாய வளர்ச்சியில் உள்ள பிளாக்குகளும் உண்மையில் குட்டிச்சுவராக மாறி இருக்கின்றன என்று சொல்லலாம். புதிதாக பிளாக்குகள் வரும்போது நல்லவர்களாகத் தேர்ந்தெடுத்து நியமனம் செய்யவேண்டும். அவர்கள் ஒரே இடத்தில் 3, 4 ஆண்டுகள் பணியாற்றி நல்ல பலனை காணச் செய்யவேண்டும் என்பதோடுகூட, அதில் கவனம் செலுத்துவதோடுகூட நம்மைப் போன்றவர்கள் சிறு சிறு குறைகளைப் பெரிதாகச் செய்து நிர்வாகிகளுக்கு கஷ்டம் கொடுக்காமல், பொது ஜனங்களின் ஒத்துழைப்பையும் வாங்கிக் கொடுத்து இரு தரப்பிலும் ஒத்துழைப்போமானால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நம் சமுதாய நலத் திட்டம் எவ்வளவு வளர்ச்சி பெறுகிறது என்று பார்க்கலாம். இந்த வகையில் எல்லோரும் பரிபூர்ணமாக ஒத்துழைக்க வேண்டும்.

அடுத்தபடியாக பஞ்சாயத்துக்களில் ஒரு ஸ்திரீ மெம்பர் இல்லாது போனால் ஒரு ஸ்திரீயை கோ-ஆப்ட் செய்யலாம் என்று இருக்கிறது. அதை வரவேற்றாலும்கூட, இது போதாது. சிறு சிறு கிராமங்களில் நிச்சயமாக ஒரு பெண் மட்டும் வந்து பஞ்சாயத்திலே அமர மாட்டாள். அங்கத்தினராகப் போட்டாலும் கூட்டங்களுக்கு வராத நிலைமை வரும். கிராமங்களில் விவரம் தெரிந்த பெண்கள், படித்த பெண்கள், ஆசிரியைகள்



இருந்தால் இன் கிடைப்பார்கள். ஆகவே ஒரு மெம்பர் எலெக்ஷன் ஆகியிருந்தால் இன்னொரு பெண் மெம்பரைப் போடவேண்டும். அல்லது ஒருவர்கூட எலெக்ஷனாகவில்லை என்றால் இரண்டு பெண் அங்கத்தினர்களை கோ-ஆப்ட் செய்ய வேண்டும். ஏனென்றால் இன்றைய தினம் பஞ்சாயத்துகளில் தேர்தலில் பெண்களுக்கு இடம் கொடுப்பதும் இல்லை. போட்டியிட்டு ... கொள்ளும் சக்தியும் இன்னும் வரவில்லை. ஆகவே ஒவ்வொரு ... இரண்டு பெண்கள் இருக்கவேண்டும். பெண்கள், குழந்தைகள் ... சம்பந்தப்பட்ட முன்னேற்ற வேலைகளை கவனிப்பதற்காக இந்த பெண் அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு ஸ்டாண்டிங் கமிட்டி போட்டு அந்தக் கமிட்டியிடம் கொடுக்கப்பட்டால், பஞ்சாயத்தின் நிர்வாகத்திற்கு உட்பட்டு இந்தக் குழு செயலாற்றவேண்டும் என்று ஒரு திட்டத்தை தீவிரமாக செயல்படுத்த வேண்டும்.

மேலும் ஒரு மெம்பர் குறிப்பிட்டார். சோஷியல் வெல்ஃபேர் போர்டு மூலமாக நிறைவேறும் திட்டங்கள் எந்தக் காரணங்களினாலோ தடைபட்டாலும் சரி பஞ்சாயத்து யூனியன் மூலமாக எல்லா வேலைகளையும் மிகத் திறம்படச் செய்ய முடியும் என்று நம்புவோர்களில் நானும் ஒருத்தி. பஞ்சாயத்து யூனியனை விட்டு விடாமல் பஞ்சாயத்து யூனியன் தலைவரையும், நல்ல சமூக ஊழியர்களையும் பெண்கள் வேலையில் திறம்பட வேலை செய்யக் கூடிய பிளாக் மெம்பர்களையும், விமென்ஸ் எக்ஸ்டென்ஷன் ப்ரொக்ராம் கமிட்டி என்று இருப்பதைக் கொண்டு ஒன்றிரண்டு மெம்பர்கள் இருந்தால் அவர்களையும் சேர்த்து விமென்ஸ் வெல்ஃபேர் கமிட்டி, சோஷியல் வெல்ஃபேர் போர்டு, சமூக வேலை செய்யக் கூடிய ஸ்தாபனங்கள் எல்லாம சேர்ந்து இணைந்த ஒரு குழுவாக அமைத்து அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

(Deputy Speaker in the Chair.)

சமுதாய நலத்தை கவனிப்பதிலே பெண்களுக்கு நல்ல ஊக்கம் கொடுத்தால் அவர்கள் மூலமாக எல்லா துறைகளிலும், பொருளாதாரத் துறை உட்பட வேலை செய்ய முடியும். அதற்கு வேண்டிய உத்திரவை சீக்கிரம் பிறப்பித்தால், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பிக்கப்படுகிற இந்த நாளில தீவிரமாக வேலை செய்ய முடியும்.

பஞ்சாயத்து யூனியனுக்கு வரும்போது பஞ்சாயத்து தலைவர்கள்கொண்ட கவுன்ஸில் அது. வட்டாரத்தில் வேறு ஸ்தாபனங்கள் வேலை செய்து கொண்டிருக்கிறது. அவைகளை எந்த விதத்தில் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று திட்டம் வகுத்தால் நலமாக இருக்கும்.

அடுத்தபடியாக இந்த எஸ்.ஈ.ஓ.-க்களை எடுத்துக்கொண்டால் ஒரு ஆண் ஒரு பெண் இருக்கிறார்கள். அவர்களுடைய நிலைமை ஒரு திரிசங்கு சொர்க்கமாக இருக்கிறது. அவர்கள் கல்வி இலாகாவில் ஏற்றுக்கொள்ளப் படவில்லை. முதியோர் கல்விக்கு முன்போல் வாய்ப்பு இருப்பதாகத் தெரியவில்லை. அவர்களுடைய நிலைமை என்ன என்று வரையறுக்கப்பட வேண்டும். பெண்களின் தரத்தை உயர்த்துவது, மதிய உணவு போன்ற முக்கிய குறிப்பிட்ட வேலைகளை அவர்களுக்குக் கொடுக்கவேண்டும். கிராம சேவக்குகள் வேலைகளை பெண் சேவகிக்கு ஒதுக்கி போதுமான அளவு வேலை செய்ய வாய்ப்புக் கொடுக்கவேண்டும். போட்டு போதுமான அதிலும் சீக்கிரமாக தீர்மானம் எடுக்கவேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக இன்னும் சொல்லிக்கொண்டே போகலாம். ஹரிஜனங்கள் வேலை இருக்கிறது. ஸ்காலர்ஷிப் கொடுப்பதில் குறைபாடுகள் இருக்கின்றன என்றெல்லாம் சொன்னார்கள். ஒரு ப்ளாக்கில் ஒரு ஹை ஸ்கூல் இருக்கலாம். ஹைஸ்கூலில் ஸ்காலர்ஷிப் கொடுப்பதில் இன்றைக்கு பொறுப்புள்ள தலைவர் அந்த இடத்தில் இருக்கிறார்கள். எம்.எல்.ஏ.-க்கள் இருக்கிறார்கள். பஞ்சாயத்து கவுன்ஸில் மூலமாக பள்ளி மான்யம் கொடுப்பதை மாற்றிக் கொடுக்கலாம். ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டும் பணியையும் இவர்களே செய்யலாம் என்றால் அவரவர் ஊருக்குச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் நன்றாகச் செயல்படக்கூடும்.

[24th March 1961

[Dr. (Srimathi) T. S. Soundaram Ramachandran]

ஜில்லாவாரியாகப் பிரித்துக் கொடுத்து துரிதப்படுத்தவேண்டுமென்று சொன்னார்கள். இன்னும் எல்லாவற்றையும் இங்கிருந்து கொடுக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். அம்மாதிரி பிரித்துக் கொடுக்க வேண்டுமென்று சொல்லுவதோடு மதிய உணவு மான்யத்தையும் பஞ்சாயத்து மூலமாகவே ஏற்பாடு செய்து நடத்தினால் உபாத்தியாயர்களை நிர்ப்பந்தப்படுத்தி வசூல் செய்கிறார்கள் என்ற குறைபாடுகள் வராமல் அந்தந்த ஊர்களில் நல்ல விதத்தில் மதிய உணவுத் திட்டம் நடைபெற வசதியாக இருக்கும். பஞ்சாயத்து யூனியனில் வேலை வாய்ப்புக்கு வசதி செய்து கொடுக்கவேண்டும். நல்ல திட்டமிட்டுச் செய்வதற்கு ஒன்றிரண்டு மாதிரி வட்டாரங்களில் தொழில்கள் கொடுப்பதன் மூலம் அவர்களுக்கு ஒரு நிரந்தரமான வேலை வாய்ப்புத் தர என்ன செய்யலாம் என்று பார்க்க வேண்டும். ஒவ்வொரு பிளாக்கிற்கும் ஒரு தொழிற் கல்விச்சாலை என்று சொல்லும்போது பாலிடெக்னிக் வேண்டுமென்று சொல்லவில்லை. சர்வீஸ் சென்டர்கள் போன்றவைகளை வைத்து, அதிலே ஒவ்வொருவருடைய சௌகரியத்தை உத்தேசித்து பயிற்சி கொடுத்து, அவர்களுக்கு ஒரு கூட்டுறவு சொஸைடி ஏற்படுத்திக் கொடுத்தால் மிகவும் வசதியாக இருக்கும்.

குடும்ப நலனைப் பற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். இப்போது குடும்பக் கட்டுப்பாடு என்பதற்காக பிரசாரம் செய்கிறோம். இதுபற்றி பல உத்திரவுகள் போட்டாலும், அவர்களுக்கு இந்த இந்த மாதிரி என்னென்ன செய்யலாம் என்று சொல்லக்கூடிய கருத்துக்களை அறியும்படிச் செய்யவேண்டும். அந்த அளவிலே இப்போது பஞ்சாயத்து யூனியன்களிலே இருக்கக்கூடிய மெம்பர்களுக்கோ, தலைவர்களுக்கோ அல்லது பிளாக்கில் வேலை செய்யக்கூடியவர்களுக்கோ எடுத்துச் சொல்வதற்குத் தெரியாது. முதலிலே அவர்களுக்கே என்ன செய்யவேண்டுமென்று தெரியாது. இதை வழக்கத்திலே அவர்கள் எந்த அளவிலே புரிந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை அங்குள்ள அதிகாரிகள் முதல் கடைசியில் உள்ளவர்கள் வரை பேசிப் பார்த்தால்தான் தெரியும். அவர்களிடையே ஒரு தவறான அபிபிராயம்தான் இருந்து வருகிறது. அவர்களைத்தான் ஒவ்வொரு கிராமத்திலே இருக்கக்கூடியவர்களும் போய்க்கேட்கிறார்கள். ஆகவே, நாம் அவர்களுக்கு முதலில் இதற்கான கல்விப் பிரசாரத்தை அளிக்கவேண்டும். ஜனத்தொகை கட்டுப்பாடு செய்வதால் நமக்கு அது எந்தெந்த முறைகளிலே உதவுகிறது என்பதை நல்ல முறையில் தெளிவாக்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

SRI M. SELVARAJ : மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் கிராம அபிவிருத்தி, ஸ்தல நிர்வாகத் துறையின்கீழ் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒருசில கருத்துக்கள் கூற விரும்புகிறேன். குறிப்பாக, இப்போது பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் பரவலாக அமைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இதிலே அதன் தலைவருக்கு என்ன அதிகாரம் இருக்கிறது, கமிஷனருக்கு என்ன அதிகாரம் இருக்கிறது என்ற ஒரு பெரிய சர்ச்சை இருந்து கொண்டிருக்கிறது. அவைகளையெல்லாம் கவனித்து, இப்படி ஏற்படக்கூடிய சிக்கல்களுக்குத் தகுந்த முறையில் விதிகளைப் பிறப்பிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இப்போது பிளாக்குகளை ஏ.பீ.சி.டி. என்ற முறையிலே பிரிப்பதாகத் தீர்மானித்திருக்கிறோம். எதையும் அங்குள்ள மாவட்டக் கலெக்டரும், அபிவிருத்திக் குழுவும் சேர்ந்து அதை ஆலோசனை செய்து பார்க்க வேண்டுமென்று இதிலே குறிப்பிட்டிருக்கிறது ஆனால் அந்த பிளாக்குகளைப் பார்க்கின்றபோது, அந்த வட்டாரத்தில் குறிப்பாக ஒரு பிளாக்கை எடுத்துக்கொண்டால், ஒரு பிர்க்காவில் கிட்டத்தட்ட 20, 30 கிராமங்கள் நஞ்சைப் பகுதியாகவும், பாக்கியுள்ள 40, 50, கிராமங்கள் புஞ்சைப் பகுதியாகவும் கூடிய நீர்ப்பாசன வசதியோடு இருக்கிறதென்றால், இப்பேர்ப்பட்ட பிளாக்குகளை பார்க்கின்றபோது குறைந்தது 'சி' என்ற அளவிலே அதைப் பார்த்து, அவர்களுக்கு வேண்டிய உதவிகளை அந்த வட்டாரக் கவுன்சிலும், மாவட்டக் கலெக்டரும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், என்னுடைய தொகுதிக்கு அதாவது



24th March 1961] [Sri M. Selvaraj]

விருத்தாசலத்தில் நல்லூர் பிளாக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதிலே பெண்ணாடம் பிர்க்காவை 'ஏ' பிளாக்காகப் பிரித்திருக்கிறார்கள். இதை எப்படி பிரித்தார்கள் என்று தெரியவில்லை. ஆகவே இவைகளையெல்லாம் கவனித்து, அதற்கானவை செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். மேலும் பஞ்சாயத்துக்களிடத்தில் பொதுச் சொத்துக்கள், அதாவது மேய்ச்சல் நிலங்கள், கிராமப் பகுதிகளிலே உள்ள தோப்பு துறவுகள், இடுகாடுகள் போன்றவைகளை ஒப்படைப்பதற்கான ஏற்பாடுகள் செய்வதற்கு நாங்கள் கவனித்துக்கொண்டு வருகிறோம் என்ற முறையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இதையும் அவர்கள் உடனடியாக அந்த வட்டாரத்திலுள்ள கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு ஒதுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

முன்பு கிராமப் பஞ்சாயத்துக்களிலே வேலை செய்துகொண்டிருந்த குரூப் ஊழியர்கள் ஆகியோரை இப்போது கிராமத்திலுள்ள கர்ணம், மணியக்காரர்கள் ஆகியோரை எப்படி செயலாளராகப் போட்டு வரி வசூலிக்க அனுமதிக்கப்படுகிறதோ, அதைப்போல் இவர்களையும் இந்த யூனியன்களிலே எடுத்துக்கொள்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் இப்போது பிளாக்குகள் அடிப்படையில் பார்க்கின்றபோது, குடிதண்ணீர் திட்டத்திற்கு 25 சதவிகிதம் கண்ட்ரிபியூஷனாக மக்கள் தொகை கொடுக்கவேண்டுமென்று விதி இருக்கிறது. ஆனால் அந்த விதியானது தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பிற்போக்கான நிலைமையிலே இருக்கின்ற பிற்பட்ட மக்களுக்கும் கிடையாது என்ற நிலைமை இப்போது இருக்கிறது. என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கின்ற பகுதியில் மக்கள் கொடுக்கும் தொகை வாங்கப்படாமல், பூராத் தொகையையும் சர்க்கார் செலவு செய்திருக்கிறார்கள். ஆனால் பிற்பட்ட மக்கள் வசிக்கின்ற பகுதியில் குடிதண்ணீர் வசதிவேண்டுமென்றால், 25 சதவிகிதம் அதற்குப் பங்குத் தொகையாக கிராம மக்கள் கொடுக்க வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறார்கள். விருத்தாசலத்தை எடுத்துக் கொண்டால், விருத்தாசலத்திற்கு சமீபத்திலே தொழார் என்ற கிராமம் இருக்கிறது. அதிலே 3,000 பேர்கள் வசிக்கிறார்கள். அங்கு குடிதண்ணீர் கொண்டு வரவேண்டுமென்று கிட்டத்தட்ட 3 ஆண்டு காலமாக முயற்சித்து பஞ்சாயத்து போர்டு 2,000 ரூபாய் கட்டியிருக்கிறார்கள். ஆனால் மக்கள் தங்கள் பங்குத் தொகையைக் கொடுக்கவில்லை, அதற்குக் காரணம் அங்குள்ள மக்கள் மிகவும் பிற்போக்கான நிலைமையில் இருக்கிறார்கள். அவர்கள் நாங்கள் தான் பஞ்சாயத்துக்கு வரி கட்டுகிறோமே, அதனால் மக்கள் தொகையாகப் பணம் எங்களால் கொடுக்க முடியாது என்று கூறுகிறார்கள். இப்படிப் பல முறை அந்த மாவட்டக் கலெக்டர், மற்றும் பிற அதிகாரிகள் ஆகியோரை வைத்துக்கொண்டு கேட்டதற்கும் அவர்கள் பங்குத் தொகையைக் கொடுக்க மறுத்திருக்கிறார்கள். ஆனால் அதே பஞ்சாயத்திற்கு நிதி நிறைய இருக்கிறது. அந்தப் பஞ்சாயத்தில் ரூபாய் 10,000-க்கும் அதிகமாக நிதி இருக்கிறது. அப்படி பஞ்சாயத்துக்களுக்கு நிறைய நிதி இருக்குமானால், அந்தப் பஞ்சாயத்துக்களே மக்கள் தொகையையும் சேர்த்துக் கட்டி அதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொள்வதற்கு விதி அமைக்கப்பட வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று பள்ளிக்கூடங்கள் கட்டுவதற்கும் 25 சதவிகிதம் பங்குத் தொகை கட்ட வேண்டுமென்று இருக்கிறது. அதையும் மாற்றியமைக்க வேண்டும். ஏனென்றால், இப்பொழுது கிராமத்திலுள்ள மக்களிடையே பள்ளிக்கூடங்கள் கட்ட வேண்டுமென்று உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அவர்களுக்குத் தூண்டுதல் இருப்பதற்காக, பலவகைகளிலும் வரிகளை வசூலிக்கின்ற நிர்வாகத்தாரே அவர்களுடைய பங்குத் தொகையையும் சேர்த்துக் கட்டி பயன்படுத்திக் கொள்வதற்கான வகையில் ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், இப்பொழுது பஞ்சாயத்து யூனியன்கள் ஏற்படுத்திய பிறகு மேஜர் பஞ்சாயத்துக்கள் வசூலிக்கும் சேர்க்கை வரிகளை இவர்கள் எடுத்துக்கொண்டு, பங்குத் தொகை கொடுக்கப்படுமென்று சொல்லப்படுகிறது.

ஆனால் அதற்கு வேண்டிய விதிகளை இன்னும் செய்யவில்லை என்பதை இந்த நேரத்தில் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். இதைத்தவிர இன்றைக்கு மேஜர் பஞ்சாயத்துக்களை எடுத்துக் கொண்டால், குறிப்பாக எல்லா மேஜர் பஞ்சாயத்துக்களும் இந்த கேளிக்கை வரியிலிருந்து வரக்கூடிய வருமானத்தை வைத்துக்கொண்டு தான் பஞ்சாயத்தின் கீழ் இருக்கக்கூடிய கிராமங்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து கொண்டு வருகிறது. விருத்தாசலம் பண்ருட்டி, திருக்கோயிலூர், புவனகிரி போன்ற மேஜர் பஞ்சாயத்துக்களை எடுத்துக் கொண்டால், அவைகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு 40,000, 50,000 என்று இந்த கேளிக்கை வரிகளின் மூலம் வருகிறது. அதை இந்த பஞ்சாயத்து யூனியன்கள் எடுத்துக் கொண்டு, அவர்களுக்கு ஒரு குறுகிய அளவு உதவித் தொகை கொடுத்தால், பஞ்சாயத்து எவ்விதத்திலே நல்லமுறையில் நடக்க முடியும்? ஆகவே இந்தக் கவனத்தில் வைத்துக்கொண்டு மற்ற எந்த மானயத்தை நிறுத்தி விட்டாலும் இந்த கேளிக்கை வரியை மாத்திரம் கேட்க வேண்டாமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஆகவே இந்த கேளிக்கை வரியை மாற்றியமைப்பதில் தீர ஆலோசனை செய்து, மற்ற பஞ்சாயத்துக்களினுடைய எண்ணங்களையும் கேட்டு, அதற்கு பிறகு முடிவெடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். போன ஆண்டு விவாதத்தின் போதும், இந்தச் சட்டசபையில் இதைத்தான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஆகவே இதிலே நன்கு கவனித்து, நல்லதொரு முடிவு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு எருவை, அதாவது அமோனியம் சல்பேட் போன்ற உரத்தை விநியோகிக்கின்ற நேரத்தில், ஒவ்வொரு கிராமத்திற்கும் விவசாய அபிவிருத்தி கமிட்டி (Food Improvement Committee) அமைக்கப்பட்டிருக்கிறதே, அந்தக் கமிட்டிக்கு ஒப்படைத்து, இதை விநியோகிப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் பிளாக்கு தலைமை அலுவலகத்தை ஏற்படுத்துகின்ற நேரத்தில் அதற்குக் கட்டிடம் கட்ட வேண்டுமென்றால், அந்தக் கட்டிடத்தைக் கட்டி முடிப்பதற்கு எப்படியும் ஓரிரண்டு ஆண்டுகள் ஆகிவிடுகிறது. நல்லூர் பிளாக்கு கட்டிடம் 1959-ம் ஆண்டு அக்டோபர் மாதம் ஆரம்பிக்கப்பட்டும், இன்னும் முடிக்கப்படவில்லை. அதேபோல கிராமத்தில் பிளாக்கு ஆபீசுக்கு வந்துபோவதற்கு நல்லமுறையில் போக்குவரத்து வசதி கிடையாது. கிட்டத்தட்ட 15, 20 மைல்கள் தூரத்திலிருந்து கிராமத்திலுள்ள மக்கள் வந்து, இந்த ஆபீசுகளிலுள்ள அதிகாரிகளைப் பார்த்து எந்த விஷயத்தையும் கேட்டுப் போவதற்கு முடியாமல் இருக்கிறது. ஆகவே போக்குவரத்துக்கு வேண்டிய பஸ் வசதிகள் செய்து தரவேண்டும். மெயின் ரோட்டிலிருந்து வரவேண்டுமானாலும் 3 மைல்கள் நடந்து வரவேண்டியிருக்கிறது. ஆகவே சிதம்பரத்தில ஒரத்தூர் பிளாக்கு தலைமை அலுவலகத்தை வைத்திருப்பதுபோல், நல்லூர் பிளாக்கிற்கு தலைமை அலுவலகத்தை மெயின் ரோடிலுள்ள கண்டப்பனகுறிச்சி, வேப்பூர் போன்ற இடங்களில் செயல்படும்படி மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பிளாக்குகளில் உள்ள எல்லா அதிகாரிகளுக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவேண்டும். அங்கு வேலை செய்கின்ற 'எக்ஸ்டென்ஷன் ஆபீசர் பார் பஞ்சாயத்து', 'எக்ஸ்டென்ஷன் ஆபீசர் பார் இண்டஸ்டிரீஸ்', கிளார்க்ஸ், கிராமசேவக்ஸ் போன்றவர்களுக்கும் வேண்டிய வீடுகளைக் கட்டித் தரவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இறுதியாக, பி. டி. ஓ. வேலைக்கு உயர்த்துகிறபொழுது எந்த இலாகாவிலிருந்து வந்தார்களோ அந்த இலாகாவுக்கு உயர்த்துவோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏற்கனவே ரெவின்யூ இலாகாவினரைப் ப்ரமோஷன் செய்யவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். பஞ்சாயத்தில சேர்க்கப்பட்ட அதிகாரிகளை அந்த இலாகாவிலிருந்து உயர்த்துவதாய் இருந்தால் ஏற்கனவே மக்களிடையே நன்கு பழகி உள்ளவர்கள், அடிக்கடி பஞ்சாயத்து வேலைகளில் கவனம் செலுத்தியவர்கள் எக்ஸிகியூடிவ் ஆபீசர்ஸ்' டெப்யூடி பஞ்சாயத்து ஆபீசர்ஸ் ஆகியவர்களுக்கு ப்ரமோஷன் ஏற்படுத்தவேண்டும்,



அந்த மாதிரி அக்கௌண்ட்ஸ் செக்ஷனுக்கு லோகல் பண்டு ஆடிட் டிபார்ட்மெண்டிலிருந்து அக்கௌண்டெண்ட்ஸ் போடப்போகிறோம் என்று சொன்னார்கள். இப்பொழுது அந்த உத்தரவைத் திரும்பப் பெற்றுக்கொண்டு ரெவின்யூ இலாகாவிலுள்ள அதிகாரிகளைப் போடவேண்டுமென்ற எண்ணம் இருப்பதாக தெரியவருகிறது. அந்த எண்ணத்திற்கு போகவேண்டாம் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்கள் கணக்கில் நல்ல தேர்ச்சி பெற்றவர்கள். ஆகையால் அவர்களைக் கொண்டு தான் அக்கௌண்டெண்ட்ஸ்-ஆகப் போடவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

**Sri S. NAGARAJA MONIGAR** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே இந்த மான்யத்தில் பேசுவது எனக்கு ஒரு மகிழ்ச்சி. இதை ஆதரித்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். மகாத்மா காந்தியை இந்த உலகத்திலே ஏற்றுக் கொண்டிருக்கிறோம் என்றால் அந்த எண்ணம் படைத்தவர்கள் இருக்கிறோம் என்றால், அவருடைய கருத்துக்கு நேரடியாக மதிப்புக் கொடுக்கக்கூடிய இலாகாவிலே இது ஒன்று. தன் கையே தனக்கு உதவி, தன் காலில் தானே நிற்பது, சுயதேவை என்ற கொள்கையை அவர் வகுத்தார். அந்தப்படிக்கு முடிந்த அளவுக்கு நாம் முயற்சி எடுத்துக்கொண்டு படிப்படியாக அரசாங்கம் அநேக திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. இப்பொழுது ஒதுக்கப்பட்ட தொகைக்கு வெட்டுப் பிரேரபணை கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் சொல்லுகிறேன், இதற்கு இன்னும் தொகை அதிகமாகக் கொடுத்திருக்கவேண்டுமென்று.

காந்தீயப் பிரசாரம் தான் நீங்கள் செய்கிறீர்கள் என்று சொன்னாலும் அதை ஒத்துக் கொள்ளலாம். கட்சிப் பிரசாரம் செய்கிறார்கள் என்று சிலர் வருத்தப்படுகிறார்கள். ஆரம்பத்திலே அதைக் குறித்து ஒரே ஒரு வார்த்தை சொல்லிவிட்டு, மேலே செல்ல ஆசைப்படுகிறேன். இந்தத் திட்டம் காந்தீய திட்டம். சாதாரணமாக கிராமமக்கள் முன்வரவேண்டும், அவர்கள் எதற்கும் நகரத்தைப் பார்த்து, நகர மக்களைப் பார்த்து, எதிர்பார்த்து நிற்கவேண்டிய அவல நிலை கூடாது. சுயராஜ்யம் என்றால் வெள்ளையர்களிடமிருந்து விடுபடுவது மாத்திரம் அல்ல, மற்றவர்களை அதிகம் எதிர்பார்க்காமல் அவரவர்களே அவர்களுடைய சுயதேவையைப் பூர்த்தி செய்துகொள்ளவேண்டும் என்ற ஒரு கொள்கையை மனதில் வைத்துக் கொள்ளவேண்டும் என்று கூற ஆசைப்படுகிறேன். அந்தத் துறையிலே தலைவர்கள் அநேக திட்டங்களை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். கிராமங்களை நோக்கி பணி செய்யச் செல்லுகிறோம். சட்டசபை அங்கத்தினர்களும், மற்றும் இதரர்களும் யார் யார் இதில் ஈடுபட்டிருக்கிறார்களோ அவர்களுக்கு இதனுடைய ருசி நன்றாகத் தெரியும். எதிர்க்கட்சி நண்பர்களும் சிலர் இதைப்பற்றி அன்போடு இதனுடைய ருசியை அறிந்தே பேசுகிறார்கள். இருந்தாலும் சில விஷயங்களில் சற்று வேறு விதமாக நினைக்கிறார்கள்.

கதர், தீண்டாமை, சிறு சேமிப்பு, கிராமக் கைத்தொழில்கள் போன்றவைகளெல்லாம் இந்தத் திட்டத்தில் அடிப்படையானவை. இவைகளெல்லாம் தான் கிராமத்தை முன்னேற்ற முடியும். கம்யூனிஸ்டு கட்சியினருக்கு பெரிய மெஷின்களை வைத்துத் தான் நாடு முன்னேற வேண்டுமென்ற எண்ணத்திலே கிராமக் கைத்தொழில்களுக்கு எந்த அளவுக்கு அவர்களுடைய ஆதரவு இருக்கிறது என்று என்னால் சொல்ல முடியாது. இப்பொழுது அவர்கள் கதரை ஆதரிக்கவில்லை என்று நினைக்கிறேன். இன்னொரு கட்சியினர் கைத்தறியை மாத்திரம் ஆதரிக்கிறோம் என்று பாதிக் கிணறு தாண்டுகிறார்கள். கைத்தறிக்கு ஆதாரமாக உள்ள கதரை ஆதரிக்கவில்லை. அந்த மக்களை பிச்சை எடுக்கச் சொல்லுகிறார்களா என்று தெரியவில்லை. இதையெல்லாம் அவர்கள் தவறாக நினைக்கிறார்கள். இந்தத் திட்டத்தைப் பற்றி மந்திரிகளோ, மற்ற தலைவர்களோ, ஊழியர்களோ பிரசாரம் செய்தால் உங்கள் கட்சிக் கொள்கையைப் பிரசாரம் செய்கிறீர்கள் என்று சொல்லுகிறார்கள். அது நல்ல கொள்கை. கிராம அபிவிருத்தித் திட்டம், காந்தீய திட்டம் அவர்களுக்கு இது வேறு ஒருவாறாக படுகிறதோ என்னவோ தெரியாது.

நான் மேற்கொண்டு இந்தத் திட்டம் நன்றாக நடைபெற வேண்டி சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். முதலில் ஜனத்தொகை அடிப்படையில் வட்டாரங்கள் பிரிக்கப்பட்டுவிட்டது. அதற்கு ஒரு மறுப்பு தெரிவித்து சில சமயங்களில் எடுத்துச் சொல்லப்பட்டது. நாங்கள் ஏ. பி. ஸி. டி. என்ற அடிப்படையில் வட்டாரங்களாகப் பிரித்துப் பின்தங்கிய வட்டாரங்களுக்கு அதிகமாகத் தொகை கொடுக்கிறோம் என்று சொல்லப்படுகிறது. அது ஓரளவுக்கு மேல். எங்கள் சேலம ஜில்லாவை எடுத்துக் கொண்டால் 52, 54 பிளாக்குகள் இருக்கின்றன. பாதிக்கு மேல் விஸ்தீரணம் இருந்தால் கூட வட சேலத்தில் 18 பிளாக்குகள் இருக்கிறது. ஒவ்வொரு பிளாக்குக்கும் ரூ 15 லட்சம் கிடைக்கிறது ஏற்கெனவே ஜனத்தொகை அடிப்படையில் பிரிக்கப்பட்ட ஒரு பகுதிக்கு இப்பொழுது இத்தகைய திட்டத்தினால் இரட்டிப்பு பணம் போய்ச் சேரலாம் முன்னேறிக்கொண்டிருக்கிற பகுதியே மேலும் முன்னேறலாம். எங்கள் சேலம் ஜில்லாவில் கல்வித் துறையில் எவ்வளவோ முன்னேற்றம் ஏற்பட்டிருந்தாலும், இப்பொழுதும் கடைசி ஸ்தானத்தை அது விடவில்லை. முன்னேற்றம் அடைந்த பகுதிக்கே மறுபடியும் பணம் போய்ச் சேரும்படியான நிலைமை இருக்கிறதே அதைச் சற்று மாற்றி அமைக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இதிலுள்ள கொள்கை என்ன என்பதை வட்டார வளர்ச்சியிலே நாம் சரிவரத் திட்டமாகச் சொல்ல வேண்டும், உணவு உற்பத்திக்கு இப்பொழுது மாறிவிட்டார்கள். உணவு உற்பத்தி தான் வட்டார வேலைகளில் மிகவும் முக்கியமானதா ? அல்லது பண்பு, தன்மை, ஒழுங்கு மக்களுடைய மற்ற பல விதமான முன்னேற்றம் இதில் சேர்ந்ததா என்பதை சொல்லிவிடவேண்டும். ஆரம்பத்தில் அப்படி இருக்கவில்லை. உணவுப் பூர்த்தி இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. இந்த உணவு பூர்த்தியை வைத்துக் கொண்டு, வட்டாரத்திலுள்ள பாமர மக்களை முன்னேற்றத்திற்குக் கொண்டுவர, அதாவது ‘எஜூகேடிவ் என்கிற, அதாவது அவர்களைத் தயார் செய்வது, அவர்கள் சுய தேவையைப் பூர்த்தி செய்துகொள்ளச் செய்வது, தன் காலில் தான நிற்பது, எதற்கும் பிறரை எதிர்பார்க்கின்ற முறை இல்லாமல் அவர்களைத் தயார் செய்வது இதில் அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பயிற்சியைப் பற்றி அம்மையார் அவர்கள் சொன்னார்கள். சிலர் ரெவின்யூ இலாகாவிலிருந்தும், மற்ற இலாகாவிலிருந்தும் அந்தத் தத்துவம் தெரிந்தவர்களைப் போடவேண்டும என்று சொன்னார்கள். ஏராளமான ஆபீசர்கள் தேவையாக இருக்கும்பொழுது இந்தக் கஷ்டம் இருக்கத்தான் செய்யும் 4, 5 வட்டாரங்களைச் சுற்றிவரக்கூடிய முறையில், அங்குள்ள அதிகாரிகளுக்கு நல்ல போதனையைக் கொடுக்கக்கூடிய நிலையில் தத்துவம் தெரிந்த உத்தியோகஸ்தர்களையும், சில உத்தியோகப் பற்றற்றவர்களையும் நியமித்தால், அம்மாதிரி ஏதாகிலும் செய்தால் நன்மை பயக்கும் என்று கருதுகிறேன். உத்தியோகப் பற்றற்றவர்கள் தான் அதிகமாக வேலை செய்யவேண்டிய இயக்கம் இது. உதாரணமாகப் பயிற்சி பெறும் இந்த உத்தியோகஸ்தர்கள் நன்றாக ஒழுங்காக இருக்கிறார்கள். பயிற்சி முடிந்து வட்டாரத்தில் வேலை செய்கிறபொழுது, அவர்கள் பழைய பிரகாரம் நடந்து கொள்ளுவதில்லை. அதை மேலதிகாரிகள் சரிவர அமுல் நடத்தவில்லையா என்றும புரியவில்லை. அதிலே சர்க்கார் கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டும். நான் சொன்னதை சற்று மிகைப்படுத்திச் சொல்லுவதாகக் கருதுகிறார்கள் சிலர் கிராம சேவக்கு என் முன்னாலேயே வந்து நின்றபோது நான் கண்டிருக்கிறேன். ஏதோ 4, 5, இன்ச் வேஷ்டி கீழ் போகிறது. பித்தானைத் திறந்துவிட்டுக் கொண்டு நிற்கிறார். எங்கேயோ போவது வருவது போல் போகிறார். அம்மாதிரி இருக்கக் கூடாது. இம்மாதிரி சிலர் இருக்கிறார்கள். எல்லோரும் அப்படி இருக்கிறார்கள் என்று சொல்லவில்லை. இதையெல்லாம் நாம் சரி செய்து கொண்டால் தான் முன்னேற முடியும் என்று நினைக்கிறேன்.

முசௌரியில் ஒரு ஆராய்ச்சிக் கழகம் மத்திய அரசாங்கத்தினால் நடத்தப்படுகிறது ஸ்பெஷல் ஸ்டடீஸ் அண்டு ரிஸர்சஸ் அங்கே நடத்துகிறார்கள். இங்கிருந்து அங்கு சென்று பார்த்து எல்லோரும் பயன் அடைய முடிய





வில்லை. ஏதோ 2, 3 பேர்கள் தான் செல்ல முடிகிறது. அது எப்படி இருந்தாலும், அதேமாதிரி ஒரு சிறிய அளவில் நமது மாகாணத்தில் ஒரு ஆராய்சசிக் கழகம் அந்தத் துறையில் ஏற்படுத்தி நம்முடைய கொள்கையை முன்னேற்றிக் கொள்ளுவதற்குப் பாடுபட்டால் நலமாக இருக்கும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

முன்பு ‘செமினார்’ என்று அதிகாரிகளையும், மற்றவர்களையும் சேர்த்துக் கூட்டி அடிக்கடி ஒருவரை ஒருவர் பார்த்துப் பேசிக்கொள்ள சந்தர்ப்பங்கள் இருந்தன. இப்பொழுது அது முடியவில்லை. காரணம் முன்பெல்லாம் வட்டாரங்கள் குறைவாக இருந்ததுடன், எல்லா ஜில்லா அதிகாரிகளையும் வட்டாரக் கூட்டத்தில் சந்திப்போம். இப்பொழுது வட்டாரங்கள் அதிகமாக ஆகிவிட்டதால் அம்மாதிரி அதிகாரிகளைச் சந்திக்க முடியவில்லை. ஏதோ 2½ மணி நேரம் ஜில்லா அபிவிருத்திக் கவுன்சில் கூட்டம் நடந்தால், அத்தனை பிளாக்குகளுக்கும் சேர்த்து, அவசரம் அவசரமாகத்தான் காரியங்களைச் செய்ய முடிகிறது. அதனால் அவ்வளவு பலன் பெற முடியவில்லை. பலனே இல்லை என்று சொல்லவில்லை. இந்தத் துறையிலே முக்கியமாகக் கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதிகாரம் அதிகமாகக் கொடுக்கப்படவில்லை என்று சொல்லுகிறார்கள். அதிகாரம் தேவைதான். ஒன்றுமே அதிகாரம் இல்லாமல் இருந்தது போக, இப்பொழுது இவ்வளவு அதிகாரங்கள் கொடுத்திருக்கிறார்களே என்பதைச் சற்று மனதில் கொள்ளவேண்டும். சில சமயங்களில் நானே நினைப்பது உண்டு. ஒரேயடியாக வட்டாரத்திலிருந்து அதிகாரத்தைப் பிரித்து இப்படிக் கிராம அடிப்படையில் சுயராஜ்யம் கொடுத்துவிட்டார்களே, தாலுகா அளவிலாவது முதலில் கொடுத்துப் பார்த்துக்கொண்டு செய்யக் கூடாதா என்று தோன்றுகிறது. வரி போடுவதற்குத்தான் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். வீட்டுக்கு வரி போடுவது போன்ற இன்னும் எத்தனையோ துறைகளில் வரி போடாமல் பின்தங்கி கஷ்டப்படுகிறார்கள். அதிகாரம் வரி போடுவதற்கும் சேர்த்துத்தான். சர்க்கார் கொடுக்கிற பணத்தை மாத்திரம் வாங்கிச் செலவழிப்பது என்பது இல்லை. அப்படியிருக்கும்பொழுது அதிகாரம் இல்லை, இல்லை என்று சொல்லுவதற்கு இல்லை, போகப்போக இன்னும் அதிகாரம் கொடுக்கப்படும் என்று நான் கருதுகிறேன்........(மணி அடிக்கப்பட்டது).

*Sri T. R. RAMAMIRTHA THONDAMAN: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்கள் ஸ்தல அபிவிருத்தி தேசிய வளர்ச்சித் திட்ட மானியத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் இவைகள் பற்றி பல அங்கத்தினர்கள் தெரிவித்தார்கள். இந்த நாட்டில் பஞ்சாயத்து ராஜ்யம் ஏற்பட்டு அபிவிருத்தி ஏற்படவேண்டுமென்று நினைத்தபோதிலிருந்து முதல் கட்டம் பஞ்சாயத்து யூனியன்கள் அமைப்பது முடிந்து விட்டது; இரண்டாவது கட்டம் அமையப்போகும் நிலையில் இருக்கிறோம். நாட்டின், முன்னேற்றத்திற்கும், மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்த, அடிஷனல் டெவலப்மெண்ட் கமிஷனர் அவர்கள் ஆங்காங்கே ஜில்லாக் கூட்டங்களிலும், மற்ற இடங்களிலும், மக்கள் பிரதிநிதிகளுக்கும் பஞ்சாயத்துத் தலைவர்களுக்கும் அதிகாரிகளுக்கும் பஞ்சாயத்து விஷயத்தை அறிவுறுத்தி வரும்போது, இந்தத் திட்டங்களுக்கு வழிகாட்டியாக இருந்து வந்த மகாத்மாஜியின் கருத்துக்களை எடுத்துக் காட்டி முன்னேற, அறிவுரை வழங்குகிறார்கள். அப்படிப் பேசும்போது, அவர்கள் காந்திஜி பெயரையும், காங்கிரஸ் அமைச்சர்கள் பெயரையும் சொல்லும் முகமாகச் சொன்னால் அதற்கு ஆட்சேபம்; அவரிடம் இனிமேல் அந்தப் பெயர்களைச் சொல்லக்கூடாது, இந்தத் திட்டங்களை உண்டாக்கியவர்கள் பெயரை இவற்றை ஏற்படுத்தியவர்கள பெயரை இதன் கர்த்தாக்களின் பெயரைச் சொல்லக் கூடாது, பதிலாக மாற்றுக் கட்சி அங்கத்தினர்கள் பெயர்களைச் சொன்னால் போதும் என்று சொன்னால், அவர்களும் அப்படிச் சொல்லுவார்கள். அது ஜனநாயக மக்கள் அல்ல. அதிகாரியை கட்சிக் கண்ணோட்டத்தோடு குறை காணுவது சரியல்ல.

பஞ்சாயத்து அபிவிருத்தி சம்பந்தப் பட்டவரை நல்ல வழிகாட்டியாகவும், முன்னோடியாகவும் பண்போடு பணியாற்றி வரும் அடிஷனல் டெவலப்மெண்ட் கமிஷனர், மற்றைய மாகாணங்களைவிட நம்மாகாணம் முன்னணியில் நிற்கப் பணி புரியும் அவர்களைப் பாராட்டுகிறேன். அவர்கள் தேச சேவையும் திடமான உள்ளமும் நாட்டில் நிலைத்து விட்டது என்பதை மட்டும் யாவரும் அறிவர்.

இன்றைக்குத் தேசிய அபிவிருத்தி பகுதியாகச் செயல்பட்ட ப்ளாக்குகளை பஞ்சாயத்து யூனியனில் மாற்றி வைக்கப்பட இருக்கிறது. ஸ்தல அபிவிருத்தி என்ற பெயரில், ஜில்லா போர்டும், மக்களும், சர்க்காரும் பணங்கள் கொடுத்து வேலைகள் செய்யப்பட்டன. அம்மாதிரியான ஜில்லாபோர்டு வேலைகள் பூராவும் பஞ்சாயத்து யூனியன் அதிகாரங்களாக மாற்றப்படப் போகிறது. அம்மாதிரிப் பங்கு கொடுத்து பஞ்சாயத்து யூனியன்கள் செயல்பட முடியாது. ஜில்லா போர்டுகளால் நிர்வகிக்கப்பட்ட ரோடுகள் பூராவும் சென்ற காலத்தில் பணமுடக்கடி காரணமாக, ஆசிரியர்கள், ஊழியர்கள் மற்றவர்களுடைய ஊதியமும் சரிவரக் கொடுக்கப்படாத நிலைமை இருந்து வந்திருக்கிறது. என் தொகுதியில் மூன்று பஞ்சாயத்து யூனியன்கள் இருக்கின்றன. அவை எங்கள் ஜில்லாபோர்டு நிர்வாகத்தின் கீழ் இருந்த ரோடுகளை பராமரிக்க வேண்டுமானால் அதற்குரிய பணம் ஒதுக்கும் நேரத்தில் அந்த ரோடுகளை பஞ்சாயத்து யூனியன் எடுத்துச் செயல்படும் முறையில் செய்ய வேண்டும். இதிலே மற்றோர் தொல்லை இருக்கிறது. ஒவ்வொரு வருஷத்திற்கும், இவர்கள் திட்டம் தயாரிக்க வேண்டும். சென்ற காலத்தில் திட்டம் போடுவது, பட்ஜட் தயாரிப்பது எல்லாம் சட்ட மன்றங்களிலோ, பெரிய முனிசியாலிடிகளிலோ, ஜில்லா போர்டுகளிலோதான் செய்துவந்தார்கள். அவர்களுக்குத்தான் அது தெரிந்திருந்தது. திட்டம் தயாரிப்பது என்பது கிராம மக்களுக்கு சுத்தமாகத் தெரியவில்லை. எனக்குக்கூட இதெல்லாம் புரிவதில்லை. இப்பொழுதுதான் புரிந்து கொள்ள ஏற்பாடுகள் செய்கிறார்கள். பஞ்சாயத்து போர்டு தலைவர்கள் இன்றைக்கு ரோடுகள், ஏரிகள் பராமரிப்பு, உணவு உற்பத்தி, ரசாயன உரத்தைப் பெறுதல், குடி தண்ணீர் வசதிகள் இம்மாதிரிப் பல திட்டங்களைச் செய்ய வேண்டும். கிராமப் பகுதிகளில் சேகரிக்கப்படும் தானியங்களை, மில்காரர்களோ, வியாபாரிகளோ வாங்கி, ஸ்டாக் செய்து, அப்படி ஸ்டாக் செய்த தானியத்தின் பேரில் சர்க்கார் லோன் பெற்று, கடைசியில் மூட்டைக்கு 4, 6 என்று கமிஷன் வைத்து கொள்ளை லாபம் இடைக்குள்ளே அடையும் நிலைதான் வருகிறது. ஆகவே, அதைத் தவிர்க்க ஒவ்வொரு கிராமத்திலும், ஓரிடத்தில் சேர்த்து வைக்கக் கூடிய கிடங்குகளைக் கட்டிக் கொடுத்து, அங்கே நெல் முதலியவற்றைச் சேகரிக்க உதவவேண்டும். கூட்டுறவு நாணய பாங்குகள், சென்ட்ரல் பாங்குகள் மூலம் கடன்கள் வழங்கவேண்டும். இதையெல்லாம் நன்றாகப் புரிந்துகொண்டு கிராம மக்கள் பஞ்சாயத்துத் தலைவர்கள் பணியாற்ற வேண்டும். எது கிராமத்திற்கு லாபகரமாக இருக்குமோ அந்த விதத்தில் செயல்பட்டு, கிராம மக்களின் முன்னேற்றத்திற்கு இன்னின்ன தேவை என்று கிராம திட்டங்களை யூனியனில் சமர்ப்பிக்கிறார்கள். யூனியனில் அந்தத் திட்டங்களைப் பரிசீலனை செய்வார்கள். அப்பொழுது அவர்கள் ஒதுக்கப்பட்ட பணம், வசூலிக்கப்படும் பணம், டொனேஷனாகத் வரக்கூடிய பணம் இவற்றையெல்லாம் சேர்த்துப் பார்க்கவேண்டும். சென்ற காலத்திலே ஜில்லா போர்டு நிதி நிலை போதுமோ போதாதோ என்ற சந்தேகத்தில் இருந்தது. ஆகவே அம்மாதிரி ஜில்லா போர்டு நிர்வாகத்திலிருந்து ரோடுகளை கொடுக்கும்போது, 3, 4 மைல்களுக்கு அதிகப்படியான ரோடுகளை ஹைவேஸ் நேரிடையாக எடுத்துக் கொண்டு, அதாவது குறைவான ரோடுகளை வெளியூர் பஞ்சாயத்து ரோடுகளாகக் கருதி அதனால் அதிகப்படியான பணத்தை ஒதுக்கி, வேலைகளைச் சரியாகச் செய்யும் முறையில் அவசியமானால் அமைப்பில் மாற்றம் ஏற்படுத்தினால், நல்லதாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஸ்தல அபிவிருத்தி தேசிய அபிவிருத்தி வேலைகளைப் பஞ்சாயத்து யூனியன்களோடு ஒன்றாக இணைத்து ஒரே முறையில் செயல்படும் நிலையை உண்டாக்க வேண்டும் என்று தெரிவிக்கிறேன். பஞ்சாயத்து யூனியன்களிடம் ஏராளமான அபிவிருத்தி வேலைகளை ஒப்படைத்து தேவைக்குரிய பணமில்லாமல் செய்ய முடியாது.



யூனியன்களுக்கு அதிகாரம் இல்லை என்று குறிப்பிடப்பட்டது. நிச்சயமாக பஞ்சாயத்துக்களில் உள்ளவர்கள் பயிற்சி பெறாதவர்கள். அதிகாரிகள் அப்படியில்லை. கிராம சேவக்குகள் இரண்டு வருஷம் கிராமங்களில் என்னென்ன செய்யவேண்டும் என்று கடுமையான பயிற்சி பெற்றவர்; அதேபோல கிராம சேவிகைகளும் பயிற்சி கொடுக்கப் பட்டவர்கள். அம்மாதிரியே எல்லோரும் பயிற்சி பெற்றவர்களாக இருக்கிறார்கள், கல்வியில் கிராமத் தொழில்களில். அங்கே ஜூனியர் என்ஜினியர்கள் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் நிர்வாகத்தில் நல்ல பயிற்சி பெற்றவர்களாக இருப்பவர்கள். நிர்வாகத்தை நடத்தி அனுபவம் அடைந்தவர்கள். கமிஷனர் அவர்களும் பயிற்சி பெற்றவர், வெளியூரில் இருக்கும் அத்தனை அதிகாரிகளும் பயிற்சி பெற்றுதான் செயல் படுகிறார்கள்.

பஞ்சாயத்து யூனியன் சேர்மெனும், பஞ்சாயத்துகளின் தலைவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். தேர்தல்களில் வரலாம், போகலாம், அவர்கள் ஜன பிரதிநிதிகள். அவர்களுக்கு இந்தப் பயிற்சி கிடையாது. அவர்களிடத்தில் நிர்வாகப் பொறுப்பை ஜாஸ்தியாகக் கொடுத்துவிட்டால் வேலைகள் சரிவர நடைபெறாது. அந்த யூனியன் தலைவர்கள், யூனியன் அங்கத்தினர்கள் இவர்கள் சொல்கிற யோசனைகளின்படி நிர்வாக அதிகாரிகள் செயல்படும்படியாகச் செய்யவேண்டுமென்பதோடு பஞ்சாயத்து தலைவர்களிடத்தில் மரியாதையாக நடந்து கொள்ளும்படியாக கேட்டுக்கொள்கிறேன். மக்கள் பிரதிநிதிகள் கொடுக்கிற திட்டங்களை பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் தீர்மானங்களை கீழ்ப்படிந்து நிறைவேற்றுவதுதான் அதிகாரிகள் வேலையாயிருக்கவேண்டும்—என்னுடைய தொகுதியில் உள்ள பஞ்சாயத்து யூனியனை எடுத்துக்கொண்டால் அது மிகவும் நல்ல முறையில் செயல்படுகிறது. மேலும் அதை ஊக்குவிக்கக்கூடிய முறையில் யூனியனுக்கு யூனியன் இருக்கும் ஏற்றத்தாழ்வுகளைக் கருதி பண உதவி அளிக்க வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது குளங்கள் பூராவும், பஞ்சாயத்து பராமரிப்பது, மீன் பிடிப்பது மிராசுதார் பாத்தியமுள்ளவர் என்ற நிலையைமாற்றி தனிப்பட்ட மிராசுதார்களுக்குச் சொந்தமான குளங்களானாலும் பஞ்சாயத்து போர்டுகளுக்குத்தான் சொந்தம் என்ற உத்தரவையும் போட்டுவிடவேண்டும். பராமரிப்பது பஞ்சாயத்து, உரிமை மிராசுதாரர்களுக்கு என்று விட்டுவைப்பது பயன்படாது. புறம்போக்கு நிலங்களை எல்லாம் பஞ்சாயத்துகளுக்கு உரிமையாக்குவதோடுகூட புறம்போக்கு நிலம் இல்லாத கிராமங்களில் தனிப்பட்டவர்களுடைய நிலங்களைக்கூட ஆர்ஜிதம் செய்து பஞ்சாயத்துக்களுக்கு உரிமையாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சென்ற வருஷம் மயானம், களம் இவைகளை பஞ்சாயத்துக்களுக்கு மாற்றியதில் பெரிய குறை இருக்கிறது. ஒவ்வொரு கிராமத்திலும் எத்தனை ஏக்கரா புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன என்பதற்கு உடனடியாகச் சர்வே செய்ய வேண்டும் என்றும் பஞ்சாயத்துக்களுக்கு எவ்வளவு நிலங்கள் தேவையோ அவ்வளவும் கொடுக்க சர்க்கார் தயங்கக் கூடாதென்றும் கேட்டுக் கொண்டு, எனக்குப் பேசுவதற்குச் சந்தர்ப்பம் அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து எவ்வளவோ பேச இருந்தும் நேரமில்லையே என்ற வருத்தத்துடன் முடிக்கிறேன்.

• Sri S. RAMALINGA PADAYACHI : சட்ட மன்ற உதவித் தலைவர் அவர்களே, நமது முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள மானியக் கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நமது தேசம் சுதந்திரம் அடைவதற்கு முன் மகாத்மா காந்தி ராமராஜ்யம் பெறவேண்டுமென்ற லட்சியத்தை, கொள்கையை வற்புறுத்தினார். அந்தக் கொள்கை அடிப்படையில் தான் சுதந்திரமும் கிடைத்தது. சுதந்திரம் அடைந்த பிறகு காங்கிரஸ் கட்சி அரசாங்கத்தை எடுத்து நடத்தி வருகிறது. மகாத்மா காந்தி கண்ட லட்சியமாகிய ராமராஜ்யம் மலரவேண்டும் என்பதற்காக வேண்டியே 1958-ம் ஆண்டில் ஸ்தல சுயாட்சிச் சட்டத்தை இயற்றி அதிகாரங்களைப் பரவலாகக் கொடுத்திருக்கிறது. இதனால்தான் நிர்வாகத்தில் மக்களும் பங்குகொள்கிற வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

நல்லவர்களோ, கெட்டவர்களோ இன்றையதினம் மக்கள் தங்கள் இனத்தவர்களிடத்திலேயே நம்பிக்கை வைத்திருப்பதனால் அங்கங்கே அவரவர்களுடைய சாதியார்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு நிர்வாகத்திற்கு வரலாம். ஆனால் இதைக் கண்டு அச்சப்படவேண்டியதில்லை. கொஞ்ச காலத்திற்கு எல்லாம் இந்த எண்ணம் போய்விடும். நாட்டுக்கு உண்மையாக உழைப்பவர்கள் யார் என்பதை உணர்ந்து அவர்கள் நடந்துகொள்ள ஆரம்பித்துவிடுவார்கள். உண்மையான தியாகிகள், உண்மையான சேவகர்கள் இவர்களையே தேர்ந்தெடுக்க ஆரம்பித்துவிடுவார்கள். அப்போது நிச்சயமாக ஸ்தல சுயாட்சி நிர்வாகமானது சிறந்த முறையில் வெற்றிதரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கல்வி வசதி, சுகாதார வசதி, ரோடு வசதி எல்லாம் சிறப்பாக நடைபெற்று நாடு நலம் பெறும் என்ற நம்பிக்கையானது உறுதிபடுவதற்கு நிறைய சந்தர்ப்பங்கள் இருக்கின்றன.

அடுத்தபடியாக "கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத்துறை" என்ற தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ள புத்தகத்தில் 7-வது பக்கத்தில் 12-வது பாராவில், "ஒவ்வொரு பஞ்சாயத்து வளர்ச்சி வட்டாரமும், கிராமப் பணிகள் மானியம் என்று வருகிற ஐந்தாண்டுகளுக்கும் பெற்று வரும். இதன்படி. இம் மாநிலத்தில் உள்ள 374 வட்டாரங்களும் இரண்டு மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களில் பத்து வருஷங்களிலும் சமமான அரசாங்க உதவியைப் பெற்று வரும்" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது வரையில் ஏற்படுத்தப்பட்டிருக்கிற வட்டாரப் பகுதிகளோடு, இனிமேல் ஏற்படப்போகும் வட்டாரப் பகுதிகளையும் சேர்த்து எல்லாவற்றுக்கும் சமமாகப் பணத்தை பிரித்துக் கொடுப்பது என்றால் புதிதாக ஏற்பட இருக்கும் வட்டாரங்கள் முதலில் ஏற்படுத்தப்பட்டு இருக்கும் வட்டாரங்களுக்குச் சமமாக எவ்வாறு இயங்க முடியும்? இதை மனதில் வைத்து புதிதாக ஏற்படப்போகும் வட்டாரங்களுக்கு பழைய வட்டாரங்களுக்குக் கொடுக்கிற பணத்தைவிட கொஞ்சம் அதிகமாகவே ஒதுக்கித் தரவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

டெல்டா பிரதேசங்களில் செய்யக்கூடிய நீர்ப்பாசன வசதிகள் P. W. D. இலாகா எடுத்துக் கொள்கிறது. மானம் பார்த்த பிரதேசங்களில் இருக்கக் கூடிய ஆயக்கட்டுகள் மைனர் இரிகேஷனிலிருக்கிறது. பெருவாரியாக இதையும் பஞ்சாயத்துக்கள் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சொல்லப் பட்டிருக்கிறது. ஆகையால் சிறிய நீர்ப்பாசன வசதிகளைப் பொறுத்த வரையில் பஞ்சாயத்துக்கள் எடுத்துக் கொள்ளும்பொழுது டெல்டா பிரதேசத்திற்கும், மானம் பார்த்த பிரதேசத்திற்கும் ஒரேவிதமாக பணம் ஒதுக்குவது என்றால் சரியாக இராது. மானம் பார்த்த பிரதேசங்களுக்கு எல்லாம் கணிசமான தொகை அதிகமாக ஒதுக்கவேண்டுமென்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

என்னுடைய தொகுதியில் ஒரு வட்டாரப் பகுதி இருக்கிறது. அந்த வட்டாரப் பகுதியில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாகவே கருதுகிறேன். அந்த வட்டாரப் பகுதியில் உள்ள மக்கள் பல நன்மைகளைப் பெற்றிருக்கிறார்கள். அதைப்போல எல்லாப் பகுதிகளும் வட்டார அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வர வேண்டும் என்பதாகச் சொல்லிக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* SRI S. RANGANATHA MUDALIAR: Mr. Deputy Speaker, Sir, it is a common saying that India lives in villages. Neither I who belong to the educated minority with all their airs of intellectual superiority nor for the matter of that, any resident of the City can claim to represent the real life of India. The real life, if one wants to see in India, he must go to the villages. Eighty-three per cent of the Indian population are villagers, of whom 70 per cent are engaged in agriculture. There are 560 thousand villages in India. If one wants to see



the real life of India he must go to one of these 560 thousand villages without directing his attention to the City or the City people and see the particular life which they live. The Britisher when he was ruling us, bestowed least attention upon the villages. He considers the village only as a source of revenue. His interest lay in improving the towns and in that way improving their own ways of life. But the whole thing had to be changed after we own our Independence. Mahatma Gandhi said that if India has to be lifted, if the Indian life and the Indian greatness have to be resuscitated, we must start from the villages. Villages should be restored to their prestine simplicity, purity and efficiency. Until that was done no amount of progress was worth the name. So he wanted to bring about a complete change in the rural life of India and he said that Panchayat Raj should be based on a new orientation. I say that the Community Development Project is based upon the Gandhian philosophy. 'The change of our villages, the change of our society from a static society which is based upon inherited status to a dynamic society which is based upon individual achievement' is the principle on which the Community Development Projects are based. I suppose that it is by way of implementing that principle, the Community Project system is being worked. The Community Project is in its infant stage and it has to face many difficulties. I do not want to waste the time of the House in enumerating all those difficulties. I also do not propose to dwell upon the various advantages that the people have derived and also the various good measures that the Government have undertaken. Of course, enormous amount of work is being carried on.

* I only want to focus the attention of the Government on some of the important difficulties to show what obstacles are in the way of successful implementation of the Community Development Projects. The first difficulty is in the matter of training Project Officers. If we are going to leave the implementation of the entire work to officialdom only, I am afraid the system will not work well and it will be a failure. But, we cannot dispense with the assistance of the officials. But the kind of officials that we want for this purpose is those with a certain amount of missionary enthusiasm and spirit. They must be officials who must for the time being, when they are engaged in development works connected with Community Development Projects, forget that they are mere officials of the Government. They must persuade people to take to modern methods of agriculture and also explain to them how they could get things done. In that way, they must be the people's friends, their philosophers and their guides, not in the conventional sense, but in the real sense of the terms. They must go and live in the villages, as one among the villagers. They must feel that they are one among them. They must do all that they can for the welfare of the villagers. That is the kind of enthusiasm that we want at the present moment. At present, we see that officials for the Community Development Projects are recruited from the Revenue Department. I do not say that they are wanting in efficiency, or enthusiasm or sincerity. They are no

doubt doing their mighty best. But inasmuch as we are mainly dealing with villagers and our chief aim is to improve agriculture and thereby increase food production, I would prefer the posting of Agricultural Officers wherever they are available to these Community Development Projects. They can be appointed frequently as Block Development Officers, because, the main thing that they have to do in the Blocks is to teach the villagers how to plough better and how best to increase food production. So, it is better that officials belonging to the Agriculture Department are posted as Block Development Officers. In this connection, I would suggest—if it is not impertinent—that these officers must be made to undergo some special training. Just as missionaries are being trained before they are sent out into the world for the purpose of spreading their religion, our officials must be trained in various ways. They must know how to mingle with people and how to move with the villagers as one among them and how to work with them and all those things. If that spirit is brought about and if that missionary enthusiasm is created, I am sure that within a generation, the whole life of the country will be completely changed.

There are one or two things which I wish to bring to the notice of the Hon. Minister on the questions of policy. Forest-Unreserved and unassessed waste as well as assessed waste lands must be handed over to the Block Development Officers even in places where Panchayat Unions have not been established. No assignment must be made except with the consent of the Panchayat Unions, when they are established. All the development works, including Welfare works, Rural Water-supply Schemes, Comprehensive Scheme of water supply, Local Development works etc., have to be left to the Block agencies, even in places where panchayats have not been formed. In all the Block areas—I mean in every Block area—there must be a Key Village Scheme. Every Block area must be given 50 stud bulls. This is a very important matter. Fertilizer distribution should also be entrusted to the Block agency, the panchayat unions and the Presidents of the panchayats. Of course, they have to receive the supply from the co-operative stores and undertake distribution and bring about satisfactory allocation of these things to the villagers.

I wish to refer to another matter before concluding my speech. There are dispensaries in certain of the blocks and these should be upgraded. With these suggestions, I conclude my speech. Thank you, Sir.

11-30 a.m. * SRI S. SADASIVAM : மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, கிராம அபிவிருத்தி ஸ்தல ஸ்தாபனத்தின் கீழ் கொண்டு வரப்பட்டிருக்கும் இந்த மான்யத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல அனுமதி கொடுத்த உங்களுக்கு என் நன்றி. 1958-ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட பஞ்சாயத்து ஆட்சி முறையானது கிராமப்புறங்களிலுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த மிகவும் பெரியதொரு உறுதுணையாக இருப்பதை நாம் மட்டுமல்ல, மற்ற மாகாணத்தினரும் புகழ்கின்றனர் என்பதை கண்டு நாம் மகிழ்கிறோம். இந்த அமைப்பிலே





ஒரு சில மாறுதல்களைச் செய்யவேண்டுமென்ற கோரிக்கையை இந்த சமயத்தில் நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். 1958-ம் ஆண்டு சட்டப்படி இப்பொழுதுள்ள பஞ்சாயத்து யூனியன்களுக்கு பஞ்சாயத்துத் தலைவர் அங்கத்தினர்களாக்கப்பட வேண்டுமென்று ஒரு இடைக்காலச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். அதன்படி பஞ்சாயத்துத் தலைவர்கள் பஞ்சாயத்து யூனியன் அங்கத்தினர்களாக வரும்போது அவர்கள் அங்கு அங்கம் வகிக்கிறார்கள். அதே சமயத்தில், பஞ்சாயத்து தலைவர்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்து அவரை நீக்கிவிடலாம் என்ற ஒரு சட்டத்தையும் அமைத்திருக்கிறோம். அப்படி ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டு ஒரு பஞ்சாயத்து தலைவர் நீக்கப்பட்டு, புதிதாக வரக்கூடிய தலைவர் யூனியனில் அங்கத்தினராக இருக்க முடியாமல், முன்பு இருந்த தலைவரே அங்கத்தினராக இருக்கக்கூடிய ஒரு விதி இன்று இருக்கிறது. இந்த அமைப்பு பெரும் மாறுதலை உண்டுபண்ணுவிட்டாலும் இந்த அமைப்புப்படி பழைய தலைவர் பஞ்சாயத்து யூனியனில் அங்கத்தினராக இருப்பது, அவர் அங்குள்ள மக்களின் செல்வாக்கை இழந்திருப்பதால் அந்த பஞ்சாயத்துக்குச் செய்யவேண்டிய சேவை குறைந்து விடுகிறது. ஆகவே இந்த அமைப்பை மாற்றி புதிதாக தேர்ந்தெடுக்கப்படும் தலைவர் பஞ்சாயத்து யூனியனில் அங்கத்தினராக வர வேண்டுமென்ற அமைப்பை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்று பஞ்சாயத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற அதிகாரங்களை எல்லாம் நல்ல முறையில் கிராம மக்கள் வரவேற்கிறார்கள். என்னுடைய பகுதியில் இயங்கக் கூடிய பஞ்சாயத் யூனியன் சிறந்த முறையில் சேவை செய்ய வேண்டும் என்கிற அளவில் எல்லோரும் பணியாற்றுகின்றார்கள். இது சம்பந்தமாக அரசாங்கம் நல்ல முறையில் செயல்பட வேண்டும் என்கின்ற அளவில், ஜில்லாக் கலெக்டர், ஜில்லா அபிவிருத்தி கவுன்சில் கூட்டத்தில் பல கருத்துக்களை எடுத்துச்சொல்லி, அதன் மூலம் பல சிறிய திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. இந்த முறையில் இருக்கக்கூடிய பஞ்சாயத்து யூனியன்கள் நல்ல முறையில் இயங்குவதற்கு அரசாங்கம் வேண்டிய உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது இருக்கின்ற அமைப்பில், பஞ்சாயத் யூனியன் மூலமாக ரோடுகளை பாதுகாக்க வேண்டும் என்கின்ற அளவில் ரோடுகள் மூன்றாக பிரிக்கப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்கார் உதவி பெற்று அமைக்கப்படுகின்ற ரோடு, மாநில சர்க்கார் செலவில் அமைக்கப்படுகின்ற ரோடு, பஞ்சாயத்துக்களே கவனித்துக் கொள்கின்ற ரோடு என்ற அளவில் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இதில் முன்னால் ஜில்லா போர்டுகளில் இருந்த ரோடுகள் இப்போது பஞ்சாயத் யூனியனின் கையில் ஒப்படைக்கப்படுவதால், பஞ்சாயத்து யூனியனின் நிதி நிலைமைக்குத் தகுந்தவாறுதான் பராமரிக்க முடியும். ஆகவே இந்த ரோடுகளை எல்லாம் நல்ல முறையில் பராமரிப்பதற்காக போதுமான தொகை அரசாங்கத்திலிருந்து பஞ்சாயத் யூனியன்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாக விவசாயத்தை பெருக்க வேண்டும் என்ற திட்டத்தின் அடிப்படையில் பல சிறு சிறு திட்டங்களை நிறைவேற்றவேண்டும் என்கின்ற அடிப்படையில் ஏற்பாடுகள் செய்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது. நம்முடைய மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் விவசாயத்தையும், தொழில்களையும் பெருக்க வேண்டும் என்கிற அடிப்படையில்தான் நாம் பல திட்டங்களை அமைத்திருக்கின்றோம். பஞ்சாயத்து யூனியன்களைப் பொறுத்தவரையில் பல சிறு சிறு கைத்தொழில் திட்டங்களை ஏற்படுத்த வேண்டும் என்று ஏற்பாடு செய்திருப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரியது. ஆனால் இன்று விவசாயத்திற்குரிய பல விவசாயக் கருவிகளை தயார் செய்கின்ற சிறிய கிராமக் கைத்தொழில்களுக்கு ஊக்கம் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆங்காங்கு இருக்கக் கூடிய வட்டார வளர்ச்சித் திட்டங்கள் மூலமாக சிறு தொழில்களுக்கு வேண்டிய மூலப் பொருட்களை எல்லாம் (ரா மெட்டீரியல்ஸ்) கொடுக்க வேண்டும். இம்மாதிரியான சலுகைகள் பஞ்சாயத்து யூனியனுக்கு கிடைக்க வேண்டும். அதே நேரத்தில் பஞ்சாயத்து யூனியன் எல்லைக்குள்ளிருக்கும்

கிராமக் கைத்தொழில் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்ற கருவிகள், வேறு பஞ்சாயத்துகளுக்கும் கொடுத்து, அதன் மூலமாக விற்பனை செய்வதற்கும் வசதி இருக்க வேண்டும். அப்போதுதான் இந்தச் சிறு கைத்தொழில்கள் நல்ல முறையில் விருத்தி அடைய முடியும்.

இன்று முக்கிய தொழிலாக விளங்கக்கூடிய தோல் தொழிலை விருத்தி செய்வதற்கு புதிய வட்டார வளர்ச்சித் திட்டங்கள் மூலமாக பல ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இன்றைக்கு இருக்கின்ற அமைப்பில், தோலை மட்டும் பதனிட்டு சந்தையில் கொண்டு போய் விற்கக்கூடிய நிலைதான் இருக்கிறது. இன்னும் அந்தத் தொழிலுக்கு ஊக்கமும் ஆதரவும் கொடுத்து, பல உருவங்களில் இதை சீர்படுத்தி இந்த கிராமத் தொழிலை ஊக்குவித்து அதன் மூலமாகச் செய்யப்படுகின்ற பொருட்களை விற்பனை செய்வதற்கும் வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கிராமங்களில் இந்தப் பொருட்களை விற்பனை செய்ய முடியாமல் இருப்பினும், சில வட்டார வளர்ச்சி பகுதிகளை ஒன்று சேர்த்து அடுத்துள்ள நகரங்களில் கூட்டுறவு முறையில் ஸேல்ஸ் டிப்போக்கள் ஏற்படுத்தி விற்பனை செய்வதற்கு வசதி செய்து கொடுத்தால் இந்தக் கிராம கைத்தொழிலை நல்ல முறையில் முன்னேற்ற முடியும்.

இன்றைக்கு பஞ்சாயத்து யூனியன்களை அமைக்கின்ற இந்த நேரத்தில் கிராமத்திலுள்ள கிராம பஞ்சாயத்துகளில் இதுவரையில் இருந்து வந்த க்ளூப்பினார்க் வேலைக்கு கிராம கர்ணங்களை நியமிக்கலாம் என்று—சட்ட பூர்வமாக இல்லாவிட்டாலும் கூட—பரீட்சார்த்தமாக முடிவு செய்திருப்பதைக் கண்டு மிக மகிழ்ச்சி அடைகிறேன். கிராம பஞ்சாயத்துக்கள் எல்லாம் நல்ல முறையில் நடைபெற வேண்டுமென்றால், கிராம அதிகாரிகளுடைய ஒத்துழைப்பு மிகவும் அவசியம். அப்படியிருந்தால்தான் நிர்வாகமும் பஞ்சாயத்து யூனியனுடைய வேலைகளும் நல்லமுறையில் நடைபெறமுடியும். கிராம கர்ணங்களுக்கு முன்னால் இருக்கின்ற அனுபவத்தின் காரணமாக இப்போது பஞ்சாயத்துக்களிலுள்ளவர்களுக்கும், கர்ணங்களுக்கும் பல வேறுபட்ட கருத்துக்கள் எழுகின்றன. இவைகள் எல்லாம் இல்லாமல் நல்ல முறையில் இயங்க வேண்டுமென்றால் கிராம அதிகாரிகளுடைய ஒத்துழைப்பு மிகவும் அவசியம் என்பதை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்று நம்முடைய ஜனத்தொகை அதிகமாக அதிகரித்து வருகின்ற நேரத்தில் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தை பஞ்சாயத்து யூனியன் மூலமாக நாட்டிலுள்ள மக்களுக்கு விஸ்தரிக்க வேண்டும் என்று வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இது மிகவும் வரவேற்கத்தக்கது. ஒவ்வொரு பஞ்சாயத்தும் தங்கள் வட்டாரத்திலுள்ள மக்களுக்கு இதனுடைய நன்மைகளை எடுத்துச் சொல்லி, எந்த விதமான கெடுதலும் இல்லாத இந்தத் திட்டத்தை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும். இந்தத் திட்டத்தை எந்த அளவுக்கு வெற்றிகரமாக நிறைவேற்றுகிறோமோ அந்த அளவுக்கு வாழ்க்கைத்தரம் உயரும். ஆகவே இச் சபையிலுள்ள அங்கத்தினர்கள் எல்லோரும் இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு உதவி செய்ய வேண்டும் என்று சபாநாயகர் அவர்கள் மூலமாக அங்கத்தினர்களை கேட்டுக் கொண்டு, இதில்பேசுவதற்குச் சந்தர்ப்பம் அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றியையும் தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

*SRI R. SRINIVASA IYER : ஸார், இங்கு கொண்டு வரப்பட்டிருக்கின்ற மான்யக் கோரிக்கையை நான் ஆதரிக்கிறேன். இந்தத் திட்டம் 58-ம் ஆண்டு 35-வது ஆக்டாக ஒரு பெரிய நல்லெண்ணத்தின் பேரில், மக்கள் நல் வாழ்வு வாழ வேண்டும் என்கிற முக்கியமான நோக்கத்தின் பேரில் மிகவும் கஷ்டப்பட்டு இந்தச் சபையிலேயே நன்றாகப் பரிசீலிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு அமலாக்கப்பட்டது. இந்தச் சட்டம் சாதாரணமானவர்களுக்குப் புரிவது மிகவும் கஷ்டமாய் இருந்தது. இதை எல்லோருக்கும் புரிய வேண்டும் என்கிற முறையில் அன்றைக்கு டெவலப்மெண்ட் கமிஷனராக இருந்த இன்றைக்கு சீப்-செக்ரட்டரியாக இருக்கின்ற அதிகாரி அவர்கள்





மிகவும் ஜாஸ்தியாக பிரயாசை எடுத்துக்கொண்டார். இதை எல்லோரும் நல்ல முறையில் புரிந்து கொள்ளவேண்டும் என்ற அடிப்படையில், பஞ்சாயத்து தலைவர்கள், பஞ்சாயத்து கவுன்சில் தலைவர்கள், ஜில்லாக் கலெக்டர்கள் இவர்கள் எல்லாம் நல்ல முறையில் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக சென்னையிலேயே ஒரு செமினார் நடத்தினார்கள். பின்னால் ஜில்லா வாரியாக செமினார், பின்னால் பஞ்சாயத்து யூனியன் வாரியாக செமினார், பின்னால் சட்டசபை அங்கத்தினர்கள் மூலமாக கிராமங்களிலுள்ள மக்கள் புரிந்து கொள்ளக்கூடிய முறையில் செமினார் இவைகள் எல்லாம் நடந்து வருகின்றன. ஆகவே இதில் அனுபவம் ஏற்பட ஏற்பட இந்தச் சட்டம் எல்லாருக்கும் நல்ல விதமாகப் புரிந்து விடும். இது ஆரம்பித்து ஐந்தாறு மாதங்கள்தான் ஆகின்றன. ஒரு சிறு குழந்தையின் பிராயம் தான் ஆகியிருக்கிறது. ஆகவே இதை நல்ல முறையில் செயல்படுத்துவதற்குரிய வழியைத் தேடாமல் குறைகளை மட்டுமே சொல்லிக் கொண்டிருப்பது சரியல்ல. இந்தச் சட்டத்தில் பிரியாம்பிள்—என்று முறையில் முன்னுரையாகவே உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கும் ஜனத்தொகையை கட்டுப்படுத்துவதற்கும் மக்கள் வாழ்க்கைத்தரம் உயர்வதற்கும் பின்னும் சில குறிப்பிட்ட காரணங்களுக்காகத்தான் இச்சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்போல் விரிவான காரணங்களைக் காட்டி (பிரியாம்பிள்) முன்னுரை உள்ள சட்டம் போல காண்பது அரிது. இதில் பல குறைகள் இருக்கலாம். ஆனால் அந்தக் குறைகளை எல்லாம் நல்ல முறையில் சொல்ல முடியும். (குறுக்கீடு) நண்பர் கோதண்டராமன் அவர்கள் குறைகளைக்குறை சொல்லாமல் எப்படி சொல்வது என்று கேட்கிறார்கள். நல்ல முறையில், அதிகாரிகளைக் குறைகூறாமல் அவர்கள் நன்மைசெய்திருப்பதை பாராட்டிக்கொண்டே குறைகளை நயக்குள் சொல்லலாம். அதிகாரிகள் செய்கின்ற நல்ல வேலைகளை நாம் பாராட்ட வேண்டும். அப்போதுதான் இதிலுள்ள அதிகாரிகளுக்கு உற்சாகம் ஏற்படும். ஆகவே இதைப்பற்றி நான் அதிகமாகச் சொல்லிக்கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை என்று நினைக்கிறேன். இந்தச் சட்டத்தின் மீது கொடுக்கப்பட்டுள்ள ஜி.ஓ.-க்களை எல்லாம் அச்சடித்து இந்த டிபார்ட்மெண்டின் பேரில் விளக்க உரை ஒன்று அங்கத்தினர்களிடத்தில் விநியோகிக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு ஜி.ஓ.-கள் வந்திருக்கின்றன என்று எனக்கே தெரியாது. இந்தச் சட்டத்தைப்பற்றி சாதாரணமாக எல்லோரும் நல்ல முறையில் அறிந்து கொள்ளவேண்டும் என்ற முறையில் எல்லா விளக்கங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே இந்தச் சட்டம் நல்ல முறையில் நிறைவேறும் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்க வேண்டியதில்லை. சில இடங்களில் வேலை செய்வதற்கு பணம் போதாது என்ற குறை இருக்கலாம். அதையெல்லாம் நிவர்த்தி செய்வதற்கும் தகுந்த பல ஜி.ஓ.-கள் இருக்கின்றன. எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் நேரத்திற்குள் இரண்டு விஷயங்களை மட்டும் முக்கியமாக சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஹைவேஸ், ரூரல் வொர்க்ஸ் இவைகளை ஹைவேஸ் இஞ்சினியர் அவர்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அதோடு இதற்கென்று ஒரு சூபரின்டெண்டிங் இஞ்சினியர் மாகாணம் பூராவுக்கும் இருக்கின்ற வேலைகளை கவனிப்பதற்காக இருக்கிறார். இவர்களுடைய மேற்பார்வையில் தான் மைனர் இரிகேஷன் போன்றவைகளும் இருந்து வருகின்றன. இதில் யாரைப் போட்டிருந்தாலும், இந்த டிபார்ட்மெண்ட்டில் எந்த இஞ்சினியரைப் போட்டாலும் அவர்கள் செய்யக் கூடியதைத்தான் செய்வார்கள். என்னுடைய அபிப்பிராயம் அவரைச் சென்னைப்பட்டினத்தில் இல்லாமல் ஸ்டேட்டில் மத்திய இடத்தில் வைத்தால், ஏனென்றால் கிராமங்களின் முன்னேற்றத்தைக் குறித்து செய்யக்கூடிய விஷயம், அடிக்கடி ரொம்ப தூரம் போக இல்லாமல் செய்யக் கூடியதாக இருக்கும். அந்த ஆபீஸர், அவர் டிபார்ட்மெண்ட், ஆபீஸ்கள், சிப்பந்திகள் எல்லாமே புதுக்கோட்டை இல்லாவிட்டால் ராமநாதபுரம் ஜில்லாவில் எங்காவது சென்ட்ரல் ப்ளேஸில் இருக்க வேண்டும்.

இரண்டாவதாக போக்குவரத்து சாலைகள் சம்பந்தப்பட்ட மட்டில் அநேகம் பேர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் குறையைப் பொறுத்த வரையில் சமீபத்தில் நமது சீஃப் செக்ரட்டரி அவர்கள் தஞ்சைக்கு வந்த போது, 'தீவிரமாகச் சொல்வதை உத்தேசித்து இதை மாற்றி அமைக்

[Sri R. Srinivasa Iyer] [24th March 1961

நேரிடலாம், அதை ஆலோசிக்கிறோம்' என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் முடிவாகச் சொல்லவில்லை. ஜனத்தொகை அடிப்படையில ப்ளாக் பிரிக்கப்பட்டுள்ளது. ஒரு ப்ளாக்குக்கு 75,000 ஜனத்தொகை என்ற அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளது. சில பிளாக்குகளில் பராமரிக்க வேண்டிய கப்பி ரோடுகள் நீளம் ஜாஸ்தியாக இருக்கிறது. "இப்போது கொடுக்ககூடிய ஜனத்தொகை அடிப்படையில் நபர் 1-க்கு 40 நயா பைசா போதாது. இதைக் கொண்டு பராமரிக்க முடிந்த வரையில் வைத்துக்கொள்ளுங்கள். பாக்கி ரோடுகளை பஞ்சாயத்திடம் ஒப்படையுங்கள்" என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி பஞ்சாயத்திடம் ஒப்படைப்பதால் இதுவரையில் இரண்டு ஐந்தாண்டுத் திட்டத்தில் விருத்தி செய்ததும் போய்விடும். ரோடுகள் பராமரிப்பில் 'அதர் டிஸ்ட்ரிக்ட் ரோட்ஸ்' பற்றிச் சொல்கிறேன். ஸ்டேட்டில் ஒதுக்க யோசனை செய்திருப்பதை இன்னும் கொஞ்சம் ஜாஸ்திப்படுத்தி ரோட்டின் நீளத்தின் பேரில் வகுத்து அந்தந்தப் பஞ்சாயத்து யூனியனுக்கு, அவர்களுக்குக் கீழே வரககூடிய ரோடின் நீளத்திற்குத் தகுந்தாற்போல கொடுத்தால நலமாயிருக்கும். பஸ் ரோடுக்கு கொஞ்ச ரூபாய்—மெயிண்டினன்ஸுக்காக ஒரு மைலுக்கு 100 ரூபாய்—கொடு. பது போதாது. இதைப்பற்றி சீஃப் செக்ரட்டரியிடம் கூட சொல்லியிருக்கிறேன். இந்த பஞ்சாயத்து ஆக்ட் தஞ்சை ஜில்லாவில் அமுலுக்கு வந்து நடந்து கொண்டிருப்பதைப் பார்த்தால் அங்கே ஜில்லா கலெக்டர் ஜாஸ்தி பிரயாசை எடுத்துக் கொண்டு நல்ல முறையில் நடத்திக்கொண்டு வருகிறார். அந்த ப்ளாக் ஆபீஸர்களுக்கெல்லாம் கூட ஹைதராபாத்தில் ட்ரைனிங் ஆகியிருக்கிறது. ரெவின்யூ டிபார்ட்மெண்டிலிருந்து ரெக்ரூட் ஆனாலும் வேறு டிபார்ட்மெண்டிலிருந்து ரெக்ரூட் ஆனாலும், எல்லோருக்கும் ட்ரைனிங் கொடுத்து ஸ்கீமேடிக் பட்ஜெட் எப்படிப் போடுவது, திட்டம் போடுவது எப்படி என்றும் எல்லாவற்றிலும் ட்ரைனிங் ஆகி வந்திருக்கிறார்கள். வேண்டுமானால் டீஸெண்ட்ரலைசேஷன் வேண்டுமானால் எல்லாவற்றையும் கிராமத்தில் ஒப்படைக்கவேண்டும் என்று சொன்னால், அதற்குத் தகுந்தவர் இருந்து பராமரிக்க வேண்டும். "அதிகாரிகளுக்கு பவர் கொடுக்க யோசனை இருக்கிறது. எல்லா அதிகாரமும் அதிகாரிகளுக்கே கொடுத்திருக்கிறார்கள், அதிகாரிகள் செய்கிறார்கள்" என்று சொல்லிக்கொண்டே இருக்காமல் அதிகாரிகளுடைய ஒத்தாசையின் பேரில் நாமும் ஒத்துழைத்து அரசியல் கட்சி மனப்பான்மையை கிராம முன்னேற்றத்தில் கொண்டுவராமல் பஞ்சாயத்து சட்டத்தை நிறைவேற்றினால் நல்ல முறையில் நடக்கும். மக்களுக்கு நன்மை நிச்சயம் ஏற்படும். வீண் புகார் சொல்லிக்கொண்டே இருப்பது முறையல்ல. இதில் தஞ்சை ஜில்லா சம்பந்தப்பட்ட வரையில் ஒரு தனிப் பிரச்னை இருக்கிறது. தஞ்சை ஜில்லாவை விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்காக பாககேஜ் டீல் ப்ரொக்ராமில் சேர்த்திருக்கிறார்கள். இதற்கு ஒவ்வொரு பிளாக்கிலும் கிராமங்களைப் பொறுக்கி எடுப்பதில் 20 சத [illegible] பொறுக்கி எடுக்கவேண்டும் என்று இருக்கிறது. எல்லா கிராமத்திலும் [illegible] இல்லாவிட்டாலும் ஒவ்வொரு கிராமத்திலும் இல்லாவிட்டாலும் ப்ளாக்கில் நான்கு இடங்கிலாவது இந்த ஏரியா (Area) இருந்தால் தான் என்னென்ன செய்கிறார்கள் என்று எல்லோருக்கும் தெரிந்து விவசாய உற்பத்தியைப் பெருக்க முயற்சிக்க முடியும். அந்த நிலையில் இல்லாமல் ஒரு மூலையில் ஆரம்பித்து (contiguous) கண்டிகுவஸ்ஸாக போகவேண்டும் என்று சொன்னால் தங்களுடைய கிராமங்களுக்கு வருமோ வராதோ, மொத்தம் 60 சதவீதம் தானே என்று பொது மக்களிடத்தில் அபிப்பிராயம் ஏற்பட்டிருக்கிறது. இதில் என்ன உத்திரவு இருந்தாலும் அரசாங்கம் செலக்ஷன் செய்வதில் சரியாகக் கவனம் செலுத்தி பரவலாக விஸ்தீரணம் நிர்ணயிக்க வேண்டும். பட்டுக்கோட்டை ப்ளாக்கில் செலக்ஷன் செய்வதைப் பற்றி அரசாங்கத்திற்கு எழுதியிருக்கிறேன். இன்னும் உத்திரவு போடவில்லை. பரிசீலனையில் இருக்கிறது என்று லெட்டர் மட்டும் வந்திருக்கிறது. ஆகவே இதில் நல்ல முறையில் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் லோகல் டெவலப்மெண்ட் ஸ்கீம் சம்பந்தமாக ஒரு சிக்கல் இருக்கிறது. ஃபர்ஸ்ட் ஸ்டேஜ் (First stage) ப்ளாக்காக இருந்தால் எல்.டி. ஸ்கீம் கிடையாது. ஜில்லா போர்டு கிராண்ட் கிடையாது, "ப்ளாக்குக்கும் பணம் கொடுத்திருக்கிறதே பார்த்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லு



24th March 1961] [Sri R. Srinivasa Iyer]

கிறார்கள். 1955-ல் கிராம மக்கள் நாலில் ஒரு பங்குப் பணம் கட்டியாகி விட்டது. ஏற்கனவே தஞ்சை ஜில்லாவில் போட்டிருக்கிறப்படி ப்ரயாரிட்டி லிஸ்ட் போட்டு ரோடைப் போட்டுவிட்டால் வேறு ஒன்றும் மக்கள் கேட்க மாட்டார்கள். ரோடு டெவலப்மெண்ட் ரொம்ப முக்கியமானது. போக வர சீராக வசதி செய்து கொடுத்தால் இதர வசதிகளைக் கூட கேட்க மாட்டார்கள். ரோடு போட்டுவிட்டால் சினிமா, மார்க்கெட், ஆஸ்பத்திரி முதலியவைகளுக்குப் போக வசதி ஏற்படும். மக்களுக்கு பஸ்ரூட், ரோடு இரண்டும் தான் வேண்டும். முன் சொன்னபடி 1955-ல் ஆகஸ்டு மாதத்தில் பணம் கட்டியிருக்கிறது. பிற்பாடு முதல் ஸ்டேஜ் ப்ளாக்காக ஆகி விட்டதால் அதை எடுத்துக்கொள்ள முடியாது என்று சொல்கிறார்கள். கட்டிய பணமும் திரும்பி வரவில்லை. வேலையும் நடக்கவில்லை. பணம் இல்லை என்கிறார்கள். பணம் வேண்டுமென்றால் அதிகப்படி பணத்தை எப்படிச் சேர்ப்பது என்பது ஃபைனான்ஸ் (Finance) டிபார்ட்மெண்டுக்குத்தான் தெரியும். எந்த வகையில் திரட்டலாம் என்பது அவர்களுக்குத்தான் தெரியும். 'வரி போட பவர் கொடுத்துவிட்டோமே. 25 சதவீதம் வரையில் 116-வது செக்ஷன்படி (Local Cess Surcharge) போட்டுக்கொள்ளுங்கள்' என்று சொன்னால், முன்பு 35 நயா பைசா செஸ் இருந்ததை இப்போது 45 நயா பைசாவாகப் போட்டாகிவிட்டது. லோகல் செஸ் சர்க்காரும் சேர்ந்து லாண்ட் ரெவின்யூவோடு 60 நயா பைசா போட்டு 1 ரூபாய்க்கு 70 நயா பைசா வீதம் சேர்த்து வசூல் செய்யவேண்டும், அதுவும் இந்த வருஷத்திலேயே, வருஷக் கடைசியில் போட்டு, ஒரேடியாக வசூல் செய்து ரோடுக்கும், கல்விக்கும் செலவு செய்வதென்று சொன்னால் ரொம்பவும் பொது மக்களிடையே மனத்தாங்கல் ஏற்படுகிறது. பணம் இல்லாத காரணத்தினால் டெவலப் செய்யவில்லை. உதாரணமாக பட்டுக்கோட்டை பஞ்சாயத்து யூனியனை எடுத்துக் கொண்டால் 49 மைல் கிராவல் ரோடு இருக்கிறது. ஜனத்தொகைக்கு 40 நயா பைசாவைக் கொண்டு இதை மராமத்து செய்வதென்றால் இந்த 49 மைலில் 6 மைல் தான் செய்யலாம். பாக்கி 43 மைல் ரோடை பஞ்சாயத்திலும் எடுத்துக் கொள்ளமாட்டார்கள். சர்க்காரிலும் எடுத்துக் கொள்ள மாட்டார்கள். வீணாகப் போய்விடும். சில வருஷங்களுக்குப் பிறகு ரோடே இல்லாமல் போய்விடும். வருஷத்திற்கு 975 மைலை எம்.டி.ஆர்.-ஆகச் செய்யப் போகிறோம் என்று சொல்லுகிறார்கள். 1956-ம் வருஷத்திலிருந்து ஓ.டி.ஆர்.-ஐ. எம்.டி.ஆர்.-ஆக மாற்றி classify செய்யும் விஷயத்தில் பட்டுக்கோட்டையிலிருந்து வடசேரிக்குப் போகும் ரோடை எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் பின்னும் பல ரோடுகளைப்பற்றியும் சிபார்சு செய்யப் பட்டிருந்தும் முடிவு செய்யப்பட்டு எடுத்துக் கொள்ளப்படவில்லை. இன்னும் இந்த ரோடு ஓ.டி.ஆர்.-ல் இருக்கிறது. 956-லிருந்து சர்க்காரில் பெண்டிங்கில் இருந்தது. இப்போது அந்த ரோடை 'ஓ.டி.ஆர்.' ஆகையால் பஞ்சாயத்து வைத்துக்கொள்ளவேண்டும் என்று [illegible] நியாயமல்ல. சென்ற பல வருஷங்களாக பஸ் ரூட்டாக இ[illegible] எப்போது எம்.டி.ஆர்.-ஆகச் செய்யவேண்டுமென்று சிபார்சு செய்யப் பட்டதோ அந்தத் தேதியிலிருந்து அது எம்.டி.ஆர். என்று சேர்க்கப் படவேண்டும். உடனே அந்தமாதிரி வேண்டுகோளை சர்க்கார் வேண்டுகோளாகக் கருதி சர்க்கார் நேரில் பராமரிக்க வேண்டும். இன்னொன்று இந்த ரோடு பராமரிப்பே பஞ்சாயத்து கவுன்ஸிலுக்கு வேண்டாம் எல்லாவற்றையும் சர்க்காரிலேயே எடுத்துக்கொண்டு;, பணத்தையும் எடுத்துக்கொண்டு அவர்களே செய்தால் நலமாக இருக்கும். எம்.டி.ஆர். ஓ.டி.ஆர். க்ளாஸிஃபிக்கேஷன் (Classification) செய்து வைத்திருப்பதை மாற்றிக்கொள்வதில் ரிட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் (Retrospective effect) கொடுத்து சர்க்காரிலேயே பராமரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏ. பி. ஸி. டி க்ளாஸிஃபிகேஷன் பற்றிச் சொன்னார்கள். பட்டுக்கோட்டை பிளாக்கை ஏ என்று போட்டிருக்கிறார்கள். மிகவும் பிற்போக்கான பல முறை கட்சி பண்ணி சேர்த்திருக்கிறது. ஜனங்களின் எண்ணிக்கை, வரி வசூல் என்ன ஆகிறது, லாண்ட் செஸ் என்ன வரும், சர்சார்ஜ் போட்டால் என்ன வரும் என்று பார்த்து ஏ, பி, ஸி, டி க்ளாஸிஃபிகேஷனை மாற்றி அமைக்க வேண்டும். வேதாரண்யம், ஆவுடையார்கோயில் இரண்டை மட்டும் டி என்று போட்டிருக்கிறார்கள். பொருளாதாரத் தன்மையை உத்தேசித்து பாக்வேர்ட் ஏரியாவைக் கவனித்து இருத்தி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் பஞ்சாயத்து யூனியன் ஆபீஸ் வைக்கும் இடத்தைப் பற்றி பெரிய கிளர்ச்சி ஏற்படுகிறது. ஒன்று இதை சர்க்காரே நிர்ணயம் செய்யவேண்டும். அல்லது பஞ்சாயத்து யூனியன் மெம்பர்களிடையே மெஜாரிட்டி மைனாரிட்டிக்கு விடவேண்டும். ஒரு ஊரில் ஆபீஸ் ஏற்பட்டு விட்டால் அந்த ஊர் விருத்தியாகி விடும் என்ற தவறுதலான எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. பிளாகில் இந்த இடத்தில் வேண்டும் அந்த இடத்தில் வேண்டும் என்று ஒரு அஜிட்டேஷன், கிளர்ச்சி, சிறு குழப்பம் ஏற்பட்டு அநாவசியமாக சிக்கல் ஏற்பட்டு கடைசியில் பிரயோசனம் இல்லாத இடத்தில் ஆபீஸ் வரக் கூடிய நிலைமை இருக்கிறது. சர்க்காரே அங்குள்ள ஒரு இடத்தைக் குறிப்பிட்டு அந்த இடத்தில் வைக்கவேண்டும் என்று சொல்ல வேண்டும் அல்லது பஞ்சாயத்து யூனியன் கான்ஸ்டிடியூட் ஆன பிறகு மெஜாரிட்டியில் தீர்மானம் செய்ய விட்டுவிடவேண்டும்.

அதோடு ப்ரைமரி ஹெல்த் சென்டர்களை ஸாங்ஷன் செய்ததில் கட்டிடங்கள் கட்டவேண்டியதைக் கட்டாமல், கட்டிடங்கள் இருக்கக் கூடிய இடங்களில் டாக்டர்கள் போடாமல் சில கிராமங்களில் இருக்கின்றன. இப்போது லைஸென்ஷியேட்டைக் கூட போடலாம் என்று நேற்று பேப்பரில் பார்த்தேன். [illegible]ராமங்கோட்டை, பொன்பேத்தி ப்ரைமரி ஹெல்த் சென்டர்களை இயங்கச் செய்யவேண்டும். அனிமல் ஹஸ்பண்ட்ரி டிபார்ட்மெண்ட் சென்டர்களையும் இயங்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

DEPUTY SPEAKER: The hon. Member's time is up.

SRI A. VEDARATHNAM: கனம் துணைத் தலைவர் அவர்களே, 75 ஆண்டுகளுக்கு முன்பு கண்ட கனவு இப்போது நிறைவாகியிருக்கிறது. மக்கள் கைக்கு ஆட்சியை மாற்றுவதற்காக கடந்த 75 ஆண்டுகளின் சரித்திரத்தைப் படித்து அறிந்தவர்களுக்குத் தெரியும் அதனுடைய அருமை. ஏதோ பறந்து வந்து நம்முடைய கையில் விழுந்ததாக யாரும் நினைத்துக் கொள்ள மாட்டார்கள். வெள்ளைக்காரன் ஆட்சியிலே இந்த அதிகாரத்தை மாற்றுவதற்காக காங்கிரஸ் மகாசபை எத்தனை ஆண்டுகள், எவ்வளவு தீர்மானங்களை நிறைவேற்றி, எவ்வளவு முறைகளைக் கையாண்ட பிறகு, அவர்கள் இஞ்ச் இஞ்சாக அதிகாரத்தைக் கொடுக்க முன் வந்தார்கள். அப்போது ஆட்சி முற்றிலும் வைஸ்ராய்கள் கையிலே இருந்தது. பின்னர் வைஸ்ராய் எக்ஸிகுடிவ் கவுன்சில் என்று சொல்லி, அதிலே சில மெம்பர் [illegible] ஆலோசனைக்கு எடுத்துக் கொண்டார்களே யல்லாமல், அவர்கள் கூறிய ஆலோசனைகளைக்கூட அந்தக் காலத்தில் அவர்கள் ஏற்றுக்கொள்ள வில்லை. ஒரு 10 ஆண்டுக்கு ஒருமுறை ஒரு ரிபார்ம் பண்ணினார்கள். மிண்டோ-மார்லி ரிபார்ம், மாண்டேகு-செம்ஸ்போர்டு ரிபார்ம் என்று இப்படி யெல்லாம படிப்படியாக அதிகார மாற்றம் சொல்லி, அவர்கள் நமது குடுமியை வைத்துக்கொண்டு, அதிகாரத்தை மாற்றுவதாக பாவனை செய்து வந்தார்கள். அப்படி இருந்த நிலைமாறி, இப்போது நாம் போராடிப் பெற்றுக் கொண்டபிறகு, நாம் சுதந்திரம் அடைந்த பிறகு, அரசியல் நிர்ணய சபையில் சட்டமியற்றி 10 ஆண்டுகளுக்கு அந்த அதிகார மாற்றம் மக்கள் கைக்கு வந்தது என்று சொன்னால், பாரதியார் சொன்ன.

"ஓராயிரம் வருடம்
ஓய்ந்துகிடந்த பின்னர்
வாராது போல வந்த
மாமணியைத் தோற்போமோ?"

என்பது நினைவுக்கு வருகிறது. எத்தனையோ பெரிய போராட்டங்கள் நடந்தன. அதன் பின்னர் ஆட்சி மக்கள் கைக்கு மாற்றப்பட்டிருக்கிறது. அது ஒரு பெரிய வரப்பிரசாதம் என்றே சொல்ல வேண்டும்.





நம்முடைய மதிப்பிற்குரிய நண்பர் ஸ்ரீ ஆர். சீனுவாச அய்யர் அவர்கள் சொன்னதுபோல், எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்னாலே இயற்றப்பட்ட சட்டங்களைக்கூட கண்டுபிடித்து இப்போது குறைகள் மாற்றப் படுகின்றன. இவ்வாண்டுதான் இந்தச் சட்டம் நிறைவேறி இருக்கிறது. இப்போதுதான் அது அமுலாக்கப்பட்டும் வருகிறது. குறைபாடுகள் இல்லாது முற்றிலும் சிறந்தது என்றோ, அதைக் குற்றமில்லாத சட்ட மென்றோ யாரும் சொல்வதற்கு இல்லை. அந்தச் சட்டத்திலே என்னென்ன குறைபாடுகள் தோன்றுகிறதோ அதை மாற்றியமைப்பதுதான் இந்த சட்டசபையினுடைய வேலை. அதுதான் இப்போது தொன்றுதொட்டு நடந்து கொண்டு வருகிறது. இந்த அதிகார மாற்றம், இந்தப் போராட்டங்களை யெல்லாம் அறிந்து அதிலே ஈடுபட்டவர்கள் கைக்கு அந்த அதிகாரம் கிடைத்ததினால், அதனுடைய பெருமையை அறிந்து, மதித்து அவர்கள் அந்த ஆட்சியை நடத்துகின்றார்கள். அப்படி இல்லாதவர்கள் கையிலே இந்த அதிகாரமானது சிக்கிக் கொண்டால் கஷ்டம்தான். அதை நாளா வட்டத்திலே மக்கள் தெரிந்து கொண்டு யார் கையிலே இந்த ஆட்சியைக் கொடுக்க வேண்டுமோ அவர்கள் கையில் கொடுக்கவேண்டும். அது யாரிடத்திலே இருந்தாலும், அதைச் செம்மையாக உணருகின்ற காலம் வரும் வரையிலும் இந்தக் குறைபாடுகளை பொருத்துத்தான் ஆகவேண்டும்.

மத்திய அரசாங்கத்தினுடைய பொறுப்பு, மாகாண அரசாங்கத்தினுடைய பொறுப்பு, ஜில்லா போர்டினுடைய பொறுப்பு ஆகிய எல்லா பெரிய பொறுப்புகளையும் இப்போது கிராமங்களின் கைக்கு மாற்றப்பட்டிருக்கிறது. அப்படி மாற்றப்பட்டிருக்கிற காரணத்தாலேயும், அவர்களுக்கு அனுபவம் ரொம்பவும் குறைவாக இருக்கின்ற காரணத்தாலும், அந்த அதிகாரங்களை யெல்லாம் சரியாக செலுத்துகின்றனரா என்பதைக் கண்காணிப்பதற்காகவும், அப்படி அவர்கள் தவறுகின்ற இடத்திலே திருத்துகின்ற அதிகாரம் அதாவது ஹோல்ட் நம்முடைய அரசாங்கத்திற்கு இருக்க வேண்டும். ஏனெனில் ஆரம்ப காலத்தில் 10 ஆண்டு காலம் வரையில் மக்கள் நல்லமுறையில் புரிந்துகொண்டு செயலாற்றுவார்களானால், மேலும் பல பொறுப்புகளை மாற்றுவதில் எவ்விதத்திலும் தவறு இல்லை. அதுவரையிலும் எங்காவது தவறு செய்து, அதனால் மக்களுக்கு அதிகத் தீமை நேருமென்று சந்தர்ப்பம் வருகின்ற காலத்தில், அதைச் சீராக நடத்துகின்ற பொறுப்பை இந்த அரசாங்கம் கையிலே வைத்துகொள்ள வேண்டுமென்பதை நான் இந்த சந்தர்ப்பத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

முக்கியமாக கிராம பஞ்சாயத்துக்கு இந்த அதிகாரம் முழுவதையும் கொடுப்பதுதான், அந்தந்த கிராமத்திலுள்ள மக்கள் அவரவர்களுடைய தேவைகளைச் செய்து கொள்வதாகு முடியுமே தவிர, கிராம சம்பந்தமான விஷயங்களைக் கவனித்துக்கொள்ளும் அதிகாரத்தை பஞ்சாயத்து யூனியனுக்கு கொடுத்தால்கூட, அது சென்ட்ரலைசேஷன்தான் ஆகும். இதை இந்த இடத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன். ஒரு கிராமத்திற்குத் தேவையான வசதிகளை யெல்லாம், அந்தக் கிராமத்துப் பஞ்சாயத்து தான் முடிவு செய்யவேண்டும். அந்த கிராமத்து பஞ்சாயத்து தலைவரும் அதிலுள்ள உறுப்பினர்களுமே அங்குள்ள மக்களிடத்தில் வாக்குப் பெறுகிறவர்கள். அவர்கள்தான் அவர்களுடைய தேவையை உணர்ந்து உணர்ந்து செய்யக்கூடியவர்கள். ஆகவே அதைக்கொண்டு வந்து பஞ்சாயத்து யூனியன் கையிலே கொடுப்பார்களானால், அந்த அளவுக்கு அது சென்ட்ரலைசேஷன்தான் ஆகும். அந்த கிராமவாசிகளுக்கு இந்த பஞ்சாயத்து யூனியனால் அவர்களுடைய தேவையை உணர்ந்து காரியங்கள் செய்ய முடியாது. ஆகவே இதிலே இப்படிச் சில விஷயங்கள் இருப்பதை நான் கனம் அமைச்சர் அவர்களுடைய நினைவிற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

கிராமத்திலே இருக்கின்ற கிராமக் குடிதண்ணீர் வசதி, பாசனவசதி, போக்குவரத்து வசதி, கல்வி வசதி ஆகிய இந்த விஷயங்கள் அனைத்தும் அந்தந்த கிராமப் பஞ்சாயத்துக்களுக்கே இருக்க வேண்டும். அப்படி இந்த அதிகாரங்கள் கிராமப் பஞ்சாயத்துக்கு இல்லாமல், பஞ்சாயத்து யூனியனுக்கு

இருக்குமானால், யூனியனிலே போட்டி ஏற்படுகின்ற காரணத்தினால், தன்னுடைய பஞ்சாயத்திற்கு வேண்டிய தேவைகளை ஒரு பஞ்சாயத்து தலைவர் எடுத்துச் சொன்னாலும், அந்த கிராமப் பஞ்சாயத்துக்கு கிடைக்க வேண்டிய உரிமைகள் இல்லாமல் போகக்கூடிய ஒரு வாய்ப்பு இந்த பஞ்சாயத்து யூனியன் கையிலே அதிகாரங்கள் இருப்பதால் நேரிட இருக்கிறது. அந்த வாய்ப்பு இல்லாமல் செய்வது இந்த சட்டத்திலே மிக முக்கியமானது. உண்மையான அதிகாரம் வேண்டுமென்றால், இந்த அதிகார மாற்றம் கிராமப் பஞ்சாயத்துக்களுக்குச் செல்லுவதுதான் முறை. அதிலும், சிறப்பாக கல்வி விஷயத்திலே இது மிகவும் முக்கியம். அதனால்தான் கல்வி மானியத்தின் போதுகூட நான் நிதியும், கல்வியும் ஒரு அமைச்சரிடம் இருப்பது உலகத்திலே எந்த நாட்டிலும் இல்லாத தனிச் சிறப்பு என்று குறிப்பிட்டேன். அதேமாதிரி, கல்வியும், கிராமப் பஞ்சாயத்துக்கு பதில் சொல்லக்கூடிய வாய்ப்பும் ஒரே இடத்திலே இன்றைக்கு இருப்பதும் ஒரு தனி விசேஷம்தான் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

கல்வி இலாகாவிலே இப்போது நாம் ஏற்படுத்தி இருக்கிற எஸ்.ஈ.ஓ. அவர்களுக்கும் ஒரு சரியான இடத்தைக் கொடுத்து கோ–ஆர்டினேஷனோடு ஒத்துழைக்க வேண்டியது மிகவும் முக்கியமான விஷயமென்பதை அவர்களுக்கு நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். இந்த எஸ். ஈ. ஓ. க்களையெல்லாம் இப்போது ஏதோ ஒரு மார்க்கு குறைந்த மாதிரி சமத்துவமாக மதிக்கக்கூடிய ஒரு நிலைமை இன்னும் கல்வி இலாக்காவால் நீடித்து வரப்படுகிறது. இப்படிச் சொல்வதால் குற்றம் சாட்டுகிறேன் என்று நினைக்கக்கூடாது. இருக்கின்ற குறைபாட்டை உணர்ந்து திருத்துங்கள் என்றுதான் சுட்டி காட்டுகிறேன். ஆகவேதான் இதை இங்கே கூறுகின்றேன்.

அதோடு, ஒரு கிராமத்திற்கு கல்வி வசதியும், குடிதண்ணீர் வசதியும் அல்லது வேறு எந்த வசதி வேண்டுமானாலும் கிராமப் பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியனிடம் சென்று கேட்கின்ற நிலைமை இருக்குமானால், அது அங்குள்ள மக்களுக்கு அளிக்கப்படுகின்ற உண்மையான ஆட்சியாகாது. அந்த அதிகார மாற்றம் சரியான முறையிலே மக்களுக்குப் போய் சேரும்படி செய்ய வேண்டிய குறைபாடு இந்தச் சட்டத்திலே இருக்கிறதென்றே நான் நினைக்கிறேன். அதைக் கவனித்து அதற்கு வேண்டியதைச் செய்வார்கள் என்று நான் கருதுகிறேன்.

அதோடு, இந்தச் சட்டத்திலே நிர்வாகச் செலவு அதிகமாக இருக்கிறது. நாம் கொடுக்கக்கூடிய தொகையிலே கிட்டத்தட்ட பாதிக்கு நிர்வாகச் செலவு ஆகிறது என்பதை கனம் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். அதோடு அவர்கள் அதைக் கவனிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

கிராமங்களிலே பல கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. அது சரியான நிபுணர்களின் ஆலோசனையின் பேரில், இந்த இடத்தில் ஆரம்பித்தால் நல்லதா, அந்த இடத்ததில் ஆரம்பித்தால் நடைபெறுமா என்பதை யோசித்து, அதன்பேரில் ஏற்படுத்தப்பட வேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், பொருத்தமில்லாத இடங்களிலே சில தொழில்கள் அதற்கு வேண்டிய இயற்கை வசதிகள் இல்லாத இடத்தில் ஆரம்பிக்கப்பட்டு. ஒரு ஆண்டு காலம்கூட நடைபெறாமல் இருக்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. அப்படி ஏற்படுவதால், அங்கே செலவு செய்யப்பட்ட பணம் விரயமாக்கப்படுகிறது. அப்படியில்லாமல், அந்தச் சூழ்நிலைக்குத் தகுந்தமாதிரி அந்தந்த இடங்களில் தொழில்களை ஆரம்பிக்க வேண்டும். ஆரம்பித்து, மூடக்கூடிய நிலைமையால் பணம் செலவழிக்கப்பட்டு ஆரம்பித்தும், விரயமாக்கப்பட்டதே என்று மக்கள் அதை ஒரு பெரும் சுமையாகக் கருதுகிறார்கள். இப்போது கிராமங்களிலெல்லாம் ஒரு பெரிய விழிப்பு ஏற்படுகின்றது. இப்பொழுதான் மக்கள் சுயராஜ்யம் என்றால் என்ன என்பதை உணர ஆரம்பித்திருக்கிறார்கள். இதை நல்ல மனதோடு அவர்கள் ஆதரிக்கிறார்கள். ஆனால் எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் இதை ஏதோ கட்சிப் பிரசாரத்திற்காகச் செய்கிறார்கள் என்று கூறுவது மனதை ரொம்பவும் புண்படுத்துகிறது.



எதை எடுத்தாலும் அவர்கள் கட்சிப் பிரசாரம் என்று சொல்லுகிறார்கள். இந்த நாட்டில் சுயராஜ்யமே ஒரு கட்சிப் பிரசாரம் என்று சொல்லிச் சொன்னால், அதை ஒட்டிய விஷயம் முழுவதும் கட்சிப் பிரகாரம் என்று சொன்னால், அது சரியல்ல. அம்மாதிரி அல்லாமல், ஆக்க முறையிலே இருக்கின்ற குறைபாடுகளை அவர்கள் சுட்டிக் காட்டுவதை வரவேற்கிறோம். அதைத் தான் ஆளும் கட்சியிலுள்ள உறுப்பினர்கள் கூட எடுத்துக்காட்டி இருக்கிறார்கள். அந்தத் துறையிலே எதிர்க் கட்சியினர் ஒத்துழைக்க வேண்டுமென்று நான் அவர்களைக் கேட்டுக்கொண்டு இந்த மானியத்தை நான் முழு மனதுடன் ஆதரிக்கிறேன்.

**Sri A. GOVINDASAMY**: சட்ட மன்ற துணைத் தலைவர் அவர்களே கிராம அபிவிருத்தி விஷயமாகக் கோரப்பட்டிருக்கிற இந்த மானியத்தின் மீது கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுப் பிரேரபணையை ஆதரித்துக் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எல்லா பிளாக்குகளும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அபிவிருத்தி வேலைகள் நடைபெறும் என்று ஏற்கனவே உறுதி அளிக்கப்பட்டு, இப்பொழுது 1961-ம் ஆண்டு காந்தி பிறந்த தினத்தன்று முடியும் என்று கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. அந்த நாளிலாவது இது பூர்த்தி செய்யப்படவேண்டும். மேலும் காலம் கடத்தக் கூடாது என்று நான் முதன் முதலில் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சமுதாய நல அபிவிருத்தித் திட்ட பகுதிகள் தேர்ந்தெடுக்கப்படுகிறபொழுது, கட்சிக்கண்ணோட்டத்தோடு தேர்ந்தெடுக்கப்படுகிறதுபொழுது, கட்சிக் கண்ணோட்டத்தோடு தேர்ந்தெடுக்கப்படுகிறது என்று நான் தொடர்ந்து சொல்லிக்கொண்டு வருகிறேன். என்னுடைய தொகுதியில் விக்ரவாண்டி, கண்டமங்கலம் பகுதிகள் பிளாக்குகளாக எடுத்துக் கொள்ளப்படவேண்டும் என்று தென் ஆற்காடு மாவட்ட அபிவிருத்தி கவுன்சிலில் சிபாரிசு செய்யப்பட்டு, கலெக்டர் அவர்களும் சிபார்சு செய்திருந்தாலும் கூட மேலாதிகாரிகள் அதைத் தட்டிக் கழிக்கிற நிலைமையைப் பார்க்கிறபொழுது தான் இம்மாதிரி சொல்ல வேண்டியிருக்கிறது என்பதை நான் வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் திட்டம் நல்ல முறையிலே இயங்க வேண்டும். அதற்கு என்னுடைய ஒத்துழைப்பு இருக்கிறது என்பதை எங்கள் மாவட்ட கலெக்டரைக் கேட்டால், பிளாக் டெவலப்மெண்டு அதிகாரிகளைக் கேட்டால் தெரியும். அதை அவர்கள் மறுக்க முடியாது. அமைச்சர் அவர்கள் கூட அதை மறுக்க முடியாது. திட்டத்தைக் கொடுத்தால் ஒத்துழைக்க எதிர்கட்சியினர் நாங்கள் தயாராக இருக்கிறோம். ஒரு சில இடங்களுக்குத் திட்டத்தைக் கொடுக்காமல் இருந்தால், எப்படி நாங்கள் ஒத்துழைப்பது? என்னுடைய தொகுதியில் வளவனூரில் 25 கிராமங்கள் சேர்ந்து பிளாக்காக எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அங்கு அபிவிருத்தி வேலைகள் நல்ல முறையில் நடந்துகொண்டு இருக்கிறது. விக்ரவாண்டி, கண்டமங்கலம் பகுதிகளை எடுத்துக்கொள்ள வேண்டும். சமுதாய நல அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் என்று சிபார்சு செய்யப்பட்டபோதிலும், அந்தச் சிபார்சு தள்ளப்பட்டிருக்கிறது.

அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும், கிராம மக்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்தோடு தான் பஞ்சாயத்துச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. மேஜர் பஞ்சாயத்துகளுக்கு 'எக்ஸிகியூடிவ் ஆபீசர்களைப்' போடுகிறோம். ஆனால் கிராமப் பஞ்சாயத்துகளுக்குப் கணக்குப் பிள்ளைகளை செக்ரடரிகளாகப் போடக்கூடிய நிலைமை இருக்கிறது. இதை நான் எதிர்க்கக்கடமைப்பட்டிருக்கிறேன். கணக்குப் பிள்ளைகளுக்கு ஏற்கனவே வேலை அதிகமாக இருக்கிறது. கணக்குப் பிள்ளைகள், மணியக்காரர்கள் சர்க்கார் ஊழியர்கள் என்று கருதி தேர்தலில் நிற்கக்கூடாது. அவர்கள் தேர்தலில் தலையிடக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருக்கிறது. இருந்தும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்துகளுக்கு அவர்களைக் காரியதரிசிகளாகப் போடுவதனால் மேலும் குழப்பங்களையும், சண்டைச்சரவுகளையும் உண்டாக்கக்கூடிய நிலைமை ஏற்படுமே தவிர, காரியம் ஒன்றும் அவ்வளவாக நிறைவேறாது என்று சொல்லிக் கொள்ள விரும்புகி

கிறேன். பல இடங்களில் எக்ஸிக்யூடிவ் ஆபீசர்களுக்கு அதிகாரம் அதிகமாக இருப்பதினால், அவர்கள் பஞ்சாயத்து போர்டு தலைவர்களோடு ஒத்துழைக்காத நிலைமையை சுட்டிக்காட்ட முடியும். உதாரணமாக, வளவனூர் பஞ்சாயத்து போர்டு தலைவரோடு அந்த எக்ஸிக்யூடிவ் ஆபீசர் ஒத்துழைக்க மறுக்கிறார். அவர் காண்டிராக்ட் வேலைகளை ஆபீஸ் ஆட்களை வைத்துச் செய்துவிட்டு, காண்டிராக்ட்க்கு விட்டதாகக் காட்டுகிறார். சில பேர்களிடமிருந்து லைசென்ஸ் பணத்தைத் வாங்கிக் கொண்டு லைசென்ஸை வழங்காமலே இருப்பதாகத் தெரிகிறது. தெருவிலே போடப்பட்டிருந்த ட்யூப் லைட்டை எடுத்து எக்ஸிக்யூடிவ் ஆபீசர் வீட்டிலே மாட்டிக் கொண்டு விட்டார். மெம்பர்கள் கூட்டத்தில் அதைப்பற்றிக் கேட்டால் அதற்குச் சரியான சமாதானம் கிடையாது. காரணம் அவருக்கு அதிக அதிகாரம் இருக்கிறது. பஞ்சாயத்து போர்டு தலைவருடைய அதிகாரத்தை மீறுகிற நிலைமை கூடாது என்பது என்னுடைய அபிப்பிராயம்.

கம்யூனிடி டெவலப்மெண்டு திட்டம் அகில இந்தியத் திட்டம் என்று சொல்லுகிறார்கள். ராஜஸ்தானிலும் ஆந்திராவிலும் இருக்கக்கூடிய நிலைமை ஏன் இந்த ராஜ்யத்தில் கையாளப்படவில்லை. அங்கு பஞ்சாயத்து சமிதி என்றெல்லாம் ஏற்படுத்தி அதிகமாக மக்கள் பிரதிநிதிகளுக்கு அதிகாரத்தை வழங்கியிருக்கிறார்கள். அம்மாதிரி அதிகாரத்தை இங்கு வழங்க நம்முடைய அமைச்சர் அவர்கள் ஏன் தயங்குகிறார்கள் என்பதைச் சொல்லவேண்டும். எதிர்க்கட்சியினர்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று சர்தார் வேதரத்னம் அவர்கள் சொல்லுகிறார்கள். நாங்கள் ஒத்துக்கொள்ளுகிறோம். காரியம் நடைபெறுகிற பொழுது எதிர்க்கட்சியினுடைய துணையை நாடுகிறார்கள். காரியம் பூர்த்தியானதும், விழாக்கள் நடக்கிற பொழுது எதிர்க்கட்சியினரை புறக்கணித்து விடுகிறார்கள். போளியனூர் பிளாக்கில் பள்ளிக்கூடத் திறப்பு விழா ஒன்று நடந்தது. அதற்கு என்னை அழைத்திருந்தார்கள். பி.டி. ஓவுடன் ஜீப்பில் அமர்ந்து விழாவிற்கு சென்றேன். இதைப் பார்த்துக் கொண்டிருந்த தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி மேலதிகாரிகளிடம் சொல்லி அந்த அதிகாரியை—ரெங்கசுவாமி ரெட்டியார் என்று பெயர்—மாற்றிவிடும்படி செய்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட பழிவாங்கக்கூடிய நிலைமை இருக்குமானால், எதிர்க்கட்சியினர் எப்படி ஆக்க வேலையில் ஒத்துழைக்க முடியும்? இந்த விதத்தில் தவறான எண்ணம் போவதற்கு இடம் இருக்கக் கூடாது. அதேமாதிரி கண்ணியூர் என்ற இடத்தில் முதல் அமைச்சர் அவர்களும் நானும் ஒரு விழாவிற்கு சென்றிருந்தோம். குழந்தைகள் விளையாட்டு பூங்கா திறப்பு விழா என்று நினைக்கிறேன். என்னை பூங்காவைத் திறக்கச் சொன்னார்கள். நான் திறந்துவிட்டு வருவதற்குள் முதல் அமைச்சர் அவர்கள் பேசி விழாவை முடித்து விட்டார்கள். என்னை அங்கே பேசுவதற்கே அனுமதிக்கவில்லை. முதல் அமைச்சர் அவர்கள் இங்கே சபையில் இருப்பார் என்று தான் கருதினேன். அவருடைய இலாகா மானியக் கோரிக்கையைப்பற்றி விவாதம் செய்யும் பொழுது அவர் சபையில் இல்லாமல் இருப்பது பொருத்தமில்லாமல் இருக்கிறது. ஒத்துழைப்புக் கேட்கிறார்கள். உண்மையில் நாங்கள் ஒத்துழைப்புக் கொடுப்பதை நல்ல முறையில் பயன் படுத்திக் கொள்ளுவதில்லை என்று தான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

பஞ்சாயத்து சட்டத்தை நிறைவேற்றுகிறபொழுது நாங்கள் பல நல்ல திருத்தங்களைக் கொடுத்தோம். பஞ்சாயத்து சட்டம் அவசர அவசரமாக நிறைவேற்றப்பட்டு திணிக்கப்பட்டது. எங்கள் திருத்தம் ஒன்று கூட ஏற்கப்படவில்லை. இது ஒரு பெரிய சட்டம். அப்படியிருந்தும் கூட அவசர அவசரமாக நிறைவேற்றப்பட்டது. திரு. கோபாலசுவாமி ஐயங்கார் அவர்களும், திரு. கிருஷ்ணசுவாமி பிள்ளை அவர்களும் திறமையாகப் பணியாற்றியிருக்கிறார்கள், நான் அதை மறுக்கவில்லை.

ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு பஞ்சாயத்து ஏற்படுத்தவேண்டும் என்று நாங்கள் கூறினோம். 7, 8 கிராமங்கள் சேர்ந்திருப்பதன் காரணத்தினால், ஒரு கிணறு வெட்ட வேண்டும், ஒரு 'ஓவர்ஹெட் டாங்கு' கட்ட வேண்டுமென்று சொன்னால் எல்லாக் கிராமங்களிலும் அந்தத் திட்டம் நிறைவேற்ற முடிந்தால் தான் செய்ய முடியும். உடனடியாக ஒரு கிராமத்





தில் நிறைவேற்றுவதற்கு வழி ஏற்படாது. என்னுடைய தொகுதியில் சாலையம்பாளையம், சந்தானப்பேட்டை இம்மாதிரி 5, 6 கிராமங்கள் 5, 6, மைல் சுற்று வட்டாரத்தில் சேர்ந்து இருக்கின்றன. அந்தப் பஞ்சாயத்தில் 7,000 அல்லது 8,000 ஜனத்தொகை இருக்கும். 15 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்களை ஒன்றாகச் சேர்ப்பதே கஷ்டமாக இருக்கிறது. ஒரு திட்டம் போடவேண்டுமென்று சொன்னால், 'எங்கள் கிராமத்திற்கு வேண்டும், உங்கள் கிராமத்திற்கு வேண்டும்' என்று ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொண்டு, எந்தத் திட்டத்தையும் நிறைவேற்ற முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. தனித்தனியாக பஞ்சாயத்தாகப் பிரிக்கவேண்டுமென்று சொன்னால், ரெவின்யூ கிராமங்கள் என்று சொல்லி, பிரிக்காமலே விட்டுவிடுகிறார்கள். இதில் அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும்.

பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுக்கு 'பாடா' பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். தலைவர்களுக்கு ரூ. 4·25 என்று குறிப்பிட்டியிருக்கிறார்கள். அதே தலைவர்கள் ஸ்டாண்டிங் கமிட்டிக்குப் போனால், 'பாடா' ரூ. 2·13 என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏன் இந்த நிலைமை என்று நான் கேட்கிறேன். அமைச்சர் அவர்கள் இதற்குத் தகுந்த சமாதானம் சொல்லவேண்டும். எம். எல். ஏ., எம். எல். ஸி. களுக்கு அங்கே போகிற பொழுது 'பாடா' ரூ. 4·25 என்று சொல்லுகிறார்கள். அங்கே போகிறபொழுது இவர்களுடைய அந்தஸ்து குறைந்து விடுகிறதா? அவர்களுடைய அந்தஸது குறையாமல் பார்த்துக் கொள்ளவேண்டியது அமைச்சர் அவர்களுடைய கடமை. பஞ்சாயத்துகளில் வேலை செய்யக்கூடிய குமாஸ்தாக்களுக்குப் பழைய சம்பளம் ரூ.35–2–65 என்று இருந்தது. இப்பொழுது ரூ. 70–3–105-ஆக மாற்றி அமைத்திருக்கிறார்கள். மற்ற குமாஸ்தாக்களுக்கு பழைய சம்பளம் ரூ. 45-3-60–2 90 என்று இருந்ததை இப்பொழுது ரூ. 90-4-140 என்று மாற்றப்பட்டிருக்கிறது. மற்ற இலாகாவிலுள்ள குமாஸ்தாக்களைப்போல், பஞ்சாயத்துகளிலுள்ள குமாஸ்தாக்களுக்கும் அதே சலுகை அளிக்கப்பட வேண்டும். அவர்களுடைய சம்பளத்தையும் ரூ. 70 என்பதை ரூ. 96 என்று மாற்ற வேண்டும். இல்லையானால், ஏற்கனவே பஞ்சாயத்து குமாஸ்தாக்களுடைய சம்பளத்திற்கும் மற்ற குமாஸ்தாக்களுடைய சம்பளத்திற்கும் ரூ. 10 தான் வித்தியாசம் இருந்தது. அந்த ரூ. 10 'டிபரன்ஸ்' இருக்கும்படியாவது அவர்களுடைய சம்பளத்தை கூட்டிப்போட்டுக் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளுகிறேன். கிராம அதிகாரிகள் முகாம் என்று மூன்று நாள் நடத்தப் படுகிறது. மிக வெற்றிகரமாக நடத்துகிறார்கள். ஆனால் அது பெயரளவில் தான் முகாமே தவிர, மற்றபடி அதிகாரிகள் சரிவரக் கலந்து கொள்வதில்லை. நற்சாட்சிப் பத்திரம் வழங்கும்பொழுது மட்டும் அவர்கள் அங்கே வருகிறார்கள். மற்ற சமயத்தில் அவர்களை அங்கே காண முடிவதில்லை. சில ப்ளாக்குகளில் பார்த்திருக்கிறேன். கொட்டகை மாத்திரம் இருக்கும். அதிகாரிகள் யாரும் இருக்கமாட்டார்கள். மேலும் இன்னும் சில முகாம்களுக்கு ஜில்லா காங்கிரஸ் கமிட்டித் தலைவர் அங்கத்தினர் எல்லோரும் அழைக்கப்படுகிறார்கள். ஆனால் மற்ற கட்சியைச் சேர்ந்தவர்கள் அழைக்கப்படுவதில்லை. (குறுக்கீடு) நான் பார்த்ததைச் சொல்லுகிறேன். அம்மாதிரி யில்லாமல் உள்ள எல்லாக் கட்சிக்காரர்களுக்கும் சந்தர்ப்பம் அளிக்கும் முறையில் அதைச் செய்ய வேண்டும் என்பதுதான் என் நோக்கம். . . .

(அடுத்த அங்கத்தினர் அழைக்கப்பட்டார்.)

**Sri D. S. AUTHIMOOLAM :** மிஸ்டர் டெபுடி ஸ்பீக்கர், ஸார், இந்த டிமாண்டின் பேரில் பேசுவதற்கு ஆட்களே காணவில்லையே என்று நினைத்துக் கொண்டிருந்தேன்.

**DEPUTY SPEAKER :** கனம் அங்கத்தினருக்கு அந்தக் கவலை வேண்டியதில்லை.

**Sri D. S. AUTHIMOOLAM :** முக்கியமாக எதிர்க் கட்சியில் ஒரு ஆளையும் காணவில்லையே என்று அதற்காகவே கனம் உதவி சபாநாயகர் அவர்களைக் கேட்டேன். நல்ல வேளையாக நண்பர் கோவிந்தசாமி பேசினார்கள். எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், ஜாஸ்தி பேசவேண்டும்

என்று அக்கறையோடு கவனித்துக் கொண்டு வரவில்லை. சரி கேட்போம்
என்று கேட்டேன். ஆகவே சொல்லவேண்டியதை ஓரளவு சொல்லு
கிறேன். இந்த டிமாண்டில் ஐந்து கோடி ரூபாய் 300 சொச்சம் ப்ளாக்கு
களுக்கும் கொடுக்கப்படவிருக்கறது. நேற்று வெளியிட்ட ஒரு
அறிக்கையில் கிராம அபிவிருத்தி, ஸ்தல நிர்வாவகத் துறை என்று
சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, இதில் பல காரியங்களைச் செய்யப்
போகிறார்கள். மக்களை மனிதனுகச் செய்வதற்காக எல்லாக் காரியங்களும்
செய்யப் படவேண்டும் என்ற குறிக்கோளோடு, சட்டம் போட்டு நிறைவேற்
றப் பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட சட்டத்தின் கீழ், கிராம அபிவிருத்திக்
காகவும், ஜனங்கள் நன்மைக்காகவும், வேண்டுமானால் முனிசிபல் ஜனத்
தொகையை தள்ளிவிடுங்கள். 2½ கோடி மக்களுக்கு இந்த ஐந்து கோடி
தானு என்று பார்த்தால், அது அவ்வளவு பொருத்தமில்லை என்று தான்
தோன்றுகிறது. ஏனென்றால், தோட்டத்தில பாதி கிணறு, என்று
சொல்லுவார்கள்; அந்த மாதிரி, இங்கே உள்ள டிபார்ட்மெண்ட் செலவு
கிட்டத்தட்ட 5 கோடியில், ஒரு 3½ கோடியாவது ஆகிவிடும் என்று
நினைக்கிறேன். எஸ்டாப்ளிஷ்மெண்ட் செலவு, மற்றபடி ஜீப் நிர்வாகச்
செலவு, மற்றும் ஆபீசர்கள் வெளியே ட்ரெயினிங்குக்குப் போவது,
பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு ராஜ்யம் பூராவும் சுற்றுப்பிரயாணம், அகில
இந்தியப் பிரயாணம், அதுதவிர ஒரே பாரபர்னேலியா, ஆடம்பரம் இதற்
கெல்லாம் சேர்த்துப் பார்த்தால், இந்த ரூபாய் காணவே காணுது.
ஆகவே, சர்க்கார் உண்மையில், ஜனங்களுக்கு கிராம மக்களுக்கு
அநேக நன்மைகளைச் செய்யவேண்டுமானால், இரண்டு காரியங்களைச் செய்ய
வேண்டும், இந்த மானியக் கோரிக்கையில். ஒன்று, இந்த மானியக்
கோரிக்கையில் பாதி யளவு கூட்டி, ஏராளமான ரோடு வசதிகள், மற்றும்,
பள்ளிக்கூடக் கட்டடவசதிகள், விவசாயிகளுக்கு வேண்டிய இன்னும் கடன்
வழங்கல் எல்லாவற்றையும் ஜாஸ்தியாக்க வேண்டும்; இரண்டாவது,
இந்த டிபார்ட்மெண்டை ஓவர்ஹால் பண்ண வேண்டிய அவசியம் ஏற்பட்
டிருக்கிறது. ஓவர்ஹால் பண்ணுவிட்டால் கஷ்டம். ஆனால், கஷ்டத்தைப்
பற்றி அவர்களுக்குக் கவலையில்லை. 62 வரை எப்படியோ நடத்தி
விட்டால், அப்புறம் பார்த்துக் கொள்ளலாம் என்ற எண்ணம் இருக்கும்.
அம்மாதிரி எண்ணம் தானே இந்திய சர்க்காரிலேகூட இருக்கிறது. 62-ம்
வருஷ பட்ஜட்டிலும் சர்க்காருடைய காரியங்களை ஜனங்கள் பார்க்கப்
போகிறார்கள். ஆனாலும், கஷ்டத்தைப் பற்றி அவர்கள் கவலைப்படுவதாகத்
தெரியவில்லை. இப்பொழுது இந்த டிபார்ட்மெண்டில் அநாவசிய செலவு
கள் அதிகமாக, ஏராளமாக இருக்கிறது. அநேக ஸிலீபிங் ஆபீசுகள்,
உத்தியோகங்கள் இருக்கின்றனவே, அவைகளையெல்லாம் உடனடியாக ஒரு
கமிட்டியாவது போட்டு பரிசீலனை செய்து, அவைகளைக் காலிசெய்தாக
வேண்டும். இந்த டிபார்ட்மெண்டில், சில வெல்பேர் ஒர்க்கர்ஸ், சோஷல்
எஜுகேஷன் ஆர்கனைசர், அதன் பிறகு ஒரு காதி ஆபீசர், ஸ்பின்னிங்
ஆர்கனைசர் என்று ஒருவர், அதன் மேல் மட்டத்திலே, காதி எக்ஸ்டென்ஷன்
ஆபீசர், என்ற பதவி இருக்கிறது. ஸ்பின்னிங் ஆர்கனைசர் வேலையை ப்ளாக்
டெவலப்மெண்ட் ஆபீசரே அவர் டைரியைச் சரிபார்த்து வேண்டியதைச்
செய்து கொள்ளலாம். காதி எக்ஸ்டன்ஷன் ஆபீசர் பதவி எதற்கு என்று
தான் புரியவில்லை. அதைச் செய்யவில்லை. ஏன்? ஜனங்களுடைய வரிப்
பணத்தைச் ஒழுங்காகச் செலவழிப்பதில் சிரத்தை எடுக்கிறதில்லை நம்நாட்டு
சர்க்கார் ஒரு ரிபோர்ட்டில் படித்தேன். 51—52-ல் நம் இந்திய சர்க்காரின்
14, 15 மாநிலங்களையும் கொண்ட யூனியன் சர்க்காரின் நிர்வாகச் செலவு 48
கோடி ரூபாய்; அதுவே இன்றைக்கு 57–58-ல் சுமார் 192 கோடி. இதற்
கெல்லாம் என்ன காரணம் ? எதிர்க் கட்சி மெட்ராஸில் இல்லவே இல்லை
என்று வைத்துக் கொள்ளுவோம். பார்லிமெண்டில் இருக்கிறது. எதிர்க்
கட்சிகளெல்லாம் சேர்ந்து என்ன சொல்லுகின்றன என்றால் சமுதாய நலத்
திட்டம், தேசிய அபிவிருத்தித் திட்டம் இவை சம்மந்தமான டிபார்ட்
மெண்டுகளிலே முக்கியமாகத் தங்களுடைய கட்சிக்காரர்களை, கட்சியைச்
சேர்ந்தவர்களை நியமித்து அவர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்று
இந்த டிபார்ட்மெண்டைப் புதிதாகக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று
100-க்கு 100 அப்படி என்று சொல்வது தப்பு, ஆனால், 50 பர்செண்ட்
சொல்லலாம். பாதியளவுக்கு அப்படித்தான் என்று சொன்னால்
பொருந்தும். உத்தியோகங்கள் தியாகிகளுக்கு, தேசத்திற்கு பாடுபட்டவர்



களுக்குக் கொடுத்து உதவி செய்ய வேண்டுமென்றாலும், டிபார்ட்மெண்ட்
பூராவும் பிரசாரத்திற்காக தன்னுடைய கட்சி ஆள்களை தேசம் பூராவும்
ஏற்படுத்துவது தப்பு. ஆனால் என்ன ஏற்படுகிறது? ஜனங்களுடைய வரிப்
பணம் சம்பளம் கொடுப்பதிலேயே பாதி போய்விடுகிறது. அதைப் பற்றி
62-க்குப் பிறகு யோசிக்கலாம் என்று நினைப்பார்கள் போல் இருக்கிறது.
பரவாயில்லை. பொருளாதார நிலையில் கட்டுப்பாடுகள் எபபடி வைத்துக்
கொள்ளப்போகிறார்கள். முக்கியமாக இந்த மாதிரியான ஊதாரித்தன
மான செலவுகளைக் கட்டுப்படுத்தி வைத்துக் கொள்ளவேண்டும்.

கிராமச் சாலைகள் இந்த 12 வருஷ காலமாக இந்த ராஜ்ய சர்க்காரால்
கவனிக்கப்படவில்லை. 12 வருஷ காலமாக ரோடுகள் மராமத்து செய்ய
இவர்கள் ஜில்லாபோர்டுக்குத் தகுந்த கிராண்டுகள் கொடுக்கவில்லை. புது
ரோடுகளைப் போடுவதற்கு தகுந்த கிராண்டுகள் கொடுக்கவில்லை. அதே
நேரத்தில் இந்த 12 வருஷ காலத்தில், எல்லா ஜில்லாக்களிலும்,
100 பஸ், 100 லாரிகள் ஓடிக்கொண்டிருந்த இடத்தில் இன்றைக்கு
1000 பஸ்கள், 1000 லாரிகள் ஓடுகின்றன. அவ்வளவு வருவாய்
வருகிறது. வருவாயெல்லாம் எங்கே போயிற்று ? அந்தத் தொகையை
யெல்லாம் என்னதான் செய்தார்கள் ?

ஏதோ கொஞ்சம் பணத்தைப் போட்டு மண் ரோட்டைப் போடுவது 12-30
அதுவும், ஒன்றிரண்டு வருஷங்களில் அடியோடு போய்விடும். இப்படியெல் p.m.
லாம் நாம் உண்மையை எடுத்துச் சொல்கிறபோது நிதி மந்திரிக்கு
வேறு கவலை. "என்னடா, இதைக் கொண்டுவந்துவிட்டோமே பணத்திற்கு
எங்கே போவது ? 'புது வரி போடுவதா, என்ன ?" என்று கவலைப்பட்டுக்
கொண்டிருக்கிறார்கள். போட்ட ரோடுகள் எல்லாம் நாசமாகப் போகும்
படி நீங்கள் செய்துவிட்டீர்கள். நாசமாகப் போகும்படி நீங்கள் செய்து
விட்டீர்கள் என்று பாஷை அப்படி வருகிறது. ரோடுகள் மராமத்துக்குப்
பணம் கொடுக்காது, அவை நாசகமாகப் போகும்படி விட்டுவிட்டீர்கள்.
இனியும் பலவற்றைப் சும்மா செய்வதாகச் சொன்னால் பணத்திற்கு எங்கே
போவது ? உங்களுக்கு வேண்டிய ஆட்களாகப் போட்டு கொள்வதற்கென்று
காதி இலாகா, மற்ற இலாகா, எல்லாம் இருக்கிறது. இப்படி இருக்கிற
பணத்தையும் வீணாக விரயமாக்காதீர்கள் என்று சொல்லிக் கொள்கிறேன்
அப்படிச் செய்தால் கிராம ராஜ்யம், மகாத்மாகாந்தி கனவு கண்ட ராம
ராஜயம் என்பதாகச் சொல்வது எல்லாம் வெறும் பேச்சாகிவிடும் என்று
வணக்கத்துடன் சொல்லிக்கொண்டு என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

*SRI P. G. KARUTHIRUMAN : கனம் உதவிசபாநாயகர் அவர்களே
இச்சபைமுன் இருக்கும்படியான இந்த மானியத்தை வரவேற்று சில
வார்த்தைகள் சொல்லலாம் என்று நினைக்கிறேன். எதிர் கட்சியில் இருக்கிற
வர்கள் வீணாக நிர்வாகச் செலவு அதிகமாகச் செய்கிறார்கள், வேண்டிய
வர்களுக்கு உத்தியோகம் கொடுப்பதற்காகவே இவ்விலாகா இருக்கிறது
என்பதாகவெல்லாம் புகார் சொன்னார்கள். குற்றம் சாட்டினார்கள்.

SRI A. GOVINDASAMY : On a point of order, சபைமுன்பு புகார்
சொன்னார்கள் என்பதாகச் சொல்வது பார்லிமெண்டரி முறைக்கு ஒத்தது
தானு ?

DEPUTY SPEAKER : There is nothing wrong in it.

SRI P. G. KARUTHIRUMAN : நூற்றுக்கு நூறு சரியானது
தான். அத்தகைய புகார்களுக்கு, குற்றச்சாட்டுகளுக்கு அர்த்தமே இல்லை.
இஷ்டம்போல வேண்டியவர்களை நியமித்துக்கொள்ள வேண்டும் என்பதற்
காக சமுதாய நலத்திட்டத்தை சர்க்கார் கொண்டுவரவில்லை. ஒவ்வொரு
திட்டத்தையும் போட்டு மூன்றுலட்சம், நான்கு லட்சம் என்று பணம்
ஒதுக்குகின்றபோது திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட பணத்தில் 20% க்குமேல்
நிர்வாகச் செலவு ஆகக்கூடாது என்று வரையறுத்திருக்கிறோம். பாக்கி
யுள்ள 80% தொகையையும் மக்களுக்காகவே செலவிடப்படுகிறது. இதை
சற்றுக்கூட ஆராய்ந்து பார்க்காமல் பாதிக்குமேல் நிர்வாகச்செலவு ஆகிறது,
எழுபது என்பது சதவிகிதம் நிர்வாகச் செலவாகிறது என்றெல்லாம்

குற்றம்சாட்டுவது சரியல்ல. அதையும் தவிர ஆங்காங்கே ஆலோசனைக் குழுக்களை ஏற்படுத்தி அவர்கள் செய்கிற முடிவுகளைத்தான் நிறைவேற்றி வருகிறோம். நமது தேசம் சுதந்திரம் பெற்ற பிறகு நமது நாடு, நமது சமுதாயம் பலவகையிலும் முன்னேற்றம் அடைவதற்கு உண்மையாகத் தரப்பட்ட ஒரு திட்டம் எது என்றால் அது இந்த சமுதாய நலத்திட்டம் தான் என்று சொல்ல வேண்டும். மகாத்மா காந்தி எதற்காகப் பாடுபட்டு சுதந்திரம் வாங்கினாரோ, எந்த மக்களுடைய நன்மைக்குப் பாடுபட்டாரோ அந்த லட்சியம் நிறைவேறுவதற்கு, அந்த அடிப்படைக் கொள்கை நிறைவேறுவதற்கு, காங்கிரஸ் கட்சி செய்திருக்கும்படியான முக்கிய திட்டம் இந்த சமுதாய நலத்திட்டம் ஒன்றுதான் என்று நிச்சயமாகச் சொல்லமுடியும். இதில் சில குறைகள் இருக்கலாம் இருந்தாலும் பட்ஜெட் பொது விவாதத்திலேயே எதிர்கட்சி அங்கத்தினர்கள் எங்கள் பகுதிக்கு சமுதாய நலத்திட்டம் விஸ்தரிக்கப்படவேண்டும் என்று வற்புறுத்தியதிலே இந்த சமுதாய நலத்திட்டத்தினால் மக்களுக்கு அதிக அளவு நன்மை ஏற்படுகிறது என்பதை நிரூபிக்கிறது.

சமுதாய நலத் திட்டம் என்றால் ஏதோ சில கிராமங்களில் பள்ளிகூடம் கட்டுவது என்பது மட்டும் அல்ல. கல்வி வசதி, சுகாதார வசதி, போக்கு வரத்து வசதி என்றால் கிராமங்களில் வாழ்கிற எல்லா மக்களுக்கும், எவ்விதமான வசதிகளையும் செய்து கொடுப்பதற்கு அடிகோலுகிறது. குறிப்பாக இந்தியா தேசம் பூராவிலும் அதிலும் சென்னை ராஜ்யத்திலே இத் திட்டப் பகுதிகளுக்குச் சென்று பார்த்தால் தெரியும். மக்களுடைய வாழ்க்கை வசதிகள் எவ்வளவு சிறப்பாக உயர்ந்திருக்கிறது என்று. கல்வி பெருக வேண்டும், சுகாதார வசதி அதிகரிக்க வேண்டும், போக்குவரத்து பெருக ரோடு வசதிகள் அதிகரிக்க வேண்டும், விவசாய உற்பத்தி பெருகவேண்டும் என்கிற அடிப்படைகளில் எல்லாம் இத்திட்டத்தின் மூலம் பல காரியங்கள் நடைபெறுவதோடுகூட ஒவ்வொருவரும் தங்கள் குடும்பத்தைக் கட்டுப்பாடான முறையில் வைத்துக்கொண்டு எல்லாவிதமான நன்மைகளையும் அநுபவிக்க வேண்டும் என்பதற்காக குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தையும் ஓரளவுக்கு அமுலாக்க வேண்டுமென்பது அடிப்படையான திட்டம். எத்தனை வசதிகள் பெருகினாலும் கூட ஜனப்பெருக்கம் அதிகமாகிக் கொண்டே போனால் அந்த நன்மையை மக்கள் அடைய முடியாது போகும். வாழ்க்கைத்தரம் உயர்வதற்கு குடும்பக்கட்டுப்பாடு அவசியம் என்பதையும் இத்திட்டத்தின் மூலம் கிராமப் பகுதிகளில் எல்லாம் வற்புறுத்தப்படுகிறது. விவசாயப் பெருக்கத்திற்கு நிலம் அதிகமாக வேண்டும் என்பது இல்லை. இருக்கக்கூடிய நிலத்திலேயே உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கு உரம் அதிகமாக வேண்டும். அதுவும் இன்றைய தினம் கிராமங்களிலே வீணாகிக்கொண்டிருக்கிற மலஜலங்களைச் சேகரித்து கம்போஸ்டு உரமாக்கினால் ஆயிரம் பேர்கள் உள்ள கிராமத்தில் தயாரிக்கப்படுகிற உரம் மட்டும் 200 ஏக்கரா நஞ்சைக்குப் பயன்படக்கூடிய இருபதாயிரம் ரூபாய் மதிப்புள்ள உரம் கிடைக்கும். கிராம மக்களும் சுகாதார வசதியுடன் வாழ்வதற்கு வழியேற்படும். இப்படி எல்லாவகையிலும் எல்லா வசதியும் பெருகினால் கம்பன் கண்ட ராமராஜ்யம்.

கல்லாது நிற்பார் பிறர் இன்மையின் கல்விமுற்ற
வல்லாரும் இல்லை, அவை வல்லர் அல்லாரும் இல்லை
எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வம் எய்தலாலே
இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லை மாதோ !

என்னும்படியான சமுதாயத்தை அமைப்பதற்கு வழியேற்படும். அதற்கு அடிப்படையாக இருப்பது இந்தச் சமுதாய நலத் திட்டம் என்பதை வற்புறுத்தி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

SRI M. A. MUTHIAH CHETTIAR : கனம் உதவிசபாநாயகர் அவர்களே, ஒருசில வார்த்தைகள் சொல்லி முடிக்கிறேன். எல்லாவகையிலும் கிராம மக்கள் முன்னேற்றம் அடையவேண்டுமென்ற நோக்கத்தில் இந்தச் சர்க்கார் செய்துவருகிற காரியங்களை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. இதனால் எவ்வித நன்மையும் கிடையாது என்று சிலர் சொன்னார்கள். அப்படிச் சொல்ல முடியாது. இந்த இலாகா செய்துவருகிற பல நல்ல காரியங்களை



நாம் பாராட்டவேண்டியவர்களாக இருக்கிறோம். முதுகுளத்தூர் தாலுகாவைப் பற்றிச் சொல்லியிருக்கிறேன். இதற்காகத் தனிப்பட்ட முறையில் கோடிக்கணக்கான ரூபாய் செலவழிக்கவேண்டும். என்பது என் கருத்து. நான்கு ஐந்து கோடியாவது செலவழிக்க வேண்டும். இந்த சமுதாய நலத் திட்டத்தை ஐந்தாண்டு, பத்தாண்டு அமுல் நடத்துவது என்று இல்லாமல் தொடர்ந்து நடத்துவதற்கு நிதி அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்யவேண்டும். நமது இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு குறிப்பிட்ட தொகையைவிட அதிகமாக டெல்லியில் இருந்து பெற்றதுபோல, இதற்கும் வேண்டிய தொகையைப் பெறுவதற்கு முயற்சி செய்யவேண்டும் என்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

SRI P. S. CHINNADURAI : மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே இந்த மான்யக் கோரிக்கையின்பேரில் இதுவரை நடைபெற்ற விவாதத்தில் எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் பலரும் எடுத்துக்கூறிய கருத்துக்கள், அவற்றில் சில மிகைப்படயிருந்தாலும் மிகைப்பட்டிருப்பதை ஒதுக்கிவிட்டு நியாயமான குறைகள் என்ன இருக்கின்றன என்பதைக் கவனித்து தக்க முறையில் அந்தக் குறைகளைக் கவனித்து அவைகளை நீக்க முன்வரவேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டுகோள். இந்த இலாகாவிற்கு கோரப்பட்டுள்ள மான்யத்தில் மிகவும் கணிசமான ஒரு தொகை இந்த இலாகாவின் நிர்வாகிகளுக்கும், மற்றுமுள்ள அதிகாரிகளுக்கும் சம்பளமாக கொடுக்கப்படுகிறது என்பதை முதலில் கவனிக்க வேண்டும். இவ்வளவு பெரும் தொகையை செலவழிப்பதன்மூலம் சரியான பலன் நமக்கு கிடைக்கிறதா என்று ஆராய்ந்து பார்க்க இந்த சபைக்கு உரிமையுண்டு. மற்ற இலாகாக்கள் பொதுமக்களோடு எந்தளவில் தொடர்பு வைத்துக்கொண்டிருக்கின்றன, இந்த இலாகா எந்தளவு தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிறது என்று எண்ணிப் பார்க்குமிடத்து மற்ற இலாகாக்களை காட்டிலும் இந்த இலாகாவைச் சார்ந்த அதிகாரிகள் ஓரளவு மக்களோடு நெருங்கிப் பழகி வருகிறார்கள். மற்ற அதிகாரிகளிடத்தில் மக்களுக்கு இருக்கிற ஒருவகையான அச்சம் இந்த அதிகாரிகளிடத்தில் மக்களுக்கு ஏற்படுவதில்லை. அதற்குப் பதிலாக ஒருவகையான, இவர்கள் தங்கள் தோழர்கள், தங்கள் ஊழியர்கள் என்ற மனப்பான்மை மக்களுக்கு ஏற்பட்டிருப்பது வாஸ்தவந்தான். ஆயினும் இவ்வளவு பெரியதொரு தொகையை நிர்வாகத்திற்கென்று நாம் செலவிடுவது அவசியமா? அல்லது சிக்கனம் கையாளப்படமுடியுமா என்பதை சர்க்கார் நன்கு கவனித்துப் பார்க்கவேண்டும். சர்தார் வேதரத்தினம் அவர்கள் இதைத்தான் குறிப்பிட்டார்கள். ஒன்று சிக்கனம் கையாளப்பட வேண்டும் அல்லது செலவழிக்கிற பணத்திற்கு ஈடாக சேவையாவது திரட்டப்படவேண்டும். அதில் சர்க்கார் கவனம் செலுத்துவது இன்றியமையாதது என்று நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். கிராமங்களிலுள்ள மக்களுக்கு இடையில் அதிகாரங்கள் கிடைக்காமல் இருந்தபோதிலும் இப்பொழுது புதிய பஞ்சாயத்து சட்டம் மூலம் அவர்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்றும் ஓரளவாவது கிடைத்துள்ள அதிகாரங்களை பயன்படுத்தி அனுபவம் பெறுவதன்மூலம் மேலும் அதிகப்படியான அதிகாரங்களைப்பெற்று, நிர்வகிப்பதற்குரிய எதிர்காலம் கிராம மக்களுக்கு ஏற்படும் என்று அந்தத்துறை அதிகாரிகள் பலரும் அவர்களுக்கு உறுதுணையாக இருக்கவேண்டுமென்றும் இங்கு இரண்டொரு அங்கத்தினர்கள் எடுத்துச் சொன்னார்கள். கிராமங்களிலுள்ள மக்கள் பலரும் கல்லூரிகளுக்குச் சென்று பட்டம் பெறாதவர்களாகயிருக்கலாம். ஆனால் அவர்கள் வாழ்க்கையில் நல்ல அனுபவம உள்ளவர்கள் என்பதில் சந்தேகமில்லை. தங்கள் வாழ்க்கை அனுபவத்தைக் கொண்டு அவர்கள் பல நல்ல காரியங்களை சுமுகமான முறையில் செய்துகொண்டிருக்கிறார்கள் என்று நான் குறிப்பாக சுட்டிக்காட்ட விரும்புகிறேன். படித்தால்தான் அல்லது நல்ல வசதியோடு வாழ்ந்தால்தான் அவர்களிடத்தில் நல்ல நிர்வாகத்திறன் இருக்கும் என்று நாம் நினைப்பது இக்காலத்திற்கு சரியானதல்ல, சொல்லப்போனால் எக்காலத்திற்கும் சரியானதாக யிருந்திருக்க முடியாது. கிராமங்களிலுள்ள மக்கள் ஓட்டளித்துத்தான் இன்று இச்சபை அமைந்திருக்கிறது, அவர்கள் வோட்டு அளித்துத்தான் இந்த நாட்டின் பாராளுமன்றம் அமைந்திருக்கிறது. பல மாநில அரசாங்கங்களும் மத்திய அரசும் கிராம மக்களின்

வோட்டைப் பெற்றுத்தான் அமைந்திருக்கின்றன என்று எண்ணிப் பார்க்கிற அளவில் அவர்கள் நல்ல அனுபவம் உடையவர்களாகத்தான் இருக்கிறார்கள். நல்ல பொது அறிவு உடையவர்களாகத்தான் இருக்கிறார்கள். தங்கள் காரியங்களை சரிவர செய்யக்கூடிய அளவிற்கு, அவர்கள் கருத்து உருவாக்கப்படுகிறது, சிந்தனை ஓட்டமும் இருக்கிறது என்ற முடிவிற்குத்தான் நாம் வரவேண்டியிருக்கிறது. ஆகவே புதிய பஞ்சாயத்து சட்டத்தின்கீழ் நாம் கிராம மக்களுக்கு கொடுத்திருக்கக்கூடிய ஒருசில அதிகாரங்களை இன்னும் விரிவுபடுத்த முடியாதா என்று கவனித்துப் பார்க்கவேண்டும். இப்பொழுது அவர்கள் கையில் விடப்பட்டிருக்கிற தரிசுநிலங்கள் மிகவும் கட்டுப்படுத்தப்பட்டவைதான். சுடுகாடு அல்லது இடுகாடு, ஊர்மந்தை என்றளவில்தான் அவர்கள் கையில் விடப்பட்டிருக்கிறதே தவிர ஊரைச் சேர்ந்த பொதுவான நன்கு பண்படுத்தப்பட்டு வேளாண்மைக்கு பயன்படுத்தக்கூடிய தரிசு நிலங்கள் எதுவும் அவர்கள் கையில் விடப்படவில்லை. சாகுபடிக்கு லாயக்குள்ள தரிசு நிலங்கள் ஏராளம் நம் மாநிலத்தில் இருக்கின்றன. 45 லட்சம் ஏக்கருக்குமேல் இந்த தரிசு நிலங்கள் இருந்தபோதிலும் அந்த தரிசுநிலங்கள் சரிவர பயன்படுத்தப்படாமல் இதுகாறும் தரிசாகவேதான் கிடக்கின்றன. தரிசு நிலங்களை விநியோகம் செய்கிற வேகம் போதாது என்று பலமுறை இந்த சபையில் அங்கத்தினர்கள் பலரும் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இதன் வேகத்தை குறித்து சர்க்கார் திருப்தி அடையமுடியாது. பஞ்சாயத்துகள் பொறுப்பில் அவைகள் ஒப்படைக்கப்படுமானால் தரிசு நிலங்களை விநியோகம் செய்கிற அந்த பொறுப்பை சரிவர கிராமப் பஞ்சாயத்துக்கள் நடத்த முடியும் என்று நினைக்கிறேன். கிராமப் பஞ்சாயத்துக்கள் அல்லது பஞ்சாயத்து யூனியன்கள் அந்த தரிசுநிலங்களை விநியோகம் செய்கிற பொறுப்பை அவற்றின் கையில் விட்டு, விளைச்சலை உண்டுபண்ணுகிற பொறுப்பையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளும்படி ஏற்பாடு செய்வது மிக மிக அவசியம், என்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். அதுமாத்திரமல்ல, பல்வேறு குளம் குட்டைகள் சீர்திருத்தம் செய்யப்படாமல் கிடக்கின்றன. இதுகுறித்து இதற்குமுன் நான பலமுறை இங்கு எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அவைகளை சீர்திருத்தம் செய்வதிலோ அல்லது புதிய குளம் குட்டைகள் நிர்மாணிப்பதிலோ இதற்கென்று இருக்கிற இலாகா காட்டுகிற வேகம் போதுமானதாகயில்லை. அவர்கள் வேண்டுமானால் நிரம்ப படித்தவர்களாகயிருக்கலாம், அல்லது அதிலுள்ள அதிகாரிகள் திறமையைக் குறித்தோ, அவர்கள் விவேகத்தைக் குறித்தோ நான் இங்கு ஒன்றும் குறைவாக எடுத்துச் சொல்ல விரும்பவில்லை, அதற்கு அவசியமும் இல்லை. பஞ்சாயத்து நிர்வாகத்தில் குளங்கள், குட்டைகளை விட்டால், அவைகளை சீர்திருத்தம் செய்வது அல்லது புதிதாக செய்வதிலோ இந்த பொறுபபு பூராவும் அவர்களிடம் ஒப்படைக்கப்படுமானால் உண்மையாகவே அவர்கள் திறமையாக நல்லபடி நாம் எதிர்பார்க்கக் கூடிய வேகத்தைவிட விரைவில் நிறைவேற்றிக் கொடுப்பார்கள் என்று நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். குளம் குட்டைகளை சீர்திருத்தும் பொறுப்புகள் பஞ்சாயத்துகளிடம் விடப்படுகின்றன என்று சொல்லலாம். ஆனால் அவர்களிடம் விடப்படுவது எல்லாம் அதிகாரிகள் நன்கு வடிகட்டிய பிறகு, வேறு இலாகாவினர் நன்கு வடிகட்டிய பிறகு கடைசியில் இந்தக் குளம், குட்டைகள் சீர்திருத்தம் செய்யப்படவேண்டுமென்று அவர்கள் தேர்ந்தெடுத்து விடுகிறார்களே தவிர தேவைப்படும் குளம் குட்டைகளை சீர்திருத்த அவைகள் அவர்களிடம் ஒப்படைக்கப்படவில்லை. ஆகவே இது குறித்து நன்கு ஆராய்ந்து பார்த்து குளம் குட்டைகளை சீர்படுத்துவது, அல்லது புதிதாக நிர்மாணிப்பதானாலும் சரி அவைகளின் பொறுப்பு முழுவதும் பஞ்சாயத்துகளிடம் கொடுக்க வேண்டும்; இதற்கு விசேஷமான நிதிகளையும் பஞ்சாயத்துக்களிடத்தில் ஒப்படைக்கவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு) கிராம குடிதண்ணீர் திட்டத்தையும், கிராமங்களிலுள்ள சாலைகளை புதிதாக அமைக்கிற திட்டத்தை நிர்வகிப்பதற்காக பஞ்சாயத்துகள் கிராமங்களில் நிதி திரட்ட வேண்டுமென்று கோரப்படுகிறது. நிதி திரட்டுவது குறித்து எனது கருத்து எங்கு முடிகிறதோ அங்கு திரட்டலாம். ஆனால் எல்லாரும் நிதி அல்லது நன்கொடை கொடுத்துத் தீரவேண்டும் இல்லாது போனால் அங்கு சாலைகள் கிடையாது, அல்லது குடிதண்ணீர் வசதி கிடையாது என்று சொல்வது சரியாகுமா என்பதை அரசாங்கம் யோசித்துப் பார்க்க வேண்டும். நல்ல





செழிப்போடு விளங்கக்கூடிய கிராமங்கள் இத்தகைய நன்கொடைகள் கொடுக்க முடியும். ஆனால் உதாரணமாக பல்லடம் பகுதி, தாராபுரம் தாலூகாவில் ஒரு சில பகுதிகள், ஈரோடு தாலூகாவில் ஒரு சில பகுதிகள், அல்லது தென்ஆற்காடு ஜில்லா, ராமநாதபுரம் ஜில்லாவில் உள்ள பகுதிகள் இவைகள் நீர்வளமில்லாது இருக்கிற காரணத்தால் நிலவளமில்லாத கிராம மக்கள், தரித்திரத்தில் ஆழ்ந்து கிடக்கிற கிராமங்கள் ஏராளமாக இருக்கின்றன. அங்கு சாலைகள் அவசியத் தேவையாக இருக்கின்றன. அங்கு பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வசதி தேவையாகத்தான் இருக்கிறது. அந்தக் கிராமங்களிலும் சாக்கடைத் திட்டங்களும் தேவையாகத்தான் இருக்கின்றன. அவைகளை நிறைவேற்ற நன்கொடை கொடுததுத்தான் ஆகவேண்டுமென்று கூறுவது சரியாகயிருக்காது என்று தெளிவாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அவர்கள் வேண்டுமானால் வரி போட்டுக் கொள்ளலாம் என்று சொல்லலாம். பிரதேச செஸ், பிரதேச செஸ்-க்கு சர்சார்ஜ் இவைகள் எல்லாம் அவர்களால் போட முடியாமல் இருக்கலாம். இவைகளை போடுவதாக இருந்தால் நல்ல வளமுள்ளவர்கள் கொடுத்துவிடுவார்கள். ஏற்கனவே காய்ந்து கிடக்கின்றவர்கள் இதைக் கொடுக்க முடியாது. அவர்களிடமிருந்து இந்த வரியை பிரிக்கவும் முடியாது. ஆகவே நிலவரியை உயர்த்தினால் அதை மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். வீணாக பஞ்சாயத்துக்கும், பஞ்சாய்த்து யூனியன்களுக்கும் கெட்ட பெயர்தான் ஏற்படும். இப்போது இந்தப் பகுதிகளை எல்லாம் ஏ,பி,ஸி,டி, என்று நான்கு பகுதியாக பிரித்திருக்கிறோம். இது தவிர, ஈ என்று ஒரு பகுதியை பிரித்து இதன்கீழ் வருகின்ற இடத்தில் 20 சத விகிதம், 30 சத விகிதம் ஒன்றும் கொடுக்க முடியாது. ஆகவே இந்த இடங்களிலிருந்து ஒன்றும் கொடுக்கவேண்டாம் என்றும், அதன் மூலமாக கிடைக்கவேண்டிய தண்ணீர் வசதி, சாலை வசதி இவைகளை எல்லாம் செய்து கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இது மிகவும் அவசியமானது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, பஞ்சாயத்துகளில் வேலை செய்யும் ஊழியர்களுக்கு சம்பள கமிஷன் சிபாரிசுகளின்படி சம்பளம் கொடுக்கப்படவில்லை, அந்த சிபாரிசுகள் ஒன்றும் அமலாக்கப்படவில்லை என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். இதில் அரசாங்கம் பாரபட்சம் காட்டுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன். இதில் பாரபட்சம் காட்டுவார்கள் என்று நான் கருதவில்லை. ஏதோ கவனக் குறைவால் விட்டிருப்பார்கள் என்று தான் நினைக்கிறேன். ஆகவே பஞ்சாயத்தில் வேலை செய்யும் ஊழியர்களுக்கு சம்பள கமிஷன் சிபாரிசுபடி பின் தேதியிட்டு சம்பள பாக்கியை எல்லாம் சேர்த்துக்கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தோட்டி தொழிலாளர்களைப்பற்றி குறிப்பிட விரும்புகிறேன். அவர்கள் என்ன பாவம் செய்தார்களோ தெரியவில்லை, அவர்கள் சமூகத்தில் இந்த வேலையை செய்துகொண்டிருக்கிறார்கள். மனித குலமே வெறுக்கக்கூடிய ஒரு தொழிலை அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். எல்லோருக்கும் கொடுக்கப்படுகின்ற ஊதியங்களை எல்லாம் தீர்மானித்துவிட்டு இவர்களுக்குமட்டும் சம்பள கமிஷனின் சிபாரிசை அமல் நடத்தாமல் இருப்பது மிகவும் பாவகரமானது என்பதை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே அவர்களுக்கும் சம்பள கமிஷனின் சிபாரிசை அமலுக்கு கொண்டுவரவேண்டியது அவசியம், அதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக. ரசாயன உர விநியோகம் சம்பந்தமாக, ஒவ்வொரு பஞ்சாயத்து மூலமாக இந்த விநியோகம் நடைபெற வேண்டும் என்று சொல்லியிருப்பது அவசியம் என்று கருதுகிறேன். இந்தத் திட்டத்தின் மூலம் ஓரளவுக்கு பரவலாக உரங்களை விநியோகம் செய்ய முடியும் என்றிருந்தாலும், ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும், வேளாண்மைத் திட்டத்தை வரையறுத்து அதை நிறைவேற்றுவதற்கு எவ்வளவு வேண்

டும் என்பதை பிரித்து அதை கிராம வாரியாக பஞ்சாயத்துத் தலைவரிடம் ஒப்படைக்கவேண்டும் என்ற ஆலோசனையை தெரிவித்துக்கொள்கிறேன். அந்த எண்ணம் அரசாங்கத்திற்கு ஏற்கனவே உண்டு என்று எண்ணுகிறேன். அவ்விதமிருக்குமாயின் இதை விரைவிலேயே அமலாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, இன்னொரு விஷயத்தை குறிப்பிட விரும்புகிறேன். வட்டார வளர்ச்சி அதிகாரிகளாக இருக்கின்றவர்கள், கிராம சேவக்-களாக இருக்கின்றவர்கள், இது போன்ற மற்ற அதிகாரிகள் இவர்கள் எல்லாம் நல்ல முறையில் வேலை செய்கின்றார்களா என்பதை நன்றாக கண்காணிக்க வேண்டும். வட்டார வளர்ச்சி அதிகாரியாக இருந்தபோதிலும் சரி, கிராம சேவக்-களாக இருந்தாலும் சரி அவர்களுக்கு என்று நிர்ணயிக்கப்பட்ட இடத்தில் அவரவர்கள் இருக்கிறார்களா என்பதை கண்காணிக்க வேண்டும். கிராம சேவக்-கள் கிராமங்களில் வாழவேண்டும் என்று சொல்லப்பட்டிருந்தும் இவர்கள் வேறு பகுதிகளில்தான் இருப்பதை நாம் பார்க்கிறோம். அதேபோன்று வட்டார வளர்ச்சி அதிகாரிகள் கிராமங்களில் சென்று முகாம் போட வேண்டும் என்ற திட்டத்தை கையாளுவதாக தெரியவில்லை. வட்டார வளர்ச்சித் திட்ட காரியாலயத்திற்குள் ஒரு நாள் திடீரென்று புகுந்துவிட்டால் எல்லா அதிகாரிகளையும் ஒரே இடத்தில் பார்க்க முடிகிறது. இந்த நிலைமை மாறவேண்டும். கால்நடை அதிகாரியைப் பார்க்க ஒருவர் பகல் பத்து மணிக்குப் போனால், அவர்கள் காரியாலயத்தில் இருக்கக் கூடாது, வேலை செய்யக்கூடிய இடத்தில்தான் பார்க்க முடியும் என்ற நிலைமை இருக்கவேண்டும். அதே போன்று விவசாய விஸ்தரிப்பு அதிகாரியை எடுத்துக்கொண்டால், வேலை நேரங்களில் வேலை செய்யக்கூடிய கிராமங்களில் போய்தான் பார்க்கமுடியும் என்ற நிலைமை இருக்க வேண்டும். அவரவர்கள் வேலை செய்யக் கூடிய இடங்களில் போய் அவர்கள் வேலை செய்யவும் இந்த இடத்திலேயே அவர்கள் இருக்கவும் முயலுவார்களேயானால் செலவழிக்கின்ற பணம் இதில் நல்ல பலன் உள்ளதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடைசியாக, நான் கூறவிரும்புவது குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைப் பற்றி. இதைப்பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகள் கூறவிரும்புகிறேன். இப்போதுள்ள நிலைமையில் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் அமல் நடத்தப்பட வேண்டுமா என்பதை நாம் ஆலோசனை செய்யவேண்டும். புதிய ஜனத் தொகை கணக்கு எடுத்த பிறகு இது தேவையா என்பதைப் பற்றி முடிவு செய்யவேண்டும். மேற்கு வங்காளத்தில் 10 ஆண்டுகளில் 30, 31 சதவிகிதம் தான் ஜனத்தொகை அதிகரித்திருக்கிறது. அந்த அளவில் பார்க்கிறபொழுது மற்ற மாகாணங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, ஜனத்தொகை கணக்கு குறைவான எண்ணிக்கையைத்தான் காட்டுகிறது. அதுமட்டுமல்ல, ஆண்களுக்குத் தகுந்த பெண்கள் இல்லை என்பதையும் நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இந்த நிலைமையில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை அமல் நடத்த வேண்டுமா என்பதைப் பற்றி அரசாங்கம் நன்கு பரிசீலனை செய்யவேண்டும். இல்லையென்றால் இது சமூகத்தில் ஒரு பெரிய பிரச்னையாக வந்துவிடும். நான் இதை வேடிக்கையாகவோ விளையாட்டுக்காகவோ சொல்வதாக யாரும் நினைக்கக்கூடாது. குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தை கிராமங்களில் கட்டாயமாக கொண்டு வருவதற்கு கலெக்டர் தூண்டுகோலாக இருப்பார்கள் என்று இந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. வட்டார வளர்ச்சி பகுதிகளில் 250 பேர்கள் நிரந்தரமாக மலடாக்கப்படுவார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கான தூண்டுதல் செய்யப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது சரியானது தானா என்பதைப் பற்றி நாம் ஆலோசிக்கவேண்டும். பொதுவாக வெளியில் என்னுடைய தொகுதியைப் பொறுத்தளவில் எனக்கு நன்றாகத் தெரியும். பொதுப்படையாக பார்க்குமிடத்து அங்குள்ள மக்கள் இந்தக் கட்டாயத் திட்டத்தை அவ்வளவாக மனதோடு வரவேற்கவில்லை. (கனம் ஸ்ரீ சி. சுப்பிரமணியம்: இதில் நிர்ப்பந்தம் எதுவும் கிடையாது.) நிர்ப்பந்தம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். அப்படியானால் இதில் ஏன் இவ்வாறு குறிப்பிடவேண்டும். இதைப்





பார்த்தால் கலெக்டர் அவர்கள் இதை நிர்பந்தப்படுத்துவார்கள் என்றுதான் தெரிகிறது. இதன் மூலம் நிர்ப்பந்தம் ஏற்படும் என்றுதான் தோன்றுகிறது. இதில் தூண்டுதல் என்று சொன்னால் எந்தவிதமான தூண்டுதல் என்று தெரியவில்லை. ஆகவே இதற்கான செலவு செய்கின்ற பணம் வீண் என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. இதன்மூலம் பலவிதமான சமுதாய பிரச்னைகள் எழும் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக இந்த இலாகா முதலமைச்சர் அவர்களிடத்தில் இருப்பது நல்லதல்ல. இதனால் வீணாக கெட்ட பெயர் தான் ஏற்படும். இதன் காரணமாக நம்முடைய ராஜ்யத்தைப் பொறுத்தவரையில் கெட்ட பெயர் ஏற்படுவதற்கு வழி ஏற்படக்கூடும். அது மட்டும் அல்ல, பலரும் பலவிதமாக இதைப் பற்றி பேசுவதையும் நாம் பார்க்கிறோம். அதையெல்லாம் நன்கு யோசிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக சமுதாய நலத் திட்டம் நல்ல நோக்கங்களைக்கொண்டுதான் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்த நோக்கங்கள் எல்லாம் நல்ல முறையில் நடந்தேறுவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**The Hon. Sri C. SUBRAMANIAM:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இங்கு இரண்டு மான்யங்கள் இன்றைக்கு எடுத்துகொள்ளப்பட்டு விவாதத்திற்கு வந்திருக்கிறது. ஒன்று 26-வது—கம்யூனிட்டி டெவலப்மெண்ட். இன்னொன்று 34-வது—நானாவகைகள். இந்த நானாவகை மான்யத்தைப் பொறுத்த வரையிலும் யாருக்கும் அதில் கருத்து வேறுபாடு இல்லை என்று அறிந்து நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். அதிலே வெட்டுப்பிரேரணைகூட கிடையாது—சம்பிரதாயத்திற்காகிலும். அதிலே இருக்கக்கூடியது இரண்டு ஐடெம்கள். ஒன்று மோட்டார் வெகிக்கிள்ஸ் ஆக்ட் பிரகாரம் முனிஸிபாலிட்டிகளுக்கும் கார்ப்பொரேஷனுக்கும் நஷ்ட ஈடு கொடுப்பது. இரண்டாவது எண்டெர்டெயின்மெண்ட் டாக்ஸை அவர்களுக்குப் பிரித்துக்கொடுப்பது. இரண்டிலும் இந்தச் சபை ஏகோபித்து அந்தக் கொள்கையை ஏற்றுக் கொண்டதற்கு அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், இது வரையில் மோட்டார் வெகிக்கிள்ஸ் டாக்ஸிலே கொடுக்கும் நஷ்ட ஈடு போதாது என்று சொன்னவர்கள் கூட, இது சரிதான் என்று எந்த விதமான வெட்டுப் பிரேரணை இல்லாமல், ஏன், எந்தவிதமான பேச்சுமே இல்லாமல் இருந்ததற்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மாதிரி ஏகோபித்த அபிப்பிராயமாக ஒரு சில விஷயங்களிலாவது இருக்கிறது என்பதைக் காட்டுகிறது என்று நன்றியுடன் சொல்லிக்கொள்ளுகிறேன்.

அதற்கு அடுத்தது கம்யூனிட்டி டெவலப்மெண்ட் பற்றி வந்திருக்கக் கூடிய மான்யம். அதிலே 642 லட்சம் ரூபாய் இன்றைக்கு ஒதுக்கவேண்டும் என்று நாம் கேட்டிருக்கிறோம். அதிலே முக்கியமாக பல அங்கத்தினர்கள் நிர்வாகத்திற்காக அதிகம் செலவாகி விடுகிறது, அதுவும் மொத்தத்தில் பாதிக்கு மேல் போகிறது என்று வலியுறுத்திச் சொன்னார்கள். அவர்கள் கணக்குப் போட்டுச் சொன்னார்களோ என்னவோ தெரியாது. நான் கணக்குப் போட்டுப் பார்த்தேன். அப்படி கணக்குப் போட்டுப் பார்த்ததில் டெக்னிக்கல் ஸ்டாஃப் உட்பட சம்பளமாகக் கொடுப்பது 23 சதம் தான் வருகிறது. இது தவறு என்று வேறு யாராவது கணக்குப் போட்டுச் சொன்னால் நான் ஒத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். அதிகாரிகளும் கணக்குப் போட்டதில் அந்த அளவுதான் வந்தது. ஏதோ மேலோடியாகப் பார்த்துக்கொண்டு, எல்லாம் நிர்வாகத்திற்கு—சம்பளத்திற்கு—போகிறது என்று நாம் குறை கூறுவது, இதைப் போலவே தான் மற்ற விஷயங்களில் இருந்தாலும், எல்லாம் இப்படித்தான் போலிருக்கிறது என்று அதிகாரிகள் நினைத்துக் கொள்வார்கள்—மக்களும் நினைத்துக் கொள்வார்கள். கனம் அங்கத்தினர் கோவிந்தசாமி அவர்கள் சொன்னார்கள் சேர்மனுக்கு மட்டும் முதலில் 4 ரூபாய் என்று போட்டுவிட்டு ஸ்டாண்டிங் கமிட்டிக்கும் போன பிறகு 2 ரூபாய் போட்டிருக்கிறீர்களே என்று

சொன்னார்கள். ஒரு பஞ்சாயத்தின் தலைவர் இறந்து விட்டால் அவருக்கு பதில் பஞ்சாயத்து யூனியன் கவுன்ஸிலுக்கு வேறு ஒருவரை அனுப்ப இந்த சட்டத்தில் இடம் இல்லை. சில தவறுகள் இல்லையென்று சொல்லவில்லை; அவைகளைத் திருத்த வேண்டும். இருக்கக்கூடிய தவறுகளை எடுத்துச் சொல்லும்போது. அது சரியாக இருந்தால் அதை ஒப்புக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறேன். அப்படியில்லாமல் மேலெழுந்தவாரியாக சில கஷ்டங்கள் இருக்கின்றன என்று சொல்லக்கூடாது.

இன்றைக்கு இருக்கக்கூடிய பிரச்னை, பஞ்சாயத்துக்கு அதிகாரம் இருக்க வேண்டுமா, பஞ்சாயத்து யூனியனுக்கு இந்த அதிகாரம் இருக்க வேண்டுமா, என்பது. இந்த இரண்டுக்கும் இந்த அதிகாரம் மாற்றப் படும் என்பதையெல்லாம் ஏதோ திடீரென்று உடனடியாக மேலெழுந்தவாரி யாக தீர்மானம் செய்ததில்லை. இதைப் பற்றியெல்லாம் விவாதித்து, இன்றைக்கு இருக்கக்கூடிய அளவிலே என்னென்ன செய்ய வேண்டுமோ, அந்த அளவிலேதான் மாற்றங்களை செய்வதற்காக இந்தத் திட்டத்தை கொண்டு வந்திருக்கிறோம். அதோடு நின்று விடாமல், அதற்குமேலும் அனுபவத்தைப் பார்த்து ஆவன செய்யப்போகிறோம். பஞ்சாயத்து யூனியன் நல்ல முறையிலே இயங்கி, இதிலே அவர்கள் எடுத்துக்கொள்ளக்கூடிய முயற்சியின் காரணமாக நல்லதொரு பலன் ஏற்படுமானால், அப்போது இந்த சபையிலே இருக்கக்கூடியவர்கள் யாராக இருந்தாலும், "நாங்கள் இத் திட்டத்தின் மூலமாக கிராம மக்களுக்கு நல்லதொரு பலன் ஏற்படும்படி செய்தோம்" என்று அவர்கள் சொல்லும்போது, இதைவிட மேலும் அதிகாரப் பொறுப்பை கொடுப்பதற்கு இந்தச் சட்டசபையிலுள்ளவர்கள் என்றைக்கும் தயங்கக் கூடாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எதையுமே இந்தத் திட்டத்தை அமுல் நடத்துவதிலே ஏற்படுகின்ற அனுபவத்தை வைத்துத்தான் செய்ய முடியும். இதற்கும் மேலாக, இதிலே ஏற்படுகின்ற அனுபவத்தால், இதன் மூலமாக பல தீமைகள், தீய பலன்கள் ஏற்படுமானால் இந்த சட்டசபை அதைப் பரிசீலனை செய்வதற்கும் தயாராக இருக்கும். அப்போது இந்த திட்டத்தை இந்த சட்டசபை பரிசீலனை செய்து பார்த்து, அதற்கு ஏற்ற முறையிலே மாற்றியமைப்பதற்கும் தயங்காது. ஆகவே இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையை வைத்துக்கொண்டு, உடனடியாக இந்த அடிப்படையான மாறுதல்களைச் செய்ய வேண்டுமென்று வலியுறுத்திக்கொண்டிருந்தால், அது ஒரு அஸ்திவாரமற்ற, உறுதியற்ற, குழப்பமான நிலையைத்தான் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் என்பதை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அதே மாதிரி அதிகாரிகளுக்கும், பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுக்கும் இருக்கக் கூடிய தொடர்பைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இது எப்படி இருக்கவேண்டுமென்பதைப் பற்றி நாம் எல்லோரும் ஆலோசனை செய்து ஒரு முடிவுக்கு வந்திருக்கிறோம். ஆனால் இதைப் பற்றியும் இரண்டுவித கருத்துக்கள் சொல்லப்பட்டன. இரு கருத்துக்களையும் ஒப்புக்கொள் கிறேன். எல்லா இடங்களிலும் பஞ்சாயத்து யூனியன் தலைவருக்கு அதிகாரம் கொடுக்கவேண்டுமென்பது ஒரு கருத்து. இன்னொரு கருத்து, திராவிட முன்னேற்றக் கழகத்திலுள்ள ஒரு அங்கத்தினரே பட்ஜெட் விவாதத்தின் போது பேசியது. இந்த பஞ்சாயத்துத் தலைவர்கள் எல்லாம் பணத்தைக் கையாடல் செய்கிறார்கள் என்று கூறினார். ஏதோ ஒன்றிரண்டு இடங்களில் இப்படி இருந்திருக்கலாம். ஆனால் பொதுவாகக் கையாடல் செய்கிறார்கள் என்று குற்றம் சாட்டிப் பேசுவது முறையாக பேச வேண்டிய நிலையில் இல்லை.

இதைத் தவிர, திட்டத்தை நிறைவேற்றுவதற்கு பணம் செலவழிக்கப் படுகிறது. இதையெல்லாம் பஞ்சாயத்து யூனியன் தலைவர் செலவழித்தால் தான், கிராமத்திற்கு வேண்டிய எல்லாக் காரியங்களையும் செய்ய முடியு மென்று ஒரு சிலர் நினைக்கலாம். இதை அதிகாரிகள் இல்லாமலேயே செய்ய முடியுமென்று அவர்கள் நினைக்கலாம். ஆனால் ஒரு சிலர் அம்மாதிரி கூடாது என்றும் கருதுகிறார்கள். கிராமத்திலே இத்தனை கட்சிகள் இருக்கும்போது, இத்தனை படிக்காதவர்கள் இருக்கும்போது, அங்கு முழு



நிர்வாகப் பொறுப்பையும் ஒரு குறிப்பிட்ட பஞ்சாயத்து யூனியன் தலைவருக்கு மட்டும் அளிப்பதால், அது சங்கடமான நிலைமைக்கு கொண்டு போய்விடும். அதனால் நெருக்கடிகள்தான் உண்டாகும் என்று இன்றைக்கு இந்த சபையிலும், முன்னாலே மேல் சபையிலும் விவாதிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் இதைப் பற்றி எவ்வளவோ வெளியிலே பேசப்பட்டும் இருக்கிறது; எழுதப்பட்டும் இருக்கிறது. இன்றைக்கு அனுபவ ரீதியாக எந்த அள விற்கு போகலாம். எந்த அளவில் போனால் காரியம் நல்ல முறையில் நடக்கும், அதனால் நமக்கு நல்ல பலன் கிடைக்கும், அதற்கு எந்த மாதிரியான முறையிலே திறமையான நிர்வாக இயந்திரத்தை அமைப்பது என்ற அடிப்படைகளையெல்லாம் யோசித்து தீர்மானித்துதான், இந்த பஞ்சாயத்து யூனியன் சட்டம் இன்றைக்கு உருவாக்கப்பட்டிருக்கிறது.

இதை விட்டுவிட்டு, திட்ட அதிகாரிகளுக்கு அதாவது பி. டி. ஓ. க்களுக்கு ஜீப் ஏன் இருக்க வேண்டும்? ஏன் பஞ்சாயத்துத் தலைவர்களிடம் ஜீப் இருக்கக்கூடாது என்று சொல்லுகிற நிலைமையைப் பார்க்கும்போது, இன்றைக்கு எந்த முறையிலே நிர்வாகம் நடக்க வேண்டியிருக்கிறது என்பதைத்தான் யோசிக்க வேண்டியிருக்கிறது. அந்த ஜீப் அங்கிருக்கக் கூடிய யூனியன் தலைவர்களுக்காகவோ, அல்லது திட்ட அதிகாரி களுக்காகவோ அமைக்கப்படவில்லை. நிர்வாகம் நல்ல முறை யிலே நடப்பதற்காக ஜீப் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அந்த நிர்வாகத்தை நடத்துகின்ற திட்ட அதிகாரி, எக்ஸ்டென்ஷன் ஆபீசர், மற்றும் இதர டெக்னிகல் ஆபீசர்கள் பல இடங்களுக்குச் சென்று வேலை களைத் துரிதமாகத செய்வதற்காகத்தான் இந்த ஜீப் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அதேபோல் பஞ்சாயத்துக்களாக இருந்தாலும் சரி, பஞ்சாயத்து யூனியனாக இருந்தாலும் சரி இதிலே கட்சி பேதங்களைக் கொண்டுவராமல் ஒற்றுமையாக இருந்து, இதிலே நன்மை ஏறபடுவதற்கான ஒரு சூழ்நிலையை இந்த பஞ்சாயத்து யூனியன் ராஜ்யம் தரும்படி ஏற்பாடு செய்ய வேண்டும். அதே சமயத்திலே பஞ்சாயத்து யூனியன் தலைவராக வருகிறவர்கள், பொறுப் புள்ள நிலைமையிலே எல்லா விஷயங்களையும் ஆராய்ந்து, பஞ்சாயத்து யூனியனை நல்ல முறையில் எடுத்து திறமையாக நடத்தவேண்டும் என்ற எண்ணத்தோடு செயலாற்றுவார்களானால், பல நல்ல காரியங்களை அவர் களால் சாதித்துக் கொள்ளமுடியும். அதிகாரிகளும் அதே மாதிரிதான். அதிகாரிகள் நல்ல மனப்பான்மை உள்ளவர்களாக, மக்களிடத்திலே அனுதாபம் உள்ளவராக இருப்பாரேயானால், அந்த அளவிற்குத் திறமை யான முறையிலே காரியங்களைச் செய்யமுடியும். இரண்டும் ஒன்றாக அமைந்தால், அதாவது பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் நிர்வாகப் பொறுப்பிலே அக்கறையுள்ள பஞ்சாயத்து யூனியன் தலைவரும், அதே போல் நல்ல, பொறுப்புள்ள, திறமையுள்ள அதிகாரி ஒருவர் அவருடன் சேர்ந்து இணைந்து வேலை செய்வதால் அங்கு கட்டாயம் நல்ல வேலைகள் நடைபெறும்.

நல்ல அதிகாரிகள் என்று நாம் சொல்லும்போது, அவர்கள் மட்டும் எங்கேயிருந்து வருகிறார்கள்? நம்முடைய சமுதாயத்திலே இருந்துதான். திறமையில்லாத, ஒழுக்கமில்லாத அதிகாரிகள் இருக்க வேண்டும், வர வேண்டுமென்று நாம் எதிர்பார்ப்பதுகூட கிடையாது. எதிர்பாராத கஷ்டங்கள் வந்தாலும் கூட அதையெல்லாம் பொருட்படுத்தாமல் நல்ல முயற்சியுடன் வேலை செய்யக்கூடிய அதிகாரிகள்தான் இருக்க வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். அப்படியிருந்தும், நாம் அதிகாரி கள் மேல் குற்றங்கள் சொல்லும்போது, அந்த அதிகாரி இன்றைக்கு சமுதாயத்திலே உள்ள குறைகளைத்தான் அநேகமாகச் செய்பவராக இருப்பார். ஒன்றிரண்டு பேர் கொஞ்சம் இதைவிட அதிகமாகப் போகலாம். இந்தக் காட்சியைத்தான் நாம் இன்றைக்குப் பார்க்கிறோம். அதிகாரிகள் என்றால், அவர்கள் மட்டும் எங்கிருந்து வந்தவர்கள்? நம்முடைய குடும்பத்திலிருந்து, நம்முடைய கிராமத்திலிருந்து, நம்முடைய சமுதாயத் திலே இருந்துதான் அவர்களும் வருகின்றனர். ஆகவே இன்றைக்கு அதிகாரிகளை ஏதோ புறம்பாக ஒதுக்கி வைத்துப் பேசுவது தவறு. நிர்வாக

இயந்திரத்திலே நல்லெண்ணமும், நம்பிக்கையும் இருந்து, அதிலே நிரந்தரமான ஒரு பற்றிருந்து பணியாற்றக்கூடிய ஊக்கம் இருந்தால்தான் எந்த திட்டமும் வெற்றியுடன் நடக்கமுடியும். ஆகவேதான் இப்போது இந்த முறையிலே தேர்ந்தெடுப்பதற்கு பல ஏற்பாடுகள் செய்யப்படுகிறது. ஆகவே இன்றைக்கு எந்தக் காரியங்களும் ஜனநாயக அடிப்படையிலே தான் நடக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஜனநாயக அடிப்படையிலே அதிகார வர்க்கமே இருந்து நிர்வாகத்தை நடத்தக்கூடியதை இன்றைக்குப் பார்க்கிறோம். ஆனால் அதிகார வர்க்கமில்லாமல், நிர்வாகம் ஏற்பட்டு இருக்கிறதா என்று பார்த்தால் நாம் பார்க்க முடியாத ஒரு காட்சியாகத் தான் அது இருக்கிறது. அதிகாரிகள் மீது நம்பிக்கை இல்லாத முறையிலோ, அதிகாரிகளைப் புறக்கணிக்கின்ற முறையிலோ, அல்லது வேறு எந்த முறையிலோ நாம் நிர்வாகத்தை நல்ல முறையிலே நடத்த முடியுமென்று சொல்ல முடியாது; பார்த்திருக்கவும் முடியாது. ஆகவேதான் இன்றைக்கு நல்ல நிர்வாக அதிகாரிகளைத் தேர்ந்தெடுக்க முயிற்சிகள் செய்கிறோம். அவர்கள் நல்ல முறையிலே, பல தேவைகளும் அமைந்திருக்கக்கூடிய முறையிலே, திறமையுள்ளவர்களாகவும் அதே சமயத்தில் பண்புள்ளவர்களாகவும் இருக்கிறார்களா என்று பார்த்துத்தான் தேர்ந்தெடுக்கிறோம். அவர்கள் திறமையாக இருக்கிறார்கள் என்றால், அது சமுதாயத்திலே இருக்கக்கூடிய சூழ்நிலையையும், வளர்ச்சியையும்தான் எடுத்துக் காட்டுகிறது. அப்படிப்பட்ட ஒரு நல்ல அதிகாரி இருந்தாலும், அவரும், பொதுமக்களும் ஆகிய இரண்டு பேரும், ஒருவரிடையே ஒருவர் போட்டா போட்டி நிலைமையை ஏற்படுத்திக் கொள்ளாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம், இரண்டு பேரும் ஒற்றுமையாக இருக்கக் கூடிய இயந்திரம்தான் சிறந்ததாக நடக்க முடியும் இல்லாவிட்டால் நடக்க முடியாது. உதாரணம் சொல்ல வேண்டுமானால், நிர்வாகத்திலே இருக்கக் கூடிய அதிகாரி ஒரு கார் ஓட்டக்கூடியவர்போல, இந்த இடத்திற்கு கார் போக வேண்டுமென்று அவர் ஓட்டிக்கொண்டு சென்றார். ஆனால் காரிலே பின்னால் உட்கார்ந்துக்கொண்டு போகிறவர், 'அப்படித் திருப்பாதே, இப்படித் திருப்பு, இப்படித் திருப்பாதே, அப்படித் திருப்பு' என்று சொன்னால் அவரால் சரியாக காரை ஓட்ட முடியாது. அப்படி காரை ஓட்டிக்கொண்டு போகும்போது, ஏதாவது பழுதடைந்தால், அதை உட்கார்ந்துகொண்டிருப்பவர்கள் பார்க்க வேண்டும். டிரைவர்தான் பார்க்க வேண்டுமென்று சொல்வது முடியாத காரியம். அதுபோலத்தான் இந்த திசையிலே செல்ல வேண்டும், இந்த மார்க்கத்திலே செல்வது நல்லது என்பதையெல்லாம் இந்த இடத்திலே நிர்ணயம் செய்யக்கூடியவர்கள் பொதுமக்கள். பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டதை நிறைவேற்றுவதற்குத் தான் அவர்களுக்குப் பயிற்சியும் கொடுக்கப்படுகிறது. அந்தக் காரியங்களை பூர்த்தி செய்வதற்குத்தான் அதிகாரிகள் இருக்கிறார்கள், இருக்க முடியும் என்பதை நான் மறுபடியும் வலியுறுத்திச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

நல்லதொரு நிர்வாக இயந்திரத்தை அப்படிப்பட்ட நிர்வாக அதிகாரிகளால்தான் நல்ல முறையிலே நடத்திக் கொண்டு போக முடியும். அதை விட்டு விட்டு, நாங்கள் போய் நல்ல முறையிலே நிர்வாகத்தை ஓட்டுகிறோம் என்று உட்கார்ந்து கொண்டுவிட்டால், அதன் அமைப்பே வேறு விதமாகத் தான் இருக்கும். நாம் எந்த இடத்திலே உட்கார வேண்டுமோ அந்த இடத்தில் உட்கார்ந்து கொள்ளவேண்டும். அப்படிப்பட்ட இடத்தில் உட்கார்ந்து கொண்டு, நல்ல முறையிலே ஓட்டப்படுகிறதா, ஏதாவது தவறுகள் ஏற்படுகிறதா, அப்படித் தவறுகள் நேர்ந்தால் அதை நல்ல முறையிலே எடுத்து விளக்கி தவறுகள் நடக்காதபடி பார்த்துக்கொள்ளுவதுதான் நம்முடைய கடமை, பொறுப்பாகும் என்பதை வற்புறுத்திச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஆகவேதான் இன்றைக்கு இதைப் பரவலாக ஒவ்வொரு கிராமங்களிலும் இந்தப் பணிகளை நடத்துகிறோம். அப்படிச் செய்யும்போது ஆங்காங்குள்ள பொதுமக்கள் இதைத் திறமையாக ஏற்று நடத்துவதற்கு எந்த விதமாகச் செய்யவேண்டும், என்னென்ன உதவிகள் செய்ய வேண்டும் என்பதை





யெல்லாம் வைத்துக் கொண்டு செய்யக்கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துவதன் மூலம்தான், நாம் இந்தத் திட்டம் வெற்றி பெறுவதற்கு உதவி செய்ய முடியுமே தவிர, நாம் நினைக்கிறபடி மாற்றிவிட முடியாது. அப்படி அதை மாற்றிவிட நினைக்கும் போது அதிகாரம் இந்தக் கையிலே இருக்க வேண்டுமா, அந்தக் கையிலே இருக்க வேண்டுமா என்று பார்க்கும்போது எந்தத் திட்டத்தையும், நாம் நல்ல முறையிலே நிறைவேற்ற முடியாது. அதேபோன்று எந்தக் காலத்திலும் எல்லோரும் ஒப்புக்கொள்ளும்படி ஒரு காரியத்தைச் செய்துவிட முடியாது. அது மட்டுமல்ல. எப்படிப்பட்டவர்கள் செய்தாலும், இதிலே குற்றம், அதிலே குற்றம், இதை இப்படி அமைக்க வேண்டும், அதை அப்படி அமைக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டு தான் இருப்பார்கள். ஆகவேதான் அனுபவத்தை வைத்துக் கொண்டு, செல்லச் செல்ல பல நல்ல காரியங்களை நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்ய முடியுமென்பதை வலியுறுத்திச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, முக்கியமாக வலியுறுத்தப்பட்டது ரோடுகளைப்பற்றி; ரோடுகளை பஞ்சாயத்துகளிடமும், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களிடமும் ஒப்படைத்தோமானால், அவர்களுக்கு போதிய நிதி வசதி இல்லாத காரணத்தினால், அந்த ரோடுகள் பாழ்பட்டுவிடும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. அதைச் சர்க்கார் உணராமல் இல்லை. பேரவையின் மீது வைக்கப்பட்டிருக்கிற அறிக்கையில் அது பற்றி விரிவாக கூறப்பட்டிருக்கிறது. அதை எப்படிச் சாதிப்பது என்பதுதான் இன்றைக்கு இருக்கக்கூடிய பிரசினை. எல்லா ரோடுகளையும் சர்க்காரே எடுத்து பராமரிக்கவேண்டும் என்றால், அதற்கு ரூ. 2, 3 கோடி அதிகமாக செலவழிக்க வேண்டும். அம்மாதிரி ரோடுகள் போடுவதற்கென்று அதிகமாக ரூ. 2, 3 கோடி ஒதுக்கிவிடலாமா? கல்வி மான்யத்தில் பேசும்பொழுது அதற்கு ரூ. 21 கோடி செலவழிக்கிறோம் என்று எல்லோரும் பெருமையாக பேசிக் கொண்டோம். அதைக் குறைத்து அதிலிருந்து ரூ. 2, 3 கோடி எடுத்துக் கொள்ளலாமா? அதேமாதிரி சுகாதார மான்யத்தில் பேசும்பொழுது அதற்கு மான்யம் குறைவு என்று கூறப்பட்டது. அதிலிருந்து ஒரு கோடி ரூபாய் 'கட்' செய்து எடுத்துவிடலாமா? இப்படி எதிலே கைவைத்து இந்தப் பணத்தை செலவழிப்பது என்று நாம் யோசித்துப் பார்க்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். எல்லாவற்றையும் ஒட்டுமொத்தமாகப் பார்த்து பரிசிலனை செய்து ஒரு முடிவு எடுக்கவேண்டும். அவ்வப்பொழுது அந்த மான்யத்தில் பேசும்பொழுது அந்த மான்யத்திற்கு அதிகத் தொகை வேண்டும் என்று சொல்லுகிற மனப்பான்மை இருக்குமேயானால், வாதத்திற்கு வேண்டுமானால் அம்மாதிரி பேசலாம் என்ற நிலைமைதான் ஏற்படும். ஆகவே, மான்யங்களை ஒவ்வொன்றாக எடுத்துக்கொண்டு நாம் விவாதித்தாலும்கூட, ஒரு மான்யத்தை விவாதிக்கும்பொழுது அதை மட்டும் பற்றி சொல்லிக்கொண்டிருந்தால் பிரயோசனம் இல்லை, மற்ற மான்யங்களையும் கொஞ்சம் கவனிக்க வேண்டும்- மற்ற மான்யங்களைப்பற்றி கவலையில்லை, இந்த மான்யத்திற்கு அதிகமாகத் தொகை வேண்டுமென்று சொல்லுவதாயிருந்தால் அதை ஏற்றுக்கொள்ளுவது என்பது முடியாத காரியம்.

ரோடுகள் நல்ல முறையில் பராமரிக்கப்பட வேண்டும், அதற்கு வேண்டிய முயற்சிகளை, செய்யவேண்டுமென்பதை நான் ஒப்புகொள்கிறேன். பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களிடம் இந்த ரோடுகளை ஒப்படைப்பதற்கு முன்பாக, பல முக்கியமான ரோடுகளைப் பழுது பார்த்து சீரமைப்பதற்காக அதிகச் செலவு ஏற்படுவதனால் அதற்கான உபமான்யம் கோரியிருக்கிறேன் ரூ. 22 லட்சமோ அல்லது ரூ. 12 லட்சமோ என்று நினைக்கிறேன். அம்மாதிரி தொகை ஒதுக்கி, முக்கியமான ரோடுகளை சீர்தூக்கி, அவர்கள் கையிலே ஒப்படைக்கவேண்டும் என்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சர்க்கார் இதை உணராமல் இல்லை. இப்பொழுது இருக்கக்கூடிய நிலைமையில் எப்படி இதற்கு தீர்வு காண முடியும், எப்படி இதை நிவர்த்திக்க முடியும், என்பதை உணர்ந்துதான், அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எல்லாவற்றையும் உடனே சரியாக செய்துவிடவேண்டும் என்ற முறையில் இது செய்ய முடியாத காரியம். இது ஒரு லட்சியமாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, ரோடுகளை சர்க்கார்

ஏற்றுக்கொள்ள வேண்டுமா அல்லது பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமா என்பதைப்பற்றி யோசித்து முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. பஸ்கள் ஓடக்கூடிய ரோடுகளை சர்க்கார் எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற ஒரு முடிவை எல்லோரும் விவாதம் செய்த பிறகு, ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இது உடனடியாக ஆகக்கூடிய காரியம் இல்லை. படிப்படியாக ஆகவேண்டும் என்றும் முடிவெடுக்கப்பட்டது. ஆனாலும் அதற்கு 10, 15 ஆண்டுகள் ஆகக்கூடாது, எவ்வளவு சீக்கிரம் செய்வதற்கு வேண்டிய முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமோ, எடுத்துக்கொள்ளவேண்டும் என்ற கருத்தை யாராவது வலியுறுத்தினார்களேயானால், அந்தக் கருத்தை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன் அனுபவத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு நமக்கிருக்கக்கூடிய நிதி வசதியை அடிப்படையாக வைத்துக்கொண்டு இதையும் கூட நிறைவேற்ற முடியுமே தவிர, நாம் இது மாதிரி ஒப்புக் கொண்டிருக்கிறோம், அடுத்த ஆண்டிலேயே எல்லா பஸ் போகிற ரோடுகளையெல்லாம் சர்க்கார் எடுத்துக்கொண்டுவிட வேண்டும் என்று சொன்னால் அதற்கு போதிய நிதி வசதி இருக்க முடியாது, நிர்வாக இயந்திரமும் நம்மிடத்தில் இருக்க முடியாது என்பதைத்தான் நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ரோடுகளை பொறுத்த வரையில், சர்க்கார் என்ன செய்ய வேண்டும் என்பதைப்பற்றி நாம் முன்பு யோசித்து ஒரு முடிவு எடுத்திருக்கிறோம், அந்த முடிவை நாம் உடனடியாக நடைமுறையில் கொண்டு வருவதாகவும் ஒப்புக்கொண்டிருக்கிறோம். படிப்படியாக முக்கியமான எல்லா ரோடுகளையும் சர்க்கார் நேரடியாக எடுத்துக்கொண்டு, அவைகளை நல்ல தரத்தில் வைப்பதற்கு முயற்சி செய்யும் என்கின்ற உறுதியை நான் இப்பொழுது சொல்லிக்கொள்ளலாமே தவிர, எவ்வளவு சீக்கிரம் அதைச் செய்துவிட முடியும் என்பதைப்பற்றி உடனடியாக சொல்லுவதற்கு இல்லை. அதற்கு ஒரு திட்டம் வகுக்கவேண்டும் அரசாங்கம், ஒரு திட்டம் வகுத்து அந்தத் திட்ட அடிப்படையில் படிப்படியாக எடுத்துக்கொள்ளுதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று வேண்டுமானால் சொல்லலாம்.

நீலகிரித் தொகுதியிலிருந்து வந்திருக்கும் அங்கத்தினர் அவர்கள் அவருடைய பகுதிகளில் இருக்கக்கூடிய கஷ்டங்களைப்பற்றி எடுத்துச்சொன்னார்கள் அது எல்லோராலும் ஒப்புக்கொள்ளக் கூடியது. ஏனென்றால் அது மலைப் பிரதேசம். அங்கு இருக்கிற பல கிராமங்களில் அதிக மக்கள் வசிக்கக்கூடிய நிலைமையில் இல்லை. நெருங்கி கிராமங்கள் இருக்கக்கூடிய நிலையிலும் இல்லை. பரவலாக மக்கள் இருக்கக்கூடிய நிலைமையில் இருக்கிறது. அது விஷயத்திலே சாதகமாக இருக்கிறது. ஏனென்றால் ஜனங்கள் நெருக்கமாக இருக்கும்பொழுது, ஜனநெருக்கம் அதிகமாக இருப்பதே ஒரு பெரிய பிரச்சனையாக விளைந்து விடுகிறது. ரொம்பப் பரவலாக இருந்தாலும் அதுவும் ஒரு பிரச்னையாக இருக்கிறது. இரண்டிற்கும் மத்தியில் இருந்தால் எல்லாக் காரியங்களையும் சரிவர செய்யக்கூடிய நல்ல சூழ்நிலை ஏற்படுகிறது என்பதை நாம் உணர்ந்திருக்கிறோம். ஏ.பி.வி.டி. எந்தப் பிரிவிலும் அந்தப் பிரதேசம் வராது என்று சொன்னார்கள் அந்த ஏ.பி.வி.டி. என்ற அடிப்படையே இல்லை. அந்த முறையில் எடுத்துக் கொள்ளாமல் நீலகிரி ஜில்லாவைப் பொறுத்தமட்டில், மலைப் பிரதேசங்களைப் பொறுத்த அளவில், அந்தப் பகுதிகளுக்கு எந்த அடிப்படையில் உதவவேண்டும். என்று ஆலோசனை செய்து கூடிய சீக்கிரம் ஒரு முடிவு எடுக்கப்படும் என்பதைத்தான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதே சமயத்தில், அங்குள்ள கிராமங்களுக்கு ரோடுகள் என்று சொல்லுவது அபூர்வமாகத்தான் இருக்கும். பல இடங்களில் ரோடுகள் போடவேண்டும், சர்க்காரால்தான் போட முடியும். சர்க்காரால் தான் அவைகளை பராமரிக்க முடியும் என்பதையும் ஓரளவு உணர்ந்திருக்கிறோம். ஆகையினால் அந்த அடிப்படையில் நீலகிரி பிரதேசத்திற்கு வேண்டிய சௌகரியங்கள் எப்படி செய்துகொடுப்பது, அதே போன்று மற்ற மலைப் பிரதேசங்களில் இருக்கக்கூடிய கிராமங்களுக்கும் வேறு அடிப்படையிலே எப்படி உதவி செய்யவேண்டும் என்டதைப் பற்றி நாம் யோசிக்க வேண்டியிருக்கிறது. கோத்த கிரியை டிரைபல் பிளாக்காக எடுத்துக்கொள்ளவேண்டு



மென்று சொன்னார்கள். அங்கு இருக்கக்கூடிய ஆதி பரம்பரையினருக்கு வேண்டிய எல்லா உதவிகளையும், வசதிகளையும் செய்வதற்கு கம்யூனிடி டெவலப்மெண்டு மூலமாக மட்டும் அல்ல, ஹரிஜன நல இலாகா மூலமாகவும் அதற்கு எல்லா விதமான முயற்சிகளும் எடுத்துக்கொள்ளப்படும் என்ற அளவுக்கு சொல்ல முடியுமே தவிர, அங்கே தனிப்பட்ட என்ன திட்டம் நிறைவேற்ற முடியும் என்பதை நான் உடனடியாக சொல்ல முடியாத நிலையில் இருக்கிறேன்.

அடுத்தபடியாக, சம்பள விகிதத்தைப் பற்றி சொல்லப்பட்டது. பஞ்சாயத்து யூனியன் பணியாளர்களைப் பொறுத்தவரையிலும், சம்பளக் கமிஷன் சிபார்சு செய்த சம்பள விகிதத்தில்தான அவர்களை அங்கு நியமித்திருக்கிறார்கள். அதிலே ஒன்றும் கஷ்டம் இல்லை. (குறுக்கீடு). சம்பளக் கமிஷன் என்ன சிபார்சு செய்திருக்கிறதோ அந்த அடிப்படையில் தான் அவர்கள் சம்பளமும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதிலே ஏதாகிலும் குறை இருக்குமானால், அதை யாராவது எடுத்துக்காட்டினால், அதைப் பரிசீலனை செய்து பார்ப்பதற்குத் தயாராக இருக்கிறேன்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்துகளைப் பொறுத்தவரையில், சென்ற பிப்ரவரி மாதத்தில் சம்பளக் கமிஷன் சிபாரிசு செய்திருக்கிற அடிப்படையிலே அவர்களுக்கு சம்பளம் கொடுக்கவேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. அது இன்னும் சில இடங்களில் அமுலுக்கு வரவில்லை என்றால் உத்தரவு அங்குபோய சேரவில்லையோ அல்லது உத்தரவு போய்ச் சேர்ந்தாலும், அதை அமுல் நடத்துவதற்கு அங்கு காலதாமதம் ஆகிறதோ என்றுதான் சொல்லவேண்டும். அதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கடைசியாக, நான் இதிலே ஒரு கருத்தை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நாம் இன்றைக்கு ஏற்றுக்கொண்டிருக்கக்கூடிய அமைப்பு உண்மையிலேயே ஒரு புரட்சிகரமான அமைப்பு. வெறும் வாய்வார்த்தையாக சொல்லக் கூடியது அல்ல. இதனால் கிராம மக்கள் பல சௌகரியங்கள் பெறுவது மட்டுமல்ல. பிறருடைய உதவி பெற்று வாழவேண்டுமென்றால், சில காலத்திற்குத்தான் வாழ முடியும். இன்றைக்கு நல்வாழ்வு வாழவேண்டும் என்று சொன்னால் அது நம்முடைய சக்தியைப் பொறுத்திருக்கிறது, ஆற்றலைப் பொறுத்து இருக்கிறது. இன்றைக்கு நல்வாழ்வு வாழவேண்டுமானால், அதை நிர்ணயித்துக்கொள்ளக் கூடிய பொறுப்பு அவர்களுக்கு இருக்கவேண்டும். அதை நிர்ணயித்து நிறைவேற்றுவதற்குவேண்டிய சக்தி, திறமை அவர்களுக்கு ஏற்படவேண்டும். அந்த அடிப்படையில் தான் பஞ்சாயத்து ராஜ்யம் இன்றைக்கு அமைக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் ராஜ்யம் இன்று அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அந்த அமைப்பு நிறைவேறவேண்டுமென்று சொன்னால் நாம் அனுதாபத்துடன் மட்டும் அல்ல, நமக்கு இருக்கக்கூடிய, மன வேற்றுமைகளை, கருத்து வேற்றுமைகளை ஒருபுறம் ஒதுக்கிவைத்துவிட்டு, கிராம மக்களுடைய நன்மை என்ன என்பதைப்பற்றி நாம் ஒரு சிறிது அளவு ஆராய்ந்து பார்பபோமானால், இதில் கட்சிக்கு இடம் இருக்கவே முடியாது கட்சி பிரசாரம் செய்கிறார்கள் என்று சொல்லுவதற்கு இடம் இருக்கவே முடியாது. கிராம மக்கள் எந்த அளவு மேலே முன்னேற வேண்டும் என்பதைப்பற்றி கட்சி அடிப்படையில் நினைக்கவேண்டிய அவசியம் இல்லை. துரதிருஷ்டவசமாக கிராம மக்களுக்கு ஏதோ நல்லது செய்கிறோம் என்று சொன்னால், கட்சிப் பிரசாரம் செய்கிறார்கள் என்ற சந்தேகம் எதிர்க் கட்சியினருடைய மனதில் அவர்களையும் மீறி வந்து விடுகிறது. நான் மிகவும் தாழ்மையுடன் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன், இன்றைக்கு அங்கு இருக்கக்கூடிய நிலைமையிலே கட்சி அடிப்படையிலே அவர்கள் பார்க்கக் கூடாது. நல்ல காரியங்கள் நடைபெறுவதனால் காங்கிரசுக்கு செல்வாக்கு ஏற்பட்டு விடுமோ என்ற அடிப்படையில் நினைக்கக்கூடாது என்கிற ஒரு கருத்தை அவர்கள் ஒப்புக்கொள்வார்களேயானால், இந்தக் காரியங்களெல்லாம் நன்றாக நிறைவேற முடியும் என்பதில் சந்தேகம் கிடையாது. பஞ்சாயத்து

அல்லது பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலில் கட்சி அடிப்படையில் இன்றைக்கு காங்கிரசுக்காரர்கள் நின்றது இடையாது மற்ற கட்சிக்காரர்கள் கட்சி அடிப்
-30. படையில் நின்றிருக்கிறார்கள் சில இடங்களில். அதை அவர்கள் ஒப்புக்
m. கொண்டுதான் ஆகவேண்டும்.

இன்றைக்கு நான் அவர்களை குற்றம் சொல்லவில்லை, அது அவர்கள் எடுக்கவேண்டிய முடிவு. ஆனால், இன்றைக்கு பஞ்சாயத்துகள் ஏற்பட்ட பிறகு, பஞ்சாயத்து கௌன்சில்கள் ஏற்பட்ட பிறகு, கட்சி அடிப்படையில் நோக்குவது சரியில்லை. அப்படியில்லாமல் அவை நடைபெற நாம் எல்லோரும் உதவி செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். அந்த அடிப்படையில் தான் எந்தக் கட்சியாக இருந்தாலும் பஞ்சாயத்து யூனியன் கௌன்சிலில் சேர வேண்டும். அவர்கள் ஆலோசனை கொடுக்கவேண்டுமென்று அந்த அடிப்படையில் ஏற்பாடு செய்திருக்கிறோம். இங்கே இருக்கக் கூடிய கட்சி நோக்குகளை அங்கே பஞ்சாயத்துக் கௌன்சிலில் கொண்டு வராமல், மக்களை முன்னேற்ற வேண்டும் என்று பணியாற்றினால், இன்றைக்கு எடுத்து இருக்கக்கூடிய நல்லதொரு திட்டங்களெல்லாம் வெற்றி பெற்று, அவர்கள் இன்னும் அதிகப் பொறுப்பை வகிக்கக் கூடிய அளவுக்கு வளர்ந்து. அவர்களுக்கு இன்னும் அதிகமான பொறுப்புகளைக் கொடுக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டு, எங்கும் நல் வாழ்வு பரவ, சோஷலிஸ சமுதாயத்தில் முன்னேறிச் செல்கிற திருப்தியும், பெருமையும் உண்டாகும் என்ற கருத்தை வலியுறுத்திச் சொல்லிக் கொண்டு, ஒரு மானியத்தின் மீது வெட்டுப் பிரேரணையே கொடுக்காமல் இருந்தாற்போல, இதையும் பொதுவான மானியம் என்ற காரணத்தினால் வெட்டுப் பிரேரணையை வாபஸ் வாங்கிக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடிக்கிறேன்.

Sri A. GOVINDASAMY : பஞ்சாயத்துச் சட்டம் நிறைவேற்றும் போது பஞ்சாயத்திலிருந்து கௌன்சிலுக்குத் தலைவனைத்தான் எடுக்க வேண்டும் என்ற திருத்தத்தை நாங்கள் கொடுத்தபோது, அதை அலட்சியப்படுத்திவிட்டு பிறகு, சர்க்காரே செய்துவிட்ட காரியத்தை அவசரத்தில் செய்த முடிவு என்று சொல்கிறீரே சரியா ?

The Hon Sri. C. SUBRAMANIAM : அது அவசரத்தில் எல்லோரும் சேர்ந்து செய்த முடிவு நான் மட்டும் தனியாகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று சொல்லவில்லை. அங்கத்தினர் கட்சி பிரதிநிதிகளும் சேர்ந்து செய்த முடிவுதான் அது : குறை என்று ஏற்பட்டதும், அது திராவிட முன்னேற்றக் கட்சி சொன்ன கருத்து என்று நாங்கள் ஒதுக்கவில்லை. இன்றைக்கு குறையென்றதும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்தானாலும் அதை ஏற்றுக்கொள்ளுவோம்என்பதை நிரூபித்திருக்கிறது சர்க்கார். அம்மாதிரியே திராவிட முன்னேற்றக் கழகமும் செய்ய முன் வந்தால், அது உண்மையாகவே முன்னேற்றக் கழகமாக இருக்கும் என்று தெரிவிக்கிறேன். (சிரிப்பு)

DEPUTY SPEAKER : Is the hon. Member Sri S. M. Annamalai pressing his cut motion?

Sri S. M. ANNAMALAI : Yes, Sir.

DEPUTY SPEAKER : The question is—

"That the allotment of Rs. 5,01,99,900 under Demand XXVI —Community Development Projects, etc., be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 5,01,99,900 under Demand XXVI—Community Development Projects, etc."





The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,64,50,000 under Demand XXXIV—Other Miscellaneous Contributions and Assignments."

The Demand was put and carried and the Grant was made.

### IV.—ANNOUNCEMENT BUSINESS OF THE HOUSE

DEPUTY SPEAKER : I have to announce to the House that the Business Advisory Committee met today and decided the following programme of the House from 25th March 1961 onwards in addition to the financial business that has already been fixed for those days :—

| | |
|---|---|
| 25th March 1961 .. .. | 1 The Madras Agricultural Income-tax (Amendment) Bill, 1961 (L.A. Bill No. 12 of 1961). |
| | 2 The Madras Irrigation Cess (Amendment) Bill, 1961. (L.A. Bill No. 17 of 1961). |
| 27th March 1961 .. .. | 1 The Madras General Sales-tax (Second Amendment Bill, 1961 (L.A. Bill No. 15 of 1961). |
| | 2 The Madras (Added Territory) Extension of Laws Bill, 1961. (L.A. Bill No. 16 of 1961). |
| 28th March 1961 .. .. | 1 The Madras Village Courts (Amendment) Bill, 1961 as passed by the Council. |
| | 2 The Madras Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1961 as passed by the Council. |
| | 3 The Madras Wakf (Supplementary) Bill, 1961 (L.A. Bill No 10 of 1961). |
| | 4 The Madras Chit Funds Bill, 1960. (L.A. Bill No. 5 of 1960). (Consideration of Council Amendments.) |
| | 5 The Land Acquisition (Madras Amendment) Bill, 1961 (L.A. Bill No. 11 of 1961). |
| | 6 The Madras Entertainments Tax (Amendment) Bill, 1961 (L.A. Bill No. 13 of 1961.) |
| | 7 The Indian Stamp (Madras Amendment) Bill, 1961. (L.A. Bill No. 14 of 1961). |

The Bills which have not been passed on 28th March will be considered on the 29th March 1961.

The Madras Co-operative Societies Bill, 1961, will be introduced on the 27th March 1961 and will be taken up for discussion on the 30th March 1961.

The House will adjourn on the 30th March 1961.

I have also to announce to the House that the items included under "VII. Government Bills" in the Agenda for 25th March 1961, already circulated, will be taken up immediately after 'Item VI. Government Bills' on that date. If necessary, the House will sit till 2-00 p.m. There willl be no afternoon sitting on that date.

The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

The House then adjourned.

[24th March 1961

## APPENDIX I.

[Vide answer to starred question No. 1043 asked by Sri T. T. Daniel and Sri K. Sattanatha Karayalar at the meeting of the Legislative Assembly held on 24th March 1961, page 465 supra.]

*A*.—(*a*) Yes, Sir. Under the Slum Clearance Scheme of the Union Government the Corporation of Madras and the Madras City Improvement Trust have taken up for execution a number of projects for the clearance/improvement of slums in Madras City.

(*b*) The details of the Slum Projects taken up by the Corporation and the City Improvement Trust in the City are given below :—

| *Name of slum projects.* | *Sanctioned cost.* | *Plots/Tenements.* | *Expenditure incurred so far.* * |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| I *Corporation of Madras*— | RS. | | RS. |
| 1 Meenambal Sivaraj Nagar .. | 5,62,500 | 474 Plots. | 5,63,476 |
| 2 Vazhaippucheri .. .. | 2,38,750 | 191 Do. | 1,92,156 |
| 3 Scheme for housing pavement dwellers. | 1,12,500 | 90 Do. | 1,11,411 |
| 4 Karimeducheri (Dn. 9) .. | 4,00,000 | 320 Do. | 2,08,660 |
| 5 Kalyanapuram .. .. | 4,63,750 | 371 Plots. | 2,77,499 |
| 6 Malligaippucheri .. .. | 2,71,250 | 211 Do. | 1,13,980 |
| 7 Tondiarkuppam .. .. | 20,31,325 | 375 Tenements. | 9,24,122 |
| 8 Kasipuram .. .. .. | 3,19,595 | 59 Do. | 1,18,487 |
| 9 Thandavarayachattram .. | 14,52,100 | 322 Do. | 6,69,273 |
| 10 Coronation Nagar .. .. | 1,19,400 | 140 Plots. | 19,381 |
| 11 Venkatesapuram .. .. | 9,44,800 | 242 Tenements.<br>136 Plots. | 1,61,509 |
| 12 Grey Nagar Pallam .. .. | 3,56,800 | 286 Do. | 90,632 |
| 13 Karimeducheri (Dn .33) .. | 3,50,600 | 281 Do. | 90,534 |
| II *Madras City Improvement Trust*— | | | |
| 14 Namasivayapuram .. .. | 7,12,350 | 539 Do. | 5,87,684 |
| 15 Kamarajapuram *cum* Pushpanagar. | 2,98,200 | 239 Do. | 1,26,842 |
| 16 Government Channel Lane hutting Ground Area. | 1,71,200 | 102 Do. | 95,300 |
| 17 Gajapathy Lala Area .. | 93,160 | 69 Do. | 7,617 |
| 18 Raju Pillai Garden (Kodambakkam). | 1,60,495 | 115 Do. | 43,164 |
| 19 New Kanniappa Nagar .. | 15,90,000 | 1,200 Do. | 8,925 |
| 20 Ellispuram .. .. .. | 2,11,000 | 32 Plots and 30 Tenements. | 54,186 |

* Includes Rs. 58·92 lakhs, the assistance drawn from the Centre up to 31st March 1960.



24th March 1961]

| *Name of slum projects.* | *Sanctioned cost.* | *Plots/Tenements.* | *Expenditure incurred so far.* |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| II *Madras City Improvement Trust*—cont. | RS. | | RS. |
| 21 Kamarajapuram Extension Trustpuram, Kodambakkam. | 1,65,450 | 106 Plots. | 73,905 |
| 22 Omnibus .. .. .. | 10,41,500 | 830 Plot. and | 23,504 |
| 23 Foreshore tenements .. | 24,75,300 | 440 tenements. | 26,88,765 |
| | 1,45,41,965 | 5,732 Plots and 1,468 Tenements | 72,51,014 |

(*c*) & (*d*) This Government asked for allotment of Rs. 300 lakhs for the implementation of the scheme during the Third Plan period for the construction of 4,000 pucca tenements and provision of 9,000 open developed plots. The Central Working Group on "Housing" has provisionally agreed to the allotment asked for.

[24th March 1961

## APPENDIX II.

(Vide answer to starred question No. 1052 asked by Sri S. M. Annamalai (on behalf of Sri K. Sattanatha Karayalar) at the meeting of the Legislative Assembly held on 24th March 1961, page 471 supra.)

The assistance received from the UNICEF during the Second Five-Year Plan period for Developoent of Health Schemes in the rural areas is furnished below :—

| *Name of the Scheme.* (1) | *Articles supplied.* (2) | |
|---|---|---|
| 1 Health Education Bureau .. .. | Technical equipment, Jeep, Books, etc, free of cost through the Director-General of Health Services, New Delhi. | |
| 2 B.C.G. Vaccination Campaign— | | |
| (a) B.C.G. Unit I .. .. .. | Nine vehicles and other equipment, spare parts for replacement, replacement of Syringes, Needles, Kits Insulated jugs, Gramaphones, Pickups, Loud Speaker. | |
| (b) B.C.G. Unit II .. .. .. | Eight vehicles and equipments such as cinema projector Generator, Syringes etc. | |
| 3 Health Unit, Poonamallee .. .. | One Universal Jeep, one set of Primary Health Centre equipments, drugs, Diet supplements. | |
| 4 Training Programme— | | |
| (a) Short Public Health Nursing Course. | Rs. 4,398.10 as stipends for Trainees. | |
| (b) All India Dais Training Programme. | A sum of Rs. 4,260 as stipends for Thayis. | |
| (c) Thayis Training under Second Five Year Plan. | 250 Thayis kits. | |
| 5 Maternity and Child Health Services. | Drugs and diet supplements, skim milk powder, sewing machines, Mid-wifery kits and bicycles and 43 lakhs lb. of skin milk power for distribution in various Centres. | |
| 6 Primary Health Centres .. .. | 1 Vehicles .. .. .. | 70 |
| | 2 Main Centre equipment. | 102 sets |
| | 3 Drugs for Main Centre .. | 102 sets |
| | 4 Sub-Centre equipments. | 290 |
| | 5 Mid wifery kits .. .. | 300 |
| | 6 Public Health Nurse Kits. | 102 |
| | 7 Cycles .. .. .. | 115 |
| 7 Referral Hospitals and District Laboratories. | Equipments for 9 Referral Hospitals and 3 District Laboratories. | |

# INDEX TO MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

## TENTH SESSION OF THE SECOND LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

18th, 20th to 24th *March* 1961.

**Volume XLII (Nos. 1 to 6).**


PAGES

A

(Added Territories) Extension of Laws Bill, 1961—
*See* Bills.

Adjournment motion *re*—
Foodgrains, failure of Government to arrest rise in prices of— .. 393

Agricultural implements—
Question *re* Difficulty in purchase of—by agriculturists .. .. 482-483

Agriculture—
Question *re*—
Central Seed Corporation, establishment of— .. .. .. 195
Lower Bhavani area, constitution of Agricultural Research Association for— .. .. .. .. .. .. .. 193-194
Production programme, aid to panchayats for— .. .. 283-285

Aluminium—
Question *re* Factory establishment of—at Mettur .. .. .. 205

Ananthanayaki, Srimathi T. N.—
Demands for Grants *re*—
Compensation to Zamindars .. .. .. .. .. .. .. 44-47
District Administration and Miscellaneous .. .. .. .. .. 44-47
Education .. .. .. .. .. .. .. .. 367
Land Revenue Department .. .. .. .. .. .. .. 44-47
Motor Vehicles Acts Administration .. .. .. .. 258-259
Registration Department .. .. .. .. .. .. .. 44-47
Stamps Administration .. .. .. .. .. .. .. 44-47

PAGES

A—*cont.*


Anbazhagan, Sri K.—
Demands for Grants *re*—
Capital Outlay on Civil Works .. .. .. .. .. } 397
Civil Works—Establishment and tools and plant .. .. .. } 412-414
Civil Works—Works .. .. .. .. .. .. .. }
Education .. .. .. .. .. .. .. .. 349-355, 359

Animal Husbandry—
Question *re* Dairy Farm, establishment of — at Madurai .. .. 197

Annamalai Muthuraja, Sri G.—
Demand for Grant *re* Motor Vehicles Acts Administration .. .. 255-256

Annamalai, Sri S. M.—
Demands for Grants *re*—
Capital Outlay on Public Health, Medical and Public Health .. 147-150
Community Development Projects .. .. .. .. .. 486-490, 540
Compensation to Zamindars .. .. .. .. .. .. 15-21, 86
District Administration and Miscellaneous .. .. .. .. 15-21, 86
Land Revenue Department .. .. .. .. .. .. 15-21, 86
Miscellaneous Contributions and Assignments .. .. .. 486-490, 540
Motor Vehicles Acts Administration .. .. .. .. 253-254
Registration Department .. .. .. .. .. .. 15-21, 86
Stamps Administration .. .. .. .. .. .. 15-21, 86

Archæological Department—
Question *re* Establishment of — in every State .. .. .. 4-5

Ardhanareeswara Gounder, Sri K. S.—
Demands for Grants *re*—
Civil Works—Works .. .. .. .. .. .. }
Civil Works—Establishment and tools and plant .. .. .. } 406-408
Capital Outlay on Civil Works .. .. .. .. .. }

Artesian wells—
Question *re* Sinking of — in North Arcot district during Second Plan period .. .. .. .. .. .. .. .. 192

Artistes—
Question *re* Prizes to — award of — .. .. .. .. .. .. 378-379

Arumughaswami, Sri M. A. B.—
Demands for Grants *re*—
Compensation to Zamindars .. .. .. .. .. .. }
District Administration and Miscellaneous .. .. .. .. }
Land Revenue Department .. .. .. .. .. .. } 58-59
Registration Department .. .. .. .. .. .. }
Stamps Administration .. .. .. .. .. .. }




PAGES

A—*cont.*


Arunachala Thevar, Sri V.—
Demand for Grant *re* Motor Vehicles Acts Administration .. .. 254-255

Assurance Statement (Nos. 1037, 1099 and 1106)—
*See* Papers laid on the table of the House.

Atomic Power Plant—
Question *re* Location of — at Madras .. .. .. .. .. .. 104-105

Authimoolam, Sri D. S.—
Demands for Grants *re*—
Community Development Projects .. .. .. .. .. 523-525
Miscellaneous Contributions and Assignments .. .. .. .. 523-525


B


Beedi industry—
Question *re* Beedi workers, applicability of Factories Act to — .. 463-464

Beedi workers—
*See* Wage Board.

Bhaktavatsalam, the Hon. Sri M.—
Questions and Answers, correction to answer to a supplementary — 210
Udayarpalayam taluk, Tiruchirappalli district, attention called to destruction of crops caused by monsoon in — .. .. .. .. 302

Bills—
(Added Territory) Extension of Laws Bill, 1961—
Introduced .. .. .. .. .. .. .. .. .. 304
Message from Governor *re* .. .. .. .. .. .. .. 303
General Sales Tax (Second Amendment) Bill, 1961—
Introduced .. .. .. .. .. .. .. .. .. 303
Message from Governor *re* .. .. .. .. .. .. .. 303
Irrigation Cess (Amendment) Bill, 1961—
Introduced .. .. .. .. .. .. .. .. .. 304

"Bleeding Madras"—
Question *re*—
Manufacture and export of — .. .. .. .. .. .. 108
Steps taken to clear accumulated stock of — .. .. .. .. 108-111

Bonus—
Question *re* Grant of — to workers .. .. .. .. .. 291

Bridge—
Question *re* Construction of — across Pazhavar .. .. .. .. 285

Briquetting Plant—
Question *re* Neyveli —, commencing of production by — .. .. 199

Brothels—
Question *re* Raiding of — by Police officers under an amendment to the Suppression of Immoral Traffic in Women and Girls Act, 1956 .. .. .. .. .. .. .. .. .. .. 194-195

PAGES

B—*cont.*


Bus-stands—
Question *re*—
—in Madras City, construction of— .. .. .. .. .. 469–470
Mufassal—in Madras City, shifting of— .. .. .. .. 386–387

Business of the House—
Amendment *re* decision of the Business Advisory Committee .. 541

Business Advisory Committee—
*See* Business of the House.


C


Capital Outlay on Civil Works—
Civil Works—Establishment and tools and plant—
Civil Works—Works—
Demands for Grants *re*— .. .. .. .. .. .. 393–446

Cattle—
Question *re* Punjab, free supply of—to breeders .. .. .. 297–298

Census—
Question *re* —work, grant of honoraria to teachers engaged in— .. .. .. .. .. .. .. .. 481

Central Seed Corporation—
*See* Agriculture.

Ceylon repatriates—
Question *re* Artisan—, loans to— .. .. .. .. .. 468

Chandrasekaran, Sri W. P. A. R.—
Demands for Grants *re*—
Capital Outlay on Public Health, Medical and Public Health .. 130–131
Education .. .. .. .. .. .. .. .. 329–330
Motor Vehicles Acts Administration .. .. .. .. 240–243

Cheating—
Question *re* Number of cases of—by persons posing as astrologers, etc. .. .. .. .. .. .. .. .. 291–293

Chidambaranatha Nadar, Sri A.—
Demand for Grant *re*—
Capital Outlay on Civil Works .. .. .. .. .. }
Civil Works—Establishment and tools and plant .. .. .. } 403–404
Civil Works—Works .. .. .. .. .. .. }
Education .. .. .. .. .. .. .. .. 313–315

Chinnadurai, Sri P. S.—
Demands for Grants *re*—
Community Development Projects .. .. .. .. .. 527–531
Miscellaneous Contributions and Assignments .. .. .. 527–531




PAGES

C—*cont.*


Chinniah Kovunder, Sri N. P. M.—
Demands for Grants *re*—
Capital Outlay on Civil Works .. .. .. .. }
Civil Works—Establishment and tools and plant .. .. .. } 426–428
Civil Works—Works .. .. .. .. .. .. .. }

Civil Works—
*See* Papers laid on the table of the House.

Civil Works—Grants-in-aid—
*See* Papers laid on the table of the House.

Clocks—
Information *re*—in Chamber, difference in timings .. .. 486

Coconut—
Question *re*—
—cultivation, increasing of—, steps taken for— .. .. 299–301
—palm, average yield of nuts per—districtwise .. .. .. 372–373

Committees—
House Committee, election of Members to— .. .. .. 302–303
Demands for Grants *re*—
Compensation to Zamindars .. .. .. .. .. .. }
District Administration and Miscellaneous .. .. .. }
Land Revenue Department .. .. .. .. .. .. } 15–88
Registration Department .. .. .. .. .. .. }
Stamps Adminstration .. .. .. .. .. .. }

Collectors—
Question *re* Travelling allowance and dearness allowance drawn by— .. .. .. .. .. .. .. .. 191–192

College(s)—
Question *re*—
Agricultural—, starting of—near Sathanur Dam .. .. 296–297
Kilpauk Medical—, misunderstanding between Dean and students of— .. .. .. .. .. .. .. .. .. 99
Professor of Geography in Presidency—, enquiry *re* conduct of— .. .. .. .. .. .. .. .. 286–287
Regional Engineering—, location of .. .. .. .. 389

Community Development Projects—
Demand for Grant *re*— .. .. .. .. .. .. .. 486–541
Question *re* Vedaranyam Block, misappropriation in— .. .. 377–378
*See* Papers laid on the table of the House.

PAGES

C—*cont.*

Co-operative Societies—

Question *re*—

Award of prizes to— .. .. .. .. .. .. 95–96

Deputy Registrar and Joint Registrar of—, re-employment of retired personnel .. .. .. .. .. .. 281

Handpounding Rice Workers' Co-operative Society, Limited, North Madras, misappropriation in— .. .. .. .. 378

Keelvani Weavers' Co-operative Society, misappropriation in—. 96

Melapalayam and Ammapet Weavers—, amount allotted for repairing of houses of members of— .. .. .. .. 97

Prohibition of a person from being member of more than one—. 484–485

D

**Daniel, Sri T. T.—**

Demands for Grants *re*—

Compensation to Zamindars .. .. .. .. .. ..
District Administration and Miscellaneous
Land Revenue Department .. .. .. .. .. ..
Registration Department .. .. .. .. .. ..
Stamps Administration .. .. .. .. .. .. } 37–39

Demands for Grants *re*—

Capital Outlay on Civil Works .. .. .. .. .. ..
Civil Works—Establishment and tools and plant .. .. ..
Civil Works—Works .. .. .. .. .. .. } 393–446

Capital Outlay on Public Health, Medical and Public Health .. 118–180

Compensation to Zamindars .. .. .. .. .. ..
District Administration and Miscellaneous .. .. .. ..
Land Revenue Department .. .. .. .. .. ..
Registration Department .. .. .. .. .. ..
Stamps Administration .. .. .. .. .. .. } 15–88

Motor Vehicles Acts Administration .. .. .. .. .. 212–271

Stationery and Printing .. .. .. .. .. .. 446–457

Demands for Grants for further expenditure and detailed supplementary estimates for 1960–61—

*See* Papers laid on the table of the House.

Demands for Grants for further expenditure for 1960–61—

*See* Papers laid on the table of the House.

Demands for Grants for Excess Expenditure in 1957–58—

Presentation of— .. .. .. .. .. .. .. 210

*See* Papers laid on the table of the House.

Deputy Speaker, Mr.—

Announcement *re* Message from the Governor *re*—

(Added Territory) Extension of Laws Bill, 1961 .. .. ..
General Sales Tax (Second Amendment) Bill, 1961 } 303

Business of the House, announcement *re* decision of the Business Advisory Committee .. .. .. .. .. .. 541



PAGES

D—*cont.*

**Deputy Speaker, Mr.**—*cont.*

Demands for Grants *re*—

Community Development Projects .. .. .. .. .. 486, 540

Education .. .. .. .. .. .. .. .. 304, 305, 339, 342, 349, 362, 367

Miscellaneous Contributions and Assignments .. .. .. 487, 540, 541

House Committee, election of members to— .. .. .. 302–303

Information *re* Clocks in Chamber, difference in timings of— .. 486

**Devaswom Board—**

Question *re* Kanyakumari—, travelling allowance drawn by members of— .. .. .. .. .. .. .. 392

**Drainage Scheme—**

Question *re*—

Implementation of—in Gudiyatham .. .. .. .. 7

Implementation of—in Vellore .. .. .. .. .. 8

Drugs Act—

*See* **Medicine.**

**Duraiswami Reddiar, Sri A. S.—**

Demands for Grants *re* Capital Outlay on Public Health, Medical and Public Health .. .. .. .. .. .. .. 122–124

E

Education—

Demand for Grant *re*— .. .. .. .. .. .. 304–367

Question *re*—

Adult—, details *re* .. .. .. .. .. .. .. 462–463

Central Education Advisory Board, decisions of— .. .. 11

Educational concessions in Kanyakumari district, income limit for grant of— .. .. .. .. .. .. .. 9–10

Education Demand—

*See* Papers laid on the table of the House.

Elections—

Question *re*—

Expenses for—, reduction of— .. .. .. .. .. 11

(Double-member) Parliamentary and Assembly Constituencies—, splitting up of .. .. .. .. .. .. .. 379–381

Electrical Engineering Department—

*See* Government servants.

Electricity—

Question *re*—

Accounts—Subordinates Union of—Board, action taken on demands of .. .. .. .. .. .. .. .. 200

State—Board, appointment of a Labour Relations Officer in—. 194

Supply of—to villages in Javadu Hills .. .. .. .. 390

PAGES

**E—con.**

**Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948—**
*See* Papers laid on the table of the House.

**Examination(s)—**
Question *re* S.S.L.C. — in October 1960, percentage of failures in — .. .. .. .. .. .. .. .. .. 281–283

**Excise Department—**
Question *re* Officials of — in Kanyakumari district, opening of fire by — .. .. .. .. .. .. .. .. 392

**F**

**Factories—**
Question *re*—
Butter-*cum*-milk factory, starting of .. .. .. .. 280
Iron and steel — in North, visit by Chief Minister .. .. 293
Tractor factory, starting of —, details *re* .. .. .. .. 290–291

**Fair price shops—**
Question *re* Number of — opened in Tiruchirappalli district .. 207

**Family Planning Scheme—**
Question *re* Compulsory Vasectomy operation on Tuberculosis and leprosy patients .. .. .. .. .. .. .. .. 11–12

**Farm(s)—**
Question *re* Setting up of — in Varushanadu .. .. .. .. 298–299

**Fertilizers—**
Question *re* Chemical —, sale of — at fair price .. .. .. 187–190

**Five-Year Plan (Third)—**
Question *re* Industrialisation Schemes in — period .. .. .. 200

**Foodgrains—**
Adjournment motion *re* failure of Government to arrest rise in prices of — .. .. .. .. .. .. .. .. 393

**Forest(s)—**
Question *re* Reserve— lands in Kanyakumari district, lease of — for rubber, softwood and teak plantations .. .. .. .. 375–376

**G**

**General Sales Tax (Second Amendment) Bill, 1961—**
*See* Bills.

**Geology—**
Question *re*—
Oil in Kanyakumari district, survey for exploration of — .. .. 483–484

**Government Departments—**
Question *re*—
Rural Development Department, expenditure incurred on — during 1958–60 .. .. .. .. .. .. .. .. 285–286



PAGES

**G—cont.**

Government Servants—
Question *re*—
Electrical Engineer (General) office, payment of arrears of revised scales of pay to employees of — .. .. .. .. 480
Lady typists in Block Development Offices in Tirunelveli district, employment of — .. .. .. .. .. .. .. 375

Govindasami, Sri A.—
Demands for Grants *re*—
Capital Outlay on Civil Works; Civil Works—Establishment and tools and plant; Civil Works—Works .. .. .. .. 411–412, 423, 441
Capital Outlay on Public Health, Medical and Public Health .. 158–160
Community Development Projects .. .. .. .. .. .. 521–523, 540
Compensation to Zamindars; District Administration and Miscellaneous; Land Revenue Department; Registration Department; Stamps Administration .. .. .. .. .. .. 67–70
Education .. .. .. .. .. .. .. .. 363
Miscellaneous Contributions and Assignments .. .. .. 521–522, 540
Stationery and Printing .. .. .. .. .. .. 449–451, 454

**H**

Haja Sheriff, Sri K. S. G.—
Demand for Grant *re*—
Capital Outlay on Civil Works; Civil Works—Establishment and tools and plant; Civil Works—Works .. .. .. .. 429–30
Education .. .. .. .. .. .. .. .. 331–332

**Harijan(s)—**
Question *re*—
Colonies, street-lighting of — .. .. .. .. .. 3–4
— colony, construction of — in Melpuzidiyur .. .. .. 467
— in Kanyakumari district, number of — evicted or served with notice to vacate poramboke lands .. .. .. .. .. 459–460
Landless — in Kanyakumari district, extent of Government lands given to — .. .. .. .. .. .. .. .. 462–463
— Sevaks in Chengam taluk, award of medals to — .. .. 475–476

**Health—**
Question *re* — Health Education Council, constitution of — .. 8–9

H—*cont.*

**Hemalatha Devi, Srimathi—**

Demand for Grant *re*—

Capital Outlay on Civil Works .. .. .. .. .. } 424–426
Civil Works—Establishment and tools and plant .. .. .. }
Civil Works—Works .. .. .. .. .. .. .. }

Highways Department—

Question *re* Contractors of —, production of sales tax clearance certificate by — .. .. .. .. .. .. .. 96

Hindi—

Question *re* Suspension of teaching of — in Teachers' Training Schools .. .. .. .. .. .. .. .. 287

Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1961—

*See* Papers laid on the table of the House.

Holiday (s)—

Question *re* Weekly — for workers, particulars *re* .. .. .. 106–107

**Homeopathy—**

Question *re* Homœopathic doctors, appointment of — in Rural and Local Fund Dispensaries .. .. .. .. .. .. 96–97

Hospitals and Dispensaries—

Question *re*—

Calling bells in —, installation of — .. .. .. .. 107
Compulsory service in — by Medical Graduates .. .. .. 10
Government Hospitals, telephone facilities for patients in — .. 11
Nagercoil district—, improvement of — .. .. .. .. 190–191
Receipts for cash collections in —, issue of — .. .. .. 8
Tuberculosis Sanatoria, number of — to be constructed during Third Plan period .. .. .. .. .. .. .. 485
Vellore Hospital, separate transformer to — .. .. .. 94
X-ray units in —, number of — districtwar .. .. .. 13–14

House Committee—

*See* Committees.

Housing—

Question *re*—

Construction of houses in Javadu Hills .. .. .. .. 102–103
Cyclone relief — scheme, number of houses constructed in Vedaranyam block under — .. .. .. .. .. .. 107–108
— scheme at Koothapalli, details *re* .. .. .. .. 112
Subsidised Industrial — Scheme, particulars *re* .. .. .. 99–100

I

I.A.S.

Question *re* — officers, creation of selection grade posts on supertime scale for — .. .. .. .. .. .. .. 388–389





I—*cont.*

Industries—

Question *re*—

Industrial Establishments, administration of —, participation of labour in — .. .. .. .. .. .. .. .. 208, 209
Salt factories in Kanyakumari district, collection of tax from —. 105–106
Small-scale — aid to — by State Bank .. .. .. .. 295
Village — Unit, starting of — in Vedaranyam block .. .. 392–393

Iron—

Question *re*—

Allotment of — materials for agriculture and small-scale industries .. .. .. .. .. .. .. .. .. 113–115
Allotment of — to Madras State .. .. .. .. .. 112–115

Irrigation Cess (Amendment) Bill, 1961—

*See* Bills.

Irrigation—

Question *re*—

Dam across Mangarai river, construction of — .. .. .. 464
Lower Bhavani, Amaravathi and Mettur Reservoir Projects, area and volume silted up in catchment area of — .. .. .. 480–481
Vaigai Dam, particulars *re* water level in — .. .. .. 117

J

Jail (s)—

Question *re*—

Central —, Vellore, extraction of oil through 'chekku' .. .. 477–478
Tiruchirappalli —, beating of Chockalingam, Panchayat Board member in — .. .. .. .. .. .. .. .. 466–467

Jeeps—

Question *re* Use of — in Blocks by Chairmen of Panchayat Union Councils .. .. .. .. .. .. .. .. 381

Judiciary—

Question *re* High Court Judges, appointment of — from All-India Panel .. .. .. .. .. .. .. .. .. 289

K

Kakkan, the Hon. Sri P.—

Demands for Grants *re*—

Capital Outlay on Civil Works .. .. .. .. 393, 394
Capital Works—Establishment and Tools and Plant .. .. 395, 397
Capital Works—Works .. .. .. .. .. .. 400, 402
411, 419
433, 434
437–445

Kalyanasundaram, Sri M.—

Demands for Grants *re*—

Compensation to Zamindars .. .. .. } 72–76
District Administration and Miscellaneous .. .. .. }
Land Revenue Department .. .. .. .. .. }
Registration Department .. .. .. .. .. }
Stamps Administration .. .. .. .. .. }

L—*cont.*

Lands—

Question *re*—

—in Tiruppattur taluk, grant of pattas to— .. .. .. 465

Poramboke—in Tiruthuraippoondi taluk, extent of— .. .. 473-474

—rendered surplus after fixation of land ceiling, survey of extent of— .. .. .. .. .. .. 474-475

Liquor—

Question *re*—permits, number of persons holding— .. .. 382-384

Loans—

Question *re* Agricultural—, reduction in rates of interest on— .. 116

Local bodies—

Question *re* Drainage schemes, aid to municipalities for execution of— .. .. .. .. .. .. .. .. .. 485-486

M

Mahalingam, Sri N.—

Demand for Grant *re* Motor Vehicles Acts Administration .. .. 256-258

Malaria—

Question *re* Eradication of—, amount allotted to Madras State from American aid .. .. .. .. .. .. .. 201-203

Manickam, Sri P. G.—

Demands for Grants *re*—

Community Development Projects .. .. .. .. 492-493

Compensation to Zamindars .. .. .. .. ..
District Administration and Miscellaneous .. ..
Land Revenue Department .. .. .. .. ..
Registration Department .. .. .. .. ..
Stamps Administration .. .. .. .. .. } 21-23

Miscellaneous Contributions and Assignments .. .. .. 492-493

Motor Vehicles Acts Administration .. .. .. .. 223-225

Manickavelu, the Hon. Sri M. A.—

Demands for Grants *re*—

Capital Outlay on Public Health, Medical and Public Health .. 118, 119, 169-170

Compensation to Zamindars .. .. .. .. ..
District Administration and Miscellaneous .. ..
Land Revenue Department .. .. .. .. ..
Stamps Administration .. .. .. .. .. } 15-17, 26, 56, 60, 80-86

Statement *re* Smallpox, inauguration of scheme to eradicate—in City and Chingleput district .. .. .. .. .. .. 240



M—*cont.*

Manikkasundaram, Sri V. S.—

Demands for Grants *re*—

Education .. .. .. .. .. .. .. .. .. 327-329

Motor Vehicles Acts Administration .. .. .. .. 218-219

Mariappan, Sri M. K.—

Demands for Grants *re*—

Capital Outlay on Civil Works .. .. .. .. ..
Civil Works—Establishments and Tools and Plant .. ..
Civil Works—Works .. .. .. .. .. .. .. } 417-418

Marudhachalam, Sri N.—

Demands for Grants *re*—

Capital Outlay on Civil Works .. .. .. .. ..
Capital Works—Establishment and Tools and Plant .. ..
Capital Works—Works .. .. .. .. .. .. } 395-397, 442

Matha Gowder, Sri J.—

Demands for Grants *re*—

Community Development Projects .. .. .. .. .. 495-497

Compensation to Zamindars .. .. .. .. ..
District Administration and Miscellaneous .. ..
Land Revenue Department .. .. .. .. ..
Registration Department .. .. .. .. ..
Stamps Administration .. .. .. .. .. } 23-26

Miscellaneous Conributions and Assignments .. .. .. 495-497

Matter of urgent public importance—

Monsoon in Udayarpalayam taluk in Tiruchirappalli district, calling attention to destruction of crops caused by— .. .. .. 392

Medical Demand—

*See* Papers laid on the table of the House.

Medical—

Question *re*—students, stipends to— .. .. .. .. 196-197

Medical Registration Act, 1914—

Question *re* Extension of—to Kanyakumari district .. .. 103-104

Medicine—

Question *re*—

Drugs Act, amendment of— .. .. .. .. .. .. .. 1

Survey of herbs, details *re* .. .. .. .. .. .. .. 5

Message from the Governor—

*See* Bills.

Milk—

Question *re* Production of—and milk products .. .. .. 278-280

PAGES

M—*cont.*


Miscellaneous Contributions and Assignments—
Demand for Grant *re* .. .. .. .. .. 487–541

Motion *re*—
Committee on Subordinate Legislation, association of Council Members with .. .. .. .. .. .. .. .. 303

Motor Vehicles Acts Administration—
Demands for Grants *re*— .. .. .. .. .. 212–271

Motor Vehicles Acts (Demand V)—
*See* Papers laid on the table of the House.

Motor Vehicles—
Question *re* —belonging to Corporation, cancellation of tax levied on— .. .. .. .. .. .. 115–116

Motor Vehicles Taxation Act, 1931—
*See* Papers laid on the table of the House.

Munusami Gounder, Sri P. M.—
Demands for Grants *re*—
Motor Vehicles Acts Administration .. .. .. .. 243–245, 270

Munusamy, Sri S. R.—
Demands for Grants *re*—
Compensation to Zamindars .. .. .. .. .. } 70–72
District Administration and Miscellaneous .. .. .. .. } 70–72
Land Revenue Department .. .. .. .. .. } 70–72
Registration Department .. .. .. .. .. } 70–72
Stamps Administration .. .. .. .. .. } 70–72

Muthiah Chettiar, Sri M. A.—
Demands for Grants *re*—
Community Development Projects .. .. .. .. 526–527
Miscellaneous Contributions and Assignments .. .. .. 526–527


N


Nagaraja Monigar, Sri S.—
Demands for Grants *re*—
Community Development Projects .. .. .. .. .. 505–507
Education .. .. .. .. .. .. .. .. .. 341–342
Miscellaneous Contributions and Assignments .. .. .. 505–507

Nallasivam, Sri K. R.—
Demands for Grants *re*—
Compensation to Zamindars .. .. .. .. .. } 34–36
District Administration and Miscellaneous .. .. .. .. } 34–36
Land Revenue Department .. .. .. .. .. } 34–36
Registration Department .. .. .. .. .. } 34–36
Stamps Administration .. .. .. .. .. } 34–36




PAGES

N—*cont.*


Nallaswami, Sri T. M.—
Demands for Grants *re*—
Capital Outlay on Civil Works .. .. .. .. } 432
Civil Works—Establishment and Tools and Plant .. .. } 432
Civil Works—Works .. .. .. .. .. .. } 432

Newspapers—
Question *re* Dailies, Weeklies and Monthlies, number of— .. .. 472

Nurses—
Question *re* Illness of —and midwives at frequent intervals, reasons for— .. .. .. .. .. .. .. .. 203

Nursing—
Question *re* Scholarships for—profession from Countess of Dufferin's Fund, number and nature of— .. .. .. .. 195


O


Official Language Committee—
Question *re* Details *re* reconstitution of— .. .. .. .. 14–15

Old people—
Question *re* Financial help to—over 80 years in 1959-60 .. .. 298

Orphanages—
Question *re* Working of—, complaint *re* .. .. .. .. 297

Orphans—
Question *re* Number of— .. .. .. .. .. .. .. 277–278


P


Paddy—
Question *re*—
—crops in Lalgudi taluk, study and research regarding the causes of pests to— .. .. .. .. .. .. .. 374
Removal of sales tax on— .. .. .. .. .. .. 479–480

Palanisami, Sri N. K.—
Demand for Grant *re* Education .. .. .. .. .. .. 305–309

Palaniswami Gounder, Sri K. N.—
Demands for Grants *re*—
Capital Outlay on Civil Works .. .. .. .. } 402–403
Civil Works—Establishment and Tools and Plant .. .. } 402–403
Civil Works—Works .. .. .. .. .. .. } 402–403

Palar Basin Rules—
Question *re* Cancellation of —, petition *re* .. .. .. .. 204

Panchayats—

Question *re*—

Presidents of —, visit of — to Madras City .. .. .. .. 387–388

'Utharakosa' Mangai' Panchayat Board area, provision of electric lights in — .. .. .. .. .. .. .. .. 474

Panchayat Union Councils—

Question *re*—

Chairman of —, use of jeeps in Blocks by — .. .. .. 381

Students' procession against formation of —, Madurai .. .. 382

Papers laid on the table of the House—

Civil Works, Establishment and Tools and Plant and Capital Outlay on Civil Works Demands, speech of Hon. Minister for Works on .. .. .. .. .. .. .. .. .. .. .. 457

Civil Works—Grants-in-aid Demand, speech of Hon. Minister for Local Administration on .. .. .. .. .. .. 457

Community Development Projects Demand, note on — .. .. 457

Demands for Grants for Excess Expenditure in 1957-58, notice of — .. .. .. .. .. .. .. .. .. .. .. 368

Demands for Grants for further expenditure and Detailed Supplementary Estimates thereof for 1960–61 .. .. .. .. 368

Demand for Grants for further expenditure for 1960-61 .. .. 368

Education Demand, note on .. .. .. .. .. .. .. 457

Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948, notification *re*—

Ryotwari Settlement of Estates in Arantangi taluk .. .. 180

Ryotwari Settlement of Estates in Srirangam taluk .. .. 180

Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1961 .. .. .. .. .. .. .. .. .. .. .. 271

Medical Demand, Note on — .. .. .. .. .. .. .. 271

Motor Vehicles Act Demand, note *re* .. .. .. .. .. .. 363

Motor Vehicles Taxation Act, 1931, notification exempting vehicle MSX 4601 .. .. .. .. .. .. .. .. .. .. 271

Motor Vehicles Taxation Act, 1931, Notification under — .. .. 88

Public Health Demand, Note on — .. .. .. .. .. .. 271

Statement of Demands for Grants for excess expenditure in 1957–58, introductory memorandum to — .. .. .. .. 368

Statement of Demands for Grants for excess expenditure for 1957–58, speech of Minister for Finance on — .. .. .. 368

Statements for Assurance Nos. 1037, 1099 and 1106 .. .. .. 180

Stationery and Printing Demand, speech of Hon. Minister for Electricity on — .. .. .. .. .. .. .. .. 457

Third Supplementary Estimates for 1960–61, speech of Minister for Finance on — .. .. .. .. .. .. .. .. 368

Village Courts (Amendment) Bill, 1961 with annexure .. .. .. 271

Peons—

Question *re* Residential — of officers, surrender of — .. .. 385–386



Pests—

*See* Paddy.

Petition—

Presentation of — to the House .. .. .. .. .. 117–118

Physical Directors—

Question *re* Scales of pay of —, revision of — .. .. .. .. 375

Point of Information—

*Re* Preventing a Member from entering Precincts of House .. 93–94

Police—

Question *re*—

— officers, departmental enquiry aaginst — in Kanyakumari .. 288–289

— officials and constables dismissed in 1959–60, number of — .. 376–377

— Sub-Inspector in Coimbatore district, seduction of college girl by — .. .. .. .. .. .. .. .. .. .. .. 468

Political prisoners—

Question *re* Release of — .. .. .. .. .. .. .. 478–479

Political sufferers—

Question *re* Relief to —, grant of .. .. .. .. .. 295–296

Ponnammal, Srimathi A. S.—

Demands for Grants *re*—

Compensation to Zamindars .. .. .. .. .. .. }
District Administration and Miscellaneous .. .. .. .. }
Land Revenue Department .. .. .. .. .. .. } 63–66
Registration Department .. .. .. .. .. .. }
Stamps Administration .. .. .. .. .. .. }

Education .. .. .. .. .. .. .. .. .. .. 334–337

Poultry—

Question *re* — Extension Centre, establishment of — at Alathampadi .. .. .. .. .. .. .. .. .. .. .. 389–390

Prize Bond Scheme—

Question *re* Number of persons employed under — .. .. .. 470

Public Health Demand—

*See* Papers laid on the table of the House.

Public Health—

Question *re* Health Scheme in rural areas, quantum of assistance received from UNICEF during Second Plan period for .. .. 470–471

Q

Questions and Answers—

Annamalai, Sri S. M.—

Question *re*—

Beedi workers, applicability of Factories Act to — consequent on judgment of High Court .. .. .. .. .. .. 463–464

PAGES

Questions and Answers—*cont.*

Annamalai, Sri S. M.—*cont.*

Question *re*—cont.

Bleeding Madras, details *re* manufacture and export of — .. 108
Central Seed Corporation, establishment of — .. .. .. 105
Chemical fertilizer, sale of — at fair price .. .. .. 187–189
Co-operative societies, award of prizes to — .. .. .. 95–96
Corporation vehicles, cancellation of tax levied on — .. .. 115–116
Deputy and Joint Registrars, re-employment of retired — .. 281
Drugs Act, amendment of — .. .. .. .. .. 1
Election expenses, reduction of — .. .. .. .. 11
Javadu Hills, construction of houses in — .. .. .. 102–108
Javadu Hills, supply of electricity to villages in — .. .. 390
Lands rendered surplus after fixation of land ceiling, survey of extent of — .. .. .. .. .. 474–475
Orphanages—Working of —, complaint *re* .. .. .. 297
Village Courts under Panchayats Act, 1958, establishment of — .. .. .. .. .. .. .. .. 371

Arasan, Sri P.—

Question *re* Rent Courts, number of cases dealt with by — in Chidambaram taluk .. .. .. .. .. .. 13

Arumughasamy, Sri M. A. B.—

Question *re*—

Dam across Mangarai river, construction of — .. .. 464
Sub-Registrar's Office, opening of — at Ayyampalayam .. .. 2

Chinnadurai, Sri P. S.—

Question *re*—

Kannan of Katteri, reward for killing a tiger .. .. .. 190
Lands in Tiruppattur taluk, grant of patta to — .. .. 465

Correction to answer to a supplementary — .. .. .. .. 210

Daniel, Sri T. T.—

Question *re*—

Coconut palm, average yield of nuts per — districtwise .. 372–373
Contractors (Highways Department), production of sales tax clearance certificate by — .. .. .. .. .. 96
Educational concessions in Kanyakumari district, income limit for grant of — .. .. .. .. .. .. .. 9–10
Land-slides in Kanyakumari district, occurrence of — .. 7
Medical Registration Act, 1914, extension to Kanyakumari district .. .. .. .. .. .. .. .. 103–104
Midday meal scheme in high schools, assignment of poramboke lands for — .. .. .. .. .. .. .. 2–3
Nagercoil District Hospital, improvement of — .. .. 190–191
Oil in Kanyakumari district, survey for exploration of — .. 483–484
Orphans, deaf, etc.—, number of — .. .. .. .. 277–278



PAGES

Questions and Answers—*cont.*

Daniel, Sri T. T.—*cont.*

Question *re*—cont.

Rice, rise in price of — .. .. .. .. .. .. .. 206–207
Slum clearance in Madras City, scheme for — .. .. 465–466

Govindasamy, Sri A.—

Question *re* Survey Computor Draftsman, memorandum *re* pay scales of — .. .. .. .. .. .. .. .. 13

Kalyanasundaram, Sri M.—

Question *re*—

Collectors, travelling allowance and dearness allowance drawn by — .. .. .. .. .. .. .. .. .. 191–192
Fair price shops, number of — opened in Tiruchirappalli district .. .. .. .. .. .. .. .. 207
Neyveli Briquetting Plant, commencing of production by — .. 199
Neyveli Thermal Station, commissioning of .. .. .. 199–200

Kothandaraman, Sri V. K.—

Question *re*—

Agricultural College, starting of — near Sathanur Dam .. 296–297
Aluminium Factory, establishment of — at Mettur .. .. 205
Artesian wells, sinking of — in North Arcot District during Second Five-Year Plan period .. .. .. .. .. 192
Beedi workers—Wage Board for —, appointment of — .. 287–288
Bleeding Madras, steps taken to clear accumulated stocks of — .. .. .. .. .. .. .. .. .. 108–111
Bonus to workers—grant of — .. .. .. .. .. 291
Central Jail, Vellore, extraction of oil through 'chekku' in —. 477–478
Chairmen of Panchayat Union Councils, use of jeeps in Blocks by — .. .. .. .. .. .. .. .. .. 381
Chockalingam, Panchayat Board member, beating of — in Tiruchirappalli Central Jail .. .. .. .. .. 466–467
Co-operative societies, prohibition of a person from being member of more than one — .. .. .. .. .. 484–485
Electrical Engineer (General) office, payment of arrears of revised scales of pay to employees of — .. .. .. 480
Electricity Board, Accounts Subordinates Union of —, action taken on demands of — .. .. .. .. .. .. 200
Family Planning Scheme, compulsory Vasectomy operation on tuberculosis and leprosy patients under — .. .. .. 11–12
Government hospitals, telephone facilities for patients in — .. 11
Gudiyatham Drainage Scheme, implementation of — .. .. 7
Handpounding Rice Workers' Co-operative Society, Limited (North Madras), misappropriation in — .. .. .. .. 378
Harijan colony, construction of — in Melpuzidiyur .. .. 467
Harijan Sevaks in Chengam taluk, award of medals to — in 1960 .. .. .. .. .. .. .. .. .. 475–476
Hospitals, calling bells in —, installation of — .. .. .. 197

Q—*cont.*


Questions and Answers—*cont.*

**Kothandaraman, Sri V. K.**—*cont.*

Question *re*—cont.

Industrial Establishments, participation of labour in administration of — .. .. .. .. .. .. .. 208–209
Kindergarten schools, number of — .. .. .. .. 294–295
Medical graduates, compulsory service by — in Government hospitals .. .. .. .. .. .. .. .. 10
Medical students, stipends to — .. .. .. .. 196–197
Nurses and midwives, reasons for illness of — at frequent intervals .. .. .. .. .. .. .. 203
Paddy, removal of sales tax on — .. .. .. .. 479–480
Panchayat Presidents, visit to Madras City .. .. .. 387–388
Residential peons of officers, surrender of — .. .. .. 385–386
Road to Aravatla village, construction of — .. .. .. 373–374
Roads damaged on account of rains in November 1960, repairs to — .. .. .. .. .. .. .. .. 382
Small-scale industries, aid to — by State Bank .. .. .. 295
Survey Computor Draftsman, memorandum *re* pay scales of — .. .. .. .. .. .. .. .. 13
Tuberculosis sanatoria, number of — to be constructed during Third Plan period .. .. .. .. .. .. 485
Vellore Hospital, separate transformer to — .. .. .. .. 94
X-ray units in Government hospitals, number of — districtwar. 13–14

**Lazar, Sri S.**—

Question *re*—

Paddy crops in Lalgudi taluk, study and research *re* causes of pests to — .. .. .. .. .. .. .. 374
Water-supply in Tiruchirappalli, augmenting of — .. .. 94–95

Manickam, Sri P. G.—

Question *re*—

Butter-*cum*-milk factory, starting of — .. .. .. .. 280
Harijan colonies, street-lighting of — .. .. .. .. 3-4
Milk and milk products, schemes *re* production of — .. .. 278–280

Marudachalam, Sri N.—

Question *re*—

Keelavani Weavers' Co-operative Society, misappropriation in — .. .. .. .. .. .. .. .. .. 96
Retrenched textile workers, grant of half-salary to — .. .. 280–281

Nallasivam, Sri K. R.—

Question *re*—

Lower Bhavani area, constitution of Agricultural Research Association for — .. .. .. .. .. .. 193–194

**Pakkirisami Pillai, Sri S.**—

Question *re* S.S.L.C. Examination in October 1960, percentage of failures in — .. .. .. .. .. .. .. 281–283






Q—*cont.*


Questions and Answers—*cont.*

Palanisami, Sri N. K.—

Question *re*—

Actors and technicians, award of prizes to — .. .. .. 378–379
Agricultural production programme, aid to panchayats for — .. 283–285
Atomic Power Plant, location of — at Madras .. .. .. 104–105
Bus service between Chamarajanagar and Coimbatore, running of — .. .. .. .. .. .. .. .. .. 391
Drainage schemes, aid to municipalities for execution of — .. 485
Five-Year Plan (Third), industrialisation schemes in — period. 200
Homœopathic doctors, appointment of — in Rural and Local Fund dispensaries .. .. .. .. .. .. .. 96–97
I.A.S. officers, creation of selection grade posts on super-time scale for — .. .. .. .. .. .. .. .. 388–389
Panchayat Union Council, Madurai, students' procession against formation of — .. .. .. .. .. .. 382
Physical Directors, revision of scales of pay of — .. .. 375
Police Sub-Inspector in Coimbatore district, seduction of college girl by — .. .. .. .. .. .. .. 467–468
Political prisoners, release of — .. .. .. .. .. 478–479
Regional Engineering College, location of — .. .. .. 389
State Electricity Board, appointment of a Labour Relations Officer in — .. .. .. .. .. .. .. 194

**Rajathi Kunchithapatham, Srimathi**—

Question *re*—

Artisan Repatriates from Ceylon, loans to — .. .. .. 468
Lady typists in Block Development offices in Tirunelveli district, employment of — .. .. .. .. .. 375
Melapalayam and Ammapet Weavers' Societies, amount allotted for repair of houses of members of — .. .. 97

**Ramalinga Padayachi, Sri S.**—

Question *re* Sub-Registrar's office, opening of — at Sendhurai .. 391–392

**Ramamirtha Thondaman, Sri T. R.**—

Question *re*—

Bridge across Pazhavar—Construction of — .. .. .. 285
Manganallur-Veerasolan road, gravelling of — .. .. .. 468–469

**Ramaswami, Sri T. S.**—

Question *re*—

Adult education, details *re* .. .. .. .. .. .. .. 462–463
Cheating of public — by persons posing as astrologers, etc. .. 291–293
Excise Department officials in Kanyakumari district, opening of fire by — .. .. .. .. .. .. .. .. 392
Harijans in Kanyakumari district, number of — evicted or served with notice to vacate poramboke lands .. .. 459–460
Harijans (landless) in Kanyakumari district, extent of Government lands given to — .. .. .. .. .. .. 460–462
Housing scheme at Koothapalli, details *re* .. .. .. 112

Questions and Answers—*cont.*

Ramaswami, Sri T. S.—*cont.*

Question *re*—cont.

I.A.S. officers, creation of selection grade posts on super-time scale for — .. .. .. .. .. .. .. .. 388–389

Iron and steel factories in North, visit by Chief Minister .. 293

Kanyakumari Devaswom Board, travelling allowance drawn by members of — .. .. .. .. .. .. .. .. 392

Liquor permits, number of persons holding — .. .. .. 382–384

Lower Bhavani, Amaravathi and Mettur Reservoir Projects area and volume silted up in catchment area of — .. .. 480–481

(Double-member) Parliamentary and Assembly Constituencies, splitting up of — .. .. .. .. .. .. .. 379–381

Police officers (Kanyakumari), departmental enquiries against — .. .. .. .. .. .. .. .. 288–289

Punjab Cattle — free supply of — to breeders .. .. .. 297–298

Reserve forest lands in Kanyakumari district, lease of — for rubber, softwood and teak plantations .. .. .. 375–376

Rural Development Department, expenditure incurred on — during 1958-60 .. .. .. .. .. .. .. .. 285–286

Salt factories in Kanyakumari, collection of tax from — .. 105–106

Sri Ranganathar deity of Srirangam, devotees of —, objection to putting of Thenkalai namam on forehead of — .. .. 469

State Transport, number of bodies built in .. .. .. 98–99

Kilpauk Medical College, misunderstandings between Dean and students of — .. .. .. .. .. .. .. 99

Ranganatha Mudaliar, Sri S.—

Question *re* Archæological department, establishment in every State .. .. .. .. .. .. .. .. 4–5

Rasheed, Sri A. A.—

Question *re*—

Agitation for renaming Madras State as Tamil Nadu, number of persons prosecuted and convicted .. .. .. .. 384–385

Brothels, raiding of — under an amendment to Suppression of Immoral Traffic in Women and Girls Act, 1956 .. .. 194–195

Bus-stands in Madras City, constuction of — .. .. 469–470

Cheating of public — by persons posing as astrologers, etc. .. 291–293

High Court Judges, appointment of — from All-India panel .. 289

Mufassal bus-stand in Madras City, shifting of — .. .. 386–387

Palar Basin Rules, petition *re* cancellation of — .. .. 204

Persons over 80 years, financial help to — in 1959-60 .. .. 298

Police officials and constables dismissed in 1959-60, number of — .. .. .. .. .. .. .. .. 376–377

Political sufferers, relief to — .. .. .. .. .. .. 295–296

Professor of Geography, Presidency College, enquiry *re* conduct of — .. .. .. .. .. .. .. .. 286–287

Sex change of, cases registered in Government hospitals *re* .. 201





Questions and Answers—*cont.*

Sampath, Sri T.—

Question *re* Rice, export and import of —, short supply of railway waggons for .. .. .. .. .. .. .. 207–208

Sarathi, Sri M. P.—

Question *re*—

Census work, grant of honoraria to teachers engaged in — .. 481

Drainage scheme, implementation of — in Vellore .. .. 8

Iron and steel materials, allotment of — for agriculture and small-scale industries .. .. .. .. .. .. 113–115

Residential peons of officers, surrender of — .. .. .. 385–386

Settlement Inspectors, number of persons trained as — at Thanjavur .. .. .. .. .. .. .. 116

Small Saving and Prize Bond Schemes, number of persons employed under — .. .. .. .. .. .. 470

Sattanatha Karayalar, Sri K.—

Question *re*—

Agitation for renaming Madras State as Tamil Nadu, number of persons prosecuted and convicted .. .. .. .. 384–385

Health schemes in rural areas, quantum of assistance received from UNICEF during Second Plan period for — .. .. 470–472

Iron, quantity allotted to Madras State .. .. .. .. 112–115

Medicinal herbs, survey of .. .. .. .. .. .. 5

Nursing profession scholarships for — from Countess of Dufferin's Fund .. .. .. .. .. .. .. 195

Schools run by State Social Welfare Advisory Board, number of — .. .. .. .. .. .. .. .. 377

Slum clearance in Madras City, scheme for — .. .. 465–466

Students of other States, scholarships to —, grant of — .. 289–290

Subsidised Industrial Housing Scheme, particulars *re* — .. 99–100

Weekly holiday for workers, particulars *re*— .. .. .. 106–107

Subbiah, Sri V.—

Question *re*—

Agricultural implements, difficulty in the purchase of — by agriculturists, .. .. .. .. .. .. 482–483

Kovilpatti Railway station, improvements to — .. .. 471–472

Thangavelu, Sri S.—

Question *re* Treasury office at Panruti, permanent retention of .. 101–102

Thiagarajan, Sri N. R.—

Question *re*— .. .. .. .. ..

Bus service (Express), details *re* running of — in 1960 .. 5–6

Dailies, Weeklies and Monthlies, number of — .. .. .. 472

Dairy farm, establishment of — at Madurai .. .. .. 197

Farm — setting up of — in Varushanadu .. .. .. 298–299

Hospitals, issue of receipts for cash collections in — .. .. 8

Iron and steel factories in North—Visit by Chief Minister — 293

Vaigai Dam, particulars *re* water level in — .. .. .. 117

Q—*cont.*

Questions and Answers—*cont.*

Vedarathnam, Sri A.—

Question *re*—

Agricultural loans, reduction in rate of interest on — .. .. 116
Central Education Advisory Board, decisions of — .. .. 11
Coconut cultivation—Steps taken for increasing of — .. 299-301
Cyclone relief housing scheme, number of houses constructed in Vedaranyam block under — .. .. .. .. .. 107-108
Health Education Council, constitution of — .. .. .. 8-9
Kundah Hydro-Electric Scheme, decision of Canadian experts *re* assistance for .. .. .. .. .. .. .. 6
Malaria eradication, amount allotted to Madras State from American aid .. .. .. .. .. .. .. 201-203
Official Language Committee, details *re* reconstitution of — .. 14-15
Poramboke lands in Tiruthuraipoondi taluk, extent of — .. 473-474
Poultry Extension Centre, establishment of — at Alathampadi. 389-390
Sethu Samudram Project, Captain Bevies's report on — .. 100-101
Taxis, admission of — inside Madras Egmore station .. 198
Teachers' Training schools—Suspension of teaching of Hindi in — .. .. .. .. .. .. .. .. .. 287
Tractor Factory—Starting of—Details *re* .. .. .. 290-291
U.N.O.—Visit by Industries Minister—Details *re* .. .. 293-294
Vedaranyam Block, misappropriation in — .. .. .. 377-378
Village Industries Unit, starting of — in Vedaranyam Block .. 392-393

Vinayakam, Sri K.—

Question *re*—

Sub-treasury, establishment of — attached to Independent Deputy Tahsildar's office at Pallipet .. .. .. .. 199
'Utharakosa Mangai' Panchayat Board area, provision of electric lights in — .. .. .. .. .. .. .. 474

R

Railways—
Question *re* Kovilpatti Railway station, improvements to — .. 471-472

Ramaiah, the Hon. Sri V.—

Demands for Grants *re*—
Motor Vehicles Acts Administration .. .. .. .. 212, 213, 251-252, 262-270
Registration Department .. .. .. .. .. .. .. 17, 78-80
Stationery and Printing .. .. .. .. .. .. .. 446, 453-456

Ramalinga Padayachi, Sri S.—

Demands for Grants *re*—
Community Development Projects .. .. .. .. .. 509-510
Miscellaneous contributions and assignments .. .. .. 509-510



R—*cont.*

Ramamirtha Thondaman, Sri T. R.—

Demands for Grants *re*—

Community Development Projects .. .. .. .. .. 507-509
Education .. .. .. .. .. .. .. .. .. 340-341
Miscellaneous contributions and assignments .. .. .. 507-509

Ramaswami, Sri T. S.—

Demand for Grant *re*—
Education .. .. .. .. .. .. .. .. .. 343-344

Ramasami Thevar, Sri S—

Demands for Grants *re*—

Capital Outlay on Public Health, Medical and Public Health .. 140-142

Compensation to Zamindars; District Administration and Miscellaneous; Land Revenue Department; Registration Department; Stamps Administration .. 50-52

Education .. .. .. .. .. .. .. .. .. 348-349

Ramaswamy Mudaliar, Sri V. K.—

Demands for Grants *re*—
Capital Outlay on Civil Works; Civil Works—Establishment and tools and plant; Civil Works—Works .. 433-437, 440, 442
Capital Outlay on Public Health, Medical and Public Health .. 166-169
Compensation to Zamindars; District Administration and Miscellaneous; Land Revenue Department; Registration Department; Stamps Administration .. 76-77
Motor Vehicles Acts Administration .. .. .. .. 260-262
Stationery and Printing .. .. .. .. .. .. 446-447

Ranganatha Mudaliar, Sri S.—

Demands for Grants *re*—

Capital Outlay on Public Health, Medical and Public Health .. 135-138
Community Development Projects .. .. .. .. .. 510-512
Education .. .. .. .. .. .. .. .. .. 322-325
Miscellaneous contributions and assignments .. .. .. 510-512

Rasheed, Sri A. A.—
Question *re* Iron and Steel factories in North—Visit by Chief Minister .. .. .. .. .. .. .. .. .. 293

Registration—
Question *re* Sub-Registrar's office, opening of — at Ayyampalayam. 2

PAGES

R—*cont.*

**Rent Courts—**
Question *re* number of cases dealt with by — in Chidambaram taluk .. .. .. .. .. .. .. .. .. 13

**Rice—**
Question *re*—
Export and import of — short supply of railway wagons for .. 207–208
Price of — rise in — .. .. .. .. .. .. .. .. 206–207

**Road(s)—**
Question *re*—
Construction of — to Aravatla village .. .. .. .. 373–374
Manganallur-Veerasolan Road, gravelling of — .. .. .. 468–469
Repairs to — damages on account of rains in November 1960 .. 382

**Rulings and Observations of the Chair—**
Adjournment Motion *re*—
*Failure to arrest rise in prices of foodgrains.*—Consent withheld on the grounds that the matter was a continuing one and could not be brought as an adjournment motion and the Member had other ways of raising the matter .. .. .. .. 393

Debate—
It is not desirable for Members to refer to their own matters and their own properties .. .. .. .. .. .. .. 55
Personal references should be avoided .. .. .. .. 145

Decorum—
If a Member wants to say something, it is not in order for him to murmur from his seat. He should rise from his seat on a point of order and say what he wishes to state .. .. .. 110

Petitions to the Assembly—
Petitions presented to the Assembly should conform to the Assembly Rules governing their presentation and the Member presenting them cannot make a long speech and there can be no debate on the petition presented .. .. .. .. 117–118

Precincts of the House—
On a Member drawing the attention of the Speaker to the fact that he was prevented by two men, believed to be military personnel, from entering the precincts of the House and enquiring whether it was in order for Members to be prevented from entering the House to discharge their duties as legislators, the Chair observed that every Member was expected to carry with him always the Pass with his photograph affixed to it, issued to him, for identification. The Speaker also observed that he would enquire into the matter and let the House know the result of the enquiry later .. .. .. .. .. 93

Objectionable expressions—
When objection was taken to the use of the expression 'சபையில் கூடத்தான் இப்பொழுது தரம் குறைந்திருக்கிறது' by a Member, the Chair observed that the Member should not use such words .. .. .. .. .. .. .. .. 342



PAGES

R—*cont.*

**Rulings and Observations of the Chair—*cont.***
Questions and Answers—
*Catching the eye of the Chair*—Members all over the world have most often been unsuccessful in catching the eye of the Chair. 110
In spite of the rule that Members should rise from their seats and say that they put the question, in actual practice, the Chair has allowed as a matter of concession that it is enough if the Members rise from their seats. But, when a Member put a question on behalf of an absentee-Member, it is not enough for him to merely stand in his seat. He should rise and say that he put the question on behalf of Sri .. .. .. .. 95
Referring to requests by Members and Ministers for postponement of their respective questions, the Chair observed that it will be better if the Ministers give one week's notice *re* postponement of their questions, as otherwise it will cause considerable inconvenience to the Chair. A Member can always authorize another Member to put the questions on his behalf and he need not be necessarily be present in the House always. 1
*Supplementary questions*—If a supplementary does not arise from the main question, the Minister need not answer it .. .. 470
It is not possible for all Members to put supplementary questions on all questions. Members who have given notice of questions will be given two chances and the Leader of the Opposition deserves favourable consideration. The other Members will be given a chance provided they catch the eye of the Chair and the Chair also considered that they can be given a chance .. 111
Supplementaries referring to other States are out of order .. 105
Supplementaries should be direct .. .. .. .. .. 104
Supplementaries containing only a suggestion for action required no answer .. .. .. .. .. .. .. .. 6

Unparliamentary expressions—
Use of the expression 'வடிகட்டின முட்டாள்தனம்' Held unparliamentary .. .. .. .. .. .. .. .. 251
Use of the word 'மடசாம்பிராணி' Held unparliamentary .. 142–143

S

**Sadasivam, Sri S.—**
Demands for Grants *re*—
Community Development Projects .. .. .. .. .. 512–514
Miscellaneous contributions and assignments .. .. .. 512–514

**Sankaran, Sri V.—**
Demands for Grants *re*—
Capital Outlay on Civil Works .. .. .. .. .. } 409–410
Civil Works—Establishment and tools and plant .. .. .. }
Civil Works—Works .. .. .. .. .. .. }

**Santhanam, Sri P. S.—**
Demands for Grants *re*—
Compensation to Zamindars .. .. .. .. .. .. } 41–44
District Administration and Miscellaneous .. .. .. .. }
Land Revenue Department .. .. .. .. .. .. }
Registration Department .. .. .. .. .. .. }
Stamps Administration .. .. .. .. .. .. .. }

PAGES

S—*cont.*


Sathiyavanimuthu, Srimathi—

Demands for Grants *re*—

Capital Outlay on Public Health, Medical and Public Health .. 126–130
Education .. .. .. .. .. .. .. .. .. 332–334

Sattanatha Karayalar, Sri K.—

Demands for Grants *re*—

Capital Outlay on Civil Works .. .. .. .. .. } 394,
Capital Works—Establishment and tools and plant .. .. } 418–420
Capital Works—Works .. .. .. .. .. .. } 423
Capital Outlay on Public Health, Medical and Public Health .. 119, 120, 162–166, 179
Education .. .. .. .. .. .. .. .. .. 325–327
Stationery and Printing .. .. .. .. .. .. 446, 451–453

Petition, presentation of — to the House .. .. .. .. .. 118

Scholarship—

Question *re* grant of — to students of other States .. .. .. 289–290

Schools—

Question *re*—

Kinder-garten—number of — .. .. .. .. .. .. 294–295
Mid-day Meals Scheme, assignment of poramboke lands for — .. 2–3
— run by State Social Welfare Advisory Board, number of — .. 377
Teachers' training —, suspension of teaching of Hindi in — .. 287

Selvarajan, Sri M. S.—

Demands for Grants *re*—

Capital Outlay on Public Health, Medical and Public Health .. 155–157
Education .. .. .. .. .. .. .. .. .. 345–348
Motor Vehicles Acts Administration .. .. .. .. 230–232

Selvaraj, Sri M.—

Demands for Grants *re*—

Capital Outlay on Civil Works .. .. .. .. .. }
Civil Works—Establishment and tools and plant .. .. .. } 397–399
Civil Works—Works .. .. .. .. .. .. }

Community Development Projects .. .. .. .. .. 502–505
Miscellaneous contributions and assignments .. .. .. 502–505
Motor Vehicles Acts Administration .. .. .. .. 219–223

Services—

Question *re* Survey Computor Draughtsman, memorandum *re* pay scales of — .. .. .. .. .. .. .. .. .. 13

Sethu Samudram Project—

Question *re*—

Captain Devies's report on — .. .. .. .. .. 100–101




PAGES

S—*cont.*


Settlement Inspectors—

Question *re* number of persons trained as — at Thanjavur .. .. 116

Sex—

Question *re* change of —, cases registered in Government hospitals. 201

Shanmugam, Sri P. V.—

Demand for Grant *re* Motor Vehicles Acts Administration .. .. 237–240

Slum(s)—

Question *re* clearance in Madras City, scheme for —, .. .. 465–466

Small-pox—

Statement *re* inauguration of scheme to eradicate — in City and Chingleput district .. .. .. .. .. .. .. .. 240

Small Saving Scheme—

Question *re* number of persons employed under — .. .. .. 470

Somasundaram, Sri M. K.—

Demands for Grants *re*—

Capital Outlay on Public Health, Medical and Public Health .. 132–133
Compensation to Zamindars .. .. .. .. .. .. }
District Administration and Miscellaneous .. .. .. }
Land Revenue Department .. .. .. .. .. .. } 47–49
Registration Department .. .. .. .. .. .. }
Stamps Administration .. .. .. .. .. .. }

Soundaram Ramachandran, Dr. (Srimathi)—

Demands for Grants *re*—

Community Development Projects .. .. .. .. .. 500–502
Miscellaneous contributions and assignments .. .. .. 500–502

Srinivasa Iyer, Sri R.—

Demands for Grants *re*—

Capital Outlay on Public Health, Medical and Public Health .. 150–155
Community Development Projects .. .. .. .. .. 514–518
Compensation to Zamindars .. .. .. .. .. .. }
District Administration and Miscellaneous .. .. .. }
Land Revenue Department .. .. .. .. .. .. } 29–32
Registration Department .. .. .. .. .. .. }
Stamps Administration .. .. .. .. .. .. }
Miscellaneous contributions and assignments .. .. .. 514–518
Motor Vehicles Acts Administration .. .. .. .. .. 247–250
Stationery and Printing .. .. .. .. .. .. .. 447–449

Stationery and Printing Demand—

*See* Papers laid on the table of the House.

Steel—

Question *re* allotment of — materials for agriculture and small-scale industries .. .. .. .. .. .. .. .. .. 113–118

PAGES

S—*cont*

**Suares, Srimathi A.—**

**Demand for Grant** *re*—

Capital Outlay on Public Health, Medical and Public Health .. 138–140

Subbiah, Sri T. K.—

Demands for Grants *re*—

Compensation to Zamindars } 39–41
District Administration and Miscellaneous }
Land Revenue Department }
Registration Department }
Stamps Administration }

Subbiah, Sri V.—

Demands for Grants *re*—

Capital Outlay on Civil Works } 404–406
Civil Works—Establishment and tools and plant }
Civil Works—Works }

Capital Outlay on Public Health, Medical and Public Health .. 119, 120–[illegible], [illegible]

Compensation to Zamindars } 26–29
District Administration and Miscellaneous }
Land Revenue Department }
Registration Department }
Stamps Administration }

Education .. 337–339

Motor Vehicles Acts Administration .. 232–234

Subramaniam, Sri M. P.—

Demands for Grants *re*—

Capital Outlay on Civil Works } 430–432
Civil Works—Establishment and tools and plant }
Civil Works—Works }

**Subramaniam, Sri R.—**

Demand for Grant *re*—

Capital Outlay on Public Health, Medical and Public Health .. 124–126

Subramaniam, The Hon. Sri C.—

Demands for Grants *re*—

Community Development Projects .. 486, 487, 531–540

Education .. 304, 355–367

Miscellaneous contributions and assignments .. 487, 531–540



PAGES

S—*cont.*

Subramaniam, the Hon. Sri C.—*cont.*

Demands for grants for excess expenditure in 1957–58, presentation of .. 210

Motion *re* Association of Council Members with Committee on Subordinate Legislation .. 303

Supplementary Estimates for 1960–61 (Final), presentation of .. 210–212

Sub-Registrar's office—

Question *re* opening of — at Sendhurai .. 391–392

Sundara Bharathi, Sri Sowdi S.—

Demands for Grants *re*—

Compensation to Zamindars } 66–67
District Administration and Miscellaneous }
Land Revenue Department }
Registration Department }
Stamps Administration }

Supplementary Estimates for 1960–61 (Final)—

Presentation of — .. 210–212

Swamikkannu Padayachi, Sri S.—

**Demands for Grant** *re*—

Compensation to Zamindars } 33–34
District Administration and Miscellaneous }
Land Revenue Department }
Registration Department }
Stamps Administration }

T

Tamil Nadu—

Question *re* agitation for renaming Madras State as —, number of persons prosecuted and convicted .. 384–385

Taxis—

Question *re* admission of — inside Madras Egmore Station .. 198

Technicians—

Question *re* Prizes to — award of — .. 378–379

Temples—

Question *re* Srirangam Sri Ranganathar Deity, devotees of — objection to putting of Thenkalai Namam on forehead of — .. 469

Textiles—

Question *re* retrenched workers, grant of half-salary to — .. 280–281

Thermal Station—

Question *re* Neyveli —, commissioning of .. 199–200

Thiagarajan, Sri N. R.—

Demands for Grants *re*—

Capital Outlay on Public Health, Medical and Public Health .. 142–145

PAGES

T—*cont.*

Thiagarajan, Sri N. R.—*cont.*

Demands for Grants *re*—*cont.*

Compensation to Zamindars .. .. .. .. .. .. }
District Administration and Miscellaneous .. .. .. }
Land Revenue Department .. .. .. .. .. .. } 52–56
Registration Department .. .. .. .. .. .. }
Stamps Administration .. .. .. .. .. .. }

Third Supplementary Estimates for 1960–61—

*See* Papers laid on the table of the House.

Tiger—

Question *re* killing of—by Kannan of Katteri, award to— .. 190

Transport—

Question *re*—

Bus service between Chamarajanagar and Coimbatore, running of— .. .. .. .. .. .. .. .. 391

Bus service (express), proposal for running of—in 1960 .. 5–6

State—number of bodies built in— .. .. .. .. 98–99

Treasury Office—

Question *re* permanent retention of—at Panruti, .. .. .. 101–102

Treasury (Sub)—

Question *re* establishment of—attached to Independent Deputy Tahsildar's office at Pallipet .. .. .. .. .. .. 199

Tuberculosis Sanatoria—

*See* Hospitals and Dispensaries.

U

Udayarpalayam taluk—

Havoc caused by monsoon in—of Tiruchirappalli district, Minister's attention called to— .. .. .. .. .. .. .. .. 302

United Nations' Organization—

Question *re* visit to—by Industries Minister—details *re* .. .. 293–294

V

Vaigai Dam—

*See* Irrigation.

Vedarathnam, Sri A.—

Demand for Grant *re*—

Community Development Projects .. .. .. .. .. 518–521
Education .. .. .. .. .. .. .. .. .. 318–320
Miscellaneous contributions and assignments .. .. .. 518–521

Village Courts (Amendment) Bill, 1961—

*See* Papers laid on the table of the House.

Village Courts—

Question *re* establishment of—under Panchayats Act, 1958 ..



PAGES

V—*cont.*

Village Industries—

*See* Industries.

Vinayakam, Sri K.—

Demands for Grants *re*—

Capital Outlay on Civil Works .. .. .. .. .. }
Civil Works—Establishment and tools and plant .. .. .. } 428–429
Civil Works—Works .. .. .. .. .. .. .. }

Point of information *re*—

Preventing a Member from entering precints of House, .. .. 93

Viswanathan, Sri K. R.—

Demands for Grants *re*—

Capital Outlay on Public Health, Medical and Public Health .. 145–147
Compensation to Zamindars .. .. .. .. .. .. }
District Administration and Miscellaneous .. .. .. .. }
Land Revenue Department .. .. .. .. .. .. } 56–58
Registration Department .. .. .. .. .. .. }
Stamps Administration .. .. .. .. .. .. .. }

Udayarpalayam taluk, Tiruchirappalli district, calling Minister's attention to destruction of crops caused by monsoon in— .. .. 302

W

Wage Board—

Question *re* appointment of—for beedi workers .. .. .. 287–288

Water-supply—

Question *re* augmentation of—in Tiruchirappalli .. .. .. 94–95

Weavers—

*See* Co-operative Societies.

William, Sri M.—

Demands for Grants *re*—

Community Development Projects .. .. .. .. .. 490–492
Education .. .. .. .. .. .. .. .. .. 365
Miscellaneous constributions and assignments .. .. .. 490–492

D
V211,31 N61
N52.4232
61384

# LIST OF AGENTS FOR THE SALE OF MADRAS GOVERNMENT PUBLICATIONS.

## IN MADRAS CITY.

Messrs. ACCOUNT TEST INSTITUTE, Egmore, Madras-8.
Messrs. CITY BOOK COMPANY, Madras-4.
Messrs HIGGINBOTHAMS, LIMITED, Madras-2.
Messrs. NEW CENTURY BOOK HOUSE, Madras-2.
Messrs. P. VARADACHARI & Co., Madras-1.
Messrs. THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY Madras-1.
Messrs. VENKATARAMA & Co., Madras-1.
Messrs. M. DORAISWAMY MUDALIAR & Co., Madras-1.
Messrs. C. SUBBIAH CHETTY & SONS, Madras-5.
Sri S. S. SRINIVASARAGHAVAN, Royapetta, Madras-14.
Messrs. THE FREE INDIA CO-OPERATOR'S AGENCY, Madras-4.
Messrs. PALANI & Co., Triplicane, Madras-5.

## IN MUFASSAL OF MADRAS STATE.

Sri E. M. GOPALAKRISHNA KONE, Madurai, Madurai district.
Messrs. THE ORIENTAL BOOK HOUSE, Madurai.
Messrs. VIVEKANANDA PRESS, PRINTER, PUBLISHER AND BOOKSELLER, Madurai.
J. J. M. BOOK DEPOT AND STATIONERY EMPORIUM, Madurai.
Sri A. VENKATASUBBAN, Vellore, North Arcot district.
Messrs. MUTHAMIZH MANRAM, Mayuram.
Messrs. BHARATHA MATHA BOOK DEPOT, Thanjavur, Thanjavur district.
Messrs. P. V. NATHAN & Co., Kumbakonam, Thanjavur district.
Messrs. APPAR BOOK STALL, Thanjavur.
Messrs. P. N. SWAMINATHASIVAM & Co., Pudukkottai, Tiruchirappalli district.
Messrs. PALANI PRACHURAM, BOOKSELLERS, Clock Tower, Pudukkottai.
Messrs. S. KRISHNASWAMI & Co., Tiruchirappalli district.
Messrs. PALANIAPPA BROTHERS, Tiruchirappalli district.
Sri M. DURAIRAJ, CENTRAL STORES, Main Road, Manapparai, Tiruchirappalli district.
Sri S. R. SUBRAMANIA PILLAI, Tirunelveli, Tirunelveli district.
Messrs. NELLAI PUTHAKA NILAYAM, BOOK SELLERS, 10, Thana Mana Buildings, Tirunelveli Junction.
Sri B. ARULDOSS, Villupuram Town, South Arcot district.
Sri V. B. GANESAN, Villupuram, South Arcot district.
Messrs. THE EDUCATIONAL SUPPLIES COMPANY, Coimbatore (R.S. Puram).
Messrs. VASANTHAM STORES, BOOKSELLERS, Cross-cut Road, Coimbatore.
Messrs. MERCURY BOOK COMPANY, 223, Raja Street, Coimbatore.
Messrs. SIVALINGA VILAS, BOOK DEPOT, Erode, Coimbatore district.
Messrs. ARIVU NOOLAGAM, BOOKSELLERS, Market, Ootacamund, Nilgiris.
Sri S. M. JAGANNATHAN, BOOKSELLER AND PUBLISHER, Nagercoil, Kanyakumari district.

## IN OTHER STATES.

Messrs. H. VENKATARAMIAH & SONS, VIDYANIDHI BOOK DEPOT, Mysore, South India.
Messrs. PANCHAYAT SAMACHAR, Gutala, West Godavari district.
Messrs. BOOK-LOVERS (PRIVATE), LIMITED, Guntur and Hyderabad.
Messrs. JANATHA AGENCIES, BOOKSELLERS, Gudur.
Messrs. M. SESHACHALAM & Co., Masulipatnam, Krishna district.
Messrs. THE COMMERCIAL LINKS, Governorpet, Vijayavada, Krishna district.
Messrs. GUPTHA BROTHERS, Visakhapatnam.
Messrs. JAIN BOOK AGENCY, New Delhi-1
Messrs. INTERNATIONAL BOOK HOUSE, Trivandrum.
Messrs. C. M. JOSEPH & SONS, Trichur.

PRINTED AND PUBLISHED BY THE CONTROLLER OF STATIONERY AND PRINTING, MADRAS, ON THE AUTHORITY OF THE SPEAKER OF THE LEGISLATIVE ASSEMBLY.


D
38,000